

# கந்த புராண வசனம்

வெளியீடு:

ஸ்ரீ ஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

—

யாழ்ப்பாணம்

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.



# கந்தபுராணம்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

**ஆறுமுகநாவலரவர்களாலும்**

அவர்களது சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்த

**பொன்னம்பலபிள்ளையவர்களாலும்**

கத்தியரூபமாகச் செய்யப்பட்டது.

இது

கொழும்பு, ஹோட்டன் றெசிலுள்ள

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையாரால்**

யாழ்ப்பாணம்

சைவப்பிரகாச அச்சகத்தில்

மறுபதிப்பாக [illegible]சிடப்பட்டது.

(தூர்மதி [illegible] ஆளி மீ.)

சிவமயம்.

# பதிப்புரை.

சைவசமயத்தின் மேன்மையையும், உண்மைகளையும் சைவமக்கள் அறிந்து உணரும்போதே தமது சமயத்தில் பற்றுள்ளவராவர் எனக் கருதிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் அநேக புராணங்களை அச்சிட்டு வெளியிட்டார்கள். செய்யுள் உருவிலிருந்த பல புராணங்களை எல்லோரும் படித்தறியக்கூடிய வகையில் இலகுவான உரைநடையில் தாமே எழுதி வெளியிட்டார்கள். அவ்வாறு வெளியிடப்பட்ட நூல்களில் ஒன்றாகிய ''கந்தபுராண வசனம்'' கிடைப்பதற்கு அரியதொன்றாகி விட்டது.

எந்தச் சமுதாயத்தினதும் எதிர்காலம் அதன் இளந் தலைமுறையிலேயே தங்கியுள்ளது. சைவசமயம் வருங்காலத்தில் மேலும் வளர்ச்சி பெறுவதற்கு இன்றைய இளந் தலைமுறையினருக்கு அரிய சைவ நூல்களைக் கிடைக்கச்செய்தல் சைவமக்கள் கடமையாகும், அந்த எண்ணத்தின் செயலுருவமே இம் மறுபதிப்பு.

நாவலர் பெருமானின் நினைவாக நிறுவப்பட்ட எம் சபை, அவர்கள் நினைவாக மணிமண்டபம், சிலை என்பனவற்றை அமைத்தும், தபால் முத்திரை வெளியிடச் செய்தும், அவர்களது குருபூசைநாளை நாடு முழுவதும் நடத்தியும் வருவதோடமையாது, அவர்களால் எழுதப்பட்ட நூல்களைப் பதிப்பிப்பதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது. இந்நோக்கிற்கிணங்க ''கந்தபுராண வசனம்'' புதிய பதிப்பாக சபையால் வெளியிடப்படுகின்றது.

இப்புதிய பதிப்பு நாவலர் மரபில் வளர்ந்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் சிறந்த அணிந்துரையைத் தாங்கிவரும் சிறப்பையும் கொண்டிருக்கின்றது. இந்நூலை எம் சபை வெளியிடுவதற்கு ஊக்கமூட்டிய இந்து விவகார அமைச்சு இந்து சமய விவகார ஆலோசனைச் சபை முதலியவற்றுக்கும் பொருளுதவி புரிந்த பெரியோர்களுக்கும், அணிந்துரை எழுதியுதவிய பண்டிதமணி அவர்களுக்கும், விரைவில் அச்சுவேலைகளை முடித்துக் கொடுத்த யாழ்ப்பாணம், சைவப்பிரகாசஅச்சகத்தாருக்கும் எமது நன்றி உரியது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை.

4, ஹோட்டன் ரெறஸ்,
கொழும்பு - 7
துர்மதிஞ ஆனிமீ 21உ
5 - 7 - 1981.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

நால்வகை யோனிகளுள் ஒரு யோனிவாய்ப்பட்டுப் பிறப்பவை யாவை அவை யெல்லாம் பசுக்கள், அப்படிப் பிறத்தலில்லாதது யாது அது பதிப் பொருள் என்னும் இதுவொன்றே எளிதில் அவ்விரண்டுக்கும் தம்முள் வேற்றுமை அறியும்வண்ணம் நிற்பது. ஆதலால், வேதம் புராணம் இதிகாசம் முதலிய நூல்களிலே மற்றைத் தேவர்களெல்லாம் அப்படிப் பிறந்திறத்தல் சொல்லப்படுதலாலும், சிவனுக்கு அது உண்டென்பது எங்காயினும் சொல்லப்படாமையாலும், அநாதிமுத்தசித்துருவாகிய முழு முதற்கடவுள் சிவபெருமானே என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

இப்படித் துணியப்படும் முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானே, அவர் அருளிச்செய்த வேதாகமங்களிலே விதித்தபடி, தங்கள் தங்கள் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்கும் ஏற்ப, மெய்யன்போடு வழிபடுவோர் சைவசமயிகள் என்றும், சிவனடியார்கள் என்றும் சொல்லப்படுவார்கள். இச்சைவர்கள் பல சமயத்தாருக்கும் பொதுவகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக் கொண்டே, பின்பு தங்களுக்குச் சிறப்புவகையால வேண்டப் படும் இலக்கணங்களை உடையர்களாய் ஒழுகல் வேண்டும்.

பொதுவிலக்கணங்களாவன கொல்லாமை, புலாலுண்ணாமை, கள் ளாமை, பிறர்மனைநயவாமை, வரைவின்மகளிர்நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரி யோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம்.

சிறப்பிலக்கணங்கள் புறத்திலக்கணம், உடலிலக்கணம், அகத்திலக் கணம் என மூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து; அவை யாவன விபூதி ருத்திராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தல், குருவைப் பூசித்தல், சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தல், சிவநாமங்களை உச்சரித் தல், சிவபெருமானைப் பூசைசெய்தல், சிவதருமங்களைச்செய்தல், சிவபுராணங் களைக் கேட்டல், சிவாலயங்களிலே சென்று சிவலிங்கப்பெருமானைத் தரிசித் தல், சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை, சிவன டியார்களுக்குக் கொடுத்தல் என்பவைகளாம். உடலிலக்கணம் பத்து; அவையாவன சிவபெருமானுடைய பெருமையைப் பேசும்போது கண்டம் விம்முதல், அதனைச் சிந்தித்து மகிழுந்தோறும் நாத்துடித்தெழும்பாமை, நகைதுடித்தல், சரீரங்குலுங்குதல், உரோமஞ்சிலிர்த்தல், வேர்த்தல், தன் வசமன்றி நாப்பெயராமை, ஆனந்தக்கண்ணீர் சொரிதல், வாய்விட்டழு தல், பரவசமாய்த் தன்னை அயர்த்தல் என்பவைகளாம். அகத்திலக்கணம் மூன்று; அவையாவன பஞ்சாக்ஷரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவபெருமானைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

இவ்விருபத்து மூன்றிலக்கணங்களுள் ஒன்றுகிய சிவபுராணங் கேட்டல், தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னையொழிந்த சிறப்பிலக்கணங்களையும் மற்றைப் பொதுவிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாயும் நிற்றலுடையது. யாதினுலெனின், விபூதி ருத்திராக்ஷ தாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனுகிய இன்பத்தையும் கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனுகிய துன்பத்தையும் அறிவிப்பது சிவபுராணமாகலினென்க. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவபுராணங்கேட்டல் வேண்டுமென்பது துணிவு. இக்கருத்துப்பற்றியன்றே, திருக்கோயில், திருமடம், தீர்த்தக்கரை முதலிய புண்ணியத் தானங்களிலே சிவபுராணத்தைப் பூசைசெய்தலும், வாசித்துப் பொருள் சொல்லுதலும், கேட்டலும், பெரும்புண்ணியங்களென்று, சிவசாத்திரங்களிலே விதிக்கப்பட்டன.

கல்வியறிவொழுக்கங்கள் உடையர்களாய்ச் சிவபத்திமான்களாய் உள்ளவர்களே சிவபுராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுதற்கு உரியவர்கள். அவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்த்த வஸ்திரந்தரித்து, நித்திய கருமம் முடித்துக்கொண்டு, கோமயத்தினுலே சுத்திசெய்யப்பட்ட புண்ணியத் தானத்திலே, பீடத்தின்மீது சிவபுராணத் திருமுறையை வைத்து விதிப்படி பூசைசெய்து, நமஸ்கரித்து, இருந்துகொண்டு, வாசித்துப் பொருள்சொல்லல் வேண்டும். கேட்பவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, நித்தியகருமம் முடித்துக்கொண்டு வந்து, சிவபுராணத் திருமுறையை நமஸ்கரித்து, இருந்துகொண்டு, பிறிதொன்றினுங் கருத்தை இறக்காது, சிரத்தையோடு கேட்டல் வேண்டும். சிவபுராணம் படிக்குஞ்சபையிலே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரைசெய்தல், வெற்றிலைபாக்குண்ணுதல், உடம்பு போர்த்துக்கொள்ளுதல், பிற வார்த்தைகளைப் பேசுதல், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்லுதல், சிரித்தல், சிவபுராணம் வாசித்துப் பொருள்சொல்வோரை நன்குமதியாது அவமதி செய்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு, பின்பு இழிந்த பிறப்பை அடைந்து, வருந்துவர்கள். இவையெல்லாம் உபதேசகாண்டத்திலும் பிரமோத்தர காண்டத்திலும் காண்க.

இப்படியே இத்தேசத்துக் கோயிலதிகாரிகளும் மடாதிபதிகளும் சிவபுராணப் பிரசாரகர்களை நியோகித்து, கோயில்களிலும் மடங்களிலும் சிவபுராணங்களை வாசித்துப் பொருள்சொல்லும்படி செய்வார்களாயின், சைவசமயிகள் யாவரும் பேராசையோடு நியமமாகக் கேட்பார்களே. கேட்பார்களாயின், பெருங்கருணைநிதியாகிய சிவபெருமானுடைய மகிமையையும், புண்ணியபாவங்களையும், அவற்றின் பயன்களையும் எளிதில் அறிவார்களே. அறிவார்களாயின், பெரும்பான்மையும் பாவங்களுக்கு அஞ்சித் தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து உய்வார்களே.

இவ்வழக்கம் முற்காலத்திருந்தது என்பதும், அதனால் உலகத்தாருக்கு விளைந்த பயனும், பிரமோத்தரகாண்டம் முதலிய நூல்களிலே கண்டுகொள்க. ஈழதேசத்துள்ள திருக்கோயில்களெங்கும் பண்டுதொட்டு இதுகாறும் வருடந்தோறும் கந்தபுராணம் முதலிய சில புராணங்களை வாசித்துப் பொருள்சொல்லி வருகின்றார்கள். அங்குள்ளோர்கள் வாசிப்பவர்களையும் பொருள்சொல்வோர்களையும் சிரத்தையோடு வழிபட்டு அவர்களுக்கு வேண்டுவன கொடுத்து, நியமமாகக் கேட்டுவருகின்றார்கள். இத்தேசத்திலே இக்காலத்திலே இவ்வழக்கம் வீழ்ந்தது. ஆதலாற்றானே, ஆசிரியர்களை வழிபட்டுக் கற்றுணர்ந்த புலவர்கள் ஒழிய மற்றை யாவரும் சிவபுராணங்களை அறியாதவர்களாயிருக்கின்றார்கள்.

இதுகண்டு, நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதின் உபயோகமாகும்பொருட்டு வெளிப்படையாகிய வசனநடையிற் செய்து அச்சிற் பதிப்பித்து வெளிப்படுத்தின், அது பெரும் புண்ணியமாகும் என்று துணிந்து, சில வருடத்துக்கு முன்னே பெரியபுராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்குப் பெரும்பயன் விளைத்தலைக் கண்டறிந்தமையால், கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன்.

சைவசமயிகள் இச்சிவபுராணங்களை வாங்கி, தங்கள் தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப, மெய்யன்போடு வாசித்து, பாவங்களை வெறுத்து, தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, சிவபெருமானை வழிபட்டு, உய்யக்கடவர்கள்.

ஆறுமுகநாவலர்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக்கு முன்னே இக்கந்தபுராணத்தை அசுரகாண்டம் யாகப்படலம் வரையும் எழுதி அச்சிட்டுச் சஞ்சிகையாக வெளிப்படுத்தினர்கள். எஞ்சியபாகம் அவர்களால் எழுதப்படாமையால், நான் அதனை நூதனமாக எழுதி, அவர்கள் எழுதியதையும் சேர்த்து அச்சிட்டேன்.

வசனநடை இயற்றுவதில் மிகச் சிறந்தவர்கள் என்று யாவராலும் புகழப்படும் நாவலர்களுடைய வசனத்தோடு என்வசனத்தையும் ஒருங்கு சேர்த்தால், சூரியனோடு மின்மினியைப் பிரகாசிக்க வைத்தல்போல எள்ளற் பாட்டிற்கு ஏதுவாமாயினும், அன்பர்களாகிய அறிஞர்கள் சிலர் இயன்ற வரை எழுதுக எனப்பணித்த ஏவலை மறுத்தற்கு அஞ்சியும், எப்படியாவது இதனைப் பூர்த்தி செய்துவிடல் வேண்டும் என்று என்மனத்திலெழுந்த ஆசையினால் ஏவப்பட்டும், ஒருவாறு எழுதினேன்.

இது, கலியுகவரதராகிய கந்தசுவாமியினுடைய சரித்திரம் என்னும் பெருமை பற்றியும், நாவலரவர்கள் வசனத்தோடு சேர்ந்ததென்னும் சம்பந்தம் பற்றியும், அறிஞர்கள் என்வசனத்தையும் அங்கீகரிப்பார்கள் என்றெண்ணுகின்றேன்.

வேல்சேர்ந்த செங்கைக் குமரன்வியன் காதைதன்னை
மால்சேர்ந் துரைத்தேன் றமிழ்ப்பாவழு வுற்றதேனும்
நூல்சேர்ந்த சான்றீர் குணமேன்மை நுவன்றுகொண்மின்
பால்சேர்ந் ததனைப் புனலும்பய னுவதன்றே.

சிதம்பரம்
சைவப்பிரகாசவித்தியாசாலை
சாதாரணஆசிரியர்

ச. பொன்னம்பலவன்.

திருச்சிற்றம்பலம்:

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை.

கந்தபுராணம் கம்பராமாயணத்துக்கு ஒரு நூறுண்டு முந்தியது; சுப்பிரமணியக்கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் அருளியது; திருமுறை வரிசையில் வைத்துப் போற்றுந்தகைமையது.

கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்சுவாமியின் திருவருள் பெருகுங் காஞ்சிமாநகரமே யாயினும், அதனைப் பிள்ளைமைப் பருவத்திலிருந்தே, பேணுகிற முறையிற் பேணி வளர்த்தெடுக்கும் தவவிசேடம் படைத்தது ஈழம், சிறப்பாக யாழ்ப்பாணம்.

ஈழத்தில் கோயில்கள் தோறும், சுவாமி சந்நிதியில் சந்நிதி விரோதமின்றி, மிக்க பயபக்தியுடன், புராணபடனம் நிகழ்த்தும் முறை, வேறு எங்கும் காணுதது. இம்முறையின் வரலாறு சிந்திக்கற்பாலது;

ஈழத்தின் சிரத்தானம் யாழ்ப்பாணம். இதன் ஆதிப்பெயர் 'மணற்றி'. இதனை முதன் முதலாண்ட தமிழரசன் யாழ்ப்பாணன். பாணருக்குயாழ் கைவந்தது. யாழ்ப்பாடி என்றும் அவன் பெயர் வழங்கும். அவனது இயற்பெயர் வீரராகவன்.

அந்தகக்கவி வீரராகவன் வேறு; இந்த வீரராகவன் வேறு. கவிவீரராகவன் அந்தகன் [குருடன்] பிற்காலத்தவன்.

ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தை அரசாண்டகாலத்தில், பரராசசேகரனைப் பாடிப் பரிசில் பெற்றவன் அந்தக்கவி வீரராகவன்.

யாழ்ப்பாடிக்குப்பின், சிறிது காலம் யாழ்ப்பாணம் அரசின்றியிருந்தது. அந்த இடைவெளிக்காலத்தின் பின், யாழ்ப்பாணத்தை அரசு செய்தவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள்.பரராஜசேகரன் ஆரியச்சக்கரவர்த்திகளுள் ஒருவன்.

மணற்றியை யாழ்ப்பாணமாக்கிய யாழ்ப்பாடியின் வரலாற்றை ஆராய்வது ஒரு அளவுக்கு யாழ்ப்பாணச் சரித்திரத்தின் மூலவேரைக் கண்டு பிடிப்பதாயிருக்கும். அந்த மூலவேர், புராணபடனமுறையின் தோற்றத்தைக் காண வழிசெய்வதாயுமிருக்கும்.

முதலில் யாழ்ப்பாணனை யாழ்ப்பாடிக்கும் மணற்றிக்கும் உள்ள தொடர்பை விசாரிப்போம்.

வீரராகவன் எனப்பெயரிய யாழ்ப்பாணன், கண்டியிலிருந்து அரசாண்ட அரசன் ஒருவனை இன்னிசையால் இனிமைசெய்ய, அக்கண்டி அரசன் உவந்து யாழ்ப்பாணனுக்கு அளித்த பரிசில் மணற்றி; இம்மணற்றி கண்டியரசனுக்கு மாதாவழிச் சொத்து. மாதா மாருதப்பிரவல்லி;விக்கிரமசோழன் புதல்வி; மாமுகத்தி. மா – குதிரை.

இவள் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து, இறுதியாக நகுலாசலம் எனப்படும் கீரிமலைக்கு வந்துசேர்ந்தாள். அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த கிரிமுகமுனிவரான நகுலமுனிவரின் அநுக்கிரகம் பெற்று, கீரிமலைத் தீர்த்தத்தில் மூழ்கியதும் மாமுகம் விடுபட்டு, அழகிய முகத்துடன் கூடிய அரசிளங்குமரியாயினள்.

மாமுகம் விட்டதன் ஞாபகமாக மாவிட்டபுரத்தை அமைத்து, கோயிலெடுத்துக் கோயிலில் என்றும் இளையோனை திருமுருகனைப் பிரதிட்டை செய்தாள்.

முகஅழகியாய் மாறிய அவளைப் பாலசிங்கன் என்னும் அரசன் மணந்து பெற்ற புதல்வனே கண்டியரசன்.

இனி, மணற்றிக்கு வருவோம். பல வேறு மக்களை அழைத்துவந்து, குடியேற்றஞ் செய்து மணற்றியை ஆளத்தொடங்கினன் யாழ்ப்பாடி. அழைத்து வந்தவர்களுள் முக்கியஸ்தர் ஒருவர்; அவர் கச்சிக்கணேசையர். மேலும் மிக மிக முக்கியமான பொருள் ஒன்று குடியேறியது. அது,

**கந்தபுராணம்.**

கச்சிக்கணேசையரும், யாழ்ப்பாடியும், கச்சியப்பசிவாசாரியரோடு உடன் படித்தவர்கள் ஆகலாம். அன்றி, கந்தபுராண அரங்கேற்றத்திற் பங்குபற்றியிருப்பார்கள் என்றும் ஊகிக்கலாம். கச்சியப்பசிவாசாரியர் காலத்திலேயே கந்தபுராணம் யாழ்ப்பாணத்துக்கு வந்துவிட்டது.

இங்கே கோயிற் சந்நிதியிற் புராணபடனம் நடத்த வேண்டியிருந்ததால், சந்நிதி விரோதமின்றிப்புராண படனம் நடத்தும் முறையை, கச்சிக்கணேசையரும் யாழ்ப்பாடியும் கலந்துரையாடி வகுத்திருக்கலாம்.

அரியாலைச் சித்திவிநாயகர் ஆலயத்திலேதான் முதன் முதல் இந்தப் புராண படனத்தைக் கச்சிக்கணேசையர் ஆரம்பித்தார் என்று சொல்லுவதுண்டு.

புராணங் கேட்போரும், சந்நிதி விரோதமின்றி விரதம் மேற் கொண்டு, வேறு புலமின்றிக் கேட்குந்திறமும் விதிக்கப்பட்டது.

ஆண்களும் பெண்களும் கோயிற் சந்நிதியிற் புராணங்கேட்டார்கள். சிறப்பாகப் பெண்கள் அனைவரும் புராணங் கேட்டவர்களாயிருந்தார்கள்.

தமிழரசர்களுக்குப் பின் பறங்கியர் ஒல்லாந்தர் காலத்தில் கோயில் களனைத்தும் தரைமட்டமாயின. பெண்களின் மனக்கோயில்களை இடிக்க அவர்களால் முடியவில்லை. அங்கே கந்தபுராணம் கோயில் கொண்டிருந்தது.

'இந்தியாவிலே வித்துவான்கள் சைவகுருமார் முதலியோருள்ளும் கந்தபுராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்.' என்கின்றார் நாவலர் பெருமான். [யாழ்ப்பாணச் சமய நிலை 72ம் பக்கம்]

பெண்களின் உதிரத்தில் கந்தபுராணம் இரண்டறக் கலந்திருந்தது. அவ்வாறாய உதிரத்தில் உதித்தவரே நாவலர் பெருமான். 'மேன்மைகொள் சைவநீதி' என்ற கந்தபுராணத் தொடர், நாவலர் பெருமானின் குறிக்கோள் மந்திரம்.

மதமாற்றத்துக்கென்றே வந்தவர் பார்சிவல் பாதிரியார். அவரிடம் ஆங்கிலம் கற்கச் சென்றவர் நாவலர் பெருமான். பெருமான் மேற் கொண்ட சைவ நீதியின் மேன்மை, பாதிரியார் மதமாற்ற நோக்கத்தை மறக்கவும், 'மம' [எனது] குரு என்று தம்மை [நாவலர் பெருமானை] த் துதிக்கவும் வைத்துவிட்டது.

'இந்தியாவிலே சைவசமயிகளுள்ளுஞ் சைவசமயத்தில் உட்பற்றில் லாதவர்கள் பலரேயாகவும், இவ்வியாழ்ப்பாணத்திலே கிறிஸ்தவ மதத் திற் புகுந்தவர்களுள்ளும் சைவசமயத்தில் உட்பற்றற்றவர்கள் அரியராத லாகிய இத்துணை விசேடத்துக்குக் காரணந்தான் என்னையெனில் கூறுதும்:

'எத்துணைக் காலந் திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும் எத்துணையுந் தெவிட்டாது தித்தித் தமுதூறும் அதியற்புத அதிமதுரத் திவ்விய வாக்காகிய கந்தபுராணத்துள்ள பதியிலக்கணத் திருவிருத்தங் களைக் கேட்டல் சிந்தித்தல்களினுல், இவர்கள் உள்ளத்தூற்றெடுத்த மெய்யுணர்வேயாம்' என்று யாழ்ப்பாணச் சமயநிலையில் நாவலர்பெரு மான் கூறியிருப்பது இங்கே நினைவுகூரத்தக்கது.

நாவலர்பெருமானின் தெளிவான செந்தமிழ்நடைக்கும், வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தப் பிடிக்கும் மூலஊற்றுக் கந்தபுராணமேயாம்.

நாவலர்பெருமான் காலத்தில் புராணபடனம் உச்சநிலை எய்தியது; இதிலிருந்து தமிழரசர் காலத்தில் புராணபடனம் எத்துணை உன்னத நிலையிலிருந்திருக்குமென்பது ஊகிக்கத்தக்கது.

சைவசமயி, பல சமயங்களுக்கும் பொதுவான இலக்கணமும், இருபத்துமூன்று சிறப்பிலக்கணமும் உடையதல் வேண்டுமென்பது, கந்தபுராணமுகப்பில் சிவபுராண படன விதியிற் காட்டப்பட்டது. சிறப் பிலக்கணங்களுள் ஒன்று புராணபடனம். அது ஏனைய சிறப்பிலக்கணங் களையும், பொது இலக்கணங்களையும் வருவிக்க வல்லது. அவ்விஷயத்தில் கந்தபுராணபடனம் தனிச்சிறப்பு வாய்ந்தது.

## நாவலர் பெருமானின் தீர்க்கதரிசனம்:—

ஆங்கில மோகம் அதிகரிப்பதையும், 'நல்லவழிகாட்டுவோம் உடு புடைவை சம்பளம் நாளுநாளுந் தருகுவோம், நாம் சொல்வதைக் கேளும்' என்று,

பாதிரிமார் தூபம் இடுதலையுங்கண்டு, இம்மோகம் ஆண்களை விழுங் கிப் பெண்களிலும் தாவும், ''இத்தேசத்திலே பெண்களுள்ளும் புராணம் அறியாதார் இலர்'' என்ற காலம் போய், 'புராணம் அறிந்தார் இலர். என்ற காலம் வரலாம் என்ற எண்ணம் நாவலர் பெருமானை விழுங்கியது. கலக்கம் குடிகொண்டது.

மக்களை நல்வழிப் படுத்திப் பிறவிப் பிணியைப் போக்குதற்குக் கந்த புராணமே கைகண்டபரம ஔஷதம்.

அதனைக் கற்றோரும் மற்றோரும் ஆகிய வருங்காலத்தவர் யாவரும் எளிதிற் பயன்படுத்தற்கு எற்ற அநுபானம் யாதாம் என்ற சிந்தனையில் உதயமானது,

## கந்தபுராண வசனம்.

அச்சிந்தனையை வலி செய்தது பெரியபுராண வசனம்.

''நம்முடைய சைவசமய நூல்களை எல்லாருக்கும் எளிதில் உபயோக மாகும் பொருட்டு வெளிப்படையாகிய, வசனநடையிற் செய்து, அச்சிற்

பதிப்பித்து வெளிப்படுத்தின் அதுபெரும் புண்ணியமாகும் என்று துணிந்து, சிலவருடத்துக்கு முன் பெரிய புராணத்தை அப்படிச் செய்தேன். அது அநேகருக்குப் பெரும் பயன் விளைத்தலைக் கண்டறிந்தமையால் கந்தபுராணத்தையும் அப்படியே செய்கின்றேன்'' என்பது நாவலர் பெருமானின் கூற்று.

இப்பொழுது சிலமுக்கிய ஸ்தலங்களில் புராணபடனம் கேட்போரின்றி நடைபெறுவதுண்டு. கேட்பவை அங்குள்ள தூண்களே.

சில இடங்களில் ஒருவர் பாட்டை வாசிக்க, மற்றொருவர் உரையை வாசிக்கின்றார். கேட்பதற்குத்தான் ஆளில்லையே. உரையை வாசியாமலும் விடலாம்.

வசனம் வாசிக்குங் காலம் தூரத்தில் இல்லை.

வீடுகளில், வீட்டாரும், அயலில் உள்ளவரும் சுற்றத்தவரும் விரதமிருந்து, வசனத்தை வாசிக்கக் கேட்குங் காலம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

சுபதினத்தில் தொடங்கிச் சுபதினத்தில் பூர்த்தியாக்கலாம்.

பூர்த்திக்காலத்திலும், திருவவதாரம், திருக்கல்யாணம் முதலிய விசேட நிகழ்ச்சிகளிலும் இயன்ற அளவு விசேட ஆராதனை, அன்னதானம் நடக்கலாம்.

''சைவசமயிகள் சிவபுராணங்கள் வாங்கி, தங்கள்தங்கள் சுற்றத்தார் முதலாயினோர் கேட்ப, மெய்யன்போடு வாசித்து, பாவங்களை வெறுத்து, தங்கள் தங்களாலியன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து, சிவபெருமானை வழிபட்டு உய்யக் கடவர்கள்'' என்பது நாவலர்பெருமான் கூற்று. இக்கூற்றுக் கந்தபுராண வசனத்துக்கு மிகமிகப் பொருத்தமான தலையாயகூற்று.

கந்தபுராணவசனம் எங்கும் பரவவேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, நாவலர் நினைவாகக் கடந்த காலங்களில் செய்த அருமையான காரியங்கள் அநேகம். நாவலர் பெருமானின் ஆத்மசக்தி, தக்கார் ஒருவரைத்தூண்டித் தாம் தொடக்கிவைத்த கந்தபுராண வசனத்தைப் பூர்த்தி செய்திருக்கின்றது.

அவ்வாறே, இப்பொழுது வசனத்தின் மறுபதிப்பை நாவலர் சபையைத் தூண்டி வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபைக்கு நாவலர்பெருமானின் ஆத்மீகஆசி என்றும் இருந்து கொண்டேயிருக்கும்.

கந்தபுராண உதிரத்தில் உதித்த நாவலர் பெருமானின் ஆன்ம சக்தி இருந்தவாறு!

**கந்தபுராண வசனம் என்றும் நிலவுக; எங்கும் பரவுக.**

வணக்கம்.

திருச்சிற்றம்பலம்.

**சி. கணபதிப்பிள்ளை.**

கலாசாலை வீதி,
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
11-05-1981.

# காண்டவகராதி.


| காண்டம். | பக்கம். |
|---|---|
| அசுரகாண்டம் | 39 |
| உற்பத்திகாண்டம் | 11 |
| தக்ஷிகாண்டம் | 442 |
| தேவகாண்டம் | 425 |
| மகேந்திரகாண்டம் | 202 |
| யுத்தகாண்டம் | 265 |


# படலவகராதி.


| படலம். | பக்கம். |
|---|---|
| அகத்தியப்படலம் | 156 |
| அக்கினிமுகாசுரன்வதைப்படலம் | 332 |
| அசமுகிசோகப்படலம் | 180 |
| அசமுகிநகர்காண்படலம் | 185 |
| அசமுகிபுலம்புறுபடலம் | 186 |
| அசமுகிப்படலம் | 175 |
| அசுரேந்திரன் மகேந்திரஞ்செல்படலம் | 84 |
| அசுரர்தோற்றுபடலம் | 95 |
| அசுரர் யாகப்படலம் | 116 |
| அடிமுடிதேடுபடலம் | 536 |
| அண்டகோசப்படலம் | 125 |
| அதிவீரன்வதைப்படலம் | 207 |
| அமரர்சிறைபுகுபடலம் | 193 |
| அயனைச்சிறைநீக்குபடலம் | 67 |
| அயனைச்சிறைபுரிபடலம் | 65 |
| அயிராணிசோகப்படலம் | 170 |
| அரசுசெய்படலம் | 145 |
| அவைபுகுபடலம் | 230 |
| ஆனந்தன்சாபநீங்குபடலம் | 514 |
| இந்திரபுரிப்படலம் | 439 |
| இந்திரனருச்சனைப்படலம் | 167 |
| இந்திரன் கயிலைசெல்படலம் | 174 |
| இந்திரன்கரந்துறைபடலம் | 151 |
| இந்திரன்மீட்சிப்படலம் | 182 |
| இந்திராணிமறுதலைப்படலம் | 177 |
| இரணியன்புலம்புறுபடலம் | 421 |
| இரணியவதைப்படலம் | 323 |
| இரண்டாநாட்சூரபன்மன் யுத்தப்படலம். | 287 |
| இலங்கைவீழ்படலம் | 207 |
| உபதேசப்படலம் | 442 |
| உமைகயிலைநீங்குபடலம் | 456 |
| உமைதவம்புரிபடலம் | 460 |
| உமைவருபடலம் | 520 |
| உருத்திரர்கேள்விப்படலம் | 142 |
| எதிர்கொள்படலம் | 140 |
| ஏமகூடப்படலம் | 265 |
| கடல்பாய்படலம் | 204 |
| கடவுள்வாழ்த்து | 2 |
| கணங்கள் செல்படலம் | 37 |
| கந்தவிரதப்படலம் | 543 |
| கந்தவெற்புறுபடலம் | 438 |
| கயமுகனுற்பத்திப்படலம் | 500 |
| கயமுகன்வதைப்படலம் | 211 |
| காசிபனுபதேசப்படலம் | 96 |
| காமதகனப்படலம் | 19 |
| காவலாளர்வதைப்படலம் | 241 |
| காவிரிநீங்குபடலம் | 152 |
| காளிந்திப்படலம் | 459 |
| கிரவுஞ்சப்படலம் | 157 |
| குமாரபுரிப்படலம் | 89 |
| சகத்திரவாகுகள்வதைப்படலம் | 243 |
| சதமுகன்வதைப்படலம் | 239 |
| சந்திரசாபப்படலம் | 451 |
| சயந்தன்சனவுகாண்படலம் | 225 |
| சயந்தன்புலம்புறுபடலம் | 220 |
| சரவணப்படலம் | 53 |
| சாலிசெய்படலம் | 470 |

| படலம். | பக்கம். |
|---|---|
| சிங்கமுகாசுரன்வதைப்படலம் | 365 |
| சுக்கிரனுபதேசப்படலம் | 123 |
| சுரம்புகுபடலம் | 91 |
| சூரபன்மன்வதைப்படலம் | 390 |
| சூரனகர்புரிபடலம் | 251 |
| சூரனமைச்சியற்படலம் | 252 |
| சூரனரசிருக்கைப்படலம் | 183 |
| சூரன்றண்டஞ்செய்படலம் | 188 |
| தகரேறுபட்லம் | 64 |
| தக்கன்கயிலைசெல்படலம் | 406 |
| தக்கன்சிவபூசைசெய்படலம் | 542 |
| தக்கன்மகப்பெறுபடலம் | 447 |
| தக்கன்றவஞ்செய்படலம் | 445 |
| ததீசிப்படலம் | 473 |
| ததீசியுத்தரப்படலம் | 478 |
| தருமகோபன்வதைப்படலம் | 349 |
| தவங்காண்படலம் | 29 |
| தாரகன்வதைப்படலம் | 73 |
| தானப்படலம் | 517 |
| திக்குவிசயப்படலம் | 133 |
| திருக்கல்யாணப்படலம் | 38 |
| திருக்குற்றூலப்படலம் | 166 |
| திருக்கைலாசப்படலம் | 11 |
| திருச்செந்திப்படலம் | 92 |
| திருப்பரங்குன்றுசேர்படலம் | 425 |
| திருமணப்படலம் | 462 |
| திருவவதாரப்படலம் | 43 |
| திருவிளையாட்டுப்படலம் | 55 |
| துணைவர்வருபடலம் | 50 |
| தெய்வயானையம்மைதிருமணப்படலம் | 426 |
| தேவகிரிப்படலம் | 83 |
| தேவரையேவல்கொள்படலம் | 146 |
| தேவர்கள்போற்றுபடலம் | 420 |
| தேவர்கள்புலம்புறுபடலம் | 168 |
| நகரழிபடலம் | 242 |
| நகர்செய்படலம் | 143 |
| நகர்புகுபடலம் | 213 |
| நகர்புகுபடலம் | 319 |
| படையெழுபடலம் | 73 |
| பட்டாபிடேகப்படலம் | 144 |

| படலம். | பக்கம். |
|---|---|
| பார்ப்பதிப்படலம் | 12 |
| பானுகோபன்வதைப்படலம் | 353 |
| பிரமயாகப்படலம் | 467 |
| புதல்வரைப்பெறுபடலம் | 148 |
| புராணவரலாறு | 5 |
| மகாகாளர்வருபடலம் | 178 |
| மகாசாத்தாப்படலம் | 171 |
| மகேந்திரஞ்செல்படலம் | 209 |
| மணம்பேசுபடலம் | 33 |
| மாயைநீங்குபடலம் | 115 |
| மாயைப்படலம் | 93 |
| மாயையுபதேசப்படலம் | 114 |
| மார்க்கண்டேயப்படலம் | 97 |
| மீட்சிப்படலம் | 422 |
| முதலுட்பானுகோபன்யுத்தப்படலம் | 269 |
| மூவாயிரர்வதைப்படலம் | 344 |
| மூன்றுநாட்பானுகோபன் யுத்தப் படலம் | 310 |
| மேருப்படலம் | 14 |
| மோனநீங்குபடலம் | 27 |
| யாகசங்காரப்படலம் | 525 |
| யாளிமுகன்வதைப்படலம் | 247 |
| வச்சிரவாகுவதைப்படலம் | 244 |
| வரம்பெறுபடலம் | 121 |
| வரவுகேள்விப்படலம் | 267 |
| வரைபுனைபடலம் | 35 |
| வழிநடைப்படலம் | 88 |
| வள்ளியம்மைதிருமணப்படலம் | 552 |
| விடைபெறுபடலம் | 69 |
| விண்குடியேற்றுபடலம் | 436 |
| விந்தகிரிப்படலம் | 154 |
| விந்தம்பிலம்புகுபடலம் | 158 |
| வில்வலன்வாதாவிப்படலம் | 149 |
| வில்வலன்வாதாவிவதைப்படலம் | 159 |
| வீரசிங்கன்வதைப்படலம் | 206 |
| வீரபத்திரப்படலம் | 523 |
| வீரவாகுகந்தமாதனஞ்செல்படலம் | 202 |
| வீரவாகுசயந்தனைத்தேற்றுபடலம் | 227 |
| வீரவாகுமீட்சிப்படலம் | 249 |
| வேள்விப்படலம் | 519 |

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.



ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# கந்தபுராணம்.

## விநாயகர் காப்பு.

1. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

2. உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி லுடை
வச்சிர மருப்பி லெற்றை மணிகொள்கிம் புரிவ யங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

## சுப்பிரமணியர் காப்பு.

3. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்க நின்ற விராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேண் மலரடி போற்றி யன்னன்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

## நூற்பயன்.

4. இந்திர ராகிப் பார்மே லின்பமுற் றினிது மேவிச்
சிந்தையி னினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ
ரந்தமி லவுணர் தங்க ளடல்கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தோது வோரே.

## வாழ்த்து.

5. வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

# கடவுள் வாழ்த்து.

## சிவபெருமான்.

1. திருவந்த தொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந் தணைசெய் தறிதற்கரும் பெற்றி யெய்தி
யருவந் தணையு முருவத்தையு மன்றி நின்ரு
ளொருவன் றன்து பதந்தண்ணை யுளத்துள் வைப்பாம்.

2. ஊனுகி யூனு ளுயிரா யுயிர்தோறு மாகி
வானுதி யான பொருளாய் மதியாகி வெய்யோன்
ருனுகி யாண்பெண் ணுருவாகிச் சராச ரங்க
ளானுன் சிவன்மற் றவனீள் கழற்கன்பு செய்வாம்.

வேறு.

3. பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நிணைப்பதும் வடிவம் யாவையுந்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

4. பூமலர் மிசைவரு புனித ஞதியோர்
தாமுணர் வரியதோர் தலைமை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவ மாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

5. பங்கயன் முகுந்தனும் பரமென் றுன்னியே
தங்களி விருவருஞ் சமர்செய் துற்றுழி
யங்கவர் வெருவர வங்கி யாயெழு
புங்கவன் மலரடி போற்றி செய்குவாம்.

6. காண்பவன் முதலிய திறமுங் காட்டுவான்
மாண்புடை யோனுமாய் வலிகொள் வான்ரெடர்
பூண்பதின் ருய்நயம் புணர்க்கும் புங்கவன்
சேண்பொலி திருநடச் செயலை யேத்துவாம்.

## சிவசக்தி.

7. செறிதரு முயிர்தொறுந் திகழ்ந்து மன்னிய
மறுவறு மரனிட மரபின் மேவியே
யறுவகை நெறிகளும் பிறவு மாக்கிய
விறைவிதன் மலரடி யிறைஞ்சி யேத்துவாம்.

## விநாயகக் கடவுள்.

8. மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
வெண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

## வைரவக் கடவுள்.

9. பரமனை மதித்திடாப் பங்க யாசன
னெருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

10. வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடு
மஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம்.

## வீரபத்திரக்கடவுள்.

11. அடைந்தவி யுண்டிடு மமரர் யாவரு
முடிந்திட வெருவியே முனிவர் வேதிய
ருடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

## சுப்பிரமணியக்கடவுள்.

12. இருப்பரங் குறைத்திடு மெஃக வேலுடைப்
பொருப்பரங் குணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பரங் கமரிடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்றமர் சேயைப் போற்றுவாம்.

13. சூரலை வாயிடைத் தொலைத்து மார்புகிண்
டூரலை வாயிடு மெஃக மேந்தியே
வேரலை வாய்தரு வெள்ளிவெற் பொரீஇச்
சீரலை வாய்வரு சேயைப் போற்றுவாம்.

14. காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலயம் பொருட்கு மாலுற
வாவினன் குடிவரு மமலற் போற்றுவாம்.

15. நீரகத் தேதனை நினையு மன்பினோர்
பேரகத் தலமரும் பிறவி நீத்திடுந்
தாரகத் துருவமாந் தலைமை யெய்திய
வேரகத் தறுமுக னடிக ளேத்துவா ம்.

16. ஒன்றுதொ ருடலை யொருவி யாவிமெய்
துன்றுதொ ருடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொ ருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொ ருடிய குமரற் போற்றுவாம்.

17. எழுமுதி ரைப்புனத் திறைவி முன்புதன்
கிழமுதி ரிளநலங் கிடைப்ப முன்னவன்
மழமுதிர் களிறென வருதல் வேண்டிய
பழமுதிர் சோலையம் பகவற் போற்றுவாம்.

18. ஈறுசேர் பொழுதினு மிறுதி யின்றியே
மாறிலா திருந்திடும் வளங்கொள் காஞ்சியிற்
கூறுசீர் பூணுதரு குமர கோட்டம்வா
ழாறுமா முகப்பிரா னடிகள் போற்றுவாம்.

## திருநந்திதேவர்.

19. ஐயிரு புராணநூ லமலற் கோதியுஞ்
செய்யபன் மறைகளுந் தெரிந்து மாயையான்
மெய்யறு சூள்புகல் வியாத னீட்டிய
கையடு நந்திதன் கழல்கள் போற்றுவாம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர்.

20. பண்டைவல் வினையினுற் பாயு டுத்துழல்
குண்டரை வென்றுமுன் கூடல் வைகியே
வெண்டிரு நீற்றொளி விளங்கச் செய்திடுந்
தண்டமிழ் விரகன்மெய்த் தாள்கள் போற்றுவாம்.

## திருநாவுக்கரசுநாயனர்.

21. பொய்யுரை நூல்சில புகலுந் தியமண்
கையர்கள் பிணித்துமுன் கடல கத்திடு
வெய்யகற் றுணியாய் மிதப்ப மேற்படுந்
துய்யசொல் லரசர்தா டொழுது போற்றுவாம்.

## சுந்தரமூர்த்திநாயனர்.

22. வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவ
னுறைந்திடு முதலிலவந் துதிப்ப வன்னதா
லிறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம்.

## மாணிக்கவாசகசுவாமிகள்.

23. கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெதந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

## திருத்தொண்டர்கள்.

24. அண்டரு நான்முகத் தயனும் யாவருங்
கண்டிட வரியதோர் காட்சிக் கண்ணவா
யெண்டகு சிவனடி யெய்தி வாழ்திருத்
தொண்டர்தம் பதமலர் தொழுது போற்றுவாம்.

சரசுவதி.

25. தாவறு மூலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# புராண வரலாறு.

வடக்கின்கண்ணே திருவேங்கடமும் தெற்கின்கண்ணே குமரியும் கிழக்கின்கண்ணும் மேற்கின்கண்ணும் கடலும் எல்லையாகவுடைய தமிழ்நாட்டிலே, சான்றோருடைத்தெனச் சிறந்து விளங்காநின்ற தொண்டைமண்டலத்தின்கண்ணே காஞ்சீபுரமென ஒருதிருநகரமுண்டு. அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னுஞ் சத்தபுரிகளுள்ளும் காஞ்சீபுரமே சிறந்தது. அது காஞ்சி, திரிபுவனசாரம், காமபீடம், தபோமயம், திரிமூர்த்திவாசம், துண்டீரபுரம், இலயசித்து, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சகலசித்திகரம், கன்னிகாப்பு என்னும் பன்னிரண்டு* திருப்பெயர்களையுடையது.

அத்திருக்காஞ்சி நகரத்திலே சிவபெருமான் முதலியோருக்கு அறுபத்தாறாயிரம் * ஆலயங்களுண்டு. அவற்றுள் நூற்றெட்டுச் சிறந்தன. அவற்றுள்ளும் சிவபெருமானுக்கு இருபது சிறந்தன. திருமாலுக்கு எட்டுச் சிறந்தன. சிவபெருமானுக்குரிய ஆலயங்கள் இருபதாவன திருவேகம்பம், கச்சபாலயம், திருக்காயாரோகணம், திருமேற்றளி, இந்திராலயம், பணதரேசம், மணீசம், சதுர்முகசங்கரம், சுரகரேசம், பரசுராமேசம், உருத்திரர்கா, மாகாகாளேசம், வராகேசம், திருவோத்தூர், திருமாற்பேறு, அநேகபேசம், வேதநாபுரம், திருமயானம், கடம்பை, வீராட்டகாசம் என்பனவாம். திருமாலுக்குரிய ஆலயங்களெட்டாவன அத்திகிரி, வெஃகா, சந்திரகண்டம், நிராகாரம், அட்டபுயம், சகாளாங்கம், ஊரகம், பாடகம் என்பனவாம். அவ்விருபத்தெட்டினுள்ளும் திருவேகம்பம், கச்சபாலயம், திருக்காயாரோகணம் என்னு மூன்றுஞ் சிறந்தன. அவற்றினுள்ளும் திருவேகம்பஞ் சிறந்தது.

திருவேகம்பம் கம்பாநதியின் கரையருகே வேதவடிவாகிய மாவடியினுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் உயிர்கள்பொருட்டுச் செய்தருளும் அநாதிமுத்தபதியாகிய சிவபெருமான், தமது வாசகமாகிய வேதத்துக்கும் அதன்வாச்சிய

*இந்த இரண்டெண்களும் காஞ்சிப்புராணத்திற் கண்டபடி காட்டப்பட்டன.

மாகிய தமக்கும் வேறுபாடில்லையென்பதை யாவரும் உணர்ந்துய்யும் வண்ணம், வேதவடிவாகிய அம் மாவினது மூலத்தின்கண்ணே, எந்நாளும் திருவேகம்ப நாதரென்னும் திருப்பெயரோடு, சிவலிங்கமூர்த்தியாய் எழுந்தருளியிருப்பர்.

திருவேகம்பநாதருடைய அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமா தேவியார், உலகாணித்தீர்த்தக்கரையினருகே சிற்பரவியோமமாகிய பிலத்தின் கண்ணே, காமாக்ஷியென்னுந் திருப்பெயரோடு தவஞ்செய்து கொண்டிருக்கும் ஆலயம் காமக்கோட்டமெனப் பெயர்பெறும். அதற் கோர்பக்கத்திலே, குமரகோட்டமெனப் பெயர்கொண்ட ஓராலயமுண்டு. அதிலே சிவபெருமானுடைய இளைய திருக்குமாரராகிய சுப்பிரமணியக் கடவுள், தம்மை வழிபடும் அடியார்களுக்கு வேண்டிய வேண்டியவாறே போகமோக்ஷங்களைக் கொடுத்துக்கொண்டு, எழுந்தருளியிருப்பர்.

இத்துணைச்சிறப்பினதாகிய திருக்காஞ்சிநகரத்தினுள்ள கச்சபாலய மென்னுஞ் சிவாலயத்தின்கண்ணே, பிரமதேவர் சிவபெருமானைப் பூசை செய்துகொண்டு, தமது பத்தினியாகிய சரசுவதியோடும் அங்கிருந்தார். இருக்குநாளிலே, சௌனகர் முதலிய முனிவர்களெல்லாரும் திருக்காஞ்சி நகரத்தை அடைந்து, பிரமதேவர் திருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, படைத்தற்றொழிற்கிறைவராகிய சுவாமீ, அடியேங்கள் இதுகா றும் கிருகத்தர்களாய் இல்லறத்தைச் செய்துகொண்டு இப்பூமியினுள்ள நகரங்களெங்குமிருந்தேம், இனி வானப்பிரத்தர்களாய்த் தவஞ்செய்ய விரும்புகின்றோம், அவ்வாறு தவஞ்செய்யும் பொருட்டு ஒரு தபோவனம் பணித்தருளும் என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதுகேட்ட பிரமதேவர் ஒரு தருப்பையை எடுத்துச் சக்கரமாக்கி நிலத்திலேயுருட்டி, இருடிகளை நோக்கி, முனிவர்களே, நீங்களெல்லீரும் இச்சக்கரத்தின்பின்னே செல் லுங்கள், இச்சக்கரந்தங்கும் வனமே உங்களுக்குத் தபோவனமாகக்கொள் ளுங்கள் என்றார். உடனே முனிவர்கள் பிரமதேவரை வணங்கி, விடை பெற்றுக்கொண்டு, சென்றார்கள். சக்கரம் விரைந்து சென்று ஒருவனத் திலே தங்கிற்று. அதனால் அவ்வனம் நைமிசமெனப் பெயர் பெற்றது. முனிவர்களெல்லாரும் அவ்வனத்தின்கண்ணே தவஞ்செய்துகொண்டிருந் தார்கள். சிலகாலமாயினபின், வேதவிதிப்படி சகச்சிரசமமென்னும் யாகஞ்செய்து, சித்தசுத்தியடைந்து, மெய்யுணர்வுடையராயினர்கள்.

இவ்வாறிருக்கும்பொழுது, உண்மையறிவானந்தவடிவாகிய சிவபெரு மானுடைய திருவடிக்கமலங்கண்மலரும் நெஞ்சத்தடத்தையுடையவரும்,

வியாசமுனிவருடைய மாணாக்கரும், விபூதி ருத்திராக்ஷமென்னுஞ் சிவசின்னங்களை விதிப்படி தரித்தவருமாகிய சூதமுனிவர் அங்கே சென்றார். அதுகண்ட முனிவர்கள் யாவரும் மிக்கவுவகையோடு விரைந்தெதிர் கொண்டு வணங்கி, தங்களாச்சிரமத்துக்கு அழைத்துக்கொண்டு சென்று, ஒருயர்ந்த ஆசனத்தின் மீதிருத்தி, அவருடைய திருவடிகளை நறுமலர் கொண்டு விதிப்படி பூசித்து, நிலத்திலே எட்டுறுப்புந்தோய மும்முறை வணங்கி யெழுந்து, அஞ்சலிசெய்துகொண்டு நின்றார்கள். சூதமுனிவர் நீவிரிருங்களென்று பணித்தருளியபின், இருந்தார்கள். இருந்துகொண்டு 'கருணைநிதியாகிய சுவாமீ, சிவபெருமானுடைய இளையதிருக்குமாரரும் கிருபாசமுத்திரமுமாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய சரித்திரத்தை அறிதல் வேண்டுமென்னும் பேராசையுடையேமாயினேம், அதனை அடியேங்களுக்கு அருளிச்செய்யும்' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அது கேட்ட சூதமுனிவர் அழலிடைப்பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருக, மெய்ம்மயிர் பொடிப்ப, ஆனந்த வருவி சொரிய, சுப்பிரமணியக் கடவுளையும் தமதாசாரியராகிய வியாசமுனிவரையுஞ் சித்தித்துத் துதித்துக் கொண்டு, இவ்வாறு சொல்வாராயினர்.

ஆதிகற்பத்திலே துவாபரயுகத்திலே, ஆன்மாக்கள் செய்த தீவினையினாலே வேதங்களெல்லாம் அடிதளர்ந்து தடுமாறின. அதனாலே தேவர்களும் முனிவர்களும் மனிதர்களும் மதிமயங்கி, மெய்யுணர்வு சிறிதுமில்லாதவர்களாகி, வேத நெறியை விடுத்து, பல புறச்சமயங்களைக் கற்பித்துக் கொண்டு, அவற்றின்வழி ஒழுகுவராயினர்கள். விட்டுணுவும் பிரமாவும் அதுகண்டிரங்கி, சுவதந்திரராகிய சிவபெருமானுடைய திருவருளாலன்றி இம்மயக்கம் நீங்குவதன்றென்று துணிந்து, இந்திரன் முதலிய தேவர்கள் சூழத் திருக்கைலாச மலையை அடைந்து, செம்பொற்றிருக்கோயிலின் முதற் கோபுரவாயிற்கண் எழுந்தருளியிருக்குஞ் சித்தாந்த சைவசமயாசாரியராகிய திருநந்திதேவரைத் தரிசித்து, எம்பெருமானுக்கு அடியேங்களுடைய வரவை விண்ணப்பஞ்செய்தருளும், என்று பிரார்த்தித்தார்கள். திருநந்திதேவர் மகாதேவர் திருமுன் சென்று வணங்கியெழுந்து, அஞ்சலிசெய்து நின்று, தேவர்களுடைய வரவை விண்ணப்பஞ் செய்தார். பரமேசுரன் தேவர்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரும் பொருட்டுப் பணித்தருள, திருநந்திதேவர் வணங்கிக்கொண்டு புறத்தே சென்று, தேவர்களை அணுகி, 'ஓ தேவர்களே, எம்பெருமான் உங்களை உள்ளே வரும் பொருட்டுப் பணித்தருளினர். வாருங்கள்.' என்றார். உடனே விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் தங்கள் கவலையை ஒழித்து, புழுத்தநாயினுங் கடையேமாகிய எங்களையும் ஒருபொருளாகக்கொண்டு எம்பெருமான் உள்ளே வரும்வண்ணம் பணித்தருளிய பெருங்கருணை இருந்தபடி

என்னை என்னை என்று, ஆனந்தவருவி பொழிய மெய்ம்மயிர் சிலிர்ப்பக் குதூகலங்கொண்டு, திருநந்திதேவரோடும் எண்ணில்லாத வயில்களைக் கடந்து, உள்ளே சென்று, பேரானந்தப் பெருங்கடலாகிய சிவபெருமானைத் தூரத்தே தரிசித்து, அடியற்ற மரம்போலப் பலகாலும் வீழ்ந்து வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து அஞ்சலி செய்துகொண்டு திருமுன் சென்று, நறுமலர்க்களாலே பூசித்து வணங்கித் துதித்துக்கொண்டு தலைபணிந்து ஆடையொதுக்கி வாய்புதைத்து நின்றார்கள்.

அப்பொழுது சகுவலோகைகநாயகராகிய சிவபெருமான் பெருங் கருணை கூர்ந்து, விட்டுணு முதலிய தேவர்களை நோக்கி, உங்களரசியல் களெல்லாம் ஒருகுறையுமின்றி நன்றாக நடக்கின்றனவா என்று வினவி யருளினார். அதுகேட்ட விட்டுணு வணங்கிநின்று, விசுவாதிகரும் விசுவ சேவியருமாகிய சுவாமி, பிரமாவினுடைய படைத்தற்றொழிலும் அடியே னுடைய காத்தற்றொழிலும் இயமனுடைய அழித்தற்றொழிலும் மற்றைத் தேவர்களுடைய தொழில்களும் உம்முடைய திருவருளினாலே நன்றாக நடக்கின்றன; அதுநிற்க, உலகத்துள்ள ஆன்மாக்கள், மெய்நூலாகிய வேதத்தின் வாக்கியமாய் உள்ள நீரே பசுபதியென்பதைச் சிறிதுமுண ராது மதிமயங்கி, உலோகாயதம், ஆருகதம், பௌத்தம், மீமாம்சை, பாஞ்சராத்திரம், மாயாவாதம் என்னும் புறச்சமயங்களின்வழி ஒழுகு கின்றார்கள்; ஆதலால், அவர்கள் இம்மயக்கத்தினின்று நீங்கி நீரே பரம் பொருளெனத் துணிந்து உம்மையே வழிபட்டுய்யும் பொருட்டுச் சிறிது திருவருள்செய்தல் வேண்டும், என்று விண்ணப்பஞ் செய்தார். வேண்டுவார் வேண்டுவதே ஈயும் பரமகருணைநிதியாகிய சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, நீ உன்கலைகளுள் ஒன்றுகொண்டு பூமியின்கண் ணே வியாதனென்னும் பெயரையுடைய இருடியாய்ப் பிறந்து, வேதங் களெல்லாவற்றையும் ஓதாதுணர்ந்து, அவற்றை நான்காக வகுத்து, நன் மாணாக்கர்களுக்கு உபதேசிக்கக் கடவாய்; வேதத்தை ஓதியுணர்ந்தும் மெய்பொருட்டுணிவு பிறவாதவருக்கும் வேதத்துக்கு அருகரல்லாதவ ருக்கும் பயன்படும் பொருட்டுப் பதினெண்புராணங்களை நாம் முன்னே நந்திக்கு உபதேசித்தோம்; அவன் அவைகளைச் சனற்குமாரனுக்கு உபதேசித்தான்; நீ அவைகளை அச்சனற்குமாரனிடத்திற் கேட்டறிந்து கொண்டு, அவைகளையும் உன்மாணாக்கர்களுக்கு உபதேசிக்கக் கடவாய் என்று திருவாய்மலர்ந்தருளினார். விட்டுணு அதற்கியைந்து, சிவபெரு மானை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, பிரமா முதலிய தேவர்களோ டுந் தமது வைகுண்டத்தை அடைந்து, அவர்களெல்லாரையும் தங்கள் தங்கள் பதத்துக்குப் போம்வண்ணம் விடுத்து, தாம் அங்கெழுந்தருளி யிருந்தார்.

அருட்கடலாகிய அவ்விட்டுணு தம்முடைய கலைகளுள் ஒருகலை கொண்டு பூமியின்கண்ணே கங்கைக்கரையிலே பராசர முனிவருக்குச் சத்தியவதி என்னும் பெயரையுடைய யோசனகந்தியினிடத்தில் திருவவதாரஞ் செய்தருளினர். அவர் வதரிகாவனத்தில் இருந்து கொண்டு வாதராயணரென்னும் பெயரைப் பெற்று, சிவபெருமானுடைய திருவருளினாலே வேதங்கள் எல்லாவற்றையும் ஓதாதுணர்ந்தார். தாமுணர்ந்த வேதங்களை நான்காக வகுத்து, உலகத்தார் உய்யும்வண்ணம் நிறுவியருளினர். அதனால், அவருக்கு வியாசரென்னுந் திருப்பெயர் உண்டாயிற்று. அவ்வியாச முனிவர் சனற்குமார யோகமுனிவரை வழிபட்டுப் பதினெண் புராணங்களையுங் கேட்டறிந்தார். அதன்பின் வரையறைப்படாத வேதத்தின் உண்மைப் பொருளைப் பரிபக்குவர்கள் உணரும்பொருட்டு வேதாந்த சூத்திரஞ் செய்தருளினர். அவர் இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்னு நான்கு வேதங்களையும் முறையே பைலர், வைசம்பாயனர், சைமினி, சுமந்து என்னு நான்கு மாணாக்கர்களுக்கும் உபதேசித்தருளினர். வேதாந்த சூத்திரத்தையும் சைமினி முதலிய நால்வருக்கும் உபதேசித்தருளினர். பின்னர் அவர்களை நோக்கி, 'நீங்கள் இவ்வேதங்களை உங்களை வழிபடும் நன்மாணாக்கர்கள் எல்லோருக்கும் உபதேசிக்கக்கடவீர்கள்' என்று பணித்தருள, அவர்களும் அவ்வாறே உபதேசித்தார்கள். அதன்பின் வியாசமுனிவர் பதினெண் புராணங்களையும் எனக்கு உபதேசித்து, அவைகளை உலகத்துள்ள யாவருக்கும் உணர்த்தும் பொருட்டுப் பணித்தருளினர். அவ்வாறே யானும் அவற்றை உபதேசித்தேன். இவ்வாறே வியாச முனிவருடைய திருவருளினாலே நான்கு வேதங்களும், வேதாந்த சூத்திரமும் பதினெண் புராணங்களும் உலகமெங்கும் பரந்தன.

பதினெண் புராணங்களாவன பிரம புராணம், பதும புராணம், வைணவ புராணம், சைவ புராணம், பாகவத புராணம், பவிடிய புராணம், நாரதீய புராணம், மார்க்கண்டேய புராணம், ஆக்கினேய புராணம், பிரமகைவர்த்த புராணம், இலிங்க புராணம், வராக புராணம், காந்த புராணம், வாமன புராணம், மகா புராணம், கூர்ம புராணம், காருட புராணம், பிரமாண்ட புராணம் என்பனவாம். இப்பதினெட்டும் நாலிலக்ஷத்தெண்ணாயிரங் கிரந்தமுடையன. இவற்றுள், சைவ புராணம், பவிடிய புராணம், மார்க்கண்டேய புராணம், இலிங்க புராணம், காந்த புராணம், வராக புராணம், வாமன புராணம், மற்ச புராணம், கூர்ம புராணம், பிரமாண்ட புராணம் என்னும் பத்துஞ் சிவபுராணங்கள். காருட புராணம், நாரதீய புராணம், வைணவ புராணம், பாகவத புராணம் என்னு நான்கும் விட்டுணு புராணங்கள். பிரம புராணம், பதும புராணம் என்னுமிரண்டும் பிரம புராணங்கள். ஆக்கினேயம் அக்கினி புராணம். பிரமகைவர்த்தம் சூரிய புராணம். சிவபுராணம் பத்தும்

சாத்துவிகங்களாம். வைணவ புராணநான்கும் தாமசங்களாம். பிரம புராணமிரண்டும் இராசசங்களாம். அக்கினி புராணமும், சூரிய புராண மும் திரிகுணயுத்தமாம். ஆதலால், சிவபுராணங்களே இப்பதினெட்டி னுள்ளும் உயர்ந்தனவாம். அவற்றுள்ளும் காந்தம் மிகவுயர்ந்ததாய், சகல வேதாந்தங்களின் சாரத்தையும் உள்ளடக்கினதாய், ஐம்பது கண் டங்களாற் பூஜையப்பட்டதாய், ஓரிலக்கங்கிரந்த முடைத்தாயிருக்கும். அது சனற்குமார சங்கிதை, சூத சங்கிதை, பிரம சங்கிதை, விட்டுணு சங் கிதை, சங்கர சங்கிதை சூர சங்கிதை என ஆறு சங்கிதையுடையது. அவற்றுள், சனற்குமார சங்கிதை ஐம்பத்தையாயிரங் கிரந்தமும், சூத சங்கிதை ஆறுயிரங்கிரந்தமும், பிரம சங்கிதை மூவாயிரங் கிரந்தமும், விட்டுணு சங்கிதை ஐயாயிரங் கிரந்தமும், சங்கரசங்கிதை முப்பதினாயிரங் கிரந்தமும், சூரசங்கிதை ஆயிரங் கிரந்தமுமுடையன. முப்பதினாயிரங் கிரந்தமுடைய சங்கர சங்கிதை பன்னிரண்டு கண்டமுடையது. அவற்றுள் முற்பட்டது சிவரகசிய கண்டம். அது பதின்மூவாயிரங் கிரந்தமுடைய தாய், உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தக்ஷ காண்டம், உபதேச காண்டம் என ஏழு காண்டங்களை உடையதாயிருக்கும். உண்மையறிவானந்தவடிவா கிய சுப்பிரமணியக் கடவுளுடைய சரித்திரம் அடங்கிய இச்சிவரகசிய கண்டத்தை இப்போது உங்களுக்குச் சொல்வேன், நீங்கள் சிரத்தை யோடு கேளுங்கள்.

திருச்சிற்றம்பலம்

.....

முதலாவது

# உற்பத்தி காண்டம்.

## திருக்கைலாசப் படலம்.

அநாதிமலமுத்தராய், நித்தியராய், சர்வவியாபகராய், சர்வஞ்ஞராய், சர்வகர்த்தாவாய், நித்தியானந்தராய் உள்ள முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், சர்வான்மாக்களுக்கும் அருள் செய்யும் பொருட்டு, ஒருமுகமும், அடியார்களது துயரத்தை ஒழிக்குந் திருப்புன்முறுவலும், சந்திரன் சூரியன் அக்கினி என்னும் முச்சுடர்களாகிய மூன்று திருக்கண்களும், கங்கையையும் பிறையையும் கொன்றை மாலையையுஞ் சூடிய சடாமுடியும், சங்கக் குண்டலத்தையும் தோட்டையும் அணிந்த திருச்செவிகளும், திருநீலகண்டமும், மான் மழு அபயம் வரதம் என்பவைகளோடு கூடிய நான்கு திருக்கரங்களும், விபூதியிஞலே உத்தூளிக்கப்பட்ட செம்பவளத் திருமேனியும், வெள்ளைப் பூணூலையும் கற்பங்கடோறும் இறந்த எண்ணில்லாத பிரம விட்டுணுக்களுடைய தலைகளாலும் எலும்புகளாலுந் தொடுக்கப்பட்ட மாலைகளையும் அணிந்த திருமார்பும், புலித்தோலை உடுத்து உடைவாளுடனே கச்சையுடைத்தாய் விளங்குந் திருவரையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் செந்தாமரைமலர் போலுந் திருவடிகளும் உடைய ஸ்ரீகண்டசரீரியாய், பல விரத்தினங்களாலே புனையப்பட்ட வெள்ளிமயமாகிய நாலுவித சிகரங்களோடு கூடிய நிருமலமாகிய திருக்கைலாச மலையிலே, உயர்வொப்பில்லாத செம்பொற்றிருக்கோயிலிலே, எண்ணில்கோடி சூரியர்களது ஒளியைப்போலும் ஒளியையுடைய திவ்விய சிங்காசனத்தின் மேலே, தமது அருட்சத்தியும் உலகமாதாவுமாகிய உமாதேவியார் தமது இடப்பாகத்தின்மேவ, அளவிறந்த பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார்.

அப்பொழுது பூதர்கள் நாலுவித வாத்தியங்களை முழங்கினர்கள், இருபுறத்தும் வெண்சாமரம் வீசினர்கள், ஆலவட்டம் அசைத்தார்கள், தும்புருநாரதர்களும் விஞ்சையர்களும் இசைபாடினர்கள். கணநாதர்கள் சிவபெருமானுடைய திருவருளை நினைந்து நினைந்து, என்புகளெல்லாம் அழலிடைப்பட்ட வெண்ணெய்போலக் கரைந்து நெக்குநெக்குருக, சரீரநடுங்க, மெய்ம்மயிர் சிலிர்ப்ப, மயிர்க்காறோறுந் திவலையுண்டாக, மதகினிற் புறப்படுஞ் சலம்போல ஆனந்தவருவிபொழிய, நாத்தழுதழுப்ப, உரைதடுமாற, கரையற்ற இன்பக் கடலின் அழுந்தி நின்றார்கள். முனிவர்

கள் தங்கள் கைகள் சிரசின்மீதேறிக் குவிய, நினைப்பினும் ஓதினும் செவிமடுப்பினும் புத்தமிர்தத்தினும் தித்திக்கும் வேதசிரசுகளாகிய உப நிடதங்களை எடுத்தோதினர்கள். தேவர்கள் பேரானந்தப்பெருங்கடலின் முழுகி, ஹரஹரமுழக்கஞ்செய்து, கைகொட்டி ஆடிப்பாடினர்கள். பரமகிருபாலுவாகிய திருநந்திதேவர் தமது திருக்கரத்திற் பொற்பிரம்பு கொண்டு, அடியார் கூட்டத்தை வரிசையின்முறை நிறுவி, சிவபெருமான் திருமுன்னே இருபக்கத்தும் உலாவிக்கொண்டு, அவ்வகிலகாரணருடைய உயர் வொப்பில்லாத பெருங்கீர்த்தியைப் படித்தார்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## பார்ப்பதிப்படலம்.

சிவபெருமான் இவ்வண்ணம் எழுந்தருளியிருக்கும் பொழுது, வாம பாகத்தின் எழுந்தருளியிருந்த உமாதேவியார் தமது திருவுளத்திலே ஒன்றை நினைந்து, விரைந்தெழுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, ''எல்லாவறிவும் எல்லாத்தொழிலும் எல்லாமுதன்மையுமுடைய பரம பதியே, உம்மை இகழ்ந்த தக்கனிடத்தே அடியேன் சிலகாலம் வளர்ந்து தாக்ஷாயிணி என்னும் பெயரைப்பெற்றேன். இனி இப்பெயரையும் அவனிடத்தே வளர்ந்த இச்சரீரத்தையும் தரித்தற்கு அஞ்சுகின்றேன். ஆதலின் இவைகளை நீக்குமாறு பணித்தருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, ''நமது சத்தியே, நீ இவ்வண்ணம் முயலுதல் எண்ணில்லாத உன் புதல்வர்களாகிய ஆன் மாக்கள் முத்தியெய்தும்பொருட்டேயாம்; உன்கருத்து முற்றவேண்டு மாயிற் சொல்வேங்கேள்; இமையமலையரையன் உன்னைத் தன்மகளாக வளர்த்து நமக்கு விவாகஞ்செய்துதர விரும்பி, நம்மை நோக்கிக் கொடுந் தவஞ் செய்கின்றனன். நீ ஒரு குழந்தைவடிவாய் அவனிடத்தே சென்று வளர்ந்து, ஐந்து வயசாயபின் நம்மை நோக்கித் தவஞ்செய்யக்கடவாய்; அப்பொழுது நாம் வந்து உன்னை விவாகஞ்செய்து அழைத்துக்கொண்டு வருவேம்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே உமாதேவியார் திருவுளமகிழ்ந்து, சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக்கொண்டு திருக் கைலாசமலையினின்று நீங்கி, இமையமலையை யடைந்தார்.

இமையமலையின்மேலே மானசவாவியென்னும் பெயரையுடைய ஒரு தடாகமுண்டு. அதிலே, மலையரையன், தான் உமாதேவியாரைத் தன் மகளாகப் பெறுதற்பொருட்டும், அவளைச் சிவபெருமானுக்கு விவாகஞ் செய்து கொடுத்தற்பொருட்டும், அருந்தவஞ் செய்துகொண்டிருந்தான். உலகமனைத்தையுங் கருப்பமெய்தாது பெற்றருளிய பெருங்கருணைப் பெருமாட்டியார் அம்மலையரையன் காணும் வண்ணம் அவ்வாவியிலுள்ள

ஒரு தாமரைமலரின் மேலே குழந்தை வடிவாய் எழுந்தருளியிருந்தார். மலையரையன் அது கண்டு, ''உமாதேவி யடியேன் பொருட்டுச் சிவபெரு மானை நீங்கினள் போலும், சிறியேன் செய்த தவத்துக்கிரங்கியருளிய எம்பெருமானுடைய பெருங்கருணை இருந்தபடி என்னை!'' என்று பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கி, ஆனந்தவருவி பொழிய, மெய்ம்மயிர் பொடிப்ப, அடியேன் உய்ந்தேன் என்று, பாடியாடி, உமாதேவியாரை வணங்கி நின்றான். பின்பு தாமரைமலர் மேலிருக்கும் உமாதேவியைத் தனது கையாலெடுத்து, சிரமேற்றூங்கிக்கொண்டு, விரைந்து சென்று, தன்வீட்டினுள்ளே புகுந்து, தன் மனைவியாகிய மேனை கையிற்கொடுத் தான். மேனை தொழுது வாங்கிக்கொண்டு, ''பெருமானே, இவள் உன் னிடத்து வந்ததெங்ஙனம்'' என்று விளவ, மலையரையன் நிகழ்ந்தனவெல் லாம் அவளுக்குச் சொன்னான். மேனை அதுகேட்டு சிவபெருமானது திரு வருளைத் துதித்து, பெருமகிழ்ச்சியடைந்தாள். மேனைக்குத் தனங்களினின் றும் பால் சுரந்து பெருகிற்று. மெய்ம்மயிர் சிலிர்த்தது. உமாதேவி யுடைய திருவருளே உள்ளமெங்கும் நிறைந்தது. மேனை உமாதேவியைத் திவ்வியரத்தினபரணங்களினாலே அலங்கரித்து, மெய்யன்போடு வளர்த் தாள்.

இவ்வாறே உமாதேவியார் இவரிடத்தே வளர்ந்து, ஐந்துவயசு சென்றபின், சிவபெருமானை நோக்கித்தவஞ் செய்யக் கருதி, மலையரையனை நோக்கி, ''முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் என்னை விவாகஞ் செய்துகொள்ளும் பொருட்டு அம்மலையில் ஒரு பக்கத்தே அவரை நோக் கித் தவஞ் செய்யக் கருதுகின்றேன், கன்னியரோடும் என்னை விடுவிக் கக் கடவாய்'' என்றாள். மலையரையன் பார்ப்பதியம்மையாரை நோக்கி, ''அம்மே, நீ நம்மினின்று நீங்கித் தவஞ் செய்தற்கு ஒத்த பருவம் இது வன்று, உனக்கு ஐந்து வயசு மாத்திரமே சென்றன, இக்கருத்தை ஒழித்துவிடு'' என்றான். பார்ப்பதியம்மையார் திருநகை செய்து, ''யாவரே யாயினும் சுதந்திரராகிய சிவபெருமானாலே காக்கப்படுவதன்றித் தம் மாலும் பிறராலுங் காக்கப்படுவதில்லை. இது துணிவு. தவஞ் செய்வே னென யான் பேசியதும் எம்பெருமானது திருவருளே; இனி மறுது விடைதரக்கடவாய்'' என்றாள். மலையரையன் அதற்கியைந்து, அம்மலையி னொருபக்கத்தே ஒரு தவச்சாலை செய்வித்து, தன்கிளைஞராகிய கன்னியர் பலரோடும் பார்ப்பதியை அங்கே விடுத்தான். பார்ப்பதியம்மையார் அந்தத் தவச்சாலையை அடைந்து, கன்னியர் பலர் சூழ, சிவபெருமானைச் சிந்தித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தார். மலையரையனும் மேனையும் நாடோறுஞ் சென்று, உமாதேவியாரைக் கண்டுகொண்டு திரும்புவார் கள். அது நிற்க, இனி உமாதேவியைப் பிரிந்த சிவபெருமானுடைய செயலைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்

# மேருப்படலம்.

உயிர்களையெல்லாம் பெற்று அவைகளுக்குப் போகத்தையும் மோக்ஷத்தையும் கொடுத்தருளும் அருள்வடிவாகிய உமாதேவியார் இமையமலையின்மீது தவஞ்செய்துகொண்டிருக்கும்போது, சூரபன்மா, அசுரர்கள்சூழ, இப்பூமியின் கண்ணே அரசுசெய்துகொண்டிருந்தான். அப்போது, கல்லாலநிழலின்கண்ணே தக்ஷிணமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த சிவபெருமானிடத்தே வேதநூற் பொருளைப்பெற்ற சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்னும் முனீந்திரர் நால்வரும் மாயையினாலே ஞானநிலை பெறுதவராகி, பின்னும் நெடுங்காலந் தவஞ் செய்து, திருக்கைலாசமலையை அடைந்து, முதற்கோபுரவாயிலில் எழுந்தருளியிருக்கும் சித்தாந்தசைவசிகாமணியாகிய திருநந்திதேவரை வணங்கி நின்றார்கள். உடனே திருநந்திதேவர் அம்முனீந்திரர்களைக் கருணையோடு செம்பொற்றிருக்கோயிலினுள்ளே அழைத்துக்கொண்டு சென்றார். முனீந்திரர்கள் பிரம விட்ணுக்களுக்கும் வேதங்களுக்கும் எட்டாத ஞான நாயகரைத் தூரத்தே தரிசித்து மொழி தடுமாற, மெய்ம்மயிர் பொடிப்ப ஆனந்தக்கண்ணீர் பெருக, அழலிடைப்பட்ட மெழுகுபோல நெஞ்சநெக் குருக, இருகைகளையும் சிரமீது குவித்துக்கொண்டு திருமுன் சென்று, திருவடிகளைப் பலகாலும் நமஸ்கரித்து, எழுந்து, அஞ்சலிசெய்து நின்று சிவபெருமானது நிரதிசயமாகிய ஐசுவரியத்தை உணர்த்தாநின்ற உபநிடதங்களாலே துதித்தார்கள். துதித்தபின்பு, "ஞானானந்தமயமாகிய முழுமுதற்கடவுளே, அடியேங்கள் வேதங்களையும், உபநிடதங்களையும் நெடுநாள்வரையும் ஓதியும் ஞானநிலை பெறுதேமாயினேம். அருட்கடலே ஏகாத்துமவாதசுருதி முதலிய சுருதிகளாலே மதி மயங்குகின்றது; பெருங் கருணை கூர்ந்து, அம்மயக்கத்தை நீக்கியருளுக" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அடியார்க்கு எளியராகிய பரமகருணாநிதி அம்முனீந்திரர்கண் மீது திருநோக்கம் வைத்து, 'அன்பர்களே, உங்கள் மதிமயக்கம் நீங்கும் வண்ணம் நாம் இரகசியமாகிய திவ்வியாகமத்தை உபதேசிப்போம், இருங்கள்' என்று திருவாய்மலர்ந்தருளினார். முனீந்திரர்கள் நால்வரும் பேருவகை பூத்து, எம்பெருமானுடைய திருவடிகளின்முன் இருந்தார்கள். சிவபெருமான் திருநந்திதேவரை நோக்கி, மன்மதனன்றி மற்றைத்தேவர் யாவர் வரினும் உள்ளே விடுக்காதே" என்று பணித்தருள, திருநந்தி தேவர் அத்திருவாக்கைச் சிரமேற்கொண்டு, சிவபெருமானைத் தொழுது, முதற்கோபுரவாயிலை அடைந்து, காவல் செய்துகொண்டிருந்தார்;

திருபாமூர்த்தியாகிய சிவபெருமான் தமது சந்நிதியில் இருக்கின்ற சனகர் முதலிய முனீந்திரர்கள் நால்வரும் தொழுது கேட்ப, திவ்வியாகமங்களிலே சொல்லப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும்

நான்கு பாதங்களுள்ளும் சரியை முதலிய முதன்மூன்றுபாதத்தையும் உபதேசித்தருளினர். அதுகேட்ட முனீந்திரர்கள், ''கருணைக்கடலே, இனி ஞானபாதத்தை உபதேசித்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் திருநகை செய்து, ''ஞானபாதம் ஏனையனபோல வாயினற் சொல்லற்பாலதன்று; அது இப்படி யிருத்தலேயாம்'' என்று திருவாய் மலர்ந்து, அந்நெறியை அவர்களுக்கு உணர்த்தும்பொருட்டு, தமது திருமார்பின் கண்ணே ஒரு திருக்கரத்தைச் சேர்த்தி, மௌனமுத்திரை காட்டி, ஒரு கணம் ஒருசெயலுமின்றி யோகஞ்செய்பவர்போல் எழுந் தருளியிருந்தார். அதுகண்ட முனீந்திரர்கள் தங்கள் தங்கள் உள்ளம் ஒடுங்கப்பெற்று, சிவஞானத்தை அடைந்து, சித்திரப்பாவைபோல் அசைவற்றிருந்தார்கள்.

சிவபெருமான் இவ்வண்ணம் எழுந்தருளியிருக்கும் கணமொன்றி னுள்ளே பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கெல்லாம் பற்பல யுகங் கள் சென்றன. ஆடவரையும் மகளிரையும் காமப்பற்றை விலக்குப் புணர்த்தற்கு மன்மதன் நிற்பவும், சிவபெருமான் போகவடிவமன்றி யோகவடிவங் கொண்டு வீற்றிருத்தலால், திருமால் முதலிய தேவர்களும் மனிதர்களும் மற்றைச்சீவர்களும் காமப்பற்றும் புணர்ச்சியும் இல்லாது வருத்தமுற்றார்கள். அதனாலே கரு மல்குதலின்றி, உயிர்களெல்லாம் நாடோறுங் குறைந்தன. இதனாலே, அகிலகாரணர் சிவபெருமானே என் பது தெள்ளிதிற் றுணியப்படும்.

இவ்வாறே சிவபெருமான் யோகத்திருக்கும்பொழுது, சூரபன்மன் தீங்கு செய்தமையால் இந்திரன் தன்மனைவியாகிய இந்திராணியோடும் தேவர்களோடும் சுவர்க்கத்தை விட்டுப் பூமியில் வந்தான். திருக்கைலாய மலையை அடைந்தும் சிவபெருமானைத் தரிசிக்கப்பெறுமையால் சோகத் தோடு மீண்டும் மகாமேருமலையை அடைந்து, சூரனுடைய குமாரனாகிய பானுகோபன் சுவர்க்கத்தை எரித்துத் தன் குமாரனாகிய சயந்தனையும் தேவர்களையுஞ் சிறைசெய்தமையை அறிந்தான். அம்மேருமலையிலே சிவ பெருமானைச் சிந்தித்து நெடுங்காலந் தவஞ்செய்தான். சிவபெருமான் இடபமேற்கொண்டு, இந்திரனுக்குத் தோன்றியருளினர். அதுகண்ட இந்திரன் வணங்கித் துதிக்க, முற்றறிவையுடைய சிவபெருமான் இந் திரனை நோக்கி, ''நீ நெடுங்காலம் கொடுந்தவஞ் செய்து வருந்தினாய், உனக்கு வேண்டும் வரம் யாது?'' என்று அறியாதார் போலக் கேட் டருளினர். இந்திரன் வணங்கி நின்று, ''பரமகருணைகரரே, தியோனாகிய சூரன் அடியேங்களையெல்லாம் துயரப்படுத்தி, சுவர்க்கத்தை எரித்துவிட்டு அடியேனுடைய குமாரனாகிய சயந்தனையும் தேவர்களையுஞ் சிறைப்படுத் தினன். அச்சூரனைக் கொன்று அடியேங்களைக் காத்தருளுக'' என்று

விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் இந்திரனை நோக்கி, ''யமனுக்கு ஈசுரனுகிய நம்மை இகழ்ந்து தக்கன் செய்த வேள்வியின் இருந்த பெருங்கொடும் பாவத்தினுலே நீங்கள் இப்படித் துயருறுகின்றீர்கள்; இனி நம்மிடத்தே ஒரு குமாரன் பிறந்து சூரனைக் கொன்று உங்களைக் காப்பான்'' என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினர்.

சிவபெருமான் மறைந்தருளலும், இந்திரன் கவற்சிகொண்டு, ''எம்பெருமான் சனகர் முதலிய முனீந்திரர்கள்பொருட்டுத் திருக்கைலாசத்திலே யோகத்தெழுந்தருளியிருக்கின்றூர், உமாதேவியார் இமைய மலையிலே தவஞ்செய்து கொண்டிருக்கின்றூர்; இங்ஙனமாக இவர்களுக்குப் புதல்வன் உதிப்பது எங்ஙனம்?'' என்று நினைந்து, சோகத்தோடும் மனுவதியென்னும் நகரத்தை அடைந்து, அங்கிருந்த தன்குருவாகிய வியாழனுடைய மனைவியிடத்தே இந்திராணியை இருத்திவிட்டு, தேவர் களோடும் பிரமதேவருடைய கோயிலிற் சென்றூன். அங்கே, சிவபெரு மான் யோகத்திருத்தலினுலே தன் படைத்தற்றொழில் நிகழாமைபற்றிக் கவற்சிகொண்டிருக்கும் பிரமதேவரைக் கண்டு, வணங்கி, அஞ்சலிசெய்து நின்றூன். பிரமதேவர் இந்திரனை நோக்கி, ''நீ இங்கு வந்ததென்னை?'' என்று வினவ, இந்திரன், சூரன் செய்யுந் துன்பத்தையும், சிவபெருமான் யோகத்திருத்தலையும், தன்னுடைய தவத்தைக் கண்டு சிவபெருமான் அருளிச்செய்தமையையும் பிரமதேவருக்குச் சொன்னன்.

பிரமதேவர் இந்திரனை நோக்கி, இவ்வாறு சொல்வாராயினர். 'எவ்வுயிர்க்கும் மேலாகிய சிவபெருமான் கருணைக்குறையுளும் தம்மை வழிபடும்மெய்யடியார்க்கு அருள்செய்வோரும் முறைசெய்வோருமாகலின், எம்மை ஆண்டருளும் பொருட்டுத் திருக்கைலாசமலையின்கண்ணே யோகியர்போல வீற்றிருந்தருளினர். விட்டுணுவாலும் என்னலும் தேடி யறியப்படாது நின்ற விசுவாதிகராகிய அவருக்கு உயர்வும் இல்லை ஒப் பும் இல்லை: அவ்வியல்புடைய முழுமுதற்கடவுள் முனிவர்கள்பொருட்டு யோகவடிவங் கொண்டிருத்தல் நம்முடைய குறைகளனைத்தையும் ஒழிக் குந் திருவருளே யன்றி, வேறன்று. சிவபெருமான் சருவான்மாக்களை யுஞ் சங்கரித்தல் பிறப்பிறப்புக்களினுலும் சுவர்க்க நரகத்திற்குச் செல் லுதல் மீளுதல்களினுலும் அவைகளுக்கு உளதாய இளைப்பை நீக்குங் கருணையன்றே: அதுபோலவே நமக்குச் சூரனைக்கொண்டு துன்பஞ்செய் வித்தலும் நாஞ்செய்த தீவினைப் பயன்களை ஊட்டித் தொலைத்து நமக்கு முத்தியைத் தரும் பெருங்கருணையே, தாய் தந்தையர் தாம்பெற்ற புதல் வர்களுக்கு யாதானுமோர் நோயுற்றவழிப் பிறரைக்கொண்டும் அறுத் தல் கீறுதல் முதலிய துயரங்களைச் செய்வித்தும் தீர்ப்பார்களன்றே.

அது அப்புதல்வர்கண்மீது வைத்த அன்பன்றி வன்கண்மையன்றே. அது போலவே, சிவபெருமானும் நம்முடைய தீவினைகளைத் தீர்க்கும் பொருட்டே இவ்வண்ணஞ் செய்விக்கின்றார். நாஞ்செய்த தீவினைகளெல்லாம் நீங்குங்காலம் அணுகியது போலும். ஆதலாற்றானே, எம்பெருமான் பெருங்கருணையோடும் உனக்குத் தோன்றி இவ்வண்ணந் திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். இனி நாமெல்லாம் துன்பக்கடலினின்றும் கரையேறினம்போலும். சிவபெருமான் இனி நமக்கருள் செய்வார். அதற்கு நாமும் முயலுமாறு சிறிதுண்டு. நாம் இதனை விட்டுணுவுக்குச் சொல்லி, இதற்கு வேண்டுஞ் செய்கையை விரைந்து செய்தல் வேண்டும்' என்றார்.

பிரமதேவர் இப்படிச் சொல்லி, இருக்கைவிட்டெழுந்து, இந்திரன் முதலிய தேவர்கள் சூழச் சென்று, வைகுண்டத்தை அடைந்து, விட்டுணுவை வணங்கி நின்றார். விட்டுணு கருணைசெய்து, தம் புதல்வராகிய பிரமதேவருக்கு ஆசனங் கொடுத்து, அவரை நோக்கி, ''உன்னுடைய படைத்தற்றொழில் இடையூறின்றி நடக்கின்றதா?'' என்று வினவினார். பிரமதேவர் விட்டுணுவை நோக்கிச் சொல்லலுற்றார்: ''சுவாமீ, இதனைக் கேட்க. முன்னாளிலே சனகன், சனந்தனன், சனாதனன், சனற்குமாரன் என்னும் முனிவர் நால்வரும் என் கருத்திலே தோன்றினார்கள். நான் அவர்களை நோக்கி, நான் செய்யும் படைத்தற்றொழிலை நீங்கள் செய்து கொண்டு இங்கிருங்கள், என்றேன். அதற்கு அவர்கள் நகை செய்து, பாசமாகிய சிறையிற்பட்டுப் படைத்தற்றொழிலாகிய விலங்கை நாங்கள் பூணேம், நாங்கள் ஞானனந்த மயராகிய சிவபெருமானுடைய திருவடிகளை அடைவேம், என்று சொல்லிக் கொண்டு விரைந்து சென்று, சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்தார்கள். சிவபெருமான் அவர்களுக்குத் தோன்றி, உங்களுக்கு வேண்டியது யாது என்று வினவியருள, அவர்கள் சிவபெருமானை வணங்கி, அடியேங்களுக்கு வேதப்பொருளை உபதேசித்தருளுக, என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் கருணை கூர்ந்து, திருக்கைலாசமலையின் மீது தென்சிகரத்தினிற்கும் கல்லால நிழலின் கண்ணே தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்து அம்முனிவர்கள் நால்வருக்கும் வேதப்பொருளை உபதேசித்து, மறைந்தருளினார். முனிவர்கள் நால்வரும் பூமியிலே போய், ஞானம் நிலைபெறுமையால் வருத்தமுற்று, பின்னுந் தவஞ்செய்து சிவபெருமானுடைய திருவருளினாலே திருக்கைலாசமலையை அடைந்தார்கள். சிவபெருமான் அவர்களுடைய மலபரிபாகத்தைக் கண்டு, திவ்வியாகமங்களால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களுள்ளும் சரியை முதலிய முதன் மூன்று பாதத்தையும் உபதேசித்து, ஞானம் அவ்வண்ணஞ் சொல்லற்பாலதல்லாமையால் அவர்கள் காணும் பொருட்டு மௌனமுத்திரை காட்டி எழுந்தருளினார். அப்பொழுது முனிவர்கள் தங்கள் மனம் ஒடுங்கி, மும்மலமும் நீங்கி, சிவானந்த பரவசர்களாய்ச் செயலற்றிருந்தார்கள். இவ்வாறு சிவபெருமான் யோகத்திருக்

கும் கணமொன்றினுள்ளே பற்பல யுகங்கள் சென்றன. சிவபெருமான் உமாதேவியாரைப் பிரிந்து யோகத்திருத்தலால், ஆண்பெண் முயக்கம் இன்றுயிற்று. ஆகவே, என் படைத்தற்றொழில் தவறியது. இது நிற்க, சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தினாலே எண்ணில்லாத போகங்களைப் புசிக்குஞ் சூரபன்மனனவன் நம்மையெல்லாம் வருத்துகின்றனே, இவ் விந்திரனுடைய குமாரனுகிய சயந்தனையும் தேவர்களையுஞ் சிறைப்படுத் தினன். இவ்வண்ணம் நமக்கெல்லாம் நாடோறும் பெருந்துயரம் விளைய வும், சிவபெருமான் அறியாதார்போல எழுந்தருளியிருக்கின்றார். இதற்கு யாது செய்யலாம், சொல்லுக'' என்றார்.

பிரமதேவர் இவ்வாறு சொல்லக்கேட்ட விட்டுணு அவரை நோக் கிச் சொல்லுகின்றார் : ''சர்வான்மாக்களிடத்தும் நிறைந்து சகலத்திற்குங் காரணராய் உள்ள மகாதேவர் யோகவடிவங் கொண்டு எழுந்தருளி யிருப்பாராயின், காமப்பற்றுடையராய் முன்போலிருக்கும் இயல்புடையார் யாவர்! சிவபெருமான், நாமெல்லாம் தம்மை இகழ்ந்த தக்கனுடைய யாகத்திருந்த அதிபாதகத்தை ஊட்டித்தொலைத்து, அதன் பின்பு முன்னை வாழ்வை நமக்கருளிச்செய்யும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளினர். சூரபன்மனுக்கு வரங்கொடுத்தமையும், தேவர்கள் யாவரும் தம்மைச் சாராவண்ணம் முனிவர்கள்பொருட்டு யோகத்திருந்து உயிர்களுக்குத் துன்பஞ்செய்தலும், நுண்ணுணர்வால் ஆராயுமிடத்து, எம்மாட்டுள தாகிய பேரருளேயன்றிப் பிறிதொன்றன்று. சிவபெருமான் மௌனத்தை நீக்கி மலையரையன் புதல்வியாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்தருளுவாராயின், பிரமனே, படைத்தற்றொழில் கைகூடும். இனி ஒருகுமாரர் திருவவதாரஞ் செய்வாராயின், சூரன் முதலிய அசுரர் களெல்லாம் நாசமடைவார்கள், உலகமெல்லாம் முன்போல உய்யும். இது நிறைவேறும்பொருட்டு ஒன்று சொல்வேன், கேள். எல்லாருக்குங் காமப்பற்றை விளைவிக்கும் மன்மதனை விடுப்பாயாயின், சிவபெருமான் மௌனநீங்கி, உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்து, ஒரு குமார ரைத் தந்தருளுவர்'' என்றார். பிரமதேவர் அது கேட்டு, மனமகிழ்ந்து, ''அவ்வாறு செய்வேன்'' என்று சொல்லி, இருக்கையை விட்டெழுந்து, விடைபெற்றுக்கொண்டு, இந்திரன் முதலிய தேவர்களோடு சென்று, மேலைதி நகரத்தை அடைந்து, தமது கோயிலின் வீற்றிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

# காமதகனப்படலம்.

பிரமதேவர் மன்மதன் வரும்பொருட்டு நினைந்தார். நினைந்த வுடனே மன்மதன் விரைந்துவந்து, பிரமதேவரை வணங்கி, அஞ்சலி செய்து நின்று, ''சுவாமீ, நீர் அடியேனை மனசிலே நினைந்தது என்னை'' என்று விஞவினன். பிரமதேவர் மன்மதனை நோக்கி, ''நீ எங்கள் பொருட்டுத் திருக்கைலாசமலையிற் சென்று, சிவபெருமானை மௌனநீங்கி உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்யும்பொருட்டு அவர்மீது உன் பாணங்களைத் தொடுப்பாயாக'' என்றார். அது கேட்டவுடனே, மன் மதன் தன்னிரண்டு காதுகளையும் விரைவிலே பொத்தி, வருத்தமுற்று, ''சிவசிவ'' என்று சொல்லி, ''ஐயையோ! பெருங் கொடும்பாவத்தை விளைவிக்கும் இவ்வசனத்தைக் கேட்டேனே'' என்று கிலேசமுற்று, பிரம தேவரை நோக்கி இவ்வாறு சொல்வானுயினன்: ''வன்கண்ணரும் அறி வுடையோரிடத்துச் சென்றால், அவ்வறிவுடையோர் அவருக்கு உய்யுநெறி யைப் போதிப்பர். நான் உம்மிடத்து வர, நீர் எனக்கு இக்கடுஞ்சொல்லைச் சொன்னீர். என்விடத்தே உமக்குச் சிறிதும் அருளில்லையா! நான் என் கருப்பு வில்லையும் புட்பபாணத்தையுங்கொண்டு, பூமிதேவியையும் இலக் குமியையும் புணரும் வண்ணம் என் பிதாவாகிய விட்டுணுவை வென் றிலனு? நீர் சரசுவதியைப் புணரும்படிக்கும், உம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமைமீது இச்சை கொண்டு உள்ளப்புணர்ச்சி செய்யும்படிக் கும் உம்மை நான் மயக்கிக் கீர்த்தி பெற்றிலனு? இலக்குமியை விட்டு ணுவுடைய மார்பில் வைத்திலனு? சரசுவதியை உம்முடைய நாவில் இருத்திலனு? இந்திரன் இந்திராணியைப் புணரவும், அகலிகையினுலே அவனுடைய உடம்பெங்கும் ஆயிரம் யோனிகள் உண்டாகவும் செய் திலனு? முன்னெருநாள் சூரியனும் இந்திரனும் பெண்வடிவங் கொண்ட பாகனுகிய அருணனைப் புணர்ந்து வசையுறும் வண்ணம் மயக்கிலனு? இருபத்தேழு நக்ஷத்திரங்களைப் புணருஞ் சந்திரன் தன் குருவாகிய வியாழனுடைய மனைவியாகிய தாரையைப் புணர்ந்து புதனைப் பெறும் வண்ணம் செய்திலனு? வேதங்கள் யாவையும் நன்குணர்ந்த தேவர்க ளெல்லாரையும் மகளிருடைய குற்றேவல்களைச் செய்யும் வண்ணம் மயக்கிலனு? வசிட்டர், மரீசி, அகத்தியர், அத்திரி, கௌதமர், காசிபர் முதலிய துறவிகளுடைய வலிமையைக் கெடுத்திலனு? மனிதர்களுள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்குவருணத் தாரையும் அனுலோமர் அறுவரையும் பிரதிலோமர் அறுவரையும் கோளகர், குண்டகர், கானினர் என்னும் புறக்குடிகள் மூவரையும் பெண்மயலில் வீழ்த்திலனு? என்னுணையைக் கடந்தவர் யாவருளர்? இங்கே சொன்னவைகளெல்லாம் பரதந்திரனுகிய என்னல் முடியுமா! சுவதந்திர

ராகிய சிவபெருமானுடைய சத்தியே என்னை ஏவிநின்று செய்யும். என் பாணங்களினுலே விட்டுணு முதலிய பசுக்களை வெல்வதன்றி, பரமபதி யாகிய சிவபெருமானை வெல்லுதல் கூடுமா? சிவபெருமானை வழிபட்டு அவரால் அருளப்பட்ட அதிகாரத்தைப் பெற்றவரைப்போல அச்சிவ பெருமானையும் எண்ணிப்பேசினீரே! சோதிவடிவாயுள்ள சிவபெருமான் மீது நான் பாணங்களைத் தொடுக்கினும் செல்லுமா? திருக்கரமும் திரு நகையும் திருக்கண்ணும் திருமேனியும் அக்கினியாக உள்ள சிவபெருமானை நான் எய்யும்படி செல்வேனுயின், இவ்வுயிர்கொண்டு உய்யுந்திறம் உண்டோ? சொல்லும், சொல்லும். விருப்பு வெறுப்பில்லாத பரம் பொருளை மயக்குவது எப்படி? ஐயையோ சிவபெருமானையும் பிறர்போல நினைந்தீரே! அவருடைய பேராற்றலைத் தொலைத்தல் யாவராலாயினுங் கூடுமா? பேசும், பேசும். சூறைக்காற்று அடிக்கும் இடத்தே ஒரு சிறுபூளை எதிர்க்குமாயின், சிவபெருமான் திருமுன்னே சிறியேன் போர்செய்யப் புகுவேன். சிவபெருமானேடும் எதிர்ந்தவர்களுள் வலிதொலைந்து துயருற்ற வரும் இறந்தவருமன்றி உய்ந்தவர் யாவர்? இவ்விட்டுணு முதலியோர் யாவரும் முன்னுளிலே பாணமாதல் முதலிய தத்தம் பணிகளைச் செய்யும் பொழுது, அவர்கள் கருத்தை அறிந்து சிவபெருமான் தமது திருநகை யினுலே முப்புரங்களையும் எரித்தமையை அறியீரா! தம்மை வழிபடும் மார்க்கண்டேயரை வைது கொண்டு பெருங்கோபத்தோடு எதிர்ந்த இயமனை எம்பெருமான் தமது திருவடியினுல் உதைத்தமையை அறியீரா? முன்னுளிலே நீரும் விட்டுணுவும் 'யானே பரம்பொருள்' 'யானே பரம் பொருள்' என்று வாதிக்கும்பொழுது, எம்பெருமான் எழுந்தருளிவந்து, தம்மை இகழ்ந்த உம்முடைய உச்சிச்சிரசைக் கொய்தமையை மறந்தீரா? சலந்தரன் முதலிய அசுரர்கள் பலர் எம்பெருமானேடு எதிர்ந்து இறந் தொழிந்தமையைக் கேட்டிலீரா? உம்முடைய குமாரனுகிய தக்கனுடைய யாகத்திருந்தவர் யாவரும் எம்பெருமானுல் விடுத்தருளப்பட்ட வீரபத் திரக்கடவுளினுலே மானமிழந்து வலிதொலைந்து இறந்தமையைப் பார்த் திலீரா? திருப்பாற்கடலினின்றுந் தோன்றி விட்டுணுவும் அஞ்சி ஓட் டெடுக்கும் வண்ணம் துரந்த ஆலாகலவிஷத்தை உண்டருளினீரே! உமாதேவியுடைய திருக்கை விரலிற்றேன்றி உலகெங்கும் பரந்த கங்கையை ஓரணுவைப் போலச் சடையிற் கொண்டருளினீரே! தம்மை இகழ்ந்த நரசிங்கத்தையும் யானையையும் புலியையும் உரித்து அவற்றின் தோல்களைப் போர்வையும் உடையுமாகக் கொண்டருளின மையைப் பார்த்திலீரா? தமது பெருமையை ஆராயாது யாவராயினும் அகந்தைகொள்வராயின், உடனே அவருடைய வலிமையைத் தொலைத் தல் சிவபெருமான் செயலென்பது அறியீரா? கடைநாளிலே உலகங்க ளெல்லாம் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றும் ஒரு பொறியினுலே பொடிபடுமென்பது, ஐயையோ, உமக்கு விளங்காதா?

இத் தன்மைத்தாகிய முடிவிலாற்றலையுடைய சிவபெருமானே நான் என் கருப்புவில்லையும் புட்ப பாணத்தையுங் கொண்டு பொரச் சிறிதுந் துணியேன். தம்முயிர் மீது விருப்பில்லாதவரே இது செய்யத் துணிவர். ஆதி காலத்தில் உலகத்தைப் படைக்கும்பொருட்டுத் தம்மோடு பிரிவில்லாத அருட்சத்தியையே தமக்கு மனைவியெனத் தாமாக இருத்தியருளிய பெருங் கருணைப் பெருமானே நானு மயல்செய்வது! இது நன்று நன்று'' என்றான்.

மன்மதன் இவ்வாறு கூறி மறுக்கவும், பிரமதேவர் மனக்கவலை கொண்டு சிறிதுபொழுது ஆலோசித்து, பெருமூச்செறிந்து, மன்மதனை நோக்கிச் சொல்வாராயினர். ''நீ சிவபெருமானுடைய பெருமையை எடுத்துப் பேசினாய். இது சத்தியமே. சிவபெருமானைப் பொருதல் எளிதா, யாவருக்கும் அரிதன்றே! ஆயினும், தம்மை அடைந்தோரது துன்பத்தை ஒழித்தருளும் எம்பெருமானுடைய திருவருளினால் இக்கருமம் உன்னலே முடியும். பிறரான் முடியுமா, முடியாது. எல்லார்செயலும் இறைவன் செயலேயன்றிப் பிறிதன்று. அவருடைய திருவருளையின்றி ஓரணுவும் அசையாது, யாவும் நில்லா. நீ இப்பொழுது அவரிடத்தே செல்லக்கடவாய்; உன்செயலும் அவர் செயலே. இறுமாந்து தம்மைப் புகழும் தேவர்கள் யாவரும் மருளும்வண்ணம் எம்பெருமான் ஓரியக்க வடிவங் கொண்டு வந்திருந்து ஒருதுரும்பை நிறுவி, அனைத்தும் தஞ்செய்கையெனக் காட்டியருளினரே. நம்மாலும் சில முற்றுமென்றல் நாணன்றே? உயிர்ப் பொருளும் உயிரில் பொருளுமாகிய யாவும் பாவைபோலும், அவற்றை ஆட்டுவிப்பவர் சிவபெருமானே. ஆராயுங்கால், நம்மால் ஒன்று ஆகுமா! மன்மதனே, இதனை நீ இந்நாள் காறும் அறிந்திலையா! நீ விரைந்து அவரைப் பொரும்வண்ணம் செல்லக்கடவாய்; அதுவும் அவரருளே. இன்னும் சொல்வேன் கேள். துன்பமனுபவிப்போர் யாவராயினும் தமக்கு உதவிசெய்யும் பொருட்டு இரந்தாராயின், ஒருவன் அது செய்யாது மறுத்துத் தன்னுயிரைத் தாங்குதல் உலகநடைக்குத் தக்கதா? ஒருவன் பிறருக்கு யாதாயினுமோருதவியைச் செய்யவல்லானுயின், தானே செய்தல் உத்தமம், அவர் சொல்லியபின் செய்தல் மத்திமம், சொல்லிய பின்பும் பலநாண் மறுத்துப் பின் செய்தல் அதமம். யாவராயினும் துன்பமுழந்து வருந்துவாராயின், அதனை நீக்குதற்பொருட்டுத் தம்முயிரை விடினும், அது தருமமே. மறுத்தாராயின், பாவமும் பழியும் நீங்காவாம். ஒருவன் தானுய்தலே பொருளாகக்கொண்டு பிறருக்கு உதவிசெய்யா தொழிவனுயின், அவன் சிறியோனே; அவன் கழித்த நாள் நன்னாளாகுமா? அவன்வாழ்க்கை பொய்கையின் மலர்ந்த கொட்டிபோலும். விட்டுணுவைப் பொருது வென்ற ததீசிமுனிவர் விருத்திரனைக் கொல்லும் பொருட்டு இந்திரன் வந்திரப்பத் தம்முதுகெலும்பைக் கொடுத்து உயிர் விட்டமையை நீ கேட்டிலையா! எம்பெருமான் திருப்பாற்கடலினின்றுந்

தோன்றிய ஆலாகல விஷத்தை உண்டு தேவர்களுக்கு அமிர்தமருளிச் செய்தமையை நீ சிறிதும் அறிந்திலையா? அவ்வாலாகலம் தாக்கும்பொழுது 'வருந்தாதொழியுங்கள்' என்றுசொல்லி, விட்டுணு ஒருகணமாயினும் ஊக்கத்தோடு எதிர்ந்து நின்று நம்மைக் காக்கும்பொருட்டுத் தாம் கறுத்தமையை நீ கண்டிலையா? யாராயினுமொருவர் பிறர்மீது அன்பு கூர்ந்து அவருக்கு உதவிசெய்ய விரும்புவராயின், அதனாலே தமக்கு வரும் பெருங்கொடுந்துன்பத்தையேனும் மரணத்தையேனும் பாரார்; புகழொன்றே பயனகக் கொள்வர். யாவரினும் வலிய சூரபன்மனுடைய ஏவலினாலே நாமெல்லாம் துன்பமுற்று வருந்துகின்றோம். இனி அது நீங்கும்படி சிவபெருமான் ஒருதிருக்குமாரரைத் தரும்வண்ணம் பஞ்சபாணங் களைச் செலுத்தும் பொருட்டு உன்னை நாம் வேண்டுகின்றோம். ஆதலால், நமது துன்பத்தை ஒழிக்கும்பொருட்டு உனக்கு மரணம் வரினும் அதைத் தவறுகக்கொள்ளாதே. புகழைத்தேடுவோர் யாது வரினும் எதிர்செல்வர். இனி மறுத்துப் பேசாதே; நாம் பணித்தபடி செல்லக்கடவாய்'' என்றார்.

பிரமதேவர் இவ்வாறு சொல்லவும், மன்மதன் துயரங்கொண்டு, ''நான் சிவபெருமானுக்கு மாறுகொண்டு பொரமாட்டேன். இஃதன்றி எனக்கடுத்த தொன்று சொல்லும், செய்வேன்'' என்றான். உடனே பிரமதேவர் கோபங் கொண்டு, ''நாம் நயந்துசொல்லிய சொல்லை மறுத்து விட்டாய். நாஞ்சொல்லியபடி செய்வாயாயின், உய்வாய். இன்னும் மறுப்பாயாயின், உனக்குச் சாபமிடுவேம். யாது துணிவு? சொல்வாயாக'' என்றார். மன்மதன் அதுகேட்டு, வருந்திப் பெருமூச்செறிந்து, ''நான் இனி யாது செய்வேன்'' என்று கிலேசித்து, தன்மனசைத் தேற்றிக் கொண்டு, பிரமதேவரை நோக்கி, 'சுவாமீ, நான் நீரிடுஞ் சாபத்தினாலே முன்னையியல்பிழந்து துன்பமனுபவித்து வருந்துதலினும் சிவபெருமான் றிருமுன் சென்று பாணங்களைத் தொடுத்து மாளினுஞ் சிறந்தது. அங் ஙனம் மாண்டாற் பின்னும் உய்யலாம். நீர் கோபிக்கவேண்டாம். நான் இன்று சிவபெருமானோடு போர்செய்யப்போகின்றேன்'' என்றான். பிரம தேவர் மனமகிழ்ந்து, ''மன்மதனே, நீ நாம் பணித்தபடி செய்யத் துணிந்தது நன்று நன்று. சிவபெருமானிடத்தே உன்னை விடுத்து யாமிங் கிரேம், தொடர்ந்து பின்வருவேம். அஞ்சாதே, போ'' என்று ஏவினார். அப்பொழுது இந்திரன் மன்மதனை நோக்கி, ''மைந்தனே, நான் தேவர் களோடும் துன்பமனுபவித்துச் சிறுமையுற்றமை உனக்குத் தெரியுமே. நமக்கு வாழ்வு தருங்கருத்துடையையாயின், சிவபெருமான் உமாதேவியை திருக்கல்யாணஞ்செய்யும் வண்ணம் புரியக்கடவாய்' என்றான்.

அதுகேட்ட மன்மதன் அங்குநின்று நீங்கி, தன்கரத்தை அடைந்து தன்மனைவியாகிய இரதிக்கு அவ்வியற்கையைச் சொல்லி, அவளைத்தெளி

வித்து ஒருப்படுத்திக்கொண்டு, புட்பபாணங்கள் இட்ட தூணியை முதுகிலே கட்டி; மாந்தளிராகிய உடைவாளை அரையிலே வைத்து; வில்லைக் கையிற்கொண்டு; குயில்கள் காகளமாகவும் கடல்கள் முரசமாகவும் ஒலிக்க; திரைகள் சாமரமாக அசைந்துசெல்ல; மற்சக்கொடி செல்ல; சந்திரன் குடையாக நிழற்ற; கிளிகளாகிய குதிரைகள் பூண்ட தென்றலாகிய தேர்மீது இரதியோடுமேறி; தன்னுலகத்தை அகன்று; துர்ச்சகுனங்கள் அளவில்லாதன நிகழ; திருக்கைலாசமலையை அணுகினன். தூரத்தே திருக்கைலாசமலையைக் கண்டு தேரினின்றுமிறங்கி; வணங்கிக் கொண்டு; தனக்கு அயலில் வந்த பரிசனத்தை அங்கு நிறுத்தி; புலியைத் துயிலுணர்த்தப்புகும் மான்போல இரதியோடு துணிந்து சென்றனன். திருக்கைலாசமலைமேல் ஏறி, அங்கே புணர்ச்சியின்றி இருந்த மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் காமப்பற்றை விளைவிக்க நினைந்து; தன் கைவில்லை வளைத்துப் புட்பபாணங்களைத் தொடுத்தான். சிவபெருமானுடைய திருக்கோயிலின் முதற்கோபுரவாயிற்கண் எழுந்தருளியிராநின்ற சிவானுபூதிப்பெருவாழ்வாகிய திருநந்திதேவர் அது கண்டு, கோபித்து, "இது மன்மதனுடைய செய்கையே" என்று திருவுளங்கொண்டு, "உம்" என்று உரப்பினர். அதனால் மன்மதனுடைய பாணங்கள் மிருகங்கண்மேலும் பறவைகண்மேலும் செல்லாது ஆகாயத்திலே தடைப்பட்டு நின்றன. மன்மதன் அதுகண்டு; திருநந்திதேவருடைய காவலையும் ஆணையையும் நோக்கி, பெருமூச்செறிந்து, நடுநடுங்கி, விம்மி அவர் திருமுன் விரைந்து சென்று, அவரை வணங்கி எழுந்து, அஞ்சலி செய்து நின்று, தோத்திரம் பண்ணினன். திருநந்திதேவர் மன்மதனை நோக்கி, "நீ இம்மலைக்கண் வந்தது என்னை" என்று வினவியருள, மன்மதன் பிரமதேவருடைய புணர்ப்பனைத்தையும் திருநந்திதேவருக்கு மெய்ம்மையாக விண்ணப்பஞ் செய்தான். அது கேட்ட திருநந்திதேவர் தமது திருவுளத்திலே இவ்வாறு எண்ணுவாராயினர். "பிரமன் முதலிய தேவர் தங்கள் துன்பம் நீங்குநிமித்தம் இம்மன்மதனை விடுத்தார்கள். சிவபெருமான் தாம் யோகத்திருக்கும் பொழுது யாவர் வரினும் உள்ளே விடலாகாதெனவும், மன்மதனை மாத்திரம் விடுக்கலாமெனவும், எனக்குப் பணித்தருளினர். பசுவைக் கொன்று யாகஞ்செய்து பின்னர் அப்பசுவை முன்போல எழுப்பும்படி வேதஞ்சொல்லியவாறு எம்பெருமானும் மன்மதனைக் கொன்று உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்து; பின்பு அவனை முன்போலவே எழுப்பும்படி திருவுளங்கொண்டருளினர் போலும். ஆதலால், இது அருளே, இவன்வரவும் ஆணையே" என்று நினைந்து, மன்மதனை நோக்கி, "நீ சிவபெருமான் றிருமுன் செல்லல் வேண்டுமா" என்றார். மன்மதன் வணங்கி நின்று, "சுவாமீ, அடியேனுக்கு மரணம் வரினும் சிவபெருமான்றிருமுன் செல்லுதற்கு உடன்பட்டு இங்கு வந்தேன். அதற்கிசைந்த வகைமையை அருளிச் செய்யும்" என்று விண்ணப்

பஞ் செய்தான். திருநந்திதேவர் ''நீ சிவபெருமான்றிருமுன் செல்ல விரும்பினையாயின், மேலைவாயிலாலே செல்லக் கடவாய்'' என்றார்.

மன்மதன் வணங்கி விடைபெற்றுக் கொண்டு, மேலைவாயிலாலே சென்று, தேவதேவராகிய சிவபெருமான் அக்கினிமலை போல மௌனத் தோடு எழுந்தருளியிருந்த திருவெல்லையை அணுகினன். அணுகியவுடனே, ஒப்பில்லாததொரு சரபம் இருந்தமை கண்ட சிங்கக்குட்டி போலச் சிவ பெருமான் எழுந்தருளியிருந்தமை கண்ட விட்டுணுகுமாரனுகிய மன்மதன் அஞ்சி சரீரமெல்லாம் வேர்ப்ப நடுநடுங்கி, தன் கையிற்கொண்ட படை யோடு அவசமாக விரைவில் வீழ்ந்தான். உடனே இரதி ''ஐயையோ இறந்தான் போலும்'' என்று துன்பங்கொண்டு, அவனை எடுத்துக் கையிற்முங்கித் தேற்றினுள். மன்மதன் அறிவுபெற்று, ''தந்துயரொழித்த லொன்றே பயனுகக்கொண்ட பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள், திருநகையினுலே முப்புரத்தையும் எரித்தருளிய மகாதேவரைப் பொரும் வண்ணம், என்னை இங்கு விடுத்தார்கள். தீவினையேற்கு இப்போதே மரணம் வந்தணுகியது. இதற்கும் ஐயமுண்டா! மகாதேவர் எழுந்தருளி யிருக்கும் இத்திருக்கோலத்தைக் கண்டவுடனே அஞ்சி நடுநடுங்கி அவச மாயினேனே! இவ்வியல்புடைய சிறியேன் கைக்கொண்ட பாணங்களா இம்மகாதேவரை வெல்வன! இதனைப் பிரமனும் தேவர்களும் அறியார் கள் போலும். பிரசண்டவாயுமுன்னே தீபத்தைப் போக்கினுல் அது நிற்குமா. அதுபோலவே தேவர்கள் வாக்குக்கும் மனசுக்கும் எட்டாத இப்பரம்பொருளுக்கு முன்னே சிறியேனை விடுத்தார்கள். இம்மகாதேவ ருடைய திருநோக்கினுலே இனிச் சிறிதுபொழுதினுள்ளே நான் நுண் பொடியாவேன். சருவலோகங்களையும் சங்காரிக்கும் இம்முழுமுதற் கடவுளைப் புட்பபாணங் கொண்டு நானுபொரவல்லேன்! இது நகைக்கிடமன்றே! இது விதியின் செய்கையே. விதியை யாவர் கடக்கவல்லர்! பிரமனுலும் முடியாதன்றே! இவையெல்லாம் சிவன் செயலே. யாது முடியுமோ! அறியேன். நான் இவ்வாறு தூங்கிக் கிடத் தலாகாது. இனி விரைந்தெழுந்து, வில்லைவளைத்துப் புட்பபாணங்களைப் பூட்டி, எப்பெருமான் பக்கத்தே நின்று, வல்லவாறு செய்வேன். மேலே பட்டவா படுக'' என்று நினைந்து கீழ்விழுந்த வில்லை எடுத்து வளைத்து, புஷ்பபாணங்களைப் பூட்டிக்கொண்டு, இரதி தன்னை அகலாது செல்ல, சிவபெருமானுக்கு ஒரு பக்கத்திலே போய்ப் பொரும்வண்ணம் முயன்று நின்றனன்.

மன்மதன் இங்கே நிற்க, மனுவதிநகரத்திலே பிரமதேவரை இந்திரன் வணங்கி, ''சுவாமீ, நீர் மன்மதனைச் சிவபெருமானிடத்து விடுத்தீரே; அவன் செய்யும் போரைப் பார்க்கும்வண்ணம் நாமெல்லாம் போதல் வேண்டும்'' என்றனன். பிரமதேவர் அதற்கியைந்து, இந்திரன்

முதலிய தேவர்களோடு சென்று, திருக்கைலாசமலையின் மீது ஒரு பக்கத்தே போய், சிவபெருமானைத் துதித்து, மன்மதனுடைய செயலைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

மன்மதன் "நான் நினைத்தது முடிப்பேன்" என்று, புட்பபாணங் களைந்தையும் சிவபெருமான் மீது செல்லவிட்டான். அவை திருமேனி மீது படுதலும், சிவபெருமான் மன்மதனைச் சிறிதே பார்த்தார். பார்த் தவுடனே, மன்மதனை அக்கினிவடிவாகிய நெற்றிக்கண் விரைந்து சுட்டது. திருக்கைலாச மலையெங்கும் புகை பரந்தது. பரத்தலும், கீழைக்கோபுர வாயிலின்கண் எழுந்தருளியிருந்த திருநந்திதேவர், அதுகண்டு தம்மைச் சூழ்ந்த கணங்களை நோக்கி, "உள்ளே சென்ற மன்மதன் இறந்துவிட் டான். மன்மதனைப் பொடித்தது எம்பெருமானுடைய நெற்றிக்கண்ணு மிழ்ந்த அக்கினியன்று, சிவபெருமானை எய்வேனென்று துணிந்துசொல்லி இங்கு வந்த அவன் செயற்கையே அவனைச் சுட்டதுபோலும். இனி இரதியானவள் தன் கணவன் இறந்தமை கண்டு புலம்பி எம்பெருமானை வந்திரப்ப, எம்பெருமான் மன்மதனை உயிர்ப்பித்தருளுவர்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட கணர்கள் சருவான்மாக்களும் உய் யும் பொருட்டுத் திருவுளங்கொண்டருளும் எம்பெருமானுடைய திருவ ருணீர்மையை எடுத்துத் துதிசெய்து கொண்டிருந்தார்கள்.

சிவபெருமான் மன்மதனை எரித்துவிட்டு, முன்போலவே மௌனத் தோடு எழுந்தருளியிருந்தார். இரதி தன் கணவன் இறந்தமை, கண்டு துயரங்கொண்டு அறிவிழந்து, கண்ணீர் சோரிய உடம்பெங்கும் வேர்வை தோன்றக் கீழே விழுந்தாள். சிறிது பொழுது சென்றபின், அறிவு வரு தலும், கையினுலே வயிறலைத்துப் புலம்புவாளாயினள்; "இலக்குமி குமா ரனே, என்னுயிரே, விட்டுணு புதல்வனே, சம்பரனுக்குப் பகைவனே, கருப்புவில்லைக் கையிற்கொண்ட வீரனே, நீ செம்பவள மலையைப் போலும் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினுல் எரிந்தாயே! தேவர் களுடைய கண்களெல்லாம் உறங்கினவோ! பிரமதேவரும் மகிழ்ந்தனரோ! 'மூன்னளிலே மூப்புரங்களை எரித்தருளிய மகாதேவர்மேலே போர் செய் யப்போதல் முறையோ முறையோ' என்று நான் சொன்னலும் கேட்டா யில்லையே! தேவர்களுடைய பணியைச் செய்வதே துணிவாகக் கொண் டாயே! உன் சரீரம் பொடியாய்ப் போயிற்றே! இது கண்டும் உய்வா ருண்டா! என்னுயிராகிய நீ இறந்தபின்னும் நான் தனியே இருக்கலாமா! மகாதேவருடைய நெற்றிக்கண் உனக்கு மாறுக, உன்வலிமை இலதாக, உன்சரீரமோ நீறுக, திருக்கைலாசமலையெல்லாம்நெருப்பாக, கவலி தேவர் களுடைய நெஞ்சத்ததாக, ஆறுத பெருந்துயரம் எனக்காக நீ எங்கே ஒளித்தாய்? அருவாயேனும் சொல்லாயோ! ஒன்றும் பேசாதிருக்கின்றாயே! என்கணவனே, உனக்கு நான் யாதாயினுங் குறை செய்ததுண்டா! தேவர்களிடத்தோ, இந்திரனிடத்தோ, உன்னை இங்கு விடுத்த பிரம

னிடத்தோ, 'சிவபெருமானுடைய மௌனநிலையைச் சிதைப்பேன் என்று இங்கு விரைந்து வந்த உன்னிடத்தோ, நீ பொடியாயிறந்த இந்தப்பழி யாரிடத்துச் சென்றதையா! சிவபெருமானுடைய யோகத்தைத் தவிர்க்க வேண்டின், தேவர்களெல்லோரும் இறந்தார்களோ! என் கணவனே நீ மாத்திரமா இலக்காய் நின்றாய். உன்னைக் கொல்லாமற்கொன்றார்களே! என்னுயிருக்குங் கொலைசூழ்ந்தார்களே! பொல்லாதவர்களுக்கு நன்மைசெய்வது தம்முயிர்போகும்பொருட்டன்றே? நான் என்ன பாவஞ் செய்தேனே! என்போலும் மகளிருக்கு என்னவிடர் செய்தேனே! முன்னை விதியை அறிவேனே! ஐயையோ இப்படி முடிந்ததே! என்காவலவோ, தமியேனைக் காத்திடாயோ! சிவபெருமானை நோவதற்கு நீதி உண்டோ! உன் முடியைக்காணேனே! அழகொழுகாநின்ற உனது திருமுகப்பொலிவைக் காணேனே! இரத்தினபரணங்கள் விளங்காநின்ற புயங்களைக் காணேனே! மார்பினழகைக் காணேனே! புட்பபாணங்களைக் காணேனே! வில்லைக் காணேனே! போர்செய்யுங் கோலத்தைக் காணேனே! நான் என் செய்வேன், என்செய்வேன்! என்கணவா, என்னையொழிந்து எவ்விடத்தே இருக்கின்றாய்! அந்நாளிலே அக்கினி சாக்ஷியாக, தேவர்களும் பிரமவிட்டுணுக்களுங் காண, என்னை மங்கலியந் தரித்து விவாகஞ்செய்தபொழுது 'நான் உன்னைப் பிரியேன்' என்று சத்தியஞ்செய்தாயே! வேனின்மன்னவோ மன்னவோ, என்னைத் தனியே விட்டுப்போதல் நீதியோ! சொல்லு. போ என்று உன்னை இங்கு விடுத்த தேவர்களெல்லாம் பொடியாய்ப் போன உன்னை வா என்று விரைந்தெழுப்பமாட்டார்களோ! உன்பிதா மிகவலியவன் என்று சொல்வார்களே! ஓவென்று நானிங்கே அழவும், வந்தானில்லையே! உறங்கினனே! எரிந்து போவாயென்று உன்சிரத்தில் விதித்திருந்தால், அவரையெல்லாம் நான் வெறுக்கலாமோ! பிரமாவையும் இந்திரனையும் உன்பிதாவாகிய விட்டுணுவையும் முனிவர்களையும் மற்றை யாவரையும் உன்னுடைய புட்பபாணத்தினல் மருட்டி வென்றாய், அதுபோலவே சிவபெருமானையும் நினைந்து, இப்படி யழிந்தாயே! இது விளக்கில் வீழும் விட்டிலின் செயல்போலுமன்றே! பூஞ்சோலையிலே பனிநீர்ச்சிவிறிகொண்டு விளையாடிப் பூக்கொய்து, புட்பசயனத்தின்மீது சிறுதென்றல் இனிது வீச, பச்சைக்கற்பூரங்கலந்த சந்தனச்சேறடி, இருவருமாய்க் கூடித் துயில்செய்த வாழ்வும் பொய்யாகிக் கனவுகண்ட கதையாயிற்றே! தம்மை மருமகனென்று அவமதித்த தக்கனுடைய வேள்வியை அழித்த மகாதேவரைப் போர்செய்யென்று தேவர்களெல்லாம் உன்னை விடுத்தார்களே! அவர்களால் பொடிபட்டாயே! நானும் உன்னைப் போல ஆறாத பெருந்துயரத்தினல் எரிகின்றேன்! என்னுயிரே, நானும் அங்கே வருகின்றேன்'' என்று புலம்பி வருந்தினள்.

திருச்சிற்றம்பலம்.

# மோனநீங்குபடலம்.

பிரமா முதலிய தேவர்களெல்லாரும் மன்மதன் பொடிபட்டமையையும் சிவபெருமான் முன்போலவே மௌனத்தோடு எழுந்தருளியிருத்தலையுங் கண்டு, சரீரம் நடுநடுங்கி, கண்ணீர் வார, வேர்வை தோன்ற, துன்பக்கடலின் வீழ்ந்து, அழுதார்கள். ''நாமெல்லாம் உய்யும்வண்ணம் மன்மதனைச் சிவபெருமானிடத்தே விடுத்தேம், சிவபெருமான் அவனைப் பொடிபடுத்தனர். தமது மௌனநிலையை விடுத்திலர். முன்போலவேயெழுந்தருளி யிருக்கின்றார். ஐயையோ இனி யாது செய்வேம்'' என்று அயர்ந்தார்கள். ''மன்மதனைப் பொடிபடுத்திய எம்பெருமானுடைய மௌன நிலையை உபாயத்தினாலே நீக்குதல் கூடாது; அவர் நம்மைத் துயரத்தினின்றும் நீக்கிக் காத்தல்வேண்டுமாயின், நாமெல்லாம் அவரைத் துதிப்பதே கடன்'' என்று கோபுரத்தின் புறத்தே சென்று துதிக்கலுற்றார்கள். ''நஞ்சை உண்டும், கங்கையைச் சூடியும், நெற்றியிலே அக்கினிக்கண்ணைப் படைத்தும், அசுரர்களைக் கொன்றும், முன்னாளிலே அடியேங்களைக் காத்தருளினீர். இப்பொழுது அருள் செய்யீராயின், புதல்வர்களாகிய எங்களுக்குப் பிதாவாகிய உம்மையன்றிப் புகலிடமாவார் யாவர்! அன்பர்கள் குற்றமே செயினும் குணமாகக்கொண்டருளும் எம்பெருமானே, உம் முடைய திருவடிகளே சரணம் என்று அடைந்தேம். நாம் நாடோறும் சூரபன்மாவினாலே நலிவெய்தி மாளலாமா! சிறிதாயினும் எமது துயரத்தைத் திருவுளங்கொண்டருளீரா? நீர் உமாதேவியாரைப் பிரிந்து யோக நெறிகாட்டற்கண் உமக்கு ஓரிறைப்பொழுது மாத்திரமே சென்றது; எங்களுக்கோ பலயுகங்கள் சென்றன. இன்னும் நீர் புறக்கணித்திருப்பீராயின், நாமெல்லாம் உய்வது எப்படி! விட்டுணு முதலியோர் யாவரும் உம்மை நோக்கித் தவஞ் செய்து உய்முடைய திருவடிகளைப் பூசித்துத் துதிக்க, நீரே இப்பதங்களெல்லாவற்றையும் அருளிச்செய்தீர். தோற்றமும் ஈறும் இல்லாதவராகிப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் முழுமுதற்கடவுள் நீரே. இத்தன்மையையுடைய நீர் செய்யும் இத்தவநிலை எம்பொருட்டன்றி உம்பொருட்டன்றே. அடியேங்கள் முன்செய்த பெருங்கொடும் பாவத்தினாலே சிறியேங்களை இடராகிய வாளினாலே நாடோறும் அரிகின்றீர். இனி எங்களைக் காத்தருளும், அல்லது விரைந்து கொன்றுவிடும். இவ்விரண்டினுள் எது உமக்குப் பிரீதியோ அது செய்யும். நீர் உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்து அடியேங்களைக் காத்தருளும்வண்ணம் மன்மதனை உம்மிடத்து விடுத்தேம் அறிவிலாதேம். நீர் அவனைப் பொடிபடுத்தி முன்போலவே எழுந்தருளியிருக்கின்றீர். அடியேங்கள் இவ்வாறு வருந்தலாமா! இனியாயினும் சிறிது திருவுளமிரங்கீரா! நரசிங்க முதலிய

மிருகங்களை உரித்து அவற்றின்மேல்களைத் தரித்தருளினீர். தக்கனுடைய யாகத்தை வீரபத்திரக் கடவுளைக் கொண்டு தடிந்தருளினீர். அதுபோலவே சூரபன்மனைக் கொன்று, அடியேங்களுடைய துயரத்தை நீக்கியருளும்'' என்றார்கள்.

பிரமா முதலிய தேவர்கள் உருகுகின்ற அரக்குப்போலச் சரீரம் தளர்ந்து, இவ்வாறே மனநொந்து அழுது துதித்தலும், அவர்களுடைய பாவம்முடிவதற்கு அணித்தாயினமையால், சிவபெருமான் திருவுளமிரங்கி, திருநந்திதேவரை நினைந்தருளினர். அதனை அறிந்த திருநந்திதேவர் சிவபெருமான் றிருமுன்சென்று, நமஸ்கரித்து எழுந்து, அஞ்சலிசெய்துநின்றார். சிவபெருமான் அவரை நோக்கி, ''பிரமன் முதலிய தேவர்களை நம்முன் அழைத்துக்கொண்டுவரக்கடவாய்'' என்று பணித்தருள, திருநந்திதேவர் முதற்கடையில் வந்தார். அது கண்ட பிரமா முதலிய தேவர்களெல்லாரும் திருநந்திதேவரை வணங்கித் துதித்தார்கள். திருநந்திதேவர் அவர்களைநோக்கி, ''எம்பெருமான் உங்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரும்வண்ணம் பணித்தருளினர். வருந்தாதொழிமின், வாருங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். இத்திருவாக்குச் செவிகடோறும் வார்த்த அமிர்தம்போலப் புகுதலும், தேவர்கள் பேரானந்தப்பெருங்கடலின் மூழ்கி, ஆரவாரித்துச் சிவபெருமானைப் பாடியாடினர்கள். திருநந்திதேவர் தேவர்களைச் சிவபெருமான் றிருமுன்னே கொண்டு சென்றுய்ப்ப, அவர்கள் சிவபெருமானைத் தரிசித்துப் பலகாலும் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலிசெய்து நின்று, தோத்திரம்பண்ணினர்கள். சிவபெருமான் அவர்கண்மீது திருநோக்கஞ் செய்து, ''உங்கள் துன்பத்தையும் வேண்டுகோளையுஞ் சொல்லுங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதற்கு தேவர்கள் ''பெருங்கருணைக் கடலே, அளப்பில்லாத யுகங்களாக அடியேங்கள் சூரபன்மனுடைய ஆணையிலே துன்பப்படுகின்றோம். அடியேங்களுடைய துன்பத்தை நீக்குவோர் நீரன்றி வேறு யாருளர்? சூரபன்மனைக் கொல்லும்பொருட்டு ஒரு குமாரரைத் தந்தருளும்வண்ணம், இமையமலையின்மீது தவஞ்செய்யாநின்ற உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் அதற்கியைந்து, ''நீங்கள் வருந்தாதொழிமின், நாம் உங்கள்பொருட்டு இமையமலையின்மீது தவஞ்செய்யும் உமையைக் கல்யாணஞ்செய்து, உங்கள் வருத்தத்தை நீக்குவோம். இனி நீங்களெல்லீரும் போங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். பிரமா முதலிய தேவர்களெல்லாரும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு, துயர நீங்கி, மகாமேருமலைமீது சென்றார்கள்.

இரதி அதுகண்டு, எம்பெருமான் றிருமுன்னே வணங்கித் துதித்து, ''முறையோ முறையோ! சுவாமீ, பிரமா முதலிய தேவர்களுடைய

புணர்ப்பினுலே அடியேனுடைய நாயகன் இங்கே வந்து உம்மாலிறந்தான். அவன் செய்த குற்றத்தைத் திருவுளங்கொள்ளாது அருள்செய்க'' என்று விண்ணப்பஞ்செய்தாள். சிவபெருமான் கருணைகூர்ந்து, ''இரதியே, நீ புலம்பாதொழி. நாம் இமையமலைமீது சென்று உமையை விவாகஞ் செய்யும்பொழுது உன்னுயகனை உயிர்ப்பித்தருளுவோம்; நீ போகக்கடவாய்'' என்று அருளிச்செய்தார். இரதி அதுகேட்டு மனமகிழ்ந்து, வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, இமையமலையிற்சென்று, ஒருபக்கத்தே முகிலினது வரவைநோக்கும் மயில்போலிருந்தாள்.

சிவபெருமான் உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ்செய்து தேவர்களுடைய துன்பத்தை ஒழிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டு, சனகர் முதலிய முனிவர்கள் நால்வரையும் நோக்கி, ''மைந்தர்களே, ஞான யோகம் சொல்லற்பாலதன்று; அது இவ்வாறு மௌனத்தோடிருந்து நம்மை அறிவதேயாம்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட முனிவர்கள் தெளிந்து மனமகிழ்ந்து, சிவபெருமானை மெய்யன்போடு வணங்கிநின்று, ''கிருபாசமுத்திரமே, அடியேங்கள் முன்னைமயக்கம் நீங்கி உய்ந்தோம்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். சிவபெருமான் ''இனி நீங்கள் நிட்டையிலிருந்து நமது சாயுச்சியபதத்தை அடையக்கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்து, விடைகொடுத்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

## தவங்காண்படலம்.

முனிவர்கள் சென்றபின்பு, சிவபெருமான் இமையமலைமீது தவஞ் செய்யும் பார்ப்பதியம்மைக்குத் தம்மாட்டுள்ள அன்பையுங் காதலையும் யாவருக்குங் காட்டும்வண்ணம் திருவுளங்கொண்டு, கல்லாடையுடையும், சிகையும், விபூதியாலாகிய திரிபுண்டரமும், பூணூலும், கமண்டலம் பொருந்திய கையும், மழையையும் பனியையும் வெய்யிலையும் காக்கும் ஓலையும், தண்டும் உடைய ஒரு முதிய பிராமணவடிவங் கொண்டு இமையமலையிற் சென்று, உமாதேவியார் தவஞ்செய்யுஞ் சாலையை அடைந்தார். கடைகாப்போராகிய மகளிர்கள் பலர் ''இவர் பெரியவர்'' என்று வந்து, அவர் திருவடிகளை வணங்கி நின்று, ''மூதியோரே, இம் மலைமீது, வருதல் எளிதன்று; சுவாமிகள் வந்த காரியம் யாது'' என்றார்கள். அதற்குப் பிராமணர் ''பார்ப்பதியம்மை செய்யுந் தவத்தைப் பார்க்க வந்தேன்'' என்றார்.

உடனே சிலர் உமாதேவியிடத்தே சென்று, வயோதிகப் பிராமணருடைய வரவை விண்ணப்பஞ் செய்தார்கள். உமாதேவியார் ''அவர் முதியவராயின், இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று பணித்தருள, அம் மகளிர்கள் பிராமணரை உமாதேவியார் திருமுன் கொண்டு சென்றுய்த்தார்கள். உடனேஉமாதேவியார் ''இவர் எம் பெருமானுடைய அடியவர்'' என்று தொழுதார். அப்பொழுது தேவியாருக்கு மெய்த்துணையாயுள்ள விசயையென்பவள் ஓராசனமிட்டு, பிராமணரை அதன் மேல் இருத்தினுள். உமாதேவியாரும் பக்கத்திலே நின்றார். பிராமணர் உமாதேவியை விருப்பத்தோடு பார்த்து, ''உனதழகெல்லாம் அழிய, சரீரத்துள்ள தசை குன்ற, பெருந்தவஞ் செய்கின்றாய் யாது விரும்பினை ? சொல்'' என்றார். உமாதேவியார் விசயையுடைய முகத்தை நோக்கி, குறிப்பினாலே ''இவருக்கு எதிர் மொழி சொல்லக் கடவாய்'' என்று கண் காட்ட, விசயை ''சுவாமீ, இவ் வம்மையானவள் தன்னைச் சிவபெருமான் திருக்கல்யாணஞ் செய்து தம்மிடத்திருத்திக்கொள்ளும் பொருட்டுத் தவஞ்செய்கின்றாள்'' என்றாள். பிராமணர் நகைத்து, ''பிரமவிட்டுணுக்களாலும் அறியப்படாத சிவபெருமான் இவளுடைய தவத்துக்கு எய்துவாரா ? எய்தினும், இவளை விருப்பத்தோடு விவாகஞ் செய்வாரா ? இவள் அறியாதே தவஞ்செய்கின்றனள். சிவபெருமான் இவளுக்கு எளியவரா ? இவள் வருந்தித் தவஞ் செய்தலால் ஒரு பயனுமில்லை. இத்துணைப் பெறலரும் பொருள் இவளுக்கு எளிதாகுமா ? இவளுடைய அழகு பலகாலம் வறிதுபட்டதன்றே! இனி இத்தவத்தை விரைந்து விடுதலே இவளுக்குக் கடன்'' என்றார். அது கேட்டவுடனே உமாதேவியார் ''ஐயையோ! எம்பெருமானுக்கு இவர் அன்பர். முதுகுரவர் என்று எண்ணினேன். இவர் இக் கடுஞ் சொல்லைச் சொல்வாரென்பது அறியேன்'' என்று திருவுளத்திலே கோபங் கொண்டு, வருந்திப் பெருமூச்செறிந்து, பொறுக்கலாற்றுமையால் நாணை விடுத்து, பிராமணரை நோக்கி, ''தோற்றமும் இறுதியுமில்லாத மகாதேவர் என் கருத்தை முடியாது விடுவாராயினும், நான் இத் தவத்தை விடுவேனே ! இன்னும் மிகக் கொடுந் தவத்தை அளப்பிலாத காலஞ் செய்து உயிர்விடுவேன். நீ மிக மூத்தமையால் மயங்கினாய். பித்தனே நீ'' என்றார். அது கேட்ட பிராமணராகிய சிவபெருமான் மீட்டும் ஒரு புணர்ப்பைத் திருவுளங்கொண்டு, உமாதேவியாரை நோக்கி, ''பெண்ணே, நீ விரும்பிய சிவனுடைய வளத்தினியல்பை நன்றாகக் கேட்டறிந்திலை போலும். அதனை நாஞ் சொல்லுகின்றேம், கேள். சிவனுக்கு வஸ்திரம் தோல்; வாகனம் எருது; ஆபரணம் பாம்பு, எலும்பு, தலைமாலை, பன்றிக்கோடு முதலியன; போசன பாத்திரம் தலையோடு; போசனம் பிக்ஷையும் நஞ்சும்; நடனசாலை சுடுகாடு; அணிவன வெள்ளெருக்கு, அறுகு, கொன்றை, நொச்சி, மத்தம், கங்கை, பாம்பு முதலியன

பல; சந்தனம் சாம்பர்; கையிற்றரிப்பன சூலம், மான், மழு, உடுக்கு, அக்கினி என்பன; சேனை பூதம்; அச் சிவனுக்குத் தாயும் தந்தையும் சுற்றமும் உருவும் குணமுமில்லை. அவனுக்கு உரிய வளங்கள் இவை களே. இவைகளெல்லாம் உன்னுடையனவாகும்பொருட்டா நீ தவஞ் செய்து இளைத்தாய்? சிறப்புப் பொருந்திய அளப்பிலாத வளங்களை யுடைய மகாராசாவுடைய புத்திரிக்கு இது இயையுமா?'' என்றார்.

பார்ப்பதியம்மையார் அதுகேட்டவுடனே, திருச்செவிகளைத் திருக் கரங்களினுலே பொத்தி, ''சிவசிவ'' என்று சொல்லி, இரங்கி பெருங் கோபங்கொண்டு, வருத்தமுற்று, பிராமணரை நோக்கி, ''பார்ப்பானே, கேள். பரமபதியாகிய எம்பெருமானிடத்து உன்மனசிலே சிறிதாயினும் அன்பு நிகழ்ந்ததில்லை. நீ இச்சிவவேடங் கொண்டமை வேடுவர் காட் டினுள்ள பறவைகளைக் கவரும்பொருட்டுப் புதலை மேற்கொண்டமை போலும். முன்னாளிலே தக்கனென்பானொருவன் உன்னைப்போலவே எம் பெருமானை இப்படி இகழ்ந்துபேசினதும் அதனுலே அவன் பட்ட பாடும் நீ கேட்டாயில்லையா! ஐயையோ! எம்பெருமானை இப்படி நீ என்முன் இகழ்ந்தாயே! பார்ப்பானே, நீ இந்நாள்வரையும் வேதங்களைச் சிறிதும் ஆராய்ந்தறிந்திலைபோலும். பார்ப்பார்கள், சிவபெருமானே பரம்பொரு ளென்று துணிந்து கூறுநின்ற வேதங்களை ஒதினராயினும், அவ் வேதநெறியின் நில்லாது, நீயொழுக்கத்தையே மேற்கொண்டு சிவபெரு மானை இகழ்ந்து இகழ்ந்து அவ்வதிபாதகத்தினுலே முத்தியெய்தாது பிறந் தும் இறந்தும் உழலும் வண்ணம், முன்னாளிலே இருடிகளாலே பெற்ற சாபம், ஐயையோ உன்னையும் மயக்காது விடுமா! செகற்பிதாவாகித் தங்களைப் பெற்றுத் தங்கள் தொழிலுக்கு அதிபதியாகித் தங்களுக்கு இன்றியமையாச் சிறப்பினையுடைய சிவபெருமானை நீங்கி, தங்கணவரை விடுத்துப் பிறர்பக்கமாகிக் கற்பினையிழந்த மகளிரைப்போலும் பார்ப் பார்களுடைய முறையே நீ செய்தாய். உன்னை நான் வெறுப்பதென்னை! ஆயினும், பார்ப்பார்களுள்ளே வேதத்தில் விதித்தபடி விபூதி உருத்தி ராக்ஷம் என்னும் சிவசின்னங்களைத் தரித்து, சிவபெருமானுக்குத் தொண்டுசெய்வோரும் உண்டு. நீ அவர்போலச் சிவசின்னங்களைத் தரித் தும் சிவபெருமானை இகழ்ந்தாயெனின், அசுரர்களுள்ளும் உன்னைப் போலுந் தீயவர் இல்லை இல்லை. விருப்பு வெறுப்பில்லாத அநாதி பகவனை நீ இங்கே இகழ்ந்தனவெல்லாம் சருவான்மாக்களும் உய்யும் வண்ணம் பெருங்கருணையினுலே பூண்டருளுங் குறிகளென்று அறியக்கடவாய். இவையெல்லாம் எம்பெருமானுக்குப் புகழேயாம். அவருடைய இயல் பினைத்தும் யாவரறியவல்லவர்! நீ இகழ்ச்சிபோலப் பேசியவைகளெல் லாம் பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் தம்மை வழிபட்டுத் துதிக்க அவர்களுக்கு வலிமையையும் அதிகாரத்தையுங் கொடுத்தருளிய மகா

தேவர் விருப்பும் வெறுப்புமின்றி உயிர்களுக்கு அருள்செய்யும் நிலையே என்று நினை. இவ்வாறே வேத முதலிய உண்மை நூல்களெல்லாம் சொல்கின்றன. இவையெல்லாம் சித்தசுத்தியுடைய பெரியோர்கள் அறிவர்கள். சிவநிந்தை செய்யும் அதிபாதகனுகிய உனக்குச் சொல்லொணுது. சொல்லிற் பாவம், பாவம்! பொய் வேடத்தவனே, புறம்பே போய்விடு'' என்ருர்.

உடனே பிராமண வேடங்கொண்ட கள்வராகிய சிவபெருமான், ''பெண்ணே, உன்மேல் இச்சைகொண்டு வந்த என் செயலைக் கேளாது, என்னைப் புறத்தே போம்படி சொல்லுகின்ருய். இது தகுமா! நான் இங்கு வந்தது உன்னை விவாகஞ் செய்துகொள்ளற்பொருட்டே'' என்ருர். உடனே பார்ப்பதியம்மையார் திருச்செவிகளைப் பொத்தி, பொறுக்கலாற்ருது வருந்தி, சரீரம் பதைபதைக்க விம்மி, ''இக்கிழவன் போகான்: நானே போவேன்'' என்று, தமது செந்தாமரை மலர்போலும் அருமைத் திருவடிகள் சேப்ப, அங்கேகாரிடத்தே போதலுற்ருர். போதலோடும், பெருங்கருணைத் திருவிளையாட்டையுடைய சிவபெருமான் பார்ப்பதியம்மையாருடைய இயற்கையை நோக்கி, எல்லையில்லாத பேரருள் கூர்ந்து, பிராமணவேடத்தை ஒழித்து, பலகணங்கள். சூழ்ந்து துதிப்ப, இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். உமாதேவியார் அதுகண்டு, திருமேனி நடுநடுங்கி, நாணங்கொண்டு, பலகாலும் நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலி செய்து நின்று, தோத்திரம்பண்ணி, ''அளவற்ற அறிவினலும் எட்டாத முழுமுதற்கடவுளே, உம்முடைய மாயையை அறிந்திலேன். அறிவொரு சிறிதுமில்லாச் சிறியேன் உம்மை இகழ்ந்தமையைப் பெருங்கருணையோடும் பொறுத்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தார். அதற்குச் சிவபெருமான், ''கேளாய், உமையே, நீ நம்மிடத்துள்ள அன்பு மிகுதியினலே முன்சொல்லியனவெல்லாம் துதியாகவே கொண்டோம். உன்னிடத்தே குற்றம் உண்டாயினன்ருே நாம் பொறுப்பது, இனி நீ கொடியதவத்தினுல் வருந்தாதொழி. நாளை உன்னை விவாகஞ்செய்ய வருவேம்'' என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினர். உமாதேவியார் திருவுளமிகமகிழ்ந்து, சிவபெருமானைச் சிந்தித்துத் துதித்துக்கொண்டிருந்தார்.

அங்குள்ள மகளிர் சிலர் மலையரையனிடத்துச் சென்று, சிவபெருமான் எழுந்தருளிவந்து பார்ப்பதியம்மைக்கு அருளிச்செய்தமையைத் தெரிவித்தார்கள். மலையரையன் மனத்துயரநீங்கி, விரைந்து தன்மனைவியாகிய மேனையோடு சென்று, உமாதேவியாரைத் தன்கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# மணம் பேசு படலம்.

பார்ப்பதியம்மையாருடைய தவத்தைக் கண்டு திருவருள்செய்து திருக்கைலாசமலையை அடைந்து வீற்றிருந்தருளிய சிவபெருமான், சத்த விருடிகளைத் தந்திருமுன் வரும்வண்ணம், திருவுளத்தே நினைந்தருளினர். அதனை அறிந்த இருடிகள் எழுவரும் மனம் அஞ்சி, சரீர நடுநடுங்கி, விரைந்து வந்து, சிவபெருமானை வணங்கி, அஞ்சலிசெய்து நின்று, "மகாதேவரே, பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் உம்முடைய ஏவலுக்கு உரியர்களாய் இருப்ப, அடியேங்களை நினைந்தருளினீர். அதனால் அவர்கள் செய்த தவத்தினும் அடியேங்கள் செய்த தவமே அதிகம் போலும். எம்பரமபிதாவே, நீர் சிறியேங்களைப் பெருங்கருணையோடு நினைந்தருளினமையால், உய்ந்தோம், உய்ந்தோம். அடியேங்கள் செய்த பெருங்கொடும் பாவங்களெல்லாம் நீங்கிவிட்டன. இனி ஒரு தீதுண்டாகுமா! அநாதியே தொடங்கி ஐந்தொழிலையும் இடையருது செய்தருளும் பகவனே, நீர் அடியேங்களுடைய புன்மையை, ஒழிக்கும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளினீர். அடியேங்களால் விரைந்து செயற்பாலதனைப் பணித்தருளுக!" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். தேவதேவர் இருடிகண்மீது திருவருணைக்கஞ்செய்து "அன்பர்களே நீங்கள் இமையமலையரையனிடத்தே சென்று, பார்ப்பதியை இன்றைக்கு நமக்கு விவாகஞ் செய்து தரும் வண்ணம் பேசிக்கொண்டு, விரைந்து நம்முன் வரக்கடவீர்கள்" என்று பணித்தருளினர்.

இருடிகள் அத்திருப்பணியைச் சிரமேற்கொண்டு, சிவபெருமானை வணங்கி, நடந்து இமையமலையரையன்முன் செல்ல, அவன் தன் மனைவியோடும் எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக்கொண்டு சென்று, ஆசனத்திருத்தி, பூசித்துத் துதித்து நின்று, "இருடிகளே, உங்களுடைய திருவடித் தாமரைகள் படுதலால், இவ்விமையமலை மகாமேருமலையைப்போலத் தூய்தாகித் தலைமையும் பெற்றது. சிறியேனுடைய பிறவியும் இப்போழ்தே நீங்கியது. நீங்கள் அடியேனிடத்து வந்த நிமித்தம் யாது? சொல்லுக" என்றான். அதற்கு இருடிகள் "அரசனே, உயிர்க்குயிராய் நின்ற சிவபெருமான் உன் புதல்வியாகிய பார்ப்பதியம்மையைத் திருக்கல்யாணஞ்செய்யத் திருவுளங்கொண்டு, உன்னோடு பேசும்பொருட்டு எங்களை விடுத்தருளினர். இதுவே எங்கள் வரலாறு" என்றார்கள். மலையரையன் அதற்கிசைந்து "சருவலோகைக நாயகராகிய சிவபெருமானுக்குச் சருவலோகங்களையும் சருவான்மாக்களையும் பெற்றும் நித்தியகன்னிகையாயுள்ள உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்துகொடுத்துச் சிறியேனையும் அடிமையாகக் கொடுப்பேன்" என்றான். மலையரையன் பக்கத்தே நின்ற மனைவி

யாகிய மேனை "பிரமதேவருடைய புதல்வனுகிய தக்கன் தன் புதல்வியை விவாகஞ் செய்து கொடுப்ப, சிவபெருமான் அவனுடைய சிரசைச் சேதித் தார் என்று பேசுகின்றூர்கள். அதனை நினைந்து நினைந்து, மனம் அஞ்சு கின்றது. இவ்வாறுக, அவருக்கு எங்கள் புதல்வியை விவாகஞ் செய்து கொடுப்பது எங்ஙனம்" என்ருள். இருடிகள் மேனையை நோக்கி, "நீ வருந்தாதொழி, நீ உயர்வொப்பிலாத சிவபெருமானுடைய செய்கையை நன்ருக அறிந்திலை. தக்கன் யாகத்திலே தமக்குக் கொடுக்கற்பாலதாகிய அவியை மாற்றித் தம்மை இகழ்ந்தமையால் சிவபெருமான் அவனுடைய சிரசைச் சேதித்தருளினர். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அனுக் கிரகமும் அல்லாதவர்களுக்கு நிக்கிரகமுஞ்செய்தல் சிவபெருமானியல்பு. இவ்வுண்மையை மேலோர் யாவரும் நன்குணர்வர்கள். நீயும் இதனை அறியக்கடவாய். வேறென்றும் சிந்தனை செய்யாதே" என்ருர்கள். மலை யரையன் "இது சத்தியம்" என்ருன். மேனை அஞ்சி நடுநடுங்கி, "ஐயையோ! எம்பெருமானுடைய செய்கையை அறியாதே சொல்லி விட்டேன்" என்று நினைந்து, வருத்தமுற்று, இருடிகளுடைய திருவடிகளை வணங்கி நின்று, "பெண்ணறிவென்பது பெரும் பேதைமையை உடைய தன்றே! அடியேன் சிவபெருமானுடைய திருவருணீர்மையைச் சிறிதும் அறிந்திலேன். சிறியேன் சொல்லிய புன்மொழியைப் பொறுத்தருளுக" என்ருள். இருடிகள் அவளிடத்தே திருவருள் செய்தார்கள். மலையரையன் இருடிகளை நோக்கி, "அறிவுசிறிதுமில்லாத இவளுடைய புன்மொழியைத் திருவுளத்திலே கொண்டருளாதொழிமின். உமாதேவியைத் திருக்கல் யாணஞ்செய்யும்பொருட்டு எழுந்தருளி வரும்வண்ணம் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்யுங்கள்" என்ருன்.

அதுகேட்ட இருடிகள் எழுவரும் மனமிகமகிழ்ந்து, மலையரையனை யும் மேனையையும் அங்கே நிறுத்தி, திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமான் றிருமுன் சென்று, அவரை வணங்கித் துதித்து, திருக் கல்யாணத்திற்கு மலையரையன் உடன்பட்டமையை விண்ணப்பங்செய் தார்கள். சிவபெருமான் "முனிவீர்காள், நீங்கள் உங்கள்செயலைச் செய் யும்பொருட்டுப் போங்கள்" என்று விடைகொடுத்தருள, இருடிகள் சிவபெருமானை வணங்கித் துதித்துக்கொண்டு, தங்கள் பதத்தை அடைந் தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

.....

# வரைபுனைபடலம்.

மலையரையன் தன்புதல்வியாகிய உமாதேவிக்குச் சிவபெருமான் வெளிப்பட்டு ''உன்னை நாம் விவாகஞ்செய்வேம்'' என்று திருவாய் மலர்ந்தருளினமையையும் சத்தவிருடிகளைத் தன்னிடத்து விடுத்து மணம் பேசுவித்தமையையும் நினைந்து, மனமகிழ்ந்து, உமாதேவியைச் சிவபெருமானுக்குத் திருக்கல்யாணஞ் செய்துகொடுக்கக் கருதி, தேவத்தச்சனைத் தன்முன் வரும்வண்ணம் நினைந்தான். உடனே தேவத்தச்சன் அவனெதிர் வந்து, வணங்கி நின்று, ''என்னை நீ நினைந்ததென்னை! என்னலே செயற் பாலதாகிய பணியாது? சொல்லுக'' என்றான். அதற்கு மலையரையன் ''நம்மை ஆட்கொண்டருளும் சிவபெருமானுக்கு யான்பெற்ற உலகமாதாவாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்துகொடுக்கக் கருதுகின்றேன். ஆதலால், நீ இந்நகரமுழுதையும் அமராவதிபோல அலங்கரிக்கக்கடவாய்'' என்றான்.

அதுகேட்ட தேவத்தச்சன் மனமகிழ்ந்து, அந்நகரத்தை அலங்கரிக்க நினைந்தான். இமையமலையின்மேலே கோபுரங்களையும், மன்றங்களையும், சூளிகைகளையும், நிலைத்தேர்களையும், மண்டபங்களையும், வீதிதோறும் பூம்பந்தர்களையும் செய்தான். பந்தர்களின்மேலே கொடிகளைக் கட்டி, உள்ளே மேற்கட்டிகளினலே அணிசெய்து, சாமரங்களையும் பூமாலைகளையும் தூக்கினான். வாழைகளையும், கமுகுகளையும் நாட்டினான். தோரணங்களைக் கட்டினான். எண்ணில்லாத தேவர்கள் கொணரும் பொருள்களெல்லாம் வைக்கும் வண்ணம் பலவகைப்பட்ட சாலைகளைச் செய்தான். கோயிலுக்கு ஒருபக்கத்தே பதினாயிரம் யோசனைப் பரப்பினதாகிய ஒரு புரிசையையும், அதன் வாயில்களன்கினும் கோபுரங்களையும் செய்தான். அதனடுவே திருக்கல்யாணமண்டபத்தைச் செம்பொன்னினலே செய்து, நிலத்தைச் சந்தனமும் கஸ்தூரியும் புழுகும் கலந்த பனிநீரினலே பூசி, நறுமலர்களைத் தூவினான். தேவர்களெல்லாருக்கும் ஆசனங்களைச் செய்தான். பலநிறங்களாலும் வேதிகைகளை இயற்றினான். கண்ணாடிகளையும் பூமாலைகளையும் சாமரங்களையும் வஸ்திரங்களையும் இரத்தினமாலைகளையுந் தூக்கினான். தேவர்களும் முனிவர்களும் அரம்பையர்களும் போலப் பிரதிமைகளைச் செய்து, சாமரம் வீசுதல் வீணைவாசித்தல் நடனஞ்செய்தல் முதலிய தொழில்களைச் செய்யுமாறமைத்தான். இவ்வாறு செய்யப்பட்ட திருமணச்சாலையினுள்ளே, சிவபெருமானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருக்கும்பொருட்டு, இந்திரநீலரத்தினத்தினலே ஒரு திவ்விய சிங்காசனஞ் செய்தான். குண்டமண்டலவேதிகைகளை வகுத்து, வேள்வித்

திரவியங்களையும் அட்டமங்கலங்களையும் அமைத்தான். பக்கத்திலே சூரிய காந்தம், சந்திரகாந்தம், பவளம், முத்து, வைரம், பதுமராக முதலிய வற்றினால் எண்ணில்லாத மண்டபங்களைச் செய்தான். புறத்திலே தாமரை முதலிய பூக்கள் மலரும் வாவிகளைச் செய்தான். மரகதம், பளிங்கு, வைரம், மாணிக்கம், பொன் முதலியவற்றால் பூந்தடாகங்களைச் செய் தான். கற்பகம், சந்தனம், அகில், வாழை, கமுகு, பலா, மா, புன்னை முதலிய மரங்களைப் பற்பல ரத்தினங்களாலே செய்தான்.

இவ்வாறே தேவத்தச்சன் தன்னினைவினாலே செய்துமுடித்தலும், மலையரையன் அதுகண்டு மகிழ்ந்து, பிரமா விட்டுணு முதலிய தேவர் களும் முனிவர்களும் தங்கள் தங்கள் மனைவியர்களோடும் உமாதேவி யுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவரும்பொருட்டுத் தூதர்களை எங்கும் விடுத்தான். தூதர்களுடைய வசனத்தை அறிந்து, தேவர்களும் முனிவர்களும் ''நாமெல்லாம் சிவபெருமானை வணங்கிக்கொண்டு அவரோடும் வருவேம்'' என்றார்கள். துர்க்கையும், காளியும், சத்தநதி களும், இலக்குமியும், சரசுவதியும், இந்திராணியும், இருடிபத்தினிகளும், அரம்பையர்களும் இமையமலையை அடைந்து, உமாதேவியாரை வணங் கினார்கள். இலக்குமி சரசுவதி முதலிய மகளிர்கள் தவத்தான் வருந்திய திருமேனியையுடைய உமாதேவியை வணங்கி, திருமணக்கோலஞ் செய்யும் பெரும்பேற்றைப் பெற்றார்கள். மகாமேரு மந்தரம் முதலிய சுற்றங் களும், கடல்களும், நாகங்களும், திக்குயானைகளும், பிறவும் வந்தன.

மலையரையன் தன்சுற்றத்தாரோடு திருக்கைலாசமலையை அடைந்து, திருநந்திதேவர் உள்ளே விடுப்பச் சென்று, பரமசிவனை வணங்கி நின்று ''எம்பெருமானே, உலகமாதாவாகிய உமாதேவியைத் திருக்கல்யாணஞ் செய்யும்பொருட்டுத் திருவுளங்கொண்டருளினீர். சோதிடநூலோர் மங் கலதினமெனக் கூறிய பங்குனியுத்தரம் இன்றையாகும். எம்பரமபிதாவே இப்பொழுது இமையமலைக்கு எழுந்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய் தான். சிவபெருமான் மலையரையனை நோக்கி, ''நாம் இப்பொழுதே எல்லையில்லாத கணங்கள் சூழ இமையமலைக்கு எழுந்தருளுவோம். நீ முன்னேபோகக்கடவாய்'' என்று திருவாய்மலர்ந்தருளினார். மலையரையன் சிவபெருமானை வணங்கித் துதித்துக்கொண்டு, மீண்டு தன்னகரத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

# கணங்கள் செல்படலம்.

கைலாசபதி திருநந்திதேவரை நோக்கி, ''நம்முடைய கல்யாணத்தைத் தரிசிக்கும்பொருட்டு, உருத்திரகணங்களையும், விட்டுணு பிரமன் இந்திரன் முதலிய தேவரையும், மற்றை யாவரையும் இங்கே தரக்கடவாய்'' என்று பணித்தருளினார். திருநந்திதேவர் அத்திருப்பணியைச் சிரமேற் கொண்டு, அவர்களெல்லாரும் திருக்கல்யாணத்தின்பொருட்டு வரும்வண்ணம் நினைந்தார். அதனை யாவரும் அறிந்து சிவபெருமானைத் துதித்து, விம்மிதமும் பத்தியும் பெருமிதமும் மகிழ்ச்சியும் திரண்டு செலுத்த, திருக்கைலாசத்துக்கு வருதலுற்றார்கள். காலாக்கினிருத்திரர், பஞ்சவத்திரனும் இடபகேதுவும் உள்ளிட்ட ஆயிரகோடி கணங்கள் சூழ வந்தார். கூர்மாண்டேசர் எழுபத்திரண்டுகோடி பூதங்கள் சூழ வந்தார். ஆடகேசுரர் கோடி கோடி ருத்திரர்கள் சூழ வந்தார். வீரபத்திரக் கடவுள் நூறுபத்தாயிரகோடி பூதங்கள் சூழ வந்தார். அரிகரபுத்திரராகிய ஐயனார் நூறுகோடி பூதங்கள் சூழ வந்தார். பதினெரு ருத்திரர்கள் வந்தார்கள். ஈண்டுக் கூறிய உருத்திரர்களன்றி மற்றைப் பல புவனங்களினுமுள்ள உருத்திரர்களும் வந்தார்கள். புத்திதத்துவத்திற் பொருந்திய பைசாசபுவனம், இராக்கதபுவனம், இயக்கபுவனம், காந்தருவபுவனம், ஐந்திரபுவனம், சௌமியபுவனம், பிராசேசுரபுவனம், பிராமிய புவனம் என்னும் எட்டுப்புவனங்களிலுள்ளோரும் வந்தார்கள். பவர் முதலிய அட்டமூர்த்திகள் எண்ணூறுகோடி பூதங்கள் சூழ வந்தார்கள். குண்டோதரர் நூறுகோடி பூதங்கள் சூழ வந்தார். கண்ட கண்ணரும் பிங்கியும் நூற்றிருகோடி பூதங்கள் சூழ வந்தார்கள். பானுகம்பர் நூற்றைம்பதுகோடி பூதங்கள் சூழ வந்தார். சங்குகன்னர் பலகோடி பூதங்கள் சூழ வந்தார். காளகண்டரும், தண்டியும், நீலரும், கரரும், விச்சுவமாலியும் மற்றைப் பூதர்களும் எண்ணில்லாத சேனைகளோடு வந்தார்கள். ஈசானர் நூற்றுமுப்பதுகோடி பூதங்கள் சூழ வந்தார். விட்டுணு, பிரமா, இந்திரன், திக்குப்பாலகர், தேவர்கள், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்கள், நக்ஷத்திரங்கள், சத்தமாதர்கள், அட்டவசுக்கள், விஞ்சையர்கள், இருடிகள் முதலிய யாவரும் வந்தார்கள். வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள், பிருதுவி முதலிய பூதங்கள், உலகங்கள், நகரங்கள், காலங்கள் முதலியன வெல்லாம் தைவத வடிவங்கொண்டு வந்தன.

இவ்வண்ணமே திருக்கைலாசமலையில் யாவரும் யாவும் வந்த தன்மையைத் திருநந்திதேவர் கண்டு மிக மகிழ்ந்து, உள்ளே புகுந்து, சிவபெருமானுக்கு விண்ணப்பஞ்செய்தருள, சிவபெருமான் ''யாவரையும்

இங்கே அழைத்துக்கொண்டு வரக்கடவாய்'' என்று பணித்தருளினர். அதுகேட்ட திருநந்திதேவர் முதற்கடையை அடைந்து, அங்கு நின்ற உருத்திரர்கள், தேவர்கள், முனிவர்கள் முதலிய யாவரையும் திருக் கோயிலினுள்ளே செல்லவிடுத்தார். விடுத்தகாலையில், அவர்களெல்லாரும் திவ்விய சிங்காசனத்தின் மீது எழுந்தருளியிருக்கும் பரமகிருபாலுவாகிய சிவபெருமானைத் தரிசித்து, பேரன்போடு வணங்கி வணங்கி எழுந்து, சிரசின்மீது குவித்த கைகளோடு அவருடைய திருப்புகழைத் துதித்துக் கொண்டு சந்நிதியை அணுகினர்கள். திருநந்திதேவர் அங்கு நின்ற உருத் திரர் முதலிய யாவரையும் தம்முடைய திருவிரலினாலே வெவ்வேறுகச் சுட்டிக்காட்டி விண்ணப்பஞ்செய்தார்.

அப்பொழுது பிரமதேவர் எம்பெருமான் அணியும்பொருட்டு முடி முதலிய பலவகைப்பட்ட திவ்வியாபரணங்களையும் படைத்து ஒரு பொற் பீடிகையிலே கொண்டுபோய்த் திருமுன் வைத்து, வணங்கி நின்று, ''எம் பரமபிதாவே, உமக்கு விருப்பும் வெறுப்பும் இல்லை. அடியேங்கள் உய் யும் பொருட்டுத் திருக்கல்யாணஞ் செய்யத் திருவுளங் கொண்டருளி னீர். உமது திருமேனியிலுள்ள சர்ப்பாபரணங்களை ஒழித்து, இவ்விரத்தி னாபரணங்களை அணிந்தருளுக''என்று விண்ணப்பஞ் செய்தார். அதுகேட்ட மகாதேவர் திருப்புன்முறுவல்செய்து, ''பிரமனே நீ அன்போடு தந்தமை யால் நாம் இவற்றை அணிந்தாற்போல மகிழ்ந்தேம்'' என்று திருவாய் மலர்ந்து, அவ்வாபரணங்களைத் தமது திருக்கரத்தினாலே தொட்டருளி னர். பின்பு தமது திருமேனியிலுள்ள சர்ப்பாபரணங்களே இரத்தினா பரணங்களாகும்வண்ணம் திருவுளங்கொண்டருள, அவை அவ்வாறுயின. அதுகண்டு, யாவரும் அற்புதமடைந்து, வணங்கினர்கள்.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கல்யாணப்படலம்.

சிவபெருமான், இமையமலைக்குச் செல்லத் திருவுளங்கொண்டு, தமது பக்கத்துள்ள கணநாதர்களுக்குக் குறிப்பாலுணர்த்தி, சிங்காசனத்தினின் றும் எழுந்து, திருநந்திதேவர் துதித்துக்கொண்டு முன்னே செல்ல, தேவர் களும் முனிவர்களும் புகழ, தும்புருநாரதர்களும் விஞ்சையர்களும் இசை பாட, வேதாகமங்கள் துதிக்க, தமது செம்பொற்றிருக்கோயிலினின்றும் நீங்கி, தமது திருவடிகளைக் குண்டோதரருடைய புயத்தின்மீது வைத்து, சின்மயமாகிய இடபத்தின்மேல் ஏறியருளினர். எம்பெருமான் இடபத் தின் மீது தோன்றி விளங்க, பக்கத்து வந்தவர்களும் திருக்கோயிற்

புறத்து நின்றவர்களுமாகிய யாவருங்கண்டு கண்களித்து, வணங்கித் துதித்து, கடல்போல ஆர்த்தார்கள். மகாதேவர் இடபமேற்கொண்டு எழுந்தருளும்போது, விநாயகக்கடவுள் ஐந்நூற்றேழுகோடி பூதங்கள் சூழ வந்து, வணங்கிக்கொண்டு, முன்னே சென்றருளினர். சூரியனும் சந்திரனும் குடையையும், வாயு சாமரத்தையும், வருணன் சாந்தாற்றி யையும், இந்திரன் ஆலவட்டத்தையும், எடுத்துக்கொண்டு, பக்கத்தே தத்தம் பணிகளைச் செய்தார்கள். பூதர்கள் பலவகைப்பட்ட வாத்தியங் களை முழக்கினர்கள். எம்பெருமானுடைய ஏவலினாலே, உருத்திரர்களும், பிரமவிட்டுணுக்களும், முனிவர்களும், பிறரும் தேர், விமானம், மிருகம், பறவை முதலிய தங்கள் தங்கள் வாகனத்தின்மேற்கொண்டார்கள். இவ் வண்ணமே யாவருஞ் சூழ்ந்து செல்ல, சிவபெருமான் திருக்கைலாசமலையை அகன்று, உலகம் வாழும்வண்ணம் இமையமலைமீது சென்றருளினர்.

அதனையறிந்த மலையரையன் தன் சுற்றத்தாரோடும் எதிர்கொண்டு வணங்கி, தன்னுடைய ஒஷதிப்பிரஸ்தமென்னும் நகரத்துக்கு அழைத்துக் கொண்டு போயினன். சிவபெருமான் அந்நகரத்துள்ள வீதிகளைக் கடந்து, பார்ப்பதியம்மையாருடைய திருக்கோயிலுக்கு அணித்தாகச் சென்றருளி னர். அப்பொழுது மலையரையனுடைய ஏவலினாலே, இருடிகள் பல பூரணகும்பங்களை ஏந்திக்கொண்டு வந்தார்கள்; மகளிர்கள் அட்டமங்க லங்களைக் கொண்டு வந்துகாட்டினர்கள். வேறு பலமகளிர்கள் நீராசனஞ் சுற்றினர்கள். திருமணச்சாலைக்கு முன்சென்றவுடனே. யாவரும் தங்கள் தங்கள் வாகனத்தினின்றும் இறங்க, ஞானநாயகராகிய சிவபெருமான் இடபவாகனத்தினின்றும் இறங்கியருளினர்.

அப்பொழுது மேனை அரம்பையர்களோடு வந்து, எம்பெருமானுடைய திருவடிகளைக் காமதேனுவின்பாலினாலாட்டி, கைதொழுதுகொண்டு திரும் பினள். உடனே சிவபெருமான் திருநந்திதேவர் கொண்டுவந்து வைத்த பாதுகையின்மேலே தம்முடைய அருமைத்திருவடிகளைச் சேர்த்தி, இருபக் கத்தும் பிரமாவும் விட்டுணுவும் கைகொடுப்ப, தமது திருக்கரங்களினாலே பற்றிக்கொண்டு, நானவித வாத்தியங்கள் ஒலிக்க, தேவர்கள் துதிக்க, விஞ்சையர்கள் பாட, கணங்கள் ஆரவாரிக்க, உருத்திரர்கள் சூழ, திருக் கோயிலினுள்ளே சென்று, பிரமாவும் விட்டுணுவும் வேண்ட, அங்குள்ள அழகுகளனைத்தையும் திருநந்திதேவர் காட்டச் சென்று சென்று பார்த் தருளினர்.

வேதங்களுக்கும் எட்டாது நின்ற பரமபதியாகிய சிவபெருமான் அழகனைத்தையும் பார்த்துக்கொண்டு, திருமணச்சாலையினுள்ளே சென்று, இந்திரநீல ரத்தினாசனத்தின்மேலே வீற்றிருந்தருளினர். வீற்றிருந்தரு ளும் பொழுது, வீரபத்திரர், காலாக்கினிருத்திரர், கூர்மாண்டேசர், ஆடகேசுரர், ஐயனார் முதலிய உருத்திரர்களும், பிரமா, விட்டுணு, இந்தி

ரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானைச் சூழத் தங்கள் தங்களுக்குரிய ஆசனத்தின் மேலிருந்தார்கள். அப்பொழுது, திருக்கல்யாணத்தைத் தரிசிக்கும் பொருட்டு எப்புவனத்தினுமுள்ள யாவரும் வந்து கூடினமையால், இமயமலை நடுங்கியது. பூமியின் வடபால் தாழ, தென்பால் மிகவுயர்ந்தது. உடனே தேவர்கள் முதலியயாவரும் ஏங்கி வருத்தமுற்று, ''சிவனே சிவனே'' என்று ஓலமிட்டார்கள். சிவபெருமான் அது கண்டு, திருமுறுவல்செய்து, அவர்களுடைய குறையை நீக்கத் திருவுளங் கொண்டு, திருநந்திதேவரை நோக்கி, ''அகத்தியமுனிவனை இங்கே அழைத்துக் கொண்டுவா'' என்று பணித்தருளினர். திருநந்திதேவர் வணங்கிக் கொண்டுபோய், அகத்தியமுனிவரைக் கூவ, அவர் அங்கு வந்தார். அவரை அழைத்துக்கொண்டுபோய்ச் சிவபெருமான் திருமுன் விடுப்ப, அவர் திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்துகொண்டு நின்றார். சிவபெருமான் அகத்தியமுனிவரை நோக்கி, ''முனிவனே, இங்கே யாவரும் வந்து கூடினமையால், வடபால் தாழத் தென்பால் மிக வுயர்ந்தது. இதனால் உயிர்களெல்லாம் மிகக் கலங்குகின்றன. மந்தரமுதலிய மலைகளும் மகாமேருவும் தவறடையும். ஆதலால், நீ இம்மலையினின்று நீங்கித் தென்திட்டிற்சென்று பொதியமலையின்மேல் இருக்கக்கடவாய். அது செய்வையாயின் பூமிமுழுதும் முன்போலச் சமமாய்விடும்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்ட அகத்தியமுனிவர் அச்சம்பொருந்தி, ''பரமகருணைநிதியாகிய பிதாவே, அடியேன் யாதாயினும் அபராதஞ்செய்தேனை! கொடியேனை இங்கே இருக்கும்வண்ணம் பணித்தருளாது தூரத்தே செல்லும்வண்ணம் திருவாய்மலர்ந்தருளுகின்றீர்'' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் அகத்தியமுனிவரை நோக்கி, 'உனக்கு ஒப்பாகிய முனிவர்கள் உலகத்து உண்டோ, இல்லை. பிரமனும் உனக்கு ஒப்பல்லன். ஆதலால், நீ நினைந்த யாவையும் தவறின்றி முடிக்கவல்லை. இவ்வரிய செய்கை மற்றை முனிவர்களாலேனும் தேவர்களாலேனும் முடியுமா! யாவரினும் மேலாகிய உன்னாலேமாத்திரம் முடியும். போகக்கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அகத்தியமுனிவர் ''எமது பரமபிதாவே, பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் நிற்க, இச்செய்கையை அடியேன் செய்யும்வண்ணம் பணித்தருளினீர். இதனால் நான்செய்ததே தவம்போலும். அடியேனுக்கு இப்பணியைப் பணித்தருளினீராயின், உமது திருமணக்கோலத்தை வணங்காது பிரிதலாற்றுமையால் என்மனம் மிகக் கவல்கின்றதே. இதற்கு யாது செய்வேன்'' என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குக் கைலாசபதி ''முனிவனே, நீ சிறிதுங்கவலாது பொதியமலைக்குச் செல்லக்கடவாய். நாம் அங்கு வந்து, நமது கல்யாணக்கோலத்தை உனக்குக் காட்டுவோம்; நீ மகிழ்ந்து, தரிசிக்கக்கடவை. நம்மைத் தியானித்துக்கொண்டு அங்கே சிலநாளிருந்து, பின்பு முன்போல நமது பக்கத்து வருவாயாக'' என்று அருளிச்செய்தார்.

அகத்தியமுனிவர் அதற்கியைந்து, மகாதேவருடைய திருவடிகளைப் பலமுறை வணங்கி, எழுந்து நின்று, அஞ்சலி செய்து, துதித்து, பெருமூச் செறிந்து, அரிதினீங்கி, தென்றிசையை நோக்கிச் சென்று, பொதிய மலையை அடைந்தார். முப்புரத்தையுந் தகிக்கத் திருவுளங்கொண்டு தாமேறிய பூமியாகிய தேரை ஒரு திருவடியாலூன்றிப் பாதலத்திட்ட சிவபெருமானுடைய திருவுருவைத் தியானித்துக்கொண்டு, அப்பொதிய மலையில் எழுந்தருளியிருந்தார். இருக்க, வடபாலும் தென்பாலும் துலைத் தட்டுப் போலச் சமமாயின. அப்பொழுது ஆன்மாக்களெல்லாம் துன்ப நீங்கி, சிவபெருமானைத் துதித்து மகிழ்ச்சியுற்றன.

அகத்தியமுனிவர் சென்ற பின்பு, இமைய மலையிலே தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானுடைய திருவருணீர்மையை எடுத்துத் துதித் தார்கள். அப்பொழுது மலையரையனுடைய ஏவலினாலே, உலக மாதா வாகிய உமாதேவியார், துர்க்கை காக்க, இந்திராணி அடைப்பை ஏந்த, கங்கைகள் சாமரம் வீச, காளிகள் குடை பிடிக்க, இலக்குமி கைகொடுப்ப, சரசுவதி துதிக்க, எழுந்தருளி வந்து, திருமணச்சாலையை அடைந்து, சிவ பெருமானுடைய திருவடிகளை வணங்கினர். அதுகண்ட சிவபெருமான் ''நம்பக்கத்தே இருக்கக்கடவாய்'' என்று பணித்தருள, பார்ப்பதியார், இலக்குமி முதலியோர் யாவருந் துதிக்க, எழுந்தருளியிருந்தார். அப்பொ ழுது மேனை தீர்த்தமும், சந்தனமும், மலர்களும் பிறவுங் கொண்டுவந் தாள். மலையரையன் சிவபெருமானை வணங்கிக் கொண்டிருந்து, மேனை கரகநீர் விடுப்ப, அவருடைய திருவடிகளை விளக்கி, சந்தனத்தாலும் நறு மலராலும் பூசை செய்தான். பூசை செய்த பின்பு, உமாதேவியாருடைய திருக்கரத்தைச் சிவபெருமானுடைய திருக்கரத்தில் வைத்து, ''நான் என் புதல்வியாகிய உமாதேவியை உமக்குத் தந்தேன்'' என்று வேதமந்திரங் களைச் சொல்லித் தாராதத்தஞ் செய்தான். அப்பொழுது அரம்பையர்கள் ஆடினர்கள்; சித்தர்களும் கந்தருவர்களும் தும்புரு நாரதர்களும் இசை பாடினர்கள்; தேவர்களும் முனிவர்களும் வேதங்களைச் சொன்னர்கள்; இலக்குமியும் சரசுவதியும் பிறரும் மங்கலம் பாடினர்கள்; பூதர்கள் நாலு வித வாத்தியங்களை முழக்கினர்கள். மலையரையன் பசுப்பால், வாழைப் பழம், மாம்பழம், பலாப்பழம், நெய், தேன் முதலியவற்றைப் பாசனத் திலிட்டு, சிவபெருமான் திருமுன்வைத்து, ''எம்பெருமானே, இவற்றைத் திருவமுது செய்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். சிவபெரு மான் அவற்றைத் திருக்கரத்தினாலே தொட்டு, திருவருள்சுரந்து, ''நாம் இவற்றை அமுதுசெய்தாற்போல உவந்தேம். நீ எடுத்துக் கொள்ளக்கட வாய்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். மலையரையன் பேரன்போடு அந்நிருமாலியத்தை எடுத்து, மலர், கந்தம், தீர்த்தம் என்பவற்றோடும் ஒரு பக்கத்தே வைத்தான்.

பிரமதேவர் சிவபெருமானை வணங்கி, ''எம்பெருமானே, பூமியினும் சுவர்க்கத்தினும் உள்ளோர் யாவரும் தங்கள் தங்களுக்கு அடுத்த விவாகச் சடங்கைச் செய்யும்வண்ணம் சர்வலோகத்துக்கும் நாயகராகிய நீர் நடத்தியருளல்வேண்டும். ஆதலால், இனிச் செயற்பாலதாகிய விவாகச் சடங்கை முற்றுவிக்கும் பொருட்டு அனுமதிசெய்தருளுக'' என்று விண்ணப்பஞ்செய்தார். அதற்குச் சிவபெருமான் திருமுறுவல்செய்து, இயைந்தருள, பிரமதேவர் அக்கினியையும் அதற்கு வேண்டும் பொருள்களையும் வருவித்து, பிருகற்பதியும் சுக்கிரனும் மற்றை முனிவர்களும் பக்கத்தே சூழ, விவாகச் சடங்கனைத்தையும் செய்து முடித்தார். முடித்த பின்பு, சிவபெருமானையும் உமாதேவியாரையும் அங்குள்ளோர் யாவரும் வணங்கினர்கள். மகாதேவரும் தேவியாரும் அவர்களெல்லாருக்கும் திருவருள் செய்தார்கள். அதுகண்டு, மலையரையன் ''இதுவே ஏற்ற சமயம்'' என்று நினைந்து, சிவபெருமானுடைய தீர்த்தம், மலர், சந்தனம், அவி முதலியவற்றைப் பிரமா முதலிய தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் பிறருக்குங் கொடுப்ப, அவர்கள் யாவரும் அவற்றை மெய்யன்போடு அணிந்து உட்கொண்டு, ''நம்முடைய வினைகளெல்லாம் இன்றே கழிந்தன'' என்று பெருமகிழ்ச்சியுற்றார்கள். அதன்பின் மலையரையனும் மேனையும் அவர் சுற்றத்தாரும் பிறரும் அணிந்து உட்கொண்டு, இன்பமடைந்தார்கள்.

அப்பொழுது தாபதநிலையாளாகி* அங்கிருந்த இரதி வந்து சிவபெருமானை வணங்கி நின்று, ''சுவாமீ, அடியனுடைய துன்பத்தை நீக்கியருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தாள். சிவபெருமான் அதுகேட்டு, ''இரதியே, நீ வருந்தாதொழி'' என்று திருவாய் மலர்ந்து, மன்மதன் வந்துதிக்கும்வண்ணம் திருவுளங் கொண்டருளினர். உடனே மன்மதன் தோன்றி, சிவபெருமானை வணங்கித் துதித்து, ''கிருபாசமுத்திரமாகிய சுவாமீ, அடியேன் செய்த குற்றத்தைப் பொறுத்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தான். சிவபெருமான் மன்மதனை நோக்கி, ''நாம் உன்னைக் கோபித்தாலன்றே பின்பு அது தணிவது. மனம் வருந்தாதொழி. நம்முடைய அக்கினிக் கண்ணினாலே உன் சரீரம் விரைந்து சாம்பராயிற்று. அதுகண்ட உன் மனைவியாகிய இரதி, உன்னை உயிர்ப்பிக்கும் பொருட்டு நம்மைப் பிரார்த்தித்தாள். நீ அவளுக்கு மாத்திரம் உருவமாயிருக்கக் கடவாய். மற்றைத் தேவர்களுக்கும் மனிதர்களுக்கும் அருவமாயிருந்து கொண்டு உன்னரசியலை நடாத்தக் கடவாய்'' என்று திருவாய் மலர்ந்து, அவனுக்கு உரிய அரசையும் சிறப்பையும் ஆணையையும் வலியையும் கொடுத்து, இரதியோடும் தன்னகரத்திற்குச் செல்லும் வண்ணம் விடை கொடுத்தருளினர். மன்மதனும் இரதியும் சிவபெருமானை வணங்கிக்கொண்டு போனார்கள்.

---

* தாபதநிலை - கணவனை இழந்தாள் நோற்கும் விரதவொழுக்கம்.

அதன்பின் சிவபெருமான் உமாதேவியாரோடு சிங்காசனத்தினின்றும் இறங்கி, உருத்திரர்களும் தேவர்களும் முனிவர்களும் பிறருந் துதிக்கப் பூதர்கள் வாத்தியங்களை முழக்கச் சென்று, இடபவாகனத்தின் மீதேறி, உமாதேவியாரைத் தமது பக்கத்திருத்தித் தழுவிக்கொண்டு இடபவாகனத்தை நடத்தி, இமையமலையைக் கடந்து, திருக்கைலாச மலையை அடைந்தார். அடைந்தவுடனே, விட்டுணுவையும், பிரமாவையும், மலையரையனையும், இந்திரனையும், தேவர்களையும், முனிவர்களையும், தங்கள் தங்கள் இடங்களுக்குச் செல்லும்வண்ணம், முன்னே விடுத்தருளினர். பின்பு காலாக்கினிருத்திரர், கூர்மாண்டேசர், ஐயனர், வீரபத்திரர் முதலிய உருத்திரர்களுக்கும், விநாயகக் கடவுளுக்கும், கணநாதர்களுக்கும் விடைகொடுத்து, திருக்கோயிலினுள்ளே புகுந்து, இடபவாகனத்தினின்றும் இறங்கி, உமாதேவியாரோடு சென்று, சிங்காசனத்தின் மேல் முன்போல வீற்றிருந்தருளினர். உயிர்க்குயிராகிய சிவபெருமான் உமாதேவியார் தமது பக்கத்திலே பொருந்த வீற்றிருந்தருளலும், ஆண் பெண் என்னும் இருபாலினவாகிய உயிர்களெல்லாம் முன்னைத் துன்ப நீங்கி, இன்பத்தோடு போகத்தை யனுபவித்துக் கொண்டிருந்தன.

திருச்சிற்றம்பலம்.

# திருவவதாரப் படலம்.

இவ்வாறே பற்பலநாட்செல்லலும், பின்னொரு நாளிலே, பிரமா, விட்டுணு, இந்திரன், திக்குப்பாலகர், முனிவர்கள், தேவர்கள் முதலிய யாவரும் மகாமேருமலையிலே கூடி, சூரனால் மிக மெலிந்து, "சிவபெருமான் உலகத்தை அசுரர்களுக்குக் கொடுத்து, யோகிபோலிருந்து கொண்டு, நமக்குத் துன்பத்தை விளைத்தார். நாம் போய்ப் பிரார்த்தித்தலும், திருவுளமிரங்கி உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்தார். செய்தும், ஒரு திருக்குமாரரைப் பெற்று நம்மைக் காத்தருளாது வாளா விருப்பதென்னை! விருப்பும் வெறுப்புமின்றி யாவருக்கும் ஓரியல்புடையராகி அவரவர் வினைகளை அறிந்து அததற்குரிய பயன்களைக் கொடுத்தருளுஞ் சிவபெருமானை நாம் வெறுத்தல் குற்றம். நாம் அருந்தவஞ் செய்யாது தவறு செய்தேம் என்று நம்மை நோதலே தகுதி. ஆயினும், எம்பெருமானுடைய திருவடிகளை அடைந்து வழிபடின், தீயனவெல்லாம் நீங்கும், நல்லனவெல்லாம் ஆரும். இது திண்ணம். ஆதலால், இன்னும் கைலாசபதிக்கு இதனை விண்ணப்பஞ் செய்யும்பொருட்டு நாமெல்லாம் போகக் கடவேம்" என்றார்கள். அப்பொழுது பிரமதேவர் "சிவபெருமானுடைய

செய்கையை நாம் கேட்டறிந்துகொண்டே போதல் வேண்டும். ஒரு தூதனை முன்னே விடுத்தறிவேம்'' என்று சொல்லிக்கொண்டு, வாயு தேவனை நோக்கி, ''மைந்தனே, நீ திருக்கைலாச மலையிலுள்ள திருக் கோயிலிற் சென்று, சிவபெருமானுடைய செய்கையை அறிந்துகொண்டு வருவாயாக'' என்றார். அதுகேட்ட வாயுதேவன் ''மன்மதனை யெரித்த சிவபெருமான் றிருமுன் செல்லுதல் அரிது. செல்லிற் றீமையே விளையும். இச்செய்கை என்னல் முடிவதன்று. என் மனம் அஞ்சுகின்றது'' என்றான். பிரமதேவர் வாயுதேவனை நோக்கி, ''அஞ்சாதே. வலிமையுடனே எங்கும் உலாவும் இயல்பினையுடைய நீயேயன்றி இது செய்ய வல்லவர் வேறொரு தேவருண்டோ, இல்லை. உற்றவிடத்து உதவி செய்வோரும், வரையாது கொடுப்போரும், தவஞ் செய்வோரும், போர் செய்யும் வீரரும் பிறி தொரு பொருளையும் விரும்பார், வருத்தத்தையும் பாரார், உயிர் நீங்க வினும் கவலாது நன்றென்று மகிழுவர். ஆதலால், எங்களுக்கெல்லாம் உதவி செய்யும்பொருட்டு நீ போகக்கடவாய்'' என்றார்.

அதற்கு வாயுதேவன் உடன்பட்டெழுந்து, விடைபெற்றுக் கொண்டு திருக்கைலாசமலையிற் சென்று, அதன் பக்கத்திலே வீழும் நதியில் ஆடி, பூஞ்சோலையின் மலர்களிலுள்ள நறுமணம் அளாவி, தென்றலாய் அசைந்து கொண்டு மெல்லத் திருக்கோயிலினுள்ளே செல்வானாயினன். முதற்கடை வாயிலின் எழுந்தருளியிருக்குந் திருநந்திதேவர் அதுகண்டு, மிகக் கோபித்து உரப்பினர். உரப்பலும், இடியொலி கேட்ட பாம்புபோல வாயுதேவன் சிறிதும் வலியின்றி வெருவி விழுந்தான். விழுந்த வாயு தேவன் எல்லையில்லாத அச்சத்துடனே இரங்கி எழுந்து, முன்னையுருவங் கொண்டு தோன்றி, திருநந்திதேவருடைய திருவடிகளை வணங்கி, ''பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும் சிவபெருமானைத் தரிசிக்க நினைந்து, என்னை நோக்கி, ''நீ விரைந்து சென்று சமயம் அறிந்து கொண்டு வருவாயாக'' என்றார்கள். அதற்கு நாயேன், 'சிவபெருமா னுடைய திருவிளையாடலை அறிதல் அரிது. அவரிடத்தே செல்ல நான் அஞ்சுகிறேன்' என்று மறுத்தேன். அது கேளாது அவர்கள் மீண்டுந் தங் கள் வருத்தத்தைச் சொல்லிச் சிறியேனை வலிந்தேவினர்கள். ஆதலால், அடியேன் அஞ்சியஞ்சித் தென்றலாய் மெல்ல வந்தேன். உமக்கு இதனை விண்ணப்பஞ் செய்ய நினைந்திலேன். அறிவில்லாதேனுடைய பிழையைப் பொறுத்தருளுக. சூரபன்மனாலே மானநீங்கி வருந்தியிளைத்து விட்டேன். அதனாலே செய்யத்தக்கது இன்னது ஒழியத்தக்கது இன்னது என்று அறிகின்றிலேன். அறிவு மயங்கினேன். மற்றைத் தேவர்களும் இவ்வாறேயாயினர். எம்பெருமானே, உமது கோபத்துக்கு இலக்காயினர் ஒருவருமில்லை. சிறியேன் பொருட்டுக் கோபங்கொண்டருளலாமா? பொறுத்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தான். திருநந்திதேவர்

கோபந் தணிந்து, ''நாம் இங்கே உன்னுயிரைத் தந்தேம். நில்லாதே. மீண்டுபோய்விடு'' என்று ஏவியருளினர். வாயுதேவன் திருநந்திதேவரை வணங்கிக்கொண்டு, விரைந்து திருக்கைலாசமலையினின்று நீங்கி மகாமேரு மலையிலுள்ள தேவர்கூட்டத்தை அடைந்து, விட்டுணுவையும் பிரமதே வரையும் வணங்கி, திருநந்திதேவருடைய வன்மையையும் நிகழ்ந்த காரியத் தையும் விரித்துச்சொன்னன்.

விட்டுணுவும், பிரமதேவரும், இந்திரனும் அதுகேட்டு, பெருந் துயரக் கடலின் அழுந்தி, தம்முள் ஆராய்ந்து தெளிந்து, ''எம்பெருமா னுடைய செய்கையை அறிந்து வரும்பொருட்டு வாயுவை விடுத்தேம். அவன் திருநந்திதேவருடைய ஆணையினல் அஞ்சி நடுநடுங்கித் திரும்பி விட்டான். இனி நாமெல்லாம் திருக்கைலாசமலையிற் சென்று சிவபெரு மானுக்கு நம்முடைய குறையை விண்ணப்பஞ் செய்வதே துணிவு'' என் றார்கள். இவ்வாறே எல்லாருந் துணிந்து கொண்டு, மகாமேருமலையி னின்று நீங்கி, திருக்கைலாசமலையை அடைந்து, திருக்கோயிலின்முன் சென்று, திருநந்திதேவரை வணங்கி நின்று, ''கருணைநிதியே, அடியேங்களு டைய துன்பமுற்றையுந் திருவுளத்திலடைத்து, மகாதேவருக்கு அடியேங் களுடைய வரவை விண்ணப்பஞ்செய்து, அடியேங்களைச் சந்நிதியிலே விரைந்து அழைத்துக்கொண்டுபோய் விட்டருளும்'' என்று விண்ணப் பஞ் செய்தார்கள். திருநந்திதேவர் அவர்களை ''நில்லுங்கள்'' என்று நிறுவி, உள்ளே போய்ச் சிவபெருமானை வணங்கிநின்று, ''பரமகிருபாலு வாகிய சுவாமீ, உம்முடைய திருவடிகளைத் தரிசிக்கும்பொருட்டுப் பிரம விட்டுணு முதலியோர் யாவரும் வந்து நிற்கின்றனர்'' என்று விண்ணப் பஞ்செய்ய, சிவபெருமான் ''இங்கே அழைத்துக்கொண்டு வா'' என்று பணித்தருளினர். உடனே திருநந்திதேவர் சிவபெருமானை வணங்கிக் கொண்டு விரைந்துசென்று, ''பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லீ ரும் வாருங்கள்'' என்று கூவியருளினர். கூவியருளலும், முகிலினது பேரொலியைக் கேட்ட சாதகப்புட்கள் போலப் பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் மிக மகிழ்ந்து, உள்ளே சென்று, அருட்சத்தியாகிய உமாதேவியாரோடு வீற்றிருந்தருளிய பெருங் கருணைக்கடலாகிய மகா தேவர் சந்நிதியை அடைந்து, அவருடைய திருவடிகளைப் பலகாலும் வணங்கி எழுந்து, அஞ்சலிசெய்து நின்று, துதித்தார்கள்.

சிவபெருமான் தேவர்கண்மீது திருவருணோக்கஞ் செய்து, ''நீங்கள் மிக வருந்தினீர்கள். உங்களுக்கு வேண்டும் வரம் யாது? சொல்லுங்கள். தருவேம்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அதுகேட்ட தேவர்கள் ''எம் பெருமானே, அடியேங்களெல்லாம் இந்நாள்காறும் சூரன் முதலிய அசுரர் களால் வருந்தினேம். இனி அவ்வருத்த நீங்கி முன்னையாக்கத்தை அடை

யும்பொருட்டுப் பரம கருணைநிதியாகிய உம்மிடத்தே ஒரு வரம் வேண்டு கின்றேம். சருவான்மாக்களையும் பெற்ற நித்திய கன்னிகையாகிய உமா தேவியாரை நீர் திருக்கல்யாணஞ் செய்தமை தீவினைக்கடலினழுந்திய சிறியேங்களை ஆளுதற்கு ஒரேதுக்காட்டுதற்கன்றி அவரிடமாக ஒரு திருக் குமாரரைப் பெறுதற்கன்று. உற்பத்தியும், திதியும், நாசமும், அருவமும், உருவமும், ஒப்பும், ஏதுவும், போக்கும், வரவும், இன்பமும், துன்பமும், இன்றி நின்ற அநாதிமலமுத்தரே, ஒரு திருக்குமாரரை உமக்கொப்பாக உம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய் தார்கள்.

சிவபெருமான் ''நீங்கள் சிறிதும் வருந்தாதொழிமின், புதல்வனைத் தருவேம்'' என்று திருவாய்மலர்ந்து, தமது பழைய ஆறு திருமுகங்களை யுங் * கொண்டு, அத்திருமுகங்களினுள்ள நெற்றிகண்களேறும் ஒவ் வோர் அக்கினிப்பொறியைத் தோற்றுவித்தருளினர். அவ்வாறு பொறி களும், பிரம விட்டுணு முதலியோர் யாவரும் சிறிதும் அணுகலாற்றுத மிக்க வெம்மையை உடையனவாகி, உலகமெங்கும் பரந்தன. அப்பொ ழுது வாயுக்கள் உலைந்து ஓய்ந்தன; கடல்களெல்லாம் வற்றின; வடவா முகாக்கினியும் தன்செருக்கு நீங்கிற்று; பூமி பிளந்தது; மலைகளெல்லாம் நெக்கன; அட்டநாகங்களும் நெளித்து நீங்கின; அட்டதிக்கயங் களும் அழுது தியங்கின; உயிர்களெல்லாம் நடுங்கின. சிவபெருமானு டைய நெற்றிக்கண்களினின்றும் தோன்றிய அக்கினிப்பொறிகள், பெருங் கருணை செய்யும்வண்ணம் பிறந்தனவாதலால், ஒருயிரையும் நாசஞ்செய் திலை; எவர்களையும் எவைகளையும் அச்சமாத்திரஞ் செய்தன. அப்பொறி களின் வெம்மையைக் கண்டு, சிவபெருமான் பக்கத்தே எழுந்தருளியிருந்த உமாதேவியார் வேர்த்துத் திருவுளங்கலங்கி எழுந்து, தமது திருவடிகளி லுள்ள சிலம்புகள் புலம்பித் தாக்க, தமது திருக்கோயிலினுள்ளே ஓடி னர். சிவபெருமான்றிருமுன்னர் நின்ற பிரமா முதலிய தேவர்களெல் லாரும் அவ்வக்கினிப்பொறிகளைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி, இடந் தோறும் வெருவியோடினர்கள். கடனடுவினுள்ள தெப்பத்தின் பாய் மரத்தை நீங்கிய காகம் பின்னும் அதனையே அடைதல்போல, அவ்வாறு ஓடிய தேவர்களெல்லாரும் பெருமூச்செறிந்து கொண்டு மீண்டும் எம் பெருமான் றிருமுன் வந்து வணங்கித் துதித்து, ''பரமபிதாவே, அசுரர் களைக் கொல்லும்பொருட்டு ஒரு திருக்குமாரரைத் தந்தருளும்வண்ணம் வந்து பிரார்த்தித்தேம். நீர் முடிவில்லாத அக்கினியைத் தோற்றுவித்தரு ளினீர். எம்பெருமானே, அடியேங்கள் உய்வது எங்ஙனம்! முற்காலத்திலே உமாதேவியாருடைய திருக்கரத்தினின்றும் தோன்றிய கங்கைபோல இப் பொழுது உமது நெற்றிகண்களினின்றும் தோன்றிய அக்கினிப்பொறிகளும்

* ஐந்துமுகத்தோடு அதோமுகமொன்று கூட்டி ஆறுமுகமெனக் கொள்க.

உலகமெங்கும் பரந்தன. ஒரு கணத்தினுள்ளே அவைகளை மாற்றுதொழி வீராயின், அவைகள் சருவான்மாக்களையும் அழித்துப்போடும். அக்கினிப் பொறியின் வெம்மையை ஆற்றாது அஞ்சியோடிய நாங்கள் மீண்டும் உம்முடைய திருவடிகளையே அடைந்தேம். ஆராயுமிடத்து, அடியேங்களுக் குப் புகலிடம் உம்மையல்லாது பிறிதுண்டோ, இல்லை. அடியேங்களு டைய துன்ப முற்றையும் நீக்குதற்குரிய நீர் அடியேங்களுக்குத் துன்பம் செய்வீராயின், அதனை விலக்க வல்லவர் வேறியாவர்! உலகமுழுதையும் இறைப்பொழுதினுள்ளே முடிக்கின்ற இவ்வக்கினியை நீக்கி எங்கள் குறையை முடித்தருளுக'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அப்பொழுது சிவபெருமான் தேவர்களை நோக்கி, ''அஞ்சாதொழி மின்கள்'' என்று கையமைத்து, புதியனவாகத் தோன்றிய ஐந்துதிருமு கங்களையும் மறைத்து, ஒரு திருமுகத்தோடு முன்போல எழுந்தருளி யிருந்து, தம்முடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றி உலகமெங்கும் பரந்த அக்கிவிப்பொறிகள் தமது திருமுன் வரும்வண்ணம் திருவுளங் கொண்டருளினர். உடனே எங்கும் பரந்த அக்கினி முன்போல ஆறுபொறி களாய் வந்து சந்நிதியை அடைந்தது. அதுகண்டு, சிவபெருமான் வாயு தேவனையும் அக்கினிதேவனையும் நோக்கி, ''நீங்களிருவீரும் இவ்வக்கினிப் பொறிகளைத் தாங்கிக்கொண்டு சென்று கங்கையில் விடக்கடவீர்கள். அஃது இவைகளைச் சரவணப் பொய்கையிலே கொண்டுசென்றுய்க்கும்'' என்று பணித்தருளினர். வாயுதேவனும் அக்கினிதேவனும் அதுகேட்டு, மனவருத்தமுற்று நடுநடுங்கி, மும்முறை வணங்கி, ''எம்பெருமானே, ஒரு நொடிப்பொழுதினுள்ளே உலகங்களெல்லாம் பரந்த இவ்வாக்கினிப் பொறிகள் உமது திருவருளினாலே சிறுகின. அரிது அரிது! இவைகளை அடியேங்கள் தாங்க வல்லமா! உலகத்தைச் சங்கரிக்கும் உமது நெற்றிக் கண்ணினின்றும் தோன்றியஇவ்வக்கினியைப் பிரமவிட்டுணுக்கடாமும் ஒரு கணப்பொழுதாயினும் தாங்கவல்லவர்களா! முற்காலத்தெழுந்த ஆலா கலம் போலப் படர்ந்த இவ்வக்கினியைக் கண்டவுடனே நில்லாது வருந்தி ஓடினேம். இவற்றை அணுகவும் அஞ்சுகின்றேம். இவ்வாறுக, இவற்றை நாங்கள் சிரமேற்கொண்டு செல்லுதல் கூடுமா! இவ்வக்கினியை அடை தற்கு நினைப்பினும் எமது உள்ளம் வெப்புறுகின்றது; சரீரம் வேர்க்கின் றது. நாங்கள் எப்படித் தாங்குவோம்'' என்று விண்ணப்பஞ்செய்தார் கள். சிவபெருமான் ''இவ்வக்கினிப் பொறிகளைச் சுமந்து சென்று கங்கை யில் விடும்பொருட்டு உங்களுக்குத் திண்மை உண்டாகுக'' என்று திரு வாய்மலர்ந்தருளினர். வாயுதேவனும் அக்கினிதேவனும் அதற்கியைந்து, சிவபெருமானைத் துதித்தார்கள். அதுகண்ட பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் துளக்க நீங்கி, ''எங்கள் துன்பம் இன்றே நீங்கியது'' என்று மனமகிழ்ந்து, சரீரம் பூரித்தார்கள். சிவபெருமான் அவர்களை

நோக்கி, ''இவ்வக்கினி சரவணப்பொய்கையிலே சேர்ந்து, ஒரு குமாரனுய் வளர்ந்து. சூரன் முதலிய அசுரர்களைக்கொன்று உங்களுக்கு அருள்செய்யும். நீங்களெல்லீரும் போங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். பிரம விட்டுணு முதலிய தேவர்கள் ''உய்ந்தனம் உய்ந்தனம். இனி அடியேங்களுக்கு ஓர் குறையமில்லை'' என்று சொல்லி, சிவபெருமானை வணங்கிக் கொண்டு அங்குநின்று நீங்கினர்கள்.

வாயுதேவன் சிவபெருமானுடைய திருவடிகளை அக்கினிதேவனேடு வணங்கி எழுந்து, அவருடைய திருவருளினுலே அக்கினிப்பொறிகளாறையும் சிரமேற்றாங்கிக்கொண்டு, திருக்கோயிலை நீங்கிச் செல்வானுயினன். அதனைப் பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் பெருமகிழ்ச்சியோடு கண்டு, ''சுத்த சிவசோதியாகிய எம்பெருமான் தமது நெற்றிக் கண்ணினின்றும் ஒரு திருக்குமாரரை அக்கிவிவடிவமாகத் தோற்றுவித்தருளினர். சூரபன்மன் இறத்தற்கும் நாம் முன்னையாக்கத்தைப் பெறுதற்கும் இன்னஞ் சிலநாளிருத்தலால், சிவபெருமான் தம்முடைய திருக்குமாரர் சரவணப்பொய்கையிலே குழந்தையாக வளரும்வண்ணம் அருள் செய்தார். சிவபெருமானுடைய செயல்களெல்லாம் திருவருளே. இங்கே அக்கினியைத் தோற்றுவித்ததும் எம்மாட்டுள்ள பெருங்கருணையாயிற்றே. இதுவே அதற்குச் சான்று. இனி அசுரரெல்லாம் இறந்தனர். நங்குறை தீர்ந்தது. நாமும் சரவணப்பொய்கைக்குச் செல்வேம்'' என்றூர்கள். அக்கினிப்பொறிகளைத் தாங்கும் வாயுதேவன் தங்களுக்குமுன் செல்ல, திருக்கைலாசமலையைக் கடந்து செல்வாராயினர்கள். ஒரு நாழிகை செல்ல, வாயுதேவன் ''இவ்வக்கினிப்பொறிகளைத் தாங்குதல் அரிது அரிது'' என்று புலம்பி, சிவபெருமானுடைய திருவளினுலே வலிமை பெற்ற அக்கினிதேவனுடைய சிரசிலே அப்பொறிகளைச் சேர்த்தினன். சேர்த்தலும், அக்கினிதேவன் சரீரம் வேர்த்து மிகமெலிந்து ஒரு நாழிகையிலே தாங்கிக்கொண்டு, பிறிதொரு நாழிகை தாங்கலாற்றாது விரைந்து சென்று, அவைகளைக் கங்கையில் விடுத்தான். அப்பொறிகள் வந்தடைந்தவுடனே, கங்கையானது, சிவபெருமானுடைய சடையின் மறைந்தமைபோல, வறந்தது. சிவபெருமானுடைய திருவருளையறிந்து கங்கையானது அப்பொறிகளைத் தன் சிரமேலேந்திக் கொண்டு ஒருநாழிகையினுள்ளே சென்று, சரவணப்பொய்கையில் விடுத்தது. பிரம விட்டுணு முதலிய தேவர்களெல்லாரும் அதுகாறும் வந்து, அண்ணியதாகிய வினைவை நாடிக் காக்கும் வறியார் போலச் சரவணப்பொய்கையைப் பேருவகையோடு சேர்ந்தார்கள். பிரமா ஆகாயத்தினும், விட்டுணு பூமியினும், இந்திரன் முதலிய நிக்குப்பாலகர்கள் எண்டிசைகளினும் நின்று காத்தார்கள். கங்கையும் வறக்கும்வண்ணம் புகுந்த அக்கினிப் பொறிகளாறும் இமையமலைச் சாரலினுள்ள சரவணப்பொய்கையிலே புகுதலும், அது சிவபெருமானுடைய திருவருளினுலே வறத்தலின்றி முன்போலிருந்தது.

அருவமும் உருவமுமாய் அநாதியாய் ஒன்றுப்பப் பலவாய்ப் பரப்பிர மமாய் நின்ற சோதிப்பிழம்பே திருமேனியாக, கருணைவெள்ளம் பொழியாநின்ற ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுங் கொண்டு, முருகக்கடவுள், உலகம் உய்யும்வண்ணம், திருவவதாரஞ் செய் தளிருளர். செய்தருளலும், ஆகாயத்திலே துந்துபிகள் ஒலித்தன; வேதங் களெல்லாம் ஆர்த்தன; பிரமாவும், விட்டுணுவும், இந்திரனும், முனிவர் களும் பூமாரி பெய்து, ''அடியேங்களுக்கு அருள்செய்க'' என்று துதித்துச் சூழ்ந்தார்கள். உலகத்துள்ள உயிர்களெல்லாவற்றிற்கும் உவகைக்குறிப் புண்டாயின. சூரன் முதலிய அசுரர்களெல்லாருக்கும் இறப்பையுணர்த் துங் குறிப்புக்களுண்டாயின. வேதங்களாலும் மனத்தாலும் வாக்கா லும் அறியொணாது எங்கும் நிறைந்து நின்ற நிருமலராகிய முதற்கடவுள் ஆறு திருமுகங்களோ யுடையராய்த் தோன்றி, உயிர்களிடத்துள்ள பேரரு ளோடும் சரவணப்பொய்கையிலே செந்தாமரை மலரின்மீது வீற்றிருந் தருளினர்.

அம்முருகக்கடவுள் கைக்குழந்தைபோலச் செய்யுந் திருவிளையாடலைக் கண்டு, விட்டுணு முதலிய தேவர்கள் யாவரும் கார்த்திகை மகளிர்களை நோக்கி, ''சரவணப்பொய்கையிலே ஆறுமுகக்கடவுளாய் வீற்றிருந்தரு ளும் எம்பெருமான் ஒருகுழந்தைபோலத்தோன்றினர். நீங்கள் அவருக்கு நாடோறும் உங்கள் முலைப்பாலைக் கொடுத்து, அவரை வளர்க்கக்கட வீர்கள்'' என்றார்கள். கார்த்திகை மகளிர்கள் அறுவரும் அதற்கியைந்து, சரவணப் பொய்கையில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளை அடைந்து துதிக்க, அவ்வறுமுகக்கடவுள் தம்மை அடைந்தோர்க்கு வேண்டியன அருள்செய்யும் பெருங்கருணைக்கடலாதலால், வெவ்வேறுக ஆறுசிறுவர் வடிவங் கொண்டருளினர். கொண்டருளலும், கார்த்திகைமக ளிர்கள் அறுவரும் மிகமகிழ்ந்து, அச்சிறுவர்களறுவரையும் வெவ்வே றெடுத்து, தங்கள் தங்கள் முலைப்பாலை ஊட்ட, அவ்வறுமுகக்கடவுள் திரு முறுவல்செய்து, நிங்காத பேரருளினாலே, மிக வருந்தினோர் போல உண் டருளினர். உண்டபின், ஆறுசிறுவராய் நின்ற ஒருமுதற்கடவுளை, அம் மகளிர்கள் சரவணப்பொய்கையினுள்ள தாமரைமலர்களாகிய சயனத் தின்மீது சேர்த்துத் துயில்செய்வித்துத் துதித்தார்கள். அம்முருகக்கடவுள், திருவருளினாலே, துயில்செய்ய ஒருருவமும், துயில்செய்து விரைந்தெழுந்து மதலைபேச ஒருருவமும், மாதாவின் முலைப்பாலைச் செம்பவளத்திருவாய் வைத்து உண்ண ஒருருவமும், நகைத்துக்கொண்டிருக்க ஒருருவமும், விளையாட ஒருருவமும், அழ ஒருருவமும், உடையராயினர். தவழ ஒருரு வமும், தளர்ந்து செல்ல ஒருருவமும், நில்லாது விரைந்து எழுந்து விழ ஒருருவமும், இருக்க ஒருருவமும், பொய்கையெங்குஞ் சென்றுழக்க ஒருரு வமும், மாதாவிடத்திருக்க ஒருவருவமும் உடையராயினர். கூத்தாட ஒருருவமும், செங்கைகொட்ட ஒருருவமும், பாட்டுப்பாட ஒருருவமும்,

பார்க்க ஒருருவமும், ஓடவோருருவமும், ஓரிடத்தொளிக்க ஒருருவமும் உடையராயினர். இவ்வாறே ஆறுதிருமேனியும் கணமொன்றினுள்ளே ஆயிரம் பேதமாம் வண்ணம், முழுமுதற்கடவுளாய் நின்ற குமாரசுவாமி எண்ணில்லாத திருவிளையாட்டைச் செய்தருளினர்.

பிரம விட்டுணு முதலிய தேவர்களும், முனிவர்களும், பிறரும் அது கண்டு அற்புதமடைந்து, ''இவ்வொருபாலரே பல சிறுவர் வடிவங் கொண்டு நம்முன்னே கணப்பொழுதினுள்ளே எண்ணில் பேதத்தராயினர். ஆராயுங்கால், இக்குமாரசுவாமியுடைய திருவிளையாடல் எங்களாலும் அறிவரியது. இவர் எல்லாமாயமுஞ் செய்யவல்லவர்; வரம்பில்லாத அறிவினையுடையர். கைக்குழந்தைபோலத் தோன்றிய இவர் செய்யும் இம் மாயைபோல ஒருவரும் செய்யவல்லரல்லர். பிறிது சொல்லி யென்னே! நாமும் இவ்வாறு செய்ததொன்றில்லை. இவர் உயர்வொப்பில்லாத சிவபெருமானேயாம்'' என்று சொல்லி, வணங்கி நின்றார்கள். கார்த்திகை மகளிர்கள் அறுவரும் அறுமுகக் கடவுளுடைய திருவிளையாடன் முழுதையும் நோக்கி நோக்கி, மிக்க அற்புதமடைந்து, குழந்தைகளெனக் கொள்ளுதலை ஒழித்து, சிறிதும் பிரியாது அஞ்சி, வழிபடுகடவுளராகவே கொண்டு, மெய்யன்போடு துதித்தார்கள்.

அறுமுகக்கடவுளுடைய திருவவதாரத்தைச் சொன்னேம். இனி அக் கடவுளுக்குத் தம்பியர்களாய் உமாதேவியாரிடத்தே இலக்கத்தொன்ப தின்பர் உதித்த தன்மையைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

## துணைவர்வருபடலம்.

சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய அக்கினிப் பொறிகளின் வெம்மையை ஆற்றாது, உமாதேவியார், திருவடிகளினுள்ள சிலம்புகள் தாக்கலால் நவரத்தினங்கள் சிதறும்வண்ணம், அஞ்சியோடினர். திருவுளத்திலே ''விட்டுணு முதலிய தேவர்களொல்லாரும் சிவபெருமானை வணங்கி, 'நீர் ஒரு திருக்குமாரரைத் தந்தருளும்' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணினின்றும் அக்கினிப் பொறிகளைத் தோற்றுவித்து, ஒரு குமாரனாய் வளரும்வண்ணம் சரவணப் பொய்கையிலே சேர்ப்பித்தருளினர்'' என்றுணர்ந்தார். அதன்பின் ''எம்பெருமானுக்குக் குமாரன் என்னிடத்தே தோன்றுவண்ணம் தடுத்த பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுடைய பன்னியர்களுக் கெல்லாம் புதல்வர்கள் இல்லாதொழிக'' என்றார். உமாதேவியார் இவ்

வாறே சொல்லிக்கொண்டு, மீண்டு சென்று, சிவபெருமான் சந்நிதியை அடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கி நின்று, ''எம்பெருமானே, தேவர்களெல்லாரும் குறையிரப்ப, நீர் தோற்றுவித்தருளிய அக்கினிப் பொறிகளின் வன்மையையும் வெம்மையையும் கண்டு, வெம்பிச் சரீர முற்றும் பதைபதைப்ப, ஓடினேன். பின்பு நீர் அவ்வக்கினிப் பொறிகளை இங்குநின்றும் அகற்றினமையால் மீண்டேன்'' என்று விண்ணப்பஞ்செய் செய்தார். சிவபெருமான் கருணைசெய்து, தேவியாரைத் தம்பக்கத் திருத்தியருளினர்.

உமாதேவியார் முன் ஓடியபொழுது, அவருடைய திருவடிச்சிலம் பினின்றுஞ் சிதறிய இரத்தினங்களெல்லாம் சிவபெருமான்றிருமுன் விளங் கின. சிவபெருமானுடைய ஆணையினாலே, அந் நவரத்தினங்களினும் உமாதேவியாருடைய திருவுருவந் தோன்றியது. அவ்வுருவங்களைச் சிவ பெருமான் நோக்கி, திருவருளினால் ''வாருங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருள, ஒவ்வோரிரத்தினத்துக்கு ஒவ்வோர் சத்தியாக நவசத்திகள் தோன்றினர்கள். அவர்கள், சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி நின்று அவரிடத்தே விருப்பம் வைத்தமையால், இருடி பத்தினிகள்போல விரைவிலே கருப்பமுற்றார்கள். இவை யாவையும் பார்ப்பதியார்கண்டு, அந்நவசத்திகண்மீது கோபங்கொண்டு, ''நீங்கள் இங்கு நமக்கு மாறு யினமையால், பலகாலம் இக்கருப்பத்தோடிருக்கக் கடவீர்கள்'' என்று சபித்தார். அப்பொழுது நவசத்திகள் அஞ்சி நடுநடுங்கிச் சரீரம் வெயர்த் தார்கள். அவ்வெயர்வையினின்றும் தேவதேவருடைய திருவருளினாலே, ஓரிலக்க வீரர்கள் உதித்தார்கள். அவ்வீரர்கள் இடியேறுக்கும் சொல்லே யுடையர்களும், பொன்னுடையை உடுத்தவர்களும், வாளையும் பரிசை யையும் கையிலேந்தினவர்களுமாய், சிவபெருமான் திருமுன்சென்று, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்துக்கொண்டு நின்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''நம் புதல்வர்களே, கேளுங்கள். தேவர்களுக்குப் பகைவர்களாகிய அசுரர்களைக் கொல்லும் பொருட்டு, நமது புதல்வனாகிய முருகக்கடவுளுக்கு நீங்கள் யாவிரும் படைகளாகக் கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அவ்வீரர்கள் இலக்கரும், நாடோறும் பேரன்புடையர்களாய், சிவசந்நிதியை அகலாது, திருத் தொண்டின்வழி நின்றார்கள்.

முன்னே பார்ப்பதியார் சபிப்ப, நவசத்திகள் நடுநடுங்கி, அவ் வம்மையாரை வழிபாடு செய்துகொண்டு, கருப்பத்தோடு பலகாலம் இருந்தார்கள். அந்நவசத்திகளுடைய கருவினுள்ளே நந்திகணத்தவர்கள் சிசுக்களாய்ப் புகுந்து, காளையர்களாகி, சிவபெருமானைச் சிந்தித்துத் தொழுதுகொண்டிருந்தார்கள். அவர்கள் இவ்வாறு யோகஞ்செய்து கொண்டிருத்தலால் கருப்பம் மிகப்பாரமாதலும் நவசத்திகள் சிவ

பெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி நின்று, ''அடியேங்கள் இந்நாள்காறும் இக் கருப்பத்திலில் வருந்தினேம், இனித் தாங்கலாற் றேம், திருவுளமிரங்கியருளுங்கள்'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்பொழுது சிவபெருமான் திருவுளமிரங்கி, தேவியாருடைய திரு முகத்தை நோக்கி, ''உமையே, உன்காற் சிலம்பினின்றும் உதித்த இந்நவசத்திகள் உன் சாபங் காரணமாக நெடுங்காலம் கருப்பத்தைச் சுமந்து மிக வருந்தினர்கள். இனிப் புதல்வர்களைப் பெறும்பொருட்டு அருள்செய்க'' என்று பணித்தருளினர். உமாதேவியார் ''நன்று'' என்று அதற்கியைந்து, திருமுறுவல் செய்து, நவசத்திகளை நோக்கி, ''இனி நீங்கள் புதல்வர்களைப் பெறக்கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்தருள, அவர்கள் வயிற்றினுள் யோகஞ்செய்துகொண்டிருக்கும் வீரர்கள் அதனை யறிந்து, யோகத்தை விடுத்து, மனமிகமகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை நினைந்து தொழுது, பிறக்கும்பொருட்டு நினைந்தார்கள்.

நவசத்திகள் உமாதேவியாருடைய பெருங்கருணைத் திருவாக்கைக் கேட்டலும், கவற்சி நீங்கி, மகாதேவரையும் தேவியாரையும் வணங் கித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு அங்குநின்று நீங்கி, ஓரிடத்தே சென்று, புதல்வரைப் பெற்றார்கள். மாணிக்கவல்லியிடத்து வீரவாகுவும், மௌத்திகவல்லியிடத்து வீரகேசரியும், புட்பராகவல்லியிடத்து வீர மகேந்திரரும், கோமேதவல்லியிடத்து வீரமகேச்சுரரும், வைடூரியவல்லி யிடத்து வீரபுரந்தரரும், வைரவல்லியிடத்து வீரராக்கதரும், மரகத வல்லியிடத்து வீரமார்த்தாண்டரும், பவளவல்லியிடத்து வீராந்த கரும், இந்திரநீலவல்லியிடத்து வீர தீரரும், அவதரித்தார்கள். இவ் வீரர்களொன்பதின்மரும், சிவபிரானுடைய திருவருளினுலே, தங்கள் தங்கள் அன்னையர்களுடைய நிறத்தையுடையர்களாய், பொன்னுடை யுடுத்தவர்களாய், பலகாலம் வளர்ந்த உறுப்புக்களோடும் நவசத்திகளு டைய உந்தியின்வழியே பிரமதேவரைப்போல் உதித்தார்கள். இவ்வண் ணம் உதித்த வீரர்கள் சிவபெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி எழுதலும், சிவபெருமான் பார்ப்பதியாரை நோக்கி, ''நம்மைந்தர்க ளாகிய இவர்கள் அறிவுடையர்கள், ஆற்றலுடையர்கள், மானமாகிய அருங்கலமுடையர்கள். இவர்கள் புதியர்களல்லர், நந்திகணத்தவர்கள்'' என்று சொல்லியருளினர். தேவியார் அதுகேட்டு, அம்மைந்தர்களுக்குத் திருவருள் புரிந்தார். சிவபெருமான் அவர்களெல்லாருக்கும் தனித்தனி வாள் கொடுத்து, ஓரிலக்கமைந்தர்களோடு நீங்களுங்கூடி, உங்களுக்கு நாய கனுகிய அறுமுகக்கடவுளை நீங்காது, அவன் பணித்த தொண்டுகளைச் செய்து கொண்டொழுகக்கடவீர்கள்'' என்று அருளிச்செய்ய, அவர்களும் அதற் கியைந்து வணங்கினர்கள். இவ்வொன்பது வீரரும் இலக்கவிரர்களோடு கலந்து, எம்பெருமானுடைய திருக்கோயிலை அகலாது, அங்கிருந்தார்கள்.

சத்திகளொன்பதின்மரும் உமாதேவியாரை நீங்காது, அவர் பணித்த தொண்டுகளைச் செய்துகொண்டிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

.....

# சரவணப்படலம்.

சிவபெருமான் உமாதேவியாரை நோக்கி, ''உமையே முன்னே நமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிச் சரவணப்பொய்கையிலிருக்கும் உன் புதல்வனை நாம் போய் இங்கே கொண்டுவருவோம், வா'' என்று திருவாய்மலர்ந்தருளினர். உமாதேவியார் அதுகேட்டு, உவகையும் அன்புங் கொண்டெழுந்து, ''எம்பெருமானே, நம்முடைய குமாரனை நாம்கொண்டு வருவேம், எழுந்தருளுக'' என்றார். உடனே சிவபெருமான் எழுந்து உமாதேவியாரோடும் இடப மீது ஏறியருளினர். அதுகண்ட தேவர்கள் ''நம்முடைய தீவினைகளெல்லாங் கழிந்தன'' என்று மனமிக மகிழ்ந்து, நந்திகணத்தோடு அணைந்து துதித்தார்கள். ஆலாலசுந்தரர் முதலிய கணத்தார்களும், உருத்திரர்களும் வந்து இருபக்கத்தும் நெருங்கித் துதித்தார்கள். ஞானசாரியராகிய திருநந்திதேவர் விடுப்ப, பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்கள் பூமாரிபெய்து, திருவடிகளை வணங்கிக்கொண்டு சூழ்ந்தார்கள். பூதர்கள் நானவித வாத்தியங்களை முழக்கினர்கள். நான்கு வேதங்களும் பிரணவமும் பல கலைகளும் ஒலித்தன. விஞ்சையர்கள் கீதம் பாடினர்கள். சூரியர்கள் வெண்குடை பிடித்தார்கள். பூதர்கள் சாமரம் வீசினர்கள். நூறுகோடி பூதர்கள் சூழ்ந்தார்கள். இடபக்கொடிகள் நெருங்கிச் சென்றன. அப்பொழுது உமாதேவியாரோடும் இடபமேற் கொண்டருளிய சிவபெருமான் தமது திருக்கோயிலினின்று நீங்கி, திருக்கைலாசத்தைக் கடந்து, இமையமலைச்சாரலினுள்ள சரவணப்பொய்கையை அடைந்தார். கைலாசபதியும் பார்ப்பதியம்மையாரும் ஆறுருவங்கொண்ட முருகக்கடவுளுடைய தன்மையைப் பார்த்துத் திருவருள்செய்து, சரவணப் பொய்கைக் கரையிலே நின்றார்கள். அப்பொய்கையிலே ஆறு திருவுருவங் கொண்டுலாவி வீற்றிருந்தருளுங் குமாரக்கடவுள் சிவபெருமானையும் உமாதேவியாரையுங் கண்டு, திருமுகமலர்ந்து திருவுளங்களித்தார். அப்பொழுது மகாதேவர் உமாதேவியாரை நோக்கி, ''நீ போய் உன் புதல்வனைக் கொண்டுவரக் கடவாய்'' என்று பணித்தருள, தேவியார் இடபவாகனத்தினின்றும் விரைந்து இறங்கி, திருவுள்ளத்தே கிளர்ந்த பேராசையோடு சென்று, சரவணப்பொய்கையில் எழுந்தருளியிருந்த தமது திருக்குமாரருடைய ஆறுருவங்களையும் இரண்டு திருக்கரங்களினாலும் அன்போடு எடுத்துத் தழுவி, ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுங் கொண்ட ஒருருவமாம்வண்ணஞ் செய்தருளினர். அக்குமாரசுவாமி உமா

தேவியாரால் ஆறு திருவுருவும் ஒன்றுகி, கந்தர் என்னுந் திருநாமத்தைப் பெற்றார். உமாதேவியார் தம்மாலே தழுவப்பட்ட குமாரவேளுடைய முடிதோறும் மோந்து, முதுகைத் தடவலும், அவ்வம்மையாருடைய திரு முலைகள் சுரந்து பால்சொரிந்தன. சிவபெருமானது திருவருளாகியும் நிருமலமாகியும் பரஞானமாகியுமுள்ள தம்முடைய திருமுலைகள் பொழிந்த பாலை ஓரிரத்தின வள்ளத்திலேற்று, முருகக்கடவுளுக்கு அன்பினுடன் ஊட்டினர். ஊட்டிய பின்பு, அக்குமாரக்கடவுளைக் கொண்டு போய், எம்பெருமான் திருமுன்னே வணங்குவிப்ப, அவர் தம்முடைய திருக்கரங்களினால் எடுத்து, மார்பிலணைத்து, பெருங்கருணையோடும் தமது பக்கத்திருத்தியருளினர். பின்பு உமாதேவியாரையும் திருக்கரத்தினால் எடுத்து, தமதிடப்பக்கத் திருத்தியருளினர்.

இடபத்தின்மீது சிவபெருமானுக்கும் பார்ப்பதியம்மையாருக்கும் இடையே ஆறுமுகக்கடவுள் எழுந்தருளியிருத்தலைக் கண்டு, பிரமா, விட்டுணு, இந்திரன் முதலிய தேவர்கள் கடல்போல் ஆரவாரித்து, அணுகி, பக்கத்தும் முன்னும்பின்னும் நெருங்கி, "சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றியருளிய குமாரசுவாமியே, அடியேங்கள் சூரபன்மனால் மிக வருந்தினேம். இனிச் சிறியேங்களை ஆட்கொண்டருளும்" என்று விண்ணப்பஞ்செய்து, பூமழைபொழிந்து, வணங்கி எழுந்து, வாழ்த்தினர்கள். அப்பொழுது கார்த்திகை மகளிர்கள் சிவபெருமானைப் பேரன்போடு வணங்கி எழுந்தார்கள். கைலாசபதி அவர்கண்மீது திருவருணோக்கஞ் செய்து, "நம்முடைய குமாரனுகிய இவன், உங்களால் வளர்க்கப்பட்டமையால், கார்த்திகேயன் என்னும் பெயரைப் பெறக்கடவன். யாவராயினும் உங்கள் நக்ஷத்திரத்திலே இவனை மெய்யன்போடு வழிபடுவாராயின், அவர் வேண்டும் வரங்களைக் கொடுத்து, முத்தியை அருளிச் செய்வேம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்.

உமாதேவியார் தம்முடைய திருக்குமாரரைச் சென்று தழுவிய பொழுது சொரிந்த திருமுலைப்பால் நதிபோலப் பெருகிச் சரவணப் பொய்கையிலே புகுதலும், தங்கள் தந்தையாராகிய பராசரமுனிவருடைய சாபத்தினால் அப்பொய்கையுள் மீனைத் திரிந்த ஆறு சிறுவரும் அப்பாலைப் பருகினர்கள். பருகியபொழுது, மீன்வடிவம் ஒழிய முன்னை வடிவங்கொண்டு எழுந்து, பொய்கையை நீங்கி, சிவபெருமான் திருமுன் சென்று வணங்கித் துதித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் திருப்பரங்குன்றிலே தவஞ்செய்து கொண்டிருங்கள். சிலநாளாயபின், நம்முடைய குமாரனுகிய இவன் வந்து உங்களுக்கு அருள் செய்வன்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட சிறுவர்களாறுவரும் மனமகிழ்ந்து சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு, சென்றார்கள். சிவபெருமான் கார்த்திகைமகளிர்களையும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களையும் தங்கள் தங்கள் இடத்துக்குச் செல்

லும் வண்ணம் விடுத்து, திருக்கைலாசமலையை அடைந்து. முருகக்கடவுளோடும் உமாதேவியாரோடும் இடபவாகனத்தினின்றும் இறங்கி நடந்து, செம்பொற்றிருக்கோயிலிற்சென்று, சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினர். நவவீரர்களும் இலக்கவீரர்களும் தங்கள் தமையனராகிய முருகக்கடவுளை நறுமலர்களாலே பூசித்து வணங்கித் துதித்து, அவர்தொண்டின்வழி நின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::::

# திருவிளையாட்டுப் படலம்.

மகாதேவருக்கும் தேவியாருக்கும் இடையே எழுந்தருளிருந்த முருகக்கடவுள் தம்முடைய தம்பியர்களோடும் எழுந்து, பெருங்கருணையினாலே திருவிளையாடல் செய்யத் திருவுளங்கொண்டருளினர். திருவடிகளிலே தண்டையும் சிலம்பும் கழலும் சதங்கையும் ஒலிக்க, திருவரையிலே கிங்கிணி இசைக்க, திருச்செவிகளிலே குண்டலமும், திருமார்பிலே மதாணியும், திருநெற்றியிலே வீரபட்டிகையும் விளங்கத் திருவிளையாடல் செய்வார். சடைதோறும் உலாவுவர், வாவிதோறும் உலாவுவர், பூஞ்சோலைதோறும் உலாவுவர், ஆறுதோறும் உலாவுவர், குன்றுதோறும் உலாவுவர், குளத்தில் உலாவுவர், ஆற்றிடைக்குறையில் உலாவுவர், ஆத்தீண்டுகுற்றியையுடைய இடத்தில் உலாவுவர், அந்தணர்சாலையில் உலாவுவர், சிவதலந்தோறும் உலாவுவர், கடம்பமரம் நிற்கும் இடந்தோறும் உலாவுவர், வடமொழி தமிழ்மொழி கற்குங் கழகந்தோறும் உலாவுவர், பூமியில் உலாவுவர், திக்குக்களில் உலாவுவர், கடல்களில் உலாவுவர், ஆகாயத்தில் உலாவுவர், சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் உள்ள இடங்களில் உலாவுவர், கந்தருவர் சித்தர் கருடர் முதலாயினோருடைய உலகங்களில் உலாவுவர், இந்திரனுடைய உலகத்தில் உலாவுவர், இருடிகளுடைய உலகத்தில் உலாவுவர், பிரமலோகத்தில் உலாவுவர், விட்டுணுலோகத்தில் உலாவுவர், சத்திலோகத்தில் உலாவுவர், சிவலோகத்தில் உலாவுவர், பிருதிவியண்டங்களெங்கும் உலாவுவர், அப்புவண்டங்களெங்கும் உலாவுவர், தேயுவண்டங்களெங்கும் உலவுவர், வாயுவண்டங்களெங்கும் உலாவுவர், ஆகாயவண்டங்களெங்கும் உலாவுவர், மற்றைப்புவனங்களினும் உலாவுவர். ஆறு திருமுகங்களோடும் பாலராய்த் திரிவர், ஒரு திருமுகத்தோடு குமாரராய்த் திரிவர், பிராமணராய்த்திரிவர், முனிவராய்த்திரிவர். வீரராய்த் திரிவர், காலாற்செல்லுவர், குதிரைமீது செல்லுவர், யானைமீது செல்லுவர், தேர்மீது செல்லுவர், சிங்கமீது செல்லுவர், ஆட்டுக்கடாமீது செல்லுவர், விமானமீது செல்லுவர், முகில்மீது செல்லுவர், மணியை அசைப்பர், குழலை ஊதுவர், கோட்டை இசைப்பர், வீணை வாசிப்பர், நானாவித வாத்தியங்களை முழக்குவர், இசைபாடுவர், கூத்தாடுவர்.

இவ்வாறே முருகக்கடவுள் பல திருவுருவங்கொண்டு எவ்விடத்தும் திருவிளையாடல் செய்யும்பொழுது, உலகமாதாவாகிய உமாதேவியார் அதனையறிந்து வியந்து, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிநின்று ''எம்பெருமானே, நம்முடைய குமாரன் சிறுகுழவிப்பருவத்தே செய்யும் ஆடற்றொழில் எனக்கு அத்தியற்புதமாயிருக்கின்றது. ஆராயுங்கால், அவனுக்கு ஒப்பாவார் பிறரில்லை. மாயையில் உமக்கு ஒப்பாவன். அவனுடைய பெருமையை அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். பார்ப்பதியம்மையார் தாம் அறியாதார்போல இவ்வாறு வினவுதலும், சிவபெருமான் அவரை நோக்கி, ''உமையே, எல்லாவுயிர்களும் அறிந்து உய்யும்பொருட்டு உன் குமாரனதியல்பை நீ நம்மிடத்து வினவினாய். அவனியல்பைச் சொல்வேம், கேள். நமது நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய குமாரன் கங்கையிலே கொண்டு சென்று சரவணப்பொய்கையில் விடப்பட்டமையால் காங்கேயன் எனவும், சரவணத்திலே தோன்றினமையால் சரவணபவன் எனவும், கார்த்திகை மகளிர்களாலே பாலூட்டி வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனவும், உன்னுலே ஆறுருவமுந்திரட்டி ஒன்றுக்கப்பட்டமையால் கந்தன் எனவும், பெயர்பெற்றான். நமக்கு ஆறுமுகங்களுண்டு. அவை தாமே கந்தனுக்கு முகங்களாயின. தாரகப்பிரமமாயுள்ள நமது ஆறெழுத்தும் ஒன்றுகி உன்குமாரனுடைய மந்திரமாகிய சடாக்ஷரமாயிற்று. ஆதலால், அறுமுகக்கடவுள் நமது சத்தியே. அவனுக்கும் நமக்கும் வேற்றுமையில்லை. அவன் நம்மைப்போல நீக்கமின்றி எங்கும் வியாபித்திருக்கின்றனன். பாலன்போலத் தோன்றுவன். எல்லாப்பொருளையும் புலப்படக் காணும் முற்றறிவுடையவன். தன்னை அன்போடு வழிபடுவோர்க்குச் செல்வத்தையும், ஞானத்தையும், முத்தியையும் கொடுக்க வல்லவன். இனிமேல் அவன் பிரமனை வேதத்துக்கெல்லாம் மூலமாய்நின்ற பிரணவத்தின் பொருளை விளவி, அவன் அதனை அறியாது மயங்கக்கண்டு, அவனைச் சிரசிலே குட்டிச் சிறைப்படுத்தி, தானே உயிர்களனைத்தையும் பலநாட் படைத்துக்கொண்டிருப்பன். அதன்பின் தாரகாசுரனையும், சிங்கமுகாசுரனையும், சூரபன்மாவையும், மற்றை யசுரர்களையுங் கொன்று, பிரம விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களுடைய இடுக்கணை நீக்கி, அவர்களுக்குப் பேரருள் செய்வன். இவையெல்லாம் பின்னர் நீ காண்பாய்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். எம்பெருமாட்டியார் தமதருமைத் திருக்குமாரருடைய பெருமையைக் கேட்டுத் திருவுளமகிழ்ந்து எழுந்தருளியிருந்தார். அது நிற்க.

உலகங்களனைத்திலுஞ்சென்று திருவிளையாடல்செய்யும் சண்முகக்கடவுள் பின் ஒரு திருவிளையாடல் செய்வாராயினர். குலமலைகளனைத்தையும் ஓரிடத்து ஒருங்கு கூட்டுவர். அவைகளைப் பின்பு தலைதடுமாற்றமாகப் பூமியில் நிறுத்துவர். கடல்களனைத்தையும் ஒன்றுக்குவர். மகாமேருமலையைப் பாதாளத்திற் பொருந்த அழுத்துவர். கங்காநதியை அடைப்

பர். பாதாளத்துள்ள எட்டு நாகங்களையும் பிடித்து மகாமேரு முதலிய மலைகளிலே பூட்டிக்கட்டி, உயிர்களுக்கு ஊறில்லாவண்ணம் சிறுதேர்களாகக்கொண்டு உருட்டிச்செல்வர். திக்குயானைகளை ஒன்றேடொன்று பொரும்வண்ணஞ்செய்வர். ஆகாயகங்காசலத்தால் வடவாமுகாக்கினியை அவிப்பர். கருடனையும் வாசுகியையும் பிடித்து, தம்முள் மாறுபட்டுப் பொரும்வண்ணம் இயற்றுவர். பாதாளத்துள்ள நாகர்களைப் பூமியிற் சேர்த்தி, பூமியிலுள்ள கடல்களனைத்தையும் பாதாளத்திற் புகும்வண்ணம் விடுவர். சூரியனைச் சந்திரமண்டலத்தில் எறிவர். சந்திரனைச் சூரியமண்டலத்தில் விடுவர். திக்குப்பாலகர்களுடைய பதங்களனைத்தையும் முன்னைத்தானத்தினின்றும் பறித்துப் பிறழ வைப்பர். முகில்களுள்ளிருந்த மின்களையும் இடியேறுகளையும் பற்றி, மாலைசெய்தணிவர். சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும் பிறவும் ஆகாயத்துச் செல்லும் விமானங்களையும் தேர்களையும் பிணித்த கயிறுகள் துருவன்கையிலிருப்பன, அவற்றுள் வேண்டுவனவற்றை இடையில் அரிந்து, பூமியினும் திக்குகளினும் செல்லும்வண்ணம் விடுவர். ஆகாயத்திற்செல்லும் விற்களிரண்டையும் பற்றி, கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் உண்டைகளாகக்கொண்டு, தேவர்களுடைய தலையும் மார்பும் தோளும் கழுத்தும் முகமும் இலக்காக எய்து, வில்வன்மை காட்டுவர். சிவன்முத்தருக்கன்றிப் பிறருக்கு வெளிப்படாத நிருமலமூர்த்தியாகிய அறுமுகக்கடவுள், தேவர்கள் மனிதர்கள் முதலிய யாவரும் அஞ்சித் தங்கள் தங்கள் உள்ளமும் உடம்பும் தளர்தலன்றிச் சிதைவுருவண்ணம், இவ்வாறே எண்ணில்லாத திருவிளையாடல்களைச் செய்தருளினர்.

அப்பொழுது பூமியிலுள்ள அசுரர்கள் அதனைநோக்கி, தாம் பெரும் பாவிகளாதலால், எம்பெருமானுகிய அறுமுகக்கடவுளுடைய திருமேனியைக் கண்டிலராகி, "இது செய்தவர் யாவர்" என்று தியக்கமுற்றார்கள். அசுரர்கள் யாவரும் பின்னுஞ் சிலநாள் சீவிக்கும்வண்ணம் ஆயுள் பெற்றுள்ளமையால், முருகக்கடவுள் அவர்களுக்குத் தமது திருமேனியைக் காட்டாதுலாவினர். உலாவலும் அவர்கள் தேடித்தேடி ஒருவரையும் காணுமையால், "பிரமவிட்டுணுக்களாலும் காணப்படாத சிவபெருமானுடைய மாயமே இது" என்றார்கள். முருகக்கடவுளது செய்கையைப் பூமியிலுள்ள மனிதர்கள் கண்டு, "கொடுங்கோல் செலுத்தாநின்ற அசுரர்களெல்லாரும் இறப்பது திண்ணம். இது அதற்கு ஏதுவாய்த்தோன்றிய விம்மிதம்போலும்" என்றார்கள். திக்குப்பாலகர்களும் சூரியன் சந்திரன் முதலாயினோரும் சண்முகக்கடவுளுடைய செய்கையைக் கண்டு, அவருடைய திருவுருவத்தைக் காணுதவர்களாய், "இது அசுரர்கள் செய்கையன்று. வேறியாரோ செய்தார்" என்றிரங்கி ஒருங்குகூடி, "இந்திரன் சிலரோடும் மகாமேருமலையில் இருக்கின்றனன்; பிரமதேவரும்

அங்கிருக்கின்றூர். நாமெல்லாம் அவர்களிடத்தே சென்று இதனைச் சொல் வேம்'' என்று துணிந்துகொண்டு, சூரனுக்கும் அஞ்சித் துயரத்தோடு சென்று, மேருசிகரத்தை அடைந்தார்கள். அங்கே, அறுமுகக்கடவுளு டைய திருவிளையாடலைக்கண்டு அவர் திருவுருவத்தைக்காணுது வருந் தும் மனத்தனுய் இருந்த இந்திரனைக்கண்டு, அவன்முன்சென்று வணங்கி, இருந்துகொண்டு, ''பூவுலகத்தினும் வானுலகத்தினும் உள்ள முன்னை நிலைமைகளனைத்தையும் யாரோ மாறுபடச் செய்தனர். அவரை இன்ன ரென நாங்கள் அறிந்திலம். அசுரர்கள் இது செய்திலர்போலும், நிகழ்ந்த இப்புணர்ப்பு யாது'' என்றூர்கள். இந்திரன் அதுகேட்டு, ''நானும் இதனை ஆராய்ந்துகொண்டே இருக்கின்றேன். சிறிதும் அறிந்திலேன். நாமெல்லாஞ்சென்று பிரமதேவரை வினவுவோம் எழுங்கள்'' என்றான். உடனே, அவ்விந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் மெய்த்தவஞ்செய்த மையால், அவர்கள் கண்ணுக்குத் தெரியும்வண்ணம், அறுமுகக் கடவுள் ஒரு திருமுகமுடைய பாலராய் அம்மலைமீது தோன்றியருளினர்.

தேவர்கள் கொண்ட மயக்கம் நீங்கும்வண்ணம் தமது செய்கையைக் காட்டவந்த எம்பெருமான், மகாமேருமலையை அசைத்து, தாமரையித ழைக் கொய்து சிந்துதல்போலக் கொடுமுடிகளைப்பறித்து வீசினர். இந் திரன் முதலிய தேவர்களெல்லாரும் அங்ஙனந்தோன்றிய குமாரசுவாமி யைக் கண்டு, ''ஐயையோ! பூவுலகத்தையும் வானுலகத்தையும் திரிவு செய்தவன் இவனேயாகும்'' என்று, சிங்கத்தையெதிர்ந்த விலங்குகள் போலக்கலங்கி, ''இவனது வன்மையை ஆராயுங்கால், இவனைப் பாலனெ னக் கொள்கின்றிலம். அசுரரினும் இவன் மிகக் கொடியன். யாவரும் எய் தாத மாயமுடையன். இவனை இங்கே போர்செய்து வெல்வேம்'' என்று துணிந்து சூழ்ந்தார்கள். அப்பொழுது இந்திரன் முன்னளிலே தந்த மொடிந்து திருவெண்காட்டிற்சென்று சிவபெருமானைப் பூசித்துத் தந்தம் பெற்றுக்கொண்டு அங்கிருந்த வெள்ளையானையாகிய ஐராவதத்தை நினைக்க, அது அங்குவந்தது. உடனே இந்திரன் போர்க்கோலங் கொண்டு, குலிசம், வாள், வில், வேல் என்னும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவ் வைராவதமேலேறி, முருகக்கடவுளைத் தேவர்களோடு வளைந்து போர் செய்யத் தொடங்கினன். குமாரசுவாமி தம்மைத் தேவர்கள் பகைவ ராய் வளைந்தமையை நோக்கி, திருநகைசெய்து, யாதும் எண்ணுது முன் போலவே தமது திருவிளையாடலைச் செய்தார். இந்திரன் படைக்கலங்கள் பலவற்றைக் குமாரசுவாமிமேல் விடுப்ப, அவையெல்லாம் அவர்மீது மலர்போலப்பட்டன. அதுகண்டு, இந்திரன் குலிசத்தை விட்டு ஆரவா ரித்தான். அக்குலிசம் எம்பெருமானுடைய திருமார்பிலே பட்டு, நுண் மணல்போலத் துகளாயிற்று. இந்திரன் அதுகண்டு துயரத்தழுந்த, ஐரா வதம் ஒலித்துக்கொண்டு குமாரசுவாமி திருமுன் சென்றது. முருகக்கட வுள் அதுகண்டு, சங்கற்பமாத்திரத்தால் ஓர் வில்லையும் பல பாணங்களை

யுழ் விரைந்து படைத்துக்கொண்டு, வில்லை வளைத்து நாணெலி செய்து, ஒரு பாணத்தை அவ்யானையின் நெற்றியிற் புக விடுத்தார். உடனே ஐராவதம் புலம்பி வீழ்ந்திறந்தது. அதுகண்ட இந்திரன் ''ஐயையோ'' என்று இரங்கி, அணுகிநின்று, கோபத்தோடு தன் வில்லை வளைப்ப, முருகக்கடவுள் ஓரம்பை அவன் புயமீது விடுத்தார். இந்திரன் வருத்தமுற்றுத் தன்வன்மையிழந்து, விற்றொழிலினீங்கித் தன்கையிலிருந்த வேலொன்றைக் குமாரசுவாமிமீது விடுத்தான். அவ்வேல் ஒரு சிறு புற்போலச் சென்று பட, அதுகண்ட தேவர்கள் யாவரும் அற்புதமடைந்தார்கள். முருகக்கடவுள் இந்திரனுடைய முடியை ஓரம்பினாலும், கொடியை ஓரம்பினாலும், மார்பிற்கவசத்தை ஓரம்பினாலும் அழித்து, அவன் மார்பிலே ஏழம்பை விடுத்தார். உடனே இந்திரன் அயர்ந்து வீழ்ந்தான். அதுகண்ட மற்றைத் தேவர்களெல்லாரும் கந்தசுவாமியை வளைந்து பொருதார்கள். அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் வருணனை நான்கம்பினாலும், இயமனை ஐந்தம்பினாலும், சந்திரனை ஓரம்பினாலும், சூரியனை மூன்றம்பினாலும், வாயுவை இரண்டம்பினாலும், அக்கினியை மூன்றம்பினாலும், கொன்று நின்றார். எஞ்சிய தேவர்களெல்லாரும் குமாரசுவாமியினுடைய நிலைமையை நோக்கி, ''இவனே இன்றைக்கு எல்லாரையுங் கொன்றுவிடுவன்'' என்று துணிந்து, சரபத்தின் வன்மையைக் கண்ட சிங்கக்கூட்டம்போல, மனங்கலங்கி நடுநடுங்கி ஓடினார்கள். அதுகண்ட முருகக்கடவுள் அப்போர்க்களத்திலே தனிநின்றுலாவினார்.

இச்செயலை நாரதமுனிவர் கண்டு, தேவகுருவாகிய பிருகற்பதியிடத்துச் சென்று, சொன்னார். பிருகற்பதி அதுகேட்டு, ''தேவர்களுடைய வாழ்க்கை இறந்ததுபோலும்'' என்று சொல்லிக்கொண்டு, துயருற்று விரைந்துசென்று, போர்க்களத்தை அடைந்து, தேவர்கள் அங்கிறந்து கிடத்தல் கண்டு, மனங்கவன்று, குகப்பிரான் அங்கு நின்று செய்யும் திருவிளையாடலைத் தரிசித்தார். தரிசித்து, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்து, ''எம்பெருமானே, தாரகன், சிங்கமுகன், சூரன் என்னும் அசுரர்கள் தண்டிப்ப இந்திரன் நாடோறும் துன்பமுழந்து, தன்பதத்தை விடுத்து, இம்மேருமலையில் மறைந்திருந்தான். அவன் உம்முடைய திருவடிகளை அடைந்து வழிபட்டு, உம்மைக்கொண்டு தன் பகைவர்களைச் கொல்வித்து, முன்போலத் தன்னரசைப் பெற நினைந்திருந்தான். பலகாலம் அருந்தவஞ் செய்து வாடினன். சரவணத்தடத்திற் சென்று உமது திருவவதாரத்தை நோக்கி, தன்றுயரமெல்லாம் நீங்கினாற்போல உவகைபூத்தான். உமக்குத் தொண்டுசெய்ய விரும்பிய இந்திரன் நீர் இவ்வாறு திருவிளையாடல் செய்வதை அறிந்திலன். விட்டுணு முதலியோர் தேடிக்காணுத சிவபெருமானும் உமாதேவியாரும் அவர் திருவருள்பெற்றார் சிலருமன்றி உமது திருவிளையாட்டை அறியவல்லார் வேறியாவர்? அடியேம் பாசத்தையும் பசுவையும் பகுத்து இரக்கித்தன்

மையது என்று அறிந்திலேம். பாசத்தினின்று நீங்கிலேம். சிற்றறிவுடை யேம். இவ்வியல்புடைய சிறியேம் பதிப்பொருளாகிய உமது பெருங் கருணைத் திருவிளையாடலை அறிய வல்லமா! ஆதலால், இந்திரன் தனது அஞ்ஞானங் காரணமாக உமது திருவிளையாடலைத் தீது என்று நினைந்து, உம்மோடு போர் செய்தனன். நீதி சேர் தண்டமே நீர் புரிந்தீர். மற்றைத்தேவர்களும் அஞ்ஞானத்தால் உம்மோடு பொருதிறந்தார்கள். தந்தைதாயர்களே தமக்குப் பிழைசெய்த தம்புதல்வர்களைக் கொல்வார் களர்யின், அவர்களுக்கு வேறு யாவர் அருள்செய்குவர்! ஞானவடிவாகிய சுவாமீ, சரபமானது சிங்கத்தைக் கொல்வதன்றி மின்மினியைக் கொல் லுதல் வெற்றியாகுமா! அருட்பெருங்கடலே, வலியர்களாகிய அசுரர்கள் ஒழியும்வண்ணம் வேரோடறுத்தருளும். எளியவர்களும் உம்முடைய திரு வடிகளே மறத்தலில்லாத அன்பர்களுமாகிய தேவர்களுடைய பிழையைப் பொறுத்தருளும். மரக்கலத்தினுலே தாங்கப்படுவோரும் அதனுலே தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய வணிகர்கள் அதனைச் சாய்த்து அது கவிழ்ப்பத் தாம் இறத்தல்போல, உம்மாலே தாங்கப்படுவோரும் உம் மாலே தங்கள் செல்வத்தை அடைதற்பாலருமாகிய தேவர்கள் உம்மைப் பொருது நீர் கொல்லத் தாம் இறந்தார்கள். உம்முடைய அடித்தொண் டர்கள் செய்த பிழையைத் திருவுளங்கொள்ளாதொழிக. இவர்கள் இங்கு அறிவுபெற்றெழும்வண்ணம் திருவருள் செய்க'' என்று விண்ணப்பஞ் செய்தார்.

முன்னவர்க்கெல்லாம் முன்னவராகிய முருகக்கடவுள் அதுகேட்டுத் திருமுறுவல்செய்து, இந்திரன் முதலிய தேவர்கள் ஐராவதத்தோடும் எழும்வண்ணம் திருவுளங்கொண்டருளினர். உடனே இந்திரன் முதலிய தேவர்கள் எழுந்து, மெய்யறிவு தோன்ற, தாங்கள் முன்செய்த செயற்கை யை அறிந்து, தாங்கள் போர்செய்தது கந்தசுவாமியோடென்று நினைந்து, மனங்கலங்கி, வாடி, நடுநடுங்கி, ஒடுங்கினர்கள். அவர்கள் முருகக்கடவுள் திருவிளையாடல் செய்தலைக் காண்டலும், அவருடைய திருவடித்தாமரை களைப் பலமுறை வணங்கி எழுந்து, துதித்து, சரீர நடுநடுங்கிக்கொண்டு நின்றார்கள். அதுகண்ட குமாரசுவாமி ''வருந்தாதொழிமின் வருந்தா தொழிமின்'' என்று திருவருள் செய்தார். தேவர்கள் துயரமும் அச்சமு நீங்கி, முருகக்கடவுளை வணங்கி ''எம்பெருமானே, அமிர்தத்தோடு நஞ்சு கலந்து உண்பவரை அந்நஞ்சன்றி அமிர்தமா கொல்லும். அது போல உமது திருவருளினுலே செல்வத்தைப் பெறக் கருதிய அடி யேங்கள் உம்மோடு பொருதலைமையால், நீர் எம்மைக் கொன்றீரல்லீர், அக்குற்றமே நம்மைக் கொன்றது. முன்னளிலே சிவபெருமானே இகழ்ந்த தக்கனுடைய யாகத்தில் தரப்பட்ட பாகத்தை யாம் உண்ட அதிபாதகம் இன்னும் முடிந்திலது. அதனேடு உம்மைப் பொருத அதிபாதகமுங் கூடிற்று. எம்பரமட்டாவே, நீர் பெருங்கருணையினல் இப்போது அடி

யேங்களைத் தண்டித்து, அப்பாவங்களைத் தொலைத்தருளினீர். ஆதலால், அடியேங்களுக்கு நீர் செய்த திருவருளுக்கு நாங்கள் செய்யுங் கைம்மாறு யாது! எங்களை உமக்கு அடியர்களாகத் தருவேமெனின், அநாதிமல பெத்த பசுக்களாகிய நாங்கள் அநாதிமலமுத்த பதியாகிய உமக்கு என்றும் அடிமைகளேயன்றே! அவ்வாறுக, அடியேங்களைப் புதிதாகத் தருவது எங்ஙனம்! சிறுவர்கள் தங்களைத் தங்கள் தந்தையர்களுக்குக் கொடுத்தல் தகுதியாமா! அறிவில்லாதேம் செய்த பிழைகளனைத்தையும் திருவுளத்திற்கொள்ளாது பொறுத்தருளும்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

முருகக்கடவுள் அதுகேட்டு, ''நம்மை நீங்கள் முன்னே ஒரு பாலன் என்று நினைந்து பொருதீர்கள். நமது வன்மையையும் பெருமையையும், இன்னும் நீங்கள் உணரும்வண்ணம், காட்டுவேம்'' என்று திருவாய் மலர்ந்து, எட்டுத்திக்குக்களும், பதினான்குலகங்களும், எட்டுமலைகளும், ஏழு கடல்களும், புறவேலியும், சக்கரவாளகிரியும், வெவ்வேறண்ட நிரைகளும், சருவான்மாக்களும், பிரம விட்டுணு ருத்திரர்களும் அடங்கிய பாரமேசுரரூபத்தைக் கொண்டருளினார். பாதாளமெல்லாம் திருவடிகளும், திகந்தமெல்லாம் திருப்புயங்களும், ஆகாயமெல்லாம் திருமுடிகளும், சோமசூரியாக்கினி யெல்லாம் திருக்கண்களும், நடுவெல்லாம் திருமேனியும், வேதங்களெல்லாம் திருவாயும், ஞானமெல்லாம் திருச்செவிகளும், பக்கம் பிரம விட்டுணுக்களும், சிந்தை உமாதேவியாரும், ஆன்மாச் சிவபெருமானுமாக இவ்வாறு முருகக்கடவுள் விசுவரூபங்கொண்டு நிற்ப, இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் ''இஃதற்புதம் இஃதற்புதம்'' என்று வணங்கி, ஆகாயத்தை நோக்கினார்கள். திருமேனி முற்றையும் அதனழகையுங்காணாது, முழந்தாள்வரையும் அரிதாகக் கண்டு புகழ்ந்து, ''ஞானானந்தவடிவாகிய முழுமுதற்கடவுளே, அடியேங்கண்முன் நீர் கொண்டருளிய விசுவரூபத்தை முற்றும் தரிசித்திலேம். அடியேங்கள் முற்றும் தரிசிக்கும்வண்ணம் காட்டியருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். பெருங்கருணைக்கடலாகிய சுப்பிரமணியக்கடவுள் திருவுளமிரங்கித் தேவர்களுக்குத் திவ்விய நேத்திரத்தைக் கொடுத்து, அநந்த கோடி சூரியர்கள் திரண்டாற்போலப் பேரொளியை வீசிநின்ற தமது பாரமேசுரரூபத்தைக் காட்டியருளினர். தேவர்கள் அறுமுகக்கடவுளுடைய திருவுருவமுற்றையும், அடிமுதன் முடிகாறும் அவரது திருவருளினாலே தரிசித்து, அளப்பில்லாத அண்டங்களும், ஆன்மாக்களும், திரிமூர்த்திகளும் அவ்வடிவத் திருப்பக்கண்டு, ஆனந்த பரவசர்களாய் வணங்கித் துதித்துநின்று ''எம்பெருமானே, பிருதிவியண்ட முதலிய அண்டங்களும், அங்கங்குள்ள தேவர்களும், உயிர்ப்பொருள்களும், உயிரில்பொருள்களும், பிரமா விட்டுணு உருத்திரன் என்னும் திரிமூர்த்திகளும் உமது திருமேனியில் இருப்பக்கண்டேம். உமது திருமேனியோ அகிலமும் இருப்பது! விசுவமெல்லாம் நீரேயாய் இருக்கும் உண்மையை அடியேங்கள் இந்நாள்

காறும் அறிந்திலேம். நீரே வந்து அறிவித்தமையால் இப்பொழுதறிந்தேம். உமது திருமேனியேயன்றிப் பிறிதொரு பொருளாயுங்காணேம். உமது திருவடிவத்தைச் சிறியேங்கள் காணவல்லமா! ஒரு பிரமன் இறந்தபோது விட்டுணு பேருருவங்கொண்டு திருப்பாற்கடலிலே துயில்செய்யும் அகந்தையை ஒழிக்கும்வண்ணம் சிவபெருமான் அண்டங்களெல்லாம் ஆபரணங்களாக ஒரு திருமேனி கொண்டருளினர் என்னுந் தன்மையை, எழ்பெருமானே, உமது திருமேனியிற் கண்டேம். உமது திருவுருவம் பிரமாவும் விட்டுணுவும் பலகாலமுந்தேட அவர்களுக்குத் தோன்றாது அக்கினிவடிவாய் நின்ற சிவபிரானது திருவுருவமேபோலும். எம்பரமபிதாவே, இதனை யாவரும் அறிகிலர். எங்களைப்போல உமது திருவருளைப் பெற்று அடியையும் முடியையும் தெரிந்தவர் யாவர்! விட்டுணுவும் பிரமாவும் உலகத்தோடும் ஒருவரை ஒருவர் விழுங்கி உந்தியாலும் முகத்தாலும் தோற்றுவித்து இருவரும் மாறுபடும்பொழுது எடுத்த பேருருவங்கள் நீர் கொண்டருளிய திருவுருவத்துக்கு மிகச் சிறியனவேயாம். ஆதலால் எம்பிரானே, நீர் அருவமும் உருவமுமாய் நின்ற ஏகநாயகரேயாகும். அடியேங்கள்செய்த தவத்தினாலே சூரன் முதலிய அவுணர்களைக் கொன்று அடியேங்களுடைய துன்பத்தை நீக்கும்பொருட்டுப் பாலராய்த் திருவவதாரஞ் செய்தருளினீர். எவ்வுருவங்களுக்கும் ஓரிடமாயுள்ள உமது திருவுருவத்தைத் தரிசித்துச் சிறப்படைந்தேம். இருவினைப் பயன்களை நுகர்தற்கெடுத்த சரீரத்துன்பம் நீங்கிவிடுவேம். இனி நாங்கள் பிறவித்துன்பமடையாது நிரதிசய முத்தியின்பதை அடைவேம்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். பின்பு முருகக்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மனம் மிக வெருவச் சரீரம் அலமர மயங்கி, ''எம்பெருமானே, உமது திருவுருவம் அளப்பில்லாத ஒளியையுடையது. இனிப் பார்த்தல்கூடாது. கண்களெல்லாம் ஒளியிழந்தன. அன்றியும் இதன் பெருமையை நோக்கி அஞ்சுகின்றேம். அடியேங்கள் உய்யும்வண்ணம், முன்னைத் திருவுருவங்கொண்டு தோன்றியருளுக'' என்று பிரார்த்தித்தார்கள்.

முருகக்கடவுள் தமது விசுவரூபத்தை ஒழித்து, ஆறுதிருமுகங்களோடும் முன்னைவடிவங்கொண்டு தோன்ற, இந்திரன் வணங்கித் துதித்து, ''பெருங்கருணைநிதியே, சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று. அடியேனும் தேவர்களும் தொண்டுசெய்யச் சுவர்க்கத்தை அரசு செய்துகொண்டிருத்தல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தான். தம்மை வழிபடும் அடியார்களுக்கு அவரவர் வேண்டியவாறே இம்மை மறுமை வீடுகளைக் கொடுத்தருளும் பெருங்கருணைக் கடலாகிய அறுமுகக்கடவுளுக்கு இந்திரன் தன்னரசைக் கொடுப்பான் சொல்லிய வாசகம் அக்கினிதேவனுக்கு ஒருவன் ஒருதீபங் கொடுக்கச் சங்கற்பித்தமைபோலும். சுப்பிரமணியக் கடவுள் இந்திரனை நோக்கி நகைத்து, ''நீ நமக்குத் தந்த அரசை நாம் உனக்குத் தந்தேம். நீங்கள் சேனைகளாக நாமே சேனாதிபதியாகி அசுரர்

களெல்லாரையும் கொல்வேம். வருந்தாதொழி'' என்று அருளிச்செய்தார். இந்திரன் அதுகேட்டுத் தேவர்களோடும் மகிழ்ச்சியுற்று, முருகக் கடவுளை நோக்கி, ''சுவாமீ, இவ்வண்டத்துள்ள மலைகள், கடல்கள், உலகங்கள், உயிர்கண முதலியனவெல்லாம் இந்நாளில் உம்மாலே முறை பிறழ்ந்தன. அவைகளையெல்லாம் முன்புபோல நிறுவியருளும்'' என்று பிரார்த்தித்தான். முருகக்கடவுள் திருநகைசெய்து, ''இவ்வண்டத்தில் நம்மாலே முறை பிறழ்ந்தனவெல்லாம் முன்னை நிலையை அடையக் கடவன'' என்று திருவாய்மலர்ந்தருள, அவையெல்லாம் முன்னைநிலையை அடைந்தன. யாவரும் அதுகண்டு, அற்புதமடைந்து நின்றார்கள்.

அப்பொழுது இந்திரன் முருகக்கடவுளை வணங்கி, ''அநாதிபகவரே, வேதசிரசிலே விளங்காநின்ற உம்முடைய திருவடிகளைப் பூசிக்க விரும்புகின்றேம். அது செய்யும்வண்ணம் திருவருள்புரிக'' என்று வேண்டினன். முருகக்கடவுள் அதற்கியைந்து, தேவர்கள் பின்தொடர நடந்து, மகாமேருமலையை நீங்கி, திருக்கைலாசமலையின் பக்கத்துள்ள ஒரு மலையை அடைந்தார். அப்பொழுது இந்திரன் தேவதச்சனை நினைக்க, அவன் இந்திரன் முன்வந்து, கைதொழுதுகொண்டு நின்றான். இந்திரன் அவனை நோக்கி, ''நீ இங்கே ஒரு திருக்கோயில் செய்யக்கடவாய்'' என்றான். தேவதச்சன் அங்கே ஒரு திருக்கோயிலும், அதனுள்ளே ஒரு திவ்விய சிங்காசனமுஞ் செய்தான். தேவர்கள் பலர் இந்திரனுடைய ஏவலினாலே, திருமஞ்சனம், சந்தனம், நறுமலர், தூபம், தீபம் முதலிய பூசோபகரணங்களெல்லாம் கொண்டுவந்தார்கள். அப்பொழுது இந்திரன் அறுமுகக்கடவுளை வணங்கி, ''சுவாமீ, உம்முடைய திருவடிகளை அடியேங்கள் பூசித்து உய்யும்பொருட்டு இத்திருக்கோயிலினுள் எழுந்தருளுக'' என்று பிரார்த்தித்தான். வேதப்பொருளாகிய சுப்பிரமணியக்கடவுள் அதுகேட்டு, தேவர்களெல்லாரும் துதிப்பத் திருக்கோயிலினுள்ளே புகுந்து, திவ்விய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினார். அப்பொழுது இந்திரனும் தேவர்களும் ''ஞானநாயகரே, அடியேங்கள் உமக்குச் சேனையாக நீர் சேனாபதியாகுக'' என்று ஆகாயகங்காசலத்தினாலே திருமஞ்சனமாட்டி, செம்பட்டாடை சாத்தி, சந்தனக் குழம்பு மட்டித்து, திவ்வியாபரணங்கள் அணிந்து, திருமாலைகள் சூட்டி, தூபதீபங்காட்டி, பூசைசெய்து வலஞ்செய்து, வணங்கித் தோத்திரம் பண்ணினார்கள். அதன்பின் முருகக்கடவுள் அங்குநின்று மறைந்து, திருக்கைலாசமலையை அடைந்தார். இந்திரனும் தேவர்களும் அற்புதத்துடன் அம்மலையை நீங்கினார்கள். கந்தசுவாமி தேவர்கள் பூசிப்ப எழுந்தருளியிருந்தமையால், அம்மலை கந்தமலை யென்பெயர்பெற்றது. கந்த

வெற்பை நீங்கி, இந்திரன் மஹேவதி நகரத்தை அடைந்தான்; மற்றைத் தேவர்களெல்லாரும் தங்கள்தங்கள் தானத்திற்சென்று, முன்போலிருந்தார்கள். திருக்கைலாசமலையை அடைந்த முருகக்கடவுள், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதர்களும்சேவிப்ப, அங்கெழுந்தருளியிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

## தகரேறுபடலம்.

முருகக்கடவுள் திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருக்கும் பொழுது, நாரதமுனிவர், சிவபெருமானுக்குப் பிரீதியாம்வண்ணம், பூமியிலே தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களுஞ் சூழ, ஒரு யாகஞ்செய்தார். அந்த யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடாத் தோன்றியது. யாகத்துள்ளோர் யாவரும் அதுகண்டு, அஞ்சியோடினார்கள். ஓடினவர்கள் யாவரையும் பூவுலகத்தினும் வானுலகத்தினும் துரந்து சென்று, சிலரைத் தாக்கிக் கொன்றது. எங்கெங்குந் திரிந்து மிக்க கோபத்தோடும் உயிர்களுக்கு நாசம் விளைத்தது. அப்பொழுது நாரதமுனிவரும் மற்றை இருடிகளும் தேவர்களும் ஓடித் திருக்கைலாசமலையை அடைந்தார்கள். அவர்கள் தாங்கள் திருமலைமீது ஏறிவரும்பொழுது, அறுமுகக்கடவுள் இலக்கத்தொன்பது வீரர்களோடு கூடி விளையாடற்கண்டு, "நாம் சிவபெருமானிடத்துச் செல்லவேண்டாம். நமது துயரத்தை நீக்கும்பொருட்டுக் குமாரசுவாமியே ஈண்டு நம்மெதிரே எழுந்தருளி வந்தார். இவர் சிறுவரல்லர். இந்திரனையும் தேவர்களையும் கொன்று மீண்டெழுவித்தவர். நமது குறையை முடித்தல் இவருக்கு எளிது. நிகழ்ந்ததனை இவருக்கு விண்ணப்பஞ்செய்வேம்" என்று தங்களுள்ளே தெளிந்துகொண்டு, எம்பெருமான் றிருமுன் சென்று, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கித் துதித்தார்கள். கந்தசுவாமி அவர்களுடைய துயரத்தைக் கண்டு, "நீங்கள் மிக வருந்தினீர்கள். நிகழ்ந்தது யாது? சொல்லுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினர். இருடிகளும் தேவர்களும் அதுகேட்டு, "அடியேங்கள் வேதவிதிப்படி ஒரு யாகஞ் செய்தேம். யாகாக்கினியினின்றும் ஓராட்டுக்கடா எழுந்து, எங்களைக் கொல்ல நினைந்தது. அவ்வாடெழுங் கிளர்ச்சியைக் கண்டு, அடியேங்கள் யாகத்தை விட்டு இங்கே ஓடிவந்தேம். அது கோபத்தோடு துரந்து சிலரைக் கொன்றது. பூவுலகத்தினும் வானுலகத்தினும் அதனால் எண்ணிலுயிர்கள் இறந்தன. இன்னும் ஒரு நாழிகையினுள்ளே எல்லாவுயிர்களும் இறந்துவிடும். அவ்வாட்டின் வன்மையை அடக்கி, அடியேங்களுடைய அச்சத்தை நீக்கி, யாகத்தை முற்றுவித்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தார்கள்.

முருகக்கடவுள் அவர்கண்மீது திருவருணோக்கஞ்செய்து, ''அஞ்சா தொழிமின்கள் அஞ்சாதொழிமின்கள்'' என்று கையமைத்து, வீரவாகு தேவரைநோக்கி, ''யாகாக்கினியினின்றுந் தோன்றி இவர்கள் யாகத்தை அழித்து உயிர்களைக் கொன்று கொன்று எங்குந்திரியாநின்ற ஆட்டுக்கடாவை நீ விரைந்து சென்று பிடிததுக்கொண்டுவா'' என்று பணித்தருளினர். வீரவாகுதேவர் அத்திருப்பணியைச் சிரமேற்கொண்டு, முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்துக்கொண்டு, திருக்கைலாசமலையை நீங்கி, ஆட்டுக்கடாவைத் தேடுவாராயினர். பூமியினும் கீழேழுலகங்களினும் தேடிக் காணுமையால் மேலுலகங்களிலே தேடி, பிரமலோகத்தின் முன் அவ்வாட்டுக்கடாச் செல்லக்கண்டு, அது அஞ்சும்வண்ணம் ஆர்த்து விரைந்துசென்று, அதன் கோட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டு திருக்கைலாசமலையை அடைந்து, முருகக்கடவுடிருமுன் லிடுத்து, வணங்கி நின்றார். முருகக்கடவுள் தேவர்களையும் இருடிகளையும் நோக்கி, ''ஆட்டுக்கடா நம்மிடத்து வந்துவிட்டது. இனி நீங்கள் வருந்தாது பூமியிற்சென்று நீங்கள் தொடங்கிய யாகத்தை முடியுங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அவர்கள் அதுகேட்டு, ''எம்பெருமானே, அடியேங்கள் உய்யும்பொருட்டு இவ்வாட்டுக்கடாவை வாகனமாகக் கொண்டருளும்'' என்று பிரார்த்தித்தார்கள். முருகக்கடவுள் ''நாம் இதனை வாகனமாகக் கொள்வேம். நீங்கள் போய் யாகத்தை முடியுங்கள்'' என்று அருளிச்செய்தார். நாரதர் முதலாயினோர் யாவரும் முருகக்கடவுளை வணங்கிக்கொண்டு பூமியிற்சென்று, யாகத்தை முடித்தார்கள். அவர்கள் செய்த தவத்தினாலே முருகக்கடவுள் அன்றுதொட்டு அவ்வாட்டுக்கடாவைத் தமக்கு வாகனமாகக் கொண்டருளினர்.

திருச்சிற்றம்பலம்.

## அயனைச்சிறைபுரிபடலம்.

சுப்பிரமணியக்கடவுள் ஆட்டுக்கடாமேலேறி எவ்வுலகங்களிலும் உலாவித் திருவிளையாடல் செய்துகொண்டு திருக்கைலாசமலையில் எழுந்தருளியிருக்கும் நாள்களில், ஒருநாளிலே பிரமதேவர் முதலாயினோர் திருக்கைலாசமலையிற் சென்று, சிவபெருமானை வணங்கித் திருவருள் பெற்றுக்கொண்டு, மீண்டு திருவாயிலை அடைந்தார்கள். அடையும்பொழுது, அறுமுகக்கடவுள், அச்செம்பொற்கோயிலின் முதற்கோபுரத்துள்ளே இலக்கத்தொன்பது வீரரும் சூழ்ந்து துதிப்ப, எழுந்தருளியிருந்தார். அம்முருகக்கடவுள், சிவபெருமானை வணங்கிக்கொண்டு மீளும் தேவர்களுள்ளே தலைவராகிய பிரமதேவரை நோக்கி, ''இங்கே வா'' என்று விளிக்க, பிரமதேவர் சென்று, முருகக்கடவுளை நமஸ்கரியாது அஞ்சலிசெய்தார். முருகக்கடவுள், பிரமதேவருடைய உள்ளக்கருத்தை நோக்கி, ''பிரமனே, இரு'' என்று சொல்லி இருத்தி, ''நீ யாதுதொழில் செய்கின்றாய்'' என்று வினவ, பிரமதேவர் ''சிவபெருமானுடைய ஆணையினாலே நான் படைத்தற்றொழில் செய்கின்றேன்'' என்றார். முருகக்கடவுள் அது கேட்ட

வுடனே திருமுறுவல் செய்து, ''நீ படைத்தற்றொழில் செய்வையாயின், வேதங்களெல்லாம் உனக்கு வருமா'' என்று விளைவ, பிரமதேவர், ''ஆதி காலத்தில் என்னைப் படைத்தருளிய சிவபெருமான் வேதாகமங்களைச் செய்து, அவற்றுட் சிலவற்றை யான் உய்யும்பொருட்டு எனக்கு உபதேசித்தருளினர். அவற்றை நான் அறிவேன்'' என்றார். முருகக்கடவுள் ''பிரமனே. அவற்றுள் ஓரிருக்குச் சொல்லக்கடவாய்'' என்று திருவாய் மலர்ந்தருள, பிரமதேவர் வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் பிரணவதத்தை முன்னே சொல்லிக்கொண்டு வேதஞ்சொல்லத் தொடங்கினர். தொடங்கலும், அப்பிரணவத்தைத் தம்முடைய திருமுகங்களுள் ஒன்றுகவுடைய முருகக்கடவுள் திருநகைசெய்து, ''நில். நீ முன் சொல்லிய 'ஓம்' என்னுஞ் சொற்குப் பொருள் யாது! சொல்லக்கடவாய்'' என்றார். உடனே பிரமதேவர் பிரணவத்தின் பொருள் தமக்கு விளங்காமையால், கண்களை விழித்து நாணமுற்று விக்கித் திகைத்திருந்தார். சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பீடமாயும், மற்றைத் தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப்பிரமமாயும் உள்ள பிரணவத்தின் பொருளை ஆராய்ந்தார். பிரணவத்தைச் சொல்லுதன் மாத்திரமன்றி அதன்பொருளை அறிந்திலர். யாது செய்வார்! சிவபிரானது திருவருளினுல் அதனை முன் பெற்றிலர். அதனுல் மயங்குவாராயினர். அதன் பொருளை யாவர் சொல்ல வல்லவர்! வேதங்களுக்கெல்லாம் முதலினும் இறுதியினும் சொல்லப்படும் ''ஓம்'' என்னும் ஒரெழுத்தின் உண்மைப்பொருளைப் பிரமதேவரும் அறியாது மயங்கினராயின், நாம் இனிச் சிறிதும் அறிந்தனம் என்பது நகையே.

பிரமதேவர் பிரணவத்துக்குப் பொருள் இதுவென்று சொல்லாது மயங்கலும், அறுமுகக்கடவுள் ''இதன்பொருளை அறியாத நீ படைத்தற்றொழில் செய்வது எங்ஙனம்'' என்று சொல்லி, பிரமதேவருடைய நான்கு சிரசுகளும் குலுங்கும்வண்ணம் குட்டி, கீழே விழும்வண்ணம் திருவடியினுல் உதைத்து, தம்முடைய பரிசனரைக்கொண்டு கந்தவெற்பிலே விலங்கு பூட்டிச் சிறையிடுவித்தார். அதன்பின் தாம் கந்தவெற்பிற்சென்று, ஒரு திருமுகமும் நான்கு திருக்காங்களுங்கொண்டு, ஒரு திருக்கரம் செபமாலையும், ஒரு திருக்கரம் கமண்டலமும் தாங்க, மற்றை யிருதிருக்கரங்களும் வரதமும் அபயமுந்தர, பிரமதேவரைப்போலப் படைத்தற்றொழில் செய்துகொண்டிருந்தார். பிரமதேவரைச் சிறையிடுவித்தலும், அவரோடு வந்த தேவர்களெல்லாரும் மனநடுங்கி முருகக் கடவுளைத் தொழுதுகொண்டு, தங்கள் பதங்களை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

# அயனைச்சிறைநீக்கு படலம்.

உயிர்க்குயிராய், பரஞ்சுடராய், வேதமுடிவின் விளங்கும் மெய்ப் பொருளாய், படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழிற்கும் இறைவராய் உள்ள சுப்பிரமணியக்கடவுள் இவ்வாறே அளப்பிலகாலம் படைத்தற்றொழில் செய்துகொண்டிருப்ப, விட்டுணு பிரமதேவரைச் சிறைநீக்குவிக்கக் கருதி, தேவர்களையும் முனிவர்களையும் தம்மிடத்து வரும்வண்ணம் நினைந்தார். அதனை அறிந்து ஆதித்தர்களும், மருத்துவர்களும், வசுக்களும், சத்தமாதர்களும், விஞ்சையர்களும், கருடர்களும், இயக்கர்களும், திக்குப்பாலகர்களும், சந்திரனும், மற்றைக் கிரகங்களும், நக்ஷத்திரங்களும், அகத்தியர் முதலிய முனிவர்களும், பிரமரொன்பதின்மரும், சேடனும், உரகர்களும் வந்தார்கள்.

விட்டுணு அவர்களோடு சென்று, திருக்கைலாசமலையை அடைந்து, திருநந்திதேவர் விடுப்ப உள்ளே போய், தமக்குத் தாமே ஒப்பாகிய சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளை வணங்கி, உபநிடதங்களாலே தோத்திரஞ் செய்துகொண்டு நின்றார். நிற்றலும், சிவபெருமான் அவர் கண்மீது திருவருணோக்கஞ் செய்து, ''நீங்கள் எந்நாளும் இல்லதொரு துயரத்தோடு இன்று நம்மிடத்து வந்தமை யாது'' என்று விளுவியருளினர். அது கேட்ட விட்டுணு வாய்புதைத்து நின்று, ''சருவலோகைக நாயகரே, உம்முடைய திருக்குமாரர் இங்கு வந்த பிரமனைப் பிரணவத்திற்குப் பொருள்கேட்டு, அவன் அஃதறியாது மயங்க, அவனைக் குட்டிச் சிறையிடுவித்து, அவனது படைத்தற்றொழிலுஞ் செய்கின்றார். கருணைக் கடலே, முருகக்கடவுளைப்போலப் பிரமனும் உமக்கு மைந்தனேயன்றே. அவன் ஊழிஞல் அளப்பில்காலம் சிறைப்பட்டு மனநொந்து வாடித் துயருறுகிறான். எம்பெருமானே, அவன் சிறையை நீக்கியருளுக'' என்று விண்ணப்பஞ்செய்தார்.

உடனே கருணைகராகிய பரமசிவன் திருநந்திதேவரை நோக்கி, ''நம்முடைய குமாரனுகிய கந்தன் பிரமனைச் சிறையிடுவித்தான் என்கின்றனர். நீ அவனிடத்து விரைந்து சென்று, நமது வாசகத்தைச் சொல்லி, பிரமனைச் சிறைவிடுவித்து, இங்கு மீளக்கடவாய்'' என்று பணித்தருளினர். திருநந்திதேவர் அத்திருப்பணியைச் சிரமேற்றுங்கி, எம்பெருமானை வணங்கிக்கொண்டு, அளப்பில் கணங்கள் சூழப் போய்க் கத்தவெற்பை அடைந்து, திருக்கோயிலிற் புகுந்து, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடித் தாமரைகளை வணங்கி எழுந்து அஞ்சலிசெய்து துதித்துக்கொண்டு, வாய் புதைத்து நின்று, ''சுவாமீ, பிரமனைச் சிறைநீக்கும்பொருட்டு உமக்குச் சொல்லும்வண்ணம் எம்பெருமான் அடியேனை இங்கு விடுத்தருளினர். அவனைத் தடையின்றிச் சிறைநீக்கியருளுக. பிரணவப்பொருள் அவன் சொல்லுதற்கு எளியதா'' என்று சொன்னர். சொல்லுமுன், முருகக்கடவுள் கோபித்து, ''நான் பிரமனைச் சிறைநீக்கேன். நீ நிற்பாயாயின் உன்னையும் சிறையிடுவிப்பேன். விரைந்து போய்விடு'' என்றார். உடனே

திருநந்திதேவர் வேறொன்றும் பேசாது, அஞ்சி நடுநடுங்கி, முருகக்கட வுளை வணங்கிக்கொண்டு, மீண்டு திருக்கைலாசமலையை அடைந்து, எம் பெருமான் றிருமுன் சென்று, வணங்கி நின்று, முருகக்கடவுள் திருவாய் மலர்ந்த வாசகத்தை விண்ணப்பஞ்செய்தார்.

அது கேட்டலும் எம்பெருமான் திருநகை செய்து, சிங்காசனத்தி னின்றும் விரைந்தெழுந்து, திருக்கோயிலை நீங்கி, இடபவாகனமீது ஏறி யருளினர். விட்டுணுவும் தேவர்கள் முனிவர்கள் முதலாயினோரும் தொழுதுகொண்டு எம்பெருமான் பின்னே சென்றார்கள். பூதர்கள் துதி த்துக்கொண்டு பக்கத்தே சூழ்ந்தார்கள். சிவபெருமான் இவ்வாறே இடப மூர்ந்து திருக்கைலாசமலையை நீங்கி, கந்தவெற்பை அடைந்து, முருகக் கடவுளது திருக்கோயிலுக்கு முன் சென்றவுடனே இடபவாகனத்தினின் றும் இறங்கி, உள்ளே புகுந்தருளினர். அது கண்டவுடனே குமாரசுவாமி விரைந்து இருக்கைவிட்டெழுந்து, எதிர்கொண்டு வணங்கி, அழைத்துக் கொண்டுபோய், தமது திவ்விய சிங்காசனத்தின்மேல் இருத்தி, ''உயிர்க் குயிராகிய எம்பெருமானே, நீர் இங்கு எழுந்தருளிவந்த காரியம் யாது'' என்று விண்ணப்பஞ்செய்தார். சிவபெருமான் ''நம்புதல்வனே, நீ பிரம னைச் சிறையிடுவித்தாய். நாம் அதனை நீக்கக்கருதி வந்தேம். அவனைச் சிறைவிடக்கடவாய்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். எம்பெருமான் மிக்க அன்போடு திருவாய்மலர்ந்தருளிய இவ்வின்சொல்லைக் கேட்ட பொழுது, முருகக்கடவுள் தமது திருமுடியை அசைத்து, ''ஓரெழுத்தா கிய பிரணவத்தின் பொருளை அறியாதவன் உலகத்தைப் படைப்பன் என்பது பேதைமையே. அவன் வேதங்கள் வல்லனென்பதும் அதுபோலும். உமது திருவருள் அழகிது அழகிது. வேதத்துக்கு முன்னின்ற ஓரெழுத் தின் பொருளை அறியமாட்டாதவன் உமக்குப் பூசைசெய்யவும், நீர் படைத் தற்றொழிலாகிய பாரத்தை அவன்மீது சுமத்தினீர். இப்படைத்தற்றொழி லைப் பெற்றமையால், பிரமன் யாவரையும் சிறிதாயினும் மதிக்கின்றி லன். உம்மை அவன் வழிபடினும், அகந்தை சிறிதும் நீங்கிற்றிலன். ஆதலால், யான் அவனைச் சிறைநீக்கேன்'' என்றார். அப்பொழுது பெருங் கருணைநிதியாகிய கைலாசபதி ''மைந்தனே, உன் செய்கை என்னை? நாம் பணித்தவாறே நந்தி வந்து பிரமனைச் சிறைநீக்கும்வண்ணம் சொல்லவும் நீ கேட்டிலை. நாம் வந்து சொல்லினும் கேட்கின்றிலை. எதிர்மறுத்துப் பேசுகின்றாய்'' என்று சற்றே கோபமுடையவர் போலத் திருவாய்மலர்ந் தருளினர். முருகக்கடவுள் சிவபிரானதியல்பை நோக்கி, வணங்கிநின்று, ''எம்பெருமானே, உமக்குத் திருவுளம் இதுவாயின், பிரமனை விரைந்து சிறைநீக்கித் தருவேன்'' என்று விண்ணப்பஞ்செய்ய, சிவபெருமான் அவர்மீது திருவருள் சுரந்தார். சண்முகக்கடவுள் தமது பக்கத்தினின்ற பூதர்களிற் சிலரை நோக்கி, ''நீங்கள் விரைந்து சென்று பிரமனைச் சிறை நீக்கி நம்முன் கொண்டுவாருங்கள்'' என்று பணித்தருள, அவர்கள்போய், பிரமதேவரைச் சிறைவிடுத்துக் கொண்டுவந்து, குமாரசுவாமி திருமுன் விடுத்தார்கள். விடுத்தலும், முருகக்கடவுள் பிரமதேவரைக் கையிலே பிடித்து எம்பெருமான் றிருமுன் விடுத்தார்.

உடனே பிரமதேவர் எம்பெருமானே மெய்யன்போடு வணங்கி, வெள்கி நின்றார். எம்பெருமான் அவர்மீது திருவருணோக்கஞ்செய்து, ''நீ நெடுங்காலம் சிறையிருந்து இளைத்தனைபோலும்'' என்று திருவாய்மலர்ந்தருள, பிரமதேவர் ''கருணைநிதியே, உம்முடைய திருக்குமாரர் அடியேனுக்குச் செய்த இத்தண்டம் தீதன்று. சிறியேனுக்கு மெய்யுணர்வைத் தந்து, யான் என்னும் அகந்தையை ஓட்டி, தீவினைகளையெல்லாங் களைந்து, சித்த சுத்தியை விளைத்தது'' என்று விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது கைலாசபதி பிரமதேவரை நோக்கி, ''நீ இன்றுதொட்டு உன் படைத்தற்றொழிலை முன்போலவே செய்துகொண்டிருக்கக்கடவாய்'' என்று அருளிச்செய்தார். அதன்பின் முருகக்கடவுளை நோக்கித் திருமுறுவல் செய்து திருவருள்சுரந்து, ''மைந்தனே, வா'' என்று திருவாய்மலர்ந்து, அவரைத் தமது திருக்கரத்தினால் எடுத்து, திருத்தொடைமீது இருத்திக்கொண்டு, உச்சிமோந்து, தமது அருமைத் திருக்கரத்தினாலே தழுவி, ''பிரமனும் அறியாத பிரணவத்தின் பொருள் உனக்கு வருமா? வருமாயிற் சொல்வாயாக'' என்று திருவாய்மலர்ந்தருளினார். அப்பொழுது முருகக்கடவுள் ''முற்றுணர்ந்த முழுமுதற்கடவுளே, உலகமெல்லாம் பெற்றருளிய மாதாவாகிய எம்பெருமாட்டிக்கு நீர் பிறரறியாவண்ணம் உபதேசித்தருளிய பிரணவப்பொருளை இரகசியமாகச் சொல்வதன்றி யாருங் கேட்பச் சொல்லலாமா'' என்று விண்ணப்பஞ்செய்தார். செய்தலும், எம்பெருமான் திருநகைசெய்து, ''மைந்தனே, நமக்கு இரகசியமாகச் சொல்வாயாக'' என்று திருவாய்மலர்ந்து, திருச்செவி கொடுப்ப, சண்முகக்கடவுள் எம்பெருமானுக்குப் பிரணவப்பொருளைச் சொன்னார். அது கேட்டு ஞானநாயகராகிய கைலாசபதி திருவுளமகிழ்ந்து, திருவருள்செய்து, குமாரசுவாமியை அங்கிருக்கும்வண்ணம் பணித்து, இடபவாகனமேற்கொண்டு, முன்போல யாவரும் துதிப்பச் சென்று, திருக்கைலாசமலையை அடைந்து, பிரமவிட்டுணுக்களுக்கும் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் விடை கொடுத்து, தமது திருக்கோயிலிற் புகுந்து வீற்றிருந்தருளினார்.

சுப்பிரமணியக்கடவுள், கந்தவெற்பினுள்ள திருக்கோயிலினுள்ளே திவ்விய சிங்காசனத்தின் மீதேறி, இலக்கத்தொன்பது வீரரும் பூதர்களும் சேவிப்ப, எல்லையில்லாத பெருங்கருணையோடும் எழுந்தருளியிருந்தார். முற்றுணர்ந்த பரமாசாரியராகிய அம்முருகக்கடவுள் தம்மை மெய்யன்போடு விதிப்படி வழிபடலுற்ற நன்மாணாக்கராகிய அகத்திய முனிவருக்குப் பிரணவப்பொருளையும், வேத சிவாகமங்களையும், உலகமெல்லாம் உய்யும்வண்ணம், உபதேசித்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

## விடைபெறு படலம்.

முருகக்கடவுள் கந்தவெற்பில் எழுந்தருளியிருக்கும்பொழுது, விட்டுணுவின் புதல்வியர்களாகிய அமிர்தவல்லி சுந்தரவல்லி என்னும் இருவரும் முருகக்கடவுளுக்குப் பத்தினிகளாக விரும்பி, அவரைக் குறித்துச்

சரவணப்பொய்கையில் அருந்தவஞ்செய்தார்கள். முருகக்கடவுள் அதனை அறிந்து, கந்தவெற்பை நீங்கிச் சரவணப்பொய்கையிற் சென்றார். அது கண்ட கன்னியரிருவரும் அஞ்சி வணங்கி நின்று துதிக்க, முருகக்கடவுள் அவர்களை நோக்கி, ''நீங்கள் யாதுவிரும்பித் தவஞ்செய்தீர்கள்'' என்று வினவியருளினர். கன்னியரிருவரும் கைகுவித்து நின்று, ''எம்பெருமானே, நீர் அடியேங்களைக் கல்யாணஞ் செய்துகொள்ளும்பொருட்டுத் தவஞ் செய்தேம். திருவருள் செய்க'' என்று விண்ணப்பஞ்செய்தார். அறு முகக்கடவுள் அவர்களை நோக்கி, ''மூத்தாளாகிய அமிர்தவல்லியே, நீ இந்திரனுக்கு மகளாய் வளரக்கடவாய். இளையாளாகிய சுந்தரவல்லியே, நீ பூமியிலே சிவமுனிக்குப் புதல்வியாய் வேடரிடத்து வளரக்கடவாய். இவ்வாறு வளரும்பொழுது, நாம் வந்து உங்களைக் கல்யாணஞ் செய்து கொள்வேம்.போங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருள, கன்னியரிருவரும் கைதொழுது விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள்.

அமிர்தவல்லி ஒரு குழந்தைவடிவங்கொண்டு மேருமலையில் இருந்த இந்திரன்முன் சென்று, ''அரசனே, யான் உன்னைடு தோன்றிய உபேந் திரனுடைய மகள். ஆதலால், என்னை நீ வளர்க்கக்கடவாய்'' என்றாள். இந்திரன் அவளை நோக்கி, ''தாயே, இங்கு வா'' என்று சொல்லி, ஐராவதத்தை அழைத்து, ''இவள் நம்முடைய மகள். இவளை நீ அன் போடு வளர்க்கக்கடவாய். இவள்பொருட்டு இனி நமக்கு அளப்பில்லாத சிறப்புகளுண்டாகும்'' என்றான். ஐராவதம் அவளைப் பிடர்மேற் கொண்டு சென்று, மனைவதியில் இருத்தி வளர்த்தது. அதனால் அவள் தெய்வயானை எனப் பெயர்பெற்று, குமாரசுவாமியைத் தியானித்துக் கொண்டிருந்தாள். சுந்தரவல்லி தொண்டைநாட்டினுள்ள வள்ளிமலை யிலே தவஞ்செய்துகொண்டிருந்த சிவமுனிவருக்கு மகளாகும்பொருட் டுச் சென்றாள்.

சுப்பிரமணியக்கடவுள், விட்டுணுவின் புதல்வியிருவருக்கும் வரங் கொடுத்தபின், கந்தவெற்பை அடைந்து, பெருங்கருணையோடும் அங்கெ ழுந்தருளியிருந்தார். சிலநாளாயபின், இலக்கத்தொன்பது வீரர்களும் பூதங்களும் சூழத் திருக்கைலாசமலையை அடைந்து, தாய் தந்தையிரு வரையும் வணங்கிக்கொண்டு, அவர்களுக்கு நடுவே எழுந்தருளியிருந்தார்.

அறுமுகக்கடவுள் இவ்வாறு எழுந்தருளியிருக்கும்பொழுது, இந்தி ரன் முதலிய தேவர்கள் தங்கள் குறையைச் சொல்லி, பிரமதேவரையும் விட்டுணுவையும் முன்கொண்டு திருக்கைலாசமலையை அடைந்தார்கள். திருநந்திதேவர் ''நில்லுங்கள்'' என்று அவர்களைத் தடுக்க, அவர்கள் தளர்ந்து, பலநாட் பெருந்துயரத்தோடு நின்றார்கள். அவ்வாறு நின்ற பிரமவிட்டுணு முதலிய தேவர்கள் ஒருநாள் திருநந்திதேவரை வணங்கித் துதித்து, அவருக்குத் தங்கள் துயரத்தை விண்ணப்பஞ்செய்தார்கள். அதுகேட்ட திருநந்திதேவர் திருவுளமிரங்கி, ''இனி உங்கள் கவற்சியை விடுங்கள். யான் எம்பெருமான் றிருமுன் சென்று, உங்கள் குறையை விண்ணப்பஞ்செய்து, உங்களை விரைவில் அங்கே கொண்டுபோய் விடு வேன். இங்கிருங்கள்'' என்று சொல்லிக்கொண்டு, உள்ளே புகுந்து, சிவ

பெருமானே வணங்கி நின்று, ''சுவாமீ, பிரமா விட்டுணு இந்திரன் முத லிய தேவர்களெல்லாரும் திருக்கோயிலின் முதற்கடைவாயிலின் நிற்கின் றார்கள்'' என்று விண்ணப்பஞ் செய்தார். கருணைநிதியாகிய கைலாசபதி ''அவர்களெல்லாரையும் நம் முன்னே அழைத்துக்கொண்டு வா'' என்று பணித்தருள, திருநந்திதேவர் மீண்டுசென்று, ''எல்லீரும் வாருங்கள்'' என்று அருளிச்செய்தார்.

உடனே தேவர்களெல்லாரும் திருக்கோயிலினுள்ளே விரைந்து சென்று, கிருபாசமுத்திரமாகிய சிவபெருமானே வணங்கினர்கள். அதற் குள், இடருறு மனத்தினராகிய இந்திரன் ''அருட்சத்தியாகிய உமாதேவி யாரோடும் எழுந்தருளியிராநின்ற முதற்கடவுளே, சிறியேங்கள் எண்ணில் லாத யுகங்களாகச் சூரன் முதலிய அசுரர்களால் வருந்தி ஒடுங்கினேம். அடியேனுடைய புதல்வனாகிய சயந்தனும் தேவர்களும் அரம்பையர்களும் சூரனுடைய நகரத்திலே சிறையிலிருக்கின்றார்கள். சுவர்க்கலோகம் அசுரர் களால் அழிந்தது. இவையெல்லாம் அடியேன் விண்ணப்பஞ்செய்தல் வேண் டுமா! முற்றறிவுடைய பதிப்பொருளாகிய நீர் இவையெல்லாம் அறிவீரே. முன்னே அடியேன் தவஞ் செய்தபொழுது, நீர் எழுந்தருளிவந்து, 'நம்மி டத்தே ஒரு குமாரன் பிறந்து சூரன் முதலிய அசுரர்களைக் கொன்று உங்க ளைக் காப்பான்' என்று திருவாய்மலர்ந்தருளினீரே. அவ்வாறே திருக்குமார ரும் திருவவதாரஞ் செய்திருக்கின்றாரே. இந்நாள்காறும் எங்கள் துய ரத்தை நீக்கத் திருவுளங்கொண்டிலீரே. அடியேங்கள் பவப்பயன் இன் னுந் தொலைந்திலதுபோலும். சூரனுடைய வன்மையைத் தொலைக்க வல்லவர் பிறரில்லை. அடியேன் என்றுயரத்தை உம்மிடத்தன்றி வேறி யாரிடத்துச் சொல்வேன்! யாரை நோவேன்! கடன்டுவே காகத்துக்கு மரக்கலமல்லது பிறிதோரிடம் இன்மைபோல, அடியேங்களுக்கு இத்திருக் கைலாசமன்றிப் பிறிதோரிடமில்லையே. அடியேங்களுடைய துயரத்தை நீக்கும் துணைவர் நீரன்றி ஒருவரும் இல்லை இல்லை. அக்கினியாயினும் அதன்மீது நித்திரை செய்யலாம். நஞ்சாயினும் அதனை உண்ணலாம். பகைவராலே செய்யப்படும் துயரம் ஆற்றரிது ஆற்றரிது! இக்கீழ்மை போதும் போதும்! புதல்வருக்குத் தீதை நீக்கவும் திருவைக் கொடுக்கவும் தாதையரன்றி வேறியாவருளர்! ஆதலால், கருணைநிதியே, இனிச் சிறி யேங்களைக் காத்தருளும் காத்தருளும்'' என்று விண்ணப்பஞ் செய்து வணங்கினன். அப்பொழுது பிரம விட்டுணுக்கள் ''எம்பெருமானே, சூரபன்மன் உயிர்களுக்குச் செய்யும் வருத்தம் எம்மாலே சொல்லுதரிது. இனிச் சிறிதும் தாழ்க்காது இப்பொழுதே அருள்செய்யும்'' என்று வேண் டினர்கள்.

சிவபெருமான் அவற்றைக் கேட்டலும் பெருங்கருணை கூர்ந்து, ''இனி உங்கள் கவற்சியை விடுங்கள்'' என்று அருளிச்செய்து, அங்கெழுந்தருளி யிருந்த அறுமுகக்கடவுளை நோக்கி, ''உலகத்துள்ள உயிர்களுக்குத் துன் பஞ்செய்து தேவருலகத்தை அழித்துக், கெடுதலில்லாத வலிமைகொண் டுற்ற சூரபன்மனை அசுரர்களோடு கொன்று, வைதிகமார்க்கத்தை நிறுவி,

தேவர்களுடைய துன்பத்தை நீக்கி, இந்திரனுக்கு அவனரசைக் கொடுத்து, மீள்வாயாக'' என்று பணித்தருளினர். முருகக்கடவுள் அது கேட்டு, ''எம்பெருமானே, அடியேன் இப்பணியைச் செய்வேன்'' என்று விண்ணப்பஞ்செய்தார். அதன்பின் சிவபெருமான் பதினேருருத்திரர்களைத் திருவுளத்தில் நினைந்தருள, அவர்கள் வந்தார்கள். சிவபெருமான் ''நீங்கள் இவன்கையில் படைக்கலங்களாக இருக்கக்கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்து, அவர்களைப் படைக்கலங்களாக்கி, முருகக்கடவுளுடைய திருக்கரங்களில் கொடுத்தருளினர். பதினேருருத்திரகளும் தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு என்னும் பதினெருபடைக்கலங்களாகி, அறுமுகக்கடவுளுடைய திருக்கரங்களில் வீற்றிருந்தார்கள். பின்பு சிவபெருமான், ஏவியக்கால் ஐம்பெரும்பூதங்களை அழிப்பதும், சருவான்மாக்களையும் ஒருங்கு முடிப்பதும், யாவர்மேல் விடுக்கினும் அவருடைய வன்மையையும் வரங்களையும் கெடுத்து உயிரை உண்பதும், எவ்வெப்படைக்கலங்களுக்கும் நாயகமுமாகிய ஓர் வேலாயுதத்தைச் சிருட்டித்து, முருகக்கடவுளுடைய திருக்கரத்திற் கொடுத்தருளினர். அதன்பின் தாம் ஏவினவற்றைச் செய்து கொண்டு தம்பக்கத்து நின்ற இலக்கத்தொன்பது குமாரர்களை நோக்கி, ''நீங்கள் யாவருக்கும் முதல்வனுகிய இக்குமரனேடு சென்று, அசுரர்களைக் கொல்லக்கடவீர்கள்'' என்று பணித்து, அவர்களுக்குப் பல படைக்கலங்களையும் உதவி, முருகக்கடவுளுக்கு அவர்களைத் துணைப்படைகளாகக் கொடுத்தருளினர். பின்பு அண்டாபரணர், நந்தி, உக்கிரர், சண்டர், அக்கினிநேத்திரர், சிங்கர் முதலிய கணநாதர்களை நோக்கி, ''நீங்கள் இரண்டாயிரம்வெள்ளம் பூதங்களோடு சண்முகனுக்குச் சேனுதிபதிகளாய்ச் செல்லக்கடவீர்கள்'' என்று திருவாய்மலர்ந்து, முருகக்கடவுளுக்கு அவர்களைப் படைத்தலைவர்களாகக் கொடுத்தளினர். ஐம்பெரும் பூதங்களின் வன்மையையும் அங்கங்குள்ள பொருள்களின் வன்மையையும் பிரமன் முதலிய தேவர்களுடைய வன்மையையும் ஒருங்குகொண்டதும், இலக்கங்குதிரை பூண்டதுழ், மனத்தினும் விரைந்து செல்வதுமாகிய ஒருதேரைத் திருவுளத்தினுலே சிருட்டித்து, முருகக்கடவுளுக்கு ஏறும் வண்ணம் கொடுத்தருளினர். இவ்வாறெல்லாம் சிவபெருமான் விரைந்துதவி, ''இனி நீ போகக்கடவாய்'' என்று பணித்தருளினர்.

அறுமுகக்கடவுள் மகாதேவரையும் தேவியாரையும் தொழுது கொண்டு வலஞ்செய்து மும்முறை நமஸ்கரித்து எழுந்து, தோத்திரஞ் செய்துகொண்டு நிற்ப, எம்பெருமான் திருவுளத்திலே கிளர்ந்த பெருமகிழ்ச்சியோடு அம்முருகக்கடவுளைத் தழுவி, தமது அருமைத் திருக்கரத்தினல் எடுத்துத் திருத்தொடையில் இருத்தி, உச்சிமோந்து திருவருள் புரிந்து, எம்பெருமாட்டியாருடைய திருக்கரங்களிலே கொடுத்தருளினர். எம்பெருமாட்டியார் தமது அருமைத் திருக்குமாரரைத் தமது மடியில் இருத்திப் பெருங்கருணையோடு தழுவி, உச்சிமோந்து, ''உன்னை அடுத்த இலக்கத்தொன்பது வீரர்கள் படைஞராய்ச் சூழச்சென்று, அசுரர்களைக் கொன்று, இத்தேவர்களுடைய குறையை முடித்து, மீள்வாயாக'' என்று

திருவாய்மலர்ந்தருளினார். உடனே அறுமுகக்கடவுள் எம்பெருமானையும் எம்பெருமாட்டியாரையும் வணங்கி எழுந்து, விடைபெற்றுக்கொண்டு, சென்றார். இலக்கத்தொன்பது வீரர்களும் பூதசேனாதிபதிகளும் சிவபிரானையும் உமாதேவியாரையும் மும்முறை வணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்றார்கள். அங்கு நின்ற பிரமா விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் ''எம் பரமபிதாவே நீர் அடியேங்களைக் காத்தருளினீர். இனி எங்கள் நெஞ்சத்து ஓர் குறையுமில்லை. உய்ந்தனம் உய்ந்தனம்'' என்று விண்ணப்பஞ்செய்துகொண்டு, சிவபெருமானையும் உமாதேவியாரையும், வணங்கி, எழுந்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''உங்களுக்கு அருள்செய்யும் நாயகனாகிய குமரனோடும் நீங்களும் நடவுங்கள்'' என்று விடைகொடுத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

## படையெழு படலம்.

சிவபெருமானிடத்து விடைபெற்றுக்கொண்டு செல்லும்பொழுது, விட்டுணு அயலில் வரும் வாயுதேவனை நோக்கி, ''நீ அறுமுகக்கடவுளுடைய தேர்மேல் ஏறி, முட்கோலும் மத்திகையுங்கொண்டு பாகனாய்ச் செலுத்தக்கடவாய்'' என்று பணித்தார். வாயுதேவன் அதற்கிசைந்து, ஆகாயத்திற் செல்லும் தேர்மேலே பாய்ந்து, தன்னினமாகிய வாயுக்கள் பக்கத்துவர, மகிழ்ச்சியோடு செலுத்திக்கொண்டு குமாரசுவாமி திருமுன் விடுத்து, ''எம்பெருமானே, இத்தேர்மீது ஏறியருளுக'' என்று விண்ணப்பஞ்செய்தான். முருகக்கடவுள் பேரருள் புரிந்து, அத்தேர்மீது ஏறியருளினார்.

அது கண்ட இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் ''இனிச் சூரன் இறந்தான் இறந்தான்'' என்று துள்ளி ஆர்த்தார்கள். இலக்கத்தொன்பது வீரர்களும் முருகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் அவ்வீரர்களைச் சூழ்ந்தார்கள். திருக்கைலாசமலையில் இருந்த அநந்தவெள்ளம் பூதங்களுள் இரண்டாயிரம் வெள்ளத்தார்கள் நூற்றெட்டுச் சேனாதிபதிகளோடும் முருகக்கடவுளிடத்து வந்து, வணங்கித் துதித்து, ஆரவாரித்தார்கள். அவர்களிற் சிலர் பலவித வாத்தியங்களை முழக்கினார்கள். அதுகண்ட அறுமுகக்கடவுள் பூதசேனைகள் சூழத் திருக்கைலாசமலையை நீத்துப் பூமிமேற் சென்றருளினார்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

## தாரகன்வதைப் படலம்.

அறுமுகக்கடவுள் சேனையோடு செல்லும் நெறியிலே, தாரகாசுரனுக்கு உறையுளாய்த் தன்னை அடைந்தோரை வருத்தும் கிரௌஞ்சமலை சேர்ந்தது. அதனைக் கண்டவுடனே, தேவர்கள் மனம் பதைபதைத்தார்கள்; இந்திரன் கலக்கங்கொண்டு நின்றான். அப்பொழுது நாரதமுனிவர்

வந்து, முருகக்கடவுளுடைய திருவடித்தாமரைகளே வணங்கி நின்று, ''எம்பெருமானே, அந்தணர்களும் முனிவர்களும் இச்சுரத்திற் செல்லும் பொழுது தன்னுள்ளே வழிகாட்டி வரவரப் புணர்த்துக் கொன்று பின் அகத்தியமுனிவருடைய சாபத்தினாலே இவ்வடிவமாய் நிற்கும் கிரௌஞ்ச மலை இதுவே. இம்மலைக்கு ஒரு பக்கத்துள்ள மாயபுரியிலே, சூரனுக்கு இளவலும், யானைமுகத்தையுடையவனும், போரிலே விட்டுணுவுடைய சக்கரத்தைப் பதக்கமாகக் கொண்ட வீரனுமாகிய தாரகன் இருக்கின்றன். இவனைக் கொல்வீராயின், இவன்றமையனுகிய சூரனை வெல்லல் மிக எளிது'' என்று விண்ணப்பஞ்செய்தார். அது கேட்ட குமாரசுவாமி ''அவனை இங்கே கொல்வேம்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். உடனே இந்திரன் முதலிய தேவர்களெல்லாரும் மனக்கவலை நீங்கி, ''தாரகன் இன்றே இறந்தனன்'' என்று மகிழ்ச்சியுற்றார்கள்.

முருகக்கடவுள் தம்பக்கத்து நின்ற வீரவாகுதேவரை நோக்கி, ''இளவலே, அம்மலை கிரௌஞ்சம். அதன் ஒருபக்கத்துள்ள மாயபுரியிலே தாரகாசுரன் அசுரசேனைகளோடு இருக்கின்றன். நீ உன்றம்பியர்களாகிய இலக்கத்தெண்மர்களோடும் ஆயிரம்வெள்ளம் பூதர்களோடும் பூதசேனாதிபதிகளோடும் போய், அவனுடைய நகரத்தை வளையக்கடவாய். தடுத்தெதிர்ந்து போர்செய்யும் அசுரசேனைகளைக் கொல்லக்கடவாய். தாரகன் எதிர்வானையின், அவனோடு பொரக்கடவாய். உன்னலரிதாயின், நாம் அவனைக்கொல்ல வருவேம். நீ முன்னே போ'' என்று பணித்தருளினர். வீரவாகுதேவர் அதுகேட்டு, ''நன்று'' என்று சொல்லி, பூமியின்மேல் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து இரு கைகளையுஞ் சிரமேற்குவித்துக் கொண்டு நின்றார். பின்பு முருகக்கடவுள் இலக்கத்தெண்மரையும் பூதர்களையும் நோக்கி, ''நீங்கள் அசுரர்களைப் பொரும்பொருட்டு வீரவாகுவோடு போங்கள்'' என்று பணித்தருளினர். அவர்கள் யாவரும் எம்பிரானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு போதற்குன்னலும், உயிர்க்குயிராகிய சண்முகக்கடவுள் தம் பக்கத்து நின்ற தேவத்தச்சனை நோக்கி, ''வீரவாகு முதலிய யாவருக்கும் கொடுக்கும்பொருட்டு நீ பல தேர்களைச் செய்யக்கடவாய்'' என்று பணித்தருளினர். தேவத்தச்சன் ஒரு மாத்திரை ஒடுங்குமுன்னரே குதிரைகளும் சிங்கங்களும் பூதங்களும் பூண்ட பல தேர்களைச் செய்தான். எம்பெருமான் அத்தேர்களை வீரவாகுதேவர் முதலிய இலக்கத்தொன்பது வீரர்களுக்கும் பூதசேனாதிபதிகளுக்கும் கொடுத்தருளினர். வீரவாகுதேவர் முதலாயினோர்கள் எம்பெருமானை மும்முறை வலஞ்செய்து வணங்கி விடைபெற்று, அத்தேர்கண்மேல் ஏறிக்கொண்டு, ஆயிரம்வெள்ளம் பூதர்களோடு சென்றார்கள். வீரவாகுதேவர் பூதசேனாதிபதிகளுக்கும் இலக்கத்தெட்டுவீரர்களுக்கும் நாயகராய், நடுவே சென்றார். முருகக்கடவுள் வீரவாகுதேவரை முன்னே ஏவி, ஆயிரம் வெள்ளம் பூதர்கள் சூழவும், இந்திரன் முதலிய தேவர்கள் வணங்கவும், கடைக்கூழையிலே சென்றார்.

நாலுவித வாத்தியங்கள் முழங்க, வீரர்களும் பூதர்களும் சூழ, வீரவாகுதேவர் மாயபுரியைச் சேர்ந்தார். சேர்ந்தவுடன், பூதர்கள் போய், நகரத்தினுள்ளே புகுந்து, எதிர்ந்த அசுரர்களோடு போர்செய்து

கொண்டு நின்றார்கள். அதுகண்ட தூதர்கள் ஓடிப்போய்க் கோயிலினுள்ளே புகுந்து, தாரகாசுரனை வணங்கி நின்று, ''அரசனே, 'சூரபன்மன் தேவர்களை இட்ட சிறையை நீக்கும்பொருட்டுச் சிவபெருமான் கந்தசுவாமி என்னும் பெயரையுடைய ஒரு குமாரரைப் பெற்றருளினர். அவர் அசுரர்களெல்லாரையும் கொன்றுவிடுவர்' என்று ஆகாயத்திலே செல்லும் தேவர்கள் சொல்லக் கேட்டோம். நாம் 'இவர்கள் வார்த்தை என்னை' என்றிருந்தோம். இப்பொழுது அவர்கள் கூறியவாறே இரண்டாயிரம்வெள்ளம் பூதங்கள் சூழக் கந்தசுவாமி வந்தார். முன்னுற்ற தூசிப்படை நமது நகரத்தை வளைந்தது'' என்றார்கள். உடனே தாரகன் மிகக் கோபங்கொண்டு, சிங்காசனத்தினின்றும் நீங்கி, தூதர்களை நோக்கி, ''இந்நகரத்தை வளைத்த சேனையை உலர்ந்த புற்காட்டின் அக்கினி புகுந்தாற்போல விரைந்து கொல்வோம். நம்முடைய சேனைகண் முற்றையும் உழுந்துருளுமுன் கொண்டுவாருங்கள்'' என்று பணித்தான். அப்பணியைச் செய்யும்பொருட்டுத் தூதர்கள் செல்லலும், தாரகன் அங்குநின்ற பரிசனரை நோக்கி, ''நமது தேரைக் கொண்டுவாருங்கள்'' என்றான். அவர்கள் ஒரு நொடியினுள்ளே தேரைக் கொண்டுவந்தார்கள். தாரகன் அத்தேர்மீதேறி, மந்திரிகள் துதிக்க, சாமரம் இரட்ட, புடைவைக் குஞ்சம் வீச, வெண்குடை நிழற்ற, வலம்புரிகள் ஒலிக்க, மகாமேருமலையைப் போலும் ஒரு வைரத்தண்டமும் பல படைக்கலங்களும் பல சிங்கங்களால் இழுக்கப்படும் தேர்மீது செல்ல, தூதர்களாலே கூவப்பட்ட அசுரசேனைகள் யானை குதிரை தேர்களோடு வந்து நெருங்க, படைத்தலைவர்கள் பல தேர்கண்மீதேறிச் சூழ, தன்னகரத்தை நீங்கிச் சென்றான். அது கண்ட பூதர்கள் ஆரவாரித்து எதிர்ந்து சென்று, சண்முகக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்துக்கொண்டு, குன்றுகளையும், மரங்களையும், தண்டங்களையும், மழுக்களையும், சூலங்களையும், அசுரர்கண்மேல் வீச, அசுரர்கள் அம்புகளையும், வேல்களையும், சக்கரங்களையும் எதிர்வீசிப் போர்செய்தார்கள். இவ்வாறு பொரும்பொழுது, இரத்தநதி பெருக, தோள்களும் தலைகளும் துள்ள, குடர்கள் சிந்த, அசுரர்கள் பலர் இறந்தார்கள். பூதர்களுஞ் சிலர் மாய்ந்தார்கள்.

பூதர்களாலே தன்சேனை இறத்தல் கண்ட தாரகன் மிகக்கோபங் கொண்டு, தேரினின்றும் பூமியிலே குதித்து, ஒரு தண்டத்தை எடுத்து, பூதர்களைக் கொன்று, அண்டமும் குலுங்கும்வண்ணம் ஆரவாரித்து, கால்களால் உழக்கிச் சென்றான். தாரகன் பூதர்களைக் கொன்றமையையும் அவனை எதிர்க்கும் வன்மை தங்களிடத்தின்மையையும் மதித்து நோக்கி, பூதசேனாதிபதிகள் மனந்தளர்ந்து, சிதறி ஓடினார்கள். அதுகண்ட இலக்க வீரர்கள் மிகக் கோபங்கொண்டு, நாலுவித வாத்தியங்கள் ஒலிக்க, வில்லை வளைத்து, அம்புகளைத் தொடுத்துக்கொண்டு, தாரகனை விரைந்து வளைந்தார்கள். அவர்கள் தொடுத்த அம்புகள் தாரகனுடைய சரீரத்தைப் பிளந்திலை, ஊறேனும் செய்திலை, வறுமையால் மிக்கான் ஒருவன் செல்வருக்குச் சொல்லும் சொற்போல வறிது மீண்டன. அம்புகளெல்லாம் தாரகன் மார்பிலே பொன்னெனப்பட்டு மீண்டு, மலையீது சிதறும் கன்

மாரி போலாயின. வீரர்கள் அதுகண்டு வெகுண்டு, தெய்வப்படைக்கலங் களைச் செலுத்த, அவைகள் தாரகன்மீது பட்டுத் தம்வலி சிந்தி மறிந்து சென்றன. தேவர்கள் அதனை நோக்கிக் கைகுலத்திரங்கினர்கள். அப் பொழுது தாரகன் தன் வைரத்தண்டத்தைச் சுழற்றி, தன்னைச் சூழ் கின்ற தேர்களெல்லாவற்றையும் அடித்து, புழைக்கையை நீட்டி, இலக்க வீரர்களையும் வாரி. வில் லே ரு வீழும்வண்ணம் கடலிலெறிந்தான். வீழ்ந்த வீரர்கள் வில்லோடெழுந்து, ஒரு பக்கத்தே போனர்கள்.

வீரகேசரி அதனைநோக்கிக் கோபத்தோடு சென்று, முருகக்கடவுளுடைய திருவடிகளை மனதுட்கொண்டு, வில்லை வளைத்து, நூறம்புகளைத்தொடுத்து, தாரகனுடைய மகுடத்தைத் தள்ளி, கடலும் நாணும்வண்ணம் ஆரவா ரித்தார். அவ்வோதை கேட்ட தேவர்கள் அவர்மீது பூமாரி பொழிந்தார் கள். தாரகன் அதுகண்டு, வேர்த்து மானமுற்று, தன் கைத்தண்டத்தை வீரகேசரிமீதெறிந்துவிட்டு, தன்றேர்மீதேறி, ஒரு மகுடத்தைத் தரித் தான். தாரகன் எறிந்த தண்டம் தம் மார்பிலே படுதலும், வீரகேசரி மயங்கி வீழ்ந்தார். வீரவாகுதேவர் அதுகண்டு வெகுண்டு, தாரகனெதிர் சென்று, வில்லை வளைத்து, அம்புகளைத் தொடுத்து, அவன் சரீரத்தே செறித்தார். தாரகன் ஒரு வில்லை வளைத்து, வீரவாகுதேவர்மீது சர மழையைப் பொழிந்தான். அப்பொழுது வீரவாகுத்தேவர் பதினான்கு பாணந்தொடுத்து, தாரகனுடைய வில் லை த் துணித்தார். தாரகன் "இனி நீ இறந்தாய். இதற்கு ஐயமில்லை" என்று சொல்லி, ஒரு சூலத்தைச் செலுத்தினன். அச்சூலம் தம்மார்பிலே படுதலும், வீர வாகுதேவர் மயங்கி நிற்ப, தாரகன் அதுகண்டு, இடிபோலார்த்தான். வீரவாகுதேவருடைய தம்பியரெழுவர் தாரகனெதிர்ந்து பொருது, தோற்றார்கள். வீரவாகுதேவர் அதுகண்டு "நம்முடைய தம்பியர்களெல் லாரும் பொருது தோற்றார்கள்" என்று, தாரகனெதிர் சென்று, ஒரு வில்லை வளைத்து, நாணெலியெடுத்தார். அப்பொழுது மலைகளெல்லாம் சுழன்றன. அசுரர்கள் இருகாதையும் பொத்திக்கொண்டு, ஏங்கி ஓடினர்கள். முகிலினது வரவைக் கண்டு மகிழ்ச்சியுற்றோர் பின் அதனதிடியொலி கேட்டலும் மயங்கித் தளர்தல்போல, வீரவாகுதேவரது வரவைக்கண்டு மகிழ்ச்சி யுற்ற தேவர்கள் யாவரும், பின் அவரது நாணெலி கேட்டலும், அஞ்சி ஏங்கினர்கள். வீரவாகுதேவர் வில்லை வளைத்து, அக்கினிபோல வெகுண்டு, தாரகனை நோக்கி, "பூதர்களையும் வீரர்களையும் வன்மையால் வென்றும் என்று நினைந்தனைபோலும். நான் உன்னை விரைந்து கொல்வேன்" என் றார். அதுகேட்ட தாரகன் "விட்டுணு விடுத்த சக்கரத்தை என் கழுத் திலே பதக்கமாகத் தரித்தேன். இவ்வாறு செய்த என் வலியை எண் ணாது 'நான் உன்னைக் கொல்வேன்' என்றாய். சிங்கத்தை நரி வெல்லுமா! இங்குவந்த பூதப்படைகளெல்லாம் இறந்தன. வீரர்களெல்லாரும் தொலைந் தார்கள். நீயும் அயர்ந்து நின்றாய். இப்போது வீரம் பேசுகின்றாய். பார், என் வலியினால் உன்னைக் கொல்வேன்" என்றான். அப்பொழுது வீரவாகுதேவர் ஆயிரம்பாணங்களைத் தொடுக்க, தாரகன் தன் கைவில்லை வளைத்து, ஆயிரப்பாணங்களை விரைந்து எதிர்தூண்டி, அவற்றைச் சின னஞ்செய்து, வேறு நூறுபாணங்களைச் செலுத்தினன். வீரவாகுதேவர் அத்துணைக்கணைகள் தொடுத்து, அவற்றை மாற்றினர். தாரகன் அது

கண்டு, "வில்வன்மையில் ஒப்பில்லாத இவ்வீரனைத் தெய்வப்படைக்கலங் களாலே கொல்வேன்" என்று சிந்தித்து, அக்கினிப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் வெகுண்டு அக்கினிப்படைக்கலத்தை ஏவி, அ த னை அழித்தார். தாரகன் வருணப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் வருணப்படைக்கலத்தை ஏவி, அதனைத் துண்டமாக்கினர். தாரகன் சூரி யப்படைக்கலத்தை விட, வீரவாகுதேவரும் சூரியப்படைக்கலத்தை ஏவி, அதனைத் தொலைத்தார். தாரகன் வாயுப்படைக்கலத்தை விட, வீரவாகு தேவரும் வாயுப்படைக்கலத்தை ஏவி, அதனைச் சிதைத்தார். தாரகன் பிரமப் படைக்கலத்தை விட விரவாகு தேவரும் பிரமப்படைக் கலத்தை ஏவி அதனை மாற்றினர்.

தாரகன் இவற்றைக் கண்டு, அற்புதங்கொண்டு, "நான் விடுத்த தேவப்படைக்கலங்களெல்லாவற்றையும் இவ்வீரன் வென்றான். இனி நான் இவனை மாயையினால் வெல்வேன்" என்று நினைந்து, மாயாமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, எண்ணில்லாத வடிவங்களைத் தாங்கி, அளப்பில் லாத படைக்கலங்களைச் செலுத்தினான். இருட்குழாம் எங்கும் பரந்தாற் போல அவனொருவனே எங்குமாய் நின்று போர்செய்ய, தேவர்கள் அது கண்டு கலங்கி ஏங்கினார்கள். முன்னரே தூரத்தோடிநின்ற பூதர்கள் வெருண்டு பின்னரும் ஓடினார்கள். முன் போர்செய்து அயர்ந்த வீரர் களும் அச்சங்கொண்டு நின்றார்கள். அசுரர்கள் முறுவல்செய்து குணலை யிட்டார்கள்.* தாரகன் செய்யும் மாயப்போரையும் அதுகண்டு யாவரும் அஞ்சுதலையும் வீரவாகுதேவர் அக்கினிப்பொறி சிந்த நோக்கி, வீரபத்தி ரப்படைக்கலத்தை விடும்வண்ணம் எடுத்தார். எடுத்தலும், சூரியன்முன் இருள்போலத் தாரகனுடைய மாயை முற்றும் அப்பொழுதே அழிந்தது. அழிதலும், தனித்து நின்ற தாரகன் வீரவாகுதேவரைப் பின்பு மாயை யால் வெல்லும்வண்ணம் பிறிதோர் சூழ்ச்சியைக் கடைப்பிடித்து, தன் றேரை விட்டு விரைந்தோடினான். ஓடலும், வீரவாகுதேவர் "தோற் றோடினவன்மேலே படைக்கலம் விடுத்தல் வீரமன்று" என்று சிந்தித்து, அவ்வீரபத்திரப்படைக்கலத்தைத் தூணியுள் இட்டார். அதன்பின் "யான் வலியிழந்தோடிய தாரகன்பின் விரைந்து சென்று, அவனைப் பிடித்துப் புயத்தைக் கயிற்றினாலே கட்டி, எம்பெருமானாகிய சண்முகக்கடவுடிரு முன் கொண்டுசென்று விடுப்பேன்" என்று நினைந்து, முருகக்கடவுளைச் சிந்தித்து, கடல்போல ஆரவாரித்து, வைதுகொண்டு, தாரகனைத் தொடர்ந்தணுகினர். அணுகலும், தாரகன் மாயைக்கு உறையுளாகிய கிரௌஞ்சமலையின் குகையொன்றினுள்ளே சென்றொளித்தான். அவன் சென்ற குகையினுள்ளே வீரவாகுதேவர் புகுதலும், அம்மலை முற்றும் சூரியன் செல்லாத இருணிலம்போல் இருந்தது. வீரவாகுதேவர் திருவடி களினாலே தடவி நடந்து, தாரகனைக் காணாது, அம்மலையின் புணர்ப்பி னாலே மீளுநெறியையுங் காணாது, வெகுண்டு, "இம்மலையின் மாயை இது" என்று சிந்தித்து நின்றார். அப்பொழுது அசுரனாகிய கிரௌஞ்சமலை அது கண்டு, வீரவாகுதேவருடைய அறிவை மயக்க, அவர் மயங்கி முன்னை யறிவெல்லாம் இழந்து, துயின்றார்.

---

* குணலை - வீராவேசத்தாற்கொக்கரித்தல்

இவ்வாறே அம்மலையினுள் வீரவாகுதேவர் துயிறலும், அவருடைய தம்பியர்கள் இலக்கத்தெண்மரும் பூதசேனுதிபதிகளும் விம்மிச் சிறகில்லாப் பறவைபோல மெலிந்து, ''நமது நாயகர் தோற்றேடிய தாரகனைத் தொடர்ந்து சென்றார். இன்னும் மீண்டிலர். அவனேடு மலையினுள்ளே நின்று போர்செய்கின்றார் போலும். நாமும் அங்கே போவேம்'' என்று நினைந்து, அங்கு நின்று நீங்கி, விரைந்துசென்று, வீரவாகுதேவர் புகுந்த குகையினுள்ளே புகுந்தார்கள். கிரௌஞ்சமலை வீரவாகுதேவருக்குப்போல எண்ணில்லாத மாயத்தைச் செய்தலும், அவர்கள் யாவரும் மயங்கித் துயின்றார்கள். தாரகன் வந்து அதனை நோக்கி, ''நம்மாயையால் இவர் களெல்லாரும் ஒருங்கே இறந்தார்கள்'' என்று மகிழ்ந்து, மலையின்மேல் எழுந்தான்.

ஆகாயத்து நின்ற தேவர்கள் இவையனைத்தையுங் கண்டு, கண்ணீர் வார அழுது கலங்கிப் பதைபதைத்தோடினர்கள். பூதப்படைகள் தலைவ ரின்மையால் அச்சமுற்றன. மலைமீதெழுந்த தாரகன் ஒரு தேர் மேற் கொண்டு, அசுரர்கள் பலரும் வந்து வந்து ஆர்த்துச்சூழ, ஒரு வில்லை வளைத்துப் போர்க்களத்திற் சென்று, நாணேதைகொண்டு, கோடிகோடி பாணங்களை ஒரு தொடையாகவே பூட்டி, பூதர்கண்மேற் பொழிந்தான். பொழிதலும், பூதர்கள் சுழன்று திசைகளினும் ஆகாயத்தினும் சிதறி யோடினர்கள்.

நாரதமுனிவர் இவையெல்லாங் கண்டு இரங்கி, சரீரநடுநடுங்கி வெயர்த்து வழிக்கொண்டு விரைந்துபோன தேவர்களோடு சென்று, தேவ சேனுதிபதியாகிய சண்முகக்கடவுள் நின்றருளிய கடைக்கூழையை அடைந்து, அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கி நின்று, ''எம் பெருமானே, உம்முடைய படைவீரர்கள் பெரும்போர் செய்து, அசுரப் படைகளையும் மந்திரிகளையுங் கொன்று, தாரகனேடு பொருதார்கள். தாரகன் தன் சூழ்ச்சியினுலே வீரவாகுதேவரையும் இலக்கத்தெட்டு வீரர் களையும் பூதசேனுதிபதிகளையும் கிரௌஞ்சமலையினுள்ளே புகுவித்தான். புகுவித்தவுடனே, கிரௌஞ்சமலை மாயையைச் செய்ய, அவர்கள் யாவரும் மயங்கினர்கள்போலும். தாரகன் இதனை அறிந்து, மகிழ்ச்சியோடு போர்க் களத்தை அடைந்து, நம்முடைய சேனைகண்மீது சரமாரி பொழிய, அவை கள் தோற்றேடின. எல்லாவுயிர்களினும் நிறைந்திருக்கும் முழுமுதற்கட வுளாகிய நீர் இவையெல்லாம் அறிவீரே'' என்று விண்ணப்பஞ் செய் தார். அருட்பெருங்கடலாகிய சண்முகக்கடவுள் நாரதமுனிவருடைய உள் ளத்தையும் தேவர்களுடைய துயரத்தையும் நோக்கி, ''எல்லீரும் இது கேளுங்கள். நாம் போர்க்களத்திலே சென்று, தாரகனை வேலாயுதத்தி னுலே கொன்று, கிரௌஞ்சகிரியைப் பிளந்து, வீரர்களை ஓரிறைப்பொழு தினுள்ளே மீட்டருள்வோம்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அது கேட்ட யாவரும் மனத்துயரநீங்கி, முடிவில்லாத மகிழ்ச்சியுடன் கூத்தாடி, இசைபாடி, முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கினர்கள். அப்பொ ழுது முருகக்கடவுள் தமது சாரதியாகிய வாயுதேவனை நோக்கி, ''மன சினும் விரைந்து செல்லும்வண்ணம் தேரைச் செலுத்துவாயாக'' என்று

பணித்தருள, வாயுதேவன் ''நன்று'' என்று வணங்கி, தன்னினமாகிய வாயுக்கள் புடைசெல்ல, குதிரைகளைத் தூண்டி ஆர்த்தான். அப்பொழுது வானமும், பூமியும், அங்குள்ள மலைகளும், கடல்களும், திக்கயங்களும் நடுங்கின. சண்முகக்கடவுளுடைய தேர் இவ்வாறே ஆகாயமார்க்கமாகச் சென்றது. பூதசேனைகள் அவரைச் சூழ்ந்து சென்றார்கள். போரிலே தோற்றோடிய பூதர்களெல்லாரும் முருகக்கடவுளைத் தரிசித்தவுடனே வணங்கிக்கொண்டு, ஆற்றலோடும் அவரைச் சூழ்ந்து சென்றார்கள். இவ்வாறே முருகக்கடவுள் தாரகனுடைய போர்க்களத்தை அடைந்தார். பூதர்களோடு அசுரர்கள் போர்செய்து பலர் இறந்தார்கள். மற்றவர்களெல்லாரும் வலியழிந்து தோற்றோடினர்கள்.

தாரகன் தன்சேனைகள் தோல்வியடைந்தமையை நோக்கி, வில்லை வளைத்து, பல பாணங்களைத் தொடுத்துக்கொண்டு நடந்து, தன்னெதிர்ந்த கணநாதர்களெல்லாரையும் பலபாணங்களைச் சொரிந்து துரந்துகொண்டு, குமாரசுவாமி திருமுன் அடைந்தான். அடைந்தவுடனே, சிந்தையின்கண்ணே கோபாக்கினி சொலிக்கத் தூதர்களை நோக்கி, ''இவன் முன்னே சிவனுடைய குமாரன்'' என்று விளவ, அவர்கள் ''ஆம் அரசனே'' என்றார்கள். உடனே தாரகன் தேரை விரைந்து செலுத்திக்கொண்டு குமாரசுவாமி திருமுன் சென்று, பூரணசந்திரர்போலும் ஆறுதிருமுகங்களையும், பன்னிரண்டு திருக்கண்களினின்றும் பொழியாநின்ற திருவருளையும், வேலாயுதம் முதலிய படைக்கலங்களையும், பன்னிரண்டு திருக்கரங்களையும், தண்டை ஒலிக்கும் செந்தாமரை மலர்போன்ற அருமைத் திருவடிகளையும் கண்டான். இவ்வாறே சிற்பரமூர்த்தியாகிய முருகக்கடவுளுடைய திருவுருவினத்தையும் நோக்கி, அற்புதமடைந்து, ''இவன் நம்மேலே போர் செய்ய வந்தான் என்றல், கற்பனைகடந்த ஆதிக்கடவுளேபோலும்'' என்றான். இவ்வாறு எண்ணியபின்பு, யாவருக்கும் முதல்வராகிய சிவபெருமான் தமக்குத் தந்த வரத்தையும், வீரத்தையும், வன்மையையும், செல்வத்தையும், நினைந்து கோபித்து, கந்தசுவாமியை நோக்கி, ''கேள், பிள்ளாய். விட்டுணுவுக்கும் பிரமனுக்கும் இந்திரனுக்குமன்றிச் சிவபெருமானுக்கும் எமக்கும் போர்செய்தற்கு ஒருகாரணமுமில்லை. நீ வந்ததென்னை? சொல்'' என்றான். அதற்கு முருகக்கடவுள் ''உயிர்கள் செய்யும் நல்வினை தீவினைகளை நாடி, அவற்றிற்கேற்ப அருளும் தண்டமுஞ் செய்யும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தேவர்களை நீங்கள் சிறையில் வைத்தமையைத் திருவுளங்கொண்டு, உங்கள் வீரத்தையும் வன்மையையும் அழிக்கும்பொருட்டு நம்மை விடுத்தருளினர்'' என்று திருவாய்மலர்ந்தார். அதுகேட்ட தாரகன் ''கருடன் மேற்கொண்டு என்னெதிர்ந்து பொருத விட்டுணுவினுடைய சக்கரம் என் கழுத்தில் ஆபரணமாயிருத்தலை நீ காண்கிலையா? இந்நான்காறும் எம்மோடு பகைத்துப் போர்செய்யப் புகுந்தவர்கள் யாவருள்ளும் சிறிதுபோழ்தினுள் இறந்தவர்களும் தோற்றோடினவர்களுமன்றி எம்மை வென்றவர்கள் இல்லை. இது நீ கேட்டிலையா? நீ என்னோடு பொரும்வண்ணம் விடுத்த தலைவர்களை நான் வென்று கிரௌஞ்சமலையினுள்ளே மாளும்வண்ணஞ் செய்தேன், பல

கணங்களைக் கொன்றேன். இவற்றை நீ அறிந்திலையா? பிள்ளாய், நீ என்னுடு பொருது வருந்தாது உன்றந்தையாகிய சிவனிடத்தே போய்விடு'' என்றான். அறுமுகக்கடவுள் அதுகேட்டு, ''ததீசி முனிவன்மேல் விட்டுணு விடுத்த சக்கரம் தன்கூரை இழந்துபோய்க் குயவன் கைச்சக்கரம்போலாயினதை நீ கேட்டிலையா? படைக்கலங்களுக்கெல்லாம் நாயகமாகிய நம்முடைய வேற்படை விட்டுணு கைச்சக்கரம்போலப் பழிப்படுமா? அது உன்னுயிரை விரைவின் உண்டுவிடும். பூமி முழுதையும் உண்டு பரந்த பேரிருள் சூரியன் உதிக்க அகலுதல்போல, இவ்வுலகனைத்தையும் வென்ற உங்கள் பேராற்றல் இங்கு நாம் வர இமைப்பின் மாய்ந்தது. மாயைகளெல்லாவற்றையும் தன்னிடத்தே காட்டிய கிரௌஞ்சவெற்பையும், கள்வனே, உன்னையும், வேலாயுதத்தினாலே கொன்று, நமது சேனையை விரைவிலே மீட்கின்றேம்'' என்று திருவாய்மலர்ந்தார்.

உடனே தாரகன் கோபங்கொண்டு வில்லை வளைத்து நாணெலி யெடுக்க, தேவர்களும் தியக்கமடைந்தார்கள். அப்பொழுது அறுமுகக் கடவுள் தமது திருக்கரத்திருந்த வில்லை வளைத்து, நாணேதைகொண்டார். கொள்ளலும், பிரமா முதலாயினரும் அஞ்சினர்கள்; உலகமெல்லாம் ஏங்கின. தாரகனும் தலையசைத்தான். தலையசைத்த தாரகன் அளப்பில்லாத கணைகளைத் தூண்ட, அறுமுகக்கடவுள் ஆயிரம் பாணங்களைத் தூண்டி அவற்றைத் துணித்தார். தாரகன் கோபித்துப் பின்னும் ஆயிரம் பாணஞ்செலுத்த, முருகக்கடவுள் பத்துப் பாணஞ்செலுத்தி அவற்றை மாற்றினர். மீட்டும் தாரகன் அம்புகளை வில்லிலே பூட்டலும், முருகக் கடவுள் ஒரு பாணந் தொடுத்து, அவன் வில்லைத் துண்டமாக்கினர். தாரகன் வேறோர் வில்லைவளைக்க, முருகக்கடவுள் ஆயிரம் பாணங்களை அவன்மீது செலுத்தினர். அதுகண்ட தாரகன் ஆயிரம் பாணங்களைச் செலுத்தி, அப்பாணங்கள் யாவற்றையும் நீருக்கி, வேறு அநந்தம் பாணங்களைச் செலுத்தினன். முருகக்கடவுள் அவைகளை அறுத்து, கோடிபாணங்களைத் தூண்டி, தாரகனுடைய சரீரமெங்கும் செறிவித்தார். செறிவித்தலும், தாரகன் கோபங்கொண்டு, இருகோடிபாணங்களைச் செலுத்த, முருகக்கடவுள் அவைகளைப் பாணங்களினால் மாற்றி, இரண்டு பாணங்களைச் செலுத்தி, தாரகனுடைய புழைக்கையையும் கோடுகளையும் துணித்து வீழ்த்தினர்; உடனே தாரகன் தளர்ந்து வெகுண்டு, ஆயிரம் பாணங்களைத் தொடுத்து, முருகக்கடவுளுடைய தேர்க்கொடியை அறுத்தான். அதுகண்டு, முருகக்கடவுள் எட்டம்பினாலே தாரகனுடைய வில்லைத்துணித்து, ஆயிரமம்பு தூண்டி, அவனுடைய தேரையும், குதிரைகளையும், பாகனையும் அழித்தார். தாரகன் வேறொரு தேர்மீதேறி, ஓர் வில்லை வளைத்து, முருகக்கடவுளுடைய சாரதியாகிய வாயுதேவனுடைய புயங்களில் ஆயிரமம்பு தொடுத்தான். முருகக்கடவுள் தமது சாரதியுடைய வருத்தத்தை அறிந்து, ஆயிரம் பாணங்களைத் தாரகனுடைய நெற்றியிலே புகும்வண்ணம் செலுத்த, அவன் இரத்தம் பெருகத் தன்றேர் மீது புலம்பி மயங்கி வீழ்ந்தான்.

தாரகன் வீழ்தலும், அவனுடைய படைவீரர் அதனை நோக்கி, கோபங்கொண்டு, எம்பெருமானை வளைந்து, சூலம் சக்கரம் தோமரம்

முதலிய பல படைக்கலங்களை அவர்மீது பொழிந்து, ஆர்த்தார்கள். குமாரசுவாமி அதுகண்டு, தம்வில்லை வளைத்து, சரமாரி பொழிந்து, அவுணர்கள் விடுத்த படைக்கலங்கள் யாவையும் அறுத்தார். மீட்டும் சரமாரி பொழிந்து, அசுரர்களுடைய தலைகளையும் மார்புகளையும் வாய் களையும் கைகளையும் தோள்களையும் தாள்களையுந் துணித்தார். இரத்தம் எங்கும் கடல்போலப் பெருகியது. முருகக்கடவுளுடைய பாணங்களினாலே அசுரர்களிற் பலர் இறந்தார்கள். சிலர் இரத்தக்கடலிலே பாய்ந்து நீந்தி, தத்தமுயிர் கொண்டோடினார்கள்.

அப்பொழுது தாரகன் மயக்க நீங்கி எழுந்து, தன்னயலிலே நின்ற தன் சேனைகளைக் காணாது துன்பங்கொண்டு, நகைத்து, "பரமசிவனு டைய சிறுவனொருவன் போர்செய்ய, நான் என்புழைக்கையையும் கோடு களையும் இழந்து, மயங்கி வீழ்ந்தேன். என் சேனைகளையும் இழந்தேன். இங்கே தனித்து நிற்கின்றேன். என்னுண்மை அழகிது அழகிது. வில் வன்மை கொண்டு எண்ணிறந்த பாணங்களைத் தூண்டி இப்பகைவனு டைய உயிரைக் குடித்தலும் வெல்லலும் அரிது. இனித் தேவப்படைக் கலங்களைச் செலுத்தக்கடவேன்" என்று சிந்தித்தான். சிந்தித்து, விட்டு ணுப்படைக்கலம் பிரமப்படைக்கலம் முதலிய தேவப்படைக்கலங்கள் யாவற்றையும் விட விட, அவையெல்லாம் வந்து வந்து, அஞ்சி நடு நடுங்கி, எம்பெருமான் பக்கத்தே ஒதுங்கித் துதித்துக்கொண்டு நின்றன. தாரகன் அதுகண்டு, அகந்தையை ஒழித்தான், சிறிதஞ்சினன், மிக விம் மிதமடைந்தான். அக்கினிசொலிக்குங் கண்ணினையுடையனாகி, "இவனை வெல்லல் அரிதுபோலும்" என்று மனசினினைந்தான். "இனிச் சிவப்படைக் கலத்தை விடக்கடவேன்" என்று சிந்தித்து, அதனை எடுத்து, மனத்தி னாலே பூசித்துக் கோபத்தோடு செலுத்தினான். அச்சிவப்படைக்கலம் நஞ்சையும், தேவப்படைக்கலங்களையும், பூதங்களையும், பாம்புகளையும், சூலங்களையும், அக்கினியையும் உண்டாக்கிக்கொண்டு, சருவாண்டங்களும் சருவான்மாக்களும் உலைந்து சுழலும்வண்ணம் உருத்துச் சென்றது. சுப்பிரமணியக்கடவுள் அதுகண்டு, தந்தையாராகிய சிவபெருமானைத் திரு வுளத்திலே தியானித்துக்கொண்டு, ஒரு திருக்கரத்தை நீட்டி, அச்சிவப் படைக்கலத்தைப் பற்றிக்கொண்டார். தாரகன் அதுகண்டு, "இன்றே எமது செல்வம் அழிந்தது" என்று ஏங்கினான். "தேவதேவராகிய சிவ பெருமானுடைய படைக்கலத்தைச் செலுத்தினேன். அதனையும் எதிர்ந்து பற்றினான். இவ்வறுமுகக்கடவுளுடைய வன்மை ஒருவராலே சொல்லற் பாலதா! ஆயினும் இவன் தருமப்போரன்றி வஞ்சகப்போர் செய்ய நினை யான். நான் மாயைகளைச் செய்து, மறைந்து நின்று போர்செய்வேன்" என்று சிந்தித்து, விரைந்து தேரோடு கிரௌஞ்சமலையின்முன் சென்று, "நீ வல்ல மாயைகளை விரைந்து செய்வாயாக செய்வாயாக" என்றான். உடனே கிரௌஞ்சமலை மாயையினாலே முப்புரங்கள் பலவாய்வர, தார கன் அப்புரங்களிலுள்ள அசுரர்களாய் வந்தான். கிரௌஞ்சமலை பலபல முகில்களாய் வர, தாரகன் அவற்றினுள்ளே இடியாய் வந்தான். கிரௌஞ்சமலை பல கடல்களாய் வர, தாரகன் அவற்றினுள்ளே வடவா முகாக்கினியாய் வந்தான். கிரௌஞ்சமலை சக்கரவாளகிரியைச் சூழும் இரு

ளாய்வர, தாரகன் அதனுள்ளே பூதர்களாய் வந்தான். கிரௌஞ்சமலை அட்டதிக்கயங்களாய் வர, தாரகன் குலமலைகளாய்ச் சடசடவென்னும் ஒலியோடு வந்தான். கிரௌஞ்சமலை வாயுவாய் வர, தாரகன் அக்கினியாய் வந்தான். கிரௌஞ்சமலை நெருப்புக்கொள்ளிகளாய் ஆகாயத்து வர, தாரகன் ஆயிரகோடி சூரியர்களாய் வந்தான்.

இவ்வாறே தாரகன் கிரௌஞ்சகிரியோடும் அளவில்லாத மாயையின் வடிவங்களைக் கொண்டு எங்குந் திரிதலும், அறுமுகக்கடவுள் இவற்றைக்கண்டு, தமது திருக்கரத்திலுள்ள வேலாயுதத்தை நோக்கி, ''நீ தாரகாசுரனையும் கிரௌஞ்சமலையையும் ஓரிறை செல்லுமுன் பிளந்து, உள்ளுயிருண்டு புறத்தே சென்று, இலக்கத்தொன்பது வீரர்களையும் பூதசேனாதிபதிகளையும் மீட்டுக்கொண்டு, இங்கு வருவாயாக'' என்று பணித்து, அதனைச் செலுத்தினர். சருவசங்காரகாலத்தில் மாயையினுகிய உலகங்களையும் அவற்றின்கணுள்ள உயிர்களையும் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றுந் தோன்றும் அக்கினி சுடுதல்போல, அவ்வேலாயுதம் தாரகனும் கிரௌஞ்சகிரியும் அங்கே செய்த மாயைகளனைத்தையும் விரைவின் அழித்தது. எம்பெருமானுடைய ஆறுதிருமுகங்களினுநின்று எழுந்த கோபம் திரண்டொரு வடிவெடுத்துச் செல்லல்போலவும், சிவபெருமானுடைய முத்தலைச் சூலமிரண்டு ஒருபடையாய்ச் செல்லல் போலவும், அவ்வேற்படை சென்றது. செல்லலும், தாரகன் ''இதனை நான் பிடித்து முறித்துவிடுவேன்'' என்று கோபத்தோடு விரைந்து வந்தான். அச்சஞ் சிறிதும் இல்லாத தாரகன் கருடன்மேற்செல்லும் பாம்பு போலச் சீறி நணுகுதலும், அவ்வேலாயுதம் அவனது மார்பாகிய வைரமலையின்மீது இடிபோலப் பட்டு, அதனைக் கிழித்துப்போய்க் கிரௌஞ்சமலையிலே பட்டு, அதனை உருவிச் சென்று, வீரமும் புகழுங்கொண்டு விளங்கினாற்போல இரத்தமுந் துகளுமாடி, விரைந்து மீண்டது. மீண்ட வேலாயுதம் மலையினுள்ளே துயில்கின்ற வீரர்களை எழுப்பிவிட்டு, ஆகாயத்திலே போய்க் கங்கைநீராடிச் சுத்தவடிவாய், எம்பெருமானுடைய திருக்கரத்தில் வந்து, முன்போல் இருந்தது. வேலாயுதம் தாரகனுடைய மார்பிலும் கிரௌஞ்சனகிரியிலும் பட்டுருவிய பேரோசையைக் கேட்டு, உலகத்துள்ளோர்கள் ''பூமி பிளந்தது'' என்பாரும், ''மகாமேருமலை வெடித்தது'' என்பாரும், ''அண்டம் உடைந்தது'' என்பாரும் ஆயினர்கள். வேலாயுதம் தன் மார்பை ஊடறுத்துச் செல்ல, தாரகாசுரன் அநந்த கோடி யிடிகள்போல ஆர்த்து, எழுந்து துள்ளிப் பூமியில் விழுந்து, பதை பதைத்து இறந்தான்.

அறுமுகக்கடவுள் செலுத்திய வேலாயுதம் மீண்டு அவரது திருக்கரத்து இருப்ப, தாரகன் இறந்தமையையும், கிரௌஞ்சகிரி பிளந்தமையையும், விட்டுணுவும் பிரமாவும் இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் நோக்கி, ஆரவாரித்தார்கள், கூத்தாடினர்கள், இருகைகளையும் சிரசின்மேற்குவித்துக் குமாரசுவாமியைத் துதித்தார்கள், பூமாரி பொழிந்தார்கள், வலஞ்செய்து பாடினர்கள், திருமுன்னே பலமுறை வணங்கி நின்றார்கள், பேரானந்தப் பெருங்கடலின் மூழ்கினர்கள்.

கிரௌஞ்சகிரி அழிந்தவுடனே, அதனுள்ளே துயின்ற வீரவாகு தேவர் முதலிய வீரர்களெல்லாரும் மயக்கநீங்கி, விரைந்து சென்று, சண்முகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்துக்கொண்டு, அவர் பக்கத்தை அடைந்தார்கள். பெருங்கருணைநிதியாகிய சுப்பிரமணியக்கடவுள் அவர்களை நோக்கி, ''நீங்களெல்லீரும் தாரகனுடைய கிரௌஞ்சகிரியுட்பட்டு, மாயையின் அழுந்தி அறிவிழந்து வருந்தினீர்கள்போலும்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். தண்ணளியோடு கூடிய இவ்வருமைத் திருவாக்கைக் கேட்ட வீரர்கள் ''எம்பெருமானே, உமது திருவருள் இருக்கும்பொழுது அடியேங்கள் ஊறடைவதுண்டா? மையலுடன் உறங்குவார் போல இன்பமடைந்ததன்றிக் கிரௌஞ்சமலையினது மாயத்தினாலே சிறிதும் துன்பமடைந்திலேம்'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அப்பொழுது குமாரசுவாமி வீரவாகுதேவரை அழைத்து, முன்னே தாரகன் விடுப்பத் தாம்பற்றிய சிவப்படைக்கலத்தை அவர்கையிற் கொடுத்து, ''இதனை நீ வைத்துக்கொள்ளக்கடவாய்'' என்று திருவாய்மலர்ந்து, திருவருள் புரிந்தார். அதன்பின்பு, தாரகனுடைய யுத்தத்தில் இறந்த பூதர்களெல்லாரையும் ''நீங்களெல்லீரும் எழுங்கள்'' என்று எழுப்பி, பூதசேனைகள் சூழ, தேவர்கள் துதிக்க, வீரர்கள் நெருங்க, செருக்களத்தினின்றும் நீங்கினர்.

திருச்சிற்றம்பலம்.

## தேவகிரிப் படலம்.

முருகக்கடவுள் போர்க்களத்தை அகன்று, தேவர்களும் பூதர்களும் வீரர்களும் துதிக்க வந்து, அங்கு நின்ற இமையமலையைக் கடந்து, தென்றிசையின் நடந்து, சூரியன் அஸ்தமயனஞ் செய்யும்பொழுது தேவகிரியை அடைந்தார். அவ்விரவிலே அம்மலையின் ஒருபக்கத்தெய்தி, விட்டுணுவும், பிரமாவும், இந்திரனும், தேவர்களும், முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, ''பெருங்கருணைநியே, வன்கண்மையையுடைய தாரகாசுரன்வருத்த இந்நாள்காறும் சிறியேங்கள் வருந்தினேம். எம்மாட்டுள்ள பெருங்கருணையினாலே அவனைக் கிரௌஞ்சகிரியோடு கொன்றருளினீர். உம்மைப் பூசிக்க நினைந்தேம். இம்மலையில் எழுந்தருளியிருத்தல்வேண்டும். இவ்வரந் தருக'' என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அருட்பெருங்கடலாகிய முருகக்கடவுள் அவ்வேண்டுகோளுக்கு இசைந்தருள. தேவர்கள் அதுகண்டு, சரீரம் பூரிக்க உரோமஞ்சிலிர்க்கத் துள்ளிப் பேருவகை பூத்தார்கள். முருகக்கடவுள் சேனைகளோடும் தேவர்களோடும் தேவகிரிமேற்சென்று, தம்மைத் தொழுதுகொண்டு தம்பக்கத்து வந்த தேவத்தச்சனை நோக்கி, ''நாமும், நம்முடைய தம்பியர்களும், தேவர்களும், கணங்களும் இருக்கும்பொருட்டு, இம்மலையின்கண்ணே ஒரு நகரத்தை இப்பொழுதே விரைவின் உண்டாக்கக்கடவாய்'' என்று பணித்தருளினர். அதுகேட்ட தேவத்தச்சன் ''சுவாமீ, அவ்வாறே செய்வேன்'' என்று விண்ணப்பஞ்செய்து, திருவடிகளை வணங்கிக்கொண்டுபோய், அவ்விடத்தே ஒரு நகரத்தையும், அதனுள்ளே எம்பெருமான் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு செம்

பொற்றிருக் கோயிலேயும், அதனுள்ளே ஓரிரத்தின சிங்காசனத்தையும் செய்து முடித்துக்கொண்டு, மீண்டு வந்து, விண்ணப்பஞ்செய்தான்.

சண்முகக்கடவுள் தம்மைச் சூழ்ந்த யாவரோடும் அத்திருநகரத்தினுள்ளே போய், பூதசேனைகளைத் திருக்கோயிற்றிருவீதியிலே நிறுவி, தேரினின்றும் இறங்கி, செம்பொற்பாதுகைகளிலே தமதருமைத் திருவடிகளை வைத்து, வீரர்களும் தேவர்களும் சூழ, திருக்கோயிலினுள்ளே புகுந்து, சூரியர்கள் யாரும் ஒரோவழிக் கூடினாற்போலப் பேரொளி வீசும் இரத்தின சிங்காசனத்தின்மேல் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது பிரமா முதலிய தேவர்கள் யாவரும் எம்பெருமானைப் பூசிக்க நினைந்து, உமாதேவியாருடைய திருக்கரத்திற்றோன்றிய கங்கையை நினைப்ப, அஃதங்கு வந்தது. பின்னர் இரத்தினபரணம், பீதாம்பரம், நறுமலர், சந்தனம், தூபம், தீபம் முதலிய பூசோபகரணங்களனைத்தையும் அங்கு வருவித்தார்கள். முன்னே அமுதம் வைத்த குடங்களைக் கொணர்ந்து, வேதங்களைச் சொல்லிக் கங்கையிலே திருமஞ்சனமெடுத்தார்கள். பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் சண்முகக்கடவுள் பக்கத்தை அடைந்து, அவருடைய மந்திரத்தைச் சொல்லித் திருமஞ்சனமாட்டினர்கள். அதன்பின், முன்னே தரித்த பீதாம்பரத்தை நீக்கி, வேறு பீதாம்பரம் சாத்தி, வேறொரு சிங்காசனத்தின்மேல் எழுந்தருளியிருக்கச் செய்து, அவருடைய திருநாமத்தைச் சொல்லி, நறுமலர்களைச் சாத்தி, திருமாலைகளைச் சூட்டி, சந்தனக்குழம்பை அணிந்து, பச்சைக்கர்ப்பூரத்தை அப்பி, புழுகையும், கஸ்தூரியையும் மட்டித்து, திருமேனியெங்கும் திவ்வியாபரணங்களைச் சாத்தி, மணியொளியோடு தூபதீபங்காட்டி, மெய்யன்போடு வலஞ்செய்து வணங்கித் துதித்தார்கள். தேவர்களெல்லாருங்கூடி இவ்வாறு பூசிப்ப, அறுமுகக்கடவுள் பெருங்கருணையினாலே அதனை ஏற்றுக்கொண்டு, அங்கெழுந்தருளியிருந்தார். அதுநிற்க, தாரகனுடைய புதல்வனாகிய அசுரேந்திரன் செய்ததும் பிறவும் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

அசுரேந்திரன்

## மகேந்திரஞ்செல் படலம்.

அறுமுகக்கடவுள் செலுத்திய வேலாயுதத்தினாலே தாரகன் இறந்தமையைச் சில தூதர்கள் போய்ச் சொல்ல, அவனுடைய மனைவியாகிய சௌரி வருத்தமுற்று, மற்றை மனைவியர்களும் பிறரும் தன்னைச் சூழ்ந்து பதைத்திரங்க, துன்பத்துடனே சென்று, தன் கணவன்மேல் வீழ்ந்து, புலம்புவாளாயினாள்: "சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற நீ விட்டுணு பதத்திற் சென்றாயல்லை, பிரமபதத்திற் சென்றாயல்லை, இருக்கைலாசத்திற் சென்றாயல்லது வேறெங்குச் சென்றாய்! தன் சக்கரத்தை உனக்காபரணமாகத் தந்த விட்டுணுவும் இந்திரனும் மற்றைத் தேவர்களும் இயமனும் மற்றனைவர்களும் இன்றன்றோ தங்கள் மனக்கவலையெல்லாம் தீர்ந்தார்கள். தேவர்கள் யாவரும் புலம்பும்வண்ணம் அசுரமன்னவர்க

ளோடும் நீ வரும் பவனியைக் காணுதேன் பறவைக்கூட்டஞ்சூழத் துயி லும் உன்னை, எம்பெருமானே, இப்படியே காண்பேனையினேன். நான் உன்னைத் தழுவுதல் கண்டும், நீ என்னைத் தழுவாதிருந்தனை. அது பல ருங்காணிற் பழுதாமென்றெழிந்தாயாயின், மயங்காநின்ற எனக்கு ஒரு சொல்லாயினும் சொல்கின்றிலையே! வறிதே துயில்கின்றாய். என்மேல் யாதாயினும் வெறுப்புண்டா? கைலாசபதி உனக்குத் தந்த வரம் மெய் யென்றே இந்நாள்காறும் துணிந்திருந்தேன். அது பொய்யாய் விளைந் ததுவோ! என் கணவா, இறந்தனையே. ஐயோ! இத்தற்கோ நீ முன் அருந்தவஞ் செய்தாய். உயர்வொப்பில்லாத சிவபெருமான் பெற்ற குமார னெடு நீ ஏன் எதிர்ந்தாய்! ஐயோ இறந்தாயே! விதிவலியை யாவர் கடந்தவர்! அசுரர்கள் சூழும்வண்ணம் சிங்காசனத்தில் வீற்றிருந்த நீ போர்க்களத்திறந்தாயே. என்னுயகனே, சொல். இதுவுஞ் சிலநாளோ. சிவபெருமான் உனக்குத் தந்த வரத்தை நீ நழுவினையே. அவருடைய சூழ்ச்சியைச் சிறிதும் உணராது உயிருந்தொலைந்தாயே. இனி உன்னைத் தமியேன் காண்பது எந்நாளோ! சிவகுமாரன் வந்து போர்செய்ய நீ முன்னை வலியிழந்து இறந்தனையென்பது கேட்டும், பின்னும் உயிரோடிருந் தேன். என்னினும் பேரன்புடையோர் யாவர்! இனி நான் யாது செய் வேன்'' என்று இரங்கினள். மற்றை மனைவியர்களும் வந்து நெருங்கித் தாரகனைச் சுற்றிப் புலம்பித் துயருற்றார்கள்.

அப்பொழுது சிங்கமுகாசுரனுடைய ஆசுரபுரிக்குப் போயிருந்த புதல்வனுகிய அசுரேந்திரன் கேள்வியுற்று வந்து, தன் பிதாவாகிய தாரகன் இறந்ததனைக்கண்டு, பெருமூச்செறிந்தான், அழுதான், கைகுலைத்தான், சோகத்தழுங்கினன், விழுந்தயர்ந்தான், பின்பு தெளிந்தான். முன்னொரு நாளும் அடையாத பெருந்துயரத்தழுந்திய புதல்வன் எழுந்து சென்று, தன் மாதாவுடைய கால்களில் விழுந்து, ''அம்மே, உன் கணவன் எங்கே சென்றான்! சொல்வாயாக'' என்று நின்று புலம்பினன். பின்பு தன் மாதா முதலாயினோரை ''நீங்கள் ஒரு பக்கத்தே போயிருங்கள்'' என்று ஏவி, தன்னயலில் நின்ற அசுரர்களைக்கொண்டு அக்கினி விறகு முதலிய கருவி கள் பலவற்றையும் வருவித்தான். தந்தையாகிய தாரகனது சரீரத்தை முன்போலப் பொருத்தி, ஒரு தேர்மீதேற்றி, சுடுகாட்டிற் சேர்த்தி, சந்த னப்பள்ளிமீது கிடத்தி, ஈமக்கடன்களைச் செய்து, தகனம் பண்ணினன். பண்ணும்பொழுது, மாதாவாகிய சௌரி சென்று, ''நான் என் கணவ னுடன் செல்லுதற்கு அக்கினி வளர்க்கக்கடவாய்'' என்று சொல்ல, அசுரேந்திரன் அதுகேட்டு, நடுநடுங்கி, அவள் கால்களின் வீழ்ந்து, ''தாயே, என்னைக் காப்பாற்றிக் கொண்டிருப்பாயாக'' என்றான். சௌரி அதனை மறுத்துக் கோபித்துரைக்க, அசுரேந்திரன் ''அவ்வாறுக'' என்றான். மற்றைத்தாயர்களும் ''நாங்களும் கணவனுடன் செல்லும்வண்ணம் அக்கினி வளர்க்கக்கடவாய்'' என்று சொல்ல, அசுரேந்திரன் அதற்கியைந்து அக் கினி வளர்க்க, தாயர்களெல்லாரும் அதில் வீழ்ந்தார்கள்.

வீழ்ந்தபொழுது அசுரேந்திரன் புலம்பி, அந்நகரத்தை அக்கணமே நீங்கி, தன்னிளைஞர் சிலர் தன்னைச் சூழச் சென்று, தென்கடலினுள்ள

வீரமகேந்திரபுரியை அடைந்தான். அங்கே சூரபன்மனுடைய கோயிலிற் புகுந்து, அவனுடைய கால்களின் வீழ்ந்து, தன்கைகளால் அவற்றைப் பிடித்துக்கொண்டு அழுதான். சூரன் அதுகண்டு, ''மைந்தனே, நீ புலம் பாதே. நிகழ்ந்தது யாது? சொல்வாயாக'' என்றான். அப்பொழுது அசுரேந்திரன் ''பிதாவே, இந்திரனுடைய புணர்ப்பினாலே பரமசிவனு டைய குமாரனுகிய கந்தன் பூதசேனைகளோடு வந்து, உன்றம்பியைக் கிரௌஞ்சமலையோடு வேற்படையினாலே கொன்று, பூமியில் வந்தான்'' என்றான். சூரன் அதுகேட்டு, ''நன்று நன்று'' என்று இடிபோலச் சிரித்து, ''கிரௌஞ்சகிரியோடு தாரகனைச் சிவனுடைய குமாரனு கொல்வான்! இது பொய்வார்த்தை. மைந்தனே, அஞ்சாதே. உண்மை சொல்வாயாக'' என்றான். அதற்கு அசுரேந்திரன் ''பிதாவே, இது உண்மை. என்றந்தை யையும் கிரௌஞ்சகிரியையும் சிவனுடைய குமாரன் வேலாயுதத்தினாலே கொன்றுவிட்டுச் சென்றான். நான் விதிப்படி ஈமக்கடன்செய்து முடித்துக் கொண்டு பெருந்துயரத்தோடும் உன்னிடத்து வந்தேன்'' என்றான். அது கேட்டலும், சூரனுடைய மனசிலே கோபாக்கினி கிளர்ந்தது; கண்கள் அக்கினியைக் கான்றன; நாசிகள் புகையைத் தோற்றுவித்தன. சரீரத்து ரோமங்கள் பொறியைச் சிந்தின. நெறித்த புருவமிரண்டும் நெற்றிமேற் சென்றன. பற்கள் அதரத்தைக் கவ்விக் கடித்தன. உதடுகள் துடித்தன. மனம் ககனகூடத்தையும் இடிக்க நினைந்தது. இவ்வாறே கோபாக்கினி எழுந்து சொலிக்க, தாரகன்மீது தொடரும் அன்பினாலே சூரனிடத்துச் சேர்ந்த துன்பக்கடல் அவ்வக்கினியினுற்றலை அவித்தது. கண்களினின்றும் பொழியாநின்ற நீர் நதிபோலவும், சரீரத்திற்றேன்றிய வேர்வை கடல் போலவும், பெருகின. சூரபன்மன் இவ்வாறே துன்பக்கடலில் அழுந்திச் சிங்காசனத்தினின்றுந் தவறிப் பூமியில் வீழ்ந்து, இடிபோல் அழுதான். பக்கத்துநின்ற அசுரர்கள் துன்பத்தழுந்தி, ஏங்கி வீழ்ந்தழுதார்கள். அந்நகரமெங்கும் அழுகையொலியே மலிந்தது.

அப்பொழுது சூரபன்மன் முன் அவிந்த கோபாக்கினி பின் மனத்தின் மூள, மானமும் நாணமும் வருத்த, விரைந்தெழுந்து, தன்னேவலர்களை நோக்கி, ''என்றம்பியைக் கொன்ற கந்தனை நான் சென்று பொருது வென்று வரல்வேண்டும். என்னுடைய தேரையும் படைக்கலங்களையும் கவசத்தையும் ஒரு கணத்தினுள்ளே கொண்டுவாருங்கள்'' என்றான். உடனே ஏவலர்கள் யாவரும் அவ்வாறு செய்யும்பொருட்டுப் போனர்கள். அசுரர்கள் அதனை அறிந்து குறைவற்ற படைகளோடு வந்து சேர்ந்தார் கள். இவற்றைக் காண்டலும், மந்திரிகளுள் ஒருவனுகிய அமோகன் சூர னுடைய கால்களை வணங்கி நின்று, ''மகாராசாவே, அடியேன் ஒரு சொற் சொல்வேன். கோபங்கொள்ளாது அதனைக் கேட்க'' என்று சொல்லலுற்றான்: ''படைத்தொழில் கற்றுப் பகைவரைத் தாங்கூறிய வஞ்சி னப்படியே கொல்லவல்ல வீரர்கள், தந்நகரத்தைப் பகைவர் வந்து வளைப் பினும், எண்ணியன்றிக் கோபத்தை மேற்கொண்டு விரைந்து போர்செய் யச் செல்லார். பகைவருடைய குலத்தையும், உட்கோளையும் வந்த நிலத் தையும், அவருடைய முன்னேரது நெறியையும், அவர்கொண்ட கோபத் தையும், அவருடைய படையையும், வலியையும் வினவியன்றிப் பிறி

தொன்று மனங்கொள்வாரா? பகைவர் வரத்தின் வலியரோ, மாயையின் வலியரோ, படைக்கலக்கல்வியின் வலியரோ, உரத்தின் வலியரோ, ஊக்கத்தின் வலியரோ என்று இவற்றை ஆராய்வர். ஒற்றரைத் தூண்டி அவரது வலியை உணர்ந்தாராயினும், வேருெருற்றலுலன்றி அவர்கூற்றை மனத்துட்கொள்ளார். அப்பகைவரைச் சூழுஞ் சேனையன்றி அவருக்குப் பிறிதிடத்தும் சேனையுண்டோ என்று பின்னும் ஒற்றரை விடுத்தாராய்வர். வினையினது விளைவை ஒருகாலும் மெலிதென நினையார். அவரது சேனையையும் அவரது தன்மையையும் சிறுமையாகக் கருதார். தமக்குப் பகைவர் வரின், கொடுத்தல், இன்சொற் சொல்லல், வேறுபடுத்தல் என்னும் முன்னை மூன்றுபாயங்களையும் ஆராய்ந்து நிலைமையறிந்து செய்வர். இம்மூன்றின் வாராவழித் தம்மரசியன் மரபுக்கேற்பக் கொடுஞ் சினங்கொண்டு குற்றந்தீர்ந்த படைஞரோடும் படைக்கலங்களோடும் எதிர்ந்து சுற்றி, பகைவரதியல்பை அறிந்து, அதற்கேற்பப் பொருது வெற்றிகொண்டு மீள்வர். எதிர்க்க வலியில்லாதார் எதிர்ந்தவழியும், அரசராயினேர் அவரோடு போரைக் குறித்துச் செல்லல் பழியதன்றே! அவரை வெல்லக் கருதினும், தம்படைஞரைத் தூண்டி வெல்வர். அதுவே பெறற்கரும்புகழ். உலகத்துள்ள அரசரதியற்கை இதுவேயாகும். அரசனே, உனக்கொப்பாரில்லை. நீ அழிவில்லாய். எவ்வுலகுமாளுவாய். குற்றமொன்றும் அடையாய். தேவர்கள் யாவரையும் ஏவல்கொண்டாய். பிரமனுந் திருமாலும் நாடோறும் புகழுமாறிருந்தாய். இத்தன்மைத்தாயவலி பெற்றுள்ள நீ, எளியனுகிய இந்திரன் சொற்கேட்டுப் பூதமே படையாகப் பரமசிவன் நேற்றுப் பெற்ற பிள்ளை எதிர்ந்திடின், அவனை வெல்லக் கருதிச் செல்வையாயின், அது உனக்கு வசையன்றே? நீ பகைவரது வன்மையை அறியாய். அவருடைய படைஞரது வன்மையை அறியாய். உனது அரும் பெருந்தலைமையை நினையாய். செயற்பாலனவற்றை அமைச்சரோடுஞ் சூழாய். வாளா கோபமேல்கொண்டு செல்லலும் வலியின்பாலதா! வீரமும் வலியும் மிக்கோராயினும், விதி வந்தெய்தின், வலியில்லாராலும் கொல்லப்படுவர். உன்னைப்போல அழியாவாற்றல் பெருமையால், தாரகன் மழலை தேரூத சிறுவனுலும் கொல்லப்பட்டான். தண்டை ஒலிக்கும் சீறடிகளையுடைய சிறுவன் தாரகனைக் கொன்றது அற்புதமன்று. வலியரும் ஒருகாலத்து வன்மையை இழப்பர். மெலியரும் ஒருகாலத்து வீரராய் விளங்குவர். யாருமொப்பாகாது வையும் இராசராசனுகிய நீ சிறுவன் மேற் போர்குறித்துச் செல்லல் புகழன்று. அவனது சிறப்பையும் வலியையும் அறிந்துகொண்டு, பின் அவனின் வல்ல வீரரைப் படைஞரோடேவி வெற்றிகொண்டிருக்கக்கடவை'' என்முன்.

அமோகன் இவ்வாறு தேற்ற, சூரபன்மன் அதுகேட்டு, ''இது உறுதி'' என்று தெளிந்து, கோபத்தை விடுத்து, சிங்காசனமீதேறி இருந்து கொண்டு, தன்னயலினின்ற ஏவலாளருட்சிலரை நோக்கி, ''பகன், மயூரன், சேனன், சக்கரவாகன், சுகன் முதலிய தூதர்களை அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று பணித்தான். அவர்கள் சூரபன்மனை வணங்கித் துதித்துச் சென்று, அத்தூதர்களை அழைத்துக்கொண்டு வந்து விடுத்தார்கள். தூதர்கள் வணங்கி நிற்ப, சூரன் அவர்களை நோக்கி, ''நீங்கள்

விரைந்துபோய், பூமியில் வந்த கந்தனதியல்பையும், அவனுடைய படைஞர்களாகிய பூதர்களுடைய தொகையையும், பிறவனைத்தையும் ஆராய்ந்தறிந்துகொண்டு இங்கு வருவீர்களாக'' என்று பணித்தான். தூதர்கள் அப்பணியைச் சிரமேற்கொண்டு, சூரனை வணங்கி, பூமியை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் சென்றபின்பு, சூரபன்மன் அசுரர்கள் துதிக்க வீற்றிருந்து அரசுசெய்தான். அது நிற்க, அறுமுகக்கடவுள் தேவகிரியை நீங்கிப் பூமியில் எழுந்தருளி வந்தமையைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

## வழிநடைப்படலம்.

தேவகிரியில் எழுந்தருளியிருந்த அறுமுகக்கடவுள், சூரியன் உதித்த பின்பு, அதனை நீங்கி, சேனைகளும் தேவர்களும் சூழத் தென்றிசை நோக்கிச் சென்றார். உமாதேவியார் தம்மை நீக்கி வலஞ்செய்யும் பிருங்கிமுனிவர் துணிந்த வேதமுடிவை உணர்ந்து சிவபெருமானுடைய இடப்பாகத்தைச் சேரவிரும்பிப் பூசித்த திருக்கேதாரத்தை முன்னே தரிசித்தார். விட்டுணுவுக்கும் சிவபெருமானே பரம்பொருள் என்னும் உண்மையை மானுடர்கள் தெளியும்வண்ணம் வியாசமுனிவர் எடுத்த கையே தெளிவித்த காசியம்பதியைத் தரிசித்தார். சிலாத முனிவருடைய குமாரராகிய திருநந்திதேவர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும்பொருட்டு ஒரு மலையாகுவன் என்று அருந்தவஞ்செய்து மலையாகிக் கைலாசபதியைத் தம்முடிமேற் பூனைந்த திருப்பருப்பதத்தைத் தரிசித்தார். உமதேவியாரோடு முனிந்து சுவாமிமலையை விடுத்துப் பாதாளத்திற் சென்று ஒரு குகைவழியே முன்னே தாம் வந்ததும் சுவாமி புட்கரிணிதீரத்திலே விட்டுணு முதலிய தேவர்கள் தம்மைப் பூசித்ததுமாகிய திருவேங்கடமலையைப் பார்த்தார். சிலந்தியும் பாம்பும் யானையும் சிவகோசரியாரும் கண்ணப்பநாயனாரும் நக்கீரதேவரும் கன்னியரும் முத்தியடையும் தக்கிணகைலாசமாகிய திருக்காளத்திமலையைத் தரிசித்தார். காளியானவள் இப்பூமி முழுதையும் அழித்தற்கு எழுந்தநாளிலே பிரமன் முதலியோர் யாவரும் அஞ்சலும் அவள் செருக்கழியும் வண்ணம் சிவபெருமான் தமது ஆடலால் வென்றருளிய திருவாலங்காட்டைத் தரிசித்தார். பிரளயகாலத்தும் அழிவில்லாததாய்ப் பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கு உறையுளாய்ச் சிவபெருமான் மாமரநிழலின்கண் வீற்றிருந்தருள்வதாய் உள்ள திருக்காஞ்சி நகரத்தைத் தரிசித்தார். அங்கே உமாதேவியார் பூசித்த திருவேகம்பத்தையும் விட்டுணுவும் பிரமனும் தேவர்களும் பூசித்த மற்றையாலயங்களையும் தரிசித்தார். ''யானே பரம்பொருள் யானே பரம்பொருள்'' என்று பிரமனும் விட்டுணுவும் இகலும்பொழுது அவர்கணடுவே தோன்றி அவர்களால் அடிமுடி தெரியப்படாததாகித் தன்னைத் தியானித்தோர்க்கெல்லாம் முத்தியைக் கொடுத்துக்கொண்டு நிற்கும் திருவண்ணமலையைத் தரிசித்தார். சிவபெருமான் ஒரு விருத்தப்பிராமண வடிவங்கொண்டு வந்து அடிமையோலைகாட்டிச் சுந்தரமூர்த்தியை வழக்கில் வென்று விவாகத்தை விலக்கி ஆட்கொண்டருளிய திருவெண்ணெய்நல்லூரைத் தரிசித்தார். உமா

தேவியார் புடைவையால் வீசச் சிவபெருமான் தமது திருத்தொடையின் மேற்கிடத்தி இறந்த உயிர்கட்கெல்லாம் திருவைந்தெழுத்தினுண்மையை உபதேசித்துத் தமது சாரூப்பியத்தைக் கொடுத்தருளுமியல்பினுலே காசி போலச் சிறந்த விருத்தாசலத்தைத் தரிசித்தார். பதஞ்சலிமுனிவரும் வியாக்கிரபாதமுனிவருமாகிய இருவரும் தரிசிக்கும்பொருட்டு எல்லையில் லாத பெருங்கருணையினுலே சிவபெருமான் ஆனந்த நிருத்தஞ்செய்தரு ளும் திருத்தில்லைநகரத்தைத் தரிசித்தார். அங்கே கனக சபையின்கண்ணே சிவகாமியம்மையார் தரிசிக்கும்வண்ணம் சபாநாதர் செய்தருளும் உயர் வொப்பில்லாத ஆனந்ததாண்டவத்தைத் தரிசித்து, திருவுளங் கனிந் துருக வணங்கிச் சென்ருர். அகத்தியமுனிவருடைய கையினுள்ள கமண் டலத்தின்கணின்று நீங்கிப் பூமியின்கண் வேறுவேருய்ப் பெருகிப் பற்பல பெயர்களைத் தாங்கிச் செல்லும் காவேரியாற்றின் வடகரையிலுள்ள மண் ணியாற்றங்கரையை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

# குமாரபுரிப் படலம்.

அறுமுகக்கடவுள் மண்ணியாற்றங்கரையை அடைந்த பொழுது, சூரியன் அஸ்தமயனமாஞன். பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் முருகக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே, இவ்வாற்றங்கரையெல்லாம் மணற் குன்றுகள் மலிந்தன, சோலைகள் நிறைந்தன, சிவஸ்தலங்கள் எண்ணில்லாதன இருக்கின்றன. ஆதலால், இந்நதிக்கரையில் இருந்தரு ளுக" என்று பிரார்த்தித்தார்கள். அதுகேட்ட முருகக்கடவுள் தேவத் தச்சனுகிய விசுவகன்மாவை நோக்கி, "இவ்விடத்தில் ஒரு கணத்தி னுள்ளே நமக்கு ஒரு நகரம் செய்வாயாக" என்று பணித்தருளினர். உடனே தேவத்தச்சன் எம்பெருமான் தம்முடைய சேனைகளோடும் தேவர் களோடும் எழுந்தருளியிருக்கும்பொருட்டு மண்ணியாற்றின் தென்கரை யிலே ஒரு திருநகரத்தை மனத்தால் உண்டாக்கிக்கொண்டு, முருகக்கட வுளை வணங்கி, "எம்பெருமானே, இந்நகரத்தினுள் எழுந்தருளுக" என்று விண்ணப்பஞ்செய்தான். முருகக்கடவுள் தேரினின்றும் இறங்கி, தேவர் களும் சேனைகளுஞ்சூழ அந்நகரத்தினுள்ளே புகுந்து, அங்குள்ள வளங்க ளனைத்தையும் நோக்கி, "நாம் இருத்தற்கு இது நல்ல நகரம்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அது கேட்டலும் தேவர்களெல்லாரும் அந்நகரத் திற்குத் "திருச்சேய்ஞலூர்" * எனப்பெயரிட்டார்கள். முருகக்கடவுள் தம்பியர்களும் பூதசேனுதிபதிகளும் தேவர்களும் சூழ்வண்ணம் அங் குள்ள திருக்கோயிலிற் சென்று, எழுந்தருளியிருந்தார். பிரமன் முதலிய தேவர்கள், எம்பெருமான் விடுத்தருள, அத்திருக்கோயிலுக்குப் புறத்தே சென்று, தங்கள் தங்களுக்கு அமைக்கப்பட்ட இருக்கைகளை அடைந் தார்கள்.

* சேய்நலூர் என்பது சேய்ஞலூர் எனப் போலியாயிற்று. இது வடமொழியிலே குமாரபுரி எனப்படும்.

இந்திரனனவன், தாரகாசுரன் கிரௌஞ்சகிரியோடு இறந்தமையால், தன்றுயரமுழுதும் நீங்கிப் பெருமகிழ்ச்சியோடிருந்தான். அப்பொழுது சீர்காழியினுள்ள வனதேவதை இந்திரனை அடைந்து வணங்கி, அவ்விந்திரன் தன்னுபரணங்களையும் தன் மனைவியாகிய இந்திராணியுடைய ஆபரணங்களையும் பொதிந்து தன்னிடத்து வைத்த கிழியை அவனெதிரே வைத்து, ''இறைவனே, நீ இந்திராணியோடு வந்து சீர்காழியிலே தவஞ் செய்தநாளிலே என்னிடத்து வைத்த ஆபரணக்கிழி இது. ஏற்றுக் கொள்க'' என்று சொல்லி நின்றது. இந்திரன் அவ்வாபரணக்கிழியை விரலினாலே நீக்கலும், தன்மனைவியினுடைய ஆபரணங்கள் மேலே தோன்ற, அதுகண்டு, அவனைநினைந்து, காமநோய்க்கவலை அடைந்து, தன்னேவலாளரை நோக்கி, ''இக்கிழியை முன்போலக் கட்டிச் சேமித்து வையுங்கள்'' என்று பணிக்க, அவர்கள் அவ்வாறு செய்தார்கள். பின்னர் இந்திரன் வனதேவதைக்கு விடைகொடுத்து, காமாக்கினியால் வெதும்பிய உள்ளத்தையும் உடம்பையும் உடையலைய், குளிர்மையின்மேல் உளம் வைத்துச் சென்று, பூஞ்சோலையின் புறத்துள்ள ஒரு மணற்குன்றின்மீதிருந்து, காமநோயால் மீக வருந்திப் புலம்பினன்.

இவ்வாறிருக்கும்பொழுது சூரியன் உதித்தது. உதித்தலும், இந்திரன் மனத்தெழுந்த காமாக்கினி தணிந்தது. தணிதலும், இந்திரன் பதை பதைத்து, விரைந்து எழுந்து, நகைத்து, வெள்கினன். ''ஐயையோ! எனக்கு இது வருவதே'' என்றான். ''காமமானது தீமையென்பன யாவையும் விளைக்கும், சிறப்பையும் செல்வத்தையுங் கெடுக்கும், நல்லறிவைத் தொலைக்கும், நன்னெறியைத் தடுத்து, நரகத்தில் விடுக்கும். ஆதலால், ஆராயுமிடத்துக் காமத்தின் மிக்க பகை இல்லை'' என்று நினைந்து, அவ்விடத்து நின்று நீங்கி, தேவர்களெல்லாரும் சூழச்சென்று, அறுமுகக்கடவுள் சந்நிதியை அடைந்து பலமுறை வணங்கி எழுந்து, துதித்துக் கொண்டு நின்றான்.

முருகக்கடவுள் இந்திரனை நோக்கி, ''நாம் சிவபெருமானைப் பூசிக்க விரும்புகின்றோம். நீ அதற்குரிய உபகரணங்கள் பலவற்றையும் வருவிக்கக் கடவாய்'' என்று பணித்தருளினர். உடனே இந்திரன் வணங்கிக்கொண்டு போய், தன்னேவலாளர் பலரை வெவ்வேறிடங்களின் ஏவி, திருமஞ்சனம், நறுமலர், பீதாம்பரம், திருவமுது, தூபம், தீபம், சுகந்தங்கள் முதலிய உபகரணங்களனைத்தையும் விரைவின் வருவித்தான். அறுமுகக்கடவுள் தேவத்தச்சனைக்கொண்டு ஒரு திருக்கோயில் செய்வித்து, சைவாகமவிதிப்படி ஒரு சிவலிங்கந் தாபித்து, பூசைசெய்து, மும்முறை வணங்கித் துதித்தார். அப்பொழுது சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபமீது தோன்றியருளினர். அறுமுகக்கடவுள் எம்பெருமானை வணங்கி எழுந்து, சிரமேல் அஞ்சலிசெய்து நின்று, துதித்தார். இலக்கத்தொன்பது வீரர்களும், தேவர்களும், பூதர்களும் சிவபெருமானைத் தரிசித்து, மெய்ம்மயிர் பொடிப்ப மனங்கசிந்துருக மும்முறை வணங்கி, எண்டிசையும் செவிடுபடும்வண்ணம் துதித்தார்கள். அப்பொழுது சிவபெருமான் சுமாரசுவாமியை நோக்கி, ''உன் வழிபாட்டுக்கு உவகைசெய்தாம். நீ இதனைக் கொள்ளக்கடவாய்'' என்று, உலகமுற்றையும் ஓரிறைப்பொழுதினுள்

முடிக்கும் உருத்திரபாசுபதப் படைக்கலத்தைக் கொடுத்து, ''இது நம் மிடத்தே தோன்றிய படைக்கலம். பிரம விட்டுணுக்களும் இது பெற்றி லர். இதனைத்தாங்க வல்லார் யாவர்! சூரனுடைய சேனைகளைச் சங்கரிக் கும்பொருட்டு, மைந்தனே, நீ இதனைக் கொள்ளக்கடவாய்'' என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

## சூரம்புகு படலம்.

சிவபெருமான் மறைந்தருளலும், முருகக்கடவுள் அவரைத் துதித் துக்கொண்டு, தேர்மீதேறி, வீரர்களும் தேவர்களும் பூதர்களுஞ் சூழத் திருச்சேய்ஞலூரை நீங்கி, காவேரியாற்றைக் கடந்து, திருவிடைமருதூர், மாயூரம், திருப்பறியலூர் முதலிய சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவாரூரை அடைந்தார். அங்குள்ள திருக்கோயில்களைத் தரிசித்துக் கொண்டு கொல்லனுடைய உலையினுள்ள அக்கினியிற் காய்ச்சிய இரும்பு போலும்மிக்கவெப்பத்தையுடைய பாலைவனத்திலே சென்றார். செல்லலும், அப்பாலைவனம் நறுமலர்ச்சோலைபோல மிகக்குளிர்மையுடைத்தாயிற்று.

முருகக்கடவுள் தன்வெம்மை நீங்கிய சுரத்திற் செல்லும்பொழுது, திருப்பரங்குன்றிலே தவஞ்செய்துகொண்டிருந்த பராசரமுனிவருடைய புதல்வர்களாகிய தத்தர், அநந்தர், நந்தி, சதுர்முகர், சக்கிரபாணி, மாலி என்னும் அறுவரும் ஞானநோக்கத்தினாலே அதனை அறிந்து, எம் பெருமானுடைய திருவருளை நினைந்து, திருப்பரங்குன்றினின்று நீங்கி, வடதிசையை நோக்கி நடந்தார்கள். பாலைநிலத்தெல்லைக்கு நேரே வரும் பொழுது, அறுமுகக்கடவுள் அணிமையின் எழுந்தருளிவந்தார். புதல்வர் கள் அறுவரும் முருகக்கடவுளைத் தரிசித்து, வணங்கித்துதித்து நின்று, ''தேவதேவரே, அடியேங்களுக்குத் திருவருள் செய்க'' என்று விண்ணப் பஞ்செய்தார்கள். அப்பொழுது இந்திரன் முருகக்கடவுளை வணங்கி நின்று ''எம்பெருமானே, பராசரமுனிவருடைய புதல்வர்களாகிய இவர்களறுவ ரும் சிறுபருவத்திலே சரவணப்பொய்கையிற் பாய்ந்து முழுகி அலைக்கலுற் றார்கள். அப்பொழுது அங்குள்ள மீன்கள் இடந்தோறும்ஓட, இவர்கள் அது கண்டு, அவைகளைப் பற்றிக் கரையில் விடுத்து, உலாவினார்கள். உலாவும் பொழுது, மத்தியானசந்தி முடிக்கும்பொருட்டுப் பராசரமுனிவர் அங்கு வந்தார். அவர் தம் புதல்வர்களாகிய இவர்களுடைய புன்தொழிலை நோக்கி, கோபங்கொண்டு, 'பிள்ளைகாள், நீங்கள் இப்பொய்கையிலே மீன்களாய்த் திரியக்கடவீர்கள்' என்று சபித்தார். உடனே இவ்வறுவரும், மீன்களாகி, அஞ்சி, 'இம்மீனுருவம் நீங்குவது எந்நாள்? சொல்லியருளும்' என்றார்கள். பராசரமுனிவர் அதுகேட்டு, 'இப்பொய்கையிலே அறுமுகக் கடவுள் சிவபெருமானது திருவருளினால் எழுந்தருளியிருக்கும்பொழுது அவரை எடுக்கும் உமாதேவியாரது திருமுலைப்பால் வெள்ளமாய்ப் பெரு கும். அதனை நீங்கள் உண்ணும்பொழுது முன்னையுருவத்தை அடைவீர்கள்' என்று சொல்லி, மத்தியானசந்தியை முடித்துக்கொண்டு, சென்றார்.

மீன்வடிவடைந்த இவ்வறுவரும் அன்று தொட்டு அளப்பில்காலம் மயக்கம் பொருந்திச் சரவணப்பொய்கையிற்றிரிந்தார்கள். எம்பெருமானே, நீர் அப்பொய்கையில் எழுந்தருளியிருத்தலும், எம்பெருமாட்டியார் கண்டு உம்மை எடுப்ப, அவருடைய திருமுலைகளினின்றும் சொரிந்த பால் வெள்ளமாய்ப் பெருகியது. அதனை இவர்கள் உண்டு, மயக்கநீங்கி, முன்னை வடிவத்தை அடைந்து, சிவபெருமானுடைய திருவருளினாலே திருப்பரங் குன்றத்திற்சென்று தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். இப்பொழுது எம் பெருமான் இங்கு எழுந்தருளுவதை அறிந்து, வந்தார்கள்'' என்று விண்ணப்பஞ்செய்தான்.

முருகக்கடவுள் அதுகேட்டு, பராசரமுனிவருடைய புதல்வர்களை நோக்கி, ''நீங்கள் நம்மோடு வாருங்கள்'' என்று திருவாய்மலர்ந் தருளினர். அவர்களறுவரும் ''எம்பெருமானே, உம்மைச் சரணடைந் தேம்'' என்று வணங்கிச் செல்ல, சண்முகக்கடவுள் சூரத்தைக் கடந்து போயினர்.

திருச்சிற்றம்பலம்.

## திருச்செந்திப்படலம்.

முருகக்கடவுள் சூரத்தைக் கடந்து சென்று, சிவபெருமான் எழுந் தருளியிருக்கும் திருச்செங்குன்றூரைத் தரிசித்துக்கொண்டு, கடற்கரையின் உள்ள அலைவாயாகிய திருச்செந்துரை அடைந்து, தேவத்தச்சனைக்கொண்டு ஒரு திருக்கோயில் செய்வித்து, தேரினின்றும் இறங்கி, அதனுள்ளே புகுந்து, வீரர்களும் பூதசேனாதிபதிகளும் தேவர்களும் துதிப்ப, திவ்விய சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தருளினர். வீற்றிருந்தருளியபின் இந்திரனை நோக்கி, ''சூரன் முதலாயினோர் பிறந்ததும், தவஞ்செய்ததும், வரம் பெற்றதும், அரசு செய்ததும், அவர்களுடைய மாயமும், வெற்றியும், வலியும், மேன்மையும், உங்களிடத்து இந்நாள்காறும்செய்த துன்பமு மாகிய எல்லாம் நமக்கு சொல்லக்கடவாய்'' என்று பணித்தருளினர். இந்திரன் குருவாகிய பிருகற்பதியை அன்போடு நோக்கி, ''நீர் இவை களைச் சொல்லியருளும்'' என்றான். பிருகற்பதி அதற்கியைந்து, அறுமுகக் கடவுளுடைய திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே, நீர் உயிர்களோ டாறுஞ் செறிந்திருக்கின்றீர், எப்பொருளையும் அறிவீர். அடியேங்களுடைய துன்பத்தை நீக்கத் திருவுளங்கொண்டு பாலவடிவங்கொண்டருளினீர். உமது செயலை யாவர் அறிய வல்லவர்! முன்னே எல்லையில்லாத புவனங் களும், மும்மூர்த்திகளும், உயிர்த்தொகைகளும் அடங்கிய விசுவரூபத் தைக்கொண்டு தோன்றியருளினீர். உமது மாயத்தை யாவர் அறியவல் லவர்! அசுரர்களுடைய தன்மையை நீர் விரும்பியது, அதனை அறிதற் பொருட்டன்று, சிறியேங்களுடைய துன்பத்தைக் களைந்து இன்பத்தை அருளும்பொருட்டே. ஆகையால், அசுரர்களுடைய தன்மைகளெல்லாவற் றையும் அடியேன் அறிந்தவாறே சொல்கின்றேன்' என்று சொல்லலுற்றார்.

திருச்சிற்றம்பலம்.

**உற்பத்திகாண்டமுற்றிற்று.**

இரண்டாவது

# அசுரகாண்டம்.

## மாயைப்படலம்.

ஹரிலான் குணங்குறி யிலான் செயலிலா னுரைக்கும்
பேரிலா னெருமுன் னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல்போக் கிலான் மேலிலான் றனக்கு
நேரிலா னுயிர்க்கட வுளா யென்னுளே நின்றான்.

காசிபமுனிவருடைய புதல்வர்களாகிய அறுபத்தாறுகோடியசுரர்களுக்கு அரசனுகிய அசுரேந்திரன் மங்கலகேசியென்னும் அரக்கியை விவாகஞ்செய்து, சுரசையென்னும் மகளைப் பெற்றான். அவள் வளர்ந்தபின், அசுரகுருவாகிய சுக்கிரன் மாயையின் கல்விகளனைத்தையும் அவளுக்குணர்த்தி, அவளுடைய கல்வித்திறத்தை நோக்கி, அவளுக்கு மாயையென்று பெயரிட்டார். பின்பு அசுரர்களுடைய சிறுமையையும், தேவர்களுடைய பெருமையையும், தேவர்கள் அசுரர்களால் வருந்தும்வண்ணம் திருநந்திதேவர் சபித்தமையையும் தம்முள்ளத்து நினைந்து, மேல்வருந்தன்மையையும் அறிந்து, மாயையை விளித்து, "மாயையே, கேள். விட்டுணுவாலும், இந்திரனாலும், இருடிகளாலும், தேவர்களாலும் அளப்பில்லாத அசுரர்கள் இறந்தார்கள். உன்றந்தையும் வலியிழந்தொடுங்கினன். இனி உன்னாற்றானே அசுரர்களுக்கு மேன்மையுண்டாகும். நீ இலக்குமியும் வந்து வணங்கற்பாலதாகிய பேரழகையுடைய ஒருருவத்தைக் கொண்டுபோய், காசிபமுனிவரை அடைந்து, உன் வல்லபத்தைக் காட்டி, ஆசை பூட்டி, இரவிலே அவரோடு புணர்ந்து, அசுரர்களை உண்டாக்கி, அவர்களுக்குப் பெயரிட்டு, அவர்கள் எல்லையில்லாத வளங்களைப் பெறும் பொருட்டு அவர்களுக்கியலும் யாகங்களையும் தவங்களையும் உணர்த்தி, மீள்க்கடவாய்" என்று பணித்தார். மாயை, அதற்கியைந்து, சுக்கிரனை வணங்கிப் போய், தன்றந்தையாகிய அசுரேந்திரனுக்கு இதனைச்சொல்லி, விடைபெற்றுக்கொண்டு, மகாமேருவுக்கு வடதிசையிலே காசிபமுனிவர் தவஞ்செய்யும் எல்லையை அடைந்தாள்.

மாயை காசிபமுனிவருடைய இருக்கையிலே வாவிகளையும், பூஞ்சோலைகளையும், செய்குன்றுகளையும், மண்டபங்களையும், பூஞ்சயனங்களையும் உண்டாக்கினள். காசிபமுனிவர் அவற்றையெல்லாங் கண்டு, அதிசயமடைந்து, ஆசையினாலே அவற்றை நெடுநேரம் உற்றுநோக்கி, இவையெல்லாம் இங்கே செய்தவர் யாவர்" என்றெண்ணி, சுற்றெங்கும் பார்த்து, ஒருவரையுங் காணாது, சித்திரப்பாவைபோலாகி, "வரனாடி

ழிந்ததோ! இந்திரனுடைய நாடிழிந்ததோ! குபேரன் முதலியோரது நாடி ழிந்ததோ! இங்ஙனமன்றுயின், இவை இங்குத் தோன்றியவாறறிகிலேன். இது பிரமதேவருடை செய்கையோ! விட்டுணுவினுடைய செய்கையோ! அவ்விருவரானும் அறியப்படாத சிவபெருமானுடைய செய்கையோ! பிற ருடைய செய்கையோ! அறிகிலேன். இக்காட்டிலே புகுந்த இத்திரு நன் மைக்கேதுவோ! தீமைக்கேதுவோ! இதுவும் அறிகிலேன். இங்கே யாது நிகழினும் நிகழுக. அதனியற்கை நமக்கு மேலே விளங்கும். நம்மறிவு இங்ஙனஞ்சென்றது பழுது'' என்று சிந்தித்து, தம்மனத்தைத் தேற்றி, முன்போலத் தவஞ்செய்யப் புகுந்தார். புகும்பொழுது, அதுகண்ட மாயை ஓரிரத்தினக்குன்றின்மேலே பேரழகோடு தோன்றி நின்றுள். காசிபமுனி வர் அவளை நோக்கி, மையல்கொண்டு, தவத்தை விடுத்து, அவளெதிரே சென்று நின்று, ''இலக்குமியினும் அழகிய மாதே, நின்வரவு நன்று நன்று. உன்குலம் யாது? உன்வாழ்பதி யாது? உன் பெயர் யாது? உன்னைப் பெற்றவர் யாவர்? சொல்லுக'' என்றார். மாயை அதுகேட்டு, ''முனிவரே, நீர் இவ்வாறு வினவி நிற்றல் தகுதியன்று. அன்றியும் நீர் என்னிடத் திற்றனித்து வந்தீர். தவஞ்செய்வார்க்கு இது நன்று! தவத்தை விடுத்து அ றி வி ல் ல ா த ா ர் போலப் பேசிக்கொண்டு என்னையணுகுதல் நீதி யன்று. உமது கடனைச் செய்யப்போம்'' என்றுள். காசிபமுனிவர் ''மங் கையே, கேள். எண்ணில்காலம் உடலம் வெம்ப உள்ளம் மெலியத் தவம் பல செய்தல் இங்கு வேண்டியவற்றை அடைதற்கன்றே. நான்றவஞ் செய்தது உன்னைச் சேர்தற்பொருட்டேயாம். நீ இங்கு வந்தனை. ஆகவே, என்றவத்திற்குப் பயன் எய்தியது. இனித் தவம் வேண்டுமோ! பேரும் ஊரும் பிறவும் வினவிய எனக்கு ஒரு விடையுஞ் சொல்கின்றிலை. ஆயி னும், அவையெல்லாம் பின்னர் அறிந்துகொள்வேன். என்னைக் காமநோய் ஈர்கின்றது. இரங்கக்கடவாய்'' என்றார். மாயை அதுகேட்டு நகைசெய்து, ''நீர் இவ்வாறு நெடுந்தவஞ்செய்தது என்பொருட்டா! அங்ஙனமன்றே. பொய்சொல்லல் முறையா'' என்றுள். காசிபமுனிவர் ''நான் பொய் சொல்லிற்றிலேன். மெய்ம்மையே சொன்னேன். யான் நெடுங்காலந் தவஞ் செய்தது முத்திபெற்றுய்யும்பொட்டு. அதனையே எனக்கருள் செய்ய வந் தாய். உன்னைப் புணர்தலன்றே முத்தியாவது. இதுவன்றி எனக்குப் பிறிதொரு பேறுமில்லை. ஆதலால், உன்னையே அடைந்தேன்'' என்றார். மாயை அவரை நோக்கி, ''நான் உத்தரபூமியினுள்ளேன். மேருமலைக்குத் தென்றிசையிலுள்ள கங்காநதியிலே ஸ்நானஞ் செய்யச் செல்கின்றேன். நீர் இங்கு நில்லும்'' என்றுள். அதற்குக் காசிபமுனிவர் ''கங்கை முத லிய நதிகளேழையும், சிவதலங்கள் யாவையும், விட்டுணு தலங்கள் யாவையும், ஓரிமைப்பொழுதினுள் இங்கே அழைப்பேன். பொன்னுலகை யும், விஞ்சையருலகையும், திக்குபாலகர்களுலகையும், பிறருலகையும், அங் கங்குள்ள தேவர்களோடும் வளங்களோடும், இப்பொழுதே இங்கு விரைந் தழைக்கவல்லேன். மும்மூர்த்திகளையும், மூவுலகத்துள்ளோர் யாவரையும், நீ காணவெண்ணினும், இங்கே வரும்வண்ணஞ் செய்வேன். நீ விரும்பினை யாயின், தேவாமிர்தத்தையும் விரைந்து தருவேன். நீ எப்பொருளை விரும்பினும் அப்பொருள் யாவையும் இமைப்பொழுதினுள்ளே தருவேன்.

அஃதன்றிப் புதல்வர்களை விரும்பினும் உண்டாக்குவேன். இவர்கட்கு ஒப்பில்லை என்று கூறும்வண்ணம் அவர்களை வானுலகத்து விடுப்பேன். மேனகை அரம்பை முதலிய தேவமகளிர்கள் வந்து உன்னேவல் புரியும்வண்ணஞ் செய்வேன். மையல்கொண்டு தியங்கும் எனதாவி உய்யும்வண்ணம் விரைந்தருள்செய்க'' என்றூர். மாயை முறுவலெய்தி, ''தனித்தவளென்று இவ்வாறு சொன்னீர். இனி இதனை ஒழித்துவிடும். மேலோருக்கு இது இசையுமா? நானும் முன்னினைந்தவிடத்துச் செல்வேன். நீர் இங்கே தவஞ்செய்துகொண்டிரும்'' என்று சொல்லி, கங்கையின் திசையை நோக்கி விரைந்து செல்வாள் போலச் சென்றுள். செல்லலும், காசிபர் தொடர்ந்து செல்ல, மாயை அரூபமெய்தி மறைந்து நின்றுள். காசிப முனிவர் எங்கும் நோக்கிக்காணாது, வருந்திப் புலம்பினர்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

## அசுரர்தோற்று படலம்.

காசிபமுனிவர் மாயையைத் தேடி மயல்கொண்டு வாடும்பொழுது, சூரியன் அஸ்தமயனமானான். காசிபமுனிவர் அவ்விரவிலே காமநோயால் மிகவருந்தி, மாயையை நினைந்து, பலவாறு புலம்பிச் சோர்ந்தார். அப் பொழுது மாயை காசிபர் முன்பு வெளிப்பட்டு நின்றுள். அதுகண்ட காசிபமுனிவர் மகிழ்ச்சிகொண்டு, அவண்முன் சென்று, ''நீ என்னை விரைந்தாள்வாயாக'' என்று வேண்டினர். மாயை அவரை நோக்கி, ''அஞ்சாதொழிக. இங்கு நின்ற என்வடிவத்துக்கியையும் வடிவமும் இனியான் கொள்ளும் வடிவத்தை ஒக்கும் வடிவமும் உடனே உடனே கொள்வீராயின், நான் உம்மைப் புணர்வேன்'' என்றுள். காசிபமுனிவர் அது கேட்டலும் மனமகிழ்ந்து, பேரழகையுடைய ஒரு தேவவடிவங்கொண்டார். மாயை அது கண்டு வியந்து, நகைசெய்து, அவரைக் கைப்பற்றிக்கொண்டு சென்று, அங்குள்ள ஒரு மண்டபத்தினுள்ளே புகுந்து, தன்னணையால் உளதாகிய சயனத்தின்மீது முதல்யாமத்தில் அவரோடு கூடினுள். அப் பொழுது சூரபன்மா அவளிடத்துப் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்துந் தோன்றிய வேர்வையினின்றும் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் சூரபன்மாவையும் அங்கேநிறுவி, காசிபமுனிவரோடும் வேறொரு மண்டபத்தினுள்ளே புகுந்து, பெண்சிங்க வடிவங்கொண்டாள். காசிபமுனிவர் ஆண்சிங்க வடிவங் கொண்டு, இரண்டாம்யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது ஆயிரஞ் சிங்கமுகங்களும் இரண்டாயிரங் கைகளுமுடைய சிங்கமுகாசுரன் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்தினுந்தோன்றிய வேர்வையினின்றும் சிங்கமுகத்தர்களாகிய நற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் சிங்கமுகாசுரனையும் அங்கே நிறுவி, வேறொரு மண்டபத்தினுள்ளே புகுந்து, பெண்யானை வடிவங்கொண்டாள். காசிபமுனிவர் ஆண்யானை வடிவங்கொண்டு, மூன்றும் யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது நான்குகோடுகள் பொருந்திய யானை

முகத்தையுடைய தாரகாசுரன் பிறந்தான். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்தினும் தோன்றிய வேர்வையினின்றும் யானைமுகத்தையுடைய நாற் பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயை அவ்வசுரர்களையும் தாரகாசுரனையும் அங்கே நிறுவி, வேறொரு மண்டபத்தினுள்ளே புகுந்து, ஆட்டுப்பிணை வடிவங்கொண்டாள். காசிபமுனிவர் ஆட்டுக்கடா வடிவங்கொண்டு, நான்காம்யாமத்தில் அவளோடு புணர்ந்தார். அப்பொழுது அசமுகி பிறந்தாள். அப்புணர்ச்சிக்கண் இருவர் சரீரத்தினும் தோன்றிய வேர்வையினின்றும் ஆட்டுமுகத்தையுடைய முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தார்கள். மாயையும் காசிபமுனிவரும் அவர்களை அங்கே நிறுவி,வேறுள்ள மண்டபங்களோறும் புகுந்து, யாளி, புலி, குதிரை, மான், கோ, கரடி, பன்றி, கூளி முதலிய வடிவங்களெல்லாங்கொண்டு, வைகறையிலே புணர்ந்து, அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்களைப் பெற்றார்கள். அப்பொழுது சூரியன் உதித்தான். மாயையும் காசிபமுனிவரும் தங்கள் தங்கள் முன்னை வடிவத்தைக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் பிள்ளைகளாகிய சூரன் முதலிய நால்வரையும் இரண்டிலக்கம் வெள்ளம் அசுரர்களையும் அற்புதத்தோடு கண்டு, அன்பினையுடையர்களாய் நின்றார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## காசிபனுபதேசப் படலம்.

சூரபன்மன் சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் தன்னுடன் வரச் சென்று, காசிபமுனிவர் மாயை என்னும் இருமுதுகுரவர்களுடைய பாதங்களை வணங்கி, ''நாங்கள் செய்வதென்னை? சொல்லுங்கள்'' என்றான். அதுகேட்ட காசிபமுனிவர் சொல்வாராயினர் :

''பிள்ளைகாள், நான் உங்களுக்கு ஒருறுதியை உணர்த்துகின்றேன். நீங்கள் மூவிரும் அந்நெறியே நிற்கக்கடவீர்கள். அறிவால் அமைந்த பெரியோர்கள் ஆராயத்தக்க பொருள்கள் பதி, பசு, பாசம் என மூன்றும். வேதாகமங்களெல்லாவற்றாலும் உணர்த்தப்படுவன இவையே. நித்தியராய், வியாபகராய், ஞானானந்தமயராய், உயிர்கள்பொருட்டுப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் சிவபெருமானே பதியெனப்படுவர். வேண்டுதல் வேண்டாமையில்லாத சிவபெருமானுடைய இலக்கணத்தைச் சொல்லுதல் யாவர்க்கும் அரிது. வேதங்களாலும் துணியப்பாடாத அவருடைய இலக்கணத்தை இத்தன்மையதென்று நாம் பேசவல்லமா! ஆணவம், மாயை, கன்மம் என்னும் மும்மலங்களாகிய பாசங்களாலே பந்திக்கப்பட்டுள்ள பசுக்களாகிய உயிர்கள் எண்ணில்லாதன. அவை அநாதியே உள்ளன. அவை தாம் தாம் செய்த நல்வினை தீவினைகளினாலே இடையறாது பிறந்திறந்துழலும். பிருதிவியண்டத்தும், அப்புவண்டத்தும், தேயுவண்டத்தும், வாயுவண்டத்தும், ஆகாயவண்டத்தும் உதிக்கும். அவற்றிற்கு ஓரிடமே நிலையென்று சொல்லற்பாலதா! அவை தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றத்தையுடை

யனவாம். அவை பிறக்குமுன் கருப்பத்தினும் அழியும், பிறந்தபின்னும் அழியும், சிலநாளிருந்தும் அழியும், காளைப்பருவத்தினும் அழியும், மூப்பினும் அழியும், அவற்றினிலையாமை இத்தன்மையதென்று சொல்லலாகுமா! உயிர்த்தொகை கதிரெழுதுகளினும் மிகுதியுடைத் தென்று சொல்லுதலும் அறியாமையே. இறந்தவுயிர்களும் பிறந்தவுயிர் களும் இவ்வளவையுடையனவென எண்ணற்பாலனவா! கல்வியும், வீர மும், செல்வமும், வலியும், பிறவும் நீர்க்குமிழிபோல நிலையில்லாதன வாம். தருமமென ஒரு பொருளுண்டு. அது இருமையின்பத்தையும் எளி திற் பயப்பது. அது அருளமயினெய்தும் பொருள். அது ஒருமையுடையோர்க் கன்றிப் பிறர்க்கு அறிவரிது. இத்துணைச் சிறப்பினதாகிய தருமத்தை ஒருயிர் செய்யுமாயின், அன்பும் அருளும் உண்டாகும். அவை உண்டாக, தவம் உண்டாகும். அஃது உண்டாக, அவ்வுயிர் சிவபிரானை அடையும். அடையின், பிறவிக்குக் காரணமாகிய மும்மலங்களினின்று நீங்கி, பேரின் பத்தை அனுபவிக்கும். ஆதலால், தவம்போலச் சிறந்தது பிறிதொன்று மில்லை. ஐம்பொறிகளை அடக்கித் தவஞ்செய்து, முத்தியின்பத்தைப் பெற் றவர் சிலர். இம்மையின்பத்தைப் பெற்றவர் சிலர், இருமையின்பத்தை யும் பெற்றவர் சிலர். தம்முடம்பை வாட்டி நெடுங்காலந் தவஞ்செய் தவரல்லரோ தேவர்களாகி மேற்பதங்களைப் பெற்று வாழ்வோரெல்லா ரும். பத்திமையோடு தவஞ்செய்து முத்தியின்பத்தைப் பெற்றவர்களை இவ்வளவினர்களென்று சொல்வதரிது. தவஞ்செய்து இருமையின்பத்தை யும் பெற்றவர்கள் பிரமா விட்டுணு முதலியோர். தவஞ்செய்யாது பிற வுயிர்களுக்குத் துன்பஞ்செய்யும் பாவிகளுக்கு இருமையின்பமும் இல்லை. அவர்கள் மீண்டும் மீண்டும் பிறவித்துன்பத் தழுந்துவர்கள். இவ்வுண் மையை அறிந்து அறிவிப்பினும், பூமியிலுள்ளோர் கொலை களவு முதலிய பாவங்களினின்றும் நீங்குகின்றிலர். அதனால் முத்தியின்பம் பெறுது சனனமரணத் துன்பங்களை அடைகின்றனர். இருமையின்பத்துக் கும் ஏதுவாயுள்ள தவத்துக்கு உயர்வுமில்லை, ஒப்புமில்லை. தவத்தை ஒப் பது தவமேயாம். ஆதலால், பிள்ளைகளே, நீங்கள் தருமத்தைச் செய்யுங் கள். பாவத்தை விலக்குங்கள். சிவபெருமானைத் தியானித்துப் பெருந் தவம் புரியுங்கள். இதுவன்றிச் செய்யத்தக்கது யாது! உடம்பை வாட் டித் தவஞ்செய்வோர் உலகமெல்லாம் வியக்கும்படி வாழ்வர், அடைந் தாரைக் காப்பர், பகைவரை அழிப்பர், விரும்பிய பொருள்களெல்லாம் அடைவர், நித்தராய் இருப்பர். இது உங்கண்மனத்தே நிடம்பெறும் வண்ணம் உங்களுக்கு ஒரு கதை சொல்வேன்'' என்று காசிபமுனிவர் சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

## மார்க்கண்டேயப் படலம்.

"கடகமென்னும் நகரத்திலே பெருந்தவத்தினுற் சிறந்த குச்சகர் என் னும் பிராமணர் ஒருவருளர். அவருடைய புதல்வராகிய கௌச்சிகர் என் பவர் வேதங்களின் மிக வல்லராய், பிறவிக்கடலினின்றும் நீங்கும்பொருட்

டுச் சிவபெருமானைச் சித்தித்துத் தவஞ்செய்யக் கருதி, அங்குள்ள ஒரு தடாகக்கரையை அடைந்து, உண்டியும் உறக்கமுமின்றி, மௌனம் பொருந்தி, ஆத்தீண்டு குற்றிபோல அசைவின்றி இருந்துகொண்டு, சிவ பெருமானுடைய திருவைந்தெழுத்தைச் சிந்தித்து, பேரின்பக்கடலின் மூழ்கித் தவஞ்செய்தார். செய்யும்பொழுது, மரை காட்டா முதலிய மிருகங்கள் தங்கள் தங்கள் உடம்பினுள்ள தினவு நீங்கும்வண்ணம் அவருடைய சரீரத்திலே உரைத்துக்கொண்டு போகும். இவ்வாறு செய்யவும், கௌச்சிகமுனிவர் இதுவொன்றும் அறியாது தவஞ்செய்துகொண்டிருந்தார். அதனை அறிந்த விட்டுணு, தேவர்கள் சூழ, அங்கு வந்து, அவருடைய அருந்தவத்தைக் கண்டு, அற்புதங்கொண்டு, அவர்முன் சென்று, அவரது சரீரத்தைத் தமது திருக்கரத்தினுலே தடவி, 'முனிவனே, உன பெயர் மிருககண்டுயன்' என்றூர். உடனே மிருகண்டுயர் எழுந்து, கை தொழுது நின்றூர். விட்டுணு அவரை நோக்கி, 'அநாதிமுத்த சித்துருவாகிய சிவபெருமானது பெருங்கருணை உன்னிடத்தே பெருகுக. நீ முன் செய்த தீவினைகளெல்லாம் நீங்குக' என்று சொல்லி, தேவர்களோடு மறைந்தருளினர்.

விட்டுணு மறைந்தருளலும், மிருகண்டுயர் தமது தந்தையாராகிய குச்சகமுனிவரிடத்தே சென்று, அவரை வணங்க, அவர் மனமகிழ்ந்து, எடுத்துத் தழுவிக்கொண்டு, 'நீ தவஞ்செய்தபோது நிகழ்ந்ததனைச் சொல்வாயாக' என்று வினவினர். மிருகண்டுயர் தமது தந்தையார் கேட்ப நிகழ்ந்தனவெல்லாம் விண்ணப்பஞ்செய்தார். அதுகேட்ட குச்சகமுனிவர் மனமகிழ்ந்து, 'இத்தன்மைத்தாகிய தவம் உன்குலத்தார்களுள் உனக்குப் போல வேறியாவர்க்கு உளது! இத்தவஞ்செய்த உனக்கு அரியது யாது! பூமி அந்தரம் சுவர்க்கமென்னும் மூவுலகத்தினும் உள்ளவர்களுள் உன்னை ஒப்பவர் யாவர்! நீ செய்த தவத்தைச் சிவபெருமானேயன்றி வேறியாவர் காண்பவர்'' எனப் புகழ்ந்து கூறினர். பின்பு சிவபெருமானது திருவருளினுலே வேறொரு நினைப்பு வரலும், குச்சகமுனிவர் மிருகண்டுயரை நோக்கி, 'மைந்தனே, வேதத்திலே விதிக்கப்பட்ட பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நான்காச்சிரமங்களுள் முன்னையதை இன்றுகாறும் அனுட்டித்தாய். பின்னையவிரண்டும் பின் அனுட்டிக்கப்படுவனவாதலால், அவற்றை இங்கே பேசவேண்டுவதின்று, இரண்டாவதாகிய கிருகத்தாச்சிரமத்தை இனி நீ அனுட்டித்தல் வேண்டும்' என்றூர்.

மிருகண்டுயர் அதுகேட்டு, 'எந்தையார் இனியதோருறுதி சொன்னர்' என்று உள்ளே முறுவலித்து, தந்தையாரை நோக்கி, 'அநாதியே பிணித்த பாசத்தை அறுக்கவேண்டிய சிறியேன் பின்னும் ஒரு பாசத்தினுலே பிணிக்கப்படுவேனையின், பசுபதியாகிய சிவபெருமானை எவ்வாறு அடைவேன்! ஐயையோ! பிறவித்துன்பமாகிய பெருங்கடலின் வீழ்ந்து உலைவேனே! தன் கைகளே பற்றுக்கோடாகத் தவமும் முடவனொருவன் அக்கைகளுக்கும் நோயொன்று வந்தக்கால் யாது செய்வான்! நானும் அவன்போலத் தளர்வேனே! தவவொழுக்கம் இருக்க இல்லொழுக்கம்

பூண்டு வினைகளைப் போக்கக் கருதுதல், நல்லநீர் இருக்கச் சேற்றிலே மூழ்கிச் சரீரத்தழுக்கை நீக்கக் கருதுதல்போலுமன்றே! பூமியினுள்ள அளப்பில்லாத பெரும் பாவங்களைப் பிரமதேவர் பெண்ணுருவமாகப் படைத்தனர். என்பிதாவே, உமக்கு அது விளங்கும். அவ்வியல்புடைய பெண்களை மனத்தே நினைக்கும் பாவம் ஏழுபிறப்பினும் நீங்காதே. இச்சை கொண்டு சுழலாநின்ற ஐம்புலன்களாகிய பூதங்கள் இழுக்கப் புலம்பா நின்ற சிறியேனைப் பெண்ணெனிய பேயும் வந்து பற்றியக்கால், யாதுசெய் வேன்! ஐயையோ எனக்கோ இதுவரும்! பெண்ணைசையானது பலநாளும் பூமியின்கண்ணே துன்பத்தின் மூழ்குவிக்கும், பின்னுளிலே நரகக்குழியில் வீழ்த்திவிடும், எந்நாளில் ஆடவருக்கு இன்பம் பயக்குமோ அறியேன். துன்பநுகர்தற்கு ஏதுவாகிய தீவினையையுடையோர் இன்ப நுகர்வார் போலப் பெண்கள் வயப்படுகின்றனர். நாயானது தன் பற்கள் நடுங்கும் வண்ணம் தசையில்லாத எலும்பைக் கறித்தால் சுவையைப் பெறுமா! பெண்ணுசையானது ஒருவருள்ளத்தே புகுமாயின், அது பின்னர் நீங்கு மியல்புடையதா! அது குன்றுது எந்நாளும் உயிரைப் பற்றி ஈரும். நஞ்சு மிக இனிது; அது பின் ஒருநாளும் நலியாது, பெண்களுடைய உள்ளக்கருத் துப் பிறரால் அறியப்படுவதா! அவரோடு நீக்கமின்றிப் பலநாட் பழகி அவருள்ளத்திருக்குந் தேவனும் உணர்தற்கரியதன்றே! மனமொன்று வாக் கொன்று செய்கையொன்றுகப் பேதைமையையே கடைப்பிடித்துப் பெரும் பவஞ்செய்யும் பெண்கள் வலியிற்பட்டு மயங்கிஞரெல்லரோ பிறந்தும் இறந்தும் உழல்கின்றேர்! ஆனல் உலகத்தின்கண்ணே கற்பினையுடைய மகளிர் இல்லையோ என்பீராயின், தத்தங் கணவர்வழி வழுவாதொழுகும் மகளிருஞ் சிலர் உண்டு. ஒரு மரக்கொம்பிலே தீயை மூட்டினல் அது மிகச் சுவாலித்துத் தான் பற்றல்கூடாத பலவற்றினும் போய்ப்பற்றும். அது போலவே, ஒரு பெண்ணினிடத்தே காமமுடையராயின், அது வளர்ந்து தான் பற்றல்கூடாத பலரிடத்தும் போய்ப் பற்றும். பேரழகையுடைய மகளிர் கள் பலர் புடைசூழவும், இந்திரனுக்குக் கௌதமமுனிவருடைய பன்னி யாகிய அகலிகையினுலே ஒருகாலும் நீங்காத பெரும்பழி வந்தெய்தியது. பிரமதேவர் தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமைமேல் மையல் கொண்டு நான்கு முக முடையராயினமை நாம் உணராததன்று. மற்றைத் தேவர்களும் முனிவர்களும் காமத்தினுல் அடைந்த துன்பங்களெல்லாம் சொல்லப்புகின், அளவுபடா. அவையெல்லாம் நிற்க, பிறவித்துன்பத்தை நீக்க விரும்பிய யான் அத்துன்பத்தை மேன்மேலும் வளர்க்குமியல்புடைய பெண்கள் கூட்டத்தை விரும்பேன். இந்திரன் முதலிய தேவர்களுடைய பதத்தையும் விரும்பேன். இவ்வாழ்க்கை யென்னும் சிறையினும் வீழேன். ஐம்புலங்களின் மாயும் மயக்கத்தை ஒழித்து, தவமென்று சிறப்பித்துச் சொல்லப்படும் அழியாச் செல்வத்தைப் பெற்று இன்பமுற்றிருப்பேன்' என்றூர்.

குச்சகமுனிவர் அதுகேட்டு, 'இவன் இல்லொழுக்கத்தை இகழ்கின் றூன். வேதத்துணிவையும் கொள்கின்றிலன். தவமயல் பூண்டான்' என்று துயரங்கொண்டு, மிருகண்டுயரை நோக்கி, 'மைந்தனே, ஒரு கன்னியை விவாகஞ்செய்து குலத்தொழிலே நாடாத்தும்பொருட்டுக் குமாரரைப்

பெற்ற பின்னன்றே தவஞ்செய்து முத்தியடைதல் முறைமை. அறியாமையிற் கட்டுண்ட உலகத்தார்போல நீயும் காமவின்பத்தை நுகர்தற் பொருட்டா இல்லொழுக்கத்தை அனுட்டிக்கச் சொன்னேன். இறந்த மேலோர்களுடைய துன்பத்தையும் நரகமடைதலையும் நீக்கும்வண்ணம் புதல்வரைப் பெறும்பொருட்டு ஒரு கன்னியை நீ விவாகம்பண்ணல் வேண்டும். புத்திரரென்னும் சொல்லின் பொருளை மறந்தாய்போலும். இவ்வுண்மையை நீ ஆராய்ந்து இல்லறம் பூண்டு நிற்றலே உத்தமநெறி. தவத்தினதொழுக்கம் அதுவே. ஒரு மலையின்மீதேற விரும்பினேன் அதன் சாரலை அடைந்து, படிப்படியே ஏறிப்போதலன்றி, கீழ் நின்று மேலே பாயுந்தன்மைக்கொக்கும் நீ இப்போது தவஞ்செய்யக் கருதுதல். மரம் விலங்கு முதலியவற்றை, அவற்றால் வரும் பயனைக் கொள்ளுதற்கன்றே, நீக்காது கொள்ளுவர். அவ்வாறே நீயும் இல்லறமும் மகப்பேறுமாகிய பயன்களின்பொருட்டே ஒரு கன்னியை விவாகஞ்செய்து பின்பு அருந்தவஞ்செய்யக்கடவாய். இவ்வில்வாழ்க்கையை முன்னாளே நினைத்திலை. இந்நாள்காறும் பிரமசரியத்தையே அனுட்டித்தாய். தேவர்களுக்கு அவி முதலிய கிறப்புக்களைச் செய்யாது, மைந்தனே, நீ இப்பொழுதே தவஞ்செய்யக் கருதுதல் தகுதியா! இல்லொழுக்கத்தில் நிற்பவருக்குத் தத்தமொழுக்கத்திலே தவறுண்டாயினும், அதற்குப் பரிகாரமுண்டு. தவவொழுக்கத்திலே நிற்பவருக்குத் தவறுண்டாயின், உய்தலரிது. அது மலையுச்சியினின்றும் தவறுதல்போலும். நீ பிறவித் துன்பத்தினின்று நீங்க விரும்பினை யெனினும், நாட்செல்லத் துறப்பதன்றி விரைவிலே துறக்கலாமா! உன் முன்னோர்கள் போலவே நீயும் இல்லொழுக்கத்தை அனுட்டிக்கக்கடவாய். பசுபதியாகிய சிவபெருமான் தாம் உமாதேவியாரோடு கூடி, பிரமா விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் மற்றையாவரும் மனைவியரோடு இல்லறத்தொழுகும்வண்ணம் பணித்தருளினர். அச்சிவபெருமான் நிறுவிய வரம்பை நீ மறுக்காதே. மகப்பேற்றை விரும்பி, என் சொல்லை வெறுக்காது கொள்ளக்கடவாய். உலகியலை விலக்காதே. இன்னும் மாறுபட்டு ஒன்றும் பேசாதே. இப்போதே எமர்களைத் துறவாதே. வசிட்டமுனிவர் அருந்ததியைத் தம்பக்கத்திருத்தியும் பழிபெறுது தவமேன்மையோடு இருக்கின்றாரே. வேண்டுதல் வேண்டாமையில்லாத தூயோர்கள் பெண்களோடு புணரினும், தவஞ்செய்யினும், அவர்களுள்ளத்தறிவு வேறுபடுமா, வேறுபடாது. நற்குண நற்செய்கைகளையுடைய பெண்ணை விவாகஞ்செய்யின், தானமும் தவமும் உளவாகும், மண்ணுலகத்தின்பமும் விண்ணுலகத்தின்பமும் எய்தும். தங்கணவரையே கடவுளராகக் கொண்டு வழிபடும் கற்பினையுடையாரது சொல்லின்வழியே தெய்வமும் முகிலும் நிற்குமாயின், ஆண்டமைமையோரும் அவர்களுக்கு நிகரல்லர். இல்லொழுக்கத்தை முன்னே அனுட்டியாது, தவவொழுக்கத்தைத் தொடங்குவையாயின், மாயமிகுந்த காமவிடம் வந்தணுகின், விதி காக்கினும் அதனை விலக்கலாமா! துறந்தவர்களுக்கு உணவு முதலியன கொடுத்து, இறந்தவர்களுக்குத் தக்கடன் நீர்க்கடன்களைச் செய்து பல தருமங்களை இயற்றி, விருந்தோம்பும் இல்லறமன்றி, மானுடப் பிறவியாலாகும் பேருதவி வேறியாது! ஆடவர்களும் பெண்களும் நன்மை திமை செய்தல் ஊழ்வழியன்றிப் பிறிதன்று, உழவர்கள் வயலின் கண்ணே

வித்தியவித்தின் பயனேயன்றிப் பிறிது பெறுவார்களா! முன்னே நல்லற மாகிய இல்லறத்தைப் நடாத்திப் பின்றுறத்தலே துறவு. இவ்வாறு செய் வையாயின், உனக்குக் குற்றம் வாராது, இதனை நீ மறுத்துப் பேசாதே, இது நமதாணை' என்றார்.

அதுகேட்ட மிருகண்டியர் 'எந்தையார் இல்லொழுக்கத்தை வேதத்துணிவென்றார். சிவபெருமானது பணியுமாமென்றார். இனிச் சொல்வதென்னை' என்று நினைந்து வருந்தி, 'தங்கள் தங்கள் குரவர்கள் கடலின் வீழக்கடவீர்கள் என்றாராயினும், அன்போடும் அது செய்தலே புத்திரருக்குக் கடனாகும். அது புதுமையன்று. யானும் இதனை மறுக்காது செய்குவன். தாய் தந்தை குரு என்னும் மூவருடைய சொல்லை மறுத்த தவரும், வேதநெறியை மாற்றினவரும், எரிவாய்நரகத்து வீழ்வர். ஆத லால், இவர் சொல்லை நான் விலக்குதல் முறையன்று' என்று துணிந்து கொண்டு, தந்தையாராகிய குச்சகமுனிவருடைய திருவடிகளை வணங்கி, 'பிதாவே, முனியாதொழிக. நீர் பணித்தபடி நிற்பேன். உமக்குச் சொல் வதொன்றுண்டு. தன்சொற்கு அமையாத மனையாளோடு கூடி வாழ்தலி னும், நரகத்து வீழ்தலே இனிது. அவளோடு கூடி வாழும் ஆடவனுக்கு அவளையன்றிப் பின்னுமோரியமனும் நோயும் உண்டோ! அடியேன் கூறும் இலக்கணங்கள் சிறிதுங் குறைவின்றி நிறைந்த கன்னி கிடைப்பாளாயின், அவளை நான் விவாகஞ்செய்வேன்' என்றார்.

குச்சகமுனிவர் அது கேட்டு மனமகிழ்ந்து, 'மைந்தனே நீ என் சொல்லை மறாது உட்கொண்டமையால், நானும் உய்ந்தேன், உன்றாயும் உய்ந்தாள், என் சுற்றங்களும் உய்ந்தன, தவங்களும் உய்ந்தன, மண் ணுலகத்தோரும் உய்ந்தனர், விண்ணுலகத்தோரும் உய்ந்தனர், இந் திரனும் உய்ந்தனன். உன்விருப்பத்தைச் சொல்வாயாக. நீ கூறிய இலக் கணங்களெல்லாம் பூண்டு, குற்றம் ஒரு சிறிதுமில்லாத ஒரு கன்னியைத் தேடி, உன்னிடத்தே புணர்ப்பேன். அது செய்யா தொழிவேனாயின், என்னு டைய தவம் குன்றுக' என்றார். குச்சகமுனிவர் இவ்வாறு சூளுரை சொல் லலும், மிருகண்டியர் அவருடைய திருவடிகளை வணங்கி, ''உம்முடைய புதல்வனாகிய சிறியேன் உய்யும் பொருட்டு இது சொன்னீர். நீரோ தவத் தினிற் சிறந்த முனிவரர். உமக்கு எய்ததற்கரியதொருபொருள் மூவுலகத் தினும் உண்டோ, இல்லை. ஆயினும், நான் சொல்வதுண்டு. தந்தையை இழந்தவர், தாயை இழந்தவர், தமக்கையரில்லாதவர், தங்கையரில்லாத வர், ஆடவரோடு பிறவாதவர், இம்முத்திறத்தாரை இழந்தவர், சுற்ற மில்லாதவர், திருவற்றவர், உயர்குடியிற்பிறவாதவர், பிணியாளராகிய தாய்தந்தையரிடத்துப் பிறந்தவர், தேவர்களுக்குரிய பெயர் பெற்று விலங் குகளுக்குரிய பெயரைப் பெற்றவர், பிசாசின் பெயரைப் பெற்றவர், புறச் சமயப்படுகுழியின் வீழ்ந்தவர், பிணியர், ஊமையர், முடவர், செவிடர், பிறர்வீட்டிற்செல்வோர், பொதுமகளிர் போல விழிப்பவர், பலமுறை ஆடவரை நோக்கித் தலைக்கடையில் நிற்பவர், தம்மை அழகுபெற அலங் கரிப்பவர், பேருண்டியை உடையவர், பெருந்துயிலை யுடையவர், தன்னி னும் மூத்தவர், தன்கோத்திரத்துப் பிறந்தவர், நெடியவர், குறளாளர்,

பருத்தவர், மெல்லிய உருவத்தையுடையவர், கருநிறத்தவர், பொன்னிறத்தவர், பசப்பையுடையவர், விளர்ப்பையுடையவர், உதிரநிறத்தையுடையவர், நாணமில்லாதவர், ஆடவர்புணர்ச்சியை நண்ணினவர், சிரிப்பவர், நிலையில்லாதவர், வலிமிக்கவர், தாய்தந்தையருடைய ஆணையைக் கடந்தவர், கோபமுடையவர், பகையுடையவர், சண்டை செய்பவர், கூத்து முதலியன காண விரும்புவோர், மன்மதனுற் கவல்கின்றவர், சிவபிரானிடத்து அன்பில்லாதவர், முனிவர்களை இகழ்பவர், உயிர்களிடத்து இரக்கமில்லாதவர், தங்குலநெறியிலே நில்லாதவர், தீக்குணத்தவர், நிறையில்லாதவர், ஆசாரியனை மனிதனென்று நினைப்பவர், தேவரைக் கல்லென்பவர், பத்துவயசின் மிக்கவர், பூப்புப்பருவம் வந்தணுகினவர், ஒத்த குணமில்லாதவர், அச்சமில்லாத மனத்தையுடையவர், இடிபோலப் பேசுவோர், தம்மைத் தந்தை தாயர் விவாகஞ்செய்து கொடுக்குமுன் ஒருவரிடத்து வேட்கை வைத்து அவரைச் சேரவிரும்புவோர், பெருமிதமுடையவர், மடமும் பயிர்ப்புமில்லாதவர், பிறக்கும் போதே கண்ணில்லாதவர், பின்பு கண்ணிழந்தவர், மறுப்பொருந்திய கண்ணினையுடையவர், படலம் பொருந்திய கண்ணினையுடையவர், மெல்லெனப்பார்க்குங் குருடர், சாய்ந்த கண்ணையுடையவர், பூனைக்கண்ணையுடையவர், பேய்போலச் சுழலுஞ் செங்கண்ணையுடையவர், தூறுமயிரையுடையவர், நரைத்த மயிரையுடையவர், பெருங்கூந்தலையுடையவர், சிறுகூந்தலையுடையவர், விரிந்த அளகமுடையவர், செம்மயிருடையவர், நிலத்தில் இறங்கிய கூந்தலையுடையவர், உதிர்ந்த மயிரையுடையவர், விலங்குபோல வலிய மயிரையுடையவர், சிறுத்த கண்ணையுடையவர், நெடுமூக்கையுடையவர், ஒன்றிய புருவங்களையுடையவர், குறிய காதையுடையவர், உயர்ந்த தந்தத்தையுடையவர், வளைந்த கழுத்தையுடையவர், மறுப்பொருந்திய முகத்தையுடையவர், தேமலில்லாத தனத்தையுடையவர், நுடங்கிய இடையில்லாதவர், கல்லுப்போலப் பருத்த வயிற்றையுடையவர், நல்லிலக்கணமில்லாத நிதம்பத்தையுடையவர், வாயும் உள்ளங்கைகளும் நகங்களும் உள்ளங்கால்களும் சிவப்பில்லாதவர், மயிர் பரந்த காலையுடையவர், அன்னம்போலும் மென்னடையில்லாதவர், விரல் பூமியிலே தோயாதவர் என்னும் இத்தன்மையராகிய மகளிர்களும் பிறரும் விவாகத்திற்கு உரியர்களல்லர். இத்தன்மையராயின், நான் விரும்பேன். இவ்வியல்பு முழுவதுமில்லாத கன்னி உண்டாயின், விரும்புவேன். நீர் ஆராய்ந்து விவாகஞ் செய்து தரக்கடவீர்' என்றார். குச்சகமுனிவர் அதுகேட்டு, மகிழ்ச்சியும் முறுவலுங்கொண்டு, 'நல்லிலக்கணமுடைய கன்னியைத் தேடி, உனக்குத் தருவேன்' என்றார்.

இவ்வாறு கூறிய குச்சகமுனிவர் மிருகண்டுயரை நிறுவி, தாம் உலகெங்கும் ஒரு கன்னியைத் தேடித்திரிந்து, தம்மெதிர்ப்பட்ட சில முனிவர்களால் சோழதேசத்திலே அநாமயமென்னும் வனத்திலே உசத்திய முனிவரிடத்திலே ஒரு கன்னிகை இருத்தலை அறிந்து, அவரிடத்தே சென்றார். உசத்தியமுனிவர் குச்சகமுனிவரை வணங்க, குச்சகமுனிவர் உசத்தியமுனிவரைஎதிருறத்தொழுது தழுவினர். உசத்தியமுனிவர் குச்சகமுனிவரைத் தமதாச்சிரமத்திலே அழைத்துக்கொண்டு போய், ஆசனத்திருத்தி, தம்முடைய பன்னியையும் புதல்வியையும் அங்கே அழைத்து,

அவரை வணங்குவித்து, அவரை விதிப்படி பூசித்து, அமுதுசெய்வித்தார். அதன் பின்பு அவரை நோக்கி, 'சுவாமீ, நீர் அடியேனிடத்து எழுந்தருளிய தென்னை' என்று விளவினர். குச்சகமுனிவர் மனமகிழ்ந்து, 'நீர் பெருந் தவஞ்செய்து பெற்றபுதல்வியை என் புதல்வனுக்கு மணம்பேசும்பொருட்டு வந்தேன்' என்றார். உசத்தியமுனிவர் அது கேட்டு மகிழ்ந்து, 'என்புதல்வி யாகிய விருத்தையை உம்முடைய புதல்வனுக்கு விவாகஞ்செய்து தரும் பொருட்டு நான் முன் செய்த தவம் யாதோ' என்று சொல்லி, விவாகத் துக்கு உடன்பட்டு, அம்முனிவரை அங்கே சிலநாளிருத்தி, வழிபடுவாரா யினர்.

ஒருநாள் உசத்தியமுனிவருடைய பன்னியாகிய மங்கலை விடுப்ப, மகளாகிய விருத்தை தன்னுடைய தோழியர்களோடு சென்று, கான்யாற் றிலே நீராடி, பக்கத்துள்ள சோலையிலே போய், மலர் கொய்து, விளை யாடிக்கொண்டு திரும்பினள். திரும்பும்பொழுது, மதயானையொன்று எதிரே வந்தது. அதனைக் கண்டோர் யாவரும் அஞ்சித் தனித்தனியே விரைந்தோடினர்கள். விருத்தை கண்டு துன்பமுற்று, 'இனி யாது செய் யலாம்' என்றிரங்கி ஏங்கி, மிகவிரைந்தோடினள். ஓடலும், புதர் மூடிய துரவொன்றணுக, அதில் விழுந்தழுந்தி இறந்தாள். யானை மலயமானுட் டைச் சார நடந்தது. தனித்தனியே ஓடிய தோழியர்கள் யாவரும் பின் ஒருங்கு கூடி, விருத்தையைத் தேடிக் காணாது, பெருந் துயரமடைந்து, உசத்திய முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்து, மங்கலைக்கு இதனைச் சொன்னர்கள். மங்கலை அது கேட்டலும், கண்ணீர் வார வயிற்றினடித்து அழுதுகொண்டு, தன் கணவருடைய பாதங்களின் வீழ்ந்து, நிகழ்ந்ததனைச் சொன்னள். உசத்தியமுனிவர் அதுகேட்டு, மனங்கவன்றழுது, தன் புதல் வியோடு சென்று பிரிந்த தோழியரை நோக்கி, 'என் புதல்வியை யானை கொன்றதா? சொல்லுங்கள்' என்றார். தோழியர்கள் முனிவரை நோக்கி, 'நாங்கள் நீராடி மலர் கொய்துகொண்டு, திரும்பும்பொழுது, யானை வந்தது கண்டு, எல்லோமும் தனித்தனி ஓடினேம். பின்பு விருத்தையைத் தேடிக் காணாது திரும்பினேம்' என்றார்கள். உசத்தியமுனிவர் அவ்வெல் லையிற்சென்று தேடித் தியக்குற்று நின்றார். தம்மகளுடைய ஆபரணங்கள் ஒருநெறியிலே ஒரொன்றுகச் சிந்திக் கிடப்பக் கண்டு, 'என்மகள் சென்ற நெறி இதுவே' என்று துணிந்து, 'ஆபரணம் போகிய நெறியே தொட் டுப் புதல்வியைக் காண்போம்' என்று, பெண்களோடு போக, துர வொன்று வந்தணுகியது. அதிலே தம் மகளைக் கண்டு, நெடிதுயிர்த்து, கண்ணீர் பெருக அதனுள்ளே குதித்து, மகளை எடுத்துக் கரையிலே சேர்த்து, அழுதார். உடனே பெண்களெல்லாரும் விருத்தையைத் தழுவிக் கொண்டார்கள். நற்றாயாகிய மங்கலை அது கேட்டு, பெருந்துயரக்கட லின் அழுந்தி, வயிற்றினடித்து, விருத்தையின்மீது வீழ்ந்து அழுதாள்.

குச்சகமுனிவர் இவையெல்லாம் அறிந்து, அவ்விடத்துச் சேர்ந்து, அழுகின்ற பெண்களை நோக்கி, 'இக்கன்னியை நான் உயிர்ப்பித்துத் தரு வேன், அழாதொழிமின்கள்' என்று தேற்றி, வேறோரிடத்திருந்த உசத் திய முனிவரைப் பார்த்து, 'கல்வியில்லாதவரும், சிறியரும், முதியரும்,

பாலரும், மகளிரும்போல நீர் இவ்வாறு துன்புறுகின்றீர். ஊழ்வினை முறையை அறிகிலீர். அறிஞராகிய நீர் இவ்வியல்பினராயின், வேறியாவர் தெளியுமியல்பினர்! ஐயரே, கேளும். மனத்திற்றுன்பத்தை ஒழித்துவிடும். நான் இக்கன்னியை நானே உயிர்ப்பித்துத் தருவேன். பின்பு என் புதல்வனுக்கு நீர் இவளை விவாகஞ்செய்துகொடும். இதனை ஐயுற்று வருந்தாதொழியும் விதியும் அதுவே. இதனை நான் ஞானநோக்கத்தினால் அறிந்தேன். விருத்தையினது சரீரத்தை எண்ணெய்த் தோணியில் வைத்திரும். நான் தவஞ்செய்து உயிரை மீட்டுத்தருவேன்' என்றார். அதுகேட்ட உசத்தியமுனிவர் தம்மகளுடைய சரீரத்தை எண்ணெயில் வைத்தனர்.

குச்சகமுனிவர் போய், ஒரு பொய்கையிலே மூழ்கி நின்று, இயமனை நினைந்து தவஞ்செய்தார். அப்பொழுது, முன்னே பெண்கள் அஞ்சும் வண்ணம் வந்த மதயானை மீண்டனைந்து, அப்பொய்கையினுள்ளே புகுந்து, புழைக்கையினாலே துளாவி, அங்கு நின்ற குச்சகமுனிவரைப் பற்றித் தன் பிடர்மேல் ஏற்றிக்கொண்டு, நெடுந்தூரஞ்சென்றது. குச்சகமுனிவர் உணர்ந்து, பின்னர் மதயானையை நோக்கி, 'இது என்னைப் பற்றிச் செல்தென்னை' என்றெண்ணி, ஞானநோக்கத்தினாலே அதனது ஊழ்முறையை நினைவாராயினர்:-

'கலிங்கநாட்டிலே அரிபுரத்திலே வணிகர்குலத்திலே தேவதத்தன் என்றொருவன் இருந்தான். அவனுடைய புதல்வனாகிய தருமதத்தன் மிக்க செல்வத்தையுடையனாய், தருமங்களைச் செய்து பெரும்புகழ் பெற்றான். அவன் தன்னுடைய தந்தையும் தாயும் இறத்தலும், தமியனாகித் துயருழந்து, பின் ஒருவாறு தேறியிருக்கும்பொழுது, ஓரிரதவாதி முண்டித மாகிய சிரசையும், குண்டலம் பொருந்திய காதையும், உபவீதம் அணிந்த மார்பையும், விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்த நெற்றியையும், உருத்திராக்ஷமாலையையும், பிரம்பு பொருந்திய கையையும் உடையனாய், அவனிடத்து வந்தான். தருமதத்தன் அவ்விரதவாதியைக் கண்டு, வணங்கி, தன்வீட்டினுள் அழைத்துக்கொண்டு சென்று, அமுதுசெய்வித்து, முகமன் கூறி, பின்பு அவனை நோக்கி, 'சுவாமீ நீர் இங்கு வந்ததென்னை' என்றான். வாதி அதுகேட்டு, 'சிவபிரான் அருளிச்செய்த வித்தையொன்று நம்மிடத்துள்ளது. அது எவருக்கும் பேசுந்தன்மையதன்று. குருபத்தியுடையார்க்கு மாத்திரம் சொல்லத்தக்கது. நெஞ்சிற் சிறிதும் மாசில்லாத உனக்கு நாம் அதை உணர்த்துவேம். சிவபிரானிடத்துத் தோன்றிய இரதமுண்டு. அதனாலே வேண்டிய பொன்னைச் செய்வோம். அது நமக்கு அரியதன்று. அதுபோல இன்னும் பலவுள. அவற்றைப் பெருந்தவமுடைய பெரியோர்களன்றி வேறியார் விரும்பாதவர்! காரிரும்பை நாகமாக்குவோம். மீட்டும் அதனைப் பொன்னாக்குவோம். மகாமேருமலையும் திருக்கைலாசமலையுமாகிய இரண்டனையும் யாரும் நோக்கவே காட்டுவோம். இவை நமக்கரியனவா! ஈயத்தையும் இரதத்தையும் வெள்ளியாக்குவோம். வங்கத்தைப் பொன்னாக்குவோம். இரும்பிற் செம்புண்டாக்குவோம் ஈயத்தையும் அவ்வாறே செய்வோம். அளப்பில்லாத பிருதிவியண்டங்கள் யாவையும் பொன்மயமாக்குவோம். நமது வன்மையை உள்ளவாறு

சொல்ல விரும்பினேமாயின், அளப்பில்லாத வருடங்கள் வேண்டும். ஒரு பொன்னைக் கோடி பொன்னுக்குவோம். கோடிபொன்னை மேலேபோலக் கோடி கோடி பொன்னுக்குவோம். உன்பொருளனைத்தையும் தருவையாயின், உன் வீட்டிலே அப்பொருளை வைத்தற்கு இடமில்லையெனனும்படி செய்வோம்' என்றான். இவ்வாறு கூறிய வாதியைத் தருமதத்தன் வணங்கி, முன்னே தன்னிடத்துள்ள நிதியையும், பின்னே தன்னால் சட்டப்பட்ட நிதியையும், பேடகங்களில் உள்ள ஆபரணங்களையும் கொண்டு வந்து, அவன் முன் வைத்தான். வாதி அவற்றை நோக்கி, 'ஓகோ! வணிகரிற் நிலகனுகிய உன்னிடத்துள்ள செல்வம் இதுதானே' என்று கைதட்டிச் சிரித்து, 'இப் பொருள் நமது வித்தையில் இறைக்கும் போதாது. இது நம் உருக்கு முகத்திலே சிந்துகின்ற அளவுங் காணாது. நீ நம்பின்றிரிவையாயின், அளப் பில்லாத பொருள் தருவோம். இதனை வைத்துக்கொள்வாயாக' என்றான். அப்பொழுது தருமதத்தன் 'சுவாமீ, கோபியாதொழிக. நீர் வேண்டிய பெருநிதி முழுதும் தேடிக்கொண்டு வருவேன். இரும்' என்று சொல்லிக் கொண்டுபோய், வஸ்திரங்களையும், நிலங்களையும், இரத்தினங்களையும், ஆபரணங்களையும், ஆடுமாடுகளையும் விற்று, மதிமயக்கத்தினாலே தருமத் தையும் விற்றான். இவ்வாறு தேடிய பெருநிதியனைத்தையும் கொண்டு வந்து, வாதிமுன் வைத்து நிற்றலும், வாதி மனமகிழ்ந்து அவையெல் லாவற்றையும் அக்கினியிலே உருக்கித் திரட்டி, ஓருருவாக்கி, அதனிரட்டி எடைகொண்ட இரதத்தை ஓரம்மியிலிட்டு, அப்பொன்முழுதையும் உரைத்து, அதனை உருட்டி, மட்குகையினுள்ளே மருந்தை உள்ளுறுத்திப் பொன்னை உள்ளிட்டு, அதனிடத்தே ஒரு களங்கத்தை இட்டு சீலமண் செய்து, அக்கினியிலே நூற்றெட்டுக் குக்குட புடமிட்டு, அதனைப் பார்த்து, 'மிகவும் மாற்று வந்தது. இனி ஒருவராகியிலே பழுக்கும். காற்றில்லாத ஓருறையுள் காட்டு' என்றான். தருமதத்தன் ஒருறையுனைக் காட்டலும் இரதவாதி அதனுள்ளே போய், விறகின்மீது சுடலையக்கினி கொண்டு வராகிமேலிட்டுப் புகைப்பித்தான். அதனுலே தருமதத்தன் கண்ணீர் பொழிய, சரீரம் வெதும்ப, எங்கும் வேர்ப்ப, ஊமைபோல ஒன்றும் பேசா மலும், போக முயலாமலும், வாளாவிருந்தான். அப்பொழுது இரதவாதி பொற்குகையை எடுத்து, மெல்லெனத் தனது வஸ்திரத்தினுள்ளே மறைத் துக்கொண்டு, அதுபோலத் தன்னிடத்திருந்த வேறொரு குகையைப் பக் கத்து வைத்து, புகையைத் தணித்து, தருமதத்தனை நோக்கி, 'இக் குகையை உன் கையினால் எடுத்து, இவ்வக்கினிமேல் வைப்பாயாக' என் றான். தருமதத்தன் அவ்வாறு செய்தலும், இரதவாதி அதற்குரியன யாவற்றையும் அமைத்துச் சேமஞ்செய்து, தருமதத்தனை நோக்கி, 'நீ உணவில்லாமலும், ஒருவரோடும் பேசாமலும், பெண்களை விரும்பாமலும், பிறரைப் பாராமலும், மூன்றுநாள் நம்மையே சிந்தித்துக்கொண்டிருக்கக் கடவாய். நாம் காளிசந்நிதியிலே ஓருயாகம் முடித்தல்வேண்டும். முடித் துக்கொண்டு நாலாநாள் இங்கே வருவோம்' என்றான். தருமதத்தன் 'அவ்வாறே செய்க' என்று சொல்லி, அவனை மும்முறை வணங்கி, அவன் பின் செல்லாது நின்றான். இரதவாதி அங்குநின்றும் விரைந்து நெடுந் தூரம் போய் உருமாறி, வேறோரிடத்தை அடைந்தான். தருமதத்தன்

இரதவாதி, விதிப்படியே இருந்து, மூன்றுநாட் செல்லலும், 'பெரியவர் சொல்லிய நாளெல்லை சென்றுவிட்டதே. இன்று வந்திலர். அவர் சொற் றப்புவாரா' என்று தளர்ந்து, காளிகோயிலினும் நகரத்தினும் அவனைத் தேடிக் காணாது மயங்கி வாடி, வீட்டுக்குத் திரும்பினன். முன் வைத்த குகையை எடுத்துப் பார்த்து அது இரும்பாயிருக்கக் கண்டு, மிகுந்த துயரமடைந்து வீழ்ந்திறந்தான். அவன் தருமத்தை விற்ற பாவத்தினாலே 'யானையாய்ப் பிறந்தான்' என்றுணர்ந்தார்.

இவ்வுண்மையை உணர்ந்த குச்சகமுனிவர் 'இவ்வியானைப்பிறப்பை விரைவிலே நீக்குவேன்' என்று சொல்லி, 'நான் முன்செய்த தவத்திலே ஒருநாட்டவம் இவ்வியானைக்கு எய்துக' என்றார். உடனே யானைவடி வத்தை ஒழித்து, தேவவடிவத்தை அடைந்து, தேவவிமானத்தேறி, குச் சகமுனிவரைத் தொழுதுகொண்டு, விண்ணுலகத்தை அடைந்தான். அதன்பின்பு குச்சகமுனிவர் பொய்கையிலே முன்போலத் தவஞ்செய்தலும் இயமன் வந்து, 'முனிவரே, உம்முடைய தவத்தை நோக்கி மகிழ்ந்தனம். நம்மிடத்து வேண்டியது என்னை' என்றான். குச்சகமுனிவர் இயமனை வணங்கி, 'உசத்தியமுனிவருடைய புதல்வியை என்புதல்வனுக்கு மணம் பேச வந்தேன். அவள் நேற்றிறந்தனள். அவளை முன்போலத் தந்தருளும்' என்றார். அப்பொழுது இயமன் தன்றூதனொருவனை நோக்கி, 'இம்முனிவர் வேண்டிய கன்னியினது உயிரை வைத்தோமே. அதனை நீ விரைவின் இங்கே மீட்டுக் கொண்டுவந்து விடுவாயாக' என்று பணித்து மறைந் தான். தூதுவன் அவ்வுயிரைக் கொண்டுவந்து, அவளுடைய சரீரத்துள் விடுத்தான். உடற்குள் உயிர் வருதலும், விருத்தை துயிலுணர்ந்தாள் போல எழுந்தாள். எல்லாரும் அவளைச் சூழ்ந்தார்கள். மாதாவாகிய மங்கலை அவளைத் தழுவினள். தந்தையாராகிய உசத்தியமுனிவர் அவளை எடுத்தணைத்துப் பலகால் உச்சிமோந்து, தன்னிருதொடைமீதிருத்தி, 'என்றவப்பயனாகிய குச்சகமுனிவர் நேற்றுக் கூறியவாறே தவஞ்செய்து இவளை உய்வித்தருளினர்' என்றார். பின்பு புதல்வியை நோக்கி, 'நீ இங்கு நிகழ்ந்ததும், இறந்ததும், மீண்டதும் முறைப்படியே சொல்வாயாக' என்று சொல்ல, அவள் அது கேட்டு, தான் தோழியர்களோடு போன தும், கான்யாற்றிலே நீராடியதும், மீண்டதும், யானை வந்ததும், அதனைக் கண்டோடினதும், தானொருத்தி தனித்ததும், துரவில் வீழ்ந்திறந்ததும், மீண்டதும், இயமலோகத்தில் நிகழ்வனவும் விரித்துச்சொன்னாள்.

அது கேட்டு மகிழும்பொழுது, இயமனுடைய அருளைப்பெற்ற குச்சகமுனிவர் வந்தார். வருதலும், உசத்தியமுனிவர் தம்முடைய பன்னி யோடும் புதல்வியோடும் சுற்றத்தோடும் அவரை எதிர்கொண்டு வணங்கித் துதித்து, 'என்னுடைய உயிரும், என் பன்னியுடைய உயிரும், சுற்றத் தாருடைய உயிரும், நண்பர்களுடைய உயிரும் நிற்கும்வண்ணம், நான் தவத்தினாலே பெற்ற விருத்தையுடைய உயிரைத் தந்தருளினீர். இது உமக்கு அரியதா! பூமியின்கண் உள்ள உயிர்களனைத்தையும் காத்தருளும் கடவுளும் நீரென்றே என்மனம் கருதுகின்றது. உமது திருவுளத்தை யாவர் அறிவார்! உம்முடைய புதல்வனுக்கு என் புதல்வியைக் கொள்ளும்

பொருட்டு வந்தீரோ! இயமனுலே போன உயிரை மீண்டும் அழைத்துத் தரும்பொருட்டு வந்தீரோ! சொல்லும்' என்று முகமன்கள் பலவற்றை எடுத்துச் சொல்லி, அவரை அழைத்துக்கொண்டு தமதாச்சிரமத்தை அடைந்தார். பின்பும் சிலநாள் குச்சகமுனிவரை அங்கிருத்தி, 'சுவாமீ, உம்முடைய புதல்வரை இங்கே அழைத்துக்கொண்டு வாரும், என் புதல்வியை விவாகஞ்செய்து கொடுப்பேன்' என்றார். குச்சகமுனிவர் தம்முடைய புதல்வரை அழைத்துக்கொண்டு வரலும் உசத்தியமுனிவர் சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே, தம்முடைய புதல்வியாகிய விருத்தையை மிருகண்டியருக்கு விதிமுறையே விவாகஞ்செய்து கொடுத்தார்.

மிருகண்டியரும் விருத்தையும் அன்பினோடு கூடி இல்லறம்நடாத்த, குச்சகமுனிவர் பலநாட் கண்டுகொண்டு, தவஞ்செய்யும்பொருட்டு உத்தர தேசத்துக்குப் போனார். மிருகண்டியர் தமது பெருந்தவவலியினுலே மிருகண்டு என்னும் ஒரு புதல்வரைப் பெற்று, அவருக்கு ஆறுவயசு சென்ற பொழுது உபநயனம் முடித்துவிட்டு, தமது தந்தையார்போலத் தாமும் தவஞ் செய்யப் போயினர்.

மிருகண்டு முனிவர் பிரமசரியம் அனுட்டித்து முடித்து, முற்கல முனிவருடைய புதல்வியாகிய மருத்துவதியை விவாகஞ்செய்து, இல்லறத்தை நடாத்தினர். சிலகாலமானபின், புதல்வர் இல்லாமையால் மனம் வருந்தி, தம்முடைய மனைவியோடும் சுற்றத்தாரோடும் அநாமயவனத்தை நீங்கி, காசியை அடைந்தார். அடைந்து, கங்காநதியில் ஸ்நானஞ்செய்து, மணிகன்னிகை என்னும் திருக்கோயிலிற் சென்று, சிவபெருமானை வலஞ்செய்து வணங்கித் துதித்தார். அத்திருக்கோயிலுக்கு அணித்தாகிய ஓரிடத்திலே சிவபெருமானைச் சிவாகமவிதிப்படி வழிபட்டார். வெய்யில், பனி, மழை, காற்று என்பவற்றிற்கு அஞ்சாத மரம்போல, ஆறுபருவத்தும், புத்திரபாக்கியத்தை விரும்பிச் சிவபெருமானைச் சிந்தித்து, ஒரு வருடம் தவஞ்செய்தார். அப்பொழுது சிவபெருமான் எழுந்தருளி வருதலும், மிருகண்டுமுனிவர் அவரை வணங்கித் துதித்தார். சிவபெருமான் மிருகண்டு முனிவரை நோக்கி, 'நீ யாது விரும்பினுய்' என்று வினவியருளலும், மிருகண்டுமுனிவர் 'எம்பெருமானே, அடியேன் புத்திரபாக்கியத்தை விரும்பினேன் தந்தருளுக' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் திருமுறுவல் செய்து, 'தீக்குணமே உடையனுய், அறிவு சிறிதும் இல்லாதவனுய், ஊமையும் செவிடும் முடமும் குருடுமாய், வயசு நூறினும் நோயால் வருந்துவோனுய் உள்ள ஒரு புதல்வனைத் தருவேமா? அழகு மிக்குடையனுய், உறுப்புக்குறைவு இல்லாதவனுய், நோய்களாலே சிறிதும் வருந்தாதவனுய், பலகலைகளினும் பயின்று வல்லனுய், நம்மிடத்து அன்புடையவனுய், பதினறு வயசுமாத்திரம் பெற்றவனுய் உள்ள ஒரு புதல்வனைத் தருவேமா? உன்னெண்ணம் யாது? சொல்' என்று திருவாய் மலர்ந்தருளினர். மிருகண்டுமுனிவர் அவற்றை நன்காராய்ந்து துணிந்து கொண்டு, 'பெருங் கருணைநிதியே, வயசு குறுகினுலும், அறிவுடையனுய், உடற்குற்றம் சிறிதும் இல்லாதவனுய், எம்பெருமானே, உம்மிடத்து அன்புடையனுய், உள்ள ஒரு புதல்

வனையே விரும்பினேன். தந்தருளுக' என்று விண்ணப்பஞ் செய்தார். செய்தலும், சிவபெருமான் 'உனக்குச் சற்புத்திரனைத்தந்தேம்' என்று திருவாய்மலர்ந்து, மறைந்தருளினர். மிருகண்டுமுனிவர் சிவபெருமானைத் துதித்துக்கொண்டு, மனமகிழ்ந்து தஞ்சுற்றத்தாரோடும் காசியிற்றானே இருந்தார்.

இவ்வாறிருக்கு நாளிலே, பூமியிலுள்ளோர் துன்பத்தினின்று நீங்கவும், சிவபுண்ணியம் ஓங்கவும், தவத்தையுடைய முனிவர்கள் உய்யவும், சற்சமயமாகிய வைதிகசைவம் வாழவும், இயமன் இறக்கவும், எம்பெருமானது திருவருளினாலே, மிருகண்டுமுனிவருடைய பன்னியாகிய மருத்துவதியுடைய அருமைத்திருவயிற்றிலே ஒரு கருப்பம் வந்தடைந்தது. அடைதலும் மிருகண்டு முனிவர் அதனை அறிந்து, அங்குள்ள சிவனடியார்கள் யாவருக்கும் வேண்டிய வேண்டியவாறே பலவளங்களையும் கொடுத்து, மாசந்தோறும் செயற்பாலனவாகிய கடன்களைச் செய்து கொண்டிருந்தார். பங்குனிமாசத்திலே, இரேவதி நக்ஷத்திரத்திலே, மிதுன லக்கினத்திலே, சுக்கிரனும் குருவும் உச்சத்தானத்தில் இருப்ப, சூரியன் முதலிய மற்றைக் கிரகங்கள் நட்பும் ஆட்சியும் ஆகிய தானங்களில் இருப்ப, ஒரு சற்புத்திரர் *திருவவதாரஞ்செய்தார். அப்பொழுது, சுற்றத்தார்கள் இரத்தினங்களையும், பொன்னையும், பொற்சுண்ணத்தையும், நறுமலரையும், மகரந்தத்தையும், கலவைச்சாந்தையும், கஸ்தூரிச்சேற்றையும் இடந்தோறும் வீசி ஆர்த்தார்கள். தேவதுந்துபிகள் ஒலித்தன. மும்மூர்த்திகளல்லாத மற்றையாவரும் ஆசிசெய்தார்கள். திருக்காசி நகரமன்றி உலகமெல்லாம் களிப்புற்றன. தந்தையாராகிய மிருகண்டுமுனிவர் கங்கா நதியிலே ஸ்நானஞ்செய்து, பிராமணர் முதலியோர்கட்கெல்லாம் தானம் கொடுத்து, சாதகர்மம் முதலியனவற்றைச் செய்தார். பிரமதேவர் வந்து, அச்சற்புத்திரருக்கு 'மார்க்கண்டேயர்' என்று நாமகரணஞ்செய்தார். பிள்ளை மறுவற்ற சந்திரன் போல் வளர்தலும், உபநிட்டானம் அன்னப்பிராசனம் முதலியவற்றைச் செய்து, ஒரு வருடத்திலே, சௌளகர்மமும், இரண்டாம் வருடத்திலே, கன்னவேதனமும் செய்தார். ஐந்தாம்வயசிலே உபநயனஞ்செய்து, வேதம் முதலிய கலைகளெல்லாவற்றையும் உணர்த்துவித்த, மார்க்கண்டேயமுனிவர் அவைகளின் மெய்ப்பொருளை உணர்ந்து, சிவபெருமானே அநாதிமுத்த சித்துருவாகிய முதற்கடவுள் என்று துணிந்து அவருடைய திருவடிகளே புகலிடமாகக் கொண்டார். சிவபெருமானையும், அவருடைய அடியார்களையும், தங்குருவையும், முனிவர்களையும், தாய் தந்தையர்களையும், சிரத்தையோடு வழிபடுவாராய், பிரமசரியத்தை வழுவாது அநுட்டித்தார்.

இவ்வாறு ஒழுகும்பொழுது, பதினைவயசு சென்றது. தாய்தந்தையர்கள் அதனை அறிந்து, தங்கள் குமாரரை நோக்கி, தனித்தனியே இருந்து கொண்டு, பெருந்துயர்க்கடலின்மூழ்கி, அழுது வருந்தினர்கள். மார்க்கண்டேயமுனிவர் அது கண்டு, அவர்களை அணுகி, அவர்கள் பாதங்களை

* இவருடைய திருவவதாரகாலத்தையுணர்த்தும் "மீனமு முடிந்த நாளும்" என்னுஞ் செய்யுட்கு வேறு பொருள்கள் கூறுவாருமுளர்.

வணங்கி, 'நீங்கள் துன்பமுறுகின்றீர்கள். இது என்னை! இன்னும் யான் யாதுமொன்றறியேன். இனித் துன்பத்தை ஒழிமின்கள். உங்களிடத்து நிகழ்ந்தது யாது? சொல்லுங்கள்' என்றார். தந்தையார் அது கேட்டு, 'மைந்தனே, நீ இருக்க, நாம்வேறொரு துன்பம் எய்திமெலிவதும்உண்டோ! முன்னளிலே சிவபெருமான் உனக்குப் பதினாறு வயசு என்று அருளிச் செய்தார். அது சென்றதனால், துன்பமுறுகின்றோம்' என்றார். உடனே மார்க்கண்டேயர் அவர் முகத்தை நோக்கி, 'நீங்கள் சிறிதும் இரங்க வேண்டாம். உயிர்க்குயிராய் எங்கும் நிறைந்த சிவபெருமானைப் பூசை செய்து, இயமனுடைய வலியைக் கடந்து, உங்களிடத்து விரைந்துவந் தடைவேன். நீங்கள் இங்கிருங்கள்' என்று சொல்லி அவர்களைத் தேற்றி, அவர்கள் பாதங்களின் வீழ்ந்து வணங்கி நின்றார். நிற்க, தந்தைதாயர் இருவரும் அவரை மார்பில் அணைத்து, உச்சிமோந்து, முன்னை வருத்த நீங்கி, மனமகிழ்ந்தார்கள்.

மார்க்கண்டேயமுனிவர் இருமுதுகுரவர்களுடைய ஏவலினாலே, சிவ பெருமானது திருவருளும் தமக்கு அவர்மாட்டுள்ள அன்புமே உடனுறு துணையாய்ச் செல்ல, பெருமகிழ்ச்சி பொங்க, விரைந்து போய், மணி கன்னிகை என்னும் திருக்கோயிலிற் புகுந்தார். என்புகள் நெக்கு நெக் குருக, ஆனந்தவருவி பொழிய சிவபெருமானை வலஞ்செய்து, திருமுன்னே வணங்கி, தென்றிசையின்ஓரிடத்து இருத்துகொண்டு, சிவலிங்கந்தாபித்து, பலநாள் அன்போடு பூசித்துத் துதித்து அருந்தவஞ்செய்தார். அன்புவலை யிற் படுவோராகிய சிவபெருமான் வெளிப்பட்டு, 'நீ அருந்தவமும் பூசை யும் செய்கின்றாய். நாம் அவற்றில் மிக விருப்பம் அடைந்தேம். நீ விரும் பியது யாது? இனிச்சொல்வாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயமுனிவர் 'பரமபிதாவே, அநாதிமலமுத்தரே, சித்தும் அசித்துமாகிய பிரபஞ்சமெல்லாம் நிறைந்த மெய்யரே, யாவருக்கும் மேலானவரே, மெய்யடியார்களுடைய மலத்தை ஒழித்தருளும் கருணை நிதியே, அக்கினியை ஏந்திய திருக்கரத்தை உடையவரே, சிறியேன் இயமன் கைப்படாது உய்யும்பொருட்டு நீர் எதிர்வந்து அருளல்வேண் டும்' என்று விண்ணப்பஞ்செய்தார். செய்தலும், கிருபாசமுத்திரமாகிய எம்பெருமான் 'இயமனுக்கு அஞ்சாதே அஞ்சாதே' என்று திருவாய் மலர்ந்து, தம்முடைய அருமைத்திருவடிகளிரண்டையும் மார்க்கண்டேய முனிவருடைய சிரசில் வைத்தருளினார். வைத்தருளலும், மார்க்கண்டேய முனிவர் 'இனி உய்ந்தேன் உய்ந்தேன்' என்று சொல்ல, சிவபெருமான் முன்போலச் சிவலிங்கத்தில் மறைந்து எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு மார்க்கண்டேயமுனிவருக்குப் பதினாறு வயசெல்லை செல்லலும், ஒரு யமதூதன் தோன்றி, சிவபூசையைக் கண்டு அஞ்சி, 'நான் மார்க்கண்டரை அண்டுவது அரிது' என்று மீண்டு போய், இயமனை வணங்கி நின்று, 'இறைவனே, காசியிலே மார்கண்டேயன் எனப் பெயர் பெற்ற ஒரு பிராமணன் இருக்கின்றான். அவன் சிவபெருமானிடத்தே பதிந்த சிந்தையை உடையவன், அவருடைய திருவடிகள் பொருந்திய சிரசை உடையவன், எந்நாளும் அவருடைய திருப்புகழையே பேசும்

நாவினை உடையவன், அவன் சிவபூசை செய்கின்றான். அப்பாலனை அணுக அஞ்சினேன், அவன் முன்னும் சென்றிலேன். அவன் சிவபெருமானிடத்து இருக்கின்றனன்' என்றான். உடனே இயமன் மிகக்கோபங்கொண்டு, பெரு மூச்செறிந்து, 'அச்சிறுவன் நாசமில்லாத முதற்கடவுளோ' என்றான். பின்பு 'நம்முடைய கணக்கர்களை அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று பணிக்க, அங்கு நின்ற தூதனொருவன் ஓடிப்போய் 'எம்மரசன் அழைக்கின்றான். வாருங்கள்' என்று கூவ, அவர்கள் வந்து இயமனை வணங்கினர்கள். இயமன் 'காசியிலே சிவபூசை செய்துகொண்டிருக்கும் மார்க்கண்டேயன் என்னும் சிறுவனுக்கு வயசெல்லை சொல்லுங்கள்' என்றான். சித்திரகுத்தர் என்னும் கணக்கர்களிருவரும் தங்கள் கையினுள்ள கணக்கைப் பார்த்து, 'அரசனே, சிவபெருமான் முன்னுளிலே பதினாறுவயசு என்று எல்லைகூறினர், அவ் வெல்லை சென்றது. அச்சிறுவன் செய்த சிவபூசை தருமத்தின்பாலது. பெருந்தவத்தையுடைய முனிவர்களாயினும், பொதுவாகாது தமக்கே சிறப் பாயுள்ள ஐசுவரியத்தை உடையர்களாயினும், அறிஞர்களாயினும், வலி யர்களாயினும், விதியை வெல்ல வல்லவர் யாவர்! ஆதலால், அச்சிறுவன் சுவர்க்கம் அடைதற்கு உரியன். நரகத்துன்பத்திற்குத் தப்பினன். இதுவே அவனிலைமை' என்றார்கள். இயமன் கோபங்கொண்டு தன்மந்திரியாகிய காலனை விளித்து, 'காசியிலுள்ள மார்க்கண்டேயன் என்னும் பிராமணனை இங்கே கொண்டுவரக்கடவாய்' என்று பணித்தான். பணித்தலும் காலன் காசியை அடைந்து, மார்க்கண்டேய முனிவர் இருக்கும் இடத்தே போய், அவருடைய சிவபூசையையும் குறிப்பையும் கண்டு, 'இவர் வருவது எங் ஙனம்' என்று எண்ணி ஏங்கி, அவர் கண்ணுக்குத் தெரியும் வண்ணம் சென்று அவரை வணங்கினன். வணங்கலும், மார்க்கண்டேயமுனிவர் 'நீ யார்? சொல்' என்றார். காலன் அதுகேட்டு, 'இயமனுக்கு அடிமை செய் கின்ற காலன் யான். இங்கு வந்த காரணம் யாதென்பீராயிற் சொல்வேன். உமக்குச் சிவபெருமான் அருளிச்செய்த பதினாறு வயசெல்லை நேற்றே சென்றது. இனி நீர் தென்புலத்திற்கு வருதல்வேண்டும். இது தடுக்குந் தன் மையதன்று. பிரமதேவருக்கும் அடுக்கும் தன்மையது, இது புதிதாகப் புகுந்ததன்று. படைத்தல் காத்தல்கள் போல, இயமன் அழித்தலும் சிவ பெருமான் இட்ட பணியேயாம். ஆதலால் அவன் உம்மை அழைக்கின் றனன். அன்றியும் நீர் சிவபூசை செய்வதைப் பலரும் சொல்லக்கேட்டு, மனமகிழ்ந்து உம்மைக் காண விரும்புகின்றான். அவன் அழித்தற்றொழில் உடையனுதலால், அவனைக் கொடியன் என்பர் அறிவிலார். அவன் உயிர்க ளெல்லாவற்றிற்கும் முடிவிலே அவ்வவற்றின் செய்வினை குறித்து, முறை செய்குவன். அதனால், அவனை நடுவன் என்றே உலகமெல்லாம் கூறும். நீர் மனசிலே யாதும் எண்ணுதொழிமின். நீர் இமயபுரத்துக்கு வருவீராயின், இயமன் உம்மை எதிர்கொண்டு வணங்கித் துதித்து, இன்சொற் சொல்லி, உமக்கு இந்திரபதத்தைத் தருவன் வாரும்' என்றான். மார்க்கண்டேய முனிவர் அதுகேட்டலும், 'யாவருக்கும் இறைவராகிய சிவபெருமானை வழிபடும் அன்பர்கள் இந்திரலோகத்துக்கும் போகார்கள், உன்னோடு இயமலோகத்துக்கும் வாரார்கள். எவ்வுலகங்களுக்கும் மேலாகிய சிவ லோகத்தை அடைந்து இனிது வாழ்ந்திருப்பார்கள். நானும் சி பெரு

மானுடைய அடியார்கடியவன். ஆதலால், உங்கள் யமலோகத்துக்கு வரேன். பிரமவிட்டுணுக்களுடைய பதங்களையும் விரும்பேன். விரைந்து போய்விடு போய்விடு' என்றார். அதுகேட்ட காலன் 'நன்று' என்று சொல்லிக் கொண்டுபோய், இயமனை வணங்கி, நிகழ்ந்தனவெல்லாம் சொன்னன்.

அப்பொழுது இயமன் உளம் பதைபதைக்க, உடலமெங்கும் வெயர்க்க, கண்கள் கனல் பொழிய, புருவக்கடை நிமிரக் கோபங் கொண்டு, 'எருமைக்கடாவைக் கொண்டுவாருங்கள்' என்று பணித்தான். பணித்தலும், எருமைக் கடா வந்தது. வருதலும், இயமன் அதன்மேல் ஏறிக்கொண்டு, குடை நிழற்ற, கொடிபிடிக்க, வீரர்கள் சூழ்ந்து துதிக்கச் சென்று காசியை அடைந்து, மார்க்கண்டேயமுனிவர் இருக்கும் இடத்தே போய், சிவந்த குஞ்சியும், கரிய சரீரமும், கோபத்தினல் அக்கினி சொலிக்கும் கண்களும், பிடித்த பாசமும், கையில் ஏந்திய தண்டமும், சூலமுமாய் எதிர்த்தான். எதிர்த்தலும், மார்க்கண்டேயமுனிவர் 'இயமன்வந்து அணுகினன்' என்று சிந்தித்து, அவன் செய்கையை நோக்கி, எம்பெருமானுடைய திருவடிகளைத் துதித்து வணங்கினர். அப்பொழுது இயமன் 'மைந்தனே, நீ யாது நினைந்தாய்! யாது செய்தாய்! முன்னையூழின் முறைமையையும் சிவபெருமானது திருவாக்கையும் கடக்கலாமா? ஊழ்வலியைச் சிறிதும் ஆராய்ந்திலை. உறுதி ஒன்றும் அறிந்திலை போலும். இறப்புப் பிறப்பென்பன யாவரும் பெறுகுவர். அது பேசல்வேண்டுமா! பெருந்தவத்தை உடையோர்க்கும் இயலாத இது இயலும் என்று துணிந்து இவ்வாறு இருத்தல் கற்றுணர்ந்த ஆடவருக்குத் தகுதியா! நீ சிவபெருமானுடைய திருவடிகளிலே மிக்க அன்புடையை என்பது சத்தியம். ஆயினும், நீ நாடோறும் செய்யும் சிவபூசை உன்பாவத்தைப் போக்குவதன்றி, நான் வீசும் பாசத்தை விலக்கவும் வல்லதா! கடலினுள்ள மணலை எண்ணினும், ஆகாயத்துள்ள நக்ஷத்திரத்தை எண்ணினும், என்னுணையால் இறந்த இந்திரர்களை எண்ணலாமா! இறந்தவர்களாகிய தேவர்களையும் அசுரர்களையும் சொல்லப்புகின், முடிவு பெறுது. அவ்வாறுக மற்றையோரைச் சொல்லல்வேண்டுமா! பிறப்பிறப்புக்கள் பிரமனுக்கும் உண்டு, விட்டுணுவுக்கும் உண்டு, எனக்கும் உண்டு. இங்ஙனமாயின், உனக்கும் உண்டென்பது உரைத்தல் வேண்டுமா! நான் சிவபெருமானை முன்னே பூசைசெய்தமையால், அவர் எனக்கு அருளிச்செய்தவை இவ்வரசியலும், நான் ஏந்திய பாசமும் சூலமும் மழுவும் தண்டும். தேவர்கள் காப்பினும், படைத்தல் காத்தல் அழித்தல்கள் செய்யும் மும்மூர்த்திகள் காப்பினும், மற்றை வலியோர் யாவர் காப்பினும் காக்க நான் உன்னுயிரை இன்று கொண்டன்றி மீள்வேனு! நீ துன்பங்கொள்ளாதே. சிவனடியாராயினும், முடிவு வந்தெய்தில், அவரைத் தென்புலத்திற் சேர்த்துவேன். இது திண்ணம். இனி நீ என்பின் வருவாயாக' என்றான்.

மார்க்கண்டேயமுனிவர் அதுகேட்டு, 'இயமனே, கேள். முடிவென்பது எம்பெருமானுடைய அடியார்களுக்கு இல்லை உண்டாயினும், உன் உலகத்திற்கு வாரார்கள், திருக்கைலாசமலைக்குப் போவார்கள். அவர்களுடைய தன்மையைச் சொல்வேன், கேள். அவர்கள் துறவிகளாயினும்,

இல்வாழ்க்கையர்களாயினும், முத்தியின்பத்தை அடைவார்கள். அவர்கள் பதி, பசு, பாசமென்னும் முப்பொருள்களின் இலக்கணத்தையும் அறிந்தவர்கள். அவர்கள் பிறவித்துன்பத்தினின்றும் நீங்கினவர்கள். அவர்களுடைய திருவடிகளைச் சேர்தலே பரபதஞ்சேர்தல். அவர்கள் உன்னை மதியார்கள், தேவர்களை மதியார்கள், தேவேந்திரனை மதியார்கள், பிரமனை மதியார்கள், விட்டுணுவையும் மதியார்கள். சிவபெருமானுக்கும் அவருடைய திருவடியார்களுக்கும் வேற்றுமை கருதுதல் அறியாமையே என்று வேதங்களெல்லாம் சொல்லும் உண்மைப் பொருள் பொய்க்குமா, பொய்யாது. சிவனடியார்கள் செம்மையாகிய சிந்தையை உடையவர்கள், யாவரினும் சிறந்தவர்கள், பற்றற்றவர்கள், தம்மையும் துறந்து நின்றவர்கள், சீவன்முத்தராகி இம்மையினும் பேரின்பத்தை அனுபவிப்பவர்கள், இன்மையாவது யாண்டும் இல்லாதவர்கள், நன்மையென்பதே இயல்பாகப் பொருந்தினவர்கள். இவ்வியல்புடையவர்கள் சுவர்க்கமுதலிய புன்பொருள்களை விரும்புவார்களா, விரும்பார்கள். அவர்களுடைய தன்மையை யாவர் சொல்ல வல்லவர்! அவர்களுடைய வன்மையை நீ சிறிதும் அறிந்திலை. உலகத்தாரைப்போல அவர்களையும் நினைந்தாய். அவர்களை அடைந்த என்னுயிருக்கும் தீங்கு நினைந்தாய். இவையெல்லாம் உன்னுயிரும் இத் தலைமையும் ஒழிதற்குக் காரணமன்றே? தீயசொற்களை என்செவி கேட்கச் சொல்கின்றாய். மேல் நிகழ்வதனை அறிகின்றிலை. மூடனே மூடனே, நீ இங்கே நிற்கப் பெறுவாயோ! போ போ' என்றார்.

மார்க்கண்டேயமுனிவர் இவ்வாறு கூறக்கேட்ட இயமன், அக்கினி சொலிக்குங் கண்ணையுடையனாய், 'என்னை நீ அச்சுறுத்துகின்றாய். வலியில்லாதவனே, நம்முயிரை இயமன் கைக்கொள்ளமாட்டான் என்று நினைந்தாய்போலும்' என்றான். இடியேறுபோல ஆர்த்தான். 'இவன் நேரே நின்றால் வாரான்' என்று நினைந்தான். நீலமலைபோல மார்க்கண்டேயர் முன் சென்றான். பாசத்தை வீசி ஈர்த்தான். அப்பொழுது மார்க்கண்டேய முனிவர் எம்பெருமானைத் துதித்துக் கொண்டு, அவருடைய நித்தியானந்த வடிவாகிய திருவடிநீழலைப் பிரியாது நின்றார். 'இனி இம்மைந்தன் இறந்தானன்றே' என்று தேவர்களும் மயங்கினார்கள். இயமன் கைப்பாசம் தங்கழுத்தின் உற்றும், இடர் சிறிதும் உறுத மார்க்கண்டேயமுனிவர் முன்பு திரிபுராந்தகராகிய முதற்கடவுள் 'மைந்தனே, உனது துன்பத்தைத் தீர்க்கின்றேம். நீ அஞ்சாதே அஞ்சாதே' என்று திருவாய்மலர்ந்து கொண்டு தோன்றியருளினார். 'மதத்தினால் மிக்க இவ்வியமன் நம்மைந்தனுடைய உயிரைக் கொள்ள நினைந்தான்' என்று திருவுளங்கொண்டு கோபித்து, தமது இடப்பாதத்தினாலே அவனைச் சிறிதுதைத்தார். உதைத்தவுடனே இயமன் பூமியில் வீழ்ந்திறந்தான். அவன் பக்கத்து நின்ற சேனைகளும் அவன் வாகனமாகிய எருமைக்கடாவும் ஏங்கி வீழ்ந்திறந்தன.

அந்தக்காலத்திலே 'எம்முயிரைக் காக்கச் சிவபெருமான் உண்டு. இயமன் வந்து யாது செய்வான்' என்று வடமொழியினாலே தோத்திரஞ் செய்து கொண்டு தனிநின்ற மார்க்கண்டேயமுனிவரைக் காலகாலராகிய எம்பெருமான் கண்டு, திருவுளமகிழ்ந்து, 'மைந்தனே, நீ நமக்கு மெய்

யன்போடு பூசை செய்தமையால், நாம் உனக்கு முடிவில்லாத ஆயுளைத் தந்தோம்' என்று திருவாய்மலர்ந்து, சிவலிங்கத்தின் மறைந்தருளினர். சிவபெருமானுக்கு மார்க்கண்டேய முனிவரிடத்தும் இயமனிடத்தும் விருப்பும் வெறுப்பும் இல்லை. அறிஞர்கள், ஆராயுங்கால், எம்பெருமான் செய்தவை முறையேயாம் என்று துணிவார்கள். அங்கு நின்ற மார்க்கண்டேய முனிவர் எம்பெருமானுடைய திருவுருவத்தை அன்பிலேடு தியானித்துக் கொண்டு, மணிகன்னிகை என்னும் திருக்கோயிலினுள்ளே சென்று, எம்பெருமானை வணங்கிக்கொண்டு போய், தம்மைக் குறித்துக் கண்ணீர் பெருகப் புலம்பி நையும் தந்தைதாயார்களைப் பணிந்து, அவர்களுடைய துயரமுழுதையும் மாற்றினர். அத்திருநகரத்திலே சிலநாள் இருந்து, பின்பு அங்குநின்று நீங்கி, சிவதலங்கள் யாவையும் பத்தியோடு வணங்கித் துதித்து, சீவன்முத்தராயினர். அவர் விண்ணுலகத்தினும் உளர், மண்ணுலகத்தினும் உளர், தம்மை விரும்பித் துதிப்போர்கள் கண்ணினும் உளர், கருத்தினும் உளர், அவர் செயல் நினைக்கற்பாலதுமன்று, சொல்லற்பாலதுமன்று, அவர் கண்ட பிரமகற்பங்களும் விட்டுணுகற்பங்களும் கணக்கில்லாதன.

மார்க்கண்டேய முனிவருக்குத் துன்பஞ்செய்த இயமன் இறந்தமையால், பூமியின்கண் உள்ள உயிர்களெல்லாம் நெடுங்காலம் இறப்பின்றி வளர்ந்து பெருகின. ஆதலால், பூமிதேவி பாரம் பொறுக்கலாற்றாது, விட்டுணுவை வணங்கித் தன்றுன்பத்தை விண்ணப்பஞ் செய்தாள். விட்டுணுவும் பிரமதேவரும் இந்திரன் முதலிய தேவர்கள் யாவரோடும் திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமானை அன்போடு வணங்கித் துதித்தார்கள். துதித்தலும், கைலாசபதி விட்டுணுவை நோக்கி, 'நீங்கள் வந்ததென்னை' என்று திருவாய்மலர்ந்தருளினர். அதற்கு விட்டுணு 'எம்பெருமானே, இங்குள்ள பிரமன் முதலிய தேவர்களெல்லாரும் நீர் விதித்தவாறே தங்கள் தங்கள் அரசியலை இதுகாறும் வாழுவாது நடாத்தினர்கள். எனக்கு நீர் விதித்த தருமிய காவற்றொழிலை உமது திருவருளே துணையாக நாடோறும் வழுவாது செய்கின்றேன். இதற்கு ஒருகுறை எய்தியது. அதனை விண்ணப்பஞ் செய்வேன், கேட்டருளும். உமது திருவருளை நினையாமையினால், இயமன் இறந்துபோயினன். அதனாலே பூமியிலுள்ள உயிர்கள் வளர்ந்து பெருகின. அவற்றைச் சுமக்கும் பூமிதேவி துன்புறுகின்றாள், அவள் துன்புற, உயிர்களெல்லாம் பிறந்து பிறந்து பின் இறவாமலே பெருகுமாயின், என்காவற்றொழில் என்படும்! என்படும்! அழித்தற்றொழிலுக்குத் தலைவர் ஒருவரும் இல்லை. நீர் கோபியாது இயமன் செய்த தீமையைப் பொறுத்து, அவனை உயிர்ப்பித்தருளும். இதனை மறுக்கா தொழியும்' என்று திருவடிகளை வணங்கி வேண்டினர். அப்பொழுது சிவபெருமான் 'இயமனே, எழும்பக்கடவாய்' என்று திருவாய்மலர்ந்தருளினர். அருளலும், இயமன் உயிர் பெற்று வந்து, கைலாசபதியை வணங்கி, 'எம்பெருமானே உம்முடைய திருவடி படுதலினால் அடியேன் உய்ந்தேன்' என்று விண்ணப்பஞ்செய்தான். சிவபெருமான் இயமனை நோக்கி, 'நம்முடைய சின்னங்களாகிய விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்துக் கொண்டு நம்மைத் தியானிக்கும் அன்பர்களிடத்தே நான் இயமன்'

என்று சொல்லி நீ போகாதே. நம்மடியார்களென்று எண்ணுது நாமென்றே எண்ணக்கடவாய். அவர்களைக் கண்டால், அவர்கள் கால்களின் வீழ்ந்து வணங்கக் கடவாய். மனமொழிமெய்களாலே புண்ணியபாவங்களைச் செய்யும் மற்றையோர்களைச் சுவர்க்கநரகத்தில் இருத்தக்கடவாய்' என்று திருவாய்மலர்ந்து, 'உன்படையோடு போவாயாக' என்று பணித்தருளினர். இயமன் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு, முன் இறந்த எருமைக் கடாவோடும் சேனைகளோடும் தென்புலத்தை அடைந்து, தன்னரசியலை நடாத்துவானுயினன். விட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானை மும்முறை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, திருக்கைலாசமலையை நீங்கித் தங்கள் தங்கள் பதங்களை அடைந்தார்கள். இயமன் 'முன்போல் இன்னமும் யாது வினையுமோ' என்று மார்க்கண்டேய முனிவருடைய சரித்திரத்தை ஓதுவோர் முன்னும் செல்லுதற்கு அஞ்சுவன்.

தவவலியினாலே, குச்சகமுனிவர் ஒரு பெண்ணுக்கு உயிர் கொடுத்தார், ஒரு யானையை தேவலோகத்திருத்தினர், அவர் புதல்வராகிய மிருகண்டுமுனிவர் பிரம விட்டுணு முதலியோர் புகழும் முதன்மையைப் பெற்றார், அவர் புதல்வராகிய மிருகண்டுமுனிவர் ஒப்பில்லாத ஒரு சற்புத்திரரைப் பெற்றார், அவர் புதல்வராகிய மார்க்கண்டேயமுனிவர் விதியைக் கடந்து இயமனது வலியை அகற்றி, ஒருகாலும் இறப்பில்லாதவராயினர், இது சத்தியமென்றறியக் கடவீர்கள். இன்னும் தவத்தின் பெருமையைச் சொல்வேன்'' என்று காசிபமுனிவர் சொன்னர்.

திருச்சிற்றம்பலம்.

## மாயையுபதேசப் படலம்.

காசிபமுனிவர் இவ்வாறு சொல்லலும் மாயை நகைத்துக் காசிபமுனிவரை நோக்கி, ''முனிவரரே, நீர் உண்மையாகிய உறுதியையே சொன்னீர். ஆயினும், முத்திவிருப்புடைய முனிவர்களுக்கன்றி நாம் பெற்ற சிறுவர்களுக்கு இவ்வாறு சொல்லலாமா! இவர்கள் பெருஞ் செல்வத்தையும், வெற்றியையும், இன்பத்தையும், அழிவில்லாத ஆயுளையும், பெரும் புகழையும், குற்றமற்ற வாழ்க்கையையும் அடைதல்வேண்டும். அவையெல்லாம் விரைவின் அடைதற்பொருட்டு இவர்களுக்கு உபாயம் சொல்லும்'' என்றாள். அதுகேட்ட காசிபமுனிவர் ''இதுவா உனதெண்ணம்! நீயே அதனை இவர்களுக்குச் சொல்லக்கடவாய்'' என்றார். மாயை தன் புதல்வர்களை நோக்கி, ''இம்முனிவரர் சொல்லியது, உண்மையேயாயினும், உங்களுக்கு ஆவதன்று. நான் சொல்வேன், கேளுங்கள்'' என்று சொல்லலுற்றாள் :-

''அறிவினையுடைய உயிர்களுக்கெல்லாம் பிறவியால் ஆகும் பயன் கல்விப்பொருள் செல்வப்பொருள் என இரண்டாம். உயிரானது இவ்விரண்டினுள் ஒன்றை அடையாதாயின், அவ்வுயிரிலும் பேய்ப்பிறப்பே மிகப் பெருமையுடையது. இவ்விருபொருளின் வன்மையையும் அறிஞர்

கள் ஆராய்வராயின், கல்விப்பொருளினும் செல்வப்பொருளே சிறந்த தெனத் துணிவர். கலைகளெல்லாவற்றையும் நெடுங்காலம் விடாது கற்ற வராயினும், வறியராயின் செல்வத்தை வேண்டித் தம் பகைவரையும் பணிந்து நிற்பர். அளப்பில்லாத கல்வியையும் பலவகை வளங்களையுங் கொள்ளுதற்கும், அவற்றைக் குறையாது வளர்த்தற்கும், அணிசெய்தற் கும் கருவியாதலால், செல்வப்பொருளே மேலாயது. கல்வியறிவின் மிகச் சிறந்தவரும் செல்வமுடையரல்லாக்கால், உலகம் அவரைக் குற்றத்துட் படுத்தும். கல்வியையேயன்றி மேன்மையையும், தருமத்தையும், புகழை யும், வெற்றியையும், பிறவற்றையும் ஆக்கலால், செல்வத்திற் சிறந்தது பிறிதொன்றுமில்லை. ஒருவர் செல்வத்தைப் பெற விரும்புவாராயின், ஊக்கம் உடையராகுக. ஊக்முடையராகச் செல்வம் உண்டாகும். அவ் வூக்கத்திலே இடையறாது நிலைபெறுவராயின், பெருஞ்செல்வம் விரைந் தெய்தும். அச்செல்வம் பலவகைப்படும். அவையனைத்தையும் ஒருவரும் பெற்றிலர். நீங்கள் அவையனைத்தையும் பெற முயலுங்கள். இதுவன்றி உங்களுக்கு உறுதி பிறிதில்லை. நீங்கள் எங்களிடத்து நேற்றிரவு பிறந்தமையால், நிருதகதியினராயினீர்கள். உங்களுக்குப் பகைவர்கள் தேவர்கள் யாவரும். அவர்கள் தங்கள் முயற்சியிற்றானே தலைமை பெற்ற வர்கள். நீங்கள் அவர்களினும் தலைமை பெறுவீர்கள்போலும். ஆக்கம் அடையும்பொருட்டு நீங்கள் மூவிரும் முயலுங்கள். முயலும் முறைமையை நான் எடுத்துச் சொல்வேன். இத்திசை ஆலந்தியெனப் பெயர்பெறும். இவ்விடத்துக்கு நேரே போன உத்தரபூமி அசுரர்கள் தவஞ்செய்தற்கு ஏற்றது. நீங்கள் இப்பரிசனங்களோடு அப்பூமிற் சென்று, வேள்வியின் பொருட்டுக் குண்ட முதலியன செய்து, நச்சுச்சமித்திட்டு, அக்கினி சொலிப்பித்து ஓமத்திரவியங்களையும், இரத்தங்களையும், மாமிசங்களையும், பிறவற்றையும் தூவி, தேவதேவராகிய சிவபெருமானைத் துதித்து, வேள்வி யைப் பற்பகல் செய்யுங்கள். செய்வீர்களாயின், எம்பெருமான் அருளோடு வெளிப்பட்டு, நீங்கள் விரும்பிய அனைத்தையும் தந்தருளுவர். நீங்கள் மூவிரும் இவ்வேள்வியை முயறற்பொருட்டு அங்குச் சென்றவுடனே, அதற்கு அவ்விடத்து வேண்டும் பொருள்களனைத்தையும் வேறுவேறுக நான் தருவேன். போங்கள்'' என்று சொல்லி, அவ்வேள்வி செய்யும் விதியையும், அதற்கு வேண்டும் மந்திரங்களையும், சூரன் முதலிய மூவருக் கும் உபதேசித்தாள். அப்பொழுது சூரன் தன்றம்பியர்களோடும் தாய் தந்தையர்களை வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

திருச்சிற்றம்பலம்.

## மாயைநீங்கு படலம்.

சூரன் முதலிய புதல்வர்கள் சென்றபொழுது, மாயை தன் பக்கத் திருந்த காசிபமுனிவரை நோக்கி, ''இனி நான் புதல்வர்களைப் பேணும் பொருட்டுப் போகின்றேன். நீர் கவலாதிரும்'' என்று நிறுவிப் போயி னாள். போதலும், காசிபமுனிவர் அவண்மேல் வைத்த ஆசை செலுத்த

அவள் பின்னே போய், "நீ என்னை விட்டுப் போதல் நீதியோ" என்றார். அது கேட்ட மாயை "முனிவரரே, வருந்தாதொழியும். நான் இங்கு வந்தது புத்திரர்பொருட்டன்றி, உம்மோடிருத்தற்பொருட்டன்று. நான் மாயை, அறிந்துகொள்ளும்" என்று மறைந்துபோயினள். உடனே அற்புதத்தின் அங்கு வந்த பொருள்களெல்லாம் மறைந்துபோயின. காசிபமுனிவர் மாயையைக் காணுமையால், கவலைகொண்டு மதிமயங்கிப் பொருமி ஏங்கிநின்றார்.

பிரமதேவர் தம் புதல்வராகிய காசிபமுனிவருடைய துயரத்தை அறிந்து அங்கு வந்தார். வருதலும், காசிபமுனிவர் பிரமதேவரை வணங்கினர். பிரமதேவர் ஆசிகள் கூறி, "காசிபனே, நீ உன்னருந்தவத்தை விடுத்து மெலிவதென்னை? சொல்" என்றார். காசிபமுனிவர் நிகழ்ந்தனவெல்லாம் விண்ணப்பஞ் செய்தார். பிரமதேவர் அதுகேட்டு மனங்கூசி, தம்புதல்வரை நோக்கி, "வேதமுதலிய கலைகளை ஓதியுணர்ந்த முனிவனே, அறிவில்லாதார்போல நீ ஒரு பெண்பொருட்டு மையல்கொண்டு வருந்துகின்றாயோ! கள்ளெனவும் காமமெனவும் தீப்பொருள் இரண்டுண்டு. அவற்றுள், கள்ளு உண்டவழி அறிவைக்கெடுக்கும்; காமம் நினைந்தவழி உயிரைக்கொல்லும். காமாக்கினி நினைப்பினும் சுடும், கேட்பினும் சுடும், அணைந்து தள்ளினும் சுடும். ஆதலால் அது கள்ளினுங் கொடியது. பிறப் புக்களையும் வினைகளையும் விளைப்பது காமமேயாதலால், மெய்யுணர்வினாலே அக்காமநோயை ஒழித்தவரன்றே முத்தியின்பத்தை அடைந்தவர். அறிஞர் கள் காமத்தை நெஞ்சினும் நினைப்பார்களா! நினைந்தவர்களை இம்மை யிலே துன்பத்தழுத்தி, மேலே பெரும்பவக்கடலின் வீழ்த்தும். அதனால் காமம் நஞ்சினுந்தியது. ஆதலால், காமமுற்று வருந்தாதே. நீ புணர்ந்த பெண்ணும் வஞ்சகத்தையுடைய மாயை. நீ தீமைசெய்தாய். அது திரும் பொருட்டு முன்போலத் தவஞ்செய்யக்கடவாய்" என்று அவருள்ளத் தைத் தேற்றி, அவரை அங்கு நிறுவிப் போயினர். காசிபமுனிவர் தமது தந்தையாருடைய வாய்மையினாலே தேறி, மையலைநீங்கி, வினையினின்று நீங்கும்பொருட்டுச் சிவபெருமானைச் சிந்தித்துத் தவஞ்செய்வாராயினர். அங்கு நின்று நீங்கிய மாயை தன் புதல்வர்கள் யாகஞ்செய்யும்பொழுது வேண்டியவற்றைக் கொடுக்கும்பொருட்டுச் சுக்கிரனுடைய ஏவலினாலே சிவபெருமானைத் துதித்துப் பெருந்தவஞ் செய்தாள்.

திருச்சிற்றம்பலம்.

## அசுரர்யாகப் படலம்.

தன்மாதாவாகிய மாயையினுடைய ஏவலினாலே யாகஞ்செய்யக் கருதிப் புறப்பட்ட சூரன் தன்றம்பியர்களை நோக்கி, "நாம் யாகஞ்செய்யும் பொருட்டு வடதிசைக்குச் செல்லும்பொழுது, நீங்களிருவரும் நமது சேனையின் கடையினும் தலையினும் காவலாய்ச் செல்லுங்கள்" என்று பணித்தான். பணித்தலும், சூரனை வணங்கி, தாரகாசுரன் "அடியேன் சேனைக் கடையிலே செல்லுவேன்" என்றான்; சிங்கமுகாசுரன் "அடியேன் சேனைத்தலை

யிலே செல்வேன்'' என்ருன். தம்பியிருவரும் இவ்வாறு கூறித் தமைய னிடத்து விடைபெற்றுக்கொண்டு, தாங்கூறியவாறே போயினர்கள். அவர் கள் பணியினுலே சேனைவெள்ளம் பதினுயிரம் யோசனை யெல்லே ஆகா யத்தினும் பூமியினும் கலந்து, வடதிசை நோக்கி ஆர்த்துச் சென்றது. செல்லலும் பூமிதேவி ஆற்ருது வருந்தினள், ஆதிசேடன் நாகர்களோடும் அயர்ந்தனன், திக்கியானைகளும் குலமலைகளும் மேருமலையும் சலித்தன, ஆதிகூர்மமும் வருந்தியது, இந்திரன் முதலிய திக்குப்பாலகர்கள் எண்மரும் அஞ்சி நடுநடுங்கினர்கள். அசுரசேனை வெள்ளத்தின் முன்னணியிலே சிங்கமுகாசுரனும், பின்னணியிலே தாரகாசுரனும் செல்ல நடுவே சூரன் சென்ருன்.

அப்பொழுது அசுரகுருவாகிய சுக்கிரன் அவர்களைக் காண நினைந்து, விமானமேற்கொண்டு வந்தணுகி, அவர்களுடைய விரைவையும், வலியை யும், ஊக்கத்தையும் கண்டு, நடுங்கினர். நடுங்கி, ''இவ்வசுரர்களுடைய கடுந் திறலைக்கண்டேன்.முன்னே அசுரர்கள் அளப்பில்லாதவர்களைப்பார்த்தேன். இது சிவபெருமானுடைய திருவருளின் வண்ணமோ! இவர்களுக்கு நிகரா வார் ஒருவர் உண்டோ! தங்களை எதிர்ந்த பகைவர்களுடைய ஊனையும் உயிரையும் ஓருங்குண்ணும் இவ்வசுரர்களுக்கு இந்திரனேடும் விட்டுணு வோடும் ஏனையரோடும் பொருது வெல்லல் ஒருபொருளாமோ! இவர் களுடைய வன்மைக்கு இறுதியில்லையாயினும், முன்னேர்களைப் போலத்தவ வலியும் வரமும் படைக்கலங்களும் பெற்றிலர்கள். ஐயோ, இவர்களுக்கும் குறையுளதாயிற்றே! இயமனைக் கடந்த தனியாற்றல் கொண்டுற்ற சிவ பெருமானெருவருக்கே குறை கண்டிலம். மற்றைத் தேவருக்கும் யாவ ருக்கும் ஒவ்வோர் குறை உண்டு. அது யாவரும் அறிகுவர். இவ்வசுரர் களிடத்துள்ள குறை, சிலநாட்டவஞ்செய்வாராயின், ஒழிந்துவிடும். இது நிண்ணம். தவத்தால் இழிந்தோரும் உயருவர். விசுவாமித்திரரே இதற் குச் சான்று'' என்று இவ்வாறு பலவுங்கூறி நின்று, தாம் சூரபன்மன் முன்செல்லவும் முகமன்கூறவும் நினைந்தார். நினைந்து, சூரபன்மன் முன் செல்லலருமையை நோக்கி உயிர்களை வசிகரிக்கும் ஒரு மந்திரத்தை விதி முறையே சிந்தித்துக்கொண்டு, எதிர் சென்று, சேனைக்கடலினடுவே புகுந் தார். அவருடைய மாயமாகிய அக்கினியினுலே அசுரர்கள் தங்கள் என் னெஞ்சமாகிய இரும்பு உருகப்பெற்று, அவரைக் கைதொழுதார்கள். சுக்கிரன் சூரன்முன் போய், ''சூரபன்மனே, நீ இந்திரன் முதலியோர் யாவருக்கும் மேலாகக் கடவாய். அசுரர்களுடைய துயரநோய்க்கு ஏலாதி கடுகமென்னும் மருந்துபோலாகக்கடவாய்'' என்று ஆசி சொன்னர். அது கேட்ட சூரன் ''ஐயரே, நீர் இந்திரலோகத்துள்ளீரோ? அதனின் மேலாய உலகங்களினுள்ளீரோ? பூலோகத்துள்ளீரோ? நாகலோகத்துள்ளீரோ? நீர் யார்?இங்குவந்ததென்னை?உம்மிடத்தே என்மனம் உருகுகின்றது.அஃதன்றி என்புகளும் உருகுகின்றன. என்னை அறியாது அன்பு உதிக்கின்றது. அருந் தவஞ்செய்யும்பொருட்டு வனத்துக்குப் போதற்குக் கால்களும் எழுகின்றில. நீர் நன்னேயத்தோடு வந்திர். உயிர்களெல்லாவற்றையும் அன்னைபோலக் காத்தருளும் இயல்புடையீர்போலும். இவ்வியல்புடைய உம்மை இப் பொழுது நான்எதிர்ந்தது முற்பிறப்பிலே வருந்திச் செய்த தவவலியா

னன்றே'' என்றான். சுக்கிரன் அதுகேட்டு, ''நான் ஆசாரியநெறியிற் செல்வேன். உன் குலத்துக்கெல்லாங் குருவானேன். என் பெயர் சுக்கிரன். நான் உனக்கு ஒருறுதி சொல்லும்பொருட்டு வந்தேன்'' என்றார். சூரன் அதுகேட்டு, மிக்க உவகையுடையனாகி, ''சுவாமீ, நான் உய்ந்தேன்'' என்று சொல்லி, சுக்கிரனை அணுகி நின்று, கைதொழுது துதித்தான். துதித்தலும், சுக்கிரன் சூரனை நோக்கி, '' அரசனே, நீ தவஞ்செய்யும் பொழுது பகைவர்கள் ஊறு செய்வர்கள். அது உன்னை அணுகாவண்ணம் ஒருபாயம் சொல்வோம்'' என்று சொல்லி, சிவபெருமானுடைய மந்திரமொன்றை அவனுக்கு விதிப்படி உபதேசித்தார். உபதேசித்து, ''நீ நாடோறும் இம்மந்திரத்தைச் செபித்துக்கொண்டு கொலை களவு காமம் பொய் முதலிய தீமைகள் சாராவண்ணம் ஐம்பொறிகளை அடக்கித் தவத்தைச் செய்யக்கடவாய்'' என்று செவியறிவுறுத்தார். அப்பொழுது சூரன் சுக்கிரனுடைய பாதங்களை வணங்கி ''சுவாமீ, அடியேன் இப்பணியைச் செய்வேன்'' என்றான். சுக்கிரன் அளப்பில்லாத ஆசிகளைக் கூறி, மீண்டு போயினர்.

சூரபன்மன் அசுரர்கள் சூழ வடபுலத்தில் விரைந்து சென்று, அங்குள்ள ஆலவனத்தில் ஒருபக்கத்தை அடைந்தான். அங்கே யாகஞ்செய்தற்பொருட்டுப் பதினாயிரம் யோசனை பரப்பை உள்வைத்து, அதனைச்சூழ அசுரர்களைக்கொண்டு மதிலாகவே மதிற்செய்வித்து, அதனைச் சூழ அளப்பில்லாதசேனைகளை அரணமாக நிறுவி, நான்கு திக்கினும் வாயில் செய்வித்தான். அவ்வாயில்களோடாறும் காவல் செய்யும்பொருட்டு வீரமடந்தையை மந்திரத்தினாற் கூவி நிறுவினான். புதிலைச் சுற்றிக் காவல் செய்தற்பொருட்டுப் பூதங்களையும் பிசாசுகளையும் காளிகளையும் மந்திரத்தாற் கூவி நிறுவினான். பின் வைரவர் குழாத்தை மந்திரத்தாற் கூவி வணங்கி, யாகத்தைக் காக்கும் பொருட்டு வைத்தான். மதிலினுள்ளே நடுவே ஆயிரம்யோசனை அகலமும் ஆயிரம்யோசனை ஆழமுமுடைய ஓரோமகுண்டமும், அதனைச் சூழ நூற்றெட்டு ஓமகுண்டமும், அவற்றைச் சூழ ஆயிரத்தெட்டு ஓமகுண்டமும் செய்வித்தான். இவ்வாறு செய்வித்தபின்பு, யாகத்துக்கு உரிய உபகரணங்களை வேண்டி மாயையை நினைந்தான். நினைதலும் சிவபெருமானது திருவருளினாலே மாயையானவள் சிங்கம் புலி யாளி கரடி யானை குதிரை ஆட்டுக்கடா முதலிய மிருகங்களின் மாம்சம், இரத்தம், எண்ணெய், நெய், பால், தயிர், மது, கடுகு மிளகு முதலிய வெப்ப திரவியங்கள், நெய்யன்னம், யாகப்பசுக்கள், செந்நெலரிசி, அரிசனங்கலந்த அரிசி, மலர், கஸ்தூரி முதலிய சுகந்தம், சுருக்குச்சுருவம் தருப்பை, நெற்பொரி, முதிரைவர்க்கம், நச்சுச்சமித்து, தொள்கலங்கள் முதலியவற்றையும், ஒரு வச்சிரகும்பத்தையும் வருவித்து, மூவாயிரம் யோசனைப் பரப்பை அவற்றால் நிறைத்து, மீண்டனள்.

அதுகண்ட சூரபன்மன் யாகஞ்செய்யத் தொடங்கி, நடுவேதியின் மத்தியிலே வச்சிரகும்பத்தை நிறுவினான். மதிலின் நாற்றிசைவாயிலிலும் போய், வீரமடந்தையைச் சிந்தித்துப் பூசித்து, மாமிசபலி கொடுத்தான். மதினடுவினுள்ள பூதங்களுக்கும் பிசாசுகளுக்கும் பலிகொடுத்தான். ஆயி

ரத்தெட்டுக் குண்டங்களோறும் நச்சுவிறகிட்டு அக்கினிமூட்டி, தன்றம்பியர் களோடும் சிவபிரானது திருநாமத்தை உச்சரித்து, அவிகொடுத்தான். பின்பு தாரகனை நோக்கி, ''நீ சிறிதும் தாழ்க்காது இவ்வேதிதோறும் சென்றுசென்று, வேள்வியை உலவாது செய்யக்கடவாய்'' என்று பணித்து, அவனை நிறுவி, அப்பாற் சென்றான். சென்று, நூற்றெட்டு வேதிகளை அடைந்து, முன்னையவற்றிற்போல அவற்றினும் வேள்வி செய்து, சிங்க முகனை நோக்கி, ''நீ இங்கு நின்று இவ்வேள்வியைச் செய்யக்கடவாய்'' என்று பணித்து, அவனை நிறுவி, அப்பாற் சென்றான். சென்று, நடுவேதியை அடைந்து, சிவபெருமானைத் தியானித்து, விதிப்படி பூசித்து, தன் யாகத் தைச் செய்வாயினான். நச்சுவிறகுத்துண்டங்களை ஓமகுண்டத்துள் இட்டு, நச்சுமரத்தினாகிய தீக்கடைகோலால் ஆக்கிய அக்கினியை இட்டுச் சொலிப் பித்து, அவ்வக்கினியிலே நெய்யை மந்திரத்தோடு சொரிந்தான். அதன் பின் மாமிசத்துண்டங்களையும் உதிரத்தையும் இட்டான். அன்னத்தை இட்டான். நெய்யையும், எண்ணெயையும், இரத்தத்தையும், பாலையும், தயிரையும் விடுத்தான். நெற்பொரியை இட்டான். ஈற்றிலே தேனையும் கள்ளையும் சிந்தினான். தோரைநெல், மலைநெல், குளநெல், தினை, இறுங்கு, எள், முதிரைவர்க்கம் முதலியவற்றை உய்த்தான். நெய்யைச் சிந்தினான். கடுகு மிளகு முதலிய வெய்யபொருள்கள் பலவற்றையும் இட்டான். நெய் யைச் சொரிந்தான். இவ்வாறே சிவபிரானைச் சிந்தித்துக்கொண்டு சூர பன்மன் வீரயாகஞ்செய்தலும், ஓமாக்கினி மிகச்சொலித்தெழுந்து, திசை களையும் மேலுலகங்களையுஞ் சுட்டது.

சூரபன்மன் வீரயாகஞ்செய்தலைப் பிரமா விட்டுணு இந்திரன் முத லிய தேவர்களும் முனிவர்களும் கேள்வியுற்று, அஞ்சி நடுநடுங்கிப் பெருந் துயர்க்கடலின் அமிழ்ந்தினர்கள். இவ்வாறே சூரன் தன்னினைஞர்களோ டும் பதினாயிரம் வருடம் யாகஞ்செய்தான். செய்தும், சிவபெருமான் எழுந்தருளிவந்திலர். அதனாலே சூரன் ''எம்பெருமான் இச்செயலுக்கு எழுந்தருளி வருவரோ'' என்று சொல்லி, அத்தொழிலைத் தன் தம்பியர் களிடத்தே பணித்து, தான் ஆகாயத்திற்சென்று, அங்கு நின்றுகொண்டு, வாளினாலே தன் சரீரத்துள்ள தசைகளனைத்தையும் அரிந்தரிந்து, ஓமாக் கினியில் சிந்தி, இரத்தத்தை நெய்போலச் சொரிந்தான். தன்சரீரத் துள்ள தசைகள், அரியவரிய, முன்போல வளர்ந்தன. வளர்தலும் அது கண்டு விம்மிதங்கொண்டு, யாவரும் அஞ்சும்படி உரப்பிப் பெருமகிழ்ச்சி யுடையனாய், ''இச்செயல் எம்பெருமான் அன்புசெய்யுந் தன்மையதோ'' என்றெண்ணிப் பின்னும் ஆயிரம் வருஷம் ஆகாயத்தில் நின்று தன்சரீரத் தினுள்ள தசைகளாயிரந்து ஓமாக்கினியிற் சிந்தி யாகஞ்செய்தான். செய் தும், சிவபெருமான் எழுந்தருளி வந்திலர். சூரபன்மன் அதனால் மனம் வருந்தி ''இனி நான் மாண்டுபோவதே தகுதி'' என்று உறுதிசெய்து, அக்கினியினாலே சூழப்பட்டதாய் அதனால் எரியாமல் ஆதிகுண்டத்திற் பொருந்திய வச்சிரகம்பத்தின்மேலே குதித்து, விரைத்து அதனுச்சியினின் றும் உருவி அடியிற் சென்று, எரிந்து சாம்பராயினான்.

இதனைக்கண்ட சிங்கமுகன் மனம் பதைத்து, இரத்தக்கண்ணீர் விட்டழுது, வேள்வித்தொழிலை மறந்து, தன்னுயிர் உண்டோ வில்லையோ

வென்று சொல்லும்படி யொடுங்கத் துயர்க்கடலுளாழ்ந்து, அறிவழிந்து மலைபோல விழுந்து, பின் ஒருவாறு அறிவுண்டாகப் பெற்றுப் பதைபதைத்துச் சுழன்று பெருமூச்செறிந்து, வாய்திறந்து புலம்புவானுயினான்: "மாயையினுடைய புத்திரனே, காசிபமுனிவருடைய அன்புள்ள குமாரனே, அசுரகுலத்துக்கிறைவனே, யான் உன்னை உடம்போடு காணேன்! எங்கே யொளித்தாய்! நீயாகத்தைப் பலநாட்செய்து பெற்ற பேறிதுவோ! தாயும் நீ; தந்தையும் நீ; அசுரர்களைக் காப்பாற்றும் அரசனும் நீ; எங்கள் உயிரும் நீ; என்று எண்ணியிருந்தோம். நீ அதனை நினையாதிறந்தாயே! மாய்கின்ற சிறியோர்க்கு இங்கே யாதாயினும் பற்றுண்டோ? வீரனே, அசுரர்களுக்குள் மேலானவனே, மிக்க புகழையுடைய சூரனே, உன்னைப் போல இந்த வேள்வியை அநேகநாட் செய்தவர் யாவர்! அன்பில்லாமல் எங்களை அகன்று போயினையே! முப்புரங்களையும் எரித்த வன்கண்ணராகிய பரமசிவன உன்னிடத்து அன்பில்லாமையை யறியாது அவரைக் குறித்தோ யாகஞ் செய்தாய்! அவர் அதற்காகவோ உன்னுயிரையும் கவர்ந்தார்! உன்னைப்போல உயிரைவிட்டு உயர்வாகிய யாகத்தைச் செய்தவரும், பரமசிவனைப்போல அதற்கு அருள் செய்யாத பெரியோரும், இவைகளைக் கண்டு என்னைப்போல உயிரோடிருந்தவர்களும் இல்லை! இம்மூவருள் வன்கண்ணர் ஆர் ஐயா! 'இவர்கள் யாகத்தைச் செய்து சிவபெருமானுடைய திருவருளினுலே வலிமையைப் பெற்று நமது உயிரையும் செல்வங்களையும் நீக்குவார்கள்' என்று நமக்குப் பயந்திருந்த இந்திரனும் மனக்கவலை தீர்ந்தது இன்றைக்குத்தானே! எல்லாரும் போற்றும்படி யாகத்தைச் செய்து பல்லாயிர நாட் பழகி நமக்கும் இதனைச் சொல்லாமலிறந்தாய், இவர் துணைவராய் நம்மோடுகூட வரமாட்டாரென்றெண்ணினையோ! எல்லாருங் காண வச்சிரகம்பத்தில் விழுந்துருவி அக்கினியில் எரிதிறந்தாய். மிக்க வன்கண்மை பூண்டாய். உன்னுடம்பையுமொழித்தாய். புலம்பும் யாங்கள் இறந்தாயினும் உன்முகத்தைக் காண்போமோ" என்று இவைபோல்வனவற்றைச் சொல்லித் தாய்ப்பசுவைக் காணுத கன்றைப்போலச் சிங்கமுகன் வீழ்ந்தழுதான். அதனைக்கண்ட தாரகனும் கைகளையுதறி அரற்றி வீழ்ந்து, பெருமூச்சுவிட்டு வேள்விக்களமுற்றும் புரண்டு, துதிக்கையால் நிலத்தைப் புடைத்துத், துயர்க்கடலுளாழ்ந்து புலம்பினன். இப்படிச் சிங்கமுகாசுரனுந் தாரகாசுரனுந் தங்கள் தமையன் இறந்ததுகண்டு புலம்ப, அதுகண்ட அவுணர்களும் கடல்போலப் புலம்பினர்கள்.

இப்படி இவர்கள் எல்லாரும் புலம்புமொலியை இந்திரன் கேட்டு, சூரபன்மன் யாகாக்கினியில் வீழ்ந்திறந்தமையை ஒற்றுவரால்றிந்து, துன்பமெல்லாம் நீங்கி மிகுந்த மகிழ்ச்சியையுடையனுய், தேவர்கள் சூழ ஐராவதயானையில் ஏறி அவுணர்களுடைய துன்பத்தைக் காணும்படி ஆகாயத்தில் வந்து, நகைத்து, தன்னுடைய தவத்தை எண்ணி, இரங்குகின்ற அசுரர்களைக் கண்ணுரக் கண்டு களிப்புற்று நின்றுன். அவுணர்களோடு மிகுந்த துயர்க்கடலுள் ஆழுகின்ற சிங்கமுகன் "என்னுயிர்போன்ற தமையன் இறக்க நான் உயிரோடிருக்கலாமா" என்று எண்ணி எழுந்து தன் ஆயிரந்

தலைகளையும் வாளினால் அறுத்து, வீரம்பேசி, தன்றமையனுடைய ஆதி குண்டத்தக்கினியில் இட்டான். இட இட அவை முன்போல வளர்தலும், பின்னும் அத்தொழிலைச் செய்துகொண்டு நின்றான். அதனைக்கண்ட தாரகன் தன் தலையையும் அறுத்துஅவ்வக்கினியில் இட இட அதுவும் முன்போல வளர்ந்தது. இவ்விருவருடைய செயலைக்கண்ட அவுணர்களிற் சிலர் தங்கள் சிரங்களையும் அறுத்து அவ்வக்கினியில் இட்டார்கள்; சிலர் அவ்வக்கினியில் வீழ்ந்து இறந்தார்கள். சிங்கமுகனும் அக்கினியில் வீழத்துணிந்து, ஆகாயத்தில் எழுந்துபோம்படி எண்ணினான்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

# வரம்பெறு படலம்.

சிவபெருமான் அதனையறிந்து, ஒரு விருத்தப்பிராமண வேடங் கொண்டு தண்டைக் கையிலாண்றிக்கொண்டு வேதிகைக் கணித்தாகப் போய்ச், சிங்கமுகனைப் பார்த்து, ''இங்கே நீங்கள் எல்லீரும் இரங்குகின்றீர்கள்; உங்கள் வரலாற்றைச் சொல்லுங்கள்'' என்றார். சிங்கமுகன் ''பிதாவையொத்த இவர் எங்கள் துயரைக் கண்டு வந்து விளவுகின்றார். இவர் அருள்சேர்ந்த மனத்தையுடையவர்'' என்று எண்ணி, அக்கடவுளுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யெழுந்து, ''எங்களுடைய வரலாற்றையும் எங்களுடைய துன்பத்தின் வரலாற்றையும் சொல்லுவேன்'' என்று சொல்லுகின்றான்:–

எங்கள் தந்தை காசிபமுனிவர். தாய் மாயை என்பவள். அவர்களுக்கு நாங்கள் மூன்று புத்திரர்கள். எங்களோடு பிறந்த புத்திரர்கள் இன்னும் பலர் உளர். நாங்கள் மூவரும் எங்கள் தாயினுடைய ஏவலினாலே சிவபெருமானை நோக்கி இந்த வனத்திலே தவத்தைச் செய்தோம். பலவாண்டு தவஞ்செய்தும் சிவபெருமான் அருள் செய்திலர். எங்கள் தமையனாகிய சூரபன்மன் ஆகாயத்திற்போய் வாட்படையினாலே தன்னுடம்பிலுள்ள தசையை அறுத்து யாகாக்கினியிலிட்டான். இட இட அத்தசை பின்னும் முன்போல் வளருதலும், வச்சிரகம்பத்தினது தலையில் வீழ்ந்து உருவி அக்கினியிற் புகுந்து நீறாயினான். அதனை யாங்கள் கண்டு மிகத் துன்புற்று வெருவிப் புலம்பி, எமதுயிரையும் ஒருங்குவிட நினைந்தோம். உம்மைக்கண்டு ஓரிறைப் பொழுது தாழ்த்தோம். ''இதுவே எங்கள் வரலாறும் துன்பத்தின் வரலாறும்'' என்று சிங்கமுகன் கூறினான். பிராமண வடிவங்கொண்ட சிவபெருமான் அதனைக்கேட்டு, ''நீவிரும் நுந்தமையனைப்போல இறவாவண்ணம் யாகாக்கினியினின்றும் இப்பொழுதே அவனை எழுவித்தருள் செய்கின்றேம். மிகுந்த சோகத்தை விடுதிர்'' என்று அருளிச்செய்து, தேவகங்கையை வரும்படி திருவுளஞ் செய்தார். அக்கங்கை மிக விரைந்துவந்து எம்பிரானுடைய திருவடிகளை வணங்கி, அவருடைய பணியினால் நடுக்குண்டத்தினிடையே புகுதலும், சூரபன்மன் ஆர்த்தெழுந்தான். எழுதலும், சிங்கனும் தாரகனும் தரித்திரர் பெருஞ் செல்வம் பெற்றாற்போல மகிழ்ந்து, எல்லையில்லாத வலிமையைப் பொருந்தி விரைந்தோடிச் சென்று சூரபன்மனுடைய கால்களை வணங்கினர். அவ

ணர்கள் ''நம்மரசன் வந்தான் வந்தான்'' என்று கூறி, பூரண சந்திர னுடைய வரவைக்கண்ட சமுத்திரம்போல ''வாழிய'' வென்று துதித்து ஆர்த்தார்கள். இவைகளைப் பார்த்த தேவர்கள் மேகத்தின் வரவைக் கண்ட குயில்போல அஞ்சித் துன்பத்தோடு ஓடித் தம்மூரை அடைந் தார்கள்.

தம்பியர்கள் இருவரும் இருமருங்கும் நிற்ப அசுரர்கள் வாழ்த்தச் சூரபன்மன் நிற்கும்போது, சிவபெருமான் பிராமண வேடத்தை மறைத்து, உமாதேவி பாகமும் முக்கண்ணும் நாற்றோளும் உடையராய் இடபவாகனத்தின் மேற்கொண்டு, தாமாந்தன்மையை அறிதற்குரிய திரு வுருவத்தோடு தோன்றினர். சூரபன்மன் தன்னவர்களோடு ஆராத பெரு மகிழ்ச்சியினனாய்ப் பூமியில் விழுந்து வணங்கி யெழுந்து, பலமுறை துதித்து நின்றான். சிவபெருமான் அவனுடைய முகத்தைப் பார்த்து, ''நெடுங் காலம் நம்மை நினைத்துப் பெரிய யாகத்தைச் செய்து இனைத்தாய். வேண் டும் வரம் என்னை? சொல்லுதி'' என்று அருளிச் செய்தார். அவன் பிரமா முதலிய தேவர்களெல்லாரும் ''இன்றே எங்கள் பெருமைகளெல் லாம் போயின'' என்று இரங்கும்படி இதனைச் சொல்வான்:-

''இப்பிருதிவியிலுள்ள அண்டங்க ளெல்லாவற்றிற்கும் யான் அர சனாயிருத்தல் வேண்டும்; அவைகளைக் காத்தற்குரிய ஆஞ்ஞாசக்கரமும் வருதல் வேண்டும்; நினைத்தவுடனே அவைகளுக்கெல்லாம் செல்லுதற்கு வாகனங்களையும் உதவல் வேண்டும்; எப்பொழுதும் அழியாமலிருக்கின்ற உடம்பையும் எனக்கு ஈதல் வேண்டும்; விட்டுணு முதலிய தேவர்கள் போர்செய்தாலும் அவர்களை வெல்லும் பேராற்றலையும் பல படைக்கலங் களையும் உதவல் வேண்டும்; என்றும் அழியாமலிருக்கவும் வேண்டும்'' என்று வேண்டினன். வேண்டுதலும், சிவபெருமான் ''பிருதிவியிலுள்ள ஆயிரகோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளுக'' என்று அருள்செய்து, அவ்வண்டப் பரப்பெங்கும் செல்லும் வண்ணம் மிகுந்த வலியையுடைய இந்திரஞாலமென்னுந் தேரையும் அவ் வண்டங்களை என்றும் பாதுகாக்கும்படி ஓராஞ்ஞாசக்கரத்தையும் சிங்க வாகனத்தையும் கொடுத்து, அன்று முதலாகத் தேவர்கள் எல்லாருக்கும் முதல்வனாகும் மேன்மையையும், தேவர்களையும் அசுரர்களையும், மற்றை யோர்களையும் வெற்றிகொள்ளும் வலிமையையும், பாசுபதப்படை முதலிய தெய்வப்படைகளையும், எந்நாளும் அழியாமலிருக்கின்ற வச்சிராயுதக்கை யையும் ஈந்தருளினர். அதன்பின் கங்கையாற்றை விண்ணுலகத்துக்குச் செல்லும்படி அனுப்பி, அக்கங்கை யாகாக்கினியோடு கலந்தமையாற் பிறக்கும்படி பதினாயிரகோடி வெள்ளம் என்னும் எண்ணைக்கொண்ட கச ரத துரக பதாதியாகிய நால்வகைச் சேனைகளை உண்டாக்கிச் சூர பன்மனுக்குச் சேனைகளாகக் கொடுத்தார். இப்படிச் சூரபன்மனுக் கருள் செய்தலும், அவனுடைய தம்பியர்கள் வந்து சிவபெருமானுடைய திரு வடிகளை வணங்க; ''நீங்கள் உங்கள் தமையனாகிய சூரபன்மனுடைய இரண்டு தோள்களையும்போல் அவனுக்குத் துணையாக வீரத்தைப் பொருந்தி விளங்கி நூற்றிரட்டு யுகம் சிறப்போடு வாழுதிர்; தேவர்க

எல்லாரையும் புறங்காணுதிர்; தேவர்களெல்லாராலும் வணங்கப்படும் உங்களை முவரையும் நம்முடைய சத்தி யொன்றேயன்றி வேறு யாவர் வெல்லுவார்'' என்று அருளிச் செய்து, அழியாத தேர்களையும் பாசுபதப் படையையும் கொடுத்து, வேறு வேறுக அவர்களுக்கு மிகவும் அருள் செய்து பரமசிவன் மறைந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

## சுக்கிரனுபதேசப் படலம்.

அப்பொழுது அவுணர்கள் தம்மரசன் மிகுந்த வலிமையைப் பெற்றான் என்று எண்ணி, மிக்க வலியுடையர்களாய், முன்னுள்ள துன்பங்கள் நீங்கி மிக மகிழ்ந்து ஆர்த்து, ஏழுகடல்களும் மேருமலையைச் சூழ்வது போலச் சூரபன்மனைச் சூழ்ந்தார்கள். அவன் அவுணப்படைத்தலைவர் களுட் சிலரைப் பார்த்து, ''இந்நாள்வரையும் நீவிர் க்ஷேமமுடையீர் களா'' என்று வினவி நல்லருளைச் செய்ய, அவர்கள் மகிழ்ந்து, ''சிவ பிரானுண்டு, நீயுண்டு. எங்களுக்கு ஓர் குறையுண்டோ! நிலையாகிய செல் வத்தையும் சிறப்பையும் பெற்றோம். தாயுண்டாயிற் பிள்ளைகளுக்கோர் தளர்வுமுண்டோ!'' என்றார்கள். இப்படிச் சொல்லுகின்ற அசுரர்கண்மாட் டுச் சூரபன்மன் அன்புடையனாய், தம்பியர் இருமருங்கும் ஆக நின்றான். இதனைக்கண்ட தேவர்கள் ''இந்த அசுரன் வலியனாயினன், இனி நாம் செய்வதென்னை?'' என்று உயிர்துறப்பார் போல அஞ்சி ஏங்கினார்கள். சேனைகளினடுவே சூரபன்மன் நிற்றலை முன்னைய அசுரர்கள் விருப்பினோடு பார்த்து, தம்மரசனோடு விமானத்தி லேறிவந்து பூக்களைத்தூவி, புடைவை களை வீசி, ''சூரபன்மன் வாழ்க'' என்று ஆசிகூறி, ஆடிப்பாடிப் பெரு மகிழ்ச்சியை அடைந்து, இந்திரனுடைய மனத்துயரத்தை நோக்கினார்கள். சூரபன்மன் சிவானுக்கிரகத்தினால் யாகாக்கினியிலிருந்து தோன்றிய அள விறந்த படைகளுக்கெல்லாம் பல அசுரர்களைத் தலைவர்களாக்கி, சேனைகள் மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் திக்குகளிலும் செல்ல, தம்பிய ரோடு யாகசாலையை நீங்கி, பிதாவாகிய காசிபமுனிவரிடத்திற் சென்று வணங்கி, சிவபிரானிடத்தே தாம் பெற்ற வரங்களைச் சொல்லி, ''இனி யாங்கள் செய்வது என்னை?'' என்று வினவினன். காசிபமுனிவர் அதனைக் கேட்டு, ''இந்திரனுடைய வாழ்வுக்கு முடிவு வந்ததோ! தேவர்களுக்குத் துன்பம் வந்ததோ! எங்கள் வேதாசாரந் தவறியதோ! சிவபெருமானு டைய திருவருள் இவ்வாறுயிற்றோ!'' என்று உள்ளத்திலே உணர்ந்து, ''உங்கள் குரு சுக்கிராசாரியர். அவரிடத்தே போங்கள்; அவர் உங்க ளுக்கு இந்தச் செல்வங்கள் இடையறுதவண்ணம் விருத்தியாதற்கு வேண் டும் புத்திகளை நன்றுகப் போதிப்பார்'' என்று விடைகொடுத்தனுப்பினர். சூரபன்மன் விடைபெற்றுக்கொண்டு சுக்கிராசாரியரை அடைய, அவர் இவனுடைய வரவையறிந்து, சீடர் கூட்டத்தோடு எதிர்கொண்டார். சூரபன்மன் சேனைகளுக்கு முன்னே போய்த் தம்பிமார்களோடு அவரை வணங்கினன். ஆசாரியர் ஆசி கூறித் தழுவி, தமது மாளிகைக்கு அழைத்

துக்கொண்டு போயினர். சூரபன்மன் சேனைகளைக் காக்கும்படி தாரகனுக் குப்பணித்துச் சிங்கமுகனோடு செல்ல, சுக்கிரன் ஆசனங்கொடுத்திருக்கச் செய்து, சற்கார வசனங்களைக் கூறி, ''நீங்கள் என்னிடம் வந்த காரணம் என்னை'' என்று வினவினர். சூரபன்மன் தாங்கள் நெடுங்காலம் வீரயாகஞ் செய்ததும் சிவபெருமான் எழுந்தருளி வந்து வரங்களையும் அளவில்லாத வளங்களையும் தந்ததும், பின் காசிபமுனிவரிடத்தில் வந்ததும், அவர் தங்களுக்குச் சொல்லியதும் ஆகிய எல்லாவற்றையும் சொல்லி, ''நாங்கள் இனிச் செய்யத்தக்க நீதிகளெல்லாவற்றையும் ஆசாரியராகிய நீர் உபதேசிக்கவேண்டும்'' என்று வேண்ட, அவர் சொல்வாராயினர்:-

''பாசமென்றும் பசுவென்றும் இவற்றிற்கு மேலாய பதியென்றும் மூப்பொருள்கள் உண்டென்றும், நல்வினை தீவினை என வினைகள் இரண்டு என்றும், அவை யேதுவாகப் பிறப்பிறப்புக்களையும் இன்பதுன்பங்களையும் பசுக்கள் அடையும் என்றும், ஊழினுலே ஒருபிறப்பிலன்றி மறுபிறப்பிலும் அப்பசுக்கள் இன்பதுன்பங்களை அனுபவிக்கும் என்றும், அவைகள் அங்ஙனம் அனுபவிக்கும் பொழுது மேல் வருபிறப்புக்காக இருவினைகளை ஈட்டும் என்றும், அவ்விரு வினைகளினுல் அவைகள் மாறிமாறிப் பிறத்தலைப் பதியறிந்து அவ்வினைகளைத் தப்பாது கூட்டுவார் என்றும், பதியும் பசுக்களும் ஒன்றென்னில் அதனுல் அப்பதிக்குக் குற்றம் உண்டாகும் என்றும் சிலர் கூறுவர். சூரபன்மனே, இதற்கு நாம் சொல்வோம் கேட்பாய்: பாசம் உண்டென்று சொல்லுதல் பொய். பதியும் பசுவும் இரண்டல்ல ஒன்றே. உற்பத்திநாசமில்லாதவரும் மலரகிதரும் சோதிசொரூபருமாகிய சிவபெருமான் திருவினையாட்டினுல் இச்சை கொண்டு தமது மாயையினுலே பூதங்களையும் பிறவற்றையும் உண்டாக்கி மாயையாலாகிய உடம்புகளோடாறும் கடாகாயம் போலத் தாம் கலந்து நின்று, அவ்வுடம்புகள் அழியுங்காலத்திலே தாம் முன்போல இருப்பர். இவ்வாறே அச்சிவபெருமான் எக்காலமும் திருவினையாடலைச் செய்வர். இருவினைகளும் அவற்றின் பயன்களாகிய இன்பதுன்பங்களும் பொய்யாம். முத்தியென்று ஒன்று உண்டென்பதும் அதற்காக முயலவேண்டும் என்பதும் பொய்யாம். பொறிகளும் புலன்களும் பொய்யாம். ஆகவே அவைகளைக் காணும் பசு மெய்யாகுமோ! புத்தியும் வாக்கும் வடிவமும் செயல்களும் பொய்யாம். செயல்கள் பொய்யாகும்போது, அச்செயல்களால் வரும் துன்ப இன்பங்கள் மெய்யாகுமோ! இல்லனவாகிய வினைப்பயன்களை உள்ளனவாகக் கொள்ளினும், அவைகள் உடம்பிற்கன்றி நிருமலராகிய சிவபெருமானைச் சாருமோ! பிறப்பதும் இறப்பதும் வினைகளைச் செய்வதும் சிவபெருமானுக்கில்லை. உற்றுநோக்கும்போது இவைகள் உடம்பிற்கேயாம். போவதும் வருவதும் ஆவதும் அழிவதும் வினைகளைச் செய்வதும் எண்ணில்லாத கடங்களோடாறும் பொருந்திய ஆகாயங்களுக்கு ஆகுமோ! அதுபோல எங்கும் உயிர் தானேயாய்ப் பொருந்தி நிற்கும் சிவன் வேறுபாடு சிறிதுமின்றி ஒரேதன்மையுடையராயிருப்பர்; இது உண்மை என்று அறி. 'தருமம் நமக்குத் துணையாகும். அதனைச் செய்வது நன்று' என்று செய்வதும், 'பாவம் நீது அதனைச் செய்யலாகாது' என்று அஞ்சுகின்றதும் அறிவின்மையாம். யாது யாது செய்யும்படி

நேர்ந்தோ அதனை அதனை இது நீது இது நன்று எனச் சிந்தை செய்யாது அவையெல்லாம் கடவுளுடைய மாயை என்று எண்ணிச் செய்தலே முறைமை. 'தருமத்தைச் செய்க பாவத்தைச் செய்யாதொழிக' என்று சில மூடர் சொல்வர். இவ்விரண்டையும் யார் செய்தாலும் மேலே வருவ தொன்றுமில்லை. மாயம் வித்தாகுமோ! கனவிலே நாம் இன்பமடையவும் துன்பமடையவும் கண்டவைகளை நனவிலே கண்டதில்லை. அவைபோல இப்பிறப்பிற் செய்யும் புண்ணிய பாவங்கள் மறுபிறப்பிற் பயன்படுத லில்லை. மறுபிறப்பொன்றிருந்தாலல்லவா இப்பிறப்பிற் செய்யும் இரு வினைப்பயன் அனுபவிக்கப்படும். அம்மறுபிறப்பென்பது பொய்மையே. ஆதலால் அப்பொய்யில் உண்டாவது மெய்யாகுமோ! இத்தன்மைகளை யெல்லாம் பிறரறிவாரேயெனின் யாம் அடைந்த மேன்மைகளையெல்லாம் அப்போதே அடைவர். இவைகள் உறுதியாகக் கொண்டால் உண்மை யாயிருக்கும். சிலரைச் சிறியர் என்றும் சிலரைப் பெரியர் என்றும் எண்ணுவது தகுதியன்று. 'உயிர்கள் எல்லாம் ஒன்றே' என்று அறிதல் வேண்டும். இது உண்மையே. இவைகள் ஞானிகள் அறியத்தக்க நுண் பொருள்களாம். இனி உங்களுக்கேற்ற வண்மைகளையும் வழங்கங்களையும் சொல்வோம் கேட்பாய்: தேவர்களினும் விட்டுணுமுதலாகிய மற்றை எவர்களினும் மேலாகிய அரசுரிமையும் வெற்றியும் ஆணையும் அழியாத செல்வங்களும் உனக்கு வந்தன. இந்தமேன்மையினால் உன்னை நீயே பிரம மென்று தெளிகுதி. பிரமாமுதலிய தேவர்களை மேலோரென்று எண் ணுதே, வணங்காதே. தேவர்கள் உங்களுக்குப் பகைவர். அவர் களுடைய செல்வங்களை அழித்துத் தண்டிப்பாய். இந்திரனென்பவன் தேவராசன். அவனை முன்னை நாளில் அளவிறந்த அவுணர்களுடைய உயிரைக் கவர்ந்தான். அவன் தப்பி ஓடாவண்ணம் விரைந்து அவனைப் பிடித்து விலங்கிட்டுச் சிறையில் வை, பல தீமைகளையுஞ் செய். முனிவர் களையும் தேவர்களையும் திக்குப்பாலகர்களையும் ஏவல் கொள்ளுதி. அவர் களுடைய பதங்களை அவுணர்களுக்குக் கொடு. கொலை களவு காமம் வஞ்ச மெல்லாவற்றையும் உறுதியென்று செய். அதனால் உனக்கு வருந்தீதொன் றுமில்லை. அவைகளைச் செய்யாயாயின் நீ விரும்பியவையெல்லாம் ஒருங்கு வாரா, உனக்கெவர் அஞ்சுவர்! சிவபெருமான் தந்த ஆயிரத்தெட்டண்ட டங்களையும் சேனைகளோடு இப்பொழுதே போய்ப் பார்த்துப் பார்த்து ஆங்காங்குச் செய்யும் கடன்முறைகளாகிய இறைமையைச் செய்து, எண் டிசையும் புகழும்படி மீண்டுவந்து இவ்வண்டத்தில் வீற்றிருப்பாய்." என்று சுக்கிராசாரியர் உபதேசித்தார்.

திருச்சிற்றம்பலம்.

## அண்டகோசப் படலம்.

இவ்வாறுகிய நீய உபதேசத்தைச் சுக்கிராசாரியர் உபதேசித்தலும், சூரபன்மன் "இது நல்லது! ஆசாரியராகிய உம்முடைய பணியின்படி நிற் பேன். பரமசிவன் எனக்குத் தந்த ஆயிரத்தெட்டண்டங்களினிலைமை களையும் நீர் சொல்லும்" என்று கேட்ட அவர் சொல்வாராயினர்: "மூலப்

பிரகிருதிக்கு மேலுள்ள அசுத்தமாயை சுத்தமாயையாகிய தத்துவங்களும் அவற்றிலே தோன்றுவனவும் நிற்க, இப்பால் அவற்றின் கீழுள்ள மூலப் பிரகிருதியிற் புத்தி தத்துவந் தோன்றும். அதில் அகங்காரதத்துவம் தோன்றும். அதில் சத்த முதலிய ஐம்புலன்களும் தோன்றும். அவற்றில் முறையே ஆகாசம் வாயு தேயு அப்பு பிருதிவி என்னும் ஐந்து தத்துவங்களும் தோன்றும். இவற்றுள் பிருதுவி தத்துவத்துக்கு ஆயிரகோடி அண்டங்கள் உள்ளன. அவை பொன்னிறமுடையனவாய்ப் பரந்திருக்கும்; ஒன்றற்கொன்று மேலுள்ளனவல்ல. இவ்வியல்பினவாகிய ஆயிரகோடி பிருதிவியண்டங்களில் சூரபன்மனே நீ பெற்ற அண்டங்கள் ஆயிரத்தெட்டு. இவற்றுள் ஒரண்டத்தினியற்கையைச் சொல்லுகின்றேம் நன்கறிகுதி.

கதிரெழுதுகள் இருபத்துநான்கு கொண்டது ஒருமயிர்நுனி. மயிர் நுனி எட்டுக் கொண்டது ஓர் ஈர். ஈர் எட்டுக்கொண்டது ஒரு பேன். பேன் எட்டுக்கொண்டது ஒரு நெல். நெல் எட்டுக்கொண்டது ஓர் அங்குலம். அங்குலம் இருபத்துநான்கு கொண்டது ஒரு முழம். முழம் நான்கு கொண்டது ஒரு தனு. தனு இரண்டு கொண்டது ஒரு தண்டம். தண்டம் இரண்டாயிரம் கொண்டது ஒரு குரோசம். குரோசம் நான்கு கொண்டது ஒரு யோசனை. இப்படிப்பட்ட நூறுகோடி யோசனை தனித்தனி இந்த ஓர் அண்டத்தின் விசாலமும் உயர்ச்சியுமாம். ஒழிந்த பிருதிவியண்டங்களும் இந்த அளவையுடையன. பூமியின் மேற்பரப்புக்குக் கீழே ஐம்பது கோடி யோசனையும், அதற்குமேலே ஐம்பது கோடி யோசனையும், மேரு மலையின் மத்தியிலிருந்து அண்டகடாகத்தினெல்லைவரையும் ஐம்பதுகோடி யோசனையுமாம். கீழேயுள்ள அண்டகடாகம் ஒரு கோடி யோசனை. அதற்கு மேலே காலாக்கினி உருத்திரருடைய செம்பொற் கோயில் ஒருகோடி யோசனையும், அவருடைய அக்கினிச் சுவாலை பத்துக்கோடி யோசனையும், அதன் புகை ஐந்துகோடியோசனையும், அவருடைய சிங்காசனத்தினுயர்ச்சி ஆயிரம் யோசனையும், அதன் விசாலம் இரண்டாயிரம் யோசனையும், காலாக்கினி யுருத்திரருடைய அக்கினிமயமாகிய திருமேனியினுயர்ச்சி பதினுயிர யோசனையுமாம். அவர் தம்மைப்போல்வராகிய உருத்திரர் பதின்மரும் அவர்களுடைய பத்துக்கோடி பரிசனங்களும் தம்மைச் சூழ்ந்து சேவிக்க வாள் பரிசை வில் அம்பு என்னும் ஆயுதங்களைத் தாங்கியிருப்பர். ஆதிகூர்மம் அவரைத் துதித்துக்கொண்டு அந்தப்புவனத்திலிருக்கும். அதன்மேல் அடுக்குறு நீலமையனவாகிய இருபத்தெட்டுக்கோடி நரகங்கள் உள்ளன. அவற்றின் உயர்ச்சி இருபத்தொன்பதுகோடி யோசனை. அவற்றின் இடைவெளி பன்னிரண்டிலக்கம்யோசனை. அதன்மேல், கீழ்பாகம் மண்ணும் நடுப்பாகம் இரும்பும் மேல்பாகம் பசும்பொன்னும் மயமாகிய ஒரு புவனம் தொண்ணூற்றொன்பதிலக்கம் யோசனை உயர்ச்சியுடைய தாயிருக்கும். அம்மேல்பாகத்தில், கரியமுகத்தையும் சுழலுங் கண்களையுங் காலாக்கினிபோலும் திருமேனியையும் மழுப்படைபொருந்திய கையையு முடைய கூர்மாண்ட வுருத்திரர் பொன்னகரத்தில் வீற்றிருப்பர். அவரைச் சூழ்ந்து சேவித்துக்கொண்டிருக்கும் உருத்திரர் அளவில்லாதோர். இந்தக் கூர்மாண்ட புவனத்தின்மேலுள்ள ஆகாயவெளி ஒன்பதிலக்கம் யோசனை.

அதன்மேலே சப்த பாதலங்களுள்ளன. பாதலம் ஒன்றற்கு ஒன்பதிலக்கம் யோசனையாக அவற்றினுயர்ச்சி அறுபத்து மூன்றிலக்கம் யோசனை. அவற்றின் மேலுள்ள கனிட்ட பாதலம் எட்டிலக்கம் யோசனை உயர்ச்சியுடையது. அப்பாதலங்களுக்குத் தனித்தனி அகற்சி பதினுயிரம் யோசனை. அவை தனித்தனி மூன்றுபாகமுடையன. கீழ்ப்பாகத்தில் அசுரரும், நடுப்பாகத்தில் நாகரும், மேல்பாகத்தில் அரக்கரும் இருப்பர். இப்பாதலத்துக்கு மேலுள்ள ஆடகேசவருத்திரர் புவனம் ஒன்பதிலக்கம் யோசனையுடையது. பாதலங்களுக்கெல்லாம் தலைவராய்ப் பாதுகாப்போர் இதிலுள்ள ஆடகேசவருத்திரர். இவரைச் சேவிக்கும் சனங்கள் நாகரும் அவுணரும் அரக்கருமாம். இந்த ஆடகேசர புவனத்தின்மேல் ஒருகோடியே இருபதிலக்கம் யோசனை வெளியுண்டு. இதன்மேல் எட்டியானைகளாலும் எண்பெரும் பாம்புகளாலும் ஆதிசேடனுலுந் தாங்கப்படும் பூமியினுயர்ச்சி எண்பதிலக்கம் யோசனையாம். அண்டகடாகமுதற்பூமியீருக *ஐம்பதுகோடி யோசனையாம். இதனைக் கணித்தறிந்துகொள்வாய்.

பாதலங்கட்கெல்லாம் மேலாயுள்ள பூமியின் விரிவையும் அங்கேயுள்ளனவற்றையுஞ் சொல்வேன் சூரபன்மனே கேட்பாய். பூமியில் சம்புத்தீவு, சாகத்தீவு, குசைத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சான்மலித்தீவு, கோமேதகத்தீவு, புட்கரத்தீவு என ஏழு தீவுகள் உள்ளன. உவர்க்கடல், பாற்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், தேன்கடல், சுத்தோதகக்கடல் என்னும் ஏழு கடல்கள் இத் தீவுகளை முறையே சூழ்ந்திருக்கும். சம்புத்தீவின் பரப்பும் அதனைச் சூழ்ந்த உவர்க்கடலின் பரப்பும் தனித்தனி ஓரிலக்கம் யோசனை.. மற்றைத் தீவுகளுக்கும் கடல்களுக்கும் உள்ள பரப்பு முறையே இவற்றிலிருந்து ஒன்றற்கொன்று தனித்தனி இரட்டித்தயோசனை. அங்ஙனம் கணிக்கும் போது ஏழுதீவுகளுக்கும் கடல்களுக்கும் உள்ள பரப்பு இரண்டுகோடியே ஐம்பத்துநான்கிலக்கம் யோசனையாம். சுவர்ணபூமி இவற்றைச் சூழ்ந்திருக்கும். அதன்பரப்புப் பத்துக்கோடி யோசனை. அதனைச் சூழ்ந்த சக்ரவாளகிரியின் பரப்புப் பதினுயிர யோசனை. அதனைச் சூழ்ந்த புறவாழியின் பரப்பு ஒருகோடியே இருபத்தேழிலக்கம் யோசனை. அதனைச் சூழ்ந்த இருட்பூமியின் பரப்பு முப்பத்தைந்துகோடியே பத்தொன்பதிலக்கத்து நாற்பதினுயிரம் யோசனை. அதனைச் சூழ்ந்த அண்டச்சுவரின் கனம் ஒருகோடியோசனை. இங்ஙனம் கணிக்கப் பூமியின் அகலம் ○ஐம்பது கோடி யோசனையாம். நாம் கூறிய இந்தக் கணிதத்தையுடையது ஒரு திசையே. இவ்வாறே மற்றைத் திசையையும் சேர்த்துக் கணிக்கில் பூமியின் அகலம் நூறுகோடி யோசனையாம்.

---

* காலாக்கினியுருத்திரருடைய சிங்காசனவுயர்ச்சி ஆயிரயோசனையும், அவர் திருமேனியுயர்ச்சி பதினுயிரயோசனையும், அவருடைய திருமேனிச் சுவாலை பத்துக்கோடி யோசனையுள் அடங்குதலால், அவ்விரண்டனையும் நீக்கி ஐம்பதுகோடி யோசனை கொள்க.

○ பூமியின் மத்தியிலிருந்து கணிக்கவேண்டுதலால், ஏழு தீவுக்கும் நடுவிலுள்ள சம்புத்தீவின் பரப்பு ஓரிலக்கம் யோசனையில் ஐம்பதினுயிரம் யோசனையைக் கழிக்க ஐம்பதுகோடியாதல் அறிக.

பிரமாவினுடைய வலப்புயத்திற் றோன்றிய சுவாயம்புவின் புத்திரனாகிய பிரியவிரதன் என்பான் இப்பூவுலக முழுதையும் ஆண்டான். அவனுக்கு அங்கிதிரன், மேதாதி, வபுட்டு, சோதிட்டு, துதிமான், அவ்வியன், சவநன் என ஏழு புத்திரரிருந்தனர். அவர் எழுவரும் முறையே சம்புத்தீவு முதலிய ஏழு தீவுகளையும் ஆண்டார்கள். சம்புத்தீவுக் கரசனாகிய அங்கிதிரன் தன்னுடைய புத்திரர்களாகிய பாரதன், கிம்புருடன், அரி, கேதுமாலன், பத்திராசுவன், இளாவிருதன், இரமியன், இரணியன், குரு என்னும் ஒன்பதின்மருக்கும் அத்தீவை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான். மேருமலை சம்புத்தீவினடுவில் பூமிக்கு மேலே எண்பத்து நாலாயிரம் யோசனை உயர்ந்தும், கீழே பதினாயிரம் யோசனை ஆழ்ந்தும், தலை முப்பத்திராயிரம் யோசனையும் அடி பதினாயிரம் யோசனையும் அகன்றும் தாமரைப் பொகுட்டுப்போலிருக்கும். அதில் மூன்று மேகலைகளுள்ளன. மேலுள்ள மேகலையிற் பல சிகரங்களிருக்கின்றன. அவற்றுள் நடுச்சிகரத்தில் பிரமாவின் புரமாகிய மனோவதியும், மேற்றிசைச் சிகரத்தில் விட்ணுவின் புரமாகிய வைகுண்டமும், வடகீழ்த்திசைச் சிகரத்தில் பரமசிவனுடைய புரமாகிய சோதிட்கமும், இவற்றின் மருங்கே எட்டுத்திசைகளினுமுள்ள சிகரங்களில் இந்திரன் முதலிய திக்குப்பாலகர் எண்மருடைய புரங்களுமிருக்கும். அம்மலையின் மருங்கில் தெற்கு முதல் வடக்களவும் நேர்மையான தேசமாய்ச் செவ்வே போகின்ற நெடிய குகையொன்றுள்ளது. சூரபன்மனே இதனை நினைப்பாய். அம்மேருமலையின் கீழ்த்திசையில் வெண்ணிறமுடைய மந்தரமலையும், தெற்கில் பொன்னிறமுடைய கந்தமாதனமலையும், மேற்கில் நீலநிறமுடைய விபுலமலையும், வடக்கில் மாதுளம்பூநிறமுடைய சுபார்சுவமலையும் உள்ளன. இவற்றில் முறையே கடம்பும், நாவலும், அரசும், ஆலும் நிற்கின்றன. நாவன்மரத்தினுயர்ச்சியும் பரப்பும் தனித்தனி இரண்டாயிரம் யோசனையும், மற்றை மூன்று மரங்களினுயர்ச்சியும் பரப்பும் தனித்தனி ஆயிரம் யோசனையுமாம். மந்தரமலைக்குக் கிழக்கிலும், கந்தமாதன மலைக்குத் தெற்கிலும், விபுலமலைக்கு மேற்கிலும், சுபார்சுவமலைக்கு வடக்கிலும் முறையே அருணம் மானசம் அசிதோதம் மாமடு என்னும் நீர் நிலைகளும், முறையே இவற்றின் கிழக்குத் தெற்கு மேற்கு வடக்குத்திசைகளில் சயித்திரதம் நந்தனம் வைப்பிரசம் திருதாக்கியம் என்னும் வனங்களும், மேருமலைச்சாரலிற் பொருந்தும். மேருமலையின் தெற்கில் ஒரு நாவன்மரம் நின்ற காரணத்தாற் பாரதவருடம் முற்றும் நாவலந்தீ வென்னும் பெயர் பெற்றது. இத்தருவின் பழச்சாறு ஆறாய் அம்மலையைச் சூழ்ந்து வடபாற் சென்று சாம்பூநதம் என்னும் பெயர் பெறும். அதனைப்பருகினோர் உடல முழுதும் பொன்மயமாய்ப்பதின் மூவாயிரமாண்டு வாழ்வர். நாற்றிசைகளினுமுள்ள மந்தர முதலிய மலைகளின் மேலகலம் தனித்தனி பதினாயிரம் யோசனையும், உயர்ச்சி தனித்தனி நாற்பத்திராயிரம் யோசனையும், கீழ் அகலமும் ஆழமும் தனித்தனி எண்ணாயிரம் யோசனையுமாம். மேருவின் கிழக்கில் நீல நிறமுடைய மாலியவானும், தெற்கில் பதுமராக நிறமுடைய நிசதமும் பொன்னிறமுடைய ஏமகூடமும் பனிநிறமுடைய இமையமும், மேற்கில் பொன்னிறமுடை கந்தமாதனமும், வடக்கில் நீல நிறமுடைய நீலமும் வெண்ணிறமுடைய

சுவேதமும் சந்திரகாந்த நிறமுடைய சிருங்கமும் அதனைச் சூழ்ந்த எட்டு மலைகளாம். முறையே கிழக்கிலும் மேற்கிலுமுள்ள மாலியவானும் கந்த மாதனமும் வடக்கில் நீலகிரியையும் தெற்கில் நிடதகிரியையுமுறத் தெற்கு வடக்காகவும், தெற்கிலுள்ள நிஷதம் ஏமகூடம் இமையம் என்னும் மூன்றும் வடக்கிலுள்ள நீலம் சுவேதம் சிருங்கம் என்னும் மூன்றும் தனித் தனி கீழ்மேல் கடல்களைச் சாரக் கிழக்கு மேற்காகவும் நிற்கும். இவ் வெட்டு மலைகளும் தனித்தனி இரண்டாயிர யோசனை உயரமும், கந்த மாதனமும் மாலியவானும் தனித்தனி பதினாயிர யோசனை அகலமும், மற்றை ஆறுமலைகளும் தனித்தனி இரண்டாயிர யோசனை அகலமுடை யனவாம். இனி, இச்சம்புத்தீவிலுள்ள நவகண்டங்களி னெல்லையைச் சொல்வோம்.

வடகடல் முதற் சிருங்கமலை வரையும் குருவருடமும், சிருங்கமலை முதற் சுவேதமலைவரையும் இரணியவருடமும், சுவேதமலைக்கும் நீலமலைக் கும் நடு இரமியவருடமும், மேருமலையைச் சூழ்ந்த வருடம் இளாவிருத மும், மாலியவான் மலைமுதற் கீழ்கடல் வரையும் பத்திராசுவ வருடமும், கந்தமாதன மலைக்கும் மேல்கடலுக்கும் நடுக் கேதுமாலவருடமும், நிடத மலைமுதல் ஏமகூடமலைவரையும் அரிவருடமும், ஏமகூடம் முதல் இமை யம் வரையும் கிம்புருட வருடமும், தென்கடலுக்கும் இமையத்துக்கும் நடுப் பாரதவருடமுமாம். கேதுமால வருடமும் பத்திராசுவ வருடமும் தனித்தனி முப்பத்து நாலாயிரம் யோசனை விரிவும், ஒழிந்த ஏழு வருடங் களும் தனித்தனி ஒன்பதினாயிரம் யோசனை விரிவுமுள்ளன. பாரதவருட மொழிந்த மற்றை எட்டு வருடங்களும் தம்மிடத்து வசிப்பவர்க்குத் தேவருலகத்தை யொப்பனவாம். குருவருடத்திலிருப்போர் ஒரு தாய் வயிற்றில் ஒரு பொழுதினுள் ஆணும்பெண்ணுமாய்ப் பிறந்து தம்முட் புணர்ந்து தேவதருவின் காய்கனிகளையுண்டு பச்சை நிறமும் பதின்மூவா யிரம் வயசு முடையராய் வாழ்வர். அதன் வடபாகத்தில், படிகநிற முடைய முனிவரும் சாரணரும் சித்தரும் வசிப்பர். அவர்க்கு வயசு பதின் மூவாயிரம். பத்திராசுவ வருடத்திலிருப்போர் செம்மை நிறமும் பதின் மூவாயிரம் வயசும் உடையர்; கனிகாய் புசிப்பர். இரணிய வருடத்திலி ருப்போர் சந்திரன்போலும் நிறமும் பன்னீராயிரத் தைஞ்ஞூறு வயசு முடையர்; பழங்களைப் புசிப்பர். இரமிய வருடத்திலிருப்போர் கருங்குவளை மலர்போலும் நிறமும் பன்னீராயிரம் வயசு முடையர்; ஆலம்பழம் புசிப் பர். இளாவிருத வருடத்திலிருப்போர் வெண்மை நிறமும் பன்னீராயிரம் வயசுமுடையர்; கருப்பஞ்சாற்றை யுண்பர். கேதுமால வருடத்திலிருப் போர் செங்கழுநீர் மலர்போலும் நிறமும் பதினாயிரம் வயசுமுடையர்; கண்டகிப்பழம் உண்பர். அரிவருடத்திலிருப்போர் சந்திரன் போலும் நிற மும் பதினாயிரம் வயசுமுடையர்; கனி காய் புசிப்பர். கிம்புருட வருடத் திலிருப்போர் வெண்ணிறமும் பதினாயிரம் வயசுமுடையர்; இத்திப்பழம் உண்பர். ஏமகூடத்துக்குத் தென்பாலும் இமையத்துக்கு வடபாலுமாகிய இக்கிம்புருடவருடத்தில், மேன்மைமிக்க திருக்கைலாசமலை நிற்கும். அதன் மீது சிவபெருமான் உமாதேவிசமேதராய் வீற்றிருப்பர். அம்மலை ஊழி காலத்தில் அண்டத்தின் அடிமுடியளவும் வளரும். இந்த எட்டுக் கண்

டங்களிலுமிருப்பவர் துன்பம் நோய் நரை திரை மூப்புக்களைச் சிறிதும் பொருந்தார். வலிமை நிறை அறிவு உடலம் ஆயுள் முயற்சி சீர் முதலிய எல்லாவற்றையும் கிருதயுகத்திற்போல மற்றை மூன்றுயுகங்களிலும் அடைவர்; முன்பு பாரதவருடத்திற் பிறந்து செய்த நல்வினைப் பயன்களை அவைகளில் அனுபவிப்பர். அங்கே மழை பெய்யாது.

பாரதவருடத்திலிருப்பவர்கள் உழுது பயிர் செய்தும் மற்றும் பல வகைத் தொழில்கள் செய்தும் புண்ணிய பாவங்களையீட்டி, ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் ஆத்தியான்மிகம் என்னும் மூன்றினாலும் பெறற்பாலனவாகிய பயன்களைக் கொண்டு, ஈசுரனுடைய அருளினால் உய்வர். பெருமை வலி சீர் அறிவு நிறை ஆயுள் உருவம் உண்டி செய்கை என்னுமிவைகளை யுகங்களுக் கேற்றபடி பெறுவர். மலைநென் முதலிய பயிரின் விளைவுகளையும் கனிகாய் கிழங்குகளையும் பிறவற்றையு முண்பர். மற்றை எட்டுக்கண்ட வாசிகளும் தேவர்களும் நரகவாசிகளும் பாரதவருடத்திற் போயிருந்து புண்ணிய பாவங்களைச் செய்து அவற்றிற்கேற்ற பயன்களை அனுபவிப்பர். ஆதலால், பாரதவருட மொன்றே நல்வினை தீவினைகளுக் கெல்லாம் காரணமாகிய இடமாம். முனிவர்களும் தேவர்களும் தமக் கேதும் குறையுண்டானால் அங்கே வந்து தவங்களையும் பூசைகளையும் செய்து அவைகளை நீக்கிக்கொள்வர். பாரதன் என்பவனுக்கு இந்திரன், கசேருகன், தாமிரபன்னன், கபத்தி, நாகன். சவுமியன், கந்தருவன், வருணன் என்னும் புத்திரர் எண்மரும், குமரி என்னும் ஒரு புத்திரியும் உளர். அவன் இவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஆயிரம் யோசனையாகப் பாரத வருடத்தை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான். இவற்றுள், குமரிகண்டமொழிந்த எட்டுக் கண்டங்களும் மிலேச்சரிடங்கள்; அவை வியப்பில்லன. கங்கை, கவுதமி, யமுனை, குமரி, வாணி, காவிரி, நர்மதை, பாலி, கம்பை, பம்பை, துங்கபத்திரை, குசை, கோமதி, பாஞ்சாலி, சூரி, சிகி, பாபகரை, தூதபாவை, சங்கவாகினி, சிகை, பாரத்துவாசி, சார்வரி, சந்திரபாகை, சரயு, வேணி, பிங்கலை, குண்டலை, பொன்முகரி, பொருநை, வெஃகா, பெண்ணை முதலாகிய அநேக ஆறுகளையும், மகேந்திரம் மலையம் சையம் சத்திமான் விருட்சம் பாரியாத்திரம் விந்தம் என்னும் ஏழு மலைகளையும், காஞ்சி முதலிய முத்திநகரம் ஏழையும், சிவஸ்தலங்கள் ஆயிரத்தெட்டையும், பிராமணர்கள் வசிக்குந் தேயங்கள் பலவற்றையும், வேதாசார வொழுக்கத்தையும் பொருந்தி, மெய்நெறி சேர்ந்திருப்பது குமரி கண்டமொன்றுமே. இவைகள் சம்புத்தீவின் இடங்களாம்.

இதற்கப்பால், பாற்கடலாற் சூழப்பட்ட சாகத்தீவுளது. அதற்கரசன் பிரியவிரதனுடைய மகனாகிய மேதாதி என்பான். அவன் தன் குமாரர்களாகிய சாந்தவயன் சிசிரன் கோதயன் ஆனந்தன் சிவன் கேமகன் துருவன் என்னும் எழுவருக்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, சோமகம் சுமனம் சந்திரம் துந்துபி வப்பிராசனம் நாரதீயம் கோமதம் என்னும் ஏழு மலைகளும், சிவை விபாவை அமிர்தை சுகிர்தை மநுதத்தை சித்தி கிரமை என்னும் ஏழு

நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் ஆரியரும் விந்தரும் குகுரரும். அவர்க்குத் தெய்வம் வாயுவாம்.

இதற்கப்பால், தயிர்க்கட்லாற் சூழப்பட்ட குசைத்தீவுளது. அதற் கரசன் பிரியவிரதனுடைய மகனுகிய வபுட்டு என்பான். அவன் தன் குமாரர்களாகிய சுப்பிரதன் உரோகிதன் தீரன் மூகன் சுவேதகன் சித்தியன் வைத்திதன் என்னும் எழுவர்க்கும் அவரவர் பெயரால் அத்தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, உன்னதம் குமுதம் குமாரம் மேகம் சந்தகம் மகிடம் துரோணம் என்னும் ஏழு மலைகளும், சோனை வெள்ளிமதி தோமை நேத்திரை விமோசனை விருத்தி என்னும் ஏழு நதி களும் உள்ளன. அங்கு வாழ்வோர் தர்ப்பகர் கபிலர் சாரணர் நீலர் தண்டர் விதண்டகர் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் வாயுவாம்.

இதற்கப்பால் நெய்க்கடலாற் சூழப்பட்ட கிரவுஞ்சத்தீவுளது. அதற்கரசன் பிரியவிரதனுடைய மகனுகிய சோதிட்டு என்பான். அவன் தன் குமாரர்களாகிய சாரணன் கபிலன் கிருதி கீர்த்தி வேணுமான் இலம்பகன் உற்பீதன் என்னும் எழுவர்க்கும் அவரவர் பெயரால் அத் தீவை ஏழு கண்டமாக்கிக் கொடுத்தான். அங்கே, குசேசயம் அரி வித்துரு மம் புஷ்பாவருத்தம் இமம் துதிமானம் மந்தரம் என்னும் ஏழுமலைகளும், சிவை விதூதபாவை இமை புனிதை பூரணை சர்வபாபகரை தம்பை என் னும் ஏழுநதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் தபதர் சடாவகர் மந் தேகர் அநேகர் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் பிரமாவாம்.

இதற்கப்பால், கருப்பஞ்சாற்றுக் கடலாற் சூழப்பட்ட சான்மலித் தீவாம். அதற்கரசன் துதிமான் என்பான். அவன் தன் குமாரர்களாகிய குசலன் வெய்யவன் தேவன் முனி அந்தகாரன் மனோரதன் துந்துபி என் னும் எழுவர்க்கும் அத்தீவை ஏழுகூருக்கிக் கொடுத்தான். அத்தீவில் திமிரம் சுரபி வாமனம் விருத்தம் துந்துபி சம்மியத்தடம் புண்டரீகம் என்னும் ஏழு மலைகளும், குமுதை கவரி யாதி யாமை புண்டரிகை மனோபமை சந்தியை என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ் வோர் புட்கலாதர் புட்கரர் தனியர் சிசிரர் எனப்படுவோர். அவர்க்குக் கடவுள் சிவபெருமானும்.

இதற்கப்பால், தேன்கடலாற் சூழப்பட்ட கோமேதகத்தீவாம். அதற்கரசன் அவ்வியன் என்பான். அவன் தன் குமாரர்களாகிய விமோ சனன் மோகன் சகலன் சோமன் சுகுமாரன் குமாரன் மரீசகன் என்னும் எழுவர்க்கும் அத்தீவை ஏழு கூருக்கிக் கொடுத்தான். அத்தீவில் சிங்கம் அத்தம் உதயம் சலகம் கிரவுஞ்சம் ஆம்பிகேயம் இரமியம் என்னும் ஏழு மலைகளும், அயாதி தேனுகபத்தி சுகுமாரி குமாரி இக்ஷு மாயை என் னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் மந்தகர் ஆமங்கர் மாகதர் மானசர் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் சந்திரனும்.

இதற்கப்பால், சுத்தோதகக் கடலாற் சூழப்பட்ட புட்கரத்தீவாம். அதற்கரசன் சவனன் என்பான். அவன் தன் குமாரர்களாகிய தாதகி மாபீதன் என்னும் இருவர்க்கும் அத்தீவை இருகூருக்கிக் கொடுத்தான்.

அத்தீவில் இடபம் மகேந்திரம் வருணம் வராகம் நீலம் இந்திரம் மந்திரியம் என்னும் ஏழு மலைகளும், குடிலை சிவை உமை தரணி சுமனை சீங்கை குமரி என்னும் ஏழு நதிகளும் உள்ளன. அங்கு வாழ்வோர் நகரரும் நாகரும் எனப்படுவோர். அவர்க்குத் தெய்வம் சூரியனும். இப்புட்கரத் தீவின் முடிவில் மானசோத்தரமென்னும் மலை ஐம்பதினாயிரயோசனை யுயர்ச்சியுடையதாய்ச் சகடக்கால்போல வளைந்து நிற்கும். அதின் கீழ்த் திசை முதலிய எட்டுத் திசைகளினும் முறையே இந்திரன் முதலிய திக்குப் பாலகர் எண்மருக்கும் நகரங்கள் உள்ளன. இவ்வாறே ஒவ்வொரு கடல்களின் முடிவிலும் ஒவ்வோர் மலைகள் அவற்றைச் சூழ்ந்து நிற்பனவாம். சாகத்தீவு முதலிய ஆறு தீவுகளிலுமிருப்பார்க்கு நரை திரை மூப்புத் துன்பங்களில்லை; கலியுகத்தினும் கிம்புருட கண்டத்தவர்களைப் போலப் பொன்னிறமுடைமை முதலிய குணங்களோடு பதினாயிரம் வருடமிருப்பர். மானசோத்தர மென்னுமலையைச் சூழ்ந்து பொற்பூமியும் அதனைச் சூழ்ந்து மாணிக்கரத்தின நிறமுடைய சக்கரவாளகிரியுமுள்ளன. அம்மலையின் உட்பக்கம் ஒளியும் வெளிப்பக்கம் இருட்படலமுமாயிருக்கும். அதில் வசிப்போர் இயக்கரும் இராக்கதரும் பேய்களுமாம். திக்குப்பாலகர்களும் மேருவிலே தத்தமக்குரிய திசைகளிலிருத்தல்போல அம்மலையிலிருப்பர். சக்கரவாளகிரிக்கப்பாற் பெரும்புறக்கடலும், அதற்கப்பால் இருட்பூமியும், அதற்கப்பால் அண்டச் சுவருமுள்ளன. தம்முயிரை வலியவிட்டவரும் ஞானமென்பது சிறிதுமில்லாதோரும் அவ்விருட்பூமியிற் கிடந்துழல்வர். அண்டச்சுவரின் அணிமையில் அநாதிக்கடவுளாகிய பரமசிவன் வீற்றிருக்கின்ற மஹாகைலாசபர்வதம் இருக்கின்றது. அங்கே சிவகணங்கள் வசிக்கும். சம்புத்தீவு முதலாக அண்டச்சுவர்காறும் பூவுலகம் என்று பெரியோர் சொல்லுவர்.

இப்பூமியின்மேல், கணரும் குய்யகரும் தசவாயுக்களும் சத்தமேகங்களும் கிம்புருடரும் கருடரும் சித்தர்களும் விஞ்சையர்களும் தேவகங்கையும் வழங்குமிடங்கள் முறையே ஒன்றற்கொன்று மேலுள்ளன. சத்தமேகங்களுள் ஒவ்வொன்றை முப்பதினாயிரகோடி மேகங்கள் சூழும். இதன்மேற் சூரியலோகம் பூமியிலிருந்து ஓரிலக்கம் யோசனையிலுள்ளது. அதில் சூரியனுடன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் சஞ்சரிப்பார்கள். அதன்மேல் ஓரிலக்கம் யோசனையிற் சந்திரலோகமும், அதன்மேல் ஓரிலக்கம் யோசனையில் நக்ஷத்திரலோகமும், அதன்மேல் தனித்தனி இரண்டாயிரம் யோசனையில் முறையே புதன் சுக்கிரன் செவ்வாய் வியாழன் சனி என்னும் இவர்களுடைய உலகங்களும் உள்ளன. அதன்மேல் சத்தமுனிவருடைய உலகமும், அவனுடைய உலகமும், ஒவ்வோரிலக்க யோசனையில் ஒன்றற்கொன்று உள்ளன. இதுகாறும் புவர்லோகம் எனப்படும். இங்கே எழுவகை மருத்துக்களும் வசிப்பர். இப்புவர்லோகத்தின் உன்னதம் பதினைந்து யோசனையாம். அதன்மீது சுவர்லோகம் எண்பத்தைந்திலக்கம் யோசனையிலுள்ளது. அதில் தேவர்களும் பிறருந் துதிக்க இந்திரன் வீற்றிருப்பன். அப்பால் மகலோகம் இரண்டுகோடி யோசனையிலுள்ளது. மார்க்கண்டர் முதலிய முனிவர்களிருப்பார்கள். அதன்மேல் ஏழுகோடி யோசனையிலிருக்கும். அதிற் பிதிர்தேவர்கள் வாழ்வர். அதன்மேல் தபலோகம் பன்னிரண்டுகோடி யோசனையிலிருக்

கும். அதில் சனகர் முதலிய மகாமுனிவர்கள் இருப்பார்கள். அதன்மேற் சத்தியவுலகம் பதினறுகோடி யோசனையிலுள்ளது. அது பிரமதேவரிருந்து படைப்புத்தொழில் செய்யுந்தானமாம். அதன்மேல் பிரமலோகம் மூன்று கோடி யோசனையிலும், விட்டுணுலோகம் மூன்றுகோடி யோசனையிலும், சிவலோகம் நான்குகோடி யோசனையிலும், முறையே ஒன்றற்கொன்று மேலுள்ளனவாம். அதன்மேல் அண்டகோளகை கோடியோசனை உயர முடையது. * இந்த அண்டத்தில் நூற்றெட்டுப் புவனங்கள் சிவபெருமானுடைய திருவருளை அடைந்த உருத்திரர்களுடைய தானங்களாம்.

வேதாகமங்களும் அவற்றின் சார்புநூல்களும் பிறவும் அண்டத்தினியற்கையை வெவ்வேருகச் சொல்லுகின்றன. அவை ஒன்றற்கொன்று மலைவாகுமோ எனின், சிருட்டிபேதம் பலவாமாதலால் அவை மலைவாகா. ஆதலால் அவற்றின் வேறுபாடுகளை நாம் யோசித்து, அறிந்த உனக்கு இந்தச் சிருட்டியிலிருக்கின்ற வியற்கையைச் சொன்னேம். ''முன் சிவபெருமான் உனக்குத் தந்தருளிய ஆயிரத்தெட்டண்டங்களும் இந்த அண்டத்தினியல்புடையன. மைந்தனே சென்று காண்பாய்'' என்று சுக்கிராசாரியார் சொல்ல, சூரபன்மன் அளவில்லாத மகிழ்ச்சியோடு அறிந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## திக்குவிசயப் படலம்

இங்ஙனம் பற்பல குணங்களை யுபதேசித்த சுக்கிராசாரியருடைய பாதங்களைச் சூரபன்மன் சிங்கமுகனோடு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, விரைந்து அவுணசேனசமுத்திரத்தினுட் புகுதலும், தாரகன் சென்று சூரபன்மனை முன் வணங்கிப் பின் தன்றமையனுகிய சிங்கமுகனை வணங்கி முன்னிற்க, அவன் சுக்கிரன் தனக்குபதேசித்தனவற்றையெல்லாஞ் சொன்னன். அவைகளைத் தாரகன கேட்டு மனத்துட்கொண்டு, ''தலைவனே இது நன்று. பகைவர்களை வெல்லுதற்கு நாம் இனி விரைவிற் போவதே கடன்'' என்றன். அப்பொழுது மாயையானவள் தன் புதல்வர் மூவரும் சிவபெருமானிடத்திற் பெற்ற வரங்களையும் வலியையும் அறிந்து, அன்போடு ஆகாயத்தில் வந்து தோன்றினள். சூரபன்மன் அவளை முன்னே கண்டு, தம்பியரோடும் அசமுகியோடும் வணங்கினன். அவள் பெற்ற அற்றைநாளினும் மகிழ்ந்து ஆசீர்வதித்து, ''யாகத்தில் நிகழ்ந்தனவற்றையும் அதற்காகச் சிவபெருமான் கொடுத்தருளிய வரங்களையும் கேள்வியுற்று அன்போடு உங்களைக் காணும்படி வந்தேன். நீவிர் வலிமையினல் இந்திரன் முதலாயினரை வென்று எவ்வுலகங்களையும் ஆண்டு பூமியில் என்றும் வாழுதிர். மாயைகள் வேண்டினல் என்னை அன்புடன் நினையுங்கள். அப்பொழுதே யான் வந்து நீர் விரும்பினவற்றைச் செய்து முடிப்பேன். விருப்பத்தோடு உம்மைக் காணும்படி வருவேன். நீவிர் ஒற்றுமையுடையராயிருக்குதிர்'' என்று சொல்லிப் புத்திரர்கள் வணங்கப் போயினள்.

* பூமிமுதல் அண்டகோளகைவரையும் ஐம்பதுகோடியோசனையாதல் காண்க.

மாயை போதலும், சூரபன்மன் கோடி தேர்களோடு அசுரர்களை அழைத்து, "நம்முடைய சேனைகள் குபேரனுடைய பட்டணத்துக்குச் செல்லும்படி பறையறைக" என்று பணித்தான். அவுணர்கள் அவ்வாறு பறையடித்தலும், சேனைகள் ஊழிக்கடல்போல வடதிசையை நோக்கிச் சென்றன. பத்து நூறு ஆயிரம் முதலாகிய பல தலைகளையும் பலவகைப் படைக்கலங்களையேந்திய கைகளையும் கொடுமைக்குணத்தையும் கடலொலி யையுமுடைய அவுணப்படைகளும், விண்ணும் திசையும் கடலும் முதலிய இடங்களிற் பாய்வனவாகிய அளவில்லாத குதிரைகளும், ஆறுபோலும் மதத்தையும் பிளிற்றெலியையுமுடைய அளவில்லாத யானைகளும், மலை முதலாகிய இடங்களிற்செல்லுந் திறத்தனவாகிய அளவில்லாத தேர்களும், மூன்றுகோடி யோசனை விசாலத்திற் சென்றன; துரசிப்படைகள் அள கையை அடைந்தன. அப்பொழுது சூரபன்மன் பஞ்சபூதங்களினும் வலி மிகவுடையதும், சூரியனுடைய தேரினும் சிறப்புடையதும், அவனிலும் ஒளியுடையதும், திக்குகளை அகற்சியான் மறைப்பதும், பூவுலகையொத்த பரப்புடையதும், இமைப்பொழுதில் எங்குஞ் சென்று திரும்புவதும், பேரு ணர்வுடையதும், குறிப்பிற் செல்வதும், அழியாத ஒரு கோடி குதிரை பூண்டதும், அழியாத பல சாரதிகளை யுடையதும், சிறந்தனவும் அள வில்லனவுமாகிய படைக்கலங்களைத் தாங்கியதும், பகைவர்கள் கெடும்படி அவர்கள் தேரின்மேற் செல்வதும், முகில்களும் அஞ்சும்படி பல மணிகள் ஒலிக்கப்பெறுவதும், என்றும் அழியாதிருப்பதும், சிவபெருமானைற் கொடுத் தருளப்பெற்றதும் ஆகிய இந்திரஞாலம் என்னுந் தேரின்மேல், ஒரு பெரிய மலையில் சிங்கம் ஏறிச் செல்லுதல்போல அவுணர்கள் வணங்கப் போயி னான். ஆயிரமாயிரம் யானைகளும் ஆயிரமாயிரம் குதிரைகளும் ஆயிரமாயி ரம் பூதங்களும் பூண்ட ஒரு தேரின்மீது சிங்கமுகன் ஏறிச்சென்றான். தாரகன் பதினாயிரம் குதிரை பூண்ட ஒரு தேரிலேறி ஆலகாலவிஷம் போலச் சென்றான். இவரிருவரும் சூரபன்மனுடைய இருமருங்கினுஞ் செல்ல, அவுணப்படைத்தலைவர்கள் தேர்களிலேறியும், மற்றைப்படைவீரர் கள் யானைகளினும் குதிரைகளினும் ஏறியும், சூரபன்மனைத் துதித்துப் பக்கங்களிற் சூழ்ந்தார்கள். அளவில்லாத அவுணர்கள் பதினெண்வகைப் படைகளையுமேந்தி இடியும் அஞ்சுஞ் சொல்லினராய்க் கடல் கிளர்ந்தாற் போலச் சூரன் முதலிய மூவருடைய பக்கங்களிற் போயினார்கள். கரத துரகபதாதியாகிய நால்வகைப்படைகளும் இவ்வாறே தன்னைச் சூழ்ந்து வரச் சூரபன்மன் நடுவே சென்றான். நால்வகைப்படைகளினுலியும் நானு வித வாத்தியங்களினோசையும் எங்கும் மிக்கன. அவுணவீரர்கள் ஏந்திய ஆயுதங்கள் ஒன்றோடொன்றுரிஞ்சுதலாற் பிறந்த நெருப்பினால் மலைகளும் பூமியும் பொடிந்தன. சூரனுடைய படைகளின் செலவினாற் பூவுலக முத லிய வுலகங்களும் மலைகளும் கடல்களும் நெருப்பும் நடுங்கின.

இவ்வாறே சேனைகளோடு சூரபன்மன் சென்று, குபேரனுடைய நகரத்தை வளைந்தான். வளைதலும் தூதுவர்கள் அதனை வினவி, குபேர னுடைய கோயிலை விரைந்தடைந்து, அவனுடைய பாதங்களை வணங்கி, "சூரபன்மன் நம்முடைய நகரத்தை வளைந்துகொண்டான். இப் பொழுதே யழியும்போலும், இனித் தாழ்த்திருத்தல் நன்றன்று. சேனை

களோடு போருக்கெழுவாய்'' என்றார்கள். குபேரன் அதனைக் கேட்டுத் துன்பமும் நடுக்கமும் அடைந்து, ''அவுணர்கள் சிவபெருமானிடத்தில் வரம்பெற்றிருக்கின்றார்கள். அவர்களை நாம் வெல்லுதல் கூடாது. ஆதலால் அவர்களைப் புகழ்ந்து ஆசிசொல்லும்படி போதலே கடன்'' என்று விரைந்தெழுந்து, புட்பகவிமானத்திலேறிச் சென்று, இயக்கர்களுந் தானும் சூரனை வணங்கித் துதித்து ஆதிகளைச் சொல்லி. ''யான் உமக்கடியன்'' என்று கூற, சூரன் ''நீ இந்நெறி தவறுதிருப்பாய்'' என்று அவனை விடுத்தான். அவுணப்படைகள் ஆரவாரித்தன. சூரபன்மன் தம்பியர்களோடு அதனைக்கண்டு மகிழ்ச்சியடைந்தான். அவுணப்படைகள் அளகாபுரியினுட்புகுந்து, நிதிகளையும் மணிகளையும் விமானங்களையும் ஆயுதங்களையும் யானை தேர் குதிரைகளையும் கவர்ந்தார்கள். இச்செல்வங்கள் நீங்கப்பெற்ற அந்நகரம் திருமங்கலியத்தையிழந்த கைம்மையின் வடிவு போன்றது. குபேரன் இவற்றைப் பார்த்து உள்ளம் நாணி, பெருமையிழந்த அளகையில் மீண்டும் போயினன்.

சூரபன்மன் அங்குள்ள குபேரனை ''இவன் நம்முடைய அடித்தொண்டு செய்வானையினன்'' என்று மனத்திலெண்ணிக்கொண்டு, பாகரை நோக்கி, ''இமைப்பிற்றேரைத் தூண்டுதிர்'' எனச்சொல்லி, அளகையை நீங்கி வடகீழ்த் திசையை அடைந்து, ''இது காளகண்டராகிய ஈசானவுருத்திரர் வீற்றிருக்குந் தலம்'' எண்றெண்ணி, அந்நகரைவிட்டு இந்திரனிருக்கும் கீழ்த்திசையை யடைந்தான். அதனையறிந்து மிக்க துயருற்ற இந்திரன் மறைந்து சுவர்க்கத்துக்குப் போயினன். அவன் ஒளித்தோடியதைச் சூரன் அறிந்து, அப்புரம் முழுவதையும் கொளுத்தி, சேனைகளோடு அவ்விடத்தை நீங்கி, அக்கினிதேவனுடைய நகரை அடைந்தான். அதனை அக்கினிதேவன் அறிந்து, மிகுந்த கோபமுடையவனாய், ஆயிரநூறுகோடிபேர் தன்னைச்சூழ, போர்புரியும்படி வந்துசேர்ந்தான். சேர்தலும், இருபக்கத்துச் சேனைகளும் போர் செய்தபொழுது, அக்கினிதவனுடைய படைகள் தோற்றன. அவன் துன்பம்பொருந்திய மனத்தனாய், ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் ஈறுசெய்கின்ற வலிய பேருருவைத் தாங்கி, ''சூரனுடைய சேனைசமுத்திரம் வற்றும்படி இத்தினமே யான் மாய்ப்பேன்'' என்று அவுணவெள்ளங்களை நெருங்கி வளைந்து, அழிப்பானையினன். சட சட என்னும் ஒலியுண்டாம்படி சேனைக்கடலை அக்கினிதேவன் கொல்லும்போது, தாரகன் விடம்போலக் கோபித்து, தேருடன் வாயுவேகத்தோடு வந்து எதிர்ந்து, வில்லைவளைத்து ''அக்கினியையும் தேவர்களையும் பிறரையும் இப்பொழுதே முடிப்பேன்'' என்று சிவப்படைக்கலத்தை வழிபாடுசெய்து எடுத்தான். அதனை அக்கினி கண்டு, ''இவன் இதனைத்தொடுத்தால் உலகங்களை யெல்லாந் தொலைக்கும்; என்னையும் முடிக்கும்; பிரமா முதலாகிய தேவர்களையும் இன்றே கொல்லும்'' என்று கவலையுற்று, மனநடுங்கித் தன்னுருவைச் சுருக்கி, ஒடுங்கி, தாரகனுக்கு முன்வந்து, கைகளைக்கூப்பி, ''உலகங்களை யெல்லாம் படைத்தழிக்கின்ற சிவபெருமானுடைய மாற்றமுடியாத படைக்கலத்தை என்மேல் விடும்படி வழிபாடுசெய்து எடுத்தாய்; எப்

புவனத்துள்ளவர்களுடைய வலியுழ் உயிர்களும் அதன்முன் நிற்குமோ? மிகுந்த சினங்கொள்ளற்க; சிவப்படைக்கலம் சிறந்தது. அதனை விடுப் பாயாயின் உலகமெல்லாம் அழியும்; அதுவன்றி, அப்படைக்கலத்துக்குத் தலைவராகிய கடவுளும் பழிபடுவார். என் பிழையைப் பொறுப்பாய்'' என்று துதித்து நின்றான். நிற்றலும் தாரகன் சிவப்படைக்கலத்தை அவன் மேற்செலுத்தாது கோபம் நீங்கி மகிழ்ந்தான். அவுணர்கள் ''இவனை எற் றுங்கள் எற்றுங்கள்; விரைந்து கொல்லுங்கள் கொல்லுங்கள்; இவன் மிகக் கொடியன் குற்றுங்கள் குற்றுங்கள்'' என்று அக்கினியைச் சூழ்ந்தார்கள். தாரகன் அவர்கள் எல்லாரையும் விலக்கி, ''நீ நம்முடைய ஏவலின்வழி நிற்பாய். போன உன்னுயிரை நாம் உதவினேம், உன்னுடைய நகரத் திற்போதி போதி'' என்று விடுத்தான். அவனை விடுக்குமுன்னே, அவு ணர்கள் அவனுடைய நகரிற் புகுந்து செல்வங்களையெல்லாம் வாரிக் கொண்டு மீண்டார்கள். அக்கினிதேவன் வெட்கித்துத் தன்னகரிற் போயினன். தாரகன் அந்நகரை நீங்கினன்.

சூரன் அவற்றையெல்லாங்கண்டு, ''பாகனே யமனுடைய நகரத்துக்குத் தேரைச் செலுத்துவாய்'' என்றான். என்னலும், பலிங்கனென்னும் பாகன் மற்றைப் பாகர்களோடும் அஞ்சலி செய்து, ''அரசனே விரைந்து யம னுடைய திசைக்குத் தேரைச் செலுத்துவேன் காண்பாய்'' என்று கூறி, விரைந்து தேரைத்தூண்டி ஆர்த்தான். சேனைகளும் முரசங்களும் ஆர்த் தன; துகள் கடலைத் தூர்த்தன; கொடிகள் விண்ணுலகத்தை அளாவின. தூசிப்படைகள் யமனுடைய ஊரை அடைந்தன. அதனைக்கண்ட ஒரு தூதுவன் யமனிடத்திற் சென்று ''சூரன் முதலிய அவுணருடைய சேனை கள் நம்முடைய நகரத்தை வளைந்தன'' என்று சொன்னான். யமன் இடியேறுற்ற பாம்புபோல ஏங்கி இரங்கி, ''குபேரனும் அக்கினிதேவனும் சூரனை எதிர்கொண்டு துதித்துப் போயினார்கள். நானும் அதனைச் செய் வதே அழகுதாம்'' என்று நினைத்து, தெளிவினுடன் எழுந்து படைஞர் கள் சூழ விரைந்து சென்று, சூரனைத் தொழுது ஆசிகூறினன். அவனு டைய செய்கையைக் கண்டு சூரபன்மன் மகிழ்ந்து, ''நம்முடைய பணி களைச் செய்துகொண்டு உன் பரிசனங்களோடும் ஈண்டே யிருக்குதி'' என்று ஏவினன். அவுணசேனைகள் யமனுடைய நகரத்தினுட் புகுந்து திரவியங் களை முறைமுறையாகக் கவர்ந்தன. யமன் பெருவலி குறைந்ததையும், தம்மைத் துதித்துப் போயதையும் சூரபன்மன் நினைத்து மிகவுமகிழ்ந்து, சேனைகளோடு தென்மேற்றிசையிலிருக்கும் நிருதியின்மேல் விரைவிற் சென் றான். நிருதி இந்நிகழ்ச்சிகளையெல்லாம் அறிந்து, ''நாம் இவரைப் பொரு வது அரிது, போரியற்றினும் வசையேயன்றி வெற்றி வருவதில்லை'' என்று அவர்களோடு கலத்தற்கெண்ணி, சேனைகளோடு சூரனுக்கெதிரே போய்த் தோத்திரஞ்செய்து வணங்கி, ''உன் சுற்றம் யான்'' என்று கூறித் தார கனுக்குப் பக்கத்திலே போயினன். சூரபன்மன் நிருதியினுடைய நகரத்தை நீங்கி அப்பாற் சென்றான். அவனுடைய வரவையறிந்த வருணனும் வாயு வும் முறையே கடலினும் இருட்பூமியிலும் இமைப்பொழுதினுட் போயி னார்கள். போதலும், சூரபன்மன் அவர்களுடைய பதங்களைச் சூறை கொண்டு பழுதுசெய்வித்து, சத்தபாதலங்களுக்கும் போய் அங்கங்குள்ள

அவுணர் முதலாயினோர் துதிக்க, அவர்களுக்கு அருள்செய்து, நாகருலகத்துக்குப் போயினன். ஆதிசேஷன் கோபத்தோடு யுத்தஞ்செய் தான். சூரபன்மன் சேனைகளால் அவனை வெற்றிகொண்டு, அவன் வியந்து துதிக்க அவனுடையவிருக்கையில் ஒருநாள் இருந்து, அங்கே தேவர்கள் தர ஆதிசேஷன் வைத்திருக்கும் அமுதத்தை வலிதின் வாங்கித் தம்பியர் களோடு உண்டு, மற்றைப் பிலங்கள்தோறும் சென்று, அங்கங்குள்ள புதுமைகளை வியப்போடு பார்த்து, போன போன திசைகளெல்லாவற்றி னும் புகழை நாட்டி, பூவுலகில் வந்து, உவர்ச்சமுத்திரத்தையும் அதற் கப்பாலுள்ள சாகத்தீவையும் கடந்து, பூமிலக்ஷ்மியும் மகாலக்ஷ்மியும் துதிக்கச் சேஷசனயத்தின்மீது விட்டுணு அறிதுயில் செய்யும் பாற்கடலிற் சேனைகளோடு விரைந்து போயினன்.

சூரனுடைய அவுணப்படைகள் ''இங்கே விட்டுணு இருக்கின்றான்'' என்று அப்பாற்கடலை மிகுந்த ஆரவாரத்தோடு கலக்கின. அந்த ஒலியைப் பூமிலக்குமியும் மகாலக்குமியும் கேட்டு, உடம்பு வேர்த்துப் பதைக்க அஞ்சி வெருவி விட்டுணுவினுடைய மார்பைத் தழுவ, அவர் பார்த்து, அவர் களை அஞ்சற்கவெனக் கூறி, விரைந்து துயிலை நீங்கிச் சேஷசயனத்தை விட்டு எழுந்து, வடவாமுகாக்கினியும் அஞ்சும்படி உருத்துச் சீறி, ''இத் தீயர் நம்மையும் பொரவும் வந்தார்போலும், இவர் வலியைக் காண் போம்'' என்று கைதட்டிச் சிரித்துக் கருடனை நினைத்தார். உடனே அவன் வந்தான். அவனுடைய தோளின்மேல் ஏறிப் பஞ்சாயுதங்களையும் ஏந்தி, அசுரசேனைக்கெதிரே சென்று, சார்ங்கம் என்னும் வில்லை வளைத்து நாணேற்றிசெய்து, அவுணர்களுடைய மனசைக்கலக்கி, அவர்கள் கொண்ட செற்றத்தைக் கெடுத்துப், பாணங்களை மேன்மேற்பூட்டி விடாமழையைப் போலப் பொழிந்தார். அப்பொழுது அவுணசேனைகள் அழிந்து, கசரத துரகங்கள் ஒழிந்து, வலியும் போரினுக்கமும் படையுமாகிய எல்லாங் கழிந்து, சூறைக்காற்றுலடியுண்ட மேகங்கள் போலாயின. சூழ்ந்த அவு ணர்களுடைய சிரங்கள் துணிந்தன. தோள்களுந் தாள்களும் கரங்களும் வீழ்ந்தன. சிந்திய இரத்தவெள்ளம் கடல்முழுதும் பாய்ந்தன. பிணமலை கள் உயர்ந்தன. விட்டுணுவானவர் கருடவாகனரூடராய் எண்ணில்லாத வுருவங்களைக் காட்டி அவுணர்கள் யாவரும் போகாவண்ணம் பாணமழை களைச் சிந்தித் தேவர்கள் ஆரவாரிக்கும்படி இப்படிப் போர்செய்தார். தாரகன் அவற்றை உருத்து நோக்கி, உடைகின்ற தன் சேனைகளை ''ஒன் றும் நீர் அஞ்சற்க'' என்று கூறி, மேருமலைபோலும் வில்லையேந்தித் தேரின்மீது இமைப்பில் வந்து விட்டுணுவுக்கெதிரிற் புகுந்து, அவ்வில்லை வளைத்து, கடலின்மீது விடாமழை பொழிவதுபோலப் பாணங்களைத் துண் ணென்று தூவி ஆரவாரித்தான். அப்பொழுது விட்டுணுவானவர் எண் ணில்லாத பாணங்களைத் தாரகன்மீது சொரிந்து, அவனுடைய தேரையும் பாகனையும் தொலைத்தார். அவன் பிறிதொரு தேரிலேறி வில்லைவளைத்து விட்டுணுவின்மீது ஆயிரம் பாணங்களைச் செலுத்தி, கருடன்மீதும் ஆயி ரம் பாணங்களை விடுத்தான். அப்பாணங்களினுற் கருடன் வருத்தமடை தலும், விட்டுணு அதனைப்பார்த்து, அளவில்லாத மாயாரூபங்களை எடுத்து, தாரகனைச் சூழ்ந்து போர்செய்ய, அவனும் தன் தாய் உபதேசித்த மந் திரத்தைத் தியானித்துப் பல மாயாரூபங்களைக் கொண்டு, நான்கு நான்

வரையும் பெரும்போர் செய்தான். பிரமதேவர் இதனைப் பார்த்து, ''யார் இவனெதிரில் நிற்பார்'' என்று அதிசயமடைந்தார். விட்டுணு தாரக னுடைய வில்லும் தேரும் குதிரைகளும் பாகனும் துணிந்து விழும்படி ஒருகோடி பாணங்களை விடுத்தார். இந்திரன் அதனைக்கண்டு மகிழ்ந்தான். தாரகன் தன்னுடைய தேரும் குதிரைகளும் பாகனும் வில்லும் அழித லும், ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு நிலத்திற்போய், தேவர் கள் தலைபனித்து அஞ்ச அண்டங்கள் குலுங்க ஆர்த்து, விட்டுணுவை எதிர்த்துச் சென்றான். அவர் எதிரேவரும் தாரகன்மேல் எண்ணில்லாத பாணமழைகளை வீசினர். அவைகளைத் தாரகன் தண்டினால் விலக்கிச் சிந் திக் கோபித்து அவருக்கு முன்னே செல்ல, விட்டுணு சக்கரப்படையை விடுத்தார். ஓரிமைப்பொழுதினுள் உலகங்களையெல்லாந் தொலைக்கும் வலிமையையுடைய சக்கரப்படையும் தாரகனுடை கண்டத்தை அணிகிச் செம்பொன்னரமாயிற்று. இஃது என்ன அதிசயம்! தவத்தினும் ஆக்கம் வேறுண்டோ!

விட்டுணுவானவர் அதனைப் பார்த்துச் சிவபெருமானருளிய வரத்தை நினைத்து, அடங்காத அற்புதத்தினராய், ''தாரகன் வலியன்'' என்று எண்ணி, ''பிரமாவும் ததீசிமுனிவனும் என்னுடன் போர்செய்த அவுணர் களும் உனக்கொப்பல்லர். அவர்கள் சொல்லளவன்றிச் செயலளவில் உவமையாதல் இல்லை. வீரபத்திரக்கடவுள் மாத்திரம் உனக்கினையாவர். சிவபெருமான் ஈந்தருளிய சக்கராயுதம் உன் கழுத்திற் பதக்கமாயிற்றென் றால் வெற்றியும் உனதேயன்றே! இனி வேறு போருமுண்டோ! உன் வலிமை இதுவானால் உனக்குத் தலைமயன்மார்களாய் நிற்கின்றவர்களுடைய பெருமையைப் பேசவல்லார் யாவர்! சிவபெருமான் மகிழும்படி யாகத் தைப் பலநாட்செய்து உங்களைப்போல வலிபெற்றுள்ளார் அவுணரிலொரு வருமில்லை; உங்களை வெல்வார் யார்! எமக்கும் நீர் சுற்றத்தார்களே'' என்று எல்லையில்லாத ஆசிகளைச் சொல்லிப்போயினர். அவைகளை எல்லாம் அவுணர்கள் பார்த்து ஆர்ப்பரித்தார்கள். தேவர்கள் வேர்த்து, இறப்ப வர்களைப்போல மெலிந்து, துன்பமுற்றவராய் அஞ்சி ஓடினர்கள். தாரகன் பிறிதொரு தேரின்மீதேறிச் சூரபன்மனுக்கெதிரிற் போயினன். அவன் அங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து மிக மகிழ்ந்து தாரகனைத் தழுவி, சேனை களோடு அப்பாற்போய், பூலகத்தைச் சக்கரவாளகிரிவரையும் பார்த்து, ஆகாயவழிக்கொண்டு சென்று, சூரியன் முதலாயினோர் ஆசீர்வதிக்கச் சுவர்க்கத்திற் போயினன்.

சூரபன்மன் சுவர்க்கத்திற்குச் செல்லுதலும், ஒற்றுவர்களிற் சிலர் ஓடிப்போய், ''சூரன் என்னும் வலியன் வந்தான்'' என்று இந்திரனுக்குச் சொல்ல, அவன் அஞ்சிப் பெருமூச்சுவிட்டு அலந்து தேம்பி அறிவுசோர்ந்து, ''இங்கு வந்த சூரபன்மனோடு போரில் எதிர்ப்போனையின் என்னுயிர்க்கிறு தியாம். இங்கிருப்போனையின், துன்பத்தினும் பழியினும் மூழ்குவேன். புல் லிய செயலாய் எனக்கு வந்த இத்திங்கு என்செயலால் வந்ததன்றிப் பிறர் செயலால் வந்ததன்று. பற்றற்ற பெரியோர்கள் பிறர் செய்கின்றனவற்றை யுந் தஞ்செயல் என்பர்கள். அறிஞர்கள் செல்வம் வருங்கால் மகிழ்ந்தும் அது போங்கால் வருந்தியும் பிரபஞ்சத்தில் அழுந்துவார்களோ! வருவது

வரும். அதனை மறுக்க முடியுமோ! ஆதலால் இவனோடு பொருது உயிரை விடேன்; வருத்தமுமடையேன். துன்பமுற்றவர் பின்னொருகாற் பெரு மகிழ்ச்சியுமடைவர். இதனை, நீமைசெய்கின்ற இவ்வவுணர்களிடத்திற் காண்பேன். வெட்கத்தையும் பகைவர்களுடைய சிரிப்பையும் கொள்ளேன். சூரபன்மனைக் காண்பேனாயினும், கறுவுகின்ற மனத்தையுடைய அவன் என்னைச் சிறைசெய்வான்'' என்று எண்ணி விரைந்தெழுந்து இந்திராணி யோடு குயிலுருக்கொண்டு ஆகாயத்திற் பறந்துபோயினன். அவுணர்கள் அவனைத் தேடிக் காணராயினர். பொன்னுலக முழுதும் பொலிவிழந்தது. அவுணர்கள் தேவர்களைப் பிடித்து, அடித்துக் குற்றி அவர்களுடைய வஸ் திரங்களினுற் றூள்களைக் கட்டி, மிகவுந் துன்புறுத்தி, சூரனுக்குமுன் விடுத்தார்கள். தேவர்கள் அவனை வணங்கித் துதித்து, ''அரசனே நீ அவுணவமிசத்திற் பிறந்து தவத்தைச்செய்து சிவனுடைய திருவருளைப் பெற்றுத் திக்குப்பாலகர்கள் முதல் எல்லாரையும் வென்றுய் என்றுல், எளிய எங்களைத் துன்பப்படுத்துவதா உனக்கு நன்று. நீ ஒரு சிறிது சினஞ் செய்தால், யமனுமிருப்பானே! மற்றைத் திக்குப்பாலகர்களும் இருப்பார் களோ! தேவர்கள் யாவரும் உய்வார்களோ! உலகம் இப்பொழுதேயழி யுமே! இன்றுமுதல் எங்களுக்கு வழிபடுகடவுள் நீ; எங்களைப் பாதுகாக் கும் அரசனும் நீ; பற்றுள்ள உறவும் நீ; யாமெல்லோமும் உன்பணிகளை முறையிற்செய்வோம்'' என்று சொல்லித் தோத்திரஞ் செய்தார்கள். அவர்களைச் சூரன் பார்த்து ''நுஞ்செய்கை நன்று'' என்று சிரித்து, கட் டிய கட்டுக்களை அவிழ்ப்பித்து, ''இனி நீர் நம்முடைய பணிகளைச் செய்து கொண்டிருக்குதிர்'' என்று கூறி விடுத்தான். அவுணர்கள் இந்திரனுடைய வளங்களெல்லாவற்றையும் கவர்ந்துகொண்டு சென்றார்கள். சூரன் அள விடப்படாத மகிழ்ச்சிகொண்டு, தம்பியர்கள் பக்கங்களில் வர, மகலோகம், சனலோகம், தவலோகம் என்னும் மூன்றுலகங்களையும் அங்கங்குள்ள மார்க்கண்டேயமுனிவர் முதலாயினோர் புகழ நீங்கி, சத்தியவுலகத்திற் போயினன்.

பிரமதேவர் சூரபன்மனுடைய வரவையறிந்து நடுக்கமுற்று, முனி வர்கள் தம்மைச் சூழ அவனையடைந்து, ''நீடூழிகாலம் வாழுதி வாழுதி'' என்று ஆசி கூறி, ''மகாராசனே நீ இங்கேவர யான் முன்னாளில் என்ன தவத்தைச் செய்தேனென்றியேன். அதனைச் சிவபெருமான் அன்றி வேறி யார் அறிந்தவர்! சிவபெருமானை நோக்கி அருந்தவத்தைச் செய்து இவ் வியல்பினவாகிய செல்வங்களெல்லாவற்றையும் பெற்றுள்ளாய்; பெரிய வலிமையைக் கொண்டாய்; விட்டுணுவையும் தேவர்களையும் தம்பியாகிய தாரகனைக்கொண்டு வென்றுய்; உன்னையொப்பவர் உலகத்திலுளரோ! நீ அன்பிற்சிறந்த என்மகனுகிய காசிபமுனிவனுடைய புத்திரனதலால் யான் உன்பாட்டன்; உன் புகழ்களெல்லாம் என் புகழ்கள்; யான் பிறனன்று இது சத்தியம்'' என்று பல உபசாரங்களைச் சொல்லி, தம்பிமார்களை யடைந்து, அழிபாத வில்லையும் தேரையும் தன்படையையும் தனித்தனி கொடுத்தார். சூரபன்மன் அதனைப்பார்த்துப் பெருமகிழ்ச்சியினுய் அன்பு செய்து, பிரமாவை அங்கே இருத்தி, வைகுண்டவுலகத்துக்குப் போய், அங்குள்ள விட்டுணுவானவர் வந்து ''அழிவில்லாத வாழ்நாளோடு வாழ் வாய்'' என்று பல ஆசிகளையும் இன்சொற்களையுஞ் சொல்ல மிகவும்

மகிழ்ந்து, பரிசனங்களோடு அவ்வுலக முழுதையும் பார்த்து, அவரை அங்கேயிருக்கும்படி வைத்து சிவலோகத்துக்குப் போயினன்.

அங்கே சூரன் பரிசனங்களை நீக்கித் தம்பியர்களோடும் சிவபெருமானுடைய திருக்கோயிற் புறங்கடைவாயிலினின்று, அக்கடவுளுடைய அருண் முறையையறிந்த திருநந்திதேவர் உள்ளே விடுப்பச்சென்று, பார்வதிசமேதரராய் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திவ்விய சந்நிதானத்திற்போய், அன்போடு வணங்கித் துதித்து நின்றுன். சிவபெருமான் கருணை செய்து, ''இனி நீ ஏனை அண்டங்களிலுஞ் சென்று பார்த்து, ஆணையாலெண்டிசையும் புகழும்படி அரசு புரிந்திருப்பாய்'' என்று அருளிச்செய்தார். சூரன் அவருடைய திருவடித்தாமரைகளைத் துதித்து விடைபெற்றுக் கொண்டு புறத்து வந்து, சேனைகளைச் சேர்ந்து, அண்டகோளகையை அடைந்தான். அங்கே வைரவர்களாகிய உருத்திரர் அளவில்லாதோருளர். அவர்கள் சிவபெருமானுடைய திருவருளை உட்கொண்டு அப்பாலுள்ள அண்டத்துக்குச் செல்லும் வாயிலைக்காட்டி விடுக்க, சேனைகளோடு சூரபன்மன் சென்று, அங்கும் இவ்வண்டத்திற் போலவே பார்த்து, யாவரையும் வென்று, மற்றையண்டங்களினும் சிவகணங்களாயுள்ளோருடைய அருளைற்போய், அங்குள்ள தேவர்களை வென்று, அவர்களுடைய வளங்களெல்லாவற்றையுங் கவர்ந்து, தம்மாட்டுள்ள அவுணர்களிற் பலரை அங்கே தன்னரசுரிமையை நடத்தும்படி வைத்து, தனக்கு உற்ற உறவினர்களாகிய அவுணர்களை அண்டங்கள்தோறும் அரசர்களாகவைத்து, தூணவர்களோடு மீண்டு இந்த அண்ட பித்திகையில் வந்து, சுவர்க்கத்தை அடைந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## எதிர்கொள் படலம்.

முன்னே தேவர்களால் வருத்தமுற்ற அசுரர்கள் சூரபன்மன் திக்குவிசயஞ் செய்துகொண்டு சுவர்க்கவுலகத்தை அடைந்தமையைக் கண்டு மகிழ்ந்து, களிப்பின் மூழ்கினர்கள். அச்சூரபன்மனுடைய வரவை அசுரராஜனுகிய அசுரேந்திரனுக்கு ஒற்றுவர் போய்ச்சொல்ல, அவன் களிப்பு மிகுந்து, சூரபன்மன் பெற்ற அளவில்லாத ஆக்கத்தையும் சிவபெருமானுடைய கருணையையும் மனத்திற்கொண்டு, சேனைகளோடு சுக்கிராசாரியரிடத்திற்போய், ''நான் சூரபன்மனைக் காணும்படி செல்லுவேன். நீர் முன்னே சென்று நம்முடைய முறையையுஞ் செயல்களையும் அவனுக்குச் சொல்லுதிர்'' என்று அனுப்பினன். அவர் விமானத்திலேறிக்கொண்டு முன்னே போயினர். அசுரராஜன் தன்கினைஞர்களோடு அவருக்குப்பின்னே போயினன். சுக்கிராசாரியர் விமானத்தில் வரும்போது, சூரபன்மன் அவரைத் தூரத்திலே கண்டு எதிர்கொண்டு, அஞ்சலிசெய்தான். ஆசாரியர் மகிழ்ச்சியோடு நின்று, ''உனக்குச் செல்வமும் வெற்றியும் மேன்மேலும் விருத்தியாகுக'' என ஆசீர்வதித்தார். சூரனுக்குப் பக்கத்தில் வந்த சிங்கன் தாரகன் என்னும் இருவரும் அவரை வணங்கித் துதித்தார்கள். ஆசாரியர் அவர்க்கும் ஏற்றவாறு ஆசிகளைச் சொல்லி, சூரபன்மனை

நோக்கி, அசுரராஜனுடைய வரவைக்காட்டி, ''உனக்கு நாம் அறிவுறுத்து கின்ற ஒரு வார்த்தையுளது. அதனைக்கேள். இவன் காசிபமுனிவனுக்கு மனைவியாகிய உன்னுடைய தாயைப் பெற்றவன்; நுண்ணிய கேள்வியை யுடையான்; அளவில்லாத அசுரர்களைப் பாதுகாத்தவன்; எங்களுக்கு ஒரு துணையென்னுந் தன்மையான்; இங்குள்ள இந்திரன் பலநாள் யுத்தஞ் செய்து வெற்றிகொண்டமையால் மேகத்தால் மறைக்கப்பட்ட சூரியனைப் போல மாழ்கியிருந்தான்; விதைத்த பயிரினுல் வரும் விளைவை எதிர்பார்த் துக் கொண்டிருக்கும் தரித்திரனைப்போலத் தன் சிறுமை நீங்கும்படி உன் னுடைய ஆக்கத்தையே நாடோறும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். நீ யாகஞ் செய்ததையும் சிவபெருமான் உனக்குக் கொடுத்த வரங்களை யுஞ் சொல்லக்கேட்டு உவந்து, துன்பத்தை ஒழிந்தான். இவனுடைய தோள்கள் இப்போது பூரித்தன. நீ சிவபெருமானிடத்திற் பெற்ற வரத் தோடு திக்குவிசயஞ் செய்துகொண்டு இங்கே வரும் மேன்மையைக்கேட்டு உன்னைக்காண வருகின்றன்'' என்று சொன்னர். சூரபன்மன் இவைகளைக் கேட்டு உவகையால் நிறைந்த மனத்தினனுய் நின்றன். அசுரராசன் தன் கிளைகளோடு வந்து சூரபன்மனைத் தொழுது துதித்து, பிரிந்துபோய் உயி ரைப் பெற்ற உடல்போலாயினன். சூரன் அவனைப் பார்த்து, ''நீ சந்தோ ஷத்தோடிருக்கின்றுயா'' என்று வினவினன். அவன் ''நுங்குலத்தலைமை விளங்கும்படி உதித்த நீ யிருக்கும்போது நம்மாட்டுத் தீயன அடையுமோ, சிறுமைகள் வருமோ'' என்று உபசார வார்த்தைகளைச் சொல்லிச் சூர னுக்குப் பக்கத்திற் போயினன். சூரன் அசுரசேனைகள் சூழ வெற்றியோடு விரைந்து பூமியில் மீண்டான்.

பிரமாவும் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் ''சூர பன்மன் மண்ணுலகத்தினில் வந்தான்'' என்னுஞ் சொல்லைகேட்டு, துண் ணென வந்து, விட்டுணு நித்திரை செய்யும் பாற்கடலிற் புகுந்து, அவரை அணுகி நின்று கைகூப்பி வணங்கி, தாங்கள் சூரபன்மனல் அடைந்த சிறுமைகளெல்லாவற்றையும் சொல்லி, ''இனிமேல் யாங்கள் செய்கின்ற தென்கொல்? சொல்லும்'' என்றார்கள். அவர்கள் கூறிய வார்த்தைகளை விட்டுணு கேட்டு, ''புன்றொழிலையுடைய தக்கன் செய்த யாகத்திற் புகுந்த தீமையினல் இது நமக்கு வந்தது. இதனை விலக்குவார் யார்! இனிச் செய்வதொன்றை நாம் சொல்லுகின்றேம் கேளுங்கள். சூரபன்மன் சிவ பெருமானிடத்தில் வரம்பெற்றுள்ளான். அண்டங்கள் எவற்றையும் வென் றன். ஆதலால் அவன் நம்மால் வெல்லுந் திறத்தனல்லன். நாம் அவ னைப் போய்க் கண்டுவருவோம். இதுவே காரியம்'' என்றார். பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் ''இதுவே செய்யத்தகுவது'' என்று இசைந்தார்கள். விட்டுணு சேஷசயனத்தை நீங்கி அவர்களோடு சூரபன் மனைக் காணும்படி வந்தார். அவர்கள் எல்லாரும் சூரனுக்கெதிரேபோய் நின்று ஆசீர்வதித்துத் துதித்தார்கள். சூரன் அவர்களுட் பதினெருகோடி யுருத்திரர்கள் ஒருங்கு நிற்பக் கண்டு, ''சிவபெருமானைப்போல அமைந்த வடிவத்தினராய்த் தொகையான் மிகுந்த இவர் யாவர்'' என்று வினவ, விட்டுணு சொல்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்.

# உருத்திரர்கேள்விப் படலம்.

"இராசாதிராசனே, இவர்களுடைய வரலாற்றைச்சொல்வேன் கேள்: பிரமன் முன்னொரு கற்பகாலத்தில் மூவுலங்களையும் உயிர்களையும் படைத்து அதனால் அகந்தை கொண்டு, தன்னையும் பரம் என்றுன்னிச் சிவபெருமானை மறந்து அதன்மேலும் படைத்தான். சராசரங்கள் அவன் மூன் படைத்த வளவினன்றிப் பெருகாவாயின். அதனைக் கண்டு, 'நான்செய்த குறை யென்னை' என்று நோக்கி, 'எம்மை முன்னளிலே பெற்றருளிய பஞ்ச கிருத்திய முதல்வராகிய சிவபெருமானை அயர்த்தேன்போலும். இனி அவரருளைப் பெற்றுலன்றி இந்தப் படைத்தற்றொழில் கைகூடாது' என்று எண்ணி, அளவில்லாதகாலம் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்தான். சிவபெருமான் அவனிடத்து எழுந்தருளிவந்திலர். அவன் அதனை நினைத்து, 'தினையேன் முன்பு பரமபிதாவாகிய சிவபெருமான் எங்ஙனம் வெளிப் பட்டருளுவர்' என்று ஏழைகள் போல் ஏங்கித் துன்பமுற்றுப் பெருமூச்சு விட்டழுதான். அவன் வேறென்செய்வான்! அப்பொழுது, அவன் கண் ணீர் விழவிழப் பேய்களாய் மிக எழுந்து நெருங்கிற்று. பிரமன் அப்பேய் களைக் காணுதலும், இடருழப்ப வீழ்ந்து, இறந்தனன்போலச் சோர்ந் தான். உயிர்க்குயிராகிய சிவபெருமான் உணர்வைக் கொடுத்து, அவன் கனவில் வந்து, 'மைந்தனே இனிவருந்தாதே, எழுக. நீ உன்னைப் பரம் பொருளென்று மதித்து எம்மை மறந்தாய். அதனால் உனக்குச் சிருட்டித் தொழில் கைகூட்டிற்றில்லை. விரைவில் அது முடியும்படி நம்முடைய பதத்திலுள்ள உருத்திரரை உன்னிடத் தனுப்புவோம்' என்று அருளிச் செய்தார். உடனே பிரமன் கனவிற்கண்ட அற்புதத்தோடெழுந்து, செம் மையாகிய நெறியைப் பொருந்தி, மனதிற் றெளிவடைந்து, அக்கனவை நினைத்தலும், சிவபெருமானுடைய திருவருளினாற் பதினொரு உருத்திரர் கள் அவனுடைய நெற்றியினின்றும் வெளிப்பட்டு நின்றார்கள். அவர்க ளைப் பிரமன் பார்த்து, 'நீர் நமது நெற்றித்தலத்தில் வந்த காரணம் என்னை' என்று வினவ, 'உன் படைப்புத்தொழில் கைகூடும்படி சிவபெரு மான் எங்களை விடுத்தருளினார் ஆதலினால் வந்தோம்' என்று அவர்கள் கூறினார்கள். அதுகேட்ட பிரமன் 'என்பால் அன்போடு வந்த நீங்கள் விரைவில் உயிர்களைப் படைக்குதிர்' என்று கூற, அவர்கள் தம்மைப் போலப் பதினொருகோடி யுருத்திரர் கூட்டத்தைத் தந்தார்கள்.

பிரமன் அதனைப் பார்த்து, 'உயிர்களை இருவினைக்கீடாகப் படைப் பதன்றி, நீங்கள் இவ்வாறு படைத்தல் நெறியல்ல' என்னலும், பதினொ ருருத்திரரும் 'நீ உயிர்களை முன்போலப் படைத்துக்கொண்டிருப்பாய், நாம் இப்பொழுதே எமது பதத்திற் போவோம்' என்று கூறி, பிரமன் யாவையும் படைக்கும்படி செய்து, தாம்படைத்த பதினொருகோடி யுருத்திரர்களையும் 'தேவர்களோடு இருக்குதிர்' என்று சொல்லி, சிவபெருமான் ஆதிகாலத் திலே தமக்குக் கொடுத்தருளிய புவனத்தையடைந்தார்கள். அவர்கள் உண் டாக்கவந்த பவர் முதலிய பதினொருகோடி யுருத்திரராயுள்ளார் இவர்கள். இவர்கள் சிவபெருமானுடைய திருவருளினால் தேவர்குழுவோடு சேர்ந்துற் றார்" என்று விட்டுணுகூறினார். சூரபன்மன் அவர்களுடைய வரலாற் றைக் கேட்டு வியந்தான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

# நகர்செய் படலம்.

அதன்பின் சூரபன்மன் ஆண்டுள்ள தெய்வத்தச்சனை நோக்கி, ''நாம்வசித்தற்கேற்ற அழகிற் சிறந்த ஒரு நகரத்தை விரைவிற் செய்குதி'' என்றான். அவன் நன்றென்று வணங்கி, ''உங்களுக்காகச் செய்யும் நகரத்துக்கு எல்லை சொல்லுதி'' என்ன, சுக்கிராசாரியர் அவ்வெல்லையைக் கூறினர். தெய்வத்தச்சன் அவ்வெல்லையைக் கேட்டறிந்து, தென்சமுத்திரத்தையடைந்து, சூரபன்மனுடைய நகரம் எண்பதினாயிரயோசனை விரிவுடையாதகக் கோலி, மலைகளினால் அதனைத் தூர்த்து, பாசறைகொண்டு சமமாக நிலம்படுத்து, செம்பொன்னால் மதிலையும் மதிலுறுப்புக்களையும்நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்களையும் செய்து, ஒவ்வொன்று நூறு யோசனையுடையனவாகப் பற்பல வீதிகளையும், மூன்று மதில்களையும், அளவிறந்தபொன்மாடங்களையும், அளவிறந்த நடனசாலைகளையும்,மாளிகைகள் தோறும் தெற்றிகள் மண்டபங்கள் முன்றில்கள் கோபுரங்கள் செய்குன்றங்கள் சூளிகைகள் அரங்குகள் மன்றங்கள் மேன்மாடங்கள் சாளரங்கள் என்னு மிவைகளையும், சோலைகளையும்,வாவிகளையும் தனித்தனிஉண்டாக்கி, அதன் நடுவே பதினாயிரயோசனை யுடையதாகிய ஒரு மதிலைச் செய்து,அதனடுவே சூரபன்மன் இருத்தற்காக ஒரு கோயிலை அழகுறவியற்றினான். கசரத துரகங்கள் செல்லுதற்குரிய தோரணவாயில்களையும், கசரதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும் தங்குதற்குரிய இடங்களையும், அசுரர்தலைவர்களும் பிறருமிருக்கு மிடங்களையும், அரம்பையர்கள் பாடலாடல்கள் செய்யு மண்டபங்களையும், மயில் புறு முதலிய பக்ஷிசாதிகளும் கருங்குரங்கு மான்முதலிய மிருகசாதிகளும் இருக்கு மண்டபங்களையும், வேதாத்தியயன மண்டபங்களையும், யாகமண்டபங்களையும், மந்திரிகள் இருக்கு மண்டபங்களையும், இந்திரன் முதலாயினோரிருக்கு மண்டபங்களையும், பெண்களிருக்கு மண்டபங்களையும், சூரன் அரசிருக்கும் அத்தாணி மண்டபத்தையும், பலவகைத் திரவியங்களிருக்கு மண்டபங்களையும், சிவபெருமான் கொடுத்தருளிய படைக்கலங்களிருக்கு மண்டபங்களையும், அன்னமண்டபங்களையும், கஸ்தூரி முதலாகிய வாசனைத் திரவியங்களும் வெற்றிலை பாக்கு முதலாயினவும் இருக்கு மண்டபங்களையும், பல பெண்கள் இருக்கு மண்டபங்களையும், ஊசலாடு மண்டபங்களையும், நவரத்தின மண்டபங்களையும், சந்திரகாந்த மண்டபங்களையும், அரசருக்கேற்ற பிறவற்றையும் செய்து, சூரபன்மனும் அவனுடைய பட்டத்துத் தேவியும் இருத்தற்கு ஒருறையுளையும் அதனைச்சூழ அவன்மனைவியர்களாகிய மற்றைப் பெண்கள் இருத்தற்குரிய தானங்களையும், இவைகளுக்கருகில் வாவி ஓடை முதலிய நீர்நிலைகளையும், சோலைகளையும், செய்குன்றுகளையும், இவை போன்ற பிறவற்றையும் இயற்றினன்.

சமுத்திரம் அகழியாக அதன் மத்தியிலிருக்கும் இந்நகரத்திலுள்ள கோயிலின் ஒளியிறை பொன்னுலகமும் பொலிவுகுன்றியது. தனக்கு நிகரில்லாத சூரபன்மன் வெற்றியும் பெருந்தலைமையும் பொருந்த இருத்தலால் அந்நகரத்திற்கு ''வீரமகேந்திரபுரம்'' என்று ஒருபெயரைத் தேவத்தச்சன் சூட்டி, அதன் எண்டிசையினும் ஏமபுரம் இமையபுரம் இலங்கைபுரம் நீலபுரம் சுவேதபுரம் அவுணர்புரம் வாமபுரம் பதுமபுரம் என்னும் எட்டு நகரங்களையும் அழகுபெற வமைத்தான். இவ்வாறு வீர

மகேந்திரத்தைச் செய்தபின்பு, வடசமுத்திரத்தினடுவில் எண்பதினாயிர யோசனை விசாலமுடையதாக ஆசுரம் என்றொரு நகரத்தைச் சிங்கமுகாசுரனுக்காகச் செய்தான். மற்றைச் சமுத்திரங்களோடும் தீவுகளோடும் சூரபன்மனுடைய சேனைகள் சுற்றங்களோடு வசித்தற்குப் பல நகரங்களை அமைத்தான். அதன்பின் விச்சுவகன்மன் மாணவகர்களோடு மேருமலையின் தென்பக்கத்திலுள்ள நாவலந்தீவில் ஏமகூடமலைக்கு ஒருசாரிற்போய், அவ்விடத்தில் தாரகாசுரனுக்காக மாயாபுரம் என்னும் ஒரு நகரத்தை அணிபெற உண்டாக்கி, சூரபன்மனுக்குச் சொன்னான். அவன் சேனைகளோடு தன்னகரத்துட் குடிபுகுந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## பட்டாபிடேகப் படலம்.

சூரபன்மன் வீரமகேந்திரத்துட் புகுந்து, அந்நகரத்தை உற்றுப் பார்த்து, விச்சுவகன்மன் கற்ற வித்தையை வியந்து களித்து, தன் கோயிலை அடைந்தான். பிரமா முதலிய தேவர்கள் "அரசனுக்கு முடி சூட்டுதும்" என்று அதற்கு வேண்டிய உபகரணங்களெல்லாவற்றையும் வருவித்தார்கள். கோயிலினுட் புகுந்த சூரபன்மன் ஒரு பீடத்திலிருந்து, தேவர்கள் சமுத்திரஜலத்தாலாட்டச் சிறப்புடனுடி, பீதாம்பரத்தை உடுத்து, புஷ்பத்தைச் சூடி, ஆபரணங்களைப் பூண்டு, தம்பிமார்கள் இருமருங்கும் வர, அவுணர்களும் அவர்க்கரசனுகிய அசுரேந்திரனும் தேவர்களும் வணங்கித் துதிக்க, இந்திரன் மனந்தளர, சுக்கிரனும் முனிவர்களும் புகழ, வந்து சிங்காசனத்திலேறினான். அப்பொழுது பிரமாவானவர் கிரீடத்தை எடுத்துச் சூட்டினர். அவுணர்கள் அதனைக்கண்டு, சூரனுடைய கால்களை வணங்கி, அடங்காத மகிழ்ச்சியாற் சிறந்தார்கள். தேவர்களும் முனிவர்களும் அவனுடைய முடியின்மீது பொற்பூக்களை முறைமுறையாகத் தூவி வாழ்த்தினர்கள். அதன்பின் தம்பியர்கள் பிரமாவையும் விட்டுணுவையும் "இருங்கள்" என்று அநுமதிசெய்ய இருந்தார்கள். அத்தம்பியர்களுடைய ஏவலினால் இந்திரன் காளாஞ்சியை ஏந்தினான்; குபேரன் அடப்பையைத் தாங்கினான்; வாயு சாமரை வீசினான்; அவுணர்க்கரசனுகிய அசுரேந்திரன் உடைவாள் பிடித்தான், சூரியசந்திரர்கள் குடையை நிழற்றினர்; வருணனும் புத்திரர்களும் ஆலவட்டம் வீசினர்; கருடரும் கந்தருவரும் சித்தரும் இசைபாடினர்; யமனும் அக்கினியும் பிரம்பையேந்தி எவரையும் விலகும்படி கோபத்தோடு பார்த்து ஆரவாரித்துப் பத்தியாக நிறுத்தி, சூரனுடைய புகழ்களைத் துதித்து நின்றார்கள்; நிருதி கெண்டியை ஏந்தினான்; தேவகுருவும் அசுரகுருவும் பல முனிவர்களும் பொற்கலத்திலுள்ள கங்காசலத்தை அறுகிற் றேய்த்துத் தூவி ஆசிகூறினர்கள். அரம்பை மேனகை முதலிய தெய்வப்பெண்கள் சுதியோடு பாடியாடினர்கள். இவ்வாறே தேவர்களும் பிறரும் தத்தமக்குரிய ஏவல்களைத் தவறுது மேற்கொண்டு செய்ய, சூரபன்மன் சிங்காசனத்தின்மீது ஐசுவரியத்தோடு வீற்றிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

# அரசுசெய் படலம்.

பட்டாபிஷேகம் செய்யப்பெற்றுச் சிங்காசனத்தின் மீதிருக்கின்ற சூரபன்மன் விட்டுணுவை நோக்கி, ''நீ என் பிதாவாகிய காசிபமுனிவருக்குப் பாட்டன் ஆதலால் உன்னை நாம் அழைக்குந்தோறும் விரைந்து வருக'' என்றும், பிரமாவை நோக்கி, ''உன் புத்திரர்களோடு எந்நாளும் இங்கு வந்து பஞ்சாங்கஞ் சொல்லிப் போகுக'' என்றும், சூரியனை நோக்கி, ''நம்மூர் மதிலின் மேலாற்போதல் உனக்கரிது ஆதலால் கீழ்மேற்றிசைகளிலுள்ள கோபுரவாயில்களின் வழியாற் புகுந்து ஆகாயத்திற்போய் எந்நாளும் இளங்கதிராய் எறித்துத் திரிதி'' என்றும், சந்திரனை நோக்கி, ''இனி வளர்தல் தேய்தல் சுருங்குதல் ஆகிய இவைகளை விடுத்துப் பூர்ணகலையோடு கீழ்மேற் கோபுரவாயிலாற் சஞ்சரிக்குதி'' என்றும், அக்கினியை நோக்கி, ''நம்மூரினுள்ளவர்கள் யாவர் நினைத்தாலும் அவரிடத்து வந்து அவர் பணிகளைச் செய்து யாவர் தீண்டினும் செந்தாமரைமலர்போலக் குளிருதி'' என்றும், யமனை நோக்கி, ''உலகத்துயிர்களை நாளுங் கவர்வதுபோல நம்முடைய யானை குதிரைகளையும் அவுணர்களையும் கொல்வதைக் கனவிலுங் கருதாது அஞ்சித் திரிதி'' என்றும், வாயுவைப் பார்த்து, ''இந்நகரிலுள்ளார் யாவரும் அணிந்து நீக்கிய மாலையும் ஆபரணங்களும் சந்தனமுழுதலாகிய குப்பைகளை அவ்வப்பொழுதில் நீக்குதி'' என்றும், வருணனைப் பார்த்து, ''பச்சைக்கருப்பூரம் கஸ்தூரி என்னு மிவற்றைச் சந்தனத்தோடளாவிப் பனிநீரிற் கலந்து காற்றுப் பெருக்கிய இடங்களேறும் தெளிக்குதி'' என்றும், இந்திரனை நோக்கித், ''தேவர்களோடும் திக்குப்பாலகர்களோடும் முனிவர்களோடும் வந்து நாம் சொல்லிய பணிகளைச் செய்து திரிவாய், இதிற் றவருதே'' என்றும் இவ்வாறே தன் பணியிற்றவருதொழுகும்படி யாவர்க்கும் வெவ்வேறுகக் கட்டளையிட்டான். அவர்கள் அஞ்சி ''உன் கட்டளைப்படி செய்வோம்'' என்று சொல்லி அவ்வாறொழுகினார்கள்.

சூரபன்மன் இப்படி அரசுசெய்து, பின் மணஞ்செய்ய எண்ணி, தெய்வத்தச்சன் மகளாகிய பதுமகோமளை என்பாளைச் சுக்கிரன் விதிப்படி மணஞ்செய்து கொடுக்க அவளோடு கலந்திருந்தான், அதன்பின் தேவர் கந்தருவர் முதலாகிய பல சாதிகளினுமுள்ள அளவில்லாத பெண்களைக் காமக்கிழத்தியர்களாக மணஞ்செய்து, இன்பமனுபவித்தான். சிங்கமுகனுக்கு யமனுடைய மகளாகிய விபுதை என்பாளையும், தாரகனுக்கு நிருதியின் புதல்வியாகிய சவுரியையும் விவாகஞ்செய்து கொடுத்தான்.

இவ்வாறு மணஞ்செய்து கொடுத்தபின், சூரபன்மன் இரண்டு தம்பியர்களையும் நோக்கி, ''உங்களுக்காக விதித்த நகரங்களில் இரண்டுகோடி வெள்ளஞ்சேனைகளோடு போய் இருங்கள்'' என்று அனுப்பி, சேனைத் தலைவர்களிற் பலரை நோக்கி, ''நீங்கள் இரண்டுகோடிவெள்ளம் சேனைகளோடு தீவுகளிலும் சமுத்திரங்களிலும் செய்யப்பட்ட நகரங்களிற் போயிருக்குதிர்'' என்று அனுப்பினன். எட்டுத்திசைகளினும், மேலுலகம் ஏழினும், கீழுலகம் ஏழினும், ஒழிந்த இடங்களினும் தன்னுடைய ஆணையை நடாத்தும்படி எல்லையில்லாத அசுரர்களை ஆறுகோடிவெள்ளஞ் சேனைக

ளோடு செல்ல ஏவினன். இவ்வாறு சூரபன்மனால் அனுப்பப்பட்ட அவுண சேனைகள் விண்ணுலகத்தினும், மண்ணுலகத்தினும், எண்டிசைகளினும், ஏழ்பிலங்களினும், மலைகளினும், ஆகாசத்தில் உதித்த அளவில்லாத நக்ஷத்திரங்கள்போல மலிந்தன. தன் சேனைகள் எங்கும் இடையறாது நெருங்குதலும், சூரபன்மன் தானிருக்கும் வீரமகேந்திரபுரியில் இலக்கம் வெள்ளம் அவுணர்கள் மாளிகைகள் தோறும் முறையே இருக்கவைத்தான்; யானை குதிரை யாளி கரடி புலி பன்றி சிங்கம் மரை என்னும் முகங்களையுடைய அவுணத்தலைவர்கள் எண்மருக்கும் வீரமகேந்திரத்தின் எண்டிசையிலுமுள்ள எட்டுநகரங்களையுங் கொடுத்து, தனித்தனி பதினாயிரம் சேனைகளோடும் அதனைக் காக்கவைத்தான்; அந்நகரத்தைச் சூழ்ந்த மதிலிலுள்ள நான்கு வாயில்கடோறும், அந்நகரின் மதில்கடோறும், கோயில்கடோறும் காவல் செய்யும்படி எல்லையில்லாத வீரர்களை நிலையாக வைத்தான். இதன்பின் சூரபன்மன் துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன் முதலாயினோரை மந்திரிமார்களாகத் துணைக்கொண்டு, தேவர்கள் துதிக்க வீற்றிருந்து அரசுசெய்தான்.

திருச்சிற்றம்பலம்.

## தேவரையேவல்கொள் படலம்.

சூரபன்மன் இவ்வாறு அரசுசெய்யுங் காலத்தில், தேவர்களும் முனிவர்களும் அவனுடைய ஏவலின்வண்ணம் மகேந்திரபுரியிலும், சிங்கமுகனுடைய ஆசுரத்திலும், தாரகனுடைய மாயாபுரத்திலும், மற்றை அசுரர்களுடைய பல பதிகளிலுஞ் சென்று, அவர் பணித்த பணிகளைச்செய்து ஊசல்போல உலைந்து திரிவர்.

அக்காலத்தில் ஒருநாள், சூரபன்மன் இந்திரனையும் தேவர்களையும் வலிந்தழைத்து, ''நீவிர் அவுணர்களுக்குத் தம்பியர், அவர்பணி நும்பணியன்றே? கடலிலுள்ள மீன்களை நாடோறும் வாரிக்கொண்டுவந்து கொடுங்கள்'' என்று பணித்தான். தேவர்கள் அதனைக்கேட்டு மனநடுங்கிச் சோர்ந்து வெள்கி, ''கடலிலுள்ள மீன்களைப் பிடித்துக்கொண்டுவந்து தருக என்றான், இதற்கினி நாஞ்செய்வதேது; பிரமா நந்தலையில் இப்படியும் விதித்தாரே'' என்று இரங்கி மறுத்தற்கஞ்சி, ''அவ்வாறே செய்வோம்'' என்று அவனை வணங்கிப்போயினர்கள். போகின்றவழியில் இந்திரனும் தேவர்களும் பொருமி ஏங்கி, ''நமக்கு வருகின்றது ஒரு பழியன்றே! அது வருவதற்குமுன் சாகின்றதே மிகவும் இனிதாகும். நமக்கதுவும் வாராது; ஐயோ வேகின்ற மனத்தையுடையேம் செய்வதென்னை'' என்று புலம்பிக் கடலையடைந்தார்கள். இந்திரன் வருணனை யழைத்து, ''சமுத்திரத்துக்குத் தலைவன் நீயன்றே; உன்னினும் வலியருளரோ. திமிங்கில முதலிய மீன்களை இக்கரையில் ஏற்றுவாயாயின், எம்மைத் துயர்க்கடலின் கரையில் ஏற்றினவனுவாய்'' என்றான். வருணன் அதனைக்கேட்டு, ''தேவர்க்கரசனுகிய நீயும் வருந்துகின்றனையோ, இத்தொழிலை யான் செய்வேன்'' என்று கூறிக் கடலுட்புகுந்து, கைகளாலலைத்து, அங்குள்ள மீன்களையெல்லாம் கரையிலே மலைபோல உயர்த்தினன். கடற்கரையில் வரு

னன் உயர்த்திய மீன்களை இந்திரன் பார்த்து, தேவர்களை அழைத்து, ''இவற்றை எடுப்பது உங்கள் தொழில்'' என்றான். அவர்கள் நடுங்கி மனம் பதைத்துக் கண்ணீர்விட்டு நாணி, யமன் உயிரைக் கவரச் சூரியன் உலர்த்திய சின்ன திமிங்கில முதலிய மீன்களைப் பாம்புகளாற் கட்டி னர். அச்சுமைகளை இந்திரன் தேவர்களுக்கு எடுத்த, அவர்கள் கொண்டு சென்று இரங்குகின்றார்கள்: ''சூரபன்மனுகிய தீயவனல் முன்னமுந் துயர்க்கடலின் மூழ்கி வலியழிந்தோம். பழியாகிய இத்தொழிலையுஞ் செய் தோம். இன்னும் நமக்கு வருந் தொழிலேதோ அறியேம்! சூரனுடைய பணியினல் நமக்கு இன்று வருகின்றது பழிமொழியே. அது நம்முயிரை ஈர்கின்றது. விதியே, நமக்கு இதுவும் தீர்கின்ற காலமுண்டா நீ சொல்லு வாய். பூவுலகில் வசிக்கும் மனுடரும் பாவமென்று நூலிற் சொல்லு கின்ற இத்தொழிலை எவர் செய்கின்றார். இது எமக்கோ வந்தெய்துவது! தேவகதியினும் நரகம் சிறப்புடைத்து. செய்யத்தகுவனவற்றை உணராத அசுரர்களினும் மனுடர்களினுந் தாழ்வாகிய வலைஞர்தொழிலைச் செய் தோம். இந்த விண்ணுலகவாழ்வை விரும்பி யாஞ்செய்த மிக்கதவமும் வீண யாய் விளைந்ததே. வேதாசாரத்தை விலக்கினேம். ஞானநெறிக்குப் புறம்பா னேம். தீயவனுகிய சூரன் கோபத்தினுற் சொல்லுகின்ற இழிந்தசெயல்களைச் செய்வோமாயின் எம்மினும் உயர்ந்தவர் எவர்! 'ஐந்தரு நீழலில் இன்புற் றிருக்கும் தேவர்கள்' என்று மதிக்குந் தகையேமாகிய யாம் எவர்களும் நகைக்கும்படி இழிவோடு மீன் சுமந்து அசுரர்களுக்கு முன் செல்வதினும், சாதல் மிக நன்று நன்று!'' என்று இவ்வாறு தேவர்கள் சொல்லிப் புலம் பிக்கொண்டு சூரனுடைய நகரில் வந்தார்கள். அவுணர்கள் அதனைப் பார்த்து, '' இவர் சமுத்திரத்தைக் கலக்கி இதோ சில மீன்களைத் தரு கின்றார்'' என்பாரும், ''சூரியன் முன்னுண்ட வெறுங்கோதையோ எமக் குக் கொணர்கின்றார்'' என்பாரும், ''கடலிலுள்ள மீனைச் சுமந்துகொண்டு வருகின்றார் இவர்க்குச் சிறிதும் நாணமில்லையோ'' என்பாரும், ''தீங்கு செய்தால் யாராயினும் செய்யாததேது'' என்பாரும், ''இவர்கள் ஊமை கள்போல்வாரோ? ஒன்றும் பேசுகின்றிலர்'' என்பாரும், ''பரதவர்களே செய்கின்ற இந்த இழிதொழிலும் இவர்க்கு வருமோ?'' என்பாரும், ''நாம் நிந்திப்பதென்ன இது விதியின்செயல்'' என்பாரும், ''வேதாசாரத்தை விட்டு நமக்குத் தொண்டுசெய்யும் பேதைத்தொழிலையே கடைப்பிடித் தார்'' என்பாரும், ''வடுப்படாத நம்முடைய குலத்தை இவர் மிகவருத் தினர் இன்னும் என்னபாடுதான் படார்'' என்பாரும் ஆயினர். இவ்வாறு அவுணர்கள் பலருஞ் சொல்ல மனம்நொந்து புலம்புந் தேவர்கள் இந்தி ரனை முற்கொண்டு சூரனுடைய வாயிலை வந்தடைய, வாயிலாளர்கள் சூரனுடைய அனுமதிப்படி உள்ளே விடுத்தார்கள். தேவர்கள் மீன்களைக் கோயிலினுள்ளே சேர்த்தார்கள். சூரன் அதனைக்கண்டு களிப்புற்று, ''தேவர் காள், நாடோறும் மீன்களைக் கொண்டுவருகுதிர்'' என்று பணிக்க, அவர் கள் ''நன்று'' என்று சொல்லிப்போய், எந்நாளும் இவ்விழிதொழிலைச் செய்து புலம்பித் துயர்க்கடலின் மூழ்கி, வைதிகாசாரத்தை இழந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# புதல்வரைப் பெறுபடலம்.

சூரபன்மன் இப்படித் தேவர்களை ஏவல்கொண்டு அரசுபுரிந்து வரு நாளில், அவன் செய்த தவத்தினாற் பதுமகோமளை என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் ஒரு புதல்வன் பிறந்தான். அவனைச் சூரன் பார்த்து, தன் கிளைஞர்களுக்குச் செல்வங்களை வீசி மகிழ்ச்சியின் மிகுந்தான். இந்திரன் முதலாயினோர் துன்பமுற்றார்கள். அரம்பையர்களும் அசுரப்பெண்களும் அப்புதல்வனை ஆசீர்வதித்துத் தொட்டிலிலேற்றினர். அவன் பிறை போல வளர்ந்துவருநாளில், ஒருநாள் தொட்டிலிலே நித்திரை செய்யும் போது, அவனுடைய உடம்பிலே சூரியகிரணம் ஒரு நூழைவழியால் வந்து படுதலும், அவன் கோபித்துப்பார்த்து, தொட்டிலினின்றும் ஆகாயத்திற் பாய்ந்து, சூரியனைக் கையாற் பற்றிக்கொண்டு இறைப்பொழுதில் வந்து, தொட்டிலின் காலிற்கட்டி, முன்போல நித்திரைசெய்தான். தேவர்கள் அதனைப்பார்த்து, அச்சமுற்றார்கள். சூரியன் ஆகாயத்திற் சஞ்சரித்தலின்றிப் பிழைபடுதலும், பிரமா அதனை நினைத்து, இந்திரன் முதலிய தேவர்களோடு சூரபன்மனிடத்தில் வந்து, ''மகாராஜனே, சூரியனை உன் புதல்வன்செய்த சிறையினின்றும் விடுவித்துத் தருதி'' என்றார். சூரன் அதனைக்கேட்டு, ''என்மகன் சூரியனைச் சிறைசெய்ததை யான் அறியேன். அவன் சிறைசெய்யும்படி சூரியன்செய்த குற்றம் யாது?'' என்றான். ''உன் மகனுடைய முகத்திற் சூரியனுடைய வெய்யில் தீண்டியது. அதனால் அவனைப் பிடித்துச் சிறைசெய்தான்'' என்று பிரமதேவர் கூறினர். சூரன் தன் புதல்வனுடைய வீரச்செயலைக் கேட்டு மகிழ்ந்து, ''நீவிர் என்மகனை அடைந்து மிகவும் இனிய மொழிகளைக் கூறி அவன் விடுத்தபின் சூரியனை இங்கே கொண்டுவருதிர்'' என்றான். பிரமா நன்றென்று விடைபெற்று, மேனகை முதலிய அரம்பையர்கள் பாடியாட்டுகின்ற பொற்றொட்டிலிற் கிடக்கும் புதல்வனிடத்தில் வந்து, அளவில்லாத ஆசிகளைச் சொல்லிப் புகழ்ந்து, முன்னிற்றலும், அவன் ''நுமக்கு வேண்டுவது யாது சொல்லுதிர்'' என்றான். பிரமா ''இந்தச் சூரியனுடைய சிறையை நீக்குதி'' என்றார். புதல்வன் ''உன்னுடைய படைக்கலத்தை எனக்குத் தருதியாயின் விடுவேன்'' என்றான். அவர் தன் படையைக் கொடுக்க, அவன் சூரியனுடைய சிறையை விடுத்தான். பிரமா அப்புதல்வனைப் புகழ்ந்து மோகப் படையைக் கொடுத்தார். புதல்வன் சூரியனுக்கும் பிரமாவுக்கும் விடை கொடுத்தனுப்பினன். சூரபன்மன் அவர்களால் அதனையறிந்து, அவ்விருவர்க்கும் விடைகொடுத்து, அந்த நல்லநாளில் தன் மகனுக்குப் பானுகோபன் என்று காரணப்பெயரிட்டான்.

பானுகோபன் அழகினால் மன்மதனையொத்தவனாய் வளர்ந்து விட்டானாதலால் போர்செய்து அவரை வென்றான். சூரன், பானுகோபனைப் பெற்றபின்பு, அக்கினிமுகனையும், அதற்குப்பின் இரணியனையும், அதற்குப் பின் வச்சிரவாகுவையும் பதுமகோமளை பெற மகிழ்ந்தான். மற்றை மனைவியர்கள் மூவாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள். மேற்சொல்லிய புதல்வர்களெல்லாரோடும் சூரபன்மன் மகேந்திரபுரியில் வீற்றிருந்தான்.

சிங்கமுகனுக்கு விபுதை என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் அதிசூரன் என்று ஒரு குமாரனும், மற்றை மனைவியர்களிடத்தில் நூறு

புத்திரர்களும், மிகுந்த வலிமையுடையவர்களாய்ப் பிறந்தார்கள். தாரகனுக்குச் சௌரி என்னும் பட்டத்துத் தேவியினிடத்தில் தபோபலத்தினால் ஒரு குமாரன் வந்து தோன்றி, குருவாகிய சுக்கிரனால் அசுரேந்திரன் என்று நாமகரணஞ் செய்யப்பெற்று, அழகிற் சிறந்தவனாய் வளர்ந்தான். அவன் சகல கலைகளிலும் வல்லவனாயினும் தீங்குடைய ஒரு விஞ்சையையும் செய்யான்; பாதகங்களைப் புரியான்; பழியைப் பூணான்; நீதியையன்றி வேறெவற்றையும் நினையான்; வீரம் பேசித் தன்னெதிர்ப்பவர் உளராயின், அவர் கெடும்படி எதிர்த்து, தன் மார்பின்மேல் அவர் படைத்தழும்பை ஏற்க நினைக்குந்தகைமையான். கள்ளி அகிலைத் தந்தாற்போலத் தாரகன் இந்த நல்ல புத்திரனைத் தந்து மாயாபுரியில் அரசுசெய்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## வில்வலன்வாதாவிப் படலம்.

சூரன் முதலிய மூவருக்குந் தங்கையாகிய அசமுகி என்று ஒருத்தி உளள். அவள் ஒரு புருஷனுக்கு மனையாள் என்னும் முறையில்லாதவள். கற்பில்லாதவள்; தருமமில்லாதவள்; தேவர்களுடைய மனைவியர்களைத் தன் தமையன்மாருக்கு மனைவியர்களாகச் சேர்ப்பவள்; முனிவர்கள் செய்யும் யாகங்கள் கெடும்படி தீச்செயல்களைச் செய்பவள்; பாவமே வடிவானவள்; அசுரர் குலங்களையெல்லாம் மாளச்செய்யும் தீவினைபோல எவ்விடத்திலும் எந்நாளும் உலாவுகின்றவள்; தன் சுற்றத்தாரை இகழுபவர்களைக் கொன்று தின்பவள்; அழகிற் சிறந்த ஆடவர்களைத் தேடிவலிந்து புணருகின்றவள். இவ்வியல்புடைய அசமுகி ஒருநாள் துருவாச முனிவருடைய ஆச்சிரமத்தில் வந்து அம்முனிவரைப் பார்த்து, ''இவன் செய்யுந்தவத்தை அழிப்பேன், அதுவன்றிப் புதல்வரையும் பெறுவேன்'' என்று எண்ணி, அவருக்கெதிரே போயினாள். போதலும் துருவாசமுனிவர் அவளைப் பார்த்து, ''பெண்ணே நீ தனித்துவந்த காரணம் என்னை? சொல்லுதி'' என்ன, அவள் ''உம்மை மகிழ்வோடு சேர்ந்து புதல்வரைப் பெறும்படி வந்தேன்'' என்றாள். முனிவர் ''இவள் சூரனுடைய தங்கை'' என்றறிந்து ''நான் உன்னைக் கூடுவேனாயின் என் தவமெல்லாம் அழியும். நீ இங்கே நிற்றல் பழி, நீதியுமல்ல'' என்றார். முனிவர் இப்படிச் சொல்லுதலை அசமுகி கேட்டு, ''நான் இனி உன்னைச் சேராதுபோகேன், தப்பிப்போம் நினைவையொழி'' என்று கூறி, அவரை வலாற்காரமாகத் தழுவி அதரபானஞ்செய்தாள். அப்பொழுது அவளிடத்தில் வலிமை மிகுந்த இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களை அசமுகி நோக்கி, வருக வென்று மகிழ்ச்சியோடு தழுவி, ''மைந்தர்காள், நீவிர் அசுரகுலத்தில் வந்தீர். சிறந்த தவத்தைச் செய்து வலியைப்பெறுகுதிர்'' என்றாள். தந்தை தாயர்களின் வடிவாய் வந்த இருவரும் முறையே வில்வலன் வாதாவி என்னும் பெயரைப் பெற்று, தாயின் சொற்படி பிதாவாகிய துருவாச முனிவருடைய பாதங்களை வணங்கி, அவர் ''உமக்கு வேண்டியதென்னை?'' என்று கேட்க ''உம்முடைய தவம் முழுதையும் நாம் பெறும்படி அருள் செய்யும்'' என்றார்கள். முனிவர் ''நான் செய்த தவம் முழுதையும் தரேன், வேறொரு பொருள் என்னிடத்துள தாயின் அதனைக் கேளுங்கள் தருவேன்'' என்றார். புதல்வர்கள் கோப

முடையராய் ''இப்பொழுதே இவனுடைய உயிரைக் கவர்வோம்'' என்று விரைந்தெழுந்தார்கள். துருவாசமுனிவர் அவர்களுடைய செயலைப் பார்த்துக் கோபமுற்று, ''நீவிர் நாடோறும் முனிவர்களுக்கே துன்பஞ் செய்யுங்கள். அதன்மேல் அகத்தியமுனிவர் உங்கள் உயிரைக் கவர்வார்'' என்று சபித்து, ''நம்மை இவர் கொல்வார்'' என்றெண்ணி மாயையினால் மறைந்து போயினர். வில்வலன் வாதாவி என்னு மிருவரும் தமது தந்தையைக் காணுதவராகி, தாயினிடத்து விடைபெற்றுக்கொண்டு அவ்விடத்தை நீங்கி, வேறொரு வனத்தையடைந்து, முனிவர்களைக் கொல்லுதலையே பொருளாகக்கொண்டு, பிரமதேவரை நோக்கி அக்கினியில் நின்று அளவிறந்தகாலந் தவஞ்செய்தனர். செய்யவும் அவர் வந்திலர். அதுகண்டு பிறிதொன்று செய்யநினைத்து, வில்வலனவன், தம்பியாகிய வாதாவியை வாளாற் றுணித்துக் கிழித்து, பிரமாவுடைய மந்திரத்தை உச்சரித்து, இரத்தத்தையுந் தசையையும் முறையே நெய்யும் அவியுமாக நெருப்பிற் சொரிந்து, ஒரு யாகத்தைச் செய்தான். அதுகண்டு பிரமதேவர் பூமியில் வந்து, ''அருஞ் செயலைச் செய்வாய், உனக்கு நாம் தரும் வரம் என்னை'' என்று கேட்க, வில்வலனுகிய அவுணன் அவருடைய பாதங்களை வணங்கித் துதித்து, ''அக்கினியில் அவிப்பாகமாயிறந்த என்தம்பி, குறைவில்லாத வடிவத்தோடு விரைந்தெழல் வேண்டும்'' என்றான். என்னலும், ''வாதாவி எழுக'' என்று பிரமதேவர் சொல்ல, உடனே அவன் ஆர்த்தெழுந்தான். அப்பொழுது வில்வலன் அதிசயித்து, தீமையோடு ஒரு சூழ்ச்சியை மனத்திலெண்ணி, பிரமாவைத் துதித்து, ''அடியேனுக்கு ஒரு வரந்தரல் வேண்டும்'' என்று அதனை வேண்டுகின்றவனாய், ''ஆட்டினுருவைக்கொண்ட வாதாவி என்னும் என்தம்பி இன்னும் உடம்பு வெட்டுப்படுவானாயின், யான் 'தம்பியே எழுக' என்று சொல்ல, முன்னை வடிவோடு தோன்றி எம்முன் வரல்வேண்டும். இவ்வரமொன்றை அடியேன் பெறும்படி அருள் செய்க'' என்று பிரார்த்தித்தான். ''அவ்வாறே பலகாலம் அதுமுடிக'' என்று பிரமதேவர் அருள்செய்து, ஆகாயவழிக்கொண்டு சென்றார்.

வில்வலன் வாதாவியாகிய இருவரும் சூரன்முன் சென்று, ''நாம் உன்மருகர், வேறல்லர்'' என்று சொல்லி, முனிவர்களைக் கொல்லுதற்குரிய வரத்தைப் பிரமாவினிடத்திற் பெற்றதையுஞ் சொன்னார்கள். சூரபன்மன் அவர்களை மகிழ்ந்து தழுவி, ''மருகர்களே, இனிமையுடன் என்னெடிருங்கள்'' என்று சொன்னன். அவர்களிருவரும் சிலநாள் அங்கிருந்து பின்பு நிலவுலகத்தில்வந்து, குடகநாட்டிலே, வளஞ்செறிந்த ஒரு காட்டிற்பொருந்திய நாற்சந்தியில் ஓராச்சிரமத்தைச் செய்து, எவர்களும் விரும்பும் எல்லாப் பொருள்களையும் வருவித்து வைத்துக்கொண்டு அங்கே இருந்தார்கள். அவ்வழியில் வரும் முனிவர்களுடைய உயிரைக் கவரும்படி நினைத்து, தம்பியாகிய வாதாவி ஆட்டுக்கடாவாய் நிற்ப, தமையனுகிய வில்வலன் முனிவர் வடிவங்கொண்டிருந்து, அங்கேவரும் முனிவர்களை விரைந்தெதிர்கொண்டு வணங்கி, ''அடியேனுடைய ஆச்சிரமத்துக் கெழுந்தருளுக'' என்று உபசாரத்தோடு அழைத்துக்கொண்டு சென்று, ''சுவாமிகளுக்கு இன்றைக்கு இங்கே திருவமுது'' என்று சொல்லி, உணவின்வகைகளையெல்லாம் அப்பொழுதே சமைத்து, ஆடாய் நிற்கின்ற வாதாவியை வாளாற் றுணித்து, கறியாகத்தக்க ஊன்களை வகைபட அரிந்து, கறி

களாகச் சமைத்தபின், அம்முனிவர்கள் அவ்வூன உண்ணும்படி செய்து, பின் வாதாவியாகிய தம்பியைக் கூவுவான். கூவியபொழுது ஆடாகிய அவன் உயிரோடுகூடிய உடம்பையுடையனாய், தன்னை உண்ட முனிவருடைய வயிற்றை வலியோடு கிழித்துக்கொண்டு வருவான். பின் இறக்கின்ற முனிவர்களுடைய தலைகளை அவரிருவரும் உண்டு, ஆடாகவும் முனிவனுகவும் பொருந்தி, முனிவர் கூட்டமெல்லா மிறக்கும்படி நாடோறும் இதனையே செய்திருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## இந்திரன்கரந்துறை படலம்.

இந்தப்பிரகாரம் இவ்வில்வலன் வாதாவியாகிய அசுரரும் பிறரும் முனிவர்களையுந் தேவர்களையும் வருத்த, சூரபன்மன் இந்திரஞாலத் தேரின் மீதேறி ஆயிரத்தெட்டண்டங்களினுஞ் சென்று, நாடோறும் அரசியலை நடாத்தியிருந்தான். ஒருநாட் பாதலத்திலிருப்பான்; ஒருநாள் திக்குகளிலாவியிருப்பான்; ஒருநாள் விண்ணுலகங்கடோறுமிருப்பான்; ஒருநாட் சத்தியவுலகத்திலிருப்பான்; ஒருநாள் வைகுண்டவுலகத்திலிருப்பான். சூரபன்மன் இவ்வாறு நாடோறும் எண்ணிறந்த உலகங்கடோறும் சென்று மாலைக்காலத்தில் விரைந்து மீளுவான். இவ்வாறு அரசுபுரியுங்காலத்தில், மேலே தனக்கு வருங்கேட்டை அறியானுய், இந்திரனைச் சிறைசெய்து அவன் மனைவியாகிய அயிராணியைக்கவரும்படி நினைத்தான். நினைத்த சூரன், தன்னுடைய சேனைத்தலைவனெருவனை அழைத்து, ''நீ இப்பொழுதே சென்று, இந்திரனைப் பிடித்துக்கொண்டுவந்து என்முன் விடுவாய்'' என்று அனுப்பி, தன் கோயிலைக் காக்கின்றவர்களும் வாள் முதலிய படைக்கலங்களை ஏந்தினவர்களும் ஆகிய ஒன்பதுகோடி அசுரப்பெண்களை விரைந்தழைத்து, ''நீங்கள் இந்திரன் மனைவியாகிய அயிராணியைப் பிடித்துக்கொண்டுவந்து தாருங்கள்'' என்று அனுப்பினன். அவர்களெல்லாரும் கோபித்து ஊக்கத்தோடு விண்ணுலகத்திற் சென்றார்கள். செல்லுதலும், அதனைக் கண்ட தூதுவர்கள் விரைந்துசென்று இந்திரனை அடைந்து, ''அவுணர்களும் வீரத்தையுடைய பெண்களும் போர் செய்வாரைப்போல வந்தார்கள்; அவர்கள் கருத்தென்னையோ யாம் அதனை அறிந்திலோம்'' என்று இந்திரனறியும்படி கூறினர்கள். இந்திரன் அவர்களை விரைந்து அனுப்பி, அவுணர்களுடைய உபாயத்தை எண்ணி, தன் மனைவியோடு மாளிகையை அகன்று, மாயையினுல் விரைந்து இப்பூமியிற் சென்றான். சூரபன்மன் விட விண்ணுலகத்துக்குச் சென்ற பெண்களும் வீரரும், இந்திரனிருக்கின்ற அமராவதி என்னு நகரை அடைந்து, * ஆகரம் முதலிய இடங்களை ஆராய்வார்கள். இந்திரனைப் பிடித்துவரும்படி சென்ற வீரர்கள் அவனைத் தேடிக் காணராயினர். இந்திராணியைப் பிடித்துவரும்படிசென்ற பெண்கள் அவளைத் தேடிக்காணராயினர். அதனல்அவ்விருபாலாரும் அறிவு சோர்ந்து, கவலை மிகுந்து, ''நம்மரசன் இங்கே நம்மையழைத்து ஏவிய பணியை முடியேமாயினேம்; இந்திரன் அயிராணியோடும் இவ்விடத்தை

* ஆகரம் - உறைவிடம்

விட்டுப் போயினன்'' என்று அவனுடைய நகரையெல்லாம் ஆராய்ந் தார்கள். நகரெங்குஞ் சுற்றிப்பார்த்துத் தேவர்களைப் பிடித்து,''இந்திரனைக் காட்டுக'' என்று அடித்து, ''இந்திராணி எவ்விடத்தாள்'' என்று வாய் கடோறும் இரத்தம் வடியும்படி குற்றினர்கள். அத்தண்டனையுற்ற தேவர் கள், ''எங்களரசனுகிய இந்திரனும் அவன் மனைவியும் சென்றதை யாங் கள் அறியேம். எங்களை வருத்தன்மின், யாங்கள் துயருறுகின்றேம்'' என்று அவ்வசுரர்களுக்கு அன்பு வரும்படி தளர்ந்து சொல்லினர். அசுரர்கள் அத்தேவர்களைவிட்டு, விண்ணுலகத்தை நீங்கி மகேந்திரபுரியை அடைந்து, சூரபன்மன் முன் சென்று ''இந்திரனும் இந்திராணியும் விண்ணுலகத்தை நீங்கிப் புறத்தே போயினர்'' என்று பழி பொருந்திய மனத்தினராய்க் கூறினர்கள். சூரபன்மன் அதனைக் கேட்டு, அக்கினிபோலக் கோபித்து, தேடுதற்கரிய மணியை இழந்த நாகம்போலத் துன்புற்று ஒற்றுவர்களிற் பலரை விரைந்தழைத்து, ''இந்திரன் தன் மனைவியாகிய இந்திராணி யோடிருக்குமிடத்தைத் தேடிப்பார்த்துவந்து சொல்லக்கடவீர்கள்'' என்று தூண்டினன். ஒற்றுவர்கள் வேறுவேறுய் உலகமெங்குந் தேடிக் காணது திரிவாராயினர். இனி விண்ணுலகத்தில் நிகழ்ச்சிகளைச் சொல்வாம்.

இந்திரன் மனைவியோடு நீங்க, விண்ணுலகம் சந்திரனும் நக்ஷத் திரங்களுமில்லாத இராக்காலம்போன்று சிறிதுஞ் சிறப்பின்றுய்ப் புல் லெனலாயது. வளங்களெல்லாம் அழிந்தன. துன்பம்மிகுந்தது. தேவர் களுடைய மனம் இன்பம் நீங்கி ஓடுங்கியது. அவ்வுலகமெங்கும் புலம் பலோசை எழுந்தது. எல்லாருடைய கண்களும் நீரைப்பொழிந்தன. பொன்னுலகம் உயிர்நீங்கிய உடலையொத்தது.

இவைகள் நிகழுதற்கு முன்னரே, இந்திரனுடைய தம்பியெனப்படும் உபேந்திரனுகிய விட்டுணு விண்ணுலகத்தை நீங்கிப் பழைய வைகுண்ட பதத்தை அடைந்தார். இந்திரகுமாரனுகிய சயந்தன், தன் சிறியபிதா வாகிய அவரைக்காண எண்ணி வைகுண்டத்திற் சென்று சிலநாள் அங் கிருந்தான். இருக்கின்ற சயந்தன், இந்திரன் அயிராணியோடு மறைந் தோடியதையும், அவுணர்கள் சுவர்க்கத்தில் வந்து அவ்விருவரையுந் தேடி மீண்டபின் தேவர்கள் துன்பமுற்றிருந்த தன்மையையும், வைகுண்டத் திலிருந்து அறிந்து, ''பிதாவின் மெலிவைக்கண்டால், தங்குடித்தலைமை களையெல்லாம் புதல்வர்கள் தாங்குதல் வழக்கமாம், தருமமும் அதுவே; என் பிதாவுமில்லை; யான் போய் என்னகரைக் காப்பேன்'' என்று நினைத்து பொன்னுலகத்தில் வந்தான். சயந்தன் பொன்னுலகத்தை அடைந்து, புலம்புகின்ற தேவர்களைக் கண்டு, தன்னுயிர்போலுந் தந்தைதாயர்களைக் காணுவாய்த் துன்பக்கடலின்மூழ்கி ஏங்கி இரங்கி, ஒரு செயலுமின்றிப் பித்தர்போலாயினன். அப்பொழுது, நாரதமுனிவர் அவன் மனத்தைத் தெளிவிக்க நினைத்து அங்கே செல்ல, அவன் நடுக்கத்தோடெழுந்து வணங்கி ஆசனத்தை இட்டு அவரை அதிலிருக்கச் செய்து, பக்கத்தில் நின்று, ''அடியேனைப் பெற்ற தந்தை தாயர்கள் சூரபன்மனுக்கஞ்சி ஒழித்தோடி னர். அவர் சென்ற இடத்தை அறிந்திலேன். எங்களுக்கு இந்துத்தீமை எந்தக்காலும் நீங்கும், எம்பெருமானே சொல்லியருளுக.'' என்றன். களிப்பை இழந்து நின்ற சயந்தன் இவ்வாறு கூற, நாரதமுனிவர் திரு

வருளாற் சிந்தித்தறிந்து, இரத்தினுசனத்தில் அவனே இருத்தி, பின்னர் இவைகளைச் சொல்லுவார்; ''நன்மை தீமைகள் தாந்தாஞ் செய்த வினையினுலன்றிப் பிறராலே தத்தமக்கு வாரா. அமுதத்திற்கும் நஞ்சிற்கும் முறையே தித்திப்பும் கசப்பும் ஆகிய சுவைவேறுபாடுகளைக் கொடுத்தார் சிலருண்டோ? கற்றறிந்த பெரியோர் இன்பம் வந்தபொழுது அதனே இனி தென்று மகிழார்; துன்பம் வந்தபொழுது அதற்கு நடுங்கிச் சோரார்; 'இன்பமுந் துன்பமும் இவ்வுடலுக்கே இயைந்தன' என்று பழவினையை ஆராய்வர். வறியவர் செல்வராவர்; செல்வர் பின் வறியராவர்; சிறியவர் உயந்தோராவர்; உயர்ந்தவர் சிறியராவர்; இது முறைமுறை மாறிமாறி வரும். இதனேப் பழைய வினைப்பயனே யென்றறி. உலகவழக்கமிதுவே. செல்வமும் வறுமையும், துன்பமும் இன்பமும் என்னும் இவைகளெல்லாம் உயிர்களுக்கு என்றும் நிலையென்று கொள்ளும் பகுதியையுடையனவோ! சந்திரனுடைய நிலாக்கற்றை தேய்தலையும் வளர்தலையும் நாடோறும் முறைமுறையே பொருந்தின. ஆதலினுல், உங்களுடைய தாழ்வும் அவுணர்களுடைய உயர்வும் நிலைபெற்று நில்லா. இதனே மெய் யென்றெண்ணுதி. இந்நகரை நீங்கிச் சென்ற உன் பிதாவும் மாதாவும் தம்முருவை மறைத்துச் சென்று பூவுலகத்திலிருந்தார்போலும். சயந்தனே, அந்நாளில் நீ பிறத்தற்குமுன் தேவர்களுக்குத் துயர்புரிந்த கயமுகன் என்னும் அவுணனிறக்கும்படி உன் பிதா முயற்சி செய்தான். அதுபோல் இந்தக் கொடிய சூரனும் இறக்கும்படி இன்னும் முயல்வான்''; என்றிவைகள் பலவற்றையுஞ் சொல்லி, ''இனிக் கொடிய சூரனும் இறப்பான்; உங்கள் துயரும் விரைவில் நீங்கும்; இதை நன்குணர்த்த துணிதி'' என்று நாரதமுனிவர் சயந்தனேத் தேற்றிச் சென்ருர். அவன்மனந் தெளிந்து வருந்திய தேவர்களேத் தெளிவித்து, நாடோறுஞ் சூரனுடைய ஏவல்களேச் செய்யும்படி அவர்களே ஏவி விண்ணுலகத்திலிருந்தான். இனி, நிலவுலகத்திற் சென்ற இந்திரன் செய்த செயல்களேச் சொல்லுகின்றேன்.

இந்திரன், ஐந்தருநீழலிலிருந்தனுபவிக்குஞ் செல்வங்களே வெறுத்து, மனைவியோடு தக்ஷணதேயத்தில் * பன்னிரண்டு திருநாமங்களேயுடைய சீர்காழியை அடைந்து, ''இத்தலம் யாமிருத்தற்கு நன்று'' என்று துன்பநீங்கி இருந்தான். அதன்பின் ''சிவபெருமானே மனமகிழ்வோடு எப்பொழுது அருச்சிப்போம்'' என்றெண்ணி, அங்கே ஒரு திருநந்தனவனம் வைக்க நினைத்து, சந்தனம் அகில் முதலிய விருஷங்களால் வேலிகோலி, சிறுசண்பகம் கோங்கு முதலாகிய தருக்களேயும் மல்லிகை முல்லே செவ்வந்தி முதலாகிய புதல்களேயும் பழுதறத் தெரிந்துவைத்து ஒரு நந்தனவனத்தை உண்டாக்க, அவைகள் மிகவும் மலர்ந்தன. இந்திரன் அம்மலர்களால் நாடோறும் சிவபெருமானுடைய திருவடிகளே அர்ச்சித்துக்கொண்டு, அங்கே மனைவியோடிருந்தான். இருக்குநாளில், சூரபன்மன் விடுத்த ஒற்றுவர்கள் இந்திரனேப் பூவுலகமெங்குந் தேடிச்செல்ல, அவன் அதனே அறிந்து, மனைவியோடும் அங்கே மூங்கில்வடிவாய் மறைந்திருந்து தவஞ்செய்தான். ஒற்றுவர்கள் காணுராய்ப் போயினர்கள். அவுணர்களுடைய ஆணையினுல்,

* சீர்காழியின் பன்னிரண்டு திருநாமங்கள் — பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்பனவாம்.

முகில் மழை பெய்யாதாக, தீப்பட்டாற்போல அத்திருநந்தனவனம் வாடியது. அதனை இந்திரன் கண்டு வருந்தி, பிறிதொரு செயலுமின்றி, பிரமவிட்டுணுக்களுந் தேடியறியாத சிவபெருமானைத் தியானித்திரங்கித் துதித்தான். அப்பொழுது, ''இந்திரனே நீ வைத்த நந்தனவனம் வாடிப்போயினவெனினும் அழியா; இந்தஸ்தலத்திலே ஒரு ஆறுவரும்; வருந்தாதொழி'' என்று ஓரசரீரிவாக்கு ஆகாயத்திலெழுந்தது. அவ்வாக்கை இந்திரன் கேட்டு, ''இது எம்பெருமானுடைய திருவருள்'' என்று அஞ்சலி செய்து துதித்து, உரோமஞ் சிலிர்ப்ப, மனமகிழ, திட்பத்தோடிருந்தான். இனி, சீர்காழியில் ஒரு நதி வந்த வாலாற்றைச் சொல்வேன்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## விந்தகிரிப் படலம்.

இந்திரன் அசரீரிவாக்கைக்கேட்டு மனத்திட்பமுற்றிருக்க, சிவபெருமானுடைய திருவருளால், பின்னிகழ்வனவற்றை முன்னறிகின்ற நாரத மகாமுனிவர் விந்தகிரிக்கு முன்னேசென்று பல ஆசிகளைச் சொன்னார். சொல்லுதலும், தெய்வவடிவத்தைக் கொண்ட அம்மலை தொழுது, ''எம்பெருமானே, நீவிர் எழுந்தருளியது பேரதிசயம்'' என்று உபசாரவசனங்களைக் கூற, அந்நாரதமுனிவர், தம்முடைய வசனங்களால் அம்மலை ஏவப்படும்வண்ணம் இதனைச் சொல்லுவார்: ''மேருமலையானது, தான் சிவபெருமானுடைய வில்லாகிய வலியினாலும், உலகங்களையெல்லாம் பெற்ற உமாதேவியார் தன் மரபிலே அன்போடுவந்து திருவவதாரஞ் செய்தமையினாலும், மலைகளுக்கெல்லாம் அரசாயிருத்தலினாலும், சூரியனைத் தொடும்படி ஆகாயத்தில் வளர்ந்திருத்தலினாலும், சங்காரகாலமளவும் நின்று இப்பூவுலக முழுதையுங் காத்தலினாலும், ஆயிரங்கொடுமுடிகளையுடைமையினாலும், சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற திருக்கைலாசமலை தன்னெருபக்கத்திலே பொருந்தியிருத்தலினாலும், சூரபன்மனால் அழியாமையினாலும், சூரியனும் சந்திரனும் மற்றை ஏழு கிரகங்களும் நக்ஷத்திரங்களுமாகிய எல்லாருஞ்சூழும்படி நிற்கின்ற பழமையினாலும், தேவர்கள் குடிகொண்டிருத்தலினாலும், பொன்னைக்கொண்டுயர்ந்திருத்தலினாலும், பல மலைகள் தன்னைச் சூழ்ந்திருத்தலினாலும் தனக்கொப்பில்லை என்று செருக்குற்றது. பரந்து ஆகாயத்தில் நிமிர்ந்த மேருமலை, தன் பெருந்தகைமையை மதிக்குந் தன்மையை நீ அறிந்திலைபோலும்! யாம் அந்தச் செயல்களையெல்லாம் விரைந்து உனக்குச் சொல்லுவண்ணம் வந்தேம்'' என்று கூறினர்.

தெய்வவடிவாய்வந்த விந்தகிரி இதனைக்கேட்டு, வீரத்தைப்பொருந்தி, பெருமூச்சுவிட்டு, ''இது நன்று'' என்று சிரித்துச்சொல்லும்: ''இல்லாகிய இறுமாப்பு நீங்கப் பலருமிகழ, பெண்களைப்போல நாணமுற்று விலாய் வளைந்தது மேன்மையோ? எந்நாளும் எல்லாவற்றையும் பெற்ற உமாதேவியார், இமயமலையரசன் செய்த தவத்தால் அவனிடத்தில் வந்திருந்தாரன்றி, அவன் மகளாய்ப் பிறந்தனரோ? மேருவானவன் 'பூமியைத் தாங்குவேன்' என்று உயர்ந்தான், எவ்வுலகையுந் தாங்கியுற்றனன் இன்னும் பலவுள. அவற்றையுந் தாங்குவது சிவசத்தியே. சூரியன் முதலி

யோர் தன்னைச் சூழ்ந்தார்களல்லது நாடோறும் என்னைச் சூழ்ந்திலரோ, ஏழு தீவுகளினுமுள்ள கற்களைச் சூழ்ந்திலரோ? அம்மேரு தனக்குப் பல கொடுமுடிகள் உள்ளன என்று நினைக்குமோ! கள்ளிகளின் அளவிறந்த தலைகளைப் பார்த்தால், நான்குதலைகளையுடைய பிரமதேவர் அவற்றை ஒப்பாகாரோ! கொடிய சூரபன்மன் 'இதுகல்' என்று அம்மேருவைத் தாக்காமல் விட்டான். அவன், சூரபன்மனுக்கஞ்சியிருக்கின்ற சக்கரப் படையையுடைய விட்டுணுவிலும் வலியனே! மேருவானவன் 'நாம் பொன்மயமாகிய உருவத்தைப் பொருந்தினேம்' என்று நினைத்தானே? அவன் மண்ணுறச்செய்து அலங்கரித்த பாவையினழகை எண்ணினனில்லை. தன்னிடத்திலிருக்குந் தேவர்கள் பலரும் என்னிடத்திலிராமல் இகழ்ந்தார் களோ? சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலாசமலைக்கு அருகிலில்லாதது எந்தமலை? ஆதிசேஷன் தன்னை வந்து மறைத்தநாளில் வாயுவானவன் கோபித்துத் தன்னுடைய மூன்று கொடுமுடிகளையும் பறித்து வீசியதை யான் அறிந்திலேனே? வீரபத்திரக்கடவுளாகிய சரபப்பக்ஷி விட்டுணுவா கிய நரசிங்கத்தின் முன்னே தன்னுரு அண்டமெல்லாம் பொருந்த வளர்ந்தபொழுது, ஒரு பருக்கைக்கற்போல அதன் காலின் கீழ்ப் பொருந்தி னன். இதனை அம்மேரு நினைத்திலனே! வீரபத்திரக்கடவுள் சரபப் பக்ஷி வடிவங்கொண்டபொழுது, அதன் சிறைக்காற்றினுல் மின்மினி போலத் திரிந்தான். அதனை அறிந்திலனே! விநாயகக்கடவுள் கய முகாசுரன்மீது முறித்தெறிந்த கொம்பினுலே, பாரதசரித்திரமெல்லாம் அவன்மேல் எழுதப்படும் என்பது தவறுமோ! மேருவானவன் தானெரு மலையன்றி விட்டுணுவோ அல்லன்; பிரமாவோ அல்லன்; இந்திரனே அல் லன்; அவன் தன்னை மேலென்றெண்ணியது ஏனே?'' என்று மேருமலையை இழித்துப் பேசி, ''முனிவரே அந்த மேருமலை தன்னை வியக்கின்ற செருக்கை யான் நீக்குவேன், பார்ப்பீராக'' என்று, விந்தமலை பழையவடிவை யொழித்து, கோடிவிட்டுணுக்கள் எல்லையில்லாத மாயாசரீரங்களைக் கொண்டு திரண்டு நிமிர்ந்தாற்போல ஒரு வித்தையினுல் அகன்று ஆகா யத்திலுயர்ந்து, சத்தியவுலகம்வரையும் நிமிர்ந்து, இமயமலைவரையுமகன்று, நெருக்கியது. விந்தகிரி இந்தப்பிரகாரம் அகன்று மேலே உயர்ந்து சென்று ஆகாயவழியைத் தடைசெய்ய, ஆதித்தன் முதலிய ஒன்பது கிர கங்களும் நக்ஷத்திரங்களும் பிறரும் பார்த்து மனநடுங்கி, '' இது அவுணர் களுடைய செயலோ என்பார்; தருமமில்லாத கொடிய இராக்கதர்களு டைய செயலோ என்பார்; அவர்கள் செயலல்லவாயின், பிரம விட்டுணுக் களுடைய செயலோ என்பார்; இது மாயமாகும் என்பார்; மேலேயுயர்ந்த மலையன்றி வெளியிடம் இல்லைபோலும் என்பாராய், சிவபெருமானது திருவருள் துணையாக ஞானத்தால் நோக்க, அது வெளிப்பட்டது. வெளிப் படுதலும், ''விந்தமலையானது மேருமலையோடு பகைத்து, மண்ணுலகத் தினும் விண்ணுலகத்தினுஞ் செல்லும் வழியைத்தடுத்தது'' என்று சிந் தித்து, ''அகத்தியமுனிவர் மேருமலைச்சாரலிற் சிவபெருமானுடைய திரு வடிகளைத் தியானித்துத் தவஞ்செய்துகொண்டிருக்கின்றனர். அவர் இங்கே வந்தால் மேலேயுயர்ந்து நின்ற விந்தம் ஒடுங்கும்'' என்று எல்லோரும் ஆராய்ந்து தெளிந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

# அகத்தியப் படலம்.

அகத்தியமுனிவரைக்கொண்டு விந்தமலையின்வலியை அடக்குவித்தல் வேண்டும் என்று துணிந்த சூரியன் முதலிய கிரகங்களும் பிறரும் அவரை நினைத்து, இவைகளைச் சொல்லித் துதிப்பார்கள்: — "விட்டுணுவினுடைய பாதங்களை அருச்சிக்கும்படி பூவைக் கொய்த கசேந்திரனென்னும் யானையானது, தன்னை ஒருமுதலை பற்ற, 'என்னுயகனே' என்று கையை எடுத்தழைப்ப, அவர் வந்து விடுவித்ததை அறியீரோ? பிரமதேவர் தாம் படைத்த திலோத்தமையென்னும் பெண்ணினிடத்து ஆசைவைத்து, கிளியாய்த் தொடர்ந்து செல்ல, அவள் 'பரம்பொருளே காத்தருளும்' என்று வேண்டுதலும், தேவாதி தேவராகிய சிவபெருமான் அவளுக்கருள்செய்ததை அறியீரோ? தேவர்க்காயினும் மனிதர்க்காயினும் ஒரு துன்பம் வந்தால் அடைந்து அதனை நீக்குதல் காத்தற்குரியாருக்குக் கடனும். அக்கடனை ஆராயின் அது அடைதற்கரிய முத்தியினுஞ் சிறந்ததன்றே? வேதங்களைத் திருடிக்கொண்டு சமுத்திரத்திலொளித்த சோமுகாசுரனை அழித்த விஷ்ணுவாகிய மீனைப்போல, சமுத்திரத்தை உள்ளங்கையிலடக்கி அதில் மறைந்த விருத்திராசுரனைக் காட்டித்தந்து நம்மிடத்தில் வைத்த மிகுந்தகிருபை உலகமெல்லாவற்றையும் விழுங்கியது. எம்பெருமானே, விந்தமலை நாரத முனிவருடைய சூழ்ச்சியினால் இப்பொழுது மேருமலையோடு பகைத்து, 'ஊழிக்காலத்திலுயருகின்ற திருக்கைலாசமலைக்கிணையாவேன்' என்று நினைத்ததுபோலும். அது ஆகாயமெல்லாம் மூடிஎழுந்து அண்டகடாகம் வரையும் மேலே உயருகின்றது. இதனைக் கிருபா நோக்களுஞ் செய்தருளீரோ? விந்தகிரி ஆகாயவழியைத் தடைசெய்தலால் எங்களுக்குஞ் செல்லுதற்கரிதாயது. நிலவுலகமுழுதும் பொழுதுமயங்கின. முனிவர் பெருமானே இக்குறைகளை நீக்குதற்கு எழுந்தருளி வரல்வேண்டும்" என்று துதித்து அகத்தியமுனிவரை நினைப்பாராயினர்கள்.

சூரியன் முதலாயினோர் இவ்வாறு நினைத்தலும், மேருமலைச்சாரலிலே தவஞ்செய்துகொண்டிருக்கின்ற அகத்தியமுனிவர் அதனை அறிந்து, மேலே யுயர்ந்த விந்தமலையின் வலியை அடக்கி, ஆகாயவழியை முன்போலாக்கித் தேவர்களுடைய குறையை நீக்கும்படி முயன்றார். முயன்று, கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரிய, கைகளஞ்சலிக்க, மனமுழ் என்பும் நெக்குருக, மயிர் பொடிப்ப, சிவபெருமானைப் புகழ்ந்து தியானித்தார். தியானிக்கும் பொழுது, பரமசிவன் இடபவாகனமேற்கொண்டு பூதர்கள் சூழத் தோன்றியருளினர். அகத்தியமுனிவர் அச்சத்தோடெழுந்து அவரைத் தரிசித்து, அடியற்ற மரம்போல வீழ்ந்து பலமுறை வணங்கி, சந்நிதானத்திலே நின்று துதித்தார். சிவபெருமான் "முனிவனே, நீ விரும்பியதென்னை? அதனை வேண்டுதி" என்று திருவாய்மலர்ந்தருளினர். அதுகேட்ட அகத்தியமுனிவர் "எம்பெருமானே, விந்தமலை மேருமலையோடு மாறுகொண்டு ஆகாயவழியை அடைந்தது. அதன்வலியை அடக்கும்படிஅடியேனுக்குச் சிறிதருள் செய்க" என்று பிரார்த்தித்தார். சிவபெருமான், "முனிவனே, உனக்கு வலிமையைத் தந்தருளினும். செருக்குற்ற விந்தத்தை அடக்கி, தெக்ஷிணதேயத்தையடைந்து, பொதியமலையிலிருப்பாய்" என்றருளிச்செய்தார். அகத்தியமுனிவர் அஞ்சலிசெய்து துதித்து, "தேவரீரை அருச்சனை செய்

தற்கும், தடாகங்களினுங் கிணறுகளினும் நீர் குறைவற்றிருத்தற்கும் தென்றிசைக்கு ஒரு தீர்த்தத்தைத் தந்தருளுக'' என்று வேண்டினர். அப் பொழுது சிவபெருமான், திருக்கைலாசமலையிலிருந்த ஏழு நதிகளுள்ளும் பரிசுத்தமாகிய காவேரிநதியை வரும்படி நினைத்தருள, அந்நதி அதனை அறிந்து அஞ்சி, மனவேகமும் பிற்படும்படி விரைந்து திருமுன்வந்து வணங்கியது. அதனைநோக்கி, ''பெண்ணே, நீ குற்றமில்லாத தென்றிசைக் குச் செல்லுகின்ற அகத்தியமுனிவனோடு போதல் வேண்டும்'' என்று பணித்தருளினர். ''எம்பெருமானே இம்முனிவர் ஐம்பொறிகளையும் அடக் கிய இயல்பினராயினும், ஓர் ஆடவர்; யான் ஒரு பெண்; ஆதலினால் இவருக்குப் பின்னே செல்லுதல் முறையோ! ஆராயின், இது முறையன்று'' என்று காவேரியாகிய பெண்ணைனவள் சொல்லினள். சிவபெருமான் அதனைக்கேட்டு, ''இம்முனிவன் மாறுபாடில்லாத மனத்தினன், நல்வினை தீவினைகளால்வரும் ஆக்கக்கேடுகளிலே சமபுத்திபண்ணும் மனத்தினை யுடையன், நம்முடைய அடியார்களுட் சிறந்தவன். இவன் பின்னே செல்வாய்'' என்று அருளிச்செய்தார். அந்நதி அதற்கிசைந்து, ''இன் றைக்கு அடியேன் இம்முனிவருக்குப் பின்னே செல்வேன். எம்பெருமானே இவரை அடியேன் நீங்குங்காலத்தைச் சொல்லியருளுக'' என்று வேண்ட, ''பெண்ணே, இது நன்று நன்று. இம்முனிவன் என்றைக்கு உன் பொருட் டாகப் பார்த்துக் கைகாட்டுவானோ அன்றைக்கு இவனை நீங்கிப் பூமியிற் சென்றிருப்பாய்'' என்று சிவபெருமான் சொல்லியருளினர். அத்திருவாக் குத் தன் செவிக்கமுதம்போலாக, காவேரியாறு அகத்தியமுனிவருக்குப் பின்னே செல்லுதற்கு உடன்படுதலும், உயிர்க்குயிராகிய சிவபெருமான் அகத்தியமுனிவரை நோக்கி, ''காவிரிநதியை உன் கமண்டலத்திலே ஏற் பாய்'' என்று பணித்தருள, அந்நதியானவள் அகத்தியமுனிவரை அடைந் தாள். சிவபெருமான் ''முனிவனே தக்ஷிணதேயத்திற்குச் செல்லுதி'' என்று விடைகொடுத்து, பூதகணங்களோடு மறைந்தருளினர், அகத்திய முனிவர் அவரிடத்து விடைபெற்றுக்கொண்டு தென்றிசையை நோக்கி நடந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## கிரவுஞ்சப்படலம்.

அகத்தியமுனிவர் மேருமலையினின்றும் நிலவுலகத்தின் வழியாகத் தெக்ஷிணதிசையை நோக்கிச் செல்லும்பொழுது, தாரகாசுரனுடைய மாயாபுரி என்னு நகரம் சமீபித்தது. அங்கே இருக்கின்ற கிரவுஞ்சன் என்னும் அசுரன் அவருடைய வரவைக்கண்டான். அவன் வானுலகத்தை நிலவுலகமாக்குவான்; நிலவுலகத்தை வானுலகமாக்குவான்; கடலை மலை யாக்குவான்; மலையைக் கடலாக்குவான். சூரியனைச் சந்திரனாக்குவான்; சந்திரனைச் சூரியனாக்குவான். அணுவை மேருவாக்குவான்; மேருவை அணு வாக்குவான். பூமியைக் கடலாக்குவான்; கடலைப் பூமியாக்குவான். வட வைத்தீயைக் கடலாக்குவான். ஒரு நாழிகையின் பதினாயிரத்திலொருபங் கினுள், தேவர்களுக்காயினும் முனிவர்களுக்காயினும் பல மாயங்களைச் செய்து, பலநாட் கழிந்தபின் அவர்களைக் கொல்வானென்றால், அவன்

வலிமைகளையெல்லாம் யாவரறிந்து சொல்லவல்லார். அந்தக் கிரவுஞ்சன் அகத்தியமுனிவர் வரும்வழியில், பல சிகரங்களையுடைய ஒரு மலையாய், தன்னிடத்துய்க்கும் வழியைக் காட்டி நின்றான். நிற்றலும், அகத்தியமுனிவர் கண்டு வியந்து, ''நல்லது! இம்மலையின் நடுவே இரண்தோர் வழியுண்டு இவ்வழியே செல்வேம்'' என்று அவ்வழியே போக, அது ஒரு கூப்பிடு தூரங் கழிந்தபின் இல்லையாக, வேறொருவழி வந்தது. அவ்வழியைக் கண்டு செல்லுதலும், அது பின்னர் இல்லையாக, திரும்பிச்சென்றார். செல்லும் பொழுது, முந்திய வழியையுங் காணாது மயங்கி, பிறிதொருவழியைக்கண்டு வருத்தத்தோடு சென்றார். அவ்வழியாற் செல்லும்பொழுது, அக்கினி நெருங்கிச்சூழ, சுழல்காற்று வீச, மழைபெய்ய, இடிஇடிக்க, இருட்படலஞ் சூழ, அளவிறந்த மாயங்களைச் கிரவுஞ்சன் இயற்றினான். அகத்தியமுனிவர் அதனைநோக்கி, ''இது கொடியராகிய அவுணர்களுடைய வஞ்சனை'' என்று ஞானத்தாலறிந்து, அக்கினிபோலக் கோபித்து, கையோடு கைதட்டிச் சிரித்து, ''நல்லது நல்லது! இவ்வசுரனு நமக்கிதனைச் செய்வான். இன், றைக்கே இவன் வலிமையைக் கெடுப்பேன்'' என்று அவன் மலைவடிவிலே திருக்கரத்தின்கணுள்ள தண்டினாற் குற்றிப் பூழைகளாக்கி, ''நல்லறிவில் லாத கொடிய அசுரனே, நீ உன் பழைய அசுரவடிவை நீங்கி மலைவடி வாய் இங்கே நின்று, அவுணர்களுக்கிருப்பிடமாய், முனிவர்களுக்குந் தேவர்களுக்குங் கொடுந்தொழிலைப் புரிதி. உன்மீது நமது கையின்கணுள்ள தண்டினாற்செய்த முழைஞ்சுகளெல்லாம் பற்பல மாயங்களுக் கிருப்பிட மாகுக. பின்னுளில் சிவகுமாரராகிய குமாரசுவாமியினுடைய வேற்படை யினால் நீ இறக்கக்கடவாய்'' என்று சபித்து, கமண்டலத்தினுள்ள நீரை அள்ளி மந்திரத்தோடு தெளித்து, அவன் மாயத்தைக் கெடுத்து, அவ் விடத்தை நீங்கி, தென்றிசையை நோக்கிச் சென்றார். அந்தக் கிரவுஞ்ச னென்னும் அவுணன் முந்தைநாள்வரையும் மலையின்வடிவாய் நின்றான். அவனைத் தேவரீரன்றி வேறியாவர் வதைபுரிய வல்லவர்.

திருச்சிற்றம்பலம்.

## விந்தமலைப்புகு படலம்.

அகத்தியமுனிவர் மேருமலையை நீங்கித் தேவகிரிச்சாரலையடைந்து, காசிப்பதியிற் சென்று, விசுவேசுரருடைய திருவடிகளை வணங்கித் துதித்து, அங்கு நின்று நீங்கி விந்தமலைச்சாரலையடைந்து அதனைப்பார்த்து, ''மிக வுயர்ந்து ஆகாயத்திற் புகுகின்ற விந்தமலையே கேள், யாம் பொதியமலையிற் போயிருக்கும்படி நினைத்து வந்தோம். அதற்கு நீ இப்பொழுது ஒரு சிறிது செல்லும் வழியைத் தருதி'' என்று கூறினார். அதுகேட்டவிந்தமலை, ''சூரிய சந்திரர்களும் செல்லுதற்கரிய தன்மையால் ஆகாயவழியை மறைத்து, நெடிய வடிவையுடைய விட்டுணுவைப்போல யான் நின்றேன். குறிய வடிவையுடைய உனக்கஞ்சி வழிகொடுப்பேனே! எனது தோற்றத்தை நீயறிகிலை. மீண்டுபோதி'' என்று சொல்லியது. அகத்தியமுனிவர் அதனைக் கேட்டுச் சிரித்து, சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து, முன் னுளில் இந்திரன் வேண்டக் கடலில் நீட்டிய திருக்கரத்தைச் சத்தியவுல

கம் வரையும் நீட்டி, தேவர்கள் அற்புதமடையும்படி விந்தமலையின் முடியின் மீது மிகவுயர்ந்த உள்ளங்கையை வைத்து, வலிபொருந்த ஊன்றினர். அது பூமியிற்ருழ்ந்து பாதலத்திற் புகுந்து, சேடனுடைய பதத்தை அடைந்தது. பின் அம்மலை அஞ்சி, அகத்தியமுனிவரை நோக்கி, ''வள்ளற் றன்மையையுடைய முனிவரே கேட்டருளுக. உம்மை வழிபாடு செய்யாது இகழ்ந்து மேன்மையை இழந்தேன். தமியேனுடைய குற்றத்தை மனத்துக் கொள்ளாது எழுங்காலத்தை அருளிச்செய்க'' என்று கூறியது. அகத்தியமுனிவர் விந்தமலையின் வசனத்தைக் கேட்டு, ''யான் சென்று பின்னர் இவ்வழியே மீண்டால் நீ எழுவாய்'' என்று நாரதமுனிவருடைய சூழ்ச்சிக்கிசைய நகையோடு கூறினர்.

விந்தம் பூமியினுள்ளே மறைதலும், அகத்தியமுனிவர் கையை முன்போலச் செய்து, தேவர்கள் பூமழைபொழியப் பொதியமலைக்குச் செல்லக் கருதினர். விந்தம் பூமியினுள் அழுந்தினமையால் ஆகாயம் வெளியிடமாக, சூரியன் முதலாயினேருடைய ஒளிகள் எங்கும் பரந்தன. சூரியன் முதலிய தேவர்கள் விரைந்து அகத்தியமுனிவரை அடைந்து, அஞ்சலித்துத் துதித்து, ''தேவரீர் செய்த உதவியை யார்செய்வார். உம்மால் ஆகாயவழியிற் செல்லப்பெற்றேம். இனி நீர் எம்பொருட்டாற் பொதியமலையிற் சென்றிருத்திர்'' என்ருர்கள். அகத்தியமுனிவர் நன்றென்று இசைந்து, தேவர்களை வானுலகிற் செல்லும்படி விடுத்து, தென்றிசையை நோக்கிச் சென்ருர். குடகதேசத்திலிருக்கின்ற வில்வலன் வாதாவி என்னும் இருவரும் தம் முயிர்நீங்கநின்றவர்கள் அவருடைய வரவைக்கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## வில்வலன்வாதாவிவதைப் படலம்.

**வி**ல்வலன் வாதாவி என்னும் இருவரும் அகத்தியமுனிவர் வருதலைக் கண்டு, ''இவன்போலும் அவுணர்களுடைய உயிரைக் கவர்ந்தவன். கடலைக் குடித்துமிழ்ந்தவன். இப்பொழுது தேவர்களுக்கருள்புரியும்படி அடைந்தான் போலும். அவனுக்கிப்பொழுதே உணவைக் கொடுத்து உடம்போடு உயிரையுங் கவர்வோம்'' என்ருர்கள். அவர்கள் இவைகளைத் தம்முள்ளே பேசிக்கொண்டபின்னர், தம்பியாகிய வாதாவி என்பவன், மலைச்சாரலிலே ஆட்டுக்கடாவின் வடிவத்தைக் கொண்டு சென்று, தழைகளையும் புதல்களையும் மேய்ந்தான். தமையனுகிய வில்வலன் சடையும், திரிபுண்டர மணிந்த நெற்றியும், சுந்தரவேடமணிந்த காதும், உருத்திராக்கவடமும், உடம்பின்மீது உத்தூளித்த விபூதியும், தண்டையேந்திய கையும், மரவுரியுடையுமாக முனிவருக்குரிய தவவேடத்தைத் தாங்கி, அகத்தியமுனிவரெதிரே விரைந்து சென்று, மும்முறை வணங்கி அஞ்சலித்துத் துதித்து, ''முனிவரே நீர் எழுந்தருளும்படி இந்நாள்காறும் அருந்தவஞ் செய்தேன். இன்றைக்கு முடிவுற வந்தீர். யானும் முனிவர் நிலைமையைப் பெற்றேன். பாவியேனுடைய இருக்கை இது. அது புனிதமாகும்படி எழுந்தருளுதிர்'' என்று கூறி, அவருடைய பாதங்களைப் பின்னும் பலமுறை வணங்கினன். வணங்குதலும் அகத்தியமுனிவர் அவனுடைய தீய எண்ணத்தை நினை

யாது, மகிழ்ச்சியுண்டாக, ''தவத்திலுன் மிக்கவனே எழுதி'' என்றருளிச் செய்து, ''நாற்பத்தெண்ணுயிர முனிவர்களிடத்தும், மற்றை முனிவர் களிடத்தும், உன் பெருந்தகைமைக் குணத்தில் ஓரணுவளவுதானும் இல்லை; இது மெய்யென்று தெளிதி. உன்னுடைய ஆச்சிரமம் யாது செல்வோம் வருக'' என்று கூறிய அகத்தியமுனிவரை வில்வலன் நோக்கி, ''இதுவே அடியேனுடைய குடிசை'' என்று அழைத்துக்கொண்டு சென்று, ஆசனத் திலிருத்தி, பாதங்களைப் பூசித்து, ''எம்பெருமானே நீர் யானும் என் குலத்தவர்களும் உய்யும்படி எழுந்தருளினீர்போலும். இன்றைக்கு அடி யேனுடைய குடிசையிலிருந்து வெந்த புற்கையையேனும் அமுதுசெய்து, அடியேனுக்குச் சேஷத்தைத் தந்தருளிச் செல்லுக'' என்றான்.

அகத்தியமுனிவர் வில்வலனுடைய வசனங்களைக் கேட்டு, ''அன்பின் மிக்கானே அது நன்று. உன்மாட்டு உன்னுற் றரத்தக்க உணவை உவந்து அமுது செய்து, பின்னர்ச் செல்வதே முறை'' என்று கூறினர். வில்வலன் வணங்கி, ''எம்பெருமானே சிரத்தையோடு திருவமுதைப் பாகம் பண்ணு வேன் சிறிது பொழுதிருக்குக'' என்று கூறி, அப்பொழுதே ஒரு தாடகத் தில் ஸ்நானஞ்செய்து மிகவும் பரிசுத்தனுய், மடைப்பள்ளியை அடைந்து, அதனைச் சாணத்தால் மெழுகி, கோலமிட்டு, சமையலுக்கு வேண்டிய உபகரணங்களைத் தேடி, அரிசியை நீரிலிட்டு மூன்றுதரங் களைந்து வேறொரு குழிசியிலிட்டு, தீக்கடைகோலிலே நெருப்பைக் கடைந்தெடுத்து அடுப் பினுள் மூட்டி, அகில் சந்தனமாகிய விறகுகளை மாட்டி, ஒரு செப்புப் பானையில் உலைப்பெய்தி அடுப்பின் மேல் வைத்து, அரிசியையிட்டுப் பத மறிந்து சமைத்துப் பக்கத்தில் வைத்தான். பின்னர் முதிரைத்தானியங் களாற் சமைக்கப்படும் அன்னங்களைச் சமைத்து, பாயசான்னம் குளான் னம் முதலிய விதம்விதமாகிய உணவுகளையெல்லாஞ் சமைத்து, புதுமணங் கமழுகின்ற புனிதமாகிய கறியையுஞ் சமைத்தான். ஆட்டுக்கடாவாய் நின்ற தம்பியாகிய வாதாவியை அகத்தியமுனிவருக்கு முன்னே வலிந்திழுத் துக்கொண்டு வந்து அரிவாளினுல் வெட்டி இருதுணியாக்கி, தோலையும் எலும்பையும் நீக்கி, வாளினுற் றுணிப்பனவற்றைத் துணித்தும், அரிவன வற்றை அரிந்தும், சுவையையுடைய உறுப்பிலான்களைக் குணிப்போடு அகழ்ந்தெடுத்துப் பல மிடாக்களிலிட்டு, மூன்றுதரம் கழுவி, அக்கறிக்கு வேண்டிய உப்பு முதலியவற்றையிட்டு, நெருப்பில்வைத்துச் சமைத்து, மிளகுபொடி முதலியவற்றைத் தூவி, நெய்விட்டுப் பொரிப்பனவற்றைப் பொரித்து, புகைபோகாவண்ணம் மூடிவைத்து, மிளகுபொடியையும் மற்றை வாசனையையுடைய பொடிகளையும் புதிதாக வறுத்த அரிசிப் பொடியையும் தூவி, நெய்யை வார்த்துப் பல காயங்களைக் கூட்டிச் சிற் சில பாகுகள் செய்து, பின்னும் பலமுறை வேண்டியபடியே பொரித்து மூடி, முதலிற் படைக்கும்படிநின்ற பருப்புக்கறியையும் புளிங்கறியையுஞ் சமைத்தான். அதன்பின் பலாப்பழம் முதலிய அளவிறந்த கனிகளைக் கீறி, சருக்கரையையுந் தேனையுங் கலந்து, வாசனைகளையும் மலர்களையுமிட்டு அளவிறந்தனவற்றைச்செய்து, சிவபூசைக்குரிய உபகரணங்களை விரைந்து சம்பாதித்து, ஐவகையுணவுகளையும் அறுசுவைபொருந்தச் சமைத்து, பின் னும் வேண்டியனவற்றை நொடிப் பொழுதிலமைத்து முனிவரர் திரு வமுது செய்தற்குக் காலாதிதமாயிற்றே என்கின்ற துக்கக்குறிப்பைப் புலப்

படுத்தும் காரியநிகழ்ச்சியோடு சென்று, அகத்தியமுனிவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி, ''எம்பெருமானே, தேவரீர் பெரும்பசி வருத்த மிகவும் வருந்தினீர்போலும்; திருமேனி வாடினீர். தமியேன் இங்கே உணவுகளையெல்லாங் குற்றமறச் சமைத்தேன்; திருவமுது செய்தருளும் படி எழுந்தருளுக'' என்று வேண்டினன். அகத்தியமுனிவர் அதற்குடன் பட்டுச் சென்றார். வில்வலன் அவரை மடைப்பள்ளிக்கு அழைத்துக் கொண்டு சென்று, ஆசனத்திலிருத்தி, முகமன்கூறி, கபடமாக அருச்சனை செய்து, அன்னம் பரிமாறத்தொடங்கி, பொன்வட்டிலைத் திருமுன்வைத்து, அதனைச்சூழ வரிசையாகக் கிண்ணங்களைவைத்து, நீரைவார்த்து அலம்பி, அன்னவகைகளெல்லாவற்றையும் படைத்து, நெய்யை வார்த்தான். பின்பு படைக்கவேண்டிய முறையை ஆராய்ந்து, பருப்புக்கறியையும் ஆட்டுக்கறியின் வகைகளையும் மதுரமுடைய பிறவற்றையும் படைத்து, அகத்திய முனிவருடைய திருக்கரத்தில் நீரைவார்த்தான். அவர் அதனை இருதரம் உணவைச் சூழ மந்திரத்தோடு சுற்றி, ஒருதரம் ஆசமித்து பலவாயுக்களுக்கு மூட்டி, பின்னுஞ் செய்யவேண்டியவைகளைத் தவறுது செய்து, மிகவிரும்பித் திருவமுது செய்வாராயினர். வில்வலனிடுகின்ற கறியின் வகைகளையும் பிறவற்றையும் முடியும்வரையும் உண்டு, பின்னர் அவன் நீரைக் கையிற் கொடுக்க நுகர்ந்தெழுந்து, பொடியைத் தடவிக் கைகழுவி, வாய்கொப்பளித்து, மூன்றுதரம் ஆசமனஞ் செய்து, தொடுமிடந் தொட்டு, பின்னுஞ் செய்யவேண்டியவைகளை ஓரிடத்திலிருந்து செய்து, அங்கே வீற்றிருந்தார்.

அப்பொழுது வில்வலன் பிரமதேவர் தந்த வரத்தை நினைத்து, அகத்திய முனிவருடைய உயிரைக் கவரும்படி எண்ணி, ''வாதாவியே என் தம்பியே விரைந்து வருவாய்'' என்று அழைத்தான். அழைத்தலும், வாதாவி அகத்தியமுனிவருடைய வயிற்றிலே ஆட்டுக்கடாவாயெழுந்து நின்று, ''அண்ணா வில்வலனே, முன்னே மதியாமற் கடலை யுண்டதுபோல என்னுடம்பையுமுண்ட கொடிய இம்முனிவனுடைய உயிரையும் வலியையும் கவர்ந்து குறிதாகிய வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவேன்'' என்று சிங்கம்போல முழங்கினன். அகத்தியமுனிவர், பதகர்கள் செய்த மாயத்தைத் தெரிந்து வெகுண்டு, ''உயிர்நீங்கிக் கறியாயுண்ணப்பட்ட வாதாவி நாம் உண்டவாறே அழிந்துபோகக் கடவன்'' என்று கூறி, ஒரு தரம் தமது திருவயிற்றைத் தடவினர். உடனே காட்டெரிமண்டிய சிறுபுதல்போல வாதாவி அவர் வயிற்றினுட் பொடியாயினன். அது கண்டு முன்னின்ற வில்வலன் தன்தம்பி இறந்தானென்றறிந்து, சுயவடிவங்கொண்டு வெகுண்டு, ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, அகத்தியமுனிவரைக் கொல்லும்படி நினைத்து வந்தான். அவர் தமது கரத்திலிருந்த தருப்பையொன்றைச் சிவப்படைக்கலமாகப் பாவித்துச் செலுத்த, அதனால் வில்வலனுமிறந்தான். அகத்தியமுனிவர் அவ்விடத்தை நீங்கி, கொங்கதேசத்தை நோக்கிச் சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

# காவிரிநீங்கு படலம்.

அகத்தியமுனிவர் கொங்கதேசத்திற் செல்லும்பொழுது, இறந்த வில்வலன் வாதாவி என்னு மிருவரும் தவத்தர்கள் போலவந்து, கரிய மேனியும் சுழலுகின்ற கண்களும் உடையர்களாய், அவருக்கு அணிமை யாகியும், அகன்று ர், கண்முன்வந்தும், மறைந்தும், அவரைச் சூழ்ந்தும், ஆரவாரஞ் செய்துகொண்டு அணுகினர்கள். அகத்தியமுனிவர் இதனைக் கண்டு, ''இவர்களை நாம் முன்னமே கொன்றுவிட்டோம், இவர்கள் துருவாசமுனிவருடைய புத்திரர்களாதலாற் பிரமகத்தியாய் நம்மைத் தொடர்ந்தார்கள். இந்தத்தோஷம் நீங்கும்படி சிவபெருமானுடைய திரு வடிகளை அருச்சனை செய்வோம்'' என்று நினைந்து, கொங்கதேசத்துக்குச் சமீபமாகிய ஓரிடத்திலே ''இது நல்ல வாசஸ்தானம்'' என்று வீற்றி ருந்து, சிவலிங்கந் தாபித்து, பூசைக்குவேண்டும் உபகரணங்களைத் தேடி, மெய்யன்போடு பலநாள் அருச்சனை செய்துகொண்டிருந்தார். அதனல் அவரைத் தொடர்ந்த பிரமகத்தி தோஷம் தொலைந்தது.

இது இப்படியிருக்க; அகத்தியமுனிவருடைய செயல் முழுதையும் நாரதமுனிவர் பார்த்துக்கொண்டு, சூரபன்மனுக்குப் பயந்து மூங்கில் வடி வாய்ச் சீர்காழியிலே சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்துகொண்டிருக் கும் இந்திரனிடத்தே போயினர். இந்திரன் அவரைக்கண்டு விழுந்து வணங்கினன். நாரதமுனிவர், அவனை எடுத்து நெஞ்சோடணைத்துத் தழுவி, ''க்ஷேமத்தோடிருக்கின்றனையா?'' என்று வினவ; இந்திரன் தொழுதகை யினனய், ''இந்நாள்வரையும் தேவரீருடைய திருவருளினல் இங்கே க்ஷேம மாயிருந்தேன். அடியேன் செய்யுஞ் சிவார்ச்சனைக்கு இப்பொழுது ஓரிடை யூறு உண்டாயிருக்கின்றது. அது யாதெனில், பூஞ்சோலை சிறிதும் நீரில் லாமையினல் வாடிற்று. பூசை செய்வதற்குப் பூவுமில்லை. இதுவே என் குறை'' என்று சொல்லி, ஓராசனத்தின்மீது நாரதமுனிவரை யிருத்தி, தானும் அவருடைய அநுமதிப்படி இருந்தான். இதைக்கேட்ட நாரத முனிவர், ''இந்திரனே, உன்னுடைய சுவர்க்கவுலகம் அரசியல் முதலிய வைகள் சிவபெருமானுடைய திருவருளினலே இனிமேல் உனக்கு வரப் போகின்றன. அவற்றைக் குறித்து வருந்தாதே. உன்னுடைய சிவார்ச் சனைக்கு ஓரூறுபாடுளது என்றுய். அதுவும் விரைந்து நீங்குங்காலம் வந்துவிட்டது. அதனைச் சொல்வேன் கேள். சிவபெருமான் அகத்திய முனிவரைப் பொதியமலையிலே போயிருக்கும்படி கட்டளையிட, அவர் போகும்வழியிலே விந்தமலையை அடக்கிப் பாதலத்தில் ஆழும்படிசெய்து, வில்வலன் வாதாவி என்னும் இருவரையும் வதைத்து, அதனல் வந்த பிரமகத்திதோஷம் நீங்கும்படி சிவபெருமானைப் பூசித்துக்கொண்டு கொங்கதேசத்திலிருக்கின்றர். நானும் பார்த்து வந்தேன். அவருடைய கமண்டலத்திலிருக்கின்ற காவேரியாற்றை இங்கே வரும்படிசெய்தால் உன் மனக்குறை தீரும்.'' என்றர். அப்பொழுது இந்திரன், ''அகத்திய முனிவர் கமண்டலத்தில் வைத்திருக்கின்ற நதியை இங்கே வரவழைப் பது எப்படி?'' என்று வினவினன். அவர், ''இந்திரனே, விநாயகக்கடவுளை மெய்யன்போடு பூசித்து வழிபாடு செய்து வேண்டிக்கொள்வாயாயின் அக் கடவுள் அந்நதியைக் கவிழ்த்துவிடுவார்'' என்று சொல்லினர். நாரத முனிவர் இந்த உபாயத்தைச் சொல்லுதலும், இந்திரன் கவலையொழிந்து,

தானிழந்த சுவர்க்கவுலக பாக்கியத்தைப் பெற்றவன்போன்று பேரானந் தத்தையடைந்து, ''தேவரீர் இந்த உபாயத்தை அருளிச்செய்தமையால் அடியேன் கவலையெல்லாம் நீங்கியுய்ந்தேன். இனி அகத்தியமுனிவரிடத்திலி ருக்கின்ற காவிரிநதி இங்கே வரும்படி விநாயகக்கடவுளுக்குப் பூசனைசெய் வேன்'' என்றான். ''அங்ஙனம் செய்க'' என்று கூறி நாரதமுனிவர் தமது பதத்தையடைந்தார்.

இந்திரன் விநாயகக்கடவுளுடைய திருவுருவத்தைத் தாபித்து, அருச் சனைசெய்து, தேங்காய் தினைமா தேன் முக்கனி வெல்லப்பாகு மோதகம் கிழங்கு பால் பலகாரவகைகள் ஆகிய இவற்றை நிவேதித்து, தோத்தி ரஞ்செய்து வழிபட்டான். அப்பொழுது அநந்தகோடிகணங்கள் சூழ விநா யகக்கடவுள் பிரசன்னராயினர். அவரைத் தரிசித்தமாத்திரத்தில் இந்தி ரன் அஞ்சினன். அவர் ''அஞ்சற்க'' என்று அருள்செய்ய, இந்திரன் அச்சம் நீங்கிப் பேருவகையடைந்து, ''அடியேன் உய்ந்தேன்'' என்று கூறி அவருடைய உபயபாதாரவிந்தங்களிலும் சிரசுபடும்படி வணங்கினன். விநாயகக்கடவுள் பேரருளோடு அவனை நோக்கி, ''இந்திரனே நின் பூசையை மகிழ்ந்து ஏற்றுக்கொண்டோம். உனக்கு வேண்டும் வரம் யாது? கேட்பாய்'' என்றார். இந்திரன் அதுகேட்டு, ''எம்பெருமானே சிவபெரு மானுக்குப் பூசனை செய்தற்காக ஈண்டு ஒரு நந்தனவனத்தை வைத்தேன். அது நீரின்மையால் அக்கினிபட்டாற்போலக் கரிந்துபோயது'' என்றான். என்னலும், விநாயகக்கடவுள் கேட்டு, ''இந்திரனே உனக்குச் சத்தபாத லங்களிலுமுள்ள கங்கைகளை அழைத்துத் தருதுமோ? தேவகங்கையை யும் பிற நதிகளையும் அழைத்துத் தருதுமோ? சமுத்திரங்களெல்லா வற்றையும் அழைத்துத் தருதுமோ? இவற்றுள் நீ விரும்பியதைச் சொல்வாய்'' என்றார். இந்திரன் அதுகேட்டு, எம்பெருமானே, இவைகள் ஒன்றையும் அடியேன் வேண்டேன். இவைகள் தேவரீருக்கு அரியனவல்ல. அடியேன் ஒன்று வேண்டிக்கொள்வேன். அது யாதென்னில்: அகத்திய முனிவர் இமயமலைச்சாரலினின்றும் புறப்பட்டு வரும்வழியிலே வில்வலன் வாதாவி என்னு மிருவரையுங் கொன்று, அப்பழி தீருமாறு சிவார்ச்சனை செய்துகொண்டு கொங்கதேசத்தில் இருக்கின்றார். அவருடைய கமண்ட லத்தின்கண்ணே காவேரியென்னும் தீர்த்தம் உளது. தேவரீர் போய் அதனை நிலத்திற் கவிழ்த்துவிட்டால் இந்த வனத்திலே வரும். அப்பொ ழுது அடியேனுடைய குறை தீரும். இதுவே அடியேன் வேண்டிக்கொண் டது'' என்றான். விநாயகக்கடவுள் இந்திரனை நோக்கி, ''அங்ஙனஞ்செய் வோம்'' என்று மகிழ்வோடருள்செய்து, அவனை அங்கே நிறுத்தி, சிவ பெருமானுடைய திருவருளினாலே, அகத்தியமுனிவருடைய கமண்டலத் திலே பொன்னியாறு வந்த தன்மையையும் அதற்கு அவர் வரங்கொடுத்த சூழ்ச்சியையும் நினைந்து, விரைந்து கொங்கதேசத்தையடைந்து, அகத்திய முனிவருடைய கமண்டலத்தின்மீது காகவடிவாய் வீற்றிருந்தார். அகத் தியமுனிவர் கண்டு, அவரை விநாயகக்கடவுளென்று அறியாமல், ''நம்மு டைய கமண்டலத்திலிருப்பது ஒரு காகமாகும்'' என்று எண்ணி, அதனை ஓட்டும்பொருட்டுக் கையையுயர்த்தி ஓச்சினர். உடனே காக வடிவாய்ச் சென்ற விநாயகக்கடவுள் குண்டிகையைக் கவிழ்த்து, காவிரி யாற்றை நோக்கி, ''நீ பூமியிற் செல்லக்கடவாய்'' என்று பணித்

தருளினர். பணித்தலும், காவேரியானது விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி ஆரவாரித்துக்கொண்டு விரைந்து நிலவுலகத்திலே பாய்ந்தது. விநாயகக்கடவுள் காகவடிவத்தை நீங்கி ஒரு பிராமணப் பிரமசாரி வடிவங்கொண்டு சென்றார். அத்தன்மையை அகத்தியமுனிவர் கண்டு, சர்வசங்காரஞ் செய்யத் தோன்றும் உருத்திரமூர்த்தியைப்போல உருத்து, ''இவன் தேவனே, அவுணனே, அரக்கனே, அன்றி வேறெவனே அறியேன்; நம்முடைய கமண்டலத்திலுள்ள நதியைச் சிந்திப்போக வல்லனே, எவர்களையும் சிறிதும் மதியாத அகந்தையுடையன் போலும்; இவன் யாவனே, இவன் வலிமையை விரைந்து அறிவேன்'' என்று சொல்லிக்கொண்டு, பிராமண வடிவங்கொண்டு செல்லுகின்ற விநாயகக்கடவுளை வேகத்தோடு தொடர, விநாயகக்கடவுள் அதுகண்டு அவருக்குப் பயந்தவர்போல ஓடினர். அகத்தியமுனிவர் அவருடைய சிரசிலே குட்டும்படி நினைந்து தம்முடைய இருகைகளையும் கவித்தமாக்கிப் பிடித்துக்கொண்டு, அவரைத் துரத்தினர்: அப்பொழுது விநாயகக்கடவுள், அகத்தியமுனிவரைக் கிட்டுவார், ஆகாயத்திற் கிளருவார், திசைகளிற் செல்லுவார், பூமியில் வருவார், அவருடைய கைக்கும் எட்டுவார், தூரியராவார். இப்படி அகத்தியமுனிவர் சீற்றத்தோடு உலையும்படி விநாயகக்கடவுள் அவர் கைகளுக்குத் தப்பித்திரிதலும், அவர் மிகவுந் தளர்ந்து, ''இவன் மாயம் சொல்லமுடியாததாயிருக்கின்றது. இனி நான் செய்வது என்னே'' என்று நினைந்தார். அப்பொழுது ஓடித்திரியும் விநாயகக்கடவுள் அதனைத் திருவுளங்கொண்டு இரங்கி, தமது திருமேனியை விரைந்து அவருக்குக் காட்டியருளினர். அகத்தியமுனிவர் தரிசித்து ''ஐயோ விநாயகக்கடவுளோ ஈண்டெழுந்தருளிவந்தார். அவரை நாயேனு முதிர்ச்சியோடு துரத்தினேன்.'' என்று கலங்கி ஏங்கி இரங்கி, முன்னே விநாயகக்கடவுளைக் குட்டும்படி கவித்த தம் கைகளிரண்டையுமெடுத்து, மலையிலே இடிவீழ்ந்தாற்போல வருத்தமுண்டாகத் தம்முடைய நெற்றியிலே குட்டினர். அதனைப் பிரணவசொரூபியாகிய விநாயகக்கடவுள் பேரருளோடு பார்த்து, ''அகத்தியனே உன் செயல் என்னை? சொல்லுதி'' என்றார். ''எம்பெருமானே சிறிதும் அறிவில்லாத தமியேன் தேவரீரைப் பிராமணப் பிள்ளையென்று நினைத்துத் தேவரீருடைய சிரசிலே குட்டும்படி எண்ணி வந்தேன். அந்தப் பாவத்துக்குப் பரிகாரத்தை முன்னமே அடியேன் செய்து கொள்ளுகின்றேன்'' என்று அகத்தியமுனிவர் விண்ணப்பஞ் செய்தார். விநாயகக்கடவுள் திருப்புன்முறுவல் செய்து, ''அகத்தியனே, உன் மனத்துயரைமெயாழிவாய்'' என்றருளிச்செய்ய, முனிவர் துயரம்நீங்கி விநாயகக்கடவுளுடைய திருவடிகளிலே பன்முறை வணங்கித் தோத்திரஞ்செய்து, ''தேவரீரை உள்ளபடி அறியாமையினால் தமியேன்செய்த பிழையைத் திருவுள்ளத்துக் கொள்ளாது அருள் செய்வீராக'' என்று பிரார்த்தித்தார்.

விநாயகக்கடவுள் அகத்தியமுனிவரை நோக்கி, ''அகத்தியனே, தேவேந்திரன் நமது பிதாவாகிய சிவபெருமானைப் பூசனை செய்தற்காக நிலவுலகத்திலே ஒரு நந்தனவனத்தை உண்டுபண்ணினன்; அது நீரின்மையாற் பொலிவிழந்து கரிந்துபோய்விட்டது; அதன்பொருட்டு நீரை விரும்பி நம்மை இந்நாள் வழிபட்டு இரந்தான். ஆதலினால், யாம் காகவடிவாய் உன் கமண்டலத்தில் விருப்பத்தோடு வந்திருந்து மெல்லக்கவிழ்த்து, அந்

நதியை நிலவுலகத்திற் போகும்படியும் கட்டளையிட்டோம். அதனை நீ பொருது செய்த தவற்றிற் சிறிதும் மனத்திற்கொள்ளோம். நீ செய்ததை நன்றென்று மகிழ்வோம். இங்கே நீ செய்தனவெல்லாவற்றையும் ஒரு விளையாட்டாகவே திருவுள்ளத்திற் கொண்டோம். உன்னிடத்துச் சினங்கொண்டோ மல்லோம், நீ நம் பிதாவாகியசிவபெருமானிடத்தே மெய்யன்புடையவன். ஆதலால் நமக்கும் அன்பனாவாய். நீ வேண்டிய வரங்களை விரைந்து கேட்பாய் தருவோம்'' என்றார். அகத்தியமுனிவர் விநாயகக்கடவுளை வணங்கி, ''தேவாதிதேவரே, தேவரீருடைய திருவருளைப் பெற்றமையால் அடியேன் உய்ந்தேன்'' என்று கூறி ''தேவரீடத்தும் தேவரீருடை பிதாவாகிய சிவபெருமானிடத்திலுமே எப்பொழுதும் அன்புடையனயிருக்கும் வரத்தைத் தந்தருளல்வேண்டும் இப்பொழுது தமியேன் செய்ததுபோலத் தேவரீருடைய சந்நிதானத்திலே முட்டியாகப்பிடித்த இருகைகளினலும் குட்டுபவர்களுடைய குறையைத் தீர்த்துத் தாய்போல வந்து அருள்செய்தல் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். விநாயகக்கடவுள், ''அவ்வரங்களைத் தந்தோம்'' என்று அருள்செய்து, ''முனிவனே இத்தன்மையனவேயன்றி இன்னும் நீ விரும்பிய வரங்களைக் கேட்பாய்'' என்று கூற, அகத்தியமுனிவர் அதுகேட்டு, ''சுவாமீ, அடியேனுடைய கமண்டலத்திலிருந்த நதியானது தேவரீர் கவிழ்த்தமையால் எள்ளவுமின்றிப் பூமியிலே கவிழ்ந்துவிட்டது. உயிர்க்குயிராகிய சிவபெருமான் தந்தருளிய மிகுந்த விசிட்டமுடைய நதி போய்விட்டால் அதுபோல அடியேனுக்கு வேறு நதியொன்றுண்டோ! ஆதலினல், குற்றமில்லாத ஒரு நல்ல தீர்த்தத்தைத் தேவரீர் தந்தருளல் வேண்டும்'' என்றார். விநாயகக்கடவுள் தாம் கவிழ்த்துவிடச் செல்லுகின்ற காவிரியாற்றிலே, தம்முடைய ஒரு திருக்கரத்தை நீட்டிச் சிறிது ஜலத்தை அள்ளி, அகத்தியமுனிவருடைய கமண்டலத்தில் விட்டார். விடுதலும், கமண்டலத்தை நிரப்பி ஒழிந்தநீர் முழுதும் ஆற்றுவெள்ளத்தோடு பூமியிற் பாய்ந்தது. அகத்தியமுனிவர் தமது கமண்டலநீர் குறையாதபடி முன்போலிருக்கக்கண்டு, ''இந்தப் பெரிய வெள்ளத்திலே சிறிது ஜலத்தைத் தமது திருக்கரத்தால் மொண்டு விடுத்துக் குண்டிகையை நிரப்பினர். இப்படி யார் செய்ய வல்லவர்! ஆயினும், பிரம விஷ்ணு முதலிய தேவர்கள் வழிபட அவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுகின்ற பிரணவசொரூபியாகிய விநாயகக்கடவுளுக்கு இதுபோலும் செயல்கள் அரியனவோ!'' என்று நினைத்து, அவரை வணங்கி, ''சிறியேன் இனி ஒரு குறையுமில்லேன். கவிழ்ந்த நதியையும் தேவரீர் முன்போலத் தந்தருளினீர். முழுமுதற்கடவுளே, சிறிதும் அன்பென்பதில்லாத சிறியேன் உய்ந்தேன். இன்னமும் தேவரீரை அடியேன் நினைக்கும்பொழுது எழுந்தருளிவந்து அருள்செய்க, அடியேனை மறவற்க.'' என்று வேண்டினர். விநாயகக்கடவுள் ''அவ்வாறே ஆகுக'' என்று அநுக்கிரகஞ்செய்து, தம்மைச் சூழ்ந்துவந்த படைகளோடு மறைந்தருளினர். அகத்தியமுனிவர் விம்மிதராய், விநாயகக்கடவுளுடைய திருக்கோலத்தைத் தியானித்துத் துதித்து, காவிரியாற்றைப் பார்த்து நகைத்து, வெகுண்டு, சிவபெருமானுடைய திருவருளைச் சிந்தித்துக்கொண்டு, தாமிருந்த கொங்கதேசத்தை விட்டுத் தென்றிசையை நோக்கி விரைந்து சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்குற்றாலப் படலம்.

அகத்தியமுனிவர் செல்லும் வழியிலே விஷ்ணுஸ்தலமாகிய திருக்குற்றாலமென்னும் நகரம் எதிர்ப்பட, சிவநாமங்களை யுச்சரித்துக்கொண்டு அந்நகரை அடைந்தார். அங்கே விஷ்ணுவாலயமொன்றுளது. அதனைத் திருமுற்றம் என்று எவரும் பாராட்டுவர். அளவிறந்த பிராமணர்களுளர். அவர்கள் உண்மைநூல்களைப் படித்தும் மயக்கத்தினால் தமது மதத்தையே மேற்கொண்டொழுகுபவர்களும், சிவனடியார்களைக் கண்டால் வழிப்பகைவர்களைக் கண்டாற்போல அழன்று பொங்கி இகழ்ந்து அவர்களுடைய முகத்தையும் பாராராய்த் துன்மார்க்கத்தையே மேற்கொண்டொழுகுபவர்களும், மறையவர் என்னும் பெயர்மாத்திரம் வகித்து அதற்குரிய ஒழுக்கமொன்றையும் புரியாதவர்களுமாயிருந்தார்கள்.

அகத்தியமுனிவர் அவர்கள் செயலை அறிந்து, அந்நகரின் வீதியிலே நடந்து விஷ்ணுவாலயத்தின் முன்னே வந்தார். வருதலும், வழியில்வந்த அவ்வாலயத்து வைணவர்கள் அவரை உற்றுப்பார்த்து, தம் பகைவர் வரக்கண்டு பதைபதைப்பவர்போலக் கோபங்கொண்டு பெருமூச்சுவிட்டு, ''தகாத கண்டிகையையும் நீற்றையும் அணிந்தாய். அதனால் நீ எல்லாரும் அறியப் பிச்சையேற்ற சிவனுக்கடியவன். இங்கே செல்லுதல் தகாது. கையிலே ஒருகோலையும் வைத்திருக்கின்றாய். நீ மிக எளியைபோலும். இங்கே நில்லாதே, எம்பெருமானுடைய கோயிலை அணுகாமல் நீங்கிவிடு'' என்றார்கள். அகத்தியமுனிவர் அதனைக்கேட்டுக் கோபஞ்செய்யாது நகைத்து, ''வேதநெறியை யிகழ்ந்த நீவிர் இங்கே யிருத்தலை நான் அறியேன். இதனை எவரேனும் எனக்குச் சொன்னாரில்லை, இது நல்லவழியென்று கருதிவந்தேன். உங்களுடைய தன்மையை அறிவேனாயின் நான் இவ்வூரிற் செல்லுதற்கும் நினையேன்; என்னை முனியற்க, நான் மீண்டுபோவேன்'' என்றார். வைணவர்கள் இதனைக் கேட்டுப் பின்னும் பொருது, ''நீ இந்த ஊரில் வருவதும் பாவம் திரும்பிப் போகக்கடவாய்'' என்றார்கள். அகத்தியமுனிவர் ''நீங்கள் உண்மையே சொன்னீர்கள். தொல்லோருடைய நூன்முறைமையும் இதுவே'' என்று கூறி, அவர்களை நீங்கி, ''திருநந்திதேவரும், பிரமதேவரும், துருவாசர் பிருகு கவுதமர் கண்ணுவர் அதீசி ஆகிய முனிவர்களும், இவர்களுக்கு இட்ட பெருஞ்சாபங்களெல்லாம் பொய்படுமோ'' என்று நினைத்துக்கொண்டு, மீண்டுபோயினார். போன அகத்தியமுனிவர் ''உயிர்க்குயிராகிய சிவபெருமானை இகழுகின்ற இந்த வைணவர்களுடைய அஞ்ஞானத்தினாலுண்டாகிய அகந்தையை முதலோடு களைவேன்'' என்றெண்ணி, தமக்குக் கைவந்த மாயையினாலே விஷ்ணுபத்தரைப்போலப் பாசுபதவடிவங்கொண்டு, வைணவர்களிருக்கின்ற இடத்திற்கு மீண்டுஞ் சென்றார். நெடுந்தூரத்திலே அவருடைய வரவைக்கண்ட வைணவர்கள் எதிர்கொண்டு சென்று துதித்து, பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அகத்தியமுனிவர் ''இவ்வணக்கம் விஷ்ணுமூர்த்திக்குப் பிரீதியாகுக'' என்று சொல்லி, அவர்களை நோக்கி, ''உங்களிடத்து விஷ்ணுபத்திக்கு முடிவில்லை என்று பலருஞ் சொன்னார்கள்; அதனைப்பார்க்க நினைத்து வந்தோம். பூமியிலே உங்களுக்கு நிகராவார் ஒருவருமில்லை; உங்களைத் தரிசித்தமையால் நாமும் அருமையாகிய மெய்யுணர்வைப் பெற்றோம்; நாம் முன்னம் அழ

கர் திருமலையினிடத்திருந்தோம்; இப்பொழுது அத்திகிரியிலிருக்கச் செல்லுகின்றோம்; நம்பெருமான் வீற்றிருக்குந் திருக்கோயில் இத்தலத்திலே உளதென்று சொன்னார்கள். அதனை வணங்கும் விருப்புடையோம்'' என்றார். வைஷ்ணவர்கள் ''அதோ தோன்றுகின்ற ஆலயம் விஷ்ணுவாலயம்'' என்று கைவிரலாற் சுட்டிக்காட்டினார்கள். காட்டுதலும், அகத்தியமுனிவர் அஞ்சலிசெய்து விரைந்து கோயிலையடைந்து, பிரதக்ஷிணஞ்செய்து விஷ்ணுவினுடைய பாதங்களை வணங்கித் துதித்து, தம்பக்கத்தில் நின்ற விஷ்ணுபத்தர்களை நோக்கி, ''இவரைப் பூசனைசெய்தற்கு என்மனம் விரும்புகின்றது. திருமஞ்சன முதலிய பூசைக்குவேண்டும் உபகரணங்களை விரைந்து கொண்டுவருகுதிர்'' என்றார். வைணவர்களிற் சிலர் நல்லதென்று சொல்லிக்கொண்டு போய், திருமஞ்சனம் புஷ்பம் சந்தனம் வஸ்திரம் முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து கொடுத்தார்கள்.

முனிவர் வைணவப்பிராமணர்களை நோக்கி, ''இவரை யாம் அருச்சனை செய்யும் விதிமுறையை நீங்கள் எல்லீரும் பாருங்கள்'' என்று கூறி, சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு விஷ்ணுவினுடைய திருமுடியின் மேலே தமது திருக்கரத்தை வைத்து, ''குறுகு குறுகு'' என்று இருத்தி, அக்கினியிற்பட்ட மெழுகுப்பாவைபோல அதனைக் குழையப்பண்ணி, ஒரு சிவலிங்காகாரமாகச் செய்து, தாபித்து, தாம் சுயவடிவங்கொண்டு, மந்திரங்களைச் சொல்லித் திருமஞ்சன முதலியவற்றைச் சுத்திசெய்து, சிவலிங்கப்பெருமானுக்குப் பூசனைசெய்தார். அதனைவைணவப் பிராமணர்கள் கண்டு கோபித்து, ''இவன் வடிவால் மிகக்குறியன். சிவனிடத்தில் மிகுந்த பக்தியுடையவன். முன்னம் இங்கே சிவவேடத்தோடு வந்தபொழுது 'நில்லாதே போய்விடு' என்று நாம் தூஷிக்கப்போய், இப்பொழுது பாகவதவடிவாய் வந்து நஞ்சமயத்தை அழித்தான். ஐயோ இவன் மாயத்தையுடையவன். இவனைப் பிடியுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு அவரை வளைந்துகொண்டார்கள். தம்மைப் பற்றும்படி சூழுகின்ற அந்தணர்களை அகத்தியமுனிவர் எரியெழப் பார்த்து, கோபாக்கினியை விடுத்தார். அது அவர்களைச் சூழ்ந்து பொறிகளைக் கக்கித்துரத்த, அவர்கள் பொருராய், அவ்விடத்தை நீங்கிப் பூமியெங்குஞ் சிதறி ஓடினார்கள். அந்த ஸ்தலம் அன்றுமுதற் சிவஸ்தலமாயிற்று. அகத்தியமுனிவர் அந்தச் சிவலிங்கப்பெருமானைப் பூசித்து வணங்கித் துதித்து விடைபெற்றுப் பொதியமலையையடைந்து சிவபெருமானுடைய திருவடிகளை நினைத்துத் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## இந்திரனருச்சனைப்படலம்.

அகத்தியமுனிவருடைய கமண்டலத்தை விநாயகக்கடவுள் காகவடிவாய்க் கவிழ்க்கச் சென்ற காவிரிநதி பல காததூரம் அகன்று, சந்தனமுதலிய விருக்ஷங்களையும் யானைத்தந்தம் முத்து பொன் முதலிய பொருள்களையும் வாரிக்கொண்டு, கிழக்குத்திசையை நோக்கி விரைந்து நடந்து, இந்திரனிருந்து நோற்கும் சீர்காழி வனத்திலே சோலையிற்

புகுந்தது. புகுதலும், இந்திரன் கண்டு கூத்தாடினன்; நகைத்தான்; சிவபெருமானுக்குச்செய்யும் பூசனை முடிந்ததென்று பாடினன்; சிவபெருமானுடைய திருவடிகளைத் துதித்தான்; கவலை நீங்கினன். தனக்குப் பெருந்துன்பங்களைச் செய்யுஞ் சூரபன்மனை வென்றவனைப்போல நீங்காத மதர்ப்பு மிகுந்தான். இவ்வாருக அவன் அடைந்த சந்தோஷத்தை யாரளவிடவல்லார்! இப்படி இந்திரன் மகிழும்படி காவேரிநதி பாய்தலும், மிகுந்த பசியால் வருந்தினீனர் அமிர்தமுண்டு குளிர்ந்தாற்போல, நந்தனவனங் குளிர்ச்சியோடு தழைத்தது. புன்னை, சண்பகம், பாதிரி, கோங்கு முதலிய விருஷங்களும், முல்லை மல்லிகை முதலாகிய கொடிகளும், தாமரை நீலோற்பல முதலியனவும் புஷ்பித்தன. இந்திரன் வைகறைக்காலத்திலே வண்டுகள் விழுமுன் பழுதில்லாத பூக்களைக் கொய்து, சைவாகமவிதிப்படி சிவபெருமானுக்குப் பூசனை செய்துகொண்டு சீர்காழியிலே யிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## தேவர்புலம்புறு படலம்.

இப்படி இந்திரன் சீர்காழியிலே சிவபெருமானைப் பூசித்துக்கொண்டிருக்குநாளிலே, சில தேவர்கள் சூரபன்மனுடைய ஏவல்களால் மெலிந்து, "இந்தச் சிறுமை எந்நாளில் எம்மைவிட்டு நீங்கும்" என்றிரங்கி, விண்ணுலகத்தை விட்டு மண்ணுலகத்திலே வந்து தமிழ்நாடாகிய தக்ஷிணதேசத்திலே சீர்காழிப்பதியிலே இந்திரனைக்கண்டு, அவன் கால்களில் விழுந்து வணங்கிப் புலம்புகின்றூர்கள்: "எங்கள் அரசரே, தருமமென்பது சிறிதுமின்றி எவர்களையும் வருத்துகின்ற அவுணர்கள் வசத்தில் அந்நாளிலே எங்களை விட்டு நீங்கினீர்; உமக்கிதுவும் நன்ரு? எங்களை ஆளும் நாயகர் நீரன்ரே? தாரகனுகிய யானையோடும் சிங்கமுகனுகிய சிங்கத்தோடும் பூவுலகை வாட்டுகின்ற சூரனுகிய புலியின் சிறையிலே தேவர்களென்கின்ற பசுக்களையெல்லாங் காட்டிக்கொடுத்து, மகாராஜாவே நீர் மறைந்ததென்ன? பன்றி முதலிய மிருகங்களின் இறைச்சியும் கள்ளும் மீனுஞ் சுமந்து அசுரர்க் கேவல் செய்து, மானங் குலைந்து, கற்ற வேதங்களையும் மறந்துவிட்டோம். காளகண்டராகிய சிவபெருமானிடத்தே வரம்பெற்ற சூரபன்மனுக்குச் செய்யாத ஏவல்களெல்லாஞ் செய்தோம்; நீதி நெறியையும் மானத்தையுமிழந்தோம்; ஐயா மிகவும் அலுத்தோம், அலுத்தோம். முன்னேயும் பலநாள் கயாசுரன் என்பவனுக்கு ஏவல்செய்துழன்ரோம்; சிவபெருமான் அதனை நீக்கியருளினர். இப்பொழுது திரும்பவும் சூரபன்மன் வருத்த உலைந்தோம்; இனி எங்களால் முடியாது. எந்நாளும் உம்மையே புகலிடமென்றிருந்த யாங்கள் அவுணர்களாலே துயருழந்து சோர, உம்முடைய உயிரைக் காத்துக்கொண்டு இங்கே ஒளித்திருந்தீர். எங்களரசரே, உமக்கிது தகுமோ? இது வசையன்ரே? சூரன் முதலிய கொடிய அசுரர்கள் இறக்கும்படிக்கும், ஆரும் பழிக்கத்திரிகின்ற அடியேங்களுடைய துன்பங்கள் திரும்படிக்கும், ஒரு செயலைச்செய்யும்" என்றிவ்வாறு பலவற்றைச் சொல்லித் தேவர்கள் புலம்பியிரங்குதலும், இந்திரன் கேட்டு, அவர்களுடைய துயரைக்கண்டு நெடுநேரம் யோசித்து அயர்ந்து பெருமூச்சுவிட்டு, அவர்களுக்குச் சொல்லு

கின்றன்; ''மாயவள் புதல்வனாகிய சூரபன்மன் செய்தற்கரிய பெரிய யாகத்தைச் செய்யத்தொடங்கின அன்றைக்கே எங்களுரிமை அழிந்தது; பொன்னுலகத்தையும் தோற்றோம் என்று, ஓயும் உணர்வோடு உங்களுக்கு நான் சொல்லவில்லையா? நான் சொன்னபடியே சூரன் தவஞ்செய்து, சிவ பெருமானிடத்திலே பெரிய வரங்களைப்பெற்று, விண்ணுலகத்தையுங் கைக் கொண்டு, நம்மையும் தனக்குக் குற்றேவல்களைச் செய்யும்படி அடிமை கொண்டான். நாம் அவனுக்கு மீன் சுமத்தன் முதலிய தாழ்வாகிய குற் றேவல்களைச் செய்தும் ''உலகில் இன்னும் வாழ்வோம்'' என்றே மதித் திருந்தோம். அந்தப் பதகன் அயிராணியைப் பிடித்தற்கும் என்னையும் அநீதியாகப் பிடித்துச் சிறையில் வைத்தற்கும் ஒரு தீய எண்ணங்கொண்டு, எங்களைப் பிடித்துக்கொண்டு வரும்படி சேனைகளைச் சுவர்க்கத்துக்கு அனுப் பினன். அதனை யூகத்தால் அறிந்து நானும் இந்த ஐராணியுமாக மறைந்து, சுவர்க்கவுலகத்தை விட்டோடினேம். சூரபன்மனுக்கு மீனையுந் தசையை யும் கள்ளையுஞ் சுமந்த பழியையன்றி, நானும் என் மனைவியும் அவன் கையில் அகப்படுதலாகிய இந்தப் பெரிய பழியையுஞ் சுமந்தால், எங்கள் மானம் முழுதும் அழியவருமே. அதுவன்றி அவன் சிறையும் நமக்கொரு காலமுந் தீராது சம்பவிக்குமே. பாவிகளாகிய அசுரர்களுடைய சிறையில் அகப்பட்டால், நாங்கள் உய்யவும் அவர்கள் இறக்கவும் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்தலும் முடியாதே. இவைகள் எல்லாவற்றையும் நான் யோசித்துக்கொண்டே, துயர்க்கடலில் ஆழும் உங்களையும் விட்டுப் பூவு லகில் வந்து, மறைந்து, சிவபெருமானை அருச்சித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தேன். தேவர்களே, நாம் அவுணர்கள் பணித்த ஏவல்களால் வருந்தி, பழைய மேன்மைகளைத் தோற்றுவிட்டோம். இனி நாமெல்லாம் திருக்கைலாசமலைக்குப் போய், பரமசிவனுக்குக் குறைகளை விண்ணப்பஞ் செய்து, நமது துயர்களை நீக்கிக்கொள்வோம் வாருங்கள்'' என்றன்.

என்றிப்படி இந்திரன் சொல்ல; தேவர்கள் கேட்டு, கார்காலத்தைக் கண்ட மயில்போலக் கூத்தாடி நகைத்து மகிழ்ந்து, ''மகாராஜாவே, எங்கள் அரசனும் நீரே. பிதாவும் நீரே. குருவும் நீரே. தெய்வமும் நீரே. செல்வமும் நீரே. எங்கள் தவமும் நீரே. அறிவும் நீரே. எங்களுக்கு வரும் இன்ப துன்பங்களும் நீரே. இப்படி நீர் இருந்தால் எமக்குவருங் குறைகளு முண்டோ? நீர் பார்த்துப் பணித்த பணிகளைச் செய்து, உம்மைத் துதித் துத் திரிதல் குடிகளாகிய எங்களுக்குக் கடனும். எங்களுக்கு வருந் துன் பங்களை நீக்கி, நல்வழியிற் செலுத்திக் காத்தல் அரசராகி உமக்குக் கட னும். முன்னளில் எங்களை வருத்திய அவுணர்களை வதைத்தீர். இப்பொ முதும் சூரன் முதலிய அவுணர்களை வதைசெய்தற்கு வழியை ஆராய்கின் றீர். உலகத்தை ஆளும் அரசர்களுக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் நீரன்றி வேறியார் துணையாவார். ஆதலினால் எங்கள் துயரத்தை நீக்கும் படி, சிவபெருமானிடத்தே திருக்கைலாசத்துக்கு எங்களை அழைத்துக் கொண்டு போவீராக'' என்றார்கள். இந்திரன் தேவர்களை நோக்கி, ''அப் படியேயாகுக'' என்று சொல்லி, அவர்களை அவ்விடத்திலிருக்கச்செய்து, ஒரு சூழ்ச்சியை மனத்திற்கொண்டு, தன் மனைவியாகிய இந்திராணியிருக் குமிடத்திற் போயினன்.

திருச்சிற்றம்பலம்.

# அயிராணிசோகப் படலம்.

இந்திரன் வருதலும், அயிராணி எதிர்கொண்டு அவனுடைய கால் களைப் பலதரம் வணங்கி யெழுந்து, ''என் பிராணநாயகரே, என்னை? இங்கே ஒரெண்ணத்துடன் வந்தீர்'' என்று விளவினாள். இந்திரன் அத னைக் கேட்டு, ''கொடிய சூரனிட்ட பணிகளால் வருந்தின தேவர்கள் சிலர் என்னிடத்து வந்து, தங்களுடைய துன்பங்களைச் சொல்லிப் புலம் பினர்கள். அவர்களுடைய துயரத்தைப் பரமசிவனுக்கு விண்ணப்பஞ் செய்தால் இந்நாளிலே அவுணர்களைச் சங்காரித்து, பழைய பொன்னுலக பாக்கியத்தை எங்களுக்குத் தந்தருளுவார் என்னுந் துணிவால் அத்தேவர் களோடு திருக்கைலாசத்துக்குப் போகின்றேன். என் பிராணநாயகியே, இதை உனக்குச் சொல்லவந்தேன்'' என்றான்.

இந்திரன் இப்படிச் சொல்லும்பொழுதில், அயிராணி பாணம் ஏறுண்ட மயில்போல அவன்முன் மயங்கி வீழ்ந்து, துயர்க்கடலில் ஆழ்ந்து, அறிவிழந்தாள். இந்திரன் அவளைக் கையாலெடுத்தணைத்து, தொடை மீதிருத்தி அறிவு வரும் வழிகளைச் செய்தான். அயிராணி சிறிதே மயக் கந்தெளிந்து, மிக்க துயரால் நொந்து நடுநடுங்கி, இந்திரனை நோக்கிச் சொல்லுகின்றாள்: ''என் பிராணநாயகரே, அடியேன் பொன்னுலகைவிட் டுப் பூமியில் வனத்தில் வந்திருந்தும், உம்முடைய திருவருளினால் மகிழ்ந் திருந்தேன். என்னை நீர் பிரிந்தால், பின் யார் துணையாவார்? யான் பிழைக்கும் வழியுமுண்டோ? சக்கரவாகப்பட்சிக்குச் சந்திரனும், வானம் பாடிக்கு மேகமும் துணையாதல்போல, என் சோகத்தை நீக்க நீரே துணை யாவீர். உம்மையொழிந்தால் வேறு துணையுண்டோ? அதுவன்றி, உம்மைப் பிரிந்து உயிர்தாங்க வல்லேனையினும், யானை ஒருத்தி, துணையொருவரு மில்லை. நீதியென்பது சிறிதுமில்லாத அவுணர்கள் என்றும வருவர். அவர்கள் கண்டால், தீங்கு வருமன்றே? சூரனாலே தேவருலகத்துச் செல்வத்தை யிழந்து, இந்த வனத்தில் வந்து, மறைந்து தவஞ்செய்து பாடுபடுவதும் பழிக்கஞ்சியன்றே? தீய அவுணர்கள் திரிவார்கள். அவர்கள் இழி தொழி லாளர். பல மாயங்களினும் வல்லவர். பாவத்தையன்றிப் புண்ணியமென் பதை அறியவுமாட்டார், பழிக்கஞ்சார். இது நீரும் அறியாததல்லவே. உம்முடைய புத்திரனாகிய சயந்தனும் இங்கில்லை, தேவர்களுமில்லை, ஐரா வத யானையுமில்லை, ஒரு பெண்களுமில்லை. பிராணநாயகரே, பெண்பாலா கிய நானொருத்தி தன்னந்தனியே இந்த வனத்திலிருக்க அஞ்சேனே? பல வாற்றானும் பாவத்தைச் செய்யும் அவுணர்கள் என்னைக்காணின், ஓடி வந்து பற்றி, அடாத காரியங்களைச் செய்வார்களானால், அதனால் வரும் பழியெல்லாம் உம்மிடத்தன்றி வேறிடத்துச் செல்லும். நாயகரே, நான் ஒரு துணிவைச் சொல்வேன். உம்மை விட்டு நான் இங்கே தனியே இரேன். பரமசிவன் வீற்றிருக்குந் திருக்கைலாசமலைக்கு உமது பின்னே வருகின்றேன், போதற்கு எழுந்திரும்'' என்றிப்படிச் சொல்லி ஐராணி பெருந்துயரோடு எழுந்து நின்றாள்.

இந்திரன் அதனைக்கண்டு, சிறிதுநேரம் யோசித்து, அன்பினோடு அவளைப் பார்த்து, ''பெண்ணே, உன்றிறம் நன்றாயிருக்கின்றது'' என்று

எடுத்துத் தழுவி, இதனைச் சொல்லுகின்றான்: ''வாராய் அயிராணியே, வருந்தாதே. நான் தேவர்களோடு திருக்கைலாசத்துக்குப் போனால், உன்னைக் குறிக்கொண்டு காப்பவர் ஒருவரும் இல்லாதவிடத்தன்றே நீ என்பின் வருவது. சிவபெருமானும் விஷ்ணுவும் கூடிப்பெற்ற ஐயனார் நமக்கு ஒப்பில்லாத காவலாயிருக்கின்றார். அவரும் இருக்க, பெண்ணே, நீ வருந்துதல் தகுதியாமோ? அந்த ஐயனரை 'வருக' என்று அன்போடுதுதித்துத் தியானித்தால், இங்கே வருவார். 'யான் திருக்கைலாசத்துக்குப் போய்த்திரும்பிவருமளவும் காத்துக்கொள்ளுதிர்' என்று உன்னை அவரிடத்து அடைக்கலமாகக் கொடுப்பேன். மிகுந்த வலியையுடைய அந்த ஐயனரே உன்னைக் காத்தருளுவர். நீ அஞ்சாது ஈண்டிருப்பாய்'' என்று இந்திரன் சொல்லித் தேற்றினன். தேற்றுதலும், ''அந்த ஐயனருடைய வரலாறு என்ன? சொல்லும்'' என்று ஐராணி வினவினள். அதற்கு இந்திரன் சொல்லுகின்றான்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

## மகாசாத்தாப் படலம்.

''முன்னொருகாலத்திலே விஷ்ணு முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய திருவருளின்றிப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது அதினின்றும் ஆலகாலவிஷம் எழுந்தது. அதுகண்டு, அவர்கள் அனைவரும் நடுநடுங்கி ஓட்டெடுத்து, திருக்கைலாசத்தையடைந்து, சிவபெருமானைத் தோத்திரஞ்செய்தார்கள். திருக்கைலாசபதியானவர் 'வருந்தற்க' என்று திருவாய்மலர்ந்து, அந்த விஷத்தை உண்டு, அவர்களைக் காத்து, விஷ்ணு முதலிய தேவர்களை நோக்கி, 'இன்னும் பாற்கடலைக் கடையுங்கள் அமுதம் எழும்' என்று கட்டளையிட்டார். விஷ்ணு முதலிய தேவர்கள் விநாயகக்கடவுளை வழிபாடு செய்யாமல், முன்போலப் பின்னும் பாற்கடலைக் கடைந்தார்கள். கடையும்பொழுது, விநாயகக்கடவுளை வழிபாடு செய்யாமையால், மந்தரமாகிய மத்துக்குலைந்து, பாதலத்திலாழ்ந்தது. அதனைக் கண்டு, 'இது விக்கினேசுர வழிபாடின்மையால் வந்தது' என்றறிந்து, அவரை ஆராதனை செய்ய, அவருடைய திருவருளினால் மந்தரமலை பாதலத்தினின்று வந்து முன்போல நிலைபெற்றது.

விஷ்ணு முதலிய தேவர்கள் மகிழ்ந்து, பின்னும் பாற்கடலைக் கடைந்தார்கள். கடைதலும் பொற்குடத்தோடு அமிர்தம் எழுந்தது. அங்கு நின்ற தேவர்களும் அசுரர்களும் தனித்தனியே' எங்களால் இதுவந்தது ஆதலால் எங்களுக்கே உரியது எங்களுக்கே யுரியது' என்று அதனை விரும்பி, கடல் போலார்த்து, தம்முண் மாறுபட்டுப் போர்செய்ய எண்ணினார்கள். அதனை விஷ்ணு கண்டு, ஓர் உபாயத்தால் அவர்கள் பிணக்கை ஒழிக்க நினைந்து, மூவுலகத்தாரும் விரும்பத்தக்க ஒரு மோகினிவடிவை எடுத்து நின்றார். அந்த மோகினியின் வடிவத்தைக் கண்ட அவுணர்கள் அமிர்தத்தைவிட்டு, காமப்பித்துக்கொண்டு அறிவழிந்து மயங்கி, தாருகாவனத்து ரிஷிகளினும் பார்க்க ஆசைமிக்கவராயினர். தேவர்களும் பெண்மையலுற்று நின்றார்கள். பெரியோர்களுக்கும் மண்ணாசை பொன்னாசைகளினும் பார்க்கப் பெண்ணாசை நீங்குதல் அரிதன்றே?

இப்படி இருதிறத்தாரும் மயங்கி நிற்கும்பொழுது, மோகினி வடிவங் கொண்ட விஷ்ணு அவர்களை நோக்கி, 'போரை ஒழிமின். ஈண்டுயானுளன், அமிர்தமுமுளது. இவ்விரண்டுள் நீர் விரும்பியதொன்றை விரைந்து கைக்கொண்மின்' என்றார். என்னலும், அவுணர்கள் மோகினியைநோக்கி, 'எங்களுக்கு நீயே வேண்டும்' என்றார்கள். தேவர்கள் 'அமுதமே எங்களுக்கு வேண்டும்' என்றார்கள். தேவர்கள் அமிர்தத்தைக் கொண்டு ஒருசாரிற் போயினர், அசுரர்கள் மோகினியைக்கொண்டு ஒருசாரிற் போயினர். தம்மைக் கொண்டு சென்ற அசுரர்களை மோகினிவடிவங்கொண்ட விஷ்ணு பார்த்து, 'சயனத்தில் என்னைத் தழுவவல்லான் ஒருவீரன் உளன், அவனை இன்னங் கண்டிலேன்' என்றார். அவுணர்கள் பலரும் இந்த வார்த்தையைக் கேட்டு, 'எனக்கு நிகராய் ஒருவருமில்லை, நானே எவரினும் வலியேன், வீரனும் யானே' என்று தனித்தனி சொல்லி, 'என்னையே சேர்வாய்' என்று வந்து கூடி, அதனற் பகைகொண்டு தம்முட் பொருது இறந்தார்கள். அவர்களுள்ளே இரண்டு அவுணர்கள் விஷ்ணு செய்த மாயத்தை அறிந்து, 'யாமும் இவர்களோடு வீணாய் இப்பொழுது ஏன் இறக்கின்றோம்' என்று அசுரர்களை நீங்கி, தேவவடிவங்கொண்டு அவர்களோடு கலந்து நின்றார்கள். அவுணர்கள் தம்மிற்பொருது இறக்கக்கண்ட விஷ்ணு மோகினிவடிவம் நீங்கிப் பழைய வடிவைக்கொண்டு, தேவர்குழுவுட் போய், அவர்களுக்கு அமிர்தத்தைப் பகிர்ந்து கொடுத்தார். கொடுக்கும் பொழுது, தம்வடிவை மறைத்துத் தேவர்களோடு கலந்துநின்ற அவுணர்கள் இருவரும், தங்களுக்கு விஷ்ணு கொடுத்த அமிர்தத்தை மந்திரத்தோடு உட்கொள்ளாது, தேவர்களுக்கு முந்திவிரைந்து உண்பாராயினர். இதனை அருகில் நின்ற சூரியசந்திரர்கள் கண்டு, 'இவர் கள்வராம், அமிர்தத்தை விரைந்துண்டார்கள்' என்று மனத்திற்கொண்டு, அவர்களிருவரையும் விஷ்ணுவுக்குக் கண்ணுற் காட்டினார்கள். விஷ்ணு அவர்களைக்கண்டு, 'இக்கள்வர்களா தேவர்களோடுடனிருந்து அமிர்தமுண்பார்'' என்று கோபித்து, கையிலிருந்த அகப்பையினல் அவ்வசுரர்களுடைய சிரசை வீழ்த்தி, தேவர்களுக்கு அமிர்தத்தை ஊட்டி விருந்து செய்தார். உண்ட அமிர்தங் கண்டத்தில் வருமுன் விஷ்ணு சிரசைத் துணித்தமையால் அந்த இரு அசுரர்களுடைய உடல்கள் அழிய, சிரங்கள் அழியாதிருந்தன. சிரசு அழியாத அவரிருவரையும் விஷ்ணு நோக்கி, 'அமிர்தத்தை யுண்டமையால் இவர்களிருவரும் விண்ணுலகில் நிற்கத்தக்கார்' என்று சிந்தித்து, 'சிவானுக்கிரகத்தினலே கிரகங்களாகுதிர்' என்று பணித்தார். அவர்களிருவரும் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து, இராகு கேது என்னும் பெயரையுடைய கரும்பாம்பும் செம்பாம்புமாகி, தம்மைக் காட்டிக் கொடுத்த சூரியசந்திரர்களை ஒவ்வொரு காலத்திலே மறைத்து சூரியன் முதலிய ஏழு கிரகங்களோடும் தாமும் ஒன்பதின்மர்களாக எண்ணப்பட்டிருந்தார்கள். இதுநிற்க.

விஷ்ணு தாம் முன்கொண்ட மோகினி வடிவத்தோடு திருப்பாற் கடலின் கரையிலிருந்தார். சிவபெருமான் தம்முடைய நால்வகைச் சத்திகளுள் விஷ்ணுவும் ஒரு சத்தியாயிருத்தலால் அதனை நம்மனோர்க்குத் தெரிவித்தருளும் பொருட்டு அழகிற் சிறந்த ஒரு திருவுருக்கொண்டு, அவ்விடத்தில் வந்தார். விஷ்ணு அவரைக் கண்டு ஆசைகொள்ள, சிவபெருமானும் உன்னைப் புணரும் வேட்கை நமக்கும் உண்டு, நீ கொண்ட வேடம்

இனிது என்றூர். மோகினி வடிவங்கொண்ட விஷ்ணு அதுகேட்டு, நாணி 'உலகமாதாவாகிய உமாதேவியார் தேவரீருடைய திருவுருவைக் காணி யாகக் காதலித்திருக்க, பெருந்தகைமையையுடைய தேவரீர் அடியேனை விரும்புவதென்னை? தேவரீர் ஜகத் காரணர் ஆதலால், முன்னொருகாலத் திலே பிரமாவினுடைய சிருட்டித்தொழில் கைகூடுமாறு உமாதேவியைச் சேரும்படிவந்துவேண்டினேம். தேவரீருக்கு அந்த உமையம்மையாரிடத்தும் ஆசையுண்டோ என்றூல் இல்லை. தேவரீர் மேனேக்கிய வீரியமுடையரன்றே? உமக்கு யாவரிடத்தும் விருப்பு வெறுப்பில்லை. அங்ஙனமாக, அடியேனைச் சேரும்படி வந்த விருப்பமும் உமக்கு உண்மையன்று. எம்பெருமானே, என்ன காரணத்தைக் கருதி வந்தீரோ அதனை யான் அறியேன். உம்மு டைய திருவிளையாடலை நீரேயன்றி வேறூர் அறியவல்லார்? ஆடவர் ஆட வரோடு சேரும் வழக்கமில்லை. ஆதலால் முதல்வரே நீர் என்னை வன் போடு சேர்தல் நீதியோ?' என்றூர். சிவபெருமான் அதுகேட்டு, 'விட்டு ணுவே நீயும் நமக்கொரு சத்தியாம். தாருகாவனத்துக்குச் சென்ற அந்த நாளிலும் நீ ஒரு பெண்ணுரு. பழைய பிரமன் இறந்துபோதலும் உன்னை வந்து நாம் சேர இந்தப் பிரமனை நீ தாயாய் உந்தியினுற் பெற் றுயல்லையோ? ஆகையால் நீயும் நமக்கொரு சத்தியாதல்பற்றி உன்னைச் சேரவந்தனம் வருவாய்' என்று கையாற் பிடிக்கும்படி வந்தார். விஷ்ணு நாணி ஓடினூர். சிவபெருமான் அவரைத் தொடர்ந்து பற்றி, நாவலந்தீவில் வடதிசையிற் சமுத்திரதீரத்தில் உள்ள சாலவிக்ஷ நிழலிற் கொண்டுபோய், அந்த மோகினி வடிவங்கொண்ட விஷ்ணு இன்புறக்கூடினூர்.

அவர்கள் இருவரும் சேருங்காலத்து, அவர்கள் கான்றுமிழ்ந்த நீர் கண்டகி என்னும் நதியாய்ப் பாய, அந்த நீரிலே வச்சிரதந்தி என்னும் கீடங்கள் உள்ளும் புறமும் சக்கரக்குறியோடு பொன்வண்ணமாய் முறை முறையாக வந்துதித்தன. அக்கீடங்கள் அந்நதியிலுள்ள மண்ணினுற் கூடுகளையுண்டாக்கி, சிலநாள் அக்கூட்டினுள் வசித்து, இறக்கும். அவை யிறந்தபின், அக்கூடுகள் சக்கரக்குறி யுடையனவாய்க் காணப்படும். அவற் றைக் கண்டகிநதி கரையில் ஒதுக்கிவிடும். அக்கூடுகளை உலகத்தார்கள் கொண்டு சென்று அவற்றின் உள்ளேயிருக்கின்ற பொன்னை எடுத்து அவற் றின் அடையாளங்களைப் பார்த்து, 'இன்ன இன்ன மூர்த்தம்' என்று தெரிந்துகொண்டு அவற்றை விஷ்ணுவாகப் பாவித்துப் பூசனை செய்வார் கள். அதன் பெயர் சாளக்கிராமம் என்பதாம்.

சாளக்கிராமத்தின் வரலாறு இப்படியிருக்க, சிவபெருமானும் விஷ்ணுவும் சேர்ந்தபொழுது, கரியமேனியும் சிவந்த சடையும் செண்டு தரித்த கையுமாய் உக்கிரத்தோடு ஒரு குமாரர் அவதரித்தார். உடனே சிவ பெருமான் விஷ்ணுவோடு கலத்தலை நீங்கி, அப்புதல்வருக்கு அரிகரபுத் திரன் என்னும் நாமத்தைச் சூட்டி, பல வரங்களையீந்து, உருத்திரர்களுள் ஒருவராக்கி, ஒரு புவனத்தைக் கொடுத்து, தேவர்களும் முனிவர்களும் வணங்கும் முதன்மையோடு அப்புவனத்திலிவரராக வைத்து, அப்புத்திரருக் கும் விஷ்ணுவுக்கும் விடைகொடுத்து மறைந்தருளினூர். ஐராணியே, சிவ பெருமானுடைய திருவருள் இத்துணைத்தென்று நம்மாற் புகழ்ந்துபேசத் தக்கதோ? விஷ்ணுவும் ஐயனூரும் சிவபெருமானை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தத்தம் பதங்களை அடைந்தனர். அரிகரபுத்திரர் சிவபெருமான்

தமக்குக் கொடுத்த பதத்திலே அளவிறந்த பூதகணங்களோடு இரவும் பகலும்காத்துக்கொண்டிருப்பார். அவர் மண்ணுலகத்தாரும் விண்ணுலகத் தாரும் பிரமாவும் பூசிக்கும் விசிட்டமுடையார். இதுமட்டோ, விஷ்ணு வாலும் புகழப்படத்தக்கவர். அவருக்கு நிகரானவர் ஒருவருமில்லை. என் பிராணநாயகியே, இப்படிப்பட்ட விசேஷமுடைய அரிகரபுத்திரரே உன்னை வந்து காத்துக்கொள்வர்.'' என்று இவ்வாறு ஐயனுருடைய வரலாற்றை யும் விசிட்டங்களையும் எடுத்துச் சொல்லுதலும், ஐராணி அங்கிருத்தற்கு உடன்பட்டாள்.

இந்திரன் அவள் உடன்பட்டதுகண்டு, அரிகரபுத்திரரை வரும்படி தியானித்தான். அவர் அதனை அறிந்து, பூதகணங்கள் சூழ வெள்ளையானை மேற்கொண்டு பூரண புட்கலை சமேதராய் அங்கே வந்தார். இந்திரன் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதித்து நின்றான். ஐயனார் அவனை நோக்கி, ''நீ விரும்பியது யாது சொல்லுதி'' என்றார். இந்திரன் ''எம்பெருமானே, சூரபன்மன் செய்கின்ற வருத்தத்தைச் சகிக்கமாட்டா மல் விண்ணுலகத்தை நீங்கி மனைவியாகிய இந்த ஐராணியோடு இங்கே வந்து, மூங்கிலாக மறைந்து, சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தேன். தேவர்கள் சூரபன்மன் செய்கின்ற துயரத்தைச் சகிக்க முடியாமல் அடியேனிடத்திலே வந்து அழுது முறையிட்டார்கள். இதனைச் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய்யுமாறு ஐராணியை இங்கே வைத்து அந்தத் தேவர்களோடு திருக்கைலாசமலைக்குப் போகின்றேன். இவள் 'அவுணர்கள் காணிற் பிடிப்பார்கள்' என்று இவ்வனத்திலே தனித்திருக்க அஞ்சுகின்றாள். இவளை உம்மிடத்து அடைக்கலமாக வைத்தேன். திருக் கைலாசமலைக்குத் தமியேன் போய் மீண்டு வரும்வரையும் இவளைக் காத் தருளும்'' என்று சொன்னான். ஐயனார் ''இந்திரனே உன் மனையாளை ஒரு தீங்குமுறுதவண்ணம் நாம் நன்றாய்க் காத்துக்கொள்வோம். தனியே இருக் கின்றாள் என்று நீ அஞ்சாதே. அவளை இங்கே வைத்துத் திருக்கைலாச மலைக்குச்செல்வாய்'' என்று அருளிச்செய்து, ஒரு சாரிற்போய், மகாகாளர் என்பவரை நோக்கி, ''இந்திரன் திருக்கைலாசமலைக்குப் போகின்றான்; அவன் மனைவியாகிய ஐராணி தனித்திருக்கின்றாள்; அவளை ஒரு தீங்கும் அணுகவிடாது நீ காத்துக்கொள்ளக்கடவாய்'' என்று கற்பித்தார்.

திருச்சிற்றம்பலம்.

## இந்திரன் கயிலைசெல் படலம்.

இந்திரன் அப்பொழுது இந்திராணியை நோக்கி ''ஐயனார் உன்னைக் காத்துக்கொள்வர். வருந்தாதே'' என்று தெளிவித்து, அவ்விடத்தில் அவளை இருக்கச்செய்து, தேவர்களை அழைத்துக்கொண்டு திருக்கைலாசமலைக்குப் போய், முதல்வாயிலைச் சேர்ந்து, நந்திதேவரை வணங்கித் துதித்து நின்றான். நிற்றலும், நந்திதேவர் ''இந்திரனே நீ வந்ததென்னை சொல்வாய்'' என்ன, வந்த சமாசாரத்தைச் சொல்லினான். நந்திதேவர் அதனைக் கேட்டு, ''சிவ பெருமான் சனகாதிமுனிவர் நால்வர்க்கும் ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருக்கின்றார்; இப்பொழுது அங்கே யாவரும் செல்லுதல் தகாது

என்றூர். அவ்வார்த்தை செவிப்புலப்பட்ட மாத்திரத்திலே இந்திரன் இறங்கின விஷம் மீண்டும் தலைக்கேறினாற்போலத் துயர்க்கடலில் ஆழ்ந் தான். தேவர்கள் தோணியோடு சமுத்திரத்திலாழ்ந்தவர்போலத் துன் புற்றூர்கள். இப்படித் தேவர்களோடு துன்புற்ற இந்திரன் திருநந்தி தேவரைத் தோத்திரஞ்செய்து, "எம்பெருமானே சூரபன்மன் அருந்தவஞ் செய்தமையால் அவனுக்கு அளவுபடாத ஆயுளையும் வலியையும் செல்வங் களையும் சிவபெருமான் கொடுத்தார். நாங்கள் தீவினைப்பயனை அனுபவிக் குங்காலம் வந்தமையால் அவனுக்கு ஏவல் செய்து துன்பத்தை அநுபவித் தோம். இதுவும் இறைவன் செயலே. மீன்சுமத்தலாதியாகிய இழித்தொழில் களைத் தந்து சூரபன்மன் நமக்குச் செய்யும் துன்பங்களை வந்து விண்ணப்பஞ் செய்வோம் என்றால், வேண்டுவார் வேண்டுவதே யீயும் கருணைக்கடலாகிய அவர் எங்கள் வேண்டுகோட்கிரங்கிச் சூரபன்மனை அவன் செல்வத்தோடும் அழித்தல் வேண்டும். எங்கள்பொருட்டு அங்ஙனம் செய்தால், சூரன் தவஞ்செய்தகாலத்து அவர் அவனுக்குக் கொடுத்தவரம் அழியும். அஃதழிந் தால், கடவுள் சொற்றப்பினர் என்பர்கள். இனி எங்கள் துயரத்தை நீக்காதொழியில், அருள்வள்ளல் என்னும் புகழுக்குக் குறைவுண்டாம்; வேதவாக்கும் குறைவுபடும். ஆதலினால், இவைகளெல்லாவற்றையும் நினைந்து, எங்களை ஆட்கொண்டருளும் பரிபாககாலத்தைநோக்கி, சனகாதி முனிவர்களுக்கு யோகநிலைகாட்டிச் சிவபெருமான் வீற்றிருந்தார்போலும். இந்தத் திருக்கைலாசபதியேயன்றி இவ்வாறுகிய தீங்கை நீக்குதற்கு ஒரு தேவருமில்லை. விஷ்ணு இத்துயரை நீக்க வல்லரோ என்றால், அவர் அந்த அசுரர்களோடு பொருது சக்கரப்படையையும் இழந்தார். ஆதலால், அவரால் முடியாது. 'சிவபெருமான் ஞானோபதேசம் செய்துகொண்டிருக் கின்றார்' என்று அடியேன் தேவர்களோடு பூவுலகத்துக்குப் போனால், அவுணர்கள் நம்மைப் பிடித்துச் சிறைசெய்வது நிச்சயம். ஆதலின், இனி நாம் பூவுலகத்துக்குப் போதலில்லை. சிவபெருமானைத் தரிசிக்குங்காலத்தை எதிர்நோக்கிக்கொண்டு தேவரீர் வீற்றிருக்கின்ற இந்த வாய்தலின் ஒரு புடை இருப்பேன்" என்று கூறினன். "உங்கள் துயரந்தீருமாறு நீங்கள் இங்கே இருங்கள்" என்று நந்திதேவர் அருள் புரிந்தார். அவ்வாய்தலின் ஒரு புடையிலே தேவர்களோடு இந்திரன் இருந்தான். இனி ஐராணி யுடைய செய்கையையும் பிறவற்றையும் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## அசமுகிப் படலம்.

இந்திரன் திருக்கைலாசமலைக்குப் போக, அவன் நினைத்தகருமம் இனிது முற்றுப்பெறும்படி, அரம்பையர் சூழச் சீர்காழிவனத்திலே தவஞ் செய்து கொண்டிருந்த இந்திராணியானவள், நெடுநாளாகத் தன் நாயகன் வரக்காணுமையால் நாளொருவண்ணமாய்த் தன்னுடம்பு அழகுகுறைய மெலிபவளாய், மனம் பதைபதைத்துக்கொண்டிருந்தாள். இவள் இப்படி யிருக்க, பொறுமை நாணம் கற்பு முதலிய நற்குணங்கள் ஒன்றும் இல்லாத

வளும், கொலை களவு பொய் முதலிய தீச்செயல்கள் எல்லாம் மிகப்பெற்ற வளும், மிகுந்த காமத்தினால் எவரையும் வலிந்து பிடித்தணைபவளும், மூவுலகங்களையும் ஒரு நாழிகையினுட் சுற்றிவரும் வேகம் உடையவளும், எத்தனைவலிமையுடையார் போர் செய்தாலும் தோல்வியடையாதவளும், சூரபன்மனுக்குத் தங்கையும் ஆகிய அசமுகி என்னுங் கொடியவள், அவனுடைய கிளைமுழுதையும் முடிவிக்கும் ஊழ்வினை போல்வாளாய், சூலப்படையை ஏந்தி, துன்முகியென்பாளோடு ஆலாகல விஷம்போல அங்கே வந்தாள்.

வந்த அசமுகி அந்தச் சோலையின் அழகைத் தூரத்தே கண்டு, ''ஆகா இந்தச்சோலை நன்றாயிருக்கின்றது! இது பூவுலகத்ததன்று, இந்திரன் வானுலகத்து நந்தனவனத்தை இங்கே கொண்டுவந்து வைத்தான். இதுதப்பாது. தோழியே நீ இதனைப்பார்'' என்று வியந்து, துன்முகிக்குக் காட்டி, கோலாகலத்தோடு அந்தச் சோலைக்கருகில் வந்து, அதிலுள்ள பூக்கள் முதலானவற்றை நோக்கி, ''இந்தச் சோலையினுள்ளே இருக்கின்றவர்களைப் பார்ப்பேன்'' என்று சொல்லிக்கொண்டு உள்ளே புகுந்தாள். அவளுடைய வரவை மகாகாளர் கண்டு ''இவள் அசமுகி என்னுங் கொடியவள். எதனைக் கண்டு இங்கே வருகின்றாள்? இவள் கருத்தென்னை? இவளுடைய செயல்களை மறைந்து நின்று பார்த்துக்கொண்டு இவள் செய்யுங் குற்றத்துக்குத் தக்க தண்டனையைச் செய்வேன்'' என்று மறைந்து நின்றார். அதனை அசமுகி காணுதலளாய், மிகுந்த களிப்புடன் துன்முகியும் உடன்வர, அந்தச்சோலை எங்குதிரிந்து பார்த்துக்கொண்டு வரும்பொழுது, இந்திராணி தவஞ்செய்துகொண்டிருத்தலைக் கண்டாள்.

கண்ட அசமுகி, ''அதோ இருக்கின்றவள்தான் ஐராணி. நம்மரசனுக்குப் பயந்து, பொன்னுலகத்தை விட்டு இங்கே வந்து தவஞ்செய்துகொண்டிருக்கின்றாள். நம்மரசன் இவள்மேல் ஆசைவைத்து, இவளை பிடித்துவரும்படி அநேக படைஞர்களை விண்ணுலகத்திற்கு ஏவினன். அவர்கள் அங்கே இவளைக் காணுமையினால் 'அங்கில்லை' என்று கூறச் சினந்து, பின்னும் இவர்களைத் தேடும்படி சிலரை விடுத்தான். அவர்கள் இவளை எங்குந் தேடிக் காணுமையால், திரிந்து வருந்தி யுழன்றார்கள். அவளை நான் இங்கே கண்டுகொண்டேன். 'இனி இவள்மேல்வைத்த ஆசையாற் கவலாதே' என்று கூறி என்றமையனுக்குக் கொடுக்கும்படி நானே இவளைக் கொண்டு செல்வேன். இங்கே இவளை இந்திரன் தனியேவைத்து விட்டுபோயினன். இவளுக்குத் துணையாக ஒரு தேவர்களுமில்லை. இதுவேசமயம். இந்திரன் வருதற்குமுன்பே இவளைக் கொண்டுபோவேன்'' என்று சூற்கொண்ட மேகம் நிலத்தில் வந்தாற்போலத் துன்முகியுடனே துண்ணென வந்தாள்.

அசமுகி கிட்டவருதலும் தவஞ்செய்துகொண்டிருந்த அயிராணி கண்டு, ''இவள் ஆரோ'' என்று பயந்து விரைந்தெழுந்தாள். எழுகின்ற அவளை அசமுகி ''நில்'' என்று எதிரேவந்து, ''அயிராணியே கேட்பாய்: உன்னுடைய யௌவனப்பருவமும் பேரழகும் வீணுகும்படி நீ தவஞ்செய்தல் முறையோ? இதனை விடுவாய். உலகத்தில் உனக்கு நிகராக யார் இருக்கின்றார்? இலக்குமியும் உனக்கு நிகராகாள். இப்படிப்பட்ட நீ பூமியிலே மறைந்திருந்து தவஞ்செய்கின்றாய். இஃதென்னை? சூரபன்மன் உன்

னைச் சேரும்படி தவஞ்செய்துகொண்டிருக்கின்றன். இந்நாள்வரையும் உன்னைச் சேர்ந்த இந்திரன் உனக்கு நாயகனதற்குத்தகுந்த அழகுடைய வனல்லன். 'தன்னழகு தனக்குத் தெரியாது' என்று உலகத்தார் சொல்வர். அதனற்றான் நீயும் உன் பேரழகை அறியாமல், பாகன்கையில் அகப்பட்ட யானைபோல இந்திரனோடு இருந்து வாழ்ந்தாய். இந்திரன் தவறுதலடையும் சுவர்க்கவுலகமொன்றை மாத்திரம் ஆள்பவன், என்றமையனுகிய சூரபன்மன் பல புவனங்களையும் பல அண்டங்களையும் ஒருங்கே அரசாள்வான்; அந்தச் சூரபன்மன் அழிவில்லாதவன், இவன் அஃதுள்ளவன்; அவன் பழியில்லாதவன், இவன் அஃதுள்ளவன்; அவன் என்றும் இன்பமுள்ளவன், இவன் மிக்க துன்பமுழந்தவன்; அவன் ஒருவரையும் வணங்கான், இவன் பலரையும்வணங்குவன். ஐராணியே, இப்படி எல்லாவற்றாலும் மேற்பட்ட சூரபன்மனோடு இருந்து வாழ நினைக்கின்றாயில்லை. அவனுடைய குற்றேவல்களைச் செய்து திரியும் இந்திரனை நாயகனைக் கொண்டு, இங்ஙனந் தவஞ்செய்து ஏன் மெலிகின்றாய்? உனக்கிது தகுமோ? உன்னுடைய அழகும் நெடுங்காலம் வீணே கழிந்தது; இது குணமாமோ? இனியாயினும் சிந்தித்துப்பார். தேவர்களும் அவுணர்களும் அரம்பையர்களும் உன் குற்றேவல்களைச்செய்ய மும்மூர்த்திகளாலும் புகழப்படும் சூரபன்மனுக்கு உன்னை மனைவியாகச் செய்வேன். நீ அவனோடு உலகத்தை ஆண்டு சுகித்திருப்பாய். அவன் தன் பட்ட ஸ்திரீயாகிய பதுமகோமளையையும் மற்றைப் பெண்களையும் வெறுத்து உன்மேல் அளவுகடந்த ஆசைவைப்பன். இது உண்மை. விரைந்து என்னோடுகூட வருவாய்'' என்று சொன்னள்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

# இந்திராணி மறுதலைப் படலம்.

அசமுகி சொல்லிய இத்தன்மையனவாகிய கொடுமொழிகளைக் கேட்டலும், இந்திராணி தன் செவித்துளையில் அக்கினியிற்காய்ச்சிய வேல் புகுந்தாற்போலப் பொருமி விம்மி, காதுகளைக் கைகளாற் பொத்தி, அக்கொடுமொழிகளைக் கேட்டமையினலே தனக்கு வரும் பாவத்திற்குப் பரிகாரத்தைச் சிந்தித்து, பதகியாகிய அசமுகி கேட்கும்படி சில வசனங்களைச் சொல்வாள்: ''ஏடி நீ இங்கே சொன்ன தீமொழிகளைக் கேட்டவர்கள் நரகத்தையடைவர். இவைகளைச் சொன்ன உனக்கு வரும் பாதகத்தை யார் இவ்வளவென்று வரையறுத்துச் சொல்வார். பிரமாவின் புத்திரராகிய காசிபமுனிவருடைய மகளாகிய நீ அநீதியான மொழிகளை அறிவீனர்போலப் பேசலாமோ? தாம் துன்புறுமையை விரும்பினோர் அதனைப் பிறர்மாட்டுச் செய்யாமையையும் தாம் துன்புறுதலை விரும்பினோர் அதனைப் பிறமாட்டுச் செய்தலையும் நீ அறியாயோ? நீ தருமம் தவம் கற்பு முதலிய ஒன்றையும் பாராமல் இழிந்தனவும் தீயனவுமாகிய இப்படிப்பட்ட சொற்களைச் சொல்லலாமோ? செல்வமும் வலிமையும் ஆயுளும் கீர்த்தியும் என்னும் இவைகளை இழக்கின்றவர்களுக்கே இத்தன்மையாகிய சிந்தனை வரும். இதற்குச் சாட்சி உன் குலத்தவர்களாகிய அவுணர்களே. நீ இவற்றைத் துணியாதே, வாழ்வாய். நான் இந்திரனையன்றி வேறொருவரையும் விரும்பேன். நீதில்லாத

கற்பினையுடையேன். என்னிடத்து வந்து இதனைச் சொன்னாய். இவ் வார்த்தை உன்கிளையை வாழச்செய்வதன்று. கொடுங்கோல் செலுத்தும் அர சரும் அவரைச்சார்ந்தாரும் நரகத்துக்கு ஆளாவர். இது நிச்சயம். எனது நாயகனுகிய இந்திரன் மீளுதலில்லாத துன்பக்கடலில் ஆழ்ந்தான் என்கின் றாய். அது நாளைக்கு உங்கள்பால் வாராதோ? இத்துன்பங்கள் எல்லாருக் கும் வரும். நீ நீதியில்லாதவளாதலால் மிகவும் புத்திமயங்கித் தீது பேசி னாய். இது உனக்கு அழகன்று. நீ உய்யும்படி இதை மறந்துவிடு. என்னை யார் வந்து சேரவல்லவர்? என் மனமானது என்னுயிரையும் ஐம்பொறிகளை யும் காத்துக்கொள்ளும். எனக்கு எங்கும் காவலுண்டு. நீ விரைந்துபோ வாய்'' என்றாள்.

அயிராணி இவ்வாறு சொல்லுதலும், அசமுகி அதரத்தைக் கடித்து, பெருமூச்சுவிட்டு, கையோடு கையைத்தட்டி ''நன்றுநன்று'' என்று நகைத் துச் சீறினாள். அறிவீனனும் பேய் பிடியுண்டானும் பித்தனுமாகிய ஒருவ னுக்குச் சொல்லிய உபதேசமொழி சிறிதும் பயன்படாதவாறுபோல அச முகிக்கு இந்திராணி கூறிய உறுதி மொழிகள் சிறிதும் பயன்படா வாயின. இங்ஙனம் கோபங்கொண்ட அசமுகி இந்திராணியை நோக்கி, ''உன்னைக் கிட்டி வந்து இனிய வார்த்தைகளைச் சொன்னேன். என்னை யொட்டிவந்தாயில்லை, மாறு சொல்கின்றாய், உன்னைக் கொன்று தின்று விடுவேன். என்றமையனுகிய சூரபன்மனுக்காக உன்னை விட்டேன். இது மெய்மை. விருப்பமெல்லாம் நிறைவேறும்படி என்றமையனிடம் வருவதை நீ நினைக்கின்றாயில்லை. பேரவிடாது பிடித்திழுத்துக்கொண்டு போகின் றேன். இது நிச்சயம். மும்மூர்த்திகளும் என்னோடு யுத்தஞ்செய்து தடுத் தாலும் விடமாட்டேன். இதோ உன்னைப் பிடித்திழுத்துக் கொண்டு செல்கின்றேன் பார்'' என்று சொல்லி, அவள் கையைப் பற்றி விரைந் திழுத்துக்கொண்டு போயினாள். ஐராணி யமபாசம் போன்ற அசமுகி யின் கைப்பட்டு, ஐயகோ வென்றரற்றி, அவசமாய், அறிவழிந்து, கண் ணீர் வடியத் தேம்பி, பூஞையின் வாயில் அகப்பட்ட புள்ளின் பெடை போலப் பேதுற்றுச் சோர்ந்து, சுற்றிலும் பார்த்து, ஒருவரையுங் காணு மையால், ''விஷ்ணுவும் சிவபெருமானும் சேர்ந்து பெற்ற ஐயனே ஓலம்; தேவர்களுக்கு முதல்வரே ஓலம்; செண்டை ஏந்திய கரத்தரே ஓலம்; எங்கள் கடவுளே ஓலம்; மெய்யர்க்கு மெய்யரே ஓலம்; வீரரே ஓலம்; வேதங்கள் உருத்திரர் என்று துதிக்கும் காரணக் கடவுளே ஓலம்; கடல் வண்ணராகிய எந்தையே ஓலம்; பூரணமணாளரே ஓலம்; புட்கலைமணு ளரே ஓலம்; வெள்ளையானையின்மேற் கொண்டுவரும் பெருமானேஓலம்'' என்று ஐயனரைக் குறித்து ஓலமிட்டாள்.

திருச்சிற்றம்பலம்.

## மகாகாளர் வருபடலம்.

இந்திராணி இவ்வாறு ஓலமிடுதலும், ஐயனுடைய படைத்தலைவரா கிய மகாகாளர் அதனைக் கேட்டு, ''இவள் எங்கள் ஐயனரைக் குறித்து

ஓலமிடுகின்றுள்போலும்'' என்று எண்ணி, வாட்படையைச் சுழற்றி இடி போலார்த்து உரப்பி, ''களவுசெய்து எங்கே போகின்றுய் நில்'' என்று கழறிக்கூறி, விரைந்து வந்து, இந்திராணியை நோக்கி, ''அம்மே வருந் தாதே, அசமுகி யென்னும் பதகிக்குச் சிறிதும் அஞ்சாதே. உன்னைத் தீண்டிய இவள் கையைத் துணித்து விரைவில் விடுவிப்பேன் காணுதி'' என்றூர். வீரமகாகாளருடைய வார்த்தையைக் கேட்டவளவில் இந்திராணி மழையின் வரவைக்கண்ட பயிர்போல உயிர்பெற்றூள். அசமுகி அவரைக் கண்டு, ''மும்மூர்த்திகளும் இந்திரனும் திக்குப்பாலகர்களும் என் முன் னில்லார். தேவர்குழுவினுள்ளாரெருவனே என்னை இகழ்ந்து சீறி வரு வான்'' என்று வெறித்துப் பார்த்து, இதழை அதுக்கிக் பற்களைக் கறித்து ஆர்த்து, ''இவளை முறித்துத் தின்று இவனுடைய வலியைத் தொலைப் பேன்'' என்று குறித்து நின்றூள். மகாகாளர் அவளை அணுகி, ''பெண்ணே, தவத்தைப் பூண்ட அயிராணியைத் தமியள் என்று வஞ்சனையாற் பற்றிச் செல்லுகின்றுய்; இவளை இப்போதே விட்டுப் போதியாயின் நீ செய்த இந்தப் பெரும் பிழையைப் பொறுப்பேன்; உன்னைக் கொல்லுகின்றதில்லை, அஞ் சற்க'' என்றூர். தன் கிளையை நாசஞ்செய்யும்படி வந்த அசமுகி அதனைக் கேட்டு உருத்து, ''இந்த வார்த்தையை என்முன் சொன்னுய்! 'வலிமை யோடு இவளைக் காப்பாற்று' என்று இப்பணியை உனக்குத் தந்தவர் யாவர்? அவர் பெயரைக் கேட்க விரும்பினேன் சொல்வாய்'' என்றூள். ''பூவுலக முதலாகிய மூவுலகங்களையும் காப்பவன்; மேகம்போலக் கரியவன்; வெள்ளை வாரணமுடைய ஐயன் இதனைப் பணித்தான். என்பெயர் வீரரில் வீரனை வீரமகாகாளன்'' என்று மகாகாளர் கூறினர்.

இந்த வார்த்தை இந்திரனுக்கும் ஐயனுருக்கும் பொதுமையாயிருத் தலின், தேவர்கள் அசுரர்களால் வருந்துதற்குரிய ஊழ் உண்மையால், ''இங்கு வந்தவன் இந்திரனுடைய ஏவலாள்'' என்று அசமுகி எண்ணி, கோபாவேசமுடையளாய், ''இந்திரனுடைய ஏவலாளனை என்னைத் தடை செய்யுமியல்பினன்! இவனைக் கொல்வேன்'' என்று கையிலுள்ள முத்தலைச் சூலத்தை எறிந்தாள். அது தன்முன் வருதலும், மகாகாளர் வாளினுல் அதனை அக்கினி சிந்தும்படி இருதுணியாக்கினர். அசமுகி கோபங்கொண்டு தன் பக்கத்தில் நிற்குந் துன்முகியின் கையிலிருந்த சூலத்தைக் கடிதில் வாங்கி, இந்திராணியை அவள் கையிற்கொடுத்து, கூற்றுவனும் அஞ்ச ஆர்த்து, வேகத்தோடு வீரமகாகாளர் மேல்வந்து, அவருடைய மார்பிலே குற்றும்படி சூலத்தைநீட்ட, மகாகாளர் அதனை வாட்படையினுல் இருதுணி யாம் படி வெட்டினர். அசமுகி பின்வாங்கிப்போய், ஒரு மலையைப்பறித்து, ''இப்பொழுதே முடிந்தாய்'' என்று அவர்மேல் எறிந்தாள். அவர் வாளி னுல் அதனையும் அழித்தார். அவ்வாட்படையும் ஒடிந்தது. அசமுகி அதனைப் பார்த்து இடிபோலார்த்து, ''வீரமாகாளனே, கேட்பாய்; பிரமா முதலிய தேவர்கள் எல்லாரும் வந்து ஆசீர்வதிக்க எல்லாவுலகங்களையும் ஆளுகின்ற சூரனுகிய நந்தமையனுடைய புயங்களோடு சேர்க்கும்படி இவளைக் கொண்டு போவேன். இதனை அறியாதவனுய்ப் பேதைமைத்தன்மையால் விலக்கினுய். நீ தடுத்தல் முறையன்று. என்றமையனுகிய தாரகாசுரனுடைய சேனைவீரர் வந்தால் உன்னைக் கொல்லுவர். அன்றி நானே உன்னை எடுத்துண்பேன்,

என்னுடைய பெரும்பசி தணியாதென்று விடுத்தேன். எளியனே வீணில் இறவாமற் பிழைத்துப்போ'' என்றுள். அசமுகியினுடைய வார்த்தைகளை மகாகாளர் கேட்டு, ''வாளினால் உன் சூலப்படையை வெட்டினேன். உன்னைப் பெண்ணென்று கொல்லாது நின்றேன். இதை உணர்ந்து விரைந்து இவனை விட்டு போய்விடு; உன்கையைப் போக்காதே'' என்றார். அசமுகி கேட்டு, ''இவன் வாளுமின்றி நின்றான், இவனோடு போர் செய்தல் முறையன்று. அன்றியும் இவனை வெல்லுதலரிது. இனி இந்திராணியைக் கொண்டு செல்லுதலே துணிபாம்'' என்று எண்ணித் தோழியாகிய துன்முகியினிடத்தே திரும்பிப்போய், அவள் கைப்பட்டிருந்த இந்திராணியைப் பற்றியிழுத்துக்கொண்டு வேகத்தோடு போயினாள்.

அதனை வீரமாகாளர் பார்த்து, ''செல்லுகின்றாய்போலும் நில்'' என்று அணுகி, அவளுடைய கூந்தலைக் கையாற் பிடித்து, உடைவாளை எடுத்து, அயிராணியைப் பிடித்த கையைத் துணித்து, அவளை விடுவித்து, அசமுகியைத் தமது காலினாலுதைத்துருட்டி, அது கண்டு அஞ்சி அயலில் நின்ற துன்முகியை நோக்கி, ''ஒரு குற்றமுமில்லாத அயிராணியை நீயுந் தீண்டினாய் போலும்'' என்று அவள் கையிலொன்றையும் துணித்து, அவளையும் உதைத்துருட்டினார். இருவரும் ஓ என்று பதைத்துப் புலம்பி நிலத்தில் வீழ்ந்தார்கள். இரத்தம் ஒழுகாநின்ற அவர்களுடைய கைகள், சூரபன்மனுடைய செல்வத்தைச் சுடுங் கொள்ளிகள்போலிருந்தன.

திருச்சிற்றம்பலம்.

## அசமுகி சோகப் படலம்.

அசமுகியானவள், இரத்தம் ஆறுபோலப் பெருகும்படி கைவெட்டுண்ணுதலும், வீழ்ந்து வருந்தி அரற்றினாள்; மருண்டாள்; பதைத்தாள்; கையை உதறி வெருண்டாள்; கையை நிலத்தில் அறைந்தாள்; உருண்டாள்; முதுகும் மார்புந் தேயப் புரண்டாள். ''அயிராணியை விரைந்து பிடித்து வாயிலிட்டுண்பேன்'' என்று விரைந்தெழுவாள்; போவாள்; வருவாள்; வீழ்வாள்; இருப்பாள்; சாய்வாள்; இரங்குவாள்; சோர்வாள்; இதழைக் கடிப்பாள்; அதிலிருந்து இரத்தம் வெளிப்படஅதனைக்குடிப்பாள்; கொப்பளிப்பாள்; நிலத்திலிருந்து துடிப்பாள்; எழுவாள்; தலையை அசைப்பாள்: இடியொலியுண்டாகும்படி பல்வரிசைகளைக் கறிப்பாள்; திகைப்பாள்; ''நம்முடைய இந்தச் செய்கை நன்று'' என்று நகைப்பாள்; விரலை மூக்கில் வைப்பாள்; புகைபோலப் பெருமூச்சு விடுவாள்; நிலத்தைக் காலாலுதைப்பாள்; வாயினால் நெருப்பைக் கக்குவாள்; உம்மென்று உரப்புவாள்; இடிகான்றுற்போல இம்மென்று சினப்பாள்; அக்கினி காலப் பார்ப்பாள்; மகாகாளரை வியப்பாள்; உடம்பு வியர்ப்பாள்;வெள்குவாள்; அறுந்த கையை மற்றைக் கையினால் விரைந்து எடுப்பாள்; அதனை நன்றாய்ப் பார்ப்பாள்; கண்களில் ஒற்றிக்கொள்வாள்; இரத்தத்தை உகுப்பாள்; ''என்னைப்போல இத்தன்மையாகிய துயரை யாவர் அனுபவித்தார்'' என்பாள்; ''இனி நான் இறப்பதே'' என்பாள்; ''வினையினேனுக்கு இஃதாவதோ'' என்பாள்; ஐயகோவென்பாள்; ''எவரும் புகழுகின்ற எங்கள்

அண்ணர்பாற் போவதெவ்வாறு'' என்று துன்புறுவாள்; ''பூமியில் வரும் கணவர்கள் கைதொடக் கூசுவார்களே'' என்பாள்; ''முடம் என்று பேசுவார்களே'' என்பாள்; தேவர்களும் பிறரும் என்னை ஏசுவார்களே'' என்பாள்; ''என்செய்வேன்'' என்பாள்; ''தேவர்களனைவருஞ் சிந்தித்து என் கரத்தைப் போக்கினர்கள், யான் இனி இறப்பேன், அதன்முன் அவர்களைக் கொன்று உலகெல்லாவற்றையும் முடிப்பேன்'' என்று எண்ணிச் சீறுவாள்; ''பூவுலகிலுள்ள உயிர்களெல்லாவற்றையும் அழிப்பேனே'' என்பாள்; ''வடவாமுகாக்கினியை அவிப்பேனே'' என்பாள்; ''காற்றைப் பிடிப்பேனே'' என்பாள்; ''மேருமலையை அசைத்து வீழ்த்துவேனே'' என்பாள்; ''சூற்கொண்ட மேகங்களைப் பிடித்து உண்பேனே'' என்பாள்; ''நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் கொறிப்பேனே'' என்பாள்; ''நான் கைவெட்டுப்பட்டு வருந்துவதை இந்தச் சூரியன் பார்த்து இகழுவான் போலும். தேரோடும் அவனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வருதற்கு எழுவேனே'' என்பாள்; ''சூரியனைக் கறித்துக்கொண்டு தேவர்களை அன்னமாக உண்டு எழுகடலையும் உறிஞ்சிக் கையைப் பெரும்புறக் கடலிற் கழுவித் திரும்புவேனே'' என்பாள்; ''சந்திரனை பிடித்துக் கவ்வி அவனுடலிலுள்ள அமுதைக் குடித்து எறிவேனே'' என்பாள்; ''இந்திரனுடைய யானையையும் மற்றைத் திக்குயானைகளையும் பாக்காகவும், ஐந்தருவை வெற்றிலையாகவும், அவற்றிலுள்ள வெண்மலர்களைச் சுண்ணமாகவுங் கொண்டு உண்பேனே'' என்பாள்; ''பாம்புகளை அடித்துத் தலைகீழாகத் தூக்குவேனை, பாதலவாசிகளை அவ்விடத்தினின்று நீக்குவேனை, பூமியைச் சுழற்றி மேலுள்ளனவற்றைக் கீழாக்குவேனை, அதனை விட்டுணு உண்டதுபோல உண்பேனே'' என்பாள்.

சூரன்றங்கையாகிய அசமுகி வீரவலிமையை யுடையவளாதலால், மயங்கிய மனத்தினளாயும், இறக்கத் துணிந்தவளாயும், பெருந்துயரத்தை யுடையளாயும், தொலையாத மானம் பூண்டவளாயும், இவ்வாறு சொல்லிக் கோபித்தாள். அப்பொழுது தோழியாகிய துன்முகி அதனைப்பார்த்து, தானும் அசுரகுலத்தினளாயினும், செய்யத்தகுவது இதுவென்றறியுமறிவு பொருந்திய மனத்தையுடையவளாதலினால் விரைந்து அசமுகிக்கு முன் வந்து, இவைகளைச் சொல்லுவாள்: ''தலைவியே நீ வீரமாகாளனைற் கையிழந்தாற் பூவுலகமென்செய்யும்! வானுலகமென்செய்யும்! தேவர்கள் என்ன செய்வர்! மலைகளென்செய்யும்! கடல்களென்செய்யும்! நீ உலகங்களையெல்லாம் அழிப்பது முறையோ! பூவுலகத்தையும் வானுலகத்தையும் திசைகளையும் உயிர்களையும் நீ ஒருங்கே அழிக்க நினைத்தாய். அப்படிச்செய்தால் யாரும் உன்னை என்னசெய்வர்! அவைகளெல்லாவற்றையும் ஒருங்கேயுடைய சூரனே உன்னைக் கோபிப்பான். அவனுடைய செல்வங்களே அழியும். ஆதலால் இவைகள் ஒன்றையும் நீ எண்ணுதே. சூரபன்மனிடத்தில் நாம் போய் இவைகளெல்லாவற்றையுஞ் சொன்னால், அவன் தேவர் கினைகளையெல்லாம் அழிப்பான். நாம் அவனிடத்திற் போதலே துணிவு'' என்றாள். பின்னும், ''ஞானமில்லாத தக்கன் செய்த யாகத்தில் தேவர்களிலும் அரம்பையர்களிலும் அசுரர்களிலும் தத்தமுடம்பில் ஊனமில்லாதவர்களில்லை. பரமபதியாகிய சிவபெருமானுக்

கும் அவரைச் சரண்புகுந்த மெய்யன்பர்களுக்குமன்றி மற்றை எவர்களுக்கும் எவைகளுக்கும் வினைவயத்தால் வருந்துயர் விட்டு நீங்குமோ! ஆதலால் தலைவியே நீ புலம்பாதே, வெள்கிச் சோகமுங் கொள்ளாதே. துன்பமும் இன்பமும் அறியாமையும் உயிர்களுக்கெல்லாம் முறை முறையாய் வரும். சூரனிடத்திற் போவோம் எழுவாய்'' என்று சொல்லித்தேற்றினள்.

இப்படிச் சொல்லித் துன்முகி தேற்றுதலும், அசமுகி நன்றென்று எண்ணி எழுந்து, துன்பமென்பது சிறிதுமில்லாமல் நின்ற அயிராணியைப் பார்த்து, ''அண்டங்களெல்லாவற்றினும் சூரபன்மனுடைய சக்கரமும் ஆணையுஞ்செல்லும். ஆதலால் அண்டத்தின் இப்புறத்திலொழிப்பினும் அதுவன்றி அப்புறத்திலொளிப்பினும் உமக்குப் பிழைப்பதரிது. மறைந்த இந்திரனையும், இவ்வனத்திலிருக்கும் உன்னையும் ஒழிந்த தேவர்களையும் இறைப்பொழுதிற் பிடித்திழுத்துக் கொண்டுபோய் நம்மரசனைக்கொண்டு என்னகரிற் சிறைப்படுத்துவேன். இது நிச்சயம். உங்களைச் சிறைசெய்யேனுயின், உலகமுழுதையும் ஆளுகின்ற சூரபன்மனென்னும் அரசனுடைய தங்கையல்லள் யான். என் மார்பில் எழுந்தனவுந் தனங்களல்ல, யான் பேடியே. இதனைத் தெரிந்து கொள்'' என்று சொல்லி அவ்விடத்தை விட்டுப் போயினள்.

திருச்சிற்றம்பலம்.

## இந்திரன் மீட்சிப் படலம்.

அங்கே சிறிதுதூரத்தில் நின்ற வீரமாகாளர் மகிழ்வோடு நிற்கும் இந்திராணியைப் பார்த்து, ''அன்னையே, உன்னுளத்தில் அசுரர்களுக்கு அஞ்சாதே. உன் நாயகன் வருமளவும் உன்னைக் காப்பேன். இங்கேயிருப்பாய்'' என்று சொல்லிப்போயினர். இந்திராணி, காட்டில் ஒரு பிணமான் தன்னினத்தைப் பிரிந்திருந்தாற் போன்றவளாய், ''தன்னுடைய நாயகன் நினைத்துச்சென்ற கருமம் நிறைவேறும்படி தவஞ்செய்துகொண்டு அவ்வனத்திலிருந்தாள். இதனை நாரதமுனிவர் அறிந்து, விரைந்து திருக்கைலாசமலையையடைந்து, சிவபெருமானைத் தெரிசித்தற்குக் காலம் பெருமையால் தேவர்களோடு அங்கேயிருந்த இந்திரனிடத்துப்போய், பூவுலகத்திருந்த அயிராணிக்குச் சம்பவித்தவைகளையெல்லாஞ் சொன்னார்.

இந்திரன் அதனைக்கேட்டுக் கவற்சியடைந்து, தேறிக் கோபித்து, பின்பு சிவபெருமானுடைய திருவருளை எண்ணி, அக்கடவுள் விதித்த விதியைச் சிர்தூக்கிப்பார்த்து, தன்னை நொந்து வருந்தி, சிவபெருமானுடைய புகழைத் துதித்து, தேவர்களோடு எழுந்துவந்து நந்திதேவருடைய பாதங்களை வணங்கி, ''அடியேங்கள் இங்கே நமது கடவுளுடைய சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு நெடுங்காலம் இருந்தோம். அக்கடவுள் முன்னே தமியேங்கள் செய்த தீவினைப்பகுதியைத் திருவுளஞ் செய்து எங்களுக்குத் திருவருள் புரிகின்றிலர். எங்களைக் காத்தற்பொருட்டுக் கறுத்த காளகண்டராகிய சிவபெருமான் எமக்கருள்செய்யும்படி மெய்மையாகிய தவத்தைச் செய்யுமாறு பூவுலகுக்குப் போவோம். அனுமதி தந்தருளும்'' என்று

பிரார்த்தித்தான். நந்திதேவர் நன்றென்று விடைகொடுத்தருளினர். இந்திரன் தேவர்களோடு சீர்காழியை அடைந்து, அங்குநின்ற வீரமாகாளரைக் கண்டு தழுவி, பல உபசாரவார்த்தைகளைச் சொல்லி, ''ஐய நீ போதி'' என்று அவரை ஐயனுரிடத்திற்கு அனுப்பி, அயிராணி தவஞ்செய்துகொண்டிருக்குமிடத்தை யடைந்து, அவளுடைய துன்பத்தை மாற்றி, அசமுகி கூறிய சபதமொழிகளை அவ்வயிராணி சொல்லக் கேட்டு, ''இனிச் செய்வதென்னை?'' என்று வருந்தி, ஆலோசித்து, ''செய்வது இது'' என்று துணிந்து, அயிராணியை யுடன்கொண்டு தன்பக்கத்திலுள்ள தேவர்களோடு மேருமலையிற்போய் மறைந்திருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::::

# சூரனரசிருக்கைப் படலம்.

இஃதிவ்வாறுக, வீரமாகாளராற் கைவெட்டுண்ட அசமுகி துன்முகியோடு சென்று மகேந்திரபுரியை அடைந்தாள். அவள் போங்காலத்திற் சூரபன்மன் அரசிருந்த சிறைப்பைச் சொல்வாம்:—

தன்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் கீர்த்தியும் இரண்டுருக்கொண்டு இருபக்களினும் வந்துநின்றுற்போல அவுணர்கள் சந்திரனையொத்த இரண்டு வெண்கொற்றக்குடைகளை நிழற்றவும், உவர்சமுத்திரங்களும் பாற்சமுத்திரங்களும் இரண்டுருவாய் எழுந்து மேலோங்கியிருந்தாற்போலத் தாரகனும் சிங்கமுகனும் இருபக்கங்களினுமிருக்கவும், அக்கினிதேவர்களைப் போல அமைச்சர்களும் புதல்வர்களும் இருக்கவும், எல்லாவண்டங்களினுமுள்ள வாயுக்களும் வருணர்களும் பலவுருவாய்ச் செவ்விதாகக்கூடிவேண்டுமளவிற் பனித்திவலைகளைச் சிதறித் தன்னடிகளை வணங்கி எழுந்திறம்போல அவுணர்கள் இரட்டும் சாமரங்கள் விளங்கவும், மூவுலகிலும் சிறந்தனவாயுள்ள வெற்றிலை பாக்குச் சுண்ணம் முதலியனவற்றைப் பொதிந்த தட்டையும் சில சூரியர்களைக் கொண்டு செய்தாற்போன்ற கெண்டிகையும் பொன்னிலத்திற் செம்மணிகளைச் சொரிந்தாற்போலத் தம்பலமுமிமும் பொற்களாசியையும் பல ஏவலாளர்கள் ஏந்திநிற்கவும், நானவிதமாகிய நிறங்களையுடைய அவுணத்தலைவர்கள் முன்னும் பின்னும் இருமருங்கும் கிளையோடு நெருங்கவும், இளந்தென்றலானது முகில்களின் வயிற்றில் அளாவிச் சந்திரனுடைய மெய்யிற்படிந்து பாற்கடலிலும் பெரும்புறக் கடலிலும் தோய்ந்து நிலவுலகத்தினும் வானுலகத்தினுமுள்ள சோலைகடோறும் உலாவி ஒலியின்றி மெல்லமெல்ல அசைந்து தண்ணென்று தன்முன் வரவும், மேகங்கள் சந்திரனிடத்துள்ள அமுதத்திவலைகளைப் பருகிக் கற்பகப் பூஞ்சோலையிலே அவற்றைக் கவிழ்த்துப் பலநாட்கழிந்தபின் கவர்ந்து கண்ணுக்குப் புலப்படாத பனித்துளிகள் போலும் திவலைகளை ஒழிவின்றிச் சிதறவும், உருப்பசி அரம்பை திலோத்தமை முதலிய தெய்வப்பெண்களும் இயக்கர் இராக்கதர் அசுரர் வித்தியாதரர் முதலாகிய பற்பல சாதிப் பெண்களும் வெவ்வேறுய் நடிக்கவும், பிரமதேவர் காலையிலே பஞ்சாங்கஞ் சொல்லுதற்குச் சமயம்பெருமல் ஒருபுடையில் வந்தொதுங்கி

யிருக்கவும், அவருடைய குமரர்கள் நீர்க்குடங்களில் நாழிகையைப்பார்த்து நாழிகைப்பறையை ஒலித்து ஒவ்வொருநாழிகையையும் முறை முறை சென்று சொல்லவும், புலிக்கூட்டங்களுக்கிடையே சில மான்கள் சென்றூற் போல அவுணர்களுடைய நெருக்கில் உடம்பு வேர்த்துப் பதைக்கவரும் முனிவர்கள் வெவ்வேறுய் ஆசிகளைச் சொல்லி அவைகள் ஆரவாரத்திஞற் கேட்டிலவென்று அஞ்சித் தாம் நிற்குமிடத்தைப் பார்க்கும் பொழுதெல் லாம் ''வாழ்க'' என்று ஆசிர்வதித்துக் கைகளை விரித்து நிற்கவும், மேரு மலையில் மறைந்த இந்திரனை யொழிந்த தேவர்கள் யாவரும் அவுணர்கள் நெருக்கித்தள்ள வாயிலால் உள்ளே போயும் எதிரே வருவோர் வாயில் வரையுந் தள்ள அஞ்சி மீண்டும் பின்னும் அவ்வாருய் வாயிற்காவலாளர் கள் அடிக்க உளங்குலைந்து சபையைக் காணப்பெருது அங்குமிங்குந் திரி யவும், சட்டையிட்டவர்களும் கோபத்தையே யுடையவர்களும் பொற் பிரம்பை ஏந்தினவர்களும் இடியொலிபோலும் உரப்புதலையுடையவர் களும் பிறைபோலும் வக்கிரதந்தங்களையுடையவர்களும் பல தேவர்களு டைய மகுடங்கள் சிதறும்படி அடிப்பவர்களும் ஆகிய அவுணர்கள் வரு வோர்களைத் தகுதிக்கேற்றபடி துரத்தியும் சூழ நிறுத்தியும் இருத்தியும் அவரவர் பெயர்களைச் சொல்லித் தன்னைத்துதிக்கவும், பல பெண்கள் வாழ்த்தி ஆலத்திகளைச் சுற்றவும், கின்னரரும் சித்தரும் இயக்கரும் கந் தருவரும் பலவகைப் பண்களோடும் மங்கலங்களைப் பாடவும், தான் யாகஞ்செய்ததையும் சிவபெருமானிடத்தில் வரம்பெற்று மீண்டதையும் திக்குவிசயஞ் செய்ததையும் ஆயிரத்தெட்டண்டங்களையும் பார்த்துவந்து ஐசுவரியத்தோடு அரசியற்றியதையும் பல அசுரர்கள் பக்கத்தில் நின்று முறை முறை புகழவும், திக்குப்பாலகர்களும் பிறரும் கைதொழுது தூவும் மலர்களையும் சுக்கிரனும் முனிவர்களும் மந்திரத்தோடு ஆசீர்வதித்துத் தூவும் மலர்களையும் அக்ஷதைகளையும் வாயுவானவன் பெருக்கிக்கொண்டு திரியவும், ஆடுவோர்களுக்கும் பாடுவோர்களுக்கும் தன்மேல் அன்பு செய் யுந் தலைவர்களுக்கும் கிரீடம் அத்தகடகம் உபவீதம் முதலிய அணிகளையும் வஸ்திரங்களையும் நிதிக்குவைகளையும் பிறவற்றையும் அவர்கள் கைநீட்டுந் தோறும் தன்கை கொடுக்கவும், தேவர்களும் முனிவர்களும் பிறரும் குற் றஞ்செய்யாத தங்களிடத்தன்றி அது செய்த வேறு யாவரிடத்தாவது தான் ஒரு குற்றத்தை நோக்கி வெகுண்டால் அதுதம்மாட்டு நிகழ்ந்தது என்று தம்முயிரை இழப்பவர்போல வெருவிப் புகழ்ந்தும் அவரை மகிழ்ந் தால் அது தம்மாட்டு நிகழ்ந்தது என்று அவ்வுயிர்பிழைத்தார் போன்றும் நிற்கவும்;

ஆயிரகோடி பொற்றூண்களையும் பல நிறம்பொருந்திய ஓவியங்களை யும் கண்ணாடிகளையும் விதானங்களையுமுடையதும், சாமரங்களும் புடை வைக்குஞ்சங்களும் இடையிடையே தொங்கப்பெற்றதும், ஆயிரம்யோசனை பரப்புடையதுமாகிய அத்தாணிமண்டபத்திலே, பொன்னுற்செய்து இரத் தினங்கள் அழுந்திய சிங்காசனத்தின்மீது, கூற்றுவர்களெல்லாரும் ஒரே வடிவெடுத்து ஆயிரகோடி யண்டங்களினுமுள்ள வடவாமுகாக்கினிகளை யும் விடங்களையும் உண்டு அழியாத இயல்பைப் பொருந்திப் பலவித ஆபரணங்களைத் தாங்கி அவணர்கள் துதிக்க வானளவும் நிமிர்ந்திருந்தாற் போல, ராசாதிராசனுகிய சூரபன்மன் வீற்றிருந்தான்.

# அசமுகி நகர்காண் படலம்.

இவ்வாறுகச் சூரபன்மன் அரசிருக்கும்போது, அசமுகியானவள் துன்முகியோடு மகேந்திரபுரிக் கணிமையாகப் போய், மூதேவி தன் தோழியோடும் அந்நகரின் செல்வமுழுதும் கெடுதற்காக வந்தாற்போல அதன் கீழ்த்திசை வாயிலைக் கிட்டினாள். மானமில்லாத அசமுகி மகேந்திரபுரி இனி அடையும் துன்பத்துக்கு ஒருவழி காட்டுதல்போல வெட்டுண்ட கை இரத்தஞ்சொரியச் செல்லும்பொழுது, அந்நகரத்திலுள்ள அவுணர்கள் யாவரும் அதனைப் பார்த்து, ''இழிந்த இச்செயலை யார் செய்தார்?'' என்று மிகுந்த துன்பங்கொண்டு அக்கினிபோலக் கோபித்தார்கள்.

சூதாடிக்கொண்டிருந்தவர் சிலர் அதனைவிட்டு விரைந்து வந்தார்கள். ஆட்டுக்கடாக்களைச் சண்டைமூட்டி அதனைப் பார்த்துக்கொண்டு நின்றவர் சிலர் அதனைவிட்டு வந்தார்கள். யானைகள் ஒன்றின்கோடு ஒன்றினுடம்பின் மூழ்குதலால் இரத்தம் வடியும்படி சண்டை செய்வதைப் பார்ப்பவர் சிலர் அதனை விட்டு வந்தார்கள். கோழிச்சேவல்கள் தம்முயிர்போம் வரையும் வலிமையோடு செய்யும் சண்டையைப் பார்த்து நின்றவர் சிலர் அதனை விட்டு வந்தார்கள். ஆகாயத்திலே பறக்கும்படி படங்களை விட்டுக் கொண்டு நின்ற சிலர் அவற்றைக் கைவிட்டு வந்தார்கள். கசரததுரகங்களையும் விமானங்களையும் வண்டிகளையும் ஆசையோடு செலுத்தப் பழகுகின்ற சிலர் ''தகாத இஃதொன்று நமக்கு வருவது என்னை?'' என்று அவற்றை விட்டு வந்தார்கள். தூண்களை நிறுத்தியும் வேறு அறிகுறிகளை எழுதியும் அவைகள் இலக்காக எறிவனவும் எய்வனவுமாகிய ஆயுதங்களைப் பயிலுகின்ற சிலர் அவற்றை விடுத்துவந்தார்கள். ஆசிரியர்களெதிரே வாள்வித்தை முதலியவற்றைக் கழகங்களிலே பயில்வோர் சிலர் துன்பம் மிகுந்து வந்தார்கள். யாழ் வீணை முதலியவற்றினிசைகளையும் குழலிசையையும் கண்டப்பாடலையும் கேட்பவர் சிலர் அவற்றைவிட்டு வந்தார்கள். சிலர் நாடகர்களும் கழாய்க் கூத்தர்களும் பிறரும் விளையாடுகின்ற கோட்டிகளை நீங்கி, நிலைகுலையுமுடம்பினராய் வந்தார்கள். வேண்டும் பொருள் களெல்லாவற்றையும் சம்பாதித்துக்கொண்டு கிளைஞர்களோடு பலபல விவாகச்சடங்குகளைச் செய்கின்றவர்கள் சிலர் அவைகளை விட்டு வந்தார்கள். மற்றொரு பெண்ணினிடத்தே ஆசைவைத்து முன்பு கூடியிருந்த ஒரு பெண்ணினிடத்திற் செல்ல, அவள் ஊடி மிகுந்த கோபத்தோடு சண்டை செய்தலும், ''இது நல்ல சமயம்'' என்று எண்ணி அவளை நீங்கி வந்தார்கள் சிலர். மாடங்களினிடையிடையே உள்ள தாமரைத்தடாகங்களிலும் நந்தனவனங்களிலும் பெண்களோடு விளையாடுதலை வெறுத்து அடைந்தார்கள் சிலர். காய்ந்த மீனைக் கறித்துக்கொண்டு கள்ளைக்குடித்து அதனாற் புலன்கள் ஊசல்போலத் திரியத் தள்ளாடித்தள்ளாடித் தளர்ந்து வந்தார்கள் சிலர்.

அசமுகியைக்கண்ட இவர்களும் இவர்களையொத்த வேறு பலரும் நீர்வடியும் கண்களையும், பதைக்கும் மனத்தையும், நெருப்பையும் புகையையுங் காலும் உயிர்ப்பையும் உடையர்களாய்க் கோபத்தோடு பின்வருமாறு சொல்லுகின்றார்கள் :— ''அந்தகனும் கயாசுரனும் புலிமுகனும் முதலாகிய அசுரர்களையும், தம்மை மதியாத திரிபுரத்தசுரர் முதலிய வலியோர்களையும், முப்புரங்களையும் அழித்து, எல்லாவற்றையும் இனிமேற் சங்கரிக்க

நின்ற அக்கினிசொரூபராகிய சிவபெருமானுடைய செயலோ இது?'' என் பார். ''மகிடாசுரன், நிசும்பன், சும்பன், இரத்தநேத்திரன், இரத்தபீசன், முன்னோர் காலத்திலே பூமியை ஆண்ட தாரகன், பண்டன் முதலாயி னோருடைய உயிரைக் கவர்ந்த துர்க்கையின் செயலோ இது?'' என்பார். ''விட்டுணுவும் சிவபெருமானும் கூடிப்பெற்ற உருத்திரராகிய ஐயனு ருடைய செய்கையேபோலும் இது?'' என்பார். ''நங்குலத்தோனுகிய கயமுகன் என்னும் மேலோனுடைய மார்பிற் புகுந்து உயிரைப் பருகிய தந்தத்தையுடைய விநாயகருடைய செயலோ இது?'' என்பார். ''பரம் பொருளாகிய சிவபெருமானே மதியாது 'யாம் முதற்கடவுள்' என்று வாதம் பேசும் பிரமவிட்டுணுக்களுக்கு ஏற்றபிரகாரம் தண்டங்களைச் செய்கின்ற சங்குகன்னர் குண்டோதரர் பானுகம்பர் முதலாயினோர் செயலோ இது?'' என்பார். ''விட்டுணுவின் செயலோ இது?'' என்பார்; ''அவன் இச்செயலைச் செய்தற்கு அஞ்சுவான்; ஆதலால் அது நினைக்கத் தக்கதன்று'' என்பார். ''பிரமன் இதனைச்செய்ய நெஞ்சினும் நினைப் பானே?'' என்பார். ''இந்திரன் செய்த செயலோ இது?'' என்பார்; ''அவன் மறைந்து நிரிவான், ஆதலால் இதனைச் செய்ய வல்லனே அது கருத்தன்று'' என்பார். ''மற்றைத் தேவர்கள் செய்த செயலோ?'' என் பார். ''இடைவிடாது நம்முடைய பணிவிடையில் நிற்பவர்கள் இதனை நினைப்பார்களோ!'' என்பார். ''கட்குடித்துக் களித்து மதிமயங்கினவர் அல்லது பித்தர் இதனைச் செய்தார்'' என்பார். ''வாழ்நாள் முடிவு வரப் பெற்றவர் யாவர் செய்தார்?'' என்பார். ''முனிவர்களுடைய சாபத்தால் இவர்கள் கைகள் வீழ்ந்தனவோ?'' என்பார். ''இவர்கள் இருவருந் தங் களுள்ளே சபதமிட்டுப் போர் செய்து, ஒருவர்கையை மற்றொருவர் வெட் டினர்களோ? இவர் இருவர் கையும் வெட்டுண்டன காண்மின்'' என் பார். ''இந்த அசமுகி கையில் ஒன்றை யாவர் துணிக்கவல்லவர்! இவள் யாவரிடத்திலோ பேராசை கொண்டு பெண் புத்தி மயக்கத்தால் 'என் சிறந்த உறுப்பிலொன்றை அடையாளமாய்த் தருவேன்' என்று உடை வாளினுற் கையை அறுத்துக் கொடுத்தாள் போலும்!'' என்பார். ''கேட்டினையடைந்த இவளை இனிநாம் கேட்பதென்னை!'' என்பார், ''நாம் கேட்டால் நம்மைக் கோபிப்பாள்'' என்பார். ''நாம் இவள் பக்கத்திற் போவதென்னை? பூமியின் எல்லைவரையும் நாம் ஓடி விசாரித்தறிவோம்'' என்பார். இப்படி அசுரர்கள் சொல்ல, அசமுகி துன்முகியோடு விரைந்து போதலை அசுரப்பெண்கள் கேள்வியுற்று, அளகம் அவிழ்ந்து தொங்கவும், கண்ணீர் வடியவும், வீதிகடோறும் நெருங்கிச் சூழ்ந்தார்கள். அம்மகேந் திரபுரத்திலுள்ள ஆடவர்களும் பெண்களும் தன்னைச் சூழ்ந்து இவ்வாறு இரங்கிச் சோர, அவள் துன்முகியோடு அந்நகரத்தினுட் போய், சூரபன் மன் அரசிருக்கின்ற அத்தாணி மண்டபத்துக்குச் சமீபித்தவளாயினள்.

திருச்சிற்றம்பலம்.

## அசமுகி புலம்புறு படலம்.

அசமுகி சூரபன்மனுடைய அவைக்களத்தை அணுகி, தன்னுடைய தாயையும் சுற்றத்தாரையும் மருகர்களையும் தமையன்மார்களையும்நினைத்து,

அந்நகரிலுள்ள சீதேவி நீங்கும்படி கதறிப் புலம்பலுற்றாள்:—

''சிவபெருமான் வரந்தந்தருளிய அந்நாளில் வந்து, 'உங்களைப் பிரியாது காத்துத் திரிவேன்' என்றாய்; அம்மொழியும் பிழைத்தாய் போலும்! என்கரம் போனதறியாயோ? 'அஞ்சாதே' என்றாயில்லை. இது தகுமோ! அன்னையே அன்னையே, சிறியேனுகிய நானொரு பெண்பிறந்து பட்ட பரிபவம் எப்போ தீரும்! ஐயோ! 'தந்தையர்கள் தம் புதல்வர்களிடத்தில் அன்புவைப்பர்; தாயர்கள் தம் புதல்வியர்களிடத்தில் அன்புவைப்பர். இஃது உலகவழக்கம்' என்று பெரியோர் சொல்வர். அம்முறைபற்றி என் துயரை நீக்க வந்தாயில்லை. அந்தோ! தமியேன் ஒரு துணையுமில்லாதவர் போலக் கையிழந்தும், இவ்வுயிரைத் தாங்கிக்கொண்டிருப்பதேயோ! நம்மவர்களே 'நீவிர் எங்கும் வருவீர்' என்று கருதி, அஞ்சாது ஐராணியை வலாற்காரமாய்ப் பற்றிக்கொண்டு, மிகுந்த வீரத்தோடு வந்தேன். வீரமாகாளன் பின்னேவந்து என்கையைத் துணித்து, அவளையும் மீட்டுக் கொண்டு போயினன். நீவிர் ஒருவரும் அக்காட்டிற் செல்லீரோ! நீவிரும் அத்தேவர்களுக் கொளித்தீரோ! புரத்தை அழித்தும், வலியைக் குறைத்தும், பழைய நிலைமையைக் குறைத்தும், வரத்தைக் குறைத்தும், புகழைக் குறைத்தும், வேதாசாரத்தைக் குறைத்தும், செல்வத்தைக் குறைத்தும் 'தேவர்களை ஏவல்கொண்டோம்' என்றிருப்பீர்; ஒருவன் வந்து என் கையைத் துணித்ததை அறியீர். உங்கள் நாசியைக் குறைத்தான் போலும். காண்மின் காண்மின். 'இந்திரன் நமக்கு மீன்சுமந்து பழிக்கஞ்சி வெருவிப் போயினன் போயினன்' என்று சொல்வீர்போலும்; அவன் ஒருவனையே யனுப்ப, அவன் வந்து என் கையைத் துணித்தான். அவ்விந்திரனுடைய செயலும் வீட்டுக் கூரையில் நெருப்பு மறைந்திருந்த செயலாயிற்றே. 'எட்பிளவை யொத்த சிறுமையை யுடைத்தேயாயினும், உட்பகை உளதாயின் எத்துணை வலியோர்க்கும் கேடுளதாம்' என்று, அறிஞர் கூறுவர், அஃதுண்மையாம். தள்ளுற்றுத் தள்ளுற்று நம்மேவல் புரிந்துழன்ற இந்திரன் கள்ளமாய் மறைந்திருந்தே எனது கரத்தைத் துணிப்பித்தான். காண்மின் காண்மின். சமுத்திரத்தின் நடுவிலிருக்கும் வடவாமுகாக்கினி காலம்பார்த்துப் பூவுலகங்களையும் அச்சமுத்திரங்களையும் அழிப்பது போல, அங்கிருந்து என்கையைத்துணித்த வீரமாகாளனும் உங்களை இனிமேல் அழிப்பான்போலும். இங்கிருந்தென்னசெய்கின்றீர்! தேவர்களைச் சிறியர் என்று இகழ்ந்தீர்களே! இரணியனுக்கு மூன்று சிரங்களும், அக்கினி முகனுக்கு இரண்டு சிரங்களும், வச்சிரவாகுவுக்குப் பத்துச்சிரங்களும் உள்ளனவே! அவைகளை வீழ்க வளர்த்தார்களோ! இந்தச் சிரங்கள் என்ன செய்யும்! ஒரு சிரசையுடையோன் என்கையைத் துணித்துப்போயினன். அந்தத் தேவர்களுக்கா இவர்கள் அஞ்சுவர்! பாதலத்திலுள்ள அரக்கர்கள்தாமா இவர்களுக் கெளியர்! குழந்தைப்பருவத்திலே சூரியனுடைய வெய்யில் உடம்பிற் படுதலும் அவனைச் சினந்து பற்றிக்கொண்டுவந்து சிறைசெய்த மருகாவோ மருகாவோ, ஒருவன் என் கையைத் தீண்டித் துணித்துப்போவதா! நீ வினவுகின்றாயில்லை, இஃதென்ன கொடுமை! பூமியை ஓரடியாக அளந்த விட்டுணு செலுத்திய சக்கரத்தை அந்நாளிற் பொன்னரமாகத் தரித்தாய்; இந்நாளிலும் ஒரு பழியையே ஆரமாகப் பூணுகின்றாய். இப்பூமியிலே சிறு பகைஞர் என் கைபோந்திறத்தைச் செய்ய

நீ இனிதாக இந்நிலவுகத்தை ஆண்டாய். நந்தமையனுகிய தாரகனே, உன்னுடைய பெரிய வலிமை அபரபக்கச் சந்திரன்போலாயிற்றே! 'வச் சிராயுதகரனுகிய இந்திரனே ஐராவத யானையோடும் வானுலகத்திற் செல்ல ஒரு கையாலெறிந்து அவன் வீழ்ந்துகிடப்ப உதைத்தாய்' என்று சொல் லுவர். அதனை மெய்யென்று வியந்திருந்தேன். அது பொய்யோ! அவ்விந் திரனுடைய தூதுவன் கோபித்துவந்து என்கையொன்றைத் துணித்தானே! சிங்கமுக வீரனே, இதனைக் காண்கிலாயோ! சூரன் என்னும் பெயரைப் படைத்த அவுணர்களுடைய பெருவாழ்வே, அண்டங்களையெல்லாம் ஒருங் கேயாண்டாய். உன்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் செங்கோலும் வெண் கொற்றக்குடையும் எங்குஞ் செல்லாநிற்கும், தேவர்கள் எல்லாரும் அவற் றிற் கஞ்சுவர். அங்ஙனமாக, உனது பொன்னுலகிலிருக்கும் இந்திர னுடைய ஆணையை வகித்த வீரமாகாளனிடத்து அவ்வச்சத்தைக் கண்டி லேன். அவை மூன்றும் வலியாரிடத்துச் செல்லாவோ! முன்னளில் ஒரு முனிவன் பகைவர்களுடைய சூழ்ச்சியினுல் என் குமாரர்களுடைய உயிரைக் கவர்ந்து தான் உயிரோடிருக்கின்றன். அஃதன்றி இந்நாளில் ஒருவனைக் கொண்டு என் கையையும் அப்பகைவர்கள் இழப்பித்தார்களே! தங்கை யாகிய யான் இவ்வருத்தங்களை அனுபவிக்க நீ நன்றுக அரசுசெய்தாய்! இது பிழையன்றே! மன்னவோ மன்னவோ! யான் பட்ட இழிவரவை நினைக்கிலாயோ; காவல்செய்து உலகங்களை ஆளும் அண்ணலோ அண்ணலோ! கரமிழந்தேன் காண்; எவர் எனக்குறவாவார்! அங்கனேர் உயிரோடிருப்பதும்பழுதன்றே! நான் உயிரை விடுவேன்; அதன்முன் என் மானமே என்னைக்கொல்லுகின்றது ஐயோ! பாவியாகிய ஒரு பெண் பிறந்த பயன் இதுவோ! விதிக்கு என்னிடத்து யாதும் பகையுண்டோ!'' என்று அசமுகி பற்பலவற்றைச் சொல்லி ஆவலித்திரங்கி, தன் பின்னே வருகின்ற துன்முகியோடும் போய், அத்தாணிமண்டபத்தில் வீற்றிருக்கின்ற சூரபன் மனுடைய கால்களில் வீழ்ந்து புரண்டாள்.

திருச்சிற்றம்பலம்.

## சூரன்றண்டஞ்செய் படலம்.

அசமுகி இவ்வாறு சகடைபோலப் புரளும்பொழுது, அவ்வவைக் களத்திலுள்ளவர்கள் அஞ்சி வருந்த, சூரபன்மன் இருகண்களினும் அக்கினி யெழும்படி பார்த்து, ''தங்கையாகிய அசமுகியே, ஏன் இங்கே புலம்புகின் றுய்? உன்னை இன்னுள் என்று யோசியாமலும், என்னையும் நினையாமலும், உன்கையையும் இவள் கையையும் வாளினுல் வெட்டி முன்போல் உயிரோ டிருந்தவர் யாவர்?'' என்று வினவினன். ''இந்திரனுடைய மனைவியாகிய இந்திராணி பூமியில் ஓரிடத்திலே தவஞ்செய்துகொண்டிருந்தாள். அவளை உனக்கென்று சென்று எடுத்தோம். ஒரு தேவன் விரைந்து வந்து கோபித்து எங்கள் கையை வெட்டி, அவளை மீட்டுக்கொண்டு போயினன்'' என்று அசமுகி சொல்லினுள். சொல்லுமுன், சூரபன்மனுடைய கண்கள் நெருப் பைச் சொரிந்தன; வாய் புகைப்படலத்தை உமிழ்ந்தது; மூக்கு அக்கினி மயமாகிய உயிர்ப்பை விடுத்தது; வக்கிரதந்தங்கள் அதரத்தை மறைத் தன; அண்டங்கள் வெடிக்கலுற்றன என்னும்படி வாய் இடியொலியைச்

செய்தது; சிரிப்புண்டாயிற்று; அதரந் துடித்தது; புருவங்கள் துள்ளி நிமிர்ந்தன; பற்கள் கறகறவென்று கடிக்கலுற்றன; வியர்ப்பு மிகுந்தன; அவை வறழும்படி மயிர்க்கால்தோறும் தீப்பொறிகள் தோன்றின; மனத்தினின்றும் விரைந்து கோபாக்கினி உண்டாயிற்று. வெம்மையாகிய பெருங் கோபம் இவ்வாறு சூரபன்மனிடத்து உண்டாதலும், திசைகளினுள்ளார் ஓடுகின்றார்கள்; முனிவர்கள் உலைந்தார்கள்; நடனஞ் செய்கின்ற தெய்வப் பெண்களும் அவனுடைய புகழ்களைப் பாடுகின்றவர்களும் பதை பதைத்தோடினர்; அட்டதிக்கு யானைகள் ஓடின; அட்டகுல மலையும் மேருமலையுங் குலைந்தன; நாகங்களெல்லாம் உலைந்தன; தேவர்கள் ஏங்கி நடுங்கினர், சூரியன் இத்தீங்கைப் பார்த்து ஓடியும் மீண்டுந் திரிந்தான்; பூமி நடுங்கின; விண்ணுலகமெல்லாம் நடுங்கின; சமுத்திரஜலம் நடுங்கின; பிரமபதம் நடுங்கின; விட்டுணுபதம் நடுங்கின; அவுணரும் நடுங்கினர்; உலகில் யார்தாம் நடுங்காதவர்? அவனுடைய கோபம் சிறியதா!

தாக்ஷணியமில்லாத சூரபன்மாவென்னும் புல்லியமனத்தையுடைய அசுரன் இவ்வாறு துண்ணென்று சினந்து, தேவர்கள் எல்லாரையும் தொலைக்கும்படி எண்ணி, அங்கேயிருக்கின்ற தம்பியர்களைப் பார்த்து, இவற்றைச் சொல்வான்: "நம்முடைய ஏவலினுல் மீன் சுமந்து திரிந்த இந்திரன் காட்டில் மறைந்திருந்து ஒருவனைக் கொண்டு இவர்களுடைய கைகளைத் துணிப்பித்தான் என்றால், இனி மனுடர்களும் நம்மைக் கொல்வார்களே! சிவனல்லன், பிரமனல்லன், விஷ்ணுவல்லன், நமக்குப் பயந்தோடிய இந்திரனல்லன், அவனுடைய ஏவலைச் செய்யும் ஒருவனும் இவர்களுடைய கையைத் துணித்துவிட்டு உயிர்பிழைத்திருப்பான்! எளிமையையுடைய தேவர்களைப் போரிலே வஜ்திரத்தினுற் கட்டிக்கொண்டு வருதலும், என் கண்முன்னிற்கின்ற அவுணர்களுடைய மிகுந்த பசியொழியும்படி 'நீர் உண்மின்' என்று கொடுத்திலேன்; அறத்தை நினைந்து அது செய்யாதிருந்தேன். மறைந்திருக்கின்ற இந்திரனையும் இந்திராணியையும் முன்னே சிறைவைத்தேனில்லை; அவர்களை எளியர் என்று எண்ணினேன்; தீயின் சேஷத்தை வைத்தவர்கள்போலாயினேன்; இத்தன்மையை எண்ணிலேன். தன்கையகப்படுத்திய உயிர்ப்பலியை விரைந்துண்ணுது தப்பவிட்ட மதயானையை யொத்தேன். இந்நிலவுலகத்திலே இவர்களுடைய கைகளை வெட்டியது என்னுடம்பிற் செய்த ஊனமன்றி வேறுண்டோ! இந்திரனையும் இந்திராணியையும் தேடும்படி சென்ற தூதுவர்கள், அத்தேவர்கள் தமக்கொரு திங்குமின்றிப் பூமியிற் குறும்பு செய்துகொண்டிருத்தலை இன்னும் கண்டிலர்போலும். தம்பியர்களாகிய நீர் இருந்தீர்; புதல்வர்களுமிருந்தார்; இணையில்லாத இந்திரஞாலத் தேரிருந்தது; சிறிதே என் பேரிருந்தது; யானுமிருந்தேன். பின்னே யாரிருந்துமென்! மற்றை யெல்லாருமிருந்து மாகின்றதென்! அந்தோ! வானுலகத்தையளாவுகின்ற பஞ்சுமலை ஒரு சிறு தீப்பொறி பட்ட மாத்திரத்தில் அழியுஞ் செயல்போல, இவர்களுடைய கைகளினின்றுமுதிர்ந்த சிறிய இரத்தத்துளியினுலே பல வண்டங்களையும் விழுங்கிய நம்முடைய புகழ் போனதே! இவர்களுக்கு இழிவும் வருவதா! தேவர்கள்மாட்டு நின்ற துன்பமும் இங்கே வருமா! பழியும் என்னிடத்து வருமா? இப்பழி என்றும் ஒழிவதில்லையே! இதனை

என்னுயிர் பொறுப்பதா! யானை குதிரை தேர்களும் எண்ணில்லாத அவுணர்களும்உலகமெங்குமிருக்க, அசமுகி படுவது இதுவா! என்னரசியன் முறைகள் நல்லன நல்லன!'' என்று சிரித்தான்.

சூரபன்மன் இவ்வாறு சொல்லிச் சிரித்தபொழுது, அவன் புதல்வர் களிற் பானுகோபன் என்னும் வலியோன் அக்கினிபோலக் கோபாவேசத் தனு யெழுந்து பிதாவுக்கு முன்போய் வணங்கிநின்று, இவ்வாறு சொல் வான்: ''ஐயனே கேட்பாய்! இந்திரன் நமது குற்றேவலால் வருந்தி இனைத்த மனத்தோடு மறைந்தான். தேவர்களும் எளியர்; இத்தொழிலை நினைத்தலுஞ் செய்யார். உன் தங்கை கையிழந்தது என்னை! மாயமோ! இதனை அறியாது கவல்வேன். 'தேவரிலொருவனே இவர்களுடைய கையைத் துணித்துவிட்டு உயிரோடிருக்கின்றான்' என்று நீ சொல்வது, 'மலடி பெற்ற மகன் ஆகாயத்திற் செல்லுஞ் சந்திரனைக் கையினாற் பிடித்தான்' என்பதே. ஒருவாறு அவர்கள் வலியராகியே இவர்களுடைய கையைத் துணித்தா ரெனினும், உன்னாற் கோபிக்கப்படுந் தகுதியுடையவர்களோ! அவர்கள் மிகவும் மெலியர். கடலிலுள்ள மீனைச் சுமந்து உன்பணி செய்த அவர் கள் பேடிகளன்றி ஆண்டகைமையுடையார்களோ! பிரமா விட்டுணு உருத் திரன் ஆகிய இவர்களைக் கோபித்தாலும் உனக்குத் தகுதியே. பெருமையிற் சிறந்த நீ சிறியோர்களையும் கோபிக்கின்றனையோ! மும்மூர்த்திகளன்றி வேறியார் உன் கோபத்திற்கியைந்தோர்! உன்றம்பியர்களுக்கும் இவ்வாறே. உன் மனத்திற் கொண்ட கோபத்தைத் தீருதி. இவர்கள் கை வெட்டுண்ட இடத்திற்கு நான் கடிதிற் செல்வேன். இவர்களுடைய கைகளை வெட்டின ஆடவனையும், உன் மனத்தில் ஆசையை மூட்டிய இந்திராணியையும், கள்வனுகிய இந்திரனையும், தம்முயிர்மேல் அன்பில்லாத தேவர்களையும் பிடித்துக்கொண்டு வருவேன். அவர்கள் அங்கேயில்லாமல் மறைகுவாரா யின், சுவர்க்கத்தை அக்கினி கொழுத்தி, உலகமெங்குந் தேடிப்பார்த்து, அத்தேவர்களையும் அரம்பையர்களையும் ஒருநாழிகைப் பொழுதினுட் பிடித் துக்கொண்டு வருவேன். தமியேனுக்கு விடை ஈகுதி'' என்று நின்றிரந்தான். பிதாவாகிய சூரபன்மன் சினந்தணிந்து, ''மைந்தனே உன் படையோடு ஆண்டுச் செல்லுதி'' என்று கூறினன். பானுகோபன் நன்றென்று மகிழ்ந்து, பிதாவினுடைய கால்களை வணங்கி, தன் சிறிய பிதாமார்களை யும் வணங்கி, விடைபெற்றுத் தனது மாளிகைக்குப் போயினன்.

பானுகோபன் செல்லுதலும், சூரபன்மன் ஏவலாளரிற் சிலரை நோக்கி, ''அந்தப்பிரமன் இங்ஙனம் வருவான் அவனை நமக்குமுன் கொண்டு வருவீராக'' என்றான். அவர்கள் ''பிரமன் எங்குற்றான்'' எனக் கூவிச் சென்று, அவரைக் கண்டு, ''நம்மரசன் உன்னைக் கொண்டுவரும்படி பணித் தான்'' என்றார்கள். அவர் பஞ்சாங்கத்தோடு விரைந்து சூரன்முன் சென்று, திதிவார நக்ஷத்திர முதலிய பஞ்சாங்கங்களையும் மேலுள்ளனவற் றையும் சொல்லினர். சூரபன்மன் பிரமாவை நோக்கி, ''நுட்பபுத்தியால் எல்லாவற்றையும் படைத்த பிரமனே, இவர்களுடைய வெட்டுண்ட கையை விரைந்து உண்டாக்குவாய்'' என்றான். பிரமதேவர் இசைந்து ''இவர்களுடைய கைகூடுக'' என்னலும் ஒரு நொடிப்பொழுதினுள் வளர்ந் தன. சூரன் ''உன் வல்லபம் நன்று நன்று'' என்று பிரமாவை வியந்து,

அசமுகியை அந்நகருள் இருக்கும்படி செய்து, துன்முகியை ''ஐராணி முன்னிருந்த இடத்தைக்காட்டி வருகுதி'' என்று பானுகோபனோடு அனுப்பி, தன் மருங்கிலே திரிகின்ற பல ஏவலரை நோக்கி, ''சூரியனையும் நக்ஷத்திரங்களையும் கிரகங்களையும் இப்பொழுது அழையுங்கள்'' என்று பணித்தான்.

ஏவலாளர்கள் பலர் விடைபெற்று விண்ணுலகத்துக்குப் போய், சூரியன் முதலிய யாவரையும் தேடிக்கொணர்ந்து, சூரபன்மனுக்கு முன்னே நிறுத்தினர். அவன் தன்மனத்தில் முன்பு தவிர்ந்திருந்த கோபாக்கினி பின்பு கிளர, வியர்க்கும் நெஞ்சினனாய், அவர்களை அழைத்து, ''அயர்ச்சியின்றி ஆகாயத்திற் சஞ்சரிக்கும் நீவிர் அறியாததொன்றுமில்லை. என்றங்கையினுடைய கையைத் துணித்தவனுடைய செய்கையைக் காணுதிர். கண்டும் வறிதே ஆகாயத்தில் இருந்ததென்ன? இவளுடைய கையைக் குறைத்த தேவனுடைய உயிரைக் கவர்ந்திலீர்; அல்லது அவனைக்கட்டித் தானைசெய்து இங்கே கொணர்ந்திலீர்; அல்லது அவ்விடத்து நிகழ்ச்சியை நமக்குவந்து சொன்னீரில்லை. நும் செருக்கு நன்று! யோசிக்கின், ஒரு வலியவன் மறத்தன்மையினால் என்றங்கையின் கையைக் குறைத்தற்கு நீவிரும் அகத்தரேயல்லது புறத்தரன்று. நீங்கள் உங்களுக்குரிய தொழில்களை நம்மாணையாற் செய்வீர்; நுமக்கிதுமுறையா?'' என்று கூறினன். நீதியில்லாத சூரன் இங்ஙனஞ் சொல்ல, ''மகாராசனே, எங்களை ஏதும் வெகுளற்க. இவளுடைய கரத்தைத் துண்டித்தவனைக் கண்டிலேம்; எங்கள் கண்கள் இன்று செல்லுகின்ற கதியின்மீது சென்றன'' என்று அவர்கள் சொன்னார்கள். ''இவள் கை துணிபட்ட இச்செய்கையைக் கண்டிலர்களாம்; கண்கள் கதியிற் சென்றனவாம்; இத்தேவர்களுடைய செயல் அழகிது'' என்று அவர்களெல்லாரையும் சூரன் நீங்காத சிறையிலிடுவித்தான். சூரியன் முதலாயினோர் சிறையிற் புகுந்தபின்பு, சூரன் சில ஏவலாளரை அழைத்து ''நீர் போய் வாயுக்களைக்கொண்டு வாருங்கள்'' என்று கோபத்தோடு சொல்லித் தூண்டினன். ஒற்றரிற் சிலர் விரைவிற் போய் வாயுக்களின் தொகுதியைக் கூவிப் பற்றிக் கொண்டுவந்து முன்னே விட, பதைக்கும் நெஞ்சினனாய், ''விண்ணிலும் மண்ணிலும் திசைகளிலும் பாதலத்திலும் ஊனிலும் உயிரிலும் ஏனைய பொருளிலும் எங்கும் நிற்பீர். என் தங்கையினுடைய கையை ஒருதேவன் வாள் கொண்டு சேதித்ததைக் காணுதிர்; உமக்கு யாவர் மறைதற்பாலார்? இந்நகரில்வந்து இந்நிலைமையைச் சொன்னீரில்லை; பகைவர்களுடைய சூழ்ச்சியால் 'அவுணர்களுக்கு இப்பழி வருவது நன்று' என்று மகிழ்ந்து வாளாவிருந்தீர்; உங்கள் பெருமிதம் நன்று!'' என்று சூரன் சொல்ல, அவர்கள் ஒருபதிலும் பேசாது நின்றார்கள். வலியின்றி அச்சத்தோடு நின்ற வாயுக்களை ஒரு சிறைச்சாலையிலிடுவித்தான். உலகங்களுக்கு அழிவைச் செய்ய விருக்கின்ற வாயுக்களையும் சூரன் சினத்தோடு சிறையிலிட்டான். நாம் சொல்லின் உலகத்திலே தவத்தினால் வரும்பேற்றினும் பெருமையாயது வேறுளதோ!

அதன்பின் சூரன் ஏவலரை அழைத்து, ''இந்தவருஷம், இருது, மாதம் முதலிய காலவரையறைத் தெய்வங்களைத் தருதிர்'' என்று பணிக்க, வணங்கிப்போய், அவரை அழைத்துப் பற்றிக்கொண்டுவந்து விட்டார்கள்.

சூரன் அவர்களைச் சீறி, ''புல்லிய இந்திரன் புணர்த்த அச்செயல் தகுவ தென்று அதற்கு ஒருப்பட்டு நீவிரெல்லீரும் மனமகிழ்ந்திருத்திர்; என்னெ டுஞ் சொல்லவந்தீரில்லே; நீர் எங்கும் உள்ளீர்; நம்முடைய ஏவல் வழியி னின்றி நீர் இருந்ததிற் பயன் என்னை? நீர் இல்லாமையால் தவறு என்னை? நீவிர் தேவர்பக்கஞ் சார்ந்தீர்'' என்று அவர்களையும் சிறைசெய் தான். பின் சில ஏவலர்களை யழைத்து, ''இப்பூவுலக அரசர்களை விரைந்து கொண்டுவருதிர்'' எனச் சொல்லித் தூண்டினன். அளவில்லாத தூதுவர் கள் ஓடி, மிகுந்த அரசர் தொகுதியை நிலவுலகமெங்குந் தேடிப் பற்றிக் கொண்டு வந்து சூரனுடைய அவைக்களத்தில் விடுத்தார்கள். உடம்பில் வேர்வை மிகவும் அச்சமும் நாணமும் உயிரைத்தாக்கவும் மனம் மிகத் தளரவும் கைகூப்பி வணங்கும் அவ்வரசர் தொகுதியைச் சூரன்நோக்கி வெகுண்டு, ''எளிமையின்றி நம்மேவலை நீங்கிக் களிக்கின்ற இந்திராணி யோடும் இந்திரன் இவ்வுலகில் ஒளித்தான், தேவருலகிலில்லை. நீர் அரசி யல் செய்தது மிகவும் அழகிது! கள்ளமனத்தினனுகிய இந்திரனுடைய ஆணையின் வழிநின்ற தூதுவன் என்றங்கையாகிய அசமுகியினுடைய கையை அறுத்து ஆண்டே இருந்தான். அதனையும் அறிந்திலீர்; நாடோ றும் கள்ளுண்டு கலங்கினீர்களோ, அல்லது உறங்கினீர்களோ? அரசியலை விட்டீர்களோ? பெருஞ்செல்வத்தாற் பித்துற்றீர்களோ? என் பகைவர்க ளோடு உறவுற்றீர்களோ? அல்லது அவர்களுக்கு அஞ்சினீர்களோ? பெண் களைச்சேர்ந்து களிப்புற்றீர்களோ? நீங்கள் இருந்த நிலைமை என்னை?'' என்று வினவினன். அவர்கள் ''மகாராசனே, நீ சொல்லிய தன்மையில் ஒன்றையுங் கொண்டிலேம்; பூமியைப் பண்டுதொட்டுப் பரிபாலித்து வரு கின்றேம்; உன்பகைவர்கள் யாரையுங் கண்டிலேம்; அவர்கள் ஒளித்திருக் குங் கதையையும் கேட்டிலேம்; எங்கள் தாய்போலும் அசமுகி துன்முகி யோடு நிலவுலகில் வந்ததையும், அவர்கள் கைவெட்டுண்டதையும் தெரிந் திலேம்; இது ஒரு மாயமாகும்; இதனை உறுதியென்று மனத்துக் கொள் ளுதி'' என்றார்கள். ''மிகுந்த செல்வத்தை அநுபவித்து அதனால் மயங்கிப் பூவுலகத்தை எங்கும் பரிபாலித்திலீர்; இடையிலே என்னிடத்து இத்துன் மையாயதோர்பழி அடைவதும் ஒரு மாயையாம்; இது அழகிதே!'' என்று சூரன் சொல்லி, சங்காரகாலத்திலே வடவாமுகாக்கினி எழுவது போலச் சினம்மேற்கொள்ள, வாளை உருவிக்கொண்டு தன் மருங்கில்நின்ற சேனைத் தலைவரை ஏவித் தனித்தனி தண்டஞ் செய்வானுய், சிற்சிலருடைய நாசை யும் கையையும் சேதிப்பித்தான்; சிற்சிலருடைய மூக்கையும் காதையும் களைவித்தான்; சிற்சிலருடைய மார்பையும் முதுகையும் கொய்வித்தான்; சிற்சிலருடைய தாளையும் தோளையும் சிரத்தையும் அறுப்பித்தான்.

சூரபன்மன் இவ்வாறே பலவகைத் தண்டங்களை முறைமுறை செய் வித்து, சிங்காசனத்தினின்றுமிறங்கி, தம்பியர்கள் செல்ல விடைகொடுத்து, பிரமாவை நோக்கி ''பிரமனே நீ போதி'' என்றான். பிரமதேவர் ''மகா ராஜனே கேட்பாய்; சூரிய சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் மற்றைக்காலக் கடவுளரும் ஆகிய எல்லாரும் உன் ஆணையின்வழி நிற்பர்; உலகம் அவர் களையின்றி நடைபெறுது; அவர்களுடைய பழியை உட்கொள்ளாதே, அவர்களைச் சிறைவிடுதி'' என்று குறையிரந்து வேண்டினர். சூரன்

அதனைக்கேட்டு நன்றென்று, ஒற்றுவரை நோக்கி, ''நம்முடைய சிறைச் சாலையிலிருந்தோரைக் கொண்டு வருதிர்'' என்ன, அவர்கள் கொண்டு வந்து விடுத்தார்கள். சிறைப்பட்டிருந்த அவர்களைச் சூரபன்மன் பார்த்து, ''என்றும் நம்முடைய பணியின்வழி நிற்கக்கடவீர்; இந்திரனோடு சேரா திருப்பீர்; சென்று உங்களுக்குரிய பழைய தொழில்களைச் செய்யுங்கள்'' என்று சொல்லினன். அவர்கள் ''மகாராஜனே நன்று, நீ பணித்தபடி செய்வோம்'' என்று உபசாரங்களைச் சொல்லி, விடைபெற்றுக் கொண்டு போயினர்கள். போதலும், சூரன் பிரமாவுக்கும் தன் புத்திரர்களுக்கும் அமைச்சர்களுக்கும் முனிவர்களுக்கும் படைத்தலைவர்களுக்கும் விடை கொடுத்தனுப்பி, தானும் தன்னுறையுளிற் புகுந்தான். இனி, முன்புசென்ற பானுகோபன் செய்த செயலினைச் சொல்லலுற்றேன்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::

# அமரர் சிறைபுகு படலம்.

சூரபன்மனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தன் மாளிகைக்குச் சென்ற பானுகோபன் தன்னைப் பேரழகு பொருந்த அலங்காரஞ்செய்து, படைக்கலங்களை யேந்தி, தும்பைமாலைசூடி, இரண்டாயிரங் குதிரைகள் பூண்ட ஒப்பில்லாத ஒரு தேரையூர்ந்து, முதற்கடைவாயிலிற் சென்றான். அப்பொழுது, ஆயிரம் வெள்ளம் அவுணசேனையும், ஆயிரம்வெள்ளம் குதிரைகளும், ஐஞ்நூறுவெள்ளம் தேர்களும், ஐஞ்நூறுவெள்ளம் யானைகளும் அவனை வந்து சூழ்ந்தன. அச்சேனைகளினின்றும் தூளிக ளெழுந்து மகேந்திரபுரியை மறைத்தன. கொடிக்காடுகளும் குடைக்காடு களும் மொய்த்தன. வீரர்களுடைய புயங்கள் வளர்ந்தன. தேவர்களுடைய மனங்கள் தளர்ந்தன. இங்ஙனம் நிகழப் பானுகோபன் மகேந்திரபுரியை நீங்கி, அதனைச் சூழ்ந்த சமுத்திரமாகிய அகழியைக் கடந்து, பூமியி னெல்லையையடைந்து, தன் மருங்கில் வருகின்ற துன்முகியை நோக்கி, ''உங்கள் கைகள் வாளால் வெட்டுண்ட இடம் யாது? சொல்லுதி'' என்றான். அவள் ''அரசிளங்குமரனே, ஒருவீரன் ஒருசோலையில் எங்க ளுடைய கையைத்துணித்து இருந்தான், அயிராணியுமிருந்தாள்; அந்த இடமும் இஃதே'' என்று விரலினாற் சுட்டிக்காட்டினள். பானுகோபன் சீர்காழிப்பதியிலுள்ள அந்தச் சோலையுட்புக, அவனுடைய தூசிப்படை கள் முன்சென்று, அச்சோலையைத் துவைத்து வெளியாக்கின. பானுகோ பன் அங்கே இந்திராணியையும் வாள்வீரனையும் தேடிக்காணானாய், பூவுல கமெங்குந் தேடிப்பார்த்து, பின் விண்ணுலகிற் போயினன். கோபாக்கினி சொலிக்கும் கண்களும் மடித்தவாயும் தேவர்கள் அஞ்சும் ஆரவாரமும் உடைய அவுணர்கள் ஒருங்கு சென்றார்கள். கசரததுரகபதாதியாகிய நால் வகைச் சேனைகளும் பொன்னுலகைச் சூழ்ந்தன. இத்தன்மைகள் நிகழப் பானுகோபன் றேவருலகத்தை அடைதலும், தேவர்கள் அங்குவந்தவன் பானுகோபன் என்று அறிந்து, அந்தோ என்று பதைபதைத்து அலமந்து ஏங்கி அறிவழிந்து நொந்து ஓடிப்போய், இந்திரகுமாரனாகிய சயந்தனுக் குச் சொல்லினர். அவன் அதனைக் கேட்டுச் சொல்லுகின்றான்:

''எமது குரு இங்கில்லை; தேவர்குழுவிற் பலரில்லை; என் தாயும் தந்தையும் இங்கில்லை; தமியேன் உங்களோடு இருந்தேன். அந்தப் பானு கோபன் இங்கு வந்தமையும் நம்மைத் துன்பஞ் செய்தற்குப் போலும். முன்னைவிதியை யான் அறிவேனே? இன்றைக்கு யாது முடியுமோ? செல் வங்கள் அழியவும், தந்தைதாயர் ஒளிப்பவும், சுற்றத்தார் வருந்தவும், பழி நீங்காதிருப்பவும், சூரபன்மனுடைய ஏவல்களைச் செய்துகொண்டு எல்லாப் பெருமையுமிழந்தும், இந்நாள்காறும் இந்தநகரத்தில் இருந்தேன். இன்று அதற்கும் கேடு வருகின்றது. இதற்கு என் செய்வேன்? தேவர்களே சொல்லுங்கள். என்னுடைய தாயுந்தந்தையும் சுற்றத்தாராகிய தேவர் களும் நிலவுலகத்தில் மறைந்தார்கள். அதனைப் பல அவுணர்கள் ஆராயும் படி திரிந்தனர். அவ்வாருயிருக்கும்பொழுது, எளியவர்களாகிய யாமும் எங்கே போயிருப்போம்? எம்மையெல்லாங் காக்கும்படிக்கு ஒரு புகலிடம் உண்டோ! ஆதலால், இனி யாண்டும் போவதில்லை, புலம்புவதும் இல்லை, அப்படிப் புலம்புவதினால் ஆவதொன்றுமில்லை, வருவதெல்லாம் வருமன்றி வாராதொழியுமோ? அவ்வசுரர்களுக்குப் புறங்கொடுப்பதில்லை, வணங்கிப் புகழ்வதில்லை. எதிர்ந்து சாவது அல்லது பிழைப்பது இந்த இரண்டே தமியேனுக்குறுதி, அவர்க்கு இனி யான் அஞ்சேன். தம்முயிரைப் பொரு ளாகக் கொள்ளாதவர் நஞ்சுபோலுந் தீங்குகள் தமக்கு வரினும் நடுக்க மடையார், துன்பத்திலாழார், தம்முடைய வீரத்தினெறி பிழையார். அதுபோல, யான் பானுகோபனுடைய கொடிய சேனைகளை எதிரேற்றுச் செல்வேன், பலரைக் கொல்வேன், போர்வீரத்துடன் அவ்வசுரரோடு பொரும்படி செல்வேன். நீரும் என்னைப் பாதுகாத்து வருதிர். வன்மை யில்லாதீர் இப்பொழுதே விரைந்து வழிக்கொண்டு போமின். உங்களுள் ஒருவரன்றி எல்லாரும் மனம் பயந்து என்னை விட்டு நீங்கி ஓடிப்போவீ ராயினும் நன்றே. துணிந்த தமியேன் சிறிதும் மனந்தளரேன்'' என்று சயந்தன் கூறினன். தேவர்கள் அவற்றைக் கேட்டுத் துன்பமுற்று, ''உன் மனம் இதுவாயின், நமக்கு வேறூர் எண்ணமுண்டோ? அசுரர்களுடைய ஏவலைச்செய்து அழியாத துன்பத்தை அனுபவிப்பதினும், இறந்துவிடுதல் நல்லது. விரைந்து போருக்குப் புறப்படுவாய்'' என்றார்கள். சயந்தன் தேவர் குழுவை நோக்கி, ''துன்பமடைந்த உங்கள் மனம்துணிந்தது போலும்'' என்று வியந்து, சிங்காசத்தினின்றும் இறங்கி, ஐராவதயானையை நினைக்க, அது அறிந்து அவனெதிரே வந்து வணங்கி நின்றது. சயந்தன் அதன் பிடரில் ஏறிச் செலுத்தித் தேவர்கள் சூழப் பெருங்கோபத்தோடு விரைந்து போயினன். பக்கத்திலுள்ள தேவர்கள் மிகுந்த துன்பங்கொண்டு, ஓடிப் போதற்கு ஓரிடமுங் காணாதவர்களாய், தாம் சயந்தனை நீங்குதல் வசை என்பதனை நினைந்து துணிவாகி, பல படைக்கலங்களையும் ஏந்தி, அச்ச மில்லாதவர்கள்போல அவனைத் தொடர்ந்து போயினர். ஐராவதயானையின் பிளிற் றொலியும் தேவர்களுடைய ஆர்ப்பும் முரசொலியும் ஒன்றுகச் சேர்ந்து, ''எனக்குத் தவறு வரும்'' என்று பொன்னுலகம் வாய்விட்டுப் புலம்புதல் போன்றது. தேவசேனைகள் செல்லும்பொழுது பொன்னுலகின் துகள் மேலே நிமிர்ந்தெழுதல் அது ''என்னை அக்கினிபற்றி எரிக்கும்'' என்று மேலே கிளர்ந்தெழுதல் போன்றது.

இவைகள் நிகழச் சயந்தன் ஐராவதரூனாடய், மனோவதி நகரத்தை நீங்கிப், பானுகோபனுடைய சேனையினெதிரே போயினான். அங்கே வந்த தேவர்களை அசுரர்கள் நோக்கி, "நேற்றைவரையும் இவர்கள் நம்முடைய தொண்டுகளைச் செய்தார். செருக்கோடு இன்றைக்குப் போர்செய்யநினைத்து வருவாரோ! இஃதற்புதம் இஃதற்புதம்" என்று சொல்லலுற்றார். தேவர்களும் அசுரர்களும் "போர் கிடைத்தது" என்று ஒருவரையொருவர் முட்டி உரப்பி, வேற்படைகளை விடுத்தும், வாட்படைகளால் வெட்டியும், விற்களை வளைத்து அம்புகளை விடுத்தும், எழுப்படைகளையும் தண்டுகளையும் மழுப்படைகளையும் குலிசங்களையும் முத்தலைச் சூலங்களையும் எறிந்தும், சக்கரங்களை உருட்டியும், இரத்தவெள்ளம் பெருகும்படி போர் செய்தார்கள். இருதிறத்தினரும் படைக்கலங்களையேந்தி இப்படிப் போர்செய்யும்பொழுது, தேவர்கள் வலியழிந்து ஓடினார்கள். அவுணர்கள் விரைந்து அவர்களைப் பின்றொடர்ந்து பற்றிக் குற்றிப் புயங்களைக் கயிற்றினாற்கட்டி இழுத்துக்கொண்டு சென்று, பானுகோபனுக்கு முன்னே விடுத்தார்கள். அவன் "இவர்களை வலிமையோடு காத்துக்கொள்ளுங்கள்" என்றான். சயந்தன் இவற்றைக் கண்டு வெகுண்டு, வில்லைக் கையிலெடுத்து வளைத்து நாணோசை செய்து, அசுரர்களுக்கு நேரே போய், அவர்கள் அஞ்சும்படி பாணமழைகளை ஆரவாரத்தோடு பொழிந்தான். அப்பொழுது அவுண வீரர்கள் மனோகதியும் பிற்பட வந்து யுகாந்தகாலத்துச் சமுத்திரம்போல அவனேறிய ஐராவதத்தைச் சூழ்ந்து, சயந்தன்மீதும் வெள்ளையானையின் மீதும் கோடி பாணங்களைச் சொரிந்தார்கள். சயந்தன் மேன்மேலும் பாணங்களைச் சொரிந்து, அவர்கள் விடுத்த பாணங்களெல்லாவற்றையும் அழித்து, வில்லையும் அவர்களுடம்பையும் வீழ்த்தி, அவுண சேனைகளையும் யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் வீரர்கூட்டங்களையும் வாட்டி, நூறுவெள்ளஞ் சேனைகளை அழித்தான். அவனேறிய ஐராவதயானை பானுகோபனுடைய சேனைகளை வாலினால் அடித்தும், துதிக்கையினால் வாரியெறிந்தும், கால்களினால் மிதித்தும், கோடுகளினாற் குற்றியும், முகில்போலப் பிளிற்றொலி செய்தும் கொன்றது. இவ்வாறு பானுகோபனுடைய நூறுவெள்ளஞ்சேனைகள் கணப்பொழுதினுள் அழிய, இரத்தவெள்ளம் நதிபோலப் பாய்ந்தது. சயந்தன் ஐராவதத்தின் மேலேறிக்கொண்டு அவுணப்படைகளை இப்படி அழிக்கும்போது, நீலகேசனென்னும் படைத்தலைவன் "பேயா உன்னைப் பிடித்தது! மேல்வருந் தன்மையை நினையாய்; விளக்கில் விழும் விட்டிற்பறவையை நிகர்ப்பாய்; நம்முடைய சேனையை நீயா கொல்லுகின்றனை!" என்று சொல்லிக்கொண்டு அவனுக்கு முன்போய், வில்லைவளைத்து அம்புமழையைச் சொரிந்தான். சயந்தன் அதற்கெதிராக அம்புகளைச் சொரிந்து அழித்து, பின்னும் நூறுபாணங்களை விடுத்து அவன் கவசத்தை யறுத்தான். நீலகேசன் வேர்த்துப் பெருமூச்செறிந்து, ஒரு பிறைமுகாஸ்திரத்தைச் செலுத்திச் சயந்தனுடைய வின்னாணை அறுத்து, ஆரவாரித்தான். தன்னந்தனியாய் நிற்குஞ் சயந்தன் வின்னாண் அறுதலும், அவ்வில்லைக் கைவிட்டு, முன்னே தான் பயின்ற ஒரு மாயத்தை நினைத்து, அதனைச் செய்து பலவேறு வகைப்பட்ட உருவங்களைக்கொண்டு பலவாறு போர்செய்தான். நீலகேசன் குறிப்பினால் இது மாயமென்று நினைத்து, அவற்றை நீக்க யாதும் செயலில்லாதவனாய்,

எதிர்நின்று ஆர்ப்பரிக்கவும் வாயின்றி மயங்கித் தொலைந்தான். பானு கோபனுடைய சேனைகள் அலைந்து உலைந்து பயந்து ஓடுவனவாயின. அப் பொழுது சோமாசுரன், மாயாபலி, சுரகேசரி, பதுமன், மாருதபலி, தண்டகன், வாமன், வருணன், மாகதன் முதலாகிய அவுணப்படைத் தலைவர்கள் ''இது மாயமாகும்'' என்று சொல்லிக்கொண்டு வந்து, அதனை அறியாராய், தாம் பயின்ற மாயைகளை நினைத்துப் போர்செய்து, சயந் தன் செய்த மாயம் அவற்றுல் அழியாமைகண்டு மனந்தடுமாறி, ''யாம் என்செய்வாம்'' என்று நினைத்து ஏங்கினர்கள்.

அப்பொழுது, பானுகோபன் தன் படைத்தலைவர்கள் மெலிவுற்ற தையும், சயந்தனுடைய பெரிய வெற்றியையும், தன்னுடைய சேனைவெள் ளம் வீழ்கை அழிகின்றதையும் கண்டு, ''இது சயந்தனுடைய மாயை போலும்'' என்று நினைத்து, முன்னே சுக்கிராசாரியர் தனக்குபதேசித்த ஞானமந்திரத்தை விதிப்படி நினைத்துக்கொண்டு சென்றான். சயந்தனு டைய மாயாரூபங்கள் யாவும் அழிந்தன. அவன் தமியனுய் ஐராவதத்தின் மேற்றோன்றி, ''இது சுக்கிரனுபதேசித்த மந்திரம்'' என்றறிந்து, மான முஞ் சினமுஞ் சுட மனமறுகி, ஐராவதத்தின் மேலிருந்தான். பானு கோபன் தேரோடு அவனை அணுகி, ''இந்திரகுமாரனே வருதி. நான் ஒரு மந்திரத்தை நினைத்துக்கொண்டு வருமுன் உன்னுடைய மாயையும் வலி யும் போயின காணுதி. சூரியனைச் சிறைசெய்தது போல உன்னையும் சிறைப்படுத்துவேன், விரைந்து போர்செய்குதி'' என்றான். ''வலிமை யுடையோர் வெல்வதும், அஃதில்லாதோர் தோற்பதுமில்லை, ஊழின் முறையைச் சிவபெருமானே அறிவர், உன்னை நீயே துதிக்கத்தகுமா?'' என்றனன் சயந்தன். சயந்தன் மன உறுதியோடு இப்படிச் சொல்லுத லும், பானுகோபன், ''வலியில்லாதவர் பேசுந்திறத்தைப் பேசினுய், உயர்ந்த வீரரும் இப்படிச் சொல்வாரோ?'' என்று சொல்லி வில்லை வளைக்க, சயந்தனும் சினந்து வில்லை வளைத்தான். பானுகோபன் பல பாணங்களைச் செலுத்த, சயந்தனும் அத்துணைப் பாணங்களைச் செலுத்தி, அவற்றை விலக்கினன். சயந்தன் விடும் பாணங்களைப் பானுகோபன் அறுத்தான். இவ்வாறு இருவரும் போர்செய்யும் பொழுது, சயந்தன் பானுகோபன் செலுத்தும் பாணங்களை விலக்கி, ஆயிரம் பாணங்களினுல் அவனுடைய வின்னையே அறுத்தான். பானுகோபன் அக்கினிபோலக் கோபித்து வேருெரு வில்லைவளைத்துப், பாணமழைகளைச் சிதறி, சயந்தன் பின்னும் விடும் பாணங்களையழித்து, அவன் சரீரத்தில் ஆயிரம் பாணங் களை யழுத்தினன். சயந்தன் ஆயிரம் அம்புகளைத் தூவிப் பானுகோப னுடைய தேரிற்கட்டிய குதிரைகளை அழித்து, இறப்பவர்கள் தம்மிடத் துள்ள பொருள்களெல்லாவற்றையும் யாவர்க்கும் கொடுத்தல்போல அவ னுடைய சேனைகண் மீதும் அளவில்லாத பாணங்களைச் செலுத்தினன். பானுகோபன் தன்னுடைய தேர் அழிதலும், வேருெரு தேரிற் பாய்ந்து, பெருமூச்சு விட்டு வெகுண்டு பற்கறித்து இதழையதுக்கி இடிபோல உரப்பி, வில்லை வளைத்து, நாருயிரகோடி பாணங்களை விடாமழைபோலப்பொழிந்து, சயந்தனுடைய வில்லையும் அம்பறுக்கூட்டையும் துணித்து, அவனுடைய உடம்பெங்கும் ஐராவத யானையினுடைய உடம்பெங்கும் பாணங்களை அழுத்தினன். பாணங்கள் தன்னுடம்பிலும் மார்பிலும் மூழ்குதலும் சயந்

தன் மயங்கி, பிறிது போர்செய்தற்குத் தெளிவில்லாதவனாகி, யானையின் மேல் வீழ்ந்து அறிவழிந்தான். அமுதமுண்டமையால் இறந்திலன். அவனுடம்பெங்கும் இரத்தம் வடிந்தது. அவனுடைய கோபத்தை நாம் முற்றுஞ் சொல்லமுடியுமோ! அறிவிழந்தபோதும், அவன் கண்ணிலிருந்து வந்த கோபாக்கினி உடம்பிலிருந்து வடிந்த இரத்தநீரை வற்றுவித்தது. சயந்தன் அறிவிழந்து வீழ்ந்தபோது ஐராவதயானை அதனைக்கண்டு கலங்கித் துன்பமுற்று நின்று கோபித்து, பானுகோபனுக்கெதிரேபோய், அவனுடைய தேரின்மீது பாய, அதிற்கட்டிய குதிரைகள் பாகனோடழிந்தன. யானை பிளிற்றொலி செய்தது. தேரழிதலும், பானுகோபன் நிலத்திற் குதித்து, அவ்வியானையைக் கோபிக்க, அது அவனுடைய மார்பில் முட்டியது. அதன் நான்கு கோடுகளும் மலையின்கட் குற்றிய ஊசிகளைப்போல சடசட என்னும் ஒலியோடு ஒடிந்தன. பானுகோபன் அதன் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு கன்னத்தில் அடித்தான். யானை பாற்கடல் உடைந்தாற் போல அரற்றி வீழ்ந்தது. முன்னே அயர்ந்து வீழ்ந்த சயந்தன் அறிவுபெற்று, உண்மைநூற்றுணிபைத் தன் மனத்தில் நுண்ணிதாக ஆராய்ந்து, ''நாம் செய்தமாயம் போயது; தனித்தோம்; வலிமை குறைந்தது; 'நீயர்களாகிய அவுணர்கள் நம்மைப் பற்றுவர், இந்நகர் அழியும்' என்று மனமே நீ இனிச் சிறிதும் இரங்காதே. ஆராயின் இவை விதிமுறையே காண்.'' என்று தன் மனத்தோடு சொல்லினன். சயந்தன் தனித்தமையையும் ஐராவதயானையோடு தளர்ந்து வீழ்ந்தமையையும் அவுணத்தலைவர்கள் பார்த்து, ஆரவாரித்து, அவனைச் சுற்றிப் பற்றினர். அப்பொழுது எல்லா அவுணர்களும் ஒன்றுகக் கூடி, ''இவன் மிகவும் வஞ்சன் வஞ்சன் இவனை அடியுங்கள், குற்றுங்கள், இவனுயிரைக் குடியுங்கள்'' என்றார்கள். பானுகோபன் மற்றொரு தேரின் மேலேறிக்கொண்டு அவ்விடத்தில் விரைந்து வந்து, சயந்தனைப் பற்றிக்கொண்டு சூழ்ந்துநிற்கின்ற அவுணர்களை நோக்கி, ''யான் விடுத்த பாணங்களால் மயங்கி மிகவும் சரீரந் தளர்ந்தான், பேசவும் வலியிலன். ஆதலால் இவனைப் பகைவனென்று வருத்தஞ் செய்யாதொழிமின். விரைந்து தேவர்குழுவோடு சிறைசெய்யுங்கள்'' என்றான். அதுகேட்ட அவுணர்கள் சயந்தனுடைய தோள்களைக் கயிற்றினால் இறுகக்கட்டி, முன் சிறைசெய்த தேவர்கூட்டத்தோடு ஒருங்கே சேர்ந்தார்கள்.

அப்பொழுது, பானுகோபன் தன் பக்கத்திலுள்ள அவுணப்படைத் தலைவர்களை நோக்கி, ''இந்தத் தேவர்களும் சயந்தனுமல்லாத ஒழிந்த தேவர்களெல்லாரையும் விரைவில் இங்கே கொண்டுவந்து சிறைசெய்து, பின் இத்தேவருலகம் அழியும்படி அக்கினியைக் கொளுத்துங்கள்'' என்றான். அசுரர்கள் அவனை வணங்கி, சுவர்க்கம் எங்கும் போய்த்தேடி, தேவர்களையும் அரம்பையர்களையும் ஒருவரையும் தப்பவிடாமல் உடனே பிடித்து, கயிறுகளினற் றோள்களை இறுகக் கட்டிக்கொண்டுவந்து பானுகோபனுக்கு முன்னேவிட்டு, பொன்னுலகமெங்கும் அக்கினியைக் கொளுத்தினர்கள். சிவபெருமானுடைய திருப்புன்முறுவலால் மூப்புரங்களும் எரிந்ததுபோல அவ்வுலகம் விரைந்து பொடியாயிற்று. ஊழிக்காலத்தினன்றி மற்றெப்பொழுதும் அழிவுறுத சுவர்க்கவுலகம் முழுதும் சாம்பராயிற்று, இந்திரன் வறியனாய் ஒளித்தோடிப்போயினன்; மற்றைத் தேவர்கள் எல்

லாரும் சிறையில் வீழ்ந்தார் என்றால், யாரும் செல்வத்தை நிலையென மதிக்கலாமோ!

சுவர்க்கமுழுதும் எரிந்து சுடலைபோலாகி வேற்றுருவாதலும், அதனைக் கண்டு களித்த பானுகோபன் அவுணவீரர்களுட் சிலரை நோக்கி, ''சயந்தனையும் அவனோடு கூடிவந்து நம்முடனெதிர்த்த தேவர்களையும் மற்றைத் தேவர்களையும் நீங்கள் முன்னே கொண்டுசெல்லுங்கள்'' என்றான். அப்படியே அவர்கள் கொண்டுசென்றார்கள். பானுகோபன் சேனைகளோடு பூமியில் வந்து மகேந்திரபுரியையடைந்து, சூரபன்மனுடைய கோயிலுக்கு முன்னே போய்த் தேரினின்றும் இறங்கி, சேனைகளை அங்கே நிறுத்தி, தேவச்சிறையை கொண்டு சென்று, சூரனுடைய கால்களை வணங்கி, ''என் பிதாவே, இந்திராணியைக் கண்டிலேன், இந்திரனையுங் கண்டிலேன்; சுவர்க்கவுலகமுழுதும் நெருப்பைக் கொளுத்தி, சயந்தனையும் தேவர்களெல்லாரையும் கொண்டுவந்தேன்'' என்றான். சூரன் அதனைக் கேட்டு மகிழ்ந்து, தன் குமாரனைத் தழுவினான்.

பின்பு சூரன் தன் முன்னிட்ட சயந்தன் முதலாயினோரை மிகவுங் கோபித்து, வாட்படையையேந்திய காவலர் சிலரை நோக்கி ''இவர்களுடைய அங்கங்களெல்லாவற்றையுந் துண்டஞ்செய்யுங்கள்'' என்றான். அச் சொல்லைக்கேட்ட அவுணர்கள் பலர், புல்வாய் மான்கூட்டத்தில் சிறையினின்றும் விடுபட்ட புலிகள் பாய்ந்தாற்போலத் தேவர்கள் பக்கத்தில் வந்து, அவர்களுடைய கைகளையும் கால்களையும் தோள்களையும் காதுகளையும் கண்டங்களையும் நாசிகளையும் அசமுகி காணத் துணிப்பாராயினர். தேவர்கள் சிறியரா! அவர்கள் செய்த தவத்தின் வலியினால் அவ்வங்கங்களெல்லாம் உடனுடனே பொருந்தலுற்றன. சூரன் அதனைப் பார்த்து, ''தேவர்களை யாருங் கொல்வதரிது; அங்கங்களைச் சிறிதும் குறைத்தலும் அரிது என்றால், இவருடைய வலிமையைச் சொல்ல முடியாது. இவர்கள் நமக்குத் தோற்றது நாம் பெற்ற வரத்தினாற்றான்.'' என்று மதித்துக் கோபித்து, ''இவர்களை எக்காலத்தும் மீளவிடாத நரகத்தைப் போன்ற பெரிய சிறையில் இடுதிர்'' என்று மிகுந்த வலியையுடைய ஏவலாளர்களுக்குப் பணித்தான். அவர்கள் சயந்தனையும் தேவர்களையும் பிடர்பிடித்துத் தள்ளிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய், அதனைக் காவல் செய்வோரை நோக்கி, ''நம்மரசன் இவர்களை அனுப்பினான்; இவர்கள் யாவரையுங் காத்துக்கொள்ளுங்கள்'' என்று சொல்லி நீங்கினார்கள். அக்காவலாளர்கள் சயந்தன் முதலிய தேவர்களை விலங்கு பூட்டி அரிய சிறையில் வைத்தார்கள்.

அதன்பின் சூரபன்மன் பானுகோபனை அன்போடு பார்த்து, ''உன்னுடைய நகரத்துக்குப் போவாய்'' என்று சொல்லி, அனுப்பி, தானும் அவைக்களத்தை நீங்கி மாளிகையை அடைந்தான். சிறைப்பட்ட தேவர்கள் துன்பக்கடலில் ஆழ்ந்தார்கள். இந்திரன் சூரபன்மனுக்குப் பயந்து காட்டிலோடி மறைந்தான்; பொன்னுலகம் எரிந்தழிந்தது; சயந்தனும் சிறையிலகப்பட்டான்; தேவபதத்தின் செய்கை இது. நாம் ஆராயில் எம்பெருமான் தந்தருளும் மோக்ஷம் ஒன்றேயல்லாமல் துன்பமில்லாத ஆக்கம் வேறுண்டோ!

தெய்வப்பெண்கள் அவுணர்களுடைய ஊரிலே சிறைப்பட்டு, வேடர் களிடத்தகப்பட்ட மயில்களைப்போல மிகவும் அஞ்சி, இழிவாகிய ஏவல் களைச் செய்து, தூக்கணங்குருவி தன் கூட்டிற் கொண்டுபோய் வைக்க அதினின்றும் பெயர முடியாதிருக்கும் மின்மினியைப்போல வருந்தினர்கள். சயந்தனும் தேவர்களும் சூரனுடைய நீங்காத சிறையில் அகப்பட்டுத் துன்பக்கடலில் அழுந்தினர்கள். அவர்களுடைய துன்பத்தின்றிறத்தை யார் சொல்லவல்லவர்! நம்மையெல்லாம் படைத்துக் காக்கும் முன்ன வர்க்கு முன்னவராகிய முதல்வரே, அத்தேவர்களுடைய பெருஞ்சிறையை நீக்கித் துன்பக்கடலினின்றும் எடுத்துக் காக்கும் வலிமையுடையவர் தேவரீரன்றி வேறியாவர்?

பானுகோபனெடு சயந்தன் விண்ணுலகிற் போர்செய்திலைத்த பொழுது அப்பானுகோபனுடைய மார்பிற் குற்றித் தன்கோடுகள் நான் கும் முரிந்து வீழ்ந்தயர்ந்த ஐராவதயானை அறிவுபெற்றெழுந்து, பூமியிலே திருவெண்காட்டில் வந்து, சிவாகமவிதிப்படி சிவலிங்கப்பிரதிஷ்டை செய்து சிரத்தையோடு பூசித்து, அக்கடவுளுடைய திருவருளால் முன் போல அக்கோடுகள் வளரப்பெற்று, பெருமகிழ்ச்சியோடு அந்தத்தலத்தி லிருந்தது. அந்நாளில் இந்திரன் அயிராணியோடு விண்ணுலகிற்போய், பானுகோபன் அந்நகரை அக்கினி கொளுவி எரித்து அங்கிருந்த தேவர் களையும் சயந்தனையும் பிடித்துச் சிறைசெய்ததை அறிந்து தளர்ந்து, மேருமலையிற்போய், சிவபெருமானை நோக்கி நெடுநாளாகத் தவஞ்செய் தான். அவர் வெளிப்பட்டு ''உனக்கு வேண்டும் வரம் என்னை? சொல்லு வாய்'' என்றருளிச்செய்தார். அவன் ''நீதியில்லாத சூரபன்மனைக் கிளை யோடழித்து எங்கள் துன்பத்தை நீக்கியருளும்'' என்று வேண்டினன். ''யாம் உமையை மணஞ்செய்து ஒரு குமாரனைத் தருவோம், அவனே சூரன் முதலாகிய அசுரர்களை வதைத்து உறுதியாக உங்களுரிமையைத் தருவான் வருந்தாதே'' என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்து, மறைந் தருளினர். [சாதலும் தோல்வியடைதலுமில்லாத சூரபன்மன் பிறரெவ ராலும் இறக்கமாட்டான் என்று சிவபெருமான் திருவுளத்திலெண்ணி, பரஞ்சோதி சொரூபராய்த் தோன்றிய முதல்வர் நீரே ஆகலின் அச்சூரனை நீர் சங்கரிப்பீர் என்று இந்திரனுக் கருளிச் செய்தார்.] அத்திரு வாக்கை இந்திரன் கேட்டு, பிரமவிஷ்ணுக்களோடு யோசித்துச் சிவபெரு மானிடத்து மன்மதனை அனுப்ப, அவன் அக்கடவுண்மீது பூம்பாணங் களைத் தூவி, அவருடைய நெற்றிக்கண்ணின் அக்கினியால் எரிந்து சாம் பராயினன். தேவர்கள் யாவரும் தங்கள் குறைகளை நீக்கும்படி சிவபெரு மானை வேண்டிக் கொண்டார்கள். பின் அவர் அதற்கு இரங்கி கருணை செய்து, அரிபிரமேந்திராதி தேவர்களும் பூதகணத்தலைவரும் பிறரும் சேவிக்க இமயமலைக்கு எழுந்தருளி, உமாதேவியாரைத் திருமணஞ்செய்து திருக்கைலாசமலைக்கு மீண்டும் வந்து, எங்களுடைய துயரத்தை நோக்கிக் கருணையினால் தேவரீரை நெற்றிக் கண்ணினின்றும் உண்டாக்கியருளினர்.

எம்பெருமானே, தேவரீர் திருவவதாரஞ் செய்தபின்பு, இந்திர னுக்கும் பிரமவிஷ்ணுக்களுக்கும் மற்றைத் தேவர்களுக்கும் முனிவர்களுக் கும் பிறர்க்கும் நீங்கிப்போன தம்முயிர் வந்தது போன்றது; வலிமையுங் கொடுமையுமுடைய சூரனை வதைத்து அவனால் நீங்கிய தங்கள் அரசுரி

மையை அவர்கள் அடைந்தவர் போலாயினர். ஆழமாகிய சமுத்திரத் திலே புகுந்து அமிழ்ந்தினோர்களுக்கு ஒரு மேலான மரக்கலம் வர அவர் அதைப்பற்றிக் கரையேறி உய்ந்தாற்போல, துன்பக்கடலுள் ஆழ்ந்த அத்தேவர்கள் உம்மால் அதினின்று கரையேறுவாராயினர். எம்மனோருடைய துன்பத்தை நீக்கத் தேவரீர் திருவுளதாரஞ் செய்தபின், இந்திரன் முதலாயுள்ள தேவர்கள் துணிவுடையோராயிருந்தும், சூரன் தம்மைக் கண்டால், ''கடுஞ்சிறையில் வைப்பான்'' என்றெண்ணி, அவனுக்கஞ்சி ஒளித்திருந்தார்கள். எம்பெருமானே, இந்திரன் முதலாகிய தேவர்கள் உம்மையும் உமது பிதாவாகிய சிவபெருமானையும் வழிபடுதற்கு உங்கள் சந்நிதியில் வரும்பொழுது மாத்திரம் தங்களுடைய சுயவடிவங்கள் யாவருங்காண வருவர். ஒழிந்த காலங்களில் தம் வடிவங்கள் மறைந்துழல்வர். இத்தன்மையினராகிய அத்தேவர்களும் தாம் மறைந்திருக்குமிடங்களிற் சூரமன்மனுடைய படைத்தலைவர்களைக் கண்டால், நெஞ்சிடிக்கவும் மனம் நடுங்கவும், உடம்பு வியர்க்கவும், இறந்தவர்போல் வாராய், அவர் மறைந்தபின் உயிர்பெறுவர். அத்தேவர்கள் சூரபன்மனை நினைப்பினும் அவசமாவர். நித்திரையில்லாமையால் அவர்களுக்குக் கனவு வருவதில்லை; வருமாயின், அக்கனவிற் சூரனைக்கண்டால் உயிரையுமிழப்பர். சூரபன்மன் இந்திரனுடைய சுவர்க்கத்தை அழிவுசெய்து, அவன் குமாரனுகிய சயந்தனைத் தேவர்களோடு சிறைப்படுத்துத் துன்பக்கடலுள் வீழ்த்தி, அழியாத செல்வங்களைக் கவர்ந்து, மனைவியாகிய ஜராணியோடு ஒளித்துத் திரியும்படி செய்தும், இன்னும் அவ்விந்திரனுக்குத் துன்பங்களையே சூழுகின்றன். செல்வத்தினாலும், வலிமையினாலும், வெற்றியினாலும், மேன்மையினாலும், அழியாமையினாலும், தேவர்களுக்குத் துன்பஞ் செய்யுங் கொடுமையினாலும் சூரனுக்கொப்பானவர் ஒருவருமிலர். சூரன் ஒரண்டத்திற் செய்தன இவை. மற்றை ஆயிரத்தேழண்டங்களினும் அவன் செய்த திங்குகளை சுத்தமாயாதீத சோதிசொரூபராய் எம்மைக் காக்கும்படி திருவுருக்கொண்டு வந்தருளிய தேவரீரன்றி வேறியாவர் அறிவார். ''சூரபன்மனுடைய ஆணை'' என்னில், விட்டுணுவும், பிரமாவும், தேவர்களும், முனிவர்களும், ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள மற்றை உயிர்களும் அதனைக் கடவாரென்றால், அவனுடைய பெருமையை யார் சொல்ல வல்லார்! அழியாத இவ்வளங்களைப் பெற்ற சூரபன்மன் சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியான். அக்கடவுளுடைய குமாரராகிய பரஞ்சோதிசொரூபரே, நீரே அவனைச் சங்கரிப்பதன்றி வேறியார் அது செய்ய வல்லார். பிரமா சூரனுக்கு நாடோறும் பஞ்சாங்கஞ்சொல்லி உழல்வார். விஷ்ணு அவனோடு போர்செய்து தோற்றார். எவர்க்கும் மேலாகிய பரமசிவன் அவனுக்கு முன்னே வரத்தைக் கொடுத்தார்; அவர் பின்வந்து அவனைக் கொல்லமாட்டார். ஆதலால் நீரே அவனைக் கொல்லல்வேண்டும். சூரபன்மனையும் அவனுடைய தம்பிமாரையும் புத்திரர்களையுஞ் சங்கரித்து, சயந்தனையும் தேவர்களையுஞ் சிறையினின்று நீக்கி, பிரம விஷ்ணு முதலாகிய உலகபாலர்களுடைய பதங்களை அவரவர்களுக்குக் கொடுத்து, நம்மைக் காத்தருளும் என்று வியாழகுரு சுப்பிரமணியக்கடவுளுக்கு விண்ணப்பஞ் செய்தார்.

இவ்வாறு சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுள்ளத்துக்கேற்ப வியாழகுரு சிரத்தையோடு சொல்ல, அவர், தந்தைதாயர் முன் அறிந்த தொன்றை மழலைச் சொல் நீங்காத தங்கள் பிள்ளைகள் வாயாற் கேட்குந் திறம்போல அன்பினுற் கேட்டு, "புன்றெழிலையுடைய அவுணர்கள் தன்மையையும் மற்றையோர் செய்கைகளையும் ஒன்றும் விடாது முற்றும் உள்ளவாறு நம் முன் சொன்னாய். இது நன்று. கட்டுரைக்கும் வன்மைக்குத் தலைவன் நீயன்றே" என்று திருவாய்மலர்ந்து, அவருடைய முதுகைத்தடவி இனிதருள் புரிந்தார். "அறிவிற்கறிவாயிருக்கின்ற ஆறுமுகப்பெருமானே, 'கொடிய சூரபன்மன் அழியவேண்டும்' என்று நீர் திருவுளஞ்செய்யின் அது ஆகும். ஒரு திருவிளையாடலை நினைத்து ஈண்டு எழுந்தருளிவந்தீர். அது போல அவனுடைய இயற்கைகளையும் தெரிந்தும் தெரியாதவர்போல அடியேனை வினவினீர். முற்றறிவுடையராகிய தேவரீருக்கு ஒரு சிறியேன் சொன்னேன் என்னுந் தீய பிழையைப் பொறுத்தருளும்" என்று வியாழகுரு கூறி, அவருடைய திருவடித் தாமரைகளை மறவாத அன்போடு பற்றிக்கொண்டு வணங்கி அஞ்சலித்துத் துதித்தார். அவர் வியாழனே, "நம்முடைய அனுமதிப்படி சொன்னாய், ஆதலால் உண்டார்கத்தக்க பிழையில் ஒன்றையும் நினையாதே, இருக்குதி" என்று திருவாய்மலர்ந்தருளினார். சுப்பிரமணியக் கடவுள், தம்முடைய திருவருளைப் பெற்று வியாழகுரு இருந்தபின்னர், தமக்கயலினிற்கும் இந்திரன்மீது கிருபா நோக்கஞ்செய்து, "இந்திரனே கேட்பாய், மனத்தில் ஏது மெண்ணற்க. சூரபன்மன் கிளையோடு அழியவும், தேவர்கள் சிறை மீளவும் விண்ணுலகத்தை நீ ஆளவுஞ் செய்வோம், ஐயுறுதே" என்றருளிச்செய்தார். இம்மை மறுமை யின்பங்களைத் தந்தருளுவாராகிய முருகக்கடவுள் இதனைத் திருவாய்மலர்ந்தருளுதலும், இந்திரன் தேவர்களோடு அவரை வணங்கித் துதித்து, துன்பமெல்லாம் நீங்கி, சந்தோஷசாகரத்தில் அழுந்துவானுயினான்.

திருச்சிற்றம்பலம்.

அசுரகாண்ட முற்றிற்று.

மூன்றாவது

# மகேந்திர காண்டம்.

## வீரவாகு கந்தமாதனஞ்செல் படலம்.

விரிஞ்சன்மா றேவ ராலும் வெலற்கரும் விறலோ னுகிப்
பெருஞ்சுரர் பதமும் வேத வொழுக்கமும் பிறவு மாற்றி
யருஞ்சிறை யவர்க்குச் செய்த வவுணர்கோ னுவி கொள்வான்
பரஞ்சுட ருருவாய் வந்த குமரனைப் பணிதல் செய்வாம்.

இந்திரன் முதலாகிய தேவர்களும் பிறரும் மனமகிழ்ச்சியோடு திரு மருங்கி லொழுகித்துதிக்க, திருச்செந்தூரிலே திவ்விய சிங்காசனத்தின் மீது வீற்றிருந்தருளும் முருகக்கடவுள், திருவுள்ளத்தில் முகிழ்த்த பெருங் கருணையினால் இவ்வாறு கருதுவார்: ''பிரமா முதலிய தேவர்களையும் முனி வர்களையும் போல அவுணர் கூட்டத்தாரும் எமது கடவுளாகிய சிவபெரு மானுக்குப் புத்திரர்களாமுறையை யுடையரேயாயினும் கொடியரை அழித் தல் நீதிநூன்முறையாம்; தருமநெறியும் அஃதே. இது துணிபேயாயினும், சூரனையும் அவன் சுற்றத்தாரையும் நாம் கொல்லுதல் முறையன்று. தேவர்களுடைய சிறையை விட்டு உய்யும்படி அவனுக்கு ஓர் ஒற்றனை விரைவில் அனுப்புவோம். அவ்வொற்றன் சொல்லைச் சூரபன்மன் கேட்டுத் தேவர்களைச் சிறையினின்று நீக்கி விடுவானாயின், அவன் அழியாமல்இன்னும் வாழ்க. அதனை மறுத்தானாயின் நாம் ஆண்டே சென்று அவனைக் கொல் வோம். இதுவே தருமநெறி'' என்று திருவுளங்கொண்டார். சுப்பிரமணி யக்கடவுள் இவ்வாறு திருவுளஞ்செய்து, தம்முடைய திருமருங்கிலுள்ள அரி பிரமேந்திராதிதேவர்களை நோக்கி, ''அவுணர்கிளையையெல்லாம் அழிக்கும் படி நாம் நாளைக்குப் புறப்படுவோம். அதன்முன் ஒரு தூதுவனை அனுப்பி, சூரபன்மனுடைய கருத்தை அறிதல் வேண்டும்'' என்றார். அத்திரு வாக்கை பிரமாவும் விஷ்ணுவும் கேட்டு, ''எம்பெருமானே அங்ஙனஞ் செய்தலே தருமநெறி'' என்றார்கள். என்னலும், குமாரக்கடவுள் ''நம் முடைய இந்த வீரர்களுள் சூரபன்மனிடத்தே வீரமகேந்திரத்திற்குத் தூது செல்ல யாரை அனுப்புவோம் சொல்லுங்கள்'' என்று விளவியருள' ''வாயுவும் மெல்லவாக வீரமகேந்திரத்திற்குச் செல்வது அரிது, அச்சூர பன்மனுக்குச் செய்யும் பணிவிடை காரணமாக அன்றி அங்கே செல்லு தல் அடியேனுக்கும் அரிது. விரைந்து வீரமகேந்திரத்திற்குச் சென்று பகை வர்களை வென்று மீள வல்லவர் இந்த வீரவாகுதேவரே'' என்று பிரம தேவர் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுள்ளத்துக்கேற்பக் கூறினார். அக் கடவுள் நன்றென்று கருணை செய்து, வீரவாகுதேவருடைய முகத்தைப் பார்த்து மிகுந்த சந்தோஷத்தோடு இவ்வாறு சொல்லியருளுவார்: ''வீர

வாகுவே நீ விரைந்து வீரமகேந்திரத்திற்குப் போய், சூரபன்மனை அணுகி, 'சயந்தனையும் தேவர்களையும் தருமநெறியை நினைத்துச் சிறையினின்று விடுத்து இந்திரபாக்கியத்தோ டிருக்குதி' என்று அவனுக்குச் சொல்லுதி. இந்த வார்த்தையை மறுத்தானையின், 'அவுணனே, உன் கிளையையெல்லாம் விரைவிலழித்து உன்னையும் வேற்படைக்கிரையாகக் கொடுக்கும்படி பகைகொண்டு நாமே நாளைக்குச் செல்வோம். இது மெய்மை' என்று கூறி மீள்வாய்'' என்று கட்டளையிட்டருளினார். அப்பணியைச் சிரமேற் கொண்ட வீரவாகுதேவர் ''எம்பெருமானே, மிக்க வலியையுடைய அவுணர்கள் நெருங்கிய வீரமகேந்திரத்தில் மேலாகிய செல்வத்தோடிருக்கும் சூரபன்மனுக்கு முன்னே போய், தேவரீர் அருளிச் செய்தவற்றையெல்லாம் சொல்லி, அவன் கருத்தை யறிந்துவருகின்றேன்'' என்று வணங்கி அஞ்சலித்து, விடைபெற்றுக்கொண்டு போயினார்.

இந்திரன் வீரவாகுதேவருக்குப் பின்னே போய், ''வீரரே, வீரமகேந்திரத்திற் சென்று, அங்கே சிறையிலிருக்கின்ற சயந்தனையும் தேவர்களையும் அடைந்து, அவர்களைத் தேற்றி, பின்பு நீர் தூதுசென்ற செயலை முடிப்பீராக'' என்றான். வீரவாகுதேவர் ''நீ கூறியது நன்று அவ்வாறு செய்வேம் நீ நிற்பாய்'' என்று கூறி, தம்மைப் பின்தொடர்ந்து வந்த இலக்கத்தெட்டு வீரர்களையும் பார்த்து, ''யான் கடலைத்தாண்டி வீரமகேந்திரத்திற் சென்று, சூரனுக்கு முன்னேபோய், எம்பெருமான் கட்டளையிட்டருளிய திருவாக்குக்களைச் சொல்வேன். மறுத்தானையின், அவனுடைய நகரம் முழுவதையும் அழித்தபின் மீளுவேன்'' என்றார். தம்பியர்கள் வியந்து அவரை வணங்கினார்கள். வீரவாகுதேவர் அவர்களை மார்போடு இறுகத்தழுவி, பூதப்படைத் தலைவர்களோடும் அவர்களை அங்கே நிற்கும்படி கட்டளையிட்டு, விரைந்து கடற்கரையை அடைந்து, அங்குள்ள கந்தமாதனமென்னு மலையினுச்சியில் ஏறி நின்றார். நிற்றலும், அவருடைய பாரத்தைத் தாங்கலாற்றாது அம்மலை பிளந்து பூமியில் ஆழ்ந்தது. அதிலிருந்த பக்ஷிகளும் விலங்குகளும் ஓடின. முன் போரிலே புறங்கொடுத்தோடி அம்மலைமுழையில் ஒளித்திருந்த தாரகனுடைய படைவீரர்கள் சிலர் அவரைக்கண்டு ஏங்கி இறந்தார். இவ்வாறு இன்னும் பல நிகழ வீரவாகுதேவர் மகேந்திரபுரிக்குச் செல்ல எண்ணி, எம்பிரானுகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுருவத்தைத் தியானித்து, பிரமாவும், விஷ்ணுவும் நோக்கவும், பிரம விட்டுணுக்கள் மற்றைத் தேவர்கள் முனிவர்கள் கருடர் சித்தர் கந்தருவர் சந்திரசூரியர் முதலாயினோருடைய பதங்கள் பல வேறுவகைப்பட்ட ஆரங்களாய் விளங்கவும், ஒரு பெரிய திருவுருவத்தைக்கொண்டு நின்று, பூமி முழுதையும் எண்டிசைகளையும் ஏழு கடல்களையும் பெரும்புறக்கடலையும் சக்கரவாளகிரியையும் விண்ணுலகத்தையும் மற்றை யுலகங்களெல்லாவற்றையும் கண்பரப்பி நோக்கி, திருக்கைலாசமலையையுந் தரிசித்துக் கைகூப்பி வணங்கி, அதன்பின் விஷ்ணு முதலாகிய தேவர்களுடைய நகரங்களையும் திக்குப்பாலகர்களுடைய நகரங்களையும் பூமியிலுள்ள சிறந்த நகரங்களையும் வீரமகேந்திர நகரத்தையும் நோக்கி, ''சூரனுடைய இந்தப் பெரிய நகரத்துக்கு மற்றெந்த நகரங்களும் நிகர்த்தலில்லை'' என்று வியந்து கூறி, அந்நகரத்தைப் பார்க்கும் பொழுது மேன்மேல் வளராநின்ற கோபத்தையுடையராய், ''இந்நகரத்தில்

ஒரு கையை நீட்டிப் பகைவர்கள் யாவரும் இறக்கும்படி பிசைவேனே'' என்று எண்ணி, அங்கே சிறையிலிருக்கின்ற சயந்தன் முதலாகிய தேவர்கள் பொருட்டு இரங்கி, அவ்வெண்ணத்தை மீட்டார். விஞ்சையரும் இயக்கரும் சித்தரும் கருடரும் சூரியசந்திரர்களும் மற்றைக் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் தேவகணத்தரும் அவருடைய பேருருவைப் பார்க்கலாற் ரூதவராய் அஞ்சினர். வீரவாகுதேவர் அவர்களை நோக்கி, ''வருந்தா தொழிமின்'' என்று கையமைத்தார். வீரமகேந்திரத்தில் உள்ள அவுணர்களும் வேறிடங்களில் உள்ள அவுணர்களும் அவருடைய பெரிய திருவுருவத்தை நோக்கி, ''கிரவுஞ்சமலை முன் அழிந்ததென்பது பொய்யே. இப் பேருரு அம்மலையின் மாயமே. இன்னும் ஆராயவேண்டியதுண்டு'' என்ரூர்கள். வீரவாகுதேவர் கந்தமாதனமலையை ஊன்றி இந்நிலைமையோடு நிற்றலும், பிரமாவும் இந்திரனும் இலக்கத்தெண்மரும் பூதர்களும் பிறரும் கண்டு, ஆச்சரியத்தோடு ஆரவாரித்தார்கள். தேவர்கள் முனிவர்கள் முதலாயினோர் தங்கள் தங்கள் பதங்களில் நின்றபடியே தத்தமக்குச் சமீபமாய்ப் பொருந்திய அவருடைய ஒவ்வோருறுப்புக்களிலும் கற்பகப் பூக்களைத் தூவி அஞ்சலிசெய்து, ''தலைவரே சூரனுடைய நகருக்குத் தூது சென்று எங்கள் துன்பத்தை நீக்கியருளும்'' என்று பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது, வீரவாகுதேவர் ''எம்பிரானுடைய பன்னிரண்டு திருப்புயங்களும் வாழ்க; ஆறு திருமுகங்களும் வாழ்க; பேரருளைப் பொழியும் பன்னிரண்டு திருக்கண்களும் வாழ்க; வேற்படை வாழ்க; மற்றைப் படைக்கலங்கள் வாழ்க; தேவாதிதேவராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடி வாழ்க'' (ஆவதோர் காலையெந்தை யாறிரு தடந்தோள் வாழ்க — மூவிரு வதனம் வாழ்க முழுதருள் விழிகள் வாழ்க — தூவுடை நெடுவேல் வாழ்க தொல்படை பிறவும் வாழ்க — தேவர்கடேவன்சேயோன் றிருவடி வாழ்கவென்ரூன்.) என்று தோத்திரஞ்செய்து, கைகளைச் சிரசின்மேற் கூப்பி, ஆனந்தபாஷ்பம் ஆறுபோலப் பெருகவும், உரோமாஞ்சம் திருமேனியெங்கும் மூடவும், நாத் தழுதழுப்பவும், என்பு நெக்குருகவும், கண்கள் செருகவும் ஐம்புலனு மனமும் ஒருவழிப்பட அம்முருகக்கடவுளுடைய பேரருள் வெள்ளத்தில் மூழ்கிக், குதூகலமடைந்தார். அடைதலும், உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் மகிழ்ந்தன. இவ்வாறு அன்பு நிகழ, சுப்பிரமணியக்கடவுளுடைய பேரருளைப் பெற்றுக் கந்தமாதனமலையில் நின்ற வீரவாகுதேவர் ''மிகவும் பெரிய இவ்வுருவத்தோடு நாம் செல்லில் உயிர்கள் அழியும் ஆதலால் இது அழகன்று'' என்றெண்ணி, அங்கே செல்லுதற்கு வேண்டுந் திருவுருவத்தைப்பொருந்தி, சிரசிலணிந்த இரத்தின கிரீடம் அண்டகோளகையை உரோஞ்ச ஆகாயத்திற் கிளர்ந்தெழுந்து, மகேந்திரபுரியை நோக்கிப் போயினர்.

திருச்சிற்றம்பலம்.

## கடல்பாய் படலம்.

வீரவாகுதேவர், தாம் ஏறி நின்றமையாற் பூமியின்கீழ்ச் சென்று ஆழ்ந்த கந்தமாதனத்தை நோக்கி, ''நீ மீண்டு எழுதி'' என்று கூறினர்.

அது விரைவிற் கிளர்ந்து தோன்றிக் கடற்கரையில் முன்போல நின்றது. அவர் கந்தமாதனத்தினின்றும் வீரமகேந்திரத்தை நோக்கி எழலும், விசைக்காற்றினுற் பூமியிலுள்ள மலைகள் யாவும் பக்கத்திற் செல்லுதல், பூதத்தலைவரும் இலக்கத்தெண்மரும் முதலிய யாவரும் அவருடைய பக்கத்தில் அணிவகுத்துச் செல்லுதல் போன்றது. அவ்விசைக்காற்றினுல் அண்டங்கள் திரிந்தன; உயிர்கள் யாவும் சுழன்றன; சூற்கொண்ட மேகங்கள் சுழன்றன; ஊழிக்காற்றும் ஆற்றுதோடியது. அவ்விசைக்காற்றுச் சூரியனையும் அக்கினியையும் குளிரச்செய்து வடவாமுகாக்கினியையும் அவித்தது; அது தள்ளுதலாற் கடல் சுழித்து உள்வாங்கி மகேந்திரத்திற் செல்லுதல், சூரனுடைய சேனைகள் வீரவாகுதேவர் மேலெதிர்த்துச் சென்று அவரோடு போர் செய்தற்கு வலிமையின்றித் தோற்றுத் தம்மூரையடைதல் போன்றது; அக்காற்றுப் பூமியைக் கிழித்துப் பாதலவுலகத்தைக் காட்டிற்று. அக்காற்றோடு பெருமூச்சினுண்டாகிய அக்கினி கலந்து வீரவாகுதேவருடைய கொடிப்படைபோல மகேந்திரபுரியைச் சுற்றிப் புகைசூழக் கொளுத்தியது. அவ்விசைக்காற்று மகேந்திரபுரியிலுள்ள மதில்களையும் செய்குன்றுகளையும் சோலைகளையும் பூமியிலலைத்துத் தள்ளியது. அவருடைய மூச்சிலுண்டாகும் அக்கினி முன்பு ஓடிச்சென்று மகேந்திரபுரியைக் கொளுத்த, விசைக்காற்றினுற் றள்ளுண்ட சமுத்திரஜலம் சென்று முறை முறை அந்நெருப்பை அவித்தது. விசைக்காற்றும், மூச்சுக்காற்றும், கண்ணிலும் சுவாசத்திலுமிருந்து வரும் நெருப்பும், எதிர்செல்லாதோடுகின்ற கடலும், மகேந்திரத்திற் சென்று அப்புத் தேயு வாயுவாகிய மூன்று பூதங்களும் பொருதல்போலப் பூசல் விளைத்தன. விசைக்காற்றினுற் சமுத்திரம் புறந்தர, அதிலுள்ள சின்னை, சுரு, பனைமீன், சூறை, திருக்கை, யானைமீன், திமிங்கிலம் முதலிய மீன்கள் ஓடிப்பாய்ந்தன. அக்காற்றினுற் கடல் எதிர்ந்தெழாது சாய்ந்து மீன்களைத் திரைக்கரங்களிற்றுங்கி மகேந்திரத்திற் செலுத்துதல், இறப்பவர்கள் விரும்பிய உணவுகளைச் சுற்றத்தார் மிகக் கொடுத்தல் போன்றது. விசைக்காற்றினுல் நகூத்திரங்கள் கடலிலுதிர, மறிந்து செல்லும் அக்கடலிலுள்ள மீன்கள் ஆகாயத்திற் சென்றன. அவ் வீரவாகுதேவருடைய திருக்கரத்திலிட்ட இரத்தினகடகத்தினொளி சென்று சக்கரவாளகிரியைச் சூழ்ந்த இருட்டை ஓட்டி, பொன்மயமான அண்டச் சுவரின் ஒளியோடு மாறுபட்டது.

இவ்வாறெல்லாம் நிகழ, சிவபெருமான் முப்புரங்களின்மீது விடுத்த சிரிப்பாகிய அக்கினியைப்போலவும், அவருடைய கண்ணினக்கினியைப் போலவும், அவர் விடுத்த விஷ்ணுவாகிய அம்பைப்போலவும், சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனைக் கிளையோடழிக்க விடுத்த வேற்படையைப் போலவும், விஷ்ணு வரும்படி நினைக்கப் பாற்கடலில் வந்த மந்தரமலையைப்போலவும், சிவபெருமானுலே திருக்கண்டத்தில் அடக்கிவைக்கப்பட்டு விடுக்கக் கடலில் வரும் ஆலாகலவிஷத்தைப் போலவும், வீரவாகுதேவர் சமுத்திரத்தின்மீது பாய்ந்து, வீரமகேந்திரத்தின் வடபக்கத்திலுள்ளதும் யாளிமுகன் என்னும் அசுரனுற்காவல் செய்யப்படுவதும் ஆகிய இலங்கை நகரத்திற்குச் சமீபத்திற் சென்றார்.

திருச்சிற்றம்பலம்.

# வீரசிங்கன்வதைப் படலம்.

வீரவாகுதேவர் செல்லும்பொழுது, அந்நகரைக் காக்கின்ற யாளி முகனென்பவன் சேனைகளோடு சூரபன்மனைக் காணும்படி போக அதி வீரன் என்னும் அவன் குமாரன் ஆயிரம் வெள்ளஞ் சேனைகளோடு அவ் விலங்கையைக் காத்துக்கொண்டிருந்தான். அவன் கோயிலினுள்ளிருப்ப, அவனுடைய சேனைத்தலைவனுகிய வீரசிங்கன் என்பவன் அந்நகரின் வடக்கு வாயிலைக் காத்துக்கொண்டிருந்தான். அவன் வீரவாகுதேவர் விரைந்து செல்லுதலைக் கண்டு, ''சிறிதும் நம்முடைய காவலை எண்ணுது தனித்த னுய் வருவான், இவன் யார்?'' என்று வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, ''இவனுயிரை விரைந்து உண்பேன்'' என்றெண்ணி, மனை கதியும் பிற்பட எழுந்து ஐந்நூறு வெள்ளஞ் சேனைகளோடும் வீரவாகு தேவருக்கு முன்னே போய், அவரை நோக்கி, ''இன்றளவும் எமது காவ லுள் வந்தவரில்லை, நீ யார்? உன் உயிர்க்கு அன்பில்லாய், ஆதலால் தனித்துவந்தாய், உன்னைக் கொல்லுமுன் நீ வந்த செய்தியைச் சொல் வாய்'' என்ருன். வீரவாகுதேவர், அதனைக்கேட்டு, ''யான் இலங்கை யைத் தாண்டிச் சூரபன்மன் வசிக்கும் மகேந்திரபுரிக்குப் போய் மீளும் படி நினைத்துவந்தேன். இது என்செயல். நீ வலியவனுயின், இனி வேண் டியதொன்றைச் செய், காண்பேன்'' என்ருர். வீரசிங்கன் அவர் சொல்லி யதைக் கேட்டு, ''இவன் சிறிதும் நம் அவுணருடைய ஆணையை எண்ணு கின்றிலன்; வலியன்போலும்; அதனை அறிவோம்; மீண்டுபோதல் நன் றன்று'' என்று நினைத்து, தன் படைவீரரை நோக்கி, ''இவனுயிரைக் கவருங்கள்'' என்று சொல்ல, அவர்கள் ஒரு சிங்கத்தை வேட்டைக்காட் டில் வேடர்கள் சுற்றிப்பொருவதுபோல வீரவாகுதேவரை வளைந்து, வேல் தண்டு இருப்புலக்கை முதலாகிய ஆயுதவகைகளினுற் போர்செய்தார்கள். அவர் தளர்ச்சியடையாது, வாட்படையை உறையினின்றுங் கழற்றி அவ் வசுரர்களைக் கொன்று திரிந்தார். இரத்தவெள்ளத்தினுற் சமுத்திரஜலம் மறைந்தது. கஜரததுரகபதாதிகள் அழிந்தன. நூறுவெள்ளஞ் சேனைகள் அழியும்படி வீரவாகுதேவர் இவ்வாறு கொல்ல, மற்றையவுணர்கள் யாவ ரும் மனநொந்திரங்கி, தம்முயிரைப் பாதுகாத்துப் புறங்கொடுத்தோடி னர். அதனைக்கண்ட வீரசிங்கன் சினங்கொண்டு, வீரவாகுதேவர்மீது ஒரு சூலப்படையை விட, அவர் அதனை வாட்படையினுல் இருதுணியாக்கி ஆர்ப்பரித்தார். வீரசிங்கன் அவருடைய வலிமையைப் பார்த்து, தன் கையி லுள்ள படைக்கலங்களுட் சிறந்த ஒரு குலிசத்தை வீசினுன். அவர் அத னையும் வாளினுல் வெட்டி, மீண்டு ஆயுதம் எடுத்தற்குமுன் அவனுக் கெதிரே சென்று, வாட்படையை வீசிக் கைகளை வெட்டி, முடியையும் அறுத்துக் கடலில் வீழ்த்தி, பின்பு எதிர்ப்பாரில்லாமையினுல் வாளை உறை யுட் புகுத்தி, முதலில் ஒரு வெற்றியைக் கொண்டு அப்பாற் சென்று, இலங்கையிலுள்ள மூன்று சிகரங்களுள் நடுச்சிகரத்திற் பாய்ந்தார்.

திருச்சிற்றம்பலம்.

# இலங்கைவீழ் படலம்.

வீரவாகுதேவர் மகேந்திரபுரியின் வடக்கிலுள்ள இலங்கையின்மீது பாய, அதனைக் காவல் செய்துகொண்டிருந்த அதிவீரனென்பவனும் மற்றை அசுரர்களும் இடியேறுண்ட பாம்புபோலக் கலங்கி ஏங்கி நடுங்கி, வீழ்ந்தார்கள். வீரவாகுதேவர் குதித்தமையினால் இலங்கை குலுகுலுந்து அவுணர்களோடு கடலில் ஆழ்ந்தது. அவர் அதனைக்கண்டு மகிழ்ச்சியுற்றார். இலங்கை கடலுண் மூழ்க, கூட்டமாய் அதிலிருந்த அவுணர்கள் யாவரும் கலங்கிப் புலம்பி மருண்டு வெருண்டு, மிகவுந் துன்பமுற்றார். அவ்வசுரர்களை சுரு திமிங்கிலம் திமிங்கிலகிலம் முதலிய எண்ணில்லாத மீன்கள் சூழ்ந்தன. அவற்றுட் சில அவர்களுடைய கைகளை யிழுப்பனவும், சில கால்களை யிழுப்பனவும், சில தலைகளை யிழுப்பனவும், சில தோள்களை யிழுப்பனவும், சில மார்புகளை யிழுப்பனவுமாயின. சிலஅசுரர்கள் தந்தையையும் தாயையும் மனைவியையும் கூட்டத்தோடு கையிற்பற்றிக் கூவிக் கொண்டெழுகின்றார். வேறு சிலர் இளைப்படைந்து செய்வதின்னதென்றறியாது, ஆயுதங்களையும் கைவிட்டுத் தம்முயிரைக்கொண்டு தாம் மாத்திரம் எழுந்தார். மீன்கள் தம்மை உண்ணும்படி வந்து அடித்தலும், வாள் வேல் முதலாகிய படைக்கலங்களைக் கொண்டு அவைகளோடு போர்செய்து நின்றார்கள் சில அவுணர்கள். சில அசுரப்பெண்கள் மீன்கள் ஒருகையைப் பிடித்துக்கொள்ள, மற்றொரு கையை அவுணர்கள் பிடித்திழுப்ப, வருத்தமுற்றார்கள். திருக்கை சுரு முதலாகிய மீன்கள் கடலில் ஆழுகின்ற தம்மைக் கண்டு தாக்க, அவைகளை வாட்படையினற் றுணித்தெழுந்தார்கள் சில அவுணர்கள். சமுத்திரத்தில் எழுகின்ற அவுணர்கள் சிலர், வீரவாகுதேவருடைய செயலைக்கண்டு, "நின்றால் நம்மையும் வருத்துவான், நாம் விரைந்து ஓடிப்போவோம்" என்று விரைந்து அயலில் மறைந்தோடினார்கள். இவ்வாறுக இன்னும் பல நிகழ இலங்கை கடலில் ஆழ்ந்தது.

திருச்சிற்றம்பலம்.

# அதிவீரன்வதைப் படலம்.

இவ்வாறுக இலங்கை சமுத்திரத்திலாழ, அதனைக் காவல்செய்துகொண்டு கோயிலிலிருந்த அதிவீரன் அறிந்து, மிகத் துன்பமும் நாணமும் அடைந்து, கோபித்து, அக்கினிசிந்தச் சிரித்து, இப்படிச் சிந்திப்பான்: "சூரபன்மனை அவன் தம்பியர்களோ அவர்களுடைய புத்திரர்களோ இதனைச் செய்தார்? வேறியார் இதனைச் செய்யவல்லவர்? அவர்கள் இப்படிச் செய்தற்கோர் எதுவுமில்லை. அவர் தம்மூர்க்குத் தாமே தீங்கைச் செய்யார். ஆதலால் இப்படி எண்ணுதல் புத்தியன்று. மாயையும் இதனைச் செய்யாள். மும்மூர்த்திகளும் இச்செயலை நினைத்தலுஞ் செய்யார். பின்னர் எந்தத் தேவர்கள் இதனைச் செய்ய வல்லார்? அவர்கள் எல்லாரும் எங்கள் சிறையினுள்ளார். இந்திரனெனில், அவன் தன்னுயிரைக் காத்து ஒளித்தான். மற்றைத் திக்குப் பாலகர்களும் பிரமவிஷ்ணுக்களும் விஞ்சையர் சித்தர் முதலாயினோரும் நம்மரசனுடைய பணியின் வழி ஒழுகுவாராயுள்ளார். அவர்கள் இத்தீங்கைச் செய்ய எண்ணுவார்களோ? இங்

குள்ள அவுணர்கள் சரீரவலியும் மாயையும் மிகவுடையரேயாயினும், சூரபன்மனுடைய படைகளுக்கு அஞ்சி இத்தன்மையைச் செய்யார்போலும். அவர் செய்யாதொழியில், இதனைச் செய்தவர் யாரோ? பிதா விட்டுநீங்கிய காலத்தில் புதல்வனுகிய யான் அசுரர்களோடும் இந்நகரைக் காத்தது நன்று! பிரமதேவரை நோக்கி அருந்தவஞ்செய்து மாயைகளையும் படைக் கலங்களையும் வலிமையையும் அவர் தரப்பெற்ற என் செயல் நன்று! 'பிதா இல்லாமல் நீங்கியிருக்கும்பொழுது புத்திரன் நகரைக் காவல் செய்து அதனெடு கடலிலாழ்ந்தான்' என்றுல் நம்முடைய சுற்றத்தார்கள் என்னைச் சிரிப்பார்களே. சூரபன்மன் இதனை அறிந்தால் என்னைக் கொல்வான். என் தகப்பனும் அப்படியே. பிறரெல்லாரும் இகழ்வர். இது இந்நகரத்தின் பாடானுல் என்றன்மை நன்றுயிருந்தது!'' என்று எண்ணி அதிவீரன் வருந்தி, கடலிலே ஆழ்கின்றவன் ''யான் கடலின்மேலே போய் யார் இதனைச் செய்தார் என்று அறிந்து, அவரை விரைந்து கொன்று இரத்தத்தைக் குடிப்பேன்'' என்று மீண்டு எண்ணி, ஆயுதங்கள் எல்லா வற்றையும் எடுத்து, தன் சேனைகளுள் அங்கு நின்றவர்களை அழைத்துக் கொண்டு ஆலாகலவிஷம் கடலினின்றும் எழுந்தாற்போலச் சமுத்திரத் தின்மீது வந்தான். வந்து வீரவாகுதேவருடைய நிலையைக் கண்டு, இதழைக் கடித்துச் சிரித்து, ''இவன் ஓர் ஆண்டகைமை உடையான். நம்மூரைக் கடலில் அமிழ்ந்துபடி செய்தும் இங்கே நின்றுன். எட்டுத் திக்கிலுள்ளாராலும் புகழப்படுகின்ற அசுரர்களுடைய ஆணை நன்று'' என்று கூறி, ''இவனைக் கொன்று உயிரைக் குடிப்பேன்'' என்று நினைத்து, அவருக்கு எதிரே போயினன். கடலில் ஆழ்ந்த அவுணர்களுடைய செயலைப் பார்த்து நின்ற வீரவாகுதேவர் அவன் வருதலைக் கண்டார்.

அப்பொழுது அதிவீரனுக்குப் பக்கத்திலே வந்த அசுரர்கள் வீரவாகு தேவரைச் சூழ்ந்து போர்செய்ய, அவர் வாளை உறையினின்றுங் கழித்து அவர்களைக் கொன்றார். சிரங்களும் கரங்களும் புயங்களும் கால்களும் முதலாகிய உறுப்புக்கள் வெட்டுண்டு அவ்வசுரர்கள் யாவரும் இறந்தார் கள். அவர்களுடைய தலைகள் இரத்தவெள்ளத்தில் மிதந்தன. பிணத் தொகை மலைபோல் வளர்ந்தது. தன் சேனைகள் அழிந்து கடலினுள் வீழ அதிவீரன் கோபித்து, அதனை நோக்கி, ''என் பக்கத்திலுள்ளவர்களைக் கொன்றுய், விரைவில் உன்னைத் தின்பேன், காணுதி'' என்று போரை முயன்றுன். அவன் வருகின்ற தோற்றத்தை வீரவாகுதேவர் கண்டு, ''விரைவில் வருக'' என்று அழைப்ப, அவன் எதிர்த்து, ''இவனை இப் பொழுதே கொல்லுக'' என்று ஒரு வேற்படையை எறிந்தான். அது மார்பை அணுகமுன் வீரவாகுதேவர் வாட்படையினுலே இரண்டு துண் டாம்படி வெட்டினர். வேற்படை வெட்டுண்ணுதலும், அதிவீரன் விரைந்து ஒரு தண்டாயுதத்தை எடுத்து ''உன்னுயிரை இது கவரும்'' என்று வீரவாகுதேவருடைய மார்பின்மீது எறிய, அவர் அதனை வாளி னுல் வெட்டாமல் மார்பில் ஏற்றுர். அது அவருடைய மார்பிற்பட்டுப் பொடியாயது. அதிவீரன் கண்டு வருந்தி, மிகுந்த ஆச்சரியத்தினுய், வேறோர் முத்தலைச் சூலத்தை எடுத்து வீரவாகுதேவருடைய மார்பிற் செலுத்தினன். அவர் அதனைக் கையாற் பிடித்து ஒடித்தார். அதிவீரன் கோபங்கொண்டு, ''இவனைக் கொல்லுதல் அரிது'' என்று எண்ணி,

வாட்படையை எடுத்துச் சுழற்றி இடசாரி வலசாரியாகத் திரிந்து, ''இந்த வாட்படை பிரமதேவர் தந்தது, எவர்க்கும் வெல்லமுடியாதது, அதைப் பிடித்தேன்; நீ சாவாய் இது நிச்சயம், வருக'' என்று பெருமிதமான வார்த்தைகளைச் சொல்லி அவருக்கு முன்னே வந்தான். வீரவாகுதேவர் ''உன்னுடைய வலிமையும் ஆண்மையும் நன்று நன்று! நம்மை நீ வென்றுயெனில் இனி உன்னை யாவரும் வியப்பர். நீ தாமதித்து நின்று சிலவற்றைப் பேசுவது 'என்னை? விரைந்து எதிர்க்குதி; வெற்றியையுடைய வீரருந் தம்மைப் புகழ்வாரோ'' என்றார். என்னலும், அதிவீரன் எதிர்த்தான்; வீரவாகுதேவரும் எதிர்த்தார். இவரிருவரும் சிரம் கழுத்து செவி கதுப்பு கால் கை புயம் மார்பு முதலாகிய உறுப்புக்களை நாடி, அவைகளில் வாட்படைகளை வீசியும், அவற்றை மாற்றியும், ஒருவரையொருவர் நிகர்த்த வராய் இடசாரி வலசாரியாய்ச் சூழ்ந்தார்கள். இப்படிப் போர்செய்யும் பொழுதில், வீரவாகுதேவர் ''வாட்போர் செய்யும் இவனை யான் வலாற்காரஞ் செய்தலியல்போ? முறையால் வெல்வதே அறநெறி'' என்று உட்கொண்டு, சமயம் பார்த்து இடையிலே புகுந்து, அதிவீரனுடைய கால்களையும் கைகளையும் முடியையும் மார்பையும் ஒரே முறையில் வாட்படையினால் வெட்டி வீழ்த்தினர். யமன் வந்து அவனுயிரைக் கவர்ந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## மகேந்திரஞ்செல் படலம்.

வீரவாகுதேவர் வழியில் நின்று அவ்வதிவீரனைக் கொன்று, வாட்படையை உறையுட் செலுத்தி, போரையொழித்து, வீரமகேந்திரத்துக்குப் போவதை எண்ணி, இலங்கையின் எல்லையை நீங்கி எழுந்து ஆகாய வழியைக்கொண்டு சென்றார்; சமுத்திரத்தில் ஆழ்ந்த இலங்கை விரைவில் மீண்டெழுந்தது. அவர் பின்னும் ஆயிரம்யோசனை ஆகாயத்திற் சென்று, மகேந்திரபுரியின் முன்போய், அதின் மதிலையும் கோபுரங்களையும் முதலில் நுனித்துப் பார்த்தார். அம்மகேந்தரபுரியின் வடதிசைவாயிலில், கோபுரத்தின்னையில், கோரன் அதிகோரன் என்னுங் கொடிய வீரர் இருவர் ஆயிரம்வெள்ளம் யானைகளும் ஆயிரம் வெள்ளந் தேர்களும் இரண்டாயிரம் வெள்ளங் குதிரைகளும் இரண்டாயிரம் வெள்ளம் காலாட்களும் ஆகிய சதுரங்கசேனை சமுத்திரத்தோடு அவ்வாயிலைக் காத்துக்கொண்டிருந்தார்கள். மகேந்திரபுரியினுள்ளே போகவேண்டுமென்னுங் கருத்தினையுடைய வீரவாகுதேவர் இந்தச் சேனைசமுத்திரத்தையும் மிகுந்த காவலையுங் கண்டு ஆச்சரியமுற்று, இவ்வாறு சொல்வார்: ''இவ்வடதிசைவாயிலிற் செல்லில் இச்சேனைகள் சூழ்ந்து போர்செய்யும். யானும் மூண்டு போரைச் செய்யினும் இவைகளைக் கொல்ல இப்பகல் முழுதுங் கழியும். இச்சேனைகள் இறந்தாலும் பின்னும் ஒழியுமோ, இந்நகரிலிருந்து நால்வகைச் சேனைவெள்ளங்களும் பின்னும் வரும். வந்த வந்த அசுரப்படைகளோடு எம்பிரானாகிய முருகக்கடவுளுடைய திருவருளினால் யானொருவனும் போர்செய்து அழித்து நிற்பேனையினும், இந்நகரத்திலுள்ள சேனைகளெல்லாம் அழிய அநேகநாட் செல்லும். அவைகள் எளியரா? பலநாட் செல்லினுஞ்

செல்லுக, இந்நகரிலுள்ள அவுணக்கடல்களே இயன்றபடி யான்கொல்லினும், சூரன் பின்னும் தன் புதல்வர்களேயும் துணையாயுள்ள பிறரையும் போருக்கு அனுப்புவான். அவன் அனுப்பிய புத்திரர் மந்திரிமார் ஒழிந்தோர் ஆகிய எல்லாரையும் என்னல் வெல்லமுடியாது; சுப்பிரமணியப்பெருமானுடைய திருவருள் வலியைத் துணையாகக்கொண்டு பற்பல நாள்காறும் போர் செய்து அவர்களைக் கொல்வேனெயினும், எவரானும் வெல்லுதற்கரிய சூர பன்மன் பின்புவந்தெதிர்ப்பான். அவனேடு ஒழியாத வெவ்விய போரை யான் பற்பலநாட் செய்து நிற்பினும், முன்னளிற் செய்த தவத்திற்காகத் தேவாதிதேவராகிய சிவபெருமான் கொடுத்த வரத்தினல் அவன் இறப்பதில்லை; அவனைப் பிரமவிஷ்ணுக்களுக்கும் வெல்லமுடியாது; அவர்கள் இன்னும் அவனுடைய ஆணைக்குப் பயந்திருந்தார். பின்னை யார் அவனை வெல்வார்? யான் பலநாள் எதிர்த்து நின்று யுத்தஞ் செய்யினும், அவன் சிறிதும் தோற்பதில்லை. அங்ஙனமாயின், அவனேடு எதிர்த்து யுத்தஞ்செய்த யான் எதிர்த்து மீளுதல் முறையன்று. ஆதலால் யான் அவனேடு போர்செய்து நிற்கவேண்டும். ஆயினும் துன்பத்தையடைகின்ற தேவர்களுடைய சிறை நீங்குமோ! இவ்வாறு பற்பலநாள் அவனேடு போர்செய்து 'இன்னும் வெற்றி அடைந்திலேன்' என்று இடையிலே போரைவிடுத்துத் தூதுவந்த செய்தியைச் சொல்லுதல் தகுமோ? ஆதலால் எனக்கு என்றும் ஒழியாமற் போர்செய்ய வேண்டும். ஞானநாயகரும் பரம்பொருளையகரும் ஒப்பில்லாத வேதநாயகரும் சிவபெருமான் தந்தருளிய நாயகரும் தேவர்களுக்கு ஆதிநாயகரும் அறுமுகநாயகரும் நிருமலமாகிய சோதிநாயகரும் ஆகிய எம்பெருமான் அன்றி வேறியார் சூரனைச் சங்கரிப்பார். யான் இங்கே சூரனேடு போர்செய்து நிற்பேனெயின், எம்பெருமானுகிய அறுமுகக்கடவுள் பின்னெரு நாள் இங்குவந்து சூரபன்மனை வேற்படையினுற் சங்கரித்துத் தேவர்களைச் சிறையினின்று மீட்கவேண்டும். ஆதலால் யான் இங்கே போர்செய்தல் முறையன்று. அஃதன்றி அது எம்பெருமான்றிருவருளு மன்று. இத்தன்மையனவாகிய போர் தூதர் செய்யத்தகுவனவா? ஆதலின், போர் நிகழாத திறத்தினுற் சூரனிடத்துப் போதலே முறைமை'' என்று இவ்வாறு கருதினர், பேரறிஞராகிய வீரவாகுதேவர். அவர் பின் ''இவ் வடக்குவாயிலில் அளவில்லாதனவும் வலியனவுமாகிய சேனைகள் நெருங்கி நிற்றலின், இவ்வழியால் உள்ளே செல்லுதல் அரிது. ஆதலாற் கீழ்த்திசை வாயிலை அடைவேன்'' என்று எண்ணி, அவ்வடக்கு வாயிலாற் செல்லாது கிழக்குவாய்தலிற் சென்றார். மகிடாசுரன் வீரபானு என்னும் இரண்டு அவுணத்தலைவர்கள் வாட்படையேந்திய கையினராய் அவ்வாயிலைக் காத்து நின்றார். அவர்களோடு வடதிசைவாயிலிற் போல அத்துணை நால்வகைச் சேனைகளும் அவ்வாயிலைக் காத்துநின்றன. இத்தன்மையாகிய கிழக்குவாயிலிற் காவலையும் அங்குள்ள சேனைவெள்ளத்தையும் வீரவாகுதேவர் கண்டு, மிகுந்த ஆச்சரியமுடையராய், ''அவ்வடக்குவாயிலிற் போல அளவில்லாத சேனைகளை இங்குக் கண்டோம். இங்கே அவைகள் இவ்வாயிலை ஆகாயத்திலும் பூமியிலும் நெருங்கிக் காக்கும். ஆதலால் இங்குஞ் செல்லுதல் அரிது. இனித் தெற்குவாயிலாற் போய்ப் பார்ப்பேன்'' என்று கருதி, அவ்விடத்தினின்று நீங்கிப் போயினர்.

திருச்சிற்றம்பலம்.

# கயமுகன்வதைப் படலம்.

வீரவாகுதேவர் மகேந்திரபுரியின் தெற்குவாயிலை நோக்கிச் செல்லும்பொழுது, கயமுகன் என்பவன் ஆகாயத்திலிருந்து அவ்வாயிலைக் காப்பான். அவன் ஆயிரம் யானைமுகங்களையும் அவைகளிற் காலபாசங்கள் போலத் தொங்குகின்ற ஆயிரந் துதிக்கைகளையும் இரண்டாயிரம் கைகளையும் இரண்டாயிரம் புயங்களையும் உடையான்; கோபம் பொருந்திய கொடிய மனத்தை யுடையான்; யமனுக்கும் ஒரு யமன் போன்றவன்; ஏமபுரத்துக்கரசன்; தன்னெடெதிர்த்துப் போர்செய்யப் பகைவரின்றி மனம் மெலிவான்; போரையே மேற்கொண்ட மனத்தையுடையான்; சூற் கொண்ட மேகங்களைக் கடித்து நீரை யுண்டு மீண்டு அவற்றை எறிபவன்; மிகப்பெரிய பாவங்களைச்செய்யும் இயல்பினன்; யானை கரடி புலி சிங்கம் யாளி என்னும் இவைகளில் ஐயாயிரத்தைப் பிடித்து உண்டு இரத்தம் சிந்தும் வாயினன். இவ்வியல்பையுடைய கயமுகன் இறக்குங்காலம் சமீபித்தவனுய், அத்திசையில் வரும் வீரவாகுதேவரைத் தூரத்திலே கண்டு மிகவும் கோபித்து, இவ்வாறு சொல்லிக்கொண்டு வருவான்: ''நம்மவர் பலருடைய காவலை விலகி நீ இங்கு வந்தாய்; மாயங்களைக் கற்றுய் போலும்; வாயுவும் எங்கள் ஆணையைக் கடந்து எக்காலத்திலாயினும் வர வல்லதோ? வறியர்களாய் மயங்குகின்ற எளிய தேவர்கள் இருக்கும் சிறப்பில்லாத ஊர் என்று எண்ணி இந்நகரில் வந்தாய்; நம்முடைய ஆணையின் வலியை அறியாயோ? யான் மிகுந்த சினம் மூண்டு வந்தேன், நீ விரைந்து மாண்டே போனுய்; இனித் திரும்பிப்போவதே இல்லை; உனக்குச் சாக விதித்த இடம் இவ்விடமே; சூரபன்மன் ஆளுகின்ற பழமையாகிய பெரிய இந்நகரை அடைந்து நின்றுய்; சீறுகின்ற சிங்கம் இருக்கும் முழஞ்சில் ஒரு எளிய மான்பிணை வலிமையோடு அதனை ஆராய்தற்கு வருமோ? சமுத்திரத்தைத் தாண்டி, இடையிலிருக்கின்ற இலங்கைமலையை நீங்கி, இம் மகேந்திரநகரைக் காண நினைத்து விரைந்து வருவாய்; தேவர் குழுவில் நீயார்? நாகரிகமில்லாத தேவர்களுள்ளும் நீ புதியவன்போலும்; ஆதலாற்றான் ஒரு வாட்படையோடு மிகத் துணிந்து நீ ஒருத்தன் வந்தாய். மாயையைக் கற்றவனே, நீ இங்கே வருதற்குக் காரணம் என்னை? பரமசிவனே? விஷ்ணுவோ? பிரமாவோ? இந்திரனே? இங்கே உன்னை அனுப்பினவர் யார்? இந்நகரத்தைச் சுற்றுநின்றுய்; ஒற்றுவனுய் வந்தாய் போலும். உன்னை அப்படி அனுப்பினவர் யார்? வந்தகாரணம் என்னை? நீ இறந்தாய், எவ்வாறு உய்வாய்? இங்கே சிறைப்பட்டு உழலுகின்ற தேவர்களுடைய செயலை இந்திரனுடைய ஆளாய் வந்து அறிந்து மீண்டுபோக நினைத்து வந்தாய் போலும்; இதுவுங் குறிப்பா? பெரு நெருப்புச் சுவாலிக்குமிடத்தில் ஒரு பூளைப்பஞ்சை வாயு செலுத்திவிட்டாற்போல, கொல்லும் ஊழானது நொய்மையை யுடையவனுகிய உன்னை இவ்விடத்திற் கொண்டுவந்து விட்டது; நீ முன்னை நம்முடைய ஏவல்கள் எல்லாவற்றையும் செய்து துன்பத்தைக் கொண்டு மறைந்த இந்திரன் பக்ஷத்தைச் சார்ந்தவனல்லன். இன்னும் அஞ்சுகின்றுயில்லை. என்னையும் மதியாய். கொல்லும் யமனைப் போலச் செல்லாநிற்கின்ற திண்மையுடையேனுகிய எனக்கு முன்னே நில்; எங்கடா போவாய்'' என்று கயமுகன் உரப்பிச் சொல்லிக்கொண்டு போயினன்.

வீரவாகுதேவர் ''இவன் சொன்ன வார்த்தைகள் நன்று'' என்று சிரித்து நோக்கி, கயமுகனுக்கெதிரே போய், ''விரைந்து இறப்பவனுய் என்னிடத்து வந்தாய்போலும் வாவா'' என்றார். அப்பொழுது கயமுகன் ஒரு மலையை ஒருகையினுற் பறித்து, ''உன் உடலையும் உயிரையும் இது உண்ணும்'' என்று வீரவாகுதேவருக்கு முன் ஆர்த்து வீசினுன். அம்மலை அவருடைய புயத்தின்மீது வந்துபட்டு, புழுதியுருண்டை உடைந்தாற் போலத் துகளாய் உடைந்துபோயது. கயமுகன் வீரவாகுதேவருடைய வலிமையைக் கண்டு பெருங்கோபமுற்று, ஆயிரங் குன்றுகளைப் பறித்து அவர்மீது மழைபோல ஆர்த்து வீசினுன். அம்மலைகள் புலி முதலாகிய பல மிருகங்கள் ஆரவாரத்தோடு விம்மி விழவும், தேன் சொரியவும், ஊறுகின்ற ஜலம் கடல்போல வழியவும், வீரவாகுதேவருக்கு முன்னரே பம்பரம்போலச் சுழன்றுகொண்டு வந்தன. அவர் அவற்றைக்கண்டு, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளைத் தியானஞ் செய்துகொண்டு நின்றார். அம்மலைகள் அக்கடவுளுடைய திருவருளினுல் இறைப்பொழுதிலே கற்றூணிற்பட்ட மட்பாத்திரங்கள்போல உடைந்து சிந்தி அழிந்தனவன்றி, அவரிடத்து வேருன்றையுஞ் செய்தில. கயமுகன் தான் வீரவாகுதேவர்மேல் விடுத்த மலைகள் யாவும் அவருக்கு ஓர் இடையூற்றையுஞ் செய்யாது அழிந்தமையைக் கண்டு, ஆச்சரியமுடையனுய்க் கோபித்து, ஒரு தண்டாயுதத்தை வீரவாகுதேவர்மேற் செலுத்தினுன். அவர் வானை உறையினின்றுங் கழற்றி, அது வீழும்படி துண்டாக்கி, கயமுகனுக்கெதிரே சென்றார். அவன் வீரவாகுதேவருடைய வலியைக் கண்டு, துதிக்கையை நீட்டி, ஆயிரம் மலைகளைப் பிடுங்கி வீசினுன். வீரவாகுதேவர் அவற்றை விரைந்து வாட்படையினுல் வெட்டி ஆரவாரித்தார். கயமுகன் பின்னும் அவர்மீது விடும்படி பல மரங்களைப் பிடுங்கினுன். வீரவாகுதேவர் அதனைக்கண்டு வாட்படையினுல் அவனுடைய ஆயிரந்துதிக்கைகளையும் அறுத்தார். அறுத்தலும் கயமுகன் வருந்தி, ''இவனைப்பிடித்து உணவாகக்கொள்வேன்'' என்றெண்ணி இரண்டாயிரங் கைகளையும் செறித்து வளைக்க, வீரவாகுதேவர் அதனைக் கண்டு, ஒரு பக்கத்தில் வந்த ஆயிரங் கைகளையும் வாட்படையினுல் வெட்டினார். வெட்டுதலும், அவன் மற்றை ஆயிரங் கைகளினுலும் வீரவாகுதேவருடைய மார்பில் அடித்தான். அவர் மிகக் கோபித்து, வாட்படையினுல் அக்கைகள் எல்லாவற்றையும் வெட்டி வீழ்த்தினார். மூவாயிரங் கைகளும் வெட்டுண்டு ஆயிரஞ் சிரங்களோடு நின்ற கயமுகன், விழுதுகள் முழுதும் போய்ப் பல சினைகளோடு நின்ற ஆலமரத்தைப் போன்றான். இவ்வியல்படைந்த கயமுகன் நாணி, ''இவனைக் கொன்று நம்முடைய உயிரையும் இழப்போம்'' என்று எண்ணி, மற்போர் செய்ய நினைத்து, புயத்தினுல் வீரவாகுதேவருடைய புயத்திலே தாக்கி ஆர்ப்பரித்தான். வீரவாகுதேவர் அதனைக் கண்டு, ''கைகள் எல்லாம் வெட்டுண்டு வலிமையிழந்து நின்ற இவனோடு இனி வாட்போர் செய்யேன்'' என்று கருதி, வாட்படையை உறையினுட் செலுத்தி, அவனுடைய மார்பில் ஒரு பாதத்தினுல் உதைத்தார். அவன் விரைவில் அரற்றி வீழ்ந்து பதைத்திறந்தான். பிளந்த மார்பினின்றும் இரத்தவெள்ளம் கடலிற் பாய்ந்தது.

அதனைக்கண்ட அவுணர்கள் பலர் ''நம்மவர்களாகிய அவுணர்களே பகை கொண்டு நின்று யுத்தஞ் செய்கின்றார்கள்போலும்; இவர்கள் இப் படிப் பொருதற்குக் காரணம் என்னை? அறிவோம்'' என்று எண்ணி, பல நெறிகளிலும் வந்தார்கள். வீரவாகுதேவர் அவுணர்களுடைய வரவைப் பார்த்து, ''இந்தத் தீயோர்கள் என் செயலைக்காணிற் கோபம் மிகுந்து பெரும் போரைச் செய்வர். நானும் இவரோடு நின்று பொருதல்வேண்டும். அங்ஙனம் புரியினும் இவர்களுடைய போர் இன்றோடு முடியுமோ? வேதங் களாலும் அறிதற்கரிய முழுமுதற் கடவுளாகிய சுப்பிரமணியக்கடவுள் பணித்தருளிய அருட்டிருவாக்கை மறந்து இந்த எளியர்களோடு எதிர்த் துப் போரைச் செய்துகொண்டு நிற்றல் புல்லிது; புத்தியன்று. சூரபன்ம னுடைய நகரத்தினுள் விரைந்து செல்லுவேன். எந்தெந்த வாயிலுக்குப் போனாலும் அங்கங்கெல்லாம் அவுணவெள்ளங்கள் காத்துக்கொண்டு நிற் றலால் அவைகளுக்குத் தப்பி மகேந்திரபுரியினுள் இவ்வடிவத்தோடுசெல்லு தல் இயலாது. சுப்பிரமணியக் கடவுளுடைய திருவருளால் வேற்றுரு வெடுத்து, அவுணர்களாற் காக்கப்படும் இந்தக் கீழ்த்திசைவாயிலை விரை விற் கடந்து மகேந்திரபுரியினுட் புகுவேன்'' என்று எண்ணி, அணுவுக் கணுவாயும் பெரியதிற் பெரிதாயும் சர்வவியாபியாய் வீற்றிருக்கின்ற முருகக்கடவுளுடைய பாதாரவிந்தங்களை மெய்யன்போடு தியானித்துத் துதித்து, அவருடைய திருவருளினால் யாவருங் காணுதற்கரிய ஓர் அணு வுருவைக் கொண்டு, அவரைத் துதித்து, கயமுகனைக் கொன்ற போர்க் களத்தை நீங்கி ஆகாயமார்க்கமாகச் சென்று, மகேந்திரபுரியின் கிழக்கு வாயிலில் நிற்கின்ற கோபுரத்தின்மீது போயிருந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## நகர்புகு படலம்.

அணுவுருக்கொண்டு கோபுரத்தின் மீதிருக்கின்ற வீரவாகுதேவர் அந்த நகரிலுள்ள அளவில்லாத வளங்களைப் பார்த்து, இவ்வாறு எண்ணுவார்: —

''இந்நகரிலே தறிகளிற் கட்டப்பட்ட யானைகள் சிவபெருமான் சூரபன்மனுக்குக் கொடுத்த அண்டங்களும் அவற்றிலுள்ள சமுத்திரங் களும் ஒருங்கே வந்து மொய்த்தனபோலும். மயூரகதி சரகதி சசகதி மற்கடகதி மல்லகதி என்னும் ஐவகைக்கதிகளைக் கொண்ட குதிரைச்சாதி கள், பஞ்சபூத அண்டங்களிலுமுள்ள முகிற்சாதிகளெல்லாம் ஓரிடத்தில் வந்து தொக்கனபோலாம். யானைகளும் தேர்களும் மதிக்கப்படும் மற்றைப் பொருள்கள் யாவும் இந்நகரில் இருந்தன. இவற்றைக் கண்டறிந்தவர் களல்லவா சமஸ்த லோகங்களையுங் கண்டவர். இந்த வாயிலில் 'ஓரிலக்ஷ வெள்ளஞ் சேனைகள் நிற்கும்' என்று சுரகுரு சொன்னார்; அவை எண் ணிறந்தனவாய் நின்றன, சுக்கிரனுக்குக் கண்ணில்லாமை போல, வியாழ னுக்கு அறிவில்லைப்போலும்: ஆதலாற்றான் கேட்டதைச் சொன் னார். சூரபன்மனுடைய ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள மலைகளினும் மிக்கன பல தேர்கள்; கடல்களினும் மிக்கன யானைகள்; அக்கடற்றிரை களிலும் மிக்கன குதிரைகள்; கரைகளினுள்ள மணல்களினும் மிக்கன

பதாதிகள். பிருதிவியண்டம் ஆயிரத்தெட்டினுமுள்ள வளங்களெல்லாம் எண்பதினுயிரம் யோசனையெல்லைக்குள் அடங்கியது அற்புதம்; சூரபன்மனுடைய தவத்தினுல் அடங்கினபோலாம். சூரன் தன்னுடைய ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள வளங்களையெல்லாம் இந்நகரிலே தொகுத்தான். அவற்றை நாம் கண்டோம். தருமத்தையும் சத்தியத்தையும் அன்பையும் மாத்திரம் கண்டிலோம்; அவற்றையுந் தந்து தேவர்களுடன் சிறையில் வைத்தான்போலும்! இந்நகரிற்றிரண்ட பல வாத்தியங்களின் ஒலி ஏழ் கடலொலியினும் மிகுந்தன. அவற்றை ஒலிப்பவர் தொகையை யார் சொல்லவல்லவர்! அவரிருக்குமிடங்கள் இரண்டாயிரம் யோசனையுண்டு. யானை துயிலிடம் பதினுயிரம்யோசனை. தேர்கள் நிற்குமிடம் பதினுயிரம் யோசனை. குதிரைகள் கட்டுமிடம் இருபதினுயிரம்யோசனை, பையவாக ஆராய்ந்தால் இவைகளிருக்குமிடத்தின் யோசனைப் பரப்பு இன்னும் உண்டு போலும். குதிரைகளின் வாயினின்று வரும் விலாழி நீரும் யானைத்துதிக்கையினின்றும் வரும் மதநீரும் கலந்து, இந்நகரத்துப் பெண்கள் அணிந்து தள்ளிய சந்தனத்தையும் மலர்களையும் வாரிக்கொண்டு அகழியிற் பாய்ந்து சமுத்திரத்தையடையும். வளப்பமிகுந்த இம்மகேந்திர நகரை உண்டாக்க ஒரு பிரமாவால் முடியுமோ! சூரபன்மனுக்குரிய ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள பிரமர்கள் யாவரும் வந்து உண்டாக்கினுர்கள். பிரமர்கள் இந்திரனுடைய நகரமும் மற்றைத் திக்குப்பாலகர் நகரமும் முதலிய நகரங்களையெல்லாம் இந்த நகரத்தைப் படைத்தற்குமுன் கைகள் திருந்தப் படைத்தார்கள் போலும். பொன்னுலகமாகிய சுவர்க்கம், மற்றை மேலுலகங்கள், பூமி, பாதலம் முதலிய இடங்களை 'போகம் அநுபவித்தற்குரிய இடங்கள்' என்று மேலோர் கூறினர்; அது சமுத்திரத்தை அறியாதவர் சிறு குளத்தைப் புகழ்தல்போலும். இன்பம் யாவும் உள்ள நகரம் இதுபோல் வெறியாதோ! கசரததுரகபதாதியாகிய நால்வகைச்சேனைகளும், எல்லாவண்டங்களினுமுள்ள சமுத்திரங்களையெல்லாம் சூரன் இங்கே கொண்டுவந்து சிறைசெய்தால் அதைப்போலும்; வேறுவமை சொல்லுதற்கொன்றுமில்லை. துகளும் அகிற்புகையும் மிகவும் நொய்ய அணுக்களும் நுழைய வரிதென்னில், இந்நகர் வீதியெங்குஞ் செறிந்த நால்வகைச் சேனைகளின் மிகுதியை யார் சொல்லவல்லவர்! இம்மகேந்திரபுரிக்கிணையாகச் சிறந்த நகரம் ஒன்றுமில்லை. 'இணையாகவுளது' என்று சொல்லுதற்கு, ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள வளங்களெல்லாம் இது போல வேறொரு நகரத்துளதோ! இம்மகேந்திரபுரியைச் சூழ்ந்த கடல், பொன்னுற்செய்து இரத்தினங்கள் அழுத்திய இந்நகரில் நிழல் தன்னிடத்திற் பிரதிபிம்பிக்கப்பெற்று, இழிந்தவன்பெற்ற செல்வம்போல அப்பொன்களும் மணிகளும் ஒருவருக்கும் பயன்படாமையால் மற்றைக் கடல்களின் புகழையே தானுங்கொள்வது. கடலாற் சூழப்பட்ட இம்மகேந்திரபுரியிற் செல்வம், பேய்கள் சூழ்ந்த காளிகோயிலிற் கற்பகம் பிறர்க்குதவாதது போலப் பிறரெவர்க்கும் பயன்பட்டிலது. பானுகோபன் கொளுத்தச் சுவர்க்கம் எரிந்தது என்றது பொய்; தன்னிற்சிறந்த இம்மகேந்திரபுரியை நோக்கிச் சகித்தற்கரிய பெரிய நாணஞ்சுடத் தன்னலந் தேய்ந்து கரிந்தது போலும். சூரனுடைய ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள சூரியர்களெல்லாரும் அவனுடைய பணியினுல் வந்து தட்பமாகிய கிரணங்களை நடாத்தி

நின்றாற்போல, இந்நகரில் எங்கும் பொருந்திய மாணிக்கரத்தின சிகரங்கள் எண்ணில்லாதன. பூலோகம் முதலாகிய மேலேழுலோகங்களைப்போல ஏழ்நிலைகள் பொருந்திய கோபுரங்கள் எங்குஞ் செறிந்தன. சூரியர் சந்திரர் முதலாகிய கிரகமண்டலங்களிற் பொருந்திய நிலைகளையுடைய மாடங்கள் நெருங்கியுள்ளன, நூறுயோசனை நீளமும் ஆறுயோசனை அகலமும் உள்ள வீதிகளிற் சதுரங்க சேனைகள் நெருங்கி, செல்ல முடியாமையினால் ஆகாயத்திலுஞ் செல்லும். விரைந்து செல்லும்படி அவுணர்கள் சவுக்கினலடிப்பதுபோல, சூளிகையிற் கட்டிய கொடிகள் அடிக்க, சூரியனுடைய தேர்க்குதிரைகள் செல்வன. பளிங்குமாடங்கள் அகிற்புகையான் மறைதல், சீலமில்லாத அவுணர்களுடைய கீர்த்திகளெல்லாம் அவர்களுடைய பாவத்தினால் மறைதல்போலும். அளவில்லாத மாடங்கள் நவமணிகளாற்செய்து விளங்குவன. படிகத்தினாற்செய்த மாளிகையின்மேலே மயிலிருக்க, பக்கத்தில் அகிலம்புகை சேர்தல், முயற்களங்கத்தோடு கூடிய பூரணசந்திரனைச் சூழ்ந்து முகில் போதலைப் போலும். மாணிக்கமாளிகைமீதும் பளிங்குமாளிகைமீதும் உள்ள பொன்னிலத்திலே பெண்கள் கள்ளைப் பருகிக்கொண்டிருத்தல், செந்தாமரைப் பொகுட்டியின்மீதும் வெண்டாமரைப் பொகுட்டின் மீதும் வண்டுகளிருந்து தேனைப் பருகுதல்போலும். மறுவில்லாத வெண்மையாகிய அரிசியை வருணன் களைந்து தொகுப்ப, அவற்றை ஊன்களோடு அக்கினிதேவன் பாகம்பண்ண, அரம்பையர்கள் பரிமாற, நெய் கலந்த அவ்வுணவுகளை அவுணர்கள் தம் மனைவியர்களோடு மறுசிகை நீக்கி உண்பார்கள். தலைவன் தலைவியாகிய இருபாலாரும் நெருங்கி நிகழ்த்துகின்ற காட்சி, புணர்தல், பிரிதல் முதலாகிய துறைகள் எவ்விடங்களினும் நிகழ்வன; மன்மதனுடைய உலகம் இதுவே. காளையர்கள் முத்து வடம் மேகலை முதலாகிய ஆபரணங்களைத் தூதுவர்கள் வாயிலாகப் பரத்தையர்களுக்கு அனுப்பிவிட்டு, அப்பரத்தையர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டனவற்றையும் வெறுத்துத் தள்ளினவற்றையும் அறியும்படி வழி பார்த்தயருவார்கள். அவுணர்களுடைய மாலையிலும், பெண்களுடைய மாலையிலும், மாளிகையைச் சூழ்ந்த சோலைகளிலும், தடாகங்களிலும், யானை செல்வழியிலும், யாழ்வாசிக்குமிடத்திலும் போய்ப்போய், என்னுடைய மனத்தைப்போல வண்டுகளுந் திரியும், சூரபன்மனுடைய ஆணையால் வருந் தென்றல், கடலில் அளாவி, சோலையில் உலாவி, மாளிகைகளிலுள்ள பலகணிவாயில்கடோறும் கட்குடித்தவர்கள் போலமெல்லமெல்ல அசைந்து செல்லும். மாளிகைகளின் மேலிருக்கும் பெண்கள் தங்களை மிக அலங்காரஞ் செய்து அவ்வழகைப் பார்க்கக்கருதி, சூரியனைக் கையாற் பற்றிக் கண்ணாடி போலப் பார்த்து, மீட்டு ஆகாயத்தில் எறிவார்கள். மேன்மாடங்களிலே, பரத்தையர்கள் ஊடிக்குமிடுயைப்பற்றி இழுத்துக் கால்களினால் உதைத் தலினாற் பொற்சரடு அற, ஆடவர்கள் தமது கைகளை முகிலிற் போக்கி மின்னலை வாங்கி, அவிழ்ந்த தங்குடுமியைக் கட்டினார்கள். சில மாளிகைகளினுச்சியிலுள்ள துன்பமென்பது சிறிதுமறியாத பெண்கள் ஆகாயத்திலியங்கும் கிரகங்களையும் இடியையும் பற்றி அம்மனையும் பந்துமாக எறிந்து விளையாடுவார்கள். மாளிகைகளிலுள்ள சில பெண்கள் தங்கடைய பிள்ளைகள் அழுதலைக் கண்டு, அவர்கள் விளையாடும்படி சூரியனுடைய தேரிற் கட்டிய குதிரையைப் பிடித்துக் கொடுத்தலும், அவன் வந்து வேண்டிநிற்க, அக்

குதிரைகளே அக் குழந்தைகளிடத்திலிருந்து மெல்ல வாங்கிக் கொடுப்பார்கள். மாளிகையில் வருஞ் சில பெண்கள் கையைநீட்டி இடியையும் மின்னலையும் பிடித்துத் தொடுத்துத் தம் புதல்வர்களுக்குக் கிங்கிணிமாலையாகக் கட்டியும், மேகத்தைப் பிடித்துச் சிற்றுடையாக உடுத்தியும் மகிழ்வர். மேன்மாடங்களின்மேலே சூரியன் போகக் கண்ட குழந்தைகள், அவனே ஒரு கனியென்று கையாற்பற்றிக் கறித்து, நெருப்பு உறைத்தலால் விட்டு அழ, அதனைக்கண்ட நற்முயர்கள் கங்காஜலத்தை மொண்டு ஊட்டுவர். தங்கள் குழந்தைகள் அழ, மேன்மாளிகையிலுள்ள பெண்கள் சூரியனுடைய கைகளிலுள்ள இரண்டு தாமரை மலர்களேயும் வலிதாய்ப் பிடுங்கிக்கொண்டுவந்து அவர்கள் அழாவண்ணம் கொடுப்பர். மேல் மாளிகைகளிலுள்ள சில பெண்கள் ஆகாய வழிக்கொண்டு செல்லுந் தேவர்களைத் தம்மை வந்து சேரும்படி அழைத்தலும், அவர்கள்மறுக்க, 'வஞ்சர் வஞ்சர்' என்று அரற்றி அத் தேவர்கள் பின்பு உடன்பட, அவ்வொலியைக் கேட்டு அங்கு வந்தவர்களுக்கு 'நம்முடைய குழந்தைகளோடு விளையாடுகின்றேம்' என்பார். மாளிகைகளிலுள்ள அசுரப்பெண்கள் வலிந்து தம்மைப் புணர்பவர் என்றுஎண்ணி, தேவர்கள் வரவும் அஞ்சுவர்; வராதிருக்கவும் அஞ்சுவர்;அவர் கரவாகத் தம்மைப் புணர்தலே அவுணர்கள் காண்பார்களோ என்றும் வெருவுகின்றூர்கள். அத்தேவர்கள் என்செய்வார்! மாளிகைகளிலுள்ள அசுரப் பெண்கள் பலர் தம்முடைய பிள்ளைகள் ஓயாமல் அழ, சூரியனுடைய தேர் வரும்பொழுது 'சூரியனே நம்முடைய குழந்தைகளே வானுலகத்திற் சிறிது தூரங் கொண்டுபோய் மீளக் கொண்டுவந்து தருவாய்' என்று அத் தேரில் ஏற்றிவிடுவார்கள்; தெய்வப்பெண்கள் மூதேவிகளாகிய அவுணப் பெண்களுடைய கால்களேத் தோழிமார்போல வருடி ஏவல் செய்வர். ஆராயின் உலகத்தில் வேண்டியவற்றை வேண்டியாங்கு உதவும்படி நின்றன தவமேயன்றி வேறியாவையுள. ஐந்தருக்களும், சிந்தாமணியும், காமதேனுவும், பதுமநிதியும், பிறவும் இந்நகரில் ஆடவர்களும் பெண்களும் இருக்குமிடந்தோறும் வந்து, அவர்கள் மனதில் விரும்பிய வற்றை விரும்பியபடி கொடுத்துத் திரியும். மாளிகைகளிலிருக்கும் சில அசுரப்பெண்கள் ஆகாயவழியிற் செல்லுவோர் சிலரை அசமுகியைப்போல ஆசையினலே வலிந்து பிடித்து முறைமுறையாகக் கூடி, 'போங்கள்' என்று விடுவார்கள். முன்னளிற் பானுகோபன் சூரியனைச் சிறை செய்ததை நினைத்து, 'இன்னும் யாது நிகழுமோ' என்று பயந்து, அவனுடைய கிரணங்கள் இந்நகரத்துப் பலகணிகள்தோறும் வந்து நுழைதல் இல்லே. வாயு மாடங்களேப் பெருக்க, வருணன் வாசனே கலந்த ஜலத்தைத் தெளிக்க, சூரியன் அதனே யுலர்த்த, அவுணர்கள் விரும்பி இருந்தார்கள். விஷ்ணு பாற்கடலில் இலக்ஷ்மியைத் தழுவிக்கொண்டு நித்திரைசெய்தல்போல, பளிங்குமாடத்தின் மீது சூற்கொண்ட மேகம் மின்னலோடு உறங்கும். குழலும், யாழும், கொம்பும், முழவும் முதலாகிய வாத்தியங்களிலெலியும், பாட்டொலியும், விழாவொலியும் கடலொலியினும் மிகும். ஆடவர்களும் பெண்களும் வீதிகளிலே எறிந்து விளையாடும் கலவைச்சாந்து சேறுகும். அவர்கள் அணிந்து நீக்கிய ஆபரணங்கள், நக்ஷத்திரங்கள் தங்கள் பதங்களினின்றும் வழுக்கி விழுந்தன போலும். சில அசுரப்பெண்கள் மிகுந்த ஆசையை ஒருவனிடத்துவைத்து, அதனே வெளிப்படுத்தாமல் மெலிவடை

தலும், அதனை அவர்களுடைய அடையாளங்களே சொல்ல, ஆற்றுதவர் களாய், 'மனமே ஒளிப்பதென்னை? சொல்வாய்' என்று கிளிப்பெடைக்குச் சொல்வார்கள். சிறுவர்கள் மான்கன்றுகளைப் பூட்டிச் செலுத்துகின்ற தேருருளையின் பொன்னை இரத்தினங்கள் அழுத்திய நிலம் கவர்ந்துகொள் வன. மனிதரைப் பொருளாசையுடையர் என்று நாம் வெறுப்பதென்னை? முனிவரும் அதனை விரும்புவர். இப்பூவுலகினிற் பொருளாசையை நீங்கி னோர் யாவர்? ஆசை நீக்கிய தவத்தினராயினும், இம்மகேந்திரபுரியின் செல்வங்களை ஒருவர் சொல்லக் கேட்பினும், தாமும் 'அசுரராகப் பிறத் தல் வேண்டும்' என்று தவஞ் செய்வர்; ஏனையோர் செய்கையைச் சொல்ல தென்? மிகப் பல நாட்டவஞ் செய்தவர்களே இந்நகரின் வளத்தைக் காண் பார். யானைகள் சொரியும் மதஜலம் ஆறுபோலப் பாய்ந்து, குழந்தைகள் எறிந்து விளையாடும் சுண்ணப்புழுதியினால் வற்றுவன. கங்கையும், சுத் தோதக சமுத்திரமும், இந்நகரத்துச் சனங்கள் பருகவும், ஸ்நானஞ் செய் யவும் மாளிகைகளிலும் வீதிகளிலும் சோலைகளிலும் மற்றும் வேண்டிய இடங்களிலும் வாவியும் பொய்கையும் பிற நீர்நிலைகளுமாயிருக்கும். வில் வாள் முதலாகிய பல படைக்கலங்களைப் பயில்வோரும், மற்போர் செய் வோரும், மாயஞ்செய்வோரும், மந்திராப்பியாசஞ் செய்வோரும் ஆகிய இவர்களுடைய இடங்கள் எங்கும் உள்ளன. நரம்புமேலே வெளிபடத் தசை யில்லாமற் காய்ந்து நரைத்துத் தண்டூன்றி மூத்துத் தள்ளாடுவோரையும், கூற்றுவனால் உயிர் நீங்குவோரையும், வியாதியாளரையும், வறுமையினால் வருந்துவோரையும் இந்நகரிற் கண்டிலேம். இது தவவலியே. கருப்பஞ்சாற் றுக்கடல், தயிர்க்கடல், நெய்க்கடல், மதுக்கடல், பாற்கடல் ஆகிய இவை கள் சூரபன்மனுடைய ஆணையினால் இந்நகரிலுள்ள வீடுகடோறும் வந்து பல பெரிய குளங்களாய்த் தனித்தனி யிருப்பன. சில பெண்கள் காய்ச்சின மது வையும் காய்ச்சாத மதுவையும் பருகி, நாணத்தை விட்டவராய், உடுத்த பட்டுவஸ்திரங்களைக் கிழித்து, தம்மோடு பேசி, கைகொட்டிக் குரவைக் கூத் தாடுவர். பெண்களும் ஆடவர்களும் சிறிது நேரத்துட் பலமுறை அலங் காரஞ் செய்தலால் அணிந்தணிந்து நீக்குகின்ற ஆபரணங்களும், வஸ்திரங்க ளும், மாலைகளும், வாசனைத்திரவியங்களும், பிறவும் நெருங்கி, பூமியிலுள்ள தேவருலகம் என்று சொல்லும்படி கடைவீதிகள் சிறப்புற்றிருக்கும். கொய்த லர்ந்த பூக்களையும் முத்துக்களையும் கொழித்து விளையாடும் சிறுமியர் கிறு முறங்களால் எற்றுகின்ற பொற்புழுதி இந்நகரளவில் மாத்திரம் பரக் குமோ, சமுத்திரத்தைத் தாண்டி அதன் கரையிலுள்ள கானலையடைந்து அதன்மேலும் நிமிரும். செம்மலர்களாலும் வெண்மலர்களாலும் தொடுத்த பந்துகளைச் சிறுவர்கள் கரங்களிலேந்தி ஆகாயத்திற் போம்படி எறிய, அவைகள் சூரியசந்திரர்கள் வழுக்கி வீழ்தல்போல வந்து வீழ்வன. மாலைக் காலத்திற் சந்திரன் வந்துதிக்க, அதன்பின் நக்ஷத்திரங்கள் ஒன்றொன்றும் உதித்தல்போல, உபாத்தியாயர்கள் கல்லூரிகளில் முன்புசெல்ல, கல்வி கற்குஞ் சிறுவர்கள் தனித்தனி வந்தடைவர். கட்குடித்துக் களிப்பவர் சிலர் அக்களைத் தமது கையிலிருக்கும் ஆண்கிளிக்கு ஊட்டி, அதற்குக் காம நோயை மிகுவித்து, சேவலன்னம் பார்த்திருந்து இரங்கப் பெடையன் னத்தை அது புணரும்படி செய்வர். சில ஆடவர்கள் வலிமையினாலே தேவர்களிடத்திற் றும் கவர்ந்த கிரீடங்களிலுள்ள இரத்தினங்களைப் பறித்

துத் தம் பரத்தையர்களுடைய பாதுகைகளிற் பதிப்பார்கள். சில அவுணர் கள் தமது மனைவியர்கள் வருந்தவும் அவரைச் சேராதவராயும், பரதார கமனத்தினுற் றம்முயிர் போமென்பதை நினையாராகியும், பிறர் மனைவி யரை விரும்பி, கள்ளவழியால் அவரை அடைவர். இதனையும் என்கண் காண்பதே! இந்நகரில் இயக்ஷப் பெண்களும், அரம்பையர்களும், அவுணப் பெண்களும், இராக்ஷதப்பெண்களும், பொதுப்பெண்களாயிருப்பர். பரத் தையர்களும் காமுகர்களும் வாசனைகலந்த களபச்சாந்துகளையும் சுண்ணங் களையும் பூம்பந்துகளையும் மாலைகளையும் சிவிறிநீரோடு எறிந்து விளை யாடுதல் யாவருடைய உளத்தையும் மயக்கும். இந்த வீதியோ உருவமில் லாத மன்மதன் உருவமுடையனுய் வீற்றிருக்குமிடம். பொன்னன்னங்களும் புறுக்களும், மயில்களும் கிளியின் சாதிகளும், இவைபோன்ற பல பறவைச் சாதிகளும் இந்நகரத்துப் பெண்களுடைய கைகள்தோறும் இருப்பன. முதலில் விவாகஞ் செய்துகொண்டவர்களும், பின்பு விவாகஞ் செய்து கொண்டவர்களும், காந்தருவவிவாகஞ் செய்து கொண்டவர்களும், இசை பாடிக்கொண்ட இல்லப்பரத்தையரும் சேரிப்பரத்தையரும் ஆகிய இவர் களுடைய கூட்டத்தில், வண்டுகள் பலபூக்களிலும் சென்று சென்று தேனைப் பருகுதல்போல, ஆடவர்கள் சென்று சென்று புணர்வர். சில பெண்கள் சில காளையர்களுடைய அழகின்னலத்தைப் பார்த்து அவரை விரும்பி, தம்முடைய சரீரம் விளர்க்க, அவரைக் கூடவேண்டும் என்று நினைத்து, கிழியைத்திருத்தி, பல நிறம்பொருந்திய கலவையைக் குழைத்து அதில் அவருடைய உருவத்தை எழுதுவார். சில பெண்கள் அழகிற்சிறந்த சில ஆடவரிடத்தில் ஆசைவைத்து மனம் பரவசப்பட்டு, குஞ்சைப்பெற்று நீங் காத பெடைமயிலைத் தழுவித் தமது துயரைச் சொல்லி, அவரிடத்திற் றூது விடுத்து, அது வரும் வழியைப் பார்த்து வருந்துவார். சில பெண்கள் தம்மை நீங்கிய நாயகரை நனவிலுங் கனவிலு மனத்தில் நினைத்துக் கண் ணீர் வடியவும், ஸ்தனங்களிலணிந்த சாந்துலரவும் வாட்டமுறுவர். சில பெண்கள் மேன்மாடங்களில் தமது இதழ் வேறுபட்டு முகம் வேர்ப்ப இரவு பகல் வேற்றுமை அறியாதவராய், நாயகர்களோடு புணர்வர். சில பெண் கள் ஆட்டினிரத்தத்தை அன்னத்தோடு பிசைந்து மேலே யெறிந்து, மலர் களைத் தூவி, தாம் வசிக்கும் வீட்டிலே தெய்வத்தை வழிபட்டு, பறையொ லிக்க, தெய்வத்தை ஆற்றுப்படுத்தி வெறியாட்டாடுவர். மாடங்களின் மேல் ஆடுகின்ற பெருங்கொடிகள் மரக்கலங்களிற் பொருந்திய பாய்மரங் களை ஒத்தன. நால்வகைச் சேனைகளும் படைத்தலைவர்களும் பாகர்களும் சூழவும், முரசு முதலிய வாத்தியங்கள் முன்னே முழங்கவும், அளவில்லாத அரசயானைகள் கோயிலைவந்தடைவன. மாலைகளை முடித்த குடுமியையுடை யர்களும் சூற்கொண்ட மேகம்போலும் நிறத்தையுடையர்களும் ஆகிய சில வீரர், வில் வாள் முதலிய படைக்கலங்களிற் சாமரங்களைத் தொங்கக்கட்டி, வெற்றிமுரசடிக்க, முன்வருவர். யானையாளி, புலி, சிங்கம், ஆமா, யானை, மரை முதலாகிய மிருகங்களைக் கொன்று,அவற்றின் மாமிசக்குலைகளை வீதி களிலுள்ளோர் வாங்கும்படி வண்டிகளிலேற்றிக்கொண்டு வருவார்பலர். சிகரங்களும், சூளிகைகளும், உபரிகைகளினடுக்குக்களும், சோலைகளும், செய்குன்றுகளும், ஓடைகளும், வாவிகளும், தடாகங்களும், மாடங்களும் எங்கும் உள்ளன. முன்னே அடித்துச் செல்லும் முரசங்களையும், திவங்களை

யும், மாலைதொங்கும் படைகளையும், ஒற்றைக் குடையையும், மூன்று குடையையும், இரட்டைச் சாமரங்களையும் உடையராகிய அளவில்லாத வீரர்கள் ஈண்டே வந்தார்கள். பூமிதேவிசெய்த தவப்பயன் என்று சொல்லத் தக்க இம்மகேந்திரபுரியின் மிகுந்த வளத்தைக் காணுதல் அளவிறந்த கண்களைப் படைத்தவர்களுக்கன்றி, ஆயிரங் கண்களையுடைய இந்திரனுக்காயினும், இரண்டு கண்களையுடைய மற்றையோர்க்காயினும் எளிதாமோ! அளவிறந்த கண்களையுடையவரும் விரும்பி இவ்வளங்களை நோக்கினாலும் அளவிடப்படுமோ! மேகங்கள் வந்து நாடோறும் பருகினாலும் பெரும்புறக் கடல் வற்றுமோ! இந்நகரத்திலுள்ள வளங்களோ அளவில்லாதன. எண்ணில்லாத கண்களையுடையோர்கள் இவற்றுள்ளே தாங்கண்டனவற்றைச் சொல்வாராயினும், ஒரு நாவினாற் சொல்லமுடியுமோ! அவர் ஆயிரகோடி நாக்களைப் பெறுவாராயிற் சொல்ல வல்லவராவர். அப்படி அவர் சொல்லினும், உடம்புமுழுதும் செவித்துவாரமில்லாதவர்கள் எங்ஙனங் கேட்பார்? ஆயிரம் பதினாயிரங்கோடி நாக்கு, அளவில்லாத ஆயிரங்கண்கள், ஆயிரமாயிரஞ் செவிகள், ஆயிரம் மனங்கள் ஆகிய இவற்றையுடையவர்க்கன்றி இந்நகர்வளங்கள் ஆயிரம்யுகம் கண்டு நினைத்துச் சொன்னாலும் அடங்கா. இங்குள்ள அவுணர்கள் இவ்வளங்களைத் தமது ஐம்புலன்களினாலும் தவறுதலின்றி அனுபவிக்க விரும்பிப்போலும், தவஞ்செய்து பத்து நூறு ஆயிரம் கோடி என்னுந் தொகைகளையுடைய சிரசுகளைப் பெற்றார்கள். முன்னவர்க்கு முன்னவராகிய அறுமுகக்கடவுளுடைய திருவருள் வலியால் யான் அளவிறந்த உருவங்களை எடுத்து இந்நகர்வளங்களெல்லாவற்றையும் பார்ப்பேன்; இப்பொழுது பகைவர்களுக்கு என்னைக் காட்டுதல் தகாது என்று அதனை ஒழிந்தேன். இத்தன்மையவாகிய பெருவளங்கள் எல்லையின்றி உள்ளன. இவைகளை மனத்தால் நினைப்பினும் பற்பலநாட் செல்லும். இவை முழுதையும் நுண்ணிதாய் ஆராய்ந்து பார்க்க நினைத்தேனையின், இவ்வொரு பொழுதில் முடியா. பிரமதேவரறியாத பிரணவப்பொருளை அகத்தியமுனிவருக்குபதேசித்தருளிய எம்பெருமான் பணித்த ஏவலைச் செய்யாது இந்நகர்வளங்களைப் பார்த்துக்கொண்டிருந்து யான் காலதாமதஞ் செய்வது முறையோ'' என்று வீரவாகுதேவர் நினைத்தார்.

பின்பு வீரவாகுதேவர் கீழ்த்திசைக் கோபுரத்தின் சிகரத்தினின்று அந்நகர வளங்கள் சிலவற்றைப் பார்த்து, சூரபன்மன் இருக்கின்ற நகரியை அடையும்படி நினைத்து, இடையிலுள்ள வீதியிற் பரிசனங்கள் நெருங்கிப் பரவி நிற்றலைக்கண்டு, சூழ்ச்சியோடு கீழ்த்திசைச் சிகரத்தை நீங்கி, வேதங்களின் துணிபொருளாயும் ஞானநாயகராயுமிருக்கின்ற அறுமுகக்கடவுளுடைய திருவருளைத் துணையாகக்கொண்டு அந்நகரத்தின் நடுவே ஆகாயமார்க்கமாகச் சென்று, பானுகோபனுடைய கோயிலை அடைந்து அதனைப் பார்த்து, ஆச்சரியமடைந்து, அதனை நீங்கி, அக்கினிமுகனுடைய கோயிலையும், அதன்பின் இரணியனுடைய கோயிலையும், அதன்பின் வச்சிரவாகுவினுடைய கோயிலையும், அதன்பின் மூவாயிரருடைய கோயிலையும் கடந்து, மூதன்மந்திரியாகிய தருமகோபனுடைய மாளிகைச் சிகரத்தின்மீதே தங்கி, சயந்தனும் தேவர்களும் அவுணர்கள் சூழத் துன்பமுற்றிருக்கின்ற சிறைக்களத்தை நாடிப்பார்த்தார். யானைக்கூட்டங்கள் பிரிதலும், வேட்டுவர்கள்

பிடித்துக்கொண்டுவந்து மறைவிடத்தில் அடைப்ப அதில் அகப்பட்டு வருந்தும் யானைக்கன்றுகள் போல, இந்திரன் மறைந்து போயபின் அசுரர் களுடைய சிறையிலகப்பட்டு வருந்துகின்ற சயந்தன் முதலிய தேவர்களு டைய செய்கையிற் சிலவற்றை இனிச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

## சயந்தன் புலம்புறு படலம்.

தேவர்களோடு சிறையிலிருந்த சயந்தன் வில்வித்தை பயின்றமையினுற் கன்றிய கையைப்போல இரண்டு கால்களினும் பலநாள் விலங்கு பூண்டமை யினலே தழும்படைந்தவனுய், மானமும் வலியும் நாணமும் நீங்க, பழியா கிய நெருப்புச் சூழ, பெருமூச்சாகிய வாயு நின்று உயிரை அலைக்க, மிக்க துன்பக்கடலில் அழுந்திச் சோருவான். அவன் சகித்தற்கரிய சிறையினல் இறப்பான், அல்லது அநேகயுககாலம் துன்பத்திலாழ்ந்தமையால் மிக்கபழி நீங்கும்படி வலிய உயிரைவிடுவான். அமுதம் உண்டமையினல் இவ்விரண்டு மில்லாதவனுயினன். அவன் சிறையிலகப்பட்டு, தம்முடல் துணிப்புறுவோர் போலத் துன்புற்று, ஒரு கணப்பொழுதை அளவிறந்த யுககாலம் போலக் கழித்திருப்பான். மரகதத்தினுற் செய்த ஓவியம் அழுக்கடைந்தாற்போல வும், நீலோற்பலப்பூமாலை புலர்ந்தாற்போலவும் ஆயினன். சிறையிலகப் பட்டிருந்த நூற்றெட்டுயுகங்களில் ஒரு கணப்பொழுதாயினும் நித்திரை செய்வானுயின், அவனுடைய துன்பம் சிறிது நீங்கும். என்றும் நித்திரைசெய் யாத இயற்கையினனுதலால் ஒழியாத துன்பத்தினனுயினன். அவன் மிகுந்த துன்பத்தில் நெடுங்காலம் இருத்தலினலும் இறவான், தன்னுயிரை வலிய விடவுமாட்டான், இறையளவும் இமையைக் கூட்டவுமாட்டான். மேலா கிய தவமுந் துன்பத்தை உண்டாக்குமோ! நாடோறும் சிறைக்காவலர் களாகிய அவுணர்களைக் கண்டு பயந்து, தன்னழகிழந்து, உய்யுந்திற மொன்றுங் காணுதவனுய்க் கலங்கினன். மரகத ரத்தினம்போலுந் தன் வடிவந் துயருழத்தலால் வெய்துயிர்ப்பாகிய புகைபட மறைந்தும், கண் ணீர் சிந்தலால் உடனே விளங்கியுந் தோன்றுவான். தன்னுடைய பெருந் துன்பத்தை நினைத்து நினைத்து, அவுணர்களும் இரங்க ஏங்கி அழுவான். அதனைக்கண்ட காவலாளர்கள் அச்சுறுத்துதலும், ''இது பழுதுபோலும்'' என்று கையால் வாயைப் பொத்துவான். ''அவுணர்கள் சிலர் இந்திரன் அயிராணியோடு மறைந்திருந்த இடத்திற்குப் போய் அவர்களைப் பிடித் துக்கொண்டு வந்தார்கள்'' என்று சில காவலாளர்கள் சொல்லிய பொய் மொழி முடிதற்குமுன் அயர்ந்துவிழுவான்; ஐந்தருநீழலை நினைப்பான்; பூஞ்சயனத்தை நினைப்பான்; தன்னைப்போலப் பாவிக்கின்ற அன்பிற் சிறந்த பெண்களுடைய புணர்ச்சியை நினைப்பான்; மேலாகிய இந்திரபோகத்தை எண்ணிச் சோருவான்; ''நிகரில்லாத ஐந்தருநீழலிற் போகங்களை அனுப விக்து நாம் நாளும் இன்புறுகின்ற பொன்னகரம் பொடியாய்ப் போங் கொலோ'' என்றெண்ணுவான்; ''நாம் முன்போலச் சுகமாயிருப்பது என்று?'' என்பான்; ''சூரபன்மன் பிடித்துக்கொண்டு வரும்படி அனுப் பிய சேனைகள் சுவர்க்கவுலகத்துக்குச் செல்ல, என்னுடைய இருமுதுகுர

வரும் அவரைக்கண்டு தம்முருவை மறைத்து ஒளித்தோடினர். அவர் எவ் விடத்தினரோ?'' என்பான்; ''முன்னாளில் என்தந்தை, தாயோடு சுவர்க் கத்தை நீங்கிப் பூவுலகிற் போயினன் என்று சிலர் சொல்லக்கேட்டேன். அங்கே நிகழ்ந்தவற்றை அறியேன்'' என்பான். ''சில தேவர்கள் தம்மு டைய துன்பத்தைச் சொல்லவெண்ணி என்றந்தையினிடத்திற் போயி னர்கள். அவர்கள் அவனைக் கண்டார்களோ, கூடினர்களோ, பிரிந்தார் களோ, நிகழ்ச்சி என்னையோ?'' என்பான். ''என்பிதா சூரபன்மன் செய் கின்ற துன்பங்களெல்லாவற்றையும் சிவபெருமானுக்கு விண்ணப்பஞ் செய் யும்படி திருக்கைலாசமலைக்குச் சென்றனனே?'' என்பான்; ''என்னுடைய தாய்தந்தையர்கள் பகைவர்களாகிய அவுணர்கள் காணுதவண்ணம் ஒளித் தாரோ, அல்லது அவர்களிடத்து அகப்பட்டார்களோ அல்லது எப்புவ னங்களிலும் திரிந்தார்களோ? அறியேன்'' என்பான்; ''அவுணர்கள் சூர பன்மனுடைய ஏவலால் என்னுடைய தாய்தந்தையர்களை இங்கே கட்டிக் கொண்டு வரும்படி போயினர்கள். அவர்கள் ஒளித்ததை அந்த அவுணர் கள் காண்கிலரோ அறியேன்'' என்பான்; ''என் தாயும் தந்தையும் அவு ணர்களுடைய வரவைக் காண்பார்களாயின், துன்பம் பொருந்திய மனத் தினராய் நடுங்கி என்னபாடு படுவார்களோ அறியேன்'' என்பான்; ''பொன்னுலகம் எரிந்ததையும் புதல்வனாகிய என்னை அவுணர்கள் இந்நகரிற் கொண்டுவந்து சிறைசெய்த துயரத்தையும் கேட்டபின் என்னைப் பெற்ற தாய் என்ன நினைத்து இரங்குவாளோ?'' என்பான்; ''மிகப் பெரியமாயங் களில் வல்லஅவுணர்கள் என்னுடைய தாயையும் தந்தையையும் தேடிப் பிடித்துக்கொண்டு வந்து எனக்கு முன்பேவிட்டால், என்னுயிர் பின்னும் இருக்குமோ?'' என்பான்; ''என் தாய்தந்தையர்கள் உயிரோடிருந்த சொற் பிறந்ததில்லை, அவர்கள் ஆற்றுத துன்பத்தை அனுபவித்த காரணத்தினால் சிவபெருமானை நினைத்துத் தவஞ்செய்து முத்தியடைந்தார்களோ?'' என் பான்; ''யான் பானுகோபனோடு யுத்தஞ்செய்த நாளில், ஐராவதயானை என்னைச் சுமந்துகொண்டு சென்றபொழுது, தந்தங்கள் ஒடிந்து போர்க் களத்தில் வீழ்ந்தது. அதன்பின்பு அது எங்கே சென்றதோ அறியேன்'' என்பான்; ''யாவர்க்காயினும் பிறந்தநாண்முதல் இறக்குநாள்வரையும் உளவாகின்ற அனுபவங்களெல்லாம் ஊழின் வலியால் வரும். ஆதலால் வினையினேன் அவுணரை வெறுப்பதேன்'' என்பான்; ''கெடுதலில்லாத நகரம் அழியவும், தந்தையும் தாயும் உயிரோடொளித்தோடவும், எளியே னாகிய யானொருமகன் நீங்காத சிறையிலகப்படவும் முன்னாளிற்செய்த தீவினை யாதோ? அறியேன்'' என்பான்; ''சிவபெருமான் சூரபன்மனுக்கு அழியாத வரத்தைக் கொடுத்தமையினால் அவன் இறவான், நம்மை விடு தலுஞ் செய்யான், இச்சிறை எப்பொழுது தீரும்'' என்பான்; ''மிகுந்த வளங்களையும் பொன்னகரையும் வாழ்வையும் இருமுதுகுரவரும் விடுத்துப் போயினர் என்று மனந்தெளிந்து, பாவியேனும் நகரத்தைவிட்டு ஒடிப்போ யினேனில்லை; உந்த அசுரர்கள் பிணிக்கச் சிறையில் அகப்பட்டேன்'' என் பான்; ''இவ்வுயிரை நீக்குகின்றேனில்லை, வசையுருவண்ணம் பாதுகாக் கின்றேனுமில்லை, தந்தை தாயர்களிடத்துண்டாகிய துன்பத்தைத் தெளி விக்கின்றிலேன், தமியேனுந் தெளிகிலேன், ஐயகோ! இச்சிறையை ஆற் றேன் ஆற்றேன்'' என்பான்; ''அறம் தொலைந்ததோ, பாவஞ் சிறந்

ததோ, தவப்பயனுந் தேய்ந்ததோ, நன்னெறி குறைந்ததோ, கலிகாலம் வந்ததோ, வேதம் அழிந்ததோ, சிவனும் இல்லையோ?'' என்பான்; ''பகைவர்களாகிய அசுரர்கள் வருத்துதலால் என் பிதாமாதாக்களைத் தேடிச் சென்ற தேவர்களைப்போல ஒழிந்த தேவர்களையும் ஓடிப்போக விடாமல் நீங்காத இச் சிறையில் யான் வீழ்த்தினேனே'' என்பான்; ''அந்தியில் வேதாத்தியயனத்தை மறந்திருந்தேன், சந்தியாவந்தனத்தையும் அக்கினி காரியத்தையும் விடுத்தேன், சிவபூசையை ஒழித்தேன், முன்னை அறிவையும் இழந்தேன்'' என்பான்; ''யான் உயிரோடிருப்பின் இச்சிறைத்துன்பம் நீங்கிச் சுகத்தோடிருக்கின்றிலேன், வெந்த வைக்கோற்புரி வடிவம் போலப் பொய்யாகிய இவ்வுடம்பைச் சுமந்து துன்பமுற்றேன்'' என்பான்; ''இனி வேறு சொல்லுவதென்னை! நாம் செய்த வினையினுலே காளகண்டராகிய சிவபெருமானே எல்லையில்லாத இத்துயரை நமக்குச் செய்தார்'' என்பான்; ''இவ்வுலகமும் உயிர்களும் உயிரல்லவும் ஆகியும், இவை யல்லவாயும் ஆன்மாக்கண்மீது வைத்த பெருங்கருணையே திருமேனியாகக்கொண்டு, திருவிளையாடல் செய்கின்ற தேவதேவராகிய சிவபெருமானன்றி, வேறியார் என் குறையை நினைத்து இரங்குவார்'' என்பான்; ''பெறுதற்கரிய செல்வமெல்லாம் பிழைத்துச் சூரபன்மன் இறப்பதும் அவுணர்கள் அழிவதும், நம்முடைய இந்தச் சிறை நீங்குவதும், தீராத வசை போவதும், ஒரு நாளைக்குக் கிடைக்குமோ?'' என்பான்; ''கல்வி, கேள்விகளையுடைய மெஞ்ஞானிகளின் நுட்பமாகிய மனத்திலே வீற்றிருக்கின்ற சந்திரசூடராகிய சிவபெருமானது திருவருட் பேற்றையுடையேனுயின், இந்தப் பெருந்துயர்க் கடலினின்றும் ஏறுவேன். வினையேனுக்கு அஃதில்லைபோலும்'' என்பான். சயந்தன், இவ்வாறு அளவில்லாதனவற்றை எண்ணி எண்ணி, துன்புற்றுப் பெருமூச்சுவிட்டு விம்மி, தன்னைச் சூழ்ந்த தேவர்கள் யாவரும் தத்தமிலிரங்க, சிறைக்களத்திலிருந்தான்.

வீரவாகுதேவர் சென்ற அந்நாளில், சிறைக்களத்தைக் காக்கின்ற கண்டகன், உதாவகன், கராளன், மாபலன், சண்டகன், நிசங்கன், சங்கன் முதலாகிய அவுணர்கள் கூடி, சயந்தனையும் தேவர்களையும் அக்கினிபோலக் கோபித்துச் சூழ்ந்து, ''நம்மரசனுகிய சூரபன்மனுடைய பணியின்வழி நில்லாத இந்திரனும் அயிராணியும் எங்கேயிருக்கின்றார்கள்? விரைந்து சொன்னுல் உய்வீர், அல்லது உங்களுயிரைத் தொலைவிப்போம். முன்னைப்போல எண்ணுதொழிமின். உண்மையைச் சொல்லுங்கள்'' என்றார்கள். அதனைக் கேட்ட சயந்தன் ''எம்முடைய தாயுந் தந்தையும் சுவர்க்கத்தினின்றும் ஓடியதைக் கண்டோம், பின்பு அவர் அடைந்த தன்மையை அறியோம். துன்பநோயுள் அகப்பட்ட யாங்கள் இதனை ஆராய்ந்து சொல்வோம்'' என்றான். தேவர்கள் ''எம்மரசனுகிய இந்திரன் முன்னேர்நாளிலே, தன் மனைவியையுமழைத்துக்கொண்டு ஓடிப்போயினன், போன இடம் இது என்று அறியோம். நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, மனம் பரவசப்படப் புண்படும் யாங்கள் என்ன சொல்லுவது!'' என்றார்கள். சயந்தனுந் தேவர்களும் இவ்வாறு சொல்லிய பொழுதில், அக்காவலாளர்கள் ''இவரெல்லாரும் மனமொருவழிப்பட்டுத் துணிந்தார் போலும். எந்தத் தண்டனையினுல் இவர்கள் உண்மையைச் சொல்லு

வார்கள்'' என்றுஎண்ணி, அவர்களுக்குத் துன்பஞ்செய்கின்றார்: வெவ்விய நஞ்சைப்போலவும், நெருப்பைப்போலவும் மிகவுந் தீய சொற்களைச் சொல்லி வைவர்; உரப்புவர்; காதிலே செல்லும்படி தோமரத்தைச் சொருகிக் கடைவர்; உடம்பு முழுதையுஞ் சின்னஞ் செய்வார்போலச் சேதிப்பர்; கண்டதுண்டஞ்செய்த அங்கங்கள் பின்பு விரைவிலொன்றி உடம்பில் வந்து கூடுதலும், கோபித்து, கையில் வாட்படையை எடுத்து, மிக்க வலிமையினுடனும் அவர்களுடைய மார்பைக் குடைவர்; தலை வெடிக்கும்படி தண்டத்தால் மோதுவர்.

இத்தன்மையாகக் காவலாளர்கள் யாவரும் எண்ணில்லாத தண்டனைகளைச் செய்ய, சயந்தன் தேவர்களும் தானும் ஆற்றுதவனுய்க் குலைந்து, சிவபெருமானை நோக்கிப் புலம்புகின்றான். அவன் பல ஆயுதங்களினுலே காவலாளர்கள் தன்னைத் தண்டித்தபோதும், கூற்றுவனுடைய கையிலகப்பட்டுத் துயருழக்கும் பாவிகளைப்போல மிகுந்த துன்பத்தை அநுபவித்ததன்றி, உடம்பழிந்திறந்திலன். மெய்ஞ்ஞானிகள் ஐம்புலன்களின் வழியே நின்று பிராரத்த கன்மங்களைப் புசித்தாலும், அவை வாயிலாக மேலே ஆகாமியங்கள் அவர்களை அடையாதவாறுபோல, காவலாளர்கள் தண்டனைகளைச் செய்யவும், சயந்தன் தேவர்களோடு இறந்திலன், தழும்புகளையும் பெற்றிலன்; தன்னைச் சூழ்ந்த தேவர்களோடு சயந்தகுமாரன் சிறையிற் புகுந்தான்; இந்திரன் காட்டில் ஓடிப் போயினன்; மற்றைத் தேவர்களும் துன்பமுற்றார்; தேவருலகம் அழிந்தது. ஆதலால், சிவபெருமான் ஈந்தருளும் மோக்ஷமொன்றேயன்றித் துன்பமில்லாத செல்வம் வேறுண்டோ!

காவலாளர்கள் வாள் தோமரம் வேல் தண்டம் முதலிய படைக்கலங்கள் யாவும் முரிய, தங்கள் கைகளும் வலிமை குன்ற, நொந்து, சயந்தன் முதலிய தேவர்களைத் தண்டிப்பதை விடுத்து, ''இவர்கள் பின்னுளிலே தமக்கு விதித்த காலவரையறையிலன்றி அதற்கிடையில் வேறொரு பாயத்தாலும் இறவார்; அங்கங்களுங் குறையார்; மேலான அமிர்தத்தை உண்டார்; தவத்தான் மிக்கார்; வருந்தார்; ஆவா! நாம் செய்த தண்டனைகளால் வருந்தி ஒன்றையுஞ் சொற்றிலர்'' என்று ஆச்சரியமுற்றார். இந்தத் தண்டலாளர்கள் யாவரும் சயந்தனையும் தேவர்களையும் மெய்நோகும்படி செய்த தண்டனையினுற் கைநொந்து, வலிமையும் நீங்கி, பெரியோர்களுக்குச் செய்த தீங்கு உடனே தம்மை வந்து சூழ அதனுல் வருந்துதல்போலத் தாம் கவற்சியுற்றார். இத்தன்மையாகிய காவலாளர்கள் அணிமையில் நெருங்கித் தம்மரசன் பணித்த ஆணை கடவாதவராய்த் தேவர்களைக் காப்ப, அவர்களுள்ளே சயந்தகுமாரன் தேவாதிதேவராகிய சிவபெருமானை நினைத்து இவ்வாறு புலம்புவான்:—

''வழிபடுவோருடைய பாவங்களை மாற்றுபவரே, எத்தேவர்களுடைய சிந்தைக்கும் எட்டாத சிவனே, செழுஞ்சுடரே, இந்தப் பிறப்பில் அடியேங்களை இடருழப்பச்செய்தீரே! தேவரீருடைய புணர்ப்பை யார் கடந்துவர்! யானைக்கும், கரிக்குருவிக்கும், நாரைக்கும், பாம்புக்கும், சிலந்திப்பூச்சிக்கும், இவைகளினுந் தாழ்ந்த பிறவுயிர்களுக்கும் முன்னிலிலே பேரருளைச் செய்தீர், எமக்கு ஏன் அருள்செய்கின்றிலீர்! 'கங்கையைத் தரித்

தவரே, காளகண்டரே, நெற்றிக்கண்ணையுடையவரே, சந்திரனைத்தரித்த வரே, சிவனே சிவனே,' என்று இங்கே உம்முடைய அடியேங்களாகிய நாங் களெல்லோரும் அழுதலை எங்களுயிர்க்குயிராகிய நாயகரே நீர் கேட்கி லீரோ? பாசங்களினால் ஆன்மாக்களையெல்லாம் பந்திப்பவரும் அன்பினால் அப்பாசங்களை நீக்கி அருள்செய்வோரும் சிவபெருமானே' என்று வேதங் கள் சொல்லும். நீர் செய்த இத்தீமையை நீரன்றி வேறியார் தவிர்க்க வல்லவர்! பிரமாவும் விஷ்ணுவும் தேடிக் காண்டற்கரிய முதல்வராகிய கடவுளே, ஆராயில் உயிர்க்கெல்லாம் நீரன்றி வேறியார் துணையாவார்! தமியேனுடைய உயிரைப் பாதுகாக்க வந்தருளும் வந்தருளும். முன்னாளிலே தேவர்குழுவை வருத்தும்படி கோபங்கொண்டு கூற்றுவனைப் போலவந்த அந்தகாசுரன் வலிமையிழக்க அவனுடைய மார்பில் முத்தலைச்சூலத்தை அழுத்தினவர் நீரல்லவா? எமக்கு ஏன் இரங்கலீர்? தேவர்கள் ஏங்கிப் புறங் கொடுத்தோடும்படி துரத்திய குரண்டகாசுரனை வதைத்து, அடையாள மாக அவனுடைய ஒரு சிறையை வாங்கியணிந்த அருளை இங்கே அடியே னிடத்தில் வைத்திலீரே! பிரமாவும் விட்டுணுவும்பிறரும் வணங்கித்துதிக்க, பாற்கடலினின்றும் உலகத்தைத் தொலைக்கும்படிவந்த நஞ்சையுண்ட அருளை இங்கே அடியேனிடத்து அயர்த்தீரோ? காளியானவள் உலகத்துயிர் களை உண்ணும்படி ஒடிவருதலும், அவள் பார்த்துப் பயந்து நாணிச் செருக்கு நீங்கும்படி, ஊர்த்துவதாண்டவஞ்செய்த திருவருள் இங்கணு காதோ? கைலாசமலையிலே சரண்புகுந்த தேவர்களைக் கோபத்துடன் கொல்லவந்த சலந்தராசுரனைச் சக்கரப்படையினாற் பிளந்து அத்தேவர்களை அஞ்சற்கவென்று காத்தவர் நீரன்றே? கயாசுரன் காசிப்பதியில் முனிவர் களைத் துரத்திக்கொண்டு வர, கோபித்து அவனுடைய தோலையுரித்துப் போர்த்த அந்தக் கருணைக்கு அடியேந் தகுதியிலமோ? பத்துச் சிரங்களை யும் இருபது கரங்களையுங் கொண்ட பஞ்சராவணர்கள் உலகத்தை அலைப்ப, அவர்களை வீரஞ்செய்து கொன்ற நிருமலரே, எங்களை இந்த அவுணர் வருத்துகின்ற கொடுந்தொழிலைத் திருவுள்ளஞ் செய்யீரோ? தேவர்பெரு மானே, முன் ஓர் இந்திரன் தக்கனைப்போல உம்மை அறியாது ஒரு யாகத்தைச் செய்ய, தேவர்களைத் துண்டஞ் செய்து, அவ்விந்திரனுடைய தோளை முரித்தீர்; அந்தத் தண்டனையை இப்போது இவ்வசுரர்களிடத்துக் காட்டீரோ? எம்பெருமானே, கொடிய அவுணர்களோடு முப்புரங்களையும் எரித்தீர்; அசுரர்களோடு கூடிய இந்தப் புரத்தையும் அக்கினிக்குதவ வொண்ணுதோ? பாலச்சந்திரனைத் தரித்த கடவுளே, அன்புடையவர் களுக்கு அருள் செய்கின்றீர்; அடியேனிடத்துப் பத்திநெறி சிறிதுமில்லை, எவ்வாறு அருள்செய்வீர்? அருளிற் சிறந்த உம்மிடத்தில் அன்பில்லாத அடியேன் மிக நொந்து சொல்லியது என்னுடைய பேதைமையே ஆனா லும், தீயேன் வருந்தும் பொழுது, அருள் கொண்டு தேவரீர் தாமாக எழுந்தருளிவந்து தலையளி செய்து ஆண்டீரேயானால், நீங்காத இத்துயரம் நீங்குமே; நீங்கினால், முன்னாள் போல அடியேன் சுவர்க்கலோகபோகத்தை விரும்பிலேன். நாம் ஒவ்வோர் தினைனகளைச் செய்ய, அந்த ஒவ்வொன் றிற்கும் ஒவ்வொன்றாய், அரக்கர்களாலும் அவுணர்களாலும் முனிவர் களாலும் தேவர்களாலும் பிறராலும் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்ததன்றி என்றைக்கு மகிழ்வாய் இடரற்றிருந்தேம். பாலச்சந்திரனையும் பாம்பை

யும் கங்கையோடு தரித்த ஆதியே, உம்முடைய திருவருளால் மிகுந்த இத்துன்பம் நீங்கினுல், இழிந்த விண்ணுலகபாக்கியத்தை விரும்பேன்; தவத்தைச் செய்வேன் செய்வேன். ஐந்தருநீழலில் வாழ்க்கையை விரும்பிப் பெருந்துயரைச் சம்பாதித்துக்கொண்டேன். வானுலகமும் கோதென்றே கண்டேன். பிரமா முதலிய பிறருடைய பதங்களின் அழிவையும் கண்டேன். சிவனே, தொண்டனேன் உம்முடைய பதத்தையே வேண்டுவேன். துன்பத் தைத்தரும் பிறவி அமையும் அமையும். விண்ணுலகத்திலிருந்து பழைய செல்வங்களை அனுபவிக்குந் துன்பமும் அமையும் அமையும். தில்லையிற் றிருநடனஞ்செய்யுந் தேவரே, இனித் தமியேனுக்கு நேர்ந்த இத்துன் பத்தை விரைவில் நீக்கி, உம்முடைய திருவடியைத் தந்தருளும். சிவமா யும், சிவமும் சத்தியுமாயும், பஞ்சசாதாக்கியமாயும், இருபத்தைந்து கேவலமூர்த்தங்களாயும், பின் இம்முறையே சங்காரக்கிரமமாகப் பஞ்ச சாதக்கியமாயும், அளவிடப்படாமல் நின்றீர். இத்தன்மைகளெல்லாம் ஆன்மாக்களுடைய துன்பங்களை நீக்கி அவைகளுக்கு மிகவும் அருள்புரிதற் கேயன்றே! கொன்றைப்பூமாலையைத் தரித்த சடையையுடைய கடவுளே, இப்பொழுது நேர்ந்த இத்துன்பத்தை நீக்கி, பின்பு சுவர்க்கவுலகத்திற் றங்கவிடாது, மிகத் தவஞ்செய்து பெறுதற்கரிய தேவரீருடைய திருவடி களின் கீழே பேரின்பத்தை ஒருதலையாகப் பொருந்தும்படி அடியேனுக்கு அருள்செய்யும்'' என்று பற்பலவற்றைச் சொல்லி இரங்கி, விஷந் தலைக் கேறினற்போலச் சென்று சென்று துன்பம் மூடி அறிவுமுழுவதையுங் கெடுக்க சயந்தன் ஒன்றும் அறியாதவனுய் மயங்கி, உயிர் ஒளித்து உலைய, இறந்தவர்போல நிலத்தில் வீழ்ந்தான். ஆலமரஞ் சாய்தலும், அதனைப் பக்கத்திற் சூழ்ந்து படர்ந்தகொடிகள் தியங்கி விழுந்தன்மைபோல அவனைச் சூழ்ந்த தேவர்களும் ஏங்கி உயிர்பதைக்க அறிவழிந்து வீழ்ந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## சயந்தன் கனவுகாண் படலம்.

உயிர்க்குயிராய் வியாபித்திருந்து அருள்புரிபவரும், ஒரு துணையுமின் றித் தனித்தயருகின்ற சிறுவரைத்தழுவி அஞ்சற்க என்று பாதுகாக்க வரு கின்ற பெற்ற தாயைப்போன்றவரும், ஒரு குமாரரைப்போலத் திருவுருக் கொண்டு திருச்செந்திற்பதியில் வந்து தேவர்களுடைய துன்பத்தை நீக்கும் படி வீற்றிருக்கும் நிருமலரும் ஆகிய அறுமுகக்கடவுள், தேவர்களும் சயந்த னும் மகேந்திரபுரியிற் சிறைக்களத்தில் அவுணர்களால் மெலிந்து பெருந்துய ரோடும் மயங்கிக் கிடத்தலைத் திருவுளஞ்செய்து, அவர்களுக்குத் திருவருள் செய்யக்கருதி, வலப்பக்கத்தில் கொடி, வச்சிரம், அங்குசம், பாணம், வேல், அபயம் என்னும் இவைகளும், இடப்பக்கத்தில் வரதம், தாமரைப்புஷ்பம், மணி, மழு, தண்டு, வில் என்னும் இவைகளும் பொருந்திய பன்னிரண்டு திருக்கரங்களையும், ஆறு திருமுகங்களையும் கொண்டு, அவசமடைந்த சயந்தனுடைய கனவிலே எழுந்தருளிவந்து, அத்திருவுருவத்தைக் காட் டியருளினர். சயந்தன் சூக்குமசரீரத்திலுள்ள ஞானக்கண்களால் அவரைத் தரிசித்து, ''அடியேன் படுந் துன்பத்தைப் பார்த்து அதனை நீக்கும்படி

திருவுள்ளத்திற்கொண்ட பேரருட்டிறத்தால் எழுந்தருளிவந்தீர். பார்க்கின் விஷ்ணுவுமல்லீர், பிரமாவுமல்லீர், தேவநாயகராகிய சிவபெருமானுமல்லீர், நீர் வேறியாவர்? சொல்லியருளும்'' என்று விஞவினன். இருவினைகளும் நீங்கி மனம்தெளிந்த மெய்ஞானிகளுடைய அறிவினுளறிவாயிருப்போராகிய அறுமுகக்கடவுள்: ''யாம் கொன்றைமாலையைச் சடையின்மீதே சூடிய பரமசிவனுடைய குமாரர்; உன்னுடைய துன்பத்தையும் இரக்கத்தையும் மயக்கத்தையும் அறிந்து, அவற்றை நீக்கும்படி வந்தோம்'' என்று கூறி, பின்னரும் சொல்லியருளுவார். ''உன் பிதா தன் குறையையும் உங்கள் குறையையும் வந்து சொல்லி நம்மை வேண்ட, அளவில்லாத சேனைகளோடும் இப்பூவுலகில் வந்து, கிரவுஞ்சம் என்னும் மலையையுந் தாரகனையுஞ் சங்கரித்து, செந்திற்பதியில் வீற்றிருந்தேம். பிரமாவும் விஷ்ணுவும் உன் பிதாவும் தேவர்களும் நம்முடனிருக்கின்றார். சயந்தனே வருந்தற்க; வாழ்வாய்; கேட்குதி. உன்னுடைய தாயும் மேருமலையிலிருக்கின்றாள். வீரவாகு வென்பானை யாம் இந்நகரிற் சூரபன்மனிடத்துத் தூதாக அனுப்பினேம். அவன் இற்றைப்பகலில் சூரபன்மனுடைய குமாரனெருவனைப் பல அவுணர்களோடுந் தொலைத்து, இந்நகரத்தை அழித்து நீறுக்கி, மாலைக்காலத்தில் நம்மிடத்துக்குத் திரும்பிவரச் செய்வோம். இற்றை நாட் கழிந்தபின் நாளையே செந்திற்பதியை நீங்கி இம்மகேந்திரபுரியில் ஒரு சாரில் வந்திருந்துகொண்டு, பத்துநாளில் அவுணர்கூட்டங்களும் நுமக்குத் துன்பஞ்செய்த சூரபன்மனும் முடியும்படி சங்கரித்து, உன்னைத் தேவர்களுடன் அவன் இட்டசிறையை நீக்கி, உங்களுடைய சுவர்க்கவுலக வளங்களையெல்லாம் ஈவோம். சயந்தனே, உன்னுடைய துயரை இப்பொழுதே ஒழிவாய்'' என்று அருளிச்செய்தார்.

சுப்பிரமணியப்பெருமான் இவ்வாறு அருளிச்செய்த அருமைத் திருவாக்குக்களைக் கேட்டலும், சயந்தனுடைய மனத்திலுள்ள அஞ்ஞானமாகிய இருள் நீங்கியது; மகிழ்ச்சி குடிகொண்டன; மயிர்கள் சிலிர்த்தன, கண்கள் ஆனந்தபாஷ்பம் பொழிந்தன; புயங்கள் மலைபோல நிமிர்ந்தன; அவன் அமிர்தத்தை இலேசாகப் பெற்றுப் பருகினைபோலத் தன் மெய்குளிர, கற்ற கற்ற வேதங்களைப் பாடினன், ஆடினன், களித்தான். அவன் பெற்ற உவகையின் பெருக்கத்தை யார் இவ்வளவென்று சொல்ல வல்லார். முன்னுண்டாகிய அவசத்தை நீங்கி இவ்வாறு பெருமகிழ்வடைந்த சயந்தன் எம்பெருமானுடைய திருவடித்தாமரைகளிலே போய் வணங்கித் துதித்து, ''எம்பெருமானே தேவரீர் வலிய வந்து, மிக நொய்ய அடியேங்களுடைய துன்பத்தை மாற்றி அருள்செய்தீர். நாயினுங் கடையேனாகிய அடியேன் தேவரீருக்கு விண்ணப்பஞ்செய்யுங் குறை சிறிதாயினுமுண்டோ! உம்மிடத்தே அடைக்கலம் புகுந்தேம், எங்களைக் காத்தருளும்'' என்றான். சயந்தன் இவ்வாறு விண்ணப்பஞ்செய்ய, எவர்க்கும் மேலோராகிய முருகக்கடவுள் அதனைச் திருச்செவி மடுத்து, ''அயர்ந்த உங்கள் குறை நீங்கும் வண்ணம் நாம் காப்போம், இது நிச்சயம்'' என்று திருவாய்மலர்ந்து, பின்னும் அதற்கிசைய, ''இந்நகர்க்கு யாமனுப்பிய வீரவாகுவென்னுந் தூதுவன் உன்னையுந் தேவர்களையும் வந்து கண்டு இனிய மொழிகளைக் கூறி மீளும்படி அனுப்புவோம்; அதையும் காண்பாய்'' என்று அருளிச்செய்து மறைந்தார்.

படைப்புத்தொழில் கைகூடாமல் அயர்ந்த பிரமாவினுடைய கனவிலே வந்து, ''உனக்கு அருள்செய்யும்படி பதினெரு உருத்திரரை உன்னிடத்தனுப்புவோம்'' என்று அருளிச்செய்து மறைந்த சிவபெருமானைப் போல, அசுரர்களால் வருத்தமுறுகின்ற சயந்தனுக்குச் சுப்பிரமணியக் கடவுள் இவ்வாறு திருவாய்மலர்ந்து மறைதலும், அவன் முன்னர் நீங்கிய ஐம்புலன்களும் பொறிகளிலே வெளிப்பட, கனவினை நீங்கி, பையப்பைய நனவையடைந்து, பாம்பின்விஷந் தலைக்கேறப்பெற்றுச் சாய்ந்தவர்கள் விஷவைத்தியருடைய மந்திரம் பலித்தபொழுது மனமயக்கந் தீர்ந்தெழுமாறு போல எழுந்து, கனவிற்கண்ட எல்லாவற்றையும் நினைவில் வருவித்து, நெஞ்சங் குளிர்ந்து, ''நம்முடைய வினையெல்லாம் இவ்விடத்தே தொலைந்தனவோ!'' என்று வியந்து, முன் துன்பக்கடலிலாழ்ந்தவன்பின் சிவகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவருளை நினைத்து ஆனந்தக் கடலில் ஆழ்ந்தான். அப்பொழுது அறுமுகக்கடவுள் அயர்ந்த தேவர்களுடைய கனவுதோறும் விரைந்துசென்று, முன் சயந்தனுக்குச் சொல்லியவாறே சொல்லி, மறைந்தருளினர். மறைதலும், அத்தேவர்கள் கனநீங்கி விம்மிதத்தோடு விழித்தெழுந்திருந்து, கனவைத் தம்முள்ளே யோசித்து, மிக மகிழ்ச்சியடைந்தார்கள். சயந்தனுக்கு அணிமையிலிருக்குஞ் சில தேவர்கள் வெவ்விய இழிமொழிகளைப் பேசும் காவலாளர்களாகிய அவுணர்கள் கேட்பார்களாயின் தம்மை வருத்துவார் என்று அஞ்சி, அக்கனவை அவன் கேட்கும்படி மெள்ளச் சொன்னர். தேவர்கள் சொல்லிய அற்புதமாகியகனவைச் சயந்தன் நினைத்து, அக்கனவு தான் முன்கண்டது போன்றிருக்கக் களித்து, உடம்பு பூரித்து, முதல்வராகிய அறுமுகக்கடவுள் விசுவாந்தரியாமியாய் வீற்றிருப்பதையும், அடியார்களுக்கு அவர் கருணைசெய்யுந்திறத்தையும் நினைத்து, சிரத்தையோடுஅவருடைய திருவடிகளை வழிபட்டுக்கொண்டு சிறைக்களத்திலிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## வீரவாகு சயந்தனைத் தேற்று படலம்.

சயந்தன் தேவர்களோடு இவ்வாறு சிறையிலிருத்தலும், பேய் தான் கண்ட செல்வத்தைக் காக்குந்தன்மைபோல, அவர்களைக் கீழோர்களாகிய அவுணர்கள் அச்சிறைச்சாலையிலே காவல்செய்துகொண்டிருத்தலைப் பேரறிஞராகிய வீரவாகுதேவர் கண்டு, ''கண்ணோட்டமின்றித் துன்பமாகிய பயிரின் வேலிபோல இவர்களைக் காக்கின்ற அவுணர்கள் என்னைக் காணாராய் அறிவின்றி மயங்கவும், சயந்தன் முதலிய தேவர்கள் என்னைக் காணவும், தமியேன் இச்சிறைக்களத்திற் செல்லவேண்டும்'' என்று எண்ணி, பிரணவப் பெருளாய் உயிர்க்குயிராய் வியாபித்திருக்கும் குமாரக்கடவுளைத் தியானஞ்செய்து, அவ்விடத்துக்கேற்ற அக்கடவுளுடைய ஒரு திருமந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, சிறைக்களத்துட் சென்றார். காவலர்கள் அம்மந்திரமாகிய வலையிலகப்பட்டு மயங்கி ஓவியம்போலாயினர்.

சயந்தனுந் தேவர்களும் வீரவாகுதேவரைக் கண்டு, ''அவுணர்கள் இன்று காலையில் நம்மை வருத்த நாம் இறந்தவர்போல அவசமடைந்த

சமயத்தில், தேறுதலடையும்படி எழுந்தருளிவந்து நமக்கருள்செய்த அறு முகக்கடவுளுடைய தூதுவராமாம் இவர்'' என்று எண்ணி, அன்பிற் சிறந் தார். வீரவாகுதேவர் அச்சிறைக்களத்துட் புகுந்து, முருகக்கடவுளுடைய நாயகமாகிய திருநாமத்தைச் சொல்லித் துதித்துக்கொண்டு, சயந்தனுக்கு முன்னே இருந்தார். அத்திருநாமம் அமுதம்போலத் தன் செவித்துளையுட் புகுதலும் துன்பத்திலாழ்ந்த சயந்தன் மகிழ்ந்து, முன்பு அறியாதவன் போல அவரை வணங்கி, ''அவுணர்கள் பாவம் சூழ்வதுபோல எம்மைச் சூழ்ந்து வருத்திப் பாதுகாக்க அதனால் மிகுந்த துன்பத்தையடைகின்ற எங்களிடத்து நீர் வந்ததென்னை? சொல்லும்'' என்றான். அதனைக்கேட்ட வீரவாகுதேவர் ''சிவகுமாரராகிய அறுமுகக்கடவுளுக்குத் தம்பியாயுள் ளேன், அவருக்குத் தூதனானேன், நந்திகணத்தைச் சார்ந்தேன், என் பேர் வீரவாகு, உங்கள் சிறையை விடும்பொருட்டுச் சூரபன்மனிடத்துச் சொல்லும்படி அக்கடவுளுடைய ஏவலால் வந்தேன்'' என்றார். என்ன லும் தேவர்களோடு சயந்தன் கேட்டு, ஞானசமாதியினாலே சிரசிலிருந்து ஒழுகும் அமுததாரையை நுகர்ந்த பெரியோர் அதன்பின் பாற்கடலிலுள்ள அமிர்தத்தையும் பருகினாற்போல, முன்னே சுப்பிரமணியக்கடவுளைத் தரி சித்ததனால் அடைந்த மகிழ்ச்சியின்மேலும் முடிவில்லாத மகிழ்ச்சியைப் பெற்று, ''தலைவரே, துன்பம் மிகுகின்ற எங்களுடைய குறையை வினவு தற்பொருட்டு வந்தீர். அதனால் இந்தச் சிறையும் நீங்கிற்று; யாங்கள் துன்பமெல்லாம் நீங்கி உய்ந்தோம்; பிறவிகள் நீங்கும் ஊதியத்தையும் அடைந்தேம்'' என்றான். வீரவாகுதேவர் அதனைக்கேட்டு, ''சூரனிடத்து என்னைத் தூதனுப்பிய ஞானசத்திதரராகிய அறுமுகப்பெருமான் உங்களை வலியவந்தாண்டிடுகின்றார்; பழைய சுவர்க்கவுலக வளங்களையும் பெறுதிர்; பின்னும் வேண்டியவற்றை அடைகின்றீர்'' என்று கூறி, பின்னும் சொல்லுவார்; ''தேவர்காள், தம்மை வழிபட்ட அடியாருக்கு எல்லா நன்மைகளையும் கொடுத்தருளும் அறுமுகக் கடவுளினாலே பிரமா முதலிய தேவர்கூட்டமெல்லாம் உய்ந்ததென்றால், உமக்கொரு குறைவுண்டாகுமோ! தேவாதி தேவராகிய சிவபெருமான் வந்து வேண்ட, பிரமாவைச் சிறை விடுத்துக் காத்தருளிய அறுமுகக் கடவுள் உங்களிடத்துப் பேரருளைச்செய் தார். உங்களுடைய பாவமும் பழியுந் தீங்கும் துன்பமும் பிறவுமாகிய எல்லாம் போவதோர் பொருளோ! பிறவிக்கடலையுந் தாண்டினீர். பிர மாவைச் சிறை செய்து மூவுலகங்களிலுமுள்ள உயிர்களைப் படைத்த முருகக்கடவுள், சூரபன்மன் உங்களைச் செய்த சிறையினின்றும் நீக்கும் படி திருவுளஞ்செய்து, தாமே இங்கெழுந்தருளிவந்தாரென்றால், நீங்கள் நெடுங்காலஞ் செய்த தவத்தை யார் செய்தார்? அளவிறந்த பாவங்களைச் செய்கின்ற அவுணர்கள் செறிந்த இந் நகரில் அறிஞர்கள் செல்லார். யான் எம்பிரான் திருவருளால் சேற்றுநிலத்திற் செல்வோர்போல மனம் வருந்தி ஒருவாறு வந்தேன். உங்களை எதிர்ப்பட்டமையினால் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தேன்'' என்று வீரவாகுதேவர் கூறினார். சயந்தன் அதனைக்கேட்டு மகிழ்ந்து, ''யாங்கள் சிறையில் அகப்படுமுன் என்னைப் பெற்ற இருமுதுகுரவரும் மறைந்து போயினார். அவர் அன்றுதொட்டு இன்றுகாறும் செய்த செயல்களையும், அச்செயலால் உண்டாகிய பிரயோ சனத்தையும் சொல்லும்'' என்றான். வீரவாகு தேவர் அதனைக் கேட்டு,

இந்திரன் முன்னுளில் ஐராணியோடு சுவர்க்கத்தை விடுத்துச் சீர்காழியை அடைந்ததுமுதல், திருச்செந்தூரிற் சுப்பிரமணியசுவாமியை வந்து சேர்ந்த அந்நாள்காறுமுள்ள காரியநிகழ்ச்சிகளையெல்லாம் விரைவிற் சொல்லினர். சயந்தன் அவற்றைக் கேட்டு, ''சுவாமீ உம்முடைய வார்த்தைகளைக் கேட்டு, என் தாயையும் தந்தையையும் குருவையும் முதல்வராகிய சுப்பிரமணியக்கடவுளையும் எதிர்ப்பட்டாலொத்தேன்'' என்றான். பின் அறிஞரிலறிஞராகிய வீரவாகுதேவர் தேவர்களையும் சயந்தனையும் பார்த்து, ''அறுமுகக்கடவுள் உங்கள் சிறையை நீக்கும்நாள் சிறிதுளது. அதுகாறும் இங்கிருப்பீர்'' என்று பின்னும் சொல்லுகின்றார்:—

தமக்கு நிகரன்றி மேலாய் ஞானசொரூபியாய் யாவரும் நினைத்தற்கரிய சுத்த மாயாதீதராய் நின்ற சிவபெருமானே ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுங் கொண்டு, ஒரு பாலகர்போன்று, கந்தர் என்னும் ஒரு திருநாமத்தையும் பொருந்தி, எல்லாருங்காண வந்தார். நமது கடவுளாகிய சிவபெருமான் ஆறு திருவதனங்களையும் பன்னிரண்டு திருப்புயங்களையுங் கொண்டு இப்படி எழுந்தருளிய காரணம் என்னை என்னில், விஷ்ணு பிரமா இந்திரன் ஆகிய இவர்களுடைய துன்பத்தையும், உங்களுடைய சிறையையும் நீக்கி, உலகங்களை எல்லாம் இரக்ஷித்தற் பொருட்டேயாம். சயந்தகுமாரனே, இதனை அறிதி. தக்கனுடைய யாகத்திற் புகுந்து நீய அவிப்பாகத்தை யுண்டமையால் உமக்கு உண்டாகிய பாவம் முறையாக வீரபத்திரக்கடவுள் தண்டஞ்செய்தும் இன்னும் முழுதும் தீர்ந்ததில்லை; சில குறை இருந்தது. அதனால் உமக்கு இத்துன்பம் உண்டாயிற்று. அறுமுகப்பெருமானன்றி யார் இதனை நீக்கவல்லார்? சயந்தனே, சண்முகக்கடவுள் வேற்படையினாலே கிரவுஞ்சகிரியினோடு தாரகனைச் சங்கரித்த போரானது சூரபன்மனைச் சங்கரித்தற்கு முதலில் நாட்கொண்ட தன்மையன்றோ? அவுணர்கள் யாவரும் சுப்பிரமணியக்கடவுள் வில்லைக் காலுற வளைத்து நாண் பூட்டி விடுக்கின்ற ஒரு பாணத்திற்கு உணவாதற்கும் ஆற்றார். அவர் திருக்கரத்திற்கொண்ட வேற்படைக்கு இலக்கில்லை. அதனை விடுப்பது மிகையாம். சமுத்திரங்கள் மலைகள் முதலாகிய பலவற்றைக் கொண்ட இப்பூலோக முதலிய பதினான்குலகங்களையும் தம்முளடக்கிய சகல அண்டங்களையும் ஓரிறைப்பொழுதிற் சங்கரிக்கவல்ல சுப்பிரமணியக்கடவுளுடைய வேற்படையானது சூரபன்மனை அவுணர்களோடு சங்கரிப்பது ஒரு விளையாட்டாம். சூரபன்மனுடைய மார்பில் வேற்படையை விடுத்து அவனை இருபிளவாக்கினாலல்லது நீவிர் சிறையினின்று மீளாமையைத் தாம் அறிந்தும், நமது கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமானவர் நீதிநூலறிஞர் செய்யும் அறநெறியைச் சீர்தூக்கி அடியேனை அவனிடத்திலே தூதாக விடுத்தார். எம்பெருமானுடைய திருவார்த்தையைச் சூரனுக்குச் சொல்வேன். அவன் கேட்டும் அதனை நீதி யென்று கைக்கொள்ளான். யான் மீண்டு சென்று நிகழ்ந்தனவற்றை விண்ணப்பஞ் செய்வேன். எம்பெருமான் அவற்றைக் கேட்டு நாளைக்கே எழுந்தருளி வந்து, இச்சூரனுதியரையெல்லாம் நாமமுமறும்படி சங்கரிப்பார். விட்டுணு வினாலும் அறியப்படாத குமாரக்கடவுள் தமது வேற்படையை அங்கிருந்து கொண்டு விடுத்தும் இவ்வவுணர்கள் யாவரையுங் கொல்லுவார். அவர்

தேரின் மேற்கொண்டு சேனைகள் மருங்கிற் காத்துச்சூழ இங்கேவந்து போர் செய்து கொல்லுதலும் ஒரு திருவிளையாடலாம். நமது கடவுள் பத்துநாளைக் குள்ளே போரை மூட்டி அவுண சேனைகளையும் சூரபன்மனையுஞ் சங்கரித்து, உங்களை இந்தச் சிறையினின்று விடுவித்துப், பெருஞ்சிறப்புச் செய்தருளுவர். சயந்தனே வேறொன்றும் நினையற்க'' என்று இவைகள் பலவற்றையும் சயந் தனும் தேவர்களும் அறியும்படி வீரவாகுதேவர் சொல்லித் தேற்றினர், அவர்கள் கேட்டு, ''பெருமையிற் சிறந்த வீரரே, மிகவும் வெற்றியைப் பெறுவீராக'' என்று தனித்தனி ஆசீர்வதித்தார்கள். சயந்தன் தேவர் களொடு கைகூப்பி அஞ்சலி செய்து, ''வீரரே, எளியேங்களாகிய எங் களுடைய தன்மைகளையெல்லாங் கண்டீர்: இவைகளை என் பிதாவுக்குச் சொல்லும். இங்கே நீர் நினைத்து வந்த கருமத்தை முடிக்கும்படி செல் வீராக'' என்றான். வீரவாகுதேவர் அத்தேவர்களை நீங்கி, சிறைக்களத்தைக் காவல்செய்வோருடைய மனத்தில் முன்பு செய்த மயக்கத்தை அகற்றிப் போயினர். அக்காவலாளர் முன்போலத் தேவர்களையுஞ் சயந்தனையுஞ் சூழ்ந்து காத்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## அவைபுகு படலம்.

வீரவாகுதேவர் சயந்தனுந் தேவர்களும் இருக்கின்ற சிறைக்களத்தை நீங்கி, ஆகாயவழிக்கொண்டு சென்று, சூரபன்மனுடைய கோயிலைச் சூழ்ந்த அகழியைத் தாண்டி, பதினாயிரம் வெள்ளமென்னும் தொகைக்குமேற்பட்ட சேனைகள் சூழ்ந்த மதிலிற்போய், அதின் முன்பு பல நிலைகளோடு விளங்கு கின்ற கோபுரத்தைக் கண்டு, அதனைப் பலவாறு தம்முள் வியந்து சொல்லி. அக்கோபுரவாயிலில் உக்கிரன் மயூரன் முதலாகிய அவுணவீரர்கள் சதுரங்க சேனைகளோடு காவல்செய்துகொண்டு நிற்பதைப் பார்த்து, அம்மதிலைத் தாண்டி, ஆகாயமார்க்கமாகச் சூரபன்மனுடைய கோயிலுக்குப்போய், அதன் முன்னுள்ள சூளிகையிலிருந்து, அவனுடைய மாளிகையினுள்ள வளங்களெல்லாவற்றையும் கண்ணும் மனமும் மீளாமற் பார்த்து, பின் சூரபன்மன் அத்தாணிமண்டபத்திலே இரத்தினசிங்காசனத்தின்மீது அரசிருக்குஞ் சிறப்பைக் கண்ணுற்றார்.

அப்பொழுது, சூரபன்மன் சிவபெருமான் கொடுத்த வளங்களைப் பெற்று உலகமெல்லாந் தன் கால்களை வணங்க அரசிருக்கின்ற சிறப்பைச் சொல்வாம்: ஆயிரம் யோசனை பரப்பினையுடையதாய்ப் பொன்னுறச்செய்து நாலுவித இரத்தினங்கள் இழைக்கப்பெற்று ஒளி வீசாநின்ற அத்தாணி மண்டபத்திலே வயிரரத்தினம் உடலும் வயிடூரியம் பற்களும் முத்து உச்சி மயிரும் நீலமணி கண்களுமாக அமைக்கப்பட்ட சிங்கத்தினுற் றூங்கப்படும் ஆசனத்திலே, மேனகை திலோத்தமை முதலாகிய தெய்வப்பெண்கள் ஆல வட்டங்களை அசைத்துச் சாமரங்களை வீசவும், சூரியசந்திரர்கள் முத்துக் களால் வேய்ந்து முகட்டில் நீலம் இழைத்து உள்ளிடங்களில் மற்றை மணி கள் அழுத்திய குடைகளைத் தாங்கி இரண்டு பக்கத்திலும் நிற்கவும், அவுணர் கள் அடைப்பை கெண்டி பூந்தட்டு உடைவாள் ஆகிய இவைகளைத் தாங்கிக்

கொண்டு பக்கங்களில் நிற்கவும், பானுகோபனும் அவனுடைய தம்பியர் களும் மற்றை மூவாயிரம் புதல்வர்களும் முறையாகப் பக்கத்திலிருக்கவும், பாவங்களையும் பழிகளையுமே செய்கின்ற காவிதிகளும் பிற தொழிலாளர் களும் ஒற்றுவர்களும் படைத்தலைவர்களும் ஆகிய எவரும் பக்கமெங்கும் நிற்கவும், அரம்பையர்கள் நடிக்கவும், வித்தியாதரர் கின்னரர் இயக்கர் முதலாயினோர் வீணைகளை வாசிக்கவும், துதிபாடகர்கள் பிரம்பை ஏந்திக் கொண்டு நின்று துதிக்கவும், விலக்கமுடியாத சனங்கள் எள்ளிடவும் வெளி யிடம் இல்லை என்னும்படி நெருங்கவும், இரத்தினகீரீடம் சிரசின்மீது ஒளி யைச் செய்யவும், குண்டலங்கள் காதுகளிலே தொங்கவும், விபூதி நிறையப் பூசிய நெற்றி விளங்கவும், மார்பிலே முத்துமாலைகளும் பதக்கங்களினடுக் குக்களும் புயங்களிலே வாகுவலயங்களும் கரங்களிலே கடகங்களும் கழுத் திலே முத்துக்களாலாகிய கண்டசரங்களும் கால்களிலே வீரக்கழல்களும் பிரகாசிக்கவும், உடம்பிலணிந்த களபச்சாந்தின்வாசனை அண்டங்களெங் கும் உலாவிக் கமழவும், அரையிலே உதரபந்தம் என்னும் அணியோடு பீதாம்பரம் விளங்கவும், பொன்னினாலும் மணிகளினாலும் அலங்கரிக்கப் பட்ட ஒரு பெரிய சூற்கொண்ட மேகத்தைப்போலச் சூரபன்மன் வீற் றிருந்தான்.

இங்ஙனம் சூரபன்மன் அரசிருத்தல் தமது கண்களுக்கு விருந்தாகிய அமிர்தம்போலாக, சூளிகையிலிருக்கின்ற வீரவாகுதேவர் வியப்போடு பார்த்து, அவன்மீது வைத்த அன்பினாலே இவ்வாறு சொல்லுவார்: ''மும் மூர்த்திகளிலும் மேலோராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வழிபாடு செய்த தேவர்களுள்ளே சூரபன்மனைப்போல இந்தச் செல்வங்களெல்லா வற்றையும் யாவர் பெற்றார்! மனமடங்கத் தவஞ்செய்தவர்களில் இந்தச் சூரபன்மனைப்போல உயிரைவிட்டுத் தவஞ்செய்தோருமில்லை, சிவபெரு மானும் இவனுக்கு வரம் ஈந்ததுபோலப் பிறர்க்கீந்ததுமில்லை. இத்தியோன் பெரிய யாகத்தைச் செய்து அவ்வக்கினியில் வீழ்ந்திறந்து மேலாகிய இவ் வளங்களையெல்லாம் பெற்றும், நெடுங்காலம் இருந்து வாழ நினைத் தானில்லை; இம்மை அழிந்துபோகின்ற இவனுடைய விதியின்றிறனன்றே! கபடமில்லாத தூக்கணங்குரீஇயார் சிறிய நெருப்புக்கொள்ளியை மின் மினிப் பூச்சியென்று எண்ணிக் கூட்டினுள் வைத்து அழிந்தகதைபோல, இந்தச் சூரபன்மன் பல தேவர்களை ஐயோ என்று சுதறச் சிறைவைத்த பாவத்தினால் நாளைக்கு இறப்பான், இதற்கோரையமில்லை. மிகுந்த வீரம் வலிமை செல்வம் என்னும் இவைகளை மிகப்படைத்துளோரும் யாரிடத் தாயினும் சிறிது பகையுடையராய் வாழ்தல் பழுதேயன்றி நன்மையா குமோ! இவன் இந்திரனையும் இந்திராணியையும் நகரத்தைவிட்டுத்துரத்தி, அவர்களுடைய குமாரனாகிய சயந்தனையும் தேவர்களையும் அகலாத சிறை யில் வைத்த பாவத்தினால் அரசையிழப்பன். இச்சூரபன்மன் தன் புத்தி ரர்களோடும் சுற்றத்தார்களோடும் நகரத்தோடும் நினைத்தற்குமரிய மற் றைச் செல்வங்களோடும் நாளைக்கு இறந்துபடுவானுயின் நாடோறும் பாவங்களைச் செய்துழன்ற இவனுடைய உயிருக்கு நிலை, முன்னவர்க்கு முன்னவராகிய அறுமுகக்கடவுள் சந்தருளும் முத்தியன்றி வேறென்ன உளது!'' என்று இவ்வாறு வீரவாகுதேவர் அருளோடு சொல்லி, சூர பன்மனுக்கு முன்பு செல்லத் துணிந்து, சுப்பிரமணிய சுவாமியினுடைய

திருவடிகளைத் தியானித்து, தாமிருந்த சூளிகையை நீங்கி ஆகாய வழிக் கொண்டு சென்று, சூரபன்மன் அரசிருக்கின்ற அத்தாணிமண்டபத்திற் போய், அளவற்ற பெரிய ஐசுவரியங்கள் நிகழ வீற்றிருக்குஞ் சூரபன்மனை அணுகி, அவ்வவைக்களத்திலுள்ளோர் யாவருங் காணும்படி தம்முடைய சுயரூபத்தைக் காட்டி, ''சிவகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய தூதுவன் யான்'' என்று கூறி ''இவனுக்குக் கீழே யான் எளிமையாய் நிற்றல் எம்பெருமானுடைய பெருமைக்குத் தாழ்வாகும், அவனிருக்கின்ற சிங்காசனத்தின் ஒரு பக்கத்திற் போயிருப்பதும் பெருமையன்று அது எளியோர் செயலே; அதுவன்றி, இவனோடொருங்கிருத்தல் பாவம்'' என்று எண்ணி, முருகக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்தார். அப்பொழுது, திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்குச் சிவபெருமான் கொடுத்தருள முத்துப்பந்தரும் முத்துச்சிவிகையும் வந்தவாறுபோல, சுப்பிரமணியக்கடவுள் வீரவாகுதேவருக்குக் கொடுத்தருள ஆயிரகோடி சூரியப் பிரகாசத்தோடு இரத்தின சிங்காசனமொன்று விரைந்து அவ்வவைக்களத்தில் வந்தது. சுப்பிரமணியக்கடவுளால் விடுத்தருளப்பட்ட அச் சிங்காசனம் எப்புவனங்களிலும் தன்னுடைய ஒளியைப் பரப்புதலால், நாடோறும் பாவங்களையே பயிலுகின்ற அவுணர்களுடைய வடிவத்தையும் தெய்வவடிவமாக்கியது; அவுணர்கள் அணிந்திருக்கின்ற ஆபரணங்களிற் பதித்த இரத்தினங்கள் சூரியனுடைய வெய்யிலிலகப்பட்ட மின்மினிகள்போல ஒளிகுன்றின; செவ்வானம் சந்திரன் நக்ஷத்திரங்கள் இருள் மேகங்கள் ஆகிய இவைகளெல்லாம் செறிந்த மாலைக்காலத்தில் ஆகாயத்திலே சூரியன் வந்துதித்தாற்போல அச்சபையின் பொலிவை அச்சிங்காசனத்தின் ஒளி தொலைத்தது; இன்னும் அதனொளி சூரபன்மனுடைய கீர்த்தியையும் ஆஞ்ஞையையும் அவன் அணிந்திருக்கின்ற ஆபரணங்களின் ஒளியையும் விழுங்கியது. இவ்வியல்பினையுடைய சிங்காசனம் சூரபன்மனுக்கெதிரே வந்திருத்தலும், வீரவாகுதேவர் ''எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுள் இதனை விடுத்தருளினர் போலும்'' என்று எண்ணி, மனமகிழ்ச்சியோடு அக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்து, மகிழ்ச்சியும் வீரமும் மிக, தாம் தூது வந்த செயலை ஆராய்வாராய், அதன்மீது வீற்றிருந்தார். அங்ஙனம் சிங்காசனத்தில் வீற்றிருந்த வீரவாகுதேவர் சூரியனுக்கு நடுவே விளங்கும் சிவபெருமானையும், விஷ்ணுவாகிய நரசிங்கத்தைக் கொல்லும்படி சிங்காசனத்திலிருந்த வீரபத்திரக்கடவுளையும், சித்துவித்தைகாட்டிய சிவபெருமானுக்கெதிரே பிரமா அகங்காரங்கொள்ளச் சிவபெருமானுடைய புகழ்களை எடுத்துக் கூறிய விஷ்ணுவையும் போன்றார்.

வீரவாகுதேவருடைய நிலைமையைக் காணுதலும், அவ்வவைக்களத்திலிருந்தவர்கள் நடுங்கி ஆச்சரியமுற்று, இவ்வாறு சொல்லுகின்றார்கள்: ''சூரபன்மனுக்கு முன்னரே சிங்காசனத்திலிருக்கின்ற இவன் வீரனும் போலும், இவன் வந்த காரணத்தையும் அறியோம் இவன் யார்?'' என்று சொல்லுகின்றார்கள் சிலர். ''இவனை முன்னே இங்குக் கண்டிலேம்; பேராற்றலையுடைய நம்மரசனுக்கெதிரிலே இப்பொழுது வந்திருக்கின்றான்; இவன் நம்மையெல்லாம் நீங்கி இங்கே நடுவில் வந்தது எவ்வாறு?'' என்று சொல்லுகின்றார்கள் சிலர். ''மற்றைச் சனங்களோடு கூடி மறைந்து நம்மை

யெல்லாந் தப்பி இவன் தனித்து இங்கே வந்தானுயினும், இந்தப் பெரிய சிங்காசனம் இங்கே வந்திருந்தது மிகவும் ஆச்சரியம் ஆச்சரியம்!'' என் பார் சிலர். ''நம்மரசனுக்கு முன்னரே இச்சிங்காசனத்தோடு விரைந்து தோன்றினன்; ஆராய்பவர் உண்டானுற் சொல்வான்; இவன் நம்மினும் மாயங்களையுடையவன்'' என்று சொல்லுகின்றூர்கள் சிலர். ''கூட்டமாக நிற்கும் நீவிர் ஒரு வீரனைச் சபையிலே என்முன் வரவிடுத்தது என்னை? என்று நம்மரசன் எங்களை என்ன செய்வானே அறியோம்'' என்று பதைத்து வருந்துவார் சிலர். ''ஒரு பகைவனைத் தண்டஞ்செய்யாது இங்கேவிட்டது என்னை? என்று நம்மரசன் நம்மைக் கோபிக்குமுன்னரே நாம் அவனை நெருங்கிச் சூழ்ந்து பிடித்துக் கொலைசெய்து வருவோம்'' என்று சொல்லு கின்றூர் சிலர். ''அழியாத வலிமையையுடைய நம்மரசனுக்கெதிரே செருக் குற்ற மனத்தோடு விரைந்து வந்தவன் எவராலும் அறியப்படாத மாயை யிலே வல்லவன்போலும், உங்களுக்கு அவன் எளியனே?'' என்பார் சிலர். நம்மரசனுக்கெதிரே வந்தவனை அவனுடைய பணியினுற் கொல்வதல்லது அதன்முன் கொல்லநினைத்தாற் பின்பு பிழையாகும்'' என்று சொல்லு வார்கள் சிலர். ''இவன் சூரனுடைய உறவை நினைத்து இங்கு வந்தானே? அல்லது பகைவரைச்சார்ந்தவனுய் வந்தானே? யார் இதனை அறிவர்? இனி மேல் அறிவோம்'' என்பார் சிலர். ''அசமுகி கைவெட்டுண்ட நாளில் நம்மரசன் காவலாளர்களைத் தண்டித்தான்; இவன் வரும் சூழ்ச்சியை நோக்கி இன்றும் பல காவலாளரைத் தண்டிப்பான்'' என்று அச்சமுற் றூர் சிலர். ''முன்னெரு காலத்தில் இந்திரன் முதலாயினேர் மயங்க விஞ்சைய வடிவங்கொண்டு வந்து, ஒரு துரும்பை நிறுத்தித் தம்முடைய வலிமையைக் காட்டிய சிவபெருமானே இவன்'' என்கின்றூர் சிலர். ''காசிபமுனிவரிடத்தும் அதிதியினிடத்தும் ஒரு குறளன்போல வந்துதித் துப் பூமியையும் ஆகாயத்தையும் அளந்த விட்டுணுவே இவன்'' என்கின் றூர் சிலர். ''விட்டுணுவோடு சபதஞ்செய்து விண்ணுலகத்தையும் மண்ணு லகத்தையும் உண்டு உந்திக்கமலத்தாற்றேற்றுவித்த பிரமாவே ஓர்உபாயத் தால் இவ்வுருவைக்கொண்டார்'' என்பார் சிலர். ''மும் மூர்த்திகளுள் ஒரு வனே? திக்குப்பாலகருள் ஒருவனே? முனிவர்களுள் ஒருவனே? இவன் இவருள் யாவன்?'' என்பார் சிலர். ''சிவபெருமானே நம்மரசனுக்கு இன்னமும் வரங்களைக் கொடுக்கும்படி இந்தக் கோலங்கொண்டு எழுந்தருளி வந்தாரோ? இனி அதனை அறிவோம்'' என்பார் சிலர். ''காற்றும் நெருப்பும் காலனும் கூற்றுவனும் ஒருருவங்கொண்டு இருந்த தோற்றம் இதுவன்றி, சூரபன்மனுக்கு முன்னே அஞ்சாது வரும் வலிமை யுடையவர்கள் வேறு யாவர்?'' என்கின்றூர்கள் சிலர். ''கிரவுஞ்சகிரியுந் தாரகனும் அழியும்படி ஒருவன் ஒரு வேற்படையைச் செலுத்தினன் என்றூர் கள்; அவன்றன் இங்கே நம்மரசன்முன் வந்தானே?'' என்று சொல்வார் சிலர். ''பொன்னினுலும் மணிகளினுலும் செய்த இச்சபையினுடைய காந்தியும், இங்குள்ள அவுணர்களுடைய காந்தியும், இவன் அணிந்திருக் கின்ற ஆபரணங்களினதும் சிங்காசனத்தினதும் ஒளி படுதலாற் பகற் காலத்துத் தீபம்போலக் குறைந்தன'' என்பார் சிலர். ''இந்நகரத்தி லுள்ள அவுணர்கள் யாரும் இங்கே இப்படி வருதலை மறந்தும் நினையார். ஆராயில் இது நம்மரசன் செய்த மாயமே'' என்பார் சிலர். ''நேற்றைத்

தினம் இறந்த தாரகன் தன்னுடைய பழைய உருவம் அழிய இன்றைக்கு இந்த அழகிய உருவத்தைக்கொண்டு தன்றமையனிடத்தில் வந்தான் போலும்?'' என்பார் சிலர். அவ்வவையிலிருந்தவர்கள் இவ்வாறு பல வற்றைப் பேச, வீரவாகுதேவர் முருகக்கடவுளைத் துதித்துக்கொண்டு, சூரபன்மன் தன்னுடைய சிங்காசனத்தின்மீது எத்துணையுயர்ச்சியோடிருந் தானே அத்துணையுயர்ச்சியோடு தமது சிங்காசனத்தில் வீற்றிருந்தார்.

சூரபன்மன் வீரவாகுதேவர் வீற்றிருத்தலைக்கண்டு, தந்தவரிசை களைக் கறித்து, கறுவி, நகைத்து, உரப்பி, சரீரம் வியர்வையெழ, கண் கள் அக்கினிப்பொறி சொரிய, புகையையுமிழ்ந்து, இவைகளைச் சொல் வான்: ''சுற்றத்தாரை நீங்கி, இலைகளையுண்டு, விலங்குகள்போலச் சுழன்று, காட்டிலிருந்து தம்முடம்பை வருத்துகின்ற சிற்றுணர்ச்சியுடையோர் வல்ல சித்துவித்தை இது. சிறியோய் நீயும் அதனைக் கற்றுளாய்போலும், நமது முன் எல்லாருங்காணக் காட்டினை. யோகிகளல்லது நமக்குத் தோற்றே டித் திரிகின்ற தேவர்களும் இத்தொழிலில் மிக வன்மையுடையர். அவர்கள் உன்னைப்போல நம்மிடத்துச் சிறிதும் காட்டலர். நீ நம்முன்னர்க் காட் டிய நடனம் நன்று நன்று! சித்தர்களும் விட்டுணு முதலிய தேவர்களும் இத்திறத்தனவாகிய செயல்களைத் தத்தமிடங்களிற் செய்வதல்லது என் முன்னே காட்டுதற்கஞ்சுவர். தமியோய் நமக்கிதனைக் காட்டுதற்கெண்ணி னாய், நீயொரு பித்தன்போலும். பேதையே, நீ செய்த இவ்வாடலை இந் நகரத்திற் பெண்களுஞ் செய்வர்; கருவிலிருக்குங் குழந்தையுஞ் செய்யும்; விலங்குகளும் செய்யும்; உணர்வில்லாத மலைகளும் செய்யும். இஃதோரரிய தல்ல. என்னை மதியாதவனாய் எனக்கெதிரேயிருந்தாய். ஆதலால் வாட் படையினால் உன் சிரசைத் துணிப்பேன். உன் செயல் முழுதையுந் தெரிந்து பின்பு அதனைச் செய்வேன் என்றெண்ணினேன். பெருமையுடையோர் யாவராலும் துதிக்கப்படுகின்ற அவுணர்களும் யாமும் காணும்படி காட் டினை; நீ அறிந்த வித்தையைக் கண்டாம். ''இவ்வித்தையைக் காட்டி ஒரு பரிசு பெற்றுய்'' என்று கண்டோர் சொல்லவரும் உனக்கு இத் துணைப்பொழுது தாழ்த்து உயிரைத் தந்தேன். அதுவே பரிசு. இந்திரன் எனக்குப் பயந்து ஒழித்தோடினான்; பிறர் இதனை எண்ணார்; விட்டுணு வும் இதனை நினைத்தலுஞ் செய்யான்; பிரமன் ஆசிசொல்லித் திரிவான். இவர்களுக்கு முதல்வராகிய சிவபெருமானெனில், அவர் என்னிடத்து வருகிலர்; நீ யார்? சொல்லுதி'' என்றான்.

சூரபன்மன் இவ்வாறு சொல்லக்கேட்ட வீரவாகுதேவர் வியர்வை யெழக் கோபித்து, ''மாயங்களைச் செய்துழல்கின்ற வலியில்லார்போல என்னை நினைத்தாய், இந்த எண்ணத்தைவிடு, நாம் சொல்வதைக்கேள்'' என்று கூறி, ''இந்திரனுடைய குறையையும் பிரமா முதலிய தேவர்களு டைய குறையையும் தேவர்களுடைய சிறையையும் நீக்கி அவர்களுடைய பழைய முதன்மைகளை உதவும்படி திருச்செந்திமாநகரத்தில் வந்திருக் கின்ற முழுமுதற்கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமானுக்கு அடியேன் யான். அவ்வறுமுகக்கடவுளுடைய சேனைத்தலைவராய் அவருக்குப் பின்னர் வந்துள்ளோர் இலக்கத்தொன்பதின்மர் உளர். அவர்களுள் யானொருவன்; நந்திகணத்தைச் சார்ந்தேன்; பகைவர் புகழுகின்ற வீரவாகு என்னும்

பெயருள்ளேன். தாரகன் என்னும் உன் றம்பியையும் கிரவுஞ்சமலையையும் ஓரிறைப்பொழுதினுட் கொன்ற வேற்படையையுடைய ஒப்பில்லாத அறுமுகக்கடவுள், சூரபன்மனெனப்படும் உன்னிடத்தில் வைத்த பேரருட்டிறத்தால் தமியேனைத் தூதாக அனுப்பியருளினர்'' என்றார். அதனைக் கேட்ட சூரபன்மன் ''அறுமுகக்கடவுள் நம்மிடத்து உன்னைத் தூதாக விடுத்த காரணம் என்னை? சொல்லுதி'' என்னலும், வீரவாகுதேவர் சொல்வார்: ''இந்திரனை இந்திராணியோடு துரத்தி, பொன்னுலகத்தைக் கொளுத்தி, அவன் குமாரனுகிய சயந்தனைப் பல தேவர்களோடு சிறையில் இருத்தினுய் என்று, அறுமுகக்கடவுள் அறிந்து, அரிபிரமேந்திராதி தேவர்கள் பலமுறை வந்து வேண்ட அவர் குறையை நீக்கும்படி திருவுள்ளங்கொண்டு, அளவிறந்த பூதசேனைகளோடு பூமியில் வந்து, உன்றம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்சத்தையும் சங்காரித்து, நேற்றைத்தினமே திருச்செந்தூரில் வீற்றிருந்தார். உன்னையும் விரைந்துவந்து சங்கரிக்கும்படி திருவுளங்கொண்டார். இன்று நும்மிடத்தே கொண்ட அருளினுற் சிலவற்றைச் சொல்லி என்னைத் தூதனுப்பினர். அதனைச் சொல்வேன் கேள்: பூரணசந்திரனை இராகு விழுங்கினுற்போலத் தேவர்களை விலங்கிட்டுச் சிறைசெய்து வருத்தி, அவர்கள் செய்யும் வைதிகாசாரங்களையும் நீக்கினுய். அஃது அரசதருமமும் அன்று, வீரருடைய செய்கையும் அன்று. உன் பிதா காசிபமுனிவர். நீ அவருடைய புதல்வன் ஆதலால், தேவரைச் சிறைசெய்வது அறனே? வைதிகாசாரத்தையும் விட்டாய். இழிதொழிலை விரும்பினுய். நீதியோடு உலகத்தைப் பாதுகாப்பதே அரசதருமம். சலந்தராசுரன், அந்தகாசுரன், மூப்புரத்தசுரர் முதலாயினோர் தேவர்களை வருத்தினமையால், விரைவில் அழிந்தார். கொடியோய் பொன்னுலகினுள்ள தேவர்களை வருத்துதல் உனக்கு அழகிதா? சத்தியந்தவறி, கொலைகளவுகள் செய்து, ஒழுக்கத்தையுடைய மேலோர்களைச் சினந்து, அவர்க்குத் துன்பஞ்செய்யுந் தீயோர் சகித்தற்கரிய பழியைச் சுமந்து சுற்றத்தாரோடு விரைந்து அழிவர்; எழுமையினுந் துன்பத்தில் ஆழ்வர். பிறர்க்குத் துன்பஞ்செய்வோர் இம்மையிற் செல்வமெல்லாம் நீங்கித் துயருழந்து இறப்பர்; மறுமையில் நெடுங்காலம் நரகத்தில் மூழ்குவர்; வருபிறப்பில் துன்புறுவர்; என்றும் இத்துன்பம் நீங்கார்; அவர் எங்ஙனம் உய்வரோ! தீமை நன்மைகளைப் பகுத்தறிந்து பிறர்க்கு அவற்றைச் செய்வாராயின், அவை தமக்கும் உடனே வரும். நீ பேதைமையையுடையையாய், தேவர்களைச் சிறைசெய்த பிழையினுல் மிகுந்த துன்பத்தை அனுபவிப்பதன்றி, உனக்கு இறுதியும் வரும். உன்றம்பியாகிய தாரகனுடைய உயிரைக் குடித்த வெற்றிபொருந்திய வேற்படை இருந்தது. அதனை விடுத்தால் உன்னையுங் கண்டதுண்டமாக்கும். அறநெறியைக் கருதி விரைந்து உன்னைத் தண்டஞ்செய்யாது இத்துணையுந் தாழ்த்தார். கெடுதல் இல்லாத தேவர்களைப் பல யுகங்களாகச் சிறையில் இட்டாய். அவர்களை இப்பொழுதே விடுதல் உனக்கு உய்யுந்திறமாம். மறுத்தியாயின் விரைந்து இறத்தலே உனக்கு உறுதியாம். முறைமையும் அதுவே. பல ஆண்டுகளாக வேள்விசெய்து யாகாக்கினியில் மூழ்கிய நீ, எம்பெருமான் முன்னுளில் ஈந்தருளிய நீண்ட வாழ்நாளையும், வளங்களையும் ஒரு புன்னெறியைச் செய்து இழுக்குதல் தகுதியோ? மிகுந்த வளங்களோடு நீயும் உன்

கிளையும் உய்யவேண்டுமாயின், தேவர்களுடைய சிறையை விடுத்துத் தரும நெறியால் வாழுதி. இதனைச் செய்யாதொழிவாயெனின், அறுமுகக்கடவுள் இங்கே எழுந்தருளி வந்து, உன்னைச் சங்கரிப்பார். இது நிச்சயம். என்று இவைகள் எல்லாவற்றையும் சுப்பிரமணியக்கடவுள் உனக்குச் சொல்லும் படி கட்டளையிட்டருளினர். நீ தேவர்களுடைய சிறையை நீக்கி, இவ் வளங்களையெல்லாந் தருமநெறியால் அனுபவித்து, நெடுங்காலம் வாழ் வாய்'' என்று வீரவாகுதேவர் வகுத்துக் கூறினர்.

சூரபன்மன் அவற்றைக் கேட்டலும், கண்கள் பொறியைக் கக்க வும், உயிர்ப்பிற் புகையெழவும், கோபம் மூண்டு, கையோடு கையைத் தட்டி மிகவுஞ் சிரித்துச் சொல்வான்: ''மேலாகிய ஆயிரத்தெட்டண்டங் களையும் வென்று ஏக சக்கராதிபதியாய் இருக்கும் எனக்கு இன்னமும் பல் லுயிராத ஒரு பாலனும் இவ்வாருகிய புத்திகளைச் சொல்வான். வெற்றி யில் மேம்பட்ட அவுணராம் வலியிலார், மிகவும் எளியராகிய தேவராம் வலியர்; மழலைச்சொற்பேசுஞ் சிறுவராம் தனிமுதல்வற்கும் அமைச்சியல் செய்வார். இந்த உலக வழக்கம் நன்முயிருந்தது! தேவர்கள் நம்மவர் களாகிய அவுணர்குலத்தை வருத்தி, அவர்க்கு வறுமையைச் செய்தார்கள். ஆதலால் யான் அந்தத் தேவர்களுடைய செல்வத்தைக் கெடுத்துக் குற் றேவல்களையுஞ் செய்வித்தேன்; அவர்களுடைய ஒழுக்கத்தையுங் கெடுத் தேன்; சிறையிலும் வைத்தேன்; நங்குடிலுள்ள முன்னோர் செய்த முறை யையே யானுஞ் செய்தேன். பிரமகற்பத்திற் சமுத்திரம் உலகங்களையெல் லாம் மூடினும், தேவர்களைச் சிறையினின்றும் விடேன், என்னுடைய அண்டத்தினுச்சியில் ஓரிடத்திற் கொண்டுபோய் வைப்பேன். தப்பி ஓடிய இந்திரன் முதலிய தேவர்களையும் இந்நகரிற் கொண்டுவந்து சிறைசெய்ய இருந்தேன். ஒப்பற்ற வலியையுடைய சூரன் என்று ஒரு பேரைப்படைத்த யான் அகப்பட்ட சிறையை விடுவேனு? விடமாட்டேன். வச்சிரயாக்கை யையும் வேறு பல வரங்களையும் முன்னெருநாள் தன்முதை எனக்கீந்த முறையைப் பின்பு யாவர் தவிர்ப்பவர். பெரிய போரைச்செய்து வலிமை யினால் என்னை வெல்லுந் திறத்தினர் யாவர்? என்றம்பியாகிய தாரகனைக் கொன்ற வேற்படையையுடைய அப்பாலகன்மீது போருக்குவர எண்ணி னேன். 'பால்மணங் கமழும் வாயையுடைய சிறிய ஒரு பாலகனோடு நீ போர்செய்தல் பழுதாம்' என்று என்னைத் தடுத்தார்கள். ஆதலால் அதனை யொழிந்தேன். என்றம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்சத்தையும் அவன் சங்கரித்ததை நேற்றைக்கே அறிந்தேன். நாளைக்கே என் மருங்கிலுள் ளோரை அப்பாலகன்மேல் அனுப்பி என்பழியையும் வாங்குகின்றேன் காணுதி. எண்ணில்லாத விஷ்ணுக்களும் எண்ணில்லாத இந்திரர்களும் எண்ணில்லாத தேவர்களும் அண்டங்களோறுந்தோறும் இருந்தார். அவ ரெல்லாரும் என்னோடு போர்செய்ய ஆற்றுராய், என்னைத் துதித்துப் போயினர். சிவபெருமானுடைய கண்ணில் நேற்றுவந்த சிறுவனே என் னெதிர் நிற்பான். இனிப் பலவற்றைச் சொல்லி என்ன? தேவர்களை விடு கிலேன். நீ பேதையாதலினுல் உணர்ச்சி சிறிதுமில்லாத ஒரு குழந்தையின் புன்மொழியைக் கேட்டு ஒற்றனாய் வந்தனை. பிழைத்துப்போதி. நின்னு யிரைத் தந்தேன் யான்'' என்று சூரபன்மன் கூறினன்.

சூரபன்மன் இவைகளைச் சொல்லுதலும், வீரவாகுதேவர் கோபாக்கினி சிந்தவும், மனம் சுடவும், உயிர்ப்பிற்புகையும் அக்கினியும் உண்டாகவும், மயிர்ப்புறம் பொடிப்பவும், சிரிப்புண்டாகவும், கண்கள் சிவக்கவும் கோபித்து, இவற்றைச் சொல்வார். ''உய்யுந்தன்மையை உணராது உழலுகின்ற கீழ்மகனே கேட்பாய். பாம்பையுஞ் சந்திரனையும் அணிந்த சடாமுடியையுடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்று திருவவதாரஞ் செய்தருளிய நமது தலைவராகிய அறுமுகக்கடவுளுடைய பெருமையை அறிந்திலை; பாலன் என்று இழித்துச்சொன்னாய். மனுடரைத் தேவர் என்பர். அத்தேவர்களை மும்மூர்த்திகளென்பர். பிரமவிஷ்ணுக்களாகிய இருவரையும் பரம்பொருள் என்பர். இந்தச் சொற்றிறங்களெல்லாம் உபசாரமே; உண்மையல்ல. அந்த எளிய உபசாரங்கள் போற் கொள்ளலை. ஞானிகளாலே தியானிக்கப்படுவது. யாவர்க்கும் எட்டாதது. தெளிந்தால், சுத்தமாகிய வீடுபேற்றைத் தந்தருளுவது. உபநிடத்துணிவாகிய உண்மைப்பொருளாயுள்ளது. சொல்வேன் கேள்'' என்று சொல்வார்: ''அவ்வறுமுகக்கடவுள், திருவுள்ளத்து முகிழ்த்த பெருங்கருணையினால் விஷ்ணுவும் பிரமாவும் எண்ணில்லாத காலந்தேடியும் காணமுடியாத சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்று பரஞ்சோதி சொரூபமாய்க் குழந்தையாய்த் திருவவதாரஞ் செய்தருளினர். முன்னவர்க்கு முன்னுகுவோர் தமக்கும் முற்பட்டு, தமக்கு ஒப்பின்றி, ஈசன் என்னும் ஒப்பில்லாத திருநாமத்தைத் தாங்கி, உயிர்க்குயிராய், அருவுருவாய், எவர்க்குந் தாயுந் தந்தையுமாயிருக்கின்ற சிவபெருமானே அப்பாலகர். சிவபெருமானே தம்முடைய திருவிளையாடலால் ஒரு குழந்தையாயினர். சூரபன்மனே, குற்றமில்லாத அவருடைய அறுமுகங்களின் உண்மையினை அதனை அறிகுதி. இரத்தினத்திற்கு அதனொளி வேறுபாடில்லாமைபோல, அப்பாலகர் சிவபெருமானுக்கு வேறுபாடுடையரல்லர். பஞ்சபூத அண்டங்களுள்ளே, கீழுள்ளதாகிய பிருதிவியிலுள்ள ஆயிரகோடி அண்டங்களுள், ஆயிரத்தெட்டண்டங்களையும், வளங்களையும், படைக்கலங்களையும் முன்னே உனக்குக் கொடுத்த முதற்கடவுளாகிய சிவபெருமானே அவ்வறுமுகக்கடவுள் என்றுணர்ந்து, தந்த அவர் அவற்றை மாற்றுவது அரிதோ! பேதையே, 'பிருதிவியண்டங்களிற் சிலவற்றை மாத்திரம் பெற்றேம்' என்று எண்ணினை. அப்பெருமானுடைய திருவருளைச் சிறிது பெறுவோர்கள் பஞ்சபூத அண்டங்களினும், மற்றை ஆன்மதத்துவ அண்டங்களினும், வித்தியாதத்துவ அண்டங்களினும், இவற்றிற்கெல்லாம் மேலாகிய சிவதத்துவ அண்டங்களினும் அரசியல் புரிவார். எவற்றிற்கும் முதலாகிய பிரணவமும் ஸ்ரீ பஞ்சாட்சரமும், நான்கு வேதங்களும், இருபத்தெட்டுச் சிவாகமங்களும், மற்றைக் கலைஞானங்களும், இவற்றின் உணர்வாகிய ஞானங்களும் குமாரக்கடவுளுடைய ஒப்பில்லாத திருமேனியாம். எங்கும் வியாபித்திருந்து அருள்செய்கின்ற அறுமுகக்கடவுளுக்கு எங்குந் திருமுகங்கள், எங்குந் திருக்கண்கள், எங்குந் திருச்செவிகள், எங்குந் திருக்கரங்கள் எங்குந் திருவடிகள், எங்குந் திருமேனி. பிரமா முதலிய தேவர்களும் பொருள் தெரியாது மயங்குவதும், வேதங்களுக்கெல்லாம் முதன்மைபெற்றிருப்பதும் ஆகிய பிரணவமே ஒப்பில்லாத சண்முகக்கடவுளுடைய திருமுகங்களுள் ஒன்றாகும். அங்ஙனமாயின், அவருடைய பெருமையை யாவர்

சொல்ல வல்லவர்! சிவபெருமானும் அவர்; விட்டுணுவும் அவர்; பிரமாவும் அவர்; திக்குப்பாலகர்களும் முச்சுடர்களும் முனிவர்களும் தேவர்களும் அவர்; இவர்கள் எல்லாருக்கும் மேலோரும் அவர். இருவினைகளையும் ஈட்டுகின்ற உயிர்கட்கெல்லாம் அவ்வினைப்பயன்களைக் கூட்டுபவர் அவர். அவ்வுயிர்கட்கு இருவினையொப்புண்டாகிய காலத்தில் அவை விரும்பிய மேலாகிய மோக்ஷத்தைக் கொடுப்பவர் அவர். காண்பான் காக்ஷி காக்ஷிப்பொருள் காட்டுவான் ஆகிய திறங்கள் எல்லாம் அவர். பாலகர் போல்வர். விருத்தர்போல்வர். தினையிலுஞ் சிறியர் போல்வர். பெரியராவர். இவ்வாறு வேறு பல திருவுருவங்களைக்கொண்டும் விளங்குவர். ஞானிகளாலும் அறிதற்கரிய கந்தசுவாமியினுடைய திருவிளையாடலை யாவர் அறிவார்! சுப்பிரமணியக்கடவுள் சிவபெருமானுடைய திருவிளையாடலின் வடிவமாயிருப்பர். அவருடைய ஆணையிலுலன்றி ஓரணுவும் அசையாது. அவருடைய ஆற்றலைக் கடந்தவர் யாவர்! சூரபன்மனே, நீ அவருடைய மாயையிலகப்பட்டு மிக மயங்கினாய். அக்கடவுள் எல்லாப் பொருள்களுமாவர், அவை யல்லவுமாயிருப்பர். அருவமுமாவர், பலவேறு வகைப்பட்ட உருவங்களையுங் கொள்வர். புதியவர் போல்வர், பழையவர் போல்வர். அநாதியுமாய்த் தோன்றுவர். குமாரசுவாமியினுடைய திருமேனியிலுள்ள ஒரு உரோமத்தில், புன்னுனியில் மழைத்துளிபோல அளவிறந்த அண்டங்கள் தோன்றும். ஆர் அவருடைய திருமேனியின் பெருமையையறிவார்! ஆன்மகோடிகளும் பஞ்சபூதவண்டங்களும் மற்றைத் தத்துவ அண்டங்களும் சிருட்டிகாலத்திலே குமாரக்கடவுளுடைய திருமேனியினுள்ள உரோமத்தினின்று பிறக்கும், சங்காரகாலத்தில் ஒடுங்கும். அந்தத் திருமேனியில் இவைகள் எல்லாம் பொருந்தியிருத்தலை, அவரல்லது வேறு யாவர் கண்டவர்! அக்கடவுள் அதனைத் தேவர்களெல்லாருக்குங் காட்டிடச் சிறிது கண்டார்கள். ஓர் உரோமத்தின் நுனியில் எண்ணில்லாத அண்டகோடிகள் கோவைபட்டு அசைய மேருமலையில் முன்னொருகாலத்திலே சுப்பிரமணியக்கடவுள் கொண்ட விசுவரூபத்தை அளவில்லாத பாவங்களைச் செய்கின்ற கொடியோனே நீ கண்டிலைபோலும். உன்னுடைய ஆயிரத்தெட்டண்டங்களும் அந்நாளில் அக்கடவுள்கொண்ட விசுவரூபத்திலுள்ள ஒரு உரோமத்தினிருந்ததற்காற்று. இன்று நீ அதனை அறியாது அவரைப் பாலகன் என்று இகழ்ந்தாய். அளவிடப்படாத குணங்களையுடைய முழுமுதற்கடவுளாகிய அவர் தேவர்களுடைய சிறையை விடுவிக்கவும், பிரமா முதலாயினோருடைய துயரை நீக்கவும், துட்டர்களைச் சங்கரித்து உலகங்களெல்லாவற்றையும் பாதுகாக்கவும், திருவுருக்கொண்டு வந்தார். உன்னுடைய வாழ்நாளையும், வலிமையையும், வரத்தையும், சுற்றத்தையும் புழுதிமலையிற்புகுந்த பிரசண்டமாருதம்போல அழிக்கும், எம்பிரானுடைய ஒரு வேற்படை. சூரபன்மனே, நீ இவைகளை அறியாதவனாய், ஒப்பில்லாமலிருக்கின்ற ஏகநாயகராகிய அக்கடவுளைப் பாலன் என்று இகழ்ந்தாய். கடினத்தன்மை பொருந்திய மனத்தையுடைய கல்வியில்லாத சிறியோய், போகபோக, யாம் இவ்வொரு பிழையையும் பொறுத்தாம். எளிய சொற்களினால் எம்பெருமானை இகழ்ந்தாய். கணப்பொழுதினுள் உன்னுடைய வெவ்விய நாவைத்துணித்து உயிரை வாங்குவோம். நம்மைத் தூதனுப்பிய கடவுளுடைய ஆணையன்று, அதனால் அவற்றைத்

தந்தோம். வேற்படைக் குணவாயிருப்பவனே, இற்றைநாள் உய்குதி. இன்னும் ஒருறுதியைச் சொல்வோம்: நீயும் உன் கிளையும் அழியாமல் உய்யவேண்டுமானால், தேவர்களுடைய சிறையை விடுக்குதி; போரைத் தவிருதி; சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடித்தாமரைகளைப் புகலிட மென்றெண்ணியிருக்குதி'' என்றிவ்வாறு சுப்பிரமணியக்கடவுளுடைய பெருமைகள் பற்பலவற்றை வீரவாகுதேவர் எடுத்துக் கூறினர்.

புன்றொழிலையுடைய கீழோனுகிய சூரபன்மன் அவற்றைக் கேட்டு, கோபித்துப் பெருமூச்சுவிட்டு, ''பல்லுமுளைக்காத சிறிய பாலகன் விடுத்த தூதுவன் என்றெண்ணி உன்னுயிரை விடுத்தேன். இவ்விடத்தை விட்டுப் போகாமல் இன்னும் அவனுடைய பெருமையைச் சொல்லுகின்றாய்; உன்னுடைய வீரத்தையும் சொல்லுகின்றாய். எனது வெவ்விய சினத்தை எண்ணுகின்றிலை, கொஞ்சுமொழிகளையுடைய அந்தப் பாலகன் அழியாத மேலோராகிய கடவுளாயினுமாகுக, பலவண்டங்களினுமுள்ள தேவர்கள் எல்லாரையும் வென்ற யான் அவனுக்கஞ்சுவனே! தேவர்களுடைய சிறையைக் கனவிலும் விட நினையேன். எனக்கெதிரிலிருந்து பல இறுமாப்பான வார்த்தைகளைப் பேசினாய். அவைகளெல்லாவற்றையும் ஒரு கணப்பொழுதிற் காண்பேன்'' என்று சொல்லி, தன்னருகில் நின்ற வீரர்களுள் ஆயிரம்பேரை நோக்கி, ''தூதுவனைக் கொல்லுதல் பழி. இவனை விரைவிற் பிடித்துச் சிறையிடுதிர்'' என்றான். என்னலும், அவ்வாயிரவரும் நெருப்புப்பொறி பறக்கப்பார்த்து, சிங்காசனத்தில் இருக்கின்ற வீரவாகுதேவரைப் பிடிக்கும்படி சூழ்ந்தார்கள். அவர் விரைவில் எழுந்து, அவர்களுடைய ஆயிரங்குடுமிகளையும் ஒரு கையாற் பிடித்து, சூரபன்மன் இருக்கின்ற அவைக்களத்தில் அடித்துக் கொன்று, மார்புகளும் புயங்களும் ஓடிந்து இரத்தம் வடிகின்ற அவர்களுடைய உடல்களைச் சூரபன்மனுக்கு முன்னே எறிந்து, அவனை நோக்கி, ''எம்பெருமானுடைய வேற்படை இனி உன்னைச் சங்கரித்தல் நிச்சயம். நீ இறக்குமுன் உன்னுடைய ஐம்புலன்களும் விரும்புகின்ற பல போகங்களையும் விரைவாக வேண்டியமட்டும் அனுபவித்து மனத்தெளிவாயிரு. நான் போவேன்'' என்று கூறி, அச்சபையை நீங்கிப்போயினர். அவர் வீற்றிருந்த சிங்காசனமும் மாயம் என்று சொல்லும்படி விரைவில் எழுந்து ஆகாயமார்க்கமாக மறைந்துபோயது.

திருச்சிற்றம்பலம்.

## சதமுகன்வதைப் படலம்.

வீரவாகுதேவர் ஆயிரம் அவுணவீரர்களைக் கொன்று சூரபன்மனுடைய அவைக்களத்தை நீங்கிச் செல்லும்பொழுது அவன் தன் பக்கத்திலுள்ள சதமுகனென்பானை நோக்கி, ''இவன் அறுமுகனுடைய ஆள், இங்கே என்னுடைய வெற்றிமுழுதையும் இகழ்ந்து, ஆயிரம் வீரர்களைக் கொன்று, வெற்றிப்பாடுடையர்கள்போலப் பல மேன்மைகளைச் சொல்லி, தான் இருந்த சிங்காசனமும் வானிற் செல்லப்போவான். நம்முடைய வீரரைக் கொன்று போவானேயெனினும், தூதனோடு போர்செய்து அவனைக் கொல்லுதல் பழியாகும். ஆதலால், அவனுடைய வலியை அடக்கி,

விரைவிற் கட்டிக்கொண்டு வருவாய்'' என்று கூறினன். சதமுகன் சூர னுடைய கால்களை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, இலக்கம் வீரர்கள் தன் பக்கத்தில்வர, எண்ணில்லாத படைக்கலங்களை ஏந்தி, வடவாமுகாக் கினியோடு பிரசண்டமாருதம் சேர்ந்து செல்வதுபோல வேகத்தோடு சென்று, வீரவாகுதேவரை அடைந்து, ''பல காவல்களை நீங்கி வருகின்ற கள்வனே, உலகத்தாரெல்லாராலும் புகழப்படும் எங்களரசனுக்குமுன் வந்திருந்து அவனை இகழ்ந்து சில வீரர்களுடைய உயிரைக் கவர்ந்து தப்பிப் போவதெங்ஙனம்! நில். உனது போர்வலியை அழிப்பேன். கள்ள வேடங்கொண்டு ஒடிப்போதல் இயலாது. எட்டுத்திக்கினுள் நீ எங்கே ஓடிப்போனலும் விடுவேனே!'' என்று சொல்லிக்கொண்டு பின்புறத்திற் போய்க் கிட்டினன். வீரவாகுதேவர் அவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, எதிர்த்து, ''சூரபன்மன், சுப்பிரமணியக்கடவுளுடைய திருவாக்குகளை ஏற் றுக்கொள்ளாது இகழ்ந்து என்னைப் பிடிக்கும்படி ஆயிரம் வீரர்களை விடுத்தான். யான் அவர்களைக் கொன்று சபையை நீங்கி வரும்பொழுது பின்னும் இவ்வொரு வீரனை என்மேல் அனுப்பினன். இனி இவனுடைய உயிரைக் கொன்று இந்நகரத்தையும் அழித்துச் செல்வேன்'' என்றிவ் வாறு கருதி, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்து, சதமுகன் என்னும் காவலாளனை நோக்கி, ''போர்செய்ய நினைத்து அறை கூவினுய், விரைந்து படையோடு வருதி'' என்று போருக்கு அழைத்தார்.

அப்பொழுது, சதமுகனைச் சூழ்ந்த இலக்கம் வீரரும் அவரை எதிர்த்து, பாணங்களும் வேற்படைகளும் சக்கரங்களும் முதலியவற்றை விடுத்தார்கள். அவர்கள் விடுத்த படைகள் துணிபட்டும் நெரிந்தும் எரிந் தும் துகளாகியும் போயின. வீரவாகுதேவர் அவர்களுடைய செயலைநோக்கி, இருபதினுயிரம் முடிகளைக்கொண்ட ஒரு சூளிகையை விரைவிற் பிடுங்கி, அவர்கள்மேல் எறிந்தார். அச்சூளிகை மேருமலைபோல மேலேசென்று, இலக்கம் வீரர்கண்மீதும் பட்டு அவர்களுடைய உடம்பு முழுதையும் அழித் துப் பூமியில் வீழ்ந்து பிதிர்பட்டது. இலக்கம் வீரர்களையும் சூளிகையையும் வீரவாகுதேவர் நொடிப்பொழுதில் அழித்து நிற்றலைச் சதமுகன் பார்த்து, கலக்கமடைந்து, தன் கிளைஞரைக் காணுதவனுய் வருந்தி, பின் ஒருவாறு தெளிந்து, இருப்புலக்கை சூலம் வேல் முதலாகிய படைக்கலங்களை அவர் மீது விடுத்தான். அவைகள் தம்மீது வருதலும், வீரவாகுதேவர் கோபங் கொண்டு, மலைபோன்ற ஒரு சிகரத்தைப் பிடுங்கி எறிந்தார். அவன் வில்லை வளைத்து ஆயிரம் பாணங்களைச் செலுத்தி அச்சிகரியை அழித்து, வீரவாகு தேவருடைய மார்பில் ஆயிரம் பாணங்களை விடுத்தான். அவர்போய் அவன் வில்லைப் பறித்து முறித்தெறிந்தார். அவன் ''இவனைப் பிடித் தற்கு இதுவே சமயம்'' என்று எண்ணி, நூறு கைகளை நீட்டி அவரைப் பிடித்தான். அவர் அவனைப் புயத்தினுலே தாக்கி, பூமியில் வீழ்த்தி, அவன் பதைபதைத்தெழும்பொழுது பாதத்தினுலுதைத்து, வாய்கடோறும் இரத் தம் வடியும்படி மார்பில் ஒரு பாதத்தினுல் அழித்து, மற்றொரு பாதத்தி னுலே நூறு சிரங்களையும் இடறி உருட்டிக்கொன்று, அதன்பின்னும் மிகுந்த கோபங்கொண்டு, ''அறுமுகப்பெருமானுடைய உறுதிமொழிகளை யிகழ்ந்த சூரபன்மன் இருக்கும் அவைக்களத்தை மூன்பு அழித்துப் பின்பு இந்கரத்தை அழிப்பேன்'' என்று நினைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

# காவலாளர்வதைப் படலம்.

வீரவாகுதேவர் முருகக்கடவுளுடைய திருவடிகளைத் தியானித்து, அவருடைய திருவருளினுலே புயங்கள் திசையையளக்கவும், முடி வானுலகத்தை அளக்கவும், பாதம் பூவுலகத்தை அளக்கவும் மிகப் பெரியதோருருவங்கொண்டு நின்ருர். அப்பாரத்தைத் தாங்கலாற்ருது, ஆதிசேஷன் முதலிய நாகங்களும் ஆதிகூர்மமும் பயந்தன; வீரமகேந்திரம் நடுக்குற்றது. அது சூரபன்மனுடைய ஆணையினுல் இலங்கைமலைபோலக் கடலில் ஆழாதிருந்தது. அவர் பாதங்களினுல் ஊன்றிய இடந்தோறும் நிலம் வெடிக்க, அவ்வப்புழைகள்தோறுந் தோன்றுகின்ற சமுத்திரஜலம் சூரபன்மனுடைய கோயிலை வளைந்து, அவனுடைய அத்தாணிமண்டபத்திலும் போய், வீதியிற் பரந்து, யானை குதிரை தேர் காலாள் ஆகிய படைகளையும் பல மாளிகைகளையும் வாரிக்கொண்டு மீட்டும் கடலிற்போய்ப் பாய்ந்தது. வீரவாகுதேவருடைய பெரிய உருவத்தைக் கண்டவர்கள் யாவரும் கையை உதறி "அம்மவோ" என்று அச்சமுற்று ஓடினர்கள்.

சூரபன்மனுடைய கோயிலைக் காவல்செய்கின்ற ஐம்பதுவெள்ளம் அவுணர்கள் அவரைக்கண்டு, "ஓ ஈதோர் வஞ்சன் இங்கே வந்தான்." என்று பயந்து கூச்சலிட்டுத் தம்முட்கூடி, "நாம் இவனுடு போர்செய்யாதொழியில் நம்மரசனே நம்மைக் கொல்வான், இதுநிச்சயம்" என்றெண்ணி, அவரோடு போர்செய்யும்படி வந்து நெருங்கி, எழு, தோமரம், பிண்டிபாலம், தண்டம் முதலாகிய படைக்கலங்களை வீசி, ஆரவாரித்தார்கள். அவர்கள் தம்மைச் சூழ்ந்து பொருவதை வீரவாகுதேவர் பார்த்து, ஆயிரகோடி இடியொலி போலப் புயத்திற்றட்டி ஆரவாரித்தார். அவ்வொலியைக் கேட்ட அவுணப்படைகள் இடியேறுண்ட அசுணப்புட்போன்றன வாய்க் கலங்கி அறிவழிந்தன. அவுணவீரர்கள் வீரவாகுதேவர்மீது படைக்கலங்களை மழைபோல விடுத்தார்கள். அவைகள் வந்து படுதலும், அவர் செந்நிறமான விழுது தொங்க நிற்கின்ற ஆலமரம்போல இரத்தம் வடிய நின்று, அக்கினியைப்போலக் கோபித்து "மானத்தையுடைய வீரர்கள் மேலன்றி வாட்படையை எடேன்" என்று அவுணசேனைகளுட் சிலரை மிதித்தும், சிலரைக் கொதித்தும், சிலரை நசுக்கியும், சிலரைப் புதைத்தும், சிலரைத் தகர்த்தும், சிலரைத் துவைத்தும், சிலரை உதைத்தும், சிலரைக் குதித்தும், சிலரை உருட்டியும், சிலரைப் புரட்டியும், சிலரைத் தலையை நெரித்தும், சிலரைப் புயத்தை ஒடித்தும், சிலரைக் கரத்தை முரித்தும், சிலரைக் கழுத்தைத் திருகியும், இன்னும் இவைபோன்ற பல கொடுஞ் செயல்களைச்செய்தும், பெருத்தும், சிறுத்தும், வேறுபலஉருவங்கொண்டும், சூரபன்மனுடைய கோயிலைக் காவல்செய்து நின்ற ஐம்பது வெள்ளஞ் சேனைகளையும் விரைவில் அழித்தார். மயில் அன்னம் புரு முதலிய பக்ஷிகள் வசிக்கும் மாடங்களின்மீது பருந்து காகம் பிசாசு முதலியவைகள் இறந்த அவுணர்களுடைய இரத்தத்தையும் மாமிசத்தையும் உண்ணும்படி வந்திருந்தன. இறந்த வீரர்களுடைய உடம்பிலுள்ள சத்ததாதுக்களும் வேறுபாடு தெரியாவண்ணஞ் சேருய் ஒன்றுபட்டன.

திருச்சிற்றம்பலம்.

# நகராழி படலம்.

ஐம்பது அவுணவெள்ளங்களை அழித்த வீரவாகுதேவர், ஐஞ்ஞூறு யோசனை அகன்று ஆயிரம்யோசனை உயர்ந்து ஓரிலக்கஞ் சிகரங்களைத் தாங்கி மேருமலைபோலச் சூரபன்மனுடைய கோயிலின் முன்னிற்கின்ற ஒரு வேரத்தைக்கண்டு, அதனைப் பறித்து ஒரு கரத்திலேந்தி, சூரபன்மனுடைய அவைக்களத்தில் வீசி, இடியும் அஞ்ச ஆரவாரித்தார். அவ்வொலி அத்தாணிமண்டபத்திலிருப்பவர்களுடைய செவியிற் புகுமுன், அவர் எறிந்த வேரம் அம்மண்டபத்தில் வீழ்ந்து, சூரபன்மனும் புதல்வர்களும் வேறு சிலரும் இருக்கின்ற சிற்சில இடங்களொழிய அச்சபை முழுவதையும் அழித்தது. அச்சபையின் மேலிடம் சிதைந்தது; சுவர்கள் இடிந்தன; உத்திரங்கள் பொடிந்தன; போதிகைகள் பூழியாயின; தூண்கள் முரிந்தன; கபோதங்கள் வீழ்ந்தன; அழகழிந்தது. இவ்வாறு அத்தாணிமண்டபம் தகர்தலும், சூரனைச் சூழ்ந்த பரிசனங்களுட் சிலர் ஓடினர்; சிலர் உடம்புகளில் ஊறுபாடுற்றனர்; சிலர் இறந்தனர்; சிலர் மிகமெலிந்து புலம்பலுற்றார். அழிந்த அச்சபையிலிருந்து எழுந்த பொற்றுகள் திக்குக்களிலும் பூமியிலும் வானுலகத்திலுஞ் செறிந்தன. இறவாமல் எஞ்சியிருந்த அவுணர்கள் கூட்டங்குலைந்து ஓடினர். தக்கனைப்போல அறிவில்லாத சூரன் இவற்றைக் கண்டு, வீரவாகுதேவருடைய வலிமையை நோக்கி, ஆயிரம் வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, தன்னயலில் நின்ற ஆயிரந் தோள்களையும் ஐஞ்ஞூறு முகங்களையுமுடைய ஆயிரம் அவுணவீரரைப் பார்த்து, "அறுமுகனுடைய தூதுவன் மிகவுயர்ந்த ஒரு வேரத்தைப் பறித்தெறிந்தான். அதனால் அத்தாணிமண்டபம் சிறிதிடமொழியத் தகர்ந்து வீழ்ந்தது. எனக்கிதன்மேலும் பழிப்புண்டோ! என் புகழும் அழிந்தது. ஒற்றுவனைக் கொல்லுதல் வெற்றியன்று. அவனைக் கொல்லாமற் போர்செய்தாயினும், தப்பிப்போகாவண்ணம் பிடித்து என்முன் கொண்டுவருதிர். அவனுடம்பில் ஊறுசெய்து தேவர்களோடு சிறையிடுவேன்" என்றான்.

ஆயிரம் அவுணர்களும் அதனைக் கேட்டு, "அரசனே இதனைக் கேட்டருள். முன்னமே தூதுவனுடைய இரத்தத்தை உயிரோடு பருகுதற்கென்றிருந்தோம். உன்னுடைய ஆணையை எதிர்பார்த்து இத்துணைப்பொழுதுந் தாழ்த்தோம். இனி அதனைச் செய்வோம்" என்று வணங்கி, சூரபன்மன் இனிதென்று விடுப்பச் சென்றார்கள். அவர்களுக்கு முன்னின்ற வீரவாகுதேவர், "சூரபன்மனுடைய நகரிலுள்ள வளங்களைத் தொலைத்து அவனைச் சூழ்ந்தவர்களுடைய இருக்கைகளையும் அழிப்பேன்" என்று எண்ணி, சோலை, செய்குன்று, தெற்றி, மண்டபம், கோபுரம், சூளிகை, கல்விபயிலகளம் முதலியவற்றைப் பிடுங்கி எறிந்தும், பந்திகளிலும் சாலைகளிலும் நிற்கின்ற அளவில்லாத யானை குதிரை தேர்களை அள்ளியள்ளித் திசைகள் தோறும் வீசியும், மதில்களை உதைத்து வீழ்த்தியும், சூரபன்மனுடைய கோயிலை இவ்வாறு அழித்தபின், அதனைச் சூழ்ந்த அகழியையுந் தூர்த்தார். சூரபன்மனுடைய கோயிலினின்றெறிந்த சிகரங்கள் சூளிகைகள் சோலைகள் முதலிய எல்லாம் ஆகாயமெங்குஞ் செறிந்து, தேவர்களுடைய பதங்களை அழித்து, தேவகங்கையைத் தூர்த்தன. அவைகள் மேலே

வரக்கண்ட தேவர்கள் ஏங்கி, கூட்டங்குலைந்து ஓடினர்கள். திசைகளிலும் சமுத்திரத்திலும் மலைகளிலும் பிற இடங்களிலும் அவைகள் வீழ அங்கங்கே நெருங்கிய உயிர்கள் அஞ்சி ஓடின. சக்கரவாளகிரி மேருமலை முதலாகிய மலைகள் நிலைகுலைந்தன. திக்குயானைகள் ஓடின. பூமியிற் சிந்தினவை யொழிந்த மற்றவைகளெல்லாம், எண்பதினாயிரம் யோசனையுடையதாகிய சூரபன்மனுடைய மகேந்திரபுரியில் இடியேறுபோல வீழ்ந்தன. அதனால் மாடங்கள் சிகரங்கள் வேரங்கள் முதலாகிய எல்லாம் அழிந்தன. இவ்வாறு அந்நகரம் அழிதலும், ஆண்டுள்ள சனங்கள் உகமுடிவில் அண்டகூடம் உடைய இறக்கின்ற ஆன்மகோடிகள் அரற்றுமாறுபோல அரற்றின. யானைகள் துதிக்கையை எடுத்துக் கதறியும் கோடு சிதற இரத்தம் உகுத்தும் வீழ்ந்தன. தேர்கள் கொடிகளிற்றும் உரூள முதலிய உறுப்புக்கள் சிதைந்தும் பொடியாயின. குதிரைகள் கலங்கி உடல் நெரிந்து இரத்தம் வடியத் திசைகளிற் சிதறியோடின. அந்நகரத்துச் சனங்களிற் சிலர் யானைக்காலிலும் குதிரைக்காலிலும் அகப்பட்டு மூளை சிந்த இறந்தனர். சிலர் தோள் பிடர் கால் முதலிய அவயவங்கள் இழந்து வருத்தமுற்றார். சிலர் இஃதென்ன என்று வெளியிடத்தில் வரநினைத்து, முற்றத்தில் வருமுன் இறந்தார். சிலர் ஒதுக்கிடமின்மையால் நிலவறைக்குட் புகுந்து வருந்தினர். சிலர் மனைவிமக்களையும் தந்தைதாயர்களையும் தமது கையிற் பற்றிக்கொண்டு மாளிகையினின்று வீதியில் வந்து அஞ்சி நின்றார். சிலர் பயந்துபோய்க் கடலில் வீழ்ந்திறந்தார். வீரமகேந்திரத்துச் சனங்கள் இங்ஙனம் பலவாறாக அழிந்தபொழுது, இரங்கும் ஒலி ஏழுகடலொலியை வென்றது. இறந்த உயிர்களுடைய இரத்தவெள்ளத்தால் அந்நகரமெங்குஞ் சேறாகியது. கீர்த்திபெற்றிருந்த வீரமகேந்திரபுரம் இவ்வாறு அழிந்து பழைய வளங்களெல்லாம் நீங்கியது. தேவர்களெல்லாரையும் வருத்திய சூரபன்மனுடைய வளம் நன்றாயிருக்குமோ!

திருச்சிற்றம்பலம்.

## சகத்திரவாகுகள்வதைப் படலம்.

சூரபன்மனுடைய நகரம் இவ்வாறு அழிந்தபொழுது, நஞ்சுபோலும் உடம்பையும் வடவாமுகாக்கினிபோலுங் குடுமியையும், சுடுகாடுபோலும் வாயினையும், ஐந்நூறு தலைகளையும், பற்பல படைகளையேந்திய ஆயிரங் கைகளையும், அண்டம்போல அகன்ற வயிற்றினையும் உடைய சகத்திரவாகுகள் இடியேறுபோல ஆர்த்து, ''இரண்டுகைகளையும் ஒரு முகத்தையுமுடைய ஒரு தேவனை வெல்லுதற்கு, ஆயிரங் கைகளையும் ஐஞ்ஞூறு தலைகளையுமுடைய நாம் ஆயிரவர் செல்லுதல் பழி'' என்று நினைத்து மனந்தளர்ந்து, ''முன் மாயையினால் மறைந்துவந்தவன், ஆதலால் இவன் விரைவில் ஆகாயத்தில் மறைந்துவிடுவான், இது பொய்யல்ல விரைவிற் செல்லுமின் செல்லுமின்'' என்று சொல்லிக்கொண்டு, வீரவாகுதேவரால் எறியப்பட்டு வீழ்கின்ற வேரம் மாளிகை முதலியவைகளைக் கைகளாலேற்றுத் துகள்செய்து, உடம்பு வியர்ப்பவும், கண்கள் அக்கினிசிந்தவும், ஓடிவந்து, வீரவாகுதேவரை எதிர்த்து ஆரவாரித்தார்கள். அவ்வோசை

வீரவாகுதேவருடைய செவியிற் புகுதலும், முப்புரங்களையெரித்த சிவபெரு மானைப்போலச் சிறிது நகைத்து, ஒரு மராமரத்தைப் பறித்துப் பன்முறை சுழற்றினர். சகத்திரவாகுகள் அவரைச் சூழ்ந்து, தோமரம் குலிசம் முத லாகிய அனேகம் படைகளை விடுத்தார்கள். அவைகளை வீரவாகுதேவர் மராமரத்தினால் அடித்துப் பொடிபடுத்தினர். சகத்திரவாகுகள் வீரவாகு தேவரைக் கிட்டி, பின்னும் போர்புரியும்படி முயன்றனர். அவர் மரா மரத்தினால் புயம் சிரம் கபோலம் மார்பு முதலாகிய அங்கங்கள் சிதையும் படி அடித்து, அவர்களெல்லாரையும் கொன்றார். அவர்களுடைய உடம் பினின்று பாய்ந்த இரத்தவெள்ளம் அந்நகரிலுள்ள வளங்களை வாரிக் கொண்டு சமுத்திரத்திற் பாய்ந்து பூமியிலும் மடுத்தது. வீரவாகுதேவர் தினப்பொழுதினுள்ளே சகத்திரவாகுகள் எல்லாரையும் அழித்து, அப் போர்க்களத்திலே தனியே நின்றார்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## வச்சிரவாகுவதைப் படலம்.

ஆகாயத்தில் வந்து போரைப் பார்த்து நின்ற சூரபன்மனுடைய தூதுவர்கள் ஓடிப்போய், "மகாராசனே, உன் புடையிலுள்ள சகத்திர வாகுகள் சென்று தூதுவனொடு சில போர்களைச் செய்தார்கள். அவன் அதனைக்கண்டு, ஒரு மராமரத்தைப் பறித்து அடித்தான்; எல்லாரும் இறந்து வீழ்ந்தார்கள். இதுவே நிகழ்ந்தவாறு" என்றார்கள். அதனைக் கேட்ட சூரபன்மன் வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, பெருமிதமும் ஆணையும் வலிமையும் நீங்கிப் பெருந்துயருற்று, "உமாதேவி பெற்ற ஒரு சிறுபாலகன் அனுப்பிய தூதுவனொருவன் நம்முன் வந்து, அவமதிசெய்து சென்று, போரிலே எல்லாரையுங் கொன்று நின்று, இன்னமும் அகலு கின்றிலன். நமது வெற்றியும் நன்று நன்று" என்று சிரித்தான்.

பத்துச் சிரங்களையுடைய வச்சிரவாகுவென்னும் இளையகுமாரன் சூரபன்மனுடைய கோபத்தைக் கண்டு, எழுந்து சென்று கால்களை வணங்கி, "பிதாவே, எளிய தூதுவன்பொருட்டு இவ்வாறு சொல்லுதல் உனக்குத் தகுமோ! இறைப்பொழுது இங்கே இருக்குதி. யான் சென்று அவனுடைய வலிமையை அழித்து, அகப்படுத்திக் கொண்டுவந்து தரு வேன். அதனைக் காணுதி" என்று கூறினன். சூரபன்மன் மகிழ்ந்து, "நீ அவ்வாறே செய்குதி" என்று சொல்லி வீரவாகுதேவரோடு போருக்குப் போம்படி பணித்தான். வச்சிரவாகு விடைபெற்று, பிதாவினுடைய கால் களை வணங்கி, ஆயுதசாலையுட் போய், கவசத்தையிட்டு, வீரபட்டத்தை அணிந்து, விரற்புட்டிலைப்பூண்டு, அம்பறாத்தூணியைக் கட்டி, வில் முத லாகிய பிற படைக்கலங்களை யேந்தி, தும்பைமாலையைச் சூடி, போர்க் கோலம் முழுதுங் கொண்டு, ஏவலாளரை நோக்கி, "நம்முடைய சேனை வெள்ளங்களுட் சிலவற்றைப் போருக்குச் செல்லுதற்காக இந்தக்கணமே அழையுங்கள்" என்றான். அவர்கள் அவ்வாறே செய்குதுமென்று போயி னர். பின்னர் வச்சிரவாகு தன்னிழல்போல நீங்காத தோழர்களைப் பார்த்து, "அறுமுகன் விடுத்த தூதுவனைப் போரில் வென்று கயிற்றினாற்

கட்டி ஓரிமைப்பொழுதினுள் என் பிதாவுக்கு முன்னரே கொண்டுவரு வேன். நீவிரனைவரும் போர்க்கோலங் கொள்ளுதிர்'' என்றான். தோழர் களும் மற்றை வீரர்களும் விரைந்து போர்க்கோலங் கொண்டு வந்து கூடினார்கள். வச்சிரவாகு ஆயிரங் குதிரை பூண்ட ஒரு தேரின்மீதேறினான். சேனாதிபதிகளுடைய புதல்வர்களும் மந்திரிமார்களுடைய புதல்வர்களு மாகிய அத்தோழர்களும் விரைந்து தேரின்மேலேறிவந்து சூழ்ந்தார்கள். ஏவலாளர்கள் யானைமேற்கொண்டு பறைசாற்றிச் சொல்லிய பணியைக் கேட்டு, ஐஞ்ஞூறுவெள்ளந் தேர்களும், ஐஞ்ஞூறுவெள்ளம் யானைகளும், ஆயிரம்வெள்ளங் குதிரைகளும், இரண்டாயிரம் வெள்ளங்காலாட்களும், கடல்போல ஒலித்து, வச்சிரவாகுவை வந்து சேர்ந்தன. துந்துபி முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. இவ்வாறுகிய போர்க்குரிய அணிகளோடு வச்சிர வாகு விரைந்துசென்றான். அவனுடைய தேரில்பேய்கள் சூழ்ந்துசண்டை யிட்டன;காகமும் கழுகும் பருந்தும் கூகையும்கூடி இரங்கின; அவன்கையிற் பிடித்த வில் வீழ்ந்தது; அப்பருத்தூணி அறுந்து வீழ்ந்தது; இடக்கண் களும் இடப்புயங்களும் துடித்தன; அவனுடைய தேர்க்கொடிகள் அறுந்து வீழ்ந்தன; ஆகாயத்தில் முகிலின்றி இடியொலியுண்டாயின. இவ்வாறு அனேக துச்சகுனங்கள் நிகழ்ந்தன. வச்சிரவாகு இவைகளொன்றையுஞ் சிந்தியாதவனாய், மற்றோர் அப்பருத்தூணியையும் வில்லையும் எடுத்துக் கொண்டு, சேனாவெள்ளங்களோடு புறப்பட்டு, வீரவாகுதேவர் நின்ற போர்க்களத்தை அணுகினான்.

அவன் வருதலை வீரவாகுதேவர் கண்டு, ''இங்கு வருபவன் சூரபன் மன் அல்லன். அவன் புதல்வர்களில் ஒருவனும். இவனைச் சேனைகளோடு அழித்து, இற்றை மாலைக்காலத்தின்முன் எம்பெருமானுடைய திருவடி களைத் தரிசிக்கும்படி விரைந்துபோவேன். அங்ஙனம் போகாதொழியில் யான் அறுமுகப்பெருமானுடைய தூதுவனாவேனோ?'' என்று சொல்லி, முரு கக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை மனசினால் வணங்கித் துதித்து, போர்செய்ய முயன்று, அண்டமுந் திசையும் வானுங் குலுங்கத் தோளைத் தட்டி ஆரவாரித்தார். கசரததுரகங்களில் இருக்கின்ற அவுணர்களும் பதாதிகளாகிய அவுணர்களும் அவ்வொலியைக் கேட்டு, வியர்த்து மனம் வேறுபட்டு அஞ்சி, ''உலகங்களும் உயிர்களும் அழிய ஊழிகாலத்திற் றனியே நின்று ஆர்க்கும் உருத்திரமூர்த்தியினுடைய ஒலியோ! அன்றிப் பெரும்புறக்கடலின் ஒலியோ! ஏழ்கடலொலியோ! அண்டங்கள் பிளந்த ஒலியோ! இவ்வொலி'' என்று ஐயமுற்றார். அவ்வொலி வச்சிரவாகுவி னுடைய இருபது செவிகளிலும் மூலமுழையிற் புகுந்த இடியேறுபோலப் புகுதலும், மனநடுங்கி, ''பதினான்குலகங்களிலும் இன்றுகாறும் இப்பேரொலி கேட்டதில்லை. இவ்வொலி யாதோ! அறிகுதிர்'' என்று ஏவலாளர்களுக் குச் சொல்ல, தேர்ப்பாகனாகிய விசயன் என்பவன் வணங்கி, ''நம்மரச குமாரனே, தேர்ப்பாகன் சொல்லென்று என் சொல்லை இகழாது உறுதி யாகக்கொள். நீ சேனைகளோடு போர்செய்ய வருவதைப் பார்த்த தூது வன் போரை விரும்பி ஆர்க்கும் ஒலி இது. இதனை இனிக் காணுதி'' என்று கூறினான். அச்சொற் செவியில் நுழையுமுன் வச்சிரவாகு அக்கினி பொங்கச் சிரித்துப் பெருமூச்சுவிட்டு உரப்பி, ''யான் போய் ஒரு கணப்

பொழுதினுள் அவனுடைய போர்வலியைக் கெடுத்துப் பற்றிக்கொண்டு வந்து என் பிதாவுக்கு முன்னே விடுவேன்'' என்று சொல்லி, போருக்குப் போயினன். அவனுக்கு முன்சென்ற அவுணவீரர்கள் வீரவாகுதேவரைச் சூழ்ந்து ஆரவாரித்து, விற்களை வளைத்து, அம்புகளை யெய்தும், முசலம் கலப்பை தண்டம் சூலம முதலாகிய படைக்கலங்களை விடுத்தும் போர்செய்தார்கள். அப்படைகள் வீரவாகுதேவருடைய செவ்வொளி பொருந்திய திருமேனியில் வந்து படுதலும், விடியற்காலத்தில் உதிக்கும் சூரியனிடத்தினின்று கிரணங்கள் வருதல்போல இரத்தம் உண்டாயிற்று. வீரவாகுதேவர் மிகக் கோபங்கொண்டு, சில அவுணர்களுடைய குடுமியைப் பற்றிப் பூமியிலும் மலைகளிலும் அடித்தும், சிலருடைய படைக்கலங்களைப் பறித்து நெருப்பெழப் பிசைந்தும், சிலரைப் பாதங்களாற் றேய்த்தும், யானை குதிரை தேர்களை உதைத்தும், சிலரைக் கிழித்தும், சிலரைத் துவைத்தும், சிலரை அரைத்தும், சிலரை மராமரத்தால் அடித்தும், சிலருடைய தலைகளின்மீது குதித்தும், நால்வகைச் சேனைகளையும் இவ்வாறே அழித்தார். அப்பொழுது, வச்சிரவாகுவின் பக்கத்தில் வந்த அவனுடைய தோழர்கள் சதுரங்கசேனைகளோடு வீரவாகுதேவரைச் சூழ்ந்து, பல படைக்கலங்களினுற் போர் செய்தார்கள். அவர் தமது கரத்திலேந்திய மராமரத் தண்டினுல் அந்த வீரர்கள் படைகளோடு துகள் பட்டழியும்படி அடித்துத் திரிந்தார். யானைகள் மத்தகம் கால் முதலிய அவயவங்கள் சிதைந்தும், குதிரைகள் தலை முதலிய அவயவங்கள் அழிந்தும், தேர்கள் தட்டு முதலாகிய உறுப்புக்கள் ஒடிந்தும் அழிந்தன. அவுணர்கள் வில் முதலாகிய படைகள் இழந்தும், சிரமுதலிய அங்கங்கள் சிதைந்தும் அழிந்தார்கள். சில அவுணர்களையும் குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் வாரி ஆகாயத்திலும் பூமியிலும் கடலிலும் மலைகளிலும் ஆர்த்தெறிந்தார். சிலரை யமனுக்கு முன்னே எறிந்தார். வீரவாகுதேவர் வச்சிரவாகுவினுடைய சேனைகளையும் தோழர்களையும் இங்ஙனம் பலவாருகக் கொன்ருர். அவருக்குத் தப்பினவர்கள் மானமும் வலிமையு மின்றி வானுலகத்திலும் கடலிலும் திசைகளிலும் ஓடிப்போயினர்.

இத்தன்மைகளை வச்சிரவாகு பார்த்து, ''நம்முடைய சேனைகளெல்லாம் அழிந்தனவோ!'' என்று இரங்கி, கோபம் மேற்கொண்டு, பாகனை நோக்கி, ''இத்தேரைத்தூதுவனுக்குமுன் விரைந்து செலுத்துவாய்'' என்று சொல்ல, அவன் வணங்கி, வீரவாகுதேவருக்கெதிரே செலுத்தினன். வச்சிரவாகு விரைந்து போர்செய்யும்படி வருதலை வீரவாகுதேவர் கண்டு, அடங்காத மகிழ்ச்சியடைந்து, மிகப் பெரியதோருருவத்தை எடுத்து இடிபோல ஆரவாரித்து அக்கினியெழச் சிரித்தார். அவருடைய சிரிப்பையும் முழக்கத்தையும் வச்சிரவாகு கேட்டு அஞ்சி, சிரங்களையசைத்து, நெருப்பெழப் பார்த்துக் கோபித்து, ''தூதுவனே உன்னுடைய வீரம் நன்று! ஆண்மையும் நன்று! பேரும் நன்று! பேராற்றலும் நன்று! நீ பெற்ற சீரும் நன்று! உன்னுடைய வித்தையும் நன்று! நீ செய்கின்ற போரும் நன்று! இவ்வொலி உனக்கேற்பதே! உன்னெதிர் வந்து பொருத வீரர்களையெல்லாம் கொன்றேம் என்று நினைத்தாய். அதனையெல்லாம் இனி விடு. உன்னுடைய வலியைக் கெடுத்து, உன்னைப் பிடித்துக்கொண்டுபோய் என் பிதாவின்முன்னே விடுவேன்'' என்று கூறினன். வீரவாகுதேவர் இதனைக்

கேட்டு, ''தமியேனும் உன்னை வெல்ல முயலுவேன், நீயும் என்னை வெல்ல முயலுகின்றனை. இருவரும் அதனைச் சொல்லி நிற்பதனாற் பயன் என்னை? விரைவிற் போரைச் செய்குதி. பின் வென்றவர் வெல்லுக'' என்றார். என்னுமுன், வச்சிரவாகு வில்லைவளைத்து நாணெலிசெய்து, ஆயிரம் பாணங்களைப் பூட்டி, வீரவாகுதேவர்மேல் விடுத்தான். அவைகள் தம்மீது வருதலும், அவர் ஒரு கரத்தை நீட்டி, அவைகளெல்லாவற்றையும் பிடித்துத் துகளாகும்படி பிசைந்தார். தன் பாணங்கள் துகளாதலும், வச்சிரவாகு கோபித்து, பதினாயிரம் பாணங்களை வீரவாகுதேவருடைய மார்பிற் படும்படி தூண்டினன். வீரவாகுதேவர் அதனை நோக்கி, போரிலே இறந்த அவுணர்கள் இட்ட ஓர் எழுப்படையை எடுத்து, அப்பாணங்களை அடித்து வீழ்த்தினர். தன் பாணங்களழிதலும், வச்சிரவாகு பழுதடையாத பதினாயிரம் பாணங்களைத் தூண்டி, அவர் தாங்கிய எழுவைப் பொடிபடுத்தி, அவருடைய தலையிலும், கழுத்திலும், புயத்திலும், மார்பிலும், பாதத்திலும், தனித்தனி ஆயிரம் பாணங்களாகத் தூண்டினன். கையிலேந்திய எழுப்படை முறிந்து தம்முடைய மேனியெங்கும் பாணங்கள் புகுதலும், வீரவாகுதேவர் ஓரிறைப்பொழுது வருந்திநின்று, அதன்பின்பு விரைந்து போய் வச்சிரவாகுவினுடைய தேரை உதைத்தார். குதிரைகள் பதைத்து வீழ்ந்தன; பாகனும் உருண்டிறந்தான்; தேரும் அழிந்தது. வச்சிரவாகு அதனைக்கண்டு வேறொரு தேரிற்பாய்ந்து, ஆயிரம் பாணங்களைத் தெரிந்து வில்லிற்பூட்டி, தேவர்கள் இரங்கும்படி வீரவாகுதேவருடைய நெற்றியிற் செறித்தான். அவர் அவனுடைய தேரைக் கையாலெடுத்து ஆகாயத்திலெறிந்து, அதன்பின் அவன் ஏறும்படி அமைந்துநின்ற தேர்களெல்லாவற்றையும் விரைவில் அடித்தெறிந்து உதைத்தழித்தார். தேரோடு எறியப்பட்ட வச்சிரவாகு பூமியிலிருந்து இலக்ஷம்யோசனைதூரம் வானிற் போய், வருந்தி மீண்டுவந்து, அழிந்த தேரோடு வீரவாகு தேவருக்கு முன்னே வீழ்ந்து, வில்லை வளைத்துப் போர்செய்யக் கருதினன். அதனை வீரவாகுதேவர் கண்டு, கையைநீட்டி அவ்வில்லைப் பிடித்திழுத்துப் பேரொலியுண்டாக முறித்தார். வில் முறிதலும், வச்சிரவாகு வாட்படையை ஏந்தி எதிர்த்து வந்தான். வீரவாகுதேவரும் வாட்படையை உறையினின்றுங் கழற்றி, வச்சிரவாகு வீசத் தம்முடைய புயத்தையடைந்த வாட்படையை விலக்கி, அவனுடைய வாட்படையை யேந்திய கையை வெட்டி வீழ்த்தினர். ஒரு கரம் வெட்டுண்ணுதலும், வச்சிரவாகு பிறிதோர் கரத்திலிருந்த தண்டாயுதத்தை எறிந்தான். வீரவாகுதேவர் அதனையும் அவனுடைய பத்துத் தலைகளையும் வாட்படையினால் அறுத்து, அவனைக் கொன்றார். வச்சிரவாகு இறத்தலும், பக்கத்திலுள்ள அவுணர்கள் அதனைக் கண்டு புலம்பித், திசைதோறும் புறங்கொடுத்தோடினர்கள். அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயினன்.

திருச்சிற்றம்பலம்.

## யாளிமுகன்வதைப் படலம்.

வீரவாகுதேவர் வச்சிரவாகு இறந்ததையும், அவனுடைய சேனைகள் புறந்தந் தோடினமையையும், பின்பு போர்செய்ய வருவோர் இல்லாமை

யையும், சூரியன் அஸ்தமித்ததையுங் கண்டு, "எம்பெருமானுகிய சுப்பிர மணியக்கடவுளே இகழ்ந்த சூரபன்மனுடைய கோயிலை அழித்து மகேந்திர புரியையும் சிறிதழித்தேன்; போருக்கு வந்தவர்கள் எல்லாரையும் சங்க ரித்தேன்; என் மனத்தில் நிகழ்ந்த கோபத்திற் சிறிது போக்கினேன்; போர் செய்தற்கு வேறெவரும் வந்திலர்; சூரியனும் அஸ்தமித்தான்; மாலைக்காலமும் வந்துவிட்டது. பாவங்களைச் செய்கின்ற அவுணர்களுடைய ஊரில் ஒற்றுவகை வந்த யான் இம்மாலைக்காலமளவும் அறுமுகப்பெரு மானை மறந்திருத்தலாகுமோ! அவருடைய திருவடிகளைப் பிரிந்த தனிமை யும், இங்கே சிறையிலிருக்கின்ற தேவர்களுடைய துன்பமும் நீங்கும்படி விரைந்து செல்வதே துணிவு" என்று எண்ணி, போர்க்களத்தை நீங்கி, காற்றையும் நெருப்பையும் காலனையும் கூற்றுவனையும்போல வீதியிற் போயினர். அவர் செல்லுதலைக் கண்ட அவுணர்கள், "இவன் நமக்கு ஒரு யமன்; இவனை அணுகன்மின் அணுகன்மின்; கொல்வான் கொல்வான்" என்று முறைமுறையாக அரற்றி ஓடினர்கள். வீரவாகுதேவர் மூதேவி குடிகொண்டழிந்த வீதிகளைக் கடந்து, மகேந்திரபுரத்தை நீங்கி, ஆகா யத்திலெழுந்து வழிக்கொண்டு, முருகக்கடவுளைத் துதித்து, வடதிசையி லுள்ள இலங்கைமலையை அடைந்தார்.

அப்பொழுது அதனைக் காவல்செய்பவனும், முப்புரத்தவுணர்களை யொத்த வலிமையையுடையவனும், ஆயிரம் முகங்களையும் யமபுரத்தின் வாயில்கள் போன்ற வாய்களையும் இரண்டாயிரங் கைகளையும் அவை களிலே பல படைக்கலங்களையும் ஆயிரம் மேருகிரிகள் ஒன்றுபோற் சேர்ந் தாற்போன்ற உடலையும் வடவாமுகாக்கினியைக்காலும் கண்களையும் சிறி துந் தண்ணளியில்லாத மனத்தையும் உடையவனும், அதிவீரனுடைய பிதாவும் ஆகிய யாளிமுகன் என்பவன், அன்று காலையிற் சூரபன்மனைப் போய்க்கண்டு திரும்பிவந்து, தன் மகனுகிய அதிவீரன் இறந்தமையைக் கேட்டு வருத்தமுற்று, அவ்விலங்கைமலையில் இருந்தான். அவன் வீரவாகு தேவர் மிகுந்த வேகத்தோடு செல்லுதலைக் கண்டு, "இவன் யார்? கள் வன் போலும், ஆகாயவழியைக் கடந்து வருவான்" என்றான். அதனைக் கேட்டு அவனுடைய ஏவலாளன் ஒருவன் சொல்லுவான்: "நம்மரசனே கேட்பாய். நீ இன்று காலையில் உன் மகனை இங்கே காவல்செய்ய வைத் துச் சூரபன்மனைக் காணும்படி மகேந்திரபுரத்திற்குப் போயினாய். அதன் பின், இவன் ஆகாயமார்க்கமாகக் கடலைத்தாண்டி இங்குவந்தான். வீர சிங்கன் இவனைக் கண்டு கோபித்து, படைகளோடு சென்று போர்செய்ய, இவன் வாட்படையினால் அவனைக் கொன்று ஒரு வெற்றியையடைந்தான். இந்த வீரன் இவ்விலங்கை மலையிற் பாய்தலும், அது இவனுடைய கால் வைப்பப்பொறுது சமுத்திரத்தில் ஆழ்ந்தது. அதனால் அனேகர் இறந் தார். ஏனையோர் இவனைக் கண்டு ஓடினர். உன் மகனுகிய அதிவீரன் கடலினின்று எழுந்து விரைவில் வந்து இவனோடு போர்செய்தான். இவன் அவனுடைய மார்பு கால் கை தலை ஆகிய உறுப்புக்களை ஒரே முறையில் வாட்படையினற் றுணித்து, மகேந்திரபுரிக்குப் போயினன். கடலிலாழ்ந்த இலங்கைமலை மேலெழுந்தது. இவ்வீரன் சூரபன்மனுடைய நகரத்துக்குப் போய், அங்குள்ள வளங்கள் முழுவதையும் அழித்து, நம்மவர்களாகிய அவுணவீரர்களோடு போர்செய்து வென்று, அதன்பின் வந்தெதிர்ப்பா ரில்லாமையினால் மீண்டான்" என்று ஏவலாளன் சொன்னன்.

யாளிமுகன் இவ்வார்த்தையைக் கேட்டு, இடியைப்பார்க்கினும் இடித்த சொல்லும் அக்கினிகாலும் உயிர்ப்பும் மடித்தவாயும் வியர்வையும் சுழலுகின்ற கண்களும் உடையனாய்க் கோபித்து, ''என் காவலைக் கடந்து என்மகனைக் கொன்று மகேந்திரபுரிக்குச் சென்று மீண்டு வருகின்ற இக்கள்வனைக் கொல்வேன்'' என்று சொல்லி, ஒரு வாட்படையை ஏந்தி, சில சேனைகளோடு வீரவாகுதேவருக்கு முன்சென்று, ''மதியில்லாதவனே, நீ என்னுடைய குமாரனைக் கொன்று, இந்தக் காவலைக்கடந்து மகேந்திரபுரிக்குப் போய் அழிவு செய்து, கடலைக்கடந்து போகின்றனைபோலும். இனிச் சமுத்திரத்தைத் தாண்டிச் செல்லுதல் உனக்கு அரிது. யான் போரில் எதிர்த்தேன்; உன்னைக் கொன்று வெற்றியடைவேன்; நீ இங்கே வல்லதைச் செய்குதி'' என்றான். அதனைக் கேட்டலும், வீரவாகுதேவர், உயிர்ப்பும், சிரிப்பும், கோபமுங் கொண்டு, சிரசையசைத்து, ''தீயனே ஒருதலையையுடைய எனதுயர்வையும் ஆயிரந் தலைகளையுடைய உனதிழிவையும் யாம் இங்கே போர் செய்யும்பொழுது காண்போம்; பேருருவங் கொண்ட தோற்றத்தை மதியாதே; உன்னுடைய ஆயிரம் யாளிமுகங்களையும் அறுத்து வீழ்த்தி நாய்கள் கவரும்படி இரையாகக் கொடுப்பேன். இது திண்ணம் திண்ணம்'' என்றார். வீரவாகுதேவர் இப்படிச் சொல்லும்பொழுது, யாளிமுகனுடைய சேனைகள் அவரைச் சூழ்ந்து பல படைக்கலங்களை ஏவிப் போர்செய்தார்கள். அவர் அச்சேனைக்கூட்டத்துள் வாட்படையோடு புகுந்து, முகம், மார்பு, கை, கால் முதலிய அவயவங்கள் வேறுவேறுகும்படி வெட்டி, சேனைகள் முழுவதையும் கொன்றார். யாளிமுகன் அதனைப் பார்த்துக் கோபங்கொண்டு, ஆயிரங் கைகளினால் வீரவாகுதேவரை இடிபோல எற்றினான். அவர் அவனுடைய அடித்த ஆயிரங் கைகளையும் ஒரு கையாற்பிடித்து வாட்படையினால் வெட்டினார். யாளிமுகன் ஆயிரங் கைகளும் அற, மற்றை ஆயிரங் கைகளினாலும் ஆயிரம் மலைகளைப் பறித்து வீரவாகுதேவர்மேல் வீசினான். அவைகள் அவருடைய மேனியெங்கும் பட்டுப் புழுதியாய் உடைந்து வீழ்ந்தன. வீரவாகுதேவர் அவனுடைய மற்றை ஆயிரங் கைகளையும் வெட்டி வீழ்த்தினார். அவன் கூற்றுவனை அழைப்பதுபோல ஆர்த்து, வீரவாகுதேவரைப் பிடிக்கும்படி ஆயிரந்துதிக்கைகளையும் நீட்டினான். அவர் அவனுடைய ஆயிரஞ் சிரங்களையும் ஒருங்கே அறுத்து வீழ்த்தினார்.

திருச்சிற்றம்பலம்.

## வீரவாகு மீட்சிப் படலம்.

வீரவாகுதேவர் இவ்வாறு யாளிமுகனைச் சங்கரித்தபின்பு, வாட்படையை உறையுட் புகுத்தி, சமுத்திரத்தைத் தாண்டி, சுந்தமாதன மலையின் பக்கத்திலே சமுத்திரக்கரையிற் பொருந்திய திருச்செந்திப் பதியை அடைந்தார். அவருடைய வரவைக்கண்ட பூதசைனியங்கள் பூரண சந்திரனுடைய வரவைக்கண்ட சமுத்திரம்போல ஆரவாரித்தன. பூதப் படைத் தலைவர்கள் யாவரும் வந்து அஞ்சலிசெய்து தழுவி, உவகை மொழிகளைக் கூறினார்கள். வீரவாகுத் தேவர் தம்மைத்தழுவிய அவர்களை

தாமுந்தழுவி, ''இழிஞர்களாகிய அவுணர்களுடைய ஊருக்குச் சென்றதனல் வந்த பாவத்தை உங்களைக் கண்டமையால் நீங்கப்பெற்றேன்'' என்று அன்போடு முகமன்கூறி, இலக்கத்தெண்மர்களும் வந்து வணங்க அவர்களைத்தழுவி, அவர்களும் பூதப்படைத்தலைவர்களும் உடன்வரச் சுப்பிரமணியக்கடவுளுடைய கோயிலை அடைந்து, அரிபிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் சேவித்துத் திருமருங்கில் நெருங்கிச் சூழ அக்கடவுள் வீற்றிருக்குந் திருக்கோலத்தை முன்பு தரிசித்துக் களிப்படைந்து, மனமும் என்பும் உருகவும், ஆனந்தபாஷ்பஞ் சொரியவும், சரீரநடுங்கவும், புளகம் அரும்பவும், அவருடைய திருவடித்தாமரைகளை மும்முறை வணங்கி அஞ்சலித்துத் துதித்துநின்ருர். குமாரக்கடவுள் ''வீரவாகுவே, நீ சூரபன்மனுக்கு முன்பு சென்று நாம் சொல்லிய வார்த்தைகளைச் சொல்ல அவன் அதற்குப் பதிலாகச் சொல்லியவைகளையும், மீண்டு வந்ததையும் முறையாகச் சொல்லுதி'' என்ருர். ''எம்பெருமானே தேவரீர் சொல்லியருளிய திருவாக்குக்களைச் சூரபன்மனுக்குச் சொன்னேன். அவன் தேவர்களுடைய சிறையை விடுதலே காரியம் என்று மனதிற் கொண்டிலன். 'அவர்களுடைய சிறையை விடுகிலேன்' என்று வெகுண்டு கூறினன். ஆதலால் அடியேன் அவ்விடத்தை நீங்கி விரைவில் வந்தேன். இது நிகழ்ந்தது'' என்று வீரவாகுதேவர் விண்ணப்பஞ்செய்தார். எங்கும் வியாபித்திருப்பவரும் முற்ருருங்குணர்ந்த முழுமுதற்கடவுளுமாகிய முருகக்கடவுள் அதனைத் திருச்செவி மடுத்து, ''உன்னுடைய செய்கைகளுளொன்றையுஞ் சொன்னயில்லை; நன்று! அதனைச் சொல்லுதி'' என்றருளிச்செய்ய, ''சூரபன்மனுடைய நகரத்துக்குச் சென்றபொழுதும் மீண்டபொழுதும் அடியேனைத் தடுத்தவர்களைத் தேவரீருடைய திருவடித்தாமரைகளின் வலியினுற் கொலை செய்து வந்தேன்; இதுவே நிகழ்ந்தது'' என்று விண்ணப்பஞ்செய்தார். சுப்பிரமணியக்கடவுள் வீரவாகுதேவரை நோக்கி, ''பகைவர்களாகிய அவுணர்களால் மிகவும் வருந்தினபோலும்!'' என்று பேரருள் புரிந்தார்.

அப்பொழுது, சுப்பிரமணியப்பெருமான் விட்டுணுவையும் பிரமாவையும் இந்திரனையும் பார்த்து, ''தேவர்களைச் சிறையினின்றும் விடுத்து நீ சுகமாயிருக்குதி'' என்று சூரபன்மனுக்குத் தூதுவனை அனுப்பிச் சொல்லுவித்தோம். பாவியாகிய அவன் அதனை உறுதி என்று உட்கொண்டிலன்; இறத்தலே அவனுக்கு உறுதியாதலினுல் 'தேவர்களுடைய சிறையை விடோம்' என்று கூறினன்; யாம் நாளைக்கு அவனேடு போர்செய்யப் போவோம்'' என்று சொல்லியருளினர். அறுமுகக்கடவுள் இவ்வாறு அருளிச்செய்யக் கேட்ட தேவர்கள், ''கொடிய சூரபன்மன்மீது போருக்குப் போவோம் என்ற திருவாக்கின் தெளிவினுல் நம்முடைய துன்பம் நீங்கியது'' என்று மகிழ்ச்சியடைந்தார்கள். அப்பொழுது வீரவாகுதேவர் மகேந்திரபுரியிலே சிறையிலிருக்கும் சயந்தனைத் தாம் போய்க் கண்டதையும் பிறவற்றையுமெடுத்துச் சொல்லி இந்திரனுடைய மனத்தைத் தெளிவித்தார். வீரவாகுதேவர் மகேந்திரபுரியினின்று மீண்டதைச் சொன்னேம். இனி, சூரபன்மன் அடைந்த துன்பங்களையும் பிறவற்றையுஞ் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

# சூரனகர்புரி படலம்.

சேனைகளோடு வச்சிரவாகு இறந்ததையும், வீரவாகுதேவர் மீண்டு சென்றதையும், தூதுவர்கள் சூரபன்மனுக்குச் சோகத்தோடுபோய்ச் சொன்னர்கள். சூரன் அதனைக் கேட்டலும், நடுங்கித் துன்பக்கடலில் வீழ்ந்து, புதல்வன்மாட்டு வைத்த அன்பு சென்று உயிரையீரவும், கண்ணீர் வடியவும், உயிர்ப்பாகிய புகை சூழவும் அளவிறந்த துன்பமடைந்து, ஏங்கிப் புலம்பினன். அவனுடைய சுற்றத்தார்களும் பரிசனங்கள் முதலாயினரும் அழுதார்கள். பதுமகோமளை கூந்தலவிழத் தனங்களிலடித்துக் கையை உதறி அழுதாள். சூரபன்மனுடைய மற்றை மனைவியர்களும் சேடியர்களும் பிற பெண்களும் கட்டிக்கொண்டழுதார்கள். அந்நகரில் மங்கலவொலிகளெல்லாம் அடங்கி அழுகையொலி மிகுந்தது. அப்பொழுது தருமகோபன் என்னும் துன்மந்திரி சூரபன்மனிடத்தில் வந்து வணங்கிச் சொல்வான்: ''மகாராஜனே, நீ பிருதிவியண்டங்கள் ஆயிரத்தெட்டை அரசாளும் மேன்மையினை உடையை; ஒப்பில்லாத செல்வங்களையுடையை; அழியாத வாழ்நாளையுடையை; சொல்லுதற்கரிய வலிமையையுடையை; சிறந்த கீர்த்தியையுடையை. இவ்வாறு வருந்துதல் தகுதியாமோ! இவ்வுலகமெல்லாம் அழியினும் அழிவின்றி வாழ்கின்ற வீரனே, உன் மனத்திட்பங் குன்றலாகுமா! எவரும் புகழுகின்ற மகாராஜனுகிய நீ ஓவென்றரற்றி வாட்டமடைவாயானால், மும்மூர்த்திகளும் நகைப்பர், முன்னமே உன்னுடைய ஏவலைச் செய்கின்ற தேவர்களும் நகைப்பர், புகழுந்தேயும். பூதப்படைகளல்ல, சிவகுமாரனல்ல, அவன் சொல்லவிட்ட ஒரு தூதுவன் செய்த புன்முருழலுக்காற்றாது, அழிவில்லாத பெருமையையுடைய நீ இப்படித் துன்புறலாமா! தந்தையர்கள் இறந்தாலும், சகோதரர்கள் இறந்தாலும், புதல்வர்கள் இறந்தாலும், தம்மைச்சார்ந்த பிறர் இறந்தாலும், வெற்றியிற் சிறந்த அரசர்கள் தம் மனவலி சிறிதாயினுங் குறைவார்களோ! இறக்கும் விதிவந்தால் மிகப்பெரிய வலியுடையவர்களையும் பெண்களும் வெல்லுவர். ஆதலினால், உன் மகனுக்கு வாழ்நாள் குன்றுதலின், தூதுவனும் அவனைக் கொன்றவனைத் தோன்றினன். பகைவர்கள் செய்யும் வினைகளையும், அவர்களுடைய வலிமையையும் தெளிய அறிந்து, செய்யவேண்டிய காரியங்களை ஆராய்ந்து செய்யாமல், வருத்தமடைவதும், ஆண்மைக்குத் தகுமோ! வரங்களையும் வீரத்தையும் வரம்பின்றி அடைந்து, சூரன் என்று ஒரு பேரைப் பெற்ற நீ இவ்வாறு துன்பமடைவதும் தலைமைக்கேற்குமோ! இரங்கலை இரங்கலை'' என்று தருமகோபன் தெளிவித்தான்.

தருமகோபன் இவ்வாறு தெளிவித்தலும், சூரபன்மன் தெளிவுபெற்று எழுந்து சகிக்கமுடியாத தன் துன்பத்தை அடக்கி, தன் பக்கத்திலுள்ள தூதுவரை நோக்கி, ''என் மகனைக் கொன்று இந்நகரை அழித்த வலிய தூதுவன் நம்முடைய நகரத்தைத் தாண்டி அப்பாற் சென்றதை நீங்கள் பார்த்தீர்களோ? பிறர்சொல்லக் கேட்டீர்களோ? உண்மையைச் சொல்லுங்கள்'' என்றான். ''இங்கே தூதுவந்தவன் இந்நகரை நீங்கி இலங்கைமலையை நோக்கி அப்பாற் போயினன். அதனைப் பார்த்தோம் இது உண்மை'' என்று தூதுவர்கள் சொன்னர்கள். சூரபன்மன் அதனைக்கேட்டு, தன் பக்கத்தில் நிற்கின்ற ஏவலாளரை நோக்கி, ''நீவிர் விரைவிற்சென்று பிரமாவை

அழைத்து வருதிர்'' என்று கூற, அவர்கள் வணங்கி, ''மகாராஜனே, இந்த அண்டத்துப் பிரமன், 'இந்திரன் முதலாகிய தேவர்களோடு கூடி, இப்பூமியிற் சேனைகளோடு வந்திருக்கின்ற அறுமுகனெடிருக்கின்றன்' என்று கண்டவர்கள் சொன்னர்கள்'' என்றார்கள். இதனைக்கேட்ட சூரபன்மன் பெருமூச்சுவிட்டு, நன்றுநன்றென்று சொல்லி, நெருப்பெழச் சிரித்து, ''மற்றை யண்டத்துப் பிரமனை விரைவில் அழைத்து வருதிர்'' என்றான். தூதுவர்கள் விரைந்து மற்றையண்டத்துக்குச் சென்று பிரமாவை அழைத்துக் கொண்டு வந்து விடுத்தார்கள். அவரைச் சூரபன்மன் பார்த்து, ''அழிந்த இந்நகரை முன்போலச் செய்குதி'' என்றான். பிரமா அப்பணியைச் சிரமேற் கொண்டு, ''மகாராசனே உன்னகரை முன்போல அழகுறும்படி இறைப் பொழுதில் செய்வேன்'' என்று கூறி, மதில்கள் மாடவீதிகள் சிகரங்கள் வேரங்கள் சோலைகள் மண்டபங்கள் வாவிகள் பொய்கைகள் முதலிய எல்லாவற்றையும் முன்போலத் தமது கைத்தொழில் வன்மையாற் படைத்து, அதன்பின் சூரபன்மனுடைய கோயிலையும் முன்போல அழகு பெறச் செய்தார். சூரபன்மன் அவைகளைப் பார்த்து மகிழ்ந்து, அவர்மேல் அன்புசெய்து, முன்போல இரத்தினசிங்காசனத்திலிருந்து, பிரமாவை நோக்கி, ''நீ உன்னுடைய அண்டத்திற்குப் போய்ப் படைத்தற்றொழிலைச் செய்து கொண்டிருக்குதி'' என்று சொல்லியனுப்பினன். பிரமா மற்றை அண்டத்துக்குப் போய், தானிருக்கும் சத்தியவுலகத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்.

## சூரனமைச்சியற் படலம்.

சூரபன்மன் வச்சிரவாகு இறந்த துன்பத்தினின்று ஒருவாறு தேறி அத்தாணிமண்டபத்திலே சிங்காசனத்தில் இருக்கும்பொழுது, முன்னே அவனால் அனுப்பப்பட்டுச் சென்ற * பகன் மயூரன் முதலாகிய ஒற்றுவர்கள் சமுத்திரத்தைத் தாண்டித் திருச்செந்தூருக்குப் போய், சுப்பிரமணியக் கடவுளுடைய சேனைகளையும் பிறவற்றையும் அறிந்து, விரைவில்வந்து சூரபன்மனுடைய காலகளை வணங்கிச் சொல்வார்: ''சிவகுமாரராகிய அறுமுகக்கடவுள் இரண்டாயிரம்வெள்ளம் பூதசேனைகளோடும் படைத்தலைவர் நூற்றெண்மரோடும் அவரினும் மேலாகிய இலக்கத்தொன்பது வீரர்களோடும் பூவுலகில் வந்து, உன்றம்பியாகிய தாரகனையும் கிரவுஞ்சமலையையும் வேற்படையினற் பிளந்து சங்கரித்து, திருச்செந்தூரில் வந்திருந்தார். இஃதுண்மை. அவர் இங்கே ஒரு தூதுவனை அனுப்பினர். அவன் இலங்கையை அழித்து, இங்குவந்து போம்பொழுது யாளிமுகனை வாட்படையினற் சங்கரித்துக் கடலைத் தாண்டிப்போயினன். சிவகுமாரர் பூதகணங்களோடும் படைவீரர்களோடும் இங்கே வந்து போர்செய்யும்படி எண்ணியிருந்தார். மகாராசனே இதனைச் சந்தேகமென்றெண்ணற்க, உண்மை. நீ இதற்கேற்ற உபாயங்களை நினைத்துச் செய்குதி'' என்றார்கள்.

* பகன் முதலிய ஒற்றுவர்களைச் சூரபன்மன் அனுப்பினமை அசுரேந்திரன் மகேந்திரஞ் செல்படலத் திறுதியிற் காண்க.

சூரபன்மன் ஒற்றுவர்களுடைய சொல்லைக்கேட்டு, தம்பியாகிய சிங்க முகாசுரனையும் மந்திரிமார்களையும் சேனாதிபதிகளுட்டலைமையாயுள்ளோர் களையும் மிகவிரைவில் வருவித்தான். அவர்கள் யாவரும்வந்து அவனுடைய கால்களைவணங்கிப் பக்கத்திலிருந்தார்கள். அவன் அவர்களை நோக்கி, மிகக் கோபம் மூளப் பெருமூச்சுவிட்டுச் சொல்லுவான்: ''நம் பகைவர்களாகிய தேவர்களை யான் நீங்காத சிறையில் வைத்ததை அறிந்த இந்திரன் சிவ பெருமானுக்குப்போய்ச் சொன்னன். அக்கடவுள் ஒரு குமாரனைப்பெற்று, 'மைந்தனே நீ தேவர்களுடைய சிறையை நீக்கி வருதி' என்று சொல்லி நம் மிடத்தில் அனுப்பினர். அக்குமாரன் நந்திகணவீரர்களும் பூதகணங்களும் சூழவும் பிரமாவும் விட்டுணுவும் துதிக்கவும் பூவுலகில் வந்து, வேற்படை யினுற் கிரவுஞ்சமலையையும் தாரகனையுங் கொன்று, அதன்பின் சமுத்திரக் கரையில் வந்திருந்துகொண்டு, என்னிடத்தில் ஒரு தூதுவனை அனுப்பினன். அத்தூதுவன் சமுத்திரத்தைத் தாண்டி இலங்கைமலையிற் பாய்ந்து அதனை அழித்து, அங்குள்ள காவலைக்கடந்து, இந்நகரின் நடுவில் வந்துலாவி, சிறி துங் கலங்காது என்னுடைய சபைக்களத்தில் வந்து, வீரர்களைப்போல என்னெதிரிலிருந்து தேவர்கள் பக்ஷமாகச் சில வார்த்தைகளைப் பேசி, என் கண்முன்னே சில அவுணர்களைக் கொன்று, பின்னும் வலிமையோடு என்னை மதியாமல் எழுந்து போயினன். போன அவன் இந்நகரைப் பொடிபடுத்தி, யான் பிடித்துவரும்படி அனுப்பிய வீரர்கள் யாவரையுங் கொன்றுன். பின்னும் செருக்கு நீங்காதவனாய் என்னுடைய இளைய குமாரனாகிய வச்சிர வாகுவையுங் கொன்றுன். இந்த நகரம் அழிந்தது; அளவிறந்த சேனைகள் மடிந்தன; பிணங்கள் மிகுந்தன; அப்பாரத்தினுற் பூமி கிழிந்தது; இரத்த வெள்ளம் பாய்ந்தது; என்னுடைய ஆணையும் உயர்வும் நீங்கியது. ஒற்று வனாக வந்த அவ்வொருவனைப் பிடித்துச் சிறையில் வைத்திலேன், கொலை செய்திலேன், அல்லது ஓருறுபாட்டையேனுஞ் செய்திலேன். எனக்குவந்த வசைமொழிக்கு எவ்வாறு முடிவு கூறுவேன்! இங்கேவந்து மேற்சொல்லிய தீங்குகளையெல்லாஞ் செய்த தூதுவன் மகேந்திரபுரியைத் தாண்டி, இலங்கைமலையிலிருந்த வலிய யாளிமுகனைக் கொன்று, சமுத்திரத்தைக் கடந்து, நிலவுலகத்தையடைந்தான். சிவகுமாரன் சமுத்திரத்தைக் கடந்து, இங்கே வந்து நம்மோடு போர்செய்ய எண்ணுவான்போலும். இவைகள் எல்லாவற்றையும் ஒற்றுவர்கள் சொல்லினர். இவைகள் உண்மையாம். யான் ஒருகலைப்பொழுதினுட் பூதர்களையும் மற்றை வீரர்களையும் கொன்று, சிவகுமாரனை வென்றுவர வல்லேன். சூரன் என்று பெயர் பெற்ற யான் பூதர்களோடும் ஒரு பாலகனோடும் போரைச்செய்து வெல்லினும் வீரமன் றென்று வாளாவிருந்தேன். செல்வங்களினுலும் வலிமையினுலும் உபாயத் தினுலும் எத்துணைப் பெரியோரும் ஒருவினையைச் செய்யக்கருதும்பொழுது, தமக்குத் துணையாயுள்ளவர்களோடு யோசித்து அதன்மேற் செய்வர். ஆதலி னுல், யானும் உங்களை வினவினேன். செய்யத்தகுவதைச் சொல்லுங்கள்'' என்று சூரபன்மன் கூறினன்.

சூரபன்மன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அங்கிருந்தவர்களுள், மகிடன் என்பவன் சொல்வான்: ''கிரவுஞ்சமலையையும், விட்டுணுவையும் வென்ற உன்றம்பியாகிய தாரகனையும், ஒரு நொடிப்பொழுதிற் சங்கரித்த வீரனைப் பாலகன் என்று சொல்லுவதும் அறிவுடைமையாகுமோ! கடலைத்

தாண்டி நம்முடைய நகரத்தை அழித்து உன் மகனுகிய வச்சிரவாகுவைக் கொன்ற கள்வனேத் தூதுவன் என்று சொல்லுவதும் அறிஞர் சூழ்ச்சியோ! பிரமா விட்டுணு இந்திரன் என்னும் இவர்கள் மூவரும் ஒருருக்கொண்டு வந்ததன்றி அவனிலேமையை வேருக நினேக்கலாமோ! உன்னுடைய தம்பியும் கிரவுஞ்சமும் இறந்த அன்றே நீ சிவகுமாரன்மேற் போருக்குச் சென்றிலே, அல்லது உன் சேனேகளே அனுப்பியாயினும் வென்றிலே, காலதாமதஞ் செய்து இங்கே வாளாவிருந்தாய். நெருப்புச் சிறிதாயினும், அறிஞர் அதனே ஏ! ஏ!! இதுசிறிதென்று இகழற்பாலரோ! அதனேத் தணியாதொழிவரேயெனின், அது இறைப்பொழுதினுட் பெரிய இப்பூவுலகமுழுவதையும் அழிக்கும். பகைவர்களுடைய சூழ்ச்சியாயினும் அவர்களுடைய வேறு நிலேமைகளாயினும் தம்மை வந்தடையுமுன் அரசர் அதற்கு எதிர்சென்று காப்பரேயாயின், அவர்க்குத் துன்பங்கள் வந்தடையுமோ! அரசனே யாம் அழியாத வளங்களே அநுபவித்து, செய்யவேண்டுவனவற்றை மறந்தும், வலியோர்களேக் கொல்லும் வீரர்களே யிகழ்ந்தும், இவ்வாறு வாழ்வோமானுல், சிறந்தவர் யாமல்லாமல் வேறுயாவர்! முன்னமே அப்பாலகன் மேற் போருக்குச் சென்றுயாயின், உன்னகரத்துக்குத் தூதுவனும் வருவானு! நீ போருக்குச் செல்லாமல், புத்திரனேடு இந்நகரம் அழிந்ததென்று இரங்கற்பாலேயோ! உன் மகன் இறந்ததும், இந்நகரம் அழிந்ததும், செய்யவேண்டுவனவற்றைத் தெரிந்து செய்யாத அறியாமையால் வந்தனவாம். கழிந்த பிழையை நினேத்து மிக மனமழிதல் அறிஞர்க்கு இயற்கையன்று. ஆதலால், போனபிழைகள் போக, யான் ஒன்று சொல்வேன் கேள். அதனே இழிந்தது என்று எண்ணுது விரைவிற் செய்கதி. நான் சொல்வது பிறிதொன்றுமில்லே. அவுணவீரர்களோடும் சேனேகளோடும் விரைந்து சிவகுமாரனே வலேத்துப் போர்செய்யச் செல்லுதி; முன்னே நாட்கள்போல நீ இனிக் காலதாமஞ் செய்யற்க.'' என்று மகிடன் என்பவன் சொல்லினுன். அவற்றைத் துர்க்குணன் என்னும் மந்திரி கேட்டு, இது நன்றென்று கையோடு கையைத் தட்டிச் சிரித்து, இவ்வாறு சொல்வான்: ''மகாராசனே, விட்டுணுவின்மேலும் மற்றைத் தேவர்கண்மேலும் போர்செய்ய இதுகாறும் சென்றுயில்லே, தம்பியர்களால் வெற்றி கொண்டுவந்தாய். இன்றைக்கு ஒரு பாலகன்மேற் போருக்குச் செல்லலாகுமோ! அழியாத வாழ்நாளேயும், வளங்களேயும், ஆஞ்ஞாசக்கரத்தையும், வலியையும், வீரத்தையும், பிறவற்றையும் தவத்தாற் பெற்றுய். இவைகளேப் பெற்றது ஒரு பாலகனேடு போர்செய்தற்கா! தேவர்களேப் புறங்கண்ட நீ, பசிநோய் வருத்த உணவில் ஆசைகொண்டு திரியும் பூதகணங்களேயும் தூதுவனேயும் தொடர்ந்து போர்செய்யப் போகின்றனேயோ! இன்றைக்கு உன்னுடைய படைத்தலேவர்கள் யாவரையும் அனுப்புதி. அவர்கள் சிறிது பொழுதினுட் சிவகுமாரனேயும் பூதகணங்களேயும் வென்று வருவர். இதுவே உபாயம்'' என்று துர்க்குணன் கூறினுன்.

அவன் சொன்ன முடிவில் தருமகோபன் என்னும் மந்திரி ''இனியொழிக'' என்று கையமைத்துச் சொல்லுவான்: ''அரசனே நீ சிறுபாலகனேடு யுத்தஞ்செய்தல் நவரத்தினங்கள் இழைத்துப் பொன்னுற்செய்த கலப்பையைக்கொண்டு புன்செய்யை உழுவது போலும். சிவபெருமானு

மன்றெனில், விட்டுணுவுமன்றெனில், பிரமாவுமன்றெனில், யமனுமன் றெனில், எல்லாவுலகங்களையுங் காக்கின்ற வீரனுகிய நீ ஒரு பாலகனோடு போர்செய்யிற் பயனுண்டாகுமோ! இனி அப்பாலகன்மீது போர்செய்யச் செல்லுவாயாயினும், அவன் உன்னுடைய பேராற்றலைக் காண்பானுயின் புறங்கொடுப்பானன்றி எதிர்ந்து போர்செய்ய வல்லனே? நமக்கு ஒப்பா காதவர்களை ஒத்தவர்களென்று போரைச் செய்து பெரிதும் அழிவதும் அறிவிலார் செயலன்றி அறிஞர் செயலாகுமோ! அவற்றைத் தெரிந்து செய் தலே அறிஞர் கடன். இலக்கத்தொன்பது வீரர்களும் பூதர்களும் சிவகுமார னும் அக்கினிமுகன் இரணியன் என்கின்ற உன்னுடைய குமாரர் இருவருள் ஒருவனுக்கு ஆற்றூர். நகங்கொண்டு கிள்ளத்தக்க ஒன்றை வாள் கொண்டு ஒருவன் வெட்டுவானே! ஒரு ஆளைக்கொண்டு அழிப்பிக்கத்தக்க அவர்களை வெல்லுதற்கு நீண்ட வில்லைக்கொண்டு நீயுஞ் செல்கின்றனையோ! கண்ணி மைகூடாத பாலகனோடும் பூதர்களோடும் நீ போர்செய்யப் போகின்றுய் என்னுஞ் சொல்லைக்கேட்டால், நம்மவர்கள் நாணுவர், தேவர்களும் சிரிப் பர். தாரகனையும் கிரவுஞ்சமலையையும் அழித்தான் என்று பாலகனையும், வச் சிரவாகுவைக் கொன்றுன் என்று ஒற்றுவனையும் மதித்தாய்; ஊழை நினைத் திலை. சிவபெருமான் கொடுத்த வேற்படையைப் பாலகன் செலுத்துதலும், மாருன படையை விடுத்து அதனை மாற்றுனமையினல் உன்றம்பியாகிய தார கன் இறந்தான். அகத்தியமுனிவர் முன்சொல்லியசாபத்தினற் கிரவுஞ்சமலை அழிந்தது. இவற்றையெல்லாம் நினைத்திலை. வலிமையில்லாத சிறுவனுடைய செய்கையையே நினைக்கின்றுய். வச்சிரவாகுவாகிய உன்மகன், அழியாத தேர் கவசம் வில் என்னும் இவைகளைப் பெற்றிலன். அவன் போருக்குப் போகும்பொழுது நீயும் அவற்றைக் கொடுத்திலை. ஆதலால், அவனுந் தூதுவனல் இறந்தான். இனிப் பலவற்றைச் சொல்வது என்னை? உன்னு டைய படைத்தலைவருள் ஒருவனை அழைத்து, சேனைகளோடு முருகன்மேற் போர்செய்வதற்கு அனுப்புவாயாயின், அவன் வெற்றிகொண்டு வருவான், அதனையே செய்''என்று தருமகோபன் கூறினன்.

அவன் சொல்லிய முடிவில் காலசித்து என்பவன் சிரிப்புத்தோன்ற இவற்றைச் சொல்வான்: ''நம்மரசனே, திருச்செந்தூரில் வந்திருக்கும் பாலகன் பூதசேனைகளோடு இங்கே போருக்கு வருவானுயின், சிலரை அவனெடு போர் செய்யும்படி அனுப்புவதல்லது, இதற்கும் ஆலோசனை வேண்டுமா! விட்டுணுவையும் இந்திரனையும் சயந்தனையும் பிறரையும் போர்செய்து வென்ற நாளில், எம்மை வினவியிலை. இன்றைக்கு ஒரு பாலகனுக்கு மிகப் பெரியமந்திரம் வேண்டிற்றே! தேவர்கள் ஒடுங்கினர், இராக்ஷதர்கள் அஞ்சினர், நிக்குப்பாலகர் எண்மரும் நம்முடைய ஏவலைச் செய்வர். போரில் அவுணர்களிலும் வலியவர் பூதராம்! கண்டனம் இன்று யாங்குவியின்வண்ணம்! தமியேனை அனுப்புதி; சிவகுமாரனையும் பூதகணங் களையும் காலபாசத்தாற் கட்டிக்கொண்டு வருவேன்'' என்று காலசித்துப் பேசினன். அதன்பின் சண்டன் என்றொருவன் சொல்லுவான்: ''மிக்க பசி நோயால் வருந்தும் பூதரும், சிறுபாலகனும், அவனுக்குத் தொண்டு செய் கின்ற சிலரும் யோசிக்கப்படுந் தகுதியுடையரோ! அவுணர்களுடைய மந் திரம் மிக நன்றுயிருந்தது. பூதரைக் கொல்லுவேன், பாலகனையும் வெல்லு

வேன், பிறரையுமழிப்பேன். இராசாதிராசனே, உன்னுடைய அநுமதியில்லை யென்று இத்தனையும் சும்மாவிருந்தேன். தமியேனை அனுப்புதி, நொடிப் பொழுதிற் சென்று பூதர்களோடு அப்பாலகனை வென்று மீள்வேன்.'' என்று சண்டன் சொன்னான். அதன்பின் அனலியென்னும் படைத்தலைவன் கோபமும் சிரிப்புமுண்டாக, ''போரில் ஒரு சிறுவனையினும் வந்தெதிர்த் தால் அவன்மேற் கோபித்துப் போர்செய்யச் செல்லாது எங்களோடு மந்திரத்திலிருப்பாரேயானால் அம்மவோ சூரருக்கு வலிமை அழகிது!'' என்று வினயத்தோடு சொல்லினான். அவன் இப்படிச் சொல்லுதலும், சிங்கன் என்பான் எரிகின்ற கண்களையும் சிரிப்பையும் பெருமூச்சையும் கன்றிய மனத்தையும் உடையனாய், பற்களினாலே அதரத்தைக் கடித்துச் சொல்லுவான்: ''அரசனே நீ வீரர்களை அழைத்ததுமாயோசனையிலிருந்ததும் மனத்திற் கொண்ட சூழ்ச்சிகளும் இந்திரனுக்கு உதவிசெய்கின்ற பாலகனு டைய வலிமையைக் கெடுக்கும்படி நினைந்த செய்கை போலும்! இப்பிரு திவியண்டத்திலிருந்தோரெல்லாம் எனக்குப் பகைவர்களாய் வருக. வந் தால், தனித்த யானொருவனும் போர்செய்து அவர்களெல்லாரையும் உலை யச்செய்வேன். உனது அடியேனுகிய என்னுடைய வலியை அறிகிலை போலும்! என் வலிமையைச் சொல்லுவது தகுதியன்று. என்னைப் 'போருக் குச்செல்' என்று அனுப்புதி. சேனைகளோடு போய் உன்பகைவர்களை யழித்து வருவேன்'' என்று சிங்கன் கூறினான். கூற, அநீதியையுடைய மற்றை அமைச்சர்களும் படைத்தலைவர்களும் இவைபோல்வன பலவற்றையும் சொன்னார்கள்.

பானுகோபன் அவர்களைக் கையமைத்துச் சொல்வான்: ''பிதாவே, கிரவுஞ்சமலையையும் உன்றம்பியையும் பாலகன் வென்ற அன்றைக்கே என்னைப்போருக்கு அனுப்பினையில்லை; அழைத்து ஒன்றையும் யோசித்தா யில்லை. இன்றைக்கு இதனை வினவுவதென்னை! வஞ்சனுகிய ஒருதேவன் இங்கே தூதுவந்து போர்செய்தால், இன்னமும் பல் முழுதும் முளையாத ஒரு பாலகனைப் போருக்கனுப்பலாமோ! நீ மிகவும் பெரியை! உன் அறிவில் லாமையினால் 'இழிவாகிய தூதுவனைற் றுன்பமடைந்தாய்' என்னும் பழி யைப் பூண்டாய். பாலகனுடைய உயிரை ஒழித்தாய்; நகரம் முழுதையும் அழித்தாய். பொருளல்லாத ஒன்றைப் பொருளாகக்கொண்டு அதற்கஞ்சுவ தும், செய்யுமுபாயத்தை யறியாது ஒருசெயலை விரைந்து செய்து அதனைற் சோர்வடைந்து வாழ்தலும், பெரியோர் கடமையா! பேதைமைத்தன் மையே! கிரவுஞ்சமலையையும் உன்றம்பியையுமழித்த பாலகனுடைய வலி மையையும், பூதர்களுடைய வலிமையையும், ஒற்றுவனுடைய தன்மையை யும் நீ அறிய வேண்டினால், யான் போய் அவர்களைப் பாசத்தாற் கட்டிக் கொண்டுவந்து உனக்கு முன்விடுவேன். என் பிதாவே நீ ஆயிரத்தெட்டண் டங்களுக்கும் ஒரு தனி முதல்வன். சிவகுமாரனுடைய போரைக்குறித்து நீ புறப்படுதல் சிறப்பன்று. என்னை அனுப்பி அவனைவெற்றிகொண்டிருக் குதி. என்னை அனுப்புவாயாயின், போருக்கு வருகின்ற அவர்கள் எல்லாரை யும் அழித்து, தேவர்களையும் வென்று மீளுவேன்'' என்று இவ்வாறு சில வார்த்தைகளைப் பானுகோபன் கூறினான்.

அதன்பின் இரணியன் சொல்வான்: ''பிதாவே 'மிகுந்த வெற்றியை யுடைய சூரபன்மன் ஒரு பாலகனுடைய போர்வலிமையைக் கருதி இரங்கி னன்' என்னும் வார்த்தை வெளிப்பட்டால், உன்னை நினைத்தாலுமஞ்சுந் தேவர்களும் இகழ்தற்கேதுவாம். இனி மந்திரத்தை விடுக்குதி. 'சிவ குமாரன் உன்னோடும் போர்செய்தற்குப் பூவுலகில் வந்தான்' என்று ஒற்று வர் சொன்னவுடன் என்னை விரைவில் அழைத்து அவனோடு போர்செய்ய விடுத்தாயில்லை, என்னை வெறுத்தனையோ? பாவியேன் உனக்குச் செய்த தவறு ஒரு சிறிதேனு முண்டோ? சிவகுமாரன் மேலும், பசிப்பிணிக்காக மாமிசத்தை விரும்பி உழலுகின்ற பூதர்கண்மேலும், மற்றையோர்கண் மேலும்என்றமையலுகிய பானுகோபன் போருக்குச் செல்லுதலும் வசையே. யானே போர்செய்யப்போவேன். பெரும்போரைச் செய்து பகைவர் கூட்டத் தையும் தேவர்களையுங் கொன்று வருவேன். இன்றிரவிலேயே என்னை அனுப் புதி'' என்று கூறினன். அதன்பின் அவன்றம்பியாகிய அக்கினிமுகன் இவ் வாறு சொல்லுவான்: ''நீ ஒப்பில்லாத ஆயிரத்தெட்டண்டங்களுக்கும் அரசன். உனக்குத் துணைவலுக ஒரு வீரகேசரியுள்ளான். புத்திரர்களாய் எண்ணில்லாதவர்கள் இருக்கின்றோம். அளவிறந்த யானை குதிரை தேர் காலாட்படை உண்டு. அளவில்லாத விற்களும் அப்பருக்கூடுகளும் உள்ளன. தெய்வப்படைக்கலங்கள் முற்றுமுள்ளன. ஆஞ்ஞாசக்கரமும் ஒன்று உண்டு. ஆயிரத்தெட்டண்டங்களையும் ஒரு நாழிகையினுட் பார்த்துத் திரும்பும் இந்திரஞாலத்தேரும் ஒப்பில்லாத ஒரு சிங்கவாகனமும் உள்ளன. விஷ்ணு வும் மயங்கத்தக்க மாயங்கள் பலவுமுள்ளன. இத்தன்மையனவாகிய வளங் களைப் பெற்று அழிவில்லாதிருக்கும் ராசாதிராசனே, உன்னையொத்தவர் கள் யாவர்! உமாதேவிபாலகனுகிய அறுமுகன் விடுத்த தூதுவனுடைய சிறுதொழிலை மனத்தில் எண்ணி யெண்ணி உனக்கு இரங்கவுந் தகுவதோ! சிவகுமாரனையும் பூதர்களையும் மற்றையோர்களையும் வெல்லுதற்கு நம்ம வர்களில் விருப்பமுடைய ஒருவரை விடுப்பதேயன்றி அழிந்திரங்கி இதற் காக யோசிக்கலாமோ! இதுவோ உன்னறிவு! போர்புரிந்த என்றம்பியாகிய வச்சிரவாகுவினுடைய பத்துத்தலைகளையும் வாட்படையினல் அறுத்த ஒற்றுவனையும் மற்றையோரையும் கிளையோடு கொன்றல்லது என்னகருக் குப் போகேன். சிவகுமாரனோடு போர்செய்தலை விரும்பியிருந்த வீரர்கள் அளவில்லாதவர்களாயினும், இப்போரை எனக்கு நீ விரைந்து தருதி. முன்னளில் பாதலத்திலுள்ள அரக்கர்கள்மேற் போர்செய்யச் சென்றது போலச் செல்லுவேன். முன்னளிற் பிரமதேவர் தர வில்லும் வச்சிரகவச மும் படைக்கலங்களும் பெற்றுள்ளேன். இராக்ஷதர்களைக் குலத்தோடு சங்கரித்துப் புகழடைந்தேன். யான் மெலியனன்று, என்னை அறுமுகன் மேற் போர்செய்ய விடுக்குதி'' என்று இவ்வாறு அக்கினிமுகன் கூறினன்.

சிங்கமுகன் அவனை விலக்கிக் கையமைத்து, சூரபன்மனை நோக்கி, ''மந்திரிமாரும் சேனாபதிகளும் உன் புதல்வர்களும் தங்கள் தங்களுடைய வலிமைகளையே சொல்லியதல்லாமல், பெரிய இந்திரவளத்திலிருக்கின்ற உனக்கு ஏற்ற புத்திகளைச் சொன்னரில்லை. யான் சொல்வதைக் கேள்'' என்று சொல்லுவான்: ''செல்வத்திற் பிறந்த வெவ்விய கோபம் கற்ற வர்களுடைய அறிவையுங் கடக்கும். அது முதிருதற்குமுன் அன்புடை

யோர்கள் அவருக்கேற்ற புத்திகளைச் சொல்லித் தெளிவித்தல் வேண்டும். அரசர்களுடைய காதில் அக்கினியைக் கொளுவினற்போல நன்னெறியைத் தரத்தக்க நடுவுநிலைமையாகிய நீதியைச் சொல்பவர்களே அமைச்சர்களும் துணைவர்களும் மேலோர்களுமாவர். அரசர் விரும்பியவாறு சொல்கின்ற வர்களே பகைவராவர். தொழின்முயற்சியையும், தொடங்கிய அத்தொழி லால் வரும் பயனையும், அதற்குவருமிடையூறு முதலிய பிறவற்றையும் சீர்தூக்கித் தெளிந்து, பின் எவ்வினைகளையும் செய்வாராயின், அவ்வரசர் மாட்டுக் குற்றம் யாதாயினும் வந்தணுகவல்லதோ! மீன்கள் உணவை விரும்பி அறியாமையினலே தூண்டின்முள்ளை விழுங்கி அதிலகப்பட்டு வருந்துதல்போல, நீ தேவர்களுக்குத் துயர்செய்தலால் வரும் இன்பத்தை விரும்பி மேலே வருந்துன்பத்தை ஆராயாது வருந்துகின்றனை. இந்திரன் முதலாகிய தலைவர்களையும் தேவர்களையும் வருத்திய தீயோர் முன்னுள்ள செல்வங்களோடழிந்ததல்லது உய்ந்தவரிவரென்று சொல்லவல்லமோ! தேவர்கள் யாவரையும் கடலிலுள்ள மீன்களைத் தருக என்று ஏவினுய். இது நல்லதா? இச் செய்கையைத் தம்முயிரில் விருப்பில்லாதவரன்றி வேறு யாவர் செய்வர்! இந்திரனுக்குத் துன்பத்தைச்செய்து, அரசியலை அழித்து அவனுடைய நகரத்திலுள்ள வளங்களையெல்லாம் நீக்குவித்தாய்; தேவர்க ளெல்லாரையும் சிறையில் வைத்தாய். என்றமையனே, எங்களுக்கு அந்தத் தேவர்களாற்முன் இத்துணைத்துன்பம் வந்தடைந்தது. இது மெய்மை என்று விரைந்தெண்ணுகின்முயில்லை. பித்தர்போல மயங்கினுய், பேதை யாயினுய், சுவர்க்கவுலகம் அழிந்த நாளிற் சிறையிற்புகுந்த தேவர்களை இன்னமும் விட்டாயில்லை. இரக்கத்தை நீங்கினுய். அறுமுகக்கடவுள் உன் னுடன் போர்செய்ய வந்ததன்மை அதற்காக அல்லவா? நமக்கு வரங்களை ஈந்த சிவபெருமான் 'நீவிர் பெரிய செல்வங்களோடு நூற்றெட்டு யுக மிருக்குதிர்' என்று சொல்லியருளினர். அவர் விதித்த காலமுங் கிட்டியது. அதனைத் தெளிகின்றிலை. விதிவலியை யாவர் கடந்தவர்! 'எத்துணைவலி யுடையோரும் உங்களை வெல்லமாட்டார், எமது சத்தியே வெல்லும்' என்று சிவபெருமான் சொல்லியருளினர். அதனலல்லவா அறுமுகக்கடவுள் செலுத்திய வேற்படை தாரகனுடைய உயிரையுண்டது. பேதைகளாகிய தேவர்களைச் சிறைசெய்தாய். அதனல் உனக்கானது துன்பமேயன்றி வேறு யாது? சிறிதும் பயனில்லாத எளிய தொழிலைச் செய்து, அதனல் வேத னைப்படுகின்றது மேலோர் செயலோ! குரவர்களையும், பாலகர்களையும், பெண்களையும், தவத்திகளையும், பிராமணரையும், மற்றை மேலோர் களையும் தண்டித்தவர்களன்றே நரகங்கள்தோறும் சென்று சென்று வருந்து கின்றவர். என் அண்ணலே, தேவர்களுடைய சிறையை நீக்குவாயாயின், குமாரக்கடவுள் இங்குவந்து போர்செய்ய எண்ணுர்; நமது குற்றத்தை யுந் திருவுள்ளத்திற் கொள்ளார். நாளைக்கே இமைப்பொழுதினுட் கைலைக்கு மீண்டு செல்வார். மேலோர்களாகிய தேவர்களுடைய சிறையை நீ இன்னும் விடாதிருப்பாயேயானல், அசுரர்களுடைய முப்புரங்களையுஞ் சுட்ட சிவபெருமானுடைய குமாரராகிய முருகக்கடவுள் நம்முடைய குல மெல்லாந் தொலையும்படி சங்கரித்து, உன்னையுங் கொல்வார். இது நிச்ச யம்'' என்று சூரபன்மனுடைய கருத்தை மறுத்துச் சிங்கமுகாசுரன் கூறி னன். சூரபன்மன் இவற்றைக் கேட்டு, கைதட்டி பெருமூச்சுவிட்டு உரப்

பிச் சி ரி த் து, இதழையதுக்கி, உடம்பினின்றும் அக்கினிப்பொறிகாலக் கோபித்து, இவ்வாறு சொல்லுவான்: ''மும்மூர்த்திகளாலும் வெல் லுதற் கரிய வலிமையையுடைய என்றம்பியே, நம்முடைய தொண்டுகளைச் செய்து இன்னமும் மறைந்த இந்திரனுக்கும், தேவர்களுக்கும். சிறிய பாலகனுக் கும், பூதர்களுக்கும் அஞ்சி மனமழிந்தனையோ! வாழ்நாளை வரையறுத்த தையும் 'நம்முடைய சத்தி உங்களை வெல்லும்' என்றதையும் சிவபெரு மான் சொல்ல யான் முன்பு கேட்டிலேன். வஞ்சத்திலும் சூழ்ச்சியிலும் வல்லை வல்லைபோலும். என்றழ்பியே, நீ புதியதொன்றைக் கற்பித்தாய். 'நூற்றெட்டுயுகம் செல்வத்தோடு வீற்றிருந்து அரசுசெய்யுங்கள்' என்று சிவபெருமான் சொன்னராயினும், அவர் கொடுத்த அழியாவரத்தை விலக்குவார் யார்? அது பிழைபடுமோ! சிவபெருமான் 'நம்முடைய சத்தியேயல்லாமற் பிறர் உங்களை வெல்லமாட்டார்' என்று சொன்ன லும், சத்தியும் அக்கடவுளும் பேதமோ? வரத்தைக் கொடுத்த அவர் தாமே நம்மைக் கொல்லுவார் என்பது பிழையே. 'சத்தி வெல்லும்' என்று அக்கடவுள் கூறினரென்பது ஒரு சொல்வழக்கே, அஃது உண்மை யன்று. தாரகன் நம்மைப்போலப் பழுதின்றி யாகஞ்செய்து அழியாவரத் தைப் பெற்றிலன். அதனால் இறந்தான். வச்சிரவாகுவும் உணர்வில்லாத குழந்தையாதலால் இறந்தான். இதுவா நமக்கோர் குறை. ஆயிரத்தெட் டண்டங்களையுந் தனியரசாட்சி செய்திருந்தேன்; தேவர்களைக் கு ல த் தோடு தொண்டுகொண்டேன்; யார் வந்து எதிர்த்தாலும் புறங்கொடேன்; எனக்கொப்பாக ஒருவர் உளரோ! தவஞ்செய்துழன்ற தேவர்களிலும், இராக்கதர்களிலும், அவுணர்களிலும் ஆயிரத்தெட்டண்டங்களையும் ஒரு தனியே ஆண்டு என்னைப்போல அழிவில்லாதிருந்தவர் யாவர்? பிரம விஷ்ணு முதலாகிய முதியோர்கள் அளவில்லாத காலமாக யான் தேவர் களைச் சிறைசெய்ததைக் கண்டும், எனக்கு மிகவும் பயந்து சும்மாவிருந் தார். தனித்த ஒரு பாலகனே என்னுயிரைக் கொல்வான்! வேறுபாடு பொருந்தாத வச்சிரயாக்கையையும், வலிமையையும், அழிவில்லாத வாழ் நாளையும் பெற்ற என்னை ஒருவர்க்கும் ஒரு ஊறுபாடும் செய்யமுடியா தென்றல், பாலகனே போர்செய்து வெல்லவல்லவன்! அறிவில்லாத ஒரு பாலகன் என்னை வெல்வான் என்று நீ சொல்வது, கண்ணில்லாதவன் சூரியனை ஒரு பழமென்று விரும்பிக்காட்டக் கையில்லாதவன் போய் ஆசை யாற் பற்றுதலையொக்கும்'' என்று இவ்வாறு சூரபன்மன் சொல்லினன். தம்பியாகிய சிங்கமுகன் நன்று நன்று என்று கேட்டு, ''என் அண்ணலே, இன்னமும் நான் ஒன்று சொல்வேன் கோபஞ்செய்யற்க. கேட்குதி'' என்று சொல்லுவான்.

''தமக்கு ஒரு மூலகாரணமில்லாத சுத்த மாயாதீதராகிய சிவபெரு மான் பாலசந்திரனைத் தரித்த சடையையும், பவளம்போலுந் திருமேனி யையும், மூன்று திருக்கண்களையும், நான்கு திருப்புயங்களையும், நீலகண் டத்தையுங் கொண்டு நின்றார். தமக்கொப்பில்லாத அக்கடவுள் இவ்வா றுகிய திருவுருவத்தைக் கொண்டது என்ன காரணம் என்று வினவுவா யானால், பஞ்சகிர்த்தியத்தைச் செய்து ஆன்மாக்களைப் பந்தித்த பாசங்களை நீக்கி, வீடுபேற்றைத் தந்தருளும்படி திருவுள்ளத்திற் கொண்ட பேரரு ளேயாம். இவ்வியல்பினையுடைய அந்தச் சிவபெருமானை நினைத்து அவ

வில்லாத காலம் பெருந்தவத்தைச் செய்தாய். அவர் அதனைக்கண்டு வெளிப்பட்டு ஒப்பில்லாத வரங்களைத் தந்து, அதற்கு ஒழிவையும் சொல்லி வைத்தார். நீ இதனை அறிந்திலைபோலும்! எவராலும் பெறுதற்கரிய செல்வங்களையுடைய நீ தருமத்தைப் பேணி நீதிபைச் செய்யாது, வலிமையினாலே தேவர்களைச் சினந்து, சிறையில் வைத்தாய். எவர்க்குந் தலைவராகிய அக்கடவுள் அதனைக் கண்டு, உன்னைச் சங்கரிக்க நினைத்து, 'வரத்தைக் கொடுத்த யாமே அழிப்பது முறையன்று, வரத்தினாற் பெருமை பெற்ற சூரபன்மனைக் கொல்லுதல் பிறர்க்கும் அரிது' என்று திருவுளஞ் செய்து, தம்முடைய திருவுருவாகிய ஒரு திருக்குமாரரைக் கொண்டு கொல்ல நினைத்து, செந்நிறம்பொருந்திய திருமேனியும் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருப்புயங்களுமாகத் தம்முடைய நெற்றிக்கண்ணினால் ஒரு ஒப்பில்லாத திருக்குமாரரைத் தந்தார். மனுடர்களிலும் விலங்குகளிலும் பக்ஷிகளிலும் மற்றை யோனிகளிலும் புண்ணியபாவங்களுக்கீடாகப் பிறந்து உழலுகின்ற உயிர்களைப்போல அக்குமாரரை நீ நினையாதே. அவர் பரஞ்சோதிசொரூபராகிய சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணிலே உதித்தார்; வேதங்களாலும் அறியப்படாத தலைவர். ஞானமில்லாதவர்களுக்கு அறியமுடியாத சிற்பரவஸ்துவாகிய அவரைப் பாலகன் என்றாய். சிறிய ஒரு ஆலம்வித்தில் அந்த விருக்ஷம் யாவும் ஒடுங்கியிருந்து தோன்றியவாறுபோல, எல்லாப் பொருளும் முன்னுளில் அவரிடத்தினின்றுந் தோன்றின. அவர் அருவமாகுவர், உருவமாகுவர், அருவுருவமாகுவர். நிமித்தகாரணமுமாகுவர், செயப்படுபொருளுமாகுவர். அக்கடவுளுடைய திருவிளையாடலை யாவரே சொல்லவல்லவர்! அவர் வேதங்களின் ஞானத்துக்கும் உபநிடதங்களின் ஞானத்துக்கும் காணுதற்கரியவர், புதியர்க்குப் புதியர், மூத்தவர்க்கு மூத்தவர், முடிவிற்கு முடிவாய் ஆதிக்காதியாய் உயிர்க்குயிராய் நின்ற நிருமலர். ஞானமே திருமேனியாகவுள்ள அக்கடவுளுடைய இயல்பை யானும் நீயுமாய்ச் சொல்வோமென்றால் அஃதெளிதோ! மோனநிலை நீங்காத முனிவர்களும் தெளிகிலர். தம்முடைய பெருந்தன்மையுந் தாமும் இன்னமும்முழுதுங் காண்கிலர். தங்கள் தங்கள் நூல்களையே மெய்யென்று நிறுவும்படி சமயிகள் பலரும் கத்துகின்ற எளிய சொல்லை விஞ்ஞானவர்கள் அவருடைய செயலை அறியார்; சுத்தவாதுளம் முதலிய ஆகமங்களை ஆராய்ந்தறிந்தவர்களே ஒரு சிறிதறிவார். காண்பான் காட்சி காட்சிப்பொருள் காட்டுவான் என்னும் நான்கும், ஐம்பொறிகளும், இருவினைகளும், காலமும், இடமும், பயனுமாய் நின்றார் அக்கடவுள். 'நாமே பரம்பொருள்' என்று கூறுகின்ற பிரமவிட்டுணுக்களாகிய இருவரும் மாயையுட்பட்டவராவர். முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அப்பாற்பட்டு நிற்கின்ற தனிமுதல்வர் அக்கடவுளன்றி வேறு யாவர்! பிருதிவிமுதற் சுத்தமாயை வரையுமுள்ள அண்டங்களும் அங்குள்ள உயிர்களும் உயிரல்பொருளுமாகியும் நின்றார். அவருடைய மாயையை யாவர் கடந்தவர்! வேதங்களும் மயங்கும். இத்தன்மையினராகிய முழுமுதற்கடவுளைப் பாலகன் என்றிகழ்ந்து பேசுகின்றாய். அவுணர் கிளைமுழுதையுஞ் சங்கரித்து உன்னையும் ஒரு கணப்பொழுதிற் கொல்லுவார். அவர் தம்முடைய பேரருட்டிறத்தைக் காட்டும்படி போர்செய்ய எழுந்தருளி வந்தார். 'பிருதிவியண்டம் ஆயிரத்தெட்டைப் பெற்றேம்'

என்று வியந்தாய். தத்துவபேத முழுவதையும் உணர்ந்திலை. இப்பிருதிவி யண்டங்களோ அளவில்லாதன. மற்றைத் தத்துவங்களிலுள்ள அண்டங் களைக் கேட்பாயாயின் மருளுவை. 'அப்புவண்டம் முதல் சுத்தமாயதத் துவ அண்டம் ஈறுக அளவில்லாத அண்டங்கள் உள்ளன' என்று அறிஞர் கூறுவர். ஒவ்வோரண்டங்களினுமுள்ள புவனங்களின் பெருமையை யாவர் அறிந்தார். அளவிடப்படாத பொருளுக்கு ஓரளவு சொல்லமுடியுமோ! இத்தன்மையினவாகிய அண்டங்கள் அனந்தகோடியையும் தம்முடைய வல்லமையினால் ஓரிமைப்பொழுதில் உண்டாக்கவும் பின்னர் அழிக்கவும் வல்ல ஒப்பில்லாத முதற்கடவுளாகிய சிவபெருமானே உன்னோடு போர் செய்யவேண்டும் என்னுந் திருவிளையாடலாற் செந்திப்பதியில் வந்து வீற் றிருந்தார். 'ஒப்பில்லாத வச்சிரயாக்கையைப் பெற்றேம்' என்று மதித் தாய், இந்தச் சிரத்தையை விடுதி. 'இரு வினைக்கிடாக உடம்பெடுத்துப் பிறக்கும் உயிர்களெல்லாம் இறக்கும்' என்று அறிஞர்கள் நிச்சயித்தார் கள். நீயா அழிவுருதிருப்பாய். வானுலகத்தினும் நிலவுலகத்தினும் பிறந் தவர்களுடைய எந்தப் பெருமைபெற்ற உடம்பும் அழியும். இது நிச்சயம். பருமிதத்தையுடைய உன் வச்சிரயாக்கையும் பிருதிவிசம்பந்தமுற்றது ஆத லால் அழியாதிருக்குமோ! 'அழியாவரத்தைம் பெற்றேம்' என்று கூறினை. அதற்குப் பொருளைக் கேட்குதி. மூவுலகங்களிற் பொருந்திய மற்றையுயிர் களைப்போலச் சில நாள்களில் அழியாது மிக நெடுநாள் உயிரோடிருக்குந் தன்மை என்றே அறிகுதி. *அச்சுதன் அயன் அமரர் என்னும் பெயர்கள் முறையே விட்டுணு பிரமா தேவர்கள் ஆகிய இவர்களுக்கு உபசாரமா யிருத்தல்போல, உன்னுடைய வச்சிரயாக்கையும் அழியாவரமும் பலயுக காலம் அழியாதிருத்தலாய் முடியும். தேவர்களை நீ வருத்துவதை உயிர்க் குயிராகிய சிவபெருமான் திருவுளஞ்செய்து, தாம் ஈந்தருளிய வரத்தைத் தாமே தவிர்ப்பாராயின், 'ஏன் செய்தீர்?' என்று வினவி, 'இங்ஙனஞ் செய்க' என்று அவரைக் கற்பிப்பாரொருவருளரோ! 'கெடுதலில்லாத வளங்களோடு நீயும் நின்கிளையும் இறவாமல் வாழுதி' என்று இவைகளைச் சொன்னேன். இப்பொழுதே தேவர்களைச் சிறையினின்றும் நீக்குதி'' என்று கூறினன், அறிஞரில் அறிஞனாகிய சிங்கமுகாசுரன்.

இல்வாறு சிங்கமுகாசுரன் கூறிய வார்த்தைகளைச் சூரபன்மன் தன் காதில் அக்கினி புகுந்தாற்போலக் கேட்டு, கோபித்து, தலையையசைத்து, பின்னருஞ் சிற்சிலவற்றைச் சொல்வான்: ''காற்றிற் றள்ளுண்டும், நெருப்பிற் சூடுண்டும், கங்கையாற்றிற் முக்குண்டும், சரவணப்பொய்கை யில் அலையுண்டும், தாயல்லாத வேறு பல பெண்களுடைய மூலையையுண் டும், அழுது விளையாடுகின்ற நேற்றைப்பாலகனையா பரம்பொருளென்று நினைந்தாய். சூரியன் ஒருவனே எண்ணில்லாத குடங்களிலுள்ள நீர்களோ றும் பிரதிவிம்பித்தாற்போல, பிரமப்பொருளொன்றே உயிர் என்னும் பெயரைப் பெற்று எண்ணில்லாத உருவங்களைக்கொண்டு, தன்னுடைய மாயையினாலே பற்பல வினைகளைச் செய்யும். குடமுடைந்தவழிக் குடா காயம் ஆகாயத்தோடு சேர்ந்தாற்போல, பல வேறு வகைப்பட்ட வடி வங்கள் அழிந்தபொழுது வாக்குமனாதீதமாகிய அப்பிரமப்பொருள் முன்

* அச்சுதன் - அழியாதவன், அயன் - பிறவாதவன், அமரர் - மரியாதவர்.

போல அபேதமாம். 'இவர் பிரமம் இவர் பிரமமல்லாதவர்' என்று இரு திறமாகக் கொள்ளற்க. உடம்பே வேறு. பல ஆபரணங்களும் பொன் என்னும் ஒரு லோகமாய் முடிந்தவாறுபோல, உயிர்களெல்லாம் ஒன்றே. வெற்றியும் வலிமையுமில்லாதவர்கள் தாழ்வர். இவற்றுள் மேலாயினோர் உயர்வர். இது உலகத்தியற்கை. யான் அழிவில்லாத பெரியன். அறுமுக னென்பவன் சிறியன். ஆதலினால் யான் அவனை வெல்லுவேன். இது நிச்சயம். தொகுதியாயுள்ள நங்குலத்து முதியோர்கள் பலரையழித்த பகைஞர்களாதலினாற் றேவர்களைச் சிறைசெய்தேன். அரசன் குற்றஞ் செய்தவர்களைத் தேடிப் பிடித்துத் தண்டஞ்செய்தல் தகுதியே என்று மனுநூல்களுஞ் சொல்லும். தேவர்களுடைய சிறையை விடேன்; இந்திர னையுஞ் சிறைசெய்வேன். சிவபெருமான் வந்தாலும் எதிர்த்துப் போர் செய்வேன். ஆதலினால் தம்பியே, இனி இந்தச் சிறியமொழிகளை அயர்த்து விடு. இனி நான் சொல்வதென்ன! நீ என்னுடன் ஒரு வயிற்றிற் பிறந்து, எல்லாப் பெருமைகளையுமடைந்து, நமது குலப்பகைவர்களாகிய தேவர் களை மிகவு நெருக்காது, அவர்களுக்குச் சார்பாயினாய். நீயேயிருக்க எனக்கு மற்றொரு பகைவரும் வேண்டுமோ! ஆயிரஞ் சிரங்களையும் பல தொகுதி யாகிய புயங்களையுங் கரங்களையும் எதற்காகச் சுமந்தாய்! வலிமையையும் வீரத்தையுமிழந்தாய்; பித்துக்கொண்டவர்களிலும் பேதமை கொண் டாய்; அசுரர்களுடைய குலாசாரங்களை விட்டாய்; தேவர்களைப்போன் றாய்; மேலாகிய திண்மையும் வெற்றியும் அழியப்பெற்றாய்; மௌனத்தோடு தவஞ்செய்யப் போகுதி; வெற்றியை யிழந்தாய்; மானத்தை நீங்கினாய்; சிறந்த அவுணர்களுடைய கீர்த்திகளெல்லாவற்றையுங் கெடுக்கப் பிறந் தாய்; நீ இருந்து இவ்வுலகில் ஒரு பயனையும் பெற்றிலை; இறந்தனைபோ லும்; உயிரோடிருந்தனையோ! தம்பியே நீ மந்திரியாகுதி; இதற்குப் பயந் தால், 'இதுவே நமக்கு வலி' என்று ஆயுதங்களையும் எறிந்துவிட்டு, பிர மரைப்போல ஒரு பஞ்சாங்கத்தைக் கையில் எடுத்துக்கொள்ளுதி; சதுரக் கள்ளியின் கிளைகளைப்போலப் பல தலைகளையும் கைகளையும் நெடுங்கால மாக வளர்த்துச் சுமந்து இளைத்தாய்; வலியில்லாதவனே நீ யாது செய் வாய்! முன்னுளில் அறிவில்லாத குழந்தைப்பருவமாதலினால் யமனையும் வருணனையும் சிறைசெய்தாய்; தேவர்களை அலைவு செய்தாய்; இப்போது அறிவுண்டானமையாற் பெண்களைப்போல நடுங்கினாய்; நீயொரு பேடி போலும்! உன்னை வருந்திப் பெற்ற தாய் பல தலைகளையுடைய புத்திரனு கிய உன்னுடைய வலிமையையும் போரையும் பார்த்தற்கு இன்னமும் வந்திலள். தாய் அருமையானது அவளுடைய குறையோ! சிங்கமானது பகையென்றொன்று வந்தாற் பதைபதைத்தெழுந்து சீறி அதனை வெற்றி கொள்ளும். என்றம்பியே நீ பல சிங்கத்தலைகளைப் பெற்றதும் வீணே! பூதர் களையும் படைத்தலைவர்களையும் சிவகுமாரனையும் மற்றைப் பகைவர்களை யும் யான் வெற்றி கொண்டு மீளுவேன். தம்பி! நீ வருந்தாதே; உன்னு டைய நகரத்துக்குப் போதி'' என்று சூரபன்மன் கூறினன்.

இவைகளைக் சூரபன்மன் சொல்லியபொழுது, சிங்கமுகன் ''இவனு டைய உணர்வு நன்று'' என்று சிரித்து, கண்களோறும் அக்கினிசிந்த, கோபத்தோடு கூடிய தன் மனத்தில் இவ்வாறு நினைப்பான்: ''உறுதியைச் சொன்னேன். உணர்வில்லாத இவன் வீணாக என்னை இகழ்ந்தான். மேலே

வருவதை அறியான். தான் அழிவதை ஆராய்ந்திலன். எந்தப் புத்தியையாயினும் அறிவில்லார்க்குச் சொல்லுபவர் அவரினும் அறிவில்லாதவரா வர். தேன் மழையைச் சொரிந்து வளர்த்தாலும், காஞ்சிரங்காய் தன் கைப்பொழியுமோ! அறிவில்லாத ஒருவனுடைய மனந் தெளியும்படி ஒருவன் உபதேசிப்பது அத்தன்மையல்லவோ! இந்தச் சூரபன்மனுடைய புத்தியைக் கலக்கினாலும் இவன் உய்யும் வகையைக் கருதுகின்றானில்லை. நாம் துன்பமுற்றிரங்கி ஆவதென்ன! விலக்க முடியாத விதியை யாவர் வெல்லவல்லவர்! ஆகும் விதியிருந்தால் எல்லாம் ஆகும், அழியும் விதியிருந்தால் எல்லாம் அழியும். சிவபெருமான் ஒருவருக்கன்றித் தேவர்களுக்காயினும் அதனை நீக்கமுடியுமோ! சிவபெருமானிந்த காலவெல்லை கழிந்தது; இறக்குங்காலம் அணுகியது. இங்குள்ளார் யாவரும் இச்சூரபன்மனும் இறப்பார்கள். இந்திரன் செய்த தவமும் பொய்ப்படுமோ! இறத்தல் நிச்சயம் ஆதலாலும், அரசன் என் சொல்லை வெறுத்திகழுதலாலும், 'மகாராசனே என் பிழையைப் பொறுத்துக்கொள்ளுது' என்று இனிய மொழிகளைக் சொல்வதல்லது, இன்னமும் யான் இவனை வேண்டி இவன் சொல்லை மறுத்துப் பேசேன். அரசர்க்கரசனுகிய என்றமையன் சுப்பிரமணியக்கடவுளுடைய வேற்படையினால் இனி இறந்துவிடுவான். யான் இதனையும் பார்த்துப் பின் உயிரோடிருத்தல் பிழையாகும். இவனுக்கு முன்னம் இறப்பதே முறை'' என்று சிங்கமுகன் மனத்தில் உறுதி செய்துகொண்டு, தன் பிதாவையொத்த தமையனுகிய சூரபன்மனுடைய காலகளை வணங்கி அஞ்சலி செய்து, ''என்னண்ணுவே, கோபஞ்செய்யற்க, அறிவில்லாத அடியேனுடைய பிழையைப் பொறுத்தல்வேண்டும். சிறியோர் ஒரு பிழையைச் செய்தாற் பெரியோர் அதனைப் பொறுத்துப் பின்னும் அவரைப் பாதுகாப்பதல்லது, சிறிதாயினும் அவர்மேற்கோபிப்பாரோ! யான் செய்த பிழையை அறிவினையுடைய நீயன்றி யாவர் தாங்குவார். அடியேன் செய்த இளிவரவைப் பொறுத்துக்கொள்ளுதி. என்னைக் கோபித்திகழற்க. யான் போருக்குப் போய்ப் பகைவர்களை எதிர்த்துப் பொருது கொலைசெய்து வருகின்றேன், அதனை அறிகுதி'' என்று சொல்லி, ''பகைவர்கள்மேற் போருக்குச் செல்லுவேன் விடை கொடுக்குதி'' என்று கேட்டான்.

''பகைவர்கள்மேற் போருக்கு போவேன் விடை தருதி'' என்று தன் றம்பி கேட்டலும், சூரபன்மன் மிகவும் மனமகிழ்ந்து, ஆசையினால் ''என் றம்பியே வருதி'' என்று மார்போடணைத்துத் தழுவி, ''தம்பியே, மூவுலகங்களிலும் திசைகளிலும் அண்டங்களிலும் செய்யும் வெற்றிகளுள் உனக்கரிதாயது யாது! மிகுந்த கேள்வியையுடைய என்றம்பியே, நீ முன்பு எனக்குச் சொன்னவைகளை ஆராய்ந்து பார்த்தால், அவைகளெல்லாம் என்னுடைய மனத்துணிவையுந் திட்பத்தையும் ஊக்கத்தையும் அறிதற்கு நீ சொல்லியவைகளேயாம். நீ பகைவர்களாகிய விலங்குகளைக் கொல்லுகின்ற ஒரு சிங்கமல்லவா! 'பகைவர்கள் போருக்கு வந்தார்கள்' என்னுஞ் செய்தியைக் கேட்டால், அவர்களைக் கொன்றபின்பல்லது, அவர்கள் கும்பிட்டோடவென்றபின்பல்லது, நீ கோபந்திருதியோ! உன்னுடைய வலிமையை யான் அறிகிலேனே! தம்பியே, நீ இன்றைக்கு உன்னுடைய நகரத்துக்குப் போய் அங்குள்ள சேனைகளையெல்லாம் ஒருங்குசேர்த்திருக்குதி. சிவகுமா

ரன் இங்கே போருக்கு வந்தால் உன்னை அழைப்பேன் வருகுதி'' என்றான். சிங்கமுகன் அவற்றைக் கேட்டு, ''அண்ணலே, சிவகுமாரன் விரைவில் உன்னுடைய நகரத்துக்குப் போர்செய்ய வந்தாலும், நீ அவனோடு போருக்குப் போகாதே. அதனை ஒரு தூதுவனிடத்திற் சொல்லியனுப்பு. யான் விரைவிற் போர்செய்ய வருகின்றேன்'' என்றான். என்னலும், சூரபன்மன் நன்றென்று விடைகொடுத்தான். சிங்கமுகன் வணங்கித் தன்னுடைய நகரத்துக்குப் போயிருந்தான். அப்பொழுது, சூரபன்மன் ஆண்டிருந்த தன் புதல்வர்கள் படைத்தலைவர்கள் முதலாகிய யாவரையும் அவரவரிடங்களுக்குச் செல்லும்படி அனுப்பி, தானும் தன்னுடைய கோயிலில் இந்திர போகத்தை அனுபவித்திருந்தான்.

இதுகாறும் சூரபன்மன் அமைச்சியல் செய்த கதையைச் சொன்னேம். இனி, இந்திரன் முதலிய தேவர்கள் துதிக்கத் திருச்செந்தூரில் வீற்றிருந்த சுப்பிரமணியக்கடவுளுடைய செயலைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

மகேந்திரகாண்ட முற்றிற்று.

நான்காவது

# யுத்த காண்டம்

## ஏமகூடப் படலம்.

நாரண னென்னுந் தேவு நான்முகத் தவனு முக்கட்
பூரணன் முனு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
யாரண முடிவுந் தேறு வநாதியா யுயிர்கட் கெல்லாங்
காரண னுய மேலோன் கழலிணை கருத்துள் வைப்பாம்.

திருச்செந்தூரிலே திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கின்ற அறு முகக்கடவுள் சூரியோதயத்தில் வீரவாகுதேவரை நோக்கி, "பாவங் களையே செய்கின்ற சூரபன்மனும் அவுணர்கள் யாவரும் அழியவும், தேவர்களுடைய துன்பம் நீங்கவும், வீரமகேந்திரபுரிக்கு இப்பொழுதே நாம் போதல்வேண்டும். நம்முடையதேரை விரைந்து கொணருதி" என்று அரி பிரமேந்திராதி தேவர்களும் முனிவர்களும் பிறருங் கேட்கும்படி ஆஞ்ஞா பித்தருளினர். சுப்பிரமணியக்கடவுளுடைய திருவாக்கை விட்டுணு முத லிய தேவர்கள் கேட்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கி, "எங்களுடைய துன் பந் தீர்ந்தது தீர்ந்தது" என்று துள்ளி, ஆடிப்பாடி, அவருடைய திரு வடிகளை வணங்கினர்கள். அப்பொழுது, நந்திகணத்தலைவராகிய வீரவாகு தேவர் மனவேகம் என்னுந் தேரோடு பாகனை அழைத்துக்கொண்டுவந்து குமாரக்கடவுளுடைய திருமுன்பு விடுத்தார். வாயுவினாலே தூண்டப்படு கின்ற அத்தேரின் வரவை முருகக்கடவுள் பார்த்தருளி, வேதங்கள் துதிக்கச் சிங்காசனத்தினின்றுமிழிந்து, மேருமலையின்மீது பன்னிரண்டாதித்தர்களும் ஒருருவெடுத்து ஏறினாற்போல இவர்ந்து, தம்மைச் சூழ்ந்தவர்களை நோக்கி, "நாம் சூரபன்மனைச் சங்கரிக்கும்படி சமுத்திரத்தின் மத்தியிலிருக்கின்ற மகேந்திரபுரிக்குச் செல்லுகின்றோம். நீங்கள் உங்கள் வாகனங்களிலேறிக் கொண்டு நம்மோடு வருதிர்" என்று பணித்தருளினர். அப்பணியைச் சிரமேற்கொண்டு பிரமா அன்னத்திலும், விட்டுணு கருடனிலும், இந்தி ரன் விமானத்திலும், மற்றைத் தேவர்கள் தத்தம் வாகனங்களிலும், இலக்கத்தெண்மரும் வீரவாகுதேவரும் தேர்களிலும் ஏறி, தேவாதிதேவ ராகிய சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்தார்கள். கடுஞ்சினத்தையுடையர் களும், எல்லாப்புவனங்களையும் அழிக்க எண்ணினும் ஒரு நொடிப்பொழு தில் அழிப்பவரும், மோர்வலியுடையருமாகிய சுப்பிரர், மேகமாலி, சுவேதசிரிடர், சுபாலி, அப்பிரசித்து, சித்திராங்கர், சுவாலதாலு, வச்சிரர், வீமர், உக்கிரர், உக்கிரேசர், பிப்பலர், நந்திசேனர், பிரமசர், பிரடி

சேனர், பதுமர், காராளர், தண்டர், பத்திரர், பரிகநேமி, உதவகர், புட்பதந்தர், உருத்திரகாரர், வீரர், மதிசயர், கேதுமாலி, வக்கிரர், பிரமகேசர், அதிபதி, கலிங்கர், கோரர், அச்சுதர், அசலர், சாந்தர், சித்திரசேனர், பூரி, சுசீலர், மாசயர், சிங்கர், உத்தரசிங்கர், உபதிட்டர், சயர், ஈசர், மத்தகர், மதங்கர், சண்டி, மகாபலர், சுவேதர், நீலபத்திரர், சுவாகு, அண்டாபரணர், காகபாதர், பிங்கலர், சமானர், மாயர், நிகும்பர், கும்பர், சங்கபாலர், நிசாகர், சதநாவர், அயக்கிரீவர், சகத்திரவாகு, அயுதாக்ஷர், அனந்தர், வாமர், மங்கலகேசர், சோமர், வச்சிரமாலி, சண்டர், அசமுகர், சரபர், குந்தர், ஆடகர், கவந்தர், மேகர், விசயர், வித்துருமர், தண்டி, வியாக்கிரர், காலபாசர், தசமுகர், குமுதர், பானு, தனஞ்சயர், இடரூபர், சுசிமுகர், அனலகேசர், சுபத்திரர், கேது, மோகர், மத்தர், உன்மத்தர், நந்தி, மஞ்சுபவர், வாயுவேகர், சகத்திரபாதர், பானுகம்பர், பதங்கர், சுத்தர், அனிகர், சீதர், சுஞ்தர், சுமாலி, மாலி, அத்திரி, அசுரகாலர், அரிகேசர், சுவாலகேசர் என்னும் படைத்தலைவர் நூற்றெண்மரும் சண்முகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். இவர்களெல்லாரும் குமாரக்கடவுளைச் சூழ்தலும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளும் அதனைக்கண்டு ஆரவாரித்தெழுந்து எங்கும் நெருங்கின. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். பூதர்களுடைய ஆரவாரம் ஆகாயத்தினும் திக்குகளினும் பூமியினும் பரந்தது. பேரிகை, கரடிகை, துடி, காளம் முதலிய அநேக வாத்தியங்களைப் பூதர்கள் இயம்பிச் சென்றனர். பூதசேனைகளினுடைய செலவினலெழுந்த தூளி சூரியசந்திரர்களுடைய ஒளிகளை மாற்றிச் சமுத்திரத்தைத் திடராக்கியது. இவ்வாறுகிய பூதவெள்ளம் தம்முடைய தலைவர்களோடும் சுப்பிரமணியக்கடவுளுடைய பாதங்களைத் துதித்துச் சூழ்ந்து, சமுத்திரக்கரையிற் றங்கி, சமுத்திரத்தின் வழியாக நடந்தன. பாரத்தைத் தாங்கலாற்றாது சேடனும் நடுங்கினன். பூதவெள்ளஞ் செல்லும்பொழுது சமுத்திரம் அலைகளின் பரட்டினுள் அடங்கியது. சுறவு சின்னை திமிங்கில முதலாகிய மீன்கள் புழுக்கள்போல உலாவின. சமுத்திரத்திலுள்ள மலைகள் கால்களில் உறுத்துகின்ற பருக்கைக் கற்கள் போன்றன. அவர்கள் செல்லுதலாற் சமுத்திரங் கலங்கிச் சேறுகி, இறைப்பொழுதினுட் காய்ந்து புழுதியாக, அத்துகள் எவ்வுலகமும் நிமிர்ந்து சூழ்ந்தது. பூதவெள்ளங்கள் இவ்வாறு சமுத்திரத்தின் வழியாகச் செல்ல, சுப்பிரமணியக்கடவுள் துணைவர்களும் அரிபிரமேந்திராதி தேவர்களும் சூழத் தேரின்மேற்கொண்டு, ஆகாயவழியாகச் சமுத்திரத்தைக் கடந்து, இலங்கைமலையை நீங்கி, மகேந்திரபுரிக்குமுன்பு சென்றருளினர்.

அப்பொழுது, பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் தம்முள் யோசித்து, சுப்பிரமணியக்கடவுளுக்குத் திருமருங்கில் வந்து அஞ்சலிசெய்து துதித்து, "எம்பெருமானே, கேட்டருளும். சூரபன்மனுடைய ஊரில் வன் கண்ணர்களாகிய நீசர்கள் செறிந்திருத்தலால், அங்கே செல்லுதல் முறையன்று. அதற்கடுத்த எல்லையாகிய ஈண்டே பாசறையை யமைப்பித்து வீற்றிருந்துகொண்டு, பின்பு உபாயங்களை நாடி வேண்டியவாறு செய்தருளும்" என்று அன்பினோடு விண்ணப்பஞ் செய்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் அதனைக் கேட்டு நன்றென்று திருவுளமிசைந்து, அவர்கள்மீது

திருவருணேக்கஞ்செய்து, தேவத்தச்சனை அழைத்து, ''விரைவில் இங்கே ஒரு பாசறையைச் செய்குதி'' என்றூர். அவன் மனமகிழ்ந்து திருவடிகளை வணங்கி, ''தாரகனைச் சங்கரித்த வேலாயுதத்தையேந்திய திருக்கரத்தையுடைய கடவுளே, தேவரீருடைய திருவருளினுல் அடியேன் இங்கே அதனைச் செய்வேன்'' என்று விண்ணப்செய்து, மாடங்கள் கூடங்கள் மண்டபங்கள் சோலைகள் வாவிகள் கோபுரங்கள் வீதிகள் முதலியவைகள் கோடாகோடிகள் பொருந்த ஒரு பாசறையை மனத்தாற்செய்து, அதற்கு ஏமகூடம் என்று பெயரிட்டான். அந்தப்படி வீட்டைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்துத் திருவுளமகிழ்ந்து, தேவத்தச்சனுக்கு அருள் செய்து, தேரினின்றும் இறங்கி உள்ளேபோய், பூதசேனைகளை வீதிகளில் நிறுத்தி, இலக்கத்தொன்பது வீரர்களோடும், பிரமா முதலிய தேவர்களோடும் திருக்கோயிலினுட் புகுந்து, அவர்களும் பராசரமுனிவருடைய புதல்வர்கள் அறுவரும் * தொண்டு செய்தொழுகத் திவ்விய சிங்காசனத்தின்மீது மகிழ்ந்து வீற்றிருந்தருளினூர்.

திருச்சிற்றம்பலம்.

:::::::::::

## வரவுகேள்விப் படலம்.

சுப்பிரமணியக்கடவுள் ஏமகூடம் என்னும் பாசறையில் வீற்றிருக்கும் பொழுது, தேவர்களிடத்தில் அன்பினையுடைய நாரதமுனிவர் இவைகளெல்லாவற்றையும் பார்த்து, மகேந்திரபுரியிற் சென்று, சூரபன்மனுடைய கோயிலையடைந்து, வாயிற் காவலாளர்கள் உள்ளே விடச் சென்று, அவன் பல வளங்களோடு வீற்றிருத்தலைக் கண்டு, ''இவன் மூங்கில்போலத் தானே தன் கிளையோடழிக'' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, கைகளிரண்டையும் விரித்து நின்று, வாயினூற்றக்க ஆசியைச் சொல்லினூர். அவரைச் சூரபன்மன் பார்த்து, ''நீ யார்? எங்கேயிருப்பவன்? நீ இங்கே வந்த காரணம் என்னை?'' என்று வினவினான். நாரதமுனிவர் ''யான் சிவபெருமான் வீற்றிருக்கின்ற உத்தரகைலாசத்தில் வாழ்வேன்; உங்களுடைய குலந்தலைமையாகும்படி நாடோறுந் தவஞ் செய்வேன்; வஞ்சகம் பேசேன்; காமமுதலிய குறும்புகளை நீங்கிப் பல தவங்களைச் செய்வேன்; தேவர்களுக்குத் துன்பஞ்செய்வேன்; சுக்கிராசாரியரோடு சினேகமுள்ளேன்; நாரதன் என்னும் பேருள்ளேன்; உன்னிடத்து ஒன்று சொல்லவந்தேன். சிவபெருமான் உன்னைக் கொல்லும்படி கந்தன் என்னுங் குமாரனை நெற்றிக்கண்ணிலிருந்து உண்டாக்க, உன்னுடைய தொண்டைச் செய்கின்ற இந்திரன் முதலாகிய தேவர்கள் அப்பாலகனிடத்திற்போய் வணங்கி உன்னுற் றமக்கு நிகழ்ந்த துன்பங்களைச் சொன்னர்கள். அவன் அவர்களை அஞ்சற்க என்று கூறி, சிவபெருமானுடைய அருளினுற் பூதவீரர்களோடு பூமியில் வந்து, உன்றம்பியாகிய தாரகனைக் கிரவுஞ்சமலையோடும் வேற்படையினுற் சங்கரித்து, பின் செந்திப் பதியில் வந்திருந்துகொண்டு, உன்னிடத்து ஒரொற்றுவனை அனுப்பி, அவன் விரைவில் வந்து மீண்டபின்பு எல்லா நிகழ்ச்சிகளையும் சீர்தூக்கிப்

* இவர்களுடைய சரித்திரத்தைச் சுரம்புகுபடலத்திற் காண்க.

பார்த்து, சேனைகளோடு சமுத்திரத்தைத் தாண்டி இந்நகரின் வடதிசையில் வந்து அங்கே ஒரு பாடி வீட்டைச் செய்வித்து, சேனைகள்சூழ விருந்தான். இவைகளெல்லாவற்றையும் நான் பார்த்தேன். இது நிகழ்ந்த வண்ணம்'' என்று கூறினர். இவைகளைச் சூரபன்மன் கேட்டு, நெருப்புப் போலக் கோபித்துச் சிரித்துச் சொல்வான்: ''இந்திரன் பிரமன் விட்டுணு என்னும் இவர்களுடைய ஊர்களைப்போல நினைத்தானே! ஆயிரகோடி யண்டங்களையும் அரசாளுகின்ற என்னுடைய வீரமகேந்திரபுரியில் ஒரு பாலகனும் போர்செய்ய வருவான்! சிங்கக்கூட்டங்கள் செறிந்திருக்கும் ஒரு காட்டில் ஒரு யானைக்கன்றுனது புல்வாய் கலைமான் முதலாகிய மிருக சாதிகளோடு வந்தாற் போர்செய்து வெற்றிகொள்ள வல்லதா! முருகனும் நம்முடன் போர்செய்யும்படி சேனைகளோடு வந்தது அதுபோலல்லவா! அவன் சமுத்திரத்தைக் கடந்து என்னுடைய ஆணையை யிகழ்ந்து பூதசேனைகளோடு இந்நகருக்கு வருவானும்! இதுவே காலம், அவனுடைய வீரத்தையழிப்பேன்; புத்தியில்லாத பாலகனென்றும் விடேன்; வசையென்றும் பாரேன். முன்னே ஒரு சூழ்ச்சியினல் அசமுகியினுடைய கையைத் துணிப்பித்து நம் பகைவர்களாயிருந்த தேவர்களெல்லாரும் உய்ந்தாரோ! பாலகன் என்றம்பியாகிய தாரகனோடு கிரவுஞ்சமலையை அழித்தோம் என்றெண்ணி, தன்னுயிர்போவதை யறியாமல் இந்நகரில் வந்தான். பாற்கடலைக் கடைந்த விட்டுணுவும், நூறு யாகாதிபனுகிய இந்திரனும், தாமரைமலரிலிருக்கின்ற மேலோராகிய பிரமாவும் என் பெயரைச் சொல்லினும் அஞ்சி மறைந்தார்கள். சாம்பலைப் பூசுகின்ற சிவனுடைய குமாரனு நம்மோடு போர்செய்வான்! என் குமாரனுகிய பானுகோபனை நால்வகைச் சேனைகளோடும் அனுப்பி, பூதர்களையும் மற்றை வீரர்களையும் கொல்வித்து, கந்தனை விரைவில் வெற்றிகொள்வேன். முனிவனே இதனைக் காண்குதி'' என்று சூரபன்மன் கூறினன். நாரதமுனிவர் இவைகளைக் கேட்டு, ''இது நன்று நன்று, காலதாமதஞ் செய்யாதே; உன்னகரைச் சூழ்ந்து போர்செய்யும்படி வந்த பாலகனோடு போர்செய்தற்கு இனி உன்னுடைய படைகளை யனுப்புதி; உங்களுக்கு வெற்றியுண்டாகும்படி தவஞ்செய்யும்பொருட்டு நான் போவேன்'' என்று சொல்லிப் புன்முறுவல் செய்துகொண்டு போயினர்.

சூரபன்மன் தன்னுடைய அயலில் நின்ற கோரன் உற்கோரன் என்னும் ஒற்றுவர்களைப் பார்த்து, ''சமுத்திரராசனை விரைந்து கொண்டு வருகுதிர்'' என்றுன். அவர்கள் ஓடிப்போய் வருணனைக் கூவிப் பிடித்துக் கொண்டுவந்து முன்னே விட்டார்கள். அவன் கன்றிய மனத்தினனுய்க் கைகூப்பி வணங்கி, மிக்க துயரத்தோடு நின்றுன். அவனைச் சூரபன்மன் நெருப்பெழப் பார்த்து, ''வருணனே, பிரமவிட்டுணுக்கள் அறியாவண்ணம் ஒளித்த சிவனுடைய குமாரனையும் பூதவெள்ளங்களையும் நமக்கு மாறுக நீ இங்கே விடுத்ததென்னை?'' என்று வினவினன். வருணன் சொல்லுவான்: ''மகாராசனே கேட்பாய். பிரமா விட்டுணு இந்திரன் துணைவர்கள் ஆகிய இவர்களோடு சிவகுமாரர் ஆகாயமார்க்கமாகச் சென்றூர்; பூதர்கள் என்மீது போயினர்கள்; யான் அவர்களுடைய பரடுவரையினும் அமைந்திலேன்; அவர்களை யாரு தடைசெய்ய வல்லேன்; இது தகுமா! ஊழிக்காலத்தினும் அழியாத பூதர்கள் விரைந்துசெல்ல,

அவர்களுடைய காலிலிருந்தெழும்புகின்ற புழுதியாற் சேறுபட்டு, ஓயாமற் புலம்பலுற்றேன். *ஆழியன் என்னும் பேரும் அற்றேன்; வசையையே பெற்றேன்; ஏழையேன் செய்வதென்னே? வலியர்களுக்கெதிருண்டோ? அகத்தியமுனிவர் அள்ளி ஆசமனஞ் செய்ததுபோல என்னை ஆசமனஞ் செய்துவிடுவர். கொள்ளையாக நெருங்கிய பூதர்களுள் ஒருவர் ஒருள்ளங் கையில் அள்ளுதற்கும் ஆற்றேன், ஆதலால் உய்ந்தேன். இடியேற்றைப் பாம்பு விலக்கவல்லதா! சிங்கேற்றை யானை விலக்கியதுண்டா! விதியை மதி வெல்லுமா! அவ்வாறன்றே எளியேனுகிய யான் வலியவர்களாகிய பூதர்களைத் தடுப்பது'' என்று இவைகளைச் சமுத்திரராசன் சொல்லி, சரீரம் நடுங்கி நின்றான்.

அப்பொழுது, சில ஒற்றுவர்கள் சுப்பிரமணியக்கடவுள் மகேந்திர புரியை வந்தடைந்ததைக் கண்டு, விரைவில் ஓடிவந்து, சூரபன்மனை வணங்கி நின்று, ''அரிபிரமேந்திராதிதேவர்கள் சூழவும், இலக்கத்தொன் பது வீரர்கள் போற்றவும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளோடு சிவகுமாரர் நம்முடைய மகேந்திரபுரியின் வடதிசையில் வந்து, தேவத் தச்சனைக்கொண்டு சிறந்த ஒரு பாடிவீட்டைச் செய்வித்து, பக்கத்திற் பூத வீரர்கள் சூழ ஒரு கோயிலில் வீற்றிருந்தார். யாம் இதனைப் பார்த்தோம். இப்பொழுதே செயற்பாலதைச் செய்குதி'' என்று சொன்னார்கள். இத னைச் சூர்பன்மன் கேட்டு, அண்டங்களும் புவனங்களும் சுழலும்படி அக்கினிபோலக் கோபித்து, புண்போலச் சிவந்த கண்களையுடையனாய், ''சிவகுமாரனுடைய வலிமையையும், பூதர்களுடைய வலிமையையும், தூதுவனுடைய வலிமையையும், பிறருடைய வலிமையையுந் தொலைப் பேன்; நீவிர் விரைவிற்போய்ப் பானுகோபனை யழைத்துக்கொண்டு வரு திர்'' என்று தூதுவர்களுக்குச் சொன்னான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# முதலைட்பானுகோபன்யுத்தப் படலம்.

சூரபன்மனுடைய பணியைக்கேட்ட தூதுவர்கள் நன்றென்று சொல்லிப் பானுகோபனுடைய கோவிலையடைந்து, அவனை வணங்கி, சூரபன்மனுடைய பணிவிடையைச் சொன்னார்கள். அவன் சிங்காசனத்தை விட்டெழுந்தான். மந்திரிமார்களும் படைத்தலைவர்களும் சுற்றமாயுள்ள பிறரும் விரைந்து பக்கங்களிற் சூழ்ந்தார்கள். வாத்தியங்கள் ஒலித்தன. பதாதிகள் சூழ்ந்தன. பானுகோபன் ஒரு தேரிலேறி ஆயிரகோடி வீதி களைக் கடந்து, தன்னைக்கண்ட வீரர்கள் வணங்கப்போய்ப் பிதாவினுடைய நகரத்தையடைந்து, தேரினின்றிறங்கிக் கோயிலினுட் சென்று, அவனு டைய கால்களை வணங்கி, ''வீராதிவீரனுகிய என் பிதாவே, என்னை நீ அழைத்ததென்னை?'' என்று விளவ, சூரபன்மன் சொல்வான்: ''முன்னை கிரவுஞ்சமலையோடு என்றம்பியாகிய தாரகனைக் கொன்ற கந்தவேள் நந்திகணத் தலைவர்களோடும் பூதர்களோடும் செந்திப்பதியை நீங்கிச் சமுத்திரத்தைக் கடந்து இந்நகரின் வடக்குவாயிலில் வந்து தங்கினான்.

*ஆழியன் — ஆழமுடையன்

கள்வனுகிய விட்டுணுவும் பிரமாவும் என் பணியைக்கடந்த இந்திரன் முதலிய தேவர்களும், பிறரும் அவனுக்குப் பக்கத்தில் வந்திருக்கின்றூர்களாம். எளிய தேவர்களும், சிவகுமாரனும், நந்திகண வீரரும், பூதர்களும் வந்திருத்தற்கு இந்த வீரமகேந்திரபுரி அத்துணை எளிதாயிற்று! நன்று நன்று!! என்றம்பியையும், கிரவுஞ்சமலையையும், வச்சிரவாகுவையும், பிறரையும் கொன்ற நம் பகைவர்களைக் கொல்லுதற்கு நான் முன்பு போர்செய்யச் செல்லுதலே முறை. ஆயினும் அப்பகைவர் சிறியர், நான் ராசாதிராசன், ஆதலினல் வாளாவிருந்தேன். இந்திரன் பிரார்த்தித்தலும், சிவன் நம்மைப் பொரும்படி பூதத்தலைவர்களோடு தம்முடைய குமாரனை அனுப்பினர். ஆதலின் நானும் உன்னைக்கொண்டு வெற்றியடைந்திருத்தலே முறை. ஆதலால், இனி நீ சேனைகளோடு போருக்குப்போய், சிவகுமாரனையும் நந்திகண வீரர்களையும் பூதர்களையும் பொருதழித்து வெற்றிகொண்டு, நம்மிடத்தில் விரைந்து மீளுதி'' என்று சூரபன்மன் சொன்னன். பானு கோபன் இவற்றைக் கேட்டு, புயங்கள் மலைபோல வளர, உடல் புளகங் கொண்டு, ''பிதாவே, சிவன் அனுப்பிய குமாரனையும், பூதர்களையும், பிறரையும் பொருது வென்று மீளுவது ஒரு பொருளென நினைந்தோ இவைகளையெல்லாஞ் சொன்னாய். 'சிவகுமாரன் இந்நகர்க்கு வருமுன் எதிர்ந்து போர்செய்கின்றேன்' என்று நேற்றைத்தினமே உன்னை விளவினேன்; நீ அதனை யோர்ந்தாயில்லை. பின்பு இதனைச் சொல்லுதல் பிழையாகும். இனிப் பேசியாவதென்ன! சேனைகளோடுஞ் சென்று கந்தனைப் போர்செய்து வென்று, பூதர்களையும் படைத்தலைவர்களையுங் கொலை செய்து, இங்கே வருவேன். பிதாவே, நீ இதனைக் காண்குதி. கந்தனை வென்றபின், அவனெடிருக்கின்ற விட்டுணுவையும் பிரமாவையும் இந்திரனுகிய கள்வனையும் நொடிப்பொழுதிற் பிடித்துக்கொண்டுவந்து தருவேன்; அவர்களுக்கேற்ற தண்டத்தைச் செய்குதி'' என்று கூறி வணங்கினன். சூரபன்மன் ''மைந்தனே நீ அவ்வாறு போய்ப் போர்செய்து வெற்றியோடு வருதி'' என்றன்.

பானுகோபன் நன்றென்று விடைபெற்றுக்கொண்டு, சேனைகளும் துணைவர்களும் சூழத் தேரின்மேற்கொண்டு தன்னுடைய மாளிகையையடைந்து, தேரினின்றிறங்கி, பக்கத்திலுள்ள தூதுவர்களை நோக்கி, ''நம் முடைய சேனைகளை இங்கே கொண்டுவாருங்கள்'' என்று சொல்லி, பரிசனர்களெல்லாரையும் நிறுத்தி, ஆயுதசாலையிற்போய், வீரலக்குமியை வழிபட்டு, பீதாம்பரத்தையுடுத்து, அரைக்கச்சையைக் கட்டி, வாட்படையை மருங்கிற் சொருகி, வீரக்கழலைக்கட்டி, கவசத்தையணிந்து, கோதையைக் கையிற் சுற்றி, விரலிற் புட்டிலை அணிந்து, அப்பருத்தூணியை முதுகிற் கட்டி, நெற்றியிற் பட்டத்தைச் சேர்த்தி, பல ஆபரணங்களையுந் தாங்கி, தும்பைமாலையை முடியிற் புனைந்து, 'வெற்றியுண்டாகுக' என்று ஒரு பெரிய வில்லை எடுத்து, தன் பகைஞர்களுடைய வலிமையை எண்ணுத வலுய் மோகப்படைக்கலத்தையும் எடுத்துக்கொண்டு வாய்தலில் வந்தான். பானுகோபன் இவ்வாறு போர்க்கோலங்கொண்டு வாய்தலில் வருமுன், முன்னேசென்ற தூதுவர்கள் ''போருக்கெழுதிர்'' என்று கூற, விசயன், நேமியன், மாயன், முசலி, கண்டகன், முரண், கரன், மூர்க்கன், தசமுகன், கனலி, சண்டன், விசண்டன், அசமுகன், மகிடன், அக்கிரவாகு,

விசயசேனன், விடசேனன், விமோகன், சோமகன், மது, சசிசித்து, சுசி முகன், அசனி, சூனியகேது, அசுரசேனன் முதலிய அவுணப்படைத் தலை வர்கள் பல தெய்வப்படைக்கலங்களை யேந்திப் ''போர்கிடைத்ததோ'' என்று மகிழ்ந்து புறப்பட்டார்கள். பதினாயிரம் வெள்ளம் அசுரசேனை களும், பதினாயிரம் வெள்ளம் கசரததுரகங்களும் அவர்களுக்குப் பக்கத் தில் வந்தன. படைத்தலைவர்கள் இருபதினாயிரம் வெள்ளஞ் சேனைகளோடு பானுகோபனை அணுகித் தொழுது சூழ்ந்தார்கள். அவன் இவைகளைப் பார்த்து, ஏவலாளனை நோக்கி, ''ஒரு தேரைக் கொண்டுவருதி'' என்று சொல்ல, முப்பதினாயிரங் குதிரைகள் பூண்ட ஒரு தேரைக் கொண்டுவந்து விடுத்தான். பானுகோபன் அத்தேரின்மீதேறினான். சேனைகள் ஆரவாரித் தன; பலர் அளவிறந்த சாமரங்களை வீசினர்; வேறு பலர் வெண்கொற் றக்குடைகளை யேந்தினர்; வேறு பலர் அடைப்பை, கோடிகம், காளாஞ்சி, வாள், பீலிக்குஞ்சம் முதலியவைகளை ஏந்திச் சூழ்ந்தார்கள். இவ்வாறு கிய உபசாரங்கள் நிகழத் தேரிலிருக்கின்ற பானுகோபன் தூதுவர்களை நோக்கி, அளவில்லாத ஆயுதங்களைக்கொண்ட ஒரு கோடி சேமத்தேர் களைக் கொண்டுவருதிர்'' என்றான். அவர்கள் சென்று அவ்வாறு ஒரு கோடி தேர்களைக் கொண்டுவந்து அவனைச் சூழ விடுத்தார்கள். பானு கோபன் தேர்ப்பாகனை நோக்கி, ''நம்முடைய தேரைக் கந்தசுவாமியிருக் கின்ற இடத்துக்குத் தூண்டுதி'' என்றான். பாகன் அவ்வாறு தூண்டினான். அதனைக்கண்ட அவுணசேனைகள் மிகவும் ஆரவாரித்தன; பேரிகை முத லாகிய வாத்தியங்களும், யானை குதிரை தேர்களும் ஆர்த்தன.

பானுகோபன் சேனைகளோடு இவ்வாறு போருக்குப் புறப்பட்டுச் செல்ல, நாரதமுனிவர் இவைகளெல்லாவற்றையும் பார்த்து, ஆகாய வழிக்கொண்டு பாசறைக்குப் போய்ச் சுப்பிரமணியக்கடவுளுடைய கோயிலை யடைந்து, திவ்விய சிங்காசனத்தில் வீற்றிருக்கின்ற அக்கடவுளுடைய திருவடிகளைத் தரிசித்து அன்போடு வணங்கித் துதித்து, ''எம்பெருமானே கேட்டருளுக'' என்று விண்ணப்பஞ்செய்வார்: ''சுவாமீ, தேவரீர் பூத சேனைகளோடு இங்கே எழுந்தருளிவந்து வீற்றிருத்தலைத் தூதுவர்கள் சொல்லச் சூரபன்மன் அறிந்து, கோபங்கொண்டு, தன் குமாரனாகிய பானுகோபனை யழைத்து, உம்மோடு போர்செய்யும்படி அனுப்பினான். அவன் போர்க்கோலங்கொண்டு கோபாவேசத்தனாய்ச் சேனைவெள்ளங்க ளோடு போருக்கு வந்தான். இவனுடன் போரில் எதிர்ப்பவர் நீரும் சிவனு மன்றித் தேவர்களில் வேறியாவருளர்! பிரமவிட்டுணுக்கள் புறந்தர வென்றவன்; பல போர்களை வென்று புகழ்படைத்தவன்; பல மாயங் களில் வல்லவன்; ஆதிசேடனிலும் வலிமையுள்ளவன்; பிரமதேவர் கொடுத்த படைக்கலத்தையுடையவன்; வருணனுடைய பாசத்தையும் யமனுடைய சூலத்தையும் கவர்ந்தவன்; முன்னே தன் சிறிய பிதாவாகிய தாரகன் பதக்கமாக அணிந்தானென்றமையால் விட்டுணுவினுடைய சக்க ரத்தை விரும்பிலன். ஆதலால் அவனை ஆளக்கொண்டு வெல்லுதலரிது. நீரே சேனைகளோடு சென்று கொல்லல் வேண்டும்'' என்று நாரதமுனி வர் விண்ணப்பஞ்செய்தார். நாரதமுனிவர் இவ்வாறு சொல்லுதலும், சுப்பிரமணியக்கடவுள் திருப்புன்முறுவல் செய்து, பக்கத்தில் நின்ற

வீரவாகுதேவரை அழைத்து, ''இங்கே நாம் பூதசேனைகளோடு போருக்கு வந்த தன்மையைச் சூரபன்மனுணர்ந்து, சேனைகளோடு தன் குமாரனுகிய பானுகோபனே நம்முடன் போர்செய்யும்படி அனுப்பினன். இலக்கத் தெட்டு வீரர்களோடும் ஆயிரம் வெள்ளம் பூதசேனைகளோடும் நீ போய் மதிலைச்சூழ்ந்து, எதிர்த்து வருகின்ற சேனைகளைத் தொலைத்து, பானுகோப னோடு போர்செய்து வென்று மீளுதி'' என்று ஆஞ்ஞாபித்தருளி, இலக் கத்தெண்மரையும் பூதப்படைத்தலைவர்களையும் அவரோடனுப்பி, அதன் பின் நாரதமுனிவரை நோக்கி, ''முனிவனே கேள், சரபப்பகஷிக்கூட்டத் திற் சில சிங்கங்கள் போலல், தாமிறப்பதன்றி அவற்றை அழிக்கவல் லவா! முடிவைக் காட்டுவாம் காணுதி'' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

வீரவாகுதேவர் சுப்பிரமணியக்கடவுளிடத்தில் விடைபெற்று, மேரு மலைபோலும் ஒரு வில்லையெடுத்து, கவசத்தையிட்டு, அப்பருத்தூணியை முதுகிற்கட்டி, விரலிற் புட்டிலையும் கையிற் கோதையையும் தரித்து, ஒரு தேரிலேறினர். ஆயுதங்கள் செறிந்த அளவிறந்த சேமத்தேர்கள் பக்கத் தில் வந்தன. இலக்கத்தெண்மர்களும் பூதப்படைத்தலைவர்களும் போர்க் கோலங் கொண்டு அயலிற் சூழ்ந்தார்கள். ''சூரபன்மனுடைய நகரிற் போர்செய்யப் போவதற்காக ஆயிரம் வெள்ளம் பூதசேனைகள் புறப்படுங் கள்'' என்று பூதவீரர் பறையறைந்த பொழுதில், ஆயிரம்வெள்ளம் பூத சேனைகள் சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்து காத்து நிற்ப, மற்றை ஆயி ரம்வெள்ளஞ் சேனைகளும் கடல்போல ஆரவாரித்து வந்து சூழ்ந்தன. அப்பூதர்கள் பூமி முழுதையும் ஒரு புயத்தில் வைக்குங் கையினர்; யமனை யுங் கொல்லுந் தறுகண்மையினையுடையர்; கொடியர், யாரினுங் கொடியர்; சிவந்த சடையினையுடையர்; படைக்கலங்களையேந்திய கரங்களையுடையர்; வீரக்கழலொலிக்குங் கால்களையுடையர்; வரத்திற் சிறந்தவர்; மாயங்களை வென்றவர்; அண்டங்களையும் உடைக்க வல்லவர். இவ்வாறுகிய பூதசேனை களும் சேனபதிகளும் இலக்கத்தெண்மர்களும் சூழ்ந்துவர, வீரவாகுதேவர் போருக்குச் சென்றார். திமிலை, பேரி, காகளம் முதலிய வாத்தியங்கள் கோஷித்தன. கொடிப்படைகள் எழுந்தன. பூதசேனையிலெழுந் துகள்கள் அவுணசேனையிலெழுந்த துகளோடு ஒன்றுபட்டன. இவ்வாறு நிகழ வீர வாகுதேவர் மகேந்திரபுரியின் மதிலின் புறத்துவந்தார். அப்பொழுது சில அசுரர்கள் அதனைக்கண்டு, விரைந்து ஓடிப்போய்ப் பானுகோபனை வணங்கி, ''ராசகுமாரனே, நீ போர்செய்ய வருதலையறிந்து முன்பு இங்கே தூதுவந்த வீரவாகு என்பானைச் சிவகுமாரர் உன்னோடு போர் செய்யும் படி அனுப்பினர்'' என்றார்கள். பானுகோபன் அதனைக்கேட்டு, கை கொட்டிச் சிரித்துக் கோபித்துப் பெருமூச்சுவிட்டு, இவ்வாறு சொல்வான்: ''பாசறையிலிருக்கின்ற பாலகனையும், என்னோடு போருக்கு வந்தெதிர்த்த இந்தத் தூதுவனையும், பூதர்களையும் புறங்கொடுத்தோடும்படி தொலைக் கின்றேன். கந்தனும் தூதுவனும் ஆகாயத்தினும் எண்டிசைகளினும் சமுத்திரங்களினும் அவற்றிற்கப்பாலுள்ள சக்கரவாளகிரியினும் எனக்குப் பயந்து சிதறியோடக் காண்பேன். எளிய பூதசேனைகளும் வலியில்லாத தூதுவனும் பாலகனும் வலியின்றி எனக்குப் பயந்து ஓடிப்போனலும், என்னுடைய மனத்திலுள்ள கோபம் ஆறுமோ! மேற்கூறிய இடங்களில் அவர்கள் ஓடிப்போனலும், தப்பவிடாமற் சூழ்ந்து பிடித்துக்கொண்டு

வந்து நம்மரசனுக்குக் காட்டி, எல்லாரும் என் புகழைத் துதிக்கும்படி இங்குள்ள தேவர்களோடு அவர்களையும் சிறையில் வைப்பேன்'' என்றிவ் வாறு பற்பலவற்றைப் பானுகோபன் சொல்லி, கோபம் பொருந்திய மனத்தோடு விரைந்து போயினன். அவுணவெள்ளங்கள் வடதிசைக் கோபுரவாயிலைக் கழிந்து சென்று, அங்கே வருகின்ற பூதசேனைகளின் வலிமையைப் பார்த்து, ''இவர்கள் முன்னே நம்முடைய போரைக்கண் டோடிய தேவர்களல்லர்; வலியர்போலும்; ஆயினும் இவர்கள் எங்க ளோடு போர்செய்யத்தக்க வலிமையுடையர்களோ! அள்ளில்லாத மலைக ளெல்லாம் மேருமலையை நிகர்ப்பனவாகுமா! மின்மினி சூரியனைக்காட்டி லும் பிரகாசிக்க வல்லதா?'' என்று இவைபோன்ற பலவற்றைச் சொல்லி, பூதசேனைகளுக்கெதிரே சென்று உரப்பினர். பூதர்கள் அவர்களை நோக்கி, ''உலகத்திலுள்ள உயிர்களை வருத்தினவர்கள் உவர்களோ!'' என்று சொல் லிக் கோபித்து அதட்டினர்கள். இப்படி இருதிறத்துச் சேனைகளுக்கும் போர் மூண்டது. அசுரவீரர்கள் யானைகளினுடைய துதிக்கைகளிலே தண்டாயுதங் களைக் கொடுத்து, ''பகைவர்களை அடித்துக் கொல்லுதி'' என்னுங் குறிப் பைக் காட்டிப் பூதர்கள்மீது அவைகளைத் தூண்டிவிட்டும், யானைகளிலும் குதிரைகளிலும் தேர்களிலும் ஏறிவந்து எதிர்த்து ஆயுதங்களை விடுத்தும் போர்செய்தார்கள். காலாட்படைகள் முத்தலைச்சூலம் தோமரம் முதலிய படைகளை வீசிப் போர்செய்தார்கள். படைக்கலங்களைச் செலுத்திப் போர் செய்த அசுரர்களைப் பூதர்கள் மரங்களினாலும் மலைகளினாலும் அழித்தார் கள். இருதிறத்துச் சேனைகளும் இப்படி எதிர்த்துப் போர்செய்யும்பொழுது, இறந்த அவுணர்களும் பலர்; கைகால் முதலிய அவயவங்கள் இழந்து வீழ்ந்த பூதர்களும் பலர். இறந்த பிணங்கள் கரைபோலாக இரத்த வெள்ளம் கடல்போல நின்றது. பூதர்கள் கோபித்து, அசுரர்களுடைய தேர்களினாற் றேர்களையும், யானைகளினால் யானைகளையும், குதிரைகளினாற் குதிரைகளையும், ஆள்களினால் ஆள்களையும் அடித்தும், தங்களுடைய தோள்களினால் அவர்களுடைய தோள்களையும் கால்களினால் அவர்களுடைய தலைகளையும் தாக்கியும், அசுரர்களைக் கொன்றார்கள். அவர்கள் ஆற்றாது உடைந்தார்கள்.

அதனை அனலி என்னும் அசுரப்படைத்தலைவன் கண்டு, தன் கையி லுள்ள வில்லை வளைத்து நாணேதை செய்தான். தேவர்கள் அவ்வொலி யைக் கேட்டு ஐயகோ என்று துன்பமுற்றார்கள். அனலியென்பான் அவ் வில்லில் அக்கினிபாணங்களைப் பூட்டிப் பூதர்களுடைய உடம்பில் அழுத் தினான். அதனைச் சிங்கர் என்னும் பூதப்படைத்தலைவன் கண்டு, ''நீ எங்கே உய்வாய் ஈண்டே யிறந்தாய்'' என்று கூறிக் கோபத்தோடு ஆர வாரித்து, அனலியினுடைய தேரிற்கட்டிய குதிரைகளைத் தமது கையாகிய தண்டினால் அடித்துக் கொன்றார். தேர் ஓடாது நின்றது. குதிரைகள் இறந்தமையை அனலி கண்டு சினந்து, வில்லிற் பாணங்களைப் பூட்டி, ''தடுக்கமுடியாத இந்தப் பாணங்களை விடுத்து உன்னைக் கொன்று தேவர் கள் பார்க்கும்படி உன்னுயிரைத் தென்றிசைக்கனுப்பா தொழிவேனையின் யான் போரில் வில்லியெனேன்'' என்று சபதஞ்சொல்லி, அப்பாணங் களைத் தூண்டி, இரத்தங் காலும்படி சிங்கருடைய உடம்பை மறைத் தான். அவர் அதனைச் சிறிதும் மனத்துக்கொள்ளாமலும், துன்புறுமலும்,

சகித்துக்கொண்டு விரைந்துபோய், ஓடாமல் நின்ற அனலியினுடைய தேரிலேறி, அவனுடைய வில்லைப்பறித்து நிலத்தில் எறிந்தார். அனலி ஒரு தண்டினாற் சிங்கருடைய தலையில் அடித்தான். அதனைக்கண்ட அசுரர்கள் ஆரவாரித்தார்கள்; தேவர்கள் கலங்கினார்கள். சிங்கர் தன்னை யடித்த தண்டோடு அனலியின் கையைப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையினால் அவனுடைய மார்பொடியும்படி அடித்து, பிடித்த தண்டோடு அவன் மிகுந்த துன்பம் உறும்படி சுழற்றி, ஆர்த்து, அவன் பின்னும் அறிவிழந்து சோருஞ் சமயத்தில் தேரினின்றிறங்கி, நிலத்திலடித்தார். உடனே அனலி இறந்தான். சண்டன் என்னும் அவுணப்படைத்தலைவன் அனலி இறந்ததைக்கண்டு, மனம் வருந்தி, ''இவனுடைய உயிரை இப் பொழுதே குடிப்பேன்'' என்று சொல்லிக்கொண்டு சிங்கர்மேற் போயினன். சிங்கர் அதனைக்கேட்டு, நெருப்பெழப் பார்த்துச் சிரித்து, இறந்த அனலியின் கையிலுள்ள தண்டை எடுத்துக்கொண்டு சண்டனுடைய தேரிற்பாய்ந்து, அவனுடைய புயத்தில் அடித்தார். அவன் உயிர்த்துப் பொருமித் தேரில் வீழும்பொழுது தன்னுடைய கையிற்றண்டினாற் சிங்கருடைய மார்பில் அடித்தான். இருவரும் அயர்ந்து வீழ்ந்தார்கள். அப் பொழுது மாயனென்னும் அவுணப்படைத்தலைவன் அதனை நோக்கித் தேரினோடு வர, நீலர் என்னும் பூதப்படைத்தலைவர் எதிர்த்து, அவன் மேல் ஒரு தண்டத்தை எறிந்தார். மாயன் இறந்தவன்போல மிக வருந்தி, ஒரு முத்தலைச்சூலத்தை எறிந்தான். அது வந்து படுதலும் நீலருடைய மார்பினின்றும் இரத்தம் வடிந்தது. அவரும் அயர்ந்து நின்று சிறிது பொழுதினுட் டெளிந்து, மாயனுடைய மார்பிற் கையினால் அடித்து, அவன் மிக வருந்துதலைக்கண்டு அவனுடைய தோள்களிரண்டையும் கைகளாற் கட்டிப் பிடித்துக்கொண்டு, கழுத்திற் கடித்து இரத்தத்தைக் குடித்துக் கோபந்தணிந்து நின்றார். மாயன் இறந்தான். முன்பு போர் செய்து மயங்கி வீழ்ந்த சண்டன் சிங்கர் என்னும் இருவருந் தேறி, தண்டாயுதத்தைக்கொண்டு பொருதார்கள். சிங்கர் சண்டனுடைய தண்டம் பொடிபட அடித்தார். அதனைக் கண்டு அவுணர்கள் என்கொலாம் என்று அஞ்சினார்கள். சண்டன் இடியேறுபோலக் கோபித்து, ''என்னுடைய தண்டாயுதம் ஒடிந்ததென்று செருக்கடையாதே; நான் புயமாகக் கொண்டதும் தண்டாயுதமே; யமலோகமும் மேலுலகங்களும் உலையும்படி முன்னுளிற் பொருதேன்; இங்கே உனக்கஞ்சேன்; போரைச்செய்குதி'' என்று சொல்லி, கையைப் படையாகக்கொண்டு எதிர்த்தான். சிங்கர் கோபித்து, ''நீ அத்துணை வலியுடையைபோலும் இந்தத் தண்டத்தைக் காத்துக்கொள்'' என்று தண்டினால் அடித்தார். சண்டன் அத்தண்டம் தன்மேற் படாதவண்ணம் கையினாற் றடுத்து, தோள் கொட்டி ஆரவாரித்தான், சிங்கர் அதனைப் பொருது கோபித்து, அவனுடைய புயம் ஒடியும்படி தண்டினாலடித்தார். சண்டனுடைய புயமும் சிங்கருடைய தண்டும் முரிந்தன. சண்டன் தன்னுடைய தோள் ஒடிந்ததென்று எண்ணி வருந்தாமல், முரிந்த அத்தோளையே மற்றைக் கையினாற் பிடித்தொசித்துத் தண்டாகப்பற்றி, இடசாரி வலசாரியாகத் திரிந்தான். தேவர்கள் ''இவனே வீரருள் வீரன்'' என்று வியந்தார்கள். சண்டன் ஒடிந்த கையாகிய தண்டினாற் சிங்கருடைய மார்பில் மோதினன். அவர் வருந்

தாமல், ''உவன்போல யானும் கையாலடியேன்'' என்று காலினுல் அவனுடைய மார்பில் உதைத்துச் சாய்த்தார். அதனைக்கண்ட தேவர்கள் கையெடுத்தார்த்து, ''சிவகணநாதராகிய நீரன்றிச் சண்டனையுதைப்பவர் யாவர்! தாமதிக்காமல் இவனுடைய உயிரைக் கவருதிர்'' என்று குறையிரந்தார்கள். சண்டன் அதனைக்கேட்டு, ''இவனு என்னுயிரைக் கவர்வான்; தேவர்களே, இவனேடு உங்களையுங் கொன்றுதின்பேன். இதனைக் காண்மின்'' என்முன். சிங்கர் அதனைக்கேட்டு, அக்கினி காலுங் கண்ணினராய்க் கோபித்து, ''எனக்குமுன் இப்படி வீரம்பேசுகின்றுய் இனி இறப்பாய்'' என்று அவனுடைய கதுப்பு உடையும்படி கையினுல் மோதினுர். அவன் இடியொலியோடு கூடிய மேகம்போல வீழ்ந்திறந்தான். யமதூதுவர்கள் சண்டனை அணுகுதற்குப் பயந்து நின்ருர்கள். சிங்கர் அவர்களை நோக்கி, ''இந்தக் கீழ்மகனுடைய உயிரைக் கவர்ந்துகொண்டு செல்லுங்கள்'' என்று கூறுதலும், அவர்கள் அணுகிவந்து கொண்டுபோயினர்கள். சண்டன் இறந்துவீழ்ந்த இடம் இரத்தத்தினுலும், வக்கிரதந்தத்தோடுதிர்ந்த பற்களினுலும், பாலசந்திரனை நக்ஷத்திரங்கள் சூழப்பெற்ற செவ்வானம் போன்றது. இவ்வாறு சண்டன் இறந்ததை அசமுகன் என்னும் அசுரசேனுதிபதி கண்டு, ''சற்று நில் நில் யான் வந்து உன்னுயிரையுண்பேன். என்னை மற்றவர்களைப்போல எண்ணுதே'' என்று தேர்மேல் விரைவில் வந்து சிங்கரை அணுகினுன். அப்பொழுது மதுவென்னும் பூதசேனுதிபதி ''நீ எங்கே தப்புவாய் இங்கே இறந்தாய்'' என்று கூறி விரைவில் இடையிற் புகுந்தார். அசமுகன் வில்லை வளைத்து நாணுலிசெய்து, அவர்மீது பாணங்களைச் சிதறினுன். மது அவைகள் தன்முன் வரும்பொழுதும்,உடம்பிற் படும்பொழுதும் அதனை லக்ஷியஞ்செய்யாமலும், கண்ணிமையாமலும், சிறிதும் நிறைதவருமலும், அருகிலுள்ள மராமரத்தைப் பிடுங்கித் தன்மேல் வருகின்ற பாணங்களைச் சிந்தாமலும் அவைகள் தன்னுடம்பெங்கும் கவசம்போலப் பட நின்று, பின்பு அசமுகனுடைய தேரில் விரைந்துபோய், இடிபோல ஆரவாரித்தார். அசமுகன் அவ்வொலியைக் கேட்டு அயர்ந்து, வில்லையும் பாணத்தையும் நழுவவிட்டு வேர்த்துத் தேரின் மீது நின்முன். அதனை மதுவென்பவர் பார்த்து, ''நீ போர்செய்தற்கு வீரனுமல்லை, சூரனுமல்லை, திரனுமல்லை, எவ்வாறு போர்செய்குதி! நீ உன்னுயிரைக்கொண்டு பிழைத்துப்போதி'' என்று சொல்லி, அவனுடைய தேரினின்றும் இறங்கிப்போயினர். அசமுகன் வெட்கித்துப் பெருமிதமிழந்து, ''போரில் அஞ்சினேனென்று ஒரு வசையைப் பெற்றேன்; இனி யாவரிடத்தில் இதனைத் தீர்வேன்; அவனை என்னேடு போர்செய்யாமற் போயினன்; ஐயோ! இனி யான் இறத்தலே நன்று'' என்று மனமாகிய நெருப்புச் சுடுதலால் மனம் வேகக் கோபம் மூண்டு, பின்பு போர்செய்யும் வலிமையைப் பெற்று, மதுவைத் தொடர்ந்து, ''நீ எங்கே போனலும் உன்னைக் கொல்லுவேன், ஓடாதே நில்லு நில்லு'' என்று சொல்லி, திசைகள் செவிடுபட ஆர்த்தான். மது அசமுகனுடைய வார்த்தையைக் கேட்டு ''நீ இப்பொழுது படித்ததும் உண்டோ! சிலவற்றைச் சொன்னுய். வீரமில்லாத நீ என்னைத் தேடிப் போருக்கு வருதல் பிழையாயினும், என்னை எதிர்த்தமையால் ஒரு கீர்த்தியைப் பெற்றுய்; எனக்கோர் பெரும்பழியைத் தருகின்றுய்'' என்று கூறினர். அப்பொழுது அசமுகன்

பல பிறைமுக பாணங்களை அவர்மீது விடுத்தான். மது அவைகளெல்லாவற்றையும் கையினல் வீசிநின்றார். அசமுகன் ''இவன் இந்தப் பாணங்களினுற் சிறிதுமிளைத்திலன்'' என்றெண்ணி, தன் கையிலுள்ள முத்தலைச் சூலம் வேல் முதலிய ஆயுதங்களெல்லாவற்றையும் அவர்மேல் விடுத்தான். மது தளர்ந்து, அசமுகனுடைய தேரைக் கையாலெடுத்துச் சமுத்திரத்தில் எறிய, அவன் தேரினின்றும் பூமியிற் பாய்ந்து, மதுவின்முன் கோபத்தோடணுகி, தோளினல் மற்போர்செய்யத் தொடங்கினன். மது அவனைக் காலினல் வானுலகத்திற்கு மப்பாற் செல்லும்படி உந்தி யெறிந்தார். அவன் வானிற்போய் மீண்டு, மதுவின்முன் வந்து, அவருடைய மார்பிலடித்து, வைது, ஒரு வஞ்சனையை நினைத்து மறைந்து, ஆகாயத்திற் போய் விட்டனுவினிடத்திற் பெற்ற சக்கரப்படையைக் கையிலெடுத்து மனத்தாற் பூசித்து, வணங்கி, தான் இறக்குந் தன்மையினனுய், மதுவின் மீது விடுத்தான். மது நிராயுதராய் நின்றமையால், அவன் கைச் சக்கரப்படை மீண்டு அவன் றலையை வெட்டியது. ''தன்னல் வாராத வினையில்லை'' என்று பெரியோர் சொல்வது மெய்மைபோலும். அசமுகன் இறந்து இடி போல வீழ்ந்தான். அவுணர்கள் வருத்தமுற்றார்; ''இன்றேடு போர் தொலைந்தது'' என்று தேவர்கள் துள்ளினர். சக்கரப்படை விட்டனுவினிடத்திற் சென்றது. மற்றை அவுணப்படைத்தலைவர்கள் சதுரங்கசேனைகளோடு சென்று போர்செய்தலும், எதிர்ந்த பூதப்படைத்தலைவர்கள் புறங்கொடுத்தார்கள். இலக்கம் வீரர்களுள்ளே தண்டகர் என்பவர் அதனைக்கண்டு, வில்லைவளைத்துப் பாணமழைகளைப் பொழிந்தார். கசரததுரக பதாதியாகிய நால்வகைச் சேனைகளும் அழிந்தன. இரத்தவெள்ளம் ஆறு போலப் பாய்ந்தது. இறவாது பிழைத்த அவுணர்கள் எண்டிசைகளினும் பூமியினும் வானுலகத்தினும் இரிந்தோடினர்.

அவுணசேனைகள் இறந்தமையையும் சேனைத்தலைவர்கள் பலர் இறந்தமையையும் பானுகோபன் பார்த்து, ''இந்திரன் முதலாகிய தேவர்கள் புறங்கொடுத்தோடும்படி போர்செய்து வென்ற நம்மவர்கள் சிவகுமாரன் விடுத்த சேனைகளால் இறந்தனர்போலும். சூரியனைச் சிறைசெய்த யானும் நிற்கப் பகைவர்கள் வலியுடையர்களாய் நம்முடைய சேனைகளைக் கொல்லுந்துணிவு நன்றுயிருந்தது! சிங்கமானது கோபமும் பகையுமில்லாமலும், தனக்குரிய கொலைத்தொழிலைச் செய்யாமலும் வாளாவிருந்து விடுமாயின், அதனையும் யானைகள் கொல்லமாட்டாவோ! பூதர்கள் கொல்ல இறந்த அவுணசேனைவெள்ளம் இரண்டாயிரத்தினும் மிகுமன்றிக் குறையமாட்டா. என் பக்கத்தில் நிற்பன ஆயிரம் வெள்ளமே; ஒழிந்த சேனைகளெல்லாம் ஓடுகின்றன. யான் இந்த ஒரு வில்லைப்பிடித்துக்கொண்டு முன்னமே பகைவர்கள்மேற் போருக்குச் சென்று அவர்களை வதைத்திலேன்; என் சேனைகளெல்லாவற்றையும் யானே கொன்றேன்; அவைகளைப் போர்செய்யும்படி அனுப்பிவிட்டுப் பின்னணியில் நின்றேன்; இஃதோர் பொருளென்று நினைந்திலேன்; கழிந்ததை நினைந்தாவதென்ன! இனி யானே போருக்குப்போய் ஒருநாழிகைப் பொழுதினுட் போரில்லை என்னும்படி தொலைப்பேன்; இதனைச் செய்யாதொழிவேனென்னில் யான் சூரபன்மனுடைய மகனல்லன்'' என்று சபதங்கூறி, தேரைச் செலுத்திக்கொண்டு பூதசேனைவெள்ளத்துட் புகுந்து, வில்லைவளைத்து, பாணங்களைப் பூதர்கள்மீது மழைபோலச் சொரிந்

தான். பூதர்கள் அதனைப் பார்த்து, எண்ணில்லாத மலைகளைப் பறித் தெறிந்தார்கள். பானுகோபன் அவற்றைப் பாணங்களாற் றுகள்செய்து, இடசாரி வலசாரியாகத் திரிந்து, ஒரு தொடையிற் பலதிறத்தனவாகிய ஆயிரகோடி பாணங்களைத் தூண்டிப் பூதகணங்களை அழித்தான். இவ்வாறு பானுகோபன் போர்செய்தலும், அளவில்லாத பூதர்கள் இறந்தார்கள். எய்யுந் தொழிலில் அவனைக்காட்டிலும் வலிமையுடையவர்கள் யாவர்! அவனுடைய பாணங்களுக்குப் பயந்து வலிமையின்றிப் புறங்கொடுத் தோடுகின்ற பூதர்கள் ''சுப்பிரமணியக்கடவுள் அங்கே பாசறையிலிருக் கின்றார்; வீரவாகுதேவரும் மற்றை வீரர்களும் பின்னணியில் நின்றார்கள்; நாமோ வலியில்லாதோம்; முன்னின்ற நம்மை இவன் கொல்வான்; நாம் இங்கே நிற்பானேன்'' என்று இரிந்தோடி வீரவாகுதேவரைச் சேர்ந்தார்கள்.

இத்தன்மைக ளெல்லாவற்றையும் உக்கிரர் என்னும் பூதப்படைத் தலைவர் பார்த்துக் கோபித்து, ஒரு தண்டாயுதத்தை யெடுத்து ஆரவா ரித்து எதிர்த்தார். அவர் தனக்கெதிரே வருதலைப் பானுகோபன் கண்டு வில்லை வளைத்து, ஆயிரகோடிபாணங்களைச் செலுத்தி, அவருடைய உடம்பு முழுவதையும் மறைத்தார்த்தான். அவன் செலுத்திய பாணங்கள் அறத் தையும் அதனால் வரும் இன்பத்தையும் விரும்பாத உலோபியின் கைப் பொருள் அழியுமாறு போல உக்கிரருடைய உடம்பிற்றையாமல் நுதி மழுங்கி யழிந்து விழுந்தன. பானுகோபன் அதுகண்டு ''இவனைக் கொல் வது எவ்வாறு?'' என்று யோசித்து, ஓர் எழுப்படையைச் சுழற்றியெறிந் தான். உக்கிரர் அதனை ஓர் இருப்புலக்கையால் அழித்து, பானுகோப னுடைய தேரை அணுகி, குதிரைகளை அடித்து வீழ்த்தினர். தேவர்கள் பானுகோபனை ஏ என்று இகழ்ந்து ஆரவாரித்தார்கள். குதிரைகள் அழி தலும், பானுகோபன் கோபங்கொண்டு, பிறிதொரு தேரில் ஏறி, வில்லைவளைத்து, உக்கிரருடைய தண்டம் முறியும்படி நூறு மொட்டம்பு களை விடுத்தான். தண்டம் துகளாகியது. உக்கிரர் பானுகோபனுடைய தேரைக் கையாலெடுத்தெறிந்தார். அது சூரியமண்டலம்வரையுஞ் சென் றது. அதனைக்கண்ட சூரியன் ''இவன் முன்னளிற்போல இன்னும் என் னைப் பிடிக்க வருகின்றானே, அணியனாகின்றான், இன்னும் என்னவா குமோ!'' என்று நினைந்து ஓடிப்போயினன். இவ்வாறு வானிற்சென்ற பானுகோபன் கற்பகதருவானது தூரோடு வானுலகினின்றுஞ் சாய்வது போலத் தேரோடு பூமியில் விழுந்து, தேரைவிட்டு உக்கிரரை யணுகிக் கையாலெற்றியெடுத்து, ஏழுகடல்களுக்கு மப்பாற் செல்லும்படி எறிந்து, பிறிதொரு தேரிலேறி, வீழ்கின்ற உக்கிரர்மீது பிரமதேவர் கொடுத்த முத்தலைச்சூலத்தை எடுத்துச் செலுத்தினன். அச்சூலம் உக்கிரருடைய மார்பிற் புகுந்து பிளந்து அப்பாற் போயது. அவர் வீழ்ந்து சிறிது அயர்ந் தார். அதனைத் தண்டி என்பவர் கண்டு, ஒரு மலையை எடுத்துப் பானு கோபன்மீது எறிந்தார். அவன் ஆயிரம் பாணங்களினால் அதனைக் கண்ட துண்டமாக்கினன். அது துகளாதலும், தண்டி மராமரமொன்றைப் பறித்துப் பானுகோபனுடைய தேர்க்குதிரைகளை யடித்தார். குதிரைகள் எல்லாம் அழிந்தன. பானுகோபன் முத்தலையையுடைய பல பதினாயிரம் பாணங்களை இரத்தஞ் சோரும்படி தண்டியினுடைய நெற்றியில் அழுத்த

அவர் தளர்ந்தார். அதனைப் பிஞகியென்பவர் கண்டு, ஒரு மலையைப் பறித்து வீசும்படி முயலுதலும், பானுகோபன் ஆயிரம் பாணங்களை அவருடைய மார்பில் மூழ்கும்படி எய்தான். அவரும் தளர்ந்து நின்றார். அப்பொழுது மற்றைப் பூதவீரர்களும் சென்று சென்று தனித்தனி சிறிது பொழுது போர்செய்து, பானுகோபனுக்கு ஆற்றராய் உடைந்தார்கள்.

இவ்வாறு பூதகணத்தலைவர்கள் தொலைதலும் கபாலி, அண்டலோசனர், நிரஞ்சனர், உருத்திரர், அகண்டர், தண்டகர் முதலாகிய இலக்கம் வீரர்கள் கண்டு சினங்கொண்டு, தேரோடு பானுகோபனுக் கெதிர் சென்று, விற்களை வளைத்து நாணெலி செய்தார்கள். அவ்வொலியைக் கேட்டுத் திக்குயானைகள் பட்டதுயரைச் சொல்வதெங்ஙனம்! மேருமலையுஞ் சலித்தது, வானமுந் திசையுஞ் செவிடுபட்டன. பானுகோபன் அதனைக் கண்டு புன் முறுவல்செய்து, ஒரு பெரிய வில்லையெடுத்து வளைத்து நாணெலி செய்தான். இலக்கம் வீரரும் பானுகோபன்மீது பாணங்களை மழைபோலச் சொரிந்தார்கள். அவைகள் எல்லாம் ஆறுகள் சமுத்திரத்திற் போவதுபோலப் பானுகோபன்மேற் சென்றன. அவன் ஆயிரகோடி பாணங்களை விடுத்து அவைகளெல்லாவற்றையும் அறுத்து, பின்னும் அத்துணைப்பாணங்களை இலக்கம் வீரர்கள்மேல் விடுத்தான். அவர்கள் அவைகள் முறிந்து பானுகோபன்மீது செல்லும்படி அவற்றிற் கெழுமடியாகிய பாணங்களைச் செலுத்தினர்கள். பானுகோபன் கோபித்து அளவில்லாத பாணங்களை மேன்மேலுஞ் செலுத்தி, இலக்கம் வீரர்கள் செலுத்திய பாணங்கள் எல்லாவற்றையும் விலக்கி, அவர்கள் ஏந்திய இலக்கம் விற்களையும் அறுத்தான். விற்கள் அழிதலும், அவர்கள் பின்னுந் தேரிலுள்ள சேமவிற்களை எடுத்து வளைத்துப் பாணங்களைச் செலுத்தி, பானுகோபன் விடுகின்ற பாணங்களைத் துணித்து, அவனுடைய தேரிலும் குதிரைகளிலும் கொடியிலும் பாகன்மீதும் ஆயிரம் ஆயிரம் பாணங்களை விடுத்து அழித்தார்கள். தேரழிதலும், பானுகோபன் வேறொரு தேரிற் பாய்ந்து, கோபித்து, வில்லைவளைத்து, நூறுநூறுயிரம் பாணங்களைச் செலுத்தி, இலக்கம் வீரர்களுடைய தேர்களையும் விற்களையும் அறுத்து, அளவில்லாத பாணங்களை அவர்களுடைய உடம்பில் அழுத்தினன். அப்பாணங்கள் சரீரம் எங்கும் பட்டு இரத்தம் வடிதலும், இலக்கம் வீரரும் வலிமை குறைந்து மிகவுந் துன்புற்று, ஆற்றுதவர்களாய், போரை நினையாது உடைந்து போயினர்கள். இலக்கம் வீரர்களும் வந்து போர்செய்ய, விற்பிடித்த ஒருவனே அவர்கள் எல்லாரையும் வென்றான். இது முன்னெளிற்செய்த தவப்பயன் என்போமோ, கல்வித்திறமை என்போமோ, நாம் என்ன சொல்வது!

இலக்கம் வீரர்களும் உடைந்ததை வீரகேசரி கண்டு, வில்லைவளைத்துப் பானுகோபனுக் கெதிர்சென்று, விடாமழைபோலப் பிறைமுக பாணங்களைப் பொழிந்தார். பானுகோபன் அதனைப் பார்த்துத் தலையை அசைத்து, ''இவனுடைய வலிமையும் வென்றியும் வில்வலியும் நன்று'' என்று சொல்லி, வில்லைவளைத்தான். தேவர்கள் நடுங்கினர்கள். அவன் அவ்வில்லில் நூறு நூறுயிர கோடி பாணங்களைத் தொடுத்து, வீரகேசரி விடுக்கின்ற பாணங்களையெல்லாம் அழித்து, அவருடைய புயங்கண்மீது அவர்

நடுங்கும்படி ஆயிரம் பாணங்களை அழுத்தினன். வீரகேசரி அவன் செலுத்திய பாணங்களெல்லாவற்றையும் விலக்கி, அவனுடைய மார்பு பலகணி போலாக ஆயிரம் பாணங்களைத் தூண்டினர். அவைகள் மார்பில் அழுந்துதலும், பானுகோபன் இரங்கித் துன்புற்று, மிகவும் கோபித்து, "இவனை வில்லினால் வெல்லுதல் அரிது" என்று கருதி, விஷ்ணுப்படைக்கலத்தை எடுத்துவிட, அது விட்டுணுவினுருவங்கொண்டு சென்று, வீரகேசரி விட்ட பாணங்களெல்லாவற்றையும் விழுங்கி, பூமியும் அண்டமும் நடுங்க மிகுந்த ஆரவாரத்தோடு அணுகியது. அதனை வீரகேசரிகண்டு, தாமும் விட்டுணுப் படையை விடும்படி எடுக்குமுன் பானுகோபன் விடுத்த அப்படைக்கலம் விரைவில் அவருடைய மார்பிற்புகுந்து, சுப்பிரமணியக்கடவுள் ஏந்திய வேற்படையினுடைய ஆணையினால் அவருடைய உயிரைக்கவருதற்கு அஞ்சி, இரத்தத்தைப் பருகி, உணர்வை அவசமாக்கி, தன் வலியையுஞ் சிறிது காட்டி, விரைந்து மீண்டு பானுகோபனிடத்திற் சென்றது. வீரகேசரி இறந்தவர்போல வீழ்ந்து மயங்கினர். அதனை வீரமார்த்தாண்டர் கண்டு, வில்லை வளைத்து, கோபத்தோடு பானுகோபனை அணுகுதலும், அவன் ஆயிரம் பாணங்களினால் அவருடையவில்லைத் துணித்து, ஆயிரம் பாணங்களை நெற்றியில் அழுத்தினன். தேவர்கள் அதனைக்கண்டு ஏங்கினர். வீரமார்த்தாண்டர் வேறொரு வில்லை எடுத்து வளைத்தார். அதன்முன் பானுகோபன் நூறு பாணங்களை விடுத்து அந்த வில்லையுந் துணித்து, ஆயிரம் பாணங்களால் அவருடைய தேரையும் குதிரையையும் அழித்து, புயங்களில் எழுநூறுபாணங்களை விடுத்தான். தேரழியவும், வில்லழியவும், பேரழியவும் தனிமையாய் நின்ற வீரமார்த்தாண்டர், பரிவேடமழியத் தனித்த சூரியன்போன்று, முகிலும் அஞ்ச ஆர்த்து, இராகுவின்மீது சூரியன் பாய்ந்தாற்போல வேகத்தோடு கிளர்ந்தெழுந்து பாய்ந்து, பானுகோபன் ஏந்திய வில்லைப் பறித்து இருதுணியாக்கி எறிந்தார். பானுகோபன் வெகுண்டு இடையிற் கட்டிய உடைவாளை உருவி, அவருடைய மார்பில் குற்றி அதனை வாங்குமுன், அவருடைய வாட்படையொன்று அவனுடைய மார்பில் மாறுகக் குற்றியதுபோல அவருடைய மார்பிலிருந்தெழுந்த இரத்தம் பானுகோபனுடைய மார்பில் வந்து பட்டது. பானுகோபன் தம்முடைய மார்பில் வாட்படையைக் குற்றி வாங்குமுன், வீரமார்த்தாண்டருங் கொதித்து, வாட்படையை உறையினின்றுங் கழற்றி, அவனுடைய மார்பிலுள்ள வச்சிரகவசம் அழியும்படி யாவருமிரங்கக் குற்றினர். பானுகோபன் மீட்டும் உடைவாளினால் அவருடைய நெற்றியில் அழுந்தும்படி குற்றினன். அவ்வொரு குற்றில் வீரமார்த்தாண்டர் காற்றடிக்கச் சாய்ந்த கற்பகதருவைப்போலச் சாய்ந்தார். வடிகின்ற இரத்தமும் துன்பமும் மிகும்படி தேரில் வீழ்ந்த வீரமார்த்தாண்டரை இவன் இறந்தான் என்று பானுகோபன் விடுத்து, மருங்கிலுள்ள சேனைகளோடு வந்து எதிர்த்தான். வீரராக்கதர் என்னும் வீரர் தமது துணைவர்கள் தொலைந்ததையும் பானுகோபன் போருக்கு வருதலையும் கண்டு, கோபம் மிகுந்து, வேகத்தோடுவந்து வில்லைவளைத்து, ஆயிரம் பாணங்களைப் பானுகோபன்மீது செலுத்தினர். அவன் அத்துணைப்பாணங்களால் அவற்றை அழித்து, நூறு பாணங்களினால் வீரராக்கதருடைய தேர்ப்பாகனது தலையைத் துணித்தான். பாகன் இறத்தலும், அவர்

வேறேர் பாகனைத் தேரில் நிறுத்தி, வெகுண்டு, அறுமுகக் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்து, ஆயிரம் பாணங்களினுற் பானுகோபனுடைய கீரீடத்தை அறுத்தார். முடி வெட்டுண்ணுதலும் பானுகோபன் மிகவும் வெட்கித்து, எல்லையில்லாத பெருங்கோபம் மூள, கொடுமுடியில்லாத மலை போலவும், மணியையிழந்த சர்ப்பம் போலவும், சூரியனையிழந்த ஆகாயம் போலவும், கொம்பரையிழந்த கற்பகம்போலவும், கோடுகளையிழந்த யானைபோலவும், திருமங்கலியத்தையிழந்த பெண்கள் போலவும் அழகினை யிழந்து, வெட்டுண்ட மகுடத்தை நீக்கி, ஏவலாளர்கள் கொடுத்த பிறி தோர் மகுடத்தை அணிந்து, வீரராக்கதர் விடுக்கின்ற பாணங்களெல்லா வற்றையும விலக்கி, ஆயிரம் பாணங்களினுல் அவருடைய வில்லையறுத்து, அவர் பிறிதோர் வில்லை யெடுக்குமுன் அவருடைய தேர்க்குதிரைகளை அழித்தான். குதிரைகள் அழிதலும், வீரராக்கதர் பிறிதொரு தேரிற் பாய்ந் தார். பானுகோபன் அவருடைய கையிலுள்ளவில்லை ஆயிரம் பாணங் களால் அழித்தான். அவர் அவன்மீது ஒரு வேற்படையை விடுத்தார். அவன் அதனை நூறம்புகளால் அழித்தான். வீரராக்கதர் தேரினின்றிறங்கி அறைகூவிச்சென்று, பானுகோபனுடைய தேரை எடுத்தெறிந்தார். அவன் விண்ணிற் சென்று பிரமதேவர் முன்கொடுத்த ஒருவேற்படையை யெடுத்து "இவனுடைய உயிரை உண்ணுதி" என்று விடுத்துத் தேரோடு வீழ்ந்தான். அவ்வேல் சென்று வீரராக்கதருடைய உடம்பிற் பட, அவரும் வீழ்ந்து மிகத் தளர்ந்தார். முருகக்கடவுளுடைய ஆணையினுல் அவருடைய உயிர் பிரிந்திலது. முன்னே பானுகோபன் செலுத்திய விட்டுணுவினுடைய சக் கரப்படையினுல் வீழ்ந்து அவசமடைந்த வீரகேசரி எழுந்து, போர்செய் தற்கு வலிமையின்றி இடைந்து, பின்போயினுர். பானுகோபன் வேறேர் தேரிலேறி, வில்லைவளைத்துப் பாணமழைகளைச் சொரிந்து, மற்றை வீரர் களையும் வெல்லும்படி எதிர்த்தான், வீரராந்தகர், வீரமாமகேச்சுரர், வீர தீரர், வீரமாமகேந்திரர்.வீரபுரந்தரர் என்னும் ஐவரும் வில்லோடு சென்று, பானுகோபன்மீது பாணங்களை மழைபோலப் பொழிந்து, அளவில்லாத போர்த்தொழில்களைச் செய்து, பின்பு பானுகோபனுடைய பாணங்கள் உடம்புகளிற் புதைய, அவருள் இருவர் வருந்தி நின்றார்; ஒருவர் வீழ்ந்தார்; மற்றையிருவரும், தேரும் வில்லும் அழிந்து நொந்து புறங்கொடுத்துச் சென்றார். பானுகோபன் இவ்வாறு வீரர்கள் யாவரையும் வேறு வேருய்ப் பொருது வெற்றி கொள்ளும்பொழுது, முன்னே வலிமையின்றிப் புறங் கொடுத்த அவுணசேனைகள் யாவும் நாற்றிசைகளிலும் வந்து அவனைச் சேர்ந்தன.

பானுகோபன் சேனைகளோடு போருக்கு வருதலை வீரவாகுதேவர் பார்த்து, தேவாதிதேவராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடித் தாமரைகளை அன்போடு தியானித்துத் துதித்து, போர்செய்ய நினைத்து, அவனுக்கு முன்னே சென்று, பிரமாவும், விட்டுணுவும், இந்திரனும், தரும தேவதையும், வேதங்களும், சூரியசந்திரர்களும், வீரலக்குமியுங் கூத்தாட வில்லை வளைத்து, பிரசண்டமாருதமும் வடவாமுகாக்கினியும் அஞ்சவும், சமுத்திரத்தின் ஒலி குன்றவும், அண்டங்களும் புவனங்களும் அழிந்து பிரதித் தொனி செய்யவும் நாணொலியை யெழுப்பி, போர்செய்யும்படி நடந்தார்.

அவரைப் பானுகோபன் கண்டு ஒரு பெரிய வில்லை வளைத்து, தேவர்கள் நடுங்கும்படி நாணேற்றை செய்தான். முன்பு வீரவாகுதேவருடைய நாணெலியை அன்பிலேடு கேட்ட தேவர்கள் அளவில்லாத மகிழ்ச்சியை யடைந்து பொலிந்து, பின்பு பானுகோபனுடைய நாணெலியைக் கேட்டலும் இரங்கி, வருந்தி, ''இங்கே இன்பதுன்பங்களிரண்டையும் ஒரிடத்திற் கண்டோம்'' என்று கூறி, அமுதமுண்டவர் பின்பு நஞ்சத்தையுண்ட செயலைப்போன்றார். இன்பத்தின் முடிவிற் றுன்பம் வந்தடைவதோர் வழக்கன்றே! அரிபிரமேந்திராதி தேவர்கள் இவர்களுடைய போர்த்தொழிலைக் காணும்படி வந்து நெருங்கினர்கள். அப்பொழுது, பானுகோபன் வீரவாகுதேவரை நோக்கி இவ்வாறு சொல்லுகின்றான். ''வேற்படையினற் றூரகாசுரனைக்கொன்ற குமாரக்கடவுளல்லை; பன்றிவடிவங்கொண்டு பூமியையிடந்த விஷ்ணுவல்லை; பிரமாவல்லை; இந்திரனல்லை; தூதுவனுகிய நீயோ என்னேடு பொருந் தொழிலில் வல்லாய், நேற்றைத்தினம் நீ பயின்ற மாயையினல் நம்மரசனுக்கு முன்வந்து சில பழிகளைச் சொல்லி என்றம்பியைக் கொன்றாய், நகரத்தையழித்தாய். யான் அதனை அறிந்திலேன், அதனற் பிழைத்தாய். அன்றெனில் உய்ந்து இங்கே வரப்பெறுவாயோ! பொருது வெற்றிகொண்டு உன்னுயிரை யமபுரத்திற் புகுவிப்பேன்; இது நிச்சயம். 'பிறந்த நாளையிலே வெய்யிலை எறித்த சூரியனைச் சிறையிற் பிணித்தவன் ஒரு ஒற்றுவனைக் கொன்றான்' என்று ஒரு பெரும் பழியைக் கொள்வதன்றி அதனல் யான் புகழடைவேனே! போரைச் செய்துமுடித்த உன்னுடைய துணைவர்களை வென்றேன்; படைத்தலைவர்களை வென்றேன்; சேனைகளையும் அழித்தேன்; தனியே வந்து எதிர்த்த உன்னைக் கொல்வேன்; உன்னை விடுத்த பாலகனையும் உலைவித்து என் சினத்தை முடிப்பேன்; இந்திரனையுஞ் சிறைசெய்வேன்'' என்று இவ்வாறு கூறினன். வீரவாகுதேவர் இவற்றைக்கேட்டு, ''யாவராயினும் தம்மோடெதிர்த்து வந்து போர்செய்யும் வீரர்களை வெல்வதே வலிமையாம். புறங்கொடுப்போரைக் கொல்லுதலே வசையாம். வெற்றியடையும் வீரர் தம்முடைய வலிமையைச் சொல்வாரோ! விரைந்து போர்செய்குதி'' என்றார். அப்பொழுது பானுகோபன் பத்துப்பாணங்களை எடுத்து வில்லிற் பூட்டிச் செலுத்தினன். வீரவாகுதேவர் விரைந்து அத்துணைப்பாணங்களை விடுத்து அவற்றை அறுத்து, பின் நூறு பாணங்களை அவன்மீது விடுத்தார். பானுகோபன் தன்மீதுவந்த பாணங்களைப் பார்த்து அத்துணைப் பாணங்களை விட்டு அவற்றை அறுத்து வீழ்த்தி, வீரவாகுதேவர்மீது ஆயிரம் பாணங்களை விட, அவர் அவற்றை அத்துணைப் பாணங்களினல் அறுத்து, பதினுயிரம் பாணங்களை விடுத்தார். பானுகோபன் அத்துணைப் பாணங்களினல் அவற்றை அழித்து, நூருயிரம் பாணங்களை எய்தான். அவற்றை வீரவாகுதேவர் அத்துணைப்பாணங்களினல் அறுத்து, பத்து லக்ஷம்பாணங்களைப் பானுகோபன் மேல்விட, அவன் அத்துணைப்பாணங்களைத் தொடுத்து அவற்றை மாற்றி, கோடி பாணங்களை ஏவினன். வீரவாகுதேவர் அவற்றை அத்துணைப்பாணங்களால் மாற்றி நூருயிரகோடி பாணங்களைச் செலுத்தினர். பானுகோபன் கூட்டமாகிய எண்ணிறந்த பாணங்களை யுகாந்தகாலத்து மேகம்போலப் பொழிந்தான். இவர் இருவருடைய பாணமழைகள் நெருங்குதலால் பூமியும், திக்குகளும், சமுத்தி

ரங்களும், குலமலைகளும், மேகமண்டலமும், வானுலகமும், சூரியனுடைய தேரும் மறைந்தன. அவர்களுடைய தேர்கள் பூமியும், திக்குக்களும், சமுத்திரங்களும், புறவேலையும், வானுலகமும், அண்டங்களும் ஆகிய எவ்விடங்களிலும் சாரிவட்டமாய்த் திரிந்தன. அவர்கள் பாணங்களை முறைமுறையாகச் சொரிதலால் அவற்றில் மறைவர்; அவற்றை அழிக்கும்பொழுது வெளிப்படுவர். இவ்வாறே ஓர் இமைப்பொழுதில் வேறுவேறாய் நிகழ்கின்ற அவ்விரு வீரரும் உலகமெல்லாம் சூறைபோலச் சுற்றிப் போர்செய்தனர். அவர்கள் செலுத்தும் பாணங்கள் சூரியனுடைய தேரிலும், அதிற் கட்டிய குதிரையிலும், சந்திரனுடைய விமானத்திலும், திக்கு யானைகளிலும், விண்ணுலகத்திற் சஞ்சரிக்கின்ற தேவர்களிடத்திலும் சிதறிச்செல்லும். அவ்வீரர் இருவரும் போர்செய்வது எத்திசை என்று காண்டல் அரிது. அவர்கள் விடுகின்ற பாணங்களனந்தம் மேக மண்டலத்தில் நெருங்கி அதற்குமேலும் வரும். ''நமக்கு இங்கே நிற்க முடியாது'' என்று தேவர்கள் ஓடினர்கள். அப்பாணங்கள் பூமியைக் கிழிப்பன; அண்டங்களைத் துளைப்பன; ஏழு சமுத்திரங்களையும் பருகுவன; புவனங்களைக் கடப்பன; வடவாமுகாக்கினியின் நாவையுந் துணிப்பன; வலிமை மிக்கன; யாவருந் தடுத்தற்கரியன. வீரவாகுதேவரும் பானுகோபனும் இவ்வாறு செய்த பெரும்போரின் வலிமையை யார் சொல்ல வல்லார். மிகுந்த பாணமழைகளை இடைவிடாது செலுத்துதலால் அவர்கள் கையிலுள்ள விற்கள் சக்கரம்போல வளைந்தன.

இவ்வாறு இருவரும் போர்செய்யும்பொழுது, பானுகோபன் வீரவாகுதேவர் விடுகின்ற பாணமழைகளை அழித்து, அவருடைய திருக்கரத்திலிருக்கும் வில்லை விரைந்து நூறு அம்புகளால் அறுத்து, ஆரவாரித்தான். வீரவாகுதேவர் வேறொரு வில்லை யெடுத்து வளைத்து, மிகக் கோபித்து, ஆயிரம்பாணங்களை விரைவிற்றூண்டி, ஒரு முகூர்த்தத்தில் அவன் ஏந்திய வில்லை அறுத்தார். அவன் மிகவுங் கோபித்து வேறொரு வில்லை வளைத்து, ஆயிரம்பாணங்களை வீரவாகுதேவர் வருந்தும்படி அவருடைய மார்பில் விடுத்தான். அவர் ஏழுபாணங்களினால் அவருடைய கிரீடத்தைச் சாய்த்தார். அவன் முன்னளையிலே சூரியனைப் பிடித்தமைபோலப் பிறிதோர் இரத்தின கிரீடத்தை எடுத்துச் சிரசிற் கவித்தான். இதன்முன் வீரவாகுதேவர் ஆயிரம்பாணங்களைச் செலுத்தி அவனுடம்பில் அணிந்த கவசத்தை அழித்தார். அப்பொழுது தருமங்கள் ஆடிப்பாடின; சூரியனும் சிரித்தான்; பானுகோபன் ஆயிரம்பாணங்களை வீரவாகுதேவருடைய நெற்றியில் அழுத்தினன். அவைகள் இரத்தத்தைப் பருகி, உதிக்கின்ற சூரியனுடைய இளங்கிரணங்கள் விரிந்தெழுந் தன்மைபோலக் கூட்டத்தோடுந் தோன்றின. ஆயிரம் பாணங்கள் வந்து தமது நெற்றியில் அழுந்துதலும், வீரவாகுதேவர் சற்றும் நிறையினின்றும் நீங்கிலர்; வலி குறைந்திலர்; அவற்றைக் கரத்தாற் பறித்து வீசினர். பதகனாகிய பானுகோபனுடைய கொடுங்கோல் அழிவின்றி நிற்குமோ! வீரவாகுதேவர் அப்பானுகோபனுடைய முகத்திலும், மார்பிலும், புயங்களிலும், கைகளிலும் தனித்தனி கொடிய ஆயிரம்பாணங்களைத் தெரிந்து ஒரு தொடையில் விடுத்தார். அவைகள் அவயவங்களிலே போய்ப் படுதலும், அவன் தளர்ந்து அவசமடைந்து, கையிலுள்ள வில்லே ஊன்றுகோலாக வறியனாய் நின்

ருன். அவனுடைய உடம்பில் விரைந்து எழும் இரத்தம், தோண்டிய தடாகத்தைப்போல ஊறி மேலே எழுந்தது. வந்து வந்து எழுகின்ற இரத்தவெள்ளம் தன் உடம்பு முழுதையும் மறைப்பவும் மனத்திலே கோபம் மூண்டெழவும் பொலிகின்ற பானுகோபன், அக்கினிப்பிழம்போ டுயர்ந்த மலையையும், அந்திக்காலத்து மேகத்தையும் போன்ருன்.

இவ்வாறு பானுகோபன் போர்செய்யும் வலியிழந்தமையை அவு ணப்படைத்தலைவர்கள் யாவரும் பார்த்து, நால்வகைச் சேனைசமுத்திரங் களோடும் முன்சென்று வீரவாகுதேவரைச் சூழ்ந்து, சூலம் தண்டம் எழு சக்கராயுதம் முதலாகிய படைகளைச் செலுத்தி, சூரியனைச் சூழுகின்ற இருட்டைப்போல அவரை மறைத்தார்கள். வீரவாகுதேவர் வில்லை வளைத்து ஆயிரகோடி பாணங்களை ஒரு தொடையில் விரைவிற்றூண்டி, இருட்படலத்தைக் கிழிக்குஞ் சூரியனைப்போல அவுணர்கள் விடுத்த பாணங்களெல்லாவற்றையுஞ் சிந்தி, பின்னும் அனந்தகோடி பாணங்க ளைத் தவறில்லாதனவாக விட்டு, அவுணசேனைகளெல்லாவற்றையும் சமுத் திரத்தைப் பருகும் வடவாமுகாக்கினிபோல விரைவில் அழிப்பாராயினர். அவர் விடுத்த பாணங்கள் பரிசைகளை யறுக்கும்; வாளைத் துணிக்கும்; வில்லின்காலை அறுக்கும்; மழுவை அறுக்கும்; அசுரர்களுடைய மார்பை யும் புயங்களையும் கைகளையும் கால்களையும் வாய்களையும் சிரங்களையும் வச்சிரமுதலிய ஆயுதங்களையும் துணிக்கும்; யானைகளுடைய துதிக்கை கால் நெற்றி வாய்முதலிய அவயவங்களையும் அறுக்கும்; தேர்களினுடைய உருளைகள் பார்கள் கூம்புகள் முதலிய அவயவங்களையும் பாகனையும் குதிரைகளினுடைய கால்கள் தலைகள் மணிமாலைகள் முதலானவற்றை யும் அறுக்கும். இன்னும் அவைகள் வெட்டிய சிரங்கள், காடு மலை கடல் வானுலகம் முதலாகிய எவ்விடங்களினுஞ் செல்லும். அப்பாணங்களில் ஒவ்வொன்று ஆயிரகோடி சிரங்களை அறுக்கினும் வெறுப்படையாதன வாயின. வரத்திற் சிறந்த அப்பாணங்களிற் சில அவுணவீரர்களுடைய சிரங்களைத் துணித்துக்கொண்டு மகேந்திரபுரத்திற் போய், அவர்கள் மனைவி யர்களுடைய கைகளிலிட்டுச் செல்லும். அவுணவீரர்களுடைய உடல்கள் புரண்டன; இரத்தவெள்ளம் பொழிந்தன; தேருருளைகள் உருண்டன; குதிரைகளும் யானைகளும் மடிந்தன; பிணங்கள் செறிந்தன; கூளிகள் திரண்டன; பருந்துகளும் காக்கைகளும் செறிந்தன; திசைகளெல்லாம் இருண்டன; இறவாதொழிந்த சேனைகள் ஓடின. இரத்தவெள்ளம் பாய்ந்து கடலிற்புக அதனைச் சுறவுகள் குடித்துச் செருக்கின. யமதூதர் கள்வீரவாகுதேவருடைய அம்பினுலிறந்த அவுணர்களுடைய உயிரைக் கொண்டுசென்று காலோய்ந்தார்கள். போர் ஒழிந்தது. சிந்திய அவுண சேனைகளின் செய்தியையும், பானுகோபன் நொந்து தனித்து நின்ற தன்மையையும், முன் பானுகோபனுக்குப் பயந்து சாய்ந்த பூதசேனைகள் பார்த்துப் பார்த்து, ''நந்தலைவருக்குப் பக்கத்தில் நாம் போவோம்'' என்று மீண்டுவந்தன. புறங்கொடுத்த பூதவீரர் யாவரும் மீண்டார். வருந்திநின்ற படைத்தலைவர்கள் வலியடைந்தார். துன்பத்தோடு வீழ்ந்த வர் உயிரோடெழுந்தார். இவர்களெல்லாரும் வீரவாகுதேவருக்குப் பக்கத் தில் வந்து சூழ்ந்தார்கள்.

அப்பொழுது, பாணுகோபன் அயர்ச்சிநீங்கி, உணர்வுதோன்ற உற்றுநோக்கி, அளவின்றி மிகுந்த தன்னுடைய சேனைகளைக் காணுதவனுய், பருந்துங் கழுகும் ஆர்க்கும் பிணக்குவைகளைப் பார்த்து, ஒப்பில்லாத வில் வீரராகிய வீரவாகுதேவர் நின்றதையும் நோக்கி, ''நம்முடைய பக்கத் தில் நின்ற சேனைகளெல்லாவற்றையும் இவனே கொன்ருன்'' என்றெண்ணி, ''ஆகா! ஆரிடை யடங்கிற்று, ஆண்மைக்கும் ஒரெல்லையுண்டோ! வீரன் இவனேயன்றி வேறில்லைபோலும்'' என்று வியந்து பின்னும் ''என்னெதி ரில் வந்து போர்செய்த வீரர்கள் யாவரும் இறந்தவர்களன்றி வெற்றி யைப் படைத்தோரில்லை; வளைத்த வில்லோடு இவனொருவன் நின்ருன், இவனை வெற்றிகொள்வேன், பாணுகோபனுடைய வலிமை சீரிது! சீரிது! ஒருநாழிகைப்பொழுதினுள் கந்தவேளுடைய ஒற்றுவனது சரீரத்தைச் சின்னபின்னங்களாகச் செய்வேன்; அங்ஙனஞ் செய்யாதொழிவேனையின் பின்னர் இவ்வுயிர்வாழ்க்கையை வேண்டேன்; யான் பிறந்தேனுமல்லேன்; என்னுடைய ஒரு வில்லும் யானும் நெருப்பிற் புகுவேன்'' என்று சப தங்கூறி, மனத்திற் கோபாக்கினியும் மானமும் மிக வளர, சிவபெருமா னுக்கு முன்னே சென்ற ஆலாகலவிஷம்போலத் தேரோடு வீரவாகுதேவ ருக்கு முன்னே சென்று, கையிலிருந்த வில்லை முறுக வளைத்து, முத்தலை களையுடைய ஆயிரம்பாணங்களை விடுத்தான். வீரவாகுதேவர் அவ்வியல் பினவாகிய ஆயிரம்பாணங்களை விடுத்து அவற்றை அறுத்து, பின்னும் ஆயிரம் பாணங்களைச் செலுத்த, பாணுகோபன் ஆயிரம் அம்புகளை விடுத்து அவற்றை விலக்கி, பதினுயிரம் பாணங்களைத் தொடுத்து வீரவாகுதேவ ருடைய தேரையும் பாகனையும் குதிரைகளையும் அழித்தான். தேவர்கள் அதனைக்கண்டு துன்பமுற்ருர்கள். வீரவாகுதேவர் வில்லோடு வேருெரு தேர்மேற் பாய்ந்து, பதினுயிரம்பாணங்களைச் செலுத்தி, தேவர்கள் ஆரவா ரிக்கும்படி பாணுகோபனுடைய தேரும் குதிரைகளும் பாகனும் அழிந்து வீழப் பலதுண்டங்கள் செய்தார் பாணுகோபன் வேருெரு தேரில் ஏறி, ஒரு வில்லை ஏந்தி, காதளவும் வளைத்து, எழுநூறுபாணங்களைப் பூட்டி வீரவாகுதேவருடைய மார்பிற் புகும்படிவிடுத்து, ஆர்த்தான். அப்பாண ங்கள் மார்பிற் றைத்தலும், முன்னே சோகத்தை அறிகிலாத வீரவாகுதேவர் துயரத்தின் சுவையையுங்கண்டு, ''இவனுடைய சிரசைக் காகத்திற்கு இடு வேன்'' என்று காலன்போல வெகுண்டு, பதினெலுபாணங்களை யேவி அவனு டைய வில்லையறுத்து, பின்னும் ஆயிரம் பாணங்களினல் அவனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்து, நூறம்புகளால் அவனுடைய மார் பைத் துளைத்தார். பாணுகோபன் அதற்கு வருந்தாமல், பக்கத்திலுள்ள ஒரு தேரில் ஏறினன். அதன்முன் வீரவாகுதேவர் முன்பு மார்பைத் திறந்த வழியால் ஆயிரம் அம்புகளைத்தூண்டி அவனுடைய முதுகிற் றூங்கும் அப்பருக்கூட்டை அறுத்தார். அப்பருக்கூடு அறுதலும்,பாணுகோபன் ''ஆ! வில்வித்தையினல் இவனை வெற்றிகொள்ளுதலரிது'' என்று ஓர் உபாயத் தைக் கருதி, பிரமதேவர் கொடுத்த மோகப்படையைக் கையிலெடுத்து மனத்தினல் வழிபாடுசெய்து, ''நீ சென்று சேனைகளோடு இப்பகைவனு டைய அறிவைக் கெடுத்துக் கொன்று வருவாய்'' என்று சொல்லி விடுத் தான். அப்படை கோபம் மிகுந்து சூரியனுடைய ஒளியைக் கெடுத்து இருட் படலத்தை வீசி, உயிர்களெல்லாம் அஞ்சி மயங்க விரைந்து சென்றது.

அதனுடைய வரவைக்கண்ட பூதர்கள் யாவரும் மிகவும் அஞ்சி நடுங்கி வருந்தி அயர்ந்தார்கள். பூதப்படைத்தலைவர்கள் யாவரும் வெற்றியை யிழந்து வருந்தித் தேம்பினர். இலக்கத்தெண்மரும் அதற்கெதிராகிய படைகள் ஒன்றையுஞ் செலுத்தாது, பாணங்களை விடுத்தார்கள். வீரவாகு தேவர் அப்படை எதிரேவருதலும் ஒன்றையுஞ் செய்யாது, ''இப்படை எந்தப்படையாலழியும்'' என்று சிந்தித்து நின்றார். அப்பொழுது அந்த மோகப்படை ஆலாகலவிஷம்போலச் சென்று எல்லாருடைய உணர்வையு மயக்கியது. இலக்கத்தெண்மரும் பிறரும் கலங்கி வீழ்ந்தார்கள். வீரவாகு தேவர் கருத்தழிந்து, நிலத்தில் நாட்டிய தம்பத்தைப்போல நின்றார். ஆகாயத்தில் நிற்கின்ற பானுகோபன் இதனைக்கண்டு, ''எனக்கு நிகராயினோர் யாவருளர்! நல்லகாரியத்தை நினைத்தேன்'' என்று சிரித்து, வீரவாகு தேவர்முதலிய வீரர்கள் மயங்கியதை யறிந்து மகிழ்ந்து, வெற்றியை யடைந்து, நிகழாநின்ற சிறப்போடு நின்று, ''வீரவாகுவும் மற்றையோரும் வலிமையின்றி உடல்சோர்ந்தார்கள்; இவர்கள் எல்லாரும் இறக்கும்படி வில்வன்மையினல் விரைந்து கொல்வேன்'' என்று கருதி, வில்லைவளைத்து, அறிவுமயங்கிய வீரவாகுதேவர்மீதும் இலக்கத்தெண்மர்மீதும். பூதகணத் தவர் கண்மீதும் பாணங்களைச் சொரிந்து, அவர்களுடைய உடம்புகளைத் துளைத்தான்.

அப்பொழுது, ஆன்மாக்கடோறும் பரமான்மாவாய் வியாபித் திருந்து அருள் புரிகின்ற எம்பெருமானுகிய சுப்பிரமணியக்கடவுள் வீர வாகுதேவர் முதலாயினோர்கள் பானுகோபனல் அறிவிழந்து தீங்குற்ற தன்மையைத் திருவுளத்திலுணர்ந்து, விரைவில் அமோகப்படையை உண் டாக்கி, அதனை நோக்கி, ''நீ நம்மவர்களாகிய வீரவாகுமுதலாயினோர் அறி விழக்கும்படி பானுகோபன் விடுத்த மோகப்படையை யடைந்து அதன் வலிமையைக் கெடுத்து மீண்டு வருதி'' என்று பணித்து விடுத்தருளினர். அப்படைக்கலம் ஆகாயவழிக்கொண்டு சென்று, வீரர்கள் மயங்கிய போர்க் களத்தை யடைந்தது. அடைதலும், பானுகோபன் விடுத்த மோகப்படைக் கலமானது சூரியனுதிக்க நக்ஷத்திரங்கள் மறைந்தாற்போல வலியழிந்து வீரர்களுடைய மனமயக்கந்தீரும்படி விரைந்தோடியது. மயக்கந்தீர்ந்து தேரின்மேல் நின்ற வீரவாகுதேவரும் மற்றை வீரர்களும் அப்படையைக் கண்டு மகிழ்ந்து, அதன் ஆற்றலைக்கண்டு புளக முண்டாக வாழ்த்தி, ''யாமெல்லாரும் பானுகோபனுடைய படைக்கலஞ்செய்த செயலால் மயக்கத்தையடைந்தோம்'' என்பதை நினைத்து, வாயினூற்பேசும் வீரவார்த் தைகளை விட்டு, ''ஏ ஓ'' என்று வெட்கமடைந்து, ''மூற்றறிவுடைய நமது கடவுளாகிய சுப்பிரமணியப் பெருமானவர் நாம் பானுகோபனல் அறிவிழந்தமையைத் திருவுளஞ் செய்து இப்படைக்கலத்தை விடுத்தருளி னர்'' என்று கருதி, அக்கடவுளைத் தியானித்து, அவருடைய திருவருட் டிறத்தை மனத்திலடைத்து வணங்கித் துதித்தார்கள். அப்படைக்கலம் மின்போல மீண்டு சுப்பிரமணியக்கடவுளை அடைந்தது. போர்க்களத்தில் நின்ற வீரர்கள் பானுகோபனோடு போர்செய்ய முயன்றார்கள். வீரவாகு தேவர் நீங்காத மானமும் கோபமும் மூள, ''இந்தப் பானுகோபன் ஒரு மோகப்படையாற் போர்செய்த வலிமை கெடும்படி இப்பொழுதே கொல்வேன்'' என்று எண்ணி, சிவப்படைக் கலத்தை எடுத்தார்.

சுப்பிரமணியக்கடவுள் விடுத்த அமோகப்படை வந்ததையும், தன்னுடைய மோகப்படை மீண்டதையும், வீரவாகுதேவர் சிவப்படைக் கலத்தை எடுத்தமையையும் பானுகோபன் பார்த்து, விம்மிதமுற்று, வீர வாகுதேவரை எதிர்க்காது செருக்கு நீங்கி, அளவில்லாத துன்பமுற்று, இவ் வாறு எண்ணுவான்: ''பகைவர்களுடைய அறிவை மயக்கி நிலத்தில் வீழ்த் தினேன்; எல்லாரும் அறிவுபெற்றெழுந்தார்கள்; ஐயோ இனி நான் செய்வதென்னே! இனிக்கடவுள்செய்கைதான்; என்பகைவன் சிவப்படையை யெடுத்தான்; விடுவானுயின் அது வந்து என்னுயிரைக் கொல்லும், இதனை விலக்கும் வண்ணம் யான் அப்படையை எடுத்துக்கொண்டு வந்திலேன்; ஆதலால் இனி வீரவாகுவை வெல்லுதலரிது; நகரத்துக்குச் சென்று தெய் வப்படைக்கலங்களை மிகவுங் கொண்டுவந்து இவனுடைய வலியைக் கெடுப் பேன் இனி இங்கே நிற்றல் பழுது'' என்று எண்ணி, அருவமாகி, தேரி னின்றுஆகாயத்தி லெழுந்து தன்னகரிற் போயினன்.

பானுகோபன் மறைந்தோடியதை அவனைச்சூழ்ந்த அசுரர்கள் கண்டு ஓடிப்போயினர்கள். அதனைப்பார்த்த தேவர்கள் இன்றை வெற்றி நம்ம தென்று சொல்லி ஆர்த்து, ''வஞ்சனுகிய பானுகோபன் மாயையினுல் மறைந்து போயினன். நாளைக்காலையிலே போருக்கு வருவான். அவனை விரைந்து கொல்லுதிர்'' என்று வீரவாகுதேவர்மீது பூக்களைச் சொரிந்தார் கள். பானுகோபன் அருவமாய் மறைந்து புறங்கொடுத்துப் போதலை வீர வாகுதேவர் பார்த்து, தான் குறித்த எண்ணம் முற்றுப்பெருத மதயானை போலக் கோபத்தோடு நின்றார். பானுகோபன் பயந்து புறந்தந்து ஓடுதலை இலக்கத்தெண்மரும் பூதப்படைத்தலைவருங் கண்டு, ''பானுகோபன் போர் செய்தற்கு வலியில்லாதவனுயினன்; நாம் அவனைத்தொடர்ந்து பிடித்துக் கொண்டு வருவோம்'' என்று கூறினர். அதனைக்கேட்ட வீரவாகுதேவர் ''பேடிகளுடைய சிறுதொழிலைப் பேணி மனம் பயந்து ஓடிய பகைவனை நாம் தொடர்ந்துபோய்க் கொல்லுவது நன்றுகுமோ! இனி அவன் போருக்கு வந்தாற் கொல்வேன், இது நிச்சயம்'' என்றார். அதனைக்கேட்ட யாவரும் ''இது நன்று'' என்றார்கள். பூதவெள்ளங்கள் அவற்றைப் பார்த் துப் புயங்களைத் தட்டி ஆரவாரித்தன. சூரியன் அஸ்தமயனமாயினன். அப்பொழுது, வீரவாகுதேவர் இலக்கத்தெண்மரும் படைத்தலைவர்களும் பூதசேனைகளுஞ் சூழப் போர்க்களத்தை நீங்கி, சுப்பிரமணியக்கடவுள் வீற்றிருக்கின்ற பாசறையை யடைந்து, துணைவர்களோடு அக்கடவுளுடைய சந்நிதியிற்போய் வணங்கி யெழுந்து, அவர் விளுவியருள, பானுகோபன் வந்தெதிர்த்துப் போர்செய்து வலியின்றித் துன்பத்தோடு புறங்கொடுத்த தையும் பிறவற்றையும் விண்ணப்பஞ்செய்தார். முருகக்கடவுள் அவர் மீது கிருபைபாலித்து, ''தம்பியே, நீ இன்றைக்குப் பானுகோபனோடு போர் செய்தமையால் மிகவுந் துன்பமுற்றாய், துணைவர்களோடு உன்னுடைய இருக்கைக்குச் செல்லுதி'' என்று திருவாய்மலர்ந்தருளினர், வீரவாகு தேவர் விடைபெற்றுக்கொண்டு தம்பிமார் முதலாயினோரோடு தமது இருப்பிடத்தையடைந்திருந்தார். இனி மகேந்திரபுரியில் நிகழ்ந்தவற்றைச் சொல்வாம்.

முன்னமே போரிற் புறங்கொடுத்தோடிய பானுகோபன் பெருமிதம் நீங்கி, மனத்திலே துயரமும் பழியும் மானமும் மிகுந்து, சூரபன்மனுடைய கோயிலுக்குப் போகாமல், தன்னுடைய கோயிலுக்குப்போய், ஊறுபாடடைந்தவர்கள்போல வாட்டமுற்று, மந்திரிமாரோடும் சேனைத்தலைவர்களோடும் கலத்தலில்லாதவனுயும், அத்தாணிமண்டபத்திலே சிங்காசனத்தில் இருத்தலையும் பெண்கள்செய்யும் ஆடலையும் பாடலையும் விரும்பாதவனுயும், தான்புணர்தற்குரிய பெண்களுடைய கூட்டத்தை நோக்காதவனுயும், ஊடியபெண்களைக் கூடுதலை நினையாதவனுயும், அன்றிரா நீங்கியபின்பு ''சுப்பிரமணியக்கடவுளையும் அவருடைய படைவீரர்களையும் போரில் வெற்றிகொள்ளவேண்டும்'' என்று தன்மனத்தோடு சாவிக்கொண்டு, பிறிதொரு முயற்சியுமின்றி யிருந்தான்.

பானுகோபன் தன்னுடைய மாளிகையில் இவ்வாறிருக்க, தூதுவர்கள் போரினது நிகழ்ச்சிகளெல்லாவற்றையும் பார்த்துச் சூரபன்மனுடைய கோயிலிற்போய் அவனை வணங்கி, ''மகாராசனே கேட்பாய்: உன்னுடைய குமாரனுகிய பானுகோபன் வீரவாகுவோடு போர்செய்து பல பூதர்களை யழித்து இங்கே மீண்டுவந்தான். யாதேனும் உபாயமுண்டுபோலும். அத்தன்மையை யாமறியோம். மேலே நீ அதனை அறிதி. அறுமுகனுடைய தூதுவனுகிய வீரவாகுவும் சேனைகளோடு பாசறைக்குப் போயினன். இதுவே விளைந்தது'' என்று நிகழ்ச்சிகளையெல்லாம் சொன்னர்கள். ''பகைவர்களை வெல்லுதற்கு வலியில்லாதவனுய் பானுகோபன் வந்தான்'' என்றசொல்லைக் கேட்டமுன் சூரபன்மன் கோபமுடையவனுய், கண்கள் அக்கினி காலவெய்துயிர்த்து மிகவும் சிரித்து, ''என்னுடைய புதல்வர்களும் துணைவர்களும் சுற்றமாயுள்ளோரும் போருக்குப் போகமாட்டார்கள். யான் நாளைக்குச் சேனைகளோடு சென்று கந்தனை வெற்றிகொண்டு விரைவில் மீளுவேன். நீவிர் இப்பொழுது போங்கள்'' என்றுன். தூதுவர் வணங்கிப் போயினர். சூரபன்மன் பிறிதொன்றையுங் கருதாது பகைவர்களை வென்று கீர்த்தியடைதலில் அவாவுடையனுயிருந்தான். அற்றை இராக்காலமானது, வலிமையோடு போர்செய்து வெற்றிகொள்ளும்படி எண்ணுகின்ற வீரர்களுக்கெல்லாம் நெடியதாயும், வலிமையில்லாத மனமுடையோர்களுக்கெல்லாம் குறுகியதாயுங் கழிந்தது.

திருச்சிற்றம்பலம்.

## இரண்டாநாட்சூரபன்மன்யுத்தப் படலம்.

சூரியோதயமாவதற்குமுன் சூரபன்மன் நித்திரைவிட்டெழுந்து, நித்திய கருமத்தை முடித்து, அத்தாணிமண்டபத்தை யடைந்து, சிங்காசனத்திலிருந்து, பானுகோபன் முதலைப் போரிலடைந்த வசையை நினைத்து, மனத்திற் பெருஞ்சின மூள, ''இனிமேற் போருக்கு யாரையும் விடுக்கிலேன். யானே சேனைகளோடு சென்று பகைவர்களுடைய வலிமையை யழித்து வெற்றிகொள்வேன்'' என்றெண்ணி, அநேகம் ஓற்றுவர்களை அழைத்து, ''நிலவுலகத்தைச் சூழ்ந்த சமுத்திரங்கடோறும் இருக்கின்ற நம்முடைய சேனைகளைக் கொண்டு வாருங்கள்'' என்று பணித்தான். ஆயிர

கோடி ஒற்றுவர்கள் வணங்கி எங்குஞ் சென்று சென்று சூரபன்மனுடைய பணியைச் சொன்னார்கள். முன்னுளிலே பல போர்களையும் வென்ற இலக்கம் வெள்ளத்தின்யிக்க படைவீரர்கள் யானை குதிரை தேர்களில் ஏறிக் கொண்டு சூலம் கணிச்சி தண்டம் குலிசம் முதலாகிய பலவகைப்படைகளை யேந்திவந்து மகேந்திரபுரியைச் சூழ்ந்து ஆரவாரித்தார்கள். சூரபன்மன் மேருமலைபோன்ற ஒரு சிகரத்திலேறி அந்தச் சேனைகளெல்லாவற்றையும் பார்த்து, முன்பு மனத்திற்கொண்ட மிகுந்த துயரம் முழுவதையும் நீக்கி, வலிமைபெற்று பகைவர்களை வெற்றியடைந்தவன்போல மகிழ்ந்து நின்றான். பின்பு அவன் போருக்குச் செல்லக்கருதி, அச்சிகரியினின்றுமிறங்கி, வில் முதலாகிய ஆயுதங்களையும் தெய்வப்படைக்கலங்களையும் எடுத்து, கையிற் கோதையைக் கட்டி, விரலிற் புட்டிலைச்சேர்த்து முதுகில் அப்பருக் கூட்டைத் தூக்கி, குடுமியிற் றும்பைமாலையைத் தொடுத்து, இது மந்தரமோ மேருவோவென் றையுறத்தக்க ஒரு தேரிலேறி, யானை குதிரை தேர்கள் காவலாகப் பின் செல்லவும் அவுணவீரர்களும் அமைச்சர்களும் அயலிற் செல்லவும் கோயிலுள்ள வீதிகளைக் கடந்து, கோபுரவாயிலின்பக்கத்தில் வந்தான். அவனுடைய வரவைக்கண்ட இலக்ஷம்வெள்ளம் அவுணசேனைகளும் சூரியனுடைய வரவைக்கண்ட உலகம்போலச் சூழ்ந்து ஆரவாரித்தார்கள். சிங்கமுகாசுரனுடைய குமாரனுகிய அதிசூரனும் தாரகாசுரனுடைய குமாரனுகிய அசுரேந்திரனும் சூரபன்மனை வந்தடைந்தார்கள். சூரபன்மன் அவர்களை நோக்கி, "சமுத்திரம்போல நிறைந்த நீர் நிலையானது கரையில்லாத விடத்து உடைந்துபோம். அதுபோல, சேனைகள் பல வுளவேனும் பாதுகாக்கும் அரசரில்லாதவழிப் போரில் நிற்க மாட்டாவாயழியும். ஆதலால், நீங்களிருவரும் நம்முடைய மிகுந்த சேனைகளுக்குத் தலைவராய் முன்பு செல்லுதிர்" என்றான். அவர்கள் நன்றென்று அவனை வணங்கித் தங்கள் தேர்களிலேறி, நால்வகைச் சேனைகளையும் அணிவகுத்துச், சேனைத்தலைவர்களாய்ச் சென்றார்கள். இலக்ஷம்வெள்ளஞ் சேனைகளும் அதனைப்பார்த்து மகிழ்ந்து, அட்டமா நாகங்களும் ஆதிசேடனும் பொறையாற்றுமலிரங்கப் போர்க்களத்தைநோக்கிச் சென்றன.சூரபன்மன் சதுரங்கசேனைகளும் சேனைத்தலைவர்களும் தன்னைச் சூழ்ந்து செல்ல, ஆலாகலவிஷமானது சமுத்திரத்திலே வடவாமுகாக்கினி சுற்றச் சென்றாற்போலத் தேவர்கள் மருளும்படி தேரின்மேலேறிச் சென்றான். தொண்டகம், துடி, பம்பை, தூரியம், முருடு, கொம்பு, படகம் முதலாகிய பலவகை வாத்தியங்களும் முழங்கின. தேர்களினெலியும் யானைகளினெலியும், குதிரைகளினெலியும், கொடிகளினெலியும், வீரர்களணிந்த வீரக்கழல்களினெலியும், வாத்தியங்களினெலியும் எட்டுத் திசைகளையும் எல்லா வுலகங்களையும் விழுங்கி யெழுந்தன. அவுணசேனவெள்ளஞ் செல்லும்பொழுது எழுந்த துகள் ஆகாயத்திற் செறிதலால், சூரியன் முன்பு சந்திரனைப் போல விளங்கி, பின்பு நக்ஷத்திரம்போலாகி மறைந்தான். அத்துகள் சென்று பொன்னுலகத்தையும் பூவுலகமாக்கியது. தேர்களின்மீதும் யானைகளின் மீதும் உள்ள கொடிகள் வானுலகிற்போய்க் கங்கையிற்றேய்ந்து, பூமியிலே திவலைகளைச் சிதறி ஆடிச் சுற்றுதல் "சூரபன்மன் இன்றைக்கு அழிவான்" என்று அழுதலைப்போன்றது. வெண்மை முதலிய பல நிறங்களையுடைய குடைகளும், பிலிக்குஞ்சங்களும் எங்குஞ் செறிந்து சூரியகிரணங்களின் வரவைமாற்றி, ஊழிக்காலத்திருளை யுண்டாக்கின.

இவ்வியல்புகள் நிகழச் சூரபன்மன் சேனைகளோடு ஆகாயமார்க்க மாய்த் தேரிலேறிச்செல்ல, இந்திரன் அதனைத் தெரிந்து ஓடிப்போய் முருகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே, முன்னாளில் யாகாக்கினியிலே சிவபெருமான் உண்டாக்கிக்கொடுத்த அவுணசேனை களோடு சூரபன்மன் போர்செய்யும்படி விரைந்து வருகின்றான். அவனை எதிர்த்துச்சென்று வெற்றிகொண்டு எங்களுடைய செல்வங்களை ஈந்தரு ளும்'' என்றான். சுப்பிரமணியக்கடவுள் அவ்விந்திரனுக்கு அருள்புரிந்து, தேர்ப்பாகனாகிய வாயுவை நோக்கி, ''நம்முடைய தேரை விரைந்து கொண்டுவருதி'' என்றார். அவன் நன்றென்று தேரைக் கொண்டுவந்து திருமுன்பு விடுத்தான். அவர் பிரமாவும் விட்டுணுவும் பூக்களைத் தூவித் துதிக்கத் தேரின்மீதிவர்ந்தார். சூரபன்மனோடு போர்செய்யும்படி சுப்பிர மணியக்கடவுள் செல்லுதலைத் தேவர்கள் சொல்லக்கேட்ட பூதர்கள் கடலுமஞ்ச ஆர்த்துக் கிளர்ந்து வந்தார்கள். அவர்கள் செல்லும்பொழுது பூதூளி எழுந்தது. தக்கை, உடுக்கை, சல்லரி, தடாரி முதலிய வாத்தி யங்களைக் கோடி கணநாதர்கள் ஒலித்தார்கள். நாரதமுனிவரும், கருட ரும், கின்னரர்களும் இசை பாடினர். தேவர்களும் முனிவர்களும் திருவடி களைப் பலமுறை வணங்கிக் கூத்தாடினர்கள். வீரவாகுதேவரும், எண்ம ரும், இலக்கம் வீரரும், படைத்தலைவர்களும் போர்முயற்சியோடு பூத சேனைகளுக்கிடையே சென்றார்கள். பூதசேனைகளும் வீரவாகுதேவர் முத லாயினோரும் இவ்வாறு செல்ல, சுப்பிரமணியக்கடவுள் மாணிக்க மணிகள் இழைத்த தேரின்மேலிவர்ந்து, அசுரர்களுடைய போர் மூனையை யடைந்தார். அவுணசேனைகள், வடவாமுகாக்கினியின் வலிமை யைக் கெடுப்பேன் என்று கடல் பக்கத்தில் வந்து சூழ்ந்தாற்போல, வந்து சூழ்ந்தார்கள். பூதர்கள் கிளர்ந்து உரப்பி அவ்வவுணசேனைகளை அடர்த் தார்கள். அவர்களுந் தாக்கினர்கள். இருதிறத்தார்க்கும் பெரும்போர் மூண்டது. பூதர்கள் அவுணர்கள்மேலே மரங்களையும், மலைகளையும், தண்டம் கழு முள் சக்கரம் வேல் முதலிய படைக்கலங்களையும் எறிந் தார்கள். அவுணர்கள் பூதர்கள்மீது அம்பு, கணிச்சி, தண்டு, சக்கரம், முத்தலைச்சூலம் முதலாகிய படைகளைச் சிதறினர்கள். பூதர்கள் யானை களையும் குதிரைகளையும் பற்றிப் பூமியில் அடிப்பர், திக்குக்களிலெறிவர், விண்ணிற் சுற்றுவர், கிழிப்பர், உடலையும் பிடரையும் முறித்துச் சிந்து வர். ஆயிரந் தேர்களை யெடுத்து ஆயிரம் யானைகளை இறக்கும்படி மோது வார். ஆயிரம் யானைகளை எடுத்து எற்றிப் பதினாயிரம் குதிரைகளைக் கொல்வார். பதினாயிரம் குதிரைகளை எடுத்து அடித்து ஆயிரகோடி அவு ணர்களைக் கொல்வார். அவுணர்கள் யானை குதிரை தேர்களிலேறிச் சென் றும், பதாதிகளாய்ச் சென்றும், பூதர்களை வளைந்து பாணங்களையும் பிற படைக்கலங்களையும் விடுத்தும், மலைகளைச் சிந்தியும், பூதர்களுடைய கை தலை முதலிய அவயவங்களை அழித்துப் போர்செய்வார். இவ்வாறு இரு திறத்துச் சேனைகளும் மாறுபட்டுப் போர்செய்யும்பொழுது, பூதப்படைத் தலைவரால் அவுணசேனைகள் மிகவும் அழிந்தன. அவுணப் பிணக்குவைகள் இரத்தவெள்ளத்தில் மலைபோலச் சென்று சமுத்திரத்தைத் திடராக்கின. ''நிர்மலராகிய சுப்பிரமணியக்கடவுள் காண இறந்தோம் யாமினிப் பிறப்ப தில்லை'' என்று மகிழ்ந்து கூத்தாடுமாறுபோல அனந்தகோடி உடற்குறை

கள் கூத்தாடின. அவுணப்படைகள் அழியும்படி இவ்வாறு போர்செய் கின்ற பூதசேனைகளின் வலிமையை சேனைத்தலைவனும் சிங்கமுகாசுரனு டைய மகனுமாகிய அதிசூரன் பார்த்து, வெகுண்டு, இரண்டாயிரங் குதிரைபூண்ட ஒரு தேரின்மேல் ஏறி, மருங்கில் ஆயிரமாயிரம் சேமத் தேர்கள் செல்ல வலிமையோடு வந்து, வில்லைவளைத்துப் பாணங்களைச் செலுத்தி, எதிர்த்தவர்களைத் துணித்துநின்றான். பூதர்கள் அவனைக்கண்டு, ''ஒரு வீரன் ஒரு வில்லோடு தனியேவந்து மிகுந்த போரைச் செய்கின் றான். வில்வீரன் இவனே'' என்று புகழ்ந்தார்கள்.

விட்டுணுவினுடைய சக்கரப்படையை உண்டுமிழ்ந்தவரும் போரில் வலியருமாகிய உக்கிரர் என்னும் பூதப்படைத்தலைவர் அதிசூரனுடைய போரைக்கண்டு, கண்கள் புகையையும் அக்கினியையும் காலக் கோபித்து, ஒரு தண்டப்படையை எடுத்து அவனுக்கெதிரே விரைவிற் சென்று, மார் பிலே எறிந்தார். அவுணர்கள் அதிசூரன் இறந்தான் என்று அஞ்சினர் கள். அத்தண்டம் அவனுடைய மார்பிலுள்ள சட்டையை அழித்தது. அதிசூரன் கோபித்து, ''இப்போர்களத்தில் இவனைப் பலியூட்டுவேன்'' என்று நூறுயிரம் பாணங்களை அவர்மீது ஒரு தொடையில் எய்தான். அவைகள் அவர்மேற்படுதலும் இரத்தவெள்ளம் பெருகியது. உக்கிரர் துன்பமும் கோபமும் அடைந்து ஒரு மலையைப்பிடுங்கி, அதிசூரனுடைய தேரில் எறிந்தார். தேர் பொடியாயிற்று. அதிசூரன் பிறிதொரு தேரின் மேற்பாய்ந்தான். அத்தேரிற் கட்டிய குதிரைகள் பதைத்து வீழ்ந்தழியும்படி உக்கிரர் உதைத்தார். அதிசூரன் மிகவுந் துன்பமுற்று, ''இந்தச் சிறியனை அழிப்பேன்'' என்று நூறு பாணங்களை அவருடைய திருமேனி மறையும் படி தூண்டினான். அவைகள் தமக்கெதிரே வருதலை உக்கிரர் கண்டு,தண் டாயுதத்தினால் வீசிநின்று ஆரவாரித்தார். அதிசூரன் விரைவில் வேறொரு தேரில் ஏறி, தான் செலுத்திய பாணங்களினால் ஓர் ஊறுபாடுமடையாத உக்கிரரைப் பார்த்து, ''தெய்வப்படைக்கலங்களை விடுத்து உன்னை அழிப் பேன். இனி நீ இறந்தாய்'' என்று கூறி, அக்கினிப்படைக்கலத்தை எடுத்து மனத்தாற் பூசித்து அவர்மேல் விடுத்தான். திசைகள்தோறும் அக்கினி சிந்தும்படி வருகின்ற அப்படைக்கலத்தின் வீரத்தை உக்கிரர் நோக்கி, சிவகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடித்தாமரை களை அன்போடு தியானித்துத் துதித்தார். எவர்க்கும் முதல்வராகிய அக்கடவுள் அவருக்குத் திருவருள் புரிந்தார். உக்கிரர் தமக்கெதிரே வரு கின்ற அக்கினிப் படைக்கலத்தைப் பிடித்துக் கைவி, கண்கள் நெருப் புச் சிதற விழுங்கினர். அதிசூரன் அதனைக்கண்டு வருணப் படைக்கலத் தையும் யமப் படைக்கலத்தையும் செலுத்த, அவற்றையும் பற்றி விழுங் கினர். பின் வாயுப்படைக்கலத்தையும் செலுத்த அதனையும் விழுங்கினர். நினைக்கும்பொழுது தவமேயன்றி உயர்ந்தபொருள் வேறியாது? அதிசூரன் அதன்பின் பிரமப்படைக்கலத்தை விடுப்ப, அதனையும் பற்றி விழுங்கினர். அதன்பின் விட்டுணுப்படைக்கலத்தை யேவ அது செல்லுதலும் அதனை யும் விரைந்து கையாற்பற்றி விழுங்கிநின்றார். அப்பொழுது அதிசூரன் ''யான் இனிச் செய்வது என்னை? இவன் மும்மூர்த்திகளுள் ஒருவனே! அவர்களுள் ஒருவன் அல்லனையின், இதனைச் செய்யவல்லவர் வேறு யாவர்!

இவன் அவருள் ஒருவன் ஆவன் ஆவன்!'' என்று கூறினன். அவுணர்கள் உக்கிரருடைய ஏற்றத்தைக்கண்டு, யமனைக்கண்ட உயிர்போலக் கலங்கி ''யாம் இனி என்செய்வோம்!'' என்றார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் இச்செயலைப் பார்த்து, அங்கே போரைப் பார்த்துநின்ற பிரமாவை வணங்கி, ''எங்களுடைய படைகளும் உம்முடைய படையும் விஷ்ணுவினுடைய படையும் தமக்குமுன் அணுக இப்பூதப்படைத்தலைவர் பிடித்து விழுங்குமாறு என்னை? சொல்லும்'' என்று கேட்க, பிரமா சொல்வார். இந்திராதிதேவர்களே கேண்மின்கள். ''இவர் சிவபெருமானிடத்தே வரம்பெற்றவர். எம்பெருமானுகிய முருகக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்துக்கொண்டு எந்த வலிமையையு மாற்றுபவராய்ப் போருக்கு வந்தார். நம்மை ஆளாக உடைய சிவபெருமானது திருவருட் பெரும்பேற்றையுடையவர். அவருடைய திருவடிகளைத் திரிகாலங்களிலும் வழிபடுதலாகிய முத்தியைப் பெற்றவர். இவர் எம்மிலும் பெரியவர், என்றும் அழிவில்லாதவர். விட்டுணு செலுத்திய சக்கரப்படையை விழுங்கிய ததீசிமுனிவனிலும் மிகுந்த வலிமையையுடையவர். வெற்றியிற் சிறந்தவர். உக்கிரர் என்னும் பெயரையுடையவர். இவர் நம்முடைய படைக்கலங்களெல்லாவற்றையும் உண்டதோர் வியப்போ. அளவிறந்த அண்டங்களை யெல்லாம் விரைவில் அழித்து ஆக்கவல்லவர். இவர்கொண்ட புகழ் சொல்லத் தொலையுமோ!'' என்று பிரமதேவர் கூறினர். அவற்றைக் கேட்ட தேவர்கள் நன்றென்று சிரசையசைத்து, ''இவருக்கு இன்னும் பெரிய வெற்றியுண்டாகுக'' என்று வாழ்த்தினர்கள். ஆகாயத்தில் இது நிகழ்ந்தபொழுது, அதிசூரன் உக்கிரரை நோக்கி, ''உன்னைக்கொல்வேன்; இதனைக் குற்றமுடைய மற்றைப் படைக்கலங்கள்போல எண்ணற்க; சிவப்படைக்கலத்தை விடுவேன்'' என்று கூறி, மந்திரத்தோடு பூசை முதலியவற்றைச் செய்து, மிகுந்த கோபத்துடன் அப்படைக்கலத்தைச் செலுத்தினன். அது சங்காரகருத்தாவாகிய உருத்திரமூர்த்தியினுடைய உருவம்போலத் தோன்றி நஞ்சையும், பாம்பையும், யமனையும், பூதங்களையும், பேய்களையும், ஆயுதங்களையும், அக்கினியையும் உண்டாக்கி, எவ்வுலகமும் அஞ்சும்படி நடந்தது. அது வர, உக்கிரர் தமது கையிலிருந்த சக்கரப்படையை ஒழித்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி உச்சரித்து, சிவபெருமானுடைய திருவடிகளை அன்பிலெடு வணங்கித் தியானித்துக் கொண்டு நின்றார். நிற்றலும், அப்படை, ''இவன் வணக்கஞ்செய்கின்றான், தோத்திரஞ்செய்கின்றான், நிராயுதனாய் நிற்கின்றான், ஆதலால் யான் இவனைக் கொலைசெய்யேன்'' என்று எண்ணி விரைவில் மீண்டு சென்று, ''இப்படை நிராயுதர்மேல் விடுக்கின் அவரை யடையாமல் நம்மிடத்தில் வந்துவிடும்'' என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்து கொடுக்க, அதிசூரன் பெறுதலால் கொடுத்த அக்கடவுளை அடைந்தது. அதிசூரன் அதனைக் கண்டு, ''இவன் பரமசிவனே!'' என்று சந்தேகித்து நடுங்கி நின்றான். பூதர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். அவுணவீரர்கள் கண்ணீர்விட்டழுது ஓடினர். ஓடுகின்ற அவுணர் கூட்டங்களை ''நீவிர் ஏக்கத்தை விடுமின்'' என்று அதிசூரன் சொல்லி, தேரினின்றும் இறங்கி, ஒரு தண்டத்தை எடுத்து உக்கிரருடைய தோளில் அடித்தான். அவர் வெகுண்டு அத்தண்டாயுதத்தைப் பறித்து அவனுடைய

மார்பிற் பதைக்கும்படி அடித்தார். அவன் நிலத்தில் வீழ்ந்தான். யமன் உயிரைக் கொண்டுபோயினன்.

இறந்துவீழ்ந்த அதிசூரனெத் தாரகாசுரனுடைய குமாரனுகிய அசுரேந்திரன் கண்டு, நஞ்சுபோலக் கொதித்து, அக்கினியெழச் சிரித்து, பூதர்கண்மேற் சென்று, பெரிய ஒரு வில்லை வளைத்து நாணெலி செய் தான். அதனைக் கேட்டுப் பூவுலகமும் வானுலகமும் குலைந்தன; உயிர்க ளெல்லாம் பதைத்தன. பூதர்கள் தண்டங்களையும் மலைகளையும் மரங்களை யும் அவன்மீது விடுத்தார்கள். அவன் பாணமழைகளைச் சொரிந்தான். அவைகள் அவற்றை அழித்து அப்பூதர்களுடைய தலை கை கால் முதலிய அவயவங்களெல்லாம் இரத்தநீர் வடியும்படி உடம்பில் அழுந்தின. அசு ரேந்திரன் பின்னும் பாணங்களைச் சொரிந்தான். கை கால் முதலிய அவய வங்கள் வெட்டுண்டு பூதர்களிற் பலர் இறப்ப, பூதப்படைத்தலைவர்களிற் கனகர் என்பவர் வந்தெதிர்ந்தார். அவர்மீது அசுரேந்திரன் கூரிய ஒரு பாணத்தை அழுத்தினன். அவர் சொரிகின்ற இரத்தநீரோடு சூரியன் மீது வருகின்ற கேதுவைப்போல அசுரேந்திரனுடைய தேரிற் பாய்ந்து, பாகன் இறக்கும்படி உதைத்து, அவனுடைய வில்லின் நாணைப் பல்லினுற் கீறி, பூமியில் இழிந்து, ஒரு மலையைப் பறித்து, அசுரேந்திரன்மீது எறிந் தார். அவன் அழிந்த தன் வில்லை நீக்கி வேறோர் வில்லை எடுத்து வளைத்து, எட்டுப்பாணங்களைத் தொடுத்து, அறைகூவி அம்மலையை அழித்து, ஆயிரம் பாணங்களைக் கனகருடைய புயங்களில் அழுத்தினன். அவைகள் வந்து படு தலும், அவர் துன்பத்தோடு நின்றார். அசுரேந்திரன் வேறொரு பாகனைத் தேரில் நிறுத்தி, பூதர்கண்மீது போருக்குப் போயினன். அப்பொழுது உன்மத்தர் என்னும் பூதப்படைத்தலைவர் ஒரு மலையை அகழ்ந்தெறிந்து, ஆரவாரித்தார். அம்மலை வந்து தாக்குதலால் தேரிற்கட்டிய குதிரைகள் அழிதலும், அசுரேந்திரன் பிறிதொரு தேரின்மேற் பாய்ந்து, அளவில் லாத பாணங்களைத் தூண்டினன். உன்மத்தர் அப்பாணங்களினுற் றம் முடம்பில் இரத்தநீர் வடிய மரணமடையாமல் மயங்கியிருந்தார். அப் பொழுது மந்தர் என்னும் பூதப்படைத்தலைவர் அசுரேந்திரனுக்கெதிரே வருதலும், அவன் மந்தர்மீது பத்துப்பாணங்களை இரத்தம் வடியும்படி செலுத்த, அவர் கொதித்து, ஒரு பெரியமலையைப் பறித்தெறிந்தார். அசுரேந்திரன் அதைப் பார்த்துச் சென்று, மார்பில் ஏற்றலும், அம்மலை தெறித்து வந்தவழியே திரும்பி மந்தர்மாட்டுச் சென்றது. அசுரேந்திரன் அவர்மீது ஒன்றுபோல ஆயிரம் பாணங்களை விடுத்தான். அவற்றினுல் மந்தரயர்ந்தார். அசுரேந்திரனைச் சிங்கர் என்னும் படைத்தலைவர் எதிர்த்து, ஒரு பெரியமலையை எடுத்து மார்பிலெறிய, அவன் ஒரு பாணத்தினுல் அழித்தான். சிங்கர் போர்க்களத்திற் பகைவர்கள் விடுத்த ஒரு தண்டை யெடுத்து எறிந்தார். அசுரேந்திரன் அதனை விலக்கி, நூறுபாணங்களை அவர்மீது அழுத்தினன். சிங்கருந் தோற்றார். மற்றைப் பூதப்படைத் தலைவர்கள் யாவரும் அசுரேந்திரனேடு போர்செய்து தோற்றனர். அவன் பாணங்களைப் பொழிந்து மற்றைப் பூதர்களை அழித்தான். அப்பொழுது இலக்கம் வீரர்களுள், தண்டகர் என்பவர் மிகுந்த துன்பத்தோடு இவற் றைப் பார்த்து, தன் வில்லைவளைத்து, ஆயிரம்பாணங்களை அசுரேந்திர னுடைய முகத்திற் புகும்படி விட, அவன் துன்பமுற்று இரங்கி, வெகுண்டு,

வில்லைவளைத்து, எட்டுப்பாணங்களைத் தண்டகருடைய நெற்றியிற் செலுத் திஞன். அவர் இரத்தம்வடிய இளைத்துத் தேரின்மேல் நின்ருர். அவரு டைய தம்பியாகிய சோமுகர் அசுரேந்திரனுக்கெதிர் சென்ருர், அசுரேந் திரன் அவருடைய மார்பில் நூறுபாணங்களை அழுத்திஞன். அவர் கவன்று, வில்லைவளைத்து, விரைவில் ஆயிரம்பாணங்களைத் தூண்டி, அசு ரேந்திரனுடைய தேரையும் பாகனையும் அழித்தார். அவன் வேருரு தேரிற்பாய்ந்து, ஒரு வேற்படையை யெடுத்து, ''விரைவில் இவனுடைய உயிரை உண்குதி'' என்று விடுத்தான். அது அவர் மார்பிற்படுதலும் வாடி இளைத்து மயங்கித் தேரின்மீதிருந்தார். அப்பொழுது, அவருக்குத் தம்பியும் விஷ்ணுவையொத்த வலிமையுடையவரும் ஆகிய விசயரென்ப வர் விரைந்து வந்து, வில்லைவளைத்து ஆயிரம்பாணங்களை விடுத்து, அசு ரேந்திரனுடைய தேர்ப்பாகனை அழித்து, அவன் கைவில்லையும் நாணையும் துணித்தார். அசுரேந்திரன் தன்னுடைய தேர்ப்பாகன் இறத்தலும் முனிந்து, அறுந்த நாணேடுகூடிய விற்றுணியை மத்திகையாக ஏந்தி, தன்றேர்ப்பாகனைப்போல விளங்கி, பின்பு ஒரு பாகனைத் தேரில் நிறுத்தி, ஒரு தண்டத்தை எடுத்து விசயர்மீதெறிந்தான். அதன் வரவைக்கண்ட விசயர் எல்லையில்லாத பாணங்களைத் தூண்டி விட விட, அத்தண்டா யுதம் அவற்றையெல்லாந் துகள்செய்து, விசயருடைய மார்பில் வந்து பட்டது. அவர் பதைத்து வில்லைக் கைவிட்டு இரத்தஞ்சொரிய வீழ்ந் தார். அப்பொழுது மற்றை இலக்கம் வீரர்கள் பாணங்களைப் பொழிந்து அசுரேந்திரனேடு போர்செய்து, எல்லாரும் தோற்ருேடிப்போயினர்.

அதனை வீரவாகுதேவர் கண்டு, துன்பத்தோடு விரைந்து வந்து, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளைத் துதித்து, ஒரு வில்லை வளைத்து, தேவர்கள் புகழவும் அவுணர்கள் அயரவும் நாணெலி செய்து, பாணங் களைச் செலுத்தி, அசுரேந்திரனை மறைத்தார். அவனுடைய உடம்பெங்கும் இரத்தம் வெளிப்பட்டது. அவன் ஒரு வில்லை வளைத்து, வீரவாகுதேவர் மீது ஆயிரம் பிறைமுக பாணங்களை அழுத்திஞன். அவருடைய திரு மேனியிலும் இரத்தம் உண்டாயிற்று. இருவரும் பாலசூரியர்களை ஒத் தார்கள். அசுரேந்திரன் ஏழு பாணங்களை விடுத்து வீரவாகுதேவருடைய வில்லைத் துணித்தான். அவர் மற்ருெரு வில்லை வளைத்து, நஞ்சுபாய்ச்சிய ஆயிரம் பாணங்களை இலக்குத் தப்பாமற் செலுத்த, அவைகள் சென்று அசுரேந்திரனுடைய வில்லை அறுத்து, பாகனுடைய உயிரையுண்டு, தேரை யும் குதிரைகளையும் அழித்தன. அவன் வெற்றியின்றி வறியனய் வேருரு தேரில் ஏறிஞன். தேவர்கள் அதனைக்கண்டு ''வீரவாகுதேவர் அசுரேந் திரனை இனிப் போர்செய்து வெல்வார்போலும்'' என்று புகழ்ந்தார்கள். [அவர் வெல்லுதல் அரிய ஓரற்புதமோ! அசுரேந்திரன் யானையின் புதல் வன். இவர் சரபத்தின் புதல்வர்] பிறிதொரு தேரிற் பாய்ந்த அசுரேந் திரன் வேருரு வில்லை வளைத்து, நூறு பாணங்களை விடுத்து, வீரவாகு தேவருடைய தேரை அழித்தான். அவர் கோபித்து வானில் எழுந்து அறுமுகக்கடவுளைத் துதித்து, ஆர்த்து, வாட்படையை உறையினின்றுங் கழற்றி, அசுரேந்திரனுடைய தேரிற் குதித்து. அவனுடைய கையில் ஒன்றை வெட்டினர். வெட்டுண்ட கையிலிருந்து இரத்தம் வடிதல் நீல மலையில் ஒரு புடையில் இருந்த ஒரு கரும்பாம்பு செம்மணியை உமிழ்ந்

தாற் போன்றது. ஒரு கை வெட்டப்படுதலும், அசுரேந்திரன் கோபித்து ஒரு தண்டாயுதத்தை எடுத்து அவர்மீது மோதினன். அவர் விரைந்து ஒரு பாதத்தினல் அவனுடைய சிரசில் உதைத்து, வானில் எழுந்து சென்றார். இசுரேந்திரன் அவரைத் தொடர்ந்து வாட்படையை ஏந்தி வானில் எழுந்தான். அவர் கோபித்து, தமது வாட்படையினல் அவனுடைய தலையை அறுத்தார். தலையும் உடலும் பூமியில் வீழ்ந்துருள அவனுடைய உயிர் நீங்கியது. விண்ணுலகத்திற் செறிந்த தேவர்கள் ஆரவாரித்தார்கள். இதனை அறிந்த அசுரசேனவெள்ளங்கள் ஓடின.

அதிசூரன் அசுரேந்திரன் என்னும் குமாரர்கள் இருவரும் இறந்ததனையும், பக்கத்திற் போர்செய்து நின்ற சேனைகள் ஓட்டெடுத்தமையையும், சூரபன்மன் பார்த்து, வடவாமுகாக்கினி உலகங்களையெல்லாம் எரிக்க எழுந்த தோற்றம்போல மிகுந்த கோபம் மேற்கொண்டு, "போர் செய்கின்ற பகைவர்களை விரைந்து கொல்வேன்" என்று எண்ணி, தேரில் விரைந்து வந்து பூணிட்டிறுக்கிய வில்லை வளைத்து, நகத்தால் நாணேதையைக்காட்டினன். பூதகணங்கள் அதனைக் கேட்டலும், வலிமையும், வீரமும் அழிந்து, உடலும் சிரசும் நடுங்க, மரங்களையும் மலைகளையுஞ் சிந்தி, பலர் எங்குஞ் சிதறியோடினர். ஒழிந்தோரிற் சிலர் வீழ்ந்தார்; சிலர் பதைத்து நின்றார்; சிலர் வீழ்ந்திறந்தார்; சிலர் மயங்கினர். பன்னிரண்டு வருஷகாலம் அந்த வில்லினுடைய நாணெலி ஒழிந்திலது. அவ்வொலியைக் கேட்டு விட்டுணு சிரசைத் துளக்கினர்; பிரமாவும் இந்திரனும் யமனும் அஞ்சினர்கள்; தருமம் அஞ்சின; பஞ்சபூதங்களும் அஞ்சின; சிவராசிகள் அஞ்சின. [இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களும் அஞ்சி அங்கே நிற்கலாற்றாது இரிந்தோடின என்றால், அஞ்சு பூதங்கள் அஞ்சுவது ஓர் அற்புதமோ!] பூதசேனவெள்ளங்கள் இவ்வாறு அழிதலும், பூதப்படைத் தலைவர் நூற்றெண்மரும் அதனைப்பார்த்து, சூரபன்மன்மீது மலைகளையும் மரங்களையும் மழைபோலச் சொரிந்தார்கள். அப்பொழுது அவன் பத்து நூருயிரம்கோடி பாணங்களை முறைமுறையாகச் செலுத்தி, தன்மீது வருகின்ற மலைகளையும் மரங்களையும் அழித்து, பூதப்படைத் தலைவர்களுடைய முடிகளையும் அடிகளையும் முகங்களையும் புயங்களையும் மார்புகளையும் கைகளையும் மற்றை யவயவங்களையுந் துளைத்தான். அவர்கள் அயர்ந்தார்கள். அவருள் அதிபலர் இளைத்து நின்றார்; வக்கிரர் களைத்து வீழ்ந்தார்; வச்சிரர் இரங்கினர்; கபாலி வலிமையிழந்தார்; உன்மத்தர் உலைந்தார்; அச்சுதர் மலையேந்தி நின்றார்; மாபலர் ஓடாமலும் எதிர்க்காமலும் வருந்தினர்; மதிசயர் வாடினர்; மேகர் மருண்டார்; அண்டாபரணர் துன்பமென்பதனையறிந்தனர்; மேகமாலி மனநடுங்கினர்; சுப்பிரர் மெலிந்தார்; காகபாதர் மெய்பதைத்தார்; உதவர் கவன்றார்; அசலர் மார்பிலிருந்து வடியும் இரத்தத்துள் அழுந்தினர்; கவந்தர் நொந்திரங்கினர்; அத்திரி வீழ்ந்தார்; பத்திரர் சிறிது வருந்தினர்; பதுமர் உடைந்தார்; வியாக்கிரர் இளைத்தசைந்தார்; தனஞ்சயர் இரிந்தார்; மத்தர் வைது வெய்துயிர்த்தார்; பிங்கி மெய்மறந்தார்; சித்திராங்கரும் கனகரும் துன்பக்கடலுள் ஆழ்ந்தார்; மாலியும் நீலரும் மனமழிந்தார்; கும்பரும் நிகும்பரும் கண்பஞ்சடைந்தார்; சண்டியும் தண்டியும் பதைப்புற்று அஞ்சி ஏங்கினர்; வாமரும் சோமரும் உயிர் நீங்குமவதியை யடைந்தார்; உக்கிரர்

எழுவதற்கு வலிமையின்றிக் கோபங்கொண்டார்; சிங்கர் ஓய்ந்தார்; சுவேதசீரிடர் வலிமை தீர்ந்தார்; சங்கபாலர் வீழ்ந்துருண்டார்; நந்தி சலித்தார்; பிங்கலர் உயிர்ப் பிழந்தார்; உரோமசர் ஓடினர். இவர் முதலிய நூற்றெட்டுப் படைத்தலைவரும் இத்தன்மையாகப் போர் வலியின்றித் தோல்வியடைதலும், இலக்கம் வீரர்கள் அதனைக்கண்டு, விரைந்து விற்களை வளைத்து, சூரபன்மன்மீது பாணமழைகளைச் சொரிந்தார்கள். அவன் கோபித்து, பாணங்களை விடுத்து, அவர் விடுத்த அம்புகளை விலக்கி, ஆர வாரித்து, ஆயிரம் கோடி பாணங்களைச் செலுத்தி, ஒரு முகூர்த்தத்தில் அவர்களுடைய விற்களை முரித்து, அவர்கள் வேறு விற்களை எடுக்குமுன் பின்னும் ஆயிரம் அம்புகளைச் செலுத்தி, அவர்களுடைய தேர்களை அழித்து, மார்புகடோறும் ஆயிரமாயிரம் பாணங்களைத் தூண்டினன். அப்பாணங் கள் மார்பைப் பிளத்தலும், இலக்கம் வீரர்களும் வருந்தி இளைத்து வீழ்ந்தார்கள்.

வீரமார்த்தாண்டர் அதனைக்கண்டு இரங்கி, விரைந்து வந்து சூர பன்மனை எதிர்த்து, வில்லை வளைத்து நாணெலிசெய்து, கடல்களுமேங்க ஆரவாரித்து, பாணமழைகளைச் சொரிந்தார். சூரபன்மன் பாணங்களால் அவற்றையழித்து, கடிய ஆயிரம் பாணங்களை அவருடைய நெற்றியிற் செறித்தான். அவர் பின்னும் பாணங்களை விட, சூரபன்மன் ஆயிரமம்பு களைச் செலுத்தி அவர் விடுத்த அம்புகளையும் வில்லையும் அறுத்து, மார் பைப் பிளந்து, அப்பறுக்கூட்டையுமழித்தான்; வீரமார்த்தாண்டர் மனம் வருந்தி இறந்தவர்போல வீழ்ந்தார். அதனை வீரராக்கதர் பார்த்து, ''இப்பகைவனுடைய வலியை யான் அடக்குவேன்'' என்று கோபித்து, தேரைச் செலுத்திக்கொண்டு வந்து, வில்லை வளைத்து, ஆயிரம் பாணங்களைச் செலுத்த, சூரபன்மன் ஆயிரம் பாணங்களை விடுத்து, ஆரவாரித்தான். அவைகள் வீரராக்கதர் விடுத்த பாணங்களை விலக்கி, அவருடைய வில்லைத் துணித்தன. அவர் வாட்படையை ஏந்தி ஆகாயத்தில் ஆர்த்தெழுந்து சூரபன்மனுடைய தேரிற் பாய்ந்து அவனுடைய வில்லை வாட்படையினாலே துணித்தார். அது ஒடிந் திலது, வாள் ஒடிந்தது. ஒடிதலும், வீரராக்கதர் சூரபன்மனுடைய மார் பில் அடிக்கும்படி முயன்றார். அவன், ''ஆயுதம் இழந்த இவனைக் கொல் வது பழி'' என்றெண்ணி, காலின்மேற் படுத்து அண்டகோளகையிற் செல்ல எறிந்தான். அவர் அலமந்து இரங்கிப் பூமியில் வீழ்ந்தார். இதனை வீரமகேந்திரர் பார்த்து, பாணமழைகளைச் சூரபன்மனுடைய தேர் மறையும்படி சொரிந்து வந்தெதிர்த்தார். அவன் அவற்றை விலக்கி அம்புகளைச் செலுத்த, வீரமகேந்திரர் அவற்றை அம்புகளாற் சிந்தி, சாரிவட்டமாய்த் திரிந்தார். சூரபன்மனும் பாணங்களைச் சிதறி அவரு டைய தேரைச் சூழ்ந்து இடசாரி வலசாரியாகத் திரிந்தான். இவரிரு வரும் அம்புகளைச் சிதறி வட்டணையாகத் திரிதலால், ஒருவரும் அவரு டைய வேறுபாடு தெரிந்திலர். இருவரும் வீரமகேந்திரர் என்றுல் அறிய முடியுமோ! இவ்வாறு போர்செய்யும்பொழுது சூரபன்மன் கோபித்து, வீரமகேந்திரருடைய அம்புகளை அழித்து, அவருடைய பாதங்களில் முப் பது பாணங்களையும், மார்பில் இருபது பாணங்களையும், புயங்களில் முப் பது பாணங்களையும் விடுத்து வலியைத் தொலைக்க, அவர் வீழ்ந்தார்.

சூரபன்மன் விலங்குகளின்மேற் புலி செல்வதுபோலச் சென்றான். அதனை வீரதீரர் கண்டு, வில்லைவளைத்துப் பாணங்களைச் செலுத்திச் சென்றார். சூரன் அவர் விடுத்த பாணங்களையும் வில்லையும் ஆயிரம் அம்புகளால் அறுத்து, அவருடைய தேரை ஏழு பாணங்களால் அழித்தான். அவர், ''நன்று நன்று'' என்று ஒரு தண்டத்தை எடுத்து அவன்மேல் நடந்தார். அவன் நான்கு பாணங்களைத் தொடுத்து அத்தண்டத்தைத் துணித்து, அவருடைய மார்பிலும் புயங்களிலும் பதினான்கு பாணங்களை விடுத்து, அவரைப் பூமியில் வீழ்த்தினான். அப்பொழுது வீரமாமகேச்சுரர் ''வில்லினல் இவனுடைய வலியைக் குறைத்தல் வீரவாகுதேவருக்கும் அரிது'' என்று மனத்தில் எண்ணி, ஊனையும் உயிரையும் கவரத்தக்க தெய்வத்தன்மையுடைய ஒரு வேற்படையைச் சூரபன்மன்மீது செலுத்தினர். அதனை அவன் கண்டு, வில்லை வளைத்து ஆயிரம் பாணங்களை விடுத்தலும், அவ்வேற்படை அப்பாணங்களை அழித்து, சூரனுடைய மார்பில் வந்து பட்டு நுண்ணிய துகளாகி விண்ணிலுந் திசைகளினுஞ் சிதறியது. வீரமாமகேச்சுரர் சூரபன்மன்மீது ஒரு தண்டத்தை விடும்படி எடுத்தார். அவன் அதன்முன் முனிவர்களுடைய சாபத்திலும் முந்துகின்ற ஏழு பாணங்களைத் தொடுத்தான். அவை வீரமாமகேச்சுரருடைய புயத்தைத் துளைக்க, அவருடைய உடல் வீழ்ந்தது; உணர்வழிந்தது; உயிர் துரிய நிலையை யடைந்தது. வீரமாமகேச்சுரர் இவ்வாறு மயங்குதலும், வீரகேசரி அதனைக்கண்டு சூரபன்மனை எதிர்த்து, வில்லை வளைத்து நாணெலிசெய்தார். அந்தவில்லைச் சூரபன்மன் ஏழுபாணங்களினுற் றுணித்து, அவருடைய தேரை நூறு பாணங்களினல் அறுத்து, ஆயிரம் பாணங்களை நெற்றியில் அழுத்தினான். வீரகேசரி பெருகுகின்ற இரத்தவெள்ளத்தோடு பூமியிற் பாய்ந்து, ஒரு பெரிய மலையைப் பிடுங்கிச் சூரபன்மன் மீது எறிந்தார். அவன் ஒரு பாணத்தால் அதனை அறுத்து அவருடைய மார்பில் நூறு பாணங்களை அழுத்தினான். அவை மார்பிற் புகுதலும், வீரகேசரி மனநொந்து, சூரனுடைய தேரிற்பாய்ந்து, அவனுடைய மார்பில் அடித்தார். அடித்த கை பிளக்க, அதினின்றும் இரத்தம் வடிந்தது. வீரகேசரி துடித்துப் பெருமூச்சுவிட்டுத் துன்பத்தோடு அவனுடைய தேரில் வீழ்ந்தார். சூரன் ''இவனைக் கொல்வது பழி'' என்று கருதி, அவரை ஒருகையினல் எடுத்து, தேவர்கள் மருளப் பாற்கடலில் எறிந்தான். வீழ்ந்த வீரகேசரி பதைத்துத் துன்பமுற்று, ஆகாயமார்க்கமாக மீண்டுவந்து, தம்மினத்தைச் சேர்ந்தார். அதன்பின் வீரமாபுரந்தரர் சூரபன்மனை எதிர்த்து, ''யான் பாணங்களைச் சொரிந்து இவனோடு போர்செய்வேனையின் இவன் அவற்றை அழித்து என்னையும் வெல்வான்'' என்றெண்ணி, யமப்படைக்கலத்தை விடுத்தார். அவன் அதன் வரவைப்பார்த்துச் சிரித்து, அதற்கெதிராக ஒருபடைக்கலத்தையுஞ் செலுத்தாதவனாய் அதனை இகழ்ந்து நிற்ப, அப்படை அவன்மீது பட்டு அழிந்தது. அது அழிதலும், அவர் பிரமப்படைக்கலத்தைத் தொடுக்கும்படி எடுத்தார். அதன்முன் சூரபன்மன் வில்லை வளைத்து இலக்ஷம்பாணங்களை அவருடைய மார்பு பிளக்கும்படி விடுப்ப, அவை சென்று மார்பைப் பிளந்து போயின. வீரமாபுரந்தரர் கையிலெடுத்த பிரமப் படைக்கலத்தோடு இரத்தஞ் சொரிய வீழ்ந்து மயங்கினர். அதனைக்கண்டு வீரராந்தகர் வந்து, ''தீரர்களாம் அவுணர்கள்,

பூதர்களாம் அவருக்கழிவார்; சூராம் விற்போரில் வல்லர்; நம்மவ ரெல்லாம் அவருக்குத் தோல்வியடையுமியல்பினராம்; இந்தப்போர் நன்று'' என்று சொல்லி, அந்தகனும் வெருவச் சார்ங்கம் என்னும் வில்லை யொத்ததாய் வரை பொருந்திய ஒரு வில்லை வலத்து இடிபோல நாணெலிசெய்து, பாணங்களைச் சிதறி நின்று ஆரவாரித்தார். அவ்வொ லியைக்கேட்டுச் சூரபன்மன் அஞ்சினன். தேவர்கள் வியர்த்தார், விஞ்சை யர் ஓட்டெடுத்தார், பகைகள் பெடைகள் வருந்தக் குஞ்சுகளை எடுத்துக் கொண்டு ஓடின. சூரபன்மன் வீரராந்தகர் விடுத்த அம்புமழைகளை அம் புகளால் விலக்கி, ஆயிரம் பாணங்களை விடுப்ப, அவரும் அத்துணைப் பாணங்களை விடுத்து அவற்றைத் தடுத்தார். சூரபன்மன் சினந்து முத் தலையையுடைய ஆயிரம் பாணங்களை விடுப்ப, அவை வீரராந்தகர் விடுத்த பாணங்களெல்லாவற்றையுஞ் சிந்தி, அவருடைய தேரை அழித்து, வில்லை யொடித்து, வீரத்தைக் கலக்கி, மார்பிற் புகுந்து இரத்தத்தைப் பருகி, உணர்வைக்கெடுத்து, இந்திரனுடைய மனம் நடுங்கும்படி புறத்திற் போயின. அவர் வீழ்ந்து அறிவிழந்தார். அதனை வீரவாகுதேவர் பார்த்து, செற்றமும் மானமும் செலுத்தச் சூரபன்மன்மேற் சென்றார்.

வீரவாகுதேவர் தேரைச் செலுத்திக்கொண்டு வந்தெதிர்த்தலும், சூரபன்மன் அவருடைய திருவுருவத்தை நோக்கி, ''இவன் ஒற்றுவனுகும்'' என்றெண்ணி, மிகவும் கோபமடைந்து, ''நம்முடைய வீரமகேந்திரத்தை அழித்து, எண்ணில்லாத சுற்றத்தார்களையும் சேனைகளையும் குமாரர்களை யும் கொன்று, உன் உயிர் பிழைத்துவந்தாய்; உன்னுடைய போர்வலியை இன்றோடு முடிப்பேன்; படிற்றொழுக்கம் பூண்டு அமைச்சர்களைப்போலப் பேசி ஒற்றுவனுகி இன்னும் வந்தாயாயின் உய்குதி; அதுவே உன்செயல்; இப்பொழுது வில்லைப் பிடித்தாய்; இனி இறந்தாய்; இற்றைத்தினமோ உன்னுயிர்க்கிழைத்தநாள்'' என்று கூறினன். இதனைக்கேட்ட வீரவாகு தேவர் அவனைநோக்கி, ''யான் தூதுவனுமாவேன், அமைச்சனுமாவேன்; பகைவர்மேற் சென்று போருஞ்செய்வேன்; இன்னமும் அறுமுகக்கடவுள் கற்பித்தருளுகின்ற பணிகள் யாவையுஞ் செய்வேன்; உலகில் எத்தொழி லும் வல்லேன்; நீ விரும்பிய போரைச் செய்குதி'' என்றார். என்று வீர வாகுதேவர் கூறுதலும், சூரபன்மனுடைய கண்கள் எரிந்தன; பற்கள் அதரத்தைக் கடித்தன; உரோமங்கள் சிலிர்த்தன; மிகுந்த கோபம் மனத்திலெழுந்தது. சூரன் இவ்வாறுகிய கோபக்குறிப்புக்கள் நிகழ மலையை யொத்த வில்லைவளைத்து, நாணேதைசெய்தான். பொன்மலைகள் நடுங்கின; பூவுலகங்கள் நடுங்கின; சமுத்திரங்கள் நடுங்கின; ஆதிசேஷன் தலைநடுங் கினன். அப்பொழுது வீரவாகுதேவர் தம்முடைய வில்லை வளைத்து நாணெலிசெய்து, ஆர்த்தார். அவ்வொலி சூரபன்மனுடைய நாணெலி யோடு கலந்து சென்றபொழுது, ஒரு முகூர்த்தநேரம் மூவுலகங்களும் நிலைகுலைந்தன. சூரபன்மன் ஆயிரகோடி பாணங்களைத் தூண்டி ஆரவா ரித்தான். வீரவாகுதேவர் பாணமழைகளால் அவற்றை விலக்கி நின்றார். சூரபன்மன் வெகுண்டு, ''இவனுடைய உயிரைக் கவர்குவேன்'' என்று கடிய இலக்ஷம் பாணங்களைவிட, வீரவாகுதேவர் ஆயிரகோடி பாணங் களை விடுத்து அவற்றைத் தடுத்தார். சூரன் பின்னும் கோடிபாணங்களை

விட, வீரவாகுதேவர். அவற்றை அழித்து, நூறுபாணங்களை அவனுடைய நெற்றியில் விடுத்தார். அவைகள் அவனுடைய நெற்றியை யடைந்து வைர மலையின் உச்சியிற்றைத்த பொன்னூசிகள்போல ஒடிந்து வீழ்ந்தன. கூரிய நூறுபாணங்கள்போய் நெற்றியிற் ருக்கியும் சூரன் ஓரூறுபாடுமில்லாதவ னாகி நிற்றலை வீரவாகுதேவர் பார்த்து, ''அறுமுகப்பெருமானுடைய வேற்படையன்றி வேறெந்தப்படையும் இவனுடைய உடம்பை அழிக்க வல்லதன்று'' என்று பின்னும் பலகோடிபாணங்களைச் சொரிந்தார். சூர பன்மன் பாணங்களால் அவற்றை மாற்றி, எட்டம்புகளை அவருடைய புயத்தில் விடுத்தான். அவைகள் புயத்தில் மூழ்கி இரத்தத்தை பருகி, பிடரைப் பிளந்து, தேவர்கள் அஞ்சும்படி ஓடின. வீரவாகுதேவர் மனம் வருந்தி, சூரபன்மனுடைய தேர்ப்பாகர்களின்மீது பலகோடிபாணங்களை விடுத்தார். அவைகள் உடம்பிலே அழுந்துதலும் பாகர்கள் மிகவும் வருந்தி, புலாலும் இரத்தமும் புறத்திலே விளங்க முள்ளிலவமரம் மலர்ந் தாற்போல யாவருந் தேரின்மீதிருந்தார்கள். சூரபன்மன் அதனைக்கண்டு கோபித்து, ஐம்பது பாணங்களைச் செலுத்தி, வீரவாகுதேவருடைய தேரை யும் குதிரைகளையும் அழித்தான். அவர் பிறிதொரு தேரில் ஏறி வாயுப் படைக்கலத்தையும்அக்கினிப்படைக்கலத்தையும்விடுத்தார். அதனைச் சூரன் அறிந்து மிகவுஞ் சிரித்து, அவற்றிற்கெதிராக ஒரு படைக்கலத்தையுஞ் செலுத்தாமல் வில்லோடு வாளாநின்ருன். அப்படைக்கலங்கள் சூரன்மீது தாக்கி, ஊறுபட்டு நூருயிரம் பிதிர்களாய் உதிர்ந்தன. வீரவாகுதேவர் யமப்படைக்கலத்தையுஞ் சூரியப் படைக்கலத்தையும் ஒருங்கு செலுத்தி னர். அவைகளும் சூரபன்மன் மாட்டுச்சென்று பெருமையிழந்து விரைந் தழிந்தன. பின் வருணப்படையையும் நிருதிப்படையையும் இந்திரப்படை யையும் சூரபன்மனுடைய புயங்களிலும் மார்பிலும் புகும்புடி செலுத்தி னர். அவை அவ்வங்கங்களை யடைந்து அழிந்தன. பின் மாயப்படையை யும் ஆசுரப்படையையும் விடுத்தார். அவையும் சூரபன்மனை யடைந்து பொடியாயின. மேற்கூறிய படைக்கலங்களெல்லாம் அழிதலும், வீரவாகு தேவர் சூரபன்மனுடைய வலியைக்கண்டு மிகவும் விம்மிதமடைந்து, பிர மப்படைக்கலத்தையும் விட்டுணுப்படைக்கலத்தையும் விடுத்தார். அப் படைகளிரண்டும் கோபம் மிகுந்து, இடியையும் புகையையும் நெருப்பை யும் சமுத்திரங்களையும் பலவகை ஆயுதங்களையும் உண்டாக்கி, எல்லா வுலகங்களும் நடுங்கும்படி சூரபன்மனுக்கெதிரே சென்று, ''இவனுடைய மார்பைப் பிளந்து அப்பாற் செல்லுவோம்'' என்று மார்பிற்ருக்கி, வைர மலையைத் துளைக்கும்படி முயன்ற வண்டுகளைப்போல வலியழிந்து, அசுரர் களும் தேவர்களும் நோக்கி ''ஏ ஓ'' என்று இகழும்படி வசையை யடைந்து இரிந்தன. இதனை வீரவாகுதேவர் கண்கள் நெருப்பெழப் பார்த்து, சிவபெருமான் கொடுத்தருளிய வரத்தை நினைந்து, மிகுந்த விம்மிதமடைந்தார். சூரபன்மன் சிரித்து அவரை நோக்கி இவ்வாறு சொல்வான்: ''மும்மூர்த்திகளிலும் முதல்வராய் அழிவில்லாதவராகிய சிவபெருமான் தந்தருளிய வரத்தினால் எந்தெந்தத் தேவர்களுடைய படைக்கலத்தை விடுப்பினும் அவைகள் என்னை வெல்ல வல்லன அல்ல; யான் அவற்றிற் கெதிராக எந்தப்படையையும் விடுத்துத் தடைசெய் யேன்; அவற்றின் வலிகளையறிவேன்; பிரம விஷ்ணு முதலிய தேவர்களு

டைய படைகள் என்னை வந்தடையுந்தன்மை சமுத்திரங்களெல்லாவற்றையும் பருகுகின்ற வடவாமுகாக்கினியைத் தேனீகள் இது தசையென்று சேர்ந்திறக்குந் தன்மைபோலும். நீ என்னிடத்தில் விடுத்த படைகளுள் மார்பையடைந்து, முரிந்தனவும், மறிந்தனவும், முடிந்தனவும், பொடிந்தனவும், எரிந்தனவும், கரிந்தனவும், இடைந்தனவும் அன்றி, அவையடைந்த வெற்றியொன்றுமில்லை; நீ அதனைத் தெரிந்தாய். நீ விடுக்கும் பாணங்களின் வலியையும், உன்னுடைய தெய்வப்படைக்கலங்களின் வலியையும், உன்னுடைய இயற்கை வலியையும் பார்த்து, தொலைவில்லாத ஒரு படையினற் கொல்லுவேன் என்று காலம் பார்க்குங் கூற்றுவன் போல நின்றேன்'' என்று கூறினன்; இப்படிச் சூரபன்மன் சொல்லுதலும், வீரவாகுதேவர் ''இனி ஒரு படைக்கலத்தினல் இவன் வலியை யுணர்வேன்.'' என்று நினைத்து, சிவப்படைக்கலத்தை மனத்தால் வழிபாடு செய்து விடுத்தார். அது நஞ்சும் நெருப்பும் இடியும் வாயுவும் இருளும் சூரியனும் கூற்றுவனும் பூதப்படைகளும் பாணங்களும் சூலங்களும் புடையிலே சூழ, சங்காரகாலம் இது என்று சொல்லும்படி மிக ஆரவாரித்து வந்தது. அப்படைக்கலத்தைச் சூரபன்மன் பார்த்து, ''இது என் மார்பிற்பட்டு எனக்குத் தோற்று அழிந்த படையல்ல, சிவப்படைக்கலம். யான் சிவபெருமானிடத்தே பெற்ற அப்படைக்கலத்தினல் இதனை விலக்குவேன்'' என்றெண்ணி, அப்படையை யெடுத்து, மனத்தாற் பூசை செய்து விடுத்தான். அது வீரவாகுதேவர் விடுத்த சிவப்படைக்கலத்துக் கெதிரே போய், உலகத்தார் அஞ்சும்படி எதிர்த்துப் போர் செய்தது. அவ்விரு சிவப்படைக்கலங்களும் நின்று பொருது, ''இனி உலகமழியும்'' என்று வானுலகத்திலுள்ளார் துதிக்க, தம்மை விடுத்தோரிடத்து மீண்டு சென்றன. அதனைச் சூரபன்மன் பார்த்து, ''இவைகள்தாமா உன்னிடத்துள்ள வலிமைகள்? உன்னுயிரை இனி ஒழிப்பேன்காண்'' என்று தன் வில்லை வளைத்து, அம்புகளைச் சிந்தினன். வீரவாகுதேவரும் வில்லைவளைத்து, அம்புகளைத் தூவினர். சூரபன்மன் முத்தலையையுடைய பதினைந்து பாணங்களை ஏவி, வீரவாகுதேவருடைய வில்லைத் துண்டமாக்கினன். வில்லுத்துணிதலும், வீரவாகுதேவர் கோபித்து ஒரு வேற்படையை எடுத்துவீச, அது சூரபன்மனுடைய மார்பாகிய மலையிற்பட்டு ஒடிந்தது. அவன் பிரம விஷ்ணு முதலாகிய தேவர்களுடைய வலியையுங் கவரத்தக்க ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரவாகுதேவர்மேல் எறிந்தான். அது அட்டநாகங்களோடு ஆதிசேஷன் ஒருருவெடுத்து ஆரவாரித்துச் சென்ருற்போல மணியொலிக்க வந்தது. வீரவாகுதேவர் அதற்கெதிராக ஒரு தண்டத்தைச் செலுத்தி நின்ருர். சூரபன்மன் செலுத்திய தண்டாயுதம் அதனைப் பொடிபடுத்தி, துண்ணென்று வந்து, வீரவாகுதேவருடைய மார்பிற்பட்டது. இரத்தத்தாரை நதிகளைப்போலத் திரைகொண்டு பெருக, வீரவாகுதேவர் அதில் ஆழ்ந்தவராயும், பிளந்த மார்பையுடையவராயும், புகையுமனத்தினராயும், குறைகின்ற வலியினராயும், தளருகின்ற திருமேனியினராயும் தேவர்கள் அஞ்சியோட வீழ்ந்தார். அவர் அங்ஙனம் வலிமையிழந்து வீழ்தலும், தேர்ப்பாகனுகிய விசாலியென்பவன் அவரைத் தெளிவிக்கக் கருதி விரைவிற் றேரைச் செலுத்திக்கொண்டு ஒரு பக்கத்திற் போயினன். ''வீழ்ந்த வீரவாகு இறப்பான்; இது நிச்சயம்'' என்று சூர

பன்மன் நினைத்து, வில்லை வளைத்து, பூதகணங்கண்மீது பாணங்களைச் சொரிந்து கொன்றான். இறவாதொழிந்த சேனைகள் சூரியனைக்கண்ட பனி போல ஓடின.

இலக்கத்தெண்மரும், வீரவாகுதேவரும், இரண்டாயிரம் வெள்ளம் பூதசேனைகளும் சூரபன்மனுல் வலியழிந்து உடைந்ததன்மையைச் சுப்பிர மணியப்பெருமான் பார்த்தருளி, தேர்ப்பாகனை நோக்கி, தேவர்கள் துதிக்க, ''சூரபன்மன்மீது தேரைச் செலுத்துதி'' என்று ஆஞ்ஞாபித்தருளினர். அவன் அதனைக்கேட்டு, தேரைச் சூரபன்மனுக்கு முன்பு விரைவிற் றூண்டினன். அப்பொழுது, சூரபன்மன் அனந்தகோடி சூரியர்கள் திரண்டு ஒன்றுகிப் பூமியிலுள்ள இருளையோட்டி ஆகாயத்தை நீங்கிப் போர்க்களத்திலே வந்தாற்போல நிர்மலராகிய சுப்பிரமணியக்கடவுள் போரிலே தோன்றிய தோற்றத்தைத் தரிசித்தான்; செந்தாமரை மலர்ந்தாலொத்த ஆறு திருமுகங்களும், பன்னிரண்டு திருக்கண்களும், குண்டலநிரைகளும், செம்பொற்கிரீடமும், திருமார்பும், பன்னிரண்டு திருக்கரங்களும், அவைகளிலே விளங்காநின்ற படைக்கலங்களும், தண்டையும் சிலம்பும் ஒலிக்கும் திவ்விய சரணாரவிந்தங்களும் தெரியக்கண்டனன். (முண்டக மலர்ந்ததன்ன மூவிரு முகமுங் கண்ணுங் – குண்டல நிரையுஞ் செம்பொன் மவுலியுங் கோலமார்பும் — எண்டரு கரமீராறு மிலங்கெழிற் படைகள் யாவுந் – தண்டையுஞ் சிலம்புமார்க்குஞ் சரணமுந் தெரியக் கண்டான்.) சூரனென்னும் அவுணராசன் முன்னாளிலே தவஞ்செய்தவாறும், பூமியிலே அழிவின்றிப் பலயுகமிருந்தவாறும், வேதங்களாலு மறியமுடியாத எம்பெருமானுகிய அறுமுகக்கடவுளுடைய பேரழகுபொருந்திய திருவுருவத்தைத் தரிசித்துப் பெருவாழ்வடைதற்கேயோ! அழிவில்லாத சூரபன்மன், பரிசுத்தர்களாகிய மெய்ஞ்ஞானிகள் மனத்தாலு மளவிடுதற்கரிய நிர்மலராகிய குமாரக்கடவுளுடைய செவ்வொளி பொருந்திய திருவுருவத்தைத் தரிசித்துத் தீவினை நீங்கி உய்ந்தான். அவன் இங்ஙனம் போர் செய்து முருகக்கடவுளால் இறந்தாலென்ன! அவருக்குத் தோற்றாலென்ன! சூரபன்மனைத் தீவினையாளனென்றே அறியாதவர் சிலர் சொல்வர், சிறப்பின்மிக்க அறுமுகக்கடவுள் தன்முன் எழுந்தருளி வரப்பெற்றான். ஆகா இவன் தவத்திற்கன்றி அறத்திற்கும் முதல்வனன்றே! இன்னமும் முனிவரும் தேவரும் மற்றை யாவரும் இத்தன்மையினரென்று நினைத்தற்கரிய தலைமையினையுடைய ஒரு தனி முதல்வராகிய குமாரக்கடவுளைச் சூரபன்மன் தன்னுடைய இரண்டு கண்களாலுந் தரிசித்தானென்றால், அவனுடைய தவத்தின்பேற்றை யார் அறிந்து சொல்லவல்லவர்! போரைச்செய்பவர்போல விரைந்து எழுந்தருளி வந்து சூரபன்மன் தன் இருகண்களாலுந் தரிசிக்கும்படி எளிதாகத் தம்முடைய திருவுருவத்தைக்காட்டி அவனுக்கு அருள்செய்தாரென்றால், முதற்கடவுளாகிய சுப்பிரமணியக் கடவுளுடைய மாயத் திருவிளையாடல்கள் யார்க்குந் தெரிகிலபோலும்!

மனத்தால் அறிதற்கரிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருவுருவைத் தன்கண்களாற்றரிசித்து அவருடைய திருமுன்பு நின்ற சூரபன்மன் ''சங்காரகருத்தாவாகிய சிவபெருமானுடைய குமாரராகும் இவர்'' என்று நினைத்து, மனத்திலே கோபம் தூண்ட அக்கடவுளைநோக்கி இவ்வாறைச்

சொல்லலுற்றான்:— ''சேனைகளாய் உன்னைச் சூழ்ந்தவர்கள் போர்வலி யிழந்து போனபோனதிசைகள் தெரிந்திலை; பூதப்படைத்தலைவர்களும் அழிந்தார்; விற்போரில்வல்ல மற்றை வீரர்களும் என்னெடு பொருது இறந்தார். உன்படைகளுக்கெல்லாந் தலைவனுய் என்னிடத் தொற்றுவ னுகவந்த வீரவாகுவும் போர்செய்து உயிரொழிந்தான். மற்று நீ ஒரு பாலகனே என்னெடு பொருது வெற்றியடைகுதி. உன் உள்ளக்குறிப்பு நன்று நன்று! மேலாகிய உன் பிதாவும் பிரமவிஷ்ணுக்களும் என்னெடு போர்செய்யக் கருதிலர். மற்றேர் பாலகனுகிய நீ என்னெடு போர்த் தொழில் செய்யவல்லையோ! முந்தைநாளில் வலியில்லாதழிந்த கிரவுஞ்சமலை யையும் முன் யான் கொடுத்த செல்வத்தினுல் மயங்கிய தாரகாசுரனையும் அழிவில்லாத அவன் படைத்தலைவர்களையும்போல, மைந்தனே, என்னை யும் நின்மனத்தில் நினைந்தனைபோலும். நிறைந்த செல்வங்களையுடையே னுகிய என்னுடைய வரத்தினியல்பை நினைத்திலை; அழியாத ஆக்கத்தை நினைத்திலை; பெரியவலியை நினைத்திலை; வெற்றியின் பெருக்கத்தை நினைத் திலை; படைத்திறத்தை நினைத்திலை; போரினூக்கத்தை நினைத்திலை: சிறுவனே நீ என்னெடு பெரிய போருக்கு வந்தாய். பிரமாவும் விஷ்ணு வும் இந்திரனும் மற்றைத் திக்குப்பாலகர்களும் வருந்தவும், உமையம்மை வருந்தவும், ஓரிமைப்பொழுதினுள் என்னுடைய ஒரு வில்லினுல் நின்ன லியை யழிப்பேன்'' என்றிவ்வாறு சூரபன்மன் வீரமும் வெற்றியும் சீரும் கோபமுங் கொண்டு சொல்லினன். அருளே திருமேனியாகக் கொண்டு நின்ற அறுமுகக்கடவுள் அவற்றைக் கேட்டுத் திருப்புன் முறுவலுஞ் சிறிது தோன்ற இவ்வாறு சொல்லியருளுவார்: ''வெற்றியையுமுடையோம்; வலியின் மிகுதியையுமுடையோம்; மேன்மையையுமுடையோம்; எண்ணில் லாத படைகளையுமுடையோம்; அழியாவியல்பையுமுடையோம்; பெரிய சேனசமுத்திரங்களையுமுடையோம் என்று இனி அகந்தை கொள்ளாதே. இவற்றையெல்லாம் விரைந்து மாற்றுவோம். 'மிகுந்த வரத்தின் சிறப்பினை யுடையேமாகிய நம்மை மிக இளைய ஒரு குமாரனே பொருது வெல்ல வல்லவன்' என்று மனதிற்கொண்டாய்; நீ மிகவும் அறியாமையையு டையை. சிவபெருமானுடைய ஒப்பில்லாத நெற்றி நாட்டத்தில் உண் டாகின்ற ஒரு சிறு பொறியன்றே உலகங்களெல்லாவற்றையும் அழிப் பது. இவர் அறிவினையுடைய முதியோர் என்றும், இவர் அஃதில்லாத இளையோர் என்றும், இவர் சிறியர் என்றும், இவர் பெரியவர் என்றும், இவர் மிக்க வளங்களையுடையவர் என்றும், இவர் வறியவர் என்றும், வீரர்கள் மதியார்; யாவராயினும் போர்வலியுடையராய் வந்தெதிர்த் தால், அவரோடு போரைச் செய்வர். நூற்றெட்டுயுகங்காறும் செல்வத் தோடு இனிதாக இருக்கின்ற பெரிய உன்னுடைய வலியை, தெளிவில் லாத தன்மையையுடைய சிறிய நம்முடைய வலிமையினுற் பாலிற்புகுந்த உறையைப்போல இப்பொழுதே அழிப்போம்'' என்று சொல்லியருளினர்.

சூரபன்மன் இவற்றைக்கேட்டு, அண்டமுகட்டை தொடுகின்ற மிகப் பெரிய ஒரு வில்லை வளைத்தான். அதனைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, திருவாலங்காட்டிலே சிவபெருமான் ஊர்த்துவதாண்டவஞ் செய்த அந் நாளில் அண்டமுகட்டைத் தொட எடுத்த திருவடியைப்போல ஒரு தெடிய வில்லையெடுத்து, அத்திருவடி அண்டத்தை யழியாதவண்ணம் தடுத்த திருக்

கரத்தைப்போல அதனை வளைத்து, எல்லாவண்டங்களும் உடைந்த பேரோசை போல நாணொலிசெய்தார். சூரபன்மனும் சினந்து, அதற்கு மாறுகச் சமுத்திரங்கள் யாவும் உடைந்ததன்மைபோல நாணேதைசெய்து, பாணமழைகளைத் தூவி, சுப்பிரமணியக்கடவுளையும் அவருடைய தேரை யும் உலகங்களையும் மறைத்தான். அவர் ''இவனுடைய வித்தை நன்றுயிருந் தது'' என்று சிந்தித்து, அநேகம் பாணங்களை விடுத்து அவற்றையெல்லாம் குறைத்தார். சூரபன்மன் கோபித்து, நஞ்சு தோய்ந்த அநேகம் பாணங் களைத் தொடுத்தான். குமாரக்கடவுள் பாணமழைகளால் அவற்றையறுத்து அவனைமறைத்து, ஆகாயமார்க்கத்தை மாற்றினர். அப்பாணங்களின் படலங்களைச் சூரபன்மன் விடாமழைபோலும் அம்புகளாற்றுணித்து வீழ்த்தி, பாசத்தைநீக்கி ஞானநாயகராகிய சிவபெருமானைக் காணும் நல்ல தவத்தினர்களைப்போல அவரைக்கண்டு, பத்துலக்ஷம்பாணங்களை அவர்மீது விடுத்தான். அவற்றை அக்கடவுள் அம்புகளால் விலக்கி, சூரபன்மனுடைய புயத்தின்மீது பதினொன்று பாணங்களை விடுத்தார். அவைகள் அவனுடைய புயமலையையடைந்து, இருப்புமலையையடுத்து அதனையழியாத சூரியனுடைய கிரணங்களைப்போல அப்புயத்தைத் துளைத்தில. சூரபன்மனுடைய வச்சிர யாக்கையின் வலிமையைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, அக்கினியுண் டாகத் திருப்புன்முறுவல்செய்து, அவன் பின்னும் விடுகின்ற பாணங்களை யெல்லாஞ் சிந்தி, ஆயிரமம்புகளால் அவனுடைய வில்லையறுத்தார். தன் வில்லுத்துணிதலும் சூரபன்மன் கோபித்து, பிரமதேவர் கொடுத்த ஒரு வேற்படையைச் சுப்பிரமணியக்கடவுண்மீது எறிந்தான். அவர் பதினொன்று பாணங்களால் அதனைக் குறைத்தார்; சூரபன்மன் வேறோர் வில்லை வளைத் துப் பாணமழைகளைச் சிந்தி, மாறு மாறுகச் சுப்பிரமணியக்கடவுள் விடு கின்ற பாணங்களெல்லாவற்றையும் மாற்றி, அவருடைய திருப்புயத்தில் ஏழுபாணங்களைச் செலுத்தி, ஆரவாரித்தான். அப்பாணங்கள் முருகக்கடவு ளுடைய திருப்புயத்தையடைந்து நுண்ணிய துகளாகிய அக்கினித்திரளிற் பட்ட பூளைபோல அழிந்தன. அவர்''சூரபன்மனுடைய வலி நன்று நன்று'' என்று கோபித்து, பத்துப்பாணங்களினால் அவனுடைய வில்லை அறுத்து, தேரையும் ஆயிரம்பாணங்களினால் அழித்து, பின் அவனுக்கு ஏமமாய்ப் போந்த பதினெண்டிலக்ஷந் தேர்களையும் ஓரிறைப்பொழுதிற் பாணமழை களினால் அழித்தார்.

தன் சேமத்தேர்களெல்லாம் அழிதலும், புகையோடுகூடிய கோபாக் கினியைக் கக்கும் கண்களையுடைய சூரபன்மன் அதனைக்கண்டு, தான் காவ லாய் வைத்திருக்கின்ற ஒரு முத்தலைச்சூலத்தை யெறிந்தான். முருகக் கடவுள் அதனை நான்கு பாணங்களினாற் றுணிபடுத்தி, ஏழுபாணங்களினால் அவனுடைய குடையையும் ஒரு பாணத்தினாற் கிரீடத்தையும் அறுத்து, அவனுடைய உடம்பெங்கும் பாணங்களைப் பொழிந்து, ஆபரணங்களெல் லாவற்றையுந் துணித்தார். சூரபன்மன் மானத்தோடுகூடிய வலிமையிற் குறைந்தான். அதனை அவனுக்குப்பக்கத்திலுள்ள படைத்தலைவர்கள் கண்டு சதுரங்க சேனைகளோடுவந்து, விடாமழைபோலப் படைக்கலங்களை விடுத்து எழுகடல்களும் மேருமலையை வளைந்தாற்போலக் குமாரக்கடவுளைச் சூழ்ந் தார்கள். அக்கடவுள் இங்ஙனஞ் சூழ்கின்ற மிகுந்த சேனைகளைப் பார்த்து, அவற்றை விரைவிற் சங்கரிக்கத் திருவுளங்கொண்டு, தம்முடைய ஒரு திருக்

கரத்திலிருக்கின்ற சக்கரப்படையைச் சூரியனைப்போலச் செல்லும்படி விடுத்தார். சூரியன் நடுநிசியிற்சென்று அளவில்லாத பேரிருளை அழித்தாற் போல அச்சக்கரப்படை சென்று, அவுணர்களுடைய தலைகளையும், மார்புகளையும், கைகளையும், கால்களையும், புயங்களையும், அவர்கள் செலுத்திய படைக்கலங்களையும் துணிக்கும். இன்னும் அச்சக்கரம் தேர்களைத் துணிக்கும்; யானைகளைத் துணிக்கும்; குதிரைகளைத் துணிக்கும்; படைத்தலைவர்களைத் துணிக்கும்; அவுணர்கள் போர்செய்ய நினைத்தால் அவர்களுடைய நெஞ்சைத் துணிக்கும்; இகழ்ந்தால் நாவைத் துணிக்கும்; உரப்பினுற் கிரசைத் துணிக்கும்;படைக்கலஞ் செலுத்தும் முயற்சிகளைச் செய்தாற் கைகளைத் துணிக்கும்; எதிர்த்தாற் கால்களைத்துணிக்கும்; குடைகளைத் துணிக்கும்; சாமரங்களைத் துணிக்கும்; கொடியின் றொடைகளைத் துணிக்கும்; தேரிற்கட்டிய குதிரைகளைத் துணிக்கும்; அவுணர்களுடைய கையிலுள்ள படைகளைத் துணிக்கும்; வாத்தியங்களைத் துணிக்கும். அச்சக்கரப்படை குயவன்சுற்றி விட்ட திரிகையைப்போல விரைத்து சுழன்று பகைவர்களுடைய சேனைகளைப் பல துணியாக்கி, இவ்வாறே உலாவித்திரிந்து, சுப்பிரமணியக் கடவுள் ஒரு திருவாக்கினுல் அழித்த தன்மைபோலச் சூரபன்மனுடைய நாருயிரம் வெள்ளஞ்சேனைகளையும் ஒரு முகூர்த்தத்தில் அழித்து, புகழோடு மீண்டது.

போரில் இறந்த அவுணர்களுடைய உடற்குறை புகையாகவும், இரத்தம் நெருப்பாகவும், வெட்டுண்டு வீழ்ந்த குதிரைகளும் தேர்களும் யானைகளும் அவிகளாகவும் எம்பெருமானுகிய முருகக்கடவுளுடைய சக்கரப்படை ஒரு பெரிய வீரயாகத்தைச் செய்வதுபோல விளங்கிற்று. அப்படை அவுணர்களை அழித்து, அவர்களுடைய வஞ்சகமும் மாயமுமென்கின்ற பேரிருளைக்கெடுத்து, இரத்த நிறத்தையடைந்து, சூரியனையது. அச்சக்கரப்படை சென்று போர்செய்யுமியல்பை விட்டுணுவின் சக்கரப்படை பார்த்து வியந்தது. பல குடைகள் இடையிலே காம்புகள் வெட்டுண்டு நிணச்சேற்றில் வீழ்ந்து நிற்றல் தடாகத்தில் மலர்ந்த பழைய தாமரைப்பூவின் கானங்கள்போல விளங்கும். இயங்குதலற்று வீழ்ந்திறந்த அவுணர்கள், யானை, குதிரை ஆகிய சேனைகளின் பிணக்குவைகள், உலகத்திலுள்ள மலைகளெல்லாம் ஒழுங்காகிவந்து அங்கே தொக்கனவற்றையொக்கும். ஆகாயமளவு முயர்ந்த பிணக்குவைகளின் மேல் கொள்ளி வாய்ப் பேய்க் கூட்டங்கள் பிணத்தையுண்டு சிரித்து ஆர்த்து, நெருங்குதல் முகிற்கூட்டங்கள் மின்னி இடித்து மலைச்சாரல்களில் மொய்த்தல் போலும். யானைகளையும் அவுணர்களுடைய உடம்புகளையும் பிறவற்றையும் வாரிக்கொண்டு இரத்தவெள்ளம் பாய்தல், செம்பாம்பு சமுத்திரத்தை மறைக்க நினைத்து நஞ்சைக்கக்கி நிலத்திலே சென்றூற்போலும். சில பேய்கள் பிணமலைகளிலே ஏறி இரத்தவாற்றிற் குதிக்க, அதனலுண்டாகிய இரத்தத்துளி அரம்பையர்களுடைய வஸ்திரங்களிலே தெறிப்ப, கண்டோர் பூப்பென்று நினைத்து நகைப்பரென எண்ணி அவர் நாணுவர். சில அவுணர்கள் தலை வெட்டுண்டு விரைந்து மேலே எழுந்து ஆர்த்தலும், சூரியன் தங்களைத் துன்பஞ்செய்கின்ற இராகு கேதுக்களாகிய கிரகங்கள் இரண்டல்லது அவைகளைப் போல இன்னும் அளவில்லாதன இங்கு வந்தன என்று ஓடுவான். சில காக்கைகள் கவந்தக்காட்டிற்

புகுந்து தங்கள் தலைகளை மேலே காட்டி. போர்க்களத்திலே, ''போர்க் களத்திலே காக்கை முகரும் வந்தாரோ'' என்று சொல்லும்படி யானைப் பிணங்களைக் கொத்துவன. இறந்த அவுணவீரர்களுக்குச் சூரபன்மனு டைய ஆணையினுல் உயிர் மீட்டும் வந்தாற்போல, பேய்கள் கைகொட்ட ஆடுகின்ற உடற்குறைகள் அனந்தகோடி.

இவ்வாருகிய போர்க்களத்திற் சுப்பிரமணியக்கடவுள் விடுத்த சக்கரப் படை வந்து தன் படைகளைச் சங்கரித்ததைச் சூரபன்மன் அறியாதவனுய், தன்னைச் சூழ்ந்த சேனுவெள்ளங்கள் இறந்ததைக்கண்டு மனம் வெருண்டு, ஒரு தமியனுய் நின்று ''இந்தப் பாலகன் என் சேனைகளையெல்லாம் தன் னுடைய ஒரு வேற்படையை விடுத்து அழித்தானே? சிவப்படைக்கலத்தை விடுத்து அழித்தானே? 'இறந்துபோக' என்று சொல்லாலழித்தானே? இவன் என் படைகளையெல்லாம் அழித்தது எவ்வாறு?'' என்று சொல்லி, தேரையிழந்தும், வில்லையிழந்தும், பேரையிழந்தும், சேனைகளையிழந்தும், ஆபரணங்களையிழந்தும், கிரீடத்தையிழந்தும், குடையையிழந்தும், பூமி யையிழந்த அரசரைப்போல நிலத்திலே நின்ருன். இங்ஙனம் நின்ற சூர பன்மன் மனத்திற் கோபம் மிகவும், மார்பு வியர்க்கவும், தலையையசைத்து, ''ஒரு பாலகன் வலி நன்று நன்று'' என்று சிரித்து, பிரமப்படைக் கலத்தை எடுத்துச் சுப்பிரமணியக்கடவுள்மேல் விடுத்தான். அது வந்து கிட்டும்பொழுது, அவருடைய திருக்கரத்திலுள்ள வேற்படை சென்று விழுங்கியது. அதனைக்கண்ட சூரபன்மன் மனம் வருந்தி, விட்டுணுப் படைக்கலத்தை எடுத்து அக்கினிபோலக் கோபித்து விட்டான். அப்படை அளவில்லாத விட்டுணுக்களுடைய உருவங்களை உண்டாக்கிக் கிட்டிய பொழுது, வேற்படை அதனையும் விழுங்கியது. தான் விடுத்த இரு படைக் கலங்களையும் வேற்படை விழுங்கியதைச் சூரபன்மன் கண்டு வருந்தி, ''சிவப்படைக்கலத்தை யான்விடின் யார் அதனைத் தடுக்கவல்லவர்!'' என்று மனத்திலெண்ணி, அதனைவிடத்துணிந்து, அப்படையை எடுத்து அர்ச்சனைசெய்து, விரைந்து விடுத்தான். அப்படைக்கலம் எல்லையிலாத உருத்திரமூர்த்திகளுடைய கோலம் எத்திசைகளினும் உண்டாக ஆரவா ரித்து, நெருப்பை வீசி, விரைந்து சென்றது. திக்குயானைகள் எட்டும் இறந்தனபோல வீழ்ந்தயர்ந்தன; வடவாமுகாக்கினி ஓடியது. ஆதிசேஷன் உட்கி உலைந்தான்; பூமி நெக்கது; பலவகைமேகங்களும் இடிகளைச்சிந்தி இரிந்தன; சூரியன் துடித்தது; சந்திரன் சுழன்றது; மேரு வெடித்தது; அண்டம் விண்டது; இலக்கம் வீரர்கள் நடுங்கினர்; மற்றைவீரர்களும் பூதர்களும் கலக்க மெய்தினர்; தேவர்கள் ''இதனை விலக்கல் அரிது'' என்று ஓடினர்கள். சிவப்படைக்கலம் இவ்வாறுக வர, அதனைச் சுப்பிர மணியக்கடவுள் பார்த்து, ''இது நமது பிதாவினுடைய படை'' என்று திருவுளஞ்செய்து, ஒரு திருக்கரத்தை நீட்டி, தந்தவன் வாங்கிய தன்மைய தென்னப் பற்றி ஏந்தி நின்ருர். அதனைச் சூரபன்மன் பார்த்து, ''இவன் யான் விட்ட விட்ட படைக்கலங்களுக்கெல்லாம் மாருக வேருெரு படைக் கலங்களையுஞ் செலுத்திலன்; அப்படைக்கலத்தை விடுத்து அதனை மாற்ற வந் துணியான்; என் படைகள் தன்னைக் கிட்டும்பொழுது அவைகளெல்

லாவற்றையும் கவர்ந்தான். கேடில்லாத சிவபெருமானுடைய குமாரன் என்பதைக் காட்டினான். என்னோடு பொருதற்கு இவனன்றி வேறொரு வருமில்லை. இவனோடு பொருதற்கு யானன்றி வேறொருவருமில்லை. அத் தன்மையில் எனக்கு நேர் இவனன்றி வேறுயாருளர்! இவனுடைய வேற் படையின் வலிமையையும், வில்லின் வலிமையையும், ஏனை வலிமைகளை யும் கண்டேன். இனி இந்தப் பாலகன் செய்வதனைப் பார்ப்பேன்'' என்று நினைத்து, மௌனமாக நின்றான்.

தன்னுடம்பிலணிந்த ஆபரணங்களெல்லாவற்றையும் சுப்பிரமணி யக்கடவுள் மாற்றுதலினால் இருள்போலப் பூமியில் நின்ற சூரபன்மன் அற்புதமெய்தி மயங்கியதை அருள்வள்ளலாகிய முருகக்கடவுள் பார்த்து, அவன்மேல் வைத்த திருவருளால் அவனை நோக்கி இவ்வாறு திருவாய் மலர்ந்தருளுவார். ''சூரபன்மனே, நீ இந்திரகுமாரனுகிய சயந்தனையுந் தேவர்களையும் அளவில்லாத காலம் சிறையிலிட்டாய். அதனை நீக்கி விடும்படி முன்னே ஓர் ஒற்றுவனை அனுப்பினேம். அவனுடைய சொல் லையும் மனத்திற் கொண்டிலை, தேவர்களுடைய சிறையையும் விடுத்தா யில்லை. ஆதலினால் நாம் யீண்டு வந்தோம். போரிற் றனக்கினையில்லாத தாரகனை முன்னே சங்கரித்ததுபோல உன்னையும் இன்றைக்கே சங்கரிப் போமென்று வந்தோம். உன்னைச் சூழ்ந்த இலக்ஷம் வெள்ளஞ் சேனைகளும், உன் வில்வலிமையும், உன்னாற் றூண்டப்பட்ட தெய்வப்படைக்கலங்களும் தொலைந்து மாண்டுபோயதைக் கண்டாய்; வறியனாய் நின்றாய். தாரகனைக் கொன்ற வேற்படை இருந்தது. இங்கே உன்னைக் கொல்லுதல் ஒரு பொரு ளுமன்று, அரிதுமன்று. நிராயுதனாய் நிற்கின்ற உன்னைக் கொன்றாற் பழி யாய் முடியுமென்று தருமமுறையினாற் சூழ்க்கின்றோம். இன்னும் பற்பலவற் றைச் சொல்லுகின்றதென்னை? தேவர்களுடைய சிறையை விடுப்பாயாயின் உன்னைக் கொல்லேம். அதனை மறுப்பின் விரைந்துகொல்வேம். உன் எண் ணங்களென்னை? சொல்லுதி'' என்றார். வெவ்வேறாய் நின்று உலகங்களை யெல்லாம் பாதுகாக்கத் திருவுளஞ்செய்து ஆறுதிருமுகங்களையும் பன்னி ரண்டு திருக்கரங்களையும் கொண்டருளிய சுப்பிரமணியக்கடவுள் சூரபன் மனுக்கு இவைகளைச் சொல்லியருள, அவன் மாறாக ஒன்றுஞ்சொல்லாத வனாய், மனத்தில் இவற்றை நினைப்பான்: ''பாலகன், 'இவன் படையை யிழந்தான்' என்று நினைத்து என்னுடைய தெளர்ப்பல்லியத்தை அறிந்த வன்போலத் 'தேவர்களுடைய சிறையை விடுகுதி' என்று சொல்லவும் வல்லனாயினன். தன்பிள்ளைமையினால் அழியாத என்னுடைய வீரத்தையும் வலிமையையுந் தெரிந்திலன். இவன் எல்லையில்லாதகாலம் என்னோடு நின்று போர்செய்ய நான் வாளாநிற்பினும், தன்றந்தை முன்கொடுக்க என்றுமழியாத ஒரு வரத்தைப்பெற்ற என்னைக் கொல்லவல்லனா! முடியும் குடையும் வெட்டுண்ண அவற்றுற்குறைவையடைந்த யான் தனித்து நிற் பினும் இவனுக்கழிவதில்லை, எனக்குப் புகழுண்டாவதுமில்லை, அதனாற் பழியொன்று வரும். அதைப் பாதுகாப்பேன். வெள்ளங்கள் வேற்று நீரையுடைய சிறுதடாகத்தைக் கொள்வதன்றி, ஊற்று நீரையுடைய பெரிய சமுத்திரத்தைக் கொள்வதற்கு முடியுமோ! இப்பாலகன் என்னு டைய சேனைகளையும் படைகளையும் அழிப்பதேயன்றி அழியாதவரத்தையு மழிப்பானோ! என்னை அவன் கொல்லுதலரிது; யானும் அவனை யிப்

பொழுது கொல்லுதலரிது. இந்நகரிலுள்ள பெரிய வளங்களோடும் படைகளோடும் யான் இனிவந்து போர்செய்து இவனை வெற்றிகொள்வேன். இது வசையன்று; போர்செய்யும் வீரர் பற்பலநாட்பொருது வெற்றி பெறினும் அது மேன்மையுமாம், வியப்புமாம், புகழுமாம். யானும் இச் செய்கையைச் செய்வதே கடன்; அறிஞருடைய சூழ்ச்சியுமிஃதே'' என்று பற்பல உபாயங்களைச் சூரபன்மன் எண்ணி, ஒரு மாயாமந்திரத்தை நினைந்து, மறைந்து அவ்விடத்தை நீங்கி மகேந்திரபுரியிலுள்ள தன்கோயிலுட் போயினன். மறைந்துபோய அவனுடைய முயற்சியை உயிர்க்குயிராய் வியாபித்திருக்கின்ற சுப்பிரமணியக்கடவுள் தெரிந்து, தீயனுகிய அவன் அறிந்து இன்னும் உய்வானே என்னுந் திருவருளால் தமது வேற் படையைச் செலுத்தி அவனுடைய உயிரைக்கவர நினைத்திலர்.

அப்பொழுது, அரிபிரமேந்திராதி தேவர்கள் சுப்பிரமணியக்கடவுளை யடைந்து வணங்கி, ''எம்பெருமானே, இந்தச் சூரபன்மன் என்றைக்குக் காசிபமுனிவரிடத்தில் வந்து பிறந்தானே அன்று முதல் வெற்றியே கொண்டு வியப்போடிருந்தான்; இன்றுதான் தேவரீரோடு பொருது தோற்றோடினன். அவனுடன் நீர் போர்செய்தல் ஒரு திருவிளையாடலேயன்றி, அவனுடைய உயிரைக்கவரத் திருவுளஞ்செய்வீராயின், போர செய்து தப்பியோடுவானே! அவன் உய்யுந்திறமுமுண்டோ! வெற்றியையுடைய சூரபன்மனை வேற்படையினுற் சங்கரிப்பீர். அதன்முன் அவனோடு அரிய போரைச்செய்தல் அடியேங்கள்மாட்டு வைத்த திருவருளன்றே?'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அறுமுகக்கடவுள் அதனை வினவி, ''நன்று நன்று'' என்று திருப்புன்முறுவல்செய்து, ''சூரபன்மன் இனி நம்முன் வந்து நின்று போர்செய்தால் விரைந்து சங்கரிப்போம்'' என்று திருவாய்மலர்ந்தருளினர்.

சூரபன்மனுடைய போரில் ஆற்றாது ஓடினவர்களும் துன்பமுற்று வீழ்ந்தயந்தவர்களுமாகிய பூதப்படைத்தலைவரும் பிறரும் ஒருங்குவந்து கூடி, சுப்பிரமணியக்கடவுளுடைய திருமருங்கில் வந்தடைந்து, சூரபன்மன் வானில் மறைந்ததை அறிந்து ஆரவாரித்து, ''போரிலே நம்மை அவமதித்த சூரபன்மனுடைய நகரத்திலுள்ள இம்மதிலை அகழ்ந்து கோபுரத்தைக் கடலில் இட்டு மகிழ்ந்து மீளுவோம்; வாருங்கள் வாருங்கள்'' என்று ஒருவரை ஒருவர் விரைந்தழைத்து, இனத்தோடு மதிற்புறத்தை யடைந்தார்கள்.

சேனைகளோடு சோர்வின்றி அம்மதிலைக் காத்துநின்ற அதிகோரன் என்னும் அவுணவீரன் பூதப்படைகள் சென்றதைக்கண்டு, மிகக்கோபித்து, அதரத்தைக்கடித்து, திண்டி பேரி திமிலை முதலாகிய வாத்தியங்கள் ஒலிக்க, போர் செய்யும்படி சேனைகளோடு வந்தெதிர்த்தான். பூதர்கள் மிகுந்த இருள்கூடின இடத்தில் எண்ணில்லாத சூரியர்கள் புகுந்தாற் போல அசுரர்களோடு எதிர்த்தார்கள். அசுரர்கள் தோமரம் பரசு சூலம் முதலாகிய படைகளை ஏவியும், ஈட்டியாற் குற்றியும், வாளாற் றுணித்தும் போர்செய்தார்கள். பூதர்கள் மலைகளையும் மரங்களையும் விடுத்தும், யானைகளை எற்றியும், தேர்களை ஒடித்தெறிந்தும், குதிரைகளைப் பிசைந்

தும், அவுணர்களைத் துகைத்தும் போர்செய்தார்கள். இரத்தம் பொங்கினை மூளை சரிந்தன; குடர்கள் சரிந்தன; பருந்துகளுங் காகங்களும் நெருங்கின. பூதர்கள் சிலரும் அவுணர்கள் பலரும் இறந்தார்கள். இவ்வாறு போர் செய்யும்பொழுது, பூதர்கள் மிகவுங் கோபித்து வலிமையோடு தாக்குதலுற், அவுணர்களெல்லாரும் நில்லாது பயந்தோடினர். அதனை அதிகோரன் கண்டு வெகுண்டு, ஓர் எழுப்படையை ஏந்திப் பூதப்படைகளை யெதிர்த்து, அவர்களுடைய தலைகளிலும் கைகளிலும் புயங்களிலும் மார்புகளிலும் முகங்களிலும் ஓடியோடி மோதி, ஓரிமைப்பொழுதிற் பலரைக் கொன்றான், அப்பொழுது பூதப்படைத்தலைவருள் மேகர் என்பவர் கண்டு கோபத்தோடு எதிர்சென்று, தமது கையிலுள்ள மலையொன்றை அதிகோரன்மேல் எறிந்தார். அவன் அதனைத் தன் கையிலுள்ள எழுவாற் காத்தான். மேகர் கோபத்தோடு அதிகோரனுடைய மார்பிலடித்தார். அவன் துன்புற்று, ''இவனுடைய உயிரை இப்பொழுதே முடிப்பேன்'' என்று இடிவீழ்வதுபோல மேகருடைய புயத்தில் எழுப்படையினால் அடிக்க அது முரிந்தது. மேகர் அதிகோரனுடைய கதுப்பிற் கையாலடித்தார். அவன் இறந்தான். அதனைக் கண்ட பூதர்கள் ஆர்த்து, மதிலின் வாயிலை யடைந்து, அங்கே ஆயிரம் யோசனை யுயர்ந்துநின்ற கோபுரத்தைப்பிடுங்கி, வாயுதேவன் மேருமலையின் சிகரத்தைப் பறித்தெறிந்தாற்போலச் சமுத்திரத்தில் எறிந்தார்கள். அப்பொழுது பூமி யசைந்தது; ஆதிசேஷன் மனந்திகிலுற்றான். மகேந்திரபுரியிலுள்ள அவுணர்கள் நடுங்கியயர்ந்தார்கள். பூதர்கள் எறிந்த சிகரம் முன்னுளில் விட்டுணு கூர்மவடிவங்கொண்டு தாங்குமுன் பாற்கடலில் அமிழ்ந்திய மந்தரமலைபோலச் சமுத்திரத்திலாழ்ந்தது. அங்குள்ள மலங்கு சுறு திமிங்கிலகிலம் முதலாகிய மீன்களெல்லாம் இரிந்தன. அச்சிகரத்தில் வசிக்கின்ற அவுணர்கள் உண்ணும் மீன்கள், ஒரு பகலின் முற்கூற்றிற் செய்த தீவினை அதன்பிற்கூற்றிற் றமக்குப் பலிக்குமென்று சொல்ல, அந்த அவுணர்களை யுண்டன. அச்சிகரி சமுத்திரத்தில் வீழ்ந்தமையாற் சமுத்திரசலம் மேற்சென்று அந்நகரத்தின் மதிலைச்சூழ்ந்தது. இவ்வாறு சிகரியழிய, பூதர்கள் மதிலின் வடபக்கத்தைப் பாதங்களினலுதைத்தார்கள். அது இடிவிழச் சாய்ந்த சிகரம்போலச் சாய்ந்தது. சாய்தலும், பூதர்கள் தாமரைத்தடாகத்திற் புகுந்த யானைகள்போல மகேந்திரபுரியுட்சென்று, தம்மோடெதிர்க்கின்ற அசுரர்களைக் கொன்றும், மாளிகைகளையும் சிகரங்களையும் உதைத்து வீழ்த்தியும், அழிவுசெய்தார்கள். அப்பொழுது பூதப்படைத்தலைவர்கள் ''யாம் சுப்பிரமணியக்கடவுளைப் பிரிந்து சூரபன்மனுடைய நகரத்தில் இனிச் செல்வது தக்கதன்று'' என்று சேனைகளுந் தாமும் மீண்டு, போர்க்களத்தையடைந்தார்கள். அச்சேனைகளைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்துத் திருவருள் புரிந்து, அவர்களோடு பாசறையையடைந்து, இந்திரன் முதலாகிய தேவர்களும் பிறரும் துதிக்கத் திவ்விய சிங்காசனத்தில் வீற்றிருந்தருளினார். அப்பொழுது சூரியன் அஸ்தமித்தான். இதுநிற்க, இனிச் சூரபன்மன் முதலாயினோரிடத்து நிகழ்ந்த செய்கைகளைச் சொல்வாம்.

போரில் ஓலித்தோடிய சூரபன்மன் மகேந்திரபுரியிலே தன் மனைவியாகிய பதுமகோமளை யிருக்கின்ற கோயிலில் அமளியைச்சேர்ந்து, நித்

திரை செய்யாதவனையும், ஒருவரோடும் பேசாதவனையும், போருக்குரிய உபாயங்களையே நினைத்துக்கொண்டிருந்தான். அவன் போருக்குப் போனதையும், சுப்பிரமணியக்கடவுளோடு போர்செய்து புறந்தந்து வறியனாய் நகருக்கு மீண்டதையும், ஒற்றுவர்கள் பானுகோபனுக்குச் சொன்னார்கள். மந்திரங்களையும் மாயங்களையும் படைக்கலங்களையும் சாதனைசெய்துகொண்டிருக்கின்ற அவன் அதனைக் கேட்டு, மனம் வருந்தி, பிதாவினுடைய கோயிலையடைந்து, அவனுடைய கால்களை வணங்கிச் சொல்வான்: ''என் பிதாவே நேற்றைத்தினம் 'பகைவர்களிறக்கும்படி போர்செய்வாய்' என்று எனக்குச் சொல்லியனுப்பினாய். தமியேன் சென்று வந்தெதிர்த்தவர்களோடு போர்செய்தேன்; அறுமுகன் போருக்கு வந்திலன். ஒழிந்த வீரர்கள் சூழ்ந்த படைகளோடு நெருங்கிவந்து என்னுடன் போர்செய்தார்கள். யான் மோகப்படையைத் தூண்டி அவர்களுடைய உணர்ச்சியையும் வலியையுங் கெடுத்து எல்லாரையும் வென்றேன். அறுமுகன் அப்பொழுது ஒரு படையை விடுப்ப என்னுடைய மோகப்படை வலிமைநீங்கி வருந்தி மீண்டது. அதனால் அந்த வீரர்களெல்லாரும் பின்பு உணர்வுவரப்பெற்று எழுந்துபோயினர். இது என்ன வெற்றி!'' என்று யானும் மீண்டேன். மனம் வெட்கித்து உன்னுடன் ஒன்றுஞ் சொற்றிலேன். ''சிவபெருமானும் பிறரும் முன்னாளில் எனக்குத் தந்த படைக்கலங்களினாலும் மாயங்களினாலும் பகைவர்களெல்லாரையும் நாளைக்குக் கொன்று வெற்றிபெறுவேன்' என்று மீண்டுவந்து, இன்று சூரியோதயத்தில் அப்பகைவர்களோடு போர்செய்யும்படி புறத்திற் சென்றேன். அதன்முன் நீ சேனைகளோடு விரைந்து போருக்குப் புறப்பட்டாய் என்று சொன்னார்கள். அழியாவரத்தையுடைய என் பிதாவே, பகைவர்களோடு போர்செய்தற்கு நீ, ஒரு துணையையும் வேண்டிலை. அதனை நினைத்து, போருக்குப் புறப்பட்ட யான் மீண்டு வந்திருந்தேன்; இது என் செய்கை. நீ போருக்குச் செல்லும் பொழுது, மந்திரிமார் முதலாயினோரோடு யோசித்தாயில்லை; என்னையு மழைத்துச் சொன்னயில்லை. நால்வகைச் சேனைகளோடும் போருக்குப் புறப்பட்டாய். இது பெருமையோ! தேவர்களுக்கு ஆக்கத்தையும், அவுணர்களுக்கு ஏக்கத்தையும், இந்திரனுக்கு இன்பத்தையும் கொடுத்தாய். மகாராஜனுகிய நீ பாலகனையும் பூதகணங்களையுங் குறித்துப் போருக்குச் செல்லுதல் தலைமையாகுமா? கீர்த்தியிற் சிறந்த மேலோர் சிறியரோடு போர்செய்வாராயில் வெல்லினும் புகழில்லை. அவரை யாவரும் இகழ்வர். இனிக் கழிந்ததுபோக சிறியனுயினும் யான் இங்கே ஒன்று சொல்வேன்; அதை மனத்துக்கொள். இன்றிரவு கழிந்தபின் யான் போய் எல்லாரையும் வெற்றிகொண்டு வருவேன்; என்னை அனுப்புதி. யான் பாலகனை வெற்றிகொள்வதையும், அவனைச் சூழ்ந்த படைகளை அழிப்பதையும், ஒற்றுவர்கள் பார்த்து வந்து சொல்ல, பிதாவே, நீ மகிழ்ச்சியிற்சிறந்திருக்குதி. அறுமுகனை மற்றை வீரர்களோடு வெற்றி கொள்ளேனுயின் இங்கே வரேன்; நீ விரும்பி எனக்குக் கொடுக்கின்ற அரசாட்சியையும் வேண்டேன்'' என்று பானுகோபன் கூறினன். சூரபன்மன் அவற்றைக் கேட்டு மகிழ்ந்து, பானுகோபனை நோக்கி, ''மும்மூர்த்திகளும், மூவுலகங்களிலுமுள்ள தேவர்களும், திக்குப்பாலகர்களும் மற்றை யெவரும் எதிர்த்தாலும், என்றம்பியைக் கொன்ற சிவகுமாரனை வெல்லுதல் அரிது.

அவனெடு எதிர்த்துப் போர்செய்ய வல்லவர் என்னையன்றியில்லை. அவனைச் சிறியன் என்று நினையாதே; அவன் வலிமையில் ஒப்பில்லாதவன். கிரவுஞ்சமலையைப் பிளந்த வேற்படையை ஏந்திய மிக்க வலியினனுகிய அப்பாலகனை யானே இனிமேல் வெல்லுகின்றேன். அது நிற்க, யான் இன்னுஞ் சொல்வதொன்றுண்டு. மகனே, அதனைக் கேள். நீ சேனைகளோடு சென்று ஒற்றுவனுக வந்து நம்முடைய நகரத்தை உலவுசெய்த சேனைத்தலைவனுகிய வீரவாகுவென்பானைத் தனியே அழைத்துப் போர் செய்து; வென்றுவருவாய்'' என்ருன். சூரபன்மன் சொல்லியவற்றைப் பானுகோபன் கேட்டு, ''என்பிதாவே, உனது திருவுள்ளமிதுவாயின் நீ சொல்லிய இதனை முன்னமே ஓரிறைப்பொழுதில் முடிப்பேன்'' என்ருன். அவனை நோக்கிச் சூரன் மகிழ்ந்து, போருக்குச் செல்லும்படி விடைகொடுத்தனுப்பி, இடையிலே தான் செய்த சூழ்ச்சிகளெல்லாவற்றையும் விடுத்து செல்வங்களை அனுபவித்துக்கொண்டிருந்தான்.

பானுகோபன் பிதாவின் பணியைச் சிரமேற்கொண்டு தன்கோயிலை யடைந்தான். அவனிடத்துப் பல தூதுவர்கள் விரைந்துவந்து கால்களை வணங்கி நின்று, ''அரசகுமரனே, இவற்றைக் கேட்பாய். நம் மரசன் இன்றைக்குப்போய்ப் போர்செய்து மீண்டபின், சிவகுமாரன் மாட்டுள்ள அளவில்லாத பூதர்கள் இந்நகரின் வடக்குப்பக்கத்தை யடைந்து, அங்கே காவல்செய்துநின்ற அதிகோரன் என்பானைக் கொன்று, சேனைகளை யழித்து, அங்குநின்ற சிகரியைப் பிடுங்கிக் கடலில் வீசி, அது ஆழ்ந்தபின் வடதிசை மதிலை முழுதும் அழித்து மீண்டார்கள். இந்த நகரம் கரையில்லாத சமுத்திரம் போன்றது'' என்று சொன்னுர்கள். பானுகோபன் அவற்றைக் கேட்டு, தன் பக்கத்துநின்ற வீரர்களுட் சிலரை நோக்கி, ''நம்முடைய அசுரத்தச்சனை ஒரு கணப்பொழுதிற் கொண்டு வருதிர்'' என்ருன். அவர்கள் விரைந்துசென்று அவுணத்தச்சனை யடைந்து, ''நமது அரசகுமாரனுகிய பானுகோபன் உன்னை யழைத்தான்'' என்று சொல்லி அழைத்துக்கொண்டு வந்து, பானுகோபனுக்குமுன் விடுத்தார்கள். தச்சன் தன்கால்களை வணங்கி நிற்றலும், பானுகோபன் ''நீ விரைந்து இந்நகரத்தின் வடமதிற் சிகரியையும் பிறவற்றையும் முன்போலச் செய்குதி'' என்று சொல்லியனுப்பி, அதன்பின் மாகாயன் என்னும் வலிய அவுணனை அழைத்து, நீ வடமதிற் சிகரத்திற்போய்க் காவல் செய்துகொண்டிருப்பாய்'' என்று பதினுயிரஞ் சேனைவெள்ளங்களோடு அவனை அனுப்பி, தானும் தன் மாளிகையை அடைந்தான். அசுரத்தச்சன் அப்பொழுதே சென்று, வடதிசை மதிலிலுள்ள கோபுரத்தைச் சித்திரவுறுப்புக்களோடு மனத்தால் நினைத்துச் சாதுரியம் பொருந்த அமைத்துச் சென்ருன். மாகாயனென்பவன் தீபங்கள் சூழ நால்வகைச்சேனைகளோடு அவ்வடதிசை மதில்வாயிலைக் காத்திருந்தான். இது நிகழும் பொழுது. இருட்காலம் நீங்கச் சூரியன் உதித்தான்.

திருச்சிற்றம்பலம்.

# மூன்றுநாட்பானுகோபன்யுத்தப் படலம்.

பானுகோபன் சூரியோதயத்தில் நித்தியகருமத்தை முடித்து, தான் போரிலே தோற்றோடிவந்த சிறுமையைச் சிந்தித்து, மாயையை வரும்வண்ணம் நினைத்துத் தோத்திரஞ்செய்ய, அவள் அவனுக்கு முன்னரே தோன்றி நின்றுள். பானுகோபன் கும்பிட்ட கையினனாய், பேற்றை நினைத்து, ''என் பாட்டியே, கேட்பாய். அறுமுகனுடைய தூதுவனோடு, போர்த்தொழிலைச் செய்து மானத்தையும் வலிமையையும் இழந்து மிகவும் வருந்தி, பகைவரோடு போர்செய்யத் தொடங்கி முடிவிற் பின்னிடுவாரடைகின்ற பிழையையும் பெற்றேன். இதற்குமேல் எனக்கு வரும் பழியாது!'' என்றான். அதனை மாயை கேட்டு, ''பானுகோபனே, நீ வேதாசாரத்தை விலக்கினாய்; தேவர்களைச் சிறையில்வைத்து, இந்திரனுடைய அரசுரிமையை அழித்தாய்; முனிவர்கள்செய்கின்ற தவத்தைக் குறைவித்தாய்; கொடுமையைப் பேணினாய்; மும்மூர்த்திகளும் தேவர்களும் முனிவர்களும் மற்றையாவரும் பகையானால் எங்ஙனம் வாழ்வாய்; கொடுமைகளையே பெரிதுஞ் செய்தலாற் பழியைப் பூண்டாய்; பகைவர்கள் இந்நகரத்தை யழித்துப் போர்செய்ய அவர்களுக்குத் தோற்றாய்; விதியைக்கடந்தவர் யாவர்? இனிப்பற்பலவற்றைச் சொல்லி ஆவதென்? மைந்தனே, நீ வேண்டுவனவற்றைச் சொல்லுதி, தருவேன்'' என்றாள். பானுகோபன் அவற்றைக்கேட்டு மிகமகிழ்ந்து, ''முந்தைநாள் என்னோடு பொருது வெற்றியடைந்து சென்ற வீரவாகுவென்பானை இன்றைக்குச் சேனைகளோடுயான் கொல்லும்படி ஒரு படைக்கலத்தைத் தருவாய்'' என்றான். அதனைமாயைகேட்டு, மாயப்படைக்கலத்தை யுண்டாக்கி அவனுடைய கையிற்கொடுத்து, ''இப்படையை மந்திரத்தோடு விடுவாயாயின், இது வீரவாகுவையும் அவனைச்சேர்ந்த பிறரையும் அறிவைக்கெடுத்துச் சூழும்; வாயுவின்றொழிலையுஞ் செய்யும்; இற்றைநாள் வெற்றி உன்னதாகும், போருக்குச் செல்லுதி'' என்று கூறி ஆகாயத்திற் போயினாள்.

மாயப்படைக்கலத்தைப்பெற்ற பானுகோபன் முன்னைநாளிற் றனடைந்த பழியைநீங்கிப் பெருமிதமுற்று, அப்பரற்க்கூட்டை முதுகிற் கட்டி, கவசத்தையிட்டு, வில்லையேந்தி, போர்க்குரிய மற்றைய கருவிகளையும் புனைந்து, வாயுப்படை, அக்கினிப்படை, யமப்படை, சந்திரப்படை, சூரியப்படை, பிரமப்படை, விஷ்ணுப்படை, சிவப்படை ஆகிய படைகளை யெடுத்துக்கொண்டு, வாயிலில் வந்து, அசுரர்கள் ''வெற்றியைப் பெறுக'' என்று ஆசி கூற, சயந்தனோடு போர்செய்தநாளிற் கவர்ந்த ஒரு தேரிலேறினான். அவன் போருக்குச் செல்லுதலை ஒற்றுவர்களால் அறிந்த சேனைகள் எழுந்தன. பதினாயிரம் வெள்ளங் குதிரைகளும், பதினாயிரம் வெள்ளம் யானைகளும், பதினாயிரம் வெள்ளந்தேர்களும், இருபதினாயிரம் வெள்ளம் காலாட்களும் ஆகிய நால்வகைச் சேனைகளும் அவனை வந்து சூழ்ந்தன. பூதாளி சமுத்திரசலம் வற்றும்படி மொய்த்தன. முரசு, துடி, குடமுழா முதலிய வாத்தியங்கள் ஆர்த்தன. அவுணவீரர்கள் இடிபோல ஆரவாரித்துச் சூழ்ந்தார்கள். இவ்வாறுகச் சேனைகள் தன்பக்கத்துச் சூழச் சென்ற பானுகோபன் நகரை நீங்கி மதிலின்புறத்தில் வந்து, தன் பக்கத்தில் வருகின்ற ஒற்றுவர்களுள் ஆயிரங் குதிரைமுகங்களையுடைய

ஒரொற்றுவனை நோக்கி, ''நீ சிவகுமாரனிருக்கின்ற பாசறையிற் சென்று, வீரவர்குவைக் கண்டு, சூரபன்மனுடைய பணியினுற் போர்செய்து உன்னை இன்றைக்குக் கொன்று புகழைப் பெறும்படி நினைத்து வந்தேன்; விரைந்து வருகுதி. முன்னைநாட் போரென்று எண்ணற்க' என்ற வார்த்தையை என் சொல்லாக வெற்றியோடு அவனுக்குச் சொல்லி மீளுவாய்'' என்று சொல்லியனுப்பினன். அவன் நன்றென்று ஏமகூடமென்னும் பாசறையை யடைந்து, வீரவாகுதேவரைக் கண்டு, ''பானுகோபன் இன்றைக்கு உன் உயிரைக்கவரும்படி சபதங்கூறிப் போருக்கு வருகின்றான். இதனை உனக்குச் சொல்லி உன்னைஅழைத்துவரும்படி என்னை ஏவினன். வாக்கில் வல்லவனே விரைந்து போருக்கு வருகுதி'' என்றான். வீரவாகுதேவர் சிரித்து, ''யான் பானுகோபனுடைய உயிரைக் கவரவருகின்றேன். போய் அவனுக்குச் சொல்லுதி'' என்றார். ஒற்றுவன் அதனைக்கேட்டு மீண்டான்.

வீரவாகுதேவர் தம்பிமார் முதலிய சுற்றத்தோடு சுப்பிரமணியக் கடவுளுடைய திருமுன் சென்று, அவருடைய பாதங்களை வணங்கி எழுந்து கைகூப்பி நின்றார். சர்வவியாபகராகிய அக்கடவுள் அங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து, ''முன்னைநாளில் உனக்குத் தோற்றோடிப்போன பானுகோபன் இன்றைக்கு உன்னோடு போர்செய்யும்படி வலிமையோடு வந்தான். நீ முன்னைநாளிற் போலச் சேனைத்தலைவர்களோடு போய் எதிர்த்துப் போர் செய்குதி. அவன் ஏவிய படைக்கலங்களுக்கு எதிராகிய படைக்கலங் களைத் தூண்டுதி. அந்த வஞ்சன் மாயையைச் செய்தால் நம்முடைய வேற்படை விரைந்து வந்து அதனை நீக்கும். போவாய்'' என்று அருளிச் செய்தார்.

வீரவாகுதேவர் அப்பணியைச் சிரமேற்கொண்டு, அவருடைய பாதங்களை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தூணவர்களும் படைத் தலைவர்களும் தம்மை வந்துசூழத் தேரிலேறினர். ஆயிரம் வெள்ளம் பூத சேனைகள் மலைகளையும் மரங்களையும் படைக்கலங்களையும் கொண்டு சூழ்ந்து ஆர்த்தன. இவ்வாறுசேனைகள்சூழ வீரவாகுதேவர் பானுகோபன் நிற்கின்ற போர்க்களத்தை யடைதலும், பூதசேனைகளும் அவுணசேனைகளும் போரைச்செய்தன. அவுணர்கள் வேல், தோமரம், எழு, தண்டு முதலாகிய படைகளைச் சிந்தினர். பூதர்கள் முத்தலைச்சூலம் முசலம் மலை மரம் முதலியவற்றைச் சிந்தினர். அவுணர்கள் வாட்படையினுற் பூதர்களு டைய சிரங்களையும் தோள்களையுந் துணித்தும், சுரிகை முதலியவற்றுன் குற்றியும், தண்டு முதலியவற்றுற் றாக்கியும் போர்செய்தார்கள். பூத வீரர்கள் அவுணர்களைப் பிடித்துக் கைகளால் அடித்தும், கிழித்தும், கழுத்தை ஒடித்தும், மிதித்துருட்டியும், எழுக்களால் அடித்தும், குதிரை களையும் வீரர்களையும் கைகளால் அள்ளி அள்ளி யானைகளிலும் தேர்களி லும் அடித்தும் போர்செய்தார்கள். சமுத்திரங்களும் ஊழித்தீயும் மாறு பட்டுப் பொருதாற்போல இவ்வாறு அவுணர்களும் பூதர்களும் போர் செய்ய, இரத்தநீர் பாய்ந்தது. ஊனைவிரும்பிப் பகழிகள் மொய்த்தன. பூதர்கள் சிலரும் அவுணர்கள் பலரும் இறந்தார்கள். இலக்கத்தெண்ம ரும் பாணமழைகளைச் சொரிந்து அவுணக்கடல்களைக் கலக்கினர்கள். இவ் வாறு அவர்கள் போர்செய்தலால் பல அவுணசேனைகள் இறக்க, இறவா

தொழிந்தன தோற்றோடின. அதனைக்கண்ட பானுகோபன் பெருமூச்சு விட்டு நகைத்து, நெருப்பைபோலக் கனன்று, போர்செய்யும்படி நினைத்து ஒரு வில்லையெடுத்து, பாகனை நோக்கி ''தேரைச் செலுத்துதி'' என்றான். அவன் நன்றென்று பூதசேனையின்மேற் செல்லும்படி தேரை விடுத்தான்.

பானுகோபன் பூதசேனையை வந்தடைந்தமையை வீரவாகுதேவர் பார்த்து, தூனைவர்களோடு விரைந்து அவனுக்கெதிரேபோய், ஒரு வில்லை யெடுத்தார். பானுகோபன் அவரை வந்தெதிர்த்து, வில்லை வளைத்து, நாணெலிசெய்தான். அண்டங்கள் வெடித்தன. தேவர்கள் தலையைத் துளக்கினர். வீரவாகுதேவர் வில்லைவளைத்துப் பலகோடி இடியேறுகள் ஒன்றுய் ஒலித்தாற்போல நாணெலிசெய்தார். அவ்வொலி செவிப்புகுத லும், பானுகோபன் கோபித்து, அநேக பிறைமுகப்பாணங்களை விண்ணு லகிலும் மண்ணுலகிலும் திசைகளிலும் செறியும்படி விடுத்தான். வீர வாகுதேவர் அதனைத் தெரிந்து, அத்தன்மையினவாகிய எண்ணில்லாத பாணங்களை முகிலும் நாணச் சொரிந்தார். அவ்விருவருடைய பாணங் களும் ஒன்றனையொன்று எதிர்கவ்விச் சிந்துவனவாயின. அவர்களுடைய தேர்கள் தேவருலகத்திலும், பிரமவிஷ்ணுக்களுடைய உல கங்களிலும், சமுத்திரங்களிலும், எட்டுத்திசைகளிலும், சக்கரவாளகிரியி லும், அண்டங்களிலும் உலாவுவனவாயின. தேவர்கள் அத்தேர்களை எவ் விடத்தன என்று அறியாதவர்களாயினர். இவ்வாறு இருவரும் போர் செய்யும்பொழுது, பானுகோபன் வீரவாகுதேவருடைய மார்பில் ஆயிரம் அம்புகளை எய்தான். அவர் வெகுண்டு, அத்தூணைப்பாணங்களை ஏவி, அவனுடைய தேர்ப்பாகனையும், குதிரைகளையும், இரதத்தையும் ஒருங்கே அழித்தார். பானுகோபன் வேறொரு தேரின்மேற் பாய்ந்து வில்லைவளைத் தான். அதன்முன் வீரவாகுதேவர் ஆயிரம் பாணங்களை விடுத்து அவனு டைய மார்பைப் பிளந்தார். அவன் நடுங்கித் துன்பமுற்றான். அதனைக் கண்ட பூதர்கள் ஆரவாரித்தார்கள். பானுகோபன் காதில் நஞ்சு புகுந் தாற்போல அவ்வொலியைக் கேட்டுப் பொறுமிக் கோபித்து, ''தெய்வப் படைக்கலங்களிலுலே தூதுவனுடைய வலியைத் தொலைப்பேன்'' என்று துணிந்து, வருணப்படைக்கலத்தை எடுத்து வில்லிற்பூட்டி, ''நீ சென்று பூதப்படைகளையும் தூனைவர்களையும் தூதுவனையும் கொல்லுதி'' என்று சொல்லி விடுத்தான். அது ஊழிக்காலத்துச் சமுத்திரம்போல வெள்ள மாய்ப் பரந்து, இடியொலிசெய்து, விண்ணுலகைத் தடவி விரைந்து சென்றது. அதனைக்கண்ட தேவர்கள் நடுங்கினர். பூதர்களும் கலக்கங் கொண்டு நின்றார்கள். தூனைவர்களும் இன்னதென்றறியாது குலைந்தார் கள். வீரவாகுதேவர் அதனைப்பார்த்து, அக்கினிப்படைக்கலத்தைச் செலுத்தினர். புகையும் பொறிகளும் கொள்ளிகளும் சுடர்களும் வெம் மையும் எழுந்து வானமுந் திசையும் செறிந்தன; அண்டங்கள் வெடிக் கலுற்றன; கங்கை வற்றியது; மீன்கள் துடித்தன; சமுத்திரங்கள் சுருங் கின; மலைகள் பொடியாயின; பூமி பிளந்தது. இவ்வாறுக அக்கினிப் படைக்கலஞ் சென்று வருணப்படையைக் கெடுத்து, வெள்ளத்தையுண்டு, பானுகோபனுக்குப் புறத்திற் சூழ்ந்தது. அவன் அப்படையைக் கண்டு

வாயுப்படைக்கலத்தைச் செலுத்தினன். அது பிரசண்டமாருதத்தின் உருக்கொண்டு, அண்டமும் உயிர்களும் நடுங்கும்படி நெருங்கி, அக்கினிப் படையைக் கெடுத்து, பூதசைனியங்களைக் கொல்லும்படி வந்தது. வீர வாகுதேவர் அதனைக்கண்டு, நாகப்படையைச் செலுத்த, அது எண்ணில் லாத பாம்புகளின் றெருகுதியாய்ச் செறிந்து, ஆகாயமெங்கும் நிமிர்ந்து, விடத்தைக் கான்று, சூரியனையும் படத்தால் மறைத்து, நெருப்பையு மிழ்ந்து, வாயுப்படையை யுண்டு, பானுகோபன்மேற் சென்றது. அவன் அதனைக் கண்டு ''இதுவே இதற்கு எதிர்'' என்று எண்ணி, கருடப் படைக்கலத்தை விடுத்தான். அது செல்லுதலும், நாகாஸ்திரம் சூரிய னைக்கண்ட பனிபோல ஒடியது. அக்கருடப்படை ஆரவாரித்து, எண்ணில் லாத கலுழன்களுடைய உருவத்தையுண்டாக்கி நேரே வர, வீரவாகுதேவர் கோபமுற்று, நந்திப்படைக்கலத்தைச் செலுத்தினர். அது அளவிறந்த இடபங்களினுருவங்களைக்கொண்டு, பெருமூச்சுவிட்டு, அண்டங்கள் அதிர ஆரவாரித்து, பாதங்களிலே சிலம்பொலிக்கவும், கிங்கிணி மாலைகள் கழுத்தில் ஆர்ப்பவும், முரிப்பு அண்டகோளகையினை உரிஞ்சவும், கோடு கள் உலகங்களை அலைப்பவும் நடந்து, தன்முன்வந்த கருடப்படையை விழுங்கி, ''பானுகோபனைக் கொல்லுகின்றேன்'' என்று சென்றது. அத னைப் பானுகோபன் பார்த்து யமப்படையைச் செலுத்தினன். நந்திப்படை அதனையும் அழித்தது. அதன் வலியைப் பானுகோபன் கண்டு, அதரத்தைக் கடித்து, பிரமப்படைக்கலத்தை விடுத்தான். அது வெகுண்டு ஆகாயவழிக்கொண்டு சென்று நந்திப்படையைக்கண்டு இடைந்து, ''நீசனுகிய பானுகோபனுடைய ஏவலினால் வந்தேன். உம்மு டைய வரவையறியேன்; என்மேற் கோபங்கொள்ளற்க'' என்று சொல்லி வணங்கி மீண்டது. தேவர்கள் ஆரவாரித்தார்கள். அதனைப் பானுகோபன் கண்டு விட்டுணுப்படையை விடுத்தான். அது எங்கும் விட்டுணுக்களுடைய உருவமமைந்து, பஞ்சாயுதங்களைத் தாங்கி, மாயத்தையுடையதாகி, நந் திப்படைக்கெதிரே சென்று, அதனோடு போர்செய்து நின்றது. அதனை வீரவாகுதேவர் கண்டு, வீரபத்திரப்படையை எடுத்து வழிபட்டு விடுத் தார். அது செல்லுதலும், நந்திப்படையோடு பொருத விட்டுணுப்படைக் கலம் தொலைந்தது. அதனைப் பானுகோபன் கண்டு, ''சிவப்படைக்கலத்தை விடுப்பேன்'' என்று சிந்தித்து, அதனையெடுத்து, மனத்தினுற் பூசனை செய்து தோத்திரம்பண்ணி வணங்கி விடுத்தான். அதனை வீரவாகுதேவர் பார்த்து, உடனே, தாமும் அப்படைக்கலத்தை எடுத்து, அன்பினோடும் மனத்தால் அருச்சனைசெய்து, ''பானுகோபனுடைய படைக்கு மாறுய்ப் போர்செய்து திரும்புதி'' என்று பிரார்த்தித்து வணங்கி விடுத்தார். பானுகோபன் விடுத்த சிவப்படைக்கலம் அதற்கெதிராகச் சென்றது. அவ் விரு படைக்கலங்களும் உருத்திரமூர்த்தியினுடைய வடிவத்தைக்கொண்டு ஊழிக்காற்றையும், வடவாமுகாக்கினியையும், புகையையும், நஞ்சையும் ஒவ்வோர் புடையிலுமிழ்ந்தன; பூதத்தொகைகளையும், காளித்தொகை களையும், வைரவர் கூட்டங்களையும், வீரலக்குமிகளையும் தந்தன; பேயினங் களையும், இருட்டையும், மாயைகளையும், காலர்களையும் ஒவ்வோர் புடை யிலுமிழ்ந்தன; அளவில்லாத சமுத்திரங்களையும், முகிற்கூட்டங்களையும், பாம்பின்கூட்டங்களையும், அளவில்லாத சூரியமண்டலங்களையும் கான்றன;

அனந்தகோடி ஐயனர்களையும், அனந்தகோடி யானைமுகத்தர்களையும், அனந்தகோடி அரிமுகத்தர்களையும், அனந்தகோடி சரபவுருவினர்களையும் தந்தன; யானை, குதிரை, தேர், விமானம், சிங்கம், யாளி முதலிய வற்றிலேறிப் பல படைக்கலங்களைச் செலுத்திக்கொண்டு வரும்படி வெவ் வேறுப் உருத்திரகணங்களை யுண்டாக்கின; பிரமா, விட்டுணு, இந்திரன், குபேரன், வாயு, இயமன், வருணன், அக்கினி ஆகிய இவர்களுடைய படைகள் எண்ணில்லாதனவற்றைத் தந்தன; கற்களையும், கொள்ளிகளையும், இடிகளையும், மழு சக்கரம் வேல் பாணம் ஆகிய படைகளையும், பொழிந்தன. சிவப்படைக்கலங்களிரண்டும் இவ்வாறுகிய உருவங்களை உண்டாக்கி, சமுத்திரங்களையும் வானுலகத்தையும் திக்குக்களையும் பூமியையும் விழுங்கி, அண்டகோளகையைப் பிளந்து, அப்பாற்போய், தம்முண் மாறுபட்டு நின்று போர்த்தொழிலைச் செய்தன. இப்படி இவ்விரு சிவப்படைக்கலங்களும், போர்செய்தலால், சத்தசமுத்திரங்களும், தேவ்கங்கையும், புறவேலையும் வற்றின; அங்குள்ள உயிர்களெல்லாம் பதைபதைத்திறந்தன; பூமி எரிந்தது; வானுலகம் இடிந்தது; மேருமலை பொரிந்தது; நக்ஷத்திரக் கூட்டங்கள் பொடிந்தன; சூரியர்களுடைய தேர்கள் எரிந்தன; எல்லா வண்டங்களிலும் புகை நிமிர்ந்தது; ஏழு மலைகளும் கரிந்தன; திக்கு யானைகள் கவிழ்ந்தன; சூறைக்காற்றுக்கள் உலைந்தன; வடவாமுகக்கினிகள் அவிந்தன; ஏழுபாதலங்களும் குலைந்தன; அண்டச்சுவர்கள் குலுங்கின; உயிர்கள் யாவும் உலைந்தன; தேவர்கள் ஓடினர்; ஆதிகூர்மம் தொலைந்தது; அட்டமாநாகங்கள் சுருண்டன; மேகங்கள் புரண்டன; பூமிலக்குமியும், மகாலக்குமியும், பொருமி விட்டுணுவைத் தழுவினர்; சரசுவதியும், காயத்திரியும், சாவித்திரியும் வெருவியோடிப் பிரமாவைத் தழுவிக்கொண்டார்கள்; இரதி மன்மதனை இறுகப்புல்லிக் கலக்கமுற்றாள்; மற்றைத் தேவர்களும், இருடிகளும், தத்தம் மனைவியர்களைப் புல்லி நிற்க முடியாதவர்களாயும் உய்யும் வழி ஒன்றுங் காணாதவர்களாயும் அச்சத் தாலோடினர்; பூதவீரர் தியங்கினர்; இலக்கரும் மருண்டனர்; தூனைவர்கள் எண்மரும் மயங்கி வீரவாகுதேவரை வந்து சூழ்ந்தார்கள்; அவுணர்கள் யாவரும் புரண்டார்கள்; தேர்கள் யாவும் பொடிந்தன; யானைகளும் குதிரைகளும் உருண்டன; பானுகோபன் ஒருவன் மாத்திரம் பிழைத்து நின்றான். மகேந்திரபுரியிலிருக்கும் அவுணர்கள் யாவரும் இவ்வாறு நிகழ்ந்த நீமையை நோக்கித் துண்ணென்று பயந்து, ''பதினெழுலகங்களும் அழியும் ஊழிக்காலம் இதுவோ?'' என்று குலைகுலைந்தார்கள். ''பேரொலி பிறந்தது; அண்டங்கள் பிளந்தன; சுழல்காற்று வீசுந்தது; பேரழல் பரவிற்று; சூரியன் அழிந்தான்; நமது மகேந்திரபுரியிலுள்ள சனங்கள் யாவும் உலைந்தன; புகுந்தநியாதோ? அறிகுதிர்'' என்று சூரபன்மன் ஒற்றுவர்களைத் தெரிந்துவரும்படி அனுப்பினன். அவ்வொற்றுவர்கள் செல்லுதற்குமுன் சில தூதுவர்கள் போரினிகழ்ந்ததை யறிந்து, மனநடுங்கி ஆகாயமார்க்கமாய் வந்து, சூரபன்மனை வணங்கிநின்று இவ்வாறு சொல்லுவார்: ''மகாராசனே, கேட்பாய். உன்குமாரனுகிய பானுகோபன் வீரவாகுவென்பானோடு பெரும்போரைச்செய்து, பின்பு தெய்வப்படைக்கலங்களை விடுத்து, அதன்மேற் சிவப்படைக்கலத்தைத் தூண்டினன். வீரவாகுவும் அப்படையைத் தூண்டினன். அந்த இரண்டு படைக்கலங்களும் உல

கங்களையெல்லாம் ஒருங்கே அழிக்கவல்ல பல உருவங்களைக்கொண்டு யாவரும் அஞ்சும்படி சென்று அண்டங்கண் முழுவதையுந் தொலைத்துப் போர் செய்தன. இது நாம் அறிந்தது'' என்றார். சூரபன்மன் அதனைக்கேட்டு, ''பானுகோபன் சிவப்படைக்கலத்தை விடுத்தும் இன்னும் ஒற்றுவனை வென்றிலன். அவனைச் சிறியனாக நினைந்தோம். அந்தோ! ஒருவருடைய உருவத்தைக் கண்டு இகழாது அவருடைய வலிமையை நினைப்பதே புத்தி'' என்று கூறினன். சிவப்படைக்கலங்களிரண்டும் திருவிளையாடலை நினைத்து, உருத்திரமூர்த்திகள் இரண்டு வடிவமாகிப் போர்செய்வதுபோலத் தம்மை விடுத்த வீரவாகுதேவரும் பானுகோபனும் காணும்படி போர்செய்து, தாம் உண்டாக்கிய உருவங்களெல்லாவற்றையும் ஒடுக்கி, தம்மால் மாறுபட்ட அண்டங்கள் வானுலகங்கள் சமுத்திரங்கள் மலைகள் முதலிய எல்லாவற்றையும் முன்போலாகச் செய்து, பகைவர்களைச் சார்ந்தனவல்லாத உயிர்களுக்கெல்லாம் அருள்செய்து, தம்மைச் செலுத்திய இருவர்மாட்டும் மீண்டுபோயின.

தேவர்கள் அதனைக் கண்டு, ''பானுகோபன் இதனாலும் வெற்றி கொண்டிலன். இனி இப்பொழுதே இறப்பான்; எம்முடைய துன்பமும் நீங்கிற்று'' என்றார்கள். பானுகோபன் தன் பக்கத்திலுள்ள நால்வகைச் சேனைகளையுங் காணுதவனாய், அவையெல்லாமிறக்கத் தான்றனித்தமையைக் கண்டு, ஏங்கி இரங்கி, ''சிவப்படைக்கலமும் இவனுக்கெதிரேபோய் மீண்டதென்னில் இனிச் செலுத்த வேறு படையொன்றுண்டோ! என்னுடைய சேனைகள் முழுவதும் இறந்தன. யான் தனித்து நின்றேன். இனிச் செய்வதென்னை! இங்கே யான் நின்றால் இறக்கத்தான் நேரும். ஆதலாற் போர்செய்வதுஞ் செயலன்று'' என்று எண்ணி, ஒரு சூழ்ச்சி செய்து, மாயத்தால் அரூபியாகி விரைந்தெழுந்து சென்று, ஆகாயத்தில் நின்றான். அதனைக்கண்ட பூதகணங்களெல்லாம் ''பானுகோபன் பயந்து ஒளித்தோடினான்'' என்று ஆரவாரித்தன; அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயினன்.

வீரவாகுதேவர் பானுகோபன் மறைந்ததைக் கண்டு, ''இந்தக் கள்வன் இன்றைக்கும் இறந்திலன்; விரைவில் ஓடித்தப்பினன்; யான் இனிச் செய்வதென்னை? சொல்லுதிர்'' என்று தம்பிமாரை வினவினர். அவர்கள் வணங்கி, ''வந்தெதிர்ந்த அவுணசேனைகளெல்லாம் இறந்தன; பானுகோபன் தனித்தவனாய் மறைந்தோடிப் போயினன்; இனிப்போருக்கு வரும் வீரர் இல்லை; அந்திக்காலமும் அணுகியது; சேனைகளும் யாமும் மீண்டுபோய் எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளை வணங்கி நாளைக்கு வருவதே முறை'' என்றார்கள். தம்பிமார் கூறியதைக்கேட்ட வீரவாகுதேவர் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளைப் போய்த் தரிசிக்கும்படி எண்ணினர்.

ஆகாயத்தில் மறைந்துநின்ற பானுகோபன் அதனைத் தெரிந்து; இவ்வாறு சிந்தித்தான்: ''முன்னைநாள் வீரவாகுவுக்கு நான் தோற்றேன் என்று ஒரு வசை பரந்ததன்றி, பின்னும் இற்றைத்தினத்திலும் யான் இவனுக்குத் தோற்றோடுவேனாயின் என்னை யாவருமிகழ்வர். போரிலே பயந்து புறங்கொடுத்தோடுபவரைத் துணைவர்கள் தந்தையர் தாயர் மக்

கள் மனைவியர் ஆகிய இவர்களும் மறப்பார்களென்றுல், பிறரிகழ்தலைச் சொல்லவும் வேண்டுமா? இன்றைக்கும் முன்னைநாட்போல யான் இவனுக்குத் தோற்றேடுவேனுயின், பிதாவாகிய சூரபன்மன் என்னைக் கோபித்துத் துறப்பான்; சூரியனைச் சிறைசெய்த என் புகழ் அழியும்; என்பிதாவின் புகழ்களுமழியும். யாராயினும் ஒரு பகைவர் வந்தெதிர்த்தால் அவரோடு எதிர்த்து நின்று போர்செய்து அவரைக் கொல்லுதலே வலிமை, வஞ்சனையினுல் வெல்லுதல் நீதியன்று: அதுவும் முடியாதாயின், தாமிறத்தலே தகுதி. அதுவன்றிப் புறங்கொடுத்தல் நன்றே! 'இவன் எதிர்த்து நின்று போர்செய்து வருந்தி இன்றைக்கும் தோற்றேடினன்' என்னும் பழியை யடைதல் தகுதியன்று. உபாயத்தையேனுஞ் செய்து விரைந்து பகைவர்களை வெல்லல்வேண்டும். இவனுக்கெதிரில் நின்று யாதாயினும் ஒரு வலிமையையுடைய படைக்கலத்தை விடுவேனுயின், இந்த வீரனும் எதிரான படைக்கலத்தைத் தூண்டி அதனைச் சின்னமாக்குவன். 'பானுகோபன் தோற்றேடினன், அவன் இனி இறந்தான்' என்று போர்க்களத்திலே என் பகைவர்கள் சொல்ல மறைந்து நின்று, இப்பொழுதே ஒரு படைக்கலத்தைச் செலுத்தி, சிறந்த வெற்றியைக்கொண்டு யான் மீளுதல் வேண்டும். தெய்வப்படைக்கலங்களைச் செலுத்துவேனுயின், அவைகளெல்லாம் இவர்களிடத்து வெவ்விய உருவங்களைக் கொண்டு சென்று ஒன்றுஞ் செய்யாமல் மீள்வதன்றி இவர்களைக் கொல்லுவதில்லை. யான் விடுக்குந் தெய்வப்படைக்கலங்கள் எடுக்கின்ற கோலங்களை வீரவாகு தெரிவானுயின், அவற்றிற்கேற்ற படைகளைத் தூண்டி விரைவில் அழித்துவிடுவான்; யான் ஆகாயத்தில் மறைந்து நிற்பதும் வெளிப்படும். வெளிப்பட்டால், பகைவர்கள் இங்கும் வந்து சூழ்ந்து போர்செய்வர்; யான் இவர்களோடு பொருது இளைப்படைந்தேன். ஆதலால் இன்னும் நின்று போர்செய்யவும் முடியாது; முதலுட்போல ஒளித்தோடுதலுமரிது; பகைவர்கள் நிற்குமிடத்து விரைந்து சென்று அவர்களுடைய அறிவைக் கெடுத்து இறுதியைச் செய்கின்ற மாயப்படையை விடுதலே தகுதி'' என்றிவ்வாறு பானுகோபன் நினைத்து, அற்றைத்தினத்தில் மாயவள் கொடுத்த மாயப்படையை விரைந்தெடுத்துப் பூசித்து, அப்படைக்கலத்தை நோக்கி, ''நீ செல்லும்பொழுது சத்தம் பரிசம் ரூபம் என்னும் மூன்றினுலும் மனத்தினுலும் யாவரும் அறியாவண்ணம் நம்பகைவரிடத்துச் சென்று, அவர்களுடைய அறிவைக் கெடுத்து, உயிரை நீக்கி, சுத்தோதக சமுத்திரத்தில் எறிவாய்'' என்று சொல்லி விடுத்தான். விடுதலும், அப்படைதான் வந்தடைதல் ஒருவரும் அறிதற்கரிதாகி விரைந்து பூமியில் வந்து, பூதகணங்களையும் கணத்தலைவர்களையும் இலக்ஷம் வீரர்களையும் எண்மரையும் வீரவாகுதேவரையும் ஒருங்கு சூழ்ந்து, உணர்வை ஒழித்தது. அதனுல் யாவரும் மயங்கி வீழ்ந்துகிடந்தார்கள். அவர்களுடைய உயிரைக் கவர்ந்து தன்வலியைச் செய்யமுடியாமையை அம்மாயப்படைக்கலம் அறிந்து, துன்பத்தில் மூழ்கி, அவர்களைச் சமுத்திரத்திற் கொண்டுபோய் இட எண்ணி, ஊழிக்காற்றின் வடிவத்தைக் கொண்டு ஆலாகலவிஷம்போலப் பரந்து, வீரவாகுதேவர் முதலிய எல்லாரையும் ஆகாயவழியாக எடுத்துக்கொண்டு விரைந்து சென்று, உவர்ச்சமுத்திரமுதல் ஆறுசமுத்திரங்களையுந் தாண்டி, அவற்றிற்கப்பாலுள்ள சுத்தோதக சமுத்திரத்தில் இட்டு, பிரியாமல்

உடனிருந்தது. ஆகாயத்தில் மறைந்து நின்ற பானுகோபன் இத்தன் மையைப் பார்த்து, ''வீரவாகு இறந்தான்; பூதரும் பிறரும் இறந்தார்; இவர்கள் மீண்டுவர இது மலையன்று, சமுத்திரத்தில் ஆழ்ந்தார்; நம் முடைய சூழ்ச்சி நன்று'' என்று பற்கள் விளங்கச் சிரித்து, அடங்காத களிப்பில் மிக்கவனுய், விரைந்து அவ்விடத்தை நீங்கி ஆகாயமார்க்கமாய் மகேந்திரபுரியையடைந்து, தன் பிதாவைக்கண்டு வணங்கி நின்று, இவ் வாறு சொல்லுவான்: ''யான் இன்றைக்குச் சென்று பலதிறப்பட்ட போர் களைச் செய்து, அதன்பின் வீரவாகுவையும் அவன் பக்கத்திலுள்ள தம்பி மார் முதலாயினேரையும் ஆயிரம்வெள்ளம் பூதகணங்களையும் வென்று உயிரைப் பருகி, அவர்களுடைய உடம்பைச் சுத்தோதக சமுத்திரத்தில் இட்டேன். என்பிதாவே நீ சிறிதுங் கவலை கொள்ளாதே. சேனைகளோடு நாளைக்குச் சென்று, ஊழிக்காற்றைப்போல வலைந்து பாசறையை அழித்து, அறுமுகனையும் வென்று, விஷ்ணுவையும் பிரமாவையும் இந்திரனையும் பிடித்துக் கொண்டு வந்து தருவேன்'' என்முன்.

இப்படிப் பானுகோபன் சொல்லும்பொழுது, சூரபன்மனுக்கு மகிழ்ச்சி யுண்டாயது; வலயங்கள் பூட்டறும்படி புயங்கள் நிமிர்ந்தன; கட கங்கள் நெரிந்து வீழ்ந்தன; உரோமங்கள் பொடித்தன; சிரிப்புண்டாயது; அவன் இருக்கைவிட்டெழுந்து தன் எதிரில் நிற்கும் பானுகோபனை மார் போடு அழுந்தத்தழுவி தன்னுடைய சிங்காசனத்திலேற்றி, குழந்தைநாளிற் போலத் தன் அயலில் இருத்திக்கொண்டு, ''தந்தையராயினேர் மகிழ்ச்சி யோடு வீற்றிருப்பது தம் புதல்வர்கள் குடியைத் தாங்கிய பின்னன்றி வேறுண்டோ? என் அப்பனே, நீ வந்து நம்முடைய பழைய குலாசாரத்தைப் பாதுகாத்தலால் யானும் மனத்தில் ஒரு கவலையுமின்றி மகிழ்ச்சியிற் சிறந் தேன். யான் அந்நாளிற் றவஞ்செய்ததும் பற்பலநாளுண்டு. அதற்காக இந்த அரசையும் செல்வங்களையும் சிவபெருமான் கொடுத்தார் என்பது முன் சென்ற வார்த்தைகள். அவை நிற்க, நீ இன்று அவற்றைத்தர யான் பெற் றேன்'' என்று பற்பல உபசாரங்களைச் சொல்லி, அவன் முன்னணிந்திருந்த ஆபரணங்களை மாற்றி, முடிமுதல் வீரக்கழல்வரையும் புதியனவாகத் தருவித்துத் தன்கையிலை அணிந்து, ''மகனே, நீ முன்சொன்னபடி நாளைக் காலையிற் சென்று, அறுமுகனை வென்று அவனைச் சூழ்ந்த பூதப்படைகளைக் கொன்று, அவனுக்குப் பின்னே நிற்கின்ற தேவர்களைச் சிறையிற் பிணித்து, என்பகையை முடிக்குதி'' என்முன். இவற்றைக்கேட்ட பானுகோபன் ''என் பிதாவே, அவ்வாறு செய்வேன்'' என்று கூறினன். சூரன் ''மைந்தனே, போரில் நொந்தாய்; உன்னுடைய மாளிகைக்குச் செல்லுதி'' என்முன். அவன் விடைபெற்றுக்கொண்டு சதுரங்கசேனைகள்சூழ விரைந்து தன் கோயிலையடைந்து, வாழ்வோடிருந்தான். இதுநிற்க; சுத்தோதகசமுத்திர சுத்திரத்தில் ஆழ்ந்த வீரவாகு முதலிய வீரர்கள் தேறி எழுந்தவாற்றைச் சொல்வாம்.

பானுகோபன் மாயப்படைக்கலத்தை விடுத்ததையும், அது வீரவாகு தேவரையும் துணைவர்கள் முதலாயினேரையும் மயக்கிச் சுத்தோதகசமுத் திரத்திலிட்டதையும் தேவர்கள் கண்டு, பெருமூச்சுவிட்டு, மெய்குலைந்து, மனம் பதைபதைத்துக் கண்ணீர்விட்டழுது, நாவுலர்ந்து, கைகளையுதறி, முகம் வெடிக்கும்படி கையாலறைந்து, வியர்த்து, அடங்காத துயரோடு அற

முகக் கடவுளுக்கு விண்ணப்பஞ் செய்யும்படி ஓடிப்போயினர்கள். நாரத முனிவர் இவைகளெல்லாவற்றையும் பார்த்து, அத்தேவர்களுக்கு முன்னே மிகுந்த வேகத்தோடு ஓடிச் சென்று, பாசறையில் வீற்றிருக்கும் சுப்பிர மணியப்பெருமானுடைய திருவடிகளை வணங்கி அஞ்சலிசெய்து நின்று, "எம்பெருமானே, பானுகோபன் ஒரு சூழ்ச்சியால் ஒளித்து நின்று மாயப் படையை விடுத்து, வீரவாகுதேவரையும் தூணவர்களையும் மற்றையோரை யும் மயக்கி, அப்படையைக்கொண்டு சுத்தோதக சமுத்திரத்தில் இடுவித் தான்" என்று இந்திரனுடைய மனம் நடுங்கும்படி விண்ணப்பஞ்செய்தார். அப்பொழுது, தேவர்கள் தனித்தனி சென்று சென்று அக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் திருமுன்னின்று, தாமும் அதனை விண்ணப்பஞ்செய் தார்கள். அவ்வார்த்தைகளைத் திருச்செவிமடுத்த சுப்பிரமணியக்கடவுள் தமது வேற்படையை நோக்கி, "நீ சுத்தோதகசமுத்திரத்திற் போய், அங் கிருங்கின்ற மாயப்படையை அழித்து, வீரவாகு முதலாயினோருடைய மயக் கத்தை ஒழித்து, அவர்களை இங்கே விரைந்து தருதி. செல்வாய்." என்று பணித்து விடுத்தருளினர். அப்படை நன்று என்று அப்பணியைச் சிரமேற் கொண்டு, அவ்விடத்தை நீங்கி, பாழ்புகளையும் விடத்தையும் கூற்றுவர்களை யும் இடிகளையும் பலவகைப் படைக்கலங்களையும் புகையையும் அக்கினியை யும் உமிழ்ந்து, சூற்கொண்ட மேகத்தினிருளையும் சக்கரவாளகிரிக்குப் புறத்திலுள்ள இருட்படலங்களையும் மற்றையிருள்களையும் விழுங்கி, அக்கினி யமன் வாயு வருணன் இந்திரன் பிரமா விஷ்ணு முதலாகிய இவர்களுடைய படைகள் சேவித்து உடன்செல்ல ஆயிரகோடி சூரியர்களைப்போல விரிந்து, விரைந்து சென்றது. அவ்வேற்படையாகிய சூரியன் செல்லுதலால், தேவர் களுடைய முகமாகிய தாமரைகள் மலர்ந்தன; அசுரர்களுடைய முகமாகிய கருவிளங்கள் குவிந்தன. இவ்வாறுக அவ்வேற்படை தேவர்கள் துதிக்க விரைந்து ஆறுசமுத்திரங்களையுந் தாண்டிச் சுத்தோதகசமுத்திகத்தை யடைந்தது. அதனை மாயப்படைக்கலம் தெரிந்து, அஞ்சி, வீரவாகுதேவர் முதலியோரை விடுத்துத் தொலைந்து போய்த் தன் வலிமை கெட்டு அழிந் தது. அப்பொழுது அந்தச் சமுத்திரராசன் உடம்பு முழுதும் வியர்க்க வணங்கி இவ்வாறு சொல்வான்:- "அளவில்லாத வலியையுடைய பானு கோபன் மாயப்படைக்கலத்தைத் தூண்டி நம்முடைய வீரர்களையும் கண நாதர்களையும் மயக்கி, அறிவிழந்த அவர்களை என்னிடத்திலிட்டான். அம் மாயப்படைக்கலம் அவனுடைய பணியைச் செய்துகொண்டு என்னிடத்தில் இருந்தது. எம்பெருமானே, நீர் மருந்துபோல இங்கே எழுந்தருளினமையை அப்படைகண்டு துன்பமுற்று, வீரர்களை நீங்கி முரிந்து வீழ்ந்து இறந்தது. அடியேன் அம்மாயப்படையின் வலியைக் கெடுத்து அதனை அழிக்க வன்மை யில்லேன். அசுரர்களாலே துன்புறுஞ் சிறியேன் என் செய்வேன். 'பகைவர் களாகிய அவுணர்களோடு போர்செய்ய வந்தவீரர்களும் அறிவிழந்து வீழ்ந் தார்கள். இவர்கள் எப்பொழுது எழுவார்களோ' என்று மனக்கவலையோடு அடியேனும்புலம்பிக்கொண்டிருந்தேன். 'சிவகுமாரராகிய அறுமுகக்கடவுள் அசுரத்தொகைகளையெல்லாம் ஓரிறைப்பொழுதினுட் சங்கரிப்பார். அக்கட வுள் போர்செய்யத் திருவுளங்கொண்டது ஒரு திருவிளையாடலாகும்' என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன். 'தாம் பாசறையில் வீற்றிருந்துகொண்டு பூதவெள்ளங்களோடு அனுப்பிய வீரர்களைப் பானுகோபன் வருத்துதல் அப் பெருமானுக்குத் திருவுள்ளம்போலும்' என்று எண்ணி அயர்ந்தேன்.

"முருகக்கடவுள் அசுரர்களைச் சங்கரித்தால் உய்வேன்' என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற பேதையேன் செய்தபிழை ஒன்றுமில்லை. அடியேனைக் கோபஞ்செய்யாதொழிக'' என்றான். வேற்படை சமுத்திரராசனை நோக்கி ''நீ வருந்தாதொழிக'' என்று அருளிச்செய்து, சமுத்திரத்தில் ஆழ்ந்துகிடக் கின்ற வீரவாகுதேவர் முதலிய வீரர்களை அடைந்தது. அது அடையுமுன், அவர்களுடைய அறிவைக்கெடுத்த மாயப்படைக்கலம் நீங்கியது. அவர்கள் யாவரும் பாம்பின் நஞ்சு தலைக்கேறப்பெற்று மூர்ச்சித்தவர் மாந்திரி களுடைய பார்வையினால் அது நீங்கி எழுவதுபோலப் பதைபதைத்து உயிர்த்து, அயர்ச்சிநீங்கி, முன்னையறிவுதிக்கப்பெற்று எழுந்து, சுத்தோதக சமுத்திரத்தின்மேல் வந்து, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். பானுகோபனுடைய மாயம் அழிந்தது. பாவங் கள் ஒழிந்தன. பூமிதேவி சந்தோஷமுற்றாள். தருமதேவதை கூத்தாடியது. புவனங்களெல்லாம் ஆர்த்தன. முனிவர்களும் தேவர்களும் பூமாரி பொழிந் தார்கள். அப்பொழுது, வீரவாகுதேவர் முதலாயினோர் வேற்படை ஆகாய மார்க்கமாக வருதலைத் தரிசித்து, அடங்காத மகிழ்ச்சியுற்று, பலமுறை வணங்கித் துதித்து, சிரமீது கூப்பிய கரத்தினராய், அதனை எதிர்கொண்டு சென்று சூழ்ந்தார்கள். அவர்களுள், அறிஞருளறிஞராகிய வீரவாகுதேவர் தங்களைப் பானுகோபனுடைய மாயப்படைக்கலம் சூழ்ந்ததையும், அதனாற் றும் அறிவிழந்ததையும், அது சுத்தோதகசமுத்திரத்திலிடத் தாம் வீழ்ந் ததையும், வேற்படையினால் மீண்டதையும், பிறவற்றையும் அறிந்து, ''வேற்படைப் பெருமானே, ஆறுதிருமுகமுடைமை, பேரொளியுடைமை முதலிய காரணங்களாற் கந்தசுவாமியைப்போல உம்மைத் தரிசித்து மனக் கவலை நீங்கினேம். பானுகோபனுடைய மாயப்படை வருத்த அறிவிழந்த யாமெல்லாம் படைக்கலங்களுக்கு நாயகமாகிய நீர் எழுந்தருளிவருதலால் உணர்வும் உயிரும் பெற்று உய்ந்தோம். தாரகாசுரன் கிரௌஞ்சமலையில் அடியேங்களை வீழ்த்தி வஞ்சனை செய்த அந்நாளிலும் எழுந்தருளிவந்து அறி வைத்தந்து இரக்ஷித்தருளினீர். அதுவன்றி இன்றும் வந்து ஆண்டருளினீர். அதனால் யாங்கள் உய்ந்தோம். உமக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு உலகத் தில் உண்டோ?'' என்று கூறினர். அவற்றை வேற்படை கேட்டு, ''நீங்கள் அறிவிழந்தமையை நிருமலராகிய நமது கடவுள் அறிந்து என்னை அனுப்பி யருளினர். அதனால் வந்தேன். யான் வருதலை அறிந்து மாயப்படை அழிந் தது. நீவிர் அங்கே வருதிர்'' என்று கூறியது. வீரவாகுதேவர் நன்றென்று வணங்கி மகிழ்ச்சியினால் மலர்ந்த திருமுகத்தினராய், துணைவர்களும் படைத்தலைவர் முதலாயினோரும் தம்மைச்சூழ, அவ்வேற்படைக்குப்பின்னே சென்றார். அது முன் சென்று சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கரத் தில் வீற்றிருந்தது.

திருச்சிற்றம்பலம்.

::::::::::::

## நகர்புகு படலம்.

வேற்படை முன்செல்ல, வீரவாகுதேவர் அறுமுகக்கடவுளுடைய திரு வடித்தாமரைகளைத் தியானித்துக் கொண்டு, தம்பிமார் முதலாயினோரோடு உவர்ச்சமுத்திரத்தில் வந்து, மகேந்திரபுரியைப் பார்த்து, பற்களைக்

கடித்து, கண்கள் தீப்பொறி காலவும் வாய் புகையை உமிழவும் பெரு மூச்சுவிட்டு, வேர்வையுண்டாகக் கோபித்து, இவ்வாறு சொல்வார்: ''போர்செய்ய வலிமையின்றிப் பயந்தோடிப்போய் ஆகாயத்தில் நின்று கொண்டு வஞ்சனையைச் செய்து, மாயப்படைக்கலத்தால் நம்மை வென்று, மீண்டும் உயிரோடிருந்த கள்வனுகிய பானுகோபனுடைய உயிரைப் பருகியன்றி, எம்பெருமானுடைய திருவடிகளைத் தரிசனஞ்செய்தற்கு யான் போவதில்லை. யான் நின்று அவனுடைய நகரத்தை அழிப்பேன். பானு கோபன் வந்தெதிர்த்தால் அவனையும் யானே கொல்வேன். அவனைக் கொல்லாதொழிவேனையின், பின்னர் இவ்வுயிர்வாழ்க்கையை விரும்பேன், யான் பிறந்தேனுமல்லேன், என்னுடைய ஒரு வில்லும் யானும் நெருப் பிற் புகுவேன்'' என்றார். வீரவாகுதேவர் இவ்வாறு சபதங்கூற, தம்பி மாரும் பிறரும் அதனைக்கேட்டு, ''வீரரே, பகைவர்களுக்குத் தோற்ற யாங்கள் வாளாமீண்டு செல்லுதல் பழியாம்; அவர்களை வெற்றிகொண் டன்றி எம்பெருமானுடைய திருவடிகளைப் போய்த் தரிசிப்பதுண்டோ! நீர் கூறிய இதுவே உறுதி'' என்றார்கள். அதனைகேட்ட வீரவாகுதேவர் ''உங்களுடைய மனத்துணிவு நன்று; சேனைகளோடு சென்று பகைவர்களு டைய ஊரை அக்கினிக்குதவி, வந்தெதிர்த்தவர்களைக் கொன்று, பானு கோபனையுஞ் சங்கரிப்போம். எல்லீரும் வாருங்கள்'' என்றார். அவ்வார்த் தையை யாவருங் கேட்டு மகிழ்ந்து உடன் செல்ல, வீரவாகுதேவர் ஓரிமைப் பொழுதினுள் மகேந்திரபுரியின் மேற்றிசைவாயிலிற் போயினர். பூதவெள் ளங்கள் கடல் உடைந்தாற்போல ஆர்த்தன. அவ்வொலியைக்கேட்ட அவுணர்களுட் சிலர் ''இஃதென்னவொலி?'' என்று ஆகாயத்திற்போய்ப் பார்த்தார்கள்; சிலர் மனம் பதைத்தார்கள்; சிலர் உடம்பு வேர்த்தார்கள்; சிலர் ''இது நம் பகைவர்களுடைய ஒலி'' என்று கோபித்தார்கள்.

மாயவனிடத்தே தோன்றினவனும், தன்னுடைய ஆணையைக் கடந்த கூற்றுவனுடைய முத்தலைச் சூலத்தையும் வருணனுடைய பாசத்தையும் பறித்து அவர்களைச்சிறைசெய்தவனும், அக்கினிச்சுவாலைபோலும் உடம்பை யுடையவனும் ஆகிய புலிமுகனென்பவன் சதுரங்கசேனைகள் தன்னைச்சூழ, தீபப்பிரகாசத்தோடு மேற்றிசைவாயிலைக் காத்துக்கொண்டு சிங்காசனத் தில் இருந்தான். அவன் வீரர்களோடு பூதசேனைகள் ஆரவாரித்துக்கொண்டு அங்கு வந்ததைக் கண்டு, கோபித்து, இருக்கைவிட்டெழுந்து, சேனைகள் முன்செல்ல எதிர்த்துச் சென்றான். பூதர்கள் வந்து, மலைகளையும் மரங்களை யும் தண்டு முதலிய ஆயுதங்களையும் வீசிப் போர்செய்தார்கள். அவுணர்கள் பாணம், வேல், மழு முதலாகிய படைகளைச் சொரிந்து போர்செய்தார்கள். இங்ஙனம் போர் செய்யும்பொழுது, இருதிறத்துப் படைகளிலும் பலர் கெட்டார்; இரத்தம் ஆறுபோலப் பெருகியது. அதனைப் பூதப்படைத் தலைவர்கள் கண்டு எதிர்த்து, தேர்களையும் குதிரைகளையும் யானைகளையும் ஒன்றின்மேலொன்றை அடித்தும், அவுணர்களுடைய மூளைகளைத் தகர்த் தும் அழித்தார்கள். தனக்கு முன்சென்ற சேனைகளெல்லாம் அழிந்ததைப் புலிமுகன் கண்டு, ஒரு சூலப்படையை எடுத்துக்கொண்டு பூதப்படை களுக் கெதிரே சென்றான். பூதர்கள் பலமலைகளைப் பிடுங்கி அவன்மேலெறிந் தார்கள். புலிமுகன் அவற்றையெல்லாம் சூலப்படையினற் பலதுண்ட மாக்கி, கடல்போல ஆரவாரித்துக்கொண்டு வந்தான். சிங்கர் என்னும்

பூதப்படைத்தலைவர் அவனுடைய வலியை நோக்கி, ஒரு முத்தலைச் சூலத்தை யேந்தி விரைந்து அவனுக்கெதிர்சென்று உரப்பினர். புலிமுகன் முத்தலைச் சூலத்தினாற் சிங்கருடைய மார்பிற் குத்தினன். அவரும் புலி முகனுடைய மார்பில் முத்தலைச் சூலத்தினாற் குத்தினர். அச்சூலங்கள் அவ்விருவருடைய மார்பையும் பிளந்து முதுகிற் புறப்பட்டன. உதயகிரி யில் உதிக்குஞ் சூரியனைப்போல இருவருடைய உடம்புகளிலும் இரத்தம் பெருகியது. அவரிருவரும் முறைமுறையாக அச்சூலங்களை வாங்கி வாங்கி அவயவங்களோறும் குத்திப் போர்செய்தனர். அப்படைகளிரண்டும் ஒடிந்து வீழ்ந்தன. பின் மற்போர் செய்தனர். புலிமுகன் இளைத்து வீழ்ந் தான். சிங்கர் அவனைக் காலினால் உதைத்துருட்டிக் கொன்றார். தேவர் கள் சிங்கர்மீது பூமழை பொழிந்தார்கள். பூதர்கள் ஆரவாரித்தார்கள். வீரவாகுதேவர் அதனைப் பார்த்து மகிழ்ந்தார்.

அப்பொழுது பூதர்கள் ''அவுணசேனைகள் அழிந்தன; மேலைவாயி லைக் காவல்செய்த புலிமுகனும் இறந்தான்; இனி நாம் மேற்றிசை மதிலை யழித்து நகரத்தினுட் செல்வோம்'' என்று சொல்லி முந்திச்சென்று, அம் மதிலைக் கால்களினால் உதைத்துச் சிந்தியும், சிகரங்களைப் பறித்து மகேந் திரபுரிக்குள் வீசியும், மாளிகை நிரைகளைக் கால்களினால் உதைத்துருட் டியும், வீதிகளிலே தொக்குநின்ற அவுணர்களை அழித்தும் உலாவினர். வீரவாகுதேவருடைய தம்பியர்கள் யானைகளும், குதிரைகளும், தேர்களும், அவுணர்களும், மாளிகைகள் சிகரங்கள் முதலாயினவும் அழியும்படி கோடாகோடி பாணங்களைச் செலுத்திச் சென்றார்கள். வீரவாகுதேவர் அக்கினிப்படைக்கலத்தையும் வாயுப்படைக்கலத்தையும் வில்லிற் பூட்டி, ''நீவிர் சென்று இந்நகரத்தை அழியுங்கள்'' என்று ஏவினர். அப்படை யிரண்டுங் கலந்து, சங்காரகாலத்தில் உலகங்களை யழிக்குந் தம்முருவை எடுத்து, ''பகைவர்களாகிய அசுரர்கள் இனி நம்மைக் கோபித்துச் செய் வதென்னை? நம்மை விடுத்த வீரவாகுதேவர் இங்கே உளர்; நாம் இனி இவர்களுக்கு அஞ்சேம்'' என்று அந்நகரமெங்குஞ் சூழ்ந்து, அக்கினியைக் கொளுத்தி அவுணர்கள் இரிந்து சிந்தும்படி சுட்டன. சில இடங்கள் எரிந்தன; சில இடங்கள் புழுதியாய்ப் பரந்தன; சில இடங்கள் வெடித்தன; சில இடங்கள் கரிந்தன; சில இடங்கள் பொரிந்தன; சில இடங்கள் புகைந் தன. சிவபெருமானுடைய திருப்புன்முறுவலால் முப்புரம் எரிந்தாற்போல இவ்வாறு அந்நகரம் எரிந்தது. அதனை ஒற்றுவர்கள் அறிந்து, சூரபன் மனுடைய கோயிலுட் புகுந்து அவனை வணங்கி, வாய்வெருவிச் சொல்லு வார்கள்: ''உன் குமாரனுகிய பானுகோபன் வீரவாகுமுதலியோரை மாயப் படையினாற் பொருது, சுத்தோதகசமுத்திரத்தில் இட்டான். மகாராஜனே, நீயும் அதனை அறிவாய். அதன்பின் நிகழ்ந்தவற்றைக் கேட்குதி. நாரத முனிவன் பாசறையிற் சென்று, இந்நிகழ்ச்சிகளைச் சிவகுமாரருக்குச் சொல்ல, அவர் வேற்படையைச் செலுத்தினர். அது சுத்தோதகசமுத் திரத்தை அடைந்தபொழுது, மாயப்படைக்கலம் அழிந்துபோயது. வீர வாகு முதலிய யாவரும் முன்போல அறிவுண்டாகப் பிழைத்தெழுந்தார் கள். தேவர்கள் அதுகண்டு ஆரவாரித்தார்கள். வீரவாகு முதலாயினோர் தம்மிடத்து வேற்படை வந்ததைப் பார்த்து அதனைக் கைகூப்பி வணங் கினர். அது 'நீவிரெல்லாரும் வாருங்கள்' என்று பணித்து, அவருக்கு முன்னே ஆகாயமார்க்கமாக விரைந்து சென்று, அறுமுகக்கடவுளுடைய

கரத்திலிருந்தது. மாயப்படைக்கலத்தினல் ஒருறுபாடுமடையாத வீரவாகு முதலாயினோர் விரைந்துவந்து நம்முடைய நகரின் மேற்றிசைவாயிலை அடைந்தார். அவ்வாயிலைக் காவல்செய்திருந்த புலிமுகன் என்பான் சேனைகளோடு போய் அவர்களை எதிர்த்துச் சிறிது போர்செய்தான். அவர்கள் அவனைக் கொன்றார்கள். அவனுடைய சேனைகளும் அழிந்தன. பூதர்கள் அம்மேலைத்திசை மதிலைக் கால்களினுற் றள்ளி வீழ்த்தி, அங்குள்ள சிகரத்தைப் பறித்து நம்மவர்கள் இறக்கும்படி நகரத்தின் நடுவே வீசினர்கள். வீரவாகுவும் அவனுடைய துணைவர்களும், பூதப்படைத்தலைவர்களும் நகரத்தினுட் புகுந்து மேற்றிசையில் அக்கினியைக் கொளுத்தி நின்று அழிப்பாராயினர். அவர்கள் கொளுத்திய நெருப்பு நகரிற் பதினுயிரம் யோசனை தூரத்தை எரித்தது. அவ்விடத்தை நாமும் பார்த்து வந்தோம். அரசனே, நீ இதனை மனத்தில் ஐயமாகக் கொள்ளற்க'' என்று ஒற்றர்கள் கூறினர்கள்.

ஒற்றுவர்கள் இவ்வாறு கூறுதலும், சூரபன்மனுடைய மனத்திற் செற்றம் மிக்கது; உரோமங்கள் சிலிர்த்தன; புருவங்கள் நெற்றியில் ஏறின; முடி நிமிர்ந்தது; கண்கள் அக்கினியைக் கான்று சுழன்றன. இவ்வாருகச் சூரபன்மன் கோபித்து, ஒற்றுவர்களை நோக்கி, ''நீவிர் வானுலகிற் சென்று, ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் அழிக்கச் செல்லும்படி அங்கே உறங்குகின்ற மேகங்களெல்லாவற்றையும் கொண்டுவருதிர்'' என்று பணித்தான். அயலில் நின்ற தூதுவர்கள் ''அரசனே, இப்பணியைச் செய்கின்றேம்'' என்று வானுலகிற்சென்று, சத்தமேகங்களையுங் கண்டு, கைகளாற் புடைத்து நித்திரைவிட்டெழச்செய்து, ''நம்மரசனுகிய சூரபன்மன் உங்களை அழைத்தான்'' என்று சொன்னர்கள். மேகங்கள் அதனைக்கேட்டு, சூரபன்மனுக்கெதிரே வந்து வணங்கி நின்றன. அவன் அவைகளை நோக்கி, ''இந்நகரத்தை எரிக்கின்ற அக்கினியைத் தணியுங்கள்'' என்று பணித்தான். அவைகள் நன்றென்று அவ்விடத்தை நீங்கி, புகையுருக்கொண்டு ஆகாயமெங்கும் பரந்து மின்னி, ஆயிரகோடி இடிகளைக் கக்கி, அந்நகரை அக்கினி எரிப்பதையும் அதனுல் அவுணர்கள் உலைவதையுங் கண்டு, ''யாம் இந்நெருப்பைத் தணித்தால் தேவநாயகராகிய முருகக்கடவுளுடைய சேனைத்தலைவராயுள்ள வீரவாகுதேவர் நம்மைக் கொல்வார்; அவியாது மீண்டுபோவோமென்னில், சூரபன்மன் சிறைசெய்வான்; நாம் இதற்குச் செய்வதென்னை'' என்று இவ்வாறு நினைத்து, ''சூரபன்மன் பலநாள் இடுகின்ற சிறையிலகப்பட்டுத் துன்பமனுமவிப்பதிலும், வீரவாகுதேவர் கொல்ல நாம் உயிரை விடுதல் இனிது'' என்று துணிந்து, ஒவ்வொரு துளியும் யானையளவினதாக ஓரிறைப் பொழுது மிக்க மழையைப் பொழிந்தன. பொழிதலும், அந்நகரின் மேற்றிசையை எரித்த அக்கினி அழிந்தது. அக்கினி தணிந்ததை வீரவாகுதேவர் கண்டு, ''இந்நெருப்பின் வலியை அழித்தவைகள் மேகங்களோ, அல்லது பகைவர்களாகிய அவுணர்களுடைய மாயமோ?'' என்று யோசித்தார். அப்பொழுது, நாரதமுனிவர் ஆகாயத்தில் வந்து, ''வீரரே, கேளும். இந்நெருப்பைத் தணித்தவைகள் யுகமுடிவில் வரும் மேகங்கள்; இவைகள் சூரபன்மனுடைய பணியினுல் வந்தன; விரைவில் வடவாமுகாக்கினிப்படையை விடுக்குதிர்'' என்று கூறி மறைந்தார். வீரவாகு

தேவர் அதனைக்கேட்டு, அப்படையைச் செலுத்த அது விரைந்து சென்று, முகிற்கூட்டங்களைச் சூழ்ந்து, அவற்றின்கணுள்ள ஜலமெல்லாவற்றையும் உண்டு, வீரவாகுதேவரிடத்து மீண்டு வந்தது. மேகங்கள் வலியிழந்து வீழ்ந்து, அறுமுகக்கடவுளுடைய சடாக்ஷரத்தைச் சிரத்தையோடு உச்சரித்து, வலிபெற்று, உய்ந்தெழுந்து, புறவேலையில் ஓடின. அதுகண்ட பூதசேனைகள் துள்ளி ஆர்த்தன. தேவர்கள் பூமழைபொழிந்து கூத்தாடினர். ஒற்றுவர்கள் இவற்றைக்கண்டு பொறுமல், மிக விரைந்து சூரபன்மனுடைய கோயிலைடைந்து, அவனுடைய கால்களை வணங்கி, ''அரசனே, நீ அனுப்பிய ஏழுமேகங்களும் விரைந்து ஆகாயத்திற் சென்று மழையைப் பொழிந்து இந்நகரின் மேற்றிசையைச் சூழ்ந்த அக்கினியை அவித்தன. வீரவாகு அதனைக் கண்டு, அம்முகில்களின்மீது மற்றோர் அக்கினிப்படையைத் தூண்டினன். அவைகள் வலியிழந்து, மேற்றிசைவாய்தலில் விழுந்து, பின் எழுந்து புறவேலையை யடைந்தன. இந்நகர் அக்கினிபற்றி எரிந்ததென்று மாத்திரம் எண்ணுதே; பூதர்களும் மற்றை வீரர்களும் அதில் எண்மடங்காகப் போர்செய்கின்றார்கள்'' என்று கூறினர்கள். அதைக் கேட்ட சூரபன்மன் மயிர்பொடிப்ப, மார்பு வியர்க்க, கண்கள் அக்கினியைச் சிந்த, உயிர்ப்பிற் புகைவர, இடியைக் கான்றுற்போலக் கோபித்து, ''போரைச் செய்கின்ற பூதர்களையும் வீரவாகு முதலிய வீரர்களையும் மூன்புகொன்று, பின் சிவகுமாரனை வென்று வருவோம். நம்முடைய தேரைக் கொண்டுவருதிர்'' என்று ஒற்றுவரை நோக்கிக் கூறினன்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::::

# இரணியன்யுத்தப் படலம்.

சூரபன்மன் ''தேரைக்கொணர்திர்'' என்று ஒற்றுவர்களை நோக்கிக் கூறுதலும், ஆயிரம் வேதங்களையுணர்ந்த கேள்வியையுடையவனும், தருமத்தையும் நீதியையும் அறிந்தவனும், மாயங்களையும் வஞ்சனைகளையும் கற்றவனும், அவுணர்களுள்ளே வலிமையைப் பெற்றவனும், முன்னளிற் பாதலத்திலுள்ள ராக்ஷதர்களோடு போர்செய்து வென்றவனும், மூன்று சிரங்களையுடையவனும் ஆகிய இரணியன் என்னுங் குமாரன் அங்கே ஒரு பக்கத்திலே புற்றினுளிருக்கும் பாம்புபோலப் புழுங்கும் நெஞ்சினனுயிருந்தவன் எழுந்து, பிதாவினுடைய கால்களை வணங்கி, ''பிதாவே, ஏற்றதொன்றை யான் சொல்வேன் கேள்'' என்று அன்போடு இவற்றைச் சொல்வான்: ''நாம் தேவர்களைச் சிறைசெய்ததன்மையால் ஆவது பாவமே. ஆக்கம் வேறொன்றுமில்லை. எல்லாவற்றையும் உணர்ந்த என் பிதாவே, நம் முயிர் நீங்கிவிடும்; செல்வமும் அழியும். அச்சத்தைத் தருங் காடுகளில் மறைந்து திரியும் புன்மைநீங்கி, பிருதிவியண்டங்கள் பலவற்றை அரசாண்டு இத்துணைச் செல்வங்களோடு வீற்றிருத்தலை நீ யாரிடத்திற் பெற்றாய். அதனைச் சிந்தனைசெய். முன்னளில் விட்டுணுவை வென்றதும், பிரமாவையும் முனிவர்களையும் ஏவல்கொண்டதும், தேவர்களைத் துன்பஞ்செய்ததும், சிவபெருமான் ஈந்த வலியினல் அல்லவா? விட்டுணு போர்செய்ய வந்தாலும், இந்திரனும் பிரமாவும் வந்து எதிர்த்தாலும், பிறர் வந்தெதிர்த்

தாலும், அவர்களைப் பொருவதும் வெல்வதும் புறத்தரச்செய்து மீள்வதும் நமக்குளெளிது. நாம் செயற்பாலதும் அதுவே, நாம்செய்த தவத்தை நோக்கி அளவிறந்த வரங்களைத் தந்தருளிய பரமசிவன் நம்மிடத்திலேயுள்ள ஒரு தீமை காரணமாக அவ்வரங்களை மாற்ற நினைப்பாராயின், பகைமை நீங்கி அவரை வணங்கித் துதிப்பதன்றி, அவரோடு போர்செய்யவுந் தகுமோ? தமக்கு ஒரு நன்றிசெய்தோர் மனங்கன்றும்படி ஒரு தீமையை ஒருவர் புத்தி பூர்வமாகச் செய்வாராயின், அவ்வெளியரை அவர் முன் செய்த நன்றி ஒன்றே கொல்லும். அல்லது அவரைக் கொல்ல வேறு கூற்றுவனும் வேண்டுமோ? கந்தசுவாமியைப் பெற்றருளிய பரமசிவனுடைய ஆணையை மனத்தால் மாறுபட்ட சிறியோர் யாவரும் இறந்தார்களேயன்றி, வலிமையினால் உய்ந்தவர் இவர் என்று சொல்லவல்லமோ? சிவபெருமான் மன்மதன் பொடியாகும்படி பார்த்ததையும். முப்புரங்களையுஞ் சுட்டதையும், அந்தகாசுரனைச் சுழலும்படி சூலத்தின்மேலிட்டதையும், என் பிதாவே, நீ கேட்டிலேபோலும்! கூற்றுவனை உதைத்ததையும், கங்கையினுடைய செருக்கை நீக்கித் திருச்சடையில் அடக்கியதையும், பிரமவிட்டுணு முதலிய தேவர்கள் பயந்தோடும்படி வந்த ஆலாகல விஷத்தை உண்டதையும், அறிகிலாயோ? ஒரு நரசிங்கமானது தேவர்களை அலைக்க, அதனைப் பரமசிவன் வீரபத்திரக்கடவுளாகிய சரபப்பக்ஷியைக்கொண்டு தண்டிப்பித்ததையும், அந்த வீரபத்திரக்கடவுளைக்கொண்டு தக்கனுடைய யாகத்தை அழிப்பித்ததையும்கேட்டிலேயோ? பிரமதேவர் தம்மையிகழ, சிவபெருமான் வயிரவக் கடவுளைக் அனுப்பி அவருடைய உச்சிச்சிரசைக் கிள்ளிவித்ததையும், தம்மையிகழ்ந்த விஷ்ணுவினிடத்தில் அவ்வயிரவரை அனுப்பி இரத்தப்பலியை ஏற்பித்ததையும் நீ அறியாயோ? முன்னளிலே செருக்குக்கொண்ட ஓர் இந்திரனுடைய புயத்தை முரித்ததையும், பஞ்சராக்கதர்களை அழித்ததையும், யானையையும் புலியையும் உரித்ததையும், என்பிதாவே, நீ அறிந்திலே போலும்! உலகங்களையெல்லாம் அழித்த விட்டுணுவாகிய பன்றியின்கொம்புகளையும் அந்த விட்டுணுவாகிய ஆமையினோட்டையும் அணிந்ததையும், பிரமா முதலிய தேவர்களுடைய சிரங்களை அணிந்ததையும், அறியாயோ? தாருகாவனத்து ரிஷிகள் செய்த அபிசார ஹோமத்திற்றோன்றிய முயலகன் ஆர்த்தெழ, அவன் பதைபதைக்கும்படி உதைத்து மிதித்ததையும், பிறவற்றையும் நீ விளுவியதில்லையோ? தமக்கு நிகரில்லாத சிவபெருமான் பகைத்தன்மை பூண்டோர்களைத் தண்டஞ்செய்த சரித்திரங்கள் இன்னும் ஒரு கோடியுள்ளன. யான் இங்கே இருந்து சொன்னாலும் ஒழியா; பல யுகங்கழியும். ஆதலினால், சிவபெருமானைப் புகலிடமென்று அடைந்தவர் உய்வர்; அல்லாத பேதையர் யாவராயினும் உய்யார். இவ்வுண்மை வேதமும் பிற நூல்களும் கூறும் சிறந்தபொருளாம். பிதாவே, நீயும் தீயவழியினீங்கி இப்பொருளை அறிதி. இன்னம் ஒன்று சொல்வேன் கேள்: நீ முன்னே பெருந்தவத்தைச் செய்ய இந்த மேலாகிய செல்வங்களையெல்லாந் தந்தருளிய சிவபெருமான் மாற்றவும் வல்லராவர். அந்தக் கடவுளுடைய குமாரரோடு நீ போர்செய்வது முறையோ? ஐயனே, தன்னினும் உயர்ந்தாரோடு போர் செய்யின் வெற்றி உண்டாகுமோ? முன்னளிற் பூவுலகமும், வானுலகமும், திக்குகளும், சமுத்திரங்களும், மலைகளும் வேறுபாடுற்றதை நோக்கி, 'ஈது

என்ன மாயமோ' என்று எண்ணினேம். 'அவைகளெல்லாம் சிவகுமார ராகிய சுப்பிரமணியக்கடவுள் செய்த திருவிளையாடல்' என்று பலரும் சொன்னார்கள். 'தேவர்கள் அந்தச் சிவகுமாரருடைய திருவிளையாடல்களை அறியாதவர்களாய் மயங்கும்பொழுது, அவர் அவர்களுடைய கண்களுக் கெதிரில் மற்றொரு வடிவத்தைக்காட்டி நின்றார். தேவர்கள் அவரை இன்னார் என்று அறியாமல் வெகுண்டு போர்செய்தனர். குமாரக்கடவுள் அவர் கள் யாவரையுங்கொன்று பின்பு எழுப்பினார்' என்பர். 'அண்டங்கள், எல் லாமும், அவற்றிலுள்ள புவனங்களும், சீவராசிகளும், மற்றவளங்களும், தேவர்களும், மும்மூர்த்திகளும், எல்லாமுமாகிய தம்முடைய விசுவரூப த்தை அந்நாளிலே தேவர்கள்காணும்படி கந்தசுவாமி காட்டினார்' என்பர். 'முன்னொருநாளிலே பிரமனை விலங்கிட்டுச் சிறையில் வைத்து, தாமே உலகங் களைச் சிருட்டித்து, பின்பு பிதாவாகிய பரமசிவன் வந்து வேண்ட அவனைச் சிறைவிடுத்தார்' என்பர். இவ்வாறு அறுமுகக்கடவுளுடைய செயல்களைக் கேட்பின் எல்லாம் அற்புதமாகும்! 'இனிமேற் பூமியைஅகழுகின்ற விட்டுணு வாகிய பன்றியின் கோட்டை ஒரு கையாற் பற்றி வானுலகிற் சுற்றி, அக் கொம்பையொடித்து, தமது பிதாவாகிய சிவபெருமானுக்குச் சாத்தும்படி சுப்பிரமணியசுவாமி கொடுப்பார்' என்பர். பகைவர்களுடைய முப்புரங் களையும் எரித்த சிவபெருமானுடைய குமாரராகிய அறுமுகக்கடவுள் எல் லாரிலும் வலியவர் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? விட்டுணு வினுடைய சக்கரப்படையைப் பதக்கமாகத் தரித்த தாரகாசுரனையுங் கிரவுஞ்சமலையையுங் கொன்றதே இதற்குச் சாட்சியன்றே? மகாராஜனே, நிருமலராகிய அறுமுகக்கடவுளைச் சிவபிரானிடத்திலுதித்த சிறுவனென்று உருவத்தைநோக்கி இகழாதே; அவர் செய்கையாற் பெரியர். ஒரு கற்பகா லத்திற் சிவபெருமானுடைய திருப்புன்முறுவலிற்றோன்றும் சிறிய அக்கினியு மன்றே உலகங்களெல்லாவற்றையும் அழிப்பது. இந்திரனுடைய குறைனை யும், பிரமாவினுடைய குறையையும், விட்டுணுவினுடைய குறையையும் நீக்கி, அவர்களுடைய செல்வங்களைக் கொடுக்கும்படி சிவபெருமானே ஒரு குழந்தையைப்போல ஆறுதிருமுகங்களைக் கொண்டு வந்தாரென்பதன்றி வேறொன்றைச் சொல்லலாமா! பிரமா முதலிய தேவர்களால் அறியப் படாத சோதிசொரூபராகிய அக்கடவுளைக் காங்கேயரென்றும், கார்த்திகேயரென்றும், மான்மருகரென்றும், தேவசேனாபதி யென்றும் இப்படிப் பல நாமங்களைச் சொல்லி அழைப்பது அறியாமையன்றே. பன்னிரண்டு புயங்களையுடைய அக்கடவுள் பானுகோபனுடைய மாயத் தினாலே தம்முடைய சேனைகள் மயங்கிய தன்மையை அறிந்து, உடனே அவர்கள் மீளும்படி சமுத்திரத்தில் விடுத்த வேற்படைய இந்த நகரத் திற் செலுத்தினால், யார் உயிரோடிருக்கவல்லவர். வேற்படை தாரக னைக் கொன்றதென்றால், கிரவுஞ்சமலையைப் பொடிபடுத்தியதென்றால், சுத்தோதகசமுத்திரத்திலிட்ட வீரவாகு முதலிய வீரர்களை மீட்டதென் றால், அந்த ஒப்பில்லாத வேற்படையைத் துதித்துக் குமாரக்கடவுளுடைய திருவடிகளை வணங்குவதன்றி, அக்கடவுளோடு போர்செய்வோமென்பது அறிஞர் கடனாகுமோ! சிவகுமாரருடைய ஆணையினால் இங்குவந்த தூதுவன் முன்பு இந்நகரத்தை அழித்தான். பின்னொருநாட் சேனையுந் தானுமாய் வந்து, பானுகோபன் உயிரும்படி பொருது வென்று, அவுண சேனைகூட

லையுங் கடந்து சென்றான். அந்த வீரன் இன்றைக்கு வந்து போர்செய்ய என்றமையலுகிய பானுகோபன் தப்பி மறைந்து, மாயப்படைக்கலத்தைச் செலுத்தி அறிவை மயக்கிச் சுத்தோதகசமுத்திரத்திலிட்டான். அந்த வீரவாகு அறுமுகக்கடவுள் விடுத்த வேற்படையினல் உணர்வுபெற்று மீண்டுவந்து, உன்னுடைய இந்நகரத்தை அழிப்பானென்றல், அவனை யார் வெல்லவல்லவர்? அழிவையும் பொருந்தானென்னில், அறிவிழந்து மயங்கி வீழ்ந்தாலும் எழுவானென்னில், அவனுக்குப் பிறர்செய்யும் மாயங் களும் அழியுமென்னில், தெய்வப்படைக்கலங்களுக்கும் எதிராகிய படைக் கலங்களைச் செலுத்துவானென்னில், அறிஞர்கள் பின்னும் அந்த வீரவாகு வோடு போர்செய்யக் கருதுவார்களோ? வீரவாகுவென்னுமொருவனல் இந்த நகரம் முழுதும் அழியும், அவுணர்களும் அழிவாரென்னில், தோற் றமும் இறுதியுமில்லாத அறுமுகக்கடவுள் போர்செய்ய நினைத்து வருவா ராயின், எல்லாப்புவனங்களும் அழிந்திடாவோ? பன்னிரண்டு திருக்கரங் களைக்கொண்ட அக்கடவுள் போருக்குவந்தெதிர்த்தால், நம்முடைய வரங் களும், படைக்கலங்கள் யாவும், மாயங்களும், வலியும், வெற்றியும், செல் வங்களும், கீர்த்தியுமாகிய இவைகளெல்லாம் ஊழி முதல்வராகிய சிவ பெருமானுக்கெதிர்ப்பட்ட முப்புரங்களையும் அவற்றிலுள்ள அசுரர்களை யும் போலப் பொடிபட்டு அழியாவோ? சுப்பிரமணியக்கடவுள் தூரத்தில் இருந்துகொண்டு ஒற்றுவனை அனுப்பி நம்முடைய எண்ணத்தை ஆராய்ந்து நாம் தேவர்களைச் சிறைவிடாமையை நோக்கி, இந்நகரத்தினுள் வந்தி ருந்து, தாம் நம்மீது போருக்கு ஒவ்வொருநாளும் வாராது, தம்முடைய சேனைகளோடு தூதுவனைப் போருக்கனுப்பி, பாசறையில் இற்றைநாள் வரையும் நம்மிடத்தில் கருணைசெய்திருந்தார். இப்படி நம்மாட்டுக் கருணை கொண்டிருந்த அக்கடவுளுடைய திருவுள்ளத்தில் அழியாத கோபம் வரு தற்குமுன், இப்பொழுதே தேவர்களுடைய சிறையை நீக்கி, நம்முடைய சுற்றத்தாரோடு விரைந்துசென்று அவருடைய திருவடிகளை வணங்கி, 'தீயேங்கள் செய்த பிழைகளைப் பொறுத்தருளும்' என்று பிரார்த்தித்தால், நிருமலராகிய அக்கடவுள் நாம் செய்த தீமைகள் பலவற்றையும் பொறுத் தருள் செய்து, தாமும் அளவில்லாத வரங்களைத் தந்து, சேனைகளோடும் இவ்விடத்தைவிட்டுப் போய்விடுவார். யாமும் உய்வோம் இதனைத் துணிந்து சொன்னேன். இதுவே உறுதி'' என்று இரணியன் கூறினன்.

இரணியன் அன்பினோடு இவ்வாருகிய உறுதிகளைச் சொல்லுதலும், சூரபன்மன் புகைப்படலை வாயிலிருந்தெழுந்து திசையனைத்தும் போய் விழுங்கவும், உடல் வியர்க்கவும், பெருமூச்சுண்டாகவும், இதழ்கள் துடிக் கவும், கண்கள் சிவக்கவும், மனம் பதைபதைக்கவும் கையோடுகையைத் தட்டிச் சிரித்து, கோபித்து, இவற்றைச் சொல்லுவான்: ''ஒருபாலகனுடைய வலிமையையும், தூதுவனுய் வந்த வீரவாகுவின் வலியினையும் என்னுற் செய் யப்படுவனவற்றையுஞ் சொல்லாநின்றாய். உனக்கு இதனைச் சொன்னவர் யாவர்? சொன்னவரை அறிவேனுயின் இப்பொழுதே அவருடைய உயிரைக் கவர்வேன்; அவருடைய குலமுழுதையுங்கொல்வேன். உலகமெல்லாவற்றை யும் படைத்த பிரமன் எனக்குப் பஞ்சாங்கஞ் சொல்லிப்போவான். விட்டுணு என்றம்பியாகிய தாரகனுக்குத் தோற்றான். இந்திரன் கடலி லுள்ள மீன்களை என்பணியினுற் கொண்டுவந்து தந்தான். சிவகுமாரனை

அழியாத பேராற்றலை நீக்கவல்லனுவன்? அரிபிரமேந்திராதிதேவர்களும், உலகிலுள்ள மற்றைக் கணத்தலைவர்களும், எல்லார்க்கு முதல்வராகிய பரமசிவனும் போரில் வந்தெதிர்த்தாலும், எனக்கழிவதன்றி, என்னை வென்று போவதுண்டோ? ஒரு சிறிதும் புத்தியில்லாத மைந்தனே, யான் பெற்ற வரத்தினை நீ அறிகிலையோ? வலியை விடுத்தாய், குலமுறை தவறினாய், அரசின் உயர்ச்சியை நீங்கினாய், பகைவர்களுக்குப் பயந்து இவற்றைச் சொன்னாய். இனி இப்படி ஒரு வார்த்தையைச் சொல்வாயாயின், உன்னை விரைந்து யான் யமபுரத்திற்கனுப்புவேன்'' என்று கோபித்தான். இரணியன் அவற்றைக்கேட்டு, ''இக்கொடியன் என்னுடைய சொற்களை உறுதியென்று கொண்டிலன். இவன் இறப்பது திண்ணம். இவ்வுலகில் யாவர் விதியை வென்றவர்? இவனுக்கு முடியுங்காலம் வந்தணுகியது. யாம் பல உறுதிகளைச் சொல்லி யாவதென்னை?'' என்று எண்ணி, ''பிதாவே, நீ மிக்க அறிவுடையை. யான் சில அறிந்தவன்போல உனக்குச் சொன்னேன். சிறுவனுதலின் என் பிழையைப் பொறுக்குதி'' என்று சூரபன்மனுடைய கோபத்தையாற்றி, ''இவன் இறக்குமுன் நான் இறப்பது நன்று'' என்று துணிந்து, அவனுடைய கால்களை வணங்கி, ''நீ கூறிய சபதத்தை யான் முடிப்பேன்'' என்றான். அப்பொழுது, சூரபன்மன் ''மகனே, நீ பகைவர்களுக்கு அஞ்சி நாம் பிழைக்கும் உபாயங்கள் பலவற்றையும் முன்பு சொன்னாய். பின் அவர்களை வெற்றிகொள்ளும்படி எண்ணியது என்னையோ!'' என்றான். அதற்கு இரணியன் ''உன்னுடைய மைந்தன் யான். அஞ்சுவேனை?'' என்று கூறினான். சூரபன்மன் அதனைக்கேட்டு, இரணியனைத் தழுவி, ''மகனே, இது நன்று நன்று! உன்னுடைய சேனைகளோடு புறப்பட்டுப் போருக்குச் செல்லுதி'' என்றான்.

இரணியன் விடைபெற்றுக் கொண்டு தன்னுடைய கோயிலை அடைந்து, வச்சிர கவசத்தை யிட்டு, தூணியைக் கட்டி, கோதையையும் புட்டிலையுந் தரித்து, வில்லையும் மற்றைப் படைக்கலங்களையும் எடுத்து, தும்பைமாலையைச் சூடி, ஆயிரம் சிங்கங்கள் பூண்ட ஒருதேரில் ஏறி, போருக்குப் புறப்பட்டான். ஆயிரந்தோழர்களும், ஆயிரஞ்சேனாதிபதிகளும் போர்க்கோலங்கொண்டு சதுரங்கசேனைகளோடு தேர்களின்மேலேறிப் பக்கங்களில் வந்தார்கள். எண்ணூறு வெள்ளம் தேர்களும் எண்ணூறு வெள்ளம் யானைகளும், ஆயிரத்திருநூறு வெள்ளங் குதிரைகளும், ஆயிரத்திருநூறு வெள்ளம் பதாதிகளும் பக்கத்தில் வந்து சூழ்ந்தன. பேரிகை, துந்துபி, சங்கம் முதலிய வாத்தியங்கள் ஒலித்தன; கொடிப்புடைவைகளும் சேனைகளும் ஒலித்தன; பிசாசுகளும் காகங்களும் கழுகுகளும் கூத்தாடின. இரணியன் இவ்வாறு சேனசமுத்திரங்களோடு தன்னகரத்தை நீங்கி, துயரம் மேற்கொளச் சென்று, பூதர்கள் நின்கின்ற போர்க்களத்தை அடைந்தான். முன்னாளிலே தம்முடைய நகரத்தைத் தேவர்களும் பிறரும் பார்த்துத் துண்ணென்று நடுங்குவதைக்கண்ட அவன் இப்பொழுது பூதர்களெல்லாரும் அஞ்சாது விரைந்துவந்து அதனை அழித்துக்கொண்டு நிற்பதையுங் கண்டு, நன்றென்று சிரித்து, தமது நகரம் அழிந்ததை நோக்கி, தணியாத கோபமடைந்து, வெய்துயிர்த்து, மிக வெயர்த்து, பக்கத்தில்வரும் சேனைத் தலைவர்களையுந் துணைவர்களையும் நோக்கி, ''நீவிர் யாவரும் ஆயிரம்வெள்

ளஞ் சேனைகளைத் தனித்தனி நாற்றிசைகளிலும் வகுத்து, நால்வகையாகப் பிரிந்து, பூதர்களை எதிர்த்துப் போர்செய்யுங்கள்'' என்று ஏவினன். அவர்கள் அப்பணியைச் சிரமேற்கொண்டு, அவ்வாறே சேனைகளை நான்காகப் பிரித்து, பூதர்கண்மீது போர்செய்யப் போயினர். இரணியன் மேற்றிசையில் செல்லும் ஆயிரம் வெள்ளஞ் சேனைகளைமுன்னுகக் கொண்டு சென்றான்.

இப்படி இரணியன் வருதலை வீரவாகுதேவர் கண்டு, ''இங்கே போருக்கு வருகின்றவன் சூரபன்மனுடைய புதல்வர்களுள் ஒருவனே, அல்லது அவனுடைய சுற்றமாயுள்ளானே, இவன் யாவன்?'' என்று ஐயுற்றார். அப்பொழுது நாரதமுனிவர் வந்து, ''சூரபன்மன் இரணியன் என்னுந் தன் குமாரனை இங்கே போருக்கனுப்ப, அவன் மேற்றிசை, கீழ்த்திசை, வடதிசை, தென்றிசையாகிய நான்குதிசைகளிலும் சேனைகளை முன்னே செலுத்தி வந்தடைந்தான். அவன் மாயையில் வல்லவன்; பல படைக்கலங்களையுடையவன்; பற்பல மாயச்சூழ்ச்சி தெரிந்தவன். அவனை நீரல்லது வெல்கின்றவரில்லை. உமக்கு ஏற்றவாறு அவனோடு போர்செய்குதிர்'' என்று கூறி மறைந்தார். வீரவாகுதேவர் அதனைக்கேட்டு, ''நன்று நன்று'' என்று சிரித்து, இலக்கத்தெண்மரையும் படைத்தலைவர்களையும் பூதர்களையும் நோக்கி, ''சூரபன்மனுடைய குமாரனுகிய இரணியன் தன்சேனைகளை நம்மெல்லாரையுஞ் சூழும்படி போருக்கு ஏவித் தானும் வருகின்றன். நீவிரும் விரைந்து நாற்றிசைகளினும் போய் வெவ்வேறுக நின்று போர்செய்யுங்கள்'' என்று பணித்து, சேனைகளை நால்வகையாகப் பகுத்து, நான்கு திசைகளினுஞ் செல்ல ஏவி, தாம் இரணியன் வருகின்ற மேற்றிசையை நோக்கிச் சென்றார். அவுணசேனைகள் நான்கு திசைகளினுங் கடல்கள் சூழ்ந்தாற்போல ஒலியோடு வந்தணுகின. பூதசேனைகள் போர்செய்யும்படி எதிர்த்தன. அவுணர்கள் மழு, கலப்பை, சக்கரம், தோமரம், தண்டம், குலிசம் முதலிய படைகளை விடுத்தார்கள். பூதர்கள் மராமரங்களையும், தண்டங்களையும், மழுக்களையும், மலைகளையும் சிந்தினர். பூதர்கள் தலைகளும், கரங்களும் கால்களும் இழந்தார்கள். அவுணர்கள் கை முதலாகிய அவயவங்கள் இழந்து, தேர்களும் குதிரைகளும் அழியப்பெற்று, இறந்து, இரத்தவெள்ளத்தின் மூழ்கினர்கள். பூதப்படைகளும் அவுணப்படைகளும் திசைகடோறுங் கலந்து இவ்வாறு போர்செய்யும் பொழுது, வீரவாகுதேவரால் முன் விடுக்கப்பட்ட வீரர்களும் அவுணப்படைத் தலைவர்களும் போர்செய்தார்கள். வீரவாகுதேவர் இரணியனுக்கு முன்வருஞ் சேனைசமுத்திரத்தைப் பார்த்துக் கோபித்து, வில்லைவளைத்து நாணெலி செய்து உரப்பினர். கடல்கள் நடுங்கின; ஆதிசேடன் தலைவளைத்தான்; அட்டதிக்கு நாகங்களுஞ் சலித்தன. வீரவாகுதேவர் வில்விற் பதினாயிரம் பாணங்களைத் தொடுத்து, காட்டின்மேல் மழைபொழிகின்ற மேகங்களைப் போல அவுணசேனைகளின்மேற் பொழிந்தார். யானைகளும், குதிரைகளும், தேர்களும், கொடிகளும், அவுணர்களுடைய தலை கை முதலாகிய உறுப்புக்களும் வெட்டுண்டன. சுழல்காற்றுற் கிளைகள் இற்றுவீழ்ந்த சோலையைப்போல நால்வகைச்சேனைகளும் இவ்வாறழிந்தன. இரத்தவெள்ளம் கடலிற் பாய்ந்தது. நாய்களும், நரிகளும், உடற்குறைகளும், காளிகளும், பேய்களும் எங்கும் நெருங்கின. வீரவாகுதேவர் பாணமழையைச் சிதறி

நிற்கும்பொழுது, அவுணசேனைவெள்ளங்கள் அக்கினியிற்பட்ட நெய்போல உடைந்து, குலைகுலைந்து, உயிரும் உடம்புங் குறைந்தன.

ஆயிரஞ்சிங்கங்கள் பூண்ட தேரின்மீது வருகின்ற இரணியன் இவ்வாறு தன்சேனைகள் அழிதலைக் கண்டு, வில்லில் ஆயிரம்பாணங்களை ஒரு தொடையிற் றொடுத்துச் செலுத்தி, ஆயிரகோடி பூதர்களை ஓரிறைப் பொழுதிற் கொன்றான். எஞ்சிய பூதப்படைகள் ஆலாகல விஷத்துக்குப் பயந்து ஓடிய தேவர்களைப்போலக் குலைந்து ஓடின. அதனைப் பூதப்படைத் தலைவர்களுள் நீலரென்பவர் கண்டு, வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, இரணியனுக்கு முன்சென்று, அண்டங்களும் நடுங்கும்படி ஆர்த்தார். தேவர்கள் ''இனிப் போர் உண்டு'' என்றார்கள். இரணியன் கோபித்து, ஒரு வேற்படையை நீலருடைய மார்பில் மூழ்கும்படி விடுத்தான். நீலர் வலிமை குறைந்து நில்லாதவராய், ஒரு மராமரத்தினால் இரணியனுடைய தேரை அழித்தார். தேர் அழிதலும், இரணியன் பிறிதோர் தேரிற் பாய்ந்து, வில்லைவளைத்து, நாண்பூட்டி, யுகமுடிவில் மேகங்களைப் போலப் பாணங்களைப் பொழிந்தான். அப்பாணங்கண் முழுவதும் நீலருடைய மார்பிற் புகுதலும், அவர் தோல்வியடையாததும், சிறிதும் அஞ்சாததும், அட்டகுலமலைகளன்றி ஒழிந்த மலைகளெல்லாவற்றையும் பறித்து இரணியன்மீதெறிந்து, கண்ணிமையாமல் உடம்பினின்றும் இரத்தம் வடிய நின்றார். இரணியன் தன்மீதெறிந்த மலைகளெல்லாவற்றையும் பாணங்களினாலே அழித்தான். நீலர் கோபித்து, விரைந்து சென்று, இரணியனுடைய தேரை ஒரு கையால் எடுத்தெறிந்தார். அது விண்ணுலகிற் சென்றது. இரணியன் வேறோர் தேரின்மேற் பாயும்படி நினைத்துக்கொண்டு வந்தான். நீலர் அவனை எதிர்த்து, ''நீ நிற்குதி, நிற்குதி'' என்று சொல்லிக்கொண்டு எதிரேசென்று, மார்பில் அடித்தார். அவன் நீலரைப்பற்றி வீசினான். நீலர் மீண்டுவந்து பாதத்தினால் அவனை உதைத்துருட்டி, இடியேறுபோல ஆரவாரித்தார். இரணியன் வழுக்கி வீழ்ந்த முகில்போல வீழ்ந்தான். நீலர் "'இது இந்திரனுடைய வச்சிராயுதமோ?'' என்று கண்டோர் சொல்லும்படி இரணியன்மேற் பாய்ந்து, கால்களினால் மிதித்தார். அம்மிதியினால் நிலம் கிழிந்தது. இரணியனுடைய முடியும் மார்பும் பிளந்தன. அவன் வாயினின்று இரத்தம் வடிய மிகுந்த துயரமுற்று, செய்வதொன்றுமறியாதவனாய், வலிமையுங் கோபமும் இழந்து, உயிர் நீங்கு நிலையை அடைந்து, ''நமக்கு இறுதிவந்தது, இனிச் செயற்பாலது யாது? எமக்கு ஓர் உறுதி யாது?'' என்று நினைத்து, ''ஒரு மாயத்தைச் செய்வோம்'' என்றெண்ணி, விரைந்து அதற்குரிய மந்திரத்தை உச்சரித்து, அன்பினொடு பூசனையை மனத்தாற்செய்து, தெய்வம் செய்யவேண்டியது இது என்று உறுதிசெய்து, அந்தத் தெய்வத்தைத் தியானித்தான். அப்பொழுது, அவனை ஒத்த ஒரு வடிவம் அப்போரில் வந்தணுகி, பல படைக்கலங்களை ஏந்தி, ''என்னைப் போலப் போர் செய்பவர்கள் யார்?'' என்று வீரம்பேசி, போர்செய்யும்படி வலிகொண்டு முன்வந்தது. அந்த மாய வடிவம் வருதலை நீலர் கண்டு, விரைந்து அதற்கெதிர் சென்று, போரிலே அவுணர்கள் இட்ட ஒரு தண்டத்தை எடுத்து, அதனுடைய தலையில் மோதினார். தேவர்கள் அதனைப் பார்த்து, ''இரணியன் இவருக்குத் தோற்றான்'' என்று நீலரை வியந்தார்கள். இரணியன் விடுத்த மாயம் அடி

யிலுல் வருத்தமுற்றவர்போல ஆகாயத்தில் எழுந்து சென்றது. நீலர் அதனைக்கண்டு பின்றொடர்ந்தார். அவ்வுரு மறைந்தது. நீலர் மயங்கி, மிக யோசித்து, பின் அவ்வுருவைப் பூமியிற்கண்டு, ''இது வஞ்சனையாகும்'' என்று அறியாதவராய், வெட்கத்தினுல் மிகுந்த கோபத்தோடு அதனைக் கிட்டினர். அதுவும் தோள்களைக்கொண்டு போர்செய்யத் தொடங்கி, தூரித்ததாகும்; அணிமையதாகும்; எத்திசைகளினுந் திரியும்; பூமியிற் புகும்; வானுலகிற் புகும்; தேரிற்சொல்லும்; குதிரையிற்செல்லும்; மலையிற்செல்லும்; சமுத்திரத்திற்செல்லும்; வடவாமுகாக்கினியிற்செல்லும்; மேகத்திற்செல்லும்; பாலத்திற்செல்லும்; எழும்; முன்னேவரும்; பின்னே வரும்; இடத்தில்வரும்; வலத்தில்வரும்; போரைச்செய்யும்; நிலையின்றித் திரியும். அதனியல்பு முழுவதையும் யார் சொல்லவல்லவர்! கண்டோர் மயங்கும்படி இவ்வாறு வருகின்ற மாயாசொரூபத்தை நீலர் தொடர்ந்து திரிந்து, வலி குறைந்து உலைந்து, கால்களுந் தளர்ந்து, இரணியனுடைய கல்வித்திறத்தைப் புகழ்ந்து, ''இனிச் செய்வதென்னை?'' என்றெண்ணி வெகுண்டு, தான் செய்யுமுபாயத்தை யோசித்துக்கொண்டு நின்ருர். அப் பொழுது ஒன்ருயிருந்த மாயாசொரூபம் பலவாகி, உலகமெங்கும் பரந்தது. அதனை நீலர் கண்டு, ''நன்று நன்று! இது மாயமாகும்'' என்று நாணத்தோடு சொல்லி, சந்தேகந் தெளிந்தார். முன்பு நீலரால் உதையுண்டு இரத்தம் வடிய இறந்தவன்போலப் பூமியில் வீழ்ந்த இரணியன் வலிபெற்றெழுந்து, இதனைக் கண்டு, ஒரு தேரிலேறி, தன்னுடைய மாயத்தோடு கலந்து, ஒரு வில்லை வளைத்து, அக்கினியம்புகளைத் தெரிந்து நீலருடைய புயங்களிற் செலுத்தினன். அவர் அப்பாணங்கள் பட்டு, உடம்பு புண்படவருந்தி, மனம் மெலிந்து, போர்செய்தலுத்து மிகச்சலித்தார்.

இரணியனுடைய மாயத்தையும், அதனுல் நீலர் வருத்தமுறுவதையும் வீரவாகுதேவர் பார்த்து, கோபித்து, தேரைச் செலுத்திக்கொண்டு விரைந்து சென்று வில்லைவளைத்து, நாணேதைசெய்தார். அவ்வொலியைக் கேட்ட அவுணர்கள் இரிந்து ஓடினர்கள். வீரவாகுதேவர் அறுமுகப்பெருமானுடைய பாததாமரைகளைப் பலமுறை தோத்திரஞ்செய்து, அன்போடு அருச்சித்து ஞானப்படைக்கலத்தைத் திருக்கரத்தில் எடுத்து, இரணியனுடைய மாயையின்மீது செலுத்தினர். அந்தமாயம் சூரியன் உதிக்க அழிந்த இருட்டைப்போல நீங்கியது. மாயம் நீங்குதலும், தனித்தவனுய் வருந்திநின்ற இரணியன் வில்லைவளைத்து, ஆயிரம்பாணங்களை வீரவாகுதேவர்மீது செலுத்தினன். அவைகள் அவருடைய மார்பிற்பட்டு நுண்ணியதுகளாய் மீண்டன. தேவர்கள் அதனைக்கண்டு கையெடுத்து ஆர்த்தார்கள். வீரவாகுதேவர் நூறு பாணங்களைச் செலுத்தி, இரணியனுடைய கொடியையும், வில்லையும், கவசத்தையும் அழித்தார். இரணியன் வேருெரு வில்லை எடுத்தான். வீரவாகுதேவர் ஆயிரம் அம்புகளைத் தூண்டினர். அவைகள் இரணியன் எடுத்த வில்லையும், பாணங்களையும், அம்பறாக்கூட்டையும், தேரையும், பாகனையும் அழித்து, அவனுடைய மார்பைப் பலதுளைசெய்தன. இரணியன் பிறிதொரு தேரிற்பாய்தலும், வீராதிவீரராகிய வீரவாகுதேவர் பாணங்களால் அதனையும் அழித்து, அவன் பின்னரும் ஏறுதற்கமைந்துநின்ற தேர்களெல்லாவற்றையும் நூறுநூறு பாணங்களால் அழித்தார்.

இரணியன் வலிமையிழந்து மயங்கி ஏங்கி, இதனை எண்ணினான்; ''துன்பமுற்ற எனக்கு இப்பொழுது முடிவுவந்தது. இவனால் என்னுயிர் நீங்கும். இது என்னோடு தீர்வதோ! இனி என்றந்தையாரும் இறத்தல் நிச்சயம். அவர் இறந்தபொழுது அவருடைய அந்தியகருமத்தைச் செய்தற்கு யாருமில்லை. இந்நகரிலுள்ள நம் சுற்றத்தார்களும் இறந்தார். இறவாதிருக்கின்றேரும் இனி இறப்பர். இஃதுண்மையே. யான் உறுதிகள் பலவற்றைச் சொல்லவும் அவற்றைச் சிறிதும் உட்கொள்ளாத என்றந்தை இறக்குமுன் யான் இறத்தலே முறை. யான் இறவாதொழியின் என் மனத்துயர் நீங்குமோ? ஆயினும், என் பிதா இனி இறந்தால் அந்திய கருமஞ் செய்தற்கு ஒரு புதல்வருமில்லாதொழியின், உலகத்தில் வசையுண்டாகுமே. புத்திரனைப் பெறுகின்றதும், மன அன்போடு வளர்ப்பதும், பிதா இறந்தபொழுது தம்முடைய குலாசாரத்துக்கேற்பத் தீக்கடன் முதலாயினவற்றைச் செய்வதற்கேயன்றே? போரில் நான் இறந்தால் எனக்குக் கீர்த்தி உண்டாகும். இறவாதொழிவேனெனில், 'இவ்வுடம்பைப் பொருளென்று தாங்கி உய்ந்தான்' என்று வசையுண்டாகும்; என்னுடைய வலிமையும் அழியும். யான் போரில் இறத்தலால் எனக்குப் புகழ் உண்டாமேயாயின், 'இவன் தீக்கடன் முதலியன செய்யப் புத்திரன் இலனாயினன்' என்று என்பிதாவை வசைவந்தடையும். அது முறையன்று. என்னை வசையெய்தினுமெய்துக. பிதாவினிடத்து அது வருதல் அழகிதன்று'' என்று இரணியன் தான் செய்யத்தகுவதை நினைத்து, ''என்னுயிரைப் பாதுகாத்துப் போவதே முறை'' என்று எண்ணி, விரைந்து மேலெழுந்து மேகமண்டலத்தில் மறைந்து, ஒரு தெய்வமந்திரத்தை நினைத்தான். நினைத்தலும், தன் உருவம் அருவமாக, தன்னை யாவருந் தெரிதற்கரியதன்மையால் மீனுருக்கொண்டு கடலுண்மறைந்து, ''யான் இனி நகரத்துக்குச் செல்லேன். இனி நிகழ்கின்றவற்றைக் காண்பேன். என்றந்தையின் கடனை முடிக்குமளவும் இக்கடலில் இருப்பேன்'' என்றெண்ணி அங்கேயிருந்தான். அப்பொழுது சூரியோதயமாயிற்று.

வீரவாகுதேவர் ஒளித்தோடிய இரணியனுடைய தன்மையைப் பார்த்து, ''நம் பகைவன் தோற்றுச் சமுத்திரத்தில் ஒளித்தோடினான்'' என்று வெற்றிச்சங்கை ஊதினார். பூதர்கள் புகழ்ந்து, வாழிய என்று ஆர்த்தார்கள். தேவர்கள் ஆசிகூறினார்கள். பூதவீரர்கள் அங்கு நின்ற அவுணசேனைகளைக் கொன்றார்கள். போரைப்பார்த்து நின்ற தூதுவர்கள் மனைகதியும் பிற்படச் சூரபன்மனுடைய கோவிலையடைந்து, அவனை வணங்கி, ''மகாராசனே, உன்னுடைய குமாரனாகிய இரணியன் போருக்குற்றுதவனாய், தான் உய்தற்கோ, வீரவாகு முதலிய வீரர்களை ஒரு சூழ்ச்சியாற் கொல்லுதற்கோ, சமுத்திரத்தில் ஒடி மறைந்தான்.'' என்று சொன்னார்கள். அதனைக்கேட்ட சூரபன்மன் குன்றி, வெள்கி, கொடுங்கோபங் கொண்டு, ஒரு வார்த்தையையும் உரைத்திலன். அப்பொழுது குமாரனாகிய அக்கினிமுகன் அவனிடத்து வந்தான்.

திருச்சிற்றம்பலம்.

# அக்கினிமுகாசுரன்வதைப் படலம்.

அந்த அக்கினிமுகன் திக்குப்பாலர்களையும், திக்குயானைகளையும், சூரியனுடைய தேரையும், அதிற்கட்டிய குதிரைகளையும் முன்னுறிற் கொணர்ந்து வட்டாடிய வலிமையை உடையான்; கருப்பவதியான நாண் முதலாகப் பதுமகோமளையென்னுந் தாயினுடைய உடல்முழுதும் அக்கினி சிந்துதலும், மாயவள் வந்து ''இவளிடத்திற் பிறக்கின்ற இக்குமாரன் அக்கினிமுகன்'' என்று கூறிய காரணப்பெயரையுடையான்; பிரமவிட்டுணுக்களுடைய அன்னத்தையும் கருடனையும் விளையாடும்படி முன்னுளிற் கொண்டுவந்த வலியினையுடையான்; தன்றமையன் சூரயனைச் சிறையிட்டதை அறிந்து, சந்திரனைப் பிடித்துப் பலநாட் சிறைசெய்தவன்; தெய்வப்படைக்கலங்களையுடையவன்; பஞ்சராவணர்களிடத்துளதாகிய வலிமையினையுடையான்; வஞ்சனையிலும் மாயத்திலும் வல்லான்; எந்தப்படைக்கலங்களை விடுப்பினும் அழிக்கவல்லவன். இவ்வியல்பினையுடைய அக்கினிமுகன் என்னுங் குமாரன் சூரபன்மனுக்கு முன்பு வந்து, அவனுடைய கால்களை வணங்கி ''என்பிதாவே, நீ என்ன காரணத்தினுல் மெலிவுற்றாய்'' என்று விணவினன். சூரபன்மன் மனத்துயரோடு இவற்றைச் சொல்வான்: ''முன்பு தேவர்கள் பொருட்டு இங்கே தூதுவந்த வீரவாகுவென்பான் இப்பொழுது வஞ்சக எண்ணத்தோடு நம்மை எண்ணுது மதிலைத் தாண்டி இந்நகரினுள் வந்து வேகும்படி நெருப்பைக் கொளுத்தினன். யான் அதனைத் தணிக்கும்படி சத்தமேகங்களையும் அனுப்பினேன். அவைகள் மழையைப் பொழிந்து அந்நெருப்பைத் தணித்தன. வீரவாகு அதனைப் பார்த்து ஊழித்தீப்படையை விடுத்து, அம்மேகங்களின் வலியை அழித்தான். நான் அதனை அறிந்து இரணியனைப் போருக்கு அனுப்பினேன். அவன் சேனைகளோடு சென்று போர்செய்து பகைவர்களுடைய வலிமையைக் கண்டு அவர்களுக்குத் தோற்று, சமுத்திரத்திற் புகுந்தொளித்தான். நம்முடைய சதுரங்க சேனைகளும் அழிகின்றன. நகரத்தை உங்குவந்த தூதுவன் அழித்தான். மகனே, இங்குள்ள நிகழ்ச்சி இது'' என்று கூறினன்.

அக்கினிமுகன் சூரன் சொல்லியவைகளைக்கேட்டு, ''ராசாதிராசனுகிய நீ மனத்தில் நினைத்து இவ்வாறு கோபஞ்செய்தற்கு அந்தத்தூதுவன் அத்துணை வலியனே? எதற்காக அவனுடைய வலியை நீ ஒரு பொருளாக மதிக்கின்றாய். தூதுவனையும் மற்றைவீரர்களையும் பூதர்களையும் வென்று, உன்னிடத்து மீண்டு வருவேன். விடைதந்தருளுதி'' என்று கூறினன். ''மகனே, நல்லகாரியத்தைச் சொன்னாய், நீ போருக்குச் சென்று வீரவாகுவை வென்று வருவாய்'' என்று சொல்லிச் சூரன் விடைகொடுத்தனுப்பினன். அக்கினிமுகன் வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தன்னுடைய கோயிலை அடைந்து, கவசத்தையிட்டு, விரலிற் புட்டிலைத்தரித்து, தன்பிதாமகியாகிய மாயவள் கொடுத்தவில்லையும், தெய்வப்படைக்கலங்களையும் எடுத்து, விரைந்து தேரிலேறி, கண்களிற் கோபாக்கினி சிந்தப் புறப்பட்டு, நகர்ப்புறத்தில் வந்தான். தூதுவர்களுடைய சொல்லைக்கேட்டு, ஆயிரம்வெள்ளம் யானைகளும், ஆயிரம்வெள்ளந் தேர்களும், இரண்டாயிரம்வெள்ளங் குதிரைகளும், அளவிறந்த அவுணவெள்ளங்களும் போருக்கெழுந்தன. அக்கினிமுகாசுரன் மானம் மேற்கொண்டு, ''பகைவர் யாவ

ரையும் யான் ஒரு நாழிகையிற் கொல்வேன்'' என்று கூறி, அணியிற் சிறந்த நால்வகைச் சேனைகளோடு போருக்குப் போயினன். பறையின் ஒலியினால் மேகங்கள் வீழ்ந்தன. பூதாளியினாற் கங்காசலம் வற்றியது. ஆயுதங்களும் ஆபரணங்களும் பிரகாசித்தன. கொடிகள் எங்கும் நெருங்கின. திசைகளெல்லாம் இருண்டன. சோமகண்டகன், சோமன், சூரியசித்து, மேகன், பிங்கலன் முதலாகிய படைத்தலைவர்கள் பக்கத்திற் சூழ்ந்தார்கள். இவ்வாருகிய சேனைகளோடு அக்கினிமுகாசுரன் பூதசேனைகளுக் கெதிரிற் சென்றான்.

பூதர்களும் அவுணர்களும் எதிர்த்துப் போர்செய்தார்கள். பேரிகைகள் இடிபோல அதிர்ந்தன. துடிகளும் சங்கங்களும் ஆர்த்தன. ஆகாயத்திலுள்ளன நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன. பூமி பிதிர்ந்தது. அண்டகோளகை பிளந்தது. அவுணர்கள் வேற்படைகளை விடுத்தார்; வாட்படைகளை வீசினர்; பிண்டிபாலம், மழு, தண்டம் முதலிய ஆயுதங்களை வீசித்தாக்கினர். பூதர்களில் அளவில்லாதவர்கள் இறந்தார்கள். இரத்தவெள்ளம் பாய்ந்தது. பூதர்கள் அவுணர்கள்மீது முத்தலைச்சூலம், தண்டம், முசலம், சக்கரம், மழு, மலை முதலாயினவற்றை எறிந்தார்கள். அவுணர்களும் அளவில்லாதவர்கள் இறந்தார்கள். குதிரைகளுடைய கால்களுந் தலைகளுந் தறிந்தன. தேர்கள் அச்சொடிந்தன. கொடிகள் அறுந்தன. யானைகள் வீழ்ந்தன. அவுணவீரர்கள் உடலம் வேருய் இறந்தனர். கழுதைகளுங் காகங்களுஞ் செறிந்தன. பேய்களும் பூதங்களும் திரண்டன. இருதிறப்படைகளும் இவ்வாறு எதிர்த்துப் போர்செய்யும்பொழுது, இலக்கம்வீரர்களும் விற்களை வளைத்து, சரங்களைப் பொழிந்து சூழ்ந்தார்கள். அவுணர்கள் ஒருவரும் நில்லாது உடைந்து ஓடிப்போயினர். அதனைக்கண்ட அக்கினிமுகாசுரன், சோமன், சோமகண்டகன் முதலாகிய படைத்தலைவர்கள் பலரை அனுப்பினன். அவர்கள் வந்து அம்புமழைகளைத்தூவி, இலக்கம்வீரர்கண் மேற் சென்று போர்செய்து நின்றார்கள். அதனை வீரபுரந்திரர் நோக்கி, அக்கினி தேவன்போலக் கோபித்து, இடியேறும் அஞ்ச ஒலித்து, தம்முடைய சேனைகளுக்குமுன்வந்து, கையிலுள்ள வில்லைவளைத்து, சரமழைகளைப் பொழிந்து, அவுணப்படைத்தலைவர்களுடைய தேர்களை அழித்து சோமகண்டனுடைய சிரசையறுத்துக் கொன்றார். மற்றை அவுணவீரர்கள் தேரின்மேல் வந்து வீரபுரந்திரரைச் சூழ்ந்து, அவருடைய திருமேனியெங்கும் இரத்தம் ஒழுகும்படி அம்புமழைகளைத் தூவினார்கள், வீரபுரந்திரர் கோபித்து, அவர்களுடைய விற்களையுந் தேர்களையும் அறுத்து வீழ்த்தி, நெற்றியிலும், மார்பிலும், தோள்களிலும் அம்புகள் பலவற்றை விடுத்தார். அப்பொழுது, அக்கினிமுகனுக்கு ஆபத்துக்காலத்து உதவிசெய்யும்படி நின்ற வலியையுடையவனுகிய மேகனென்பவன் ஒரு தண்டாயுதத்தைக் கையிலெடுத்து, வீரபுரந்திரருடைய தேர்ப்பாகனைக் கொன்று, ஆரவாரித்தான். வீரபுரந்தரர் தம்முடைய தேர்ப்பாகன் இறந்ததைப் பார்த்து, ஒரு வேற்படையை எடுத்து ''இதனால் இறப்பாய்'' என்று ஏவினர். மேகன் அப்படையினாற் பூமியில் வீழ்ந்திறந்தான். மேகன் இறந்தமையைக் கண்ட அவுணப் படைத்தலைவர்கள் அஞ்சி ஓடிப்போயினர். அதனை அக்கினி முகன் பார்த்து, சேனைகளோடுவந்து, வில்லைவளைத்து, நாணெலிசெய்து, பிறை

முகப்பாணங்களைத் தெரிந்து பூதசேனைகள் கெடும்படி பொழிந்தான். பூதர்கள் தலை, கை, கால், புயம், மார்பு முதலாகிய அவயவங்களும், ஆயுதங்களும் அழியப்பெற்றார்கள். பூதப்படைத்தலைவருடைய தேர்கள் உருள, கொடி, கூவிரம், குதிரை முதாயின அழியப்பெற்றன. இரத்தவெள்ளம் ஒலித்துப் பாய்ந்தது. கவந்தங்கள் ஆடின. பேய்க்கூட்டங்கள் பாடின. நாய்கள் பரந்தன. காகங்களும், பருந்துகளும், கழுகுகளும் வந்து கூடின. இவ்வாறு பூதசேனைகள் அழியும்படி அக்கினிமுகன் போர்செய்தலை வீரபுரந்தரர் பார்த்து, அக்கினிகாலச் சிரித்து வில்லைவளைத்து, கணைமழைகளைப் பொழிந்து எதிர்த்தார். அக்கினிமுகனும் அவற்றிற் கெதிராக அம்புமழைகளைப் பொழிந்தான். அவ்விருவருடைய பாணங்களுள்ளும் அக்கினிமுகன் செலுத்துகின்ற அம்புகள் வீரபுரந்தரர்மேல் வந்து படுகின்றன. வீரபுரந்தரர் அவன்மேல் விடுகின்ற அம்புகள் இரிக்கின்றன; அழிகின்றன. இவ்வாறு இருவரும் போர்செய்யும்பொழுது, அக்கினிமுகன் வீரபுரந்தரருடைய தேரையும் வில்லையும் அம்பறாக்கூட்டையும் அழித்து, நூறுபாணங்களை அவருடைய மார்பில் எய்து, அவுணர்கள் யாவரும் புகழும் படி ஆரவாரித்தான்.

வீரபுரத்தரருடைய துணைவர்கள் எழுவரும் அக்கினிமுகனுடைய வலியையும், வீரபுரந்தரர் வலிமை குறைந்ததையும் கண்களிற் கோபாக்கினியுண்டாகப் பார்த்து, வில்லைவளைத்து, அம்புகளைச் சிதறி, வசைகள் பலவற்யைச் சொல்லி, அவனுக்கெதிரே புகுந்தார்கள். அக்கினிமுகன் அவர்கள் விடுத்த பாணங்களெல்லாவற்றையும் விலக்கி, அவர்களுடைய புயங்களின் மேற் பல அம்புகளை மழைபோலச் சொரிந்து மறைத்தான். அப்பாணங்களால் மெலிவுற்ற ஏழு வீரரும் அக்கினிமுகனுடைய முகத்திலும் கைகளிலும் மார்பிலும் புயங்களிலும் ஆயிரமாயிரம் பாணங்களை அழுத்தி, அவனுடைய தேரையும் அறுத்தார்கள். அக்கினிமுகன் வேறொருதேரிற் பாய்ந்து, ஏழுவீரர்களையுங் கோபித்துப்பார்த்து, ''ஒப்பில்லாத ஒரு படைக்கலத்தினால் உங்களுடைய உயிரைக் கூற்றுவனுர் தெவிட்டும்படி கொடுத்து வீரவாகுவையுங் கொல்கின்றேன்'' என்று கூறினன். அக்கினிமுகாசுரன் இப்படிச் சொல்லியபொழுது, வீரவாகுதேவருடைய தம்பியர்கள் எழுவரும் தனித்தனி அம்புகளைத் தூண்டி, அவனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்து, மார்பையுந் துளைத்தார்கள். அக்கினிமுகன் பிறிதோர் தேரிற் பாய்ந்து, விரைவிற் சிவப்படைக்கலத்தை எடுத்து, அன்பினோடு அருச்சனை செய்து தூண்டினன். அப்படைக்கலம் பூமியும் வானமும் வடவாமுகாக்கினியினுருவமாக வந்தது. அதனை வீரர்கள் எழுவரும் பார்த்து, ''இது அக்கினிப்படைக்கலம்போலும். இதற்கெதிராக வருணப்படைக்கலத்தை விடுப்போம்'' என்று எண்ணி, தாமிறக்குஞ் செயலினராய், யாவரும் அப்படையை விடுத்தார்கள். அந்த வருணப்படைக்கலங்கள் ஆகாயவழிக் கொண்டு செல்லுதலும், சிவப்படைக்கலம் எதிர்ந்து அவற்றை விழுங்கி, யாவரும் அஞ்சும்படி வலியுடன்சென்று, ஏழு வீரர்களையும் மெலிவு செய்து, உயிரைக்கவர்ந்து மீண்டது. வீரர் எழுவரும் இறந்து திருக்கைலாசமலையை அடைந்தார்கள். அக்கினிமுகன் அதனைப் பார்த்துக் களிப்பின்மிகுந்து ஆரவாரித்தான். வீரர்கள் இறந்தமையைப் பூதர்கள் நோக்கி, கைகளையுதறிக் கலங்கி வாய்புடைத்து இரங்கி வெருவி இரிந்துபோயினர்.

முன்னணியில் நின்ற வீரர்கள் அழிந்தமையையும், பூதர்கள் உலைந்து ஓடுவதையும் வீரவாகுதேவர் பார்த்து, வருந்தி, பூதகணங்களை "அஞ்சா தொழிவீர்" என்று திருக்கரத்தால் அமைத்து, நொடிப்பொழுதினுள் அக்கினிமுகனுக்குச் சமீபத்திற் போயினர். அக்கினிமுகன் அவரைப் பார்த்து வெகுண்டு "பூதர்களையும் பிறரையும் யான் மதியேன், உன்னையே கொல்லும்படி வந்தேன். அந்தச் சமயத்தில் நீ இங்கே வந்தாய். விதியே உன்னை என்முன் கொண்டுவந்து விடுத்தது. போரிலே நம்மவர்பலரைக் கொன்றாய், பலரைவென்றாய். மிக்க தவறு செய்தவனாய் நின்றாய். வருதி. உன்னுடைய அரிய உயிருக்கு முடிவுகாலம் இன்றைக்கோ? முன்னே உன்னோடு போர் செய்து தோற்றவர்கள்போல என்னை எண்ணுதே. இனி ஒரிறைப்பொழுதில் உன்னுடைய இவ்வொரு தலையைக்கொய்து நம்மரசனுகிய சூரபன்மனுடைய பாதங்களிலே கொண்டுபோய் வைப்பேன். உன்னை யான் இங்கே வெல்லா தொழிவேனெனில், பெண்களுடைய கலவிப்போரில் அவர்க்கு வலியழிந்து தோற்கின்ற ஒரு ஆடவனுவேன்" என்று இவைபோன்ற பல சொற்களைச் சொன்னன். வீரவாகுதேவர் அதனைக்கேட்டு, கையோடு கையைத் தட்டிச் சிரித்து, அக்கினிமுகனுடைய முகத்தை நோக்கி, "முன் வந்தெதிர்த்த இரணியன் நம்மோடு போர்செய்து உருவத்தை மறைத்துச் சமுத்திரத்தில் ஓடியொழித்தான். அவன்றம்பியாகிய நீ எப்படி உய்யப்போகின்றனை? நம்மோடு போர்செய்த அவுணவீரரெல்லாம் மாண்டார். பானுகோபன் ஒருவன் மாத்திரம் தப்பியோடினன்; அவனும் இனி இறப்பான். நீ உன்னுடைய அரிய உயிரைத் தோற்கவோ இங்கு வந்தனை? நீ போரைச்செய்து இறக்கப் போகின்றனையோ? பேடித்தொழிலைப்படித்த இரணியனுகிய பிள்ளையைப் போலக் கடலிலோடி மறைந்து உயிர் பிழைக்கப்போகின்றனையோ? இவற்றுள் நீ செய்வதை விரைந்து யோசித்துச் சொல்லுதி. இப்பூவுலகிலுள்ளார் காத்தாலும், அவுணர்கள் பலரும் வந்து காத்தாலும், நிலை பெற்றழியாத சூரபன்மன் வந்து காத்தாலும், தொலைவில்லாத வலியையுடைய மற்றெவர் வந்து காத்தாலும், நான் உன்னைக் கொல்வேன்" என்றிவ்வாறு வீரவாகுதேவர் கூறினர். இப்படி வீரவாகுதேவர் சொல்லுதலும் அக்கினிமுகன், மிக்க கோபாக்கினி விரைவிற் சென்று மனத்தை அலைக்க, திண்ணிய சிலையை வளைத்து, நாணேற்றை செய்தான். அவ்வொலியைக் கேட்டுச் சூரியனும் சந்திரனும் இரிந்தார்கள்; நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன; ஆதிசேஷனும் உலைந்தான். "இவன் உலகமனைத்தையுங் கெடுத்தான்" என்று தேவர் கூட்டம் ஓடின. அப்பொழுது அறுமுகக்கடவுளுக்கு அன்பராகிய வீரவாகுதேவர் தமது திருக்கரத்திலுள்ள வில்லைக் காலுறவளைத்து நாணேற்றை செய்தார். அதனைக்கேட்ட பிரமா முதலிய தேவர்களும் அசுரர்களும் கலங்கி, "இக்காலந்தானே உலகமுழுதும் அழியுங்காலம்" என்றார்கள். அக்கினிமுகன் பதினைந்து பாணங்களை விடுத்து ஆர்த்தான். அவை தமக்கெதிரே வருமுன் வீரவாகுதேவர் பதினைந்து அம்புகளைச் செலுத்தி அவற்றை விலக்கி, இடிபோல உரப்பினர். அக்கினிமுகன் இருபது பாணங்களைத் தொடுத்தான். வீரவாகுதேவர் இருபது பாணங்களைச் செலுத்தி அவற்றைத் தடுத்தார். அக்கினிமுகன் அதனைக் கண்டு. ஆயிரம் பாணங்களை வீரவாகுதேவருடைய நெற்றியிற் புகும்படி செலுத்தி, அவுணர்கள் புகழும்படி வெற்றிச்சங்கை வாயில்வைத்து ஊதினன். வீரவாகுதேவர் ஆயிரம் அம்புகளை விடுத்து அக்கினிமுகனுடைய தேரையுங் குதிரைகளையும் வில்லை

யும் அழித்தார். அவன் அயலிலுள்ள வேறொரு தேரிற்பாய்ந்து, ஒரு தண்டாயுதத்தை வீரவாகுதேவர்மீது விடுத்தான். அவர் ஒரு மொட்டம்பைச் செலுத்தி, அது பொடியாய் வீழும்படி பல துண்டங்கள் செய்தார். அக்கினிமுகாசுரன் பிறிதொரு சிலையை வளைத்து வாயுப்படைக் கலத்தைச் செலுத்தினன். வீரவாகுதேவரும் அப்படையை விடுத்தார். அக்கினிமுகன் யமப்படையை விடுத்தான். வீரவாகுதேவரும் அதனையே செலுத்தினர். அக்கினிமுகன் சூரியப்படையை விடுத்தான்; வீரவாகுதேவரும் அப்படையை விடுத்து அதனை விலக்கி, நஞ்சு பாய்ச்சிய கூரிய நூறு பாணங்களை அக்கினிமுகனுடைய மார்பிற் செலுத்தி ஆரவாரித்தார். அவைகள் மார்பிற் பட்டபொழுது அக்கினிமுகன் தேவர்கள் பாற்கடலைக் கடையும்பொழுது அதிற்கவிழ்ந்த மந்தரமலைபோல நிலைசோர்ந்து தேரின்மீது வீழ்ந்தான். அவனுடைய மார்பாகிய மலையினின்றும் இரத்த வெள்ளம் நதிபோலப் பெருகியது; உயிர் போகின்றதும் வருகின்றதுமாய் உலாவியது. மனத்தேற்றம் நீங்குவாதாயிற்று. அவனுடைய உயிரைக் கவர்வதற்கு அந்தகன் அவனை அணுகுதற்கு அஞ்சினன். இப்படி இறந்தவன்போல மயங்கிய அக்கினிமுகன் பாம்பு இடியேற்றுல் நெளிந்து அசைந்தாற்போலத் தேரினின்றும் எழுந்து, தெளிந்து இரங்கி, வலிமையில்லாதவனைச் சிறுமை அடைந்தான். இங்ஙனஞ் சிறுமையடைந்த அக்கினிமுகன் ''பகைவர்களுடைய போரில் யான் தோல்வியடைந்தால் வந்து உதவிசெய்வாய்'' என்று அற்றைநாட்காலையில் வெறியாட்டாடிப் பலியூட்டி வழிபட்ட தன்னகர்க் காளியை வரும்வண்ணம் நினைத்தான்.

சூலப்படையையும் வாட்படையையும் ஏந்திய கைகளையும், சிவந்த கேசத்தையும், உங்காரத்தினுல் உரப்புகின்ற சத்தத்தையும், கூற்றுவர்களும் அஞ்சுந் தோற்றத்தையும் உடைய காளியானவள், காளிகளும் கூளிகளும் செறிந்து தன்னைச் சூழவும், கூளிகள் எழுதிய கொடிகள் ஆகாயத்தை அளாவவும், சங்கு முதலாகிய வாத்தியங்கள் ஒலிக்கவும், சிங்கவாகனத்தின்மேலேறி, விரைவிற் போர்க்களத்தையடைந்து, வீரவாகுதேவருடைய பாணங்களினுல் வீழ்ந்தயர்ந்த அக்கினிமுகனையடைந்து, அவனை நோக்கி, ''அஞ்சற்க'' என்று அமைத்த கையினளாய், ''உன் பகைவர்களுடைய உயிரை யான் உண்பேன். நீ வருந்தாதே'' என்று கூறி, பூதப்படைகள்மேற் சென்று போர்செய்ய நினைத்து, பஞ்சபூதங்களும் அஞ்சும்படி ஆர்த்தாள். அவ்வொலியைக் கேட்டுப், பூதர்கள் கோபித்து ஆரவாரித்து, மேற்சென் றெதிர்த்தார்கள். தேவர்கள் வெயர்த்து வருத்தினர்கள். அவளைச்சூழ்ந்த காளிகளும் கூளிகளும் சூலங்களையும் வேற்படைகளையும் மழுப்படைகளையும் பாணங்களையுஞ் சிந்தியும், மலைகளையும் மரங்களையும் எழுக்களையும் சக்கரங்களையும் வீசியும் போர் செய்தன. காளியானவள் இவ்வாறு இருதிறப்படைகளும் போர்செய்தலைப் பார்த்து, ''பூதர்கள் யாவரையுங் கொல்வாய்'' என்று ஒரு முத்தலைச் சூலத்தை வீசினுள். அப்படை அக்கினியையும் புகையையுங் கான்று, பல காளிகளையுண்டாக்கி, பூதசேனைகள் அஞ்சும்படி சென்றது. சூலத்தின் வலிமையை வீரவாகுதேவர் கண்டு, ''இது பூதர்களுடைய உயிரை உண்ணும்'' என்று கருதி, அதன்மேற் பதினெண்கம்புகளைச் செலுத்தினர். அவைகள் அம்முத்தலைச்சூலத்தைப் பொடிபடுத்தின. அதனைக் காளி

பார்த்து ''இவன் யான் விடுத்த சூலத்தையும் பாணங்களிஞல் விரைவில் அறுத்து, என்னுடைய வலிமையை மதியாதவனுய் இன்னும் உயிரோடு நிற் கின்ருன். இவனுடைய உயிரை உண்பேன்'' என்று கூறி, ஓரிமைப்பொழு தினுட் சிங்கவாகனத்தின் மேலேறிக்கொண்டு சேனைகளே நீங்கி, வீரவாகு தேவருக்கு முன்னே ஆர்த்துச் சென்று, ''முன்னே யான் விடுத்த முத்தலைச் சூலத்தைப் பாணங்களாற்றடுத்து நின்ருய்; இன்னுமோரு சூலப்படை உளது; அதனைச் செலுத்துவேன்; இறப்பாய்; அதனைக் காத்தலரிது'' என் ருள். வீரவாகுதேவர் அதனைக்கேட்டுப் புன்முறுவல்செய்து, ''சூலம் ஒன் றல்ல ஆயிரத்தை ஒருங்கே விடுத்தாலும் நின்று அவை முழுவதையும் பொடிபடுத்துவேன். பெண்ணே, நீ என்னுடைய வலிமையை அறிந்திலே'' என்ருர். காளி கோபம் மூண்டு, உரப்பி, பூதசேனைகள் அஞ்சும்படி வேறு மோர் சூலப்படையை விரைந்து வீசினுள். அப்படையைக்கண்ட தேவர் கள் இது நஞ்சமோ என்று ஓடினுர்கள். சூரியசந்திரர்கள் பாம்போ என்று வருந்தினுர்கள். சூலப்படை தம்முன் வந்ததை வீரவாகுதேவர் பார்த்து ஆயிரம் பாணங்களைத் தூண்டி அதனைத் துணித்தார். சூலப் படை வெட்டுண்டதைக் கண்டு காளி கோபித்து, ''இவனுடைய சிரசை வாளினல் அறுத்து இரத்தத்தைப் பருகி உயிரைக் கவர்வேன்'' என்று கூறி சிங்கவாகனத்தினின்றும் இறங்கி,வீரவாகுதேவருக்கு முன்னே ஆரவாரித்து நஞ்சுபோலச் சென்று, கூரிய வாட்படை ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு, அவருடைய தேரையடைந்தாள். வீரவாகுதேவர் பார்த்து, ''பெண்பாலாகிய இவளுடைய உயிரை நீக்குதல் தகுதியன்று'' என்று நினைத்து, அவளுடைய வலியைத் தொலைக்க எண்ணி, இடிபோல உரப்பி, எட்டுக் கைகளையும் தமது ஒரு கரத்தாற் ஒடித்தாற்போலப் பிடித்து, மற்றொரு கரத்தால் மார்பில் அடித்தார். காளி வீழ்ந்து அவசமாயினுள். அவ்வடியினல் அவளுடைய மார்பு கிழிந்தது. அதனின்றும் வடிந்த இரத்த வெள்ளம் சமுத்திரத்தைப்போல ஓலித்துப் பெருகியது. அவள் அடைந்த துயரை யார் சொல்லவல்லவர்? வீரவாகுதேவர் அவளுடைய மார்பில் எற்றுதலும் பூமி கிழிந்தது, பலிகள் வெடித்தன, அண்டபித்திகையும் பிளந்தது. கடல்போலக் கான்ற இரத்தம் தன்னுடைய கரிய சரீரத்தை மறைத்தலால் அவள் காளி என்னும் காரணப்பெயரையும் மாற்றினுள். பூமியில் அவசமாய் வீழ்ந்த அவள் ஐம்புலன்களும் மனம் முதலிய கருவி களும் முன்போல வந்து சேரப்பெற்று, கண்விழித்து விம்மி, வீரவாகு தேவர் மார்பிலடிக்கத் தான் இறுமாப்பும் வீரமும் இழந்து வீழ்ந்ததை யும் மிக மயங்கியதையும் மனத்தில் நினைந்து, நாணம் மிகுந்து, ஆவி நடுங்கி, ''நிர்மலராகிய அறுமுகக்கடவுளுடைய ஏவலால் வந்த வீரவாகு தேவரோடு போர்செய்தால் வெற்றியுண்டாகுமோ? புத்தியில்லாமல் யான் இங்கே போருக்கு வந்தேன்'' என்று எண்ணி, வலிமையின்றி எழுந்தாள். எழுந்த அவள் தேரின்மீது நிற்கின்ற வீரவாகுதேவரைப் புகழ்ந்து, ''பெருமையிற் சிறந்த வீரரே, அக்கினிமுகன் இன்றைக்கு என்னே அருச் சித்துத் துதித்து எண்ணில்லாத பலிகளே உதவி வேண்டினுன். அந்த நன்றியை மறவாதவளாய் யான் இங்கே வந்தேன். உம்முடைய வலிமை யையும் வீரத்தையும் சின்னங்களையும் உணர்ந்திலேன். போரில் முற்பட்டு உம்மோடு பொருது இந்த நிலைமையை அடைந்தேன், இனி இருந்த

இடத்திற்குச் செல்வேன். இனிமேல் விரைந்து அக்கினிமுகனைக் கொல்லுதிர்; ஒழிந்துள்ளோரையும் கொல்லுதிர்; அதன்மேல் பானுகோபனையும் சங்கரிக்குதிர்; அவுணர்களை வென்று அறுமுகக்கடவுளுடைய திருவருளைப் பெற்று மகிழ்ச்சி அடைகுதிர்; நீடுழிகாலம் வாழுதிர்; யான் கூறிய இவற்றையெல்லாம் பின்னே காணுதிர்'' என்றுள். இவ்வாறு காளி சொல்லி, வீரவாகுதேவரிடத்து விடைபெற்றுக்கொண்டு மீண்டு, சிங்க வாகனத்தின்மேலேறிச் சேனைகள் சூழத் தான் முன்னிருந்து வந்த இடத்திற்குச் சென்றுள்.

காளி வீரவாகுதேவரிடத்து விடைபெற்றுச் செல்லுதலும், அக்கினி முகன் அங்கே நிகழ்ந்தவைகளெல்லாவற்றையும் பார்த்துக் கோபித்து, ''இந்தக் கள்வனுடைய வலிமை நன்று'' என்று கூறி, மிகுந்த வலியையுடையதாய், மேகமானது ஆகாயத்திற்கிடந்து இடியைக்கக்கி எழுந்தாற்போல விரைவிலெழுந்து சொல்வான்: ''உயிர்கள் பலவற்றையுங் கொன்றுதின்று இரத்தத்தையும் கள்ளையும் பருகிச் சிறிதும் வயிறு நிறையப்பெறுமல் நீங்காத பசிப் பிணி மிகுந்து வந்த காளியாலோ பகைவர்களுடைய போர்களை யான் முன்வென்றேன். சூரன்சேய்க்குத் துணைகளும் வேண்டுமோ? சூலமும், தண்டும், வாளும், மழுப்படையும் கொண்டு பக்கத்திற் கூளிகள் சூழவிருக்கின்ற காளியினுடைய வலிமையைப் பரீட்சிக்கும்படி நினைத்து அழைத்தன்றி, 'கந்தசுவாமியினுடைய படைகளை அவள் வெல்லுவாள்' என்று எண்ணினேனெனை? வாவிகளும், குளங்களும், நதிகளும், பிற நீர்நிலைகளும் நிறைவது பனியினலல்லவே? அதுபோல, தேவர்களை ஏவல்கொண்ட சிறப்பையுடைய தமியேன் இங்குவந்த காளியினுலோ வீரத்தன்மையை அடைவேன்? இனி ஒரு நொடிப் பொழுதினுள், என்றம்பியாகிய வச்சிரவாகுவைக் கொன்று தப்பியோடிய ஒற்றுவனுடைய வலிமையைக் கெடுத்து அனுடைய உயிரை யமனுக்கு உணவாகக் கொடுப்பேன். அவனைக் கொன்றல்லது என் பிதாவாகிய சூரபன்மனுக்கு முன்பு செல்லுவதில்லை. இது என் வஞ்சினம்'' என்றுன்.

அக்கினிமுகன் இவ்வாறு சொல்லி, சேனைகள் பக்கத்தில் வந்துசூழத் தேரிற்சென்று, ஒரு வில்லைவளைத்து, நூறுபாணங்களை வீரவாகுதேவர்மேற் றூண்டி ஆர்த்தான். அவனுடைய செயலை வீரவாகுதேவர் பார்த்து, ''இறக்கும்படி வந்தாய்போலும்; உன்முயற்சி அழகிது என்றுகூறி, வில்லைக் காலுற வளைத்து, நூறு அம்புகளை விடுத்து, அக்கினிமுகன் விடுத்த பாணங்களெல்லாவற்றையும் அறுத்தார். அவன் சிறந்த நூறுசரங்களை விடுத்து, வீரவாகுதேவருடைய தேரையழித்து, தான்எண்ணிய வெற்றியையடைந்து வெற்றிச் சங்கை யூதினன். தேர் அழிதலும், வீரவாகுதேவர் வெகுண்டு, பதினன்கம்புகளை விரைவிற்றூண்டி, அக்கினிமுகனுடைய வில்லை முரித்தார். அவன் வேறொரு வில்லை வளைத்து; பற்களைக் கறித்து, ''இவனை இப்பொழுதே கொல்வேன்'' என்று வஞ்சினங்கூறி, பிரமப்படைக்கலத்தையெடுத்து வீரவாகுதேவர்மேல் விடுத்தான். வீரவாகுதேவர் அதனைப் பார்த்து, ''யானும் பிரமப் படைக்கலத்தை செலுத்தினுல் எனக்கு வரும் ஊதியம் என்னை?'' என்று சிந்தித்து, வீரபத்திரப்படையை யெடுத்து, மனத்தினுல் வழிபட்டுச் செலுத்தினர். அது விரைந்து செல்ல, பிரமப்படைக்கலம் நடுங்கி மிக வணங்கி, யாவரும் நகைக்கும்படி இரிந்தது. வீரபத்

திரப்படை ஒரு தடையுமின்றிச் சென்று அக்கினிமுகனுடைய உயிரைக் கவர்ந்து தலைகளைத்தள்ளி, மின்போல வீரவாகுதேவரிடத்து மீண்டுசென்று றது. அக்கினிமுகன் இறந்து வீழ்ந்தான். தேவர்கள் அதனைப் பார்த்து வீரவாகுதேவரை வாழ்த்தி, பூமழைகளைப்பொழிந்து, வஸ்திரங்களைவீசி நின்று கூத்தாடினர்கள். உடம்பிலணிந்த வஸ்திரங்களையும் நாணத்தை யும் துறந்து உவகையால் உரையாடாமல் ஆர்த்த தேவர்கள் அற்றை நாட் பிறந்த குழந்தைகளைப் போன்றார்கள்.

அக்கினிமுகன் இறப்ப, அவனுடைய படைவீரர்கள் இருபத்து நாலாயிரவர் வீரவாகுதேவரைச் சூழ்ந்து, கப்பணம் சக்கரம் வேல் மழு அம்பு முதலிய படைகளைச் சொரிந்து போர்செய்தார்கள். வீரவாகுதேவர் அதனைநோக்கி, கோபித்து, ஒரு வில்லைவளைத்து, விரைவில் ஆயிர நூறு கோடி பாணங்களை எய்து, அவுணர்கள் ஏங்க உரப்பினர். அவர் இவ்வாறு ஒருகணப்பொழுது இடைவிடாமற் பாணமழைகளைப் பொழிந்து ஊழிக் காற்றினும் வேகமாகத் திரிந்தார். அவுணப்படைத்தலைவர் எறிந்த படை களும் எய்த அம்புகளும் முறிந்தன; துணிந்தன. புயங்களும், மார்புகளும், கரங்களும், சிரங்களும், கால்களும் தறிந்தன. அவர்கள் இறந்தார் கள். யானைகளும் குதிரைகளும் துணிந்து வீழ்ந்தன. தேர் நிரைமுழுதும் அழிந்தன. சூழ்ந்த அவுணர்களும் அழிந்தார்கள். அப்போர்க்களத்தில் ஆகாயத்திலே பருந்துகள் மொய்த்தன; பூமியிலே தசைகளோடு இரத்த வெள்ளம் பாய்ந்தது. அவுணர்கள் இறக்கும்பொழுது அவர்களுடைய வக்கிரதந்தங்களில் உண்டாகிய கோபாக்கினி காக்கைகளும் பேய்களும் உண்ணும்படி புலவோடுகூடிய நிணங்களைப் புழுக்கியது. யானைகள் காலும், துதிக்கையும், தலையும், வாலும் வெட்டுண்ண, இரத்தவெள்ளத்துள் ஆமைபோலப் போயின. அவுணர்களுடைய உடம்பினின்றும் வடியும் இரத்தம் வெள்ளமாயெழுந்து, சங்காரகாலத்தில் வடவாமுகாக்கினி சமுத் திரத்தை உண்டுலாவுவதுபோல, அவர்களுடைய உடல்களை அள்ளிக் கொண்டு பாய்ந்தன, யானைகளினின்றும் குதிரைகளினின்றும் கால் கொண்டுபாயும் இரத்தம், மழைக்காலத்தில் மலைகடோறும் அருவிகள் பெருகிச்சென்றாற்போல, ஆர்த்துச் சென்றது. இரத்தவெள்ளத்தில் வேல் வாள் முதலிய படைக்கலங்கள் மீன்கள் போல விளங்கக்கண்டு கடலிலுள்ள மீன்கள் அவற்றைத் தம்மினமென்றெண்ணி வந்தெதிர்கொண்டன. காம் புகள் வெட்டுண்ட குடைகள் செவ்வானத்திற் பூரணசந்திரர்கள் செல்லு தல்போலச் சென்றன. இரத்தவெள்ளம் ஒலித்துக்கொண்டு செல்ல, அதில் வாருண்டு போகின்ற தலைகளையும் தசைகளையும் உடல்களையும் பூதர்கள் தாம் கொன்ற அவுணவீரர்களுடைய குடராற்பின்னிய வலையையெறிந்து இழுத்தார்கள். நாய்களும் பேய்களும் பூதங்களும் காளிகளும் அப்போர்க் களத்தில் ஒவ்வொரு சாரிற்றிரிந்தன. தேரிலிறந்த அக்கினிமுகனுடைய சிரங்களினின்றும் இறந்த பாகனுடைய தலையினின்றும் இரத்தம்பாய்தல், அழிந்ததேரும்உயிருடையதாய் அவ்விரத்தத்தைப் பெற்றாற்போலும். அவு ணர்களுடைய தேரிற் பூண்ட சிங்கங்கள் இறக்க, இரத்தவெள்ளம் அவற்றை வாரிக்கொண்டு கடலிற்சென்றது. அச்சிங்கங்களைத் தேரைகள்

தம்மினமென்று எதிரேவந்து கூடிக் கத்துவனவாயின. இவ்வாறுகிய போர்க்களத்திற் பயந்து ஓடுகின்ற அவுணர்களிற் சிலர் இறந்த அவுணர்களுடைய தலைமலைகளில் தங்களுடைய கால்கள் தாக்குண்ணத் திரிந்து அயர்ந்து இறந்தார். அவருட் சிலர் மழுக்களும், வேல்களும், வாள்களும், முத்தலைச்சூலங்களும் காலிற்பட வருத்தமுற்றார். சிலர் நிணமும், ஊனும் கலந்த புழுதியில் வழுக்கி அழுந்தியிறந்தார்கள். சிலர் பரந்த இரத்த வெள்ளத்தில் நீந்திநீந்திப் பின் காலெழாது ஒய்ந்தார். சிலர் ஓடினர். சிலர் இறந்தார். சிலர்சிலர் காணுந்தோறும் காணுந்தோறும் வெளியிட மெல்லாம் வீரவாகுதேவருடைய உருவமாயிருத்தலால், மிகுந்த துன்ப மெய்தி ஏங்கி மாண்டார்கள். சிலர் பூதர்கள் தம்மைத் தொடர்ந்துவர அஞ்சி அவர்களுடைய கால்களை வணங்கித் தம்மிடத்துள்ள படைகளெல் லாவற்றையும் எறிந்துவிட்டு ஓடிப்போய்ப் பின்பு இறந்தவர்களுடைய கையிலுள்ள படைகளை எடுத்துக்கொண்டு போயினர்கள். மரணத்துக் குப் பயந்தவர்கள் சிலர் கையிலுள்ள படைக்கலங்களெல்லாவற்றையும், எறிந்துவிட்டு, தண்ணுமை உடுக்கை பேரி முதலாகிய பல வாத்தியங்களை ஒலித்துக்கொண்டு நின்றார்கள். தம்முயிரில் விருப்பமுடையார்களும், குதிரை முகத்தையும் யானைமுகத்தையும் உடையார்களுமாகிய சில அவுணர்கள் இரத்தவெள்ளத்திற் றங்களுடைய சிரங்களை நீட்டி, மற்றை அவயவங்க ளெல்லாவற்றையும் அதனுள் மறைக்கின்றார்கள். வலியில்லாத சில அவு ணர்கள் போரிலே தோற்றுப்போய் நரிகளினுருவத்தை யெடுத்து இறந்த அவுணர்களுடைய மாமிசத்தை உண்ணும்பொழுது நாய்கள் வந்து பற்ற நடுக்கமுற்றார்கள். பூதர்கள் தம்மைத் தொடர்தலும் அவருக்குப் பயந் தோடிய சில அவுணர்கள் நாயினுருவெடுத்துச் செல்ல, அங்குள்ள நாய் கள் வந்தடர்தலும் அஞ்சினர்கள். இறந்த அவுணர்களன்றி எஞ்சிய அவு ணர்கள் இன்னும் பலவாருக அஞ்சியோடுதலும், மகேந்திரபுரி கடலு டைந்தாற்போல ஒலியுண்டாக அரற்றியது.

இவ்வாறுக நிகழும்பொழுது, எங்கும் பிரிந்துபோய் யுத்தஞ்செய்த இலக்கம் வீரர்களும், பூதர்களும் போர்க்களத்தினடுவே நிற்கின்ற வீரவா குதேவரை வந்து சேர்ந்தார்கள். அக்கினிமுகன் எய்த அம்புகள் மார்பை ஊடுருவ வலிமையிழந்து துன்பத்தின் மூழ்கி அழிந்த வீரபுரந்தரர் எழுந்து ஒரு புடையில் வந்தார். வீரவாகுதேவருடைய மருங்கில் இவர்களெல்லா ரும் நெருங்கி வந்து நிற்கும்பொழுது, அவர் தம்முடைய தம்பியர்களெழு வரையுங் காணுதவராய் வருந்தி, ''பகைவர்களோடு போர்செய்த என் றம்பியரெழுவரும் இறந்தனரோ? மயங்கினர்களோ? அவர் யாண்டுக் கிடந்தார்கள்? சொல்லுங்கள்'' என்று வினவினர். அப்பொழுது, உக்கிரர் என்னும் பூதப்படைத்தலைவர் ''உம்முடைய தம்பியர்களெழுவரையும் அக்கினிமுகன் கொன்றான். அவர்களுடைய உயிரைக் கூற்றுவனுங் கொண்டு போயினன். அவர்கள் இறந்தவிடத்தைச் சொல்வேன். நாம் நிற்கின்ற இவ்விடத்திற்கு முன்னே நூறு யோசனைக்கப்பால், பெரிய ஒரு ஆலமரம் உளது. அங்கே உம்முடைய தம்பியர்கள் இறந்தார்கள். இது உண்மை'' என்றார். வீரவாகுதேவர் அதனைக்கேட்டு, மிகவுந் துன்பமுற்று, தம்மைச் சூழ்ந்தவர்கள் உடன்வர நூறுயோசனை தூரத்துக்கப்பால் ஆலமரத்தி னிழலிலே தம்பியர்கள் கிடக்குமிடத்தை அடைந்து, சிவந்த கண்கள்

அக்கினிகால பிணங்களாகிய சேக்கையின்மீது அவர்கள் இறந்துகிடத்த லைக் கண்டார். கண்டு, கண்கள் இரத்தநீரைக் கால வீழ்ந்து தழுவிக் கொண்டு, வாய்விட்டுக் கூவி, அரற்றி உயிர்த்து, திருமேனி வியர்த்து, கண்டோர் உயிர் உண்டோ இல்லையோ என்று சொல்லும்படி சோர்ந்து, பின் உணர்வுவரப்பெற்று, இவ்வாறு இரங்கலுற்றார்: 'என்றம்பிமாரே தம்பிமாரே' என்பார். 'என்றம்பியர்களே என்னைத் தழுவிக்கொள்ளும்' என்பார். 'ஐயோ எங்கே சென்றீர்' என்பார். 'யான் வெம்பினேன்' என்பார். 'என்னைவிட்டகன்றீரோ' என்பார். 'நான் உம்மை நம்பினேன்' என்பார். 'நான் உமக்கு அயலோ' என்பார். 'அக்கினிமுகனு உங்களைக் கொல்ல வல்லவன்' என்பார். 'நீவிர் இவ்வாறு இறந்திரென்றால், தமி யேன் என்செய்வேன்' என்பார். 'மேலாகிய படைக்கலங்களை ஏந்தி என் னைச் சூழ்ந்து துணையாய் வந்த உங்களைத் தோற்று யானை உய்ந்தேன் போலும்' என்பார். 'அம்மவோ விதியே' என்பார். 'ஆ உனக்கு இது தகாது' என்பார். 'என்னுயிரை விரைவிற் செல்லாது இன்னுமிருத்தியோ' என்பார். 'நற்குணமுடையாரோடு சிலர் இல்வுலகிற் பிறப்பாரா' என் பார். 'எம்மை அடிமையாகவுடைய சுப்பிரமணியக்கடவுளுக்கு இனி என்னசொல்வேன்' என்பார். சிறந்த என்றம்பியர்கள் இறக்க, வில்லோடு யான் திரிவேனென்னில் ஆர் எனக்கு ஒப்புண்டு? என் ஆற்றல் அழகிது' என்பார். 'சூரருடைய கிளையை யெல்லாம் விரைவிற் சென்று சூழ்ந்து வேரோடு அழித்தாலன்றி என் கோபந் தீருமோ' என்பார். 'வில்வலிமை யிற் சிறந்தோர்களாகிய என்றம்பியர்கள் இறக்கும்படி அக்கினிமுகன் எந்தப் படைக்கலத்தைத் தூண்டினனே' என்பார். 'அந்தப் படைக் கலத்தை அவனுக்குக் கொடுத்த தேவர் யாரோ அறியேன்' என்பார். 'பிழையாத வேற்படையையுடைய அறுமுகக்கடவுளுக்கு, நீவினையுடையோ மாகிய யாமும் அடியரோ' என்பார். 'அசுரர் கூட்டங்களையெல்லாம் கொல்வேனே' என்பார். 'இவ்வூரை அக்கினிக்குக் கொடுப்பேனே' என் பார். 'சிவப்படைக்கலத்தைச் சூரன்மீது விடுவேனே' என்பார். 'அந்தோ! வேற்படைக்கு அஞ்சினேன்' என்பார். 'யான் இத்துயரிற் படுவேனே' என்பார். 'பாவியேன் செய்வதென்னை' என்பார். 'என்றம்பியர்களைக் கொன்றமையினால், என்னோடு பொருதிறந்த அக்கினிமுகன் பாலதன்றே வெற்றி' என்பார். 'என்னுடைய வீரம் மாசுண்டது' என்பார். 'யான் இறந்திலேன், தம்பியரிடத்து அன்புடையர்போல வறிதாகப் புலம்பினேன்' என்பார். தமது வில்லைப் பார்ப்பார், வேற்படையைப் பார்ப்பார். மற்ற ஆயுதங்களைப் பார்ப்பார், பாணத்தைப் பார்ப்பார், வீரச்சொல்லைப் பார்ப்பார், வந்து சூழுகின்ற பழியைப் பார்ப்பார், கல்லென்னுமொலி யுண்டாகப் பற்களைக் கறிப்பார், கவலைப்படுவார்.

இவ்வாறு சகித்தற்கரிய துயரையடைந்து வருந்திய வீரவாகுதேவர் எளியராயிருந்தாரல்லர்; ஏங்கி யாதுமோர் செயலுமின்றி வருந்திரைல்லர்; காட்டில் மருந்தினுக்குழன்றாரல்லர்; விரைந்து தம்பியர்களை எழுப்புதற்கு ஓர்உபாயத்தைஎண்ணினர். ''அக்கினிமுகன்பிரமப்படைக்கலம் விட்டுணுப் படைக்கலம் முதலாகிய படைகளுள் ஒன்றை என்றம்பிய ரெழுவர்மீது விடுத்தானையின், அவர்களுடைய உயிரையுண்டவன் யமனன்றே'' என்று நினைத்து இவற்றைச் சொல்லலுற்றார்: ''கூற்றுவன் என்னுந் தமியோன் இவ்

வுடலுக்கும் உயிருக்கும் இன்பத்தை விரும்பி உழலுகின்ற தேவர்களைப்போலவும், அசுரர்களைப்போலவும், நன்னெறியிலொழுகாத பிறரைப்போலவும் என்றம்பியர்களை நினைத்தானே? நம்மவர்களுடைய உயிரை இவன்றானே உண்பான்? தேவர்களுடைய எந்தப்படை தானும் அறிவைக்கெடுப்பதன்றி நம்மவர்களுடைய உயிரை யுண்ணமாட்டாது. என்றம்பியர்களைக் கொன்றவன் அக்கினிமுகனல்லன். பகைவனுய்க் கொன்றவன் யமனல்லவா? ஞானத்திற் கிருப்பிடமாய் ஒரெழுத்தாய் ஞானிகளால் எண்ணப்படுகின்ற பிரணவத்தின் பொருளைக்கேட்டுப் பிரமாவைச் சிறையிலிட்டுப் படைப்புத் தொழிலைச்செய்த முதற்கடவுளாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய தம்பியர்களென்பதை அந்த யமன் அறியானே? பதினுறுவயசில் சிவநாமங்களைச் சொல்லி சிவார்ச்சனையை விடாத மார்க்கண்டேயருடைய உயிரைக் கவரும்படி அணுகும்பொழுது, அக்கடவுள் சினந்து திருவடியினுல் உதைத்த தழும்பு இன்னமுஞ் சிறிதும் மாறிற்றில்லை; கூற்றுவன் அதனையும் மறந்தானே? தவறிவிழுந்த ஒரு பூவை அன்பினுலே 'இது சிவார்ப்பணமாகுக' என்று சொல்லிப் பின் இறந்த பதிதனுகிய பார்ப்பானுடைய உயிரைக் கவர்ந்தமையினுல், சிவபெருமான் சூலத்திலேற்ற அதிற் சுழன்று பலநாட் டூங்கியதை யமன் அறியானே? முன்னெருகாலத்தில் ஒரு நாண்முழுதும் ஊணும் உறக்கமுமின்றிப் பரமசிவன்மீது வில்வத்தைச் சொரிந்த தீயனுகிய ஒரு வேடனைத் தன்னுடைய தூதுவர்கள் கடுமொழிகளைச் சொல்லிப் பற்றுதலும், அதனைக்கண்டு யாங்கள் மிக அடிக்க, அவர்கள் அஞ்சி ஓடிப்போனதை யமன் அறியாரனே? முன்னளிலே தன்புதல்வனுக்குத் தீமைகுறித்து 'ஹர' வென்று மூன்றுதரஞ் சொல்லியிறந்த வேடனை யமனுடைய தூதுவர்கள்வந்து பற்ற, இந்தக் காலினுலுதைத்து விடிவித்தவன் யானன்றே? கொடிய துன்மதியினுலும் துச்சகுனலும் பிறராலும் முன்னுள்களிற் றன்னிறைமைத்தொழில் நீங்கித் துன்பமுற்று அஞ்சிப் பட்ட பாட்டை யமன் மறந்தானே? விபூதி ருத்திராக்ஷதாரணஞ் செய்பவர்களிடத்திலும், சிவநாமத்தை உச்சரிப்பவர்களிடத்திலும் அணுகுதற்கும் அஞ்சும் யமன், அறுமுகக்கடவுளுக்கு அடியார்களாகிய என்றம்பியர்களுடைய உயிரைக் கவர்ந்தானே? சேற்றிலாழ்ந்த யானையை ஒரு சிறு புள்ளுங் கொல்லாதோ!''

என்றிவ்வாருகிய வாசகங்களைச் சொல்லி வீரவாகுதேவர் எழுந்து, முதுகிற்கட்டிய தூணியில் ஒரு பாணத்தைப் பிடுங்கி, அதனது தலையில் யமன்காணும்படி தமதுநகத்தினுல் இங்ஙனம் எழுதுவார்: ''வேற்படையையேந்திய முழுமுதற்கடவுளாகிய அறுமுகப்பெருமானுக்குத் தம்பியாகிய வீரவாகு என்னும் யான் எழுதி விடுத்தேன், கூற்றுவனென்பவன் காண்க. என்றம்பியர்களுடைய உயிரைக் கவர்ந்தாய், இது உனக்கு நன்றே? அவர்களுடைய உயிரை விரைவில் விடுக்குதி'' என்று எழுதினர். அதன்பின் வில்லைவளைத்து அப்பாணத்தைப் பூட்டி, முருகக்கடவுளைத் தியானித்துத் துதித்து, மின்போலச் சென்று யமபுரத்தை அடையும்படி தூண்டினர். அப்பாணம் விரைவிற் சத்தசமுத்திரங்களையுங் கடந்து, மானசோத்தரகிரிக்குத் தென்புறத்திலுள்ள யமபுரத்திற்சென்று, யமனுக்கு முன்புபோய் வீழ்ந்தது. யமன் விம்மிதமெய்திப்போய் எடுத்துப் பார்த்து, அது வீரவாகுதேவர் விடுத்ததாயிருக்கக்கண்டு, அதனிடத்துள்ள பாசுரத்தை வாசித்தறிந்து, துன்பமுற்றஞ்சி, ''வீரவாகுதேவருடைய தம்பியர்கள் இங்கே இலர். எங்

னனஞ் சென்றுரோ?'' என்று சிந்தித்து, அவர்கள் கைலாசமலையிலிருப்ப தாக உணர்ச்சியிற்கண்டு தேறினன். பின் எருமைக்கடாவிலேறி, சேனைகள் சூழத் தன்கைரை நீங்கித் திருக்கைலாசமலைச்சாரலை யடைந்தான். அப் பொழுது வீரவாகுதேவருடைய தம்பியர்களெழுவரும் அக்கினிமுகனுடைய போரில் இறந்த சேனைவீரர்கள் சூழ அம்மலைச்சாரலில் விஞ்சையர்களுடைய பாடலைக் கேட்டுக்கொண்டு சிறந்து வீற்றிருந்தார்கள். யமன் அவர்களைக் கண்டு முன்சென்று வணங்கி, ''எல்லாமறிந்த பெரியீர்களே, நுந்தமைய னுகிய வீரவாகுதேவர் உங்களைத்தேடுவார். நீவிர் அழகிதென்று இங்கிருப்ப தென்னை? என்னையும் சந்தேகிப்பார். இந்தப் பூதர்களோடு நீவிரெழுவரும் விரைந்தெழுங்கள்'' என்றான். அவர்கள் அதனைக்கேட்டு, பூதர்கள் இரு மருங்கும்வர அவ்விடத்தை நீங்கி, ஒரு நொடிப்பொழுதினுள் மகேந்திரபுரி யிலுள்ள போர்க்களத்தையடைந்து, தத்தமுடலிற் புகுந்தார்கள். பூதப் படைத்தலைவர்களும் விரைவிற்றத்தமுடல்களிற் புகுந்தார்கள். தேவர்கள் பூமழைபொழிந்து நின்று ஆர்த்தார்கள். எழுவரும் பதைபதைத் தெழுந்து நின்று வீரவாகுதேவருடைய பாததாமரைகளை வணங்கினர். அவர் அவர் களை எடுத்து, மார்போடணைத்துத் தழுவிப் பாம்பு உண்டுமிழ்ந்த சூரியனைப் போல விளங்கினார்; ''இனி யான் அவுணர்களை வெல்வதோ அரிது'' என்று வீரமும் பேசினார்; துன்பமும் நீங்கினர்; மகிழ்ச்சியும் அடைந்தார். எழு வரும் பிறரும் உய்ந்தெழுதலை வீரபுரந்தரரும், பூதகணத்தலைவர்களும், இலக்கம் வீரரும் கண்டு மகிழ்ச்சியிற் சிறந்து, மேகத்தின் வரவைக்கண்ட சாதகப் பகுதிபோல மனங் குளிர்ந்தார்கள்.

அப்பொழுது யமன் சேனைகளோடு அங்குவந்து வீரவாகுதேவரை வணங்கி, ''வீரரே, தமியேனைக் கோபித்தீர். முன்னே நிகழ்ந்த வரன்முறை யைக் கேளும்'' என்று சொல்வான்: ''ஏழு வீரர்களும் இங்கே தம்முடலை விட்டு ஒருங்குசென்று திருக்கைலாசமலைச்சாரலையடைந்து, தம்மைவழிபடுஞ் சில பூதர்கள் சூழ வீற்றிருந்தார்கள். அறிவைக் கெடுக்கின்ற பெருந்துன் பத்தை அடைந்தமையால் நீர் அதனைத் தெரிந்திலீர். உடம்பில் விபூதி ருத்திராக்ஷங்களைத் தரித்தவர்கள் மாட்டும் செல்லுதற்கஞ்சுகின்ற தமி யேன் உம்முடைய தம்பியர்களின் உயிரைக் கவர்வேனே? யாவராயினும் பசிநோய் மிகுந்தால் அக்கினிப்பொறியை உண்பார்களோ? நீர் விடுத்த பாணத்தை யான் பார்த்து, திருக்கைலாசமலைச்சாரலிற்போய், பூதர் களோடு உம்முடைய தம்பியர்களை இங்கே அழைத்துக்கொண்டுவந்து விடுத் தேன். தலைவரே, என்னிடத்துக் கோபஞ்செய்யாதொழிக'' என்று கூறி னன். யமன் இவ்வாறு கூறி, வீரவாகுதேவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு, மகிழ்வோடு தன்னகர்க்குப் போயினன். வீரவாகுதேவர் போரை விரும்பிப் பூதர்களுந் துணைவர்களுந் துதிக்கப் போர்க்களத்தில் நின்றார்.

அங்குநின்று இந்நிகழ்ச்சிகளைப் பார்த்த ஒற்றுவர்கள் சூரனுடைய கோயிலிற்சென்று அவனை வணங்கி, ''அரசனே உன் குமாரனுகிய அக்கினி முகன் போர்செய்து வீரவாகு விடுத்த வீரபத்திரப்படைக்கலத்தினுல் இறந்து வீழ்ந்தான்'' என்று கூறினர்கள். சூரபன்மன் உடனே பூமியில் வீழ்ந் தயர்ந்து, எக் காலத்திலும் தானடையாத துன்பக்கடலுளாழ்ந்து, மெலி வோடு புலம்புவான்: ''என்னன்பினையுடைய உயிரே, உறவே, கண்ணே,

கண்ணுண்மணியே, அக்கினிமுகனே, விண்ணுலகிற்குச் சென்றுயோ? இங்கே மீள்கின்றுயில்லையே. யான் இனி இவ்வுயிர்வாழ்க்கையை எண்ணேன். என்றந்தையே, உனக்கிளையவனுகிய வச்சிரவாகுவை இந் நகரில் வந்த தூதுவன் கொன்றதை நினைந்து நொந்து நீ உடலம் மெலிந்தாய். அந்தத் துயரம் இப்பொழுதோ ஆறியது? என் பகைவர்களெல்லாரையும் மாறுத மகிழ்ச்சி அடையும்படி வைத்து என்னிடத்து ஆறுத துயரை உண்டாக்கினையே. இதுவுங் குமாரனுக்கியல்பா? சொல்லு. சிவகுமாரனே, விட்டுணுவோ, பிரமாவோ, 'ஒற்றுவன் கொல்ல நீ இறப்பாய்' என்று யாவர் கூறினர்? அதனை அறிந்திலேன். போரிலே நீ இறந்தாய் என்று தூதுவர்கள் சொன்னர்கள். வேற்படையை ஏந்திய சிவகுமாரனுக்கு முன் என்னைக் கைவிட்டுப் போவதும் உனக்கு முறையோ? தூதுவன் செலுத்திய அம்பு துணிக்க நீ இறந்தாய் என்று தூதுவர்கள் சொன்னர்கள். அப்பொழுதே அதனை யுணர்ந்தும் பொறுத்தேன். இன்னும் என்னுயிர் ஏதேதைப் பொறுக்கமாட்டாது! ஆவா! தமியேன் அயர, அழியாத என்னிளமைந்தனே, அழிந்தாயே. புத்திரரைப் பெறும்படி தவஞ் செய்வோர்களும் இன்னும் உளரோ! உன்னை நம்புவதெங்ஙனம்! ஒன்றுஞ் சொல்லாமல் அகலுகின்றனை. துன்புறும் யான் மலையையொத்த அழகிய உன் மார்பைத் தழுவும்படி விரைந்து வந்தருள். செய்யாய், கரியாய், என் திருவே, சிறுவா, என்னுருயிரே, விடலாய், வேற்கையாய், அரசே, களிறே. தமியேனுக்கு ஐயனே, என்னை நீயும் அயர்த்தனையோ?'' என்றிவ்வாறு சொல்லிச் சூரபன்மன் புலம்பினன். தாயுங் கேள்வியுற்று நடுங்கித் துன்பக்கடலுள் ஆழ்ந்தாள். அன்றைக்கு அந் நகரில் அழுகையொலி மிகுந்தது.

திருச்சிற்றம்பலம்.

## மூவாயிரர்வதைப் படலம்.

அக்கினிமுகன் இறந்தமையையும், சூரபன்மன் மிகுந்த துன்பத்தினலும் பழியினலும் பீடிக்கப்பட்டிருந்தமையையும், அவனுடைய குமாரர்களாகிய மூவாயிரருங் கேட்டு, தந்தையினுடைய கோயிலையடைந்து, அவன் இருக்குமியற்கையை நோக்கி, எதிரில் வணங்கியெழுந்து. இவ்வாறு சொல்லுவார்கள். ''எம் பிதாவே, வலிமையில் மிகுந்த இலக்கம் வீரர்களும் எண்மரும் வீரவாகுவும் பிறரும் போருக்கு வந்தபொழுது, அக்கினிமுகனெருவனை அனுப்பினாய், அவனெருவன் அவர்களோடு போர் செய்ய வல்லவனே? மெலியராயினும், மிகப் பலராயின், வலியரையும் வெல்லுவர். இஃதுலக வழக்கம். கலைஞானங்களில் வல்ல எம் பிதாவே, நீ இதனை அறியாயோ? பகைவர் குழுவினுள் ஒருவனைப் போருக்கு அனுப்பினாய், மேல் வரும் காரியத்தை ஓர்ந்தாயில்லை. அவ்வொருவன் போரில் இறந்தானென்றல், அதற்காக வருந்தற்பாலையோ? அக்கினிமுகனெருவனுக்காக இரங்கித் தேம்பாதே. யாம் உளேம், இரணியன் இன்னுமுளன், பானுகோபன் உளன், உனக்கு ஒரு குறைவு உண்டாகுமோ! ஐயனே, பகைவர்கள் கொல்ல எண்ணில்லாத நால்வகைச் சேனைகளும் அழிந்தன என்று சிறிதும் வருந்தாதே. அதனைக்கேள். ஏழு கடல்களும்

வறந்தாலும், உன் காற்றுணைகளைச் சூழ்கின்ற சேனைகளுக்கோரழிவுமில்லை. ஊழிக்காலத்தும் அழியாத மகாராஜனே, இங்ஙனம் நீ துன்பப்படுவதும் பெருமைப்பாலதோ! பகைவர்களுடைய போரில் இற்றைநாள்வரையும் இறந்த சேனைகள் மேரு மலையில் ஒரு திணையளவு குறைந்ததுபோலும். வலியனுகிய நீ சிறந்த தலைமையையும் வலியையும் செல்வத்தையும் மறந்து உனக்குப் புறந்தருகின்ற தேவர்களைப்போல இறந்தவர்களை நினைத்து இரங்கற்பாலையோ? உனக்கு உடன்பாடாயின், இந்திரனையும், பிரமாவை யும், விட்டுணுவையும், யமனையும், வாயுவையும், அக்கினியையும், மற் றெல்லாரையும் விரைந்து சென்று யாங்கள் பிடித்துக்கொண்டு வருவேம். அரசனே, நீ விண்ணுலகத்தை யலைக்கவும் மேருமலையையும் மண்ணுல கத்தையும் தலைகீழாக்கவும், வடவாமுகாக்கினியைத் தணிக்கவும் எண் ணினை என்னினும், யாங்கள் உன்னுடைய நினைவின்படி விரைவில் முடிப் பேம். இன்னும் பலவற்றைச் சொல்லியாவதென்? எங்களை ஏவுதி. யாங் கள் விரைந்துசென்று, பூதர்களையும் மற்றைவீரர்களையும் பிறரையும் கந்தனையும் ஒரு நாழிகையினுள் வென்று, உன்னுடைய பாதங்களைத் தரிசிப்போம்'' என்று மூவாயிரம் புதல்வர்களும் கூறினர்கள்.

சூரபன்மன் இவ்வாசகங்களைக் கேட்டுத் துயரம் நீங்கி, ''மைந்தர் காள் நீவிர் கூறியது நன்று; போருக்குச் செல்லுங்கள்'' என்றான். அவர் கள் சூரபன்மனை வணங்கி அவ்விடத்தை விட்டு நீங்கி, கவசத்தையிட்டு, வில்லையெடுத்து, தூணியைக்கட்டி, புட்டிலைப்புனைந்து, ஆயுதங்களெல்லா வற்றையும் கைக்கொண்டு, மார்பில் ஆபரணங்களை யணிந்து, தேரில் ஏறினர்கள். சேனைகள் வந்தன. சங்கம், தண்ணுமை, படகம், பேரி முதலிய வாத்தியங்கள் இடிபோல ஒலித்தன. எண்ணில்லாதனவாகிய கசரததுரகபதாதிகள் மொய்த்து ஆரவாரித்துப் பூவுலகத்தையும் வானுல கத்தையும் விழுங்கின. தேரிற் கொடிகள் ஆடின. மாலைகளில் வண்டுகள் பாடின. பருந்துகளுங் காகங்களும் கூடின. பேய்கள் கூத்தாடின. பூதாளி எழுந்தது. இவ்வாறுகச் சேனைகள் வந்து நெருங்கிச் சூழ, மூவாயிரவரும் விரைந்து போருக்குச் சென்றார்கள். தேவர்கள் இதனைக்கண்டு மனம் வெருவி ஆவாவென்று அஞ்சி வருந்தினர். மூவாயிரவரும் போர்க்களத்தை வந்தணுகினார்கள். பூதர்களும் அவுணர்களும் எதிர்த்தார்கள். அவுணர் கள் வாள், எழு, தண்டு, வில்லு, சூலம் முதலிய படைகளைக்கொண்டு பூதர்கள் தளர்வடையும்படி பொருதார்கள். பூதர்கள் சூலம், தண்டம், சக் கரம் முதலிய ஆயுதங்களினுலும் மலைகளினுலும் அவுணர்கள் இறக்கும்படி போர்செய்தார்கள். இறந்த வீரர்களுடைய உடல்கள் வீழ்ந்தன. இரத்த வெள்ளம் கடலிற் பாய்ந்தது. பேய்களும் காக்கைகளும் மொய்த்தன. அவுணர்கள் யானை தேர் குதிரைகளோடு மடிந்தார்கள். இறந்த பூத கணங்களும் எண்ணிலவாயின.

மூவாயிரவர் அதனைக்கண்டு, கோபம்மூண்டு பூதர்களைக்கிட்டி, விற் களை வளைத்து, இடிபோலக் குணத்தொலிசெய்து, சரமாரிகளைச் சொரிந் தார்கள். பூதசேனைகள் ஏங்கியிரிந்தன. பூதப்படைத்தலைவர்கள் அதனைக் கண்டு, மூவாயிரவர்களுக்கெதிரே சென்று, சிலர் தண்டத்தினுல் அவர் களுடைய தேரைத் தகர்ப்பார். சிலர் மரத்துண்டங்களாற் குதிரைகளைத்

தொலைப்பார். சிலர் பாகனுடைய தலை உருளும்படி உதைப்பார். சிலர் தேர்களையெடுத்தெறிவார். சிலர் எழுப்படையினால் அவர்களுடைய மார் பிலடிப்பார். சிலர் மழுப்படையினால் விற்களை வெட்டுவார். சிலர் மலை களினுற் சேனைகளைக் கொல்வார். சிலர் விற்களைப் பறித்து மரக்கொம் பர்களைப்போல முரிப்பார். பூதகணவீரர்கள் இவ்வாறு போரைச்செய்ய, மூவாயிரவர் முனிந்து விற்களை வளைத்து, யுகமுடிவில் இடி சொரிந்தாற் போல அக்கினியை உமிழ்கின்ற பாணங்களைச் சொரிந்தார். அவர்கள் விடுத்த அக்கினியம்புகள் மார்புகளிலும் புயங்களிலும் முகங்களிலும் கைகளிலும் கால்களிலும் வந்துபட, பூதகணவீரர்கள் இரத்தம் வடியத் தளர்ந்து மனம் வருந்தி நின்றார்கள்.

மூவாயிரவருடைய வில்லாண்மையும், அவர்க்குப் பூதப்படைத் தலை வர்கள் அழிகின்றதனையும், இலக்கம் வீரர்களுள் ஒராயிரவர் கண்டு, அக்கினி போலக் கோபித்து, வீரவாகுதேவர் முன் சென்று, அவரை வணங்கி, இப்போரைச் ''சிறியேங்களுக்குத் தந்தருளும்'' என்று வேண்டி னர். அவர் அதற்கு இசைந்து, ''இது நன்று. மூவாயிரவரோடு போர் செய்ய நீவிர் சென்மின்'' என்று அனுமதி செய்ய, விசயர், சயர், இட பர், கரவீரர், அதிகோரர், அசலர், அதிகுணர், வாமனர், அந்தர், அக ளங்கர், அநகர், சதவலி, மாருதர், வருணர், சசிகண்டகர் முதலாகிய ஆயிரவர் மூவாயிரவரோடு போர்செய்யச் சென்றார்கள். சென்ற அவர் கள் முருகக்கடவுளை அன்போடு வணங்கித் துதித்து, விற்களை வளைத்து, யுகாந்தகாலத்து முகிலைப்போலப் பாணங்களை மூவாயிரவர்மேற் சொரிந்து ஆர்த்தார்கள். அவர்களுடைய வில்வலிமையை மூவாயிரவர் கண்டு, அளவில்லாத பாணங்களைத் தொடுத்து, சூற்கொண்ட மேகங்களோடு மேகங்கள் போர்புரிந்தாற்போலச் சொரிந்தார்கள். மூவாயிரவர் விடும் அம்புகள் ஆயிரவர்கள் விடும் அம்புகளை அழிக்கும். ஆயிரவருடைய அம்புகள் மூவாயிரவர்களுடைய அம்புகளை அழிக்கும். இவ்வாறு இருதிறத் தினரும் போர்செய்யும்பொழுது, ஆயிரவருடைய தேரை மூவாயிரவர் பாணங்களால் அழித்தார். ஆயிரவர் மூவாயிரவருடைய விற்களையும் தேர் களையும் பாணங்களினால் அழித்தார். பின்னும் அவர்கள் மூவாயிரவர் களுடைய சேமத்தேர்களைப் பாணங்களால் அழித்து, அவர்களைப் பூமி யிலே நிற்கும்படி செய்து, தாம் மலையிலேறும் சிங்கங்களைப்போலத் தேர்களிலேறி, விற்களும் தேர்களும் சேனைகளும் பெருமிதநிலையும் கொலைத்தொழிலும் நீங்கிக் கோபத்தோடு பூமியிலே நின்ற மூவாயிரவரை வலையிலகப்படுத்திய மானைப்போலச் சூழ்ந்தார்கள். தேரும் வலிமையு மழியப் பதாதிகளாய் நின்ற மூவாயிரவரும், ஈகையிற் சிறந்தோர் வறுமை வந்தவிடத்துத் துன்பத்தோடு தந்நிலைகுறையுந் தன்மைபோலத் தளர்ந்து, மலைகளைப் பறித்தும், மரங்களை முறித்தும், ஆயிரவர்மேல் வீசி, ஆகா யத்தையும் திசையையும் பூமியையும் மறைத்தார்கள். ஆயிரவர் அவை களை அரைமாத்திரையிற் பாணங்களால் அழித்து வீழ்த்தி, மூவாயிரவ ருடைய மார்புகளில் மூழ்கும்படி சரங்களை விடுத்து, அவர்களுடைய மற்றை அவயவங்களையுந் துளைத்தார்கள். அவருட் சிலர் இரத்தம்வடிய இளைத்தார்; சிலர் இரிந்தார்; சிலர் களைத்தார்; சிலர் கோபித்து நின்று

போர்செய்தார்; சிலர் தேர்களைக் கரங்களால் எடுத்துத் தேவர்கள் ஓவென்று புலம்பியோடச் சமுத்திரத்தில் வீசி ஆர்த்தார். ஆயிரவர் அவர்கள் எடுத்து வீசிய தேர்களினின்றும் இறங்கிப் பூமியில் வந்து வில்லை வளைத்து, அம்புமழைகளைச் சொரிந்து ஆர்த்துப் பொங்கினர். மூவாயிரவரிற் பற்பலர் அதனைக்கண்டு வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, இடிபோல ஒலித்து, எதிரே புகுந்து, ஆயிரவருடைய கையிலுள்ள விற்களைப் பறித்து, வாயுக்கள் மரக்கொம்பர்களை முறிக்குந் தன்மைபோல முறித்துப் பூமியில் எறிந்தார்கள். ஆயிரவர் அவர்கள் பதைக்கும்படி கையால் எற்றினர். அவர்கள் இடிபோலத் தாக்கினர். பாற்சமுத்திரமும் உவர்ச் சமுத்திரமும் எதிரெதிரே திரைகளைச் சிந்தி ஆர்த்துப் பொருவதுபோல இருதிற வீரரும் இவ்வாறு மற்போர் செய்யும்பொழுது, விசயரையொழிந்த மற்றைவீரர்கள் வலியிழந்து மூவாயிரவருக்குத் தோற்றார்கள்.

தம்முடைய துணைவராயுள்ளாரெல்லாரும் இரிந்துபோதலும், விசயரென்னும் வீரர் கோபித்து, ''சூரபன்மனுடைய குமாரர்களாகிய மூவாயிரவரையும் யான் கொல்வேன்'' என்று வஞ்சினங்கூறி, அழியாததும் சிவபெருமானுலே கொடுக்கப்பட்டதும் ஆகிய தூணியிலிருந்த வில்லை எடுத்து வளைத்து, வாயுவைப்போல ஓடிச் சூழ்ந்து மூவாயிரவரின்மேற் பாணமழைகளைச் சொரிந்தார். காட்டிலுள்ள மரங்களை அறுக்குந்தன்மைபோலச் சிலருடைய கைகளை அறுத்தார்; சிலருடைய கால்களை அறுத்தார்; சிலருடைய மார்பை அறுத்தார்; சிலருடைய தோள்களையும் சிரங்களையும் அறுத்தார். அவர்களுடைய அற்ற உறுப்புக்களெல்லாம் பின்னும் தாமே வந்து கூடின. உணர்வும் உயிரும் நீங்கிய அவர்கள் எழுந்து, விசயர்மேல் மலைகளைப்பொழிந்து போர்செய்தார்கள். தலையுங் கைகளும் கால்களும் தோள்களும் வெட்டுண்ட மூவாயிரவரும் பிரமாவினிடத்தில் பெற்ற வரத்தின்றன்மையால் அவைகள் மீண்டுங் கூடப்பெற்றார்கள். அத்தன்மை, பிரசண்டவாயு அடிக்கப் பிரிந்து சிதறிய சமுத்திரஜலம் மீண்டு ஒருங்குவந்து சேர்தலையும், மின்னல் தோன்றியபொழுது அழிந்த இருள் பின்னர் வந்து திரண்டதையும் போன்றது. மூவாயிரவரும், விசயர் அறுக்குமுன் கை கால் முதலிய அவயவங்களெல்லாம் இவ்வாறே முன்புபோல் வந்து கூட, விரைந்து எழுந்தார்கள். ஆராயின் உலகிற்றவத்தினுஞ் சிறந்ததுண்டோ! வெட்டுண்டு உயிர்போய் இறந்தவர்கள் எழுந்து போர்செய்வதை விசயர் கண்டு, விம்மிதங்கொண்டு, போர்வலிமை குறைந்து திகைத்து, ''இச்செய்கை வரத்தாலாயது'' என்று புகை உண்டாக உயிர்த்துப் பொங்கி, ''இவர் செயல் நன்று நன்று'' என்று சிரித்து, ''பாணங்களினுற் றுணிந்து இறந்தவர்கள் எழுந்தார்கள். பின்னும் இவர்மேல் அம்புகளை விடின், இதனால் ஆவதென்? இந்தப் பகைவர்களை இன்றைக்குக் கொல்லுதல் எனக்கு அரியதுபோலும். இவர்களை யான் கொல்லுதல் அரிதாயின், இவர்கள் படைகளோடு என்னைச் சூழ்ந்து பன்னெடுங்காலம் போர்செய்து நின்றாலும், என்னுயிரைக் கொல்லுவதும் இவர்க்கு எளிதன்று. நான் இவர்களை வென்றிலேன், அல்லது இவரோடு பொருது வலிமையிழந்து இறத்தலையும் பெற்றிலேன், இடையன் வெட்டின மரத்தின்றன்மையை அடைந்தேன். 'யான் பகைவர்களாகிய இவர்களைக் கொல்வேன்' என்று வெற்றிகொள்பவனைப்போல வஞ்சினம் பேசி

வந்த யான் இவர்களைக் கொல்லாமல் வீரவாகுதேவரோடு போய்க் கூடலாகுமோ? 'பகைவர்கள் வரத்தையுடையர், மாயங்களையுடையர், மிகவும் வலியர்' என்று சொல்லி மீண்டு போவேனையின், 'இவன் தோற்றான்' என்று நம்மவர் என்னைத் துறப்பர். அன்றியும் என் பகைவர்கள் நான் புறந்தந்துபோகவும் விடுவார்களோ? யான் பித்தர்போல மயங்கினேனல்லேன்; உணர்வோடிருக்கின்றேன். இளைத்திலேன்; இன்னும் வலியோடு நின்றேன். புகழை நிறுத்தினேனல்லேன், வசையொன்றையேயடைவேன். செத்திலேன், உயிரோடிருந்தேன். ஒரு செயலுமற்றேன்'' என்று கருதினர். அவர் மிகுந்த துன்பத்தோடு இவ்வாறு எண்ணும்பொழுது, அத் துயர்க்கடலைக் கடக்குந் தன்மையினராய், ''ஒரு செய்கையால் எனக்கு உய்யுந்திறமுண்டு'' என்று கண்டு ''ஆறுமாமுகப்பிரானன்றி இவ்விடை வேறொரு துணையிலை; மெய்மையீது'' எனத் தேறி, அவருடைய அருமைத் திருவடிகளைச் சிந்தைசெய்து, மாறுமாறு யிழிகின்ற அருவிநீர் வழியுங் கண்ணினராய், அப்பெருமானைத் தியானஞ்செய்தார். அப்பொழுது, அன்பர் யாவருக்கும் எண்ணிய வெண்ணியாங் கருள்புரியும் அருள்வள்ளலாகிய அறுமுகக்கடவுள் விரைந்து ஆகாயத்திலே விசயருடைய கண்ணுக்குத் தோன்றித் திருவாய்மலர்ந்தருளுவார்: ''விசயனே, இதனைக் கேட்பாய். பகைவர்களாகிய இவர்களைக் கொல்ல நினைத்து இவர்களுடைய கால்களையுங் கைகளையுந் தலைகளையும் அறுத்தாய். வெட்டுண்ட அவைகளெல்லாம் மீளவுந் தோன்றின. இவர்கள் பெற்ற வரத்தை நீ அறியாய். அதனாற் போரில் வெற்றியின்றி நின்றாய். இனி மனந்தளராதே. பல படைக்கலங்களைக்கொண்டு பலநாள் நின்று இவர்களுடைய அங்கங்களை வெவ்வேறுகத் துணிப்பினும் இவர் இறவார். இவரைக் கொல்லத்தக்க வலியையுடைய படையொன்றுளது. அதனை விடுப்பின் யாவருமழிவர். இது பிரமன் முன்னளில் இவர்களுக்குக் கொடுத்த வரம்'' என்றருளிச் செய்து, வைரவப்படைக்கலத்தை யுண்டாக்கி விசயருக்குக் கொடுத்து, ''இவர்கள் இறக்கும்படி இப்படையை விடுக்குதி'' என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர்.

விசயர் முருகக்கடவுளுடைய திருவாக்கைக் கேட்டு மகிழ்ச்சியிற் சிறந்து, வைரவப்படைக்கலத்தை வாங்கி, மிகுந்த அன்பினால் அதனைப் பூசித்தார். அவற்றையெல்லாம் அவுணர்களுள் உன்மத்தன் என்பவன் அறிந்து, ''இங்கே இவன் நம்மவர்களெல்லாம் இறக்கும்படி ஒரு படையினாற் கொல்வான் போலும். அதன் முன் ஒரு மாயப்படையினால் இவனுக்கிறுதியைச் செய்வேன்'' என்றெண்ணி, அப்படையை விடுத்தான். அதனை விசயர் பார்த்து, வைரவப் படையை விடுத்தார். அது சென்று, மிகுந்த இருளைப் பரப்பி எதிரேவருகின்ற மாயப்படையை அழித்து, மூவாயிரரையுஞ் சூழ்ந்து சங்கரித்து மீண்டது. மூவாயிரரும் ஒரு கணப்பொழுதினுள் இறந்தனர். விசயர் அதனைக் கண்டு முருகக்கடவுளைத் துதித்து நின்றார். பூதர்கள் பூரண சந்திரனைக்கண்ட சமுத்திரம்போல ஆரவாரித்தார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். இறவாமல் எஞ்சிய அவுணசேனைகள் திசைகளெங்கும் இரிந்துபோயின. தூதுவர்கள் இவைகள் எல்லாவற்றையுங் கண்டு சூரபன்மனுக்கு முன்பு சென்று அவனுடைய கால்களை வணங்கி, ''மகாராஜனே, உன்னுடைய மூவாயிரம் புதல்வர்களையும் இலக்கம் வீரர்களுள் ஒருவனை கொன்றான். இது பொய்யல்ல நிச்சயம்'' என்றார்கள். சூரபன்மன் அதனைக்

கேட்டுப் புலம்பி, உடனே சிங்காசனத்தினின்றும் வீழ்ந்து, பதைத்துச் சோர்ந்து, வெய்துயிர்த்தசைந்து விம்மி, நிலத்தைக்கையாலடித்துப் புரண்டு, அருவிபோலக் கண்ணீர்த்தாரை வடிய துன்பத்தின்மேற் றுன்பம் வைத் தான். அவனைச் சூழ்ந்தோரனைவரும் புலம்பினர்கள்; அப்பொழுது சூரியன் அஸ்தமயமாயினன்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# தருமகோபன்வதைப் படலம்.

இறந்த மூவாயிரம் புதல்வர்களை நினைத்து நினைத்துத் துன்பத்தை அநுபவிக்கின்ற சூரபன்மனுக்கு முன்பு தருமகோபன் என்னும் மந்திரி சென்று, அவனுடைய கால்களை வணங்கி நின்று சொல்வானுயினன்: ''இரா சாதிராசனே, நீ மனத்தில் இவ்வாறு துன்பமுற்று மிகவுமிரங்குவாயாயின், நம்முடைய பகைவர்கள் மகிழ்வர்கள்; தேவர்கள் நகைப்பார்; நம்மவரும் வெள்குவர். பகைவர்களுடைய போர்முனையிலே தம்முடைய தந்தையர் இறப்பினும், மைந்தர்கள் இறப்பினும், சுற்றத்தார்கள் இறப்பினும், மானத் தையுடைய வீரர்கள் மனவலிமையிற் சிறிதாயினும் நீங்குவார்களோ! எதிர்த்து யுத்தஞ்செய்த நம்மவர்களுடைய உயிரைக்கவர்ந்த யமன் உளன், முன்போலப் படைத்துக் கூட்டுதற்குப் பிரமனுளன், நாமுளோம், நம் முடைய வலிமையுளது. இங்ஙனமாக நமக்கு அயர்வும் வேண்டுமோ! அரசனே, அளவில்லாத செல்வங்களும், அழியாத ஆயுளும், குறைதலில் லாத வலியும், ஆஞ்ஞாசக்கரமும், இந்திரஞாலத் தேருமிருக்க, நீ அறிவில் லாத தேவர்களைப்போலப் புலம்பலாகுமோ! தேவர்களுடைய சிறையை விடாது வைத்திருக்க விரும்பிய விரதத்தையும், மிகுந்த மானத்தையும், பகைவர்களை வருத்துந் தன்மையையும் எண்ணுகின்றிலை. இடையறாது துன்புறலாகுமோ! நம்முடைய பகைவர்களாகிய தேவர்களும், மனிதர் களும், பெண்களும், குழந்தைகளும் அடைகின்ற துன்பம் உனக்காவதன்று'' என்று தருமகோபன் சூரபன்மனைத் தேற்றினன்.

தருமகோபன் இவ்வாறு தன்னுடையதுன்பத்தை ஆற்றும்பொழுது, சூரபன்மன் சிறிது துன்பம் நீங்கி, ''கூற்றுவன்போல யானே சென்று பகை வர் குழுவைக் கொல்வேன்'' என்று கோபித்து எழுந்து சென்றான். அப் பொழுது தருமகோபன் அவனுடைய கால்களை வணங்கி, ''மகாராஜனே, நீ இருத்தி. யான் சேனைகளோடு விரைவிற்சென்று பகைவர்களைக் வலைத்துக் கொல்வேன்'' என்று வேண்டினன். எழுந்து சென்ற சூரபன்மன் மீண்டு வந்து சிங்காசனத்திலிருந்தான். தருமகோபன் விடைபெற்றுக்கொண்டு சூரபன்மனுடைய கோயிலை நீங்கி வெளியேவந்து, விரைந்து போர்க்கோலங் கொண்டு, ''புண்டரீகம் என்கின்ற திக்கியானையைக் கொண்டு வருதிர்'' என்று தூதுவர்களுக்குக் கூறினன். அவர்கள் விரைவிற் சென்று பிணித்த சங்கிலியை நீக்கி அதனை அவனுக்கு முன்பு கொண்டுவந்து விடுத்து நின்றார் கள். தருமகோபன் பல ஆயுதங்களை யேந்தி, அமைச்சர்கள் முதலாயினர் சூழ இந்திரனைப்போல அவ்வியானையில் ஏறினன். படகம் பேரி முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. தீபங்கள் செறிந்தன. யானைகளும் குதிரைகளும் தேர்களும் ஒலித்தன. அவுணசேனைகள் நிறைந்தன. கொடிகள் நெருங்

கின. குடைகள் ஆகாயத்தை மறைத்தன. பூதூளி எழுந்தன. திசைகள் இருண்டன. தருமகோபன் நால்வகைப்படைகளுஞ்சூழப் புண்டரீகம் மென்னும் கீழ்த்திசை யானையை யூர்ந்து, நகரை நீங்கிப் போருக்குப் போயினன். தேவர்கள் இதனை நோக்கி, ''அம்மவோ! தருமகோபன் என்னுங் கீழ்மகன் வில்லை ஏந்திப் புண்டரீகம் என்னுந் திக்கியானையை ஊர்ந்து போர்செய் வானையின், இதனை வெற்றிகொள்ளுதல் அரிது'' என்று குலைந்த மெய்யின ராய் இரங்கினர்கள். தருமகோபன் சேனைகளோடு அனந்தம் வீதிகளை நீங்கி வீரவாகுதேவர் கோபத்தோடு நிற்கின்ற போர்க்களத்தையடைந்தான். பகைவர்கள் எதிர்ந்தார்களென்று பூதர்கள் மலைகளையேந்தி ஆரவாரித் தார்கள்.

ஆர்க்கின்ற பூதர்களையும், இலக்கத்தெண்மர்களையும், வீரவாகுதேவ ரையும், அவர்களுடைய வலிமையையும் தருமகோபன் பார்த்து, ''நம் முடைய வாழ்வு அழிந்ததோ!'' என்றிரங்கிச் சொல்வான்: ''பகைவர்கள் நெருங்கித் தன்மேற் போர்செய்ய வருவராயின், இரங்கியேங்குதல் மிகுந்த பழியாகும். மனிதர்கள் இதனையறிந்தால் நகைப்பர். நான் போர்செய்வதே நன்றுபோலும், குறைவில்லாத சேனைகளும் ஆயுதங்களும் மிகவுள்ளன. கையில் வில்லிருந்தது. யானையுமொன்றுளது. அஞ்சுவதென்னை? ஆவதாகும். போருக்கஞ்சுவது வலிமையில்லாதவர்களுடைய செயலாம். யான் பகை வர்களை வெல்லினும் வெல்லுக, அவர்களுக்குப் புறங்கொடுக்கினுங் கொடுக்க, அல்லது இறக்கினுமிறக்க. இனி யான் சேனைகளோடு பகைவர் கள்மேற் போருக்குச் செல்வதன்றி இரங்குதல் சீரிதோ? பகைவர்களுடைய சேனைகளைப் பார்த்துக் கருத்திற் கவலையுற்று யோசித்து நின்றயர்தல் வீரர் களுக்கு இயற்கையாகுமோ? பின்னர்வருவது வருக. நான் இனித் தளரேன்'' என்று தேறிப் போருக்குச் சென்றான்.

அப்பொழுது அவுணசேனைகளும் பூதசேனைகளும் இரவும் பகலும் மாலைக் காலமும் கலந்தாற்போலப் போரில் எதிர்த்தன. பூதர்கள் எழு, தண்டு, சக்கரம், மழு, மலை முதலியவற்றுற் பொருதனர். அவுணர்கள் அம்பு. வேல், வாள், கழுமுள், தண்டு, பிண்டிபாலம், எழு முதலியவற்றுற் போர்செய்தார்கள். மந்திரிமார்களாகிய அவுணர்களும் இலக்கம் வீரர்களும் விற்களை வளைத்து அம்புகளை மழைபோலச் சொரிந்து போர்செய்தார்கள். இவ்விருதிறத்தினரும் உலகத்தார் ''நாம் உய்வதெங்ஙனம்'' என்று அஞ்சும் படி தெய்வப்படைக்கலங்களையும் மழைபோலச் சொரிந்து போர்செய்தார் கள். கைகளுந் தலைகளும் சிந்தி அளவில்லாத அவுணர்கள் இறந்தார்கள். யானைகளும் குதிரைகளும் தேர்களும் அழிந்தன. பூதர்களும் இறந்தார்கள். இரத்தம் பாய்ந்தது. பேய்கள் பரந்தன. இலக்கம் வீரர்கள் வலிமையிழந்து நொந்தார்கள். அமைச்சர் போரில் முயன்று நின்றார்கள். அப்பொழுது வீர மார்த்தாண்டர் அதனை நோக்கி வெகுண்டு சென்று, இடிபோல உரப்பி வில்லைவளைத்து அவுணர்களுடைய உடல்களில் அவர்கள் தலை நடுங்கும்படி பாணங்களை அழுத்தினர். அமைச்சர்கள் துணிந்த கையினரும், வீழ்ந்த தலையினரும், அழிந்த மெய்யினருமாகி இறந்தார்கள். அவுணசேனைகளும் அழிந்தன. இறவாதெஞ்சிய அவுணர்கள் வருத்தமுற்று வந்து போர்செய் தார்கள். பூதர்கள் வெகுண்டு மேற்சென்று அளவில்லாத மலைகளை எடுத்து

வீசினர்கள். அவுணர்கள் யாவரும் வருந்தி, மடைப்பள்ளியிற் சூடுண்ட பூளைகள்போல உடைந்துபோயினர்கள். பூதர்கள் அவர்களைத்தொடர்ந்து பற்றிக் கொன்றார்கள்.

தருமகோபன் அவற்றைப் பார்த்து, பூதர்கள்மேற் சென்று, வில்லை வளைத்து, அளவில்லாத அம்புகளைத் தெரிந்து செலுத்தினன். அவன் செலுத்திய அம்புகள் சமுத்திரத்திற் பெய்யும் மழைபோலப் பூதர்கள்மேற் பட்டது. பூதர்கள் நடுங்கி மெலிந்தனர். தருமகோபன் ஏறிய யானையானது பூதர்களைத் துதிக்கையினால் வாரி எறிந்து உடம்புமுழுயிரும் வேருகும்படி பொருதது; நான்கு கோடுகளினாலும் குத்தியது; கால்களினால் மிதித்துழக்கியது; வாலால் அடித்தது; துதிக்கையினால் எற்றியது. புண்டரீகம் என்னும் யானை இவ்வாறு போர்செய்யும்பொழுது பூதர்கள் மலைகளை அதன்மேல் வீசினர்; மற்றைவீரர்கள் பாணங்களைச் செலுத்தினர்கள். அவற்றால் அதனுடம் புமுழுதும் இரத்தம் பெருகியது. யானை இவ்வாறு நொந்ததெனினும் தன் வலிமை குறையாததாகிப் பூதசேனைகளைக் கொன்றது. ஒழிந்த யானைப் படைகளும் பூதர்களைக் கொன்றன. இவ்வாறு மற்றை யானைகளோடு புண்டரீகமென்னும் யானை போர்செய்யும்பொழுது பூதசேனைகள் உடைந்தன. சேனைகள் உடைதலை வீரமார்த்தாண்டர் பார்த்துக் கோபித்து, வில்லை வளைத்து, புண்டரீகம் என்னும் யானையின்மீது அளவில்லாத அக்கினி அம்புகளைச் செலுத்தி ஆர்த்தார். யானை ஒரு முகூர்த்தம் அயர்வுற்றது. அதனைத் தருமகோபன் கண்டு, வீரமார்த்தாண்டருடைய நெற்றியில் நூறம்புகளைச் செலுத்தினன். அவர் வடிகின்ற இரத்தத்தோடு தேரிலிருந்தார். தருமகோபன் வீரமார்த்தாண்டர்மீது ஒரு வேற்படையைச் செலுத்தினன். வீரபுரந்தரர் அதனை நோக்கி வந்து, அந்த வேல் இருதுணியாம்படி ஒரு பாணத்தைத் தொடுத்து, அவுணர்கள் அஞ்சும்படி பாணமழைகளினாலே தருமகோபனை மறைத்தார். அவன் பாணமழைகளைப் பொழிந்து வீரபுரந்தரர் விடுத்த சரங்களைக் குறைத்தான். தருமகோபன் விடுத்த எஞ்சிய கணைகள் போய் வீரபுரந்தரருடைய மார்பிற்பட்டுச் செருக்கின்றிக் கவசத்தை நீக்கி வலியழிந்து வீழ்ந்தன. தருமகோபன் வீரபுரந்தரர்மீது "இவன் இறந்தான்" என்று யாவரும்அஞ்சும்படி ஒரு தண்டாயுதத்தை எறிந்தான். அது மார்பிற் படுதலும் அவர் மிகுந்த துன்பமுற்று விம்மினர்.

தருமகோபனுடைய செயலை வீரவாகுதேவர் உருத்து நோக்கி, தம் முடைய சொல்லும் மனமும் பிற்பட விரைந்துசென்று, "தலைவரே, நீர் நில்லும், நில்லும்; நும் பகைவனுடைய புயங்களைக் கட்டிக்கொண்டுவந்து தருவோம்" என்று சொல்லுகின்ற வீரர் கூட்டத்தை நீங்கி, அவனுக் கெதிரே புகுந்தார். அவரைத் தருமகோபன் அக்கினிசிந்தப் பார்த்து, "நீயோ வலியுடன் என்னைத் தாக்கும்படி வந்தாய். யானுன்னைக் கொல்லும்படி அமைந்து நின்றேன். நீ காக்கவல்லையாயிற் காத்துக்கொள்ளுதி" என்றான். அதனை வீரவாகுதேவர் கேட்டு, "நீ கூறியது நன்று! எல்லாரிடத்தும் வெற்றியைப்பெற்றேன்; உனக்குத் தோல்வியடைவேனே! உன்னையும் வெற்றிகொள்வேன். கழியை நீந்துதல் கடலை நீந்துதலிற் பெருமையுடைத்தோ! உன்னுடைய வலிமையையும் மதர்ப்பையும் வெற்றியையும் வரத்தையும் இன்றைக்கே அழிப்பேன். நீ கற்ற போரை விரைந்து செய்

குதி'' என்றூர் தருமகோபன் யானையின் மீதிருந்து வில்லைவளைத்து இடி போல நாணொலிசெய்து, அம்புகளைத் தொடுத்து எய்து, வீரவாகுதேவருடைய திருமேனியிற் சிறிதும் வெளியிடமில்லையென்னும்படி மறைத்து ஆர்த்தான். அந்த அம்புகள் அவருடைய திருமேனியிற்பட்டு, இரப்பவர்களுக்கு ஈயாது கரந்து, இரவாத செல்வர்களுக்கு ஈந்த பொருள்போலப் பயனின்றி நுதிமழுங்கி யழிந்து அயலில் வீழ்ந்தன. வீரவாகுதேவர் கோபித்து, ஒருவேற்படையை எடுத்துத் தருமகோபனுடைய மார்பில் எறிந்தார். அவன் அதற்கெதிராகப் பாணங்களை விடுத்தான். அவ்வேற்படை தருமகோபன் செலுத்திய சரங்களெல்லாவற்றையும் அழித்து, அவன் மனம் நடுங்கும்படி அணுகிக் கவசத்தைக் கிழித்து மார்பிற் புகுந்து புறத்திற்போயது. தருமகோபன் பொருமிப் புகைகாலவுயிர்த்து, மார்பினின்றும் இரத்தம்வடிய அறிவிழந்திருந்தான். புண்டரீகம் என்னும் யானை தருமகோபன் அறிவிழந்திருந்ததை அறிந்து, வீரவாகுதேவரைக் கொல்ல நினைத்து அணுகி, அவருடைய தேரைக் கோடுகளிலுற்றுக்கி, போர்க்களத்திற் கிடந்த ஒரெழுப்படையைக் கையிலெடுத்து, தேர்ப்பாகன் சிந்தும்படி அடித்தது. தேரழிய, வீரவாகுதேவர் அதனைக் கண்டு கோபித்து, பிறிதொரு தேரிற்பாய்ந்து தம்மேல்வரும் யானையினுடைய துதிக்கையை ஒரு கரத்தாற் பற்றிக் கொண்டு, மற்றொரு கரத்தாற் கதுப்பிலடித்துத் தூக்கி அப்பாலுலகத்திற் செல்ல வெறிந்தார். யானை விண்ணுலகிற்சென்று மீண்டு போர்க்களத்தில் வீழும்பொழுது தருமகோபன் முன்பு நீங்கிய அறிவு வரப்பெற்று, ''யானையையிழந்தேன் போலும்'' என்று அயர்ந்து, ஆபரணங்களும் கிரீடமும் சிந்தயானையோடு விழுந்தான். வீழ்ந்த யானை மிகவும் வெருவிப் பதை பதைத்து வருந்தி ஒருசாரிற்போயது. தருமகோபன் எழுந்து ஒரு தண்டைக் கையிற்கொண்டு வீரவாகுதேவருடைய மார்பில் எறிந்தான். அவர் அதனை வாட்படையினுற் றுணித்தார். தண்டாயுதம் அழிதலும் தருமகோபன் குலிசத்தைவிட வீரவாகுதேவர் அதனைக் கையினுற்பற்றி, புலி கலைமானுக்கெதிரே புகுந்தாற்போலச் சென்று, தருமகோபனுடைய மார்பில் அடித்தார். அவன் அடியற்ற மரம்போலப் பூமியில் வீழ்ந்தான். வீரவாகுதேவர் திருவடியினுல் ஒருதரம் உதைத்தார். தருமகோபன் இறந்தான். அவுணசேனைகள் கெட்டோடின.

முன் விழுந்தயர்ந்த புண்டரீகமென்னும் யானை உயிர்த்து மெல்ல எழுந்து, தருமகோபன் இறந்தமையை நோக்கி, தான் ஆழ்ந்த துன்பக் கடலுக்குக் கரைகிடைத்தாற்போன்று, வீரவாகுதேவரையடைந்து சொல்லும்: ''எம்பெருமானே, அடியேன்மீது கோபஞ்செய்யற்க. அருள் செய்து சிறியேன் சொல்வதனைக் கேளும். பொய்யென்று நினையாதொழிக. அடியேன் புண்டரீகமென்னும் பெயரையுடையேன். உலகத்தார் துதிக்குஞ் சிறப்பையுடையேன். திசையைக் காவல்செய்வேன். கீழ்மகனாகிய இந்தத் தருமகோபன் இட்ட கொடிய சிறையிற் பலநாள் அகப்பட்டேன். அங்ஙனமகப்பட்ட பாவியேன் புத்தியில்லாத தருமகோபனை இற்றைநாள் வரையுஞ் சுமந்து வாகனமாயினேன். அவனது ஏவல்கள் பலவற்றையுஞ் செய்தேன். அவனுடைய ஏவல் ஒன்றையாயினும்யான் மறுத்ததுண்டானுல், என்னுயிரைக் குடித்து ஊனையுந் தின்பான் என்று பயந்து வேறொரு செயலுமின்றித் திரிந்தேன். முன்னளில் எண்டிசைகளினு முள்ள இராக்ஷ

தர்கள் தன்னையிகழ்ந்தார்களென்று கோபம் மிகுந்து என்மேலே றிக்கொண்டு சென்று அவர்களெல்லாரையும் கிளையோடு கொன்ற தருமகோபனை நீரே கொன்றீர். வேறு யார் கொல்லவல்லார்! நீர் தருமகோபனைக் கொன்றமையினலே தேவர்கள் கவலை தீர்ந்தார்கள், அடியேனும் உய்ந்தேன். அடியேனுக்கு இதன்மேலும் ஊதியமுண்டோ? பாசபந்தத்தை நீங்கி மோஷத்தை அடைந்தோரை ஒத்தேன். முன்செய்த பாவத்தினல் அவுணர்களுடைய சிறையிலகப்பட்ட யான் இப்பொழுது உம்மை அணுகப் பெற்றமையினல் உய்ந்தேன். இதற்கு என்ன தவஞ் செய்தேனே! தமியேனுடைய திசையைக் காக்கும்படி போவேன்'' என்று கூறிப் புண்டரீகமென்னும் யானை வீரவாகுதேவரை வணங்கியது. அவ்வாசகங்களைக்கேட்ட வீரவாகுதேவர் மிக மகிழ்ந்து, ''உன்னுடைய இடத்துக்குச் செல்லுதி'' என்றார். யானை அவுணர்களுக்கஞ்சாது வழிக்கொண்டு தன்னுடைய திசையிற் போய், மகிழ்ச்சியோடிருந்தது. பூதர்கள் தருமகோபன் இறந்தமையை நோக்கி ஆர்த்து, வீரவாகுதேவருடைய புயவலியைப் புகழ்ந்தார்கள். தூதுவர்கள் அதனைக்கண்டு ஓடிச்சென்று சூரபன்மனை வணங்கி, ''மகாராஜனே, கேட்பாய் தருமகோபன் என்னும் மந்திரி சேனைகளோடு சென்று போர்புரிந்து வீரவாகுவால் இறந்தான். சேனைகளும் அழிந்தன. அவன் ஏறிச்சென்ற புண்டரீகமென்னும் யானையும் போயது'' என்றார்கள். சூரபன்மன் தருமகோபன் இறந்தமையைக் கேட்டுத் துன்பசாகரத்தி லாழ்ந்து, உடலும் உயிரும் பதைக்க அழுது உயிர்த்து அறிவிழந்து, சித்திரப்பாவை போலிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## பானுகோபன்வதைப் படலம்.

சூரபன்மன் இவ்வாறு மிகுந்த துன்பத்தோடிருந்தபொழுது, மறு நாட் காலையில் ஒற்றுவர் சிலர் அதனைப்பார்த்து, பானுகோபனிடத்திற் சென்று இவ்வாறு சொல்வார்: ''நம்மரசகுமாரனே, முன்னே நீ மாயப் படைக்கலத்தைச் செலுத்தி வீரவாகுவை அவன் படைகளோடு அகப் படுத்திச் சுத்தோதகசமுத்திரத்திலிட்டாய். அதனைத் தேவர்கள் அப்பொழுதே அறுமுகக்கடவுளுக்குச் சொன்னார்கள். அவர் அதனை வினவி, பாசறையிலிருந்துகொண்டு தமது கையிலுள்ள வேற்படையைச் செலுத்த அது விரைந்து ஆறு சமுத்திரங்களையுந் தாண்டிச் சுத்தோதகசமுத்திரத்தை அடைந்தது. மாயப்படைக்கலம் அதன் வரவைக்கண்டு அக்கணமே தொலைவெய்தியது. வீரவாகுவும் மற்றை வீரர்களும் பூதர்களும் அயர்வு நீங்கி அறிவுவரப்பெற்று இங்கே மீண்டுவந்தார்கள். வேற்படை அவர்களுக்கருள்செய்து மீண்டு கந்தவேளிருந்த இடத்திற்குச் சென்றது. வீரவாகு முதலாயினோர் போர்செய்யும்படி மதிலுட்புகுந்து இந்நகரத்தை அழித்தார்கள். அதனை உன் பிதாவாகிய சூரபன்மன் வினவி, தன்னயலில் நின்ற இரணியனையும், அத்தினிமுகனையும், மூவாயிரரையும், தருமகோபனையும் முறையே ஒருவர்பின் ஒருவராகப் போர்செய்ய அனுப்பினன். அவர்களுள் இரணியனையொழிந்தோர் வீரவாகுவினலும் மற்றையோர்

களாலும் இறந்தார்கள். இரணியன் பயந்து மீனுய்க் கடலில் ஒளித்தான். நம்மரசன் இவைகளெல்லாவற்றையும் வினவித் துன்பக்கடலில் ஆழ்ந்து ஆற்றாது வருந்தினன். இந்நகரத்திலுள்ள சேனைகளெல்லாம் அழிந்தன. பகைவர்கள் இன்னும் இந்நகரத்தில் நிற்கின்றூர்கள்'' என்று ஒற்றுவர் கள் சொன்னர்கள். பானுகோபன் அவற்றைக்கேட்டு, ''நம்முடைய பெரிய வாழ்க்கை அழிந்தபோலும்'' என்றிரங்கி, தன்மனத்திற் கோபமுந் துன்ப மும் ஒன்றற்கொன்றெதிராய்ப் போர்செய்ய இருக்கைவிட்டெழுந்து, பிதா வினுடைய கோயிலுக்குச் சென்று, துன்பத்தோடிருக்கின்ற அவனுடைய கால்களை வணங்கி, எதிரில் நின்று ''மகாராஜனே, இவ்வுறுதிமொழிகளை நன்குகேள்'' என்று ஆந்தரங்கமாகிய அன்போடு சொல்வான்: ''யான் மாயவள் தந்த படையினுல் வீரவாகு முதலாயினரை மயக்கிச் சுத்தோ தக சமுத்திரத்திலிட்டேன், தேவர்கள் அதனைச் சொல்ல அப்பொழுதே வேற்படையை விடுத்து அவர்களை மீட்ட பாலகனை வெல்வது கனவிலும் முடியாது. எல்லாந்தெரிந்த உனக்கு யான் சொல்வதென்ன? முதலுள் நீ அறுமுகக்கடவுளோடு போர்செய்து வருந்தி, படைவலிமையுமிழந்து வறிதே புறந்தந்து ஈண்டு வந்தமையால் உய்ந்தாய். வில்லையிழந்து, வரத்தினியல்புந் தொலைந்து, மானமுமின்றித் தோற்றுவந்தாய். முருக வேள் கோபஞ்செய்திலர்; அவர் கோபஞ் செய்தால், எல்லாப் புவனங் களும் எல்லாவண்டங்களும் ஆற்றுமோ! பிரமாவையும் உலகங்களையும் உண்டுமிழ்ந்த விட்டுணுவினுடைய ஒப்பில்லாத சக்கரப்படையைக் கண்டத் திலே பதக்கமாக அணிந்த தாரகாசுரனைக் கிரவுஞ்சமலையோடு சங்கரித்த வீராதிவீரரை மேன்மையால் வெல்பவர் யாவர்! எளிய விலங்குகளைக் கொன்றவர்கள் புதலினுளிருக்கும் புலிக்குணவாயிறக்குங் கதைபோல, அளவில்லாதகாலமாகத் தேவர்களை அலைவுசெய்கின்ற யாமும் குமாரக் கடவுளாற் பழைய வலியழிந்து தொலைந்தோம். யாவராலும் புகழப் படும் அந்தப் பாலகனுடைய வலியைச் சொல்வதென்ன! அவருடைய பணியைச் செய்கின்ற வீரவாகுவை வெல்வதுமரிது. மிகப் பலநாள்கள் கழியினும், முற்றுப்பெறுவதொன்றை இடைவிடாமல் முயற்சி செய்தடை வது மேலோரியற்கை; பலநாள் உடம்பு வருந்தியும் தங்களால் முடிவு பெறுததொன்றை இது முடியுமென்று முயன்று இழப்பது கீழோரியற்கை. வலிமையையுடைய புத்திரர்களை யிழந்தாய், சதுரங்கசேனைகளின் பெருமை யையிழந்தாய், என்னுடன் நீ ஒருவன் இருந்தாய். மேலாகிய நின் குலத்தை வேரோடொழிக்கக் கூற்றுவன் வந்ததையும் நீ அறிகிலை. பகையை மேற்கொண்டாய். யான் எதிர்த்துப் போர்செய்யவல்ல வீரர் கள் கிடைத்தால் மிகவும் மனந்தளிர்ப்பேன். அத்தன்மையினனுகிய யான் பகைவர்களுடைய போருக்கஞ்சினேனென்று கருதாதே. அரசனே, நீ இன்னும் உய்ந்திருத்தல்வேண்டும் என்னும் ஆசையால் இவைகளைச் சொன்னேன். இனி ஓர் உறுதியைச் சொல்வேன். தேவர்களுடைய சிறையை விடுக்குதி. அறுமுகக்கடவுள் நம்மிடத்துள்ள செற்றத்தை நீக்கி வந்தவிடத்துக்கு மீண்டுபோவார். அதன்பின் உன்னுடைய பெருவளங்கள் அளவில்லாதகாலம் நிலைபெற்றிருக்கும்'' என்று பானுகோபன் கூறினன்.

சூரபன்மன் அவற்றைக்கேட்டு, முடியையசைத்து, புயங்களும் மார்புங் குலுங்கச்சிரித்து, ''நம்பீ, உன்மந்திரச்சூழ்ச்சி நன்று!'' என்று

இவ்வாறு சொல்வான்: ''மைந்தனே, எவற்றைச் சொன்னாய்! இப்பொழுது யான் எளியனாகித் தேவர்களுடைய சிறையை நீக்கினால் இராசாதிராஜனென்று யார் என்னை மதிப்பார்! அதுவுமன்றி நீங்காத வசையுமொன்றுடையும். கூன், செவிடு, முடம், குருடு, ஊமை ஆகிய உறுப்புக் குறைவுகளினாலுண்டாகும் எளிமை அவ்வுடம்பொன்றுடன் ஒழியும். மானமழிந்து வலியிழந்து உலகில் உயிரோடிருப்போர்க்குளதாகும் வசையுரை எழுபிறப்பினும் நீங்குவதுண்டோ! யான் தேவர்களும் பிரமாவும் விட்டுணுவுமுதலாகிய மற்றையெவரும் ஏவலைச் செய்ய இருந்தரசு செய்யலுற்றேன். மும்மூர்த்திகளுக்கும் மேலோராகிய சிவபெருமானுடைய வரத்தைப் பெற்றுள்ளேன். வலியில்லாதார்போலத் தேவர்களுடைய சிறையை இப்பொழுது விடுவேனே! கட்டழகு, இளமை, வலிமை, செல்வம், வீரம், சுற்றம், உடம்பு ஆகிய இவைகள் ஒன்றும் நிலையுடையனவல்ல; புகழென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட ஒன்றன்றே நிலைபெறுவது. பகைவர்களுடைய போரில் அரிய இவ்வுயிரை விடினும், தேவர்களுடைய அரிய சிறையை விடுவதுண்டோ? தமக்கு ஒரு துன்பம்வரினும், அல்லது இறக்கவரினும், தம்மோடுபிறந்த மானத்தைப் பெரியோர் விடுவரோ? சூரன் என்று ஒரு பேர்பெற்ற யானும் சிறந்த இரண்டுநாளைச் செல்வத்தை விரும்பிப் பிடித்த கொள்கையை விடேன். இன்னும் ஓருழிகாலமிருக்கினும் இறப்பதல்லால், பின்னும் இவ்வுலகில் உயிரோடிருப்பதுண்டோ? பிறந்தவர் இறத்தல் திண்ணம். விட்டுணுவையும் வென்ற யான் மின்போல நிலையில்லாத வாழ்வை விரும்பித் தேவர்களுக்குப் பயந்து இந்த உயிரைச் சுமக்கிலேன். மைந்தனே, நீ அஞ்சினைபோலும். உன்னுடைய எளிய மாளிகைக்குப்போய் நித்திரைசெய்குதி. அழியாத வரத்தினையுடைய யான் அழிவதில்லை. இதற்காக இரங்கி மனத்தில் ஒன்றும் நினையாதே. பகைவர்களோடு போர்செய்வதற்கு யான் செல்வேன்'' என்று சூரபன்மன் கோபத்தோடு கூறினான்.

சூரபன்மன் சொல்லியவற்றைப் பானுகோபன் கேட்டு, ''என்றந்தைக்கு உய்யுந்திறம் இல்லைப்போலும். யான் சொல்லியது ஒன்றையும் மனத்திற் கொண்டிலன். தப்பாத விதியை யார் வென்றவர்! அதற்கேற்ற செயலைச் செய்வேன்'' என்று எண்ணி, ''என்பிதாவே, அறிவென்பது ஒரு சிறிதுமில்லாத அடியேன் சொல்லிய தீயமொழிகளைச் சிறிதும் மனத்துக்கொள்ளாது பொறுத்துக்கொள். சிறிய பாலகர்கள் தீயமொழிகளைச் சொன்னர்களாயினும் மூத்தோர்கள் அதற்காகச் சிரிப்பதன்றி, அவரைச் கோபிப்பார்களோ? நீ என்மேற் கோபஞ்செய்யற்க. நம்முடைய நகரத்தை அலைவுசெய்கின்ற பூதகணங்களையும் சாதுரியமான வலிமையிற் சிறந்த வீரவாகுவையுங் கொன்று உன் மனமும் மகிழும்படி செய்வேன். என்னைப் போருக்கு அனுப்புதி'' என்று கூறி, சூரபன்மனுடைய கால்களில் வீழ்ந்து வணங்கினான். சூரபன்மன் கோபந்தணிந்து சந்தோஷமுற்று, ''என்னுடைய குமாரனே, உன் மனம் போரிற் றுணிந்ததுபோலும். இது நன்று. பகைவர்களை வெல்லும்படி சேனைகளை அணிவகுத்துக் கொண்டு போருக்குச் செல்லுதி'' என்றான். பானுகோபன் விடைபெற்றுக் கொண்டு மிகுந்த துன்பத்தோடு விரைவில் மீண்டு, தன் கோயிலையடைந்து, பல தேவர்களுங் கொடுத்த படைக்கலங்களெல்லாவற்றையும் ஆராய்ந்து எடுத்துக்

கொண்டு, மார்பிற் கவசத்தையிட்டு, விரலிற் புட்டிலைச்சேர்த்து, கைத் தோற்கட்டியைக் கட்டி, வில்லையேந்தி, அம்பருக்கூட்டை முதுகிற்கட்டி, சேமமாயுள்ள எண்ணில்லாத படைகளுந் தேருஞ் சுற்ற வாயிலிற்சென்று, பொன்மலையிலே இடியேறு இவர்ந்தாற்போல ஒரு தேரிலேறினன். அப் பொழுது எண்ணில்லாத நால்வகைச் சேனைவெள்ளங்கள் சூழ்ந்தன: வாத் தியங்கள் முழங்கின; கொடிகள் சூரியமண்டலத்தை மறைத்தன. இவ் வாறுகச்சேனைகள் சூழும்படி தேரின்மீதேறிய பானுகோபன் சூரபன் மனிடத்தேவைத்த அன்பும் அது காரணமாயெழுந்த துன்பமும் தன் மனத்தை விழுங்க, போர்செய்யுந் திசையை நோக்கி விரைந்து செல் வானுய், பலகோடி வீதிகளைக் கடந்து போர்க்களத்தை வந்தடைந்து, மூவாயிரரும் பிறரும் இறந்துகிடத்தலை நோக்கி, 'ஆ ஆ!' என்றிரங்கி அழுது துன்பமுற்றான். துன்பமுற்ற அவன் தாங்கலாற்றுத துயராலழி கின்ற தன் மனத்தை ஒருவாறு தேற்றி, பகைவர்கள்மேற் பெருங்கோபங் கிளர்ந்து செல்ல ''யான் பூதர்களை இறக்கும்படி வாட்டி வீரவாகுவைக் கொல்லாதொழிவனேயெனின், வேசிகளுடைய காமவின்பத்தை விரும்பி அவர்களுக்குப் பின்னே செல்கின்ற தரித்திரனுக்கொப்பாகுக'' என்று ஒரு சபதத்தைக் கூறினன். அவனுடைய வரவைப் பூதர்கள் கண்டு, ''இங்கே வருகின்றவன் சூரபன்மனுகும், அல்லது அவன் மகனுகிய பானுகோப னுகும். வேறியார் போருக்கு வருவார்'' என்று பேசலுற்றார்கள்.

அப்பொழுது, அவுணசேனைகள் சென்று பூதசேனைகளோடு ஆர்த்து எதிர்த்தன. போர்ப்பறைகள் ஒலித்தன. பூதூளி எழுந்து ஆகாயத்தை யுந் திசைகளையும் மறைத்தது. பூதர்கள் ஆரவாரித்து எதிர்த்து மலைக ளையும் படைகளையும் மரங்களையும் எறிந்தார்கள். அவுணர்கள் எழு, கலப்பை, மழு, தண்டம், பாணம் ஆகிய இவைகளைச் செலுத்தினர்கள். பூதர்களும் அவுணர்களும் பகலுமிரவும் பூமியிலே போர்செய்து நின்றுற் போல இவ்வாறு மாறுபட்டுப் போர்செய்தார்கள். பூதர்கள் செலுத்து கின்ற மரங்களையும் மலைகளையும் அவுணர்கள் பாணங்களால் அழித்தார் கள். அவுணர்கள் செலுத்துகின்ற வேல் தண்டம் எழு முதலாகிய படை களைப் பூதர்கள் மலைகளால் அழித்தார்கள். தலைகளும் புயங்களும் நிலத் தில் வீழ இறந்த பூதசேனைகள் அநந்தம். புயம், மார்பு, கால், தலை முதலிய அவயவங்கள் அழிந்து இறந்த அவுணசேனைகளும் பல. பூதசேன களாற் குதிரைகளும் யானைகளும் தேர்களும் பூமியிலழிந்து சாய்ந்தன. இரத்தம் பெருகியது. பிணமலைகள் ஆகாயத்தை மறைத்தன. நாய்களும் நரிகளும் காக்கைகளும் பருந்துகளும் உலாவின. இவ்வாறு இருதிறத்துச் சேனைகளும் போர்செய்யும்பொழுது, பூதர்களுடைய தூசிப் படை முரிந்தது. பின்னணியில் நின்ற பூதர்கள் சமுத்திரம்போல வந்து எதிர்த்து அவுணக்கடலைக் கலக்கி, நால்வகைச் சேனைகளையும் அழித்து உலாவினர். தன் சேனைகள் அழிதலைப் பானுகோபன் கண்டு, ''குறள் களாய் வருகின்ற இந்தச் சில பூதர்களே நம்முடைய சேனைகளெல்லா வற்றையும் கொல்கின்றனரோ! ஆ ஆ! இது இனிது!'' என்று தேரைச் செலுத்தி, வில்லைவளைத்துப் பாணங்களைச் சொரிந்து, தேவர்கள் வருந் தும்படி விரைவில் வந்தான். அவனுடைய வரவைப் பூதர்கள் கண்டு, எதிர்சென்று ஆர்த்து, மரங்கள், மலைகள், சூலம், எழு முதலாயினவற்

றைச் சொரிந்தார்கள். அவற்றிற்கெதிராகப் பானுகோபன் அக்கினியீஸ் திரங்களைத் தூண்டினன். பூதர்கள் விடுத்த மரம் முதலியவெல்லாம் துணிந்து துகளாயின. பானுகோபன் பூதர்கண்மீது பின்னும் அக்கினி யம்புகளைச் சிந்தினன். அவைகள் புற்றில் நுழையும் பாம்புகள்போலப் பூதர்களுடைய உடம்புகளில் நுழைந்து துளைத்தன. அவர்களுடைய உடம் பினின்று இரத்தம் வடிந்தது. அவர்கள் மனம் பதைபதைத்துப் பானு கோபனுக்குத் தோற்றோடினர். முன்னே பூதர்களுக்குத் தோற்றோடிய அவுணர்கள் பானுகோபனை வந்து கூடினர்கள்.

பூதர்கள் தோற்றோடியதையும் பானுகோபனுடைய வெற்றியையும் இலக்கத்தொன்பதின்மருள்ளே முதலில் நின்ற வீரவாகுதேவர் கண்டு, தேரோடு விரைந்து சென்று, சண்முகக்கடவுளுடைய திருவடிகளைத் தியா னித்துத் துதித்து, அவுணசேனைகள் வருந்தும்படி ஒரு வில்லைவளைத்தார். அதனைக்கண்ட அவுணசேனைகள் கண்டம், தோமரம், சூலம் முதலாகிய படைகளை அவர்மீது சொரிந்தார்கள். வீரவாகுதேவர் அவைகள் அழி யும்படி பாணங்களைவிடுத்து, அவர்களுடைய கால்கை தலை முதலாகிய அவயவங்கள் துணியும்படி பாணங்களை விடுத்தார். அவர் செலுத்தும் அம்பு களால் தேர்களும் குதிரைகளும் யானைகளும் அழிந்தன. அவுணர்களுடைய போரொழிந்தது. இரத்தம் பெருகியது. பானுகோபன் அதனைப்பார்த்து, "இவனுடைய வில்லால் நம்முடைய சேனைகள் அழிந்தனவே!" என்று, கோபத்தோடு தேர்ப்பாகனை நோக்கி, "வீரவாகுவுக்கு முன்னே நம்மு டைய தேரை விரைந்து செலுத்துதி" என்றான். பாகன் தேவர்கள் நடுங் கும்படி தேரைச் செலுத்தி ஆர்த்தான். பானுகோபன் வில்லைவளைத்து, வீரவாகுதேவரை நோக்கி, "குறைவில்லாத என்னுடைய சேனைகளைக் கொன்றாய், நீ இனி உய்ந்துபோதல் அரிது. உன்னைக் கொல்லும்படி யான் சபதஞ் செய்துகொண்டு வந்தேன்" என்றான். வீரவாகுதேவர் "இனி போர்செய்து இறப்பவர்களையும் வெற்றிகொள்பவர்களையுந் தேவர் கள் காண்பர். நின்று காலதாமதஞ் செய்யற்க; போரைக்செய்குதி" என்றார். கோபம் மிகுந்த பானுகோபன் வளைத்தவில்லில் ஆயிரம்பாண்டங் களைப் பூட்டி, வீரவாகுதேவருடைய மார்பைத் துளைக்கும்படி செலுத்தி னன். அப்பாணங்கள் மார்பைத் துளைத்துப் புறஞ்செல்ல, வீரவாகுதேவர் சோகத்தோடு தம்முடைய வில்லைவளைத்து நாணெலிசெய்து, ஆயிரம் பாணங்களைப் பூட்டிப் பானுகோபனுடைய புயத்திற் செலுத்தினர். அவை கள் தைத்தலாற் பானுகோபன் வருந்தி, நூறு பாணங்களினால் வீரவாகு தேவருடைய வில்லைத் துணிபடுத்தினன். அதனைக்கண்ட தேவர்கள் அஞ் சினர்கள். வீரவாகுதேவர் ஒரு வேற்படையை எடுத்துப் பானுகோபனு டைய நெற்றியில் எறிந்தார். அது நெற்றியிற் புதலும் இரத்தவெள் ளம் ஆறுபோலப் பெருகியது. பானுகோபன் ஓரிறைப்பொழுது அறி விழந்து தேரில் நின்று, பின்னர் உணர்வு வரப்பெற்றான். வீரவாகுதேவர் விரைவில் வேறொரு வில்லை எடுத்து வளைத்து வாயுப் படைக்கலத்தை விட, அவனும் அதனை விடுத்தான். வீரவாகுதேவர் அக்கினிப்படையை விடுத்தார். அவனும் அதனை விடுத்தான். வீரவாகுதேவர் விடுத்த அக் கினிப்படை அதனோடு போர்செய்து மீண்டது. பானுகோபன் சூரியப் படைக்கலத்தை எடுத்து "இவனுடைய உயிரைக் கவருதி" என்று தூண்

டினான். அதனை வீரவாகுதேவர் பார்த்து, தாமும் அதனை விடுத்து அழித்தார். பானுகோபன் பிரமப் படைக்கலத்தை விடுத்தான். வீரவாகுதேவரும் அதனைச் செலுத்த, அது சென்று அவன் விடுத்த பிரமப் படையை நீக்கி மீண்டது. பானுகோபன் விட்டுணுப்படைக்கலத்தை விடுத்தான். வீரவாகுதேவர் அப்படையை விடுத்து விலக்கினர். பானுகோபன் அதனைக்கண்டு "யான் விட்டவிட்ட படைகள் அழியும்படி இவனும் படைகளை விட்டான்; இனிச்சிவப்படைக்கலத்தை யான் விடுப்பேன், அது அவன் கையிலுமுள்ளது. நான் முன்கண்டது. ஆதலால் யான் அச்சிவப்படைக்கலத்தை செலுத்துவதாற் பிரயோசனமில்லை. இனி மாயையினல் இவனை வெல்வதே உபாயம்" என்று நினைத்து, மாயமந்திரத்தை எண்ணித் தேரோடு மறைந்து, வீரவாகுதேவருக்கு நாற்புறத்திலும் தேருடன் சுற்றிவந்து பாணங்களை வருஷித்தான். அப்பாணங்கள் வந்து படுதலும், அவருடைய திருமேனி ஊறுபட்டு இரத்தம் ஆறுபோலப் பெருகியது. அதனைத் தேவர்கள் பார்த்து மனமழிந்தார்கள். பூதர்களும் படைத்தலைவர் முதலாயினரும் அஞ்சினர். அதனை வீரவாகுதேவர் கண்டு, "இவன் ஒரு மாயையிலே முன் வென்று போனான். இன்றைக்கும் அதனை எண்ணினனே? இனி அது முடியுமோ? இது நன்று நன்று! நான் இவனை இப்பொழுதே கொல்வேன்" என்று எண்ணினர். இவ்வாறு கருதிய வீரவாகுதேவர் "இவனுடைய மாயம் அழியும்படி செய்வேன்" என்று ஞானஸ்திரத்தை எடுத்துச்சிரத்தையோடு வழிபாடு செய்து, பானுகோபனைக் குறித்துக் செலுத்தினர். அது சூரியப்பிரகாசத்தோடு செல்லுதலும், பானுகோபனுடைய மாயைஅழிந்தது. அவன் தேரும் தானுமாய் ஆகாயத்தில் வெளிப்பட்டு நின்றான். பானுகோபன் தன் மாயமழிந்ததையும், வீரவாகுதேவருடைய வலியையும் நோக்கி, அயர்ந்தான். முன்வருத்தமுற்ற தேவர்கள் யாவரும் மகிழ்ந்தார்கள். அப்பொழுது வீரவாகுதேவர் ஆகாயத்தில் நிற்கின்ற பானுகோபனுடைய இயற்கையை நோக்கி, "வஞ்சனே, இனி நீ எங்கேபோவாய். யான் இங்கே உன்னைக் கொல்வேன்" என்று கூறி, வில்லைவளைத்துக்கொண்டு தேரோடு ஆகாயத்திற்போய்ப் பானுகோபனுக்கு முன்சென்று, பலகோடி பாணங்களைச் சொரிந்தார். அவனும் கோபித்து வில்லைவளைத்து, தேவர்கள் அஞ்ச அம்புமழைகளைச் சொரிந்தான். நீரும் நெருப்பும் ஒன்றற்கொன்று மாறுய்க் கோபத்தோடு நின்று போர் செய்வதுபோல இருவரும் போர்செய்து நின்றார்கள். அவர்களுடைய தேர்களிரண்டும் ஓரிறைப்பொழுதினுள் ஆரயிநூறுகோடி சாரிகைகள் திரிந்தன. அவ்விருவரும் எதிரெதிராய்ச் செலுத்தும் அம்புகள் அண்டச் சுவர் காறுஞ் சென்று சூரியகிரணங்களின் வரவை மாற்றி, எவ்வுலகிலுள்ளோர்க்கும் மிகுந்த துன்பத்தைச் செய்தன. இருவருடைய பாணங்களும் யாண்டுஞ் செறியும் பொழுது, தேர்கள் அழிந்தன: குதிரைகள் அழிந்தன; யானைகள் அழிந்தன; அவுணர்களுடைய சிரங்கள் வெட்டுண்டன; பூதர்களுடைய உடம்புகள் வெட்டுண்டன. அப்பொழுது இருவருடைய தேர்களும் ஒன்றையொன்று கிட்டுவன, தூரத்தில் செல்வன, மேலே யுயர்வன, பின்னுங்கிட்டி முட்டுவன, ஒன்றையொன்று இடம்வலமாகச் சூழ்வன, எட்டுத்திக்குகளிலும் ஆகாயத்திலும் திரிவன, தேவர்கள் மனத்தால் நினைக்க அரியன ஆயின. அவரிருவரும் ஒருவரையொருவர் இகழ்வர்; கோபஞ்செய்வர்; சபதஞ் சொல்லுவர்; வலிமையை நோக்கிப் புகழ்வர்; உரப்பி வீரம்பேசி அழைப்

பர்; ஒருவர் போரை ஒருவர் மகிழ்வர்; நகைப்பர்; வெற்றிச்சங்கைஊதுவர்; பாணமழைகளைச் சிந்துவர்: உரப்பிச் செல்வர். வீரவாகுதேவரும் பானுகோபனும் இவ்வாறு போர்செய்தபொழுது, அவர்கள் முறைமுறையாகக் கோபந்தோடு செலுத்திய பாணங்கள் உலகமெங்கும் நெருங்கிச் செல்லுதலாற் சூரியன் மறைந்தான்; சந்திரனுடைய கலைகளும் குறைந்தன. அவர்களுடைய பாணங்கள் வாயுவை யொப்பன, கூற்றுவனை யொப்பன, அக்கினியை யொப்பன, நஞ்சையொப்பன, இடியையொப்பன, சிவபெருமானுடைய திருப்புன்முறுவலை யொப்பன, சூரியனை யொப்பன், சுப்பிரமணியக் கடவுளுடைய வேற்படையை யொய்பன ஆயின. அப்பாணங்கள் மலையிற் புகுந்தன; வானிற் புகுந்தன; கடலிற் புகுந்தன; திசைகளிற் புகுந்தன; அண்டங்களிற் புகுந்தன; பாதலங்களிற் புகுந்தன; இருவரும் விடுகின்ற அக்கினியஸ்திரங்கள் பட்டு மேகங்கள் எரிந்தன; எண்டிசையானைகளும் கரிந்தன: பூவுலகங்கள் வெடித்தன. கடல்கள் வற்றின; நக்ஷத்திரங்கள் பொரிந்தன. அதனால் உலகமெங்கும் புகை மிகுந்தது. வீரவாகுதேவர் செலுத்துகின்ற சரங்களைப் பானுகோபன் தன் சரங்களால் மாற்றுவான். அவன் விடுகின்ற சரங்களை வீரவாகுதேவர் தம்முடைய சரங்களால் மாற்றுவார்.

இரண்டு வீரர்களும் இவ்வாறு போர்செய்யும்பொழுது, பூவுலகத்துள்ளவர்களும் தேவர்களும் அதனைப் பார்த்து, "இவர்போலப் போர் செய்தவர் யாவருளர்? போர்வீரத்தில் இவர்க்கிணையாவார் யாவர்?" என்று வியந்தார்கள். அப்பொழுது பானுகோபன் நூறுயிரம் பாணங்களால் வீரவாவகுதேவருடைய தேரைப் பொடிபடுத்தி, சமுத்திரங்களும் அஞ்சும்படி இடிபோல ஆரவாரித்தான். வீரவாகுதேவர் கோபித்து, ஆகாயத்தில் நின்று தம்முடைய வில்லைக் காலுறவளைத்து, ஆயிரம் பாணங்களைத் தூண்டி, பானுகோபனுடைய தேரைத்துகள்செய்தார். தேரழிதலும் ஆகாயத்தில் நின்ற பானுகோபன் கோபித்து, வீரவாகுதேவருடைய மார்பில் அழுந்தும்படி நஞ்சு பாய்ச்சிய இருபத்தைந்து பாணங்களைத் தூண்டிப் புயங்களைத் தட்டி ஆரவாரித்தான். பானுகோபன் செலுத்திய பாணங்களால் மனம் நொந்த வீரவாகுதேவர் பதினொன்கு பாணங்களைச் செலுத்தி அவனுடைய கிரீடத்தை அழித்தார். முடிசிதற வறியனாய் நின்ற பானுகோபன் பதினொன்கு கணைகளைத் தூண்டி வீரவாகுதேவருடைய கவசத்தையறுத்தான். வீரவாகுதேவர் "இது நன்று" என்று சிரித்து, ஏழு பிறைமுகாஸ்திரங்களைச் செலுத்தி, பானுகோபனுடைய வில்லைத் துணித்தார். அவன் கூற்றுவனைக் காட்டிலும் கோபித்து, பிரமதேவர் முன்னளிற் கொடுத்த வேற்படையை எடுத்து, "இவனைக் கொல்" என்று சொல்லி, வீரவாகுதேவர் மேல் விடுத்தான். வீரவாகுதேவர் வலியையுடைய ஆயிரகோடி பாணங்களை அவ் வேற்படையைத் தடுக்கும்படி செலுத்தினர். அது அப்பாணங்களெல்லாவற்றையும் அழித்து ஆகாயவழிக் கொண்டுவந்தது. அதனுடைய வலிமையை வீரவாகுதேவர் நோக்கி, சிவபெருமான் தமக்குக் கொடுத்த வாட்படையை எடுத்து, கந்தசுவாமியினுடைய திருவடிகளைத் துதித்து, இருதுணியாம்படி வெட்டினர்; அதனைக் கண்ட தேவர்கள் கூத்தாடினர்கள்; அவுணர்கள் ஏங்கித் திகைத்தார்கள். வீரவாகுதேவர் வாட்படையை உறையிலிட்டார். தான் விடுத்த

வேற்படை துணிபட்டதைப் பானுகோபன் பார்த்து "அம்மவோ! என் வேற்படையின் வலி நன்று!" என்று சொல்லி, போர் செய்யும்படி விரைந்து வாட்படையை எடுத்துச் சுழற்றி, இடிபோல ஆவலங்கொட்டி, போர்மகிழ்ச்சியோடு வீரவாகுதேவருக்கு முன் செல்லுதலும் அவர் வில்லைக் காலுற வளைத்து, டல்லாயிரம் பாணங்களைச் செலுத்தி, பானுகோபனுடைய மார்பைக் கிழித்தார். மலைப் பிளப்பினின்றும் வீழும் அருவி போல் இரத்தம் வீழ்ந்தது. பானுகோபன் தன்மேல்வரும் பாணங்களைப் பாராதவனுயும், தன் மார்பு பிளந்ததனையும் அதினின்று இரத்தம் வீழ்தலையும் எண்ணுதவனுயும், மானமும் தானுமாய் ஒடிப்போய், வீரவாகுதேவரைக் கிட்டி, அவருடைய வில்லை வாளினுற் றுணித்து, மேலே கிளர்ந்து இடிபோல உரப்பி வாளை வீசித் திரிந்தான். அவனுடைய போர்வலியைக்கண்டு துன்பமடைகின்ற தேவர்கள் "இவன் இறந்தபின் போரென்பதில்லை" என்றூர்கள்.

அப்பொழுது வீரவாகுதேவர் உருத்திரமூர்த்தியைப்போலக் கோபித்து, தம்முடைய வாட்படையை உருவிக் கறங்குபோலச் சுற்றி, "எங்கே போகின்றூய்?" என்று சொல்லிக்கொண்டு, பானுகோபனை எதிர்த்தார். அவனும் வாயுவேகத்தோடு வந்தெதிர்த்தான். இருவரும் யமனும் அக்கினியும் போர்செய்வதுபோலக் கோபத்தோடு வாட்போர் செய்தார்கள். இருவரும் மாறுமாறுச் சென்று கால் முதலிய அவயவங்களைத் துணிக்கும்படி வாட்படையை வீசுவர். அதனை விலக்கித் தழும்பு செய்யுந் திறத்தை நாடுவர். இடைதெரியாவண்ணம் சூறைக்காற்றுப் போலச் சுற்றுவர். வட்டமாகச் சூழ்ந்து வருவர் இவரிருவரும் இவ்வாறுக வாட்போர் செய்துகொண்டு நிற்கும்பொழுது, பானுகோபன் தான் கற்ற வாள்வித்தையின் வலியால் வீரவாகுதேவருடைய வாளை விலக்கி, அவருடைய திருத்தோளில் வெட்டினன். அவருடைய தோளினின்றும் இரத்தவெள்ளம் பெருகியது. பானுகோபன் அதனைக்கண்டு செருக்கடைந்தான். தேவர்கள் நடுங்கி "இவனுக்கு வீரவாகுதேவர் தோற்பாரோ" என்று இரங்கினர். அப்பொழுது வீரவாகுதேவர் நிர்மலராகிய அறுமுகப் பெருமானுடைய திருவடித்தாமரைகளைத் தியானித்துத் துதித்து, விரைந்து வாளை வீசிப் பானுகோபனுடைய வலதுதோளைத் துணித்தார். அவன் தன் வலக்கையோடு வீழ்கின்ற வாட்படையை இடக்கையாற் பறித்து, அடங்காத கோபத்தோடும் பின்னும் போர்செய்ய முயன்றான். வீரவாகுதேவர் அவனுடைய முயற்சியைப் பார்த்து இடக்கையையுந் துணிப்ப, அவன் "மாயப்படைக்கலத்தை விடுவேன்" என்று எண்ணினன். அப்பொழுது வீரவாகுதேவர் அவனுடைய தலையை அறுத்தார். பானுகோபனுடைய தலையும் புயங்களும் உடம்பும் பூமியில் வீழ்ந்தன. அவனுடைய உயிரை யமன் கவர்ந்து வீரவாகுதேவரைத் துதித்துத் தென்புலத்தை யடைந்தான். பானுகோபன் இறந்ததை முனிவர்களும் தேவர்களும் பிறரெவரும் பார்த்து, ஆடிப்பாடி ஆர்த்து, "வீராதிவீரர் நீரே" என்று வீரவாகுதேவரை வியந்து, பூமழைகளைப் பொழிந்தார்கள். பானுகோபனுற் றுன்பமுற்றழிந்த பூதர்கள் அவன் இறந்தமையை நோக்கி ஆர்த்து, வீரவாகுதேரைத் துதித்தார்கள். சூரியன் கவலை நீங்கிக் களித்தான்.

அப்பொழுது வீரவாகுதேவர் மகிழ்ச்சியடைந்து, ஆகாயத்தை நீங்கிப் பூமியில் வந்து, தமது துணைவர்களை அடைந்து, ''பெரிய மாயங்களால் நம்மை முன் அலைவுசெய்த பானுகோபனைச் சங்கரித்தோம். நாம் சொல்லிய சபதமும் நிறைவேறியது. சேனைகளோடு இனி எம்பெருமானது திருமுன்பு செல்வோம். வருதிர்'' என்றார். அதனைத் துணைவர்கள் கேட்டு, ''தலைவரே, நேற்றும் அறுமுகப்பெருமானுடைய திவ்விய சந்நிதானத்திற்போய் அவருடைய திருவடிகளை வணங்கினேமல்லேம். நீர் செய்யத்தகுவதையே சொன்னீர். இது தக்கதே'' என்றார்கள். வீரவாகுதேவர் தம்பிமாரும் படைத்தலைவர்களும் பூதர்களும் சூழ்ந்துவரப் போர்க்களத்தை நீங்கிச் சென்று பாசறையிற் புகுந்தார். அவர் துணைவர்களோடும் மற்றைப் படைத்தலைவர் முதலாயினோரோடும் போய் அறுமுகப்பெருமானை அன்பினோடு தரிசித்து, அவருடைய பாததாமரைகளைப் பலமுறை பணிந்து எழுந்தார். அவரை முருகக்கடவுள் பார்த்தருளி ''தம்பியே, நீ பானுகோபனோடு போர்செய்து வருந்தி அவனைக் கொன்றாய். ஆதலால் யாம் மகிழ்ந்தோம். வேண்டிய வரத்தை விரைந்து கேட்குதி; தருவோம்'' என்றருளிச்செய்தார். துதித்துக்கொண்டு நிற்கின்ற வீரவாகுதேவர் அதனைக்கேட்டு, ''எம்பெருமானே, தேவரீரையன்றி நாயினேன் செய்த செயலொன்றுமில்லை. ஆயினும், அடியேனுக்கு ஒரு வரத்தைத் தந்தருளல் வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்வார்: ''குபேரனுடைய வாழ்க்கையையும் நினையேன்; இந்திரனுடைய அரசினைக் கனவிலும் விரும்பேன்; பிரமவிட்டுணுக்கள் பெறுகின்ற பதங்களையும் பொருளென மதியேன்; தேவரீருடைய திருவடித்தாமரைகளில் இடையறாத பேரன்பையே தமியேன் மிகவும் வேண்டுவேன். அந்த நல்லவரம் முத்தியினும் அரியது. அதனைத் தேவரீரைத் தியானிக்கின்ற தவத்தரும் பெறுகிலர். எளியேன் உய்யும்வண்ணம் அதனை ஈந்தருளல் வேண்டும்'' என்று வீரவாகுதேவர் பிரார்த்தித்தார். எம்பெருமானாகிய கந்தவேள் ''உனக்கு அதனைத் தந்தோம்'' என்று அருளிச்செய்தார். யாவர்க்கும் முதல்வராகிய அக்கடவுள் வீரவாகுதேவருக்கு இவ்வரத்தை உதவி, தம்மை வணங்குகின்ற துணைவர்களுக்கும் நல்லருளைச்செய்து, அவர்கள் யாவரையும் அவரவர் இருக்கைக்குப் போயிருக்கும்படி விடைகொடுத்தனுப்பினர். வீரவாகுதேவர் முதலாயினோர் சண்முகக்கடவுளை வணங்கி, தங்கள் தங்கள் உறைவிடங்களுக்குப் போயினர்கள். இங்கே இது நிற்க, அங்கே சூரபன்மனிடத்துண்டாகிய நிகழ்ச்சிகளை இனிமேற் சொல்வாம்.

பானுகோபன் இறந்தமையைக் கண்ட தூதுவர்கள் ''இவர்கள் செய்தது இதுவாயின், நம்மரசனாகிய சூரபன்மனையுங் கொல்வார்கள்'' என்று எண்ணி, நடுங்குகின்ற மனத்தை யுடையராய் மிக விரைந்து ஓடிச்சென்று, முரசொலிகள் அடங்கி அழுகையொலி மிகுகின்ற மகேந்திரபுரத்து வீதியிற் போய், சூரபன்மனுடைய அவைக்களத்துட் புகுந்து, மிகவும் நீர் வடியுங் கண்களையும் நினைத்தற்கரிய துன்பத்தையும் உயிர்க்கின்ற நாசியையுமுடையராய், அவனுடைய கால்களை வணங்கி, ''மகாராஜனே, முன்பு இங்கு வந்த தூதுவனால் உன்னுடைய மகன் இறந்தான்'' என்றார்கள். சூரபன்மன் அதனைக் கேட்டலும், ஆழமாகிய துன்பக்கடலிலே அமிழ்ந்தி, ஓவென்று புலம்பி வீழ்ந்து, புரண்டு, உயிர்ப்பு

மிகுந்து, உடம்பு வெயர்த்து நடுங்க மனம் நடுங்கி, அக்கணமே அறிவு சோர்ந்து மயங்கினன். உடம்பு வெதும்பவும், கண்ணீர் வடியவும், மனந் திரியவும், உயிர் ஊசலாடவும், இறந்தவர்போல வீழ்ந்து மயங்கிய சூர பன்மன் பின் ஒருவாறு தெளிந்து இரங்கி, இவ்வாறு சொல்லிப் புலம்பு வான்: ''என் மைந்தனே, என் மதகளிறே, தீவினையேனுடைய சிந்தையே, சிந்தை தெவிட்டாத தெள்ளமுதே, என்றந்தையே, தன்றந்தைக்குத் தந்தையில்லாத பாலகன் உன்னைக் கொன்றேனே! எந்தையே, உன்னை இதற்கோ வளர்த்தேன்? அழகிற் சிறந்த என் புத்திரர்கள் பலர் இறந் தார்கள். அவர்கள் இறந்தும் உன்னொருவனையே துணையென்று மனத் தில் நினைத்திருந்தேன். எந்தையே, என்னைத் தனியேவைத்து நீயும் போயி னையாயிற் பின்பு தமியேனுக்குப் பிழைக்கும் வகையுண்டோ! 'பகைவர் களுடைய சிறையை விட்டால் நமக்கு உய்வுண்டாம்' என்று முன்னே சொன்னாய். அதனையுமிகழ்ந்து உன்னைத் தோற்றேன். இனி அதனை எண் ணுவதனாற் பயனென்ன! யாவருக்குந் தன்னால் வராத வினையுளதோ, தக்கோனே? 'பகைவர்மீது போருக்குச் செல்வது நன்றல்ல' என்று அன் பாகச் சொன்னாய். யான் அப்பகைவர்மேற் போருக்குப் போகாமல் 'நீ செல்' என்று உன்னை அனுப்பி இழந்தேன். ஐயா, உன்மாட்டுப் பிழை யொன்றுமுளதோ? தேவர்களெல்லாரும் முப்பொழுதும் வந்து பூக்களைக் கையிலேந்தி உன்னை வழிபடுவார். அவர் உன்மேலுள்ள ஒப்பில்லாத பகையை இற்றைத்தினத்தோடு நீங்கிக் களிப்படைந்தாரோ? உன்னுடைய ஆணைக்கஞ்சி நித்திரை செய்யாதுழலும் விட்டுணுவானவன், இன்றைக்கு நீ இறந்தாய் என்பதனைக்கேட்டு மகிழ்ந்து சேஷ சயனத்திற் படுத்து இலக்ஷ்மியும் பூமிதேவியும் தன்கால்களை வருட முன்னுள்போலக் கவலை யின்றி நித்திரைசெய்யானே? நம்முடைய அசுரகுலத்துக்கு நாயகமே, வந்தடைந்திரந்தார்க்கு ஒரு சிந்தாமணியே, திருவே, என்றெள்ளமுதே, எந்தாய், நீ தனியேபோய் எங்கிருந்தாய்? அங்கே யான் வந்தாயினும் உன்னுடைய மதுரமொழியைக் கேட்பேனே? என்னுடைய மந்திரிமார் கள் புதல்வர்கள் எல்லாரும் போருக்குப்போய்ப் பகைவர்களால் இறந் தார்கள்; என்றுயரை ஆராய்ந்து தீர்த்தற்கு யாருமில்லை. புதல்வனே, வாராய்; கடிதோடி வாராய். தன் கிரணங்களால் உன்னைத்தீண்டி, உன் சிறையிலகப்பட்டு, பிரமன் வந்து வேண்டநீ விட்டபின்னர் வாடித்தளர்ந்து வசைபடைத்த சூரியனர் இனி மனமகிழ்ந்து ஆகாயத்திலோடிச் செல்லா ரோ! நம்பகைவர்களாகிய தேவர்களுடைய குற்றேவல்களைச்செய்து அலம லந்துழலுகின்ற ஒற்றுவன்றனை உன்னைக் கொல்லவல்லான்! போரிலிறந்த அவுணர்களுடைய உடலுக்கு உயிராய்ச் செல்லும்படி நீ கற்றாய், என்னை மறக்கவுங் கற்றாயோ! மிகுந்த வெற்றியைப்படைத்தபுத்திரன் இறந்தான் என்று சொல்லக்கேட்டும் என்னுயிர் போனதில்லை; இன்னுமிருந்தது. மனம்வேகின்றது. மிகுந்ததுன்பம் வந்தவிடத்துச் சாதற்கு ஒரு வரத்தை யும் சிவபெருமானிடத்துப் பெற்றேனில்லையே. வெற்றியையுடைய புதல் வன் இறந்தால் என்னுயிருங்கூட இறவாமலிருக்கின்றது. வலாற்காரமாக அதனைப் போக்குதலும் ஆகாது. என்செய்வேன்! அழியாமலிருக்கும்படி பெற்ற வரமும் பிழையாய் முடிந்ததே! என்னுயிரே, என்கண்ணே, என் அரசே, உன்னைப் போருக்கு அனுப்பிவிட்டு இவ்வாறு இரங்குதற்காகவா

யான் இங்கே இருந்தேன்? இந்தப் பதியில் வந்த தூதுவன் கூவியழைத் துக்கொண்டு செல்லும் கூற்றுவனுடைய ஒற்றுவனே? பாவியேன் அறி யேன். நீ யமனுடைய நகரத்திற் போயினையோ? அன்றி வேறேரிடத்திற் சென்றனையோ? யான் ஒன்றையும் அறியேன். தனியே தியங்குகின்றேன். இத்துயரத்தை ஆற்றேன். என் அரசே, என் ஆருயிரே. வாராயோ?'' என்று சூரபன்மன் இரங்கி வருந்தினன். அவன் பக்கத்திலுள்ள அவுணர் களுட் சிலர் ஓடிச்சென்று போர்க்களத்திலே வெட்டுண்டு இறந்து கிடந்த பானுகோபனுடைய உடம்பை எடுத்து, அழுதுகொண்டு வந்து சூரபன் மனுக்கு முன்னேயிட்டு, அவனுடைய கால்களைப் பற்றிக்கொண்டு புலம் பினர்கள். அவனும் பானுகோபனுடைய துணிந்த உடம்பைக்கண்டு அரற்றி அழுது கலங்கினன். சூரபன்மன் பானுகோபனுடைய வெட் டுண்ட சிரத்தைக் கையிலெடுப்பான்; அதனழகைப் பார்ப்பான்: கண் களில் ஒற்றுவான்; முத்தங்கொடுப்பான்; பாம்புபோல உயிர்ப்பான்; புரளுவான்; ''வெட்டுண்டிறந்தும் பகைவர்கண்மாட்டு மனத்திற்கொண்ட மிகுந்த கோபந்தீர்கிலை; மிகுந்த மானமும் வீரமும் வலியும் இனி உன் னோடு அழியும்போலும்'' என்பான்; பானுகோபனுடைய கையிலொன்றை விரைந்தெடுத்துத் தன்னுடைய இரத்தக்கண்ணீர் முழுக்காட்டி, ''ஐயனே, ஆகாயத்தினின்றும் சூரியனைப் பிடித்துக்கொண்டுவந்த கை இதுவோ'' என்று அரற்றுவான்; பாணங்கள் மூழ்குதலாற் சாளரங்கள்போலப் புழை தங்கிய தோளையும் மார்பையும் பார்ப்பான்; ''பகைவர்க்குத் தோல்வி யடையாத ஆள் நீயன்றி வேறு யாருளர்'' என்பான்; ''போர்க்களத்திலே உன்னுடலை வேறுவேறுகத் துணித்த வீரவாகுவினுடைய உயிரைப் பருகி னலன்றி என்மனத்துயர் ஆறுமோ?'' என்பான்; ''பல போர்களை வென்ற என்மகனுகிய பானுகோபன் இங்கேவந்த ஒரு தூதுவன் கொல்ல இறந் தான் என்று சொன்னால், யான் ஆண்ட அரசியலின் வலி நன்றுயிருந் தது'' என்பான்; சிரசையும் மார்பையும் கைகளையும் முன்போலப் பொருத்திப் பார்த்துப் புரளுவான்; ''துயர் என்மனத்தை வருத்துகின் றது, அதனைக்கண்டும், உயிரே, நீ இன்னுமிருக்கின்றனையோ?'' என்பான்; மருளுவான்; கைகளையுதறுவான்; புத்திரனை அன்பினோடு பார்த்து அழு வான்; விழுவான்; சோர்வான்; புரளுவான்; வாயிலடிப்பான்; பூமியில் உருளுவான்; பெருமூச்சுவிடுவான்; வியர்ப்பான்.

சூரபன்மன் இவ்வாருகத் துன்பமெய்தி இரங்கும்பொழுது, அந்தப் புரத்தினுளிருந்த தாயாகிய பதுமகோமளை பானுகோபன் இறந்தமையைக் கேட்டு, நிலத்தில் வீழ்ந்து, அளகஞ்சோரக் கைகளையுதறி, வயிற்றிலடித்து, இரத்தக்கண்ணீர் விட்டு, ஆற்றுத துன்பத்தினளாய், வலையிலகப்பட்ட மயிற் பெடைபோல ஏங்கி, ''இறந்த என்மகனைக் காண்பேன்'' என்று ஆவலித்தோடி வந்தாள். அதனையறிந்த பெண்கள் பலரும் ''நம்மரசன் றேவியாகிய பதுமகோமளைக்குத் துன்பம் வந்தது. நீவிரும் இப்பொழுதே துன்பத்தையடைகுதிர்'' என்று கூவி ஆவலித்து, அவளுக்குப் பக்கத்திலே கூடி, ஸ்தனங்களில் அடித்து ஏங்கி இரங்கினர்கள். பதுமகோமளை அப் பெண்களோடு முந்திச்சென்று வெட்டுண்டிறந்த பானுகோபன்மீது வீழ்ந்து, மயங்கித் தியங்கி, பின் தெளிந்து, இடியேறுண்ட பாம்புபோலப் புரண்டு, இவ்வாறுபுலம்பினள்: ''சூரியனுடைய கிரணந் தீண்டுதலும்

ஆகாயத்திற்சென்று கையோடு அவனைப் பற்றிக்கொண்டுவந்து என் கண் முன் சிறைசெய்த முருகாவோ, ஐயோ இன்றைக்கு நீ கூற்றுவனுக்கு இரையாவதை யான் அறியேனே. முன்னாளிலே தேவருலகில் நெருப்பு மூட்டிப் பகைவர்களெல்லாரையுங் கொண்டுவந்தாய். அப்பொழுது உன் கோலத்தைக் கண்ட யான் இன்று இக்கிடையையுங் காண்பேனே! பாவி யேனாகிய யான் இவ்வுயிரை விட்டேனல்லேன். இலக்குமியினுடைய கையி லிருந்த ஒரு கிளிப்பிள்ளையை வேண்டுமென்று முன்னே உன்னைக்கேட்க, வலிமையினால் அதனை வாங்கித்தந்தாய். வருத்தமுற்றேனாகிய எனக்கு இன் றைக்கு ஒரு வார்த்தையாயினும் சொல்கின்றாயில்லை. அந்தோ! அந்தோ!! செய்யும்வகை யொன்றையும் அறியேனே. பாபத்தினாலோ, தேவர்கள் பலருஞ்சொல்லிய சாபத்தினாலோ, எவரினும் மேலாகிய மும்மூர்த்திகளு டைய கோபத்தினாலோ, எவ்வகையாலோ, யான் அறியேன், உன்னைத் தோற்றுச் சோபத்தியால் வாடுகின்றேன். பொன்போலும் மேனியையு டைய கந்தனை இவ்வூரிற் புகுவித்து, வீணைகப் போரைமூட்டி, குமாரர்க ளெல்லாரையுங் கொல்வித்து, இன்றைக்கு நீயும் இறக்கும்படி சூழ்ந்தார் களே; அந்தத் தேவமகளிரனைவரும் என்போலாகுக. வச்சிரவாகு, அக்கினி முகன், மூவாயிரவர் ஆகிய இவர்கள் 'எங்கள் எல்லாருக்கும் முன்வந்த தோன்றல்' என்று உன்னை வணங்கிச் சூழ்ந்தார்களோ? மிகுந்த அழகினை யுடைய வீரயாக்கையோடு மனந்துணிந்து சுவர்க்கத்தை அடைந்தாய். உன்னை வந்தடையும் வண்ணம் என்மனந் துணியாது உலைவெய்துகின்றது. என்மனமும் யானும் கொண்ட நண்பு நன்று! நன்று! கருந்தேனின் மொய்க் கும் வண்டுகள் போலப் பெண்களுடைய கண்கள் வந்து சூழ, அவற்றிற்கு விருந்தாகின்ற உன்னுடைய நடையைக் காணும் விதியற்றேன். அருமருந்து போலும் மகனே, உன்னையிழந்தேன். இனி யான் இவ்வுலகில் உயிரோடிருந் தேனல்லேன், இறந்தேனன்றே. வருந்துகின்ற தேவர்களுக்கு மிகுந்த துன் பத்தைச் செய்தல் நன்றல்லவென்று உன்பிதாவுக்குச் சொன்னேன். அவர் அதனை யோசியாமல் உன்னைத்தோற்றார். அவரும் இன்னும் தம்முயிரைத் தாமாக நீக்காமல் உய்ந்திருப்பாரோ?'' என்றிவ்வாறு சொல்லி சூரபன் மனுடைய பட்டத்துத் தேவியாகிய பதுமகோமளை இரங்கினாள். அவனு டைய மற்றைய மனைவியர்களும், கிளைஞர்கள் யாவரும் ஈன்றணிய கன்றையிழந்த பசுவைப்போலக் கதறினார்கள். மகேந்திரபுரி அன்றைக்கு வெற்றி நீங்கித் துன்பம் மிக்கது.

சூரபன்மன் அழுகை நீங்கி, பதுமகோமளை முதலாகிய பெண்களை அவரவர் இடங்களுக்குச் செல்லும்படி அனுப்பி, கோபமுடையனாய், தன் பக்கத்திலே வணங்கிநின்ற சில அமைச்சர்களை நோக்கி ''என் பகைவர்களெல் லாரையும் விரைவில் இன்றைக்கே கொன்று அவர்களுடைய இரத்தத்தைச் சொரிந்து ஒரு யாகத்தைச் செய்து இறந்த என்னுடைய மகனை எழுப்பு வேன். அவனுடைய சரீரத்தை ஒரு சாரிலிட்டு நீங்காது பாதுகாக்கக் கடவீர்கள்'' என்றான். அதைப்பல அமைச்சர்கள் கேட்டு நன்றென்று பானு கோபனுடைய உடம்பை ஒரு பக்கத்திற் கொண்டுபோய்ப் பாதுகாத்தார் கள். அப்பொழுது சூரபன்மன் வெகுண்டு, ''நம்பகைவர் கூட்டமுழுவ தையும் என்றம்பியாகிய சிங்கமுகனுக்கு உணவாகக் கொடுப்பேன்'' என்று எண்ணி, சில தூதர்களைப்பார்த்து, ''வடதிசைச்சமுத்திரத்திலுள்ள ஆசுர

மென்னும் நகரத்திலிருந்து அரசுசெய்கின்ற என்றம்பியாகிய சிங்கமுகனை விரைந்து ஒடிப்போய் இங்கே அழைத்து வருதிர்'' என்றான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# சிங்கமுகாசுரன்வதைப் படலம்.

சூரபன்மன் சிங்கமுகனை அழைத்துவரும்படி சொல்லியதைத் தூதுவர்கள் கேட்டு, அவனுடைய கால்களை வணங்கி, மனோகதியிலும் முற்பட்டுச் சென்று, வடக்குச்சமுத்திரத்தை யடைந்து, ஆசுரத்திற்போய், வீதிகளைக் கடந்து கோயினுட் புகுந்து, சிங்கமுகாசுரனைக்கண்டு களித்து அவனுடைய கால்களை வணங்கிநின்றார்கள். சிங்கமுகன் ''நீவிர் வந்ததென்னை சொல்லுங்கள்'' என்றான். ''நம்மரசனுகிய சூரபன்மன் உன்னை அழைத்தான். விரைந்து வருக'' என்று தூதர்கள் சொல்லினர். சிங்கமுகன் அதனைக்கேட்டு, ''அங்கே நிகழ்ந்த சம்பவம் உண்டானுற் சொல்லுங்கள்'' என்றான். அவர்கள் அவனைவணங்கி, ''அரசனே, சொல்லுகின்றோம் கேள்: பூமியில்வந்து உன்றம்பியாகிய தாரகனை வேற்படையினுற் சங்காரித்த கந்தவேள் பிரமா முதலிய தேவர்கள் சூழ மகேந்திரபுரியை வந்தடைந்தார். புதல்வர்களும் மந்திரிமாரும் அவர் வந்திருக்குமிடத்திற் போய்ப் பொருது பையப்பைய இறந்தார்கள். இரணியன் உய்ந்து சமுத்திரத்தில் ஒடி ஒளித்தான். நமதரசனுகிய சூரபன்மன் இருந்தான். இதுவே அவ்விடத்து நிகழ்ச்சி'' என்றார்கள்.

தூதர்கள் சொல்லிய வார்த்தையைச் சிங்கமுகன் கேட்டு, கோபமும் மானமும் துன்பமும் தன்னெஞ்சைப் பிளக்க இருக்கைவிட்டெழுந்து, அவுணர்களோடு கோயிலின் வாயிலையடைந்து, தூதுவர்களை நோக்கி, ''என்னுடைய மிகுந்த சேனைகளைக் கொண்டுவருதிர்'' என்றான். அப்பணியைத் தூதுவர்கள் சொல்லுதலும் நால்வகைச் சேனைகளும் விரைவில்வந்து சேர்ந்தன. சிங்கமுகன் அவற்றைப் பார்த்து, கிளைஞர்களாகிய படைத்தலைவர்கள் பக்கத்திற் சூழ ஒரு தேரிலேறினான். சதுரங்கசேனைகளும் ஆரவாரித்தன. சல்லிகை, முரசம், காளம், சங்கு முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. கொடிகள் எங்கும் நெருங்கின. நால்வகைச் சேனைகளும் ஆகாயவழியாக விரைந்து செல்லுதலால் முகில்கள் அஞ்சி முழங்காமலும் புடைபெயராமலும் இருந்தன. இத்தன்மையாக நெருங்கிய சேனைகள் உடன் செல்ல, சிங்கமுகாசுரன் ஒருநாழிகைப் பொழுதினுள் ஆகாயமார்க்கமாக மகேந்திரபுரியை வந்தடைந்தான். தேவர்கள் அதனைக்கண்டு அஞ்சி ஒடினார்கள்.

சிங்கமுகன் சூரபன்மனுடைய கோயிலின் கடைத்தலைவாயிலையடைந்து, தேரினின்றும் இறங்கி உள்ளேபோய், சூரபன்மனுடைய சபையை அடைந்து, அவனுடைய கால்களிலே சிரங்கள் படும்படி அன்போடு வணங்கினான். சூரபன்மன் அவனைக் கையினுல் எடுத்து மார்போடிறகத் தழுவினான். சிங்கமுகன் அவனை நோக்கி ''மகாராஜனே, உன்னுடைய செவ்வியமுகம் வாடியது. உனக்கு வந்த துயரம் யாது? சொல்லுதி'' என்றான். சூரபன்மன் அவனைத் தன்முன் இருக்கச்செய்து, ''என்றம்பியே, என்னிடத்து நிகழ்ந்தனவற்றைச் சொல்வேன்; கேள்; அன்று

நீ அமைச்சியலுக்கு வந்து மீண்டபின்பு சிவகுமாரனென்பவன் சேனைகளுந் தானுமாய் இந்நகரில் வந்து, பாசறையிலிருந்தான். அவனுடைய சேனைகள் போர்செய்ய என் குமாரர்கள் இறந்தார்கள்; அமைச்சனுகிய தருமகோபனும் இறந்தான்; சேனைகளும் அழிந்தன; இரணியன் தோற்றுச் சமுத்திரத்தில் ஓடி ஒளித்தான். சிங்கமுகனே, இது இவ்விடத்து நிகழ்ந்தது. நீ அளவிறந்த படைகளோடு போருக்குச்சென்று சிவகுமாரனுடைய வலியைக் கெடுத்து மீளக்கடவாய். இதற்காகவே உன்னை இங்கே அழைத்தேன்'' என்றான். இவற்றைச் சிங்கமுகன் கேட்டு, மனத்திற்றுன்பமுண்டாகத் தமையனுடயை கால்களில் வீழ்ந்து வணங்கிநின்று, ''மகாராஜனே, புத்திரர்களையும் மந்திரிமாரையும் சுற்றத்தாரையும் மற்றை யெல்லாரையும் இழந்து இருந்தாய். உன்மன எண்ணம் புல்லிது! புல்லிது! உற்பத்தியும் நாசமுமில்லாத கடவுளைப் பாலகன் என்று எண்ணினாய். மேல்வருவதனை அறிந்திலை. என்சொல் உனக்கு விஷமாயதே. முன்னைவிதியை யார் வெல்லும் வலியினர்? பெருகுகின்ற ஜலத்திற்குக் கரை கோலியாவதென்ன? யான் இனி இப்பொழுதே சென்று பகைவர் கூட்டங்களைக் கொன்று உண்டு நிற்கின்றேன். நீயும் அதனைக் காண். கந்தசுவாமியாகிய அவ்வொருவரையும் யான் வெல்லப்பெறின், உன்னை வந்து காண்பேன். அஃதில்லையாயுல் யாவருமிறப்பர். அண்ணுவே, இனி நீ மனத்தில் நினைந்தனவற்றைச் செய்வாய்'' என்று கூறிப் பின்னரும் தமையனை வணங்கி, இறைப்பொழுதும் அவ்விடத்து நில்லாமல் விடைபெற்றுக் கொண்டு சேனைகளோடு மீண்டு தன் கோயிலையடைந்தான்.

கோயிலையடைந்த சிங்கமுகன் மேருமலைபோலும் அன்னக்குவியலையும் அதனைச் சூழ்ந்த மற்றை மலைபோலும் மாமிசங்களையும், கடல்போன்ற இரத்தம் தேன் பால் தயிர் கள்ளு முதலானவற்றையும் நுகர்ந்து, வாசனைத் திரவியங்களைப்பூசி புட்பமாலையைத் தரித்து, புதிய ஆபரணங்களைப் பூண்டு, ஆயிரம் நெற்றிகளிலும் விபூதியை அணிந்து, தண்டத்தையும், சக்கரத்தையும், சிவபெருமான் கொடுத்த சூலப்படையையும், குலிசம் முதலாகிய தெய்வப்படைகளையும் தாயாகிய மாயவள் கொடுத்த பாசத்தையும், மற்றையெத்திறப் படைகளையும் கைகளில் ஏந்தி, பத்துலக்ஷம் குதிரைகள் பூண்ட ஒரு தேரில் ஏறி, மந்திரிமாரும் தன் புத்திரர்களும் யானை குதிரை தேர் முதலியவைகளும் சூழ நகரத்தின் வாயிலில் வந்தான். இலக்கம்வெள்ளம் சதுரங்கசேனைகள் வந்து சூழ்ந்தன. தேவர்களுடைய உயர்வையும் மனிதர்களுடைய வாழ்வையும் அவுணர்களுடைய துன்பத்தையும் நீக்கினவர்களும், அக்கினிபற்றிய காடு போன்றவர்களும், போரிலே மார்பிலன்றி வடுப்படாதவர்களும், கூற்றுவனை யொத்தவர்களும், அக்கினியைக் காலுங் கண்களையுடையவர்களும், விண்ணுலகத்தையேனும் விழுங்க வல்லவர்களும், எதிர்த்த பகைவர்களுடைய இரத்தம் தசை முதலியனவற்றையிட்டு நிரம்பாமையாற் கடல்போன்ற வாயையுடையவர்களும் ஆகிய அவுண வீரர்கள் பலர், தண்டம் மழு வேல் வில் முதலாகிய ஆயுதங்கள் பலவற்றையும் ஏந்தி, அண்டங்களும் உடைந்து அதிரும்படி ஆர்த்தார்கள். யானைகள் சொரியும் மதஜலம் ஆறுகளாய்க் கதிகொண்டு கொடிப்படைகளுக்கு முன்சென்றது. குதிரைகள் துகள்களினுல் விண்ணுலகத்தைப் பூமியாக்கின. படைவீரர்களிற் பலர் தேர்களிலும் பலர் குதிரைகளிலும் பலர்

யானைகளிலும் பலர் பூமியிலுஞ் சென்றார்கள். சிங்கமுகாசுரனைப்போலத் தலைகளைக்கொண்டவனும், மாயவளுடைய மகனும், சிங்கன் என்னும் பெயரை யுடையவனும் ஆகிய சேனாதிபதியானவன் கடல்போன்ற நால் வகைச் சேனைகளோடும் முன்னணியிற் போயினான். கொம்பு, பேரி, நிசாளம், உடுக்கை முதலாகிய வாத்தியங்கள் ஒலித்தன; கழுகுகளுங் காகங்களும் கள்ளிகளும் கூளிகளும் "போருண்டாயது; நமக்கு இனி உணவு உண்டு" என்று ஆகாயத்தில் நெருங்கின. இவ்வாறுக ஏழ்கடல்களையும் போலச் சேனைகள் செல்லச் சிங்கமுகன் போரைக்குறித்துச் சென்றான்.

சிங்கமுகன் போருக்குச் செல்லுதலைப் பிரமாவும், இந்திரனும், தேவர்களும் கண்டு, அச்சமடைந்து, வியர்த்து, மேனி அலசவும், உடை நெகிழவும், நெஞ்சிரைப்பவும், கை யை விரித்துக்கொண்டு யாவரும் விரைந்தோடிச் சென்று, பாசறையில் உள்ள திருக்கோயிலிலே தேவர்கள் நெருங்கிய சிற்சபையில் வீற்றிருந்த முருகக்கடவுளுடைய திவ்விய சந்நிதானத்திற் போய், அவருடைய திருவடிகளை வணங்கி விண்ணப்பஞ் செய்வாராயினர்: — "ஆயிரந் தலைகளையும் இரண்டாயிரங் கைகளையும் உடையவனும், ஆயிரத்தின்மேற்பட்ட அண்டங்களை வென்றவனும், ஆயிரம்யோசனை உயர்ந்த சரீரத்தையுடையவனும், நினைத்தற்கரிய வஞ்சனையிலும் மாயையிலும் வலிமையிலும் சிறந்தவனும், இவ்வுலகமெல்லாம் அழியினும் இறவாதவனும், அட்டகுலமலைகளும் அட்டயானைகளும் அட்ட நாகங்களும் ஆதிகூர்மமும் சுமத்தலை மாற்றி உலகங்களெல்லாவற்றையும் முன்னோர்நாளிலே ஒரு கையாற் சுமந்தவனும், சிவபெருமான் ஈந்ததும் எல்லையில்லாத பகைவர்களைக் கொன்று இரத்தவெள்ளத்தில் மூழ்கினதும் ஆகிய சூலத்தை ஏந்தினவனும், எண்டிசைகளையும் பூமியையும் ஏழு பாதலங்களையும் விண்ணுலகத்தையும் அதன்மேலுள்ள உலகங்களையும் இவைகளைக் கொண்ட அண்டங்களையும் ஓர் அகங்கையால் வாரியுண்டுமிழ்கின்ற வலியை யுடையவனும், பூமி ஒரு பக்கந் தாழ்ந்து ஒரு பக்கம் உயர்தலாற் சமுத்திரங்கள் சிந்தி விண்ணுலகத்திற் ருக்கும்படி புடைபெயர்த்து நடக்கின்ற கால்களை யுடையவனும், மேருமலையை இஃதொரு தண்டாயுதமென்று செருக்குடனெடுத்து அண்டகடாகத்தை யடிக்க, அது துகளாதலும் 'இது நொய்யது' என்று அந்த மேருவை மீளவும் வைத்தவனும், வீசினால் எவ்வுலகங்களையும் பிணிக்கத்தக்க இரண்டு பாசங்களையேந்திய கையையுடையவனும், வடசமுத்திரத்திலுள்ள ஆசுரமென்னும் நகரத்தில் வாழ்பவனும், சூரபன்மனுக்குத் தம்பியும், அவனிலும் மிக்க வலியையுடையவனும், நம்மவர்களை நாடோறும் துன்பப்படுத்துபவனும் ஆகிய சிங்கமுகாசுரனென்னுங் கொடியோன் அளவில்லாத சேனைசமுத்திரங்கள் சூழத் தேவரீரோடு போர்செய்யும்படி மிக்க வலியுடன் வந்தான். எம்பெருமானே, அவனைக் கொன்று எங்களைக் காத்தருளும்" என்றார்கள். இவ்வாசகங்களைத் திருச்செவி மடுத்த அறுமுகக்கடவுள் தம் மயலில் நின்ற வாயுவைப் பார்த்து, "நம்முடைய தேரைக் கொண்டு வருதி" என்று பணித்தார். அவருடைய திருமருங்கில் நின்ற வீரவாகுதேவர் எம்பெருமானுடைய சந்நிதானத்திற் சென்று பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "எம்பெருமானே, இலக்கத்தெட்டு வீரர்களோடும் சேனைகளோடும் அடியேன் சென்று சிங்கமுகனைக் கொன்று மீண்டு வருவேன். அடியேனை

அனுப்பியருளுக'' என்று பிரார்த்தித்தார். சுப்பிரமணியக்கடவுள் திருப்புன் முறுவலோடு அதனைக்கேட்டு, ''வீரவாகுவே, இறக்கும்படி இங்கே வந்த சிங்கமுகாசுரனுடைய போரை நீ விரும்பினாய். நல்லது உனக்கு அனுமதி தந் தோம். சேனைகளோடு நீ முன்னே செல்லுதி'' என்றார். என்னலும், வீர வாகுதேவர் எழுந்து கை கூப்பி நின்று வணங்கி, அவர் எழுந்தருளியிருக்கும் சிற்சபையை நீங்கித் தம்முடைய மாளிகையை யடைந்து, வில்லையெடுத்து, விரலிற் புட்டிலைச் செறித்து, கையிற் கோதையைக் கட்டி, திருமேனியிற் கவசத்தையிட்டு, அம்பரூக்கூட்டை முதுகில் யாத்து. தெய்வப்படைக்கலங் களை யெடுத்து, தும்பைமாலையைச் சூடி, தேரில் ஏறிப் புறங்கடைவாயிலில் வந்தார். இலக்கத்தெண்மரும் போர்க்கோலங்கொண்டு தங்கள் தேர்களி லேறிக்கொண்டு ஆரவாரித்துச் சூழ்ந்தார்கள். ஆயிரவெள்ளம் பூதசேனைகள் மலைகளையும் மரங்களையும் படைக்கலங்களையும் ஏந்திப் பக்கத்தில் நெருங்கிச் சூழ்ந்தன. வாத்தியங்கள் முழங்கின. கொடிகள் மொய்த்தன. பூதூளி பரந் தது. இவ்வாறே ஆயிரம்வெள்ளம் பூதசேனைகளும் படைத்தலைவர்களும் இலக்கத்தெண்மர்களும் தம்முடன்செல்ல வீரவாகுதேவர் போர்க்களத்தை யடைந்தார். அப்பொழுது சிங்கமுகாசுரனுடைய சேனைகளும்கங்காநதியைச் சேர்க்கின்ற சமுத்திரத்தைப்போலப் பூதசேனைகளோடு வந்து கலந்தன. கோடுகளும் கொக்கரைகளும், பேரிகைகளும் முழங்கின. மயிற்பீலிகளும், மணிகளும், கொடிகளும் ஆர்த்தன. கடலொலியும் முகிலொலியும்போல யானைகளும், குதிரைகளும், தேர்களும் ஒலித்தன.

இவ்வாறுகிய சமயத்தில், பூதர்கள் போரை முயன்றார்கள். அதனைக் கண்டு அவுணர்களும் போருக்கு மூண்டு, தண்டங்களையும், மழுக்களையும், பிண்டி பாலங்களையும், தோமரங்களையும் சொரிந்தார்கள். விற்களை வளைத் துப் பாணமழைகளையும் பொழிந்தார்கள். பூதர்கள் மரங்களையும், மலைகள யும், தண்டங்களையும், எழுப்படைகளையும், மழுக்களையும் வீசினர்கள். இவ் வாறு பொருகின்ற அவுணரும் பூதரிற் சிலரும் கால்களும், கைகளும், புயங் களும், மார்புகளும், முடிகளும், சிரங்களும் சிந்தினர். அவர்களுடைய உடம் பினின்றும் வடியும் இரத்தவெள்ளம் பரத்தலாற் பூமி செவ்வானத்தை ஒத் தது. ஊன்களும் பிணமலைகளும் செறிந்தன. கழுகுகளும் பிசாசுகளும் நெருங்கின. அவுணசேனைகளும் பூதசேனைகளும் இவ்வாறு போர்செய்யும் பொழுது, அவுணப்படைத்தலைவர் வந்து தாக்குதலாற் பூதசேனையின் முன் னணி முரிந்தது. பூதர்கள் அழிதலைச் சிங்கரென்னும் பூதப்படைத்தலைவர் கண்டு கோபித்து, ஒரு தண்டத்தை யெடுத்து, எதிர்த்த அவுணர்களுடைய பற்களும் தலைகளும் சிதறும்படி அடித்து வீழ்த்திச்சென்றார். அவர் செல்லும் பொழுது, வலியினால் விட்டுணுவையொத்த தசமுகனென்னும் ஓரவுணன் ''நீ எங்கே சென்கின்றாய்? நில், நில்'' என்று கூறி, அவருக்கெதிரே சென்று, வில்லை வளைத்து நாணெலிசெய்து, பாணங்களை மழைபோலச் சொரிந்தான். சிங்கர் அவ்வம்புகள் அழியும்படி தண்டினால் அடித்து வீழ்த்தி, ஓரடியினால் அவனிட்ட கவசத்தையுமழித்தார். தசமுகன் ''இந்தக் கொடியவனுடைய உயிரை மாற்றுவேன்'' என்று ஒரு தண்டைச் சிங்கர்மீது எறிந்தான். அவர் அதனை மார்பில் ஏற்றார். தண்டம் ஒடிந்து வீழ்ந்தது. தசமுகன் அதனை நோக்கி, ''வீராதிவீரனும் இவனே போலும்'' என்றெண்ணி, ''யாம் இனிக் காண்போம். நீ வலியையாயில் இதனைக் காத்துக்கொள்'' என்று ஒரு

மழுவை எறிந்தான். அது தேவர்கள் அஞ்சும்படி அக்கினியோடும் வாயுவோடும் கூடிய நஞ்சைப்போலச் சிங்கர்மேற் சென்றது. அவர் அதனைத் தண்டினால் அடித்துவீழ்த்தி, அத்தண்டினாலே தசமுகனுடைய வில்லைப் பொடியாக்கினர். அதுகண்ட அவுணர்கள் துன்பமுற்றார்கள். தசமுகன் அக்கினிமயமாகிய ஒரு வேற்படையைச் செலுத்த, சிங்கர் அதற்கெதிராக ஒரு சக்கரப் படையை விடுத்தார். அது சென்று வேற்படையை அழித்தது. தசமுகன் ஒரு தண்டத்தை எடுத்தெறிந்தான். அது கணப்பொழுதினுட் சிங்கருடைய மார்பில் வந்து படுதலும், அவர், மார்பினின்றும் இரத்தம் மழைபோல வடியச் சோகித்து, பின் ஓடிப்போய், தசமுகனுடைய மார்பில் ஒரு கையால் அடித்தார். அவன் வீழ்ந்திறந்தான். தசமுகன் இறத்தலும் அவுணர்கள் யாவரும் பூதர்மேற்சென்று போர்செய்வாராயினர். அப்பொழுது இலக்கம் வீரர்களுள் அநகரென்பவர் பெருங் கோபத்தோடு அதரத்தைக் கடித்து, வில்லையேந்தி அவுணசேனைகளை "எங்கே போகின்றீர்கள்?" என்று எதிர்த்துத்தாக்கி, பாணங்களினால் அவுணர்களுடைய தலைக்குவைகளைச் சிந்தித் தரையில் வீழ்த்திக் கலக்கினர். அநகர் இவ்வாறு அவுணசேனைகளைக் கொன்றுதிரிதலும், ஒழிந்த அவுணர்கள் யாவரும் ஓடினர்கள். துன்முகன் என்னும் அவுணன் அதனைநோக்கி ஓடுகின்ற அவுணர்களை "நீவிர்வருந்தாதொழிமின். மின்மினிக்கூட்டங்கள் சூரியனை வெல்லுமா? யான் கோபித்தாற் பூதர்கள் என்முன் நிற்பார்களா? பூதர்கள் போரைவிட்டார்கள். நீங்கள் நில்லுங்கள், நில்லுங்கள்" என்று சொல்லவும் அவ்வசுரர்கள் நில்லாதோடினர். சேனைகள் அழிதலைத் துன்முகன் பார்த்து, நெய் சொரிந்த நெருப்பைப் போலக் கோபித்து, பூதப்படைத்தலைவர்கள் "அந்தோ! நம் சேனை அழிந்தன" என்று வருந்த வில்லைவளைத்து, விடாமழைபோலப் பாணங்களைச் சொரிந்தான். பூதர்களும் அவனோடு போர்செய்ய ஆரம்பித்து மலைகளையும் மரங்களையும் வீச, அவற்றுற் சிற்சில பாணங்கள் இரிந்தன; சில ஒடிந்தன; சில நெரிந்துபோயின. துன்முகன் அதனைப்பார்த்து, "என்பாணங்கள் பூதர்களை அழித்தில. இவர்களோடு யானொருவன் தனிமையாகப் போர்செய்வதுமிது" என்றெண்ணி, பல மாயங்களினாலே ஒவ்வொரு பூதர்க்கும் நூறு நூறு வடிவங் கொண்டு தாக்கினன்.

வீரவாகுதேவர் துன்முகனுடைய மாயாசொரூபங்களையும் அவைகள் பூதர்களோடு போர்செய்கின்ற வெற்றியையும் பார்த்து வருந்தி, வெகுண்டு, "இது மாயம்போலும்" என்றெண்ணி, "இதனை மாற்றுவது எப்படைக்கலமோ?" என்று யோசித்து, ஞானப்படைக்கலத்தைச் செலுத்தினர். துன்முகன் காற்றின்முனைதிர்ப்பட்ட பூளைபோலத் தன்மாயையின் வடிவங்களெல்லாம் மறையத் தானொருவனாய்க் கொதித்து, வில்லைவளைத்து, ஆயிரம்பாணங்களை ஒரு தொடையாகச் செலுத்தினன். வீரவாகுதேவர் தம்முடைய வில்லைவளைத்து ஆயிரம் அம்புகளால் அவனுடைய அம்புகளையும், ஏழுபாணங்களினால் அவனுடைய வில்லையும், ஒரம்பினாற் கவசத்தையும் அழித்து, அவனுடைய உடம்பெங்கும் அளவில்லாத பாணங்களை அழுத்தினர். துன்முகன் தன்னுடம்பைப் பாணங்கள் பிளத்தலும், இரத்தநீர்பாய இறந்தவன்போல வீழ்ந்து மயங்கி, பின்றெளிந்து, போர்செய்யப் பயந்து, "நான் இவரிப் போர் செய்ய எதிர்ப்பேனாயின் மரணம்வரும். ஆதலால் ஓடிப்பிழைப்பதே முறை" என்று நினைத்து, மனத்தால் வழி

பட்டு, ஒரு மாயமந்திரத்தை நினைத்து, தேரினின்றுமிழிந்து, அருவமாய் ஆகாயத்திற் போயினன். அதனைக்கண்ட பூதர்களுட் சிலர் ''இவன் மாயையில் வலியன், வஞ்சன், விரைந்தோடிப்போயினன், இவனைப்போய்ப்பிடிப்போம் வாருங்கள்'' என்றார்கள். அதனைக்கேட்ட வீரவாகுதேவர் ''இதனைத்தவிருதிர், போருக்கஞ்சியோடின ஒருவனை நெருக்கி உயிர் கவர்தல் புகழோ? வன்மையோ? போருக்குப் பயந்தோடினவர்களையும், தம்மைச் சரணமென்றடைந்து வணங்கினவர்களையும், வாட்டமுற்றோர்களையும், வலிமையில்லாதவர்களையும் கொன்றவர்களல்லவா குற்றத்துட்படுவார்? வீரரல்லாதாரைக் கோபியாதொழிமின்'' என்று கூறினர். பூதர்கள் அதனை நீதி யென்றெண்ணி, துன்முகனைத் தொடர்தலை நீங்கினர்கள்.

இவைகளைச் சிங்கமுகாசுரன் பார்த்து, ''நம்முடைய சேனைகளெல்லாம் ஓடுகின்றன. நாம் பின்னே நிற்றலால் ஆவதென்ன?'' என்று கூறி, பூதர்களை நோக்கி முனிந்து, முன்னே சென்றான். பூதர்கள் ''சிங்கமுகாசுரன் நம்முன் போருக்குவந்தான்.யாம் அவனுடைய வலிமையையழிப்போம்''என்று மலைகளையும், மரங்களையும், மழுக்களையும், சூலங்களையும், தண்டங்களையும், எழுப்படைகளையும், கலப்பைப்படைகளையும் சொரிந்தார்கள். சிங்கமுகன் அவற்றை நோக்கி, அக்கினிகால உயிர்த்தான். பூதர்கள் வீசிய மரம் முதலிய யாவும் அம்மூச்சுக்கெதிரே சென்று, சில கரியும்; சில தீயும்; சில பூழியாகும்; சில ஆகாயத்திற்றிரியும்; சில மீளும். அவைகள் செயல் இவ்வாறுயின. பூதர்கள் அதனைப்பார்த்து, ''ஐயையோ! நம்முடைய படைகளெல்லாம் சிங்கமுகாசுரனுக்கெதிரே செல்கின்றில; அவனுடைய மூச்சுக் காற்றினால் அழிகின்றன. யாம் இனிச்செய்வதொன்றுமில்லை. இவனோடு யாம் போர்செய்வது எப்படி! எப்படி! இவன் யாரினும் மேலானவன்'' என்று கூறி கோபங்கொண்டு யாவரும் ஒருங்கேபோய், மலைகளையும் மரங்களையும் பறித்துக்கொண்டு வந்து, ஆரவாரித்து, சிங்கமுகன்மேற் செல்ல விடுத்தார்கள். அவைகளெல்லாம் ஒருங்கு சென்று எத்திசைகளினுஞ் செறிந்து ஆகாயவெளியைத் தூர்த்தன. அதனாற் சூரியன் மறைய இருள் உண்டாயிற்று. பறவைகள் இராக்காலம் வந்ததென்று கூடுகளையுடையன வாயின. ''சூரியன் பகல்கழியுமுன் ஓடினன். இஃதற்புதம்! அற்புதம்! பிரமகற்பம் வந்தது'' என்று அறிஞர்களும் கலக்கமெய்தினர்கள். பூதர்கள் எறிந்தமலைகள் ஆகாயவழியை மறைத்தலாற் சூரியன் அஞ்சி நின்றான். தேவர்கள் ''யாம் இந்நாள்காறும் அவுணர்களால் வருந்தினேம். பூதர்கள் இங்கே மலைகளை வீசினர்கள். இங்குநின்றால் இவர்களாலும் வருத்தமடைவோம். இப்போர் நிகழ்ச்சிகளைப் பின்பு அறியலாம். இப்பொழுது நாம் போதலே துணிபு'' என்று ஓடினர்கள். அம்மலைகளில் இடையிடையிற் பொருந்திய முகில்கள் மழையையும் இடியையும் மின்னலையுங் கான்று வீழ்ந்தன. அம்மலைகள் ஒன்றோடொன்று நெருக்கித் தாக்குதலால் எழுந்த நெருப்புச் சென்றவிடமெல்லாம் பொரியாய்ப் புகைந்தன. அதனால் உயிர்கள் அழிந்தன. இப்படிப் பல இயல்புகள் பொருந்தப் பூதர்கள் எறிந்த மலைகளும் மரங்களும் சென்று கைலாசமலையைச் சூழ்ந்த மேகங்களைப் போலச் சிங்கமுகனைச் சூழ்ந்து அவன்மேற்பட்டுப் பொடியாகாது, ஒடியாது, பூழியாகாது, நொய்ய தன்மையனவாய்ப் பூமியில் வீழ்ந்தன. மலைகள்

யாவும் அவனுடைய உடம்பிற் பட்டு, மலையிலே பருத்திப்பஞ்சு பட்டாற் போல வீழ்கின்றதைப் பார்த்துப் பூதர்கள் துன்பமுற்றார்கள்; தேவர்கள் ஏங்கினார்கள். பூதர்கள் இவ்வாறு தன்னோடு வந்து போர்செய்தலைச் சிங்க முகாசுரன் பார்த்து, தேரினின்றும் பூமியிற் குதித்து பூதர்களைக் கொல்லு தற்கு ஓர் ஆலாகல விஷம் நடந்தாற்போல நடந்து, சிற்சிலரைப் பூமியி லெற்றுவான்; சிற்சிலரைத் தேவருலகிலெற்றுவான்; சிற்சிலரைச் சூரியனு டைய தேரில் எற்றுவான்; சிற்சிலரைச் சமுத்திரத்தின் மேலெற்றுவான்; சிற்சிலரைத் தூர எறிவான்; சிலரைப்பற்றுவான்; சிலரைவாயிற் குற்று வான்; சிலரைக் குழுவொடு வாரிச் சுற்றுவான்; சிலரை அண்டச் சுவரின் கண் எற்றுவான்; சிலரை அள்ளியெறிவான்; சிலரைப் பிரமலோகத்தில் வீசுவான்; சிலரை விட்டுணுலோகத்தில் வீசுவான்; சிலரை இந்திரலோகத் தில் வீசுவான்; சிலரை எண்டிசைகளில் வீசுவான்; வீரம்பேசுவான்; பலரை அக்கினி மண்டலத்தில் வீசுவான்; பலரை வாயு மண்டலத்தில் வீசுவான்; பலரைச் சமுத்திரங்களெங்கும் வீசுவான்; பலரைப் பூமியெங்கும் வீசித் தூர்ப்பான். சிங்கமுகன் இப்படி அள்ளியெறிந்த செறிவினற் பூமிமுதற் சுவர்க்கம் வரையும் எங்கும் பூதங்களாயின. இதுபற்றியோ அறிஞர்கள் ''அங்கங்கெல்லாம் பூதம்'' என்று கூறினர்கள்? அவன்சிற்சிலரை மிதித்துக் கொல்வான்; சிற்சிலரை மேலேயெறிந்து காலினற்றள்ளிக்கொல்வான்; சிற்சிலரை உடம்பை நசுக்கிக்கொல்வான்; சிற்சிலரை உலாவி உதைத்துக் கொல்வான்; சிற்சிலருடைய சிரங்களை விரல்களாற் றள்ளுவான்; சிற்சிலரு டைய சிரங்களைக் கிள்ளுவான்; சிலரைத் தாக்கிக் கொல்லுவான்; சிலரை வதைத்தற்குரிய ஊக்கத்தாற் கொல்வான்; சிலரை இடிபோலும்வாக்கினற் கொல்வான்; சிலரை மருண்ட பார்வையாற் கொல்வான்; சிலரை வாரி வாய்கடோறும் நிறையஇட்டுண்பான்; வயிறுநிறைந்தபின் விளையாடுவான்; சிலரை எழுவினற் கொல்வான்; சிலரை மழுவினற்கொல்வான்; சிலரைக் கலப்பைப் படையினற் கொல்வான்; சிலரை சூலத்தாற் கொல்வான்; சில ரைக் கையாற்கொல்வான்; சிலரைப் பாணங்களாற் கொல்வான்; சிலரைத் தண்டத்தாற் கொல்லுவான்; சிலரை ஒடித்த மரத்தாற் கொல்வான்; சிலரைப் பூமியில் வீழ்த்துவான். இப்போரைப் பார்த்த தேவர்கள் ''சிங்க முகன் தேரின்கண்ணனே, விண்ணுலகத்திலுள்ளானே, திசையிலுள் ளானே, பூமியிலுள்ளானே, கடலிலுள்ளானே, பிரமலோகத்திலுள் ளானே, மேருவிலுள்ளானே, பூதர்களுடைய போரிலுள்ளானே'' என்றூர் கள். பூதர்கள் கால், கை, தோள், சிரம், மூக்கு, மார்பு ஆகிய இவைகள் அழிந்து வீழ்ந்து புரண்டார்கள். எண்ணில்லாத பூதர்கள் இரத்தம் சொரிய மிகுந்த துன்பத்தையுடையர்களாய் இறந்தார்கள். அவருட்பலர் தலையி ழந்து கூத்தாடுவாராயினர். இறக்குமயிர்களையெல்லாம் அக்கினிதேவன் எரிக்குந் தன்மைபோலச் சிங்கமுகனெருவன்றானே நின்று இப்படிக் கொல் வானுயினன். சிங்கமுகன் இத்தன்மையினனாய்ப் பூதர்களைக் கொல்லும் பொழுது இரத்தவெள்ளம் எங்கும் பெருகிச் சமுத்திரத்தை யடைந்து, அதனைச் செந்நிறமுடையதாக்கி, முந்நீர் என்ற பெயரை மாற்றிவிட்டது. தேவர்கள் சிங்கமுகனுடைய போரைக்கண்டு, ''இவன் பூதர்களுக்கெல் லாம் கேடுசெய்பவனாய் நின்றான்'' என்று கூட்டமாக ஓடி உலைந்தார்கள். சிங்கமுகன் தன்மீது மலைகளையும் மரங்களையுமெறிந்த பூதர்களை இப்படிக் கொன்று உலாவி, பின் மேருமலைபோலுந் தேரிலேறினன்.

சிங்கமுகாசுரனுடைய போர்விளையாட்டை அழற்கண்ணர் என்னும் பூதப்படைத்தலைவர் பார்த்து,மனங்கனன்று, சிங்கமுகனுக்கெதிரே போய், ''தீயவனே, இப்பொழுதே போர்செய்து உன்னை முடிப்பேன்'' என்றார். அப்பூதப்படைத்தலைவரைச் சிங்கமுகன் பார்த்து, ''ஒன்றையும்நினைக்கின்றி யில்லை; பயப்படுகின்றியுமில்லை. எனக்கெதிரே நின்று இதனைச் சொல்வா யாயின், உனக்கு ஒப்பாவார் யாவர்? உன்வலிமை நன்று'' என்றுதேவர்கள் அஞ்சச்சிரித்தான்.அழற்கண்ணர் அதனைநோக்கி,வடவாமுகாக்கினிபோலக் கோபித்து,''உன்னுடைய போரைத் தொலைப்பேன்;நீயும் காணுதி'' என்று ஒரு சூலப்படையைவிட்டார். சிங்கமுகன் அப்படையின் வரவைநோக்கி, அதற்கெதிராக ஒரு படையையுஞ் செலுத்தாமல் நின்றான். தேவர்கள் ''சிங்கமுகாசுரன் தோற்றான்'' என்று ஆர்த்தார்கள். அவன் சூலத்தை மார்பிலேற்றான். அது மலையிற்பட்ட முள்ளுப்போல ஒடிந்தது. சூலப்படை யின் வலியையும், அது சிங்கமுகனுடையமார்பிற்பட்டு ஒடிந்தமையையும், அவன் ஒருறுபாடுமின்றி நின்றதையும் அழற்கண்ணர் பார்த்து, ''வரத் தைப் பெறுகின்றவர்களில் இவன் பெற்றதே பேறு'' என்று மறுகுகின்ற மனத்தராய், ஒரு தண்டத்தை விரைந்து செலுத்தினர். அது சிங்கமுகனு டைய தேர்ப்பாகனது தலையைச் சிந்தியது. சிங்கமுகன் அதனைக்கண்டு கோபித்து, தன்கையிலிருந்த தண்டாயுதத்தை எறிந்தான். அது விரைந்து சென்று பொன்மலையிற் குலிசாயுதம் பட்டார்போல அழக்கண்ணருடைய மார்பிற்றாக்க, அவர் ஓவென்று மனம் வருந்தினர். அப்பொழுது மார்பு பிளக்க அவருடைய உயிருக்கு உலைவு வந்தது. அழற்கண்ணருடைய மூக் கிலும் மார்பிலும் வாயிலும் நெருப்புமழைபோல இரத்தஞ் சிந்தியது. அவர் அறிவிழந்தும் வலிமை தொலைந்திலர். அவர் தமக்கு ஓர் இயமன் இன்மையினல் உயிர்நீங்கப் பெற்றிலர். அழற்கண்ணர் இவ்வாறு சோர்ந்து நிற்கும்பொழுது, சிங்கமுகன் தன்னுடைய தேரில் வேறொரு பாகனை நிறுத்தி, பூதப்படைத்தலைவர்கண்மீது போருக்குச் சென்றான். அவனு டைய வரவைக் கோபத்தின்மிகுந்த சுமாலியென்பவர் கண்டு, மேருமலை போலுயர்ந்த ஒரு மலையை அகழ்ந்து வீசி ஆரவாரித்தார். அம்மலையைச் சிங்கமுகன் ஒரு கையாற் பந்துபோலப் பிடித்து மீட்டு மெறிய, அது சென்று மார்பிற்றாக்குதலாற் சுமாலி கோபமுந் தாமுமாய்ச் செயலற்று நிலத்தில் வீழ்ந்தார். அதனைத் தண்டியென்பவர் கண்டு, ஒரு தண்டையேந் திச் சிங்கமுகாசுரனுடைய தேரிற்போய், அவனுடைய மார்பில் அடித் தார். அத்தண்டாயுதம் காமுகனுக்குப் போதிக்கும் புத்திபோல அழிந் தது. அதைக்கண்டு தண்டி கோபித்து, தேரின்மேல் நின்ற சிங்கமுகா சுரன்மேல் இடியிடித்தாற்போலக் கையாலடித்தார். அவன் அக்கினியுண் டாகச் சிரித்து, அவரை ஒரு காலினல் உந்தியெறிந்து, தேவர்கள் அஞ்சும் படி ஆரவாரித்தான். காலினலே தூக்கியெறியப்பட்ட தண்டி ஆகாயத்தி லெழுந்து போய்த் திரும்பிவருகின்றவர் ''இவனைக் கொல்வேன்,'' என்னுங் கோபத்தினராய்ப் பெருமூச்சுவிட்டு, சிங்கமுகனுடைய பொன்மலைபோலும் இரண்டாயிரம் புயங்களிலும் குதித்து, மலையிலுள்ள சோலைகளில் பாயுங் குரங்குபோல்வாராய், அவைகளைத் தம்முடைய கால்களால் ஓடித்து வைத்து, கால்களும் ஓய்ந்து, அவற்றைப்பார்த்து எண்ணமுற்றுத் திரிந் தார். அவர் சிங்கமுகனுடைய கரங்களிலும் அவற்றிலுள்ள படைகளி

லும் சிரங்களிலும் செவிகளிலும் பாய்மரங்களிற் பாய்ந்து செல்லுகின்ற வண்டையும் போன்றார். சிங்கமுகன் என்ன சிறியனு! தன்கரங்களிலும் தோள்களிலும் சிரங்களிலும் தண்டி உலாவித்திரிவதை அவன் அறியாத வனுய், ''நம்முடம்பில் ஓர் ஈ வீழ்ந்துலாவிச் சூழ்கின்றதுபோலும்'' என்று கருதி ஒரு கையாற்சொறிந்து உருட்டித் துடைத்துவிட்டான். அதனுற் றண்டி மிகவும் வருந்தி வலிமையிழந்து தோற்றுப்போயினர். பூதர்கள் யாவரும் ஒரு செயலுமின்றிப் பயந்து ஓடினர். அரிதாகிச் செய்த தவமே யன்றி வலியது வேறென்றுண்டோ!

பூதர்கள் பயந்து ஓடுவதை இலக்கத்தெட்டு வீரர்களும் பார்த்து, தேரைச் செலுத்திக்கொண்டு சென்று, விற்கூவளைத்துச் சிங்கமுகனைச் சூழ்ந்து, பூமழைகளைப் பொழிந்தாற்போலச் சரமழைகளைப் பொழிந்தார் கள். அவர்கள் பொழிந்த அம்புகளெல்லாம் சென்ற அடையாளமுமின்றி, அழிந்ததுமின்றி, முன்போல அவனுக்குப் பக்கத்தில் வீழ்ந்தன. அதனை இலக்கத்தெண்மரும் பார்த்து, ''நம்முடைய வலிமை ஒழிந்தது'' என்று அஞ்சினுர்கள். சிங்கமுகாசுரன் தேரினின்றுமிறங்கி, இடிபோல உரப்பிச் சென்று, சிலர்தேரை எடுத்தெறிந்தான்; சிலர்தேரை ஒன்றேடொன்று அடித்தான்; சிலர்தேரைக் கையால் அள்ளி ஓடித்தான்; சிலர்தேரை உதைத்தான்; சிலர்தேரைப் பொடியாக்கினன்; சிலர்தேரை நிலத்திற் புதைத்தான். இவ்வாறு சிங்கமுகன் தாக்குதலும், இலக்கத்தெண்மர்களும் தங்கள் உயிரைத் தாங்கி, வில்லையும் மற்றைப்படைகளையும் மானத்தை யும் வலியையுஞ் சிந்தி ஓடினர்கள். சிங்கமுகன் தேரிலேறினன்.

அவ்விடத்து நின்ற வீரவாகுதேவர் அதனைக் கண்டு, ''நம்முடைய பூதர்களுள்ளே சிங்கமுகன் கொன்றது பாதியுண்டு. இலக்கத்தெண்மரும் போரில் அழிந்தனர். பெரியசேனைகளெல்லாம் இன்றொருநாளில் அழியும் போலும்'' என்று கூறிக் கோபம் மிகுந்து மேருமலைபோலும் வில்லைவளைத்து அனந்தகோடி பாணங்களைப்பூட்டி விடாமழைபோலச் சொரிந்து நின்றார். எதிர்த்துப் போர்செய்த அவுணர்கள் தலைகள் பாற, தாங்கிய படைகளைச் சிந்தி, பூமியில் வெட்டுண்டு வீழ்ந்தார்கள். எண்ணிறந்த குதிரைகளும் தேர்களும் யானைகளும் அழிந்தன. அளவில்லாத அவுணர்களும் இறந் தார்கள். பிணமலைகள் மிகுந்தன. பேய்கள் மொய்த்தன. இறவா தொழிந்த சேனைகளனைத்தையும் இரத்தவெள்ளம் வீரவாகுதேவருக்கு உதவியாய் வாரிக்கொண்டு போய்ச் சமுத்திரத்தில் வீழ்த்தி அதனை நிறைத்தது. போர்க்களமெங்கும் பேரிகையினெலியும், அவுணர்களுடைய வில்லின் நாணெலியும், சதுரங்கசேனைகளினெலியும், காக்கையினெலியும், பேய்களினெலியும், இரத்தவெள்ளத்தின் ஒலியும் மிகுந்தன. வீரவாகுதேவர் விடுத்த பாணம் ஒன்றே மலைகளையறுக்கும்; வேற்படைகளையும் வாட்படை களையும்அறுக்கும்; விற்களை அறுக்கும்; வீரர்களுடைய புயங்களை அறுக் கும்; மார்புகளை அறுக்கும்; கோடிதலைகளை அறுக்கும்; அவர் விடும் பாணங் கள் அவுணர்களுடைய சிரம் கரம் தோள் மார்பு முதலிய அவயவங்களைக் கவ்விக்கொண்டு சென்று, ஏழ்கடலையும் நீங்கி, எண்டிசைமலைகளையுந் தாண்டி, சக்கரவாளகிரியைப் போழ்ந்து, அப்பாலுள்ள அண்டத்தையும் பிளந்து செல்லும்.

இவ்வாறு அவுணசேனைகள் இறக்கும்படி வீரவாகுதேவர் உலாவித் திரிந்து கொல்லுதலும், சிங்கமுகனுடைய புதல்வர்களாகிய நூற்றுவர்கள் அதனைக் கண்டு, கோபித்து, அதரத்தைப் பற்களாற் கடித்து, ''நம்முன் வெவ்விய போரைச்செய்யும் இவனை விரைந்து கொல்வோம்'' என்று இனத்தோடு தேரைச் செலுத்திக்கொண்டுபோய், தனித்தனி விற்களை வளைத்து, வீரவாகுதேவர்மேற் சரமழைகளைச் சிந்தினர்கள். அப்பாணங்களை வீரவாகுதேவர் கண்டு, அனந்தகோடியம்புகளைச் செலுத்தி அழித்து, தேவர்கள் புகழ ஆரவாரித்தார். சிங்கமுகாசுரனுடைய புதல்வர்கள் கோபித்துப் பின்னும் கோடாகோடி பாணங்களைச் செலுத்தினர்கள். வீரவாகுதேவர் அவைகளைப் பாணங்களினால் மாற்றி, அவர்களுடைய விற்களையும் தேர்களையும் பாணங்களினால் அழித்தார். அப்புதல்வர்கள் தங்கள் தேர்களும் விற்களும் அழிய ''இந்த வீரனை விற்போரால் வெல்லுதல் அரிதுபோலும்; வாட்போராற் கொல்வோம்'' என்று ஒருசூழ்ச்சியோடு பூமியில் வந்து, ''வீரனே, நீ விற்போரைப் பயின்றதேயன்றி, எம்மைப்போல வாட்படையையும் பயின்றிலைபோலும்! வாட்போரில் வல்லையாயின், எம்மோடு போருக்கு வருதி'' என்று கூறிப் புயங்களிற்றட்டி, யமனனும் நடுங்கும்படி ஆரவாரித்தார்கள். அவர்களுடைய வார்த்தையை வீரவாகுதேவர் கேட்டு, ''நல்ல வார்த்தையைச் சொன்னீர்கள்!'' என்று சிரித்து, சிவபெருமான்கொடுத்த வாட்படையை எடுத்துக்கொண்டு விரைந்து பூமியிற் பாய்ந்து போயினர். அதனை நோக்கித் தேவர்களும் துன்பமடைந்தார்கள். வீரவாகுதேவர் வாட்படையை எடுத்துக்கொண்டு வருதலைச் சிங்கமுகனுடைய புத்திரர்கள் கண்டு, ''இவன் இறந்தான். இவனை இப்பொழுதே கொல்லலாம்'' என்று கூறித் தனித்தனி வாட்படைகளை எடுத்துக்கொண்டு சென்று, பூரண சந்திரனைச் சூழ்கின்ற இருளைப்போல வீரவாகுதேவரைச் சூழ்ந்து, அவருடைய புயங்களிலும், மார்பினும், கைகளிலும், கழுத்திலும், சிரசிலும் ஆராய்ந்து இலக்குப்பார்த்து வாளால் எறிந்து நெருங்கினர்கள். அவற்றுல் அவருடைய திருமேனிக்கு ஊறுபாடு சிறிதும் நிகழ்ந்திலது. அதனை அவர்கள் பார்த்து, ''இவனை யாங்கள் மெல்லப் பிடித்துக் கொல்லுதலே கருமம்'' என்று கூட்டமாகப் போய்க் கட்டிப் பிடித்தார்கள். அவர் கோபித்து, வாட்படையை வீசி, சிறிதும் உடம்பினுறுப்புக்கள் தெரியாவண்ணம் துணித்தனர்போலும் என்று சொல்லும்படி நூற்றுவரையுங் கொன்றார்.

நூற்றுவரையுங் கொன்ற வீரவாகுதேவர் தேவர்கள் துதிக்க மீண்டு தேரிலேறினர். சிங்கமுகாசுரன் தன் புதல்வர்களிறந்ததைப் பார்த்து அளவில்லாத துன்பத்திலாழ்ந்து, மானத்தாலிரங்கி, ''சிங்கேறு போலும் வலியையுடைய என் குமாரர்களை ஒருவன் ஏந்திய வாட்படை வதைத்ததென்று, மனமே, வசையுண்டு வருந்தாதே. இவ்வசையைச் சுமந்து நிற்க எனக்குக் கால்களுண்டு; எண்ணில்லாத தோள்களுண்டு; தலைகளுமுண்டு. ஆதலாற் சுமக்கலாம் போலும்! என் குமாரர்களை யாவருங்காண இங்கே என்முன்னே ஒருவனை கொன்று உயிரோடு நிற்பான்! இனி இதற்குமேலும் வசையுமுண்டோ! படைவீரருக்கெல்லாம் ஒரு நகையினை விளைத்தேனன்றே! இறந்தவர்களை நினைத்து வருந்தி நிற்றல்

லாவதுண்டோ? பகைவர் கூட்டங்களையெல்லாம் ஒரு நொடிப்பொழுதிற் கொன்று கூட்டத்தோடு வாரிவாரித் தின்று தேக்கெறிந்தாலன்றி என் கோபந் தணியுமோ? இந்தப் பகைவர் கூட்டங்களை விரைந்து கொன்று, வேற்படையையேந்திய பாலகனையும் வென்று, தேவர்களென்று பெயர் பெற்றோர் யாவரையும் இன்றைக்கே யழித்து, மூவுலகங்களையும் யானே விரைவில் முடிப்பேன்'' என்றான். இப்படிச் சிங்கமுகன் சொல்லி, அக்கினியும் நடுங்கும்படி கோபித்து, தேர்ப்பாகனை நோக்கி, ''என் குமாரர்களைக் கொன்றவனுக்கு முன்னே தேரைச் செலுத்துதி'' என்றான். பூகன் 'மகாராஜனே, நன்று' என்று குதிரைகளை எழுப்பிப் பண்ணுறுத்தித் தேரைத் தூண்டினான். சிங்கமுகன் வருதலை வீரவாகுதேவர் பார்த்து மகிழ்ந்து, தேரோடு வந்தெதிர்த்தார். சிங்கமுகன் கண்களோறும் அக்கினி சிந்த அவரைப் பார்த்து, கூட்டிலடைபட்ட சிங்கம் தன் பகையைக் கண்டாற்போல மிகுந்த கோபம் மேற்கொண்டு, ''சிவகுமாரர் ஆறுமுகங்களையுடையவர். நீ அவர் அல்லை. இலக்கம் வீரர்களுக்குத் தலைவனே? எண்மர்களுள் ஒருவனே? நம்மூர்க்கு வந்த தூதுவனே? இவருள் நீ யார்? சொல்லுதி'' என்றான். வீரவாகுதேவர் அதனைக் கேட்டு, ''யான் சிவகுமாரராகிய அறுமுகக்கடவுளுக்கு அடியவனுவேன். முன்னே உங்களுடைய மகேந்திரபுரியை அழித்துத் தூதுவனுமாய் மீண்டேன். எல்லையில்லாத நும்மவர்களையெல்லாம் இங்கே ஒரு கணப்பொழுதினுட் சங்கரித்து உன்னையும் வெல்ல அமைந்து நின்றேன். என்பெயர் வீரவாகு'' என்று கூறினர்.

வீரவாகுதேவர் கூறிய மொழிகளைத் தன் காதுகளில் நஞ்சுபெய்தாற் போலச் சிங்கமுகாசுரன் கேட்டுக் கோபித்து, ''படைக்கலப் பயிற்சியில்லாத சிறுவர்களைப் பொருது வெல்வதையும், நகரிலுள்ள எளியர்களைப் பொருது வெல்வதையும் அறிவாய்; இதுவுமோராண்மைப்பாலதோ? என்னுடைய நூறு குமாரர்களை எளிதிற் கொன்ற உன் வலிமையைச் சிவகுமாரன் காணக் கெடுப்பேன்; உயிரை வாங்கிக் கூற்றுவனுக்குணவாகக் கொடுப்பேன்; உடலைப் பருந்தினுக்குக் கொடுப்பேன். உன்வலியையும் உன்றலைவனுகிய பாலகனுடைய வலிமையையும், சேனைகளின் வலிமையையும் உங்களுக்குப் பின்னே நிற்கின்ற தேவர்களுடைய வலிமையையும் என்னுடைய வலிமையினால் இறைப்பொழுதில் நீக்குவேன். நீங்கள் தேவர்களுடைய சிறையை நீக்கவெண்ணிச் சேனைகளோடு என்முன் வந்தடைந்தீர்கள். உயிர் உடம்போடு கூடிவாழ்தலை நீங்கள் விரைவில் நீங்குவீர்கள். உமக்குக் கிடைத்த இலாபம் மிகவும் அழகிது! வினைவயத்தாலிறந்த உயிர் மீண்டும் தாமிருந்த உடம்பினுட் பொருந்துமாயினும் என்னோடு பகைத்துப் போர்செய்கின்றவர்கள் இறப்பதன்றி உய்வார்களோ?'' என்று இடியைக் கக்கினாற்போலக் கூறினான். இதனை வீரவாகுதேவர் கேட்டுச் சிரித்து, வில்லை வளைத்து, பதினெட்டுப்பாணங்களைச் சிங்கமுகனுடைய மார்பிற் செலுத்தினர். விரைவிற் சென்ற அப்பாணங்கள் அவனுடைய மார்பிற்பட்டு, யாசகர்கள், பொருளை ஈயாது மறைக்கின்ற உலோபிகளுடைய செய்கையைக் கருதி, மீள்வதுபோல ஒசிந்து வீழ்ந்தன. சிங்கமுகன் தன்னுடைய கையொன்றிலிருந்த தண்டாயுதத்தை வீரவாகுதேவர் மேற்செலுத்தினான். அதனை வீரவாகுதேவர் நான்கு பாணங்களாற் றுண்டித்து, ஆயிரம் அம்புகளைச் சிங்கமுகாசுரனுடைய சிரத்தில் விடுத்தார். அவனுடைய சிரசிற்பட்ட

அப்பாணங்கள் பல துணிகளாய் வீழ்ந்தன. அப்பொழுது சிங்கமுகன் "நேற்றைத்தூதுவன் இன்னும் என்முன் நின்று போர்செய்வானே! இது நன்று" என்று சிரித்து, தன் கையிலுள்ள சூலப்படையைச் சுழற்றி எறிந்தான். அக்கினி கிளர்ந்தாற்போல ஆகாயமார்க்கமாக வருகின்ற சூலத்தின் ஒளியையும் வலிமையையும் வெற்றியையும் வீரவாகுதேவர் பார்த்து, அதற்கெதிராக ஆயிரம் பாணங்களைச் செலுத்தினர். சூலப்படை ஆயிரம் அம்புகளையும் அழித்து அவர்மேல்வர, அவர் மனம் வருந்தி, பின்னும் ஆயிரம் பாணங்களைத் தூண்டினர். அவற்றையும் சூலப்படை சிந்தி, தேவர்கள் மருளும்படி வீரவாகுதேவர்மேற் சென்றது. அதனைக்கண்டு இலக்கரும் நடுங்கினர்கள்; எண்மரும் ஏங்கிக் கலக்கமடைந்தார்கள்; பூதர்கள் யாவரும் துன்பமுற்றிரங்கினர்கள்; தேவர்கள் "இப்படை விலக்குதற்கரியது போலும்" என்று உயிர்த்து விம்மினர்கள். வீரவாகுதேவர் தாம் செலுத்திய பாணங்களெல்லாவற்றையும் அழித்துத் தம்முடைய புயத்தைக் கொண்டு செல்லும்படி வருகின்ற சூலத்தின் வலிமையைப் பார்த்து, சிவபெருமான் கொடுத்த வாட்படையை எடுத்து, அதனை இருதுணியாக்கினர். சூலம் வெட்டுண்ணுதலும், துணைவர்களும் பூதர்களும் மிகவும் மகிழ்ச்சியிற் சிறந்தார்கள். தேவர்கள் யாவரும் ஆலாகலவிஷம் தம்மை வந்தடர்க்கச் சிவபெருமான் அதனையுண்டு தம்மைக்காத்த காலம்போலத் துயரம் நீங்கி மகிழ்ச்சியிற் சிறந்தார்கள்.

அப்பொழுது வீரவாகுதேவர் வடவாமுகாக்கினியிலும் கோபம் மிகுந்தவராய், "இப்பொழுது இவனுடைய உயிரை யானே உண்பேன்" என்று சிவப்படைக்கலத்தை எடுத்து யந்திரமாகப் பாவித்த மனமாகிய பீடத்தில் வைத்து, பூசைக்குவேண்டும் உபகரணங்களைக்கொண்டு மந்திரத்தோடு விதிப்படி மனத்தாற் பூசைசெய்து, "தேவர்களும் பிரமவிஷ்ணுக்களுக்கும் வெல்லமுடியாத சிங்கமுகனைக் கொல்லுதி" என்று அதனை வணங்கி விடுத்தார். அப்படைக்கலம் உலகம் அஞ்சும்படி அக்கினியைக் கான்று வந்தது. சிங்கமுகாசுரன் "இது எப்படையோ?" என்று சிந்தித்து பின் சிவப்படைக்கலம் என்று தெளிந்து, "அப் படைக்கலமா என்னைக் கொல்வது" எனக் கூறி, அண்டம் வெடிபடும்படி சிரித்து, தான் றவஞ் செய்து முன்னளிற் சிவபெருமானிடத்தே பெற்றதாய்த் தன்னெருகரத்திலிருந்த சிவப் படைக்கலத்தை மந்திரத்தால் வழிபாடுசெய்து தூண்டினன். அப்படைக்கலங்களிரண்டும் ஒன்றோடொன்று வந்து கலந்து, சமானமுடைய மேலோர்கள் இருவர் சிநேகத்தால் விரைந்து வந்து ஒருவரோடொருவர் கலந்து பின் மீளுதல்போலத் தம்மை விடுத்தவர்கள் மாட்டு மீண்டு சென்றன. தம்முடைய சிவப் படைக்கலம் மீளுதலும், வீரவாகுதேவர் துன்பம் பொருந்திய மனத்தினராய், "சூரபன்மனுடைய தம்பியாகிய சிங்கமுகாசுரனுக்கினையாகச் சொல்லுதற்கு வலிமையுடையவர் ஒருவருமில்லை" என்று நினைத்து, "இவன் வலிமையினாலும் குறைவிலன்; பிறரைக் கொல்லுந் திறத்திலும் குறைவிலன்; கோடி கூற்றுவர்கள் எதிர்த்துப் போர்செய்யினும் நொடிப்பொழுதிற் கொல்வான். இவனுடைய பெருமுயற்சியையே வலியதென்பேனே? அத்தவத்திற்காகச் சிவபெருமான் கொடுத்த வரத்தையே சிறந்ததென்பேனே? இவற்றுள் எது னைப் பெரிதென்று யான் சொல்லவல்லேன்? விடுகின்ற பாணங்களால்

உடம்பில் ஊறுபாட்டைப் பொருந்தான். வலிய தெய்வப்படைகளாலும் அழியான்; இப்பதகன் அறுமுகக்கடவுளுடைய திருக்கரத்திலுள்ள படைகளாலன்றி இறக்கமாட்டான்; என்னுல் இவனுடைய உயிரைக் கொல்ல முடியாதாயினும் வெவ்விய போரைச் செய்து இவனுடைய தேரையும் படைக்கலங்களையும் சேனைகளையும் யான் விரைவிலழிப்பேன்'' என்று கூறி, பதினன்கு பாணங்களைச் செலுத்தி, சிங்கமுகனுடைய தேர்ப்பாகனது தலையையழித்தார். சாரதி தலை தரையில் வீழுமுன் சிங்கமுகன் கோபித்து, வீரவாகுதேவர்மீது ஒரு தண்டாயுதத்தை இடிபோலச் செலுத்தினன். அது அவருடைய மார்பிற்பட்டு, கதிரெழு துகள் போலப் பொடியாகிப் புகை போலப் போயிற்று. வீரவாகுதேவர் கோபித்து, ஆயிரம்பாணங்களைச் செலுத்தி, சிங்கமுகன் ஏறிய தேரை யழித்தார். தேரழிதலும், பூதர்கள் ''சிங்கமுகனுடைய உயிரைக் கொல்வோம். இதுவே சமயம்'' என்று மலைகளையும் படைக்கலங்களையும் வீசி அவனை வளைந்து போரில் முந்தினர்கள். சிங்கமுகன் அதனைக் கோபத்தோடு நோக்கி, மற்றொரு தேரில் ஏறி, ஆயிரம் விற்களை ஆயிரங் கைகளில் எடுத்து வளைத்து நாணெலிசெய்தான். அவ் வொலியைக் கேட்ட உயிர்கள் யாவுந் துடித்தன; அண்டங்களும் நடுங்கின. பிரமாவுந் தலையசைத்தார். வளைத்த அவ்விற்களில், எல்லையில்லாத மேகங்கள் வானிலெழுந்து மழையைப் பொழிந்தாற்போலப், பாணங்களைத் தொடுத்துச் சிந்தினன். போர்செய்து எதிர்த்த பூதர்கள் பிணக்குவைகளாயினர். அவர்கள் பிரசண்டமாருதம் அடிக்கப் பூளைப்பூச் சிந்தினாற்போலக் கால்களும் கைகளும் தலைகளும் சிந்தினர்; தசையும் இரத்தமும் சிந்தினர்; மூளைகளும் சிந்தினர். பாற்கடல் தன்னுடைய திரைகளாகிய கரங்களினுலே துளிகளைச் சிந்துதல்போலச் சிங்கமுகன் ஆயிரங்கைகளாலும் பாணங்களைத் தூண்டினன். அவனுடைய அம்புகள் பூமியில் நெருங்கின; ஆகாயத்தைத் தூர்த்தன; எண்டிசைகளையும் மறைத்தன; மலைகளில் நெருங்கின; சமுத்திரங்கள் எங்கும் செறிந்தன; அப்பாலண்டங்களிலும் போயின; திக்குயானைகளின் மார்பிற் பாய்ந்தன; ஏழுமலைகளையும் பகிர்ந்தன; மேருமலையையும் போழ்ந்தன; வடவாமுகாக்கினியையும் தணித்தன. அவனுடைய பாணங்களால் அழியாத உயிரும், உடம்பு பிளவுபடாத உயிரும், ஊறுபாடடையாத உயிரும் இல்லை. அவனுடைய பாண மழைகள் போய்ப் பொதிந்து ஆகாயவழி முழுவதையும் மறைத்து உலகமெல்லாவற்றையும் பூமியாக்கின. அப்பாணங்கள் சூட்டிறைச்சிகளைக் கோக்கின்ற சலாகைகள் போலப் பூதர்களுடைய உடம்புகளை உருவி இலேசாக எடுத்துக்கொண்டு சென்றன. மெய்ந்நூற்பொருளை அறியாத மூடர்கள் பெற்ற செல்வம், அவர்களைக்குத் துன்பஞ்செய்தல்போல, சிங்கமுகனுடைய பாணங்கள் அளவின்றி ஓடுதலால் அவனுடைய சேனைகளையுங் கொன்றன. அப்பாணங்கள் ஆகாயவழியை மாற்றியதனுற் சூரியன் மேற்குத்திசைக்குச் செல்லாமல் மீண்டு புலம்பி நின்றன். கொம்பு பேரி முதலாகிய வாத்தியங்களும் படைக்கலங்களும் அள்ளுண்டு மேற்செல்லவும், நீர்க்காக்கை முதலிய பக்ஷிகள் நெருங்கிச் சூழவும், இரத்தவெள்ளம் சமுத்திரத்திற் பாய்ந்தது.

இவ்வாறுகச் சிங்கமுகன் செய்கின்ற போரை வீரவாகுதேவர் பார்த்து, அவனுக்கெதிரே போய், வில்லை வளைத்து நாணெலிசெய்தார், அதனுல் அண்டமும் அலைந்தது. அவுணர்கள் ஏக்கமடைந்து இரிந்தோடினர்.

யானை குதிரை தேர்களில் இருந்த வீரர்கள் யாவரும் ஆயுதங்களும் வெற்றியும் சிந்தி உடம்புகள் நடுங்க வீழ்ந்தார்கள். இவ்வாறுக வீரவாகுதேவர் நாஞ்ஞெலி செய்து, பாண மழைகளைச் சிந்தி, சிங்கமுகன் செலுத்துகின்ற அம்புகளெல்லாவற்றையும் இறைப்பொழுதில் அறுத்தார். அளவில்லாத பிரமர்கள் படைக்கின்ற உயிர்களெல்லாவற்றையும் உருத்திரமூர்த்தி ஒருவர் சங்காரகாலத்திலே அழித்தல்போல, ஆயிரம் விற்களாற் சிங்கமுகன் விடுகின்ற பாணங்களெல்லாவற்றையும் வீரவாகுதேவர் தம்முடைய அம்புகளால் அழித்தார். சமுத்திரங்களிலும், பூமியிலும், ஆகாயத்திலும், திசைகளிலும், மேருவிலும், மற்றை மலைகளிலும், சிங்கமுகனுடைய பாணங்கள் சென்ற சென்ற மற்றையிடங்களிலும், வீரவாகுதேவர் பாணர்களைச் செலுத்தி, அவ்வப்பொழுதே அறுத்தார்; அதனைத் தேவர்கள் பார்த்து, சூரபன்மனுடைய கிளைகளெல்லாவற்றையும் சுப்பிரமணியக்கடவுள் சங்காரித்தநாளில் அடைகின்ற மகிழ்ச்சியைப் பெற்று, ஆரவாரித்து, ''நமது வீரவாகுதேவர் சிங்கமுகனுடைய பாணங்கள் யாவற்றையுமா அழித்தார்? அவன் படைத்த புகழ்களெல்லாவற்றையுமன்றே அழித்தார்!'' என்று கூறினார்கள். இவ்வாறு தன்சரங்களை வீரவாகுதேவர் அழித்தலைச் சிங்கமுகன் கண்டு, ''யான் வில்லெடுத்தது உன் பொருட்டாகும். விரைவில் உன் புயங்களையும், கரங்களையும் மார்பையும், தலையையும், நாசியையும், கால்களையும், நாக்கையும் சரங்களாற் றுணிப்பேன், அநேகங் கைகளையுடைய யான் சிலைத்தொழிலைக் காட்டுகின்ற போரில் இரண்டு கைகளையுடைய நீயா என்முன் வந்தெதிர்ப்பாய்? வில்லைத் தொட்ட உன்கையை வெட்டிக் காகம் உண்ணும்படி கொடுப்பேன், அதனை நீ இனிக் காணுதி. மகேந்திரபுரியில் முன்னிகழ்ந்த போரிலும் என்சேனைகளிடத்தும் குமாரர்களிடத்தும் நீ கொண்ட வெற்றிகள் எல்லாவற்றையும் நீ கக்கும்படி செய்வேன். உன்னுயிரை யான் உண்பேன்'' என்று கூறினன், அதனை வீரவாகுதேவர் கேட்டு ''நீ பற்பலவற்றைச் சொல்லுகின்றதென்? உன்னுடைய ஆயுதங்களையும் சேனைகளையும் அழித்து உன்னையும் வெல்வேன்; என்னுடைய வில்வலிமையைப் பார்க்குதி'' என்றார், சிங்கமுகாசுரன் கண்கள் அக்கினிகால ஆயிரம் விற்களை வளைத்து, பத்துலக்ஷம் பாணங்களைப் பூட்டி, வீரவாகுதேவர்மேல் விடுத்தான், அவர் வலிமை மிகுந்த பத்துலக்ஷம் பாணங்களைத் தூண்டி அவற்றை அறுத்து, பின்னும் பத்துலக்ஷம் பாணங்களை விடுத்தார். வீரவாகுதேவர் விட்ட பாணங்களை அத்துணைப்பாணங்களாற் சிங்கமுகன் அழித்து ஆயிரகோடி பாணங்களை விடுத்தான். வீரவாகுதேவரும் அத்துணைப் பாணங்களைச் செலுத்தி அவனுடைய பாணங்களை அழித்தார். சிங்கமுகன் அதன்முன் இரண்டாயிரஞ் சரங்களைத் தொடுத்து வீரவாகுதேவருடைய வில்லை வெட்டி, அவர் வேறொருவில்லை வளைத்தற்கு முன் அவருடைய மார்பில் நூறுகோடிபாணங்களை அழுத்தினன். மார்பினின்று இரத்தம் ஆறுபோலப் பாய்ந்தது. அவர் வில்லை வளைத்து இலக்ஷம்பாணங்களைச் சிங்கமுகன்மேற் செலுத்தினர். அவன் அதனைக்கண்டு அத்துணைப் பாணங்களைத் தொடுத்து அவற்றையழித்து, பின்னும் பாணங்களை மழைபோலச் சொரிந்தான். வீரவாகுதேவர் அம்புகளால் அவற்றைமாற்றி, ஆயிரங் கணைகளைச் செலுத்தி, உருளைகளை அறுத்து அவனுடைய தேரை

அழித்தார். சிங்கமுகன் வேறொரு தேரின்மேற் பாய்ந்து விற்களை வளைத் தான். வீரவாகுதேவர் அவனுடைய ஆயிரம் விற்களையும் பாணங்களால் நொடிப்பொழுதில் அறுத்தார். சிங்கமுகன் விற்களும், மானமும், வீரச் சொல்லும், பெருமிதமும், கீர்த்தியும் இழந்து, பல்லிழந்த பாம்பை யொத்து, மிகவுந் துன்பமுற்றான். அதனைப் பார்த்துப் பூதர்கள் ஆர்த் தார்கள். தேவர்கள் ஆர்த்தனர்; பிரமர்கள் ஆர்த்தனர்; விஷ்ணுக்களும் ஆர்த்தனர். தன்னுடைய ஆயிரம் விற்களும் ஒருசேர வெட்டுண்டதை யும், வீரவாகுதேவருடைய வில்வித்தையின் திறமையையும், விஷ்ணு முதலாகிய தேவர்கள் தன்னை இகழ்ச்சி செய்வதையும், பூதர்களுடைய வலிமையையும் சிங்கமுகாசுரன் கண்டு, "தேவர்களுடைய ஆர்ப்பையும், இந்திரனுடைய ஆர்ப்பையும், திக்குப் பாலகர்களுடைய ஆர்ப்பையும், எம்மைக் கொல்லக் கருதும் மும்மூர்த்திகளுடைய ஆர்ப்பையும், பூதர்க ளுடைய ஆர்ப்பையும், முனிவர்களுடைய ஆர்ப்பையும், துன்பத்துக்குக் கொடுப்பேன்" என்று எண்ணி, தாயாகிய மாயவள் கொடுத்த மாயா பாசத்தை எடுத்து, "நீ விரைந்து சென்று எம்மோடு போர் செய்கின்ற பகைவர்களைக்கட்டி, உயிரை உண்டு உதயகிரியிற் கொண்டுபோய்வைத்து, அவர்களைவிட்டு நீங்காமல் அங்கேயேயிருப்பாய்" என்று கட்டளைசெய்து வீசினான். அது ஏழு சமுத்திரங்களும் ஒன்றாய் வந்து செறிந்ததென்று சொல்லும்படி திக்குக்களிற் சூழ்ந்து இருண்மயமாய், அக்கினியைச் சிந் திப் போயது. அதனைக்கண்டு தேவர்கள் யாவரும் ஓடினர்; பூதர்கள் யாவரும் பொருமினர். வீரவாகுதேவர் "ஈதொரு மாயமோ" என்று கருதி, "இது சமுத்திரமோ? நம்மை மூடும்படி வந்த பரந்த இருளோ? புயங்களைக்கட்டி இழுக்கும்படி வந்த கயிறோ? யாதாயிருப்பினும் இதனை அழிப்பேன்" என்று துணிந்து அதனைக் கெடுத்தற்குரிய படைக்கலத்தை எடுக்குமுன் அப்பாசம் விரைந்து காற்றுப்போலவந்து, குழுவோடு எல் லாரையும் கட்டியது. பூதப்படைகளும், படைத்தலைவர்களும், இலக்கத் தெண்மரும், வீரவாகுதேவரும், ஆகிய எல்லோரும் அப்பாசத்தில் அகப் பட்டார்கள். அப்பாசம் "இந்தவீரர்கள் அறிவோடிருந்தால் நம்மை மாற்றுவர். இவரை யான் இதற்கு ஆற்றாராகச்செய்வேன்" என்று சிறிது நேரத்துள் அவர்களுடைய அறிவை மயக்கி, வலிமையிழந்து சோர்ந்த அவர்களெல்லாரையும் ஆகாயவழியாகத் தூக்கிக்கொண்டு வாயுகதியும் மனோகதியும் பிற்படச் சமுத்திரத்தைத் தாண்டி உதயகிரியிற் போய், உயிர்ப்பின்றி உறங்குகின்ற அவ்வீரர்களை வைத்துக்கொண்டிருந்தது. சிங்க முகன் வீரவாகுதேவர் முதலிய யாவரும் இறந்து உதயகிரியை யடைந் தார் என்பதைச் தெரிந்து, அதனைப்பார்த்து, "கூட்டமாக நின்ற நம் பகைவர்களை விரைவிற் கொன்று உயிரைப் பருகினேன். என்வலி அழ கிது" என்றான். பின் "சிவகுமாரன் ஓடிவிட்டானே? நம்மோடு போர் செய்தற்கென்று வந்ததுமில்லையோ? அவனை எங்குந்தேடினேன்; காண்கி லேன் அச்சிறுவன் யாண்டையான்? அவன் என்றம்பியைக் கொன்றான் கொன்றான் என்று சொல்வது பொய்யோ? என்றம்பியிறந்திலனே?" என்று அண்டங்கள் வெடிக்கஆர்த்தான். சிங்கமுகன் இவ்வாறு சொல்லிஆ ரவாரிக்கும்பொழுது, முன்னணியிற்சென்ற தூதுவனொருவன் வந்து, "ஆயிர ரம் வெள்ளம் பூதசேனைகளோடு சிவகுமாரன் பாடிவீட்டில் உளன்;

யான் பார்த்துவந்தேன்'' என்ருன். அவ்வார்த்தையைச் சிங்கமுகன்கேட்டு, வக்கிரதந்தங்கள் விளங்கச் சிரித்து, ''சிவகுமாரன் என்னேடு போர்செய் யப்பயந்து புற்றினுளிருக்கும் பாம்புபோலப் பாசறையிலிருந்தானே! யான் விரைந்து சென்று இன்றைக்கு ஒருகணப்பொழுதினுள் அவனுடைய போரை முடிப்பேன்'' என்று கூறிப் போருக்குச் சென்ருன்.

இந்நிகழ்ச்சிகள் முழுவதையும் தேவர்கள் பார்த்து, வாட்டமடைந்து, ஓடினர்கள். அதனை வாயுவானவன் பார்த்து, சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே, கேட்டருளும். பூதர்களும் வீர வாகு முதலிய வீரர்களும் போய்ச்சிங்கமுகனேடு பெரும்போர்செய்ய, அவன் கோபித்துத் தன்கையிலிருந்த மாயாபாசத்தினுல் அவர்களெல்லாரையும் கட்டி உதயகிரியிலிட்டான்'' என்று விண்ணப்பஞ்செய்தான் அறுமுகக்கட வுள் வாயு சொல்லியவற்றைக்கேட்டு, ''அந்தச் சிங்கமுகன் யாண்டுளான்? யாண்டுளான்?'' என்று வினவினர். ''அவன் தேர்மேலேறி, படைகள் சூழ, இறக்கும் விதியினுல் இங்கே வருவான் போலும்'' என்று வாயுதேவன் கூறி னன். சுப்பிரமணியக்கடவுள் அதனைக்கேட்டு, திருப்புன்முறுவல்செய்து, பல இரத்தினங்களிழைத்த செம்பொற்றிருப்பாதுகையிலே அருமைத்திருவடி களை வைத்து, வீரக்கழலொலிப்பப் புறங்கடைவாயில்வரையும் வந்து, தம் முடைய திருமருங்கில் வந்த வாயுவை நோக்கி, ''நம்முடைய தேரைக் கொண்டுவருதி'' என்றுபணித்தார். அவன் அப்பணியைச் சிரமேற் கொண்டு, முன்பு சிவபெருமானுலே கொடுத்தருளப்பெற்ற மனவேகமென் னுந் தேரை கொண்டுவந்து, முட்கோலையும் கயிற்றையுந் தாங்கிச் செலுத் தினன். அறுமுகக்கடவுள் அதன்மேல் இவர்ந்தருளினர். தேவர்கள் யாவரும் ஆரவாரித்தார்கள். இந்திரன் சாமரத்தை இரட்டினன். தேவர்கள் ஆல வட்டங்களை வீசினர், சந்திரசூரியர் குடைகளைத் தாங்கினர். யமன் உடைவாளைப் பற்றினன். குபேரன் அடைப்பையைக் கொண்டான். வரு ணன் படிக்கத்தை ஏந்தினன். இவ்வாருகச் சுப்பிரமணியக்கடவுள் போருக் குச் செல்வதை ஆயிரம்வெள்ளம் பூதர்களுந் தெரிந்து, சமுத்திரமும் நாண ஆர்த்து, சூலம், மழு, தண்டம், எழு, கலப்பை, மரம், மலை முதலாயின வற்றை ஏந்தி விரைந்துவந்து சூழ்ந்தார்கள். அனந்தகோடி பூதர்கள் பறை களை அடித்தார்கள்; சங்கங்களை ஆர்த்தார்கள்; முருகக்கடவுளுடைய கீர்த் திகளைப் படித்தார்கள்; பக்கங்களிற் குடைகளையும் ஆலவட்டங்களையும் பிடித்தார்கள்; இடபக்கொடிகளைத் தாங்கினர்கள்; தம்முடைய வீரத்தைப் பேசினர்கள். ''மும்மூர்த்திகளுக்கும் முதல்வர் வந்தார்; சிவகுமாரர் வந் தார்; பகைவர்களுக்குச் சிங்கேறுபுள்ளவர் வந்தார்; வேற்படையையுடைய வீரர் வந்தார்; எவரும் அறிதலரிய தனிமுதல்வர் வந்தார்; தேவாதிதேவர் வந்தார்'' என்று திருச்சின்னங்கள் பணிமாறின.

பூதர்கள் சூழவும், தேவர்கள் வாழ்த்தவும், சுப்பிரமணியக்கடவுள் விரைந்து பாசறையைநீங்கிப் போர்க்களத்தையடைய,சிங்கமுகனும் படைக ளோடு வந்து எதிர்த்தான். பூதர்கள் எழு, மரம், தண்டு, சூலம், சக்கரம், மலை முதலியவற்றை வீசி, அவுணர்களையும் அவர்களுடைய யானை குதிரை தேர்களையும் அழிப்பாராயினர். அவுணர்கள் வேல், மழு, தண்டு, குலிசம், எழு, அம்பு, சூலம், இருப்புலக்கை, கவண்கல் முதலியவற்றைச் சிந்திப்

பூதர்களைக் கொல்லலுற்றார். இருதிறத்துச் சேனைகளும் இவ்வாறு பொருத பொழுது, அவுணர்கள் பலர் இரத்தம்வடிய, மார்பு சிரம் தோள் முதலிய அங்கங்கள் வெட்டுண்டு, சிவபெருமானுடைய திருப்புன்முறுவலாகிய நெருப்புப்பற்ற எரிந்த முப்புரம்போல, வீழ்ந்து அழிந்தார்கள். அதனைச் சிங்கமுகாசுரன் பார்த்து, அக்கினிசொரியும் கண்ணினனுய், ''நம் பகைவர் களை விரைவில் வாரியுண்டு என்னுடைய கோபந்தணிவேன்'' என்று கூறி, ஆயிரஞ் சிரங்களும் அண்டமுகட்டை அளாவவும், இரண்டாயிரங் கைகளும் அண்டத்தின் பக்கங்களை யலைக்கவும், பூமியுட் புதைந்த கால்கள் அண்டத் தினடியைப் பூழைசெய்யவும், மாயையினுல் இவ்வாறு ஒரு பேருருவத்தை யெடுத்து, ஆரவாரித்து வந்தான். யமன் அவனுடைய தோற்றத்தை நோக்கி அசைந்து நின்றான்; சூரியன் ஒடினன்; இந்திரன்நடுங்கினன்; அக்கினி பதை பதைத்துச் சோர்ந்தான்; பிரமா முதலிய தேவர்கள் மனம் மருண்டார்கள். அப்பொழுது சிங்கமுகன் இரண்டாயிரங் கைகளையும் நீட்டி, நினைத்தற்கு முன் ஒவ்வொருகையிலும் ஆயிரகோடி பூதர்களை அள்ளி, அவர்களை வாயி லிட்டு விழுங்கினன். அவனுடைய வாய்கள் ஆயிரமண்டங்கள் ஒரு பக்கத் திலே வெடித்து வெவ்வேறுய் விளங்குவனவற்றைப்போன்றன. அவனு டைய வாயினுட் புகுகின்ற பூதர்கள் ''இது மண்ணுலகம்; அதுவன்றுயின் விண்ணுலகமாகும்; அதுவுமன்றெனின் அசுரர்கள் இருக்கின்ற உலகமா கும்'' என்றுபார்த்தார்கள். அவன் வாயிலிட்டு விழுங்கும் பொழுது, சில பூதர்கள் அவனுடைய மூக்கையும் காதையும் பார்த்து, ''இவைகள் முழை ஞ்சுகளோ'' என்று ஓடினர்கள். சில பூதர்கள் பூமியிலுள்ளவர்கள் பாதலத் துக்குச் செல்லுதல் போலச் சிங்கமுகனுடைய பெரிய வாயாற்போய்க் கழுத்தை நீங்கி நெஞ்சைக்கடந்து வயிற்றிற் புகுந்தார்கள். அவன் சுவா சத்தை உள்வாங்கும்பொழுது அதனுல் உந்தியிற்புகுந்த பூதர்கள் சிலர் அவன் அதனை விடும்பொழுது மீண்டு ஆயிரம்யோசனை வெளியே போயினர் கள். அவன் விழுங்க வயிற்றிற்புகுந்த பூதர்கள் சிலர் ''மற்றையிடங்களெல் லாவற்றினும், சிவபெருமானைத் தியானித்தற்கு இவ்விடமே நன்று'' என்று கூறினர். சில பூதர்கள் அவனுடைய வயிற்றிற் புகுந்து அதனைத் தங்கையி லுள்ள படைகளினுற் கிளைத்தும் கீறியும் துளைத்தும், அதுகெடாமையினுலே வலிமையிழந்து இளைத்தார்கள். அவர்கள் யாது செய்வார்கள்! ஆயிரம் வெள்ளம் பூதங்களையும் வாயிலிட்டு விழுங்கித் தன்வயிற்றில் வைத்த சிங்கமுகனுடைய செயலைப் பல நாள் இடைவிடாமற் சொன்னலும் ஒழி யுமோ! இப்படிச்சிங்கமுகன் ஆயிரம் வெள்ளம் பூதங்களையும் கையால்வாரி வயிற்றிலிடுதலும், தேவர்கள் அதனைக்கண்டு, ''இவன் பூதர்களை வாரி உண் டான்; இனிப் பூமியிலுள்ள பொருள்களையெல்லாம் வாரியுண்பான்; ஆகா யத்திலுள்ள நம்மையும் விரைந்து பிடித்துண்பான்'' என்று பயந்து ஓடி னர்கள்.

இவற்றைப்பார்த்த சூரபன்மனுடைய தூதுவர்கள் விரைந்து ஓடிச் சென்று, அவனுடைய கால்களை வணங்கி, சிரசில் அஞ்சலித்த கையினராய், ''மகாராஜனே, உன்றம்பியாகிய சிங்கமுகாசுரன் சிவகுமாரருடைய தூது வனையும், மற்றை வீரர்களையும், பூதவெள்ளங்களிற் பாதியையும் மாயா பாசத்தினுற் கட்டிக்கொன்று உதயகிரியிலிட்டான். இதனை அப்பாலகன் அறிந்து வேற்படையோடு போரில்வந்தெதிர்க்க, உன்றம்பி மிகப் பெரிய

தொரு வடிவத்தை எடுத்துப் பூதர்களெல்லாரையும் அள்ளியுண்டான். நாம் இங்கு மீளுமளவும் நிகழ்ந்தன இவைகளாம். அவன் இப்பொழுது சிவகுமாரனோடு போர்செய்வான். ஒரு நாழிகைப் பொழுதினுள்ளே பகைவர்கள் இலர் என்று சொல்லும் படி செய்து மீளுவான்'' என்று சூரபன்மனுக்குப் பக்கத்தில் நிற்கும் பரிசனங்களும் மகிழும்படி சொன்னார்கள். அவற்றைக்கேட்ட சூரபன்மன்சிங்காசனத்தினின்றும்இறங்கிப்போய்த்தூதுவர்களைத் தழுவி, பலஉபசாரங்களைச் செய்து, அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்து, தன்பக்கத்தில் நின்ற ஒருவனை நோக்கி, ''சிவகுமாரனோடு என் றம்பியாகிய சிங்கமுகன் போர்செய்கின்றான்; முன் அவனோடு கூடச்சென்ற சேனைகளுட் பற்பல அழியும். இந்நகரத்திலுள்ள சேனைகளெல்லாவற்றையும் அங்கே செல்லும்படி அனுப்புதி'' என்றான். அந்த ஏவலாளன் அவ்வுரையைக்கேட்டு மிக விரைந்துசென்று, ''சிவகுமாரனோடு போர்செய்யப் போமின் போமின்'' என்று பறைசாற்றுவித்தான். அவ்வொலியைக்கேட்ட அம்மகேந்திரநகரத்துச் சேனைவெள்ளங்களெல்லாம் அணிவகுப்போடு ஆரவாரித்துச் சென்று, சிங்கமுகன் நிற்கின்ற போர்க்களத்தையடைந்தன. சூரபன்மன் ''என்றம்பியின் போர்வலியைக் காண்பேன்'' என்று சிங்காசனத்தினின்று மிறங்கித் தன்கோயினடுவேயுள்ள மேருமலை போலும் ஒரு சிகரத்தில் ஏறி, சிங்கமுகன் கொண்ட பெரிய வடிவத்தையும் சுப்பிரமணியக் கடவுள் தனித்து நிற்பப் பூதர்கள் அவனுக்குணவாய்ப்போன தன்மையையும் அன்போடு தன்கண்களினாற் பார்த்து இடிபோலச் சிரித்து, மிகுந்த களிப்பும் ஆச்சரியமும் அடைந்தான்.

சூரபன்மன் சிகரியிலே இவ்வாறு சிங்கமுகனுடைய போரைப் பார்த்துக்கொண்டு நிற்ப, அதற்கு முன்னரே சிங்கமுகன் அளவில்லாத பூதசேனைகளை எடுத்து உண்டபொழுதில் அங்குவந்த, அநந்த சத்தியையுடையரும், சங்கார காரணராகிய சிவபெருமானுடைய குமாரரும், செந்தாமரைக் கானங்களும் சூரியர்களுடைய தொகையும் செவ்வொளியைக் கான்றிருந்தாற்போன்ற பன்னிரண்டு திருக்கரங்களையும் ஆறு திருவதனங்களையுமுடையவரும் ஆகிய அறுமுகக்கடவுள் அதனைப்பார்த்து, போர்செய்தலாகிய ஒரு திருவிளையாடலைத் திருவுளங்கொண்டு, வாயுதேவன் தேரைச் செலுத்தப் போர்செய்யும்படி வந்தார். சிங்கமுகாசுரனுடைய சேனைவீரர்களெல்லாரும் பூதப்படைகள் யாவும் அழிந்ததைத் தெரிந்து, யானை குதிரை தேர்கள் நெருங்க வடவாமுகாக்கினியைச் சூழ்ந்த சமுத்திரம்போலச் சுப்பிரமணியக்கடவுளை வந்து சூழ்ந்து, படைகள் முழுவதையும் அவர்மீது இடிபோலச் சொரிந்தார்கள். அதனை அக்கடவுள் கண்டு, மேருமலைபோலும் வில்லைவளைத்து, அதினின்று வீழும் அருவிபோலும் நாணில் ஒலியைச் செய்தார். அவ்வொலியினால் ஆயிரகோடி பிருதிவியண்டங்களும் வெடித்தன; அப்புவண்டச் சுவர்கள் பகிர்ந்தன; தேயுவண்டங்கள் வெடித்தன; வாயுவண்டங்கள் விண்டன; ஆகாயவண்டங்கள் உடைந்தன. அந்த நாணொலியைக் கேட்டும் அதனாற் பூமியிற் கவிழ்ந்த தன்சேனைப் பரப்பைப் பார்த்தும் நின்ற சிங்கமுகன் ''இந்த நாணொலியை யார் செய்ய வல்லவர்!

இவன்சிவகுமாரனேயாம்! இவன்முன்னேதாரகனேவென்றுனென்பதுஉண்மை யேபோலும்'' என்று கூறி, ''இப்பாலகனுடைய வலிமையை யானே கெடுத்து மீளுவேன்'' என்று தேரோடும் ஒரு நொடிப்பொழுதிற் சுப்பிரமணியக்கடவுளுக்கெதிரே போய், அவரை நோக்கி, ''சிவகுமாரரே, யான் ஒன்று சொல்வேன்; கேளும், தம்பகைவர்களுடைய வலிமையைக் கெடுத்தல் அரசர்களுக்குக் கடனே. அதனால் நம்பகைவர்களாகிய தேவர்களை யாங்கள் தண்டித்தோம். நீர் அவருள் ஒருவரல்லீர். நமக்கு வேறு பகைவருமில்லை. அங்ஙனமாக நீர் நம்மோடு போருக்கு வந்ததென்னை?'' என்று வினவினன். ''எளியவனை வலியவன் தண்டித்தால், அதனை ஆராய்ந்து, அவ்வலியவனுக்கு நீதிநூலிற் சொல்லிய தண்டத்தைச்செய்து, அண்டங்கள் முழுவதுக்கும் இறைமைத் தொழிலை நாம் செய்வோம். ஆதலால் வலியர்களாகிய நீவிர் எளியர்களாகிய தேவர்களுக்கிட்ட சிறையை நீக்கவந்தோம். போரும் அதற்காகவே'' என்று சுப்பிரமணியக்கடவுள் சொல்லியருளினர். சிங்கமுகன் அதனைக் கேட்டு, இடியேறுபோலக் கையோடுகையைத் தாக்கி, அண்டங்களும் குலுங்கச் சிரித்து, நிகரில்லாத கோபத்தில் மிகுந்தவனுய் இவற்றைச் சொல்வான்: ''நீ இங்கே நம்மவர்களையும் வென்றுய்! தேவர்களும் இன்றைக்கே சிறையினின்றும் நீங்கினவராவர்! நீயும் அவரைச் சிறையினின்றும் நீக்குதி போலும்! போலும்!! நாங்களும் எளியரே! உன் உபாயம் நல்லதே! வலிமை உன்னிடத்திலேயே மிகுந்தது! உண்மைஇதுவன்றியுண்டோ! இந்திரகுமாரனையும் தேவர்குழுவையும்வாரிக் கொண்டு வந்து விலங்கிட்டு வீழ்த்திய சிறையை நீக்குதற்குச் சந்திரசூடாராகிய சிவபெருமானலும் முடியாதென்றல், மைந்தனே, நீ ஒருவன் கொல்லோ அதனை முடிக்கவல்லை! சிவபெருமான் உனக்குத் தந்த வேற்படையின் வலியை எண்ணுமல் மறந்தவனுய் அதனை இகழ்ந்து போர் செய்த தாரகனுடைய உயிரைக் கவர்ந்தாய். ஓடிப்போனற் பிழைப்பாய். நீ இங்கே வந்ததன்மை எங்கள் நல்வினையால் வந்தது. கடப்பமாலையைத் தரித்த பாலகனே, கேள். சிவபெருமான்றந்த வேற்படையின் வலிமையையும் உன்னுடைய வலிமையையும் பிறவற்றையும் யான் அறிவேன். தாரகனைப்போல யான் போரிலே அறியாமை அடைவதில்லை. விரைந்து போரைச் செய்குதி. வீரவாகு முதலிய வீரர்கள் யாவரும் பூதர்களிற் பலரும் இறந்து உதயகிரியை அடைந்தார்கள். மற்றைப் பூதர்கள் நீயுங்காண விரைவில் என்வயிற்றிற் போயிறந்தார்கள். நீ தனித்தவனுய் நின்றுய். அப்படி நின்றும், 'போரைச் செய்வோம்' என்னும் உன்னுடைய ஊக்கமே சிறந்தது! சயந்தனையுந் தேவர்களையும் சிறையினின்று நீக்கும்படி வந்த நீ துணைவர்களோடு பூதர்களையும் வாளா போக்கினுய். தனியனுய் நின்றுய். இலாபம் இதன்மேலும் உண்டோ! உனக்கு இப்பெரும்பேறு கிடைத்ததல்லவா! நம்மோடு போருக்கு வந்திறந்தவர் அளவில்லாதார்; துன்பத்தோடு புறந்தந்து ஓடினவர் தொகையும் அவ்வாறே. அதனை யறியாய்போலும். அதனுற்றுன் போரைக்குறித்து இங்கே வந்தாய். தேவர்களுடைய சிறையை நாங்கள் கனவிலும் விடுவதுண்டோ!'' என்றுன். இவ்வாசகத்தைச் சிங்கமுகன் சொல்லிமுடிக்குமுன் அறுமுகக்கடவுள் ''இவனுடைய உட்கோள் நன்று'' என்று திருப்புன்முறுவல்செய்து, ஒரேயொரு பாணத்தை வில்லிற்பூட்டி

விரைந்து செலுத்தினர். அது சிங்கமுகாசுரனுடைய மார்பிற் புகுந்து புறத்தில் ஊடுருவிப்போயது. விந்தைமலைபோலப் பெரிய வடிவத்தைக் கொண்டு நின்ற சிங்கமுகன் அப்பாணம் மார்பிலே மூழ்குதலும் துன்ப முற்று இரத்தம் அருவிபோலச் சொரிய நின்றான். தேவர்கள் அதனைக் கண்டு ஆரவாரித்தார்கள். பாணம் ஊடுருவுதலால் மார்பும் முதுகும் வாயில்களாதலும், சிங்கமுகனுடைய வயிற்றிலிருக்கின்ற பூதகணங்கள் யாவும் அதனை நோக்கி, புற்றிலிருந்தெழுகின்ற ஈசல்களைப்போல, அவ் வழியை நாடி ஆரவாரித்துக்கொண்டு வெளியே புறப்பட்டு வந்தன. அதனைச் சிங்கமுகன் பார்த்து, கைகளினால் அத்துவாரங்களை மாற்றி, சுப்பிரமணியக்கடவுண்மீது ஒரு தண்டாயுத்தை யெறிந்தான். அது மணித் தொகுதிகள் ஒலிப்ப வருதலும், அதனை அக்கடவுள் கண்டு, நொடிப் பொழுதில் நான்கு பாணங்களை விடுக்க, அவைகள் அத்தண்டாயுதத்தை அழித்து, சிங்கமுகனுடைய நெற்றியிற் புதைந்தன. அவன் களிப்பும் கடுஞ் சினமும் நீங்கி உணர்விழந்து, செங்கோல் செலுத்துமரசனுடைய ஆளுகை யில்லாத உலகம்போல வருந்திநின்றான். இரத்தம் வடிகின்ற துவாரங்களை முன்பு மூடிய கைகள், அருள்வரத் தொலைந்த மாயைபோலச், சோர்ந்தன. பூதகணங்கள் யாவும் திறந்த அவ்வழிகளால் கூட்டைவிட்டுப் பறக்கின்ற பக்ஷிகளைப்போல வெளியே புறப்பட்டுச் சுப்பிரமணியக்கடவுளுடைய திரு மருங்கில் வந்தன. அன்றைக்குச் சிங்கமுகன் விழுங்கினவைகளும் கொன்ற வைகளும் எறிந்தவைகளும் ஆகிய பூதகணங்கள் யாவும் அவருடைய திருவருளால் முன்போல ஒருங்குவந்து கூடின.

அப்பொழுது, அறுமுகக்கடவுள் வீரவாகுதேவர் முதலாகிய தம்பியர் களையும் படைத்தலைவர்களையும் பூதகணங்களையும் அழைக்கத் திருவுளஞ் செய்து, அவர்களிடத்தில் ஒரு பாணத்தைத் தொடுத்தார். அது பல சமுத் திரங்களைக் கடந்து உதயகிரியையடைந்து, அவர்களைச் சூழ்ந்த மாயாபாசத் தைச் சிந்தியது. அவர்கள் யாவரும் அறுமுகக்கடவுளுடைய திருவரு ளால் நித்திரைசெய்பவர்போல உய்ந்தெழுந்து, நல்லுணர்வுவரப்பெற்று சொல்லமுடியாத இன்பத்தை அடைந்தோர்களாய், அவருடைய திருவடி களை வாழ்த்தினர்கள். அப்பாணம் பிரமாவினால் உண்டாக்கப்பட்ட ஒருபுட்பக விமானத்தைப் போலாகி, வீரவாகுதேவர் முதலிய வீரர்களைச் சேனைகளோடும் முகந்து தாங்கி, உதயகிரியை நீக்கி ஆகாயவழியாகக் கொண்டுசென்று, சேனைகளோடு போர்க்களத்தில் நின்ற அறுமுகக்கட வுளுடைய திருவடிகளின் முன்பு விடுத்துத் தூணியுட் புகுந்தது. வீர வாகுதேவரும், இலக்கத்தெண்மர்களும், பூதர்களும், உயிர்க்குயிராய் வியாபித்து நிற்கும் அக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி, மிகுந்த வறியன் பெருஞ்செல்வத்தைப் பெற்றாற்போல மகிழ்ந்து, தோத்திரஞ் செய்தார்கள். முருகக்கடவுள் மிகுந்த தண்ணளியினால் அவர்களைநோக்கி, "தொகுதியையுடைய நீவிர் யாவரும் சிங்கமுகன் வீசிய பாசத்துளக்கப்பட் டுக் கட்டுப்பட்டுப் புலனழிந்து சோர்ந்து உதயகிரியிற்புகுந்து மிகவும் நொந்தீர்கள்போலும்" என்றருளிச்செய்தார். அவர்கள் "எங்கள் பழைய உணர்வு முழுவதும் நீங்கினலென்னை? உயிர்போய் அந்த நரகத்தில் அழுந்தி அயர்ந்தாலென்னை? வெவ்விய துயரத்தில் மூழ்கி வீணவயத்தாற் பிறவிகளிற் புகுந்தாலென்னை? எமது பரமபிதாவாகிய உம்முடைய திரு

வருள் உண்டானால் எமக்கென்ன குறை?'' என்றார்கள். வேதங்களாலும் அறிதற்கரிய பிரணவத்தின் பொருளாயுள்ள அக்கடவுள் அதனைக்கேட்டுப் பேரருள் புரிந்தார். அவர்கள் யாவரும் பின்னரும் தோத்திரஞ் செய்தார்கள்.

சுப்பிரமணியக்கடவுளுடைய நாணெலியைக் கேட்டு முன்னே சோர்வுற்று விழுந்த அவுணசேனைகள் அவர் ஒரு திருவிளையாட்டைத் திருவுளங் கொண்டமையால் விரைவில் எழுந்தன. எழுந்த சேனைகள் ''இந்த ஒரு பாலகன் நம்மையெல்லாம் நாணேசையால் அழிக்க வல்லனே? என்று கோபங்கொண்டு ஆர்த்து, பல படைக்கலங்களையுஞ் சிந்தி, அவரைச் சூழ்ந்தன. அவர் திருப்புன்முறுவல் தோன்ற வில்லைவளைத்து, நாண்பூட்டி, மிகுந்த கணைமழைகளைச் சிதறினர். அவைகள் அக்கினிபோல்வன, நஞ்சு போல்வன, இருளையொப்பன, யமனையொப்பன, பாம்புகளையொப்பன, சூரியனையொப்பன, மின்னிலும் ஒளியுடையன, இடியினும் வெவ்வியன, பொன்போலும் நிறத்தன, மணிகளைப்போல்வன, பல நிறத்தைப் பொருந்துவன, சூலத்தையொப்பன, தோமரத்தையொப்பன, கலப்பைப் படை போல்வன, வாட்படைபோல்வன, வேற்படைபோல்வன, கழுக்கடை போல்வன, குலிசம்போல்வன, தருமத்தை உண்டாக்குதலாற் பிரமாவையொப்பன, உலகங்களைப் பாதுகாத்தலால் விஷ்ணுவையொப்பன, அவுணர்களெல்லாரையும் சங்கரித்தலால் உருத்திரனையொப்பன, வாயுவைப் போலச் செல்வன, மனவேகத்தினுங் கடியன, நூறுகோடி அக்கினிகள் நெருங்கினாலும் அவற்றை மாற்றத்தக்கன. ஒரு பாணத்தைத் தொடுத்தாற் கோடியாம். அவை கோடாகோடியாம். மேலும் அவ்வாறே விருத்தியாகுமன்றி அவற்றை இத்தனை என்று எண்கொடுத்துச் சொல்பவர் யாவர்! அநந்தமென்று சொல்வதே அவர் விடும் பாணங்களுக்கு இலக்கமாம். அவ்வம்புகள் மேகங்களைப் பிளக்கும்; கடலைக் குடிக்கும்; சூரியனுடைய தேரைப் பிளக்கும்; வடவாமுகாக்கினியை விழுங்கும்; தேவருலகத்தைப் பிளக்கும்; மேருவைப் பிளக்கும்; பூமியைப் பிளக்கும்; ஆயிரகோடியண்டங்களை ஊடுருவியும் நில்லாது பின்னரும் ஓடுமென்று சொன்னால் இவைகளெல்லாம் அப்பாணங்களுக்கொரு வியப்போ! இவ்வாறு பாணங்கள் நெருங்குதலால், அறுமுகக்கடவுளைச் சூழ்ந்த அவுணர்களுடைய கால்களும், கைகளும், புயங்களும், மார்புகளும், முடிகளும் துணிந்தன; கொடிகளும் தேர்களும் துணிந்தன; அளவில்லாத நால்வகைச்சேனைகளும் அழிந்தன. முன்னாளில் நியமித்த பிருதிவியண்டங்கள் முழுவதையும் இப்பொழுது அப்புவண்டமாக ஆக்கியதன்மையினால், உவமையில்லாத முருகக்கடவுள் ஒன்றையொன்றுக்கும் வலிய அற்புதத்தைத் தெரிந்தவராவர். அவர் விடும் பாணங்கள் அவுணர்களுடைய தலைகளை அண்டத்தொகைகளெல்லாவற்றையும் உருவி அப்புறத்தினிற் கொண்டுபோய் இடும். அதனைத் தேவர்கள் யாவருங் காண்கிலர். இது சொல்லத்தகும் ஓர் ஆச்சரியமன்று. அப்பாணங்கள் அவுணர்களுடைய உடல்களைப் பிருதிவியண்டமாயிரங்களையும் பிளந்து அப்புவண்டங்களிற் கொண்டுபோய்ச் சிதறி, அவ்வண்டங்களை இரத்தவண்டமாக்கும். அவுணர்களுடைய இரத்தமும், சிரம் தோள் முதலிய அவயவங்களும், யானை குதிரை தேர்களும், அண்டங்களெங்குஞ் செறிந்தன. அச்சரங்கள் ஆயிர

கோடி அண்டங்களிலுமுள்ள அவுணர்களையும் அழித்து உலாவுமாயின், அவைகள், வந்தெதிர்த்துப் போர்செய்த அவுணப் படைகளைக் கொல்வதோ அரிது? அச்சரங்கள் வந்து நெருங்குதலும், தேவர்கள் கும்பிய முகமும் அஞ்சலித்த கரமும் உடையர்களாய், சுப்பிரமணியக்கடவுளை வணங்கிப் புகழ்ந்து, வானுலகத்தில் அப்பாணங்களுக்குத் தப்பி நின்று ஆரவாரித்தார்கள். பருந்துகளும் காகங்களும் நெருங்கின. உடற்குறைகளும் பிணமலைகளும் மலிந்தன.

நால்வகைச் சேனைகளும் இவ்வாறு அழியச் சிங்கமுகன் ஒருவன் மாத்திரம் போர்க்களத்தில் நின்றான். அவன், சுப்பிரமணியக்கடவுளுடைய திவ்வியமாகிய பாணங்கள்பட்டு உணர்வழிதலால், முன் மாயத்தினாற் கொண்ட பேருருவம் அழிந்து, தேரின்மேலே பழைய வடிவோடு நின்று, தானடைந்த அயர்ச்சியை நீங்கி, போருக்குச்சென்ற தன் சேனைகளெல்லாவற்றையுங் காணாதவனாய், சிவகுமாரர் சங்கரித்தாரென்றறிந்து, மனங் கொதித்து, ஒன்றுபோல ஆயிரம் விற்களை எடுத்து வளைத்து, பத்து லக்ஷம் பாணங்களைத் தெரிந்து பூட்டி எய்தான். சுப்பிரமணியக்கடவுள் அதனைக்கண்டு திருப்புன்முறுவல் செய்து, ஆயிரஞ் சரங்களைத் தூண்டி, அவன் விடுத்த சரமாரிகளை விலக்கி, பின்னும் ஆயிரங் கணைகளைச் செலுத்தினர். சிங்கமுகன் அவற்றை அத்துணைப்பாணங்களாற் சிந்தி, பத்துலக்ஷம் பாணங்களை எம்பெருமான்மேல் விடுத்தான். அவற்றை அத்துணைப் பாணங்களாலே முருகக்கடவுள் விலக்கினர். சிங்கமுகன் ஆயிரஞ் சரங்களைத் தூண்டி அறுமுகக்கடவுளுடைய தேர்ப்பாகனாகிய வாயுவின் மார்பில் அழுத்தினன். அக்கணைகள் மார்பில் மூழ்குதலால் வாயுதேவன் இரத்தம் வடிய வலிமையிழந்து துன்பமுற்றான். அவனுடைய துயரைக்கண்ட அறுமுகக்கடவுள் வில்லை வளைத்து நூறு சரங்களை விடுத்துச் சிங்கமுகனுடைய தேரை அழித்தார். அவன் ஆர்த்துப் பூமியில் இழிந்து பல கணைகளைச் சொரிந்தான். அவற்றைச் சிவகுமாரர் சரங்களால் மாற்றி, ஆயிரஞ் சரங்களைத் தூண்டிச் சிங்கமுகனுடைய விற்களை அறுத்தார். அதனைக்கண்ட விஷ்ணுவும் பிரமாவும் தேவர்களும் கையெடுத்தார்த்தார்கள். சிங்கமுகன் வடவாமுகாக்கினிபோலக் கோபித்து, ஆலாகலவிஷத்தைப் பாற்கடல் விடுத்தாற்போல ஒரு சூலப்படையைச் சுழற்றி யெறிந்தான். அதனை முருகக்கடவுள் பதினொரு பாணங்களால் அறுத்து, ஆயிரம் பாணங்களைச் செலுத்தினர். சிங்கமுகன் ஒரு தண்டாயுதத்தினால் அவற்றையழித்து, அண்டங்கள் வெடிக்க ஆர்த்துக்கொண்டு சென்றான். தாம் விடுத்த பாணங்களைச் சிங்கமுகன் அழித்ததையும் பிடித்த தண்டோடு அவன் தம்மை எதிர்த்து வருவதையும் சுப்பிரமணியக்கடவுள் கண்டு, ஏழு பாணங்களைச் செலுத்தி, தண்டாயுதம் எடுத்த கையைப் பூமியில் வீழ்த்தினர். அது விழுமுன் அவனுடைய தேரினின்றும் வேறொரு கை புறப்பட, பூமியில் விழுகின்ற அத்தண்டை அக்கையாற்பற்றி, அறுமுகக்கடவுளின்மேல் ஆரவாரித்தெறிந்தான். அவர் ஆயிரஞ் சரங்களை விடுத்து அத்தண்டை அறுத்தார். தண்டந் துணிந்துவிழ அதனைக் கண்டு சிங்கமுகன் கோபித்து, முன்னாளில் யமனிடத்திற் கவர்ந்த பாசத்தை வீசினன். சுப்பிரமணியக்கடவுள் அதனை நோக்கி ஆயிரம்

கணைகளை அதன்மேற் செலுத்துதலும், காய்ந்தகொடி அக்கினிச்சுவாலை பட எரிந்தாற்போல அது பொடியாயது. பாசம் அழிந்ததைக் கண்ட சிங்கமுகன் நாணமடைந்து, சுப்பிரமணியக்கடவுளை இரண்டாயிரங் கைகளையுங் கொண்டு பிடிக்கும்படி நினைத்துக் கோபத்தோடு வந்தான். எம் பெருமான் அதனை நோக்கி, இரண்டாயிரங் கணைகளைத் தூண்டி அவனுடைய இரண்டாயிரங் கைகளையும் அறுத்தார். அவைகள் வெட்டுண்டு பூமியில் விழுமுன் வேறு கைகள் மீட்டும் புதிதாக முளைத்தெழுந்தன. பூமியில் விழுகின்ற கைகளை முளைத்தெழுந்தகைகளாற் சிங்கமுகன் பற்றிக் கொண்டு போருக்கு வந்தான். அதனைச் சிவகுமாரர் பார்த்து, ஆயிரம் பாணங்களால் அவனுடைய ஆயிரந் தலைகளையும் விரைவில் அறுத்து, இரண்டாயிரம் பாணங்களினால் அவனுடைய இரண்டாயிரங் கைகளையும்வெட்டினர். அதனைப் பார்த்து மகிழ்ந்த தேவர்கள் அவைகள் மீட்டும் முளைத்தெழுதலைக் கண்டு நடுங்கித் துன்பமுற்றார்கள். அதனை அறுமுகக்கடவுள் கண்டு, ''முன்னளையில் ஆலவனத்திலே கரங்களையும் சிரங்களையும்கொய்து யாகாக்கினியில் ஆகுதி செய்த தன்மையினால் இவைகள் முளைத்தெழுந்தன'' என்று எண்ணினர். இதனைக்கண்ட தேவர்கள் யாவரும் ''இவன் இறப்பது எவ்வாறு'' என்று தளர்ந்தார்கள்.

அப்பொழுது சிங்கமுகன் கோபித்து, சுப்பிரமணியக்கடவுளுடைய சந்நிதானத்தில் நின்று ''பாலகனே, நீ பாணங்களை விடுத்துப் பலயுக காலம் என்றலைகளையும் கைகளையும் அறுக்கினும், அவை முளைப்பதன்றி அழியுமோ! இதனால் நீ இளைப்படைவாய். நீயா என்னைப்பொருவாய்! என்னுடைய வலிய தவத்தினியல்பை நினைத்திலை. உன் பிதா எனக்குத் தந்த வலியை அறிந்திலை. குழந்தையாகிய நீயொருவன் என்னோடு போர் செய்யும்படி வந்தாய், உன்னுடைய இந்த ஊக்கம் நீ உய்தற்கேற்றதன்று, தேவர்கள் யாங்கள் இட்ட சிறையினின்று மீண்டு ஆண்டுவருவதும், பேராற்றலையுடைய யான் ஈண்டழிக்கின்றதுமில்லை. நீ இவ்விடத்தினின்றும் மீண்டு செல்குதி. உன்னுயிரை விட்டேன்'' என்று கூறினன். இவற்றை முருகக்கடவுள் கேட்டு, ''உன்னுயிருக்கு வரையறுத்த காலம் நீங்கியது. கூற்றுவனும் வந்து உனக்குப்பின்னே நின்றான். உணர்வில்லாதவனே, நீ ஏன் பிதற்றுகின்றாய். இனி ஒரு கணத்தினுள் உன்னைக்கொல்வேன்; காண்'' என்று கூறினர். சிங்கமுகன் அதனைக்கேட்டு, இடிபோல ஆரவாரித்து, இரண்டாயிரம் மலைகளைப் பறித்து வீசினன். முருகக்கடவுள் அவற்றை நொடிப்பொழுதிற் றுகளாக்கி, அவனுடைய மார்பில் மூழ்கும்படி ஆயிரம்பாணங்களை விடுத்தார். அவைகள் மார்பைப் பிளக்க, அக்கினியைக் கக்குங் கண்களையுடையனாகிய சிங்கமுகன் அளவில்லாத பெரிய மலைகளைத் தேடிப்பிடுங்கினன். அறுமுகக்கடவுள் ஆயிரஞ்சரங்களை விடுத்து அவனுடைய தலைகளை அறுத்து வீழ்த்தினர். அவைகள் வீழமீட்டும் ஆயிரம் சிரங்கள் முளைத்தெழுந்தன. சிங்கமுகன் முன்பறித்த மலைகளெல்லாவற்றையும் எறிந்து புயங்களிற்றட்டி, சூரியனும் தேவர்களும் பயப்பட ஆரவாரித்தான். முருகக்கடவுள் இரண்டாயிரம் பாணங்களால் அம்மலைகளை அழித்து அவனுடைய புயங்கள் முழுவதையும் வீழ்த்தினர். வீழ்த்தமுன் வேறு புயங்கள் பின்னும் வந்தெழுந்தன. ஆதலாற் றலத்தினும் பெரியதொன்றுண்டோ! சோதி சொரூபராகிய முருகக்கடவுள் அதனைக்கண்டு, இஃதொரு திருவிளையாடலாக எண்ணி, பாணங்

களை முறைமுறையாகச் சொரிந்து ஆயிரத்தெட்டுத்தரம் சிங்கமுகாசுர னுடைய கரங்களையும் சிரங்களையும் கண்டதுண்டஞ் செய்தார். வெட் டுண்ட கைகளும் தலைகளும் திசைகளிலும், கடல்களிலும், மலைகளிலும், பூமியிலும், சுவர்க்கத்திலும் சென்றன. அவைகள் சுவர்க்கத்திற்சென்று வைகுண்டவுலகத்தைத்தாண்டி அண்டகோளகையிலும் சென்றன. பாணங் கள் துணித்து வீசிய சிங்கமுகனுடைய சிரங்கள் இதழையதுக்கி விண்ணுல கத்தில் ஆவலங்கொட்டிச் செல்ல, அங்கே நின்ற தேவர்கள் அச்சமுற்று மயங்கிப் பூமியில்வீழ்ந்தார்கள். அவனுடைய புயங்களும் தலைகளும் எங்குஞ் சிந்தி வித்தியாதரர்கள் இருத்தற்குரிய வெள்ளிமலைகள் போல விளங்கின. வெட்டுண்ட அவனுடைய ஒவ்வோர் சிரசின் வாயைச் சில பேய்கள்நோக்கி, ஆயிரகோடி பிணங்களை அவ்வாய்க்குளிட்டு, இது பெரிய சிகர மாடம் என்றுஅதற்குளிருந்தன. வெட்டுண்ட சிரசிலொன்று பதைத்து வாய்பிளக்க, அங்கே விளையாடுகின்ற கோடி பிசாசுகள் பிணக்குவைகளை அதற்குளிட்டு, இது ஒரு மாடமென்று அதனுட் புகுந்து, அது விரைவில் மூடுதலும் அதனு ளோடி உலைந்தன. மூடிய வாய்க்குளகப்பட்ட சில பேய்கள் மூக்குவழியாக வும் செவிவழியாகவும் வெளியே புறப்பட்டன. சிங்கமுகனுடைய தோள் களுஞ் சிரங்களும் அறுக்க அறுக்கப் பின்னரும் முளைத்தலைச் சுப்பிரமணியக் கடவுள் பார்த்து, பல கணைகளைச் செலுத்தி. அவனுடைய ஒரு தலையையும் இரண்டு கைகளையும் நிறுத்தி, மற்றைச் சிரங்களும்கைகளையும் அறுத்தார். மலைகளைச் சிந்தி நின்று போர் செய்கின்ற சிங்கமுகனுடைய வெட்டுண்ட தலைகளும் கைகளும் முன்போலத் தோன்றப்புகும்பொழுது, அறுமுகக்கட வுள் அதனைக்கண்டு, கோபமுடையவர்போலச் சிறிதே உரப்பினர். உடனே முளைக்கின்ற சிரங்களும் புயங்களும் ஆமையினுறுப்புக்கள் அதனுடம்பில் ஒளித்தல்போல அவருடைய உங்காரத்தால் உடம்பினுள் ஒளித்தன. வெட்டுண்ட தலைகளும் தோள்களும் தோன்றுததன்மையைச் சிங்கமுகன் பார்த்து, சிறிதுங் குறைவின்றி முன் பலநாட் படித்த கல்வி முழுதையும் அவைக்களத்திலே அயர்ந்தவன்போல மானமுற்று வருந்தி நின்றான். அத னைச் சுப்பிரமணியக்கடவுள் நோக்கி, ''சிங்கமுகனே, நம்முடைய பாணங் கள் பலவுஞ்சென்று வெட்டிய உன்றலையுங் கையும் இப்பொழுது தோன்றிற் றில்லை. 'எழுக' என்று சொல்லுதி. அவை நீ இங்கே இறந்தபின்னே முளைக்க விருக்கின்றன'' என்று சொல்லியருளினர். அவன் ''பாலகனே, என்னுடைய சிரங்களும் கைகளும் வெட்டுண்டன என்று எண்ணுதே. என்னுடைய பேராற்றலைத் தேவர்கள் யாவரும் அறிவர். ஒரு தலையையும் இரண்டு கை களையுங் கொண்டே உலகங்களையெல்லாம் அழிப்பேன்'' என்று கூறி, போர் செய்ய நினைத்து, ஒரு மலையைப்பிடுங்கி எறிந்தான். அம்மலையைக் குமாரக் கடவுள் ஒருபாணத்தினாற் பொடியாக்கினர். இறக்கப்போகின்ற சிங்கமுகன் போர்க்களத்திலே கையோடு இட்ட ஒரு தண்டத்தை எடுத்து வைத்துக் கொண்டு நின்று, ''பாலகனே, நீ பகைவர்களை வேற்படையினாற் கொல் வதும் பகைவர் விடுத்த ஒன்றைப் பாணத்தினால் அழிப்பது மன்றி வேறு படைக்கலங்களொன்றையும் பயின்றதில்லையோ?'' என்றுகூறி, மூலகாரண ராய் நின்ற அறுமுகக்கடவுண்மேல் அத்தண்டப்படையை எறிந்தான். சிங்க முகாசுரன் சொல்லியதையும் அவன் விடுத்த தண்டாயுதத்தையும் அருள் வள்ளலாகிய அறுமுகக்கடவுள் திருவுள்ளத்தில் மதித்துப் பார்த்து, தம்

மூடைய ஒரு திருக்கரத்திலிருக்கின்ற குலிசப்படையை நோக்கி, ''சிங்கமுக னுடைய உயிரையுண்டு வருதி'' என்று விடுத்தார். குலிசாயுதம் விரைந்து சென்று தண்டத்தைத் துகள்செய்து, மலையிற்செல்லும் இடியேற் றின் கூட்டம்போலச் சிங்கமுகனுடைய மார்பிற் புகுந்து, அவனுடைய உயிரைப் பருகிப் புறத்தில் இரத்தநீரைக் கொப்புளித்துச் சென்றது. சிங்கமுகன் வீழ்ந்து பதைபதைத்து இரத்தநீர் அலைப்ப இறந்து கிடந் தான். குலிசாயுதம் தேவகங்கையில் மூழ்கி, கற்பகப்பூந்தாதில் ஆடி, தண்டமிழ்த் தலைச்சங்கப்புலவராகிய அறுமுகப்பெருமானுடைய திருக் கரத்தில் வந்து வீற்றிருந்தது. பிரமா முதலிய தேவர்கள் அதனைப் பார்த்து, ஆரவாரித்துச் சிரித்து, ஆடிப்பாடி, பூமழை பொழிந்து மகிழ்ந்து தொழுது, எம்பெருமானுகிய முருகக்கடவுளுடைய திருமருங்கிற் சூழ்ந்து வணங்கித் துதித்தார்கள். எம்பெருமான் அத்தேவர்களெல்லாருக்கும் பேரருள்செய்து, பூதர்களோடும் வீரவாகு முதலிய வீரர்களோடும் பாச றைக்குச் சென்று, பூதர்களும் பிரமா முதலிய தேவர்களும் சூழத் திவ்விய சிங்காசனத்தின்மீது சிவபெருமானைப்போல வீற்றிருந்தருளினர்.

முருகக்கடவுள் பாசறையில் வீற்றிருப்ப, அவரோடு போர்செய்து சிங்கமுகன் இறந்ததை ஒற்றுவர்கள் தெரிந்து, மகேந்திரபுரத்துக்கு ஓடிச் சென்று, தன்றம்பி போர்க்களத்தில் வீழ்ந்ததைப் பார்த்து, ''இறந்தானே மயங்கினனே?'' என்று ஐயங்கொண்டு சிகரத்திலிருந்த சூரபன்மனுடைய கால்களை வணங்கி, துன்பமுற்று, அஞ்சலிசெய்து, ''அரசனே, உன்றம்பியா கிய சிங்கமுகாசுரன் சிவகுமாரருடைய குலிசாயுதத்தால் இறந்தான. அவன் உண்ண இறந்த பூதர்களும், மாயாபாசத்தாற்கட்டி உதயகிரியிலிடப்பட்ட வீரவாகு முதலாயினேரும் பிழைத்துத் திரும்பிவந்தார்கள். இது உண்மை'' என்று சொன்னர்கள். சூரபன்மன் ஒற்றுவர்களுடைய சொல்லைக்கேட்டு, உரோமங்கள் தீயும்படி அக்கினிப்பொறி சிந்தவும், கண்ணீர் பெருகவும், வாயிற் புகையுண்டாகவும் வாடிப்பதைபதைத்துத் துன்பமுற்று, நெருப்பை விழுங்கினவர் போலச் சிகரத்தினின்றும் வழுவி, மேகம் வீழ்ந்தாற்போலக் கண்ணீராகிய கடலிலேவீழ்ந்து, நிலத்திற் கையையடித்துச் சுழன்று, வலிமை யும் வெற்றியும் அழகும் தொலையத் துன்பக்கடலுண் மூழ்கிப் புலம்புவான்: ''என்றம்பியேயோ, தாரகனுக்குத் தமையனேயோ, சிங்கமுகத்தவோ, அசு ரர்கள் தாயோ என்றுசொல்ல அவர்க்கருள்செய்யும் ஆண்டகையோ, தூது வர்கள் உன்னையா இறந்தனை என்று கூறினர்! இஃதென்னையோ! அந்நாளில் இந்திரன் முதலாகிய தேவர்களை வென்று தமியேனுக்கு வெற்றியைத் தந் தாய். இன்றைக்குப் போரிலே இளைய ஒரு பாலகன் உன்னைக் கொன்றானே! உன்னுயிரைக் கூற்றுவனும் கொண்டுபோனானே! போருண்டு என்றுல் மனங் களிக்கின்ற உன்னுடைய உயிரை இன்றைக்குக் கூற்றுவன் கொண்டு போனன் என்று கேட்கில், விஷ்ணுவும் பிரமாவும் இந்திரனும் முன்போலத் தத்தம் பதிகளை ஆளப்போகாரோ! பொன்னையும், பூமியையும், புதல்வர் களையும், மனைவியர்களையும், மற்றைப் பொருள்களெல்லாவற்றையும் பெறலாம்; என்றம்பியே, இப்பிறப்பில் உன்னை இனியான் பெறுவதுண்டோ? சொல்லுதி. பகைவர்களுக்கோர் சிங்கமே, சிங்கமுகனே, நீ விண்ணுலகத் தையடைந்தாய் என்று சொல்கின்றூர்கள். யான் இங்கே அடைகின்ற துன் பத்தைக் காணுமல் உன்றம்பியாகிய தாரகனையும் மக்களையும் கண்டாயோ!

சோற்றுக்கடனையும் சகோதரர் செய்யுங் கடனையும் எண்டிசைகளிலுமுள்ளார் துதிக்கும்படி நீ இன்றைக்குக் கழித்துப்போயினாய்; தேவர்களை அலைத்து வருகின்ற உன்னுடைய வெற்றியைக் கண்டிருத்தற்குத் தீயேனாகிய யானே கடனற்றேன். 'எனக்கு உற்றதுணை நீ, என்னுயிர் நீ, என்னுணர்ச்சியு நீ, சுற்றமும் நீ, பிதாவும் நீ, என்றம்பியும் நீ, என்றவமும் நீ' என்று நான் நினைத்திருந்தேன். நீ அதனைச் சற்றும் நினையாமல் தனித்திருக்கக் கற்றாயோ! தாரகன் இறந்தபின் யான் ஒற்றைப்புயம்போய் மனந் தளர்ந்திருந்திருந்தேன். சிங்கமுகனே, இன்றைக்கு நீ இறந்ததனால் யான் மற்றைப்புயத்தையும் இழந்தேன்; வறியனாயினேன்'' என்று தன்னுடைய ஆயிரத்தெட்டண்டங்களும் செவிடுபடும்படி சூரபன்மன்அழுதான். அதனை அரிபிரமேந்திராதிதேவர்கள் கேட்டு மகிழ்ந்து ஆர்த்தார்கள். சூரபன்மன் இத்தன்மையாக இரங்கிப் பின்ஒருவாறு தெளிந்து, சிங்காசனத்திலேறியிருந்து, கோபங்கொண்டு, சுப்பிரமணியக்கடவுளோடு போய்ப் போர்செய்ய எண்ணினான்.

திருச்சிற்றம்பலம்.

## சூரபன்மன்வதைப் படலம்.

சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுளோடு தான் போர் செய்ய நினைத்து. ஆயிரகோடி ஒற்றுவர்களை நோக்கி, ''என்னுடைய ஆயிரத்தெட்டண்டங்களினுமுள்ள சேனைகளெல்லாவற்றையும் விரைவிற்கொண்டு வருதிர்'' என்றான். தூதுவர்கள் நன்றென்று வணங்கி, மிகுந்த வேகத்தோடு அண்டங்கள்தோறும் போய்ச் சூரபன்மனுடைய பணியைத் தெரிவிக்க, அங்குள்ள அசுரத்தலைவர்கள் சதுரங்க சேனைகளோடும் அண்டங்களோறுமுள்ள வாயில்களால் இவ்வண்டத்தில் வந்தார்கள். அப்படி அவர்கள் வந்து நெருங்குதல் விஷ்ணு பிரமாவோடு மாறுபட்டு இல்வுலகத்துயிர்களெல்லாவற்றையும் விழுங்க அவைகள் அவருடைய உந்திக்கமலத்தின் வழியே தோன்றுதலையும், பஞ்சபூதங்களும் அவற்றிலுள்ள உயிர்களும் புவனங்களும் வேதாகமங்களும் பிறவும சிருட்டி யாரம்பகாலத்திலே சிவபெருமானுடைய பாதாரவிந்தங்களினின்று உதிப்பதனையும்போன்றது. இவ்வாருக ஆயிரத்தெட்டண்டங்களின் வாயில்களாலும் அவுணசேனைகள் வருதலும், சூரியனுடைய கிரணங்கள் மறைந்தன; அக்கினியும் நடுங்கினான்; வாயுவும் மெய்வியர்த்து நெருக்கமுற்று அயர்ந்தான். அச்சேனைகளினொளியால் உலகங்களெல்லாம் நடுங்கின. கரியமேனியின் ஒளியால் ஆகாயம் இருண்டன. பூதூளியாற் சமுத்திரங்கள் வற்றின. அவர்கள் கால்களைப் பெயர்த்து வைத்து நடத்தலால் அண்டங்களும் பிளந்தன. இவ்வாருக வந்து கூடுகின்ற சேனையை நோக்கித் தேவர்கள் மெய்குலைந்து ஒடுதற்கு இடமின்றி நின்றிரங்கினார்கள். இந்திரன் இறந்தவன்போல மருண்டான். பிரமாவும் விஷ்ணுவும் ''முடிவதென்னையோ?'' என்று நினைத்தார். அவுணசேனைகள் பூமியிலும், ஆகாயத்திலும், திக்குக்களிலும், சமுத்திரங்களிலும், மலைகளிலும், வழிகளிலும், பாதலங்களிலும், மற்றையிடங்களிலும் சிறிதும் வெளியிடமின்றி நெருங்கிச்சென்றன. அச்சேனைகளிற் செல்லுதற்கு இடம் பெருமையினால் பிரமபதம், விஷ்ணு

பதம், முனிவர்களுடைய உலகம், இந்திரலோகம், சூரியன் முதலாயினோர் செல்லுமிடங்கள் முதலாகிய மேலுலகங்களிலும் பாதலங்களிலும் நின்றன. அண்டங்களிலிருந்துவந்த கொடிப்படைகள் சென்றவிடம் நூறு கோடி யோசனையென்று அறிஞர்கள் சொன்னர்கள். அவற்றின்பின் வருகின்ற மற்றைச் சேனைகளின் பெருமையை யார் சொல்வார்! சில்வாழ் நாளையுடைய பிறர்பெற்ற செல்வம்போல விரித்துச்சொல்ல, இது சிறுமையையுடையதோ! சூரபன்மனுடைய சேனைகள் அறிஞர்கள் சொல்லிய பெரிய எண்களிலுமடங்கா. இதற்கு உவமை சொல்லுதற்கும் ஒன்றுமில்லை, முன்செல்லுந் தூசிப்படை பஞ்சபூதங்களும் பல உருவங்களையெடுத்து உயிர்பெற்றுவந்தால் அவற்றையொக்கும். அத்தூசிப்படைகள் மகேந்திர நகரத்தை மூடி இவ்வண்டங்களின் இடங்களினெல்லாம் இமைப்பொழுதில் நிறைந்தன; மற்றை யண்டங்கள்தோறுமிருந்து இவ்வண்டத்தில் வருகின்ற ஏனைப்படைகளின் மிகுதியை யார் சொல்வார்! இவ்வாறு சேனைகள் வருதலும், ஒற்றுவர்கள் போய்ச் சூரபன்மனுடைய காலகளை வணங்கி, ''மகாராஜனே, உன்னுடைய சேனைகள் இங்கே வந்தன. தூசிப்படை முன்சென்று அண்டத்தை நெருக்கின'' என்றார்கள்.

சூரபன்மன் அதனைக்கேட்டு நன்றென்று இருக்கைவிட்டெழுந்து, மாளிகையினுட்போய், ஸ்நானஞ்செய்து, *ஐவகையுணவோடு அறுசுவை பொருந்திய அன்னத்தை உண்டான். அது நஞ்சோ மருந்தோ! நெற்றியிலே விபூதியை அணிந்தான். உடம்பிற் களபச்சாந்தைப் பூசினான். குடுமியில் மாலையைச் சூடினான். முன்னணிந்திருந்த வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் மாற்றி வேறு வேறு நல்லனவாகத் தரித்தான். சிவப்படைக்கலத்தையும் மற்றையோர்களுடைய படைக்கலங்களையும் ஆயிரகோடி தேர்களிலே வைத்து அத்தேர்களையும், சிங்கவாகனத்தையும், இந்திரஞாலத் தேரையும் பரிசனர்களாகிய அவுணர்கள் கொண்டுசெல்லும்படி பணித்தான். அதன்பின் சூரபன்மன் தன் பக்கத்தில் வருகின்ற தேர்ப்பாகர்களுடைய கூட்டத்தைப்பார்த்து, ''உயர்ந்த ஒரு தேரினைக் கொண்டுவருதி'' என்று பணித்தான். அவர்கள் நன்றென்று வணங்கிப்போய், எழுபதினாயிரஞ் சிங்கங்களையும், எழுபதினாயிரங் குதிரைகளையும், எழுபதினாயிரம் பேய்களையும் பூட்டி ஒரு தேரை அலங்கரித்தார்கள். அத்தேர் பூமியினும் பெரிய இடத்தையுடையது; அதனைச்சூழ்ந்த புறவேலையைப் போல ஒலிப்பது; பிருதிவியண்டம் ஆயிரகோடியையும் தன்னிடத்தே சுமந்துகொண்டு நிற்கும் வலியையுடையது; சிங்கக்கொடியையுடையது; பிரசண்டமாருதத்தினும் முந்திச்செல்வது; செல்லும் விசையினால் அட்டதிக்கு மலைகளும் சுழலவும் சூரியர்களும் குளிரவும் வடவாமுகாக்கினிகளும் அழியவும் செய்வது; ஏழ்கடல்களும் அவற்றின் இடையிடையேயுள்ள தீவுகளும் சக்கரவாளகிரியும் பொருந்திநிற்போல, பலமணிகள் இழைத்த ஓவியப்பத்திகள் அமையப்பெற்ற உருளைகளையுடைய ஓரண்டத்தைப்போல்வது; சூரபன்மன் யாகாக்கினியிலிறந்து எழுந்தபொழுது அவனுடன் றோன்றியது; பகைவர்கள் புறங்கொடுக்கும்படி துரத்துவது; பிரம

* ஐவகை உணவாவன :— உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது, சுவைக்கப்படுவது.

கற்பத்தினும் அழியாதிருப்பது; அளவில்லாத படைகளைத் தாங்கியது; தேவர்களுக்குள்ள வலிமை முழுதையுங் கொண்டது; சிவபெருமான் முன்னளிற் கொடுத்த இந்திரஞாலத்தேரையும் ஒத்தது; மிகுந்த அழகிற் சிறந்தது. இத்தன்மையதாகிய தேரைப் பாகர்கள் கொண்டுவந்து சூரபன்மனுக்கு முன்னே விடுத்தார்கள். அவன் அதில் இவர்ந்தான். அவுணர்கள் ''வெற்றியடைகுதி'' என்று வாழ்த்திப் பூமழை பொழிந்தார்கள். பாகர்கள் அத்தேரில் ஏறிச் சூரபன்மனுடைய ஆணையினால் அதனைச் செலுத்தினர். வாத்தியங்கள் முழங்கின. அவுணர்கள் ஆர்த்தார்கள். பணிவிடைக்காரராகிய அவுணர்கள் சூரபன்மனுடைய கீர்த்தியும் ஆணையும் அவனைத்தொடர்ந்து மங்கலத்தன்மையாகிய உருவத்தோடு சூழ்தல் போலப் படிக்கம், கெண்டி, அடைப்பை, வெண்கொற்றக்குடை, சாமரம் முதலிய உபசாரங்களைக் கொண்டொழுகினர்கள். சூரபன்மன் நகரத்தினெல்லையுட் பொருந்திய கோபுரவாயில்களை நீங்கி ஆயிரகோடி வீதிகளையுங் கடந்து தேரோடு முதற்கடைவாயிலில் வந்தான். அவன் அங்கே வருதலைப் பார்த்து அவுணசேனைகள் ஆரவாரித்தன. அச்சேனைகள் பாற்கடலினின்றும் நஞ்சு எழுந்து சென்றுற்றபோல ஒலித்துக்கொண்டு செல்ல, அப்பாரத்தைத் தாங்கலாற்றுமையால் பூமி சலித்தது. நிசாளம், சல்லிகை, பேரி, கொம்பு, தண்ணுமை, முரசம், காகளம், துடி முதலாகிய வாத்தியங்கள் ஒலித்துச் சென்றன. செங்குஞ்சிகளையுடைய அவுணசேனைவெள்ளங்களிலெழுந்த பூதூளி வடவாமுகாக்கினி சமுத்திரத்தை மேற்கொண்டெழுந்தபொழுது அதிலிருந்தெழும் புகையைப் போன்றது. வானுலகத்திலும் பூவுலகத்திலும் திக்குகளிலும் கடல்களிலும் நீக்கமின்றிப் பூழிகள் நெருங்கி, எங்கணும் பின்பனி மூடினது போன்றது. பூதூளிகள் அந்நகரிலுள்ள அகிற்புகையோடும் பொற்சுண்ணத்தோடும் கலந்து மேற்போவது மேகங்கள் சமுத்திரத்தைப் பருகி மின்னலோடு செல்லுதலைப்போன்றது. யானைகளிலும் தேர்களிலும் உள்ள வெண்கொடிகள் பூதூளி நெருங்கிய ஆகாயத்திற் செல்லுதல் கார்காலத்திலே கொக்கின் வரிசைகள் மழைத்துளி வீழ்கின்ற இடங்களிற் பறக்குந்தன்மைபோன்றது. சைனியங்களுடைய நெருக்கத்தால் இருள் உண்டாகச், சூரபன்மன் அதனை அறிந்து அண்டங்கள்தோறும் உள்ள சூரியர்களை அழைக்க அவர்கள் வந்தாற் போலக், குடைநிரைகளெங்கும் நெருங்கின. குதிரைகளும் யானைகளும் உமிழ்கின்ற விலாழிநீரும் மதஜலமும் இப்பூவுலகமெங்கும் ஆறுபோலப் பாய்தலாற் சூரபன்மனுடைய சேனைகள் ஆகாயத்திலன்றிப் பூமியிலே செல்லுதற்கரியவாயின. இவ்வாறு சேனைகள் நெருங்கிச்செல்ல, மைநாகம் மேருமலையிலேறி வந்தாற்போலச் சூரபன்மன் பொன்மயமாகிய தேரில் ஏறிப் போர்க்களத்தையடைந்தான். அவனுடைய தூசிப்படைகள் பூமியிலும் வானிலும் நெருங்கிச் சுப்பிரமணியக் கடவுளுடைய பாசறையைச் சூழ்ந்தன. தேவர்கள் யாவரும் அப் படையின் நெருக்கத்தைப் பார்த்து, இரத்தக் கண்ணீர் வடிய அரற்றி அஞ்சினர்கள். இந்திரன் வருந்தினன். பிரம விஷ்ணுக்கள் மனம் விம்மினர். வீரர்கள் மனம் புழுங்கினர். பூதர்கள் நெருப்பிற்பட்ட விட்டிற் பறவைபோல ஏங்கினர்கள்.

அப்பொழுது பிரமாவும், விஷ்ணுவும், இந்திரனும், மற்றைத் திக்குப்பாலகர்களும் சுப்பிரமணியக்கடவுளுடைய திருவடித்தாமரைகளை வணங்கி, "மிகப் பெரிய சூரபன்மன் தேரின்மேற்கொண்டு ஆயிரத்தெட்டண்டங்களிலுமிருந்து வந்த அளவில்லாத சேனைகளோடும் போர்செய்யும்படி வந்தான். முன்வந்த தூசிப்படை நம்முடைய பாசறையை நெருங்கியது" என்றார்கள். திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருக்கும் சுப்பிரமணியக்கடவுள் அதனைக் கேட்டுத் திருப்புன்முறுவல் செய்து, வாயுவைக் குறிப்பினெடு பார்த்தருளினர். அவன் அதனை அறிந்து, முட்கோலையும் கயிற்றையுந் தாங்கி, மனவேகமென்னுந் தேரை விரைவில் அவருடைய திருமுன்னே கொண்டுவந்துவிடுத்தான். முருகக்கடவுள் விரைவில் எழுந்து, மழு, குலிசம், சூலம், வேல், வாள், பரிசை, சக்கரம், தண்டு, எழு, வில், அம்பு, கைவேல் ஆகிய இவற்றைத் திருக்கரங்களில் ஏந்தினர்; ஆயின் அச்சூரபன்மனுடையதவம் அளவிடற்பாலதோ! இவ்வாறு போர்க்கோலங்கொண்ட அறுமுகக்கடவுள் சூரியமண்டலத்தினடுவே வீற்றிருக்குஞ் சிவபெருமானைப்போல மனவேகமென்னுந்தேரில் இவர்ந்தருளினர். வீரவாகுதேவரும் இலக்கத்தெண்மரும் திருமருங்கிலே தோத்திரஞ் செய்துகொண்டு வந்தார்கள். இரண்டாயிரம்வெள்ளம் பூதர்களும் மராமரங்களையும் மலைகளையும் அளவில்லாத படைகளையுந்தாங்கி நெருங்கிச் சூழ்ந்து சென்றார்கள். அரிபிரமேத்திராதிதேவர்கள் புடையிற் சூழ்ந்து பூமழைகளைப் பொழிந்து துதித்தார்கள். வேதங்களுக்குமெட்டாத நிருமலராகிய அறுமுகக்கடவுள் இவ்வாருகத் தேரின்மேலிவர்ந்து, சங்காரகருத்தாவாகிய உருத்திரமூர்த்தியைப்போல அவுணர்கண்மீது போருக்குப் போயினர். அவரைச் சூழ்ந்த பூதர்கள் யாவரும், பூமியிலும் திசையிலும் வானிலும் வெற்றிடமின்றிச் சூழ்கின்ற சூரபன்மனுடைய சேனைகளை நோக்கி ஏங்கி, பழைய வலிமை இழந்து, இவ்வாறு சொல்வார்கள். "தியனவற்றையே செய்கின்ற சூரபன்மன் தான்செய்த தவத்தாற் பெற்ற ஆயிரத்தெட்டண்டங்களிலுமுள்ள அவுணர்களும் வந்தார்கள். இவர்கள் ஒரண்டத்திலிருந்துவர்களல்லர். பூமியும் வானுலகமும் திசையும் செறிந்து நின்றார்கள். இவர் வரத்திற் பெரியர்; மாயத்திற்பெரியர்; வலிமையிற்பெரியர்; போருக்கத்திற்பெரியர்; சிரங்களிற்பெரியர்; கரங்களிற்பெரியர்; கோபத்திற்பெரியர்; காலனிலும்பெரியர்; தேவர்களுடைய வலிமையினையும் வளங்களையுங்கவர்ந்து சோகத்தை விளைத்துப் போரைச்செய்து அவர்களைத் தொலைத்தவர்; மயக்கத்தினெல்லையாய் நின்றோர்; உயிர்களாகிய சுடல்களைப் பருகுகின்ற மேகம்போன்றவர்கள்; பிரமா எதிர்த்தாலும் வெல்லத்தக்கவர்; யமனுடைய கொலைத்தொழிலையும் பிரமாவினுடைய படைப்புத்தொழிலையும் மாற்றுஞ் செய்கையில் வல்லோர்; நிலவுலகமுழுவதையுமுண்டாலும் அடங்காத பசிநோய் மிகுந்தவர்; அண்டங்களை யலைக்குங் கைகளையுடையவர்; அக்கினியைச்சொரியுங் கண்களையுடையவர்; கடலையொத்த பிளந்த வாய்களையுடையவர்; வெற்றியை மேற்கொண்டோர்; பாவத்துக்கிருப்பிடமாயுள்ளோர்; சூரியசந்திரர்களைத் தொடுஞ் சிரங்களையுடையோர்; ஆதிசேஷனும் தாங்கலாற்றாது புடைபெயரக் கால்களைப் பெயர்த்து வைத்து நடப்போர். அக்கினிமுகனைப்போல அடைந்தனர் பலர்; யாளிமுகனைப்போல வந்தனர் பலர்; தாரகனைப்போல வந்தனர் பலர்; சிங்கமுகனைப்போல வந்தனர் பலர்; மதுகைடபரைப்போல

வந்தனர் பலர்; சுந்தோபசுந்தரரைப்போலச் செறிந்தனர் பலர்; சலந்தரனைப்போல ஆர்த்தனர் பலர்; மகிடாசுரனைப்போல மொய்த்தனர் பலர். சிவப்படைக்கலத்தைத் தாங்கினவர் பலர்; பிரமப்படைக்கலத்தைத் தாங்கினவர் பலர்; விஷ்ணுப்படைக்கலத்தைத் தாங்கினவர் பலர்; யமப்படைக்கலத்தைத் தாங்கினவர் பலர்; வாயுப்படைக்கலத்தைத் தாங்கினவர் பலர். இவ்வாறுகிய அவுணவெள்ளம் அனந்தகோடி என்று சொல்வதன்றி வேறு சொல்வதற்கு அளவுமுண்டோ! வானுலகமும் பூவுலகமும் திக்குகளுமாகிய எங்கும் சேனைகளாய்ச் சூழில் யாம் என்னசெய்வது! ஓரண்டத்திலுள்ள அவுணர்களுடைய போரினாலே உலைந்த யாங்கள் எல்லாவண்டங்களிலுமுள்ள அவுணர்கள் ஒருங்கே வந்து போர்செய்தாற் பிழைக்குந்தன்மையுமுண்டோ! சமுத்திரத்தைச் சாடி மலைகளைப் பிடுங்கியெறியும் வாயுக்கள் ஆமணக்கஞ்சோலையினுட் புகுந்தால், அது பின்னுமிருக்கவல்லதோ! இவ்வவுணருள் ஒருவரே நம்மையெல்லாம் உரப்பித் துரத்துவர். பின் இருவரே சென்று தாக்கினால் யாவர் இங்கே உய்யவல்லவர்! துருவர்களையொத்த வலியையுடைய அவுணர்கள் யாவரும் போர்செய்வாராயின் யார் அவர்க்கெதிரேபோய்ப் போர்தொடங்கவல்லார்! அளவில்லாத வலியைக்கொண்ட எங்கள் தலைவர்கள் யாவரும் மற்றையிலக்கத்தெண்மரும் இவ்வவுணரை எதிர்க்கவல்லவரல்லர். கல்லையும் மரத்தையும் கொண்டு யாமோ இவருடைய வலியைக் கடக்கவல்லோம்! நம்முயிரும் இன்றே விரைவிலழிந்தனபோலும். நால்வகைச்சேனைகளையுடைய அவுணர்களுந் தாக்கினால் நாமெல்லாம் அழிவோம். மற்றைவீரர்கள் வாயுவையெதிர்ப்பட்ட பஞ்சுபோல விரைந்து புறங்கொடுத்தோடுவர். வீரவாகுதேவர் நின்றுற் பழிபடுவர். இவர்களோடும் நமது அறுமுகக்கடவுளன்றி வேறியாவர் எதிர்க்கவல்லவர்! திசையும் வானும் நிலனும் வெளியிடமின்றி அவுணர்கள் வளைந்து கொண்டார்கள். அதனால் யாமும் ஓடியும் உய்யவியலாது. இயன்றவாறு இவ்வவுணர்களைத் தாக்கி யாமிறத்தலே உறுதி'' என்று பூதர்கள் சொல்லி, அசுரர்கண்மீது போருக்குப் போயினார்கள். அப்பொழுது பூதப்படைத் தலைவர்களும், இலக்கத்தெண்மரும், வீரவாகுதேவரும் நெருங்கிச் சூழுகின்ற அவுணசேனைகளை நோக்கி, ''நம்முடைய வலிமை அழிந்தனவோ'' என்று எண்ணினார்கள். இந்திரனும் தேவர்களும் நடுங்கி அஞ்சி வருந்தினர்.

அவர்களுள் இந்திரன் விஷ்ணுவைநோக்கி, ''அறுமுகக்கடவுண்மேல் ஆயிரத்தெட்டங்களினுமுள்ள அசுரசேனைகளெல்லாம் போர்செய்யும்படி வந்தன. இவைகளோடு மூண்டு போர்செய்து வெல்ல ஊழிகாலஞ் செல்லும் என்றால், சூரபன்மன் இறப்பது எங்ஙனம்? போர்வலிமையைப் பெற்றுள்ள அவுணர்களாகிய இராக்காலம் விடிவதும், தேவர்களுடைய சிறை நீக்கமாகிய சூரியோதயமுண்டாவதும், பழைய செல்வங்களை நீங்கிய நம்முடைய துன்பம் முடிவதும் இல்லையோ! முதல்வரே சொல்லியருளும்'' என்றான். இந்திரன் இப்படி வினவ, விட்டுணு அவனுடைய மனக்கவலையைப் பார்த்து இவ்வாறு சொல்லுகின்றார்: ''இந்திரனே, கேள். வியாபக வியாப்பியத் தன்மையினாலே காலங்களாயும் அவையின்றியும், தொழில்களாயும் அவையின்றியும், குணங்களாயும் அவையின்றியும், உலகங்களாயும் அவையின்றியும், அநாதியாய், நமக்கெல்லாம் மூலகாரண

ராயிருந்த சிவபெருமானே ஆறுதிருமுகங்களைக்கொண்டு வந்தார். குன்று தோறுடல் செய்யும் குமாரக்கடவுள் அந்நாளில் மேருமலையில் வந்து புவனங்கள் முழுதையும் அங்குள்ள சீவராசிகள் முழுதையும் தேவர்களையும் தம்மிடத்தே காட்டி ஒரு வடிவங்கொண்டதை அறிந்த நீயும் அயர்த்தனையோ? அக்குமாரக்கடவுள் பிரமாவாகிப் படைப்பார்; என்னுருவமாகிக் காப்பார்; சிவபெருமானேபோலச் சங்கரிப்பரீர். அவருடைய திருவுருவம் யார்க்கும் வெளிப்படையாமா! அது வேதங்களாலுஞ் சொல்லுதற்கரியது. சமுத்திரம்போலச் சூழ்ந்த பகைவர்களுடைய சேனைகள் முழுதையும் மிக விரைந்தழிப்பார். இந்திரனே, அவரைப் பாலகனென்றெண்ணுதே. அவர் ஆயிரகோடியண்டங்களிலுள்ள உயிர்கட்கெல்லாம் தலைவர். நாம்செய்த நல்வினைப்பயனுற் போர்செய்ய வந்தார். அவர் சூரன் முதலிய அவுணர்களை விரைந்து சங்கரிக்கத் திருவுளஞ்செய்யில், திருப்புன்முறுவலாற் கொல்வர்; கோபத்தாற் கொல்வர்; திருவாக்காற் கொல்வர்; திருநோக்காற் கொல்வர். ஆயின், ஒப்பில்லாத தனிமுதல்வராகிய அவருடைய வன்மையை யாவர் சொல்லவல்லவர்! பூதசேனைகளோடு போருக்கெழுந்தருளிவந்ததும், இலக்கத்தொன்பது வீரர்கள் மருங்கிற் காக்க நின்றதும், ஆயுதங்களை ஏந்திச் சூரபன்மனைக் கொல்லும்படி வந்த சூழ்ச்சியும் ஆகிய இவைகளெல்லாம் ஆராயில், வேதமுதல்வராகிய அச்சுப்பிரமணியக்கடவுளுக்கு ஒரு திருவிளையாடலேயாம். பரிசுத்தராகிய பாலகரைப்போலத் தோன்றிய கடவுளானவர் இங்கு வந்து சூழ்ந்த வெவ்விய அவுணர்களையெல்லாம் விரைந்தறுத்து நீக்கி, திருக்கரத்திலுள்ள வேற்படையினுற் சூரபன்மனையும் வெல்வார். நீ சிறிதும் ஐயுறுதேகாண்'' என்று இவைகள் பலவற்றையும் விட்டுணுகூறி இந்திரனுடைய மனத்தைத் தெளிவித்து, ''அவுணவெள்ளங்கள் ஒலியோடு விண்ணுலகத்திலும் வந்து சூழ்ந்தன. நாம் சுப்பிரமணியக்கடவுளுடைய திருமருங்கில் நின்று போரின்றன்மையைப் பார்ப்போம்'' என்று தேவர்களோடு அவருக்குப் பக்கத்திற் போயினர்.

அத்தன்மைகளைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்துத் திருப்புன்முறுவல் செய்து, போரை நினைத்துச் சென்றார். வானுலகமும் பூமியும் ஒன்றாய் நெருங்கிய அசுரசேனைவெள்ளங்கள் ஆரவாரித்துப் போரைத் தொடங்க, அவர்களோடு போர்செய்யும்படி முன்சென்ற பூதர்கள் யாவரும் தோற்றார்கள். பூதப்படைத்தலைவர்கள் போரைத்தொடங்கிப் புறந்தந்தார்கள். இலக்கத்தெண்மரும் போர்செய்து இரிந்து நீங்கினர்கள். இத்தன்மைகளையெல்லாம் வீரவாகுதேவர் பார்த்துச் சென்று வில்லை வளைத்து, பாணமழைகளைச் சிதறி, தம்மையெதிர்த்த அவுணர்களுடைய தலை புயம் மார்பு முதலிய அவயவங்கள் மலைகள்போலக் குவிய அறுத்துச் சிறிதுநேரம் போர்செய்தார். ஆகாயமளவும் உயருகின்ற ஆயிரகோடி சமுத்திரங்களுள் ஒரு மதயானை சென்று அலைத்தாற்போலத் தாம் அவுணர்களுக் கெதிரேபோய்ப் போர்செய்து, அச்சேனைகள் அழியாமையைக்கண்டு வருந்தி, சுப்பிரமணியக்கடவுளுக்குப் பக்கத்தில் மீண்டு வந்தார். அப்பொழுது அவுணர்கள் பலரும் ''பூதகணங்கள் நமக்குப் பயந்தோடின. பூதப்படைத்தலைவரும் சாய்ந்தார். மற்றைவீரர்களும் முரிந்

தார். இனிச் சிறுபாலகனே நம்மோடு போருக்கு வருவான்'' என்று சொல்லிச் சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்து, தண்டு சக்கரம் குலிசம் சூலம் வேல் முதலாகிய ஆயுதங்களையும், தெய்வப்படைக்கலங்களையும் சொரிந்து நின்றுஆர்த்தார்கள்.

பூதசேனைகள் யாவும் உடைந்ததையும், வீரவாகுதேவரும் தம்பியர்களும் வருந்தி மீண்டதையும், அவுணர்களுடைய செய்கையையும், தேவதேவராகிய சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, சிவபெருமானைப் போலச் சிறிது நகைத்து, மிகுந்த நீட்சியையுடைய வில்லைத் திருக்கரத்திற்பற்றி நாணெலிசெய்தார். அதனைக்கேட்டுத் தேவர்களும் குலைந்தார்கள்; சீவராசிகளெல்லாம் நடுங்கின; அவுணர்கூட்டங்கள் நெக்கன; தேர்கள் பகிர்ந்தன; குதிரைகள் புரண்டன; யானைகள் மலைகள் வீழ்வன போல வீழ்ந்தன. அகத்தியமகாமுனிவருக்குப் பிரணவப்பொருளை உபதேசித்த பரமாசாரியராகிய அவ்வறுமுகக்கடவுள் அளவில்லாத பாணங்களை வில்லிற்பூட்டி மழைபோலச் சொரிந்தார். அப்பாணங்களுள் கொடிகளைத் துணிப்பன அளவில்லாதன; குடைகளைத் துணிப்பன அளவில்லாதன; படைக்கலங்களை யழிப்பன அளவில்லாதன; குதிரைகளை யழிப்பன அளவில்லாதன; யானைகளை யழிப்பன அளவில்லாதன; தேர்களை யழிப்பன அளவில்லாதன; அவுணர்களுடைய சிரங்களை வெட்டுவன அளவில்லாதன. அப்பாணங்களால் விருக்ஷத்தொகுதிகள் விழுவனபோல அவுணசேனைகள் விழுந்தன; திரைகள் விழுவனபோலக் குதிரைகள் விழுந்தன; மலைகள் விழுவனபோலத் தேர்கள் விழுந்தன; சூற்கொண்ட மேகங்கள் விழுவனபோல யானைகள் விழுந்தன; சூரியசந்திரர்கள் விழுவனபோலக் குடைகள் விழுந்தன. அப்பாணங்கள் அவுணர்களுடைய கால்களையும், படைக்கலங்களைச்சிந்தும் கைகளையும், வீரம்பேசும் வாய்களையும், புயங்களையும், கண்களையும், கழுத்துக்களையும், கவசங்களையும், கொடிச்சீலைகளையும், அறுத்தன. அச்சரங்கள் அட்டகுல மலைகளிலும் திசையானைகளிலும் சக்கரவாளகிரியிலும் பட்டு ஊடுருவிப் போயின. அப்பாணங்களுக்குப் பகைவர்கள் உய்வது எவ்வாறு! அக்கணைகள் சுவர்க்கத்திலும் சத்தியவுலகத்திலும் வைகுண்டத்திலும் மின்போலச் சென்றன; பூமியைக்கிழித்துச் சென்றன; பாதலத்திற் பரந்துசென்றன; அண்டமுகட்டை ஊடுருவிச்சென்றன; திக்குகளிற் சென்றன. அக்கணைகள் எங்குஞ் சென்று பகைவர்களைமாத்திரங் கொன்றன; வேறெவரிடத்துஞ் சென்றில. அப்பாணங்கள் வெட்டிய அவுணர்களுடைய சிரங்கள் இராகுகேதுக்களைப்போல ஆகாயத்திற் சென்றன; வாள் முதலிய படைகளை வீசிய அவுணர்களுடைய தோள்களை அக்கணைகள் துணித்தெறிய, அத்தோள்களோடு அப்படைகள் நெடுந்தூரஞ்சென்று, சுற்றத்தார்களாகிய அவுணர்களைக் கொன்றன. ஆகாயத்திலும் திக்குகளிலும் பூமியிலும் அப்போர்க்களத்திலும் பாசறையிலும் சூழ்ந்த சேனைகளையெல்லாம் சுப்பிரமணியக்கடவுள் இவ்வாறு சங்கரிக்கும்பொழுது, பிரமாவும் விஷ்ணுவும் இந்திரனும் மனமகிழ்ந்து, ''அசுரர்கள் அழிந்தார்கள்; நாம் துன்பத்தை நீங்கினேம்'' என்று சொன்னார்கள். ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற ஏனையோர்கள், முன் அவுணர்கள் வந்து நெருங்கியதைப் பார்த்தவர்கள், பின் அறுமுகக்கடவுள் அவர்களைக் கொன்றதைக் காணுராய், அவர்கள்

பூமியில் வீழ்ந்திறந்துகிடந்ததை மாத்திரங் கண்டு ஆச்சரியமடைந்தார் கள். அவ்வசுரர்களைக்கண்டு வருந்திய பூதப்படைத்தலைவர்களும் பிறரும் மிகுந்த அவுணப்படைகளைக் கொன்று வெற்றிபெற்ற வில்வீரராகிய சுப் பிரமணியக்கடவுளை ஆரவாரத்தோடு துதித்தார்கள். அண்டமுகட்டிலே நெருங்கிய அசுரசேனைகள் சுப்பிரமணியக்கடவுளுடைய பாணங்கள் பட் டழிதலால் தேவர்களுடைய மனம் மகிழும்படி அவ்விடங்கள் வெளியா யின. அண்டகடாகத்துக்கு அப்பால் நிற்கும் அவுணர்கள் இவ்வண்டத் தில் நிற்கும் அவுணசேனைகள் அழிந்தமையைப் பார்த்து மனமகிழ்ந்து, ''நம்மரசனுடைய பாதங்களைத் தரிசித்தற்கு இனி நெறியுண்டு'' என்று கூறிக் கசரததுரகங்களோடு அண்டகடாகத்தின் வாயிலால் விரைந்து வந்து, இவ்வண்டமுழுதும் வெளியிடமில்லை யென்னும்படி நெருங்கி, சூரபன்மன் போர்செய்யும்படி தேரில்வந்த செய்கையைத் தெரிந்து, அன் போடு ஆர்த்து, தமக்கு முன்னே வந்து போர்செய்த அவுணர்கள் பிண மலையாய் இரத்தவெள்ளத்தில் இழுக்கப்படுதலைக் கண்டு மனம்வருந்தி, ''நம்மவர்களாகிய அவுணர்களை இறக்கும்படிசெய்த இவனோடு போர் செய்து விரைந்து வெற்றிகொண்டு மீள்வோம்'' என்று எண்ணி, மனத் தைத் தேற்றினர்கள்.

அப்பொழுது தேவர்கள் துதிக்கவும், வீரவாகுமுதலிய வீரர்கள் பக்கத்திற் சூழவும், பூதர்கள் ஆரவாரிக்கவும் சுப்பிரமணியக்கடவுள் வெளிப்பட்டருளினர். அவ்வசுரர்கள் அவரைக்கண்டு, ''இவன் மிகச் சிறியன்; யானைப்படைகளும் குதிரைப்படைகளுமில்லாதவன். ஏயே! இவனை நம்முடைய பகைவன்! இந்தப் பாலகன் இவ்வண்டமுழுதும் நெருங்கிய நம்முடைய சேனைகளை இமைப்பொழுதிற் கொன்றான்; இதுதான் மிகுந்த அற்புதத்தன்மை. அது நிற்க, இவனோடு இராசாதிராசனுகிய நமது சூர பன்மன் வந்து போர்செய்தற்குமுன் யாம் பொருது இவனைக் கொல் வோம்'' என்று அகங்கரத்தோடு கூறி ஆர்த்துச் சண்முகக்கடவுளைச் சூழ்ந்தார்கள். அப்பொழுது, ''பெரும்போர் மீட்டும் விளைந்தது'' என்று தேவர்கள் வருந்தினர். பூதர்கள் உட்கி மனந்தளர்ந்தார்கள். வீரர்கள் சலித்தார்கள். முருகக்கடவுள் வாயுவைப்பார்த்து, ''அவுணசேனைகள் நிற்கின்ற அணியின் முன் பின் பக்கங்கள் ஆகிய எவ்விடங்களிலும் தேரை விரைந்து செலுத்துதி'' என்றார். வாயு அதனைக்கேட்டு அஞ்சலி செய்து, அவுணர்கள் நிற்கும் இடங்களெங்கும் தேரைச் செலுத்தினன். அத்தேர் பூமியிற் செல்லும்; திசைகளைக் கடக்கும்; ஆகாயத்திற் சூழும்; சமுத்திரத்திற் போகும்; வணங்குகின்ற தேவர்களுடைய எண் ணத்திற்கும் நாடுதற்கரியதாகும். சுப்பிரமணியக்கடவுள் நெருங்கிய அவு ணசேனைகள் இறக்கும்படி ஒரு தொடையில் அனந்தம் ஆயிரகோடி பாணங் களைச் செலுத்தினர். சூழ்ந்துநின்ற அவுணர்களுடைய கரங்களும் சிரங் களும் துணிந்தன. இரத்தவெள்ளம் சொரிந்தன. பிணமலை நெருங்கின. அப்பாரத்தைத் தாங்கலாற்றாது பூமி நெரிந்தது; ஆதிசேடனும் நெளிந் தான். அவுணர்களுடைய பிணங்களை அவர்கள் வளர்த்த நாய்களே கடித்துண்டன. பொய்யும் கொலையும் உடைய இழிஞர்களுக்கு யார் உதவிசெய்வர்! சுப்பிரமணியக்கடவுள் ஏறிய தேர் அவுணர்கள்மீது அவர் செலுத்திய பாணங்கள் பிந்த அவற்றிற்கு முற்பட்டுச் செல்லுமானல்,

அத்தேரின் வேகத்தை யாவர் அளவிடுவார்! அவருக்குப் பக்கத்திலுள்ள வர்கள் அவருடைய விற்பிடித்த திருக்கரத்தையும், தூண்டுகின்ற சரங் களையும், அவர் ஏறிய தேரையும், அதனைச் செலுத்தும் பாகனுகிய வாயு வையும் புகழ்வார். அவருடைய பாணத்தின் வேகத்தையும் தேரின் வேகத் தையும் பார்த்தவர்கள் ''சுப்பிரமணியக்கடவுளுடைய திருக்கரத்தின் விசையோ, வாயுவின்விசையோ சிறந்தது?'' என்பார். அவர் சூலமோ, மழுவோ, சக்கரமோ, குலிசமோ, வாயுவோடு கூடிச்சென்ற நெருப்பின் குழுவோ, வேற்படையோ என்று சொல்லும்படி பாணங்களைத் தூண்டி னர். அப்பாணங்களால் அவருக்கு முன்னும் பின்னும் இருமருங்குகளினு மூள்ள நால்வகைச்சேனைகளும், அவுணர்கள் செலுத்துகின்ற படைகளும் அழிந்தன. பிணக்குவைகள் மண்ணுலகமுழுதும் பரந்து விண்ணுலகத்தை யும் விழுங்கின. அவருடைய சரங்களால் கழுத்து வெட்டுண்டு கூத்தா டின உடற்குறைகள் ஆயிரகோடியாகும்; ஆகவே இறந்தசேனைகளைச் சொல்லவல்லவர் யாவர்! இரத்தவெள்ளம் கடல்போலப் பூமியிற் பெரு கிச் சத்தபாதலங்களிலும் மண்டியது.

இவ்வண்டமுழுதும் நெருங்கி சேனைகள் இவ்வாறு அழிதலும், மற்றை யண்டங்களிற் பொருந்திய சேனைகள் பின்னரும் வர, குமாரக்கடவுள் அவற் றைப் பார்த்து, பாணங்களினுற் றெரலித்து, பின்னும் மற்றை யண்டங்களி லுள்ள சேனைகள் வந்து வந்தடையுமென்றெண்ணி, சரமழைகளால் அண்ட கோளகையின் வாயிலையடைத்தார். அதன்பின், தம்மூடைய பாணங்களி னுல் இறந்த சேனைகளின் இரத்தவெள்ளமும் பிணக்குவைகளும் பாதலத் தையும் சமுத்திரங்களையும் பூமியையும் மூடி நிமிர்ந்ததைகண்டு, பன்னி ரண்டு திருக்கண்களையும் வடவாமுகாக்கினிபோலச் சுவாலிப்பித்து, உற்று நோக்கினர். பிணமலைகள் வெந்து சாம்பராக, இரத்தம் வறந்தது. சுவர்க்க மத்திய பாதலமாகிய மூவுலகங்களும் முன்போலாயின. அரிபிரமேந்திராதி தேவர்கள் அதனைக்கண்டு, குமாரக்கடவுளைத் துதித்து ஆரவாரித்தார்கள். அக்கடவுள் பிணக்குவைகளும் மிகுந்த இரத்தவெள்ளமும் வேகும்படி பார்த்து அவற்றை நீருக்கிச் சூரபன்மனைச் சங்காரஞ் செய்யாது நின்றார். அவர் ஒரு திருவிளையாடலைத் திருவுளங் கொண்டார் போலும்.

இவ்வாருகிய சமயத்தில், போர்க்களத்தில் நின்ற சூரபன்மன் இத் தன்மைகளையெல்லாம் பார்த்து, ''நம்முடைய மிகுந்த சேனைகளை அழித்த பாலகனைத் தேவர்களோடு அழிப்பேன்'' என்று கூறி, மனத்திற் கோபம் மூள, போர்செய்ய நினைத்து, தேரோடு வந்து எதிர்க்க,சுப்பிரமணியக்கடவு ளும் அவனுக்கெதிரிற் போயினர். தன் கிளையுடன் கெடுவானுகி சூரபன்மன் அவருடைய தோற்றத்தையும், பன்னிரண்டு திருக்கரங்களையும், அவைகளி லுள்ள ஆயுதங்களையும், வலிமையையும், வீரத்தையும், நோக்கி, தக்கனைப் போல இவ்வாறு சொல்வான்: ''பாலகனே, சிவபெருமான் அருள்செய்த வரத்தினுல் யான் இறக்கமாட்டேன்; என்றும் இத்தன்மையாய் இருப்பேன். தேவர்களும் மறந்தும் என்னோடு போர்செய்திலர்; பொருது இறந்தவர் பலர். நீ இதனை உணர்ந்திலைபோலும்! மனம் நொந்து நொந்து என் பணி களைச் செய்து உலைந்து வருந்துகின்ற தேவர்களுடைய சொல்லை மெய்யெ ன்று நம்பி மிகுந்த சேற்று நிலத்திற் புகுந்த யானைக்கன்றுபோல நொய்ய பிள்ளைமைப் புத்தியினுல் இங்கே வந்தாய். என்னுடைய மிகுந்த சேனைகளை

அழித்தாய். நீ புறங்கொடுக்கினும் பாலகன் என்று உன்னை யான் விடுவ தில்லை; விரைவிற் கொல்வேன். தேவர்களையும் பூதர்களையும் கெடுப்பேன்'' என்று கூறினன். அவற்றைக்கேட்ட சுப்பிரமணியக்கடவுள் ''பிறர்க்குத் துன்பம் பயக்கும் கடுமொழிகளைப் பேசுதலில் நிகரில்லாத கீழோனே, நீ வறிதே வம்புரைகளைச் சொன்னாய். இதனாலாவ தொன்றுமில்லை. உன்மார்பு சிவந்த துவாரமாகும்படி யாம் விடுகின்ற வலிமையுங் கூர்மையுமுடைய ஒரம்பே உனக்கு மறுமொழி சொல்லும்'' என்று திருவாய்மலர்ந்தளினர். இதனைக்கேட்ட சூரபன்மன் விரைந்து கோபித்து, மேருமலைபோலும் வில்லை யெடுத்து வளைத்து நாணேற்றினன். அதனைப் பூதர்கள் கண்டு, ஆலாகல விஷத்தைத் தேவர்கள் சூழ்ந்ததுபோல அவனைச் சூழ்ந்து, மதயானையை வலைய வீசி அகப்படுத்த நினைத்தவர்போல, மலைகளையும் மரங்களையும், முத்தலைச்சூலங்களையும், ஒழிந்த படைகளையும் வீசினர்கள். சூரபன்மன் பாணங்களை மழைபோலச் சிதறி, மெழுகுமலையை ஊழித்தீ உடைப்பது போலப், பூதகணங்களை அழித்தான். அப்பூதர்கள் இறந்தவர்களும், புயங்களும் கரங்களும் வெட்டுண்டு வாடினவர்களும், மயங்கி விழுந்த வர்களும், ஓடவும் பயந்து வேற்றுருவடைந்தவர்களுமாயினர். இவ்வாறு பூதர்கள் அழிந்த பொழுது, இலக்கத்தெண்மரும் வீரவாகுதேவரும் அவனைச் சூழ்ந்து விற்களைவளைத்துச் சரமாரிகளைப் பொழிந்தார்கள். சூரபன்மன் பாணங்களை விடுத்து அவற்றை அழிக்காமல் நின்றனன். அவர்கள் விடுத்த பாணங்கள் அவனுடைய சரீரத்திற்பட்டு அழிந்துபோயின; அவனை ஒன்றுஞ் செய்தில. சூரபன்மன் அவர்கள் தன்னைச் சூழ்ந்ததைப் பார்த்து, உரப்பி, ஆவலங்கொட்டி, கோபமுடையனாய், வில்லைவளைத்து, நூறுகோடி பாணங்களை ஒரு தொடையாகச் செலுத்தி, அவர்கள் மாறுமாறாய்ச் செலுத்திய சரங்களைத் துணித்து, அவர்களேறிய தேர்களையும் விற்களையும் அழித்து, அவர்கள் பின்பு போர்செய்ய எண்ணுமுன் புயங்களிலும், மார்புகளிலும், சிரங்களிலும், கைகளிலும் ஆயிரமாயிரம் பாணங்களை இரத்தம் பெருகும்படி அழுத்தினன். இலக்கத்தெண்மரும் மேனியில் இரத்தம்வடிய மனம் வருந்தி, வலிமையிழந்து, வில்வலிமை நீங்கி, ஒருங்கே புறங்கொடுத் தோடினர்கள். வீரவாகுதேவர் அதனைக்கண்டு, கோபத்தோடு சூரபன்மனுடைய தேரிற்பாய்ந்து, சிவபெருமான் கொடுத்த வாட்படையை உறையினின்றுங் கழித்து, அவனுடைய வில்லைத் துணித்தார். சூரபன்மன் அக்கினி போலக் கோபித்து, அவருடைய மார்பில் இடியேறுபோல ஒரு கரத்தால அடித்தான். அவர் இரத்தவெள்ளம் அலைக்க வீழ்ந்தயர்ந்தார். சூரபன்மன் ''தூதுவனைக் கொல்லுதல் எனக்கடாது'' என்று அவரை எடுத்து ஆகாயத் திலெறிந்தான். எறியப்பட்டு ஆகாயத்திற்சென்ற வீரவாகுதேவர் உணர்வுவரப்பெற்று மீண்டு வந்து, அறுமுகக்கடவுளுடைய பக்கத்திற் போயினர்.

சூரபன்மன் வெட்டுண்ட வில்லை எறிந்து, கிரவுஞ்சமலைபோலப் பெரிதாய்ச் சிறந்த வேறொரு வில்லைஎடுத்து வளைத்து, நீரும் நெருப்பும் வாயுவும் ஒருங்குசேர்ந்து ஒலிப்பதுபோல நாணெலிசெய்தான். அதனைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, கைலாசமலையை யொத்த ஒரு வில்லையெடுத்துத் திருத்தோளுற வளைத்து, சீவராசிகளெல்லாம் இடியேற்றின் கூட்டமாய் ஆர்த்தாற்போல நாணெலிசெய்தார். சூரபன்மன் வளைத்த வில்லில் இருபது

லக்ஷம் பாணங்களைச் செலுத்தினன். அவைகள் ஆகாயம், திக்குகள், நக்ஷத்திரங்கள், சூரியசந்திரர்கள், சமுத்திரங்கள், பூமி, தேவருலகங்கள் முதலாயினவற்றை மறைத்தன. அவைகள் காற்றைப்போலச் செல்வன; அக்கினியைப்போலச் செல்வன; யமனைப்போலக் கொல்வன; நஞ்சினும் கொடியன; பருந்துச்சிறகுகள் கட்டப்பட்டன; பல தலைகளையுடையன; சூரபன்மனுடைய ஆணையின்படி செல்வன; செருக்கையுடையன; மேருவைத்துளைப்பன; அதன் பக்கத்திலுள்ள மலைகளைக் கிழிப்பன; அண்டங்களைத் துவாரஞ்செய்வன; இடிகள் போல்வன; நஞ்சையுண்டுமிழ்வன; கரியன; செய்யன. இவ்வாறுகிய பாணங்கள் எங்குஞ் செறிய அதனைத் தேவர்கள் கண்டு, விட்டுணுவை அணுகி, கையையுதறி, "ஐய, நமக்கொளிப்பதோரிடமுண்டோ?" என்று கேட்டார்கள். அவர்களுக்கு அவர் உத்தரங் கூறுதற்குமுன், அறுமுகக் கடவுள் அதனைப் பார்த்து, சூரபன்மன் தூண்டிய சரங்களெல்லாவற்றையும் சில சரங்களால் அறுத்தார். அதனைத் தேவர்கள் கண்டு, சூரியோதயத்தைக் கண்ட உலகம்போல மகிழ்ச்சியிற்றழைத்தார்கள். அப்பொழுது சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுளுக்கெதிரே அளவில்லாத சரங்களைச் சிந்தினன். அவர் அப்பாணங்களைத் தமது சரங்களாலறுத்தார். பின்னும் சூரபன்மன் அவர்மேற் பாணங்களைச் சொரிய கந்தசுவாமி அவற்றை நூறுபாணங்களால் அழித்து, எழுநூறு பாணங்களைச் சூரபன்மன்மீது செலுத்தினர். அவற்றை அவன் அத்துணைப்பாணங்களால் அறுத்து, இரண்டாயிரங் கணைகளை விடுக்க, அத்துணைப்பாணங்களாற் சுப்பிரமணியக்கடவுள் அவற்றை அழித்து, சூரபன்மனுடைய சேனைகள் வருந்தும்படி பின்னும் இரண்டாயிரங்கணைகளை விடுத்தார். சூரபன்மன் அவற்றை இரண்டாயிரங்கணைகளினால் நீக்கி, ஆதிசேடனும் பூமியும் வருந்தும்படி ஆரவாரித்தான். சூரபன்மன் விடும் பாணங்கள் வரவர, அவற்றையெல்லாம் நெருப்பானது தன்னிடத்திட்ட விறகுகளையெல்லாம் எரிக்குந் தன்மைபோலச் சுப்பிரமணியக்கடவுள் அழித்தார். அவர் விடுகின்ற பாணங்களைச் சூரபன்மன் அழித்தான். இவ்வாறு இருவரும் போர்செய்யும்பொழுது, வெட்டுண்ட பாணங்கள் வானுலகமளவு முயர்ந்தன. அப்பாணங்கள் தறிபடும்பொழுது எழும் நெருப்புப் பூமியிற் பற்றியது. மலைகள் யாவும் பிளந்தன. சமுத்திரங்களும் கங்கையும் வற்றின. சுப்பிரமணியக்கடவுளும் சூரபன்மனும் இவ்வாறுகப் போர்செய்தலை வீரலக்ஷ்மி பார்த்து, மனம் வியந்து, "இவ்விருவருள் நாம் யாரிடத்திற் செல்வோம்" என்று ஐயத்தோடு நின்றுள். போரைப்பார்த்து நின்றவர்கள் அவர்கள் செலுத்தும் பாணமழைகளையன்றி அவர்களிருவரையும் கண்களாற் காணராயினர்.

இவ்வாறு போர் நிகழும்பொழுது, சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுள் விடுகின்ற பாணங்களெல்லாவற்றையும் அழித்து, அவருடைய தேரிற்கட்டிய கொடியை அறுத்து' விரைந்து ஆர்த்து, தன்னுடைய கீர்த்தியை யிசைத்தாற்போல வெற்றிச்சங்கை வாயில்வைத்து ஊதி, தாமதியாமற் பின்னும் பாணங்களைச்செலுத்தி, அவருடைய திருமேனியை மறைத்தான். அவர் அச்சரங்களைத் தமது சரங்களால் அழித்து, சூரபன்மனுடைய தேர்க்கொடியை ஏழுபாணங்களால் அறுத்துக் கடலில் இட்டார். அதனைப் பானுகம்பர் என்னும் பூதப்படைத்தலைவர் பார்த்துக் களித்து, பெருமிதங்கொண்டு ஆர்த்

துக் குதித்துக்கூத்தாடி, தம்முடைய ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் வெற்றிச் சங்குகளை வைத்து ஊதினர். அவ்வோசை பலயுகங்கள் தங்கிற்று. பானுகம் பருடைய ஆயிரஞ் சங்குகளின் ஒலியைக்கேட்டு விஷ்ணுவினுடைய பாஞ்ச சன்னியம் என்னும் சங்கு துண்ணென்று முழங்கிற்று. அப்பொழுது தேவர் கள் யாவரும் அக்கினிதேவனைப்பார்த்து, "நமது அறுமுகப்பெருமானுடைய தேரின்மீது கொடியில்லை. நீ கொடியாயிருக்குதி" என்று ஏவினர்கள். அவன் கோழிக்கொடியாகி, தேவாதி தேவராகிய சண்முகப்பெருமானுடைய தேரின்மீது ஏறி, அசுரர்களாகிய இரவின் விடியற்காலத்தை அறிவித்தல் போல அண்டம் வெடிபடக் கூவினான். பானுகம்பர் சங்கையூதி ஆரவாரித் தலும் விஷ்ணு ஆரவாரித்தார்; பிரமா ஆரவாரித்தார்; சந்திர சூரியர்கள் ஆரவாரித்தார்கள்; யமன் ஆரவாரித்தான்; வாயு ஆரவாரித்தான்; இந்தி ரன் ஆரவாரித்தான்; வருணன் ஆரவாரித்தான்; குபேரனும் ஆரவாரித் தான். இவ்வொலிகளெல்லாஞ் சேர்ந்து போய், அண்டகடாகத்தை முட்டி, சூரபன்மனுடைய செவித்துளையுட் புகுதலும், அவன் நஞ்சையுண்டவன் போலக் கடுங்கோபத்தினையுத் தேவர்களைப் பார்த்து, "நிகரில்லாத எனக்கு முன்னே வருதற்குப் பயந்து பருந்துகள் போன்று காடுகளிலே உலைந்த தேவர்கள் இப்பொழுது தேறிவந்து என்முன்னும் ஆரவாரஞ் செய்தார்கள். இது அறுமுகனுடைய வலிமையைக் கொண்டு தான்போலும். நன்று! நன்று! இங்கு நிற்கின்ற பிரமா முதலிய தேவர்களுடைய நிலையையழித்து விரைவிற்கொன்று, பின்பு சிவகுமாரனை வெல்லுவேன்" என்று கூறி, தேர்ப் பாகனை நோக்கி, "பாலகனுடைய போர் இவ்வளவிலிருக்க, விண்ணுல கத்தில் நின்று செருக்கடைகின்ற தேவர்களுடைய வலிமையைக் கெடுக் கும்படி என்னுடைய தேரை ஆகாயத்திற் செலுத்துதி" என்று பணித் தான். அவன் நன்றென்று தொழுது "வெற்றியாகுக" என்று தேரைச் செலுத்த, அது மேலெழுந்து தேவர்கள் நெருங்கி நிற்கின்ற விண்ணுல கத்திற் சென்றது. தேரோடு விண்ணுலகத்திற் சென்ற சூரபன்மன் மலை போலும் வில்லைவளைத்து, தேவர்கூட்டம் இரிந்தோடும்படி பாணமழை களை மிகவுஞ் சொரிந்தான். அதனைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, பூமியில் நின்றுகொண்டே எண்ணில்லாத சரங்களை விடுத்து அவன் விடுத்த சரங்களை அழித்து, அதன்பின் பாகனை நோக்கி, "நம்முடைய தேரை விரைந்து விண்ணுலகத்திற் செலுத்துதி" என்றார். வாயு நன்றென்று வணங்கித் தேரை விண்ணுலகத்திற் றாண்டிச் சூரபன்மனுக்கு முன்னே விடுத்தான், சுப்பிரமணியக் கடவுள் தேவர்கள் சூரபன்மனுக்குப் பயந்து அயர்ந்து ஓடுதலைப் பார்த்து, "வருந்தாதொழிமின்; புலம்பாதொழிமின்; நடுங்காதொழிமின்" என்று கூறி, அபயஹஸ்தம் செய்து கருணைபுரிந் தார். அவருடைய திருவாக்கைத் தேவர்கள் கேட்டு, "எம்பெருமானே, நீர் இங்கே எழுந்தருளினமையால் யாம் உயிர்பெற்று உய்ந்தோம்" என்று கூறி விரைந்து ஓடுவது நீங்கி மனமகிழ்ச்சியோடு திகந்தங்களில் நின்றார்கள். அதனைச் சூரபன்மன் பார்த்து, "பிரமன் முதலிய தேவர் கள் எனக்குப் பயந்து ஓடுவார்களாம். ஒரு தனித்த பாலகனு என்னை வந்தெதிர்க்குந் தன்மையுடையான்? இது நன்று!" என்று கோபித்துச் சிரித்து, அனந்தம் பாணங்களை விரைவிற் றூண்டினான். அறுமுகக்கடவுள் பல பாணங்களால் அவற்றை விலக்கி, அவனோடு எதிர்த்துப் போர்செய்

தாரீ. சூரபன்மனும் சுப்பிரமணிபக்கடவுளுமாகிய இருவரும் ஒருவரை யொருவர் கோபித்துப் பாணங்களைச் செலுத்தி ஒருவர் விட்ட பாணங் களை ஒருவர் அறுப்பதும் ஆகாயத்தை மறைப்பதுமாகி இவ்வாறு போர் செய்தார்கள். அவரிருவரும் பாணங்களைப் பொழிந்து போர் செய்யும்பொழுது, திசைகள் எரிந்தன; பூவுலகத்திலுள்ளார் இரங்கினர். அவர்களுடைய தேர்கள் காற்றுடிகள்போலவும், குலாலனுடைய சக்கரங்கள் போல்வும், சூறைக்காற்றுக்கள்போலவும் பாதலத்திலும், பூமியிலும், திசைகளிலும், புறவேலையிலும், மலைகளிலும், சத்தியவுலகத்தி லும், சக்கரவாளகிரியிலும், இருட்பூமியிலும், அண்டகடாகங்களிலுஞ் சென்று சாரிகை திரிந்தன. அத்தேர்களினுடைய ஒளியைக்கண்டு பிரமர் கள் நடுங்கினர்கள்; சூரியர்கள் மயங்கினர்கள்; தேவர்கள் மருண்டார்கள்; பூவுலகத்துள்ளவர்கள் வாடினர்கள்; நாகர்கள் உலைந்தார்கள். அத்தேர் களின் செலவினற் பூவுலகமதிர்ந்தது; சமுத்திரங்கள் அலைந்தன; மலைகள் பிதிர்ந்தன; அண்டமுகடு பிளந்தது; நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன; மேகங்கள் உகுந்தன. இருதேர்களும் இவ்வாறு சாரியை வரும்பொழுது, சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுண்மீது செல்லும்படி நெருப்புமழைபோலச் சரமழை களைச் சொரிந்து, அவற்றினிடையிடையே மழு, வச்சிரம், முத்தலைச்சூலம், கப்பணம், கலப்பை, குலிசம், வேல், எழு ஆகிய இவைகள் ஒவ்வொன்றி லும் அனந்தகோடி படைகளை இடிபோலச் சொரிந்தான். முருகக்கடவுள் வாயுவைப்போல விரைந்து பாணங்களை முறைமுறையாகச் சிந்தி அவை களை அழித்து, அண்டமுழுதுந் திரிந்து, இடைதெரிந்து, பதினன்கு பாணங் களைத் தூண்டி, சூரபன்மனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்தார். அவன் கையிலேந்திய வில்லோடு நிலத்தை அடைந்து, வில்லவளைத்து, நஞ்சைக் கக்குகின்ற எண்ணில்லாத சரங்களைத் தூண்டி, எதிர்த்தான். அதனை அறுமுகக்கடவுள் கண்டு, வில்லவளைத்து அம்புமழை களைத் தொடுத்து அவற்றைத் துணித்தார். சூரபன்மன் அனந்தகோடி பாணங்களை அவர்மேல் விடுத்தான். அக்கடவுள் அச் சரங்களையெல்லாம் தமது சரங்களால் மாற்றி, சூரபன்மனுடைய புயங் களின்மேல் ஆயிரம் கணைகளை விடுத்தார். அவைகள் அவனுடைய புயத் திற்பட்டு மலையின்மேல் வீழ்ந்த கன்மலைத்தாரைபோலச் சிதறின. அவன் அதனைப் பார்த்து, கோபந்தோன்ற, இரண்டாயிரம் பாணங்களை எடுத்து மனவேகமும் பிற்படும்படி சுப்பிரமணியக்கடவுளுடைய திருப்புயங்களிற் தூண்டித் தேவரும் மருள ஆரவாரித்தான். அவருடைய திருப்புயங்களிற் பட்ட அப்பாணங்கள் யாவும் சிவபெருமானுடைய நெற்றிநாட்டத்தக் கினியினல் வெந்த மன்மதனுடைய உடம்புபோல வெந்து துகளாய்த் திசைகளிற் பரந்தன. குமாரக்கடவுள் அவன்மீது சரமாரிகளைப் பொழிந் தார். அவைகளைச் சூரபன்மன் சரங்களால் அழித்து, அவருக்குப் பக்கத் தில் நிற்கின்ற வீரர்கண்மீதும் பூதசேனைகள்மீதும் கணைகளை யழுத்தினன். அறுமுகக்கடவுள் அதனைக்கண்டு, ஆயிரஞ் சரங்களைப் பூட்டிச் சூரபன்ம னுடைய வில்லைத் துணித்தார். துணிக்குமுன், அவன் பின்னும் ஒரு வில்லை யேந்தி முகிலுமஞ்ச ஆரவாரித்தான். இப்படிப் பூமியில் நின்று போர் செய்த சூரபன்மன் விரைந்து அருவாய் ஆகாயத்திற் றேன்றினன். அத னைக் குமாரக்கடவுள் கண்டு, ஆகாயத்திற் சென்று தாக்க, அவரோடு

ஓரிறைப்பொழுது எதிர்த்து நின்று மாயங்களைச் சூழ்வானாய், மீட்டும் மறைந்து பூமியில் வந்தான். அறுமுகக்கடவுள் விரைந்து பூமியில் வந்து போர்செய்தார். அவன் உருவை மறைத்துச் சுத்தோதகசமுத்திரத்தி னடு விற்சென்றான். அவரும் ஆண்டுஞ் சென்று போர்செய்தார். சூரன் மறைந்து திகந்தத்திற் றோன்றினான். அவர் ஆண்டுஞ் சென்று போர்செய்தார். சூரன் மறைந்து பாதலத்திற் போயினான். கடவுளும் அங்கே சென்று போர்செய்தார். சூரன் மறைந்து மேருமலையின் கொடுமுடியில் நின்றான். கடவுளும் விரைவில் அங்கே சென்று போர்செய்தார். சூரன் அவ்விடத் தினின்று நீங்கி வைகுண்டத்திற் றோன்றினான். அறுமுகக்கடவுள் அங்குந் தொடர்ந்துபோந்து போர்செய்தார். சூரன் அவ்விடத்தினின்று நீங்கி அண்டகோளகையின் வாயிலையடைய, சுப்பிரமணியக்கடவுளும் அங்கே சென்று அவனுடைய தேரைப் பாணத்தினல் அழித்து வெற்றிகொண் டார். தேரழிதலும், சூரபன்மன் இந்திரஞாலத்தேரை வரும்படி அழைப்ப அது வந்தது. அவன் அதன்மேலேறிப் போர்செய்தான்.

இவ்வாறு போர்செய்யும்பொழுது, அறுமுகக்கடவுள் முன்பு பாணங் களினல் அண்டத்தின்வாயிலை அடைத்ததையும் அப்பாலுள்ள சேனைகள் வராத தன்மையையும் சூரபன்மன் பார்த்து, "எனது இறைத்தொழிற் காவல் நன்று! நன்று!" என்று வில்லை வளைத்து, அநந்தகோடிபாணங் களைத் தூண்டி, அண்டகடாகத்தின் வாயிலை மூடிய அஸ்திரகபாடங்கள் முழுவதையும் அறுத்து நுண்ணிய துகளாக்கி, அவற்றை ஆகாயத்திற் சுழலவிட்டு, "அப்பாலண்டத்திலுள்ள கசரததுரகபதாதிகளாகிய நால் வகைச் சேனைகளும் வருக" என்று கூவிப் புயங்களிற் றட்டி ஆரவாரித் தான். அப்போது அப்பாலண்டத்திலுள்ள நால்வகைச்சேனைகளும் விரை வில் இவ்வண்டத்தில் வந்து போர்த்தொழில் முயன்று, படைக்கலத் தொகுதிகளை வீசி ஆரவாரித்து, அறுமுகக்கடவுளைச் சூழ்ந்தன. அச்சேனை களை விண்ணுலகத்தில் நின்ற பிரமா முதலிய தேவர்கள் பார்த்து, "சங் காரகாலத்தில் உலகத்தை உண்ணும்படி எழுந்த ஒரு கரிய நெருப்பின் கோலமோ? இவ்வண்டத்திற்கப்பாலுள்ள சமுத்திரமோ? இடியோடு கூடிய ஆயிரகோடி முகிலின் கூட்டமோ? யாதோ?" என்று தலைநடுங்கி ஓடினர் கள். சோதிசொரூபராகிய அறுமுகக்கடவுள் அச்சேனைகளின்மீது அழ லெழும்படி சிறிதே விழித்தார். அச்சேனைகளெல்லாம் சாம்பரின் மயமாய், அண்டத்தினுருவை அழித்தன. முன்வந்த சேனைகள் இவ்வாறு அழிய, அப்பாலண்டத்தில் நெருங்கிநின்ற சேனைகளுள் அளவில்லாதவைகள் மீண் டும் வந்து, சிவகுமாரர்மீது படைகளைச் சிந்திச் சூழ்ந்தன. அச்சேனை சமுத்திரத்தை எம்பெருமான் பார்த்து, நெருப்பை உமிழ்ந்தாற்போல உயிர்த்துச் சிறிதே உரப்பினர். அவ்வுங்காரத்தால் பூளைப்பஞ்சுமலையில் நெருப்புப் புகுந்தாற்போல அச்சேனைகண் முழுதும் புழுதியாய் உலகத்தை மூடின. பின்னும் மற்றையண்டங்களில் நின்ற நால்வகைச் சேனைகளும் வந்து வந்து அறுமுகக்கடவுளைச் சூழ்ந்தன. அவர் அவைகளைக் கண்ணுற்று, தமது திருக்கரத்திலிருக்கின்ற மழு, சூலம், சக்கரம், தண்டு, எழு என் னும் ஐந்து படைக்கலங்களையும் நோக்கி, "படைகாள், கேண்மின்: நீவிர் பல உருக்கொண்டு விரைந்து ஒருங்கு சென்று, நமது பக்கத்திற் சூழ்ந்த அசுரசேனைகளையும், இங்கு வருதற்கு வழிபெறுமல் அப்பாலண்டத்தில்

நிற்கின்ற அசுரசேனைகளையும் கொன்று இங்கே வருதிர்'' என்று கூறி அவற்றை விடுத்தார். அவைகள் அநந்தகோடி சூரியர்களும் அக்கினிகளும் பாம்புகளும்போலத் தோன்றி, அரைநொடிப் பொழுதினுள் சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்த சேனைகளை முன்பு அழித்து, பின் மற்றை ஆயிரத்தேழு அண்டங்களிலுஞ் சென்று சென்று, அங்கங்குள்ள சேனைகள் முழுதையும் அழித்து ஊலாவித்திரிந்தன. சூரபன்மன் அதனைப் பார்த்துக் கோபித்து, ''இவ்வொரு கணப்பொழுதினுள் இவனுடைய உயிரை உண்பேன்'' என்று கூறி, முன்னளிலே சிவபெருமான் கொடுக்கத் தான் பெற்ற சக்கரப்படையை எடுத்து வழிபட்டுத் துதித்து, சுப்பிரமணியக்கடவுண்மீது விரைந்து செல்லும்படி தூண்டினன். அந்தச் சக்கரம் யாவருமஞ்சும்படி விரைந்து சென்று அவரை அணுகியது. அறுமுகக்கடவுள் ஒரு திருக்கரத்தை நீட்டி ''வருதி'' என்று அதனைப் பற்றினர். சூரபன்மன் அதனை நோக்கி, தேரின்மீது மனந்தளர்ந்து உயிர்த்து நின்று, அளவிறந்த உருவங்களை எடுத்துப் பாணமழைகளைச் சொரிந்தான். முருகக்கடவுள் அதனை நோக்கி, ''இவனுடைய மாயம் நன்று! நன்று!'' என்று திருப்புன்முறுவல்செய்து, மேலாகிய ஞானஸ்திரத்தைத் தொடுத்து, ''சூரபன்மன் செய்கின்ற மாயங்கள் முழுவதையும் நொடிப்பொழுதில் அழிப்பாய்'' என்று பணித்து ஏவினர். அது விரைந்து சென்று அவனுடைய மாயங்கள் முழுவதையும் அழித்தது. அவன் வலியிழந்து மனமயங்கித் தனித்தவனுய்த் தேரின்மீது நின்றுன். தேவர்கள் அதனைக் கண்டு அறுமுகக்கடவுளைத் துதித்துக் கடல்போல ஆரவாரித்துப் புஷ்பமழைகளைப் பொழிந்தார்கள். சூரன் தேருந்தானும் விரைவில் மறைந்து, அண்டப்பித்திகையிலுள்ள வாயிலை அடைந்து, ஆர்த்து, அறைகூவி, அப்பாலண்டத்துக்குச் சென்றுன். சண்முகக்கடவுளும் தேரோடு அவனைத் தொடர்ந்து, அவன் நின்ற இடத்துக்குச் சென்றார். அவன் அங்கே அவரோடு போர்செய்து, மாயையினல் அப்பாலண்டத்துக்குப் போயினன். இவ்வாறே சூரபன்மன் பிருதிவியண்டம் முழுதும் மின்போலச் சென்று சென்று வெளிப்பட்டு, அக்கங்கே போர்செய்து நின்று, பின்னரும் மறைந்துசெல்ல, எம்பெருமானும் அவ்வண்டங்கடோறும் அவனை விடாது தொடர்ந்து யுத்தஞ்செய்துகொண்டு போயினர்.

அப்பொழுது, பிரமா முதலிய தேவர்கள் அன்புமிகுந்த இருமுதுகுரவரை நீங்கிய குழந்தைகளைப்போல வருந்தி, விட்டுணுவை நோக்கிச் சொல்வாராயினர்: ''சூரபன்மன் அண்டப்புரையுட் போயினன். அறுமுகக்கடவுளுடைய போரில் விலகிப்போயினனல்லன். என்று மழியான். மாயங்களில் மிகவும் வல்லவன். அவன் இவ்விடத்தைவிட்டுப் போயதன்மை ஆராயில் உபாயமேயன்றி வேறில்லை. நிருமலராகிய சண்முகக்கடவுள் அதனை அறிந்திலர் போலும். அவர் 'சூரபன்மன் வாடினன்' என்று கருதி அவனைத் தொடர்ந்து போயினர். அவனை அணுகினரோ? அல்லது அணுகாதவராய்த் தேடினரோ? நாம் அறியோம். அக்கடவுள் சூரபன்மனேடு மற்றையண்டத்திலுஞ் சென்றார். இனி என்னதான் விளையுமோ என்று ஏழையோம் அஞ்சுகின்றேம்'' என்று பிரமா முதலிய தேவர்கள் விளம்பியபொழுது, விட்டுணு அவர்களைநோக்கி, அன்போடு அவர்களுடைய மனத்திலமுந்தும்படி சொல்வார்: ''தேவர்காள், வஞ்சனையில் மிகுந்த சூரபன்மனுடைய வலிமையை

மதித்து அஞ்சியஞ்சி இரங்காதொழிமின். ஒப்பில்லாத அறுமுகக்கடவுளு டைய நிகரற்ற வில்வலிமையையும் வீரத்தையும் தெரிந்தும், நீவிர் மனத் தில் ஐயுறுகின்றதும் முறையோ? ஞானமாகியும், உணர்ந்தார்க்குமுணர்வரிய நீதியாகியும், நிர்மல சோதியாகியும், வழிபடுகின்ற எம்மனோர்க்கெல்லாம் ஆதியாகியும் நின்றவர் அறுமுகக்கடவுளன்றே? அழிவின்றி என்றும் ஒரே தன்மையாயிருக்கின்ற பரமசிவனே ஒரு குழந்தையினியல்பாய் ஆறு திரு முகங்களைக்கொண்டு திருவவதாரஞ் செய்தாரென்பதல்லது வேறு சொல் லுதற்கியையுமோ! மேலோராகிய அக்கடவுளுடைய தன்மையைப் பலமுறை தேறியும், உங்கள் மனமும் இன்னும் தெளிகின்றில. ஐயங்கொள்ளாதொழி மின். சூரபன்மன் ஆயிரகோடி யண்டங்களிலும் சென்றுலும், சுப்பிரமணி யக்கடவுள் அவனைத் தொடர்ந்து சென்று போரைச்செய்து துரத்திக் கொண்டு வருவார். தினைப்பொழுதிற் கையில் நெல்லிக்கனிபோலக் காட்டு வேன்; நீவிருங் காணுவிர்'' என்று விஷ்ணு சொல்ல, பிரமா முதலிய தேவர் கள் யாவரும் நன்றென்று தெளிவுற்றார்கள். அப்பொழுது, சூரபன்மன் ஓரண்டத்திற்போல ஆயிரகோடி யண்டங்களிலும் ஓடி நின்று நின்று, அறு முகக்கடவுளை எதிர்த்துப் போர்செய்து, மீட்டும் இவ்வண்டத்திலுள்ள மகேந்திரபுரியில் வந்தான். சுப்பிரமணியக்கடவுளும் நிழலைவிடாது செல் பவர்போலக் கோபித்து விரைந்து அவனைத் தொடர்ந்துவந்தார். இவ்வண் டத்திலுள்ள அவுணசேனைகள் அவர் சூரபன்மனைத் தொடர்ந்து வருதலைப் பார்த்து, ''சிவகுமாரர் நம்மரசனைத் தொடர்ந்தார்'' என்று நெருப்புப் போலப் பொங்கிப் படைகளை வீசி, அவரைச் சூழ்ந்து ஆரவாரித்தன. கந்த சுவாமி அதனைநோக்கி, ''இவர்முயற்சி நன்று! நன்று!'' என்று கூறி, திருப் புன்முறுவல் செய்தார். அப்போது சூரபன்மனுடைய சேனைகள் முப்புரம் போல வெந்து பொடியாயழிந்தன. தந்தைசெய்கையை மைந்தன் செய்வது தக்கதன்றே? தேவர்கள் அசுரசேனைகள் வெந்த சாம்பர்மலையை நோக்கி மகிழ்ந்து, புஷ்பங்களைத்தூவி முருகக்கடவுளைத் துதித்துநின்றார்கள். தன்னு டைய சேனைகள் முழுவதும் சுப்பிரமணியக்கடவுளுடைய திருப்புன்முறுவ லாற் சாம்பராய் அழிந்துவீழத் தனித்துநின்ற சூரபன்மன், அகத்திய முனி வர் உண்டமையாற் சலம் வற்றிய சமுத்திரத்திற் றோன்றும் வடவாமுகாக் கினியை யொத்தான்.

இவ்வாறு தனித்துத் துன்பமடைந்துநின்ற சூரபன்மன் அறுமுகக்கட வுள் திருப்புன்முறுவல் செய்தமையையும், தன் சேனைகள் அழிந்தமையை யும், தான்றனித்து நின்றமையையும், பூதர்களும் படைவீரர்களும் ஆரவா ரிப்பதையும் பார்த்து, ''என் பின்பிறந்த துணைவர்களும் புதல்வர்களும் மந் திரிமார்களும் பிறரும் முன்னே இறந்தார்கள். இன்றைக்கு இறவாமலெஞ் சிய சேனைகளையெல்லாம் சிவகுமாரன் கொன்றான். யான் தனித்தவனானேன். இனி இங்கே செய்வதென்னை?'' என்று மனத்தோடு சொல்லி, பெருமூச்சு விட்டு, எண்ணம் மிகுந்து, மாயவனை மனதில் நினைத்தான். அவள் வந்து தோன்றி, ''பெறுதற்கரிய வலியையுடைய மகனே, நீ ஒரு தமியனாகி நின்று மனந் தளர்ந்து என்னையழைத்தாய். நீ விரும்பியதென்னை? தெரியச்சொல் லுதி'' என்றாள். அதனைச் சூரபன்மன்கேட்டு, ''சிவகுமாரனுடையபோரிலே தம்பியர்களும், புதல்வர்களும், மந்திரிமார்களும், சேனைகளுமாகிய யாவரும் அழிய யான்ஒருவன் எஞ்சினேன். இறந்த அவர்கள் எழுதற்கேற்ற உபாயத்

தைச் சொல்லுதி'' என்றான். அவள் நகைத்துச்சொல்வாள்: ''மைந்தனே, நீ மிகுந்த படைகளும் சுற்றமும் இறக்கத், தனித்தவனுகியும், தேவர்களுடைய சிறையை விடுத்துய்யும்படி எண்ணினுயில்லை. அறுமுகக்கடவுளோடு இன்னும் போர் செய்தற்கெண்ணினையாயின் நிறைந்த பெருஞ்செல்வத்தோடு கூடிய வாழ்வை நீங்கினைபோலவாய். பன்னிரண்டு புயங்களைக் கொண்ட சுத்தசாட்குண்ணியரர்கிய அறுமுகக்கடவுளைப் பாலகன் என்றே எண்ணற்க. அவருடைய கையிலுள்ள வேற்படையினல் விரைந்து இறப்பாய். அரிய உயிர் நீங்க நின்ற நீ என் சொல்லைக் கேட்பாயன்று. தலைவிதியை யாவராயினுந் தீர்ந்தாருண்டோ! அது நிற்க. உன் மனமகிழும்படி இறந்தோர் யாவரும் எழவேண்டுமானல், பெரும்புறக்கடலினேர் பக்கத்தில் அமுதசீதமந்தரகூடமென்று (சுதாமந்தரபர்வதம்) ஒரு மலையுளது. அதனை இங்கே கொணருதி. உன்னெண்ணம் கைகூடும்'' என்று மாயவள் கூறிமறைந்தாள். சூரபன்மன் அதனைக்கேட்டு, ''என்னுடைய தாயின் சூழ்ச்சி நன்று; போர்க்களத்திறந்தோர் யாவரும் உய்யும்வகை இதுவே'' என்று நினைத்து, மிக மகிழ்ந்து, ''சுதாமந்தரபர்வதத்தைக் கொண்டு வருதற்கு யாவரையனுப்புவோம்'' என்று சிறிதுநேரம் யோசித்து, இந்திரஞாலத்தேரினின்றுமிறங்கி, சிங்கவாகனத்தின் எருத்திலேறி, அத்தேரை நோக்கி, ''நீ என் மனவேகத்திலும் விரைந்து சென்று பெரும்புறக்கடலையடைந்து, இறந்தவர்களுக்கு மீட்டு உயிரைக் கொடுக்கின்ற சுதாமந்தரபர்வதத்தை இங்கே அகழ்ந்தெடுத்துக்கொண்டு வருதி'' என்று கூறினன். இந்திரஞாலத்தேர் அதனைக்கேட்டு, பெரும்புறக்கடலின் சாரிற்போய், அங்குநின்ற அமுதமந்தரத்தை எடுத்துக்கொண்டு வாயுகதியோடு மீண்டு மகேந்திரபுரியில் வந்தது. அம்மலையிலிருந்து வருங் காற்றுப் படுதலால், அந்நாள் வரையும் போர்செய்து இறந்த சேனைகள் முழுதும் ஆலாகலவிஷ மெழுந்தாற்போலத் துண்ணென்றெழுந்தன. குதிரைகளின் றெகைமுழுதும் உய்ந்தன; யானைகளின்றெகைமுழுது முய்ந்தன; தேர்களியிழுக்குஞ் சிங்கங்களின் றெகை முழுதும் உய்ந்தன; அவுணப்படைகள் முழுதும் உய்ந்தன. வடிவமழிந்து இறந்த உயிர்களும், மார்பு கால் கை தலை தோள் முதலிய அங்கங்கள் குறைந்து இறந்த உயிர்களும், சுப்பிரமணியக்கடவுளுடைய திருநோக்கு முதலியவற்றில் உண்டாகிய அக்கினி எரிக்கப் பொடிபட்ட உயிர்களும் உய்ந்தெழுந்தன. இவ்வாறு உயிர்பெற்றெழுந்த சூரபன்மனுடையசேனைகள் எண்டிசைகளும், பூமியும், பாதலமும், சமுத்திரங்களும் ஆகிய எங்கும் மண்டி, மேல் ஏழுலங்களிலும் நிறைந்து, அண்டமுகடுவரையும் அடைந்து தண்டம், எழு, குலிசம், வாள், வில் முதலாகிய படைக்கலங்களை ஏந்தி, யானை குதிரை தேர்களோடு அண்டம் வெடிக்கும்படி ஆர்த்தன. சிங்கமுகாசுரன் எழுந்தான்; பானுகோபன் எழுந்தான்; அக்கினிமுகன் எழுந்தான்; வச்சிரவாகுவு மெழுந்தான்; தருமகோபன் எழுந்தான்; அதிசூரன் அசுரேந்திரன் என்னும் இரு குமாரர்களும் எழுந்தார்கள்; மூவாயிரரும் எழுந்தார். மற்றையோர்களும் எழுந்தார்கள்.

கண்டோர் அஞ்சத்தக்க வடிவத்தோடு விரைந்தெழுந்த இவர்கள் யாவரும் சேனைகளைப் பார்த்து, வாய்திறந்து இடிபோல் ஆர்த்து, தம்முடைய வெற்றியைப் பேசி, ''இன்றைக்கு நம்மேற் போருக்கு வந்தவர் யாவர்?'' என்று வலிமையோடு கூறி, போர்க்களத்திலே கிடக்கின்ற

ஆயுதங்களைத் தேடி எடுத்து, சூரபன்மனுக்குப் பக்கத்தில் வந்து கூடி, போர்செய்யுங் குறிப்பைக் கொண்டார்கள். மேற்சொல்லிய இவர்கள் யாவரும் ஆய்ந்து விரைந்தெழுந்து அளவிறந்த சேனைகளோடு ஆரவாரிக்கும்பொழுது, இந்திரஞாலத்தேர் சூரபன்மனுக்கு முன்னே வந்தது. அது அமுதமந்திரத்தோடு அங்குவந்ததையும் சிங்கமுகாசுரன் முதலிய யாவரும், உய்ந்தெழுந்ததையும், அழிந்த சேனைகள் ஒலித்துக்கொண் டெழுவதையும் சூரபன்மன்தெரிந்து, மகிழ்ந்து, ஆரவாரித்து, தேவர்களை இகழ்ந்து, ஆச்சரியமடைந்து, தாயைப்புகழ்ந்து, உடல் புளகங்கொண்டு, மனம் விளக்கமுற்று, சிரித்து, உணவின்றி மிகுந்த தரித்திரத்திலாழ்ந்தவன் விரைவில் இந்திரபாக்கியத்தை அடைந்து சிங்காதனத்திலேறினாலொத்தான். சூரபன்மனுடைய சிரசு ஓங்கியது; புயங்கள் உயர்ந்தன; உடம்பு பருத்தது; மனத்தில் மகிழ்ச்சி மிகுந்தது; உரோமங்கள் சிலிர்த்தன; அவன் அடைந்த மகிழ்ச்சியை யாவர் சொல்லவல்லார்? சூரபன்மன் இவ்வாறு மனமகிழ்ந்து நிற்கும்பொழுது தேவர்கள் யாவரும் ''பாற்கடலில் நஞ்செழுந்த நாளோ இது'' என்று அஞ்சி நடுநடுங்கி, ''பொன்னுலகவாழ்வும் மண்ணுலக வாழ்வும் மற்றைப் பெரிய பதங்களில் வாழ்கின்ற வாழ்வும் எந்நகர வாழ்வும் இப்பொழுதே நமக்கு வந்தன! பகைவர்கள் நம்மைக் கொல்லுமுன் ஓடுவோம்'' என்று கூறி, தாம் ஏறிவந்த வாகனங்கள் ஒரு பக்கமும், தம் பக்கத்திலே வந்தவர்கள் ஒரு பக்கமும், தாம் ஒரு பக்கமுமாகப் பின்னே திரும்பிப்பாராதவராய் ஓடினார்கள். அவருட் சிலர் கிளி, புறா, மயில், அன்னம், காகம், குயில், ஆந்தை, வண்டு, நீர்க்காக்கை முதலாகிய பக்ஷிகளினுருவங்களைக் கொண்டு ஓடினார்கள். பூதகணவீரர்கள் அவுணர்கள் எழுந்தமையை நோக்கி, ''இறந்த அவுணசேனைகளும் மற்றை வீரர்கள் யாவரும் இங்கே உயிர்பெற்றெழுகின்றார்கள். யாம் இனி இறந்தோம். இதற்குச் சந்தேகமில்லை'' என்று தளர்ந்தார்கள். இலக்ஷத்தெண்மரும் வீரவாகுதேவரும் துன்பமும், அச்சமும், ஆச்சரியமும், கலக்கமும், கடுங்கோபமுங் கொண்டு, உள்ளுக்கத்தில் நெருப்புப்போலும் உயிர்ப்பேரடு நின்றார்கள்.

சுப்பிரமணியக்கடவுள் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தருளி, ''சூரபன்மனுடைய சூழ்ச்சியும், மாயவள் கூறிய உபாயமும், சுதாமந்தர பர்வதத்தின் வலிமையும், உயிர்பெற்றெழுந்த பரிசனர்களுடைய கூட்டமும் நன்று! நன்று!'' என்று திருக்கரத்தோடு திருக்கரத்தைத்தட்டி, நெருப்பெழத் திருபுன்முறுவல் செய்தார். அப்பொழுது சிங்கமுகனும், பானுகோபனும், அக்கினிமுகன் முதலாகிய மற்றைப் புதல்வர்களும், தருமகோபனும், சேனைத்தலைவர்களும் ஆகிய யாவரும் சூரபன்மனுக்கு முன் சென்று, வீரத்தேர்டு வணங்கி நின்று ''நம்மரசனே, நீ இங்கே நிற்குதி. யாமெல்லோமும் சென்று கந்தவேளையும் அவருடைய படைவீரர்களையும் பூதர்களையுங் கொன்று மிக விரைந்துவந்து உன்னுடைய பாதங்களை வணங்குவோம்'' என்றார்கள். அதனைச் சூரபன்மன்கேட்டு, ''நம்மைப் பாதுகாக்கும்படி வந்த வீரர்களே நீர் கூறியது நன்று. நம்பகைவனாகிய பாலகனுடைய வலிமையையும் வீரத்தையும் கெடுத்து எனக்கு வெற்றியைத் தருதிர்'' என்று கூறி அவர்களைப் போருக்குச் செல்ல விடுத்தான். சூரபன்மனிடத்து விடை

பெற்றுச் சென்ற சிங்கமுகாசுரன் முதலாகிய அவுணர்கள், சேனைகள் தம்மைச் சூழ்ந்துவர விரைவிற்சென்று, பலவகைப்படைகளையுஞ் சொரிந்து, அக்கினிதேவனைச் சூழ்கின்ற இருட் கூட்டங்கள்போலச் சுப்பிரமணியக்கடவுளைச் சூழ்ந்தார்கள். அதனைக்கண்ட பூதர்கள் ஏங்கினர்; மற்றை வீரர்கள் யாவரும் ''இப்படை எம்மாற் ருங்குதற்கரிது'' என்று தளர்ந்தார்கள். அவுணசேனைகளும் வீரர்களும் மிகுந்த வேகத்தோடு தம்மை வந்து சூழ்ந்ததைச் சுப்பிரமணியக்கடவுள் பார்த்து, எல்லாவுயிர்களையுஞ் சங்கரிக்கின்ற உருத்திர பாசுபதப்படைக்கலத்தை திருக்கரத்திலெடுத்து, திருவுளத்தால் வழிபாடுசெய்து, ''சிங்கமுகாசுரன் முதலாகிய அவுணர் கூட்டங்களையும் அளவின்றி நிற்கின்ற அவுணசேனைகளையும் விரைவிற் சங்கரிப்பாய்'' என்று கூறி விடுத்தார். அப்படை சர்ப்பங்களும், நஞ்சும், இடிக்கூட்டங்களும், உருத்திரர்களும், அக்கினியும், பூதகணத்தொகுதியும், அளவிறந்த தெய்வப்படைக் கலங்களுமாய் விரிந்து, அண்டமெங்கும் நெருங்கி ஆரவாரித்தெழுந்து, விரைவிற் சூழ்ந்து, முன்னே யுய்ந்தெழுந்த அவுணசேனைகளையும் சூரபன்மனுக்குச் சுற்றமாயுள்ள யாவரையும் ஒருங்கே சங்கரித்து, இந்திரஞாலத்தேரின்மேலிருந்த சுதாமந்தரபர்வதத்தைப் பொடிபட அழித்து, அறுமுகக்கடவுண் மாட்டு மீண்டது. சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகன், வச்சிரவாகு, மூவாயிரர், சிங்கமுகனுடைய குமாரனுகிய அதிசூரன், அவன் றம்பியர்கள் நூற்றுவர், தாரகனுடைய குமாரனுகிய அசுரேந்திரன், தருமகோபன் முதலாயினேர் சேனைகளோடும் சுதாமந்தரபர்வதத்தோடும் இறந்து வீழ்ந்தார்கள். துணையில்லாத சூரபன்மன் அத்தன்மைகளெல்லாங் கண்டு தளர்ந்து வலிமைநீங்கிக் கவன்றிரங்கி, மெய்ம்மறந்து, புன்மையடைந்து, உயிர்த்துக் கோபித்துவாடி, முன்போலத் தனித்தவனுயினன். சூரனுடைய படைகள் யாவும் அழிந்தமையைப் பூதர்களும் வீரர்களும் பிரமா முதலிய தேவர்கள் யாவரும் பார்த்து, துன்பம் நீங்கி மகிழ்ந்து ஆர்த்தார்கள். உயிர்பெற்றெழுந்த தன்கிளைஞரை யிழந்த சூரபன்மன், தாமழுந்திக்கிடந்த நரகத்தை நீங்கிச் சுவர்க்கத்திற் செல்வோர் மிகுந்ததோர் இடையூற்றுல் மீட்டும் அந்நரகத்தில் வீழ்ந்ததே போல மிகுந்த துன்பத்தோடு நின்ருன்.

இவ்வாறு நிற்கின்ற சூரன்பன் மிகவும் கோபமுற்று, ''என்சேனைகளையெல்லாம் அழித்த பாலகனையும் தனிமைசெய்து பின்பு வெல்லுவேன்'' என்று எண்ணி, இந்திரஞாலத்தேரை நோக்கி, ''பாலகனைச் சூழ்ந்த பூதசேனைகளையும் வீரர்களையும் கவர்ந்துகொண்டு சென்று அண்டத்தினுச்சியிலே வைத்துக் கொண்டிருப்பாய்'' என்று கூறினன். அத்தேர் அதனைக்கேட்டு, நன்றென்று ஓடிச்சென்று, வீரவாகுதேவர் முதலிய வீரர்களையும் பூதசேனைகளையும் மயக்கிக் கிளையோடும் வாரிக்கொண்டு அண்டகோளகையிற்போய், சூரபன்மன் பணித்தபடி அவர்களை அங்கே வைத்துக்கொண்டிருந்தது. சேனைகள் நீங்கச் சுப்பிரமணியக்கடவுள் தனித்தவராயினர். அதனைச் சூரபன்மன் பார்த்து, ''நம்முடைய தேரின் வலி கன்று!'' என்று சிரித்தான். தேவர்கள் அதனை நோக்கிப் பின்னும் அயர்ந்தார்கள். அறுமுகக்கடவுள் சூரபன்மனுடைய சூழ்ச்சியையும், தமது துணைவர்களைப் பூதசேனைகளோடு வாரிக்கொண்டு சென்ற இந்திரஞாலத்தேரின் வன்மையையும் தெரிந்து கோபித்து, ஓரம்பையெடுத்து வில்லிற்பூட்டி, ''நம்முடைய சேனைகளைக்

கவர்ந்து அண்டகோளகையிற் கொண்டுபோய் வைத்திருக்கின்ற இந்திரஞா லத்தேரை விரைந்து இங்கே கொண்டுவருவாய்'' என்று பணித்து விடுத் தார். அப்பாணம் வேற்படைபோல ஒளியை வீசி மேலேழுலகங்களையுங் கடந்து, அவற்றிற்கப்பாலுள்ள தலங்களையும்நீங்கி, ஒருகணப்பொழுதினுள் அண்டகோளகையினை அடைந்து இந்திரஞாலத்தேரின் வலியைத் தொலைத்து, ஆகாயத்தில்நின்றும் மின்னலோடுகூடிய மேகத்தைக் கொண்டு வரும் பிரசண்டமாருதம்போல அத்தேரைக்கொண்டு, தேவர்கள் துதிக்கப் பூமியில் மீண்டு, குமாரக்கடவுளுடைய சந்நிதியில் வந்தது. இந்திரஞாலத் தேரிலிருந்த வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களும் அதினின்று பூமியிற் குதித்து, கந்தசாமியினுடைய திருவடித்தாமரைகளைப் பல முறை வணங் கித் துதித்து, அவருடைய திருவருட் பெருங்கடலுண் மூழ்கி, மருங்கிற் சூழ்ந்து நின்றார்கள். அறுமுகக்கடவுள் இந்திரஞாலத்தேரைப் பார்த்து, ''நீ சூரபன்மனிடத்து முன்போலச் செல்லாதே; அவன் இனி இறத்தல் நிச்சயம்; இங்கே நில்'' என்றார். அத்தேர் அதனைக்கேட்டு, சூரபன்ம னிடத்துச் செல்லுதற்கு அஞ்சி, முன்னைவலிமை நீங்கி, அறுமுகக்கடவுள் பணித்தபடி அவருக்குப் பக்கத்தில் நின்றது.

இந்திரஞாலத்தேர் சுப்பிரமணியக்கடவுளுடைய ஒரு பாணத்தினாற் பூமியில்வந்து தன்பக்கத்தில் வாராததையும், பூதர்களும் பிறரும் மீண்ட தையும் சூரபன்மன் கண்டு, அக்கினிபோலக் கோபித்து, ஒரு பெரிய வில்லை விரைவில் வளைத்து. அறுமுகக்கடவுண்மீது பாணங்களை மீட்டும் சொரிந்தான். அவர் மிகுந்த கோபங்கொண்டு, ஒருவில்லை வளைத்து, சர மாரிகளைச் சொரிந்து, சூரபன்மன் செலுத்திய பாணங்களையெல்லாம் விலக் கினர். அவனும் மிகக் கோபித்து, சுப்பிரமணியக்கடவுளுடைய தேர்ப் பாகனாகிய வாயுவின் சரீரமெங்கும் வெளியிடமில்லையாகப் பாணங்களை அழுத்திப் போர்செய்தான். சூரபன்மனுடைய பாணங்கள் படுதலால் வாயு வருந்திப் புலம்பி மயங்கி, குதிரைகளைத் தூண்டாமல் வாளாவிருந் தான். கிருபாமூர்த்தியாகிய அக்கடவுள் வாயுவினுடைய தன்மை முழுவ தையுந் தெரிந்து, ஆயிரம் பாணங்களைத் தூண்டித் தேவர்கள் துள்ளச் சூரபன்மனுடைய வில்லைப் பல துண்டங்களாக்கினர். அவன் தன் வில் முரிதலும், சிவபெருமான் கொடுத்த ஒரு முத்தலைச்சூலத்தை ஏந்தி, சிங்கவாகனத்திலேறி, அதனைச் சுப்பிரமணியக்கடவுளுடைய தேரை அணு கத் தூண்டிச் சென்றான். அந்தச் சிங்கம் சூரபன்மனுடைய மனத்தைப் போலச் சென்று அறுமுகக்கடவுளுடைய தேரைச் சுமக்கும் குதிரைகளை நகம் பொருந்திய கைகளாற் பதைக்கும்படி அடித்து, பூதர்கள் வருந்த ஆரவாரித்தது. சிங்கத்தின்மேல் ஏறிச்சென்ற சூரபன்மன் தன் வலக் கையிலேந்திய சூலத்தைச் சுப்பிரமணியக்கடவுண்மீது சுழற்றியெறிந்தான். அது மின்போல ஒளிவீசி ஆகாயவழிக்கொண்டு சென்றது. அது செல்லும் பொழுது அக்கினி உண்டாயது; இடிகள் உண்டாயின; பல படைக்கலங் களும் நெருங்கின; பூதகணங்கள் நெருங்கி ஆர்த்தன. பூதர்கள் அதனை நோக்கி ஓடினர். உலகமுழுதும் அஞ்சின. சண்முகக்கடவுள் அ த னை நோக்கி ஆயிரகோடி சரங்களை வில்லிற்பூட்டிச் செலுத்தினர். சூலப்படை அவற்றையெல்லாம் துணித்து வீழ்த்திச் சூரபன்மனுடைய கோபாக்கினி யின் உருவம்போல நடந்தது. அப்படையின் வலிமையை முருகக்கடவுள்

நினைத்து, தம்முடைய ஒரு திருக்கரத்திலிருக்கின்ற குலிசப்படையை நோக்கி, ''சூரபன்மன் விடுத்த சூலப்படையைப் பிடித்துக்கொண்டு வருவாய்'' என்று சொல்லி விடுத்தார். அது, அக்கினிச்சுவாலையைக் கக்கிக் கொண்டு வருகின்ற சூலப்படையானது தன்னைக் கிட்டும்பொழுது, அதனுடைய மூன்று தலைகளையும் சூரபன்மன் வருந்தும்படி கௌவிப் பற்றிக் கொண்டு விரைந்து மீண்டு வந்து, மேருமலையின் கொடுமுடிகள் மூன்றையும் சமுத்திரத்திலிடும் வாயுவைப்போலச், சுப்பிரமணியக்கடவுளுடைய திருக்கரத்தில் உய்த்துத் தானுமிருந்தது. அதனைக்கண்ட தேவர்கள் யாவரும் கைகளைச் சிரமேற்கூப்பி, ''இங்கே இவனைச் சங்கரித்து எங்களைக் காத்தருளும்'' என்று பிரார்த்தித்தார்கள். அதனை முருகக்கடவுள் கேட்டு இரண்டாயிரஞ் சரங்களைப் பூட்டிச் சூரபன்மன் ஏறிவந்த சிங்கத்தின் சிரசிலழுத்தினர். அது ஆகாயத்திற் கிளர்ந்து அரற்றி வீழ்ந்து உயிர் நீங்கியது.

அதனைச் சூரன்கண்டு, பூமியிற்பாய்ந்து, சிவகுமாரருடைய திருக்கரத்திலே தன்னுடைய சூலம்போன தன்மையையும் தெரிந்து, ஊழித்தீயைப் போலக்கோபித்து, ''இப்பாலகன் என்னுடைய இந்திரஞாலத்தேரையும் சூலப்படையையும் கவர்ந்து சிங்கவாகனத்தைக் கொன்று வலியன் போல நின்றான்! இவனையும் பூதர்களையும் மற்றை வீரர்களையும் யான் ஒரு ருவத்தை யெடுத்து விரைவில் விழுங்குவேன்'' என்று எண்ணி, மாயத்தினால் ஒரு சக்கரவாகப்பக்ஷியின் உருவையெடுத்து, சிறகுபெற்ற மலையையொத்துக், கடல்போல ஆர்த்து, பூமி பிளக்கும்படி சிறகுகளையடித்து ஆகாயத்திலெழுந்து, பூமிமுழுவதையும் சிறகினால் மூடிச் சூரியப்பிரகாசத்தையும் மாற்றிச் சுழன்று திரிவான்; சமுத்திரத்திலுள்ள மீன் குப்பைகளைக் கவரும்படி முயன்றூற்போல விரைந்து பூதசேனைக்குழுவினுட் புகுந்து சிறகுகளை வீசுவான்; அவற்றால் அடிப்பான்; அவர்களைப் பிடித்து மூக்கினற்குத்தி மிடற்றிற் செறித்து விழுங்குவான்; குமாரக்கடவுளுடைய தேரைச் சூழ்வான்; அதனைச் செலுத்தும் பாகனை அடிப்பான்; அதன் காடிஞ்சியை முறிப்பான்; அதிற்கட்டிய குதிரைகளை மூக்கினற் குற்றுவான்; அவற்றின் சிரங்களைக் கொய்வான்; பூதப்படைத்தலைவர்களைப் பற்றுவான்; அவர்களுடைய படைக்கலங்களெல்லாவற்றையும் பறித்து முறித்தெறிவான். சூரபன்மன் இவ்வாறு சக்கரவாகப்பக்ஷியின் உருவை யெடுத்துச் சுற்றிப் பறந்துவந்து வீழ்ந்து ஆகாயத்திற் றிரிந்தான். அதனை அறுமுகக்கடவுள் கண்டு, திருக்கரத்தோடு திருக்கரத்தைப் புடைத்துத் திருப்புன்முறுவல் செய்து, ''இவனுடைய கல்வித்திறமை நன்று!'' என்று நோபித்து, ஒரு பெரிய வில்லை வளைத்து, சக்கரவாகப்பக்ஷியின் வடிவாய்ச் செல்லுகின்ற சூரபன்மன்மீது அனந்தகோடிபாணங்களைத் தூண்டினர். அவன் அவற்றையெல்லாம் சிறகுகளினால் அடித்துச் சிந்திக் குறைத்தும், மூக்கினற் கொய்தும், கால்களினற் பற்றி முறித்தும், மேலெழுந்து ஆகாயமுழுவதும் சூழ்ந்து சென்றும், சத்த சமுத்திரங்களினும் பூவுலகத்தினும் விண்ணுலகத்தினும் பறந்து திரிந்தும் பூதசேனைகளை அடித்துக் கௌவி எங்குஞ் செல்வானாயினன். இவ்வாறு சூரபன்மன் சுற்றிப்பறந்து திரிதலும், சுப்பிரமணியக்கடவுள் அதனை நோக்கி, ''பக்ஷியின் வடிவங் கொண்டு திரிபவனைத் தேரோடு தொடர்ந்து கொல்லுதல் பழியாகும்'' என்று திருவுளஞ்செய்து அங்கு

நின்ற தேவர்களுள் இந்திரன்மீது திருக்கடைக்கண் சாத்தியருளினர். அவ்விந்திரன் எம்பெருமானுடைய திருக்குறிப்பையும் அவர் தன்மீது பேரருள் பாலித்துள்ள தன்மையையும் அறிந்து, அழகிய ஒரு மயிலினுருவை எடுத்து வந்து, அக்கடவுளைத் துதித்து, அவர் சந்நிதியில் ஒரு மரகதமலைபோல் நின்று, பூமி கிழியவும், மேருமலையும் அதனைச்சூழ்ந்த மலைகளுங் குலையவும், திக்குயானைகள் வீழவும், சமுத்திரஜலம் வறக்கவும், திக்கிலுள்ள பாம்புகள் அஞ்சவும் சிறகால் மோதி, "எம்பெருமானே, கேட்டருளும்: பிரம விஷ்ணு முதலாகிய தேவர்கள் யாவரும் தேவரீரை வழிபட, நாயினுங் கடையேனுகிய அடியேன்மாட்டுச் செம்மையாகிய பேரருளை வைத்தீர். ஆதலால் அடியேன் எல்லாச் சிறுமைகளுந் தீர்ந்தேன். உய்யுநெறியையுங் கண்டேன். உம்முடைய அருமைத் திருவடிகளைச் சுமக்கப்பெற்றேன். பொய்யாகிய மாயவாழ்விற் புக்குழலுகின்ற எளிமையையும் இனி நீங்குவேன். நம்மவர்களாகிய தேவர்கள் யாவரையும் சகித்தற்கரிய சிறைக்களத்தில் வீழ்த்தித் துன்பஞ்செய்து எல்லாவுலகங்களையும் ஆண்ட சூரபன்மனுடைய பறவை வடிவஞ் செல்லும் இடங்களிலெல்லாம் சென்றுசென்று போர்செய்து வெல்லும்படி விரைவில் அடியேன்மேல் இவர்ந்தருளும்; அடியேன் சுமந்து செல்லுதற்கு" என்றான். அதனைக்கேட்ட அறுமுகக்கடவுள் தேனினின்றுமிழிந்து, தமது சந்நிதியில் நின்ற இந்திரனுகிய மயிலின்மீது இவர்ந்து வீற்றிருந்து, சூரபன்மனுடைய செலவை நோக்கி இடிபோலக் கூவியார்க்கின்ற அம்மயில் வாகனத்தை நடாத்தி, ஊழித்தீயை அவிக்கும்படி நினைத்துப் பிரசண்ட மாருதம் சென்றுற்போல அவனைத் தொடர்ந்து சென்றார். சக்கரவாகப்பகுதியின் வடிவங்கொண்ட சூரன் அதனை நோக்கி, சமுத்திரத்தைப்போல உரப்பிச் சென்று தாக்க, மயில்வடிவங்கொண்ட இந்திரனும் அவனைநோடு எதிர்த்துப் போர்செய்தான். பறவைவடிவங் கொண்ட இருவரும் மூக்கைநீட்டி உடம்பு முழுவதையுங் கிழித்து இரத்தம் வாயிற்படக் கௌவியிழுத்தும், சிறகுகளாற் புடைத்தும், கால்களாற் குக்கியும் இவ்வாறு பெரும்போர் செய்தார்கள். செய்யும்பொழுது, சக்கரவாகப்பகுதி வடிவங்கொண்ட சூரபன்மன் மயில்வடிவங்கொண்ட இந்திரனைத் தலையிற் பொருந்திய தூவியைப் பறித்து, முகம் முழுதிலும் குத்தி, இரத்தத்தை வீழ்த்தி, கலாபத்தையிழுத்துத் துன்பஞ்செய்தான். அதனைக் குமாரக்கடவுள் பார்த்து அக்கினிபோலச் சிரித்து, வில்லைவளைத்து, சூரபன்மனுகிய சக்கரவாகப்பகுதியினுடைய தலையிலும், முகத்திலும், கால்களிலும், மார்பிலும் சிறைகளிலும் எண்ணிறந்த பாணங்களைத் தொடுத்துச் செலுத்தினர். அவைகள் தன் அங்கமெங்கும் பட்டபொழுது, அவன் பதைபதைத்துச் சிறைகளை உதறி அவற்றைச் சிந்தி, எண்டிசைகளிலும், ஆகாயத்திலும், சமுத்திரங்களிலும், மற்றை எவ்விடங்களிலும் கோபாக்கினி சிதறச் சிறிக்கறங்குபோலத் திரிந்தான். சுப்பிரமணியக்கடவுள் தேவர்கூட்டந் துதிக்க, இந்திரனுகிய மயிலைச் செலுத்திக்கொண்டு சென்று, சரங்களைத்தூண்டி, எவ்விடங்களிலும் அவனைத் துரத்திப் போர்செய்யலுற்றார். அப்பொழுது, அவன் இளைத்து, மனம் மெலிந்து, மிகத் துன்பமுற்றிரங்கி, அக்கினிபோலக் கோபித்து, அறுமுகக்கடவுளுடைய திருக்கரத்திலுள்ள வில்லைக் கறிக்கும்படி எண்ணிவந்தான். அதனை அக்கடவுள் கண்டு, திருக்கரத்திலுள்ள வாட்படையை வீசி அவனுடைய பறவைவடிவை இருதுணியாய் வீழ வெட்டினர். அது கண்டு பிரமா விஷ்ணு முதலிய தேவர்கள்

யாவரும் கூத்தாடினர்கள். அப்போது சூரபன்மன் தேவர்கள் யாவரும் வருந்த அண்ட முகட்டைத் தொடும்படி உயர்ந்து பூமியின் வடிவை யெடுத்து, ஏழுகடலையுந் தூர்த்து, சூரியர்களுடைய தேரைத் தடை செய்து, வாயுக்களியங்கும் வழியை மாற்றி, திசைகளை மூடிநின்றான். முருகக்கடவுள் அதனைப் பார்த்து வெகுண்டு, "சூரபன்மன் செய்கின்ற மாயத் திறம் நன்று" என்று கூறி, வில்லை வளைத்து ஏழு பாணங்களைத் தொடுத்து, "சூரபன்மன் அழியுமியல்பினையும் வானுலகமளவும் எழுந்து நிமிர்ந்து பூமியின் வடிவாய் என்முன் நின்றான். நீங்கள் ஏழு கடல் களின் உருவாகி விரைந்து சென்று அவ்வுருவை அழியுங்கள்" என்று கூறி ஏவினர். அவ் வேழு பாணங்களும் உலகங்களைச் சூழ்ந்து அழிக் கின்ற ஏழு சமுத்திரங்களின் வடிவையெடுத்து, கோபத்தோடும் ஆர வாரத்தோடும் திரைகளை வீசிச் சென்று, சூரபன்மனுடைய பூமி வடி வத்தையழித்து இல்லையாக்கி, தாம் கொண்ட சமுத்திரங்களின் வடிவை நீங்கி, எம்பெருமான்மாட்டு மீண்டு வந்தன. அதனைச் சூரன் கண்டு, மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் அழித்தற்கெழுமாறு போல மிகுந்த ஜலத்தின் வடிவாகி, விண்ணுலகம் வரையும் நிமிர்ந்து, சுப் பிரமணியக் கடவுளுக்கு முன்பு நின்றான். அவர் அதனை நோக்கி, நூறு பாணங்களைத் தொடுத்து, "நீவிர் ஊழித்தீயின் வடிவாய்ச் சென்று இதனை அழித்து வருதிர்" என்று விடுத்தார். அவைகள் பெரிய அக்கினி யின் வடிவாய்ச் சென்று சூரனுடைய ஜல வடிவை இறைப் பொழுதில் உண்டு மீண்டன. சூரன் அதனைக்கண்டு அக்கினியின் வடிவையெடுத்து, அண்டங்காறும் நிமிர்ந்து விளங்கினன். முருகக்கடவுள் அதனை நோக் கித் திருப்புன்முறுவல்செய்து, ஆயிரம் பாணங்களைத் தொடுத்து, "நீவிர் பிரசண்டமாருதத்தின் உருக்கொண்டு சென்று சூரனுடைய மாயங்கள் பலவற்றையும் அழித்து வாருங்கள்" என்றுசெலுத்தினர். அவைகள் விரைந்து சென்று, பிரசண்டமாருதத்தின் உருவையெடுத்து, சூரபன்மன் கொண்ட ஊழித்தீ வடிவையழித்து, அக்கடவுள்மாட்டு மீண்டுவந்தன. சூர பன்மன் மிகுந்த கோபங்கொண்டு வாயுவினுருவையெடுத்து ஆர்த்தான். அதனை அறுமுகக்கடவுள் திருப்புன்முறுவலோடு நோக்கி, இலக்ஷம்பாணங் களை யெடுத்து, "நீவிர் பாம்புகளின்வடிவாய்ச் சென்று சூரபன்மனுடைய மாயத்தை யழித்து வருதிர்" என்று பணித்துத் தூண்டினர். அவைகள் அக்கினிபோலெழுந்து பாம்புகளினுருவங்கொண்டு சூரபன்மனுடைய வாயு வடிவத்தையுண்டு, சுப்பிரமணியக்கடவுண்மாட்டு மீண்டன.

சூரபன்மன் இவ்வாறுக நான்குநாள்வரையும் தொலையாது நின்று சுப்பிரமணியக்கடவுளோடு போர்செய்து, பின்னும் மாயங்களைச் செய்யக் கருதி, பல உருவங்களைக்கொண்டு தோன்றி, ஒரு பக்கத்தில் மும் மூர்த்திகளைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் மற்றைத் தேவர்களையும் அசுரர்களையும் பிறரையும்போல வருவான்: ஒரு பக்கத்தில் இந்திரனைப் போல வருவான்; ஒரு பக்கத்தில் பூதங்களைப்போல வருவான்; ஒரு பக் கத்தில் யமனைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் பேயைப்போல வரு வான்; ஒரு பக்கத்தில் அக்கினியைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் வாயு வைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் சமுத்திரம்போல வருவான்; ஒரு பக்கத்தில் நஞ்சுபோல வருவான்; ஒரு பக்கத்தில் பாம்புபோல வருவான்;

ஒரு பக்கத்தில் முகில்போல வருவான்; ஒரு பக்கத்தில் இடிபோல வருவான்; ஒரு பக்கத்தில் இருள்போல வருவான்; ஒருபக்கத்தில் மலைபோல வருவான்; ஒருபக்கத்தில் தன்னுருவாய் வருவான்; ஒருபக்கத்தில் சூரியனைப்போல வருவான்; ஒருபக்கத்தில் தன் சேனைகளைப் போல வருவான்; ஒரு பக்கத்தில் திக்குயானைகளைப்போல வருவான்; ஒருபக்கத்தில் சிங்கம் போல வருவான்; ஒரு பக்கத்தில் சக்கரவாகப்பகுதி போல வருவான்; ஒரு பக்கத்தில் தாரகனைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் சிங்கமுகனைப் போல வருவான்; ஒரு பக்கத்தில் பானுகோபனைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் அக்கினிமுகனைப்போல வருவான்; ஒருபக்கத்தில் மற்றைப் புதல்வர்களைப்போல வருவான்; ஒரு பக்கத்தில் தருமகோபனைப் போல வருவான்; ஒரு பக்கத்தில் தன் படைத்தலைவர்களைப்போல வருவானு யினன். சூரபன்மன் இவ்வாறு பல வடிவங்களை யெடுத்து யாண்டுஞ் செறிந்து முருகக்கடவுளைச் சூழ்ந்தான். அதனை நோக்கிய தேவர்கள் உலக மழியுங்காலத்தில் அதனிடத்துள்ள உயிர்களைப்போல மனந்தளர்ந்து ஓடி உலைந்தார்கள். அறுமுகக்கடவுள் சூரபன்மனுடைய மாயங்களை நோக்கி, ஆயிரகோடி பாணங்களைத் திருகரத்தில் எடுத்து வில்லிற்பூட்டி, ''அம்புக ளாகிய தெய்வங்காள், நீவிர்சென்று சூரபன்மனுகிய ஒருவன் கொண்ட அவ் வுருவமனைத்தையும் கொண்டு அவனுடைய மாயம் முழுதையும் அழித்து நீக்கி வாருங்கள்'' என்று பணித்துச் செலுத்தினர். அவைகள் விரைந்து போய், கோபம் மிகுந்து, சூரபன்மன் கொண்ட ஒவ்வோருருவிற்கும் எழு மடங்காகிய உருவங்களையெடுத்து, எண்டிசைகளிலும் ஆகாயத்திலும் பூமி யிலும் நெருங்கி, அவனுடைய மாயத்தையழித்து வெற்றியடைந்தன. சூர பன்மன் பெருங்கோபத்தோடு அப்போர்க்களத்திற் றனித்தவனாய் நின் றான். அப்பாணங்கள் ஆகாயவழிக்கொண்டு மீண்டு சுப்பிரமணியக்கடவு ளுடைய தூணியிற் புகுந்தன.

அப்பொழுது சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனை நோக்கி, ''சூரபன் மனே, நீ மேகத்திற்றோன்றி உடனே அழிகின்ற மின்னலைப்போல இங்கே நமது முன்பு எல்லையில்லாத மாயாரூபங்களைக் கொண்டாய். நம்முடைய அம்புகளினால் அவற்றையெல்லாம் அழித்தோம். அழியாத நம்முடைய பெரிய வடிவத்தைக்கொள்வோம்: நீ செய்த தவத்தினாலே காணுதி'' என்று சொல்லியருளி, ''கடல், உலகம், திக்கு, புவனம், அண்டம், தேவர்கள், உயிர்கள் ஆகிய எல்லாம் அறுமுகக்கடவுளுடைய திருமேனியில் அடங்கின வன்றி வேறில்லை'' என்று சொல்ல மிகப்பெரிய ஒரு திருவுருவத்தைக் கொண்டார். அத்திருமேனியில், உள்ளடியில் மலைகளும், புறவடியில் சமுத் திரங்களும், பாதவிரல்களில் இடியும் நக்ஷத்திரங்களும் கிரகங்களும், பரட் டில் வருணனும் குபேரனும் நிருதியும் அரக்கர்களும், கணைக்கால்களில் முனி வர்களும் சிந்தாமணி முதலிய மணிகளும், முழந்தாளில் வித்தியாதரர் முதலாயினோர்களும், தொடையில் இந்திரனும் அவன் குமாரனுகிய சயந் தனும், தொடைமூலத்தில் யமனுங்காலனும், அரையின் முற்பக்கத்தில் அசுரர்களும், விலாப்புறங்களில் தேவர்களும், மூலாதாரத்தில் நாகர் களும், குறியில் அமிர்தமும், நாபியில் சிவராசிகளும், மார்பில் சகலசாஸ்தி ரங்களும், உபவீதத்தில் ஞானமும், உரோமத்தில் அண்டங்களும், அகங் கையில் சகல போகங்களும், புயங்களில் விஷ்ணுவும் பிரமாவும், கைவிரல்

களில் தெய்வப்பெண்களும், கண்டத்தில் ஒலியின் கூட்டங்களும் அக்கினியும், வாயில் வேதங்களும், பற்களில் அக்ஷரங்களும், நாக்கில் சிவாகமங்களும், உதட்டில் சப்தகோடி மகாமந்திரங்களும், நெற்றியில் பிரணவமும், சிரசில் பரமான்மாவாகிய பரசிவமும் இம்முறையே பொருந்தித் தோன்ற அநந்தகோடி சூரியர்கள் ஒருங்கே உதித்தாற்போலப் பேரொளியைக் காலுகின்ற ஒப்பில்லாத தம்முடைய விசுவரூபத்தைக் காட்டிநின்றார். தேவர்கள் அத்திருவுருவத்தை தரிசித்து மனம் நடுக்கமுற்று நின்றார்கள். அறுமுகக்கடவுள் அமைத்த திருக்கரத்தினராய், அவர்களை "அஞ்சாதொழிமின்; அஞ்சாதொழிமின்" என்று திருவருள்புரிந்தார். தேவர்கள் யாவரும் அவருடைய அருண்மொழியைக் கேட்டு, முன்பு தம்மனத்தை விழுங்கிய நடுக்கம் நீங்கி, இடையீடின்றி மலைப் பரிமாணமுடைய துளிகளைச் சிதறும் ஊழிக்காலத்து மேகத்தின் வரவைப் பார்த்து மகிழும் மயிற்சாதிபோல மகிழ்ச்சியோடு தொழுது நின்றார்கள்.

அந்தமும் ஆதியுமில்லாத இந்தப் பரமேஸ்வர வடிவத்தைச் சூரபன்மன் கண்டு, ஆச்சரியமுடையனாய் நிற்ப, முருகக்கடவுள் அவனுக்குச் சிறிது நல்லுணர்ச்சியைக் கொடுத்தருளினர். நல்லுணர்வு பெற்ற அவன் இவ்வாறு சொல்வான்: "இப்பாலகர் எண்ணில்லாத அவுணசேனைகள் யாவையும் ஒரு நொடிப்பொழுதிற் சங்கரித்து அண்டங்கள் தோறும் என்னெடு போர்செய்து, என்னைச்சேர்ந்த வீரர்கள்யாவரையும் அழித்து, இந்திரஞாலத்தேரையும், என்னிடத்து மீண்டுவாராவண்ணம் தடுத்து, மிகுந்த வலியையுடையேனாகிய யான் செலுத்திய படைக்கலங்களெல்லாவற்றையும் நீக்கி, யான்கொண்ட மாயம் முழுவதையும் சரங்களால் மாற்றி, அண்டங்களும் புவனங்களும் தேவர்களும் பிறவும் தம்மிடத்தேகாணுகின்ற ஒரு வடிவத்தைக்காட்டி, என் கண்முன்னே நின்றார். அழகிய மயில்வாகனத்தின்மீது விளங்கிய இந்தக் குமாரரை அந்நாளிற் பாலகன் என்று எண்ணியிருந்தேன். இத்தன்மைகளை அறிந்திலேன். பிரம விஷ்ணுக்களும் மற்றைத் தேவர்களுக்கும் யாவர்க்கும் மூலகாரணமாய்நின்ற மூர்த்தி இம்மூர்த்தியன்றே! முன்னே ஒற்றுவனாகவந்த வீரவாகு வேலாயுதகரராகிய இவரை 'விருப்பு வெறுப்பின்றி நின்ற பராபரமுதல்வர்' என்றே சொன்னான். அவன் சொல்லியவற்றையெல்லாம் உறுதியெனக் கொண்டிலேன். இன்றைக்கு இப்பொழுது இவரே ஈசன் என்னுந் தன்மையைக் கண்டேன். மிக உயர்ந்த வடிவத்தைக் கொண்டு நம்மிடத்து வந்த அத்தூதுவன் சொன்ன வார்த்தைகள் உண்மையாம்; யான் பெற்ற ஆயிரத்தெட்டண்டங்களும் பிறவும் பெருமையிற் சிறந்த இவ்வறுமுகக்கடவுளுடைய திவ்விய சரணாரவிந்தத்திலுள்ள ஓர் உரோமத்திலே தோன்றி நிற்கின்றன. தேவர்களையும் முனிவர்களையும் பிறரையும் மற்றையெல்லாப் பொருள்களையுங் காட்டி இக்கடவுள்கொண்ட திருமேனி முழுவதையும் யாவர் குறித்தறியவல்லார்! உடம்பெங்கும் கண்களைப் படைத்தவர்களுக்கும் இதனைக்காண அனந்தகோடி கற்பகாலம் கடக்கும். குமாரக்கடவுள் கொண்ட இந்தப் பேரழகு பொருந்திய விசுவரூபத்தில் உள்ள ஒளியும் சிரும் இளமையும் அழகும் ஆகிய இவைகளெல்லாம் உலகில் வேறு யாவரிடத்துள்ளன! ஆகா! அற்புதத்தோடு பலகாற் பார்க்கினும் இன்னும் என்பார்வையும் தெவிட்டிற்றில்லை. சமாஞ்தரராய் இங்கே நிற்கின்ற இக்கடவுளுடைய விசுவரூபத்தை நோக்கி மிகவும் அஞ்சுவதன்றி,

தேவர்களுள்ளும் யார் இதனைக் காணவல்லார்! யான் அழியாத சிறந்த வரத்தைப் பெற்றுள்ளேனுதலாற் காண்கின்றேன். ஆயிரகோடி மன்மதர் களுடைய அழகெல்லாம் ஒருங்கு திரண்டு ஒன்றுயினவாயினும் அது இந்தக் கடவுளுடைய நிருமலமாகிய திருவடியின் திவ்விய சௌந்தரியத்துக்கு ஆற்று தென்றல், இவருடைய விசுவருபத்திற்கெல்லாம் உவமையை யாவர் விரித் துச் சொல்லவல்லவர்! என்னுயிர்போன்ற தம்பியாகியு சிங்கமுகனும் குமார னுகிய இரணியனும் 'வேலாயுதகரராகிய கந்தசுவாமியைப் பாலகன் என்று எண்ணுதே; அவர் அரிபிரமேந்திராதிதேவர்கள் காணுத சிவபெருமானே யாகும்' என்று சொன்னர்கள். அவர்கள் சொன்னவாறும் சத்தியமேயாயது. பெருமையிற் சிறந்த இக்குமாரக்கடவுளுடைய திருவடிவு அடிமுதல் முடி காறும் எண்ணில்லாத ஊழிகாலம் எத்திறம் நோக்கினலும் கண்களுக்கு அடங்காது; நினைத்தால் மனத்திற்கு அடங்காது. இவ்வியல்பையுடைய இக் கடவுள் என்மாட்டுப் போருக்கு வந்தாரென்பது என்னிடத்து வைத்த அரு ளென்றே நிச்சயிக்கலாம். என்னுடைய மாறுபாடாகிய சினம் முழுதும் தீர்ந்தன; போரிலுக்கம் குறைந்தது; உரோமங்கள் பொடித்தன; கண் களில் ஆனந்த பாஷ்பம் உண்டாயிற்று; தமியேனுக்கு இவரிடத்தே அன்பு பிறந்தது; மனம் உருகியது; அதுமாத்திரமா, என்புகளும் உலுமுகத்து மெழுகுபோல உருகுகின்றன. எனது அகந்தை போயிற்று; ஞானம் உண் டாயிற்று; வலப்புயமும் வலக்கண்ணும் துடித்தன. எல்லாவண்டங்களும் அவற்றிலுள்ள பொருள்கள் முழுதும் வெளிப்படுதற்கிடமாகி இத்தேவ நாயகருடைய பாரமேசுர வடிவத்தைத் தரிசித்தேன். இது நான் முன் செய்த தவத்தின்பயனன்றே! என்கால்கள் இக்கடவுளைப் பிரதக்ஷிணஞ் செய்தல் வேண்டும்; கைகள் தொழுதல்வேண்டும்; சிரசு வணங்கல் வேண் டும்; நாக்குத் துதித்தல்வேண்டும்; நான் திமைமுழுதும் நீங்கி இவ்வாறு இவருக்கு அடிமையாய் வாழ்தலே என்மனம் விரும்பும்; மானம் ஒன்றே என் னைத் தடுத்தது. என்பகைவர்களாகிய தேவர்கள் பொருட்டுவந்து மிகந்த போரைச்செய்த இக்கடவுளுடைய உருவத்தைக் காணின், முனிவதே எனக் குத் தகுதியாம். அஃதின்றி என்னுணர்வும் உடலும் அக்கினியிற்பட்ட வெண்ணெயேபோல வலியழிந்து உருகின வென்றல், அவை இவர்வயத்தன வன்றி என்வயத்தனவாமா! மாலையையணிந்த திருமார்பையுடைய இப் பெருமான் என்னெடு இந்நாள்காறும் நெடிய போரைச்செய்து பிரியாத வராய் நின்றதெல்லாம் இவருடைய திருவிளையாடலின் இயற்கையென்றே அறிந்தேன். அஃதன்றி, இவர் என்னைக் கொல்லவேண்டுமென்று கருதினல், யார் அதனைத் தடுக்கவல்லார்! நம்மிடத்து ஒருகுற்றமும் செய்யாத தேவர் களை யான் சிறைசெய்ததெல்லாம் தீது என்று பலரும் சொன்னர்கள். அத் தேவர்களைச் சிறைசெய்தமையினுற்றன் வேதங்களும் அரிபிரமேந்திராதி தேவர்களும் காணப்பெறுத இக்கடவுள் இங்கு எழுந்தருளிவரப்பெற்றேன். ஆகையால் யான் தேவர்களைச் செய்தது நன்றேயாயிற்று. ஒரு தனிமுதல் வராகிய இக்கடவுளுடைய திருமுன்பு நின்று இந்நாள்காறும் போர்செய் தேன். ஆகா! இனி மனந்தளரேன். மேலாகிய ஈதோர் பெருமையைப் பெற்றேன். வீரனும் நானேயாயினேன். என்றும் இப்புகழே நிலைபெறும். இவ்வுடம்பு நிலைபெறுவதுண்டோ! யான் தேவர்களுடைய சினறையை நீக்கி, அருள்வள்ளலாகிய இக்கடவுளை வணங்கி, உடம்போடு கூடிய

இவ்வுயிரைப் பாதுகாத்து, எளியர்போல் இருப்பேனுயின் எனக்கு அது தக்க தாமா? ஆயிரகோடியண்டங்களிலும் பரந்த என் புகழும் வீரத்தன்மையும் அழிந்துவிடாவோ?'' என்று இவைபோல்வனவற்றைச்சொல்லிச் சூரபன்மன் சுப்பிரமணியக்கடவுளுடையசந்நிதானத்தில்நின்றுன். அப்பொழுதுஎவர்க்கு மேலவராகிய அறுமுகக்கடவுள் யாவர்க்கும் நினைத்தற்கரிய பெருமையை யுடையதாய் நின்ற பாரமேசுவரவடிவத்தை நீக்கி, மயில்வாகனத்திலிவர்ந் திருந்த பழைய திருவுருவத்தைக் கொண்டு, சூரபன்மனுக்குக் கொடுத்த ஞானத்தை நீக்கி, அவனை முன்போல அகங்கார வயத்தனுகச்செய்தார். மூலகாரணராகி, தாமே ஆன்மாக்கண்மீது வைத்த திருவருளினுல் அவற்றிற் குத் தனுகரணபுவனபோகங்களைக் கொடுத்துப் பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்து, அவ்வுயிர்க்குயிராய் வியாபித்து நிற்கின்ற பரமசிவனுடைய திருக் குமாரராகிய சுப்பிரமணியக்கடவுளுக்கு, முன்பு ஞானத்தைக் கொடுத்துப் பின்பு அதனை மாற்றிச் சூரபன்மனை மயக்கஞ்செய்யுஞ் சூழ்ச்சி அரியதாமோ?

அப்பொழுது, ஆகாயத்திற் பாலசந்திரன் உதிக்க நீங்கிய இருள் அது மறைந்தபொழுது எழுந்தவாறுபோலச் சூரபன்மன் முருகக்கடவுளுடைய திருவருளினுலே தன் மனத்தில் உண்டாகிய ஞானம் நீங்கிப் பழைய கோப மும் பகையும் உண்டாகப்பெற்று, மயில்வாகனரூடராய் நின்ற அக்கடவுளு டைய தோற்றத்தைக் கண்டு, தணித்தற்கரிய சினம் மேற்கொண்டு, போரில் ஊக்கஞ் செய்து, ''என்வலிமை அழகிது'' என்று கையோடு கையைத் தட்டி, தலையை அசைத்துச் சிரித்து இவற்றைச் சொல்வான்: ''பாலகனுகிய இந்தக்கள்வன் என்னேடு போர்செய்தற்காற்றுதவனுய் தான் கற்ற மாயங் களுள் ஒன்றைக் காட்டி என்னை இங்கே மயக்கிவிட்டான். அந்த மாயத் தைக் கெடுத்தேனென்றுல் எனக்கு யார் ஒப்பாவார்! என்றும் காயமழியாத யான் கருத்தழிகின்றதுண்டோ! இந்தப் பாலகனேடு போர்செய்து இவனை இனிமேல் மெல்ல மெல்ல வெல்லுகின்றேன். அதுநிற்க. இப்பொழுது இந்த் பெரியபோரை மூட்டி நின்ற தேவர்களையெல்லாம் முன்னே தின்று உயிரைப்பருகி என் கோபம் சிறிது நீங்குவேன்'' என்று கூறினுன்.

இதனைத் துணிவாகக்கொண்ட சூரபன்மன் பின்னும் தீயதாகிய ஒரு மாயமந்திரத்தை உச்சரித்து, சூரியனும் மயங்கும்படி பூமியும் ஆகாயமும் ஆகிய எங்குமாக மிகப்பெரியதோர் அந்தகாரவடிவங்கொண்டு, அதனுள் மறைந்து நின்று ஆரவாரிப்பானுயினுன். பாற்கடலிலே நஞ்சமெழுந்தாற் போல எங்குமாய்ச் செறிந்த அந்தகாரவடிவைத் தேவர்கள் கண்டு, இது சூரபன்மனுடைய மாயமென்று கலக்கமுற்றார்கள். அப்பொழுது சூரபன் மன் அந்தஇருளினிடையே பாய்ந்து, வரிசையாகிய மலைச்சிகரங்கள்போன்ற பல தலைகளையும் அளவில்லாத கைகளையுமுடைய ஒரு பெரிய வடிவத்தை விரைந்தெடுத்து, தேவர்கூட்டங்களை உண்ணும்படி நினைத்து, ஆகாயத் திற் கிளர்ந்து சென்றுன். அவன் எழுதலைத் தேவர்கள் ஞானத்தினுலுங் குறிப்பினுலும் அறிந்து, ''இவன் நம்மைக் கொல்லும்படி வருகின்றுன்'' என்று எண்ணி, இடமிடங்கள்தோறும் சிதறி நில்லாதோடி, யமனை எதிர்ப்பட்ட உயிர்களைப்போல இரங்குவாராய், ''அடைந்த அன்பர் களுக்கு இனியவரே, அடைக்கலம்; ஞானமுதல்வரே, அடைக்கலம்; முனி வர்களுக்குத் தலைவரே, அடைக்கலம்; சோதிசொரூபரே, அடைக்கலம்;

நினைத்தற்குமரிய கடவுளே, அடைக்கலம்; எல்லாவற்றையும் படைத்த கடவுளே, அடைக்கலம்; நெற்றிநாட்டத்தையுடைய சிவபெருமான் பெற்றருளிய கடவுளே, அடைக்கலம்; அடைக்கலம். தேவாதிதேவரே, அடைக்கலம்; சூக்குமசித்தாயுள்ள கடவுளே, அடைக்கலம்; பகைவர்களாகிய பாம்புகளுக்கு இடியேறு போல்பவரே, அடைக்கலம்; வேற்படையையுடைய நிருமலரே, அடைக்கலம்; பொய்யடிமையில்லாத புலவர்களுக்கெளியவரே, அடைக்கலம்; பன்னிரண்டு திருப்புயங்களையுடையவரே, அடைக்கலம்; மும்மூர்த்திகளுமாய் நின்ற முதல்வரே, அடைக்கலம்; அடைக்கலம்.

நண்ணினர்க் கினியா யோலம் ஞானநா யகனே யோலம்
பண்ணவர்க் கிறையே யோலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற் கரியா யோலம் யாவையும் படைத்தா யோலம்
கண்ணுதற் பெருமா னல்குங் கடவுளே யோல மோலம்.

தேவர்க டேவே யோலஞ் சிறந்தசிற் பரனே யோலம்
மேவலர்க் கிடியே யோலம் வேற்படை விமலா வோலம்
பாவலர்க் கெளியா யோலம் பன்னிரு புயத்தா யோலம்
மூவரு மாகி நின்ற மூர்த்தியே யோல மோலம்.

சூரபன்மன் இராக்காலத்திலெழுந்த மேகம்போலச் செறிந்த இருளுருவில் மறைந்துவந்து எங்களை உண்ணும்படி செல்வான்; அடியேங்கள் அவனுக்குத் தப்பியோடவும் வலிமையில்லோம்; சுவாமீ, இனி எங்கே உய்வோம்? இறைப்பொழுதும் நீர் தாமதஞ்செய்யாதொழியும்; அவனுடைய உயிரையுண்டு எங்களுயிரைக் காத்தருளும்'' என்று பிரார்த்தித்தார்கள். ''தேவரீர் சிறிது காலதாமதஞ் செய்தால், இவன் இருளில் மறைந்து நின்று எல்லாவற்றையுந் தானே உண்பான். இதனைத் தேவரீர் திருவுளஞ் செய்திலீர்போலும். இப்பகைவனுடைய உயிரை விரைந்து கவருதிர்'' என்று மயிலுருவங்கொண்டு சுப்பிரமணியக்கடவுளைத் தாங்கி நின்ற இந்திரனும் அவரை வேண்டினன்.

அத்தேவர்களுடைய வேண்டுகோளையும் சூரபன்மனுடைய மாயையின் வலியையும் முருகக்கடவுள் திருவுள்ளத் தடைத்து, தம்முடைய ஒரு திருக்கரத்திலிருக்கும் வேற்படையை நோக்கி, ''இச்சூரபன்மனுடைய மார்பைப் பிளந்து விரைவில் மீள்வாய்'' என்று அதனை அவன்மீது விரைவிற் றூண்டினர். அவ்வேற்படை ஆயிரகோடி சூரியர்களைப்போலப் பிரகாசித்து, அக்கினிச் சுவாலைகளைக் கான்று செல்ல, சூரபன்மன் கொண்டபெரிய இருள்வடிவமுற்றும் உடனே நீங்கியது. அவன் தன்னுடைய மாயம் அழிந்ததையும், வேற்படை எதிரே வருவதையும் நோக்கி, ''அழியாத வரத்தினையுடைய என்னை இப்பாலகன் விடுத்த வேற்படை என்ன செய்யும்'' என்று நினைத்துச்சிரித்துப் பெருஞ்சீற்றங்கொண்டு, ''பூமியையும் திக்குகளையும் மேல்கீழுலங்களையும் பிரமன் முதலாகிய உயிர்களோடு அழித்து அதன்மேல் இவ்வேற்படையை அழிப்பேன்'' என்று, சமுத்திரமத்தியிற் சென்று, அக்கினிபோலத் தளிர்களையும் புகைபோல இலைகளையும் பொன்போலப் பூங்கொத்துக்களையும் ஈன்று, மரகதமணிபோலக் காய்த்து, மாணிக்கமணிகள்போலப் பழுத்து, மேகங்களைப்போலக் கொம்பர்களைப் போக்கி, அண்டகூடமளவும் உயர்ந்து, திகந்தழ்வரையும் வளார்களை

நீட்டி, பூமியைத் தாங்குகின்ற ஆதிகூர்மம்வரையும் வேர்களே ஓட்டி, பச்சிலைகள் நெருங்கி, கொம்பர்களின் சூழ்வினற் சமுத்திரங்களிலும் விண்ணிலும் மண்ணிலும் நிழலைப் பரப்பி, முருகக்கடவுள் விடுத்த வேற் படைக்கு முன்னரே பருத்த அரையையுடைய ஒரு மலைபோல இலக்ஷம் யோசனை அகன்ற அரையினையுடைய ஒரு மாமரவடிவாய் நின்றான். இங்ஙனம் மாமரவடிவாய் நின்ற சூரபன்மன் தான் இறப்பதைச் சிந்தியாதவனாய், ஆதிஷேசன் பாரத்தைத் தாங்கமாட்டாமல் வருந்தவும், பிரசண்ட மாருதம் வீசவும், கொம்பர்களால் ஆகாயத்தையும் திசைகளையும் மோதி, தலைமுதல் அடிவரையும் மிகவுந் தள்ளாடி, பல சிகரங்களோடு கூடிய மேருமலை அசைந்தாற்போலத் தன்வடிவை யசைத்தான். அதனற் பூவுலகங்கள் இடிந்து சரிந்தன; ஏழு பாதலங்களும் பொடிந்தன; ஆதிகூர்மமும் நாகங்களும் புரண்டன; திக்கு யானைகள் அழிந்தன; சமுத்திரங்கள் கரைபுரண்டு ஒன்றுயின; சீவராசிகள் மடிந்தன; மலைகள் மறிந்தன; நக்ஷத்திரங்களும் உதிர்ந்தன; கிரகங்கள் தலைநடுங்கி ஓடின; சூரியன் தேரோடு குதிரையுந் தானுமாய்த் தியங்கினன்; சந்திரன் தான் ஏறிச் செல்லும் விமானத்தை நீங்கி ஓடினன்; மற்றைத்தேவர்கள் அஞ்சி மேருமலையிலும் கைலாசமலையிலும் புகுந்தார்கள்; பெருமையையிழந்த சுவர்க்கவுலக முழுதும் அழிந்தன; அதற்கப்பாலுள்ள தவலோகமும் சத்தியலோகமும் வைகுண்டலோகமும் பிளந்து வீழ்ந்தன; இனிச் சொல்வதென்னை? அண்டமுகடும் தகர்ந்தது. இவ்வாறுகச் சமுத்திரத்தின் மத்தியில் மாமரவடிவாய் நின்ற சூரபன்மனுடைய செயலையும் உருவையும் மனக்கொள்கையையும் வலியையும் சீரையும் தேவாதிதேவராகிய முருகக் கடவுள் விடுத்த வேற்படை நோக்கி, கொடிய கோபங்கொண்டு, தேயுவண்டங்களும் பிருதிவியண்டம் ஆயிரகோடியினுள்ள, அக்கினிகளும் ஒருங்குசேர்ந்தாற்போல மேலே யுயர்ந்தொழுகி, பெரியோர்கள் அஞ்சத்தக்க தோற்றத்தைக் கொண்டு நடந்தது. அது பிருதிவியண்டங்களையும் ஏனைப்பூதவண்டங்களையும் அவற்றிலுள்ள ஆன்மகோடிகளையும் அழிக்கும் படி தோன்றும் சங்காரகருத்தாவாகிய உருத்திரமூர்த்தியைப் போலவும், ''நாமே பரம்பொருள்'' என்று தருக்குற்ற பிரமவிஷ்ணுக்களாகிய இருவரும் அஞ்சி நீங்க முடிவும் முதலுமின்றி யெழுந்த அருணசலம் ஆகாயத்திற் சென்றுற்போலவும் சென்றது. பிரம விஷ்ணுக்களுடைய வலிமையைச் சோதித்த சிவபெருமானுடைய சூலமேயென்பதல்லது, பிறவிப் பிணியையுடைய மற்றை யெந்தத் தேவர்களுடைய படையை அதற்கு உவமையாகச் சொல்வது! அவ்வேற்படை பூமியும், ஏழ்கடல்களும், பெரும்புறக்கடலும், வானுலகமும், மலைகளும், எண்டிசைகளும், அண்டஅடுக்குக்களும் ஆகிய எவ்விடங்களிலும் அக்கினிச்சுவாலைகளின் கற்றைகளே ஒருங்கே சுக்கியது. அவைகள் பூமியிற் பரந்தன; சமுத்திரங்களைச் சுற்றின; திசைகளிலும் ஆகாயத்திலும் சூழ்ந்தன. கைலாசமலையொன்று தவிர மற்றை மலைகளெல்லாவற்றினுஞ் செறிந்தன; அண்டச்சுவரிலும் பற்றின. இவ்வாறுக அவ்வேற்படைக்கடவுள் கோபத்தோடு சென்று, சூரபன்மனுகிய மாமரத்தைச் சங்கரித்தது. மாமரவடிவாய் அண்டகூடத்தையும் அலைத்த சூரபன்மன் அரற்றுதலோடு வெட்டுண்டு வீழ்ந்தும் முன்னளிற் பெற்ற வரத்தினல் இறந்திலன் என்றல், பெருமையாகிய தவமேயன்றி வலியது

பிறிதொன்றுண்டோ! சூரபன்மன் தான் கொண்ட மாமரவடிவு அழிதலும், மனத்திற் கோபம் மிக, விரைந்து தன் பழைய வடிவைக்கொண்டு, உடைவாளை உறையினின்றுங் கழற்றி, போர்செய்ய எண்ணி, ஆர்த்து எதிர்த்துச் சீறினன். வேற்படை அவனுடைய மார்பைப் பிளந்து உடம்பை இருகூறுக்கிச் சமுத்திரத்தில் வீழ்த்தி, வேதங்கள் எங்கும் கோஷிக்க வானுலகிற்போய், தேவர்கள் துதித்துச் சிந்துகின்ற பூமழைகளுக்கிடையே சென்று, உக்கிரவடிவம் நீங்கி, அநுக்கிரகவடிவங்கொண்டு, தேவகங்கையில் மூழ்கி, தேவர்களுடைய துன்பத்தை நீக்கியருளிய எம்பெருமானுகிய முருகக்கடவுளுடைய திருக்கரத்தில்வந்து வீற்றிருந்தது.

சிவபெருமான் கொடுத்த வரத்தினால் அழியாத சூரபன்மன் மீட்டு மெழுந்து, சுப்பிரமணியக்கடவுளுக்கு அடிமைப்படும் முறையிற் சேர்த்துகின்ற முன்னையூழ் செலுத்துதலினாலே பிளவுண்ட தன் இரண்டுகூறும் கோழியும் மயிலுமாகி, மாணிக்கமலையொன்றும் மரகதமலையொன்றும் கால்களையும் சிறைகளையும் பெற்று, மேகங்கள் அழிய ஆர்த்து, முறையே ஆகாயத்திலும் பூமியிலும் சென்றுற்போல தேவசேனாபதியும் அருட்பெருந்தகையும் ஞானநாயகருமாகிய அக்கடவுளை நாடி வைரம்பொருந்திய மனத்தனாய், தேவர்கள் அஞ்சி ஓடும்படி போர்ச் செருக்கோடு அவருடைய திவ்வியசந்நிதானத்தில் வந்தான். சுப்பிரமணியக்கடவுள் அவன்மீது திருவருணோக்கஞ்செய்தார். அவன் ஞானிகளுடைய தரிசனவேதியினுற் காரிரும்பு செம்பொன்னாற்போல அத்திருவருட் பார்வையாற் பகைமை நீங்கி ஞானம்பொருந்திய மனத்தினனாய் நின்றான். [எத்துணைத் தீவினைகளைச் செய்தோராயினும் சுப்பிரமணியப்பெருமானுடைய திவ்விய சந்நிதானத்தில் வந்தால் தூயோர்களாய் மேற்கதியை அடைவாரென்பதை ஆகமப் பிரமாணங்கொண்டு ஆராயவும் வேண்டுமோ! அவரோடு இந்நாள்வரையும் போர்செய்த மாயையின் புதல்வனுகிய சூரபன்மனுமன்றே அவருடைய எல்லையில்லாத திருவருளைப்பெற்று உய்ந்தான்.] அப்பொழுது, அறுமுகக்கடவுள் தம்முடைய திருவருளினாலே ஞானத்தைப் பெற்ற கோழியை நோக்கி, "நீ விரைவிற் கொடியாய் நம்முடைய தேரிற்போய்க் கூவுதி" என்று பணித்தார். அது "இப்பணி தக்கதே" என்று சொல்லி ஆகாயத்திலெழுந்து போய், இப்பிருதிவியண்டங்கள் இடியவும், இடியேறு அஞ்சவும், கொடியாகிய அக்கினிதேவனும் வெருவவும் ஆர்த்து, அத்தேரின்மீது கொடியாயிருந்தது. பின்பு முருகக்கடவுள் இந்திரனுகிய மயிலினின்றும் இறங்கி, ஞானத்தைப் பெற்றுத் தமது குறிப்பின்வழியொழுகி நின்ற சூரனுகிய மயிலின்மீதேறி, "நம்மைச் சுமப்பாய்" என்று கூறி, அதனை வாகனமாகக் கொண்டு பூமியிலுந் திசைகளிலும் வானுலகத்திலும் நடத்துவாராயினர். அம்மயில் சமுத்திரங்கள் உடையவும், மேருமலை இடியவும், பூமி வெடிக்கவும், அக்கினி பதைபதைத்தொடுங்கவும், சுழல்காற்றுத் துடிக்கவும், அண்டகூடம் நடுங்கவும், ஆதிசேடனும் மற்றைப் பாம்புகளும் பதைக்கவும், இராகுகேதுக்கள் உட்கவும், கலாபத்தை வீசி, இடித்தொகைகள் புரள ஆர்த்து, உலாவியது. வேலாயுதகரராகிய முருகக்கடவுள், அனந்தகோடி சூரியர்கள் ஒன்றுய்த் திரண்டு சூற்கொண்ட மேகங்களுடைய ஆகாயத்திற் செல்லுந் தன்மைபோல, மரகதமணியொளி மிகுந்த மயில்வாகனத்தின்மீது வீற்றிருந்து

கொண்டு அதனைச் செலுத்தினர். விட்டுணுவானவர் பூமியையும் பிரமாவையும் படைக்கும்படி முகிலுருக்கொண்டு பலநாட் பரமசிவனைச் சுமந்ததுபோலச் சூரனுகிய மயில் வீராதிவீரராகிய முருகக்கடவுளைச் சுமந்தது. ஏழுகடல்களிலும் பொருந்திய வடவாமுகாக்கினிகள் முழுதும் ஒரேவடிவாய் அக்கடல்களின்மீது வந்தாற்போல மயில்வாகனரூடராய் எழுந்தருளிவந்த அறுமுகக்கடவுள் மீண்டு மகேந்திரபுரியிலுள்ள போர்க்களத்தையடைந்து, மயிலுருவாயும் கோழியினுருவாயும் நின்ற இந்திரனையும் அக்கினியையும் நோக்கி, ''விரைவில் உங்கள் பழைய வடிவை அடைகுதிர்'' என்று அருளிச்செய்தார். அவர்களும் அப்பொழுதே பழைய வடிவங்களாக்கொண்டு, அக்கடவுளுடைய திருவடிகளில் வீழ்ந்து பலகால் வணங்கித் துதித்து அஞ்சலித்து, மனமும் என்பும் உருகவும், கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரியவும், உரைதடுமாறவும், உடல் புளகமரும்பவும், மதுவையுண்ட வண்டுகள்போல மிகுந்த மகிழ்ச்சியிற் சிறந்து நின்றார்கள். வேற் படையையுடைய அறுமுகக்கடவுள் சூரபன்மனைச் சங்கரித்து மயிலை வாகனமாகச் செலுத்திக்கொண்டு வந்ததை அப்போர்க்களத்திலே நின்ற பூதகணங்களும் மற்றை வீரர்களும் வீரவாகுதேவரும் கண்டு, அவருடைய திருவடிகளைச் சென்று வணங்கி, ஆரவாரித்துச் சூழ்ந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## தேவர்கள் போற்று படலம்.

தமக்கு நிகராவார் ஒருவரும் இல்லாத நிருமலராகிய அறுமுகக்கடவுள் வேற்படையினுற் சூரபன்மனுடைய உடலைப்பிளந்து அழகிற்சிறந்த மயில்வாகனரூடராய்த் தோன்றும்பொழுது, அரிபிரமேந்திராதிதேவர்கள் தங்கள் கண்களுக்கு ஓர் அரிய அமிர்தத்தைப் பெற்றாற்போல அவருடைய திருக்கோலத்தைத் தரிசித்து, ஆரவாரித்தெழுந்து, துள்ளி ஆடிப்பாடி, புளகரும்பி, புஷ்பமழைகளைப் பொழிந்து, திருவருளை நினைத்து அக்கடவுளைத் தொழுது வந்துசூழ்ந்து, மகிழ்ச்சியிற் சிறந்து, தோத்திரஞ்செய்வாராயினர்: ''எம்பெருமானே, தேவரீர் வேற்படையை விடுத்துச் சூரபன்மனைச் சங்கரித்தீரல்லீர்; நும்மை வணங்குகின்ற அடியேங்களுடைய வினையின் வேரைச் சங்கரித்தீர். இனி எமக்கு வேறோர் குறையுண்டோ? வலிய அவுணர்கள் நூற்றெட்டு யுகங்காறும் ஒழியாமல் துன்பங்களையே செய்ய, தேற்றுவிக்கும் வாயில் ஒன்று மின்றித் திரிந்த அடியேங்களை ஆளுதற்கன்றோ, எம்பெருமானே, தேவரீர் ஆறுமுகங்கொண்டு திருவவதாரஞ் செய்தருளினீர்? எம் பரமபிதாவே, நீதியில்லாத அசுரர்கள் செய்த பல தீமைகளினின்றும் நீங்கினேம்; பழிகளை அகன்றோம்; வேதாசாரத்தையும் பழைய செல்வங்களையும் பெற்றோம்; எங்களுக்கு இனி யாதொரு குறையுமில்லை. அவுணர்கள் மிகவும் வருத்த இந்நாள்காறும் இறந்தவர்போலப் புலம்பித் திரிந்தோம். இன்றைக்குச் சூரபன்மனைக் கொன்று தேவரீர் எமக்கு அருள்செய்தமையினுல் நீங்கிப்போன உயிர் மீண்டு வந்த தன்மையையடைந்தோம். காண்பானும் காட்சியும் காட்டுவானும் காட்சிப்பொருளும் ஆகிய இவையெல்லாம் தேவரீர் என்பதை, எம்பெருமானே, அடியேங்கள் அறிந்தோம். அதனுல் இனி வெவ்

விய பிறவியினின்றும் நீங்கி மோக்ஷத்தையும்அடைவோம். எம்பெருமானே, எங்களுக்குத் துன்பத்தைச் செய்த அவுணர்கள் யாவரும் அழியும்வகையைச் செய்து அடியேங்களைக் காத்தருளினீர். இனி வேறொன்றையும் வேண்டோம்; மேலாகிய தேவரீருடைய திருவடிகளுக்கே தொண்டு பூண்டோம்; இனிப் பிறரைப் புகழோம்'' என்று அரிபிரமேந்திராதிதேவர்கள் யாவரும் மகிழ்ச்சியோடு தோத்திரஞ்செய்தார்கள். வேலாயுதகரராகிய முருகக்கடவுள் அதனைத் திருச்செவி மடுத்து, அவர்களுக்குத் தம்முடைய பெருங்கருணையைப் பாலித்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::::

## இரணியன் புலம்புறு படலம்.

இவ்வாறுகிய சமயத்தில், மகேந்திரபுரியில் இறவாதொழிந்த அவுணர்களிற் சிலர் விரைந்து சென்று, ''சுப்பிரமணியக்கடவுள் விடுத்த வேற்படையினுற் சூரபன்மன் இறந்தான்'' என்பதனை அவன் பட்டத்துத் தேவியாகிய பதுமகோமளைக்கும் மற்றைத் தேவியர்களுக்கும் சொன்னர்கள். அவ்வார்த்தை செவியிற்புகுதற்குமுன் பதுமகோமளை இடியேறுண்டபாம்புபோல உயிர் நீங்கினள். மனைவி நாயகன்மாட்டுச் செய்யும் அன்பினுள் தலையாய அன்பு அதுவன்றே! சூரபன்மனுக்கு மனைவியர்களாகிய மற்றைப் பெண்கள் வயிற்றிலடித்தழுது, அக்கினிக்குண்டமொன்றை உண்டாக்கி, முன்பு இறந்த பதுமகோமளையினுடம்பை அதிலிட்டு, தாமும் வீழ்ந்திறந்தார்கள். அப்பொழுது மாலைக்காலமாயிற்று. அந்நகரலக்ஷ்மி நீங்கினள். இதுநிற்க.

இரணியன் தன்பிதா இறந்ததனையும், அவன் சேவலும் மயிலுமாய்ச் சுப்பிரமணியக்கடவுள்மாட்டு வந்ததனையும், கண்டு கலங்கி, மனநொந்து, ஆகாயத்தில்நின்று புலம்புவானுயினன்: ''மகாராஜனே, நன்றென்பதையறியாய். நான்சொன்ன வாசகங்களொன்றையும் சிறிதும் உறுதியெனக் கைக்கொண்டாயில்லை. நீ இறக்கும்படிக்கா சிவகுமாரரோடு போர்செய்தாய்! நீ முன்போலிருக்க யான் காண்பது என்றைக்கு? முன்பு உன்பக்கமாய் நின்று பகைவர்களுக்கு அஞ்சாது போர்செய்து அதனற் பெரும்பழியினின்றும் நீங்காதேனுய், என்னுயிரைப் பாதுகாக்கக்கருதி அவர்களுக்கு ஒளித்தோடிய யான், 'இவன் தன்பிதாவினிடத்து அன்புடையன்போலும்' என்று அயலார் எடுத்துச் சொல்லுமாறு இப்பொழுது துன்புடையேன்போலத் துயரமுற்றயருகின்றேன். பகைவர்களுடைய வலிமையைக்கண்டு உன்னைப் போரிலே பாதுகாவாதொளித்தோடிய அறிவிலியாகிய என்முன்னே வெளிப்படாமல் எங்கே யொளித்தாய்? பிதாவே, சொல்லுதி. பிறப்பாற் புத்திரன் போன்று செயலாற் கூற்றுவன் போன்ற என்னை இன்னுங்கூட எண்ணுகின்றனையோ! திருக்கரத்திலே அக்கினியை யேந்திய சிவபெருமான் தந்த வரம் மெய்யாம்; நீ ஒருக்காலும் இறவாய், அவருக்குப் புதல்வரென வந்துதோன்றிய கந்தசுவாமி அவையெல்லாம் பொய்யாகும்வண்ணம் உனக்குக் கூற்றுவராயினரே! நிலையில்லாத உடம்பை நிலையெனக் கருதிப் பலருங்கண்டு பழிக்கும்படி உனக்குஞ் சொல்லாமல் ஒளித்தோடினேன். நீ இறந்தபின் வந்தேன். ஆராய்ந்தால் நல்லவர்களுள்ளே நல்லவன் நானல்லவா! கொடியர்களாகிய

அவுணர்களுள்ளே மிகவும் வஞ்சகனேயாகிய கொடியேன் நீ இறந்தபின்பு சினேகன் போன்று இறங்கி மீண்டுவந்தேன். உனக்கு என்னைப் புத்திரனென்பது பூமிக்குப் பாரமன்றே? அரிபிரமேந்திராதி தேவர்கள் ''வாழ்க'' என்று தோத்திரஞ் செய்ய வீற்றிருந்த நீ சிவகுமாரருடைய தேரிலே கோழியாய் நின்று விலாவொடியக் கூவுகின்றனையோ! அண்டத்திலுள்ள உயிர்களெல்லாம் வந்து வணங்க அதனற் காழ்ப்படைந்த திருவடிகளையுடையனுய் வீற்றிருக்கும் நீ, வேலாயுதகரராகிய சுப்பிரமணியக்கடவுளை மயில்வாகனமாய் நின்று சுமக்கின்றனையோ! தோன்றுலோ! இந்த அபஜயம் மேலே விளையுமென்று உனக்கு வினயத்தோடு முறையாகச் சொன்னேன். அதனைச் சிறிதுங் கேட்டிலையே! பகைவராய்வந்த சிவகுமாரரோடு போர்செய்து தோற்றுயே! அதனற்றன் அவரை மயிலாய்ச் சுமக்கின்றனையோ! ஒப்பில்லாத வடிவத்தை இழந்து வேறுபட்ட பக்ஷிகளின் வடிவை எடுத்தாய். ஆதலால், நீ இறந்தாயன்று. அதனல் யான் செயற்பாலதாகிய அந்தியகருமத்தைச் செய்யும் பேற்றையும் பெற்றிலேன். இவ்வுயிரை வீணுகப் பேணினேனே! என்பிதாவே, நீ சிவகுமாரரை மயிலாய்ச் சுமக்கும் போது, முன்னே நீ இகழுமாறு நான் உனக்குச் சொல்லியவைகளை உன்மனத்தில் எண்ணுகின்றனையோ எண்ணுயோ? மிதந்த கோபம், போர்க்குரிய பகை, மானம், வெற்றி, அகந்தை, வலிமை ஆகிய இவைகளெல்லாம் சிவகுமாரரிடத்துச் சென்ற உன்னை அடைந்தனவில்லை. அவையெல்லாம் எங்கே போயின! எனக்கு அதனைச் சொல்லுதி'' என்று இரணியன் ஆகாயத்தில் நின்று புலம்பிப் பெருமூச்சு விட்டு, ''பூதர்கள் கண்டால் என்னைத் தின்று தங்கள் சினந்தீர்வார்கள்'' என்று எண்ணி, முன்போலச் சமுத்திரத்திற்போயொளித்தான். அதன்பின் அவன் உடனே வருத்தத்தோடு சுக்கிராசாரியரை அடைந்து, இறந்த தந்தையர்களுக்கும், துணைவர்களுக்கும், தாயர்களுக்கும், ஏனையோர்க்கும் செயற்பாலனவாகிய உத்தரகிரியைகளை விதிப்படி செய்து, ''துன்பத்திற்கு ஒரு வித்தாகும்'' என்று செல்வத்தை வெறுத்து, சிவபெருமானைத் தியானித்துத் தவஞ்செய்து மோக்ஷத்தையடையும்படி ஒரு சாரிற்போயினன்.

திருச்சிற்றம்பலம்.

## மீட்சிப் படலம்.

சூரனுகிய மயில்வாகனத்தின்மீது இவர்ந்தருளிய அறுமுகக்கடவுள் வீரவாகுதேவரை அன்பினுேடு பார்த்து, ''வீரனே, இதனைக்கேளாய். சூரபன்மன் அரிதாக ஈட்டிய செல்வம்போலப் பெரிய சிறையிலே பாதுகாத்து வைப்ப அதனல் வருந்திய சயந்தனையுந் தேவர்களையும் அச்சிறையினின்றும் மீட்டுக் கொண்டுவருவாய்'' என்று கட்டளையிட்டருளினர். வீரவாகுதேவர் அதனைக் கேட்டு, நன்றென்று அவரை வணங்கி, மிகமகிழ்ந்து விடைபெற்றுக்கொண்டு போர்க்களத்தை நீங்கி, மகேந்திரபுரியினுட்போய், தருமநெறி தவறிய தியோர்களாகிய அவுணர்கள் நெருங்கிய கோயிலினுட் புகுந்து, சயந்தனுந் தேவர்களும் வருத்தமுற்றிருக்கின்ற சிறைச்சாலையை அடைந்தார். அடைந்த வீரவாகுதேவருடைய தன்மையை நோக்கித் துன்பந்தீர்ந்த சயந்தனுந் தேவர்கள் யாவரும் ஆச்சரியமடைந்து, கால்களிற் பூட்டிய

விலங்குகள் ஒடிய அவரை அஞ்சலித்து, ''வீரரே, சிறையிலகப்பட்ட நம் முடைய துன்பத்தை நீக்குதற்கு இங்கே வந்தீரோ?'' என்று ஆரவாரித் தெழுந்து கூறினர்கள். அதனை வீரவாகுதேவர் கேட்டு, ''தேவர்காள், நீவிர் யாவரும் வம்மின்கள்; வம்மின்கள். நும்மை வருத்திய கொடிய சூர பன்மனை அவுணசேனைகளோடும் எம்பெருமானுகிய அறுமுகக்கடவுள் வேற் படையினால் இப்பொழுதேசங்காரித்தார்'' என்றுகூறினர். சயந்தன் முதலிய தேவர்கள் அதனைக்கேட்டு, சதேகமுத்தியடைந்தவர்போல மகிழ்ந்து, கால் களிற்பிணித்த விலங்குகளின் மூட்டுக்களை அறுத்து, மகேந்திரபுரியை நீங்கிச் சென்றார்கள். சிறைக்களத்தினின்று நீங்கிய சயந்தன் முதலிய தேவர்களும் அரம்பையர்களும் அவ்விடத்தைவிட்டுப் போர்க்களத்தை யடைந்து அறு முகக்கடவுளுடைய திருவடிகளை மும்முறை நமஸ்கரித்துத் துதித்து மகிழ்ந்து விளங்கினர்கள். அக்கடவுள் அவர்களுக்குப் பேரருள் புரிந்து நோக்கி, ''கொடியனுகிய சூரபன்மனுடைய சிறையிலே பல காலம் அகப்பட்டு மிகப் பெரிய துன்பத்தில் மூழ்கினீர். இனித் துன்பமின்றிச் சுவர்க்கலோக பாக்கி யத்தில் என்றும் இருந்து வாழுதிர்'' என்று அருளிச்செய்தார். இந்த அரு மைத் திருவாக்கைக் கேட்ட தேவர்கள் களிப்படைந்து, ''அடியேங்கள் உய்ந்தோம்'' என்று மீட்டும் அவரை வணங்கினர்கள். இந்திரன் அதைக் கண்டு, பழைய துன்பங்களெல்லாம் நீங்கி, மனத்தில் சந்தோஷமடைந்து, இந்திரபாக்கியத்தைப் பெற்ற அந்நாளிலும் இனிமையோடு இருந்தான். அவ்விந்திரனைச் சயந்தன் வணங்கினன். அவன் களிப்புற்றுச் சயந்தனைத் தழுவி முதுகைத் தடவி, ''மகனே, பலயுககாலம் சூரபன்மனுடைய சிறை யிற்பட்டு இளைத்தாய் போலும்'' என்று கூறி, தேவர்கள் யாவரையும் முறைமுறையாகத் தழுவினன்.

முருகக்கடவுள் சூரபன்மனுடைய போரிலே அந்நாள்காறும் இறந்த பூதசேனைகள் முழுதும் அங்கே வரும்வண்ணந் திருவுளஞ்செய்தார். இறந்த பூதகணங்களெல்லாம் வந்துகூடின. அங்ஙனங்கூடிய பூதசேனைகள் அறு முகப்பெருமானுடைய சந்நிதியிலே வணங்கி சமுத்திரத்திலே ஜலப்பிரவா கங்களெல்லாம் வந்து நெருங்குமாறுபோலத் தம்மினத்தோடு வந்து செறி வனவாயின. கிருபாசமுத்திரமாகிய சண்முகக்கடவுள் சமுத்திரராஜனுகிய வருணனை நோக்கி, ''கொடிய சூரபன்மன் இருந்த மகேந்திரபுரியைப் பிரளயகாலத்திற் பூமியை அழித்தல்போல விரைந்து அழித்து நுகருதி'' என்றார். வருணன் நன்றென்று இசைந்து, மேலெழுந்து மகேந்திரபுரியை அங்குள்ள உயிர்களோடு சமுத்திரத்துள் அழுத்தினன். அறுமுகக்கடவுள் அரிபிரமேந்திராதிதேவர்களும் வீரவாகு முதலிய வீரர்களும் தோத்திரஞ் செய்து மருங்கில்வரவும், பூதசேனைகள் ஆர்த்து ஒருங்கு செல்லவும், போர்க்களத்தை நீங்கி மகேந்திரபுரியைக் கடந்து, இலங்கைநகரத்தை யும் சமுத்திரத்தையும் தாண்டி, அழகிற்சிறந்த திருச்செந்திப்பதியை யடைந்து, மயில்வாகனத்தினின்றிழிந்து கோயிலிற்போய், இந்திரன் முத லாகிய தேவர்கள் வணங்கித் துதிக்க, உலகங்களுக்கு அருள்புரியுங் கருணையோடு நிவ்விய சிங்காசனத்தின்மீது இனிதாக வீற்றிருந்தருளினார். அப்பொழுது சூரியன் அஸ்தமயனமாயினன்.

அந்தவேளையில், பிரமா முதலிய தேவர்கள் அறுமுகக்கடவுளை நமஸ்கரீத்து, ''தமியேங்கள் தேவரீருடைய திருவடித்தாமரைகளை அருச்சனைசெய்வோம்'' என்று பிரார்த்தித்தார்கள். அவர் நன்றென்று அதற்குடன்பட்டார். அத்தேவர்கள் திருமஞ்சனம், சந்தனம், புட்பம், தூபதீபம் முதலாகிய பூசைத்திரவியங்க ளெல்லாவற்றையும் கணப்பொழுதினுள் அங்கே தருவித்து, சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்த குமாரதந்திர விதிப்படி சிரத்தையோடு அறுமுகக்கடவுளுக்கு கும்பம் விம்பம் யந்திரம் ஆகிய மூவகையிடத்திலும் அவர் திருவுளமகிழ்தற்கேதுவாகிய பூசனையைச் செய்து, திருவடிகளை வணங்கி அஞ்சலித்துத் துதித்தார்கள். சுப்பிரமணியக்கடவுள் அவர்களை நோக்கித் திருவுளமகிழ்ந்து, பேரருள்புரித்து, ''நீவிர் வேண்டுங் குறைகள் உண்டானுற் சொல்லுங்கள்'' என்றருளிச்செய்தார். அவர்கள் ''எம்பெருமானே, சூரபன்மனைச் சங்கரித்து எங்களைக் காத்தருளினீர். இதனால் உம்முடைய மிகுந்த திருவருளைப் பெற்றோம். இனி நமக்கு யாது குறையுளது? ஆயினும் அடியேங்களுக்கு ஈந்தருளும் வரம் இன்னும் ஒன்றுளது. தேவரீருடைய அடியேங்களாகிய எங்களுடைய உயிர் இவ்வுடம்பில் நிற்குமளவும் உம்முடைய உபயபாதாரவிந்தங்களில் மிகவுந் தலைமையான அன்பு எங்கள்மாட்டு இருக்கும்படி வரந்தந்தருளும்'' என்று வேண்டினார்கள். அவர் நன்றென்று இரங்கி அருள்புரிந்தார். அரிபிரமேந்திராதிதேவர்கள் யாவரும் குமாரக்கடவுளைத் துதித்துக்கொண்டு அங்கே இருந்தார்கள். அற்றை இராக்காலம் விடியச் சூரியன் உதித்தான்.

அப்பொழுது சர்வஞ்ஞராகிய குமாரக்கடவுள் அங்கே தேவதச்சனைக்கொண்டு ஒரு சிறந்த கோயிலை அமைப்பித்து, இலிங்கத்திலே சிவபெருமானைப் பிரதிட்டைசெய்து, பஞ்சகௌவியம், சந்தனம் முதலிய வாசனைத்திரவியங்கள், புட்பம், திருமஞ்சனம், நிவேதனம், பீதாம்பரம், மணி, தூபதீபம், கண்ணாடி, சாமரை முதலாகிய உபகரணங்களைத் தேவர்கள் கொண்டுவரச் சிவாகமவிதிப்படி அவரைப் பூசித்தார்.

திருச்சிற்றம்பலம்.

யுத்தகாண்ட முற்றிற்று.

ஐந்தாவது

# தேவ காண்டம்.

## திருப்பரங்குன்றுசேர் படலம்.

நிருமலராகிய அறுமுகக்கடவுள் மேற்கூறியவாறு சிவபூசைசெய்து திருச்செந்தூரை நீங்கி, தேவர்கள் முனிவர்கள் சேனைத்தலைவர்கள் முதலாயினர் திருமருங்கிற்சூழ மயில்வாகனத்திலிவர்ந்து, பிரமா விட்டுணு இந்திரன் படைவீரர்கள் ஆகியயாவரையும் பார்த்து, "நீங்கள் உங்கள் உங்கள் வாகனங்களிலேறி நமக்குப் பக்கத்தில் வாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினர். அவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிவந்து சூழ்ந்தார்கள். இரண்டாயிரம் வெள்ளம் பூதர்களும் வந்து நெருங்கினர்கள். பூதூளியினற் பொன்னுலகமும் பூழியாயது. குடைகளும் கொடிகளும் ஆலவட்டங்களும் நெருங்கின. கொம்பு காகளம் பேரிகை முதலிய வாத்தியங்கள் ஒலித்தன. வாகனமாகியமயில் கூவுந்தோறும் ஆதிசேடன் பயந்து அசைய அம்மயில் மூக்கினற் பூமியைக்குத்தி அப்பாம்பை ஆராய்வதாயிற்று. கொடியாகிய கோழி மூக்கினல் முகிலைக் கீறி அதனிடத்துள்ள இடியை விதைகளைப்போலப் பற்றுவதாயிற்று. யானைகள் பூதசேனைகளுடைய ஆர்ப்பினல் அஞ்சி மயங்கி வீழ்ந்தன. புலிகள் முரசினுலியைக் கேட்டு ஓடின. சிங்கங்கள் யானைமுகத்தையுடைய பூதவீரர்கள் செய்யும் பிளிற்றுலியினல் அயர்ந்தன. யாளிகள் மான்முகத்தையுடைய வீரர்களின் ஒலிக்குப் பயந்து குரங்குக்கூட்டங்களுட் புகுந்தன. வேதவொலியும் தேவர்களுடைய வாழ்த்தொலியும் மற்றை யொலிகளும், முருகக்கடவுளுடைய வாகனமாகிய மயிலும் கொடியாகிய கோழியும் செய்கின்ற ஒலிகளால் மறைந்தன. மலைகள் பூதர்கள் செல்லுதலால் அசைந்தன. இவ்வாருகச் சேனைகள் முன்னணியிலும் பின்னணியிலும் மருங்கிலும் நெருங்கிச் செல்ல, அறுமுகக்கடவுள் திருச்செந்தூரை நீங்கிக் குறிஞ்சிநிலத்தின் வழியாய்ச் சென்று, மதுரை திருநகரின் மேற்றிசையிலுள்ள திருப்பரங்குன்றத்தையடைந்தார்.

அப்பொழுது, அங்கே தவஞ்செய்துகொண்டிருந்த பராசரமுனிவருடைய புதல்வர்களாறுவரும், பிரமா முதலிய தேவர்களும் சுப்பிரமணியக்கடவுளை வணங்கி, "தேவரீர் இம்மலையிலே வீற்றிருந்தருளும்; இது சிறந்த தானம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். அதனை முருகக்கடவுள் கேட்டு "யாமும் இங்கே செல்ல நினைத்தோம். நீவிரும் அதனையே சொன்னீர். உம்முடைய கருத்தும் நம்முடைய சிந்தையும் ஒருப்பட்டது நன்று" என்று மகிழ்ச்சியோடு கூறி, அத்திருப்பரங்குன்றத்தின் சாரலிலேறினர். பூதசேனைகள் அச்சாரலைச் சூழ்ந்து அதன்மேன் ஏறின. தேவத்தச்சன் அம்மலையின்

மீது அளவில்லாத வீதிகளையும், கோயில்களையும், சோலைகளையும், வாவிகளையும் அமைத்தான். சுப்பிரமணியக்கடவுள் அவனுடைய சிற்பத்தொழிற் றிறமையை நோக்கிக் கருணை செய்து, வீதிகளிலே சேனைவீரர்களை இருத்தி, தாம் கோயிலையடைந்து, மயில்வாகனத்தினின்றும் இறங்கி, அரிபிரமேந்திராதிதேவர்களும் வீரவாகு முதலியவீரர்களும் மருங்கில்வரச் சிற்சபையிற் போய்த் திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து, பிரமா முதலிய தேவர்களை அவரவரிடங்களுக்கனுப்பினர். வீரவாகுதேவரும், இலக்கத்தெண்மரும், பூதப்படைத்தலைவர்களும், பூதர்களும் அவருடைய திருவடிகளை வணங்கிப் பக்கத்தில் நெருங்கி, ஏவல்களைச் செய்துகொண்டு நின்றார்கள். பராசரமுனிவருடைய புத்திரர்கள் அறுவரும் அவருடைய திருவடிகளைப் பூசனைசெய்து துதித்துநின்றார்கள். முற்றுணர்ந்த முதற்கடவுளாகிய சண்முகப்பெருமான் அவர்கள்மீது கிருபை பாலித்து, சிவபெருமான் முன்னிலில் அவர்களுக்குச் சொல்லியருளிய திருவாக்கைத் *திருவுள்ளங்கொண்டு அவர்களுக்கு ஞானத்தை உபதேசித்து, திருப்பரங்குன்றத்தில் வீற்றிருந்தருளினர். அறுமுகக்கடவுள் மகேந்திரபுரியை நீங்கிப் பூமியில் வந்ததைச் சொன்னேம். இனி அவர் இந்திரகுமாரியாகிய தெய்வயானையம்மையைத் திருமணஞ் செய்ததைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

## தெய்வயானையம்மை திருமணப் படலம்.

இந்திரன் தம்பகைவனுகிய சூரபன்மனைச் சங்கரித்து விண்ணுலக அரசாட்சியைக் கொடுத்தருளிய வேலாயுதகரராகிய அறுமுகக்கடவுளுக்குத் தன்மகளாகிய தெய்வயானையம்மையைத் திருமணஞ்செய்து கொடுக்க எண்ணி, அவ்விருப்பத்தை விஷ்ணுவும் பிரமாவும் மற்றைத் தேவர்களும் அறியும்படி கூறினன். அவர்கள் அதனைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, "உன் னெண்ணம் நன்று" என்று வியந்து, "உன் மகளாகிய தெய்வயானையும் அறுமுகக்கடவுளைத் திருமணஞ்செய்யும்படி சரவணப்பொய்கையில் முன்னிலிலே தவஞ்செய்து வைத்தாள். † அதன்பயன் இப்பொழுது கைகூடியது போலும். அவளை இத்திருப்பரங்குன்றத்திலே திருமணஞ்செய்து கொடுத்தற்கு விரைந்து முயலுதி" என்று சொல்லி, அங்கே இருந்தார்கள். அப்பொழுது இந்திரன் ஓரொற்றனை நோக்கி, "நீ விரைந்து சென்று மேருமலையிலிருக்கின்ற என்மனைவியாகிய அயிராணியை மகளாகிய தெய்வயானையோடு இன்றே அழைத்து வருவாய்" என்று பணித்தான். தூதுவன் இசைந்து மேருமலையிற்சென்று அயிராணியையடைந்து வணங்கி, "நின் மனக்கருத்துக் கிசைந்த நிகழ்ச்சியைக் கேள். சூரபன்மன் இறந்தான். சயந்தகுமாரனோடு தேவர்கள் சிறையினின்று நீங்கினர்கள். சுப்பிரமணியக்கடவுள் சேனைகளோடு மீண்டுவந்து திருப்பரங்குன்றில் வீற்றிருந்தார். அதுநிற்க. உனது நாயகர் உன்னை மகளோடு திருப்பரங்குன்றத்துக்கு அழைத்து வரும்படி இன்று என்னை அனுப்பினர். மகளோடு வரு

* திருவாக்கின்னதென்பதனைச் சரவணப்படலத்திற் காண்க. † இச்சரித்திரத்தை விடைபெறுபடலத்திற் காண்க.

வாய்'' என்றான். இந்திராணி அவ்வார்த்தையைக் கேட்டு ஆச்சரியமுற்று, துன்பம் நீங்கி, எப்பிறப்பிலும் அடையாத இன்பமுடையளாய், விரைந்து தன் மகளாகிய தெய்வயானையோடு எழுந்து ஐராவதயானையின்மேல் ஏறி, பக்கத்திலே அரம்பையர்கள் காக்க ஆகாயவழியாகச் சென்று திருப்பரங்குன்றத்தை யடைந்து, தன்னாயகனாகிய இந்திரனுடைய கோயிலிற்போய், தெய்வயானையம்மையோடு அங்கே இருந்தாள். மகேந்திரபுரியிலே சூரபன்மனுடைய சிறையினின்றும் நீங்கிய அரம்பையர்கள் மின்னலைக்கண்டு மகிழ்கின்ற மயிற்குழாங்கள்போல இந்திராணியினுடைய வரவைக் கண்டு, இன்பம் அடைந்தவர்களாய், ''நம்முடைய அரசியைப் பெற்றோம். யாம் இனி உய்ந்தோம்'' என்று அஞ்சலித்து, முறைமுறையாக அவளை வணங்கினார்கள். அயிராணி தன் குமாரனாகிய சயந்தனைக் கண்டு, தனங்களினின்றும் பாலொழுக அன்பினால் அவனைக் கட்டித்தழுவி மகிழ்ந்து, தரித்திரர்கள் முன் புதைத்துவைத்த சேமநிதியைப் பெற்றாற்போலக் கவற்சியை நீங்கினாள். மிக்க வறுமையினாற் பசிநோயுழந்தோர் பெருஞ்செல்வத்தைக் கண்டபொழுது பெருமகிழ்ச்சியினால் வயிறு நிறையப் பெற்றாற்போல, இந்திரன் தன் பக்கத்தில் வந்த அயிராணியின் வடிவத்தைக் கண்டவளவில் அவளைக் கூடினாற்போல மகிழ்ச்சியடைந்தான்.

பின்பு இந்திரன் முருகக்கடவுள் தன்மகளைத் திருமணஞ்செய்து கொள்ள வேண்டுமென்பதை அவருக்கு விண்ணப்பஞ்செய்ய நினைத்து, தேவர்களோடு சென்று, அவருடைய திருவடிகளிலே பூக்களைத் தூவி வணங்கித் துதித்து, ''எம்பெருமானே, தேவரீர் அசுரர்களாகிய களைகளைக் களைந்து இந்தத் தேவரீர்களுடைய சிறையை மீட்டுத் தமியேனுக்குப் பழைய சுவர்க்கவுலக பாக்கியத்தைத் தந்தருளினீர். இவைகளெல்லாவற்றையும் சிந்தித்துத் தேவரீருக்குச் செய்ந்நன்றியாகச் சிறியேன் செய்யத்தக்கது யாதாயினுமொன்றுண்டோ! ஆயினும் தமியேனுடைய மகளாகிய தெய்வயானை இத்திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கின்றாள். அவளைத் தேவரீர் யாங்கள் உய்ந்து இப்பிறவியினாலடையும் பயனைப் பெற்றுச் சிறந்தோங்கத் திருமணஞ் செய்தருளல் வேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்தான். சுப்பிரமணியக்கடவுள் இந்திரனை நோக்கி, ''உன் மகளும் நம்மை மணஞ்செய்யும்படி முன்னே மிகத் தவஞ்செய்துளாள். ஆதலால் நீ கருதியபடியே நாளைக்கு அவளை மணஞ்செய்வோம்'' என்று அருளிச்செய்தார். அதனை இந்திரன் கேட்டு, அளவுகடந்த மகிழ்ச்சியுற்று, அதனாற் செருக்கடைந்து, அக்கடவுளுடைய திருவடிகளைச் சிரமேற்சூடி, ''முதல்வரே அடியேங்கள் சிறப்புற்றோம்'' என்று கூறி, வாய்தலிலே வந்து, மிக விரைந்து செல்லுகின்ற பல தூதுவர்களுடைய முகத்தை நோக்கினான். அவர்கள் அவனை வணங்கி நின்று, ''எம்மரசனே, தமியேங்கள் செய்யும் பணி யாது?'' என்று வினாவினர். அவன் அவர்களை நோக்கி, ''ஆதியிற் றிருக்கைலாசவாசியாகிய முசுகுந்தச்சக்கிரவர்த்தி முதலாகிய பூவுலக அரசர்களுக்கும், தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மற்றையெவ்விடங்களிலும் இருப்போர்க்கும், ''எம்பெருமானாகிய சுப்பிரமணியக்கடவுளுடைய திருமணம் 'நாளைக்கு' என்று சொல்லி, அவர்கள் யாவரையும் விரைந்து இத்திருப்பரக்குன்றத்திற்கு அழைத்து வருதிர்'' என்று பணித்தான். அத்தூதுவர்கள் நன்றென்று வணங்கிப்போயினார்கள்.

இந்திரன் தேவதச்சனை அழைத்து, ''அறுமுகக்கடவுளுடையதிருக்கல்யாணத் திற்கு ஏற்ற அலங்காரங்களெல்லாவற்றையும் செய்வாய்'' என்றான். விசுவ கன்மன் அதனைக்கேட்டு, அத்திருப்பரங்குன்றத்தின் ஒருசாரில் பசும்பொன் னால் நிலம் படுத்து, நவரத்தினங்களை இழைத்து அழகுபெற ஒரு மண் டபம் அமைத்து, மேலிடங்களிலே பலநிற விதானங்களைக் கட்டி, மாலை சாமரம் முதலியவற்றைத் தூக்கி, அந்தமண்டபத்தின் நடுவிலே அறுமுகக் கடவுள் வீற்றிருத்தற்குச் சிற்பநூல்விதிப்படி ஓராசனமும் அமைத்தான். அதன்பின் அவருக்குப் பக்கத்தில் வருகின்ற விஷ்ணு பிரமா முதலிய தேவர்களும் பிறரும் இருத்தற்கு ஏற்ற ஏற்ற இடங்கடோறும் அளவில் லாத ஆசனங்களைச் செய்தான். திருக்கல்யாணமண்டபத்துக்குப் பக்கத் திலே பலகோபுரங்களையும் அநேக இரத்தினமண்டபங்களையும் எண்ணில் லாத சபைகளையும் அமைத்தான். காலநியதியின்றி யாவர்க்கும் நினைத்த பொழுதெல்லாம் தம்பயன்களைக் கொடுக்கின்ற சோலை, வாவி, சுனை ஆகிய இவைகளின் ரெகுதிகளை இயற்றினான். அத்திருக்கல்யாணத்திற்கு வேண்டிய பிறவற்றையும் உண்டாக்கினான். இந்திரன் அவற்றை நோக்கி மகிழ்ந்து, திருக்கல்யாணத்திற்கு வேண்டும் உபகரணங்களெல்லாவற்றை யும் விரைவில் வருவித்தான். இந்திரனுடைய இச்செய்கை நிற்க: அவ னுடைய தூதுவர்கள் முன்னே சென்று திருமணம் சொல்லுதலும், அதனைத் தரிசிக்கும்படி முசுகுந்தச்சக்கிரவர்த்தி வருஞ் சிறப்பை இனிச் சொல்வாம்.

முன்னொருநாளிலே திருக்கைலாசமலையிலுள்ள சோலையிலே சிவ பெருமானும் உமாதேவியாரும் எல்லையில்லாத மகிழ்ச்சியோடு வீற்றிருந் தார்கள். அங்குள்ள வில்வமரங்களின் கிளைகளிலே முசுவின் கூட்டங்கள் தங்கியிருந்தன. அவற்றுள் முனிவர்களைப்போல முள்காந்திருந்த ஓர் ஆண் முசு அவரிருவர்மீதும் அளவிறந்த வில்வபத்திரங்களைப் பறித்துச் சொரிந்து கொண்டிருந்தது. அதனை உமாதேவியார் பொறாராய்ச் சிறிது சினஞ் செய்தார். அவருடைய செய்கையைச் சிவபெருமான் பார்த்து, ''சத்தியே, இங்கே நம்மை அருச்சனை செய்கின்ற இம்முசுவை நீ கோபிப்பதென்னை? இதனைத் தவிருதி'' என்றார். என்னலும் உமையம்மையார் கோபமில ராகி அதற்கருள் புரிந்தார். கைலாசபதி அம்முசுக்கலையின் மனத்திலுள்ள அஞ்ஞானத்தைக் கெடுத்து மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்தருளினார். ஞான முதிக்கப் பெற்ற முசுக்கலை வில்வமரச்சினையினின்றும் விரைந்திறங்கி, மன நடுங்கி, பரமபிதாமாதாக்களாகிய பார்வதிபரமேஸ்வரர்களை அன்போடு வணங்கி, ''பொய்யடியேனுகிய தமியேன் செய்த பிழையைப் பொறுத் தருளல்வேண்டும்'' என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அதனைக்கேட்டு, ''நீ செய்த இதனைப் பிழையென்று சொல்லற்க; சிறந்த வில்வபத்திரங் களைக்கொண்டு நம்மைப் பூசனைசெய்தாய். அதனால் நீ மனுவமிசத்திற் பிறந்து உலகுழுழுதையும் அரசாள்வாயாக'' என்று அருள்புரிந்தார். முசு அத்திருவாக்கைக் கேட்டு, மிகுந்த துன்பத்தையடைந்து விம்மி இரங்கி, நடுங்கி எழுந்து, சிவபெருமானை வணங்கி நின்று, ''எம்பெருமானே, அடியேன் உங்களை நாடோறும் தரிசனஞ் செய்துகொண்டு அழியாத பேரானந்தப் பெருஞ்செல்வத்தோடு இங்கே இருத்தலைவிட்டுப் பூமியிற் போய் அழியுமியல்பினையுடைய அச்செல்வவலையில் அகப்படுவேனையின்,

மீட்டு எவ்வாறு பிழைப்பேன்?'' என்றது. அதனை எம்பெருமான் கேட்டு, ''முசுவே, உன் மனக்கிடக்கை நன்று! நீ இப்போது பூமியிற்போய் அரசாண்டிருந்து, பின்பு நம்மிடத்து வருதி. வருந்தி வேறொன்றையும் நினையாதே'' என்று திருவாய்மலர்ந்தார். அப்பொழுது அம்முசுக்கலை ''எம்பெருமானே, பொய்யை மறைத்த புலால்மயமாகிய இவ்வுடம்பைப் பேணி, அம்மானுடப் பிறப்பிலே செய்வன தவிர்வன அறியாது மயங்காவண்ணம் இம்முசுவின் முகத்தோடு பிறக்கும்படி அடியேனுக்குத் திருவருள்புரியும்'' என்று பிரார்த்தித்தது. சிவபெருமான் அவ்வரத்தை அதற்குக் கொடுத்தருளினர். அம்முசுக்கலை திருக்கைலாசமலையை நீங்கிப் பூமியில் வந்து, வருவாய் குன்றச் செல்வங்கள் சுருங்கியும், அதனால் மிகுந்த துன்பத்தை அனுபவித்தும் சத்தியத்தை நிலைபெறுத்திப் பூமியை ஆண்ட அரிச்சந்திர மகாராஜனுக்கு ஒரு வழித்தோன்றலாய், முகமொன்று மாத்திரம் முசுவினுருவும் மற்றை அவயவங்களெல்லாம் மன்மதனிற் சிறந்த அழகுமுடையதாகிப் பிறந்து, முசுகுந்தன் என்னும் நாமத்தைப் பெற்றிருந்தது. இவ்வாறு பிறந்த முசுகுந்தன் சோழநாட்டிலுள்ள கருவூரிலிருந்துகொண்டு, முடிசூடிப் பூவுலகிலுள்ள எல்லாத்தேயங்களையும் தன்னுடைய தோளின்மேற் சுமந்து, சூரியனிருக்குமிடத்தில் ஓளிமம்பிறை இருந்தாற்போலச் சூரபன்மனுடைய ஆணையைக் கடக்கமாட்டாதவனாய் அவனுக்கஞ்சி யொழுகினன். அவன் சுப்பிரமணியக்கடவுள் சூரபன்மனைச் சங்கரித்ததைக் கேட்டுப் பழைய கவலை நீங்கி மிகுந்த வலிமைபெற்று, தன்னரசுரிமையைச் சிறப்புற நடாத்தியிருந்தான்.

முசுகுந்தச் சக்கிரவர்த்தி அங்ஙனம் அரசியற்றிக்கொண்டிருக்கு நாளில், இந்திரனுடைய தூதுவர்கள் அவன் முன்சென்று வாழ்த்தி, ''மகாராஜனே, யாங்கள் உனது நன்பனாகிய இந்திரனுடைய தூதுவர்கள். உன் சுற்றமும் நீயும் அழிவில்லாத செல்வத்தோடு வாழ்வாய். நாம் சொல்வதைக் கேள். உனக்கு நல்ல சோபனமொன்றைச் சொல்ல வந்தோம். அறுமுகக்கடவுள் சூரபன்மனைச் சங்கரித்துத் திருச்செந்தூருக்கு வடதிசையில் வந்து மதுரைமாநகரின் மேற்றிசையிலிருக்கின்ற திருப்பரங்குன்றத்தில் வீற்றிருந்தார். அக்கடவுளுக்கு இந்திரன் தன் மகளாகிய தெய்வயானையை நாளைக்குத் திருக்கல்யாணஞ் செய்து கொடுக்கின்றனன். இந்தச் சோபனத்தை உனக்குச் சொல்லும்படி நம்மை அனுப்பினன். நிகரில்லாத அத்திருமணத்தைத் தரிசிக்கும்படி சேனைகளோடு புறப்பட்டுத் திருப்பரங்குன்றத்துக்கு வருவாய்'' என்று சொன்னார்கள். முசுகுந்தச்சக்கரவர்த்தி அதனைக்கேட்டு, மனத்தில் மகிழ்ச்சிபொங்க ஆராமையினாலே மெய் பனிப்புற்றெழுந்து, தூதுவர்களைத் தழுவி, ''இந்தச் சோபனத்திற்காக உமக்கு நான் செய்யத்தக்க உபகாரம் ஒன்றுமில்லையே'' என்று கூறி, ''இங்குள்ள என் நிதிகளெல்லாவற்றையும் தரவா? என்னுடைய குடை சாமரங்களாகிய விருதுகளைத் தரவா? என் அரசியலைத் தரவா? நீவிர் விரும்பியது யாது? சொல்லுங்கள்'' என்றனன். அதனைக் கேட்டு மகிழ்ந்த தூதுவர்கள் அவனுடைய அன்பின் பெருக்கத்தை நோக்கி, ''மகாராஜனே, அரசனுடைய பணியைச் சொல்லுகின்ற தூதுவர்களுக்கு நீ சொல்லிய இவைகளெல்லாம் ஏற்பனவல்ல. நீ மிக வீரைந்து நம்மரசனுகிய இந்திரனிடத்துச் செல்வதே நீ கூறிய இவற்றை நமக்கு உதவியதற்கு ஒப்பாகும்'' என்று சொல்லி, அவ்விடத்தை நீங்கி,

பூவுலகத்திலுள்ள மற்றை அரசர்கள் யாவருக்கும், திக்குப்பாலகர்களுக்கும், ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற சூரியன் முதலாயினர்களுக்கும், முனிவர்கள் யாவருக்கும் திருக்கல்யாணத்தைச் சொல்லிப் போயினர்கள்.

இந்திரனுடைய தூதுதர்கள் போயபின்பு, முசுகுந்தச்சக்கரவர்த்தி தனது நகரவாசிகளும் சேனைகளும் சுப்பிரமணியக்கடவுளுடைய திருமணத்தைத் தரிசிக்கச் செவ்வுமாறு யானையின்மீது முரசறையும்படி பணித்தான். திருவாரூரிலே தியாகராஜப்பெருமானுடைய திருவிழாவில் இந்திரன் யானை மீதேறி முரசறைந்து சாற்றித் திரிந்ததுபோல அத்திருமணத்தை வள்ளுவன் கருவூரிலே யானைமீதேறி முரசறைந்து சாற்றித் திரிந்தான். அதனைக் கேட்ட அந்நகரத்துச் சனங்களும் அரசனுடைய சேனைவெள்ளங்களும் பெரும்புறக் கடலை நோக்கிச் செல்லும் மற்றைக் கடல்களைப்போல ஒருங்கே யெழுந்தன. கச ரத துரக பதாதியாகிய நால்வகைச்சேனைகளும் போயின. பலவகை ஆயுதங்களை ஏந்திய படைத்தலைவர்களும் வீரர்களும் போயினர்கள். சுப்பிரமணியக்கடவுளுடைய திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவேண்டுமென்னும் ஆசையினற் பல பெண்கள் பூமியில் நடந்து சென்றார்கள். பல பெண்களும் ஆடவர்களும் யானைகளிலேறிச் சென்றார்கள். பலர் பெண்களோடு தேர்களில் ஏறிச் சென்றார்கள். பல பெண்கள் பல்லக்குகளிலும் சிவிகைகளிலும் சென்றார்கள். அத்திருக்கல்யாணத்திற்காச் செல்கின்றவர்களுள், கால் கை முதலிய அவயவங்கள் இல்லாதவர்கள் அவற்றைப் பெற்றும், ஊமைகள் பேச்சைப்பெற்றும், குருடர்கள் கண்களைப் பெற்றும், வலிமையில்லாதவர்கள் வலிமையைப் பெற்றும் சென்றார்கள். முருகக்கடவுண் மாட்டு அன்புவைத்தவர்களுக்கு இதுவா அரியது? பாணர்களும் விறலியர்களும் யானைகளிலும் தேர்களிலும் ஏறி யாழை வாசித்து இசைபாடிக் கொண்டு போயினர்கள். பலர் கொக்கரை, படகம், பேரி, குடாமுழா முதலாகிய பலவகைப்பட்ட வாத்தியங்களை இயம்பிப்போயினர்கள். ஆகாய வழிக்கொண்டு செல்லுகின்ற தேவர்களும் முனிவர்களும் முசுகுந்தச்சக்கிரவர்த்தியின்மேற் பூமழை பொழிந்தார்கள், இவ்வாறு சனங்கள் எங்கும் நெருங்கிச் செல்லும்பொழுது, முசுகுந்தச்சக்கரவர்த்தி தன்னுடைய சுற்றத்தார்களும் மந்திரிமாரும் முன்னும் பின்னும் இருமருங்கும் மொய்த்துச் செல்ல, ஒரு தேரின்மேல் ஏறி, சேனைகளோடு தன்னகரத்துச் சனங்களோடும் முல்லைநிலத்தையும் மருதநிலத்தையும் குறிஞ்சிநிலத்தையும் யாறுகளையும் கடந்து, உச்சிக்காலத்திலே திருப்பரங்குன்றத்தை அடைந்தான். அப்பொழுது மற்றைப் பூவுலக அரசர்கள் யாவரும் சேனைகளோடு அங்கு வந்து சேர்ந்தார்கள். முசுகுந்தச்சக்கரவர்த்தி முதலிய அவ்வரசர்கள் ஒருப்பட்ட மனத்தினராய், தம்முடைய நால்வகைச்சேனைகளையும் மற்றைச் சனங்களையும் திருப்பரங்குன்றத்தைச்சூழ நிறுத்தினர்கள். அச்சேனைகளெல்லாம் அம்மலையைச்சூழ மிக அழகுபெற நிறுத்தப்பட்டன. ஆடவர்களும் பெண்களும் அங்குள்ள சோலைகளிலே படங்கு வீடுகளிற்றங்கினர்கள். அச்சோலையில் முசுகுந்தச்சக்கரவர்த்திக்காக ஒரு படங்கு வீடு அமைக்கப் பட்டிருந்தது. வணிகர்கள் நவரத்தினங்களையும் பொன்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் பிறவற்றையும் திண்ணைகளின்மேல் வரிசை வரிசையாக வைத்து வியாபாரஞ் செய்துகொண்டிருந்தார்கள். அங்குவந்த சனங்கள் அனைவரும் புனல் விளையாடியும் பூக்கொய்தும் அற்றைப் பகற்காலத்

தைக் கழிக்க, சூரியன் அஸ்தமயனமாயினன். அன்றிரவு ஆடவர்களும் பெண்களும் மதுநுகர்ந்து, கூடி மகிழ்ந்து அங்கே தங்கினர்கள். இவர்கள் இவ்வாறு இருக்க.

முசுகுந்தச்சக்கரவர்த்தி முதலாகிய அரசர்கள் யாவரும் தேரினின்றும் இறங்கித் திருப்பரங்குன்றத்தில் ஏறி, தெய்வத்தச்சனால் அமைக்கப்பட்ட நகரத்தின் சிறப்பைப் பார்த்து, திருமணச்சாலையை யடைந்து, இந்திரனுடைய பாதங்களை வணங்கிக் களிப்படைந்தார்கள். அவன் அவ்வரசர்கள் யாவருக்கும் அருள்செய்து அவர்களுடைய க்ஷேமத்தை வினவி, பல உபசாரங்களைச் சொல்லி அளவளாவினன். ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சூரியன் முதலிய கிரகங்களும் திக்குப்பாலகர்களும் முனிவர்களும் தேவர்களும் பாதலவாசிகளும் பிறரும் திருப்பரங்குன்றத்தை அடைந்து, அதன்மேலேறி, இந்திரனைக் கண்டு தொழுது, களிப்படைந்தார்கள். முனிவர்கள் ஆசி கூறி வந்தார்கள். வரையர மகளிர்களும், தேவமகளிர்களும், நீரரமகளிர்களும், திசைகளிலுள்ள பெண்களும், இருடிபத்தினிகளும், நாகன்னியர்களும் இந்திராணிக்குப் பக்கத்தில் வந்து நெருங்கினர்கள். தெய்வப்பெண்கள் இந்திராணியினுடைய பாதங்களை வணங்கி, தெய்வயானையம்மையின் பக்கத்தில் வந்து, ''தெய்வயானையே, கேள்: நீ சூரபன்மனுடைய உயிரைக் கவர்ந்த வேலாயுதகரராகிய அறுமுகக்கடவுளுக்கு மனைவியாகின்றாய்; ஆதலினால் எவ்வுலகிற்கும் இறைவியாவாய்'' என்று கூறி, தனித்தனி அவ்வம்மையாருடைய பாதங்களை அன்போடு வணங்கித் துதித்தார்கள்.

அப்பெண்கள் இயற்கையழகுடையராகிய அத் தெய்வயானையம்மையாருக்குச் சிறிது செயற்கையழகுஞ் செய்ய நினைத்து, அவருடைய மயிர்முடியின் சூழலை விரல்களால் மெல்ல நீக்கி, நாவியையும் வாசநெய்யையும் பூசி, சாந்தையும் பச்சைக் கர்ப்பூரத்தையுந் தடவி, பனிநீரினால் அபிஷேகஞ் செய்து, மெல்லிய திருவொற்றுடையினால் அந்நீர் புலரும்படி கூந்தலை யொற்றி, மாந்தளிர் போலும் அழகும் மென்மையும் காந்தியும் பொருந்திச் சாயமூட்டாமல் தெய்வத்தன்மையால் இயற்கையாய்ச் செம்பவளத்தினிறத்தைக் கொண்ட வஸ்திரத்தை உடுத்து, கூந்தலில் அகிற்புகையை ஊட்டி, சீதேவி, எதிர்முக மஞ்ஞை, வலம்புரி, மகரப்பகுவாய் என்னுந் தலைக்கோலங்களைச் சோபனஞ் சொல்லிச் சாத்தி, கோங்கம் பூவையும் வெட்சிப் பூவையுஞ் செருகி, வாசனையிற் சிறந்த தெரியல் தொடையல் என்னும் மாலை விசேடங்களைச் சூட்டி, கூந்தலைச் சுழியமாக முடித்து, சுருஞ்சாந்துப் பொட்டிட்டு, அத்திலகத்தைச் சேரச் சுட்டியைப் பூட்டி, காதிலே புலிமுகப் பணியையும் கழுத்திலே முத்துமாலையையும் கரத்திலே வளையலையும் தோளிலே தொடியையும் சேர்த்தி, ஸ்தனங்களிலே கலவைச்சாந்தை யப்பி, மாலையையும் மணிக்கோவைகளையும் அணிந்து, உத்தராசங்கத்தை அத்தனங்களின் மேற் சேர்த்து, பாதங்களில் பாடகம் சிலம்பு பாதசாலம் என்னும் அணிகளைச் சூழ்வித்து, இவ்வாறு அலங்காரஞ் செய்து, அவரைத் துதித்தார்கள். இனி இந்திரனுடைய செயல்களைச் சொல்வாம்.

இந்திரன் பிரமாவை நோக்கி, ''திருமணச்சாலை அமைக்கப்பட்டது. எல்லாத் தேவர்களும் வந்தார்கள். எம்பெருமானாகிய முருகக்கடவுளுக்குத் திருமணஞ் செய்தற்குரிய முகூர்த்தத்தை ஆராய்ந்து சொல்லும்'' என்றான்.

பிரமதேவர் அதனைக்கேட்டு, ''அறுமுகக்கடவுள் திருமணஞ் செய்தற்கு முகூர்த்தத்தைத் தெரிந்து சொல்வதென்ன? எந்த முகூர்த்தமாயினும் நல்லதே. ஆயினும், இந்தநேரம் ஒப்பில்லாத முகூர்த்தம்'' என்று சொல்லினர். சிருட்டிகர்த்தாவே, ''இம்முகூர்த்தம் சிறந்ததாயின், என் மகளாகிய தெய்வயானையைத் திருக்கல்யாணஞ்செய்து கொடுத்தற்குத் தேவாதி தேவராகிய அறுமுகக்கடவுளை அழைத்துக்கொண்டு வரும்படி போவதே நமக்குக் கடன்'' என்று இந்திரன் கூறினன். அப்பொழுது விட்டுணுவும் பிரமாவும், ''நீ கூறியது நன்று. சுப்பிரமணியக்கடவுளை அழைத்து வரப் போவோம்'' என்று இந்திரனோடு எழுந்து, முனிவர்களும் தேவர்களும் சூழ்ந்து முன்செல்லச் சுப்பிரமணியக்கடவுள் வீற்றிருக்கும் ஆலயத்தினுட் போய், அவருடைய திருவடிகளை முடிமேற் சூடி வணங்கி, ''எம்பெருமானே, தெய்வயானையைத் திருமணஞ் செய்யும்படி தேவரீர் திருமணச்சாலைக்கு எழுந்தருளி வரல்வேண்டும்'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். முருகக் கடவுள் அதனைக் கேட்டு, ''அவ்வாறுகுக'' என்றருள்புரிந்து, வீரவாகு முதலிய வீரர்களும் பூதப்படைத்தலைவர்களும் துதிக்கச் சிங்காசனத்தினின்றும் விரைந்தெழுந்து, சந்நிதானத்தில் நிற்கின்ற மயில்வாகனத்தின் மீதிவர்ந்து, பிரமா முதலிய தேவர்கள் விழுந்துவணங்கித் துதித்துப் பூமழைகளைப் பொழிந்து பக்கத்தில்வர, வீதியிற் சென்றருளினர். சந்திரனும் சூரியனும் வெண்கொற்றக்குடையை எடுத்தார்கள். வாயு சாமரங்களை வீசினன். வருணன் ஆலவட்டங்களை அசைத்தான். யமன் வாட்படையை ஏந்தினன். பிரமவிட்டுணுக்களுடைய வாகனங்களாகிய அன்னமும் கருடனும் ''இது சிவபெருமானுடைய வாகனமாகிய இடபத்தின் ஒலியோ?'' என்று எண்ணி நடுங்கும்படி, கோழிக்கொடி எவ்வண்டமும் குலுங்கக் கிளர்ந்து ஆர்த்தது. பிரமர்கள் ஆரவாரித்தார்கள். வேதங்கள் ஆர்த்தன. அரம்பையர்கள் ஆர்த்தார்கள். முனிவர்கள் ஆர்த்தார்கள். பூதர்கள் ஆர்த்தார்கள். பஞ்சபூதங்களும் ஆர்த்தன. பூவுலகவரசர்கள் ஆர்த்தார்கள். திருப்பரங்குன்றும் பிரதித்தொனி செய்தது. திண்டி, பேரிகை, தண்ணுமை, சல்லரி, திமிலை, குடமுழா, காளம், சங்கம் முதலாகிய வாத்தியத் தொகுதிகளைப் பல பூதர்கள் அண்டங்கள் வெடிக்குப்படி இயம்பினர்கள். மேனகை, உருப்பசி, அரம்பை, திலோத்தமை முதலிய பெண்கள் நெருங்கி, மஞ்சங்களிலும் விமானங்களிலும் நின்று பாடியாடினர்கள். வித்தியாதரர் முதலாயினோர் அரம்பையர்களுடைய நடனத்தோடு பாட்டும் அபிநயமும் பொருந்த இசைபாடினர்கள். வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களும் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் பிறரும் நெருங்கி ஒருவருடம்பை ஒருவருடம்பு நெருக்கச் செல்லுதலால் வீதியும் முற்றமும் சிறிதும் இடம்பெறுவாயின. இத்தன்மைகளெல்லாம் நிகழ முருகக்கடவுள் பொன்மயமாகியவீதியின்வழியாய் இந்திரனுடைய திருமணச்சாலையின்முன்னர் வந்தருளினர். முனிவர்கள் திரண்டு அவர்மீது கும்பத்தின்மேற் றருப்பை தோய்ந்த நீரைப் புரோக்ஷித்து ஆசிகளைச்சொல்லி எதிர்கொண்டு துதித்தார்கள். அரம்பையர்களும் முனிவர் பன்னியர்களும் அட்ட மங்கலங்களையும் ஏந்தி எம்பெருமானுக் கெதிரில்வந்து துதித்தார்கள். சில பெண்கள் ஆலத்திகளைக் கையிலேந்தி அவருடைய சந்நிதியிற் பணிமாறினர்கள். உதிக்கின்ற சூரியன் சூற்கொண்ட மேகத்தை விட்டு நீங்கினாற்போலத்

குமாரக்கடவுள் மயில்வாகனத்தினின்று மிழிந்து, திருமணச் சாலையின் வாயிலிற் சென்றருளினர். அப்பொழுது இந்திராணி அரம்பையர்களோடு எதிரே வந்து வணங்கி, பொற்பாத்திரத்தில் நிறைந்த காமதேனுவின் பாலினுல் முருகக்கடவுளுடைய திருவடிகளுக்கு அபிஷேகஞ்செய்து, புட் பத்தையும் மாலையையும் சூட்டி, அத்திருவடிகளே வணங்கி, பல திரிகள் ஏற்றிவைத்த ஆலத்தியை மும்முறை சுற்றி, இவை போன்றனவாய் அங்கே செயற்பாலனவாகிய பிறவற்றையுஞ் செய்து, வெட்கித்து, மற் றைப் பெண்களோடு தனது கோயிலே அடைந்தாள். முருகக்கடவுள் அதனைக்கண்டு அருள்செய்து, பிரமா விட்டுணு முதலாயினோர் கூடவரத் திருமணச்சாலையிற் புகுந்து, இந்திரனுலே தமக்காக இடப்பட்ட திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தருளினர். அதன்பின் பிரமாவும் விட்டுணு வும் முனிவர்களும் தேவர்களும் வீரவாகு முதலிய வீரர்களும் அவரு டைய ஏவலினுலே தத்தமக்கு ஏற்ற ஏற்ற இடங்களோறும் இருந்தார் கள். அப்பொழுது முசுகுந்தச்சக்கரவர்த்தி முதலாகிய பூவுலக அரசர்கள் யாவரும் வந்து வந்து வணங்கித் துதிக்க எம்பெருமான் கருணை செய்தார்.

அந்தச் சமயத்தில், சிவபெருமான் பூதசேனைகள் சூழ உமாதேவி யாரோடு ஆகாயத்திலே தோன்றியருளினர். தமது தாயுந்தந்தையும் எழுந்தருளிவந்ததை முருகக்கடவுள் தரிசித்து, மிகுந்த மகிழ்ச்சியுடைய ராய், விம்மிதங்கொண்டு, பேரன்போடு மிக விரைந்து இருக்கைவிட்டெ ழுந்தார். விட்டுணு முதலாகிய தேவர்களும் முனிவர்களும் "எம்பெரு மானுகிய சிவபெருமான் இங்கே எழுந்தருளிவந்தார். நாம் உய்ந்தோம்" என்று கூப்பிய கரத்தோடு விரைவில் எழுந்தார்கள். சிவபெருமான் உமாதேவியாரோடு விமானத்தினின்று மிறங்கி, பூதகணங்கள் சூழ நிர் மலமாகிய திருமணச்சாலையுள் வந்தருளினர். அறுமுகக்கடவுள் அதனைக் கண்டு விரைந்து எதிர்கொண்டு சென்று, மிகுந்த அன்போடு அவ்விருவ ருடைய திருவடிகளையும் நமஸ்காரஞ்செய்தார். அவரைச் சிவபெருமா னும் உமாதேவியாருமாகிய இருவரும் தங்களுடைய அருமைத்திருக்கரங் களாலெடுத்து, தத்தம் மார்போடு தனித்தனி தழுவி, உச்சியை மோந் தார்கள். விட்டுணுவும் பிரமாவும் இந்திரனும் மற்றைத் தேவர்களும் பரமபிதா மாதாக்களாகிய சிவபெருமான் உமாதேவியார் என்னும் இருவ ருடைய திருவடிகளிலும் வீழ்ந்து வணங்கிப் பிரதக்ஷிணஞ்செய்து, "அடி யேங்கள் வினைகளில் ஆழ்கின்ற எளிமை நீங்கிப் பேரானந்தப் பெருவாழ் வடைந்தோம்" என்று தோத்திரஞ்செய்தார்கள். குமாரக்கடவுள் அவ் விருவரையும் திருக்கலியாணமண்டபத்துள் அழைத்துக்கொண்டு சென்றார். அப்பொழுது திருவருளினுலே ஒரு திவ்விய சிங்காசனம் ஆகாயமார்க்க மாக அவ்விடத்தில் வந்தது. அதன்மீது சிவபெருமான் உமாதேவியா ரோடு வீற்றிருந்தருளினர். வீற்றிருந்த அவ்விருவரும் முருகக்கடவுளே நோக்கி, "மகனே, இங்கே வருக" என்று மகிழ்ச்சியோடு எடுத்துத் தழுவி, மடியின்மீது வைத்து, மிகுந்த தண்ணளியைச் செய்தார்கள். அந்தச் சமயத்தைப் பிரமதேவர் தெரிந்து, அவர்களே வணங்கி இவ்வாறு சொல்வார். "எம்பெருமானே, முன்னெருநாளில் அசுரர்களைச் சங்கரிக்

கும்படி அறுமுகக்கடவுளே விடுத்தருளினீர். அவ்வாறே அவுணர் யாரையும் வதைபுரிந்து தேவர்களையும் சிறையினின்றும் நீக்கியருள்செய்தார். இந்த நன்றியைக் கருதி நாங்கள் செய்கின்ற கைம்மாறு ஒன்றுமில்லையாயினும், இந்திரன் தன்மனத்திலெழுகின்ற ஆசையினால் அறுமுகக்கடவுளுக்குத் தன் மகளைத் திருமணஞ் செய்துகொடுக்க எண்ணினான். சகல சீவராசிகளையும் பேரருளோடு காத்தருளுகின்ற அம்மையாரும் தேவரீரும் இந்தச் சமயத்தில் எழுந்தருளி வந்தீர்களென்றால், சிற்றடியேங்களாகிய எங்களுடைய செயல் சிறந்ததேயன்றே!'' என்றிவ்வாறு பிரமதேவர் விண்ணப்பஞ்செய்தலும், சிவபெருமான் நன்றென்று மகிழ்ச்சியடைந்து ''நாமும் இதனைக் காணும்படி உமையோடு இங்கே வந்தோம். இனி இதற்குரிய சடங்குகளைச் செய்குதி'' என்று அருளிச்செய்தார்.

அதனைக்கேட்டுப் பிரமாவும் விட்டுணுவும் மிக மகிழ்ந்து, இந்திரனை நோக்கி, ''முருகக்கடவுள் வேதவிதிப்படி திருமணஞ்செய்தற்கு உன் மகளை இங்கே கொணருதி'' என்றார்கள். இந்திரன் அதற்குடன்பட்டு, அந்தப்புரத்திற் சென்று, ''நம்மைக் காத்தருளும் மகளே, வருக'' என்று அழைத்தலும், நமதன்னையாகிய அவர் எழுந்து, கற்செறிந்த இம்மலையிலே இவருடைய திருவடிகள் செல்லவல்லனவா என்பதுபோலச் சிலம்பரற்றவும் மெல்லிய இடை வருந்தும் என்பதுபோல மேகலை இரங்கவும், கண்டோரெவரும் மனமகிழவும், இலக்ஷ்மியும் சரஸ்வதியும் மற்றை மகளிர்களும் துதிக்கவும் இந்திரனுக்கு முன்னே நடந்து வந்தருளினர். [ஞானசத்திதரராகிய அறுமுகப்பெருமானுடைய அருமைத் திருவடிகள் தீயேனுகிய அடியேனுடைய இந்த மனமாகிய மலையின்கண் அனுதினமும் நின்றுலாவுமேயானால், தெய்வயானையம்மையாருடைய பஞ்சிலும் மெல்லிய அருமைத்திருவடிகள் திருப்பரங்குன்றத்தின்மீது நடந்த செயல் சொல்லும் புதுமைத்தாகுமோ!] இந்திரன் தெய்வயானையம்மையாரைத் திருக்கல்யாண மண்டபத்தின்முன் கொண்டுவர, அவரைக்கண்ட முனிவர்களும் தேவர்களும் ''தாயே, வாழ்க'' என்று அவருடைய திருவடிகளைத் துதித்தார்கள். அவர் அங்கே வீற்றிருக்கின்ற பார்வதிபரமேஸ்வரர்களை நமஸ்கரித்து, முருகக்கடவுளை நோக்கித் துண்ணென்று வெட்கமுற்றார். அப்பொழுது ஜகன்மாதாவாகிய உமாதேவியார் முருகக்கடவுளையும் தெய்வயானையம்மையாரையும் அங்குள்ள இரத்தினசிங்காசனத்தின்மீது இருத்திவைத்தார். திருமணக்கோலங்கொண்ட வரனும் வதுவுமாகிய அவரிருவரும் அங்கே வீற்றிருக்கின்ற சிவபெருமானும் உமாதேவியாருமாகிய இருவருடைய பிரதிவிம்பங்களும் எதிரெதிராய் விளங்கினாற்போல அவர்களுக்கெதிரே இரத்தினசிங்காதனத்தில் வீற்றிருந்தார்கள். அத்திருக்கல்யாண மண்டபத்திலுள்ள யாவரும் தெய்வயானையம்மையாரோடு சுப்பிரமணியக்கடவுள் சிங்காசனத்தில் வீற்றிருத்தலைத் தரிசித்து வணங்கித் துதிக்க, பரம பிதா மாதாக்களாகிய பரமசிவனும் பார்வதிதேவியாரும் அவர்க்கெல்லாம் திருவருள்புரிந்தார்கள். இந்திரன் அவர்களுடைய திருமணக்கோலத்தைத் தரிசித்துப் புகழ்ந்து, கைகளைச் சிரமேற்கூப்பி வணங்கி, தேனைப் பருகிய வண்டிலும் மனம் மிக மகிழ்ந்தான். இந்திராணி அவனுடைய பணியினால் திருமஞ்சனம் புட்பம் முதலா

கிய உபகரணங்களைக் குறைவற ஏந்தி அக்கல்யாண மண்டபத்தில் வந்தாள். இந்திரன் சுப்பிரமணியக்கடவுளுடைய திருமுன்பிருந்து, அவருடைய திருவடிகளைப் பூசனைசெய்வானாய், இந்திராணி மிகுந்த நாணத்தோடு கரகத்திலுள்ள திருமஞ்சனத்தை விடுப்ப, அவருடைய மெல்லிய திருவடிகளைப்பற்றி விளக்கி அபிஷேகஞ்செய்து, கலவைச்சாந்தை அணிந்து புட்பங்களைச் சூட்டி, தீபதூபங்களைப் பணிமாறிப் பூசனைசெய்தான். அயிராணி அவர்களுடைய திருவடிகளுக்கு அபிஷேகஞ் செய்த தீர்த்தத்தைச் சிரத்தையோடு ஏந்தி ஒரிடத்திற் சேமித்து வைத்தாள். அதன்பின் இந்திரன் அறுமுகக்கடவுளுடைய திருக்கரத்திலே தெய்வயானையம்மையாருடைய திருக்கரத்தை வைத்து, ''தேவரீருடைய அடியேனுகிய தமியேன் இவளை உமக்குத் திருமணஞ்செய்து தந்தேன்'' என்று வேதமந்திரத்தோடு நீரை விடுத்துத் தத்தஞ்செய்தான். தம்முடைய திருவடிகளையடைந்த மெய்யன்பர்களுக்குப் போகமோக்ஷங்களைக் கொடுத்தருளும் முருகக்கடவுள் தமது திருக்கரத்தில் அதனை ஏற்றருளினர். பின்னர்ப் பிரமதேவர் ஒரு திருமங்கிலிய சூத்திரத்தை மனத்தினுற் படைத்துத்தர அதனைத் தமது திருக்கரத்தால் வாங்கித் தெய்வயானையம்மையாருடைய திருக்கழுத்திற்றரித்து, அவருடைய முடியில் ஒரு நறுமணம் பொருந்திய மாலையையுஞ் சூட்டினர். அதன்பின் முக்கனி கரும்பு தேன் காமதேனுவின் பால் ஆகிய மதுபருக்கங்களை இந்திரன் சுப்பிரமணியக்கடவுளுக்கு நிவேதித்தான். மத்தளி தக்கை சங்கம் பேரிகை முதலிய வாத்தியங்கள் ஒலித்தன; இலக்கத்தொன்பது வீரர்களும் பூதகணநாதர்களும் ஆர்த்து அவரை வந்தித்துக் களித்தார்கள். விட்டுணுவும் பிரமாவும் திக்குப் பாலகர்களும் இந்திரனும் தேவர்களும் பிறரும், முருகக்கடவுளும் தெய்வயானையம்மையாருமாகிய இருவருடைய திருக்கோலங்களையும் தரிசித்து, ''நமது கட்புலன்கள் சிறப்புற்றன'' என்றார்கள். அப்பொழுது பிரமதேவர் அக்கினியையும் வேண்டும் உபகரணங்களையும் தருவித்து, சுப்பிரமணியக்கடவுளைக்கொண்டு திருமணச்சடங்கை விதிப்படி செய்வித்தார். சுப்பிரமணியக்கடவுள் தாம் உலகத்தாருக்குப் போகமோக்ஷங்களைக் கொடுக்குங் காரணத்தினுல், பிரமாவினுடைய சிரசின்கண்ணே திருவடியை வைத்துச் சாம்பவிதீக்ஷையெனப்படும் விஞ்ஞானதீக்ஷை புரிந்தருளிய பரமாசாரியராகிய தாமே தெய்வயானையம்மையாரோடும் சிவாக்கினியை வலஞ்செய்து, அவருடைய பாதத்தை அம்மியிற்றாக்கிவைத்து, இலக்ஷ்மியும் சரஸ்வதியும் காளிகளும் துதித்துச்சூழ, அம்மையாருடன் அருந்ததி தரிசனஞ்செய்தார். இவ்வாறு திருமணச்சடங்கு முடிந்தபின், சுப்பிரமணியக்கடவுள் தெய்வயானையம்மையாரோடு சிவபெருமானையும் உமாதேவியாரையும் பிரதக்ஷிணஞ் செய்து மும்முறை நமஸ்கரித்தார். அவரிருவரும் தம்மை வணங்கிய மகனையும் மருமகளையும் முறையே அன்போடு எடுத்தணைத்து அருள்செய்து, தமக்குப்பக்கத்தில் இருத்தி, உச்சிமோந்து, மகிழ்ச்சியின் மிக்க இயல்பினராய், ''உமக்கு எங்களுடைய முதன்மையைக் கொடுத்தோம்'' என்று சொல்லியருளினர்கள். அதனைக் கண்ட பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் அரம்பையர்களும் அவ்வறுமுகக்கடவுளையும் தெய்வயானையம்மையாரையும் வணங்கினர்கள். சிவபெருமானும் உமாதேவியாரும் அவர்க்கெல்லாம் பேரருள்புரிந்து, பரி

சனங்களோடு விரைவில் அந்தர்த்தானமாயினர்கள். ஆன்மாக்கடோறும் பரமான்மாவாய் வியாபித்து நின்ற மேலோராகிய அவ் விருவரும் மறைந்தபொழுது, திருமணச்சாலையிலிருந்த தேவர்களும் முனிவர்களும் அவர்களுடைய திருவருட்டிறத்தை நினைந்து வாயாற் றுதித்து அஞ்ச லித்து, அவர்களுடைய திருநாமங்களை யெடுத்துக் கோஷித்து, அவர்கள் மறைந்தமையால் வருந்தி, அவர்கள் வீற்றிருந்த சிங்காசனத்தின் மீது குமாரக்கடவுள் தெய்வயானையம்மையாரோடு வீற்றிருத்தலைத் தரிசித்து அக்கவற்சி நீங்கி, மகிழ்ச்சியிற்சிறந்து, அவர்களுடைய திருவடித்தாமரை களை வணங்கித் துதித்தார்கள்.

இந்தச் சமயத்தில், அறுமுகக்கடவுள் சிங்காசனத்தினின்று மிழிந்து, அனைவரும் அஞ்சலித்து உடன்வரவும், மங்கலவாத்தியங்கள் ஒலிக்கவும், தெய்வயானையம்மையாரோடு தமது திருக்கோயினுட்புகுந்து, இந்திரனுக் கும் விட்டுணு பிரமா முதலிய மற்றைத் தேவர்களுக்கும் விடை காடுத்து, தமது பரிசனங்கள் கோயில் வாயிலைக் காவல் செய்யும்படி பணித்து, உலகிலுள்ள சீவராசிகளெல்லாம் உய்யும்படி செம்பொன் மஞ்சத்தின் மீது விரித்த மெல்லிய அமளியின்மேல் தெய்வயானையம்மையாரோடு கலந்திருந்தருளினர். பிரமாவும் விட்டுணுவும் மற்றையோர்களும் அங்கே தமக்காக அமைக்கப்பட்ட கோயில்களை அடைந்தார்கள். இந்திரனும் பரிசனங்களோடு தன் கோயிலையடைந்து, முசுகுந்தச்சக்கரவர்த்தி முதலா கிய பூவுலக அரசர்கள் யாவருக்கும் காமதேனுவினுற் றரப்பட்ட பல உணவுகளையும் ஊட்டி, வஸ்திரங்களையும் நவரத்தினங்களையும் மற்றை நிதிகளையும், மிகவுங் கொடுத்து, எல்லாரையும் அனுப்பினன். அவ்வர சர்கள் யாவரும் திருப்பரங்குன்றத்தை நீங்கி, முன்பு அம்மலைச்சாரலில் நிறுத்திய தமது சேனைசமுத்திரங்களைச் சேர்ந்து, சுப்பிரமணியப்பெருமா னுடைய திருக்கல்யாண தரிசன விசேஷத்தால் மோக்ஷமடையுந் தொடர் போடு தத்தம் ஊர்களை யடைந்திருந்தார்கள். இந்திரன் தன் மனைவியாகிய அயிராணியோடு துன்பம் நீங்கிய போகத்தை அனுபவித்துக்கொண்டு அத் திருப்பரங்குன்றத்திலிருந்தான். அவ்வாறுகச் சிலநாட்கள் கழிந்தன.

திருச்சிற்றம்பலம்.

## விண்குடியேற்று படலம்.

அறுமுக்கடவுள் திருப்பரங்குன்றத்திலே தெய்வயானையம்மையா ரைத் திருமணஞ்செய்து, அங்கே அவரோடு சிலநாள் வீற்றிருந்து, இந்திர னுக்குத் தாம்செய்த உபகாரத்தின் சேஷத்தைப் பூர்த்திசெய்யத் திருவுளங் கொண்டு, அவ்வம்மையாருந் தாமுமாய்த் திருக்கோயிலை நீங்கிக் கோபுர வாயிலில் வந்தருளினர். வீரவாகு முதலிய வீரர்களும் பூதர்களும் அவ்வர வைத் தெரிந்து, அன்போடு அவர்களுடைய திருவடிகளை வணங்கி நின்று ஆரவாரித்தார்கள். அரிபிரமேந்திராதிதேவர்களும் முனிவர்களும் அவ் வொலியைக் கேட்டு, ''அறுமுகக்கடவுள் எழுந்தருளி வந்தார்'' என்றுகூறி, விரைந்து அவரோடு உடன் சொல்லும்படி எண்ணிச்சென்று, அவருடைய திருவடிகளை வணங்கித் தோத்திரஞ் செய்து சூழ்ந்தார்கள். முருகக்கடவுள்

தம்மைவந்து வணங்குகின்ற வாயுவை நோக்கி, "நம்முடைய தேரைக் கொண்டுவருதி" என்று பணிக்க, அவன் மனவேகமென்னும். தேரைக் கொணர்ந்தான். அக்கடவுள் சிவபெருமானும் உமாதேவியாரும் போலத் தெய்வயானையம்மையாரோடு அத்தேரின்மீது இவர்ந்தார். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். பூதவீரர்களும் படைத்தலைவர்களும் பராசர முனிவருடைய புத்திரர்கள் அறுவரும் தத்தமக்கு ஏற்ற திருப்பணிகளைச் செய்துகொண்டு அவருடைய திருமருங்கிற் சூழ்ந்தார்கள். அவருடைய வாகனமாகிய மயில் தேவர்கள் யாவரும் தன்னை வணங்க அவரவர்களுடைய சிரங்களின்மீது தன்னுடைய பாதங்களைச் சூட்டி, அவ்வறுமுகப்பெருமானுடைய சந்நிதானத்தில் நின்றது. ஆகையால் தவம் வலிமையுடைய தன்றே? முருகக்கடவுள் பிரமா முதலிய தேவர்கள் யாவரையும் பார்த்து, "நீவிரெல்லீரும் உங்களுங்கள் வாகனங்களில் ஏறி எம்மோடு விண்ணுலகத்துக்கு வாருங்கள்" என்று அருளிச்செய்தார். அதனைக்கேட்ட பிரமாவும் விட்டுணுவும் முறையே அன்னவாகனத்திலும் கருடவாகனத்திலும் ஏறிச் சுப்பிரமணியக்கடவுளை வந்தடைந்தார்கள். இந்திரன் ஐராவதத்தின்மேல் ஏறிவந்தான். மற்றைத் தேவர்களும் முனிவர்களும் தத்தம் வாகனங்களில் ஏறி அவரைச் சூழ்ந்து தோத்திரஞ் செய்துகொண்டு வந்தார்கள். "அறுமுகக்கடவுள் விரைந்து விண்ணுலகத்துக்கு எழுந்தருள்கின்றார்" என்று பலருங் கூறக்கேட்டு, இரண்டாயிரம் வெள்ளம் பூதங்களும் விரைந்து, புறப்பட்டன. பூதர்களிற் பலர் குடமுழா, முரசு, சங்கு, மிருதங்கம், படகம் முதலாகிய பல வாத்தியங்களை இயம்பினர்கள். இவ்வாறுகப் பரிசனங்கள் பக்கத்திற் செல்லச் சுப்பிரமணியக்கடவுள் திருப்பரங்குன்றத்திலுள்ள திருக்கோயிலை நீங்கி ஆகாயவழியாகச் சென்று, தமது மாதுலனுகிய இந்திரன் முன்னர் இருந்த அமராவதியை அடைந்தார்.

விண்ணுலகத்தையடைந்த அக்கடவுள் அந்நகரம் பானுகோபன் அக்கினி கொளுத்த எளிமையுற்றிருந்ததையும். இந்திரனுடைய மனத்திலுள்ள அவாவையும் தெரிந்து, அவ்விண்ணுலகத்தைப் பாதுகாக்கத் திருவுளங் கொண்டு, தெய்வத்தச்சனை நோக்கி, "துன்பங்களை நீங்கிய இந்திரன் எல்லையில்லாத வளங்களோடு இருந்தரசுசெய்தற்குச் சுவர்க்கவுலகத்தை முன்போல விரைந்து உண்டாக்குவாய்" என்று பணித்தருளினர். அவன் வணங்கிப்போய், அத்தேவருலகத்தைச் சூழ மதிலையும், அதில் நான்கு வாயில்களையும், எழுநிலைமாடங்களையும், கோபுரங்களையும், எண்ணில்லாதவீதிகளையும், நடுவிலே ஒரு கோயிலையும், செய்குன்றுகளையும், அளவில்லாத நீர்நிலைகளையும், மாடங்களையும், மாளிகைகளையும், மண்டபங்களையும், சிங்காசனங்களையும், முனிவர் வாசங்களையும் அழகுபெற உண்டாக்கி, இந்திரனுக்கொரு கோயிலும், அறுமுகக்கடவுள் வீற்றிருத்தற்கொரு கோயிலும், பிரமவிட்டுணுக்களுக்கு வெவ்வேறு கோயிலும், மற்றையோர்களுக்குத் தக்க இருக்கைகளும் அமைத்து, வைகுண்டவுலகத்திலும் சத்தியவுலகத்திலும் சிறந்ததென்று சொல்லுமாறு வளப்பம் மிகச் சிற்பநூல் விதிப்படி அத்தேவருலகத்தைச் செய்தான். [இந்திரனுக்கென்று செய்த, இலக்ஷ்மி வீற்றிருக்கும் அந்நகரத்தினழகைச் சரசுவதிக்குஞ் சொல்லமுடியாதாஞல், எனக்குச் சொல்ல முடியுமோ!]

விசுவகன்மன் இவற்றையெல்லாம் மனத்தாற்செய்த திறமையை விட்டுணுவும் பிரமாவும் பார்த்து மகிழ்ச்சியடைந்து, "பிரமாவினுடைய

சிருட்டித் தொழிலும் உனது தொழிலுக்கு நிகரில்லை'' என்று புகழ்ந்தார்கள். இந்திரன் அந்நகரத்தினழகைப் பார்த்து, விசுவகன்மனைக் கட்டித்தழுவினன். அவன் இவ்வாறு யாவரும் வியக்கும்படி அமராவதியை உண்டாக்கி, சண்முகக்கடவுளுடைய திருவடிகளை வணங்கி நிற்ப, அவர் அவனுக்கு அருள் புரிந்து, பக்கத்திலுள்ள கணங்களோடு நகரத்தினுட்போயினர். அப்பொழுது அயிராணி அரம்பையர்களோடு ஒரு விமானத்தில் வந்து, இந்திரனுடைய கோயிலையடைந்தாள். அறுமுகக்கடவுள் இந்திரனுடைய நகரத்தின் வாயிலிலே செல்ல, பிரமா முதலிய தேவர்கள் தத்தம் வாகனங்களினின்றும் இறங்கி, அவரோடு உடன்சென்றார்கள். அக்கடவுள் தெய்வயானையம்மையாரோடு தேரினின்றுமிழிந்து, பொன்மயமாகிய சபையையடைந்து, அங்குள்ள திவ்விய சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தருளி, பிரமா முதலிய தேவர்களுக்குப் பேரருள்புரிந்து நோக்கி, ''இந்நகரை அரசுசெய்யும்வண்ணம் இந்திரனுக்கு விரைவில் முடிசூட்டுதிர்'' என்று பணித்தார். தேவர்கள் நன்றென்று அதற்குவேண்டிய அட்டமங்கலங்களையும், சாமரம், குடை, வாள், கிரீடம் முதலிய அரச அங்கங்களையும் மற்றையுபகரணங்களையும் வருவித்து, இந்திரனைக் கங்காசலத்தினுல் அபிஷேகஞ் செய்து, பீதாம்பரம், ஆபரணம், சந்தனம், மாலை முதலியவற்றுல் அலங்கரித்து, சிங்காசனத்திலேற்றி, வரிசையோடு அவனுக்கு முடிசூட்டினர்கள். தேவர்கள் யாவரும் முடிசூட்டப்பட்ட அவ்விந்திரனுடைய கால்களை வணங்கினர்கள். இருடிகள் யாவரும் ஆசிகூறினர்கள். அரம்பையர்கள் நடித்தார்கள். இந்திரன் அறுமுகப்பெருமானுடைய சந்நிதானத்திற் சென்று, அவரை வணங்கித் துதித்து, ''எம்பெருமானே, சுவர்க்கவுலகத்தையும், சூரபன்மனுவிழந்த பழைய அரசுரிமையையும், செல்வங்களையும், ஒருங்கே ஈந்தருளினீர், அடியேன் உய்தேன். ஒருவருக்கு இதன்மேலும் பெரும்பேறு உண்டோ!'' என்று விண்ணப்பஞ்செய்தான். அறுமுகக்கடவுள் அவனுக்கு அருள்புரிந்து, ''இந்திரனே, இந்நகரரசுரிமையை நடாத்தி இங்கே க்ஷேமத்தோடிருப்பாய்'' எனறு அவ்விந்திரனை அங்கே வைத்து, மற்றைத்தேவர்களை அங்குள்ள அவரவர் இருக்கைக்குச் செல்லும்படி அனுப்பி, தெய்வயானையம்மையாருந் தாமுமாய்த் தமது திருக்கோயிலுட் புகுந்து, பூதர்களும் மற்றை வீரர்களும் மிகச் சிறிய அணுவும் உட்புகாவண்ணம் திருவாயிலைக் காவல் செய்ய, அவ்வம்மையாரோடு திருவிளையாடல்களைச் செய்துகொண்டு அங்கே வீற்றிருந்தருளினர். பிரம விட்டுணு முதலிய தேவர்கள் தத்தம் இடங்களை அடைந்தார்கள். இந்திரன் விண்ணுலகத்தை அரசாண்டு இந்திராணியோடு இன்பமனுபவித்துக்கொண்டிருந்தான். தேவர்கள் யாவரும் இந்திரபாக்கியமன்றி மற்றை மேலுலக பாக்கியங்களும் ஒருங்கு பெற்றாற்போல மனமகிழ்ச்சியுற்று, ததற்ற இருக்கைகளை அடைந்து விழாக்கொண்டாடியிருந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## கந்தவெற்புறு படலம்.

இப்படிச் சிலநாட்கழிய இதன்மேல் ஒருநாள், முருகக்கடவுள் கந்தவெற்பில் வீற்றிருக்கத் திருவுளங்கொண்டு, தேவருலகத்திலே தாம்

வீற்றிருந்த திருக்கோயிலினின்றும் தெய்வயானையம்மையாரோடு புறப் பட்டார். அதனைப் பிரமா முதலிய தேவர்கள் அறிந்து அங்கே வந்தார் கள். அவர்களை அறுமுகக்கடவுள் நோக்கித் தத்தம் பதங்களுக்குச் செல் லும்படி விடைகொடுத்தனுப்பி, இந்திரனைச் சுவர்க்கவுலகத்திலிருந்துஅரசி யற்றும்படி நிறுத்தி, தெய்வயானையம்மையாரோடு தேரின்மேல் ஏறி, தமது பணியால் வீரவாகுதேவர் அத்தேரைச் செலுத்த இலக்ஷத்தெண்மரும் பூதர்களும் சூழத் திருக்கைலாசமலையிற்போய், தேரினின்றுமிறங்கி, சிவ பெருமானையும் உமாதேவியாரையும் வணங்கி, அவர்களுடைய திருவருளை யும் விடையையும் பெற்று, கந்தமலையிற்போய், வீரவாகு முதலிய வீரர் கள் பணிகளைச்செய்து நிற்கவும், படைத்தலைவர்களும் பூதர்களும் துதிக் கவும், தெய்வயானையம்மையாரோடு இரத்தின சிங்காசனத்தின்மீது வீற் றிருந்தருளினர்.

துய்யதோர் மறைக ளாலுந் துதித்திடற் கரியசெவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெம்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க வன்னன்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கவிப் புவன மெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.

## இந்திரபுரிப் படலம்

முருகக்கடவுள் கந்தவெற்பிற்போய் வீற்றிருந்த கதையைச் சொன் னும். இந்திரனுடைய செய்கையையும் பிறவற்றையும் சொல்வாம். சண் முகப்பெருமானுடைய திருவருளால் விண்ணுலகத்தை அரசாண்டு கொண் டிருந்த இந்திரன் ஒருநாள், தான் பகைவர்களாகிய சூரபன்மன் முதலாயி னோர் பணித்த பலகுற்றேவல்களையுஞ் செய்துகொண்டிருந்ததையும், அநேக யுககாலம் அவர்களுக்கு ஒளித்துத்திரிந்ததையும், அதற்கிடையிடையில் நேர்ந்த தீமைகளையும், அவற்றுல் அடைந்த துன்பங்களையும், பிறவற்றை யும் நினைத்து, அயிராணியோடுகூடி இன்புறும் வாழ்க்கையையும் செல்வங் களையும் அரசுரிமையையும் வெறுத்து, ''தவஞ்செய்து மோக்ஷமடைவேன்'' என்று துறக்கும்படி நினைத்தான். தேவர்களுக்கு மந்திரியாகியும்குருவாகியும் அரசனுகியும் இருக்கின்ற பிரகஸ்பதி இந்திரனுடைய அக்கருத்தை அறிந்து அதனை மாற்றுதற்கு ஓர் உபாயத்தையெண்ணி, இழிந்த பொய்மையும் உயர்ந்த நன்மையைப் பயக்குமாயின் வாய்மையாம் என்னும் மேலோர் கொள்கையை உட்கொண்டு, இந்திரபதம் நிலைபெறும்படி அவன்மாட்டு வந்திருந்து, ''அரசனே, நாம் சொல்வனவற்றைக் கேட்பாய்'' என்று இவ்வாறு சொல்வாராயினர்.

''மகாராஜனே நீ அன்பில்லாத சூரபன்மனற் பட்ட துன்பத்தை நினைத்து நினைத்து விண்ணுல அரசையும் இல்வாழ்வையும் வெறுத்தாய். இவைகளை வெறுத்தனையாயின் பின்பு நீ ஐம்பொறிகளை அடக்கித் தவஞ் செய்து பெறும்பயன் யாதோ! மைந்தனே, கேள்; மிகவும் மனத்துன்ப மடைந்தவர்களல்லவா பெருஞ்செல்வத்தையும் பெருவாழ்வையும் அடை வர்? அது யோசிக்கின் உன்னளவில் மாத்திரமன்று, இந்த மூவுலகங் களிலும் வழங்கும் இயற்கையாம். பெருந்தவங்களைச் செய்த முனிவர்

களிலும் தேவர்களிலும் பாதலவாசிகளிலும் மும்மூர்த்திகளிலும் யாவர் தாம் பெண்களுடைய போகத்தை விட்டிருந்தவர்? கழிந்துபோன துன் பத்துக்குப் பயந்து கிடைத்த இப்பெருஞ்செல்வத்தைத் குற்றமுடைய தென்று நீ துறந்து தனித்தவனாய்த் தவஞ்செய்துழன்றால், அத்தவஞ் செய்தற்கண் மிகவும் உண்டாகும் துன்பத்திற்கு ஒரெல்லையுமுண்டோ? சிறிய கானலை நீந்தப் பயந்து கடலிற்போய் வீழலாமோ? உடம்பை நோகும்படி வருத்தி ஐம்புலன்களையும் அடக்கிக் காமம் முதலிய முக் குறும்புகளையும் நீக்கி யோகாப்பியாசம் செய்யும் பெரியோர்கள் பெறும் பயனைச் சொன்னால், அதுவும் போகமன்றி வேறொன்றில்லை. இதனை அறி குதி. உடம்பு அழிந்து, ஐம்புலன்களும் ஒடுங்கி, மனமுதலிய கருவிகளும் செயலும் இல்லையாகிய அவ்விடத்தில் ஒருபேரின்பம் உண்டென்பர் சிலர். அதனை யாவர் அறிந்தவர்? உலகிலுள்ள அறிஞர்கள் யாவரும் இவ்வுல கிற்கண்டதே மெய்யென்பர். பொய்யாகிய கானல்நீரை மெய்யென்று விரும்பிக் கைநிறையக் கொண்ட நன்னீரை நிலப்பிளப்பிற் சொரிந்தாற் போல, அறியார் சிலர் உள்ளதுபோலக் கூறுகின்ற மோகூத்தை மெய் யென்றெண்ணி, அரசனே; நீ இம்மைப்பயனை இழக்கின்றாய். இந்த உன் னெண்ணம் நன்று! நன்று! பெண்களோடு கூடியனுபவிக்கும் இன்பமே இன்பம். இவ்வுலகில் அவரோடு கூடி வாழும் வாழ்வே பெருவாழ்வு. அவர்களையடையும் செல்வமே பெருஞ்செல்வம். அவர்களுடைய ஸ்தனங் களைத் தழுவாத வறுமையே வறுமை. பூரணசந்திரன்போலும் முகத்தை யுடைய அழகிற் சிறந்த பெண்களுடைய புணர்ச்சியைச் சிலர் சிற்றின் பம் என்று சொல்லுவர். அவர் அதன் சிறப்பை உள்ளபடி அறிவரா யின், அதுவே பேரின்பமாகும். மகாராஜனே, நீ அதனைக்கேட்க விரும்பு வையாயிற் சொல்வேன்'' என்று பிரகஸ்பதி கூறினார். இவற்றைக் கேட்ட இந்திரன் நகைத்து, அக்கினியிற்பட்ட நெய்போல மனமுடைந்து, காமம் மிகுந்த மனத்தனாய், ''அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை உதவு கின்ற அருமருந்துபோலும் பரமாசாரியரே, நீர் பெண்களுடைய சிறப்பை யும் நல்ல காமவின்பத்தையும் இன்றுகாறும் எனக்கு உபதேசியாம விருந்த காரணம் என்னை?'' என்றான்.

தேவகுரு இதனைக்கேட்டு, ''இவன் என் சூழ்ச்சியினால் மனம் மயங்கி னான்'' என்று கருதி, ''மதனநூலைக் கற்றுணரவேண்டும் என்னும் ஆசையில் லாத அபக்குவர்களுக்குப் பெண்களுடைய மேன்மையை அறிஞர்கள் போதிக்கமாட்டார்கள். ஆதலினால் நானும் இந்நாள்காறும் உனக்கு அதனை உபதேசித்திலேன். யான் அக்காமநூற்கடல் முழுவதையும் நூட்ப புத்தி யாற் கற்றுக்கரைகண்டுள்ளேன். அதன்றிறங்களெல்லாவற்றையும் உனக் குச் சொல்கின்றேன் கேள். சமயங்கள் எல்லையில்லாதனவென்றும் ஆயிரத் தெட்டென்றும் வேறுமுள்ளனவென்றும் அவற்றுள் மெய்ச்சமயம் ஆறு என்றும் அறிவுடையோர்கள் சொன்னார்கள். அவற்றுள் தன்னை அநுட் டிப்பவர்களுக்குத் தேவாமிர்தம்போல மிகவும் இன்பத்தைத் தருவதும் இம்மையில் வீடுபேற்றைத் தரவல்லதும் யாவராலும் விரும்பப்படுவதும் ஆகிய உலோகாயதம் என்று ஒரு சமயநெறியுளது. அச்சமயநெறியில் முத்திபெற்றின்பமனுபவிப்போர் ஆடவர்களும் அம்முத்தியின்பத்தைக்

கொடுப்போர் பெண்களும் ஆவர். அப்பெண்களுடைய இயற்கைகளையும், ஆடவர்களுடைய இயற்கைகளையும் அவ்வாடவர் பெண்களைச் சேருந் திறங்களையும் அம்மதனநூல் மெய்ம்மையாகச் சொல்லும்'' என்று சொல்லி அவ்விருபாலாருடைய சாதி, இயற்கை, தத்துவம், குணம், தேசம், அவத்தை, காலம், கருத்து முதலியவற்றையும் பூணருந் திறங்களையும், மதனநூலிற் சொல்லிய முறைப்படி தொகுத்தும் வகுத்தும் விரித்தும் பிரகஸ்பதி இந்திரனுக்குப் போதித்தார்.

இந்திரன் அவற்றை அறிந்து, காமவின்பநுகர்ச்சியிலே கவலை வைத்து, தன்குருவை வணங்கி, ''பரமாசாரியரே, நீர் உபதேசித்த காமநூற்பொருள் முழுதையும் உறுதியாகக் கைக்கொண்டேன். இனி வேறொரு பொருளையும் விரும்பேன். எல்லையில்லாத இன்பத்தையடைந்தேன்'' என்று பெருமகிழ்ச்சியுற்று, அவரிடத்து விடைபெற்றுக்கொண்டு போயினன். பிரகஸ்பதியும் தாம் எண்ணிய கருமம் முடிந்ததென்று மகிழ்ச்சியோடு போயினர். குருவினிடத்து விடைபெற்றுச்சென்ற இந்திரன் விண்ணுலக அரசாட்சியைத் தன் குமாரனுகிய சயந்தனிடத்தில் ஒப்பித்து, இந்திராணியின்மீது ஆசைவைத்து, மறுமையின்பங் கிடைப்பினும் அதனையும் வெறுக்குங் கருத்தினனாய், மதனநூல் விதிப்படி காமவின்பமொன்றையே அனுபவித்துக்கொண்டிருந்தான்.

இந்திரன் இவ்வாறு இருக்குநாளில், அவனுடைய அரசுரிமைச் செங்கோல் நடாத்துகின்ற சயந்தகுமாரன் தன்னவைக்களத்தில் வந்திருக்கும் முனிவர்களுள்ளும் தேவர்களுள்ளும் தன்னெதிரிலிருக்கின்ற ஆசாரியராகிய பிரகஸ்பதியை நோக்கி, ''எம்பெருமானே, பிரமா முதலிய தேவர்களும் முனிவர்களும் சூரபன்மனால் மிகுந்த துன்பமுற்றுத் தங்கள் பழைய மேன்மைகளிழந்து தாழ்வடைய வந்த காரணமென்னை? சொல்லியருளும்'' என்று வினவ, ''அது அத்தேவர்களும் முனிவர்களும் தக்ஷப் பிரஜாபதி திரிபுராந்தகராகிய சிவபெருமானை ஒழித்துச் செய்த யாகத்திற் புகுந்த பாவத்தால் வந்தது'' என்று பிரகஸ்பதி கூறினர். அதுகேட்ட சயந்தன் ''இது அதற்குக் காரணமாயின், அந்தப் புன்மொழிலையுடைய தக்கனது வாழ்வையும், அவன் சிவபெருமானையன்றிச் செய்த யாகத்திலே நிகழ்ந்தவைகளையும் ஒன்றும் ஒழியாமல் அடியேன் அறியும்படி சொல்லியருளல்வேண்டும்'' என்றான். பிரகஸ்பதி சயந்தனை நோக்கி, ''குமாரனே, வெற்றியடைந்து வாழுதி. நான் சொல்லும் அச்சரித்திரத்தைக் கேள்'' என்று சொல்வன்மையோடு அத்தக்கனுடைய சரித்திரத்தை உபதேசிப்பாராயினர்,

திருச்சிற்றம்பலம்.

தேவகாண்ட முற்றிற்று.

ஆ ரு வ து

# தக்ஷ காண்டம்.

## உபதேசப் படலம்.

மாயையின் வலியோ னுகி மான்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்ட மரசுசெய் துகநூற் றெட்டுக்
காயம தழிவின் றுகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றுள் சென்னி வைப்பாம்.

பிரமதேவர் ஒருநாள், சத்தியவுலகத்திலுள்ள கோயிலிலே முனிவர்களும் தேவர்களும் தம்முடைய புதல்வர்களும் பக்கங்களிற் றுதிக்க வீற்றிருந்தார். அப்பொழுது, அவர் படைப்புத்தொழில் செய்யும்படி முன்னளிற்பெற்ற பத்துப் புதல்வர்களுள், புத்தியிற் சிறந்த மூத்தகுமார னுகிய தக்கனென்பவன் முன்செய்த தவவலியால் அப்பிரமாவை நோக்கி, "என் பிதாவே, தேவர்களில் முதல்வராகியும், ஞானத்திற் றலைவராகியும், மும்மூர்த்திகளில் உயர்ந்தோராகியும், அழிவில்லாதவராகியும், உயிர்க்குயிராகியும் உள்ள முழுமுதற்கடவுள் இன்னர் என்பதை அடியேன் அறியும்படி சொல்லியருளும்" என்று வினவினன். அதனைப் பிரமா கேட்டு, "மகனே, நீ வினவிய இது நன்று. சொல்வேன் கேள். விட்டுணுவும் யானும் அந்நாளில் 'நாமே பரம்பொருள்' என்று தருக்குற்றுப் போர் செய்தபொழுது, சோதிசொரூபமாயெழுந்து, வானுலகத்தில் உயர்ந்த சிவபெருமான் ஒருவரே எல்லார்க்கும் மேலாய கடவுள். இதனை நீ தெளிவாய்" என்று கூறினர். அதனைக்கேட்ட தக்கன் "முத்தொழில்களிலும் முதற்றெழில்களாகிய சிருட்டிதிதிகளைச் செய்யும் நீவிரிருவரும் கடவுளரல்லராக, இறுதியதாகிய சங்காரத்தைச்செய்யும் பரமசிவன் உங்களுக்கிறைவராயிருக்குந் தன்மை என்னை? என்மனமயக்கந் தீரும்படி சொல்லியருளும்" என்றன். சிவபெருமானுடைய திருவருளினல் அவருடைய உண்மை நிலையை யறிந்த பிரமதேவர் அதனைக்கேட்டு, "தக்கனே, முன்னே வேதங்களைக் கசடறக் கற்று உண்மைப்பொருள் தெரிந்தவாறு நனறு! நன்று!" என்று சிரித்து, "மைந்தனே, 'இறுதித்தொழிலாகிய சங்காரத்தைச் செய்யும் சிவபெருமானைப் பரம்பொருள் எனக் கொள்ளுந் தன்மை என்னை' என்று வினவினை. பிரமவிட்டுணுக்களாகிய எங்களையும் தேவர்களையும் மற்றை உயிர்களையும் ஈற்றிற் சங்கரிப்பவர் அச்சிவபெருமான் என்றல், நம்மையெல்லாம் முன்னர்ச் சிருட்டித்தவரும் அவரேயன்றே? சங்காரகாலத்தில் ஒருவராய், சீவராசிகள் முன்பு தோன்

றியவாறே ஒடுங்கச்செய்து, தாம் அவிகாரியாயிருந்து, மீட்டும் அன்னையும் அத்தனுமாய் அவ்வுயிர்களுக்கேற்ற தனுகரணாதிகளைக் கொடுத்திரக்ஷிக்கின்ற பரமசிவனுடைய செய்கை முழுதும் இத்தன்மைய தென்று சொல்லற்பாலதோ? விட்டுணுவையும் என்னையும் முறையே தம்முடைய இடப்புயத்தினின்றும் வலப்புயத்தினின்றும் உண்டாக்கி, திதிசிருட்டியாகிய தொழில்களையுந் தந்து, 'யாமும் உங்கண்மாட்டு இருக்கின்றோம்' என்று எம்முயிர்க்குயிராய் நின்று, அந்தப்பரமசிவன் எல்லாஞ்செய்கின்றார். எங்களால் முடியுஞ் செய்கை ஒன்றுமில்லை. நம்முயிர்க்குயிராய் நின்றியற்றுதலன்றி, நம்முடைய மனத்தினுள்ளும் இருந்து நாம் பிழை படாவண்ணம் காப்பார்; நம்முடைய இருகண்களினுள்ளும் உளர்; நாம் தம்மையறியாமல் மயங்கும்பொழுதும் எம்மிடத்து வந்தருள்செய்வார்; தாமும் ஒரு செயலைச் செய்கின்றவர்போல எம்மோடு ஒருவராக எண்ணப்படுவார், எள்ளும் எண்ணையும்போலவும், மணியும் நாதமும்போலவும், பூவும் மணமும்போலவும், இரத்தினமும் ஒளியும்போலவும் உலகமெங்கும் உள்ளும்புறமுமாய் வியாபித்து நிற்பார். வேதாகமம் முதலிய மேலாகிய கலைகளையெல்லாம் முன்னாளில் அருளிச்செய்தவர் அந்தச் சிவபெருமானே. அவர் அவைகளை எங்களுக்கு உபதேசிக்க, நாம் உணர்ந்தோம். இதனை நீ அந்த நூல்களிற் பார்த்தறிகுதி. இவ்வாறிருக்க, எல்லாரையும் ஒன்றாக மதித்தாய். நீ மிகவும் பேதையோ?'' என்று கூறினார். தக்கன் அதனைக் கேட்டு; ''சிவபெருமான் அருளிச்செய்த வேதங்கள் பஞ்சபூதங்களையும் உயிர்களையும் மற்றைத் தேவர்கள் யாரையும் பிரமம் என்று சொல்வதென்னை? இதனுண்மையையறியாது என்மனம் கவற்சியடைகின்றது. என்பிதாவே, விரைந்து அதனைச் சொல்லியருளும்'' என்றான். பிரமதேவர் தக்கனைநோக்கி, ''மகனே, இது எல்லாராலும் அறிய முடியாத தன்மை என்று கருதி நான் சொல்வதை நன்கு கேட்குதி. அழியாத முதல்வராகிய சிவபெருமானைக் குறித்து வேதங்கள் கூறியவைகள் மாத்திரம் விதிவாதமும், ஒழிந்தன துதிவாதமுமாம். ஆதலால் அச்சிவபெருமானை ஒழிந்த மற்றைத்தேவர்களுக்கும் உயிர்களுக்கும் பஞ்சபூதங்களுக்கும் வேதங்கள் முதன்மை கூறுதல் முகமனாம். ஒரு பொருளைப் புகழவேண்டினால் அதன் நிலைமைக்கு மேலாகவும் புகழலாம். அது உலகத்திலுள்ளோர் பிராமணர்களைப் பிரமாவாகிய யான் என்று சொல்லுதல் போலும். யாதொரு பொருளை யாவர் வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாம் சிவபெருமானைப் போயடையும். அதுபோல, வேதங்கள் மற்றைத் தேவர்கள் முதலாயினார்க்குச் சொல்லுகின்ற புகழ்களெல்லாம், எல்லா நதிகளும் சமுத்திரத்தைச் சென்றடையுமாறுபோலச், சிவபெருமானைச் சேர்வனவாம். மகனே, இன்னுங்கேள். நான் மேலே சொல்லுமவைகள் வேதசாகைகளெல்லாம் எடுத்துச் சொல்லுகின்ற சத்தியவசனங்களாம். அவற்றைக் கேட்பாய். எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்தழித்து மீண்டும் படைப்பவனும், ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்து அவைகளை ஆண்டருளும் தலைவனும், ஆதியந்தமில்லாதோனும் சிவனேயென்றும்; செகத்பிதாவும், சுத்தசாத்குண்ணியனும், அருவும் உருவுமாகும் சுத்தனும், அறியவொண்ணாத சோதியும், எங்கும் வியாபித்திருக்கும் ஞானசொரூபியும், அநாதியாயுள்ளவனும், தேவாதிதேவனும்,

என்றும் அழியாதோனும், ஆன்மாக்களுள் நீங்காதிருக்கின்ற பரமானந்த தாண்டவனும், சிவனேயென்றும்; மூவுலகங்களிலும் தோன்றுகின்ற பொருள்களேயெல்லாம் பெற்றருளும் பிதாவாகிய திரியம்பகனும், எல்லார்க்குஞ் சாக்ஷியாய் நிற்கின்றோனும், தாணுவும், பரனும், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுளும், சிவனே என்றும்; பெருமையிற் சிறந்தோனும், ஏகனும், அளவிடப்படாத குணத்தையுடையவனும், பிரமவிட்டுணுக்களால் அறியப்படாதோனும், ஆண் பெண் அலியென்னும் மூன்றுபாலுமில்லாதோனும், அன்பர் யாவர்க்கும் வேண்டியவற்றை வேண்டியாங்கு ஈபவனும் சிவனே என்றும்; பிரமா முதலாக நின்ற பசுவர்க்கங்கட்கெல்லாம் பதியாக நின்றருள் செய்யும் பசுபதியும், அவர்க்கெல்லாம் தான் தலைவனென்பதை யாவருந் தெளிய அவர்கள் இறக்க வெந்த சாம்பலையும் எலும்பையும் தரிப்பவனும் சிவனே என்றும்; உடம்பெடுத்துப் பிறக்குமெவரையும் தன்னுடைய குணத்துளொடுக்கி அவர்க்குத் தானே புகலிடமாகி நின்று அவர்களுடைய குணங்களிற்றான் புகுதலில்லாதோனும், தன்னுடைய இயற்கை இத்தன்மையதென்று யான் சொல்லுதற்கரிய தேவனும், ஈசனும் சிவனேயென்றும் அவ்வேதம் கூறும். தக்கனே, இன்னுமொன்றைக் கேள். பிரமா முதலாக நின்ற தேவர்களேயெல்லாம் நீக்கி அந்தச் சிவனென்றுள்ள ஒரு தனி முதல்வன்றானே முத்தியை விரும்பினோற் கொடுப்பனென்றும் அந்த வேதம் சொல்லிற்றென்னில், மற்று யாவர்தாம் தேவராவார்? 'சீவராசிகள் பரசிவனே யுணர்தலின்றிப் பிறவித்துயரை நீங்கி மோக்ஷத்தையடைவேமென்று சொல்லுதலானது உருவமில்லாத ஆகாயத்தின் தோலை உரித்துடுப்பதற்கு நிகராகும்' என்று உபநிடதம் சொல்லிற்றான், அச்சிவனே பரம்பொருள் என்பதற்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ! அச்சிவபெருமானே பரம்பொருள் என்பதனை வலியுறுத்துதற்குச் சொல்லிய வேதவாக்கியங்கள் இன்னும் பலவுள. அவற்றை நினைத்துச் சொல்ல எனக்கும் முடியாது. ஒருவாறு சொல்வேனாயினும் சொல்லப் பல நெடுங்காலம் கழியும். அங்ஙனம் சொல்லினும் ஒழியா. நீ இதனை முன்னே என்னிடத்தறிந்தனையாயினும், மகனே, இப்பொழுது மறந்தனையோ? விட்டுணுவையும் என்னையும் வேறு பலரையும் புகழுகின்ற வேதமானது பரமசிவனைத் துதித்ததுபோல நமக்கு ஓர் உரையாயினும் சொல்லியதுண்டோ? நம்மைச் சொல்லியதும் உபசாரமேயென்று இவ்வுலகமெல்லாம் அறியும்படி நம்மை அவ்வேதம் முன்னும் பின்னும் விலக்கியதல்லவா? * நான்கு வேதங்களிலும் ஒரு பாகம் சிவபெருமானுடைய பெருமையை எடுத்துப் பேசும்; மற்றொருபாகம் பிரமவிட்டுணுக்களாகிய எம்மையும் மற்றைத் தேவர்களையும் பஞ்சபூதங்களையும் மற்றைப் பல பொருள்களையும் பேசும். இது சத்தியம். தக்கோனே, இதனை அறிகுதி. பிரமவிட்டுணுக்களாகிய நம்மையும் பரம்பொருள் என்று நினைத்துச் சிவமெருமானைப்போலச் சிறப்புச் செய்கின்ற தீய நெஞ்சினர்களாகிய பதகர்கள் தீராத துன்பத்தைத் தருகின்ற வெவ்விய நிரயப்படுகுழியில் வீழ்வார்கள். அவர்களை விழுங்கிய அந்நிரயம் உமிழாது. நம்மோடு அச்சிவபெருமானையும் சமமெனச் சொல்கின்றவர் எப்

* வேதம் முன்னும் பின்னும் விலக்கினமையை, பெரியபுராணத்துத் திருமலைச் சிறப்புச் சூசனம் இரண்டாம்பாராவிற் காண்க.

பிறப்பிலும் துன்பக்கடலுள் ஆழ்வார்கள். நம்மைச் சிவபெருமானுக்கு அன்பர்களென்றும், அவருடைய திருவடித் தொண்டைச் செய்து அவரருளால் வாழும் தேவர்களென்றும் நினைத்துத் தோத்திரஞ் செய்வதற்கு நாம் அருள்செய்வோம். இங்ஙனம் நினையாமல் நம்மையும் பரம்பொருள் என்று நினைக்கின்ற மற்றையோரை நமக்குப் பகைவரென் றெண்ணியே யிருப்போம். 'சிவபெருமான் பசுபதி நாமெல்லாம் பாசத்தாற் பந்திக்கப்பட்டுழலும் பசுக்கள்' என்று விதிப்பொருட்டார்க வேதங்கள் கூறுகின்ற உண்மைப் பொருளை, மைந்தனே, நீ தெளியவேண்டிலுறொல் சொல்வேன் கேள். யாங்கள் படைத்தல் காத்தல்களாகிய இவ்வரசியலைச்செய்யும்படி சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்துத் துதித்த ஆலயங்கள் பலவற்றையும் காணுதி. அந்தச் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுது முத்தியடைந்தவர்களிலில்லை; அவருடைய அருளின்றி வாழ்கின்ற தேவர்களும் பிறரும் இல்லை; அவருடைய திருவருளைப் பெற்றுல் அடைதற்கரிய அரும் பொருள்கள் ஒன்றுமில்லை; அவரன்றி பதிப்பொருளுமில்லை; இது சத்தியம். ஆதலால், அக்கடவுளையே சரணென்றடைகுதி'' என்று பிரமதேவர் தக்கனுக்கு உபதேசித்தார்.

திருச்சிற்றம்பலம்.

## தக்கன்றவஞ்செய் படலம்.

பிதாவாகிய பிரமதேவர் இவ்வாறே சிவபரத்துவத்தை உபதேசிக்கக் கேட்டுணர்ந்த தக்கன், தீவினைப்பயனையனுபவிக்கும் ஊழுண்மையினால், மோக்ஷத்தை விரும்பாதவனாய், ''யான் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்து, அவருடைய திருவருளினால் பிரமா முதலிய தேவர்களுடைய வளங்களினும் மேலாகிய வளங்களைப் பெறுவேன்'' என்று எண்ணி, அதில் ஆசையுற்று, பிரமாவை வணங்கி, ''பிதாவே, நீர் உபதேசித்த பரமசிவனையே நான் பரம்பொருள் என்று துணிந்தேன்; அவரை நோக்கிப் பெருந்தவஞ் செய்து பல வளங்களைப் பெற விரும்பினேன். யான் தவஞ்செய்தற்குரிய ஓரிடத்தை விரைவிற் சொல்லி அருளும்'' என்றான். அவர் அவனைத் தம்முடைய மனத்தினின்றும் முன்னைநாளிற் றோன்றிய மானசவாயிடத்துப் போ என்று சொல்லி அனுப்பினர். தக்கன் பிரமாவினிடத்து விடைபெற்று, அத்தடாகத்தை அடைந்து, அதன் ஒரு சாரில் இருந்து, காற்று மழை வெய்யில் பனி ஆகிய இவைகளுக் கஞ்சாமல், பிராணவாயுவைச் சுழுமுனைவழியாய் எழுப்பி மூலாக்கினியைச் சுவாலிப்பித்துப் புருவ மத்தியிலுள்ள அமிர்ததாரையை வீழ்த்தி, தன்னுடைய இருதய கமலத்திலுள்ள சிவபெருமானுக்கு அன்பினால் அபிஷேகஞ்செய்து, கொல்லாமை முதலிய அட்டபுட்பங்களைச் சாத்தி, ஒருப் பாட்டோடு மானசமாக ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி செபித்துப் பூசனை செய்து, தம்மைப்பந்தித்த பாசத்தை நீக்க முயலும் ஞானிகளைப்போல ஆயிரம்வருஷம் அருந்தவத்தைச் செய்தான். அதனைச் சிவபெருமான் திருவுளஞ்செய்து, அவனுக்கு வரங்கொடுக்கும்படி உமாதேவியாரோடு ரிஷபாரூடராய் எழுந்தருளிவந்தார். தக்கன் அவருடைய வரவை அறிந்து,

விரைவில் இருக்கைவிட்டெழுந்து, ''என் மனக்கருத்தும் நிறைவேறி னது'' என்று சொல்லி, மிகுந்த அன்பும் மகிழ்ச்சியும் உண்டாக, ''எம் பெருமானுடைய திருவடிகளைத் துதிப்பேன்'' என்று எதிர்கொண்டு அவ ருடைய திருவடிகளை வணங்கி, ஒன்றுபோல ஆயிரந் தோத்திரங்களைச் சொல்லி நின்றான். சிவபெருமான் அவனை நோக்கி, ''தக்கனே, உன்னுடைய வழிபாட்டை மகிழ்ந்தோம். உனக்கு வேண்டியதென்ன? சொல்லுதி'' என்றார். தக்கன் தன்விதி வழியே மதியுஞ் செல்லுதலால், மோக்ஷத்தை விரும்பாதவனாய், இவ்வாறு வரம்வேண்டுவான்: ''எம்பெரு மானே, இப்பூவுலகமும் விண்ணுலகமும் கந்தருவர் முதலாயினோர் இருக்கு மிடங்களும் பிரம விட்டுணுக்களுடைய பதங்களும் திசைகளும் என்னு டைய ஆஞ்ஞாசக்கரம் செல்லும்படி அருள்புரியும்; உம்மை வந்து துதிக் கும் உயிர்களெல்லாம் என்னைவந்து துதிக்கவும், யான் உம்மை யன்றி மனத்தாலும் பிறரை வழிபடாதிருக்கவும், வரந் தந்தருளும்; தேவர்களும் அவுணர்களும் யான் பணித்த பணிகளைச் செய்யவும், எனக்கு அநேக புதல்வர்களும் புதல்விகளும் உண்டாகவும் அருள்செய்யும்; உம்முடைய சத்தியாகிய உமாதேவியார் எனக்கு மகளாக, நீர் மறையவராய்வந்து அன்பினோடு திருமணஞ்செய்தருளும்'' என்று இவ்வரங்களைத் தக்கன் வேண்டினான். சிவபெருமான் அவற்றைக்கேட்டு, ''தக்கனே, இது நன்று. இவ்வரங்களை உனக்குத் தந்தோம், நீ நன்னெறியில் நிற்பாயாயின் இவ் வரங்கள் நிலைபெறும்'' என்று அருள்செய்து, அந்தர்த்தனமாயினர்.

வரம்பெற்ற தக்கன் சிவபெருமானைத் துதித்துப் பெருமகிழ்ச்சியுற்று, பிரமாவை வரும்படி நினைத்தான். அவர் அதனைத் தெரிந்து, அவனுக் குச் சிவபெருமான் கொடுத்த வரங்களையும் இனிமேல் வரற்பாலன எல் லாவற்றையும் ஞானத்தால் அறிந்து, ''தக்கன் நெடுங்காலம் சிவபெரு மானை நினைத்துத் தவஞ்செய்தவாறு நன்று!'' என்று பெருமூச்சுவிட்டுச் சிரித்து, ''தக்கன் மோக்ஷமடைந்துய்யும்படி யான் உண்மையாகிய சிவ பரத்துவத்தை உபதேசித்தேன். அவன் இத்தன்மையனுமினன். ஐயோ இனி என் செய்வேன்! நாடோறும் அமிர்தத்தை ஊற்றி வளர்த்தாலும் வேம்பு கைப்பது போமோ? சிவனே பரம்பொருள் என்று அறிந்துபோய், இந்நாள்காறும் மேலாகிய தவத்திலிருந்து, உலகில் என்றும் நீங்காத பழி பாவங்களைப் பெற்றான். விதியை யார் விலக்கவல்லார்? இனி யான் செய்வதென்னை?'' என்று மனத்துயரமுற்று, விரைந்து ஆசி கூறிக் கொண்டு தக்கனையடைந்தார். அவன் ''இங்கே ஒரு நகரத்தைச் செய் குதி'' என்றான். பிரமா ''விரைவிற் செய்வேன்'' என்று தன் கைகளால் தக்ஷபுரி என்று ஒரு நகரைப் பொன்னுலகமும் நாணும்படி பூமியிலே செய்தார். தக்கன் அந்நகரிற் சென்று அதனைப்பார்த்து மனமகிழ்ந்து, ''விண்ணுலகத்துள்ள நகரினுள் ஒன்றும் இதற்கு நிகரில்லை; இதற்கினை இதுவே'' என்று பிரமாவினிடத் தன்புசெய்து, கோயிலினுட்புகுந்து, முனி வர்கள் துதிக்கச் சிங்காசனத்தின்மீது ஐசுவரியங்களோடு வீற்றிருந்தான். சிவபெருமானிடத்தே தக்கன் வரம் பெற்றதைத் தமது குருவாகிய வியா ழன் சொல்ல இந்திரன் முதலாகிய தேவர்கள் கேட்டு அஞ்சி, அவனி டத்து வந்தார்கள். அசுரகுருவாகிய சுக்கிரன் தேவர்கள் யாவரும் தக்க னிடத்துப் போய் அவனை வழிபாடுசெய்தமையைத் தெரிந்து, இந்திரனுக்

குப் பயந்து மேருமலையின் ஒரு சாரலிலிருந்த அசுரராசனை அடைந்து, "அரசனே, உனது துன்பம் நீங்கியது. இனி நீ அஞ்சாதே. இந்திரனுக்குத் தக்கன் தலைவனாயினன். இனி நீ அத்தக்கனை அடைகுதி" என்றான். அசுரராசன் அதனைக்கேட்டு மனத்தில் மகிழ்ச்சி மிகுந்து, கிளைஞர்களோடும் தக்கனிடத்துப் போயினன். சூரியன் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும் தேவர்களும் திக்குப்பாலகர்களும் பாதாளவாசிகளும் பிறரும் அவனிடத்து வந்தார்கள். இவர்கள் யாவரும் தக்கனுடைய கால்களை வணங்கி, சிவபெருமானுடைய திருவருட்டிறத்தைப் புகழ்ந்து நின்றார்கள். இவ்வாறு பிரமா முதலிய அனைவரும் தங்கள் தங்கள் கடமைத்தொழிலாக நினைந்து நாடோறும் வந்து வழிபட, செயற்பாலனவற்றை அறியாத தக்கன் தன் குடைநிழலும் ஆஞ்ஞாசக்கரமும் எவ்வுலகும் செல்ல இருந்தரசியற்றினன்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# தக்கன்மகப்பெறு படலம்.

பிரமாவினுடைய பாதத்திற் பிறந்தவளும், கற்பினால் அருந்ததியினும் மேம்பட்டவளும், உலகுக்கெல்லாம் இறைவியும் அழகிற்சிறந்தவளும் ஆகிய வேதவல்லியென்பாளைத் தக்கன் விவாகஞ்செய்து, ஆதிசேஷன் ஆயிரம் இரத்தினங்களை ஈன்றுற்போல ஆயிரம் புதல்வர்களைப் பெற்று, அவர்களுக்கு உபநயனமும் வேதாத்தியயனமுஞ் செய்வித்து, அவர்களை நோக்கி, "நீவிர் யாவரும் மானசவாவியிற்போய்ச் சிவபெருமானைத் தியானித்துத் தவஞ்செய்து உயிர்களைச் சிருட்டிக்கும் வரத்தைப்பெற்று இங்கே வாருங்கள்" என்று சொல்லியனுப்பினன். புதல்வர்கள் அவனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு மானசவாவியிற்சென்று, அதிலே மூழ்கி, சிவபெருமானை நோக்கி நெடுங்காலம் தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். அப்பொழுது நாரதமுனிவர் அங்கே வந்து, "நீவிர் ஜலத்தினின்று தவஞ்செய்துமிக் வருந்துகின்றீர்கள். நீவிர் விரும்பியது யாது? சொல்லுங்கள்" என்று வினவினர். அவர்கள் "முனிவரே, கேளும்: எமது பிதாவின் அனுமதியினாற் படைத்தற்றொழிலைப் பெறும்படி சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்கின்றோம்" என்றார்கள். அதனைக்கேட்ட நாரதமுனிவர் கையோடு கையைத்தட்டிச் சிரித்து, "இதுதானோ சிவபெருமானாற் பெறும் வரம்?" என்று கூறி, பின்னும் சொல்வார்: "சிவபெருமானைத் திரிகரணங்களாலும் வழிபட்டு அருந்தவத்தைச் செய்து, முப்பாசங்களும் நீங்குதற்குரிய வழியைச் சிந்தியாமல், குற்றத்தையுடைய படைப்புத்தொழிலுக்கா ஆசை வைத்தீர்கள்? அருந்தவத்தைச் செய்து நீவிர் இனி அடைகின்ற சிருட்டித் தொழிலின் முறையைச் சொல்லக் கேட்குதிர். அதனால் பெருந்துன்பத்தைத் தருகின்ற பிறப்பும் இறப்புமே வருவது. அது உங்களுக்கு இனியதோ? இப்பொழுது நீவிர் விரும்பிய படைப்புத்தொழிலைச் செய்யும் பிரமாவினுடைய ஐந்து தலைகளுள் ஒன்றைச் சிவபெருமான் தமது திருக்கரத்தாற் கிள்ளும்படி அப்பிரமா செய்த* திமையையும் அதனாலடைந்த

* திமை – சிவதூஷணம்.

பழியையும் நினைக்கிலீரோ? பிரமா முன்னொரு காலத்தில் 'என்னை யல்லது கடவுளரில்லை, யானே யாவர்க்கும் முதல்வன்' என்று கூறி, விட்ணுவோடு நெடுங்காலம் போர்செய்து, பின்னர்த் தம்முன்னர்ச் சிவபெருமான் சோதியாய் எழுந்தருளக் கண்டு, அதன் முடியைத் தேடும்படி அன்னப்பக்ஷி வடிவங் கொண்ட்தையும் அறிந்திலீர்களோ? எள்ளுக்குள் எண்ணெய்போல எங்கும் நிறைந்த சிவபெருமானே எல்லாவற்றையும் படைக்க, அப்பிரமா அக்கடவுளுடைய மாயவலையிலகப்பட்டு, 'எல்லாம் நம்மாலுண்டாயின' என்று அகங்காரங் கொண்டிருப்பார். ஆசையோடு உயிர்களைச் சிருட்டிக்குந் தன்மையாற் பெறும்பயன் பெருமையல்லது வேறு யாது? முனிவர்களே நான் சொல்வதைக் கேண்மின். இது நல்லதென்று ஒருவர் ஒரு பொன்விலங்கைத் தமது காலிற் பூணலாகுமோ? ஒருவர் எவ்வளவு எவ்வளவு இன்பத்தை விரும்பினரோ அவர்க்கு அவ்வளவுக்கு அவ்வளவு துன்பம் வந்தடையும். இது சத்தியம். நீவிரும் படைப்புத் தொழிலைச் செய்வீராயின், கையகப்படுகின்ற துன்பமென்னுங் கடலில் ஆழ்வீர்கள்; அன்றியும், சிவபெருமானை மறந்து 'யாமே பரம்பொருள்' என்று எண்ணுவீர்கள்; நுமக்கடாத தீவினைகள் பலவற்றையும் செய்வீர்கள்; மயக்கமடைவீர்கள்; பேருணர்வை நீங்குவீர்கள். ஆதலால் இந்தப்படைப்புத்தொழிலை விட்டுவிடுங்கள். மோக்ஷத்தை அடைதற்குரிய மேலாகிய நிலைமையை முயன்றடையுங்கள். அதனை அடைதற்கேற்ற நெறியொன்றைக் காட்டி அது இத்தன்மையதென்று சொல்லமுடியுமோ? உலகிலே மேலாகிய தவத்தைச் செய்து அரிய மோக்ஷத்தை யடைந்தவர் பலர்; அதனைப் பெறும்படியிருந்தவர் பலர்; இவரையல்லாத மற்றையோருடைய இயல்பிற் சிற்சில சொல்லுகின்றேன்; கேண்மின்: அவர்கள் சிவனடியாரல்லது தமக்குச் சுற்றம் வேறில்லாதவர்கள்; அச்சிவபெருமானுடைய திருவடித்தாமரைகளேயன்றி வேறு பற்று இல்லாதவர்கள்; மிகவும் இனிய குணத்தினர்; எவ்வகைக் குற்றங்களும் இல்லாதவர்; அன்பினாற் சிவத்தை அடைபவர்; ஆணவமலத்தின் வலியைக் கெடுத்துத் திருவருள் பொழிகின்ற அறிவிற்சிறந்தோர்; எப்பொழுதும் சிவபெருமானை அடைக்கலமெனச் சார்ந்து வாழ்பவர்; சொல்லமுடியாத பெருமையுடையோர். ஆதலால் நீவிரும் அவர்களைப்போல எவ்வகைப் பற்றுமில்லாத மேலான நெறியை யடைந்து, மோக்ஷத்தைப் பெறுதிர். பெருஞ் செல்வங்களைப் பெற்று அதனால் அறிவிழந்திருக்கின்ற உங்கள் பிதாவாகிய தக்கன் பணித்த பணியை தவிருதிர்'' என்று நாரதர் உபதேசித்தார். மோக்ஷத்தைப் பெறுதற்குரிய ஊழினையுடைய தக்கனுடைய புத்திரர்கள் ஆயிரவரும் அதனைக் கேட்டு, ஒரு பக்கத்தில் வந்து தம்முள் யோசித்து, தமது பிதாவின் சொல்லினும் அது சிறந்ததே என்று உறுதிசெய்து, நாரத முனிவருடைய பாதங்களை வணங்கித் துதித்தார்கள். அவர் அவர்களுடைய முதுகைத் தடவி, சிவபெருமானுடைய புகழ்களையெடுத்துத் துதித்து, மோக்ஷத்தை விரும்புகின்ற ஞானிகளுடைய நிலைமையைத் தெளிவாக அறிவுறுத்தி, மந்திரங்களையுங் கிரியைகளையும் உபதேசித்து, அவர்களுடைய பழைய உணர்வை மாற்றி, வேறொருண்மை ஞானத்தை உதவி, ''புதல்வர்காள், நீவிர் யாவரும் நாம் உபதேசித்தபடி மகா தவங்களைச் செய்து மோக்ஷத்தையடைமின்'' என்று கூறி, அகாயத்திற் போயினர். தக்கனுடைய குமாரர்கள்

ஆயிரவரும் அந்த நாரதமுனிவரைப் புகழ்ந்து அவருடைய பாதங்களை வணங்கி, அவருபதேசித்த முறையைக் கடைப்பிடித்து, காமக் குரோத முதலிய குறும்புகள் எல்லாவற்றையும் பற்றறக்களைந்து, மௌனிகளாகி, மானச வாவியில் அருந்தவஞ்செய்து மோக்ஷமடைந்தார்கள்.

புதல்வர்களைத் தவத்துக் கனுப்பிய தக்கன், "எந்குமாரர்களுடைய செய்கை இன்னும் தெரிந்ததில்லை" என்று சிந்தித்து, ஞானத்தினால் நோக்கி, மானசவாவியில் தன் சொற்படி போயிருந்து தவஞ்செய்த புதல்வர்கள் மாட்டு நாரதர் வந்து தன் சொல்லைக் குற்றமென்று கூறி அவர்கள்கருத்தை மாற்றி ஞானத்தை யுபதேசித்து நல்வழியில் நிறுத்திப் போயினரென்றும், அவர்கள் யாவரும் அவருடைய உபதேசநெறியில் நின்று ஒருவரும் தப்பாமல் மோக்ஷமடைந்தார்களென்றும், தனக்கு இனிப் புத்திரர்களில்லை என்றுந் தெளிந்து, வருத்தமுற்றிருந்து, பின்னும் ஆயிரம்புதல்வர்களைப் பெற்று, வேதாத்தியயனஞ் செய்வித்து, "நீவிர் மானசவாவியிற் போயிருந்து சிவபெருமானை நோக்கித்தவஞ்செய்து சிருட்டிக்கும் வரத்தைப் பெறுதிர்" என்று சொல்லியனுப்பினன். அப்புதல்வர்கள் அதனைக்கேட்டு நன்றென்று, பிதாவினுடைய பாதங்களை வணங்கி விடைபெற்று, மானசவாவியிற் போய்த் தவஞ்செய்திருந்தார்கள். மூன்புசென்றநாரத முனிவர் ஓர் உபாயத்தையெண்ணி, அவர்களிடத்தும் வந்து, "நீவிர் யாவர்? எப்பொருளை விரும்பித் தவஞ்செய்கின்றீர்கள்? கபடமில்லாத மனத்தினையுடையவர்களே, எனக்கு அதனைச் சொல்லவேண்டும்" என்றார். அதைக்கேட்ட தக்கனுடைய குமாரர்கள் "நமது தந்தை தக்ஷப்பிரஜாபதி; அவனுக்குச் சிவபெருமான் கொடுத்த வரத்தினாற் பிறந்த புதல்வர்கள் யாங்கள். அவன் உடம்பும் உயிரும் வருந்தச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து சிருட்டி செய்யும் வரத்தைப் பெறும்படி எங்களை இத்தடாகத்திற்கு அனுப்பினன்" என்று கூறினர்கள். நாரதமுனிவர் அதனை விளவி, "நல்ல தவங்களைச் செய்பவர்களே, பரமசிவனுடைய பாதாரவிந்தங்களையே புகலிடமாகக் கொண்டு அவற்றை அடைதலே தவத்தின் பயன் என்று எண்ணினீரல்லீர். யாவர்தாம் குற்றமில்லாதவர்? எல்லாவற்றையும் அறிந்தும் தவஞ்செய்து சிருட்டித்தொழிலையே அடைய விரும்பினீர்! பிறப் பிறப்புக்களை நீக்க விரும்பினீரல்லீர்! பின்னர் அஞ்ஞானத்தை நீங்குவீரோ? இதனால் உமக்கு வரும் பெருமை யாது? நீங்கள் கைக்கொண்ட இந்நிலைமை, அழுக்குப்படிந்த சரீரத்தையுடையோர்கள் பரிசுத்தமாகிய நீர்த்துறையை அடைந்தும், அதனாற் றம்முடம்பிலுள்ள அழுக்கைக் கழுவிக்கொள்ளாது, சேற்றில் மூழ்குதலைப்போலும். மேலாகிய இத்தவத்திற்கு விலையாக நீர் பெறும் சிருட்டித் தொழில், நெடுங்காலம் உலகத்திலே சிறப்போடிருத்தற்கேதுவாமன்றி, நிலையாகுமோ! நாசோற்பத்தியும் துன்ப இன்பங்களும் இல்லாத மோக்ஷமொன்றே உயிருக்கு உறுதி பயப்பதாகும். நீவிர் அவ்வியல்பினையுடைய மோக்ஷத்தை விரும்புகின்றீரல்லீர். ஆயின் பிறப்பிறப்புக்கள் உம்மை விட்டு நீங்குமோ! குந்தைகளுடைய மனமும், பெண்களுடைய மனமும், பித்துற்றோர் மனமும்போல, மெய்ந்நூல்களும் தாம் கொண்ட கோட்பாட்டையே சாதிக்கப் பெறுவனவாமன்றி வேறொன்றுமோ! ஆதலினால், தவஞ்செய்து படைப்புத்

தொழிலைப் பெறும்படி உங்களுக்குக் கற்பித்தவன் உங்கள் பிதாவாகிய தக்கனேயாயின், அவன் சிவபெருமானுற் பெரிய வரங்களைப் பெற்று அவருடைய பாதத்தாமரைகளைப் பத்தி செய்யாத தன்மையால் அறியாமையை யுடையனும். அவன் அத்தன்மையன் ஆதலால், அவனுடைய குமாரர்களாகிய நீங்களும் அத் தன்மையினரே. தன்னை யடைந்து வழிபட்டவருடைய தீமைகளெல்லாவற்றையும் நீக்கி முத்தியையும்படி பேரருளோடு உபதேசிப்பவனவல்லவா நன்னெறி யைப் போதிக்கும் ஆசாரியனுவான்! உமக்கு முன்பிறந்த ஆயிரம் புதல் வர்களும் தக்கனுடைய பணியினுற் படைப்புத் தொழிலை வேண்டி இத் தடாகத்தில் வந்து தவஞ்செய்தபொழுது, அவர்களுடைய அஞ்ஞானங் கெடும்படி உபதேசித்து, ஞானநெறியில் நிலைபெறச் செய்து, மோக்ஷத்தை யடைவித்தேம்'' என்று நாரதமுனிவர் கூறினர். தக்கனுடைய குமாரர் கள் அவருடைய பாதங்களைச் சிரமேற்கொண்டு வணங்கி, ''சிறியேங்கள் உய்யவேண்டுமென்று, திருவுளஞ் செய்து இங்கெழுந்தருளி வந்தீர். நீர் உபதேசிக்கும் மெய்ந்நெறி இன்னதென்று அறியேம். எமக்கு அதனைச் சொல்லியருளும்'' என்றூர்கள். நாரதமுனிவர் மிக்க அன்போடு அவர்க ளுக்கு அருள்புரிந்து, ''யான் உமக்கு ஞானத்தைப் போதித்து, ஐம்புலன் வழியே சென்று மதிமருண்டு, இன்பத்துன்பங்களை அனுபவித்துழலுகின்ற பிறவியை இனித் தொலைப்பேன்'' என்று அதனை உபதேசிப்பார். ''சிறு வர்கள், சிவபெருமானுடைய திருவடிகளை அவர் அருளால் வழிபடு கின்ற பெரியோர்கள் அநுட்டிக்கும் பாதங்களும் நான்கு; அவர்கள் அடையும் பதங்களும் நான்காம். அவற்றுள் ஞானபாதத்தில் நிற்போர் பெறுவது எல்லாவற்றிலும் உயர்ந்த கதியாம். அதுவே முத்தியென்று சொல்லப்படும். அது சிவநேசச் செல்வர்களாய் இருவினையொப்பு மல பரிபாகமுற்ற ஞானிகளால் அறியப்படுவதல்லது, தேவர்களாலும் அறி யற்பாலதன்று. அந்த ஞானபாதத்தில் நிற்போர் சிவபெருமானுடைய திருவடிகளை அடைவர்; துன்பமயமாகிய இந்தப் பிறவியிற் பொருந் தார்; சொல்லுதற்கரிய அருள்ஞானத்தோடு இயைந்து எந்நாளும் பேரின் பத்தை அநுபவித்திருப்பர். ஆதலால் நீங்களும் அந்த நெறியில் நின்று ஞானயோகத்தினுல் மோக்ஷத்தை அடைகுதிர்'' என்று சிவாகமத்தின் ஞானபாதப் பொருண் முழுதையும் நாரதமுனிவர் சிவபெருமானுடைய திருவருளினுல் அவர்களுக்கு உபதேசித்து, அவர்கள் யாவரையும் அந்நெ றியில் நிற்கும்படி நிறுத்தி, ஆகாயவழிக்கொண்டு சென்றூர். தக்கனுடைய குமாரர்கள் ஆயிரவரும் ஒருப்பாடு பொருந்திய மனதோடு மேலாகிய ஞானமார்க்கத்தில் நின்று, சிவபெருமானுடைய திருவருளினுல் மோக்ஷ த்தை யடைந்தார்கள்.

இவ்வாறு நாரதமுனிவருடைய உபதேசநெறியில் நின்று தன் புத் திரர்கள் ஆயிரவரும் மோக்ஷதையடைதலும், தக்கன், ''தவஞ்செய்யச் சென்ற என் புதல்வர்கள் இன்னும் வந்திலர்! எங்கே போயினர்கள்?'' என்று அயர்ந்து, ஞானத்தால் நோக்கினன். நோக்கும் பொழுது, நாரதமுனிவர் அவர்களையடைந்து ஞானத்தை யுபதேசிக்க அவர்கள் அதனையுணர்ந்து அந்நெறியில் நின்று மோக்ஷமடைந்தார்கள் என்பதை அறிந்தான். அறிதலும், தக்கனுக்குக் கோபம் மிகுந்தது; மனம் வருந்தி

னது; உயிர் பதைத்தது; துன்பம் வளர்ந்தது; உடம்பு வியர்த்தது. தக்கனு டைய இந்தக் கோபத்தினால் கிரகங்கள் ஆகாயத்தில் நின்று பயந்தோடின. நிலவுலகமெல்லாம் இரங்கின. தன் புதல்வர்களுடைய செயலையறிந்து இவ் வாறு தளர்ந்து சோர்ந்த தக்கன், நாரத முனிவருடைய உபாயத்தை நினைத்துக் கோபங்கொண்டு, "பரமசிவனிடத்து வரத்தை வேண்டிய என் புதல்வர்களை எனக்கு இல்லாமற்செய்த நாரதன் இனி நாடோறும் எண் ணம் மிகுந்து உலகமெங்கும் உழன்று திரியக்கடவன்" என்று சபித்து, "இனித் தவஞ்செய்தற்காகப் புத்திரர்களைப் பெறேன்; புதல்வர்களைப் பெற்றது போதும். இனிப் பெண்களையே பெறுவேன்" என்றுஉறுதிசெய்து, சுபுத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை, வபு, கியாதி, சம்பூதி, நாரிசன்னதி, மிருதி, பிருதி, ஊர்சை, அனசூயை, சுவா, கமை, சுவதை என் னும் இருபத்துமூன்று பெண்களைப் பெற்று. அவர்களுள் சுபுத்தி முதலிய முதற் பதின்மூன்று பெண்களையும் தருமருக்கும், மற்றைக் கியாதி முத லிய பத்துப் பெண்களையும் பிருகு, மரீசி, புலத்தியர், அங்கிரா, புலகர், வசிட்டர், அத்திரி, அக்கினி, கிரது, பிதரா என்னும் பதின்மருக்கும் முறையே விவாகஞ்செய்து கொடுத்தான். இவருள் தருமர் இருபத் தேழு புதல்வர்களைப் பெற்றார். பிருகு விதாதா, தாதா, என்று இரண்டு புத்திரர்களையும் இலக்குமியையும் பெற்று, இலக்குமியை விட்டுணுவுக்கு மணஞ்செய்து கொடுத்து, தவத்திலிருந்தார். மரீசி நான்கு பெண் களைப் பெற்றார். இவர்கள் வழியிலே பலர் பிறந்தார்கள். புலத்தியர் பல பிள்ளைகளைப் பெற்றார். அங்கிரா அங்கிதீரன், பரதன் என்னும் இரண்டு புத்திரர்களையும் நான்கு புத்திரிகளையும் பெற்றார். அவர்கள் குடியிற் பிறந்த முனிவர்களும் பலர். புலகர் தத்தாத்திரியைப் பெற் றார். அவர் வமிசத்திற் கும்பர் பிறந்தார். வசிட்டர் ஒரு புத்திரியை யும் ஏழு புத்திரர்களையும் பெற்றார். அத்திரி சத்திநேந்திரன், சந்திரன், சனி, சங்கதானன் என்னும் புத்திரர்களைப் பெற்றார். அக்கினி மூன்று புதல்வர்களைப் பெற்றார். கிரது மூன்று புதல்வர்களைப் பெற்றார். பிதரா மேனை, பூமி என்னும் இரு பெண்களைப் பெற்றார். அந்தமேனையை இமய மலையரசன் மணஞ்செய்தான். பூமியை மேருமலை மணஞ்செய்து மந்தர கிரியைப் பெற்றது. அம்மந்தரம் தவஞ்செய்து சிவபெருமான் தன்னி டத்தில் எந்நாளும் எழுந்தருளி யிருக்கப்பெற்றது. மேருமலை பின்னர் வேலியென்பவளைப் பெற்று வருணனுக்கு மணஞ்செய்து கொடுக்க அவன் சரவணியென்னும் பெண்ணைப் பெற்றுப் பிராசினன் என்பானுக்கு மணஞ் செய்துகொடுத்தான். அவன் பத்துப் பிள்ளைகளைப் பெற்றான்.

திருச்சிற்றம்பலம்.

## சந்திரசாபப் படலம்.

இவ்வாறு பல கிளைகள் பல்கவிருக்கின்ற தக்கன், அதன்பின் நாண் மீன்களுள் இருபத்தேழு பெண்களைப் பெற்று, அவர்களை அழகிற்சிறந்த சந்திரனுக்கு மணஞ்செய்து கொடுத்து, அவனை நோக்கி, "நீ இவ்விருபத்

தேழு மனைவியர்களிடத்துள்ளும் ஒரு தன்மையாகிய அன்புடையனுயிரு. சிலரை அன்பினேடு புணர்ந்து சிலரை இகழ்ந்து வெறுத்தல் செய்யாதே'' என்று கூறி, அப் பெண்களோடு அனுப்பினன். சந்திரன் மனைவியர்க ளோடு விமானத்தின்மீதேறித் தன் பதத்தையடைந்து, எல்லாரிடத்தும் சமத்துவமான அன்புபாராட்டிக் கூட எண்ணி, ஒருநாளைக் கொருவராக அவர்களோடு புணர்ந்துகொண்டு வந்தான். வருநாளிலே, அவர்களுள் கார்த்திகையும் உரோகிணியும் பேரழகுடையவர்களா யிருந்தமையால்' அவர்களிருவரை மாத்திரம் மிக்க ஆசையோடு புணர்ந்து, மற்றை இரு பத்தைந்து மனைவியர்களையும் புணராமல் வெறுத்துத் திரிந்தான். அவர் கள் கோபங்கொண்டு வருந்தி, தந்தையாகிய தக்கனிடத்திற் போய், இந்நிகழ்ச்சியைச் சொன்னர்கள். அவன் சினந்து, ''சந்திரனுடைய கலைகள் யாவும் தேய்ந்து இல்லையாகுக'' என்று சாபங் கூறினன். இந்தச் சாபத்தி னுலே பொய்ச்செல்வனுடைய புகழ்குன்றுமாறுபோலச் சந்திரனுடைய கலை கள் நாளுக்கொன்றுகக் குறைந்தன. இப்படிப் பதினேந்துநாட் கழிந்த பொழுது, பதினேந்து கலைகளழிய, இவன் சந்திரனே என்பதற்குச் சாக்ஷி சொல்லுதல்போல அவனிடத்து ஒரு கலைமாத்திரம் இருந்தது. அதனுல் அவன் மயங்கி மெலிந்து வெட்கி, இந்திரனையடைந்து, ''தக்கனுடைய சாபத்தால் என்னுடைய கலைகளனைத்தும் அழிந்து இந்தக்கலை ஒன்று மாத்திரம் நின்றது. இன்றைக்கு இவ்வொருகலையும் அழியுமாயின் மேலா கிய என்னியல்பு குன்றும்; பேருந் தொலையும்; எங்கும் பரவிய என் புக ழும் அழியும்; வசையாகும்; இனிச் செய்வதென்? யான் ஒன்றையும் அறி கிலேன். அரசனே, எனக்கு ஒரு புத்தி சொல்லு'' என்று சொல்லி இரங்கி ஏங்கித் தாங்கற்கரிய துன்பக்கடலுள் மூழ்கினன். இந்திரன் அவனைத் தழுவி ''என்பாங்கனே, அஞ்சாதே'' என்று சிலவற்றைச் சொல்வான்: ''நீ முன்னெருகாலத்திலே திருக்கைலாசமலையில் விநாயகக் கடவுளுடைய முதிரைவர்க்கங்களை உட்கொண்ட பெரிய திருவயிற்றையும் திருக்கரத்தி லுள்ள மோதகத்தையும் பார்த்துச் சிரித்தாய். அவர் கோபித்து, 'உன்னை யாருங்காணுராய் நிந்தைசெய்து அகலும்படி நீசர் போலாகுதி' என்று சபித்தார். அந்தச் சாபத்தால் அன்றுதொட்டு யாவரும் மிக நிந்தித்து உன்னை நோக்காராய் அகல, நீ வெட்கி ஆகாயத்தில் சஞ்சரியாது ஒடுங் கினுய். பிரமா முதலிய தேவர்கள் அதுகண்டு, கைலாசத்துக்குச்சென்று, விநாயகக் கடவுளுடைய திருவடிகளைப் பணிந்து, 'சந்திரன் உம்முடைய மேன்மையைக் கருதாமல் உம்மை இகழ்ந்து நீர் கூறிய சாபத்தினுல் நீசத் துவம் அடைந்து வருந்தி ஒடுங்கினன். அவன் இவ்வுலகத்திற்கு வேண்டி யவன். ஆகையால் தேவரீர் விதித்த சாபத்தை வருஷத்திலொருநாளைக்கு அவன் வகிக்கும்படி திருவருள் செய்யும்' என்று பிரார்த்தித்தார்கள். விநாயகக்கடவுள் அவ்வாறு அருள்புரிய, ஆவணிமாதத்துப் பூருவபக்ஷ சதுர்த்தியில் உலகோர் உன்னைப் பாராது இருந்து அக்கடவுளுக்கு விசேஷ பூசை செய்வர். இந்தப் பழியொன்று முன்னமேயிருக்க இப் பொழுது தக்கனுற் புதியதொரு குறையும் பெற்றுய். பொலிவும் அழகும் நீங்கினுய். சந்திரனே நீ மதிகெட்டாய். இனி நீ விரைந்து சென்று, நிகழ்ந்ததைப் பிரமதேவரிடத்துச் சொல்லுதி. அவர் தம்முடைய மகனு கிய தக்ஷப்பிரசாபதியை வேண்டி உன் சாபத்தை நீக்குவார்'' என்று இந்திரன் கூறினன்.

சந்திரன் அதனைக் கேட்டு, அப்பணியைச் சிரமேற்கொண்டு, ''இது நன்று. நீ கூறியபடியே செய்வேன்'' என்று விரைவிலெழுந்து சத்தியவுலக கத்தை அடைந்து, பிரமாவை வணங்கி, தன் மாதுலனுகிய தக்கன் கூறிய சாபத்தை அவருக்குச் சொல்லி, ''உமது குமாரனுக்குப் புத்தி புகட்டி என் னுடைய இச்சாபத்தை நீக்கி என் கவலையை யொழித்தருளும்'' என்று வேண்டினன். அதற்குப் பிரமா சொல்லுகின்றார்: ''தக்கனென்பான் தன் மனம் போனவழியன்றி மற்றொருவர் சொற்படி ஒன்றையுஞ்செய்யான். என் சொல்லைச் சிறிதுங் கொள்ளான். யானும் அவன்மாட்டுச் செல்லேன். அவன் முன்னைத் தக்கனல்லன். எல்லார்க்குந் தலைவனுய் நின்றான். இனி வேறு சொல்வதென்னை! அவன், முன்னுளிலே பரமசிவனுடைய அரிய பெரிய குணங்களெல்லாவற்றையும் யானே உபதேசிக்க உணர்ந்து, அவரை நோக் கிப் பலகாலஞ் செய்த தவத்தினுல் இந்த எல்லையில்லாத செல்வத்திலிருந்து, பின் அக்கடவுளையும் சிறிதும் எண்ணுனையினன். யாவரேயாயினும் தமக் குள்ள எந்தக் குறைகளையேனும் அக்கினி சொரூபராகிய சிவபெருமானிடத் துச் சொல்லி வேண்டலாம். இப்போதைத் தக்கன் முன்னே ஒரு வார்த்தை யாயினுஞ் சொல்லலாகுமோ! அத்தக்கன், கண்ணில்லாதவனும் புத்தியில் லாதவனும் கள்ளுண்டு களித்தவனுமாகிய ஒருவன் பூமியில் விரைவில் வழிக் கொண்டு சென்றாற்போல, மேலாகிய செல்வத்திலழுந்தி யாவரையும் மதிக் கின்றிலன்; நீதியைச் செய்ய அறிகின்றிலன்; அவன் மிகுந்த களிப்பையுடை யன்; கறுவுகின்ற சிந்தையன்; அன்பில்லாத முகத்தினன்; அருளில்லாத சொற்களையுடையன்; தெளிந்த உணர்வில்லாதவன். இவன் இனிமேற் செல் வமெல்லாமழிந்து இறக்கும் பொருட்டே இம்மேன்மையைப் பெற்றுள் ளான். இவன் தான் கெடுதல் மாத்திரமன்றி எம்போலிகள் பூண்ட நன் னிலைகளையுங் கெடுத்தலைச் சிவபெருமான திருவுளஞ்செய்யாது, வேண்டிய வரங்களெல்லாவற்றையும் இவனுக்கு விரைவிற் கொடுத்தார். அதுநிற்க. அத்தக்கனை யாம் வேண்டுவோமாயினும், எம்மையுங் கோபித்து இகழ் வான்; உன்னுடைய சாபத்தையும் நீக்கான். சந்திரனே இனிப் பிறி தொருவழி உள்ளது. அதனைச் சொல்வோம் கேள். நடுவு நிலைமையுடை யவரும் நமக்கெலாந் தலைவரும் பரமாசாரியரும் நிருமலரும் அதி பர மாப்தருமாகிய பரமசிவனை அடைந்து, உன் உடற்குற்றத்தை விரைவில் நீக்குகின்றிலை. நீ அறிவிலியோ? இக்குறையை அவருடைய சந்நிதானத் திற் சென்று விண்ணப்பஞ்செய்தால், அவர் உடனே நீக்கியருளுவார். இதனை நாம் சொல்லவும் வேண்டுமோ! இருளினுல் மறைந்த பொருளைச் சூரியன் காட்டுதற்கும் ஐயப்படுவார்களோ! பரமபிதாவாகவிருந்துநம்மை யெல்லாம் பெற்றருளிய சிவபெருமானுடைய அருளுக்குரியரல்லாதாரும், அவ்வருளைப் பெற்ற அடியார்கள் பெறுத பொருளும் இல்லை. மெய் யன்பினோடு தம்முடைய பாதாரவிந்தங்களையே சரண் என்றடைகின்ற அடியார்களுடைய துன்பங்களை நீக்குதற்கல்லவா, சிவபெருமான் திரு வருளை திருமேனியாகக் கொண்டு திருக்கைலாசமலையில் வீற்றிருப்பது? ஒருவர் தமக்கிடுக்கண் வந்தகாலத்திற் பரமசிவனுடைய திருவடிகளைப் புகலிடமென்றடைவராயின், அக்கடவுள் அவருடைய இடுக்கணைத் துடைத்து, வினைகளையுந் தொலைப்பார். சந்திரனே, நீ இப்பொருளைக் கடைப்பிடித்திலை; மிகவும் பேதையாயினுய். தம்முடைய பாதாரவிந்தங்

கனைத் தியானித்துப் பூசனை செய்த மார்க்கண்டன்மேல் வந்த யமனைச் சிவபெருமான் உதைத்து அம்முனிவனுக்கு முன்வந்தருள் புரிந்ததை நீ மறந்தனைபோலும். அந்நாளிலே பாற்கடலில் ஆலாகலவிஷம் எழுதலும் நாமெல்லாம் பயந்து தஞ்சமென்று பரமசிவனுடைய திருவடிகளைச் சரண்புக, அவர் அதனைத் திருவமுது செய்து ''அஞ்சற்க''என்று அருள் செய்தது அயர்க்கற்பாலதோ? உமாதேவியாருடைய திருக்கரத்திற்றேன்றி ஆர்த்தெழுந்தகங்கை இவ்வுலகமுழுதையும் மூடியபொழுது, நாம் அஞ்சித் துதிப்ப, அதனை அவர் தமது திருமுடியிற் சேர்த்தி, நம்மை இரக்ஷித்ததை நீ அறியாயோ? அளவிடப்படாத இறைமைக் குணங்களையுடைய சிவபெருமான் தம்தன்பர்களுக்குச் செய்த பேரருட்டிறங்கள் சொல்லில் அடங்குமோ? சொல்லிலடங்காமை மாத்திரமன்று; எண்ணில்காலம் நினைத்தாலும் அவை மூடிவுபெறுவாம். ஆதலால், சந்திரனே, நீ இங்கு நின்று விரைந்து திருக்கைலாசமலைக்குப் போய், அச்சிவபெருமானுடைய திருவடிகளையே சரணமென்றடைந்து, உன்னுடைய சாபத்துயரை நீக்குதி'' என்று பிரமதேவர் கூறினர். சந்திரன் அவருடைய பாதங்களை வணங்கி, ''எம்பெருமானே, நல்லபுத்தி புகன்றீர். ஞானமுதல்வராகிய பரமசிவனைப் போயடைவேன்'' என்று சொல்லி, திருக்கைலாசமலையை யடைந்து. செம்பொற்றிருக்கோயில் வாயிலிற் சென்று, திருநந்திதேவரிடத்திலே தன்னுடைய குறையைச் சொல்லினன். அவர் கடவுளுடைய அநுமதிப்படி அவனை உள்ளே விடுத்தார். சந்திரன் ஈசுரசந்நிதானத்திலே மிகுந்த அன்போடு வணங்கி, உபநிடதங்களைச் சொல்லித் துதித்தான். ஆன்மாக்களோறும் அந்தரியாமியாய் நின்று வினைப் பயன்களை அறிந்து நுகர்விக்கும் சிவபெருமான், ''சந்திரனே, நீ இங்கே வந்ததென்னை? சொல்லுதி'' என்று அறியாதார்போல வினவியருளினர். சாபத்தினாற் கருநிறங்கொண்டு வடிவம் வேறுபட்ட சந்திரன் ''எம்பெருமானே, தக்கன் சொல்லிய சாபத்தால் அடியேனுடைய கலைகளெல்லாம் தேய ஒரு கலைமாத்திரம் மிஞ்சியிருந்தது. இனி அதுவும் தேய்ந்துவிடும் பாவியேன் இனி யாது செய்வது? எஞ்சிய இக்கலையொன்றும் தேயாமல் இருக்கவும், தேய்ந்த கலைகளெல்லாம் வந்து கூடவும், அருள்புரியும். தேவரீரன்றி அடியேனுக்குப் புகலிடமில்லை'' என்று விண்ணப்பஞ் செய்தனன். கிருபாசமுத்திரமாகிய கடவுள் ''சந்திரனே, அஞ்சற்க'' என்று அருள் புரிந்து, தேய்ந்துபோனவையொழிய மிஞ்சியிருந்த ஒரு கலையைத் திருக்கரத்தால் எடுத்துத் தமது திருச்சடையின்மீது சேர்த்தியருளினர். தக்கனுடைய சாபம் அவ்விடத்து அடைந்திலது. சிவபெருமான் தம்மைச் சரணடைந்த அன்பருக்கு அருள்புரிகின்ற உண்மையைத் தெற்றெனவுணர்த்துதல்போல, அவனுடைய அக்கலை அவருடைய சடையின்மீது அழகைச் செய்து பொலிந்தது, [மிக மேலவர்களாகிய தேவர்களை வருத்துகின்ற வினைகளையும் சாபங்களையும் நீக்குஞ் சிவபெருமான், இந்தச் சந்திரனுடைய சாபமொன்றைப் போக்கினர் என்பது அவருக்கு ஒரு புகழ்ச்சியாகுமோ!] சர்வாந்தரியாமியாகிய பரமசிவன் அப்பொழுது, சந்திரனை நோக்கி, ''இனி நீ கவற்சியடையாதே. நம்முடைய முடியிலணிந்த சிறப்பினால் இந்தக்கலை அழிவின்றியிருக்கும். அதனால் உன்னுடைய பழையகலைகள் யாவும் பதினைந்து நாளில் நிரம்பிப் பின்பு அம்முறையாகத் தேய்ந்து வந்து, ஒருகலைமாத்திரம் தேயாதிருக்கும். இவ்வாறே எக்காலமும் நிகழும்'' என்றருளிச்செய்தார்.

சந்திரன் அவருடைய பாததாமரைகளில் வணங்கிவிடை பெற்றுக்கொண்டு சென்று, தன்பதத்தை அடைந்து, முன்போல வானுலகத்திற் சஞ்சரித்தான். அவன் தன் கலைகள் ஒருநாளைக் கொன்றுக வளர்ந்து நிரம்பி, பின் அம்முறையே தேய்ந்துவந்து, ஒருகலை தேயாதாகி, என்றும் ஆவதும் அழிவதும் போன்றுன். விட்டுணு முதலிய அனைவரும் சந்திரனுடைய இயற்கையை நோக்கி, ''தக்கனுலே சந்திரனுடைய கலைகள் யாவும் தேய்வதும் வளர்வதுமாகிய இயற்கையையுடையனவாகச் சிவபெருமான் செய்தார். அவருடைய செயலை யார்தாம் அறிந்தவர்!'' என்றூர்கள்.

சந்திரனுடைய செயல்முழுதையும் தக்கன் ஞானத்தினுல் அறிந்து, ''யான் சந்திரன்மீது கோபமுற்றுச் சொல்லிய சாபத்தைப் பரமசிவனு தடுக்க வல்லவர்!'' என்று சிரித்து, ''என்பிதாவாகிய பிரமாவும் அவருக்குத் தந்தையாகிய விட்டுணுவும் என்மருகனுக்கு யான் கூறிய சாபத்தை விலக்கிலர்; விலக்கும்படி என்முன் வந்தும் வேண்டிலர்; யாவரும் அச்சமுற்றிருந்தனர். அந்தத் தந்தை தாயில்லாத பரமசிவனும் என் சாபத்தைத் தடுப்பவர்! இது நன்று நன்று! அச்சிவன் 'நாமே பரம்பொருள்; பிரமன் முதலாகிய உயிர்கள் யாவற்றையும் சங்கரித்தும் நாம் அழிவின்றி நின்று ஐந்தொழில்களையும் செய்கின்றேம்; எங்கும் வியாபித்திருக்கின்றேம்' என்று தம்மனத்தில் அகந்தையுற்றூரோ? அதுவன்றி இன்னமொன்றுண்டு, 'பூவுலகத்தில் தனக்குத்தானே நிகராகிய தக்கனுக்கும் அவன்செய்த தவத்தினுல் நேர்ந்து இச்செல்வங்களைக் கொடுத்தோம்' என்பதை நினைந்து என்னுடைய ஆணையை இகழ்ந்து இங்ஙனஞ் செய்தாரோ? 'பரம்பொருள் யாமே என்பதைத் தெளிந்தும், இந்த வளங்களையெல்லாம் நம்மிடத்திற் பெற்றும், நம்முடைய பாதங்களைத் தக்கன் கையினுல் வணங்குகின்றிலன்' என்று எண்ணிப்போலும், யான் சந்திரனுக்குச் சொல்லிய சாபத்தைச் சிவன் நீக்கினூர்!'' என்று வெகுண்டான். நடுவுநிலைமையும் அன்பும் நீங்கிய கீழோனுகிய தக்கன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட புலகர் என்னும் முனிவர், ''தமக்கு நிகரில்லாத சிவபெருமானை இகழாதே. அவரை இகழ்ந்தால் உன்னை யாவரும் இகழ்வர். உன் செல்வமும் அழியும்'' என்றூர். அவரைத் தக்கன் நோக்கி, ''நான்செய்த தவத்தினுல் என்னிடத்தில் நின்ற இச்செல்வங்கள் நீங்குமோ? விட்டுணு முதலாயினேர் என்பணி ஒன்றையும் மறுத்திலர். அவர்கள் என்னை இகழ்வதுண்டோ? உம்முடைய புத்தி நன்று! நன்று!'' என்று நகைத்தான். புலகமுனிவர் ''அரசனே, உன்னைப் பிறர் இகழும் இகழ்ச்சி சாராதாயினும் உனது பெருஞ்செல்வம் குறையாதாயினும், உனக்கருள்புரிந்த சிவபெருமானைப் பழிப்பது தகுமோ?'' என்றூர். தக்கன் அவற்றைக் கேட்டு, தன்னுடைய அளவிறந்த ஆற்றலும் பெருஞ்செல்வங்களினைத்தும் நீங்கும்படி பெருமிதங்கொண்டு, ''முன்னே யான் தவஞ்செய்து அதுவாயிலாகப் பெற்ற வளங்களை அநுபவிக்குமுன் அக்கடவுள் மீற்றுவாரல்லர். செய்த வினைக்குத் தக்கபடியன்றி அதற்குமேலாக வலிதாய் அவரொன்றையும் செய்ய வல்லரல்லர், ஆதலால் என்னிடத்தே தம்முடைய வலிமையினுற் சிவன் செய்கின்றது என்னை'' என்று கூறினன். புலகர் ''நீ சொல்லியதே உறுதியாயினும், சிவபெருமானை இகழ்ந்தவர் உய்யார். இதனை வேதங்களெல்லாம் அறுதியிட்டன. அவரைச் சிறிதும்

இகழற்க.. இனி அவரைத் தியானித்துத் துதிப்பாயாக. தம்மைச் சரணடைந்த அன்பர்களுடைய துன்பத்தை மாற்றி அவர்கள் எப்பொருளை விரும்பினாலும் கொடுத்தருளுகின்றதே அவரதியற்கையாம். அதனைச் சந்திரன் தெரிந்து அடைதலும், அம்முறைபற்றி உன்னால் நிகழ்ந்த அவனுடைய சாபத்தை நீக்கியருளினார். சந்திரனுடைய கலைகள் நிறைந்தபின் முன்னே நீ சொல்லிய சாபம் நிலைபெறும்படி மீண்டு அக்கலைகள் நாடொறும் சுருங்கவும் விதித்தார். இனி உனக்குக் கோபம் என்னை? சந்திரனோ உன் மருகன். அச்சிவபெருமானும் பின்னாள் உனக்கு அம்முறையினராவர்'' என்று இத்தன்மையினவாகிய மொழிகளைச் சொல்லினார். தக்கன் சினம் நீங்கி, பிரமா முதலிய தேவர்கள் யாவரும் புகழப் பலநெடுங்காலம் அரசியற்றி வீற்றிருந்தான். இனி உமாதேவியார் அவனுக்கு மகளாய் வந்து திருவவதாரஞ் செய்த கதையைச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

## உமைகயிலை நீங்குபடலம்.

சிவபெருமான், பிரமவிட்டுணுக்களாலுங் காண்டற்கரிய தமது திருமேனியை அடியார்கள் தரிசிக்க நிருமலமாகிய திருக்கைலாசமலையில் வீற்றிருக்கும்பொழுதில் ஒருநாள், உமையம்மையார் அவருடைய திருவடிகளை வணங்கி, ''உம்முடைய உண்மைத்தன்மையை எனக்குச் சொல்லியருள வேண்டும்'' என்று பிரார்த்தித்தார். திருக்கைலாசபதி மிகவும் அன்புசெய்து, அதனை அவருக்கு உபதேசிப்பாராய், பிரமா முதலிய மூவர் உருவங்களும் சாத்துவிகாதி முக்குணங்களும் படைத்தலாதி முத்தொழில்களும் ஆகிய இவைகள் ஒன்றுமின்றி நிஷ்களராய் சிவன் நீக்கமற யாண்டும் நிறைந்து நின்றமையும், அச்சிவன் ஆன்மாக்களுடைய பாசங்களை நீக்குமாறு திருவருட்சத்தியாற் சங்கற்பித்ததும், தமது அபின்னாபூதையாகிய பராசத்தி முதலிய ஐவகைச் சத்திகளைப் பிறப்பித்தமையும், யாவரும் நிஷ்கள சகளராகிய சதாசிவநாயனாரைத் தியானித்து அருச்சித்து உய்யுமாறு அப்பராசத்தி முதலிய ஐந்துசத்திகளினின்று சிவசாதாக்கியம் முதலிய பஞ்சசாதாக்கிய வடிவங்களை அடைந்தமையையும், இருபத்தைந்து சகள மகேஸ்வர வடிவங்கொண்டமையையும், குடிலையினின்று தோன்றிச் சிவ முதலிய நவந்தரு பேதங்களாய தன்மையும், சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி என்னும் மும்மாயைகளினின்று முப்பத்தாறு தத்துவங்களுந் தோன்றுமாறு செய்தமையும், ஆன்மாக்கள் பொருட்டுப் பஞ்சகிருத்தியங்களைக் கருணையினால் நடாத்துஞ் செய்கையும், விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் என்னும் ஆன்மவர்க்கங்களையும் முப்பத்தாறு தத்துவசமூகங்களையும் அத்தத்துவங்களிலுள்ளவர்களையும் தோன்றிய முறையானே ஒடுங்கச்செய்து தாம் எக்காலமும் ஒரே பெற்றியாய் நிற்பதும் ஆகிய தம்முடைய இயல்புகளனைத்தையும் வேத சிவாகமங்களிற் கூறிய முறைப்படி தொகை வகை விரியாக உமாதேவியார் கேட்க உபதேசித்தருளினார், அம்மையார் அவற்றை உணர்ந்து. ''நிருமலராகிய சுவாமீ, உமக்கு உருவமில்லையென்று முன்பு கூறினீர்; பின் பஞ்ச

சாதாக்கியங்களோடு பல வடிவங்களை நீர் அடைந்ததென்னை?'' என்று வினவ; பரமசிவன், ''சத்தியே, நமக்கு உருவமில்லை என்றது பொருந்தும். பின், நாம் உருவமென்று கூறிய அவையெல்லாம் சத்திகாரியமே'' என்று அருளிச்செய்தார். உமாதேவியார் அதனை ஒரு வாய்மை என்று எண்ணி, பெருமகிழ்ச்சியடைந்து, '' அந்த வடிவங்களெல்லாம் சத்திகாரியமாதலால், உம்முடைய சத்தி யானென்று சொல்வது உண்மையேல், அவையெல்லாம் என்னுடைய உருவமே'' என்று தம்மை வியந்து கூறினர். அப்பொழுது சிவபெருமான், ''சத்தியே, நீ உன் புகழை நம் முன்னே வியந்தெடுத்துப் பேசினாய்'' என்று கூறி, பின்னும், '' நாம் ஆணவமலத்தான் மறைப்புண்ட உயிர்களோடாறும் வியாபித்திருந்து அவைகள் அறியுமாறு செலுத்துவேம். அச்செயலை நாம் ஒழிவோமாயின் சித்துக்களாகிய அவ்வுயிர்களெல்லாம் சடமாய் அழியும், அதன்மேல், ஏனைச் சடப்பொருள்கள் பொருந்து நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ! சத்தியாகிய உன்னிடத்தும் யாம் இல்லாத வழி உன்னுயிரும் உணர்வைப் பொருந்தாது. அதனை உனக்குக் காட்டுவோம்; காண்பாய்''என்று பிரமா முதலிய உயிர்களைத் தாம் இயக்குஞ் செயலைச் சிறிதே நீங்கினர். தேவநாயகராகிய சிவபெருமான் ஒரு செயலுமின்றி இருந்தமையினால், பூவுலக முதலிய புவனங்களிலுள்ள உயிர்களெல்லாம் சடமாகிச் சித்திரம் போல உணர்வின்றி வாளாவிருந்தன. ஆட்டுவோன் அது செய்யாதவழிப் பாவைகள் குலைந்து வீழ்ந்தாற்போல உயிர்களெல்லாம் வலிகுன்றிச் சடமாய்க் கிடக்க, உமாதேவியார் அதனைச் சிந்தித்துப் பயந்து நடுங்கி, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, ''எம்பெருமானே, நீர் சரமசர மெங்கும் வியாபித்திருப்பதை யான் அறியேன். பிரளயகாலத்திற்போல சீவராசிகளெல்லாம் இருளின்கண்ணே மூழ்கிப்போக, நீர் அவற்றுள்ளே நின்று அவ்வவற்றின் அறிவை இயக்கி நிற்பதை என்பொருட்டு நீங்கி நின்றீர். உமக்கு இஃது ஓர் இறைப்பொழுதாகும்; உயிர்களுக்கெல்லாம் அளவில்லாத பெரிய யுகங்களாகும். அடியேன் செய்த பிழையைத் திருவுளத்திற் கொள்ளற்க. உயிர்கள் தெளிவுபெற்றெழுந்து தத்தம் தொழிலிற் பிரவிர்த்திக்கும்படி அருள்செய்யும்'' என்று பலமுறை துதித்து வணங்கி நின்றார்.

சிவபெருமான் அவ்வுமாதேவியாருக்கு ''அவ்வாறுக'' என்று அருள் செய்து, ஆன்மாக்கள் முன்போல வினைப்பயனை அனுபவிக்கச் செய்யும்படி திருவுளங்கொண்டு, தமது அருளைப்பெற்ற பதினெரு ருத்திரர்களுக்கும் முன்னை உணர்வு வரும்படி செய்தார். அவர்கள் அப்பொழுது சிவபருமானை நினைத்து ''இச்செயல் யாது?'' என்று ஞானத்தினால் ஆராய்ந்து, ''அரிபிரமர்களுக்கெட்டாத சிவபெருமானுடைய செய்கை இது'' என்றறிந்து, இருளின்கண்ணே மூழ்கிச் சடமாய்க்கிடந்த சீவராசிகளை எழுப்ப நினைத்து, அக்கடவுளுடைய திருவடிகளை அர்ச்சனை செய்ய எண்ணி அவருடைய சுடர் விண்ணிலின்மையாற் பொழுது தெரியாமலிருக்கின்ற பூவுலகத்திலே திருவிடைமருதூரில் வந்து ''எங்குஞ் செறிந்த இருள் வீசுதலினால் இது இராக்காலமே போன்றுளது. இப்பொழுது சிவபெருமானுக்கு ஏற்ற பூசையைச் செய்வோம்'' என்று யோசித்து பஞ்சசாதாக்கிய வடிவங்களுள்ளே குண்டம் மண்டலம் வேதிகை என்னும் மூன்றனுள் மண்

டல விதியினல் அவருடைய வடிவை நிருமித்து, சோடசோபசாரங்களையும் சேர்த்து, பிரம விட்டுணுக்கள் செய்கின்ற சிவநிசிப் பூசையைச் சிரத்தையோடு செய்ய முயன்று, விபூதி ருத்திராட்சங்களைத் தரித்து, சோடச கலாப்பிராசாதத்தோடு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்து, சிவபெருமானைத் தியானஞ்செய்து, பூதசுத்தி அந்தரியாகம் முதலியனவெல்லாம் விதிப்படி அகத்தே செய்து, பின்பு புறத்தே வில்வபத்திரம் தாமரையிதழ் சாதிப் புஷ்பம் நந்தியாவர்த்தம் ஆகிய இவைகளைக்கொண்டு முறையே நான்கு யாமங்களிலும் அர்ச்சனைசெய்து, முற்கான்னம் பாயசான்னம் திலான்னம் சுத்தான்னம் ஆகிய நால்வகையன்னங்களையும் முறையே நான்கு யாமங்களிலும் நிவேதித்துத் துதித்து, பின்னும் செயற்பாலன யாவையும் விதி தவறுவண்ணம் குறைவற அன்போடு செய்தார்கள். சிவபெருமான் அப்பூசையை உவந்து, அவ்வுருத்திரர்களுக்கு முன்னே அத்திருவிடைமருதூரில் வெளிப்பட்டு வந்து, அவர்கள் விரும்பியவாறு அருள்செய்வோராய், முன்போல எவ்வுயிர்களையும் தொழிற்படுத்தத் திருவுளஞ் செய்தார். செய்தலும், பிரமவிட்டுணுக்கள் எழுந்தார்கள்; இந்திரன் முதலியதேவர்கள் யாவரும் எழுந்தார்கள்; முனிவர்கள் எழுந்தார்கள்; ஏனையோர்களும் எழுந்தார்கள்; உலகிலுள்ளமற்றை சிவராசிகள் யாவும் உறங்கினவர் கண்விழித்து எழுந்தாற்போல விரைந்தெழுந்தன; அட்டதிக்கு யானைகளும் குலமலைகளும் அட்டமா நாகங்களும் பூமியைத் தாங்கலுற்றன; பாதாளத்திலே ஆதிகூர்மம் சுமக்கலுற்றது; சூரியர் சந்திரர்களும் நக்ஷத்திரங்களும் பிறவும் ஆகாயத்திற் சஞ்சரித்தன. இத்தன்மைகளெல்லாம் சிவாஞ்ஞையினலே முன்போலமைந்த அந்நிலைமையைப் பிரமா முதலாயினோர் பார்த்து, ''இச்செயல்கள் யாவும் பரமசிவனுடைய செயலே வேறில்லை'' என்றுணர்ந்தார்கள். இது நிகழும் பொழுது, பதினெரு ருத்திரரும் ''சிவபெருமானே உயிர்களுக்கு உணர்ச்சியைக் கொடுத்தார்'' என்று உணர்ந்து, தமக்கெதிரே அக்கடவுள் எழுந்தருளிவர எதிர்சென்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் துதித்தார்கள். அக்கடவுள் ''நீவிர் இங்கே நம்மை அருச்சித்த தன்மையினல் உயிர்கட்கெல்லாம் உணர்வைக் கொடுத்தெழுப்பினேம். நீவிர் வேண்டிய வரங்கள் யாவையும் விரைந்து கேண்மின்கள்'' என்றார். அன்பிற்சிறந்த அவர்கள் ''எம்பெருமானே நாடோறும் இராக்காலத்தில் எம்மைப்போல உம்முடைய திருவடிகளை யாவராயினும் அன்போடு நான்கு யாமங்களிலும் அருச்சித்தால் அவர்களுக்கு மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியாகிய சிவராத்திரியில் அடைதற்பாலதாகிய சிவபூசாபலத்தைக் கொடுத்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். ''நீவிர் செய்த பூசையை நாம் மிக மகிழ்ந்து ஏற்றுக்கொண்டமையால் உயிர்களெல்லாம் உய்ந்தன. உங்களைப்போலப் பூவுலகத்திலே என்றும் நம்மைப் பூசித்தவர்களுக்கெல்லாம் மோக்ஷத்தைக் கொடுப்போம்'' என்று அநுக்கிரகித்து மறைந்தருளினர், உருத்திரர்கள் யாவரும் முன்போலத் தம்முடைய பதத்தை அடைந்தார்கள்.

அப்பொழுது, பிரமா முதலிய தேவர்களனைவரும் கைலாசமலையை அடைந்து, சிவபெருமானை வணங்கி நின்று, ''உயிர்க்குயிராயுள்ள கடவுளே கேட்டருளும். யாங்களெல்லாம் உம்முடைய திருவருளைப் பெறுமையால் உணர்வு நீங்கிச் சடமாகிப் பலநெடுங்காலம் வாளா கிடந்து

பாவத்தில் மூழ்கினேம். அதற்கு ஒரு பிராயச்சித்தத்தைச் சொல்லியருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, ''நீவிர் அறிவுமயங்கிச் சடமாகி, வேதாநுட்டானங்களைப் புரியாமையால் உங்கள்பால் வரும் பாவம் எல்லாம் உமையிடத்தாகும். நீர் இனி இன்று தொடங்கி உங்கள் கடன்களைச் செய்யுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளினர். அவர்கள் யாவரும் அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு போயினர்கள். அப்பொழுது, உமாதேவியார் சிவபெருமானுடைய பாதங்களை வணங்கி, ''முன்னளிலே உயிர்களைப் பற்றிய பாவம் என்னை வந்து சார்தற்குக் காரணம் யாது? பணித்தருளும்'' என்றார். அதற்கு சிவபெருமான், ''உமையே, முன்பு நீ உன்னை வியந்தாய். அது கண்டு நாம் உன்னைக் கோபித்து, உன்பொருட்டாக உயிர்களுடைய உணர்ச்சியை நீக்கி, பின்பு அதனைக் கொடுத்தோம். ஆதலால் அவைகள் அடைந்த பாவங்கள் யாவும் உன்னை வந்து சாரும். இது முறையாகும். இன்னும் ஒன்றுளது. இந்தப் பெரிய பாவம் உயிர்களையெல்லாம் பெற்ற மர்தாவாகிய உன்னலல்லது அவற்றுற்றுங்குதற் கெளியதோ! ஆதலால் நீயே அப்பாவத்தைச் சுமக்குதி'' என்று தாம் தக்கனுக்குக் கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்வாராய் இவ்வாறு சொல்லியருளினர். உமாதேவியார் அதனைக்கேட்டு நடுநடுங்கி, ''பேதையேன் செய்யும் பிழையைப் பொறுத்து அப்பாவத்தை அடியேன் நீக்கிக்கொள்ளும் படி ஓர் உபாயத்தை உணர்த்தியருளும்'' என்று அவருடைய பாதாரவிந்தங்களில் வீழ்ந்து வணங்கினர். அவர் ''உமையே, நீ காளிந்தியென்னும் நதியிலே ஒரு சங்கினுருவாய் உலகங்களை இரக்ஷிக்குங் குறிப்போடு பலகாலமிருந்து தவஞ்செய்குதி. பிரமனுடைய குமாரனாகிய தக்கனென்பவன் அங்குவந்து உன்னையெடுப்பான். அப்பொழுது ஒரு குழந்தையினுருவாகி, அவன் மனைவியினிடத்திற் சிறுமியாய் வளர்ந்து ஐந்துபிராயங்கழிந்தபின் அன்போடு எழ்மைத் தியானித்து, அருந்தவஞ் செய்குதி. யாம் அங்கேவந்து உன்னைக்கண்டு மணஞ் செய்து, கைலாசமலைக்கு அழைத்துக்கொண்டு வருவோம்'' என்று கூறினர். அதனை உமாதேவியார் கேட்டு, அவருடைய பாதங்களிலே தமது அளகந்தோய வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, அவரைப்பிரிந்து பூமியில்வந்து, காளிந்திநதியிற்போய், சங்கினுருவை யெடுத்து, சிவமூலமந்திரத்தைத் தியானித்துக்கொண்டு ஒரு வெண்டாமரை மலரின்மீது தவஞ்செய்திருந்தார். தக்கன் மகிழ்ச்சியோடு அவரை எடுத்துக்கொண்டு போவானுய்க் காளிந்தி நதிக்கு வந்தகதையை இனிச் சொல்வாம்.

திருச்சிற்றம்பலம்.

## காளிந்திப் படலம்.

பலவகைச் சிறப்புக்களோடு கூடிய யமுனைநதியிலே, மாசிமக ஸ்நானஞ் செய்தற்காக அத்தேசத்தார் யாவருஞ் செல்வாராயினர். தக்கனும் அதனையறிந்து, தான் சிவபெருமானிடத்திற் பெற்ற வரத்தின் பயனை யடையும் ஊழினுல் தானும் அந்த நதியில் ஸ்நானஞ்செய்ய விரும்பி, மனைவியாகிய வேதவல்லியைப் பல பெண்களோடும் மற்றைப் பரிசனங்களோடும்

முன்னே அனுப்பி, அரியணையினின்றுமிழிந்து, பிரமாவும் முனிவர்களும் ஆசிகூறவும், தேவர்கள் துதிசெய்யவும் புறப்பட்டுப்போய், அந்நதியிலே மூழ்கி, மீண்டு வந்தான். வரும்பொழுது, ஒருசாரில் ஒரு வெண்டாமரைப் பூவின்மீதே உமாதேவியார் சங்கினுருவாய் வீற்றிருப்பக் கண்டு, மிக மகிழ்ந்து, கையிலெடுத்தான். எடுத்தலும், அது பேரழகினையுடைய ஒரு பெண் குழந்தையினுருவமாயிற்று. அவன் அதனைக்கண்டு விம்மிதமுற்று, ''சிவ பெருமான் எனக்குத் தந்த வரத்தினால் உமாதேவியே ஒரு பெண் குழந்தையாய் வந்தாள்'' என்று ஞானத்தினாலறிந்து, தன்னைச் சூழ்ந்த தேவர் குழாங்களை நீங்கி, முன்னே தன்பணியினாற் கிளைஞர்களோடு சென்று அந்நதியிலே ஸ்நானஞ் செய்து அதன்கரையிலே வேதாத்தியயனத்தைக் கேட்டுக் கொண்டிருந்த தனது மனைவியாகிய வேதவல்லியிடத்து வந்து, அக்குழந்தையை அவள் கையிற்கொடுத்தான். அவள் அதனை மகிழ்ந்து தழுவி, தனங்களிலிருந்து ஒழுகும் பாலையூட்டி, அரமகளிர்கள் துதிப்ப விரைவிலே தன் மாளிகையிற் கொண்டு சென்றாள். தக்கன் தேவர்கள் சூழ மகிழ்ந்து கோயிலிற்புகுந்து, முன்போல அரசியலை நடாத்தியிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

## உமைதவம்புரி படலம்.

அளவில்லாத அண்டங்களையும் சீவராசிகளையும் தந்தருளிய உமாதேவியாராகிய குழந்தையை வேதவல்லி மாளிகையிற் கொண்டு சென்று மிக்க பேரன்போடு தனது மகளாக வளர்த்தாள். குழந்தையாகிய அப்பிராட்டியார் தவழ்ந்து தள்ளாடி நடைபயின்று பன்மூளைத்து ஐந்துவயசு நிரம்பிப், பின் ஆறும்வயசு வருதலும், சிவபெருமான் தம்மைத் திருமணஞ் செய்து கொள்ளுதலைக் குறித்துத் தவஞ்செய்ய எண்ணி, தாய் தந்தையர்களாகிய வேதவல்லியையும் தக்கனையும் நோக்கி, ''என் இருமுதுகுரவீர்காள், இதனைக் கேண்மின். யான் சிவபெருமானுக்கே உரித்தாகும் பேறுடையேன். அவர் என்னை மணஞ்செய்து கொள்ளுதற்பொருட்டுத் தவஞ்செய்வேன். ஆதலால் வேறொரு சாரிலே ஒரு மாடத்தை அமைத்து அதில் என்னைத் தவஞ்செய்ய விடுக்குதிர்'' என்று கூறினர். தாய்தந்தையரிருவரும் நன்றென்று மகிழ்ந்து, தமது நகரின் புறத்திலே ஒரு சாரில், காவலையுடைய ஒரு மாடத்தை அணிபொருந்த அமைப்பித்து, மூன்றுலகங்களையும் தந்தருளிய உமாதேவியாரைத் தமது மகளென்று வாழ்த்தி, அன்போடு நோக்கிப் பலமுறை உச்சிமோந்து, உயிர்த்து, ''தாயே, உன்மனத்தில் விரும்பிய தவத்தைச் செய்வாய்'' என்று சேடியர்களோடு அங்கே அனுப்பினர்கள். தங்களிடத்து விடைபெற்றுக்கொண்டு தேவியார் விரைந்து செல்லுதலை, வேதவல்லி பார்த்து, நாயகனாகிய தக்கனை நோக்கி, ''பேதைப்பருவத்தினளாகிய இவள் சிவபெருமானை அறிந்த தன்மை என்னை? சொல்லும்'' என்று வினவ; ''அவளுடைய நிலைமை இதுவாகும்'' என்று தக்கன் தன்மனைவிக்குச் சொல்லுவான்: ''யான் மானசவாவியிலே செய்த தவத்தைக் கண்டு சிவபெருமான் அங்கே எழுந்தருளியபொழுது, அவரிடத்தே பல வரங்களைப் பெற்று, 'உமது சத்தியாகிய உமாதேவியார் என்மகளாய் வந்துவதரிக்க,

நீர் என் மருகராய் வந்து அவளை மணஞ்செய்க' என்று வேண்டிக்கொண் டேன். அவர் 'அது அவ்வாறுகுக' என்று அருளிச்செய்தார். அந்தவரத்தின் வண்ணமே சிவபெருமான் உமாதேவியைக் காளிந்திநதியில் அனுப்ப, அவள் நம்மிடத்து மகளாய்வந்து எக்காலமும் முன்னை உணர்வோடிருந்தாள். சில நாள் தவஞ்செய்து சிவபெருமானுக்கு அன்பினளாய் மனைவி ஆவாள். எம் பெருமாட்டியைப் பேதைப்பருவத்தினளென நினையாதே'' என்று கூறினன். வேதவல்லி அதனைக்கேட்டு ஆச்சரியமுற்று அளவில்லாத மகிழ்ச்சியிற் சிறந் தாள். உமாதேவியார் இருமுதுகுரவர்களுடைய ஏவலினுல் சேடியர்கள் சூழக் கன்னிமாடத்தை அடைந்து, சிவநாமத்தைத் தியானித்துக்கொண்டு நியமம் பூண்டு தவஞ்செய்வாராயினர்.

இவ்வாறு அவர் நாடோறும் தவஞ்செய்துகொண்டிருக்க அவருக்குப் பன்னிரண்டு வயசு சென்றது, அப்பொழுது அன்பர்களுக்கு வேண்டிய வேண்டியாங்குதவும் அருள்வள்ளலாகிய சிவபெருமான் அவர் செய்யுந் தவத்தைக்கண்டு, அவரை ஆட்கொண்டருளக்கருதி, கயிலாசமலையை நீங்கி, முந்நூலியும் கோவணத்தையும் தருப்பையையும் கட்டிய தண்டைத் திருக் கரத்திற்கொண்டு, ஒரு பிராமணப் பிரமசாரி வேடம்பூண்டு, தமது அரு மைத் திருவடி பூமியிற்பட நடந்து தக்கமாபுரத்தை அடைந்து, சங்கரி என் னும் பெயரையுடைய அம்மையார் தவஞ்செய்யும் மாளிகையிற் புகுந்து, சேடியர்கள் காவல்செய்கின்ற முதல்வாயிலிற்சேர்ந்து, அவர்கள் தம்முடைய பாதங்களை வணங்க ''என் வரவை நுமது தலைவிக்குச் சொல்லுங்கள்'' என்று சொல்லி நின்றார். வாயில்காக்கும் பெண்கள் சிலர். உமாதேவியாரி டத்துச் சென்று அவருடைய பாதங்களை வணங்கி, ''இங்கே தவவேடம்பூண்ட ஓரந்தணர் உம்மிடத்து வரவேண்டும் என்று சொல்லி எம்மை விடுத்தார்'' என்று சொல்ல, அம்மையார் ''அவரை இங்கே அழைத்துக்கொண்டு வரு திர்'' என்றார். வாயில்காக்கும் பெண்கள் திரும்பிவந்து, ''சுவாமீ, எம்பெரு மாட்டி உம்மை உள்ளே வரும்படி அருள்புரிந்தார்'' என்றார்கள். அவர் விரைவிற் சென்று தேவியார் இருக்குமிடத்தை அடைந்தார். தேவியார் அவரை விரைந்தெதிர்கொண்டு சென்று ''இவர் எம்பெருமானுக்கன்பர்'' எனக்கருதி அவருடைய பாதங்களை வணங்கிப் பூசித்து நின்றார். நின்ற தேவியரை அவர் நோக்கி ''அழகிற்சிறந்த பெண்ணே, இங்கே யாம் வந்தது ஒன்றை விரும்பி. விரைந்து அருள்செய்வாயாயின், அதனைச் சொல்வோம்'' என்றார். அம்மையார் ''எனக்கிசைந்ததொன்றைச் சொல்வீராயின் இப் பொழுதே உமக்கு அதனை யான் தரக்கூடும். நீர் நினைத்தது யாது? சொல் லும்'' என்றார். அந்தணர் ''உன்னை நாம் மணஞ்செய்துகொள்ள வந்தோம். அதுவே நீ எனக்கு அருள்புரியவேண்டுவது. இதனைத்தடுத்து எதிர்வார்த்தை சொல்லாதே'' என்றார். பிரமசாரிவடிவங் கொண்டு வந்த பரமசிவன் இத னைச் சொல்லுதலும், அம்மையார் உடனே கைகளால் செவிகளைப் பொத்தி, கனன்று, மனம் நொந்து, பெருமூச்சு வீட்டு, ''நீர் இவ்வாறு சொன்ன தென்னை? என்னை ஆளுகின்ற ஒப்பில்லாத சிவபெருமான் வந்து மணஞ்செய் யும்படி யான் பெருந்தவஞ் செய்கின்றேன்'' என்றார். அதற்கு பிரமசாரி யார் ''யாவரும் எக்காலமும் எத்தன்மையினர் என்று நினைக்க முடியாமல் நின்ற முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் உன்னைக் கலியாணஞ் செய்து சேர்வது அரிது. கன்னியே, நீ மகாதவங்களைச் செய்து வருந்தாதே'' என்று

கூறினர். அதனைக்கேட்ட உமாதேவி "சிவபெருமானே விரும்பிவந்து என்னை மணஞ்செய்யும்படி அரிய மகாதவங்களைச் செய்வேன். அதற்கு அவர் வாராதொழிவராயின், யான் என்னுயிரை வலிய விடுவேன். இது நிச்சயம். நீ ஒரு பித்தனே? பொய்சொல்லிக் கொண்டிருக்கிறாய். போ போ" என்று கோபித்து, ஒரு சாரிற்போயினர். சிவபெருமான் மகிழ்ந்து, "பெண்ணே உன்னுடைய அன்பும் மனவுறுதியும் நன்று" என்று கூறி, பிறரொருவரும் அறியாவண்ணம் அவருக்குத் தமது திருமேனியைக் காட்டினர். உமாதேவியார் அவரைக் கண்டு மெய்நடுங்கி, "பிறரென எண்ணி இகழ்ந்தேனே" என்று அவருடைய பாததாமரைகளில் வணங்கித் துதித்து, "எம்பெருமான் மறைந்து வந்ததைப் பேதையேன் உணர்ந்திலேன். உம்முடைய திருவருணோக்கம் எய்துமாயின் யான் உணர்ச்சி எய்தி நிற்பேன். அஃதில்வழி எனக்கோர் செயலுமில்லை. அடியேன் பிழைசெய்தேன். அதனைப் பொறுத்தருளும்" என்று வேண்டினர். அவரை எம்பெருமான் கண்ணுற்று, "உமையே, உன் இயற்கை நன்று! நன்று! நீ அஞ்சாதே" என்றார். என்று கூறிய எம்பெருமானை எம்பிராட்டியார் பின்னும் வணங்கி, தமது பக்கத்தில் நின்ற பெண்களைப்பாராமலும், வேறொன்றையும் நினையாமலும் ஆனந்தக் கண்ணீர் உகுத்து, பரமசிவனுடைய புகழ்களை மிகவும் துதித்துக்கொண்டு நின்றார். பக்கத்தில் நின்ற சேடியர்கள் "நமது தலைவி பலநாட்பயின்ற நம்மை நோக்குகின்றிலள், அவளுக்கு மிகுந்த ஆசையைக்கொடுத்த இவ்வந்தணன் மாயத்திலே வல்லவன்போலும். இவர்கள் நிலைமை முன்னே எதிர்ப்பட்டார் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்த தன்மை போன்றது. மேலே யாம் ஆராய்தற் பாலது உளது" என்று மனதிற் சந்தேகங் கொண்டார்கள். அவர்களுட் சிலர் மிக விரைந்து சென்று தக்கனுடைய கோயிலையடைந்து, "உன் மகளுடைய நிலைமை இது. கேள்" என்று நிகழ்ந்தனவெல்லாவற்றையும் முறையாகச் சொன்னார்கள். அவன் மனத்திலோர்ந்து, ஞானத்தால் ஆராய்ந்தபொழுது, சிவபெருமானே அங்கு வந்ததாகத் தோன்றுதலும், நிகரில்லாத மகிழ்ச்சியைப் பெற்று, எழுந்து துள்ளி, "யான் பெற்ற பெண்ணை அச்சிவபெருமானுக்கு மணஞ் செய்து கொடுப்பேன்" என்றான்.

திருச்சிற்றம்பலம்.

## திருமணப் படலம்.

திருக்கலியாணஞ் செய்தற்கேற்ற முகூர்த்தம் எப்பொழுதுளது என்று தக்கன் ஆராயும்பொழுது, நல்லமுகூர்த்தம் அன்றைக்கே வர, அடங்காத மகிழ்ச்சியினனாய், ஆசைமிகுந்து, "இற்றைத்தினத்தில் சிவபெருமானுக்கு என்மகளை மணஞ்செய்து கொடுப்பேன்" என்று உறுதி செய்து அதற்கு விரைந்து வரும்படி தேவர்கள் யாவருக்கும் ஒற்றுவர்களை அனுப்பி, தன்னகரத்தையும் கோயிலையும் திருக்கலியாணத்திற்கேற்பப் பொன்னுலகமும் நாணும்படி அலங்காரஞ்செய்வித்து, அந்நகரை நீங்கி, கௌரியுடைய தவச்சாலையில் வந்திருக்கும் சிவபெருமானாகிய அந்தணரை அடைந்து, அவருடைய பாதங்களை வணங்கி, "உம்மை மணஞ்செய்து

கொள்ளும்படி நம்முடைய பெண் தவஞ்செய்தாள். அடியேனுடைய நகருக்கு வந்தருளும்'' என்று வேண்டினன். சிவபெருமான் நன்றென்று உமாதேவியாரோடு அவனுடைய மாளிகையை அடைந்தார். அவரெதிரே பெண்கள் அட்டமங்கலங்களை ஏந்திவந்தார்கள். பரமசிவன் மங்கலங்களை நோக்கி, உமாதேவியாருடன் மாளிகையை அடைந்து, ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தருளினர். அப்பொழுது தன்மகளாகிய கௌரியை வேதவல்லி கண்டு தழுவி, தன்கோயிலில் அழைக்கொண்டு வந்து, தவத்திலிருந்த மையாலுண்டாகிய அவருடைய கூந்தலின் பின்னற் செறிவை. மெல்ல மெல்ல ஆய்ந்து நீக்கி, நாவியையும் வாசநெய்யையும் பூசி, துவரையும் ஓமாலிகையையும் தடவி, கங்காசலத்தில் அபிஷேகம் செய்து, மாலை சூட்டி, பீதாம்பரத்தை உடுத்து, பலவகை ஆபரணங்களைப் பூட்டி, மங்கலவாத்தியங்களை இயம்பி யாவரும் வாழ்த்த எம்பெருமானுக்குப் பக்கத்தில் இருத்தினள். அரிபிரமேந்திராதி தேவர்கள் தூதுவர்களுடைய வார்த்தையைக் கேட்டுத் திருக்கலியாணத்தின் பொருட்டு விரைந்துவந்து, சிவபெருமானை வணங்கினர்கள். கின்னரரும் உவணரும் யாழ் வாசித்து மங்கலகீதம் பாடினர்கள். அரம்பையர்கள் தேவியாருக்குப் பக்கத்தில் நின்று கற்பகமலர்களைச் சிந்தி வணங்கி மங்கலகீதம் பாடினர்கள். தக்கன், வேதவல்லி கரகநீர்விட வேதமந்திரங்களைச் சொல்லிச் சிவபெருமானுடைய திருவடிகளை விளக்கி, சந்தனம் புஷ்பம் முதலாகிய உபகரணங்களைக் கொண்டு பூசைசெய்து, அவருடைய திருக்கரத்தின்மீது உமாதேவியாருடைய திருக்கரத்தை வைத்து, ''இவளை உமக்கு மணஞ்செய்து தந்தேன். நன்முகப் பாதுகாத்தருளும்'' என்று கூறிக் கரகநீர் வார்த்துத் தத்தஞ்செய்தான். தேவர்கள் முதலாகிய அனைவரும் அவருடைய திருமணக்கோலத்தைத் தரிசித்துக் கைதொழுது ஆரவாரித்தார்கள். பிரமதேவர் திருமணச்சடங்குக்கு வேண்டிய உபகரணங்களைக் கொண்டுவந்து, விஷ்ணுமுதலாகிய தேவர்கள் வேதகோஷஞ் செய்ய, சாஸ்திர விதிப்படி விவாககிருத்தியங்களைச் செய்தார். அப்பொழுது உருவமாய், உருவருவமாய், அருவமாய், இம்மூன்று திருமேனிக்கு மேலாய், ஆன்மா அறிவுத் தொழின் மாத்திரையானே வழிபாடுசெய்யும் அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நின்று உலகங்களெல்லாவற்றையும் இதத்தைச் செய்கின்ற பரமசிவன், திருவருளால் தம்முடைய திருவுருவத்தை மறைத்தருளினர். உமாதேவியார் அவரைக் காணுதவராய், தவஞ்செய்து பெற்ற சேமநிதியை இழந்தவர்போல உவகைநீங்கி வருந்தி, விரைவில் இருக்கைவிட்டெழுந்து, இலக்ஷ்மி முதலிய பெண்கள் நெருங்கிய கூட்டத்திற் போய், உலைமுகத்துருகிய பொன்னைப்போல உருகி, விம்மி உயிர்த்து அழுது உணர்வு மாழ்கி அயர்த்து வாடி அலமந்து வியர்த்து வெதும்பி, புளகமுண்டாக, சிவபெருமானுடைய திருக்கோலத்தையே தியானஞ்செய்து, ''அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவரும் நெருங்கிய சபையிலே நடைபெற்ற மணச்சடங்கில் இருந்த கடவுள் மாயையினாலே விரைந்து போயினர். ஆதலின் அவர் வஞ்சகர் போலும். வினையினேன் உடம்பு வருந்தச் செய்த தவம் சிறிதென்றெண்ணுதலின்றி, தாமாகவந்து என்னை மணஞ்செய்துகொண்ட அக்கடவுளை யான் வஞ்சகரென்று கருதலாகுமோ!'' என்றென்று நினைத்து இரங்கினர்.

இவ்வாறு இரங்குகின்ற உமாதேவியாருடைய செய்கையை வேதவல்லி நோக்கி, அவரைக் கட்டித் தழுவி, ''மகளே, மனந்தளராதே. உன்கணவர் உன்னிடத்து வருதற்குரியவழி தவமே. இன்னும் அதனையே செய்குதி'' என்று சொன்னாள். அங்குநின்ற திருமகளும்நாமகளும் ''அன்னையே, வாழி; இதனைக்கேள். நீ உலகமுழுதும் தந்தவள். எப்பொருளும் உன் வடிவமே. எவ்விடத்தும் உன்னைவிட்டு நீங்காத உன்னுயகரை உன்னில் நின்றுமறைக்கும் மறைவு உளதோ! தவத்தைக் காக்கும்படி நினைத்தாயோ! நினைத்தற்கு மரிய உங்கள் திருவிளையாடல் முழுதையும் யார் அறியவல்லார்! வாக்கு மனுதீதர்களாகிய உன்னுயகரையும் உன்னையும் தரிசிக்கப்பெற்றோம்; அதனால் வினைகள் யாவும் போக்கினோம்; பிறவியையும் நீங்கினோம்; மனத்தில் ஞானம் நிறையப்பெற்றோம்; யாமெல்லாம் உய்ந்தோம்; இவற்றையடைய யாம் பெரிய தவம் செய்தோம்'' என்று கூறி வாழ்த்தினர்கள். உமாதேவியார் அவர்களுக்கருள் செய்து, அவர்கள் கூட்டத்தை நீங்கி, தவஞ்செய்யும்படி முன்னைத் தவச்சாலையை அடைந்தார். இவைகளெல்லாவற்றையும் விட்டுணு முதலாயினோர் பார்த்து, மிகுந்த ஆச்சரியமுடையராய், ''சிவபெருமான் எங்கே போயினரோ?'' என்பாரும், ''இஃதோர் மாயம்!'' என்பாரும், ''அவர் தமது தேவியாருக்கொளித்தது ஏன்?'' என்பாரும், ''இனி நிகழ்வதைப் பார்ப்போம்'' என்பாருமாகி, இவ்வாறு பலவற்றைச் சொல்லி அலமந்து ஏங்கி, இராக்காலத்திலே முகிலினால் மூடப்பட்ட சந்திரன்போல அறிவுமாழ்கிக் கவலையுற்றார்கள். இத்தன்மைகளையெல்லாம் தக்கன் பார்த்து, மிகவும் கோபித்து, கண்கள் சுழல உயிர்த்துக், கையோடு கையைத் தட்டி, மூக்கிலே விரல் வைத்து, மனம் புழுங்கச் சிரித்துத், தலையைஅசைத்து, ''செல்வத்தினால் யாம் செய்த விவாகம் மிக அழகிது!'' என்றான். பின்னும் தக்கன், ''சிவன் எனக்கு வரந்தந்த காரணத்தால் என்மகளிடத்து வந்து தன்னை மணஞ் செய்து கொள்ளும்படி இரந்தான். யான் அதனைக் கேள்வியுற்று விவாகஞ் செய்து கொடுக்கநினைத்து, பல தேவர்கள் சமுகத்தில்முறைப்படி விவாகஞ் செய்து கொடுத்தேன். கொடுத்தபின் யாரும்நாணமுறும்படி மறைந்தான். என்னிடத்து ஒரு குற்றத்தையேனும் கண்டானே? அழகோடு செய்த விவாகச்சடங்கைப் புன்மையாக்கி ஊறுசெய்து, என்னையும் பழியின் மூழ்கப் பண்ணி, சிறிதும் எண்ணுமல் ஓளித்தானே. தாயும் தந்தையும் உறவினருமாகிய யாருமின்றி, பொது இடமே தனக்கு வீடென்று கொண்டு, அங்கே கூத்தாடுகின்ற ஒரு பித்தன் மறையோனைய் விடின், அவனுடைய மயக்கம் போமோ? ஆராயுமிடத்து அவனியற்கை தீயதே; இன்றைக்கு யான் அதனை அறிந்தேன்'' என்று கூறி, அக்கினி பட்டாற்போல மனம் வெதும்பி, விட்டுணு முதலாகிய தேவர்களை ''நீங்கள் உங்கள் உலகங்களுக்குப்போங்கள்'' என்று சொல்லி அனுப்பிவிட்டு சிவபெருமான் செய்த மாயத்தை உன்னியுன்னி, கோபத்தின் மிகுந்தவனாகியிருந்தான்.

உமாதேவியார் முன்னைத் தவச்சாலையிற்போந்து, பல பெண்கள் தம்மைச் சூழ அங்கே வீற்றிருந்து, சிவபெருமான் தம்மை வந்தடையும்படி பல நாளாக வருந்தித் தவஞ் செய்தார். சிவபெருமான், ஒரு சுபதினத்திலே, வெண்டலை மாலையும் விபூதிப்பூச்சும் உருத்திராக்ஷவடமும் காதணியும் சிலம்பும் சூலமும் சடையும் ஆகிய இவற்றைத் தரித்த ஒரு

தவவேடம் பூண்டு, அவரிடத்து எழுந்தருளிவந்தார். அவரை உமாதேவியார் கண்டு, இவர் சிவபத்தர் எனக்கருதி, அன்பு செய்து வணங்கித் துதித்தார். அப்பொழுது அவர், இடபவாகனத்தின்மீது உமாதேவியார் இடப்பாகத்திலில்லாமல், தாமாந்தன்மையறிதற்குரிய வடிவத்தோடு வெளிப்பட்டார். தேவியார் ''பரமசிவன் நம்மிடத்து எழுந்தருளி வந்தார்'' என்று தெரிந்து, முன்னேத்துயர் நீங்கி, மிகுந்த மகிழ்ச்சியோடு பலமுறை வீழ்ந்து வணங்கித் துதித்து எதிரே சென்று, ''முன்னே என்னே விட்டு நீங்கினீர், இப்பொழுது அந்தக் குறையை நீக்கும்படி எழுந்தருளி வந்தீர்போலும்'' என்று கூறினர். அவரைச் சிவபெருமான் வருக என்றழைத்து, திருக்கரத்தை நீட்டி, இடபவாகனத்திலே ஏறச்செய்து, தமது இடப்பாகத்தில் வைத்துக்கொண்டு, இடபத்தைச் செலுத்தித் திருக்கைலாசமலையை அடைந்தார். உமாதேவியாருடைய சேடியர்கள் அதனைக் கண்டு வருந்தி இரங்கி, தக்கனிடத்திற் சென்று, ''சிவபெருமான் ஒரு தவவேடம் பூண்டு உன்மகளுக்கு எதிரேவர, அவள் அக்கபடத்தை அறியாமல் அணுகுதலும், அவர் விரைந்து பழைய உருவைக் காட்டி, அவளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு செல்கின்றார்'' என்றார்கள். தக்கன் அதனைக் கேட்டு, நெருப்பிலே நெய்யைச் சொரிந்தாற்போல அளவில்லாத செற்றத்தினனாய்ப் பெருமூச்சு விட்டிருந்தான். அப்பொழுது தேவர்கள் யாவரும் வந்து அவனை வணங்கித் துதித்துப் பக்கத்திலிருந்தார்கள். அவன் அவர்களை நோக்கி இவ்வாறு சொல்வான். ''நான் இனி என்ன சொல்வேன்! என்மகளை முன்னே அன்போடு விவாகஞ்செய்த சிவன் அந்த விவாகம் முடிதற்குமுன் மறைந்தான். அதுவன்றி, அவன் என்மகளிடத்தில் ஒரு சிவவேடதாரியைப்போல வந்து, என்முன் வராமல் ஒளித்து அவளைக்கொண்டு செல்கின்றான். தாயுந் தந்தையும் அன்போடு தத்தஞ் செய்யவும் சுற்றத்தார் வாழ்த்தவும் விவாகமுடித்தபின் மகளைக்கொண்டு சென்றிலன். இப்போது தாய் தந்தையரை மறைத்து இவ்வாறு செய்வது பெருமையோ? இதுபோலும் செய்கைகளை வேறு யார் செய்ய வல்லார்? தான் சங்கரனாலல் இதனைச் செய்யலாமோ? எங்கள் குலத்தைக் குற்றத்துக்குட்படுத்தினன்; அதுவுமன்றி என்னாணையையுங் கடந்தான். சிவன் பிசைவேண்டி இரந்தான் என்னும் ஒரு பழமொழி எங்கும் பரந்தது; அதுநிற்க, இங்கே களவுசெய்து கரந்தான் என்னும் மொழியும் பூமியெங்கும் பரந்தது. இதனால் வேறும் ஒரு பழியுண்டாயது. இக்கடவுள் முன்னே ஒரு கன்னிகையை விவாகத்திலே தத்தஞ் செய்ய ஏற்றுக்கொண்டிலன் என்பதனையும், அங்ஙனம் ஏற்றுக்கொள்வோரைக் கண்டிலன் என்பதனையும் காட்டினன்'' என்று இவ்வாறு பற்பலவற்றைச் செய்நன்றிகொன்ற தக்கனாகிய கயவன் கூறி, தன் பக்கத்திற் குழுமி நின்ற தேவர்களைத் தத்தம் உறைவிடங்களுக்குச் செல்ல அனுப்பி, அன்றுதொட்டுச் சிவபெருமானை நினையாமல் இகழ்ந்து, கறுவுகின்ற மனத்தோடிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

# தக்கன்கயிலை செல்படலம்.

தக்கனுடைய இச்செயலை அறிந்த பிரமா முதலிய தேவர்கள் வருந்தி, "தவத்தாற் செல்வங்களைப் பெற்று விளங்குகின்ற தக்கன் எம்பெருமானை எண்ணுகின்றிலன். விரைவில் உயிரை இழப்பன். அம்மவோ! யாமும் அவனுடைய ஏவலைச் செய்கின்றோம். நம்முயிர்க்கும் இறுதி வந்தது போலும். ஆனல் இனி நாம் தக்கனை மதியோமாயின், அவன் முன்னைச் சிவபெருமானிடத்துப் பெற்ற வரத்தால் நிகரில்லாத கோபங்கொண்டு நம்முடைய பதங்களை மாற்றுவான். நாம் இனிச் செய்வதென்னை?" என்று இவ்வாறு நினைந்து, "தக்கன் சிவபெருமான் வீற்றிருக்கின்ற கைலாச மலைக்குப் போம்படி அவன் மனத்தைத் தேற்றினேமாயின், அவன் அன்போடு அவரைப் போய்த் தரிசிப்பான். அப்பொழுது அவனுடைய இச் செல்வங்களெல்லாம் நிலைபெறும். நமக்கும் நாசம் வராது" என்று நினைத்து தக்கனிடத்திற் சென்று "உன் தவத்தினல் மகளாய் வந்தவதரித்த உமா தேவியாரையும் சிவபெருமானையும் மறக்கின்றனை போலும். உனது பெருந் தன்மைக்கு இஃது என்ன செய்கை! இது ஆச்சரியம். குற்றம் பார்த்தலே குணமென்று கொண்டால் ஒருவருக்குச் சுற்றம் எவ்வாறுளதாகும்? ஆனல் சுற்றத்தை வெறுத்து நீக்கிக் கோபம் செய்தலிலே ஒரு மகிழ்ச்சி உண்டு. இதனைச் சிந்தியாதொழிவையாயின், அரசனே உன்னை ஒரு வசை வந்து சூழும்" என்றார்கள்.

தேவர்கள் கூறியவற்றைத் தக்கன் யோசித்து, "யான் செயற்பாலது யாது?" என்று கேட்க; "உமாதேவியையும் சிவபெருமானையும் திருக்கை லாசத்திற்போய்க் கண்டு மீளுதி" என்று கூறினர். அவன் அங்கே செல்லு தற்கு உடன்பட்டு, பிரமா முதலிய தேவர்கள் யாவரையும் அங்கிருக்க வைத்து, தனக்குப் பிரியாத் துணையாயுள்ளோர் சிலரோடு கைலாசமலையை அடைந்து, சிவபெருமான் வீற்றிருக்குஞ் செம்பொற்றிருக்கோயிலை அணுகி, நந்திதேவர் இருக்கின்ற கோபுரவாயிலைச் சார, அதனைக் காவல் செய்யும் பூதர்கள் அவனை உள்ளே புகவொட்டாது தடுத்தார்கள். தக்கன் அப்பூதர் களை வெகுண்டு, "என் மகள் தன்னையகனைந்து இங்கு இருப்பதையான் பார் த்தறிவேன். நீவிர் அதனைத் தடுக்கின்றதென்னை?" என்று கூறினன். வாயில் காக்கும் பூதர்கள் அவனைக் கோபித்துப் பார்த்து, "மிகவும் மடமையை யுடைய தக்கனே, முன்னளில் நமது கடவுளாகிய சிவபெருமானை நீ இகழ்ந் தாய். அத்தன்மையனகிய நீ இங்கே எவ்வாறு வந்தனை? திரிபுரத்தசுரர்கள் பூவுலகத்தையும் வானுலகத்தையும் வருத்துவாராயினும் எம்பெருமானுக்கு நல்லவர். அவர்களுடைய அன்பில் ஓரிறையளவாயினும் நின்பாற் பொருந் திற்றில்லை. இனி எங்ஙனம் வாழ்வாய்? தேவர்கள் இறக்கவருஞ் சமயத்தில் நஞ்சையுண்டு அவர்களுடைய துன்பத்தை நீக்கிக் கறுத்த கண்டராகிய சிவ பெருமான் தந்தருளிய மேலாகிய செல்வங்களை அநுபவித்து, அவர் செய்த நன்றிகளையெல்லாம் மறக்கின்றாய். மாயையுட்பட்டாய், நீ இனி என் செய்குகி? சிவபெருமானுடைய திருவடிகளை மிகுந்த பக்தியோடு வணங்கித் துதியாத பாவிகளோடு சகவாசஞ் செய்தல் கூடாது. பாசத்துள் வீழ்ந்த கொடியோனே, உன்முகத்தைப் பார்த்து யாங்கள் பேசவுந் தகுமோ! பாவ

மன்றே? அங்ஙனமாயினும் இன்னும் ஒரு வார்த்தையுளது. நீ எம்பெருமானுடைய சந்நிதானத்திற்போய் அன்பினோடு அவரை வழிபடுவாயாயின், இங்கே நில். அன்றெனில் உன்னகருக்குச் செல்லுதி'' என்றார்கள். தக்கன் அவற்றைக்கேட்டு, அக்கினி கிளர்ந்தாற்போல மிகவும் கோபமுற்று, பல்லாயிரம் பூதர்கள் பாதுகாக்கின்ற திருக்கைலாசமலையின் வாயிலைக் கடந்து உள்ளே செல்லமாட்டாதவனாய், மிகவும் நாணி மனம் வருந்தி, அங்கே நில்லாது மீள்கின்றவன் அவ்வாயிற் காவலாளர்களை நோக்கி, ''வாயில்காக்கும் பூதர்காள், கேளுங்கள். எந்தநாளிலாயினும் உங்கள் கடவுளாகிய சிவனை யான் வணங்கேன். அவன் என் மருகன். இதனை நீர் அறிந்திலீரோ? இந்த விட்டுணுவும் பிரமாவும் எனக்கு ஏவல் செய்பவர்கள். ஒழிந்தோரெவரும் என்னுடைய தொண்டர்கள். பெரிய நிலவுலகத்தைப் பாதுகாக்கும் அரசன் யான். என்பெயர் தக்கன் என்பர். உங்களுடைய ஒப்பில்லாத பெரும்பித்தனை இன்று நான் போய் வணங்கித் தொழுது துதிப்பேனே? என்னைப்பார்த்து 'இங்கே நில்' என்று நீவிர் தடைசெய்தது எனது மருகனும் மகளும் சொன்னபடி செய்ததல்லது, நீவிர் செய்ததொன்றே? அவர்களுடைய தொண்டர்களாகிய நீவிர் செய்வதென்னை? உங்கட்குறுதி அவர்களுக்கேற்றபடி செய்தல் அல்லவா? ஒன்றையும் ஆலோசியாமல் இவ்வாறுசெய்த உங்கள்கடவுளை யாவருந் தோத்திரஞ்செய்யாமலும், வந்து வணங்காமலும், புகழ்ந்து மேன்மைகளைச் சொல்லாமலும், இகழும்படி செய்வேன்'' என்றுகூறி, முன்செய்த வினை தன்னைப் பிடர் பிடித்துந்த மீண்டு தன்னகரையடைந்தான்.

மீண்டு சென்ற தக்கன் பிரமா முதலிய தேவர்களை நோக்கி, ''என் மகளும் சிவனும் ஒருவர்க்கொருவர் அன்பினால் ஒருப்பட்டு ஒருபாயத்தை யெண்ணித் தங்களுடைய வாயிற் காவலாளர்களால் எம்மை உள்ளேவிடாமற்றடுப்பித்தார்கள். அவர்கள் நம்மைப் பேசுவித்தனவும் பலவுண்டு. அந்தோ! அவற்றை என்னென்று நான்வாயாற் சொல்வேன்? எண்ணவும் வெட்கப்படுகின்றேன். அவற்றை இங்கே சொல்வதனால் ஆவதென்னை? அவர்களிடத்துப்போன என்னைநோவதன்றி அவர்கள்மாட்டு யாதாயினுங் குறையுண்டோ? நல்லது! என்னை மதியாத சிவனையும் உமையையும் நீங்கள் இன்று முதலாக என்றைக்கும் வணங்கித் துதியாதொழிமின். அன்றியும் அவர்களை மதித்தலும் செய்யாதீர். இந்தப் பணியை மறுத்தீராயின், நும்முரிமையை இன்றைக்கே விரைவில் மாற்றுவேன். இது நிச்சயம்'' என்றான். இப்படிக் கோபங்கொண்டு சொல்லிய தக்கனைத் தேவர்கள் யாவரும் நோக்கி, ''அரசனே, எம்மை வெறுத்து இவ்வாறு சொன்னாலும், முன்னர் ஏதாவது உன்னுடைய ஏவலை நாங்கள் மறுத்ததும் உளதோ? இல்லையே. அப்படியே இப்பொழுதும் உன் பணியிலே நிற்போம். எங்களைக் கோபியாதொழி'' என்று கூறி, தத்தம் உலகையடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## பிரமயாகப்படலம்.

இப்படிப் பலகாலம் யாவரும் தக்கனுடைய ஆணைக்கு அஞ்சி அவனுடைய பணியைச் செய்துகொண்டு வர, பிரமதேவர் சிவபெருமானுடைய

திருவருளினால் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணி முயன்று, அதற்கு வேண்டும் உபகரணங்கள் எல்லாவற்றையும் விதிப்படி சிரத்தையோடு சம்பாதித்து, தக்கன் சொன்னதை நினைத்து, ''யானே இறக்கவரினும் நான் சிவபெருமானை யாகத்தில் வரித்து முதலில்அவருக்கு அவிப்பாகத்தைக் கொடுப்பேன். இது எனது துணிபு'' என்று சொல்லித் தன்மனத்தை யாப்புறுத்தி, தனது ஏவலைச்செய்யும் புதல்வர்கூட்டத்தை அழைத்து, ''விட்டுணு முதலாகிய அனைவரையும் அவிப்பாகம் கொள்ளும்படி நீவிர் அழைத்துத் தருதிர்'' என்று அவர்களை விரைந்து தூண்டி, தான் திருக்கைலாசமலையை அடைந்து திருநந்திதேவர் சிவபெருமானுடைய அநுமதிப்படி கோயிலினுள்ளே விடுப்பச் சந்நிதானத்திற்போய், அன்போடு வணங்கித் துதித்தார். சிவபெருமான் ''பிரமனே, நீ இங்குவந்ததென்னை?'' என்று வினவியருளினார்.பிரமா, ''சுவாமீ, அடியேன் ஒரு யாகம் செய்யப்போகின்றேன். தேவரீர் அங்கே எழுந்தருளிவந்து அது முடியும்படி அருள்செய்யும்'' என்றார். கடவுள் திருப்புன்முறுவல்செய்து, ''நமது வடிவத்தைக்கொண்ட நந்தி அங்கேவருவான். நீ போ'' என்றருளிச்செய்தார்.

பிரமா சிவபெருமானிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தக்கனிடத்திற் போய், ''ஐயனே, யான் ஒரு யாகம் செய்கின்றேன். முனிவர்களோடும் தேவர்களோடும் நீ வருதி'' என்றார். தக்கன் ''நன்று, நீ முன்போய் யாகத்தைச் செய்குதி'' என்றான். பிரமதேவர் மேருமலையிலுள்ள மனோவதியையடைந்து யாகத்தைச் செய்யலுற்றார். அதனை விட்டுணு,இந்திரன், தேவர்கள், முனிவர்கள் ஆகிய யாவரும் அறிந்து தக்கனிடத்து வந்தார்கள். தக்கன் அவர்களோடு கூடி, சிவபெருமானுக்கு அவிப்பாகத்தை விலக்கும்படி முயன்று, அத்தேவர்கள் யாவரும் தன்னைத் துதித்துச் சூழ யாகத்திற்குப் போயினன். பிரமா எழுந்து ஆசி கூறித் தமக்குப் பக்கத்தில் ஓர் ஆசனத்தில் அவனை இருத்தி, விட்டுணுவினுடைய பாதங்களை வணங்கி அவரையும் ஓராசனத்திலிருத்தி, இந்திரன் முதலாகிய மற்றை யோருக்கும் ஒவ்வோர் ஆசனங்களைக் கொடுத்து, தானும் ஓராசனத்தில் இருந்தார்.

இங்கே இவ்வாறு நிகழ, பரமசிவன் நந்திதேவரைப் பார்த்து, ''நீ பிரமனுடைய யாகத்திற் சென்று நம்முடைய அவிப்பாகத்தை வாங்கிக் கொண்டு விரைவில் வருக''என்று கட்டளையிட்டருளினார். அவர் இசைந்து, சிவபெருமானை வணங்கித் தியானித்துக்கொண்டு, நூறுகோடி பூதகணங்கள் சூழப் பிரமாவினுடைய யாகசாலைக்கு வந்தார். பிரமா விரைந்து தெழுந்து வணங்கித் துதித்து, அவரை ஓர் இரத்தினசிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்து, அவரோடு கூடவந்த பூதப்படைத் தலைவருக்கும் ஆசனங்களைக் கொடுத்து, பின்பு யாகத்தைச் செய்தார். அப்பொழுது நன்றியில்லாத தக்கன் அக்கினிகாலப் பார்த்து, ''அந்தக் கைலாசத்திலிருக்கின்ற நக்கனுடைய ஆள்போலும் இவன்'' என்று நகைத்துக் கோபித்து, ''விட்டுணு முதலாகிய தேவர்களும் இலக்குமி முதலிய தெய்வ மகளிர்களும் முனிவர்குழாங்களும் செறிந்திருக்கின்ற பிரமாவினுடைய யாகத்தில், நஞ்சையுண்டு கூத்தாடும் சிவனுடைய ஆளாகி நந்தியும் பூதங்களுமோ நடுவே வந்திருப்பது? இது நன்றுயிருக்கிறது! முப்புரங்களை

எரித்த அக்கினிக்கண்ணனுகிய சிவனுடைய வெள்ளிமலையைக் காக்கும் காவலாளனுகும் நந்தியையும் பூதர்களையும் இங்கே வர அழைத்தவர் யார்?'' என்று மனத்தில் ஆலோசித்துத் தெரிந்து, தேவர்கள் யாவரும் அஞ்சும்படி பிரமாவைக் கோபித்து, அவரை நோக்கி இவற்றைச்சொல் கிறுன்; ''நீயோ முதல்வனுகிய பிரமதேவன். நீ யாகஞ்செய்யப்போவ தைச் சிவனுக்குத் தெரிவித்து அவன் அனுப்பவந்த நந்தியை என்முன் அன்போடு தொழுது நடுவிலே கொண்டுவந்து இருத்தினுய். உனக்கு இது தகுமோ? நீ என் பிதாவாதலிற் பிழைத்தாய்; அல்லது உன் தலையை வெட்டேனே? இன்னும் ஒன்று யான் சொல்வதுண்டு; மூடனே, கேள். சுடலையே இடமாகப் பூதங்கள் சூழக் கங்காளத்தைச் சூலத்தில் ஏந்தி நெருப்பில் நின்றுடுஞ் சிவனுக்கு அவிப்பாகத்தை நீ முன்போலக் கொடாதே. இன்று முதல் அது அவனுக்குக் கிடையாது. எலும்பையும் பாம்பையும் தலைமாலையையும் தாங்கிச் சாம்பலைப் பூசும் பித்தன் யாகத் தில் அவிப்பாகம் ஏற்றற்குரியனே? இந்நாள்காறும் யாவரும் வேதாசார மென்று நினைத்து வேருென்றையுங் கருதாமல் சுத்தம் மிகுந்த அவியை அவனுக்குக் கொடுத்தார்கள். அதையே தொன்றுதொட்ட வழக்கமாகக் கொள்ளலாமோ? அவ்வவியை மற்றைத் தேவர்களுக்கெல்லாம் கொடுக் குதி. இன்றுமுதல் விட்டுணுவையே கடவுளாகக் கொள்ளுதி. இவருக்கே அவியை முதலிற் கொடுக்குதி. சிவனே பரம்பொருள் என்று சொன்ன வேதசுருதிகளை விலக்குதி. இதனையே நீ துணிவாகக் கொள்ளல் வேண் டும்'' என்று தக்கன் கூறினன்.

இவ்வாசகங்களைக் கேட்டலும், நந்திதேவர் இருகரங்களாலும் காது களைப் பொத்தி, மன அன்போடு சிவநாமங்களைத் தியானித்து, ''எம்பெரு மானே, இன்றைக்கு இவ்வதிபாதகனுடைய சொல்லையும் கேட்கும்படி அடி யேனை இங்கே அனுப்பினீரோ?'' என்று மிகுந்த துன்பத்தில் மூழ்கி, துண் ணென்று வெகுண்டார். அவருடைய கோபத்தைக் கண்ட தேவர்கள் யாவரும் உட்கினர். அக்கினியும் வருந்தினன். அண்டங்கள் யாவும் நடு நடுங்கின. உயிர்களெல்லாம் அசைந்தன. பிரமாவும் விட்டுணுவும் ''சிவ பெருமானுடைய கீர்த்திகளுள் ஒரு சிறியதையும் நினையாது வலிமையோடு அவருக்குரிய அவியை விலக்கிய தக்கனுக்கஞ்சி அவன் வார்த்தைக்கெதிராக இங்கே ஒன்றையும் சொல்லுதல் தகாதென்று நாமும் இசைந்தோம். ஐயோ அதனைப் பொருதுதான் நந்திதேவர் சீற்றங்கொண்டார்'' என்று எண்ணி, மனம் உட்கினர்கள். இந்தச் சமயத்தில், திருநந்திதேவர் தக்கனை அக்கினி காலப்பார்த்து, ''உமாதேவிபாகராகிய சிவபெருமானை இகழ்ந்தாய். இங்கே உன் வாயைத் துளைத்திடுவேன். அது அக்கடவுளுடைய ஆணையன் றென்று விடுத்தேன். அதனுல் நீ உய்ந்தாய். இனி எம்பெருமானைத் தூஷித்தாயாயின் விரைவில் உன் சிரசைத் துணிப்பேன்'' என்று இவ் வசனங்களைத் தக்கனுடைய உள்ளமுந் துணுக்குறும்படி கூறி, பின்னரும், ''யாகத்தில் எம்பெருமானுக்கு அவிப்பாகம் இல்லை என்று விலக்கினுய். யாகத்துக்கிறைவர் சிவபெருமானல்லராயின், உலகத்தில் அதற்கு இறை வர் வேறியாவருளர்? தக்கனே, நீ விட்டுணுவைப் பரம்பொருளென்று கூறினுய். சிவபெருமானையன்றி யாகஞ்செய்வோருடைய சிரம் விரைந்து அறுக'' என்று சாபங்கூறினர். அதன்பின்னரும், ''சிவபிரானுடைய

இயல்புகளை மதியாத தக்கனே, உன்னுடைய வளங்களெல்லாம் விரைந் தழிக; அவரை வணங்குதலின்றி மாறுபட்டிகழ்ந்த வாயையுடைய உன் புன்றலையழிய வேரோர் இழிவாகிய தலை எவரும் காணும்படி விரைவி லுண்டாகுக. ஈரமில்லாத புல்லிய மனத்தையுடைய மடவோனே, உன் னைச் சார்ந்த தேவர்களும் ஒருநாள் இறந்து மீண்டு எழுந்து, அளவில் லாத யுககாலம் சூரன் என்னும் அவுணனுற் றுன்பக்கடலில் மூழ்குக'' என்று இந்தச் சாபங்களையுஞ் சொல்லி, எழுந்து, பூதகணங்கள் சூழத் திருக்கைலாசமலையை அடைந்து, சிவபெருமானுக்கு இந்நிகழ்ச்சிகளை விண் ணப்பஞ் செய்து, முன்போலக் கீழ்த்திசை வாயிலைக் காவல்செய்திருந் தார். திருநந்திதேவர் பிரமாவினுடைய யாகத்தை நீங்கிப்போதலும், அந்த யாகத்திலிருந்த தேவர்கள் யாவரும் ''இஃதென்ன விளைந்தது!'' என்று இரங்கி ஏங்கினர்கள் பிரமா திருநந்திதேவர் கூறிய பொய்யா மொழியாகிய சாபத்தை நினைத்து ஏங்கித் தலைநடுங்கி, மகனுகிய தக்க னுடைய சொல்லையும் மறுத்தற்கஞ்சி மிகவும் துயருழந்து, முடிக்கும்படி எண்ணி முயன்ற வேள்வியையும் நடத்த அஞ்சி, சடங்குகளைக் கைவிட் டார், தக்கன் அதனைப் பார்த்து, ஒன்றும் பேசாது கோபம்பொருந்திய மனத்தினனுய், கவற்சியடைந்து, உவகையிழந்து, அச்சமுஞ் சிறிது கொண்டு, தேவர்களோடெழுந்து, தன்னகரிலுள்ள கோயிலையடைந்தான். அந்த யாகத்தில் வந்து கூடிய தேவர்கள் திருநந்திதேவர் கோபத்தாற் சொல்லிய சாபத்தை சிந்தித்து வருந்தித் தத்தமிடங்களை அடைந்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## சாலைசெய்படலம்.

அன்றுமுதல் அளவில்லாத காலமாக முனிவர்களும் தேவர்களும் அந் தணர் முதலாயினேர்களும் யாகங்களொன்றையும் செய்யாராயினர். ஊழி னலே தியவழியிற் சாருகின்ற தக்கன் அதனை நினைத்து, ஒருநாள் தன்முன் வந்த தேவர்களை நோக்கி, ''வேதத்தினியல்பு முழுதையும் அறிந்த தேவர் களே, நெடுங்காலமாக நீவிர் யாகங்களைச் செய்யாது விடுத்ததென்னை? அதனை எனக்குச் சொல்லுங்கள்'' என்று ஈர்ந்தாற்போலத் தீயதொரு கேள்வியைக் கேட்டான். தேவர்கள், ''அரசனே, முன்னளிற் பிரமதேவர் செய்த யாகத்திலே நீ 'சிவபெருமானுக்கு அவிப்பாகத்தை கொடாதொழிக' என்று பணித்தாய். அதனலும் நந்திதேவர் கூறிய பிழைபடாத சாபத்தா லும் யாங்கள் யாகஞ் செய்யாதிருக்கின்றேம்'' என்றார்கள். தக்கன் அவர் களை நோக்கி, ''அந்நாளிலே சிவன் அனுப்ப வந்த நந்தி சொல்லிய சாபத் துக்கு இந்நாளிலும் நீவிர் அஞ்சி யாகங்களொன்றையுஞ் செய்யாது திரிகின் றீர்கள். முதலிலே வேதவிதிப்படி யான் ஒரு யாகத்தைச் செய்வேன். அது முடிவுபெறுமாயின், அதன்பின் நீவிரும் விரும்பிய யாகங்களைச் செய்யுங் கள்'' என்று கூறினன். அவர்கள் ''நீ முதலில் ஒரு யாகத்தைச் செய்தலே முறை'' என்றார்கள்.

தக்கன் தேவர்களை அனுப்பிவிட்டு, அதன்பின் ஒருநாள், விதிவசத் தால் ஒரு யாகஞ்செய்ய எண்ணி, அதற்கு முயல்வானுய், விசுவகன்மனை அழைத்து, ''யான் ஒரு வேள்வி செய்கின்றேன். அதற்கு முனிவர்களும்

தேவர்களும் வந்திருக்கும்படி மிகுந்த விசாலமுடையதாக இன்றைக்கு ஒரு யாகசாலையை விதிப்படி செய்'' என்றான். விசுவகன்மன் நன்றென்று அவனை வணங்கி, கங்காநதிக்கரையிலுள்ள கனகலம் என்னும் சிறந்த ஓரிடத்திற்போய்ச் சாலை அமைப்பானுயினன். ஆயிரம் போசனை நீளமும் ஆயிரம் யோசனை அகலமும் உள்ளதாக இடம்கோலி, அதனை ஒரு மதிலாற் சூழ்ந்து, அதன் நான்கு திசைகளிலும் நான்கு கோபுரங்களைச்செய்து, அம் மதிலில் ஞாயில் முதலியஉறுப்புக்களையும் செய்து, அவ்விடத்தை ஓர் அரண மாக்கி, அதனுள் அரம்பையர்களிருக்குமிடங்களையும், தேவர்களும் அரம் பையர்களும் மருவி ஆடுதற்குரிய வாவிகளையும், சோலைகளையும், அன்ன சாலை போசனசாலைகளையும், சந்தனம் புஷ்பம் முதலிய வாசனைத்திரவியங் களும் வெற்றிலைபாக்கு முதலாயினவும் வைக்குஞ் சாலைகளையும், வஸ்திரா பரணம் பொன்மணி முதலியவற்றைக் கொடுக்குந் தானசாலைகளையும், யாக சாலைகளையும், குண்டங்களையும், வேதிகைகளையும், அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தக்கனுக்கும் ஆசனங்களையும், இன்னும் வேண்டுமவைகளையும் உண்டாக்கி, தக்கனை வணக்கி, ''உன்னுடைய யாக சாலை முற்றுப்பெற்றது. வந்து காண்குதி'' என்றான். தக்கன் அதனைப் போய்ப் பார்த்து, அவன்மீது அன்புசெய்து மகிழ்ந்து, விம்மிதத்தனகி யாகஞ்செய்யத் துணிந்து, தன்மருங்கிலுள்ள முனிவர்கள் பலரை அழைத்து, ''சமித்துக்கள், சாகைகள், இலைகள், பரிதிகள், யூபம், கயிறு, பறப்பை, பசு, தீக்கடைகோல், முதிரைத்தானியங்கள் முதலியனவாக யாகத்துக்குரிய உபகரணங்களைக் கொண்டு வருதிர்'' என்று விரைவில் அனுப்பினன். காம தேனுவையும் சங்கநிதி பதுமநிதிகளையும் சிந்தாமணியையும் ஐந்தருக்களை யும் அழைத்து, ''நம்முடைய யாகத்தைப் பார்க்கும்படி பூவுலகத்திலுள்ள அந்தணர்கள் வருவர். அவர்களுக்கு உணவுகளையும் மற்றைப் பொருள்களை யும் நீங்கள் உதவுங்கள்'' என்று பணித்தான். அவைகள் விடைபெற்றுக் கொண்டு வேண்டும் பொருள்களைக் கொடுக்கும்படி ஏற்ற இடங்கள் தோறும் போயிருந்தன. தன்கிளைஞர்களாய்க் கோபமில்லாத முப்பதினா யிரம் முனிவர்களை ''அன்னத்தையும் பிறவற்றையும் பரிமாறுதிர்'' என்று ஏவினன். அறுபதினாயிரம் முனிவரை ''உணவுப்பொருள் தவிர மற்றும் வேண்டுவன வெல்லாவற்றையும் ஒழிவின்றிக்கொடுங்கள்'' என்றுஏவினன். அதன்பின் தூதுவரை நோக்கி, ''சிவனையொழிந்த தேவர்களையும் முனிவர் களையும் பிராமணர்களையும் திசைகளும் விண்ணுலகமும் பூமியுமாகிய எங் குஞ் சென்று அழைத்துக்கொண்டு வாருங்கள்'' என்று தூண்டினன். முன்னே தக்கனால் அனுப்பப்பட்ட முனிவர்கள் யாகத்துக்கு வேண்டும் உப கரணங்களைக் கொண்டுவந்தார்கள். அத்திரவியங்களைப்பார்த்து, அவற்றை வரிசையாக வைக்கும்படி கூறினன். இருத்துவிக்குக்களிற் பலர் வேதிகை களிலே பல பண்டங்களையும் நிறைத்து, பறப்பையைச் சேர்த்தி, வேதியின் சமீபத்தில் ஓரிடத்திலே யூபங்களை நாட்டி, அவற்றிலே பாசங்களாற் பசு நிரைகளைக் கட்டி, பூசையை முறைப்படி செய்தார்கள்.

தக்கனுடைய யாகசாலையில் இவை நிகழ, அவனுடைய கட்டளை யைத் தலைமேற்றரித்துப்போன தூதுவர்களிற் சிலர் பூவுலகத்திலுள்ள பிரா மணர்களுக்குச் சொன்னார்கள்; சிலர் சூரியசந்திரர்களுக்கும் நஷத்திரங் களுக்கும் கிரகங்களுக்கும் சொன்னார்கள்; சிலர் கந்தர்வர்களுக்குச் சொன்

ஞர்கள்; சிலர் திக்குப்பாலகர்களுக்குச் சொன்னார்கள்; சிலர் இந்திரனுக்குச் சொன்னார்கள்; சிலர் விண்ணுலகத்திலுள்ள தேவர்களுக்குச் சொன்னார்கள்; சிலர் மேலுலகங்களிலுள்ள முனிவர்களுக்குச் சொன்னார்கள்; சிலர் மற்றையிடங்களிலுள்ள முனிவர்களுக்குச் சொன்னார்கள்; சிலர் சத்தியவுலகத்தையடைந்து, பிரமாவினுடைய கோயில் வாயிலிற் போய்க் காவலாளர் உள்ளே விடுப்பச் சென்று அவரை வணங்கி, "சுவாமீ, உமது குமாரனுகிய தக்ஷப்பிரஜாபதியினுடைய யாகத்திற்குத் தேவரீர் வரவேண்டும்" என்று சொன்னார்கள். சிலர் வைகுண்ட வுலகத்தையடைந்து, விட்டுணுவினுடைய கோயில்வாயிலிற்போய், சேனைத் தலைவன் உள்ளே விட விட்டுணுவை வணங்கி, "எம்பெருமானே, தக்ஷப் பிரஜாபதியினுடைய யாகத்துக்கு வரவேண்டும்" என்று சொன்னார்கள். அவர் இருக்கைவிட்டெழுந்து பூமிலக்ஷ்மியும் மகாலக்ஷ்மியும் உடன்வரக் கருடனுடைய தோளின்மேலேறி, சேனைகள் சூழவும் சேஷபதி வணங்கவும் யாகத்துக்குச் சென்றார். பிரமா அதனை அறிந்து. சரசுவதி, காயத்திரி, சாவித்திரி ஆகிய மனைவியர் மூவரோடும் தாமரை யாசனத்தை விட்டெழுந்து, அன்னவாகனத்தின் மேற்கொண்டு, தம்முடைய குமாரர்களும் எல்லையில்லாத முனிவர்களும் துதித்துச் சூழப் போயினர். இந்திரன் ஐராவதயானையின்மேலிவர்ந்து தேவர்கள் சூழத் தனது குரவருடன் அவியை உண்ணும் விருப்பத்தோடு வந்தான். விண்ணுலகிலுள்ள அரம்பை முதலாகிய பெண்கள் தேவர்களோடு வந்தார்கள். ஐராணி தனது நாயகன் யாகத்துக்குச் சென்றான் என்று அரம்பையர்கள் காப்ப வந்தாள். திக்குப்பாலகர்களும், ஆதித்தர் உருத்திரர் வசுக்கள் மருத்துவர் என்னும் நால்வகைத் தேவர்களும், தாரகைகளும் சந்திரனும், கிரகங்களும், இயக்கர்களும், சித்தர்களும், வித்தியாதரர்களும், பிறரும் வந்தார்கள். தக்கனுடைய புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழுபேரும் வந்தார்கள். இவர்களெல்லாருடைய வரவையும் சோணிதபுரத்திலுள்ள அவுணராசன் பார்த்து, அவனும் தன் கிளைஞர்களோடு வந்தான்.

மேற்கூறிய இந்திரன் முதலாகிய தேவர்களும் பிறரும் பிரமவிட்டுணுக்களுக்குப் பக்கத்தில் நெருங்கி, கனகலமென்னும் வனத்திலுள்ள யாகசாலையை அடைதலும், தக்கன் முனிவர்களோடு எதிர்கொண்டு நின்று, அவர்களுள் மேலோராகிய பிரமவிட்டுணுக்களிருவரையும் மிக்க அன்போடும் முறைமுறை தழுவியும், இந்திரன் முதலாயினோரைக் கண்ணுற் பார்த்தும், அவரவர் தாரதம்மியத்துக்கு ஏற்றபடி உபசாரஞ் செய்து யாகசாலையுள் அழைத்துக்கொண்டு போய், பிரமவிட்டுணுக்களை முன்பு இரத்தினாசனங்களிலிருத்தி, இந்திரன் முதலாகிய தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அவரவர்களுக்குத் தக்க ஆசனங்களைக் கொடுத்து, வேதங்கள் தோஷிக்கத் தான் இவர்களெல்லோருக்கும் மத்தியில் இருந்தான், பூமிலக்ஷ்மியும், மகாலக்ஷ்மியும், சரசுவதி காயத்திரி சாவித்திரி என்னும் மூவரும், நக்ஷத்திரங்களும், இந்திராணியும், மற்றைத் தேவமகளிர்களும் வேதவல்லி இருக்குமிடத்தை அடைந்து, தத்தமக்கு ஏற்ற இடங்களில் இருந்தார்கள். பூவுலகத்திலுள்ள பிராமணர்களும் முனிவர்களும் தக்கனுடைய யாகசாலையைத்தேடி, "நல்ல உணவுகளை உண்டு மீள்வோம்" எனக் கருதி, தேவர்கள் இருக்குஞ் சபையை அடைந்தார்

கள். அப்பொழுது, அழைக்கப்போன தூதுவரனைவரும் வந்து தக்கனை வணங்கி நிற்ப, அவன் அவர்களைக் கருணைசெய்து நோக்கி, ''நீவிர் அழைத்தவர்களுள் இங்கு வராமற் பிழைத்தவர்கள் உளரோ? உண்டானால் அவர்களை நமக்குச் சொல்லுங்கள்'' என்றான். அவர்கள் ''அகத்தியர், சனகாதி முனிவர், அத்திரி, வசிட்டர், பிருகு, ததீசி. துர்வாசர், பராசரர் ஆகிய இவர்கள் நீ செய்யும் யாகத்தை இகழ்ந்து இங்கே வருகிலர்போலும்'' என்றார்கள். அதனைத் தக்கன் கேட்டு, ''இத்தன்மையான காரியம் செய்தவர் யார்? முனிவர்களுள் இவர்கள்தாமோ சிவனுக்கன்புடையார்!'' என்று கூறி, தேவர்கள் யாவரும் அஞ்சும்படி கோபத்தோடு உயிர்த்துச் சிரித்தான்.

திருச்சிற்றம்பலம்.

## ததீசிப் படலம்.

அப்பொழுது, ததீசிமுனிவர் முனிவர்களோடு அந்த யாகசாலைக்கு வந்தார். அவரைத் தக்கன் நோக்கி, ''இம்முனிவர் பரமசிவனைச் சார்ந்தவரல்லர்; எனக்கஞ்சி இந்த யாகத்தைப்பார்க்கும் பொருட்டு வந்தார். இது தகும் தகும்!'' என்று தன்னுள் ஆலோசித்துணர்ந்து, மகிழ்ந்து, மனங்குளிர்ந்து, ''ஈண்டு வருக; வருக'' என்று உபசாரங் கூறி, அவருக்கு ஒரு பெரிய ஆசனம் இட்டான். அவர் இருமருங்கும் முனிவர்களிருக்க அவ்வாசனத்தின்மீது வீற்றிருந்து, தன்னுடைய ஆக்கங்களை இழக்கின்ற தக்கனை நோக்கி, ''நீ இங்கே எம்மை அழைத்ததென்னை? முயன்ற கருமமென்னை? இவைகளெல்லாவற்றையும் விரைந்து ஒன்றும் ஒழியாமற் சொல்லுதி'' என்றார். தக்கன் ததீசி முனிவரை நோக்கி, ''சிவன் ஒருநாள் என்மகளை மிகுந்த ஆசையோடு வந்து மணஞ்செய்து, மறைந்து போய், பின்னொருநாள் வந்து அவளை இடபத்தின்மேல் ஏற்றிக்கொண்டு கைலாசத்துக்குப் போயினன். போயின பின்பு, அவளுக்குப் பெரிய மாயத்தைச் செய்தான். அந்தச் சிவனையும் உமையையும் பார்க்கும்படி நான் கைலாசத்துக்குப் போயினேன். அவ்விருவரும் அதனையறிந்து, பூதர்களை அழைத்து, 'தக்கனை நம்முன் வரவிடாமல் விலக்குங்கள்' என்று கட்டளையிட்டார்கள்போலும். நான் இதனை அறியேனுய் அங்குச் சென்றேன். பூதர்கள் என்னை உள்ளே புகவொட்டாது, 'இங்கே நில்' என்று தடுத்து எண்ணில்லாத நிந்தனைகளைச் சொன்னார்கள். நான் அப்பொழுதே கைலாசமலையை நீங்கி எனது நகரை அடைந்தேன். நான் கைலாசத்துக்குப் போய்த் திரும்பிய பொழுது, அங்கே எனது மகளும் என்னை வந்து கண்டிலள். அவள் என்செய்வாள்? அந்தச் சிவனுடைய மாயையால் எல்லாப் பெருமையையும் நீங்கிவிட்டாள். இப்படியிருக்குங் காலத்தில், என்பிதாவாகிய பிரமதேவர் ஒரு யாகத்தைச் செய்தார். நான் அங்கே சென்று சிவனுக்கு முன்னிருட்டுக் கொடுத்து வந்த அவிப்பாகத்தைத் தடுத்தேன். அப்பொழுது நந்திவந்து சாபஞ்சொல்லிப் போயினன். மிருதங்கம் அடித்தலாகிய அற்பத்தொழிலைச் செய்யும் நந்தி சொல்லிய சாபத்துக்குப் பயந்து பிரமா யாகத்தை முற்றுவியாது குறையில் விட்டுவிட்டார். நந்தி கூறிய சாபத்தையும் என்னுடைய

விரதத்தையும் தெரிந்து அஞ்சி, இற்றைநாள்வரையும் ஒருவரும் யாகஞ் செய்தலை மனத்திலும் நினையாராயினர். அதனை யானறிந்து, பிச்சையேற் கின்ற அந்தச் சிவனுக்குரிய அவியை மாற்றுதற்காகவே ஒரு யாகத்தை நடத்துகின்றேன்; பிறிதொரு பிரயோசனத்தையும் விரும்பினேனல்லேன். அந்த யாகத்திற்காகத் தேவர்களும் முனிவர்களும் மற்றை யாவர்களும் வந்து நெருங்கினர்கள். முனிசிரேட்டரே உமக்கும் இதனைச் சொல்லியனுப் பினேன். இதுவே என் செயல்'' என்று கூறினன்.

தண்ணளியையுடைய ததீசிமுனிவர் தக்கன் கூறியவற்றைக் கேட்டு, ''பொருளால் யாதோர் புண்ணியப்பயனுமில்லை. அதனால் அடையற்பாலது பாவமே'' என்று எண்ணி, ''அப்பாவங்களையே செய்கின்ற ஒரு கீழ்மகனு டைய இயற்கைபோன்றிருந்தது இந்தத் தக்ஷப்பிரஜாபதியினுடைய செய லும்'' என்று நினைத்து, பற்கள் தோன்றச் சிரித்தார். சிரித்தபொழுது, தக் கன் ஊழிக்காற்றினால் கிளர்ந்தெழுகின்ற வடவாமுகாக்கினிபோல வெய் துயிர்த்து உரப்பிச்சிறி, ''நீ சிவனடியான் போலும்; ஆதலாற்றான் என்னைச் சிரித்திகழ்ந்தாய்'' என்றான். அதனைக்கேட்ட ததீசிமுனிவர் கூறுவார்: ''பிரம விட்டுணு முதலாகிய அளவில்லாத உயிர்களை முன்னளித்த தந்த பரமபிதாவாய் அவைகளையெல்லாம் காத்தழித்து. உலகெலாமாகி நிற்ற லால் ஒன்றாயும் (அபேதமாயும்), உலகுக்கு மேலாய் நிற்றலால் வேறாயும் (பேதமாயும்), உயிர்க்குயிராய் நிற்றலால் உடனாயும் (பேதாபேதமாயும்), விளங்காநின்ற பரமசிவனை நீக்கியோ, தக்கனே, நீ யாகமொன்று செய்ய நின்றாய்? 'தேவர்கள் யாவருக்கும் கொடுக்கும் அவிப்பாகங்களை ஏற்றுக் கொள்பவரும், அக்கினிக்கு முதல்வரும், யாகாதிபரும், யாகரக்ஷகரும் சிவ பெருமானே' என்று வேதங்கள் சொல்லும்.யாகத்துக்கு முதல்வராக இங்கே வேறு ஒரு தேவர் உளராஞல், அவரையழைக என்றுசொல்லுதி. பிரமவிஷ்ணு முதலிய தேவர்களுக்கு அளவிறந்த இச்செல்வங்களையெல்லாம் முன்னளிலே கொடுத்தவரும், அநாதிமலமுத்தரும், இவர்களுக்கெல்லாம் மூலகாரண ரும், இவர்களுக்குப்போலத் தமக்கு மற்றோர் மூலகாரணமில்லாதவரும், நமது கடவுளாகிய சிவபெருமானன்றித் தேவர்களில் யாவருளர்! 'தேவ தேவன், மகாதேவன், ஈசன், நமது நாயகன், மும்மூர்த்திகளுக்கும் முதல் வன், ஏகன், பிந்துவனவெல்லாம் தமக்கு முந்தத் தாம் பிந்துபவன், சர் வாந்தரியாமி, அந்தணன், ஆதி' என்று எல்லையில்லாத வேதங்களெல்லாம் வேறு யாரைத் துதித்தன? பிரமா முதலிய யாவரும் பசுக்கள். சிவபெரு மான் ஒருவரே பதி. இத்தேவர்களெல்லாரும் அவருடைய பணியையே வகித்தார்கள். இதுவும் அவ்வேதவாக்கே. நீ இவற்றையெல்லாம் அயர்த்து, வாளா மதிமயங்கி, மாயத்திலழுந்துகின்றாய். 'அந்தணர்க்குக் கடவுள் சிவ பெருமான்; மற்றையரசர் வணிகர் சூத்திரருக்குக் கடவுள் முறையே விட் டுணுவும் பிரமாவும் இந்திரனும்' என்று வேதங்கள் சொல்லின. இங்ஙன மாக, அந்தணர்கள் தங்கள் கடவுளாகிய சிவபெருமானை விடுத்து, முறை தப்பிப் பிறரைக் கடவுளராகக் கொண்டொழுகுதல், தன்னைப்பெற்ற தந்தையைத் தந்தையல்லன் என்று விலக்கி, வேறு தந்தையைத் தேடுவான் றன்மையல்லவா! ஆதலினாலே, தக்கனே அவர்க்கெல்லாம் மேலாகிய பரம சிவனை நீ இகழ்ந்து நிற்றல் உன்னுடைய அறியாமையன்றி, உனக்கு இஃ தொரு பெருமிதமன்று. மிகவும் துன்பப்படவேண்டுமென்று விரும்பி, யார்

தாந் தவஞ்செய்வார்கள்? அவ்வியல்பினன் நீயே. வேதாசாரத்தை நீக்கி நீ இவ்வேள்வியைச் செய்ய முயன்றாய். அங்ஙனஞ் செய்யினும் அது முடிவு பெறுது? சிவாஞ்ஞை வந்து இதனைக் கலக்கிவிடும். அதனைக் காணுதி. அக் கடவுளுக்கஞ்சாத வலியுடையவர் யாவரேனும் உளராயின் அவர் இறப்பர். வேதமும் அவரைச் 'சூலபாணியாகிய ஏகன்' என்று துதித்தது. உற்பத்தியும் நாசமும் இல்லாத சிவபெருமானுக்கு அவிப்பாகத்தைக் கொடுத்து, வேதா சாரந் தவறுது யாகஞ்செய்ய நினைக்கின்றிலை. தக்கனே, உன்னெண்ணந் தியது'' என்று ததீசிமுனிவர் கூறினர். தக்கன், ''சிவனுக்குக் கொடுக்கும் அவியை விட்டுணுவுக்குக் கொடுத்து யாகத்தைப் புரிவேன்'' என்றான். அவ் வுரையைத் ததிசிமுனிவர் கேட்டு, ''தக்கனே, நீ சொன்ன வார்த்தை குற் றம். யாவரும் மேலாகச் சொல்லுகின்ற பெரியோரை விட்டுச் சிறியோரை உயர்த்துதல் உய்யும் வகையன்று. இது நும்மவர்களுடைய உயிர்க்கெல்லாம் முடிவுக்கேதுவாகும்'' என்றார். அதற்குத் தக்கன், ''உம்முடைய உருத்திர ரைப் போலப் பதினோர் உருத்திரர் உளர்; வடகீழ்த்திசையில் ஈசான உருத் திரர் உளர். அவர்களுக்கே முன்பு அவிப்பாகத்தைக் கொடுத்து வேள்வியை முடிப்பேன்'' என்றான். அதற்குத் ததிசிமுனிவர் சொல்வார்: ''உலகங்க ளெல்லாவற்றையுஞ் சங்கரித்துத் தன்னுள் ஒடுக்கிப் பின்னும் அவற்றை யெல்லாந் தாதையாய்த் தந்து எவரும் நினைத்தற்குமரிய தன்மையோடிருக் கும் மகாவுருத்திரமூர்த்திக் கொப்பாவாரோ, அவருடைய திருவருளால் அவர் வடிவத்தையும் பேரையும் பெற்ற இந்த உருத்திரர்கள்? யாம் கூறிய உருத்திரமூர்த்தியென்பவர் உயர்ந்த பரம்பொருளாயுள்ளார். உயிர்க் குயிராய் நிருத்தஞ் செய்கின்ற நித்தியர். அவருடைய திருவடிகளைத் தியா னித்தோர் அவருடைய திருமேனியையும் திருநாமந்தையுந் தாங்குவர். அவர்களுடைய தொகை அளவுபடாது. சிவபிரானுக்குரிய உருத்திரர் என் னும் நாமத்தைப் பெற்றவர், அப்பெயர்மாத்திரத்தால் அவருடைய இயல் பைப் பொருந்தார். அவருடைய வடிவமும் அவ்வாறே சிவசொரூபமாகாது. ஆயினும்,அவர் பூவுலகத்தாரும் வானுலகத்தாரும் கடவுளரென்றே போற்ற இருபபர்; பிரமாவும் புகழுந் தன்மையுடைய பரமாப்தர்களாயிருப்பர்; அளவில்லாத காலம் சிந்தையின்கண்ணே சிவபெருமானை நினைத்துத் தவஞ் செய்து அவருடைய சாரூபத்தைப் பெற்ற அடியார்களைப் போல்வர். இந்த உருத்திரர்கள் இந்திரன் முதலிய தேவர்களைப்போல இங்கே வரத்தகார். அவர் நீ சிவபெருமானிடத்து அன்பில்லாத தன்மையை நினைத்திலர் போலும்'' என்றார். அதனைக்கேட்ட தக்கன், ''இது நன்று! நன்று! சிருட்டி திதிகளைச் செய்யும் பிரம விட்டுணுக்கள் முதற்கடவுளரல்லராக, சங்காரத் தைச் செய்யும் உருத்திரன் மாத்திரம் முதற்கடவுளாய் நின்றதென்னை? சொல்லும்'' என்றான். பரமபதியாகிய சிவபெருமானுடைய இரண்டு திரு வடிகளையும் தியானித்துச் சிவஞானத்திற் சிறந்தவராகிய ததிசிமுனிவர் கூறுவார்:

''தக்ஷப்பிரசாபதியே, பிரம விட்டுணுக்களோடு ஒருங்கெண்ணப் பட்டமையால் நமது முதற்கடவுளாகிய உருத்திரமூர்த்தியைப் பெரியவ ரென்று கடைப்பிடித்தாயில்லை. அதனையும் தெரியச் சொல்வேன்; கேட் டுத் தெளி. ஆதியந்தமில்லாத நமது கடவுளுக்கு, நாமமும் உருவமுஞ் செயலுமில்லை. அதனை வேதங்கள் யாவும் அறுதியிட்டுச் சொல்லும். அக்

கடவுள் அநாதியே ஆணவமலத்தாற் கட்டுண்ட ஆன்மாக்களுடைய வினைகளை நீக்கவேண்டும் என்று தமது திருவுளத்தில் முகிழ்த்த பெருங் கருணையினாலே பேரையும் உருவையுஞ் செயலையுந் தமது சிற்சத்தியினாற் கொண்டு, கலாதித்துவவாயிலாக அவ்வுயிர்களின் இச்சாஞானகிரியைகளை விளக்கி, பிரமாமுதலிய தேவர்கள் யாவரையும் முன்போல உண்டாக்கி, அவரவர்களுக்கேற்ற சிருட்டி முதலிய தொழில்களைக் கொடுத்து, அவற்றை நடாத்து முறைகளையும் உபதேசித்து, பின்பு சங்காரகிருத்தியம் 'நமக்கேயாகும்' என்று கூறி அதனைத் தாம் வகித்தார். அஃது எதனாலெனின், அந்தமாதிரியின்றி உயிர்களெல்லாவற்றையும் இரக்ஷிக்கும் பரமபிதாவாகிய தம்மாலன்றி தமது மைந்தர்களாகிய தேவர்களால் அந்தச் சர்வசங்காரப் பெருந்தகைமைச் செயல் முடிவுறுமையினாலேயாம். அந்நாளிலே தேவர்கள் யாவரும் எம்பெருமானுடைய திருவடிகளில் வணங்கி, 'எமக்குச் சிருட்டி முதலிய தொழில்களைத் தந்தீர். நாம் அவற்றைப் பரித்தற்கேற்ற வலியிலேம். இப்பாரம் எங்களை விட்டெப்பொழுது திரும்?' என்றார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கி, 'நாம் ஒன்று சொல்லுகின்றேம் கேண்மின். உங்கள் வாழ்நாளெல்லாவரையும் நீவிர் இச்செயல்களைச் செய்மின். இச்செயல்களைப் பாரம் என்று எண்ணினீர்கள். சிரௌத பாசுபத வித்தியாப்பிரகாரம் விபூதியையுண்டாக்கித் தொழுது அதனை உடம்பிலணிந்து, மனத்திற் பஞ்சாக்ஷரத்தை உன்னுதிர். இவைகளைச் செய்வீராயின், இத்தொழில்களைத் தாங்கும் வன்மையையடைவீர். அன்றியும், நும்மாட்டு முன்னமேயுள்ள நம்முடைய கலைகள் நீவிர் அறியாதனவற்றைக் காட்டிநின்றருளும்; அழியாத நன்மையைப் பெறுவீர்' என்றருள்செய்தார். இவ்வாறு அந்தத் தேவர்களைக் கொண்டே மற்றைக் கிருத்தியங்களெல்லாவற்றையுஞ் செய்வித்து, தாம் இறுதியதாகிய சங்காரகிருத்தியத்தைச் செய்வார். அந்தக் கடவுளையே வேதங்கள் பஞ்சகிருத்திய கர்த்தா என்று கூறும். இதனை அறிகுதி. தக்கனே, இன்னுங் கேள். உருத்திரர் என்னும் நாமம் துரிய பரப்பிரமமகா உருத்திரருக்கும், அவர் குமாரர்களுக்கும், அவரைத் தியானிக்கும் கணங்களுக்கும், அவர் திருமேனியைத் தரித்த காலாக்கினிருத்திரர் முதலியோர்க்கும் அக்கினிதேவனுக்குஞ் செல்லும். ஜனனசாகரத்திற் பட்டோர்களுடைய கவலைகளை உருக்கி ஒழித்து அவர்களை உயர்த்திவிடலாற் சிவபிரானுக்கு உருத்திரர் என்னும் நாமம் எய்திற்று. இங்ஙனம் அவரது திருநாமம் அவர் குமாரர்களுக்கும், அவர் திருவடிகளை அடைந்த அன்பர்களுக்கும், அவர் சாரூப்பியமுற்றோர்க்கும் எய்திற்று. அக்கினி தேவனுக்கு உருத்திரன் என்னும் பெயர் எய்திய காரணத்தைச் சொல்வேன் கேட்குதி. முன்னொரு காலத்திலே தேவர்கள் யாவரும் அவுணர்கண்மீது முனிந்து போர்புரிய முயன்று செல்லுங்கால், அவர்கள் தம்க்கு வாய்த்த பெருநிதியைப் பாதுகாக்குமாறு அக்கினிதேவனிடத்து வைத்துப்போய்ப் பகைவரோடு யுத்தஞ்செய்து மீண்டு வந்து அந்த நிதியைக் கேட்க, அக்கினி அதனை அபகரித்துக்கொண்டு கொடாது ஒடினன். தேவர்கள் அவனைத் தொடர்ந்து சூழ்ந்து வலிசெய்யலுற்ற போது, அவ்வக்கினிதேவன் ரோதனஞ் செய்தான். அதனால் அவனுக்கு உருத்திரன் என்னும் பெயர் எய்திற்று என்று சுருதி கூறுகின்றது. வேதங்களிலே உருத்திரன் என்னும் பெயரால் தாழ்ந்தவராகிய மற்றையோர்

களைக் கூறினமை, துரிய உருத்திரரைச் சாராது; அங்ஙனம் ஆதிநாயக ராகிய இத்துரிய உருத்திரரைச் சுட்டி உரைத்த உருத்திரநாமமும் ஏனை யோர்க்குச் செல்லாது. இவ்வேற்றுமையை மேதாவியர் உணர்வர். வேதங் களில் உருத்திரன் என்னும் நாமத்தினால் அக்கினித்தேவனையும் பிறரை யுங் கூறியவாற்றை இங்கே எடுத்துச் சொல்லாதே; சிவபெருமானுக்குச் சொல்லிய இடங்களை ஆராய்ந்து அவருடைய தலைமையைக் காணுதி. இன்னுமொன்று சொல்லுகின்றேன், தக்கனே கேள்.

''முன்னொருகாலத்திலே, முனிவர்கள் யாவரும் உற்பத்தி நாசமில் லாத பரம்பொருள் இவரென்றும் அவரென்றும் தங்களுள் வாதஞ் செய்து, அறிய முடியாமல் வருந்தி, பிரமாவை விண்ணுவோம் என்று கூறி, மேருவினுச்சியிலுள்ள மனோவதி நகரிலிருக்கும் பிரமாவையணுகி, 'பரம்பொருள் யாவரென்றறியேம். நமக்கதனைச் சொல்லியருளும்' என்று வேண்டினர்கள். பிரமா அதனைக் கேட்டு, 'வேதவசனங்களை எடுத்துக் காட்டி இவர்கள் தெளிவுறும்படி நாம் போதித்தாலும் தெளிவடையார். வேறேர் உண்மையுபாயத்தால் இவர்களுக்குத் தெரிவிப்போம்' என் றெண்ணி, இருக்கைவிட்டெழுந்து, சிவபெருமானுடைய சொரூபத்தைத் தியானஞ்செய்து, கண்கள் ஆனந்த பாஷ்பஞ் சொரியவும் மெய்ம்மயிர் பொடிப்பவும் நெருப்பிற்பட்ட நெய்போல மனமுருகவும் கைகளுயர்த்தி, முழுமுதற்கடவுள் சங்கரனே என மும்முறை சத்தியஞ்செய்து, உயர்த்திய கைகளை மீட்டு, முனிவர்களை நோக்கிச் சொல்வார். 'முனிவர்களே, வாருங்கள். உமக்கொன்று சொல்வேன்; கேளுங்கள்; தேவர்களையும் எங் களையும் உண்டுபண்ணினவரும், வேதங்களைத் தந்தவரும், யாவர்க்கும் அவ ரவர்க்குரிய பணிகளையுதவினவரும், சிருட்டி முதலிய முத்தொழில்களை யும் நமக்குக் கற்பித்தவரும், ஆன்மாக்கண்மீது வைத்த அளவு கடந்த திருவருளினால் ஐந்தொழில்களைச் செய்பவரும், அநாதிகடவுளும், நிமல ரும், காரணங்களுக்குக் காரணமாய பகவானும், ஒருவர்மாட்டும் பிற வாதவரும், அருவமும் உருவமும் அருவுருவமுமாயிருக்கும் அகண்டாகார நித்தவியாபகரும், யாவர்க்கும் ஈசரும், எல்லாமானவரும், சேதனப்பிர பஞ்ச முடிவிற்கும் அசேதனப் பிரபஞ்ச முடிவிற்கும் முடிவாயுள்ளவரும், என்றுமுள்ளவரும், அனேத்தையுமுடையவரும், என்னாற் சொல்லுதற்கரிய கீர்த்தியையுடையவரும், தம்முடைய திருவடிகளையடைந்தஞானிகளுக்கன்றி அறியவொண்ணுத பழமையையுடையவரும் ஆகிய அந்தச் சிவபெரு மானே பரம்பொருள் என்று வேதங்கள் யாவும் எடுத்துச் சொல்லும். விட்டுணுவும் யானும் இன்னும் அவருடைய நிலையை உன்னி ஆராய்ந் தும் காண்கிலம். அவரேபதி. மற்றையோர் பசுக்கள்' என்று கூறி, சிவ பெருமானுடைய திருவடிகளை வணங்கி, பிரமா இருந்தார். முனிவர்கள் அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞானம் உதிக்கப்பெற்று, மகிழ்ச்சியடைந்து பிரமாவை நோக்கி, 'சுவாமீ, தாதையாய் நீர் எங்களைப் பெற்றீர். யாங்கள் உம்முடைய புத்திரர்கள். ஆதலால் எங்களுக்கு இவ்வுண்மையை உபதேசித்தீர். இந்தக்காரணத்தினால் நீர் எங்களுக்கு ஆசாரியரும் ஆயி னீர்' என்று அவருடைய பாததாமரைகளை வணங்கினர்கள். அவர்களைப் பிரமா பார்த்து, 'நீவிர் இறுதிதொட்டுப் பரமசிவனுடைய திருவுரு வையே தியானஞ்செய்குதிர்; அவரையே பூசனை செய்குதிர்; விபூதியைத்

தரித்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபிக்குதிர்; பிறவியை நீங்குதிர்' என்று கூறி விடைகொடுத்தனுப்பினர். ஆதலால், எங்கள் சிவபெருமான் ஒருவரே பதிப்பொருள். அவரல்லாத பிறரெல்லாம் பசுக்களாகும். இதனை அக்கடவுளின் மேற்கொண்ட காதலாற் சொன்னேனல்லேன். இது சத்தியமே. இதனை வேதமுதலிய கலைகளெல்லாம் சொல்லும். அன்றியும், உன் பிதாவாகிய பிரமதேவர் முன்னே சிவபெருமானுடைய புகழ் எல்லாவற்றையும் ஐயந்திரிபற உனக்குப் போதித்துள்ளார். நீ அதனை அறிந்தே சிவபெருமானை நோக்கி நெடுநாட்டவஞ்செய்து இவ்வளத்தைப் பெற்றாய். உனக்கு அழியுங்காலம் வந்தமையால் நீ அதனை மறந்தாய் போலும். பிரமா முதலிய யாவரும் இறக்குமியல்பினராய் வந்து உன் சபையிலிருந்தார். நீ மாயையினால் மருண்டாய். உய்யும்படி நினைத்தாயாயின், சிவபெருமானுக்கு அவியைக் கொடுத்து இந்தப் பெரிய யாகத்தைச் செய்குதி'' என்று ததீசிமகாமுனிவர் கூறினர்.

திருச்சிற்றம்பலம்.

## ததீசியுத்தரப்படலம்.

இவ்வண்ணம் ததீசி மகாமுனிவர் சொல்ல, தக்கன் நகைசெய்து, ''முனிவரே, பரம்பொருளாகிய கடவுள் எலும்பையும் சிரமாலையையும் அணிவரோ? தேவர்களுடைய வெந்த சாம்பலைப் பூசுவரோ? கங்காளத்தை ஏந்தித்திரிவரோ? கனைந்த கேசத்தைத் தரிப்பரோ? பன்றிக்கோட்டையும் ஆமையோட்டையும் அணிவரோ? உயிர்களைச் சங்கரிப்பரோ? புலித்தோலை உடுப்பரோ? யானைத்தோலைப் போர்ப்பரோ? அக்கினி, மழு, மான், முத்தலைச்சூலம் ஆகிய இவைகளை ஏந்துவாரோ? எங்கும் பிச்சையேற்பாரோ? கூத்தாடுவாரோ? பூதசேனை சூழத் திரிவாரோ? பாம்புகளைப் பூண்பாரோ? வெண்டலையைத் தலையில் அணிவாரோ? திருவாணியாவாரோ? பலவேறுருவங்களைக் கொள்வாரோ? ரிஷபத்தில் ஏறுவாரோ? நஞ்சை உண்ணுவாரோ? சுடலையில் ஆடுவாரோ? ஒரு பெண்ணைத் தலையிற் சுமந்து மற்றொரு பெண்ணைப் பக்கத்திலிருத்துவாரோ? பிள்ளையைப் பெறுவாரோ? தாமதகுணத்தைப் பொருந்துவாரோ? உங்கள் கடவுளாகிய சிவன் ஒரு நற்குணமும் இல்லாதவர். ஆதலால் அவருக்கு யாம் செய்கின்ற யாகத்தில் அவிப்பாகத்தைக் கொடுப்பதில்லை'' என்று கூறினன்.

ததீசிமுனிவர் ''நமதுகடவுளையா இவன் பழிப்பான்?'' என்றுசிரித்து, அக்கினிபோலக் கொதித்து, ''இப்பதகன் மலரகிதராகிய பரமசிவனுடைய உண்மைத் தன்மைகளை அறியவல்லனல்லன். இவனோடு சிறிதும் வார்த்தை கூறுதல் தகாது. ஆயினும், பிரமவிட்டுணு முதலாகிய தேவர்கள் குழுமிய சபையில் எம்பெருமானை இகழ்ந்த இவனுக்கு மறுமொழி சொல்லும் படி என்மனம் என்னை ஈர்க்கின்றது. ஆதலால் இவன் விளைய விளைக்களுக்குஞ் சிலவிடைகள் சொல்லுவேன்'' என்று அதற்கொருப்பட்டு, ''புத்தியில்லாத சுயவனே, எம்பெருமானுக்கு இங்கே நீ நிந்தைபோலச் சிலவற்றைச் சொன்னாய். நிருமலராகிய அக்கடவுளுக்கு அவைகள் வந்தவாற்றை ஒரு சிறிதும் உணர்ந்திலை; மருண்டாய். நான் சொல்வதைக்கேள். தம்முடைய திரு

வருளே திருமேனியாகக் கொண்ட சிவபெருமான் பிரம விட்டுணுக்களை முன்னே தந்து, தாம் அவர்களை அதிட்டித்து நின்று, முறையே உயிர்களைப் படைத்தல் காத்தல்களைச் செய்து அவ்வுயிர்களுக்கு வினைப்பயன்களை நுகர்வித்து, அவற்றுள் இருவினையொப்பு மலபரிபாகம் வரப்பெற்ற ஆன்மாக்களை மோக்ஷமடையச் செய்து, மற்றைய உயிர்களையும் உலகங்களையும் பின்னர்ச் சங்கரித்து, அதன்பின் பிரமவிட்டுணுக்களை ஒடுக்கி, தாம் முன்போல ஏகமாயிருப்பர். அதன்பின்னும் என்றும் இவ்வாறே பஞ்சகிருத்தியத்தைச் செய்தருளுவர். சிவபெருமான் இவ்வாறு சங்காரகிருத்தியங்களைச் செய்யுந் தோறும் ஒடுங்கிய பிரமா முதலிய பல தேவர்களுடைய எலும்புகளைத் தரிப்பர்; அவர்களுடைய சிரங்களெல்லாவற்றையுந் தொடுத்து மாலையாகப் பூண்பர்; அவர்களுடைய சிகைகளைத் தமது திருமார்பிலே பூணூலாக அணிவர்; இவ்வாறு செய்வதன்றி அவர்களை முத்தலைச் சூலத்திற் கோத்து ஏந்து தலுஞ் செய்வர்; அவர்களை நெற்றிக்கண்ணாற் சாம்பராக்கி அச்சாம்பரைத் திருமேனியில் பூசுதலுஞ் செய்வர். சிவன் இப்படியெல்லாம் செய்தல் அத் தேவர்கள் முன்னே மகாதவங்களைச் செய்தமையாலேயாம்; அன்றி, தம்மை யாவரும் புகழ்தற்கன்று. இதுவன்றி இவ்வாறு செய்தற்கு இன்னுமொரு காரணமுளது. அது யாதெனின், யாவரும் எவர்க்குந் தலைவர் இவரே என் றறிந்து தம்மையடைந்து பாவங்களை நீங்கி மோக்ஷத்தைப் பெற்று உய்தல் வேண்டுமென்னும் அருளேயாம். எலும்பு, சாம்பல், கங்காளம், சிகை, தலை ஆகிய இவைகளைச் சிவபெருமான் முன்னுளில் அணிந்தமை அவர் எல்லா வுயிர்கள் மாட்டும் வைத்த திருவருட்செயலாம் என்று நீ அறிகுதி. அகந்தை மிக்க தக்கனை, அக்கடவுள் பன்றிக்கோட்டைத் தரித்த காரணத்தையுஞ் சொல்லுவேன், கேள்.

"தேவர்கள் யாவருக்கும் நாடோறும் துன்பத்தையே செய்துகொண் டிருந்த இரணியாக்ஷனென்னும் அசுரன் முன்னோர்நாள், பூமியைக் கவர்ந்து கொண்டு வயிற்றில் மறைத்து, உலகமெல்லாம் நடுங்கும்படி பிலத்திற்புகுந் தான். தேவர்கள் அதனைக்கண்டு அஞ்சினர். விட்டுணு பிரமாவினுடைய நாசியில் ஒரு பன்றியாய்யுதித்து, ஆகாயத்திற்போய், மேருமலைபோல வளர்ந்து, ஆரவாரித்து. நொடிப்பொழுதிற் பாதலத்திற் புகுந்து கொம் பினற்பாய்ந்து இரணியாக்களைக் கொன்று. பூமியைக் கொண்டுவந்து முன் போலவே நிலைபெறச்செய்து, அந்த வீரதிருலை தன்னையே பரமென்று மிக வும் மதித்து, அகந்தையுற்று, அறிவிழந்து, பூமிமுழுதையும் கோட்டினு லிடந்து, சமுத்திரத்தையும் உடைத்தார். அப்பொழுது, சிவபெருமான் அதனைக் கண்ணுற்று, அங்கு வந்து, அவருடைய கோட்டில் ஒன்றைத் தமது திருக்கரத்தாற் பிடுங்கினர். அப்போது விட்டுணு முன்னைஉணர்வு வரப்பெற்று, 'சிவபெருமான் இனி என்னுடைய மற்றைக் கொம்பையும் பிடுங்குவார்' என்று அஞ்சி, முன்னைபுருவங்கொண்டு நின்று துதித்தார். சிவபெருமான் மறைந்தருளினர். அக்கடவுள் அன்றைக்குப் பறித்த பன் றிக்கோட்டை அடையாளமாக அணிந்தார். அது இன்றைக்கும் அவரு டைய திருமார்பிற் பிறைபோல விளங்கும். இதனைக் கேட்டாய். இனி ஆமையோட்டைத் தரித்த கதையையுஞ் சொல்லுவோம்; நன்முய் ஆராய்ந்து அறி. இதனை வேதங்களும் சொல்லும். மூன்றைரு காலத் திலே தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது,

மத்தாகிய மந்தரமலை கவிழ, விட்டுணு ஆமையாய், அக்கடலுட்போய், முதுகினுல் அம்மலையைத் தாங்கினர். பின்பு கடைந்தார்கள். பாற்கடலில் அமிர்தம் எழுந்தது. அதனைத் தேவர்களும் அசுரர்களும் கண்டு, 'இது நமது; இது நமது' என்று அவ்வமிர்தத்தின்மேல் வைத்த ஆசையாற் போர் செய்தார்கள். விட்டுணு அப்போரை விலக்காமல், 'இந்த மந்தரமலையைப் ப ா ற் க ட லி ல் ஆழாமல் நிறுத்தி நாமே காத்தோம்' என்று பெரிதும் நினைத்தார். அதனுல் அவருள்ளத்திலே பெரியதோர் அகந்தை உண்டாதலும், ஒன்றுமறியராய், சமுத்திரங்களிற் போய் அவைகளை எத்திசைகளிலும் உழக்கித் திரிந்தார். அதனுற் பூமிக்கு அழிவுண்டாயது. அப்பொழுது சிவபெருமான் 'விட்டுணு தனது காவற்றொழிலை நீங்கினன்போலும், என்று திருவுளஞ்செய்து, விரைவிற் போய், ஆமையினுருவை நோக்கி முனிந்து, தமது திருக்கரத்தாற் பற்றி, விட்டுணுவினுடைய அகந்தையையும் வலிமையையும் பறித்தார். அவர் அகந்தை நீங்கிப் பழைய வடிவங்கொண்டு துதிக்க, பரமசிவன் 'அவுணரைத் தவிர்த்துத் தேவர்களுக்கு அமிர்தத்தை கொடுக்குதி' என்று கூறிமறைந்தார். விட்டுணு மோகினிவடிவமெடுத்து, மாயையினுல் அவுணர்களைக் கொன்று, தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தார். அந்த விட்டுணுவாகிய ஆமையின் ஓட்டைச் சிவபெருமான் வாங்கி, முன்னே அணிந்தபன்றிக்கோட்டுடன் சாத்தியருளினர். பன்றிக்கொம்பையும் ஆமையோட்டையும் சிவபெருமான் அணிந்த கதையைச் சொன்னேம். இனி அவர் தாருகாவனத்திலே பிக்ஷைக்குச் சென்றதையும் அங்கு நிகழ்ந்தவற்றையும் கூறுவோம். நீ அறியக்கடவாய்.

"முன்னெருகாலத்திலே, தாருகாவனத்திலுள்ள முனிவர்கள் யாவரும் சிவபெருமானிடத்தில் அன்பிலராய், கருமமாத்திரமே மோக்ஷத்தைத் தரவல்லதென்று, அவரை மறந்து, ஒரு கடவுளின்றித் தாமே முத்தியடையலாமென்று நினைத்து, உடம்பு துன்புற அளவில்லாத தவங்களையும் யாகங்களையும் செய்து துணிவோடொழுகுவாராயினர். திருக்கைலாசமலையில் உமாசமேதராய் வீற்றிருக்குஞ் சிவபெருமான் அதனை அறிந்து, அங்கே விட்டுணுவை வரும்வண்ணம் நினைக்க, அவர் அதனை உணர்ந்து, 'எம்பெருமான் என்னையும் தம்மிடத்து வரும்படி பணித்தார்' என்றுட்கொண்டு, அங்கே வந்து, நந்திதேவர் உள்ளே விடுப்பக் கோயிலுட் புகுந்து. சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, அவருடைய சந்நிதானத்தில் நின்றார். சிவபெருமான். தாம் திருவுள்ளத்துட் கொண்டவற்றை அவருக்குக் குறிப்பாலுணர்த்தி, திவ்விய சிங்காசனத்தினின்று மெழுந்து, அவருடைய கைகளைப் பற்றிக்கொண்டு கைலாசமலையை நீங்கி, 'விட்டுணுவே நீ முன்னெரு காலத்திற் கொண்ட மோகினி வடிவை எடுக்குதி' என்றார். விட்டுணு நன்றென்று, மிகுந்த அழகிற் சிறந்த ஒரு பெண் வடிவையெடுத்து, மருங்கில் வந்தார். அப்பொழுது சிவபெருமான், உமாதேவியார் காணினும் தளர்ந்து வீழும்படி தாமும் அளவில்லாத அழகு பொருந்திய ஓர் ஆணுருவை எடுத்துச் சென்றார். அவருடைய திருவுருவத்தின் றன்மையை யாவர் புகழ்ந்து சொல்ல வல்லார்? மோகினி வடிவங்கொண்ட விட்டுணு சிவபெருமானுடைய திருமேனியின் அழகு முழுவதையுங் கண்களாற் பருகி ஆசை மிகப்பெற்று, அதனை அக் கடவுளுடைய திருவருளினுல் ஒரு

வாறு சகித்து, அவருக்குப் பக்கத்தில் வந்தார். சிவபெருமான் நிருவ்ாணி யாகி, முத்தலைச் சூலத்தையும் பிக்ஷாபாத்திரத்தையும் திருக்கரங்களி லேந்திக்கொண்டு, மோகினிவடிவங் கொண்ட விட்டுணு பக்கத்தில் வர முனிவர்களிருக்கின்ற தாருகாவனத்திற்போய், 'நீ நம்மை யெண்ணுது வாழும் இந்த முனிவர்கள் குழுமியிருக்கின்ற இடங்களிற் சென்று அவர் களுக்கு மிக்க மோகத்தைச்செய்து அவர்கள் விரதங்களைக் கெடுத்து, நம்மிடத்து வரக்கடவாய்'' என்று கற்பித்துச் சென்றார். மோகினி வடி வங்கொண்ட விட்டுணு, தாருகாவனத்து இருடிகளிருக்குஞ் சபையை அடைந்து, அநேக மன்மதர்கள் விடுகின்ற பூம்பாணங்களைப் போலத் தமதிரு கண்களையும் பரப்பி நின்றார். முனிவர்கள் மோகினியைக் கண்டு, விரைவிற் காமவேட்கை கொண்டு, தவவலி குன்றி, யாகத்தை விடுத்து, காமநீர் பெருக மெலிந்து வெதும்பி, வேழமுண்ட விளாங்கனிபோல உள்ள ழிந்து உருகி, அவருடைய அழகிற் சிறந்த அங்கங்களெல்லாவற்றையுங் குறி த்து நோக்கி நோக்கித் தமது சில முழுதும் அழிந்து, நீபத்தைக்கண்ட விட் டிற் பறவைகள் போல விரைந்துவந்து சூழ்ந்தார்கள். அங்ஙனம் வந்து சூழ்ந்த முனிவர்கள் மோகினியை நோக்கி, 'நீர் இருக்குமிடம் பூவுல கமோ, விண்ணுலகமோ, சத்தியவுலகமோ, மன்மதனுடைய உலகமோ, வைகுந்தமோ? இவற்றுள் யாது? அல்லவாயின், நீர்தாஞ தேவர்களுக் காக மோகினி வடிவங்கொண்டு வந்து அவுணர்களைத் தொலைத்தவர்? உம்மை யாவர் அறியவல்லார்! அடியேங்களுக்குச் சொல்லியருளும்' என் றிவைபோல்வன பலவற்றைச் சொல்லி அக்கினியிற் பட்ட தளிர்போல வீரகத்தியால் வெதும்பி இறந்தவர் போன்று நின்றார்கள்.

''இனி, பிக்ஷாடன வடிவங் கொண்டுசென்ற சிவபெருமான், பிக்ஷா பாத்திரத்தையும் முத்தலைச்சூலத்தையும் ஏந்திக்கொண்டு, பிக்ஷை ஏற் பார்போன்று முனிவர்களுடைய வீதியிற் போய், இசையோடு வேதங்களைப் பாடினார். இருடிபன்னியர்கள் அவ்விசையைக் கேட்டு, 'இங்கே வந்தவர் யாவர்? அவரைக் காணும்படி நம்முடைய கண்கள் ஆசையுற்றன. இப் பொழுதே விரைவிற் செல்வோம்' என்று கூறி, கூட்டமாக வீதியில் வந்து, பிக்ஷாடன வடிவங்கொண்ட சிவபெருமானைக் கண்டு, அவரை வந்து சூழ்ந்து, காமபாணங்களின் மூழ்கி உணர்வு மாழ்கி, உயிர் பதை த்துச் சோர்ந்து, ஆசைக்கடலில் ஆழ்ந்து, அம்மயக்கத்தாற் றம்வசமி ழந்து, அவரை விளித்தும், தம்முள் வியந்து, பலவாறு பேசியும், பிக்ஷை யிட்டும், உடுத்த வஸ்திரங்களும் வளையல் முதலிய ஆபரணங்களும் நாண மும் கற்பும் நழுவ, உயிரொனறுந் தாங்கி, மயக்கத்தோடு அவரைப் பின்தொடர்ந்து போயினர்கள், பிக்ஷாடன மூர்த்தி சிலவிடங்களில் வீணைவாசித்தும், சிலவிடங்களில் வேதங்களைப் பாடியும், சிலவிடங்களில் ஆகமங்களை ஓதியும், சிலவிடங்களில் தம்முடைய சுயரூபத்தைக் காட்டி யும், சிலவிடங்களில் பிக்ஷை கேட்டும், சிலவிடங்களில் அடியார்களைப் போலத் தம் புகழ்களை எடுத்துச் சொல்லியும், திருவடித்தாமரை சிவக்க நிருமலமாகிய வீதியிலே நடந்து சென்றார். இருடிபன்னியர்கள் அவரை வணங்கும்பொழுது, அவருடைய திருவடிகளில் இட்ட மலர்களும் மாலை களும் சங்க வளையல்களும் ஆபரணங்களும் நெருங்கி அத்திருவீதி பொலி வடைந்தது. உயிர்க்குயிராகிய சிவபெருமான் கொண்டருளிய பிக்ஷா

டனவடிவை நினைக்கில், விட்டுணுவும் மயங்கி இன்னுந் தளர்வாரென்றால், ஏனையோர் செய்கையை இனைத்தென்று சொல்லலாமோ! அக்கடவுள் அவ்விருடி பன்னியர்களுக்கெல்லாம் இந்திரசாலம் போல எல்லையில்லாத திருவுருவைக்காட்டி, அவர்களுடைய கற்பாகிய சமுத்திரங்களைக் கடையும் எண்ணில்லாத மந்தரமலைகள் போன்றார். அவர் மீது ஆசைவைத்த அப்பெண்கள் யாவரும் கருப்பமடைந்து, வயாவும் வருத்தமுமின்றி நாற்பத்தெண்ணாயிரம் புதல்வர்களைப் பெற்றார்கள். அப்புதல்வர்கள் யாவரும் சிவபெருமானுடைய திருவடிகளில் அன்போடு வணங்கித் துதிக்க, அவர் 'நீங்கள் இங்கே நம்மைத் தியானித்துத் தவஞ்செய்துகொண்டிருங்கள்' என்று கட்டளையிட்டருளினார். அந்நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் அப்பணியைச் சிரமேற்கொண்டு விடைபெற்றுச் சென்று, அங்கே ஒருசாரிற்றவஞ் செய்து கொண்டிருந்தார்கள்.

''பிக்ஷாடன வடிவங்கொண்ட சிவபெருமான், இருடிபன்னியர்கள் ஆசையோடு தம்மைப் பின்தொடர்ந்து செல்ல வீதியைக்கடந்து அப்பாற் சென்றருளினார். விட்டுணு அதனைநோக்கி, அக்கடவுளைத் தொடர்ந்து சென்றார். விட்டுணுவாகிய மோகினியைக் கண்டு மயங்கிய தாருகாவனத்து முனிவர்கள் யாவரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அம்முனிவர்கள் மிகத் தீவினைசெய்த தன்மையினால், சிவபெருமான் அவர்களுக்குத் தம்முடைய திருவுருவை மறைத்து, வேறோர் வடிவோடு தோன்றி நின்றார். அக்கடவுளுக்குப் பின்னே செல்லுகின்ற தம்மனைவியர்களை அம்முனிவர்கள் நோக்கி, 'இவர்களும் உடுத்தவஸ்திரத்தையும் நாணத்தையும் தோற்றார்கள். நாம் இந்தப் பெண்ணைக்கண்டு மயங்கியதுபோல இவர்களும் இவ்வாடவனைக்கண்டு மயங்கினார்போலும்' என்று எண்ணி, தம்மனைவியர்களுடைய ஈனஸ்திதியை நோக்கினமையால் தாம் மோகினியிடத்துக்கொண்ட மயக்கம் சிறிது நீங்கி, இன்னலுற்றிரங்கி, மானம் மேற்கொண்டு, உயிரொன்றையுந் தாங்கி, 'இப்பெண்ணொருத்தி நம்மிடத்து வந்து மயக்கி நம் தவத்தைச் சிந்தினள். இவ்வாடவனொருவன் வந்து நம்மனைவியர்களை மயக்கி கற்பைச் சிதைத்தான். அந்தோ! இஃதென்ன மாயம்!' என்றெண்ணி, யாவரும் ஒருங்குகூடி ஆலோசித்து, ஒருவாறு தெளிந்து, 'இந்தப்பெண்களுடைய கற்பினை அழித்தவர் கைலாசமலையிலிருக்குஞ் சிவனுகும், யாம் செய்த தவத்தை அழிக்கும்படி ஒரு பெண்ணைகிவந்தவர் விட்டுணுவாகும். அந்த விட்டுணு நம்முடைய தவத்தைக் கெடுக்கும்படி தாமாக வலியவந்தவரல்லர்; சிவனுடைய ஏவலினால் மாயத்தைச் செய்தார். அவர் செய்ததுதானென்ன? எங்கள் விரதத்தை அழித்தார். நன்று! அதற்குத் தக்கபரிகாரஞ் செய்துவிட்டுப் பின்னரும் அவ்விரதத்தைச் செய்வேம். மற்றுச்சிவன் தம்முடைய கையில் ஒரு கபாலத்தை ஏந்திப் பிச்சைஏற்பவர்போல வந்து, இத்தாருகாவனத்திலுள்ள பெண்களுடைய கற்பைக்கெடுத்த வசைமொழிக்கு அழிவுமுளதோ? அது சூரியசந்திரர்கள் சஞ்சரிக்குந் திசைகளினெல்லாம் பரவுமல்லவா? தான் ஒரு வடிவத்தை எடுத்தும், விட்டுணுவை வேற்றுருவோடு விடுத்தும், நமக்கு இந்த நிந்தைகளையெல்லாம் செய்தவர் சிவனேயன்றே?' என்றுகூறி, மானமாகிய நெருப்பும் கோபமாகிய அக்கினியுங்கிளர நின்று, தமது மனைவியர் குழாங்களை நெருப்பெழப்பார்த்துக் கூவி.

'நீவிர் யார்பின் செல்லுகின்றீர்கள்? உங்கள் கற்பழிந்தீர்கள்! ஆதலால், நீங்கள் இங்கே இறந்துவிடுதலே நன்று; அன்றேல் உம்முடைய ஊருக்குப் போங்கள்'' என்று கடிந்து கூறினர்கள். இவற்றை அவர்களுடைய மனைவியர்கள் கேட்டு, ''இந்த ஆடவரைக்கண்டவர் சிவன்முத்தராயிருப்பதன்றி இறப்பாரோ! இம்முனிவர்களும் பித்தர்களோ!'' என்று சொல்லி, அக்கடவுளுடைய திருவுருவை மனத்துட் கொண்டு, அவருடைய திருவருளால் மீண்டு, நமது நகரிலுள்ள இருக்கைகளை அடைந்தார்கள்.

''அதன்பின், பிக்ஷாடனவடிவங்கொண்ட சிவபெருமானுக்கு அயலிலே மோகினிவடிவங்கொண்டு நின்ற விட்டுணு, அவருடைய திருவருளினால் ஆணுருவை ஏடுத்தார். அதனைக்காணும்படி பிரமா முதலிய தேவர்கள் யாவரும் வந்தார்கள். அறியாமை மேற்கொண்ட தாருகாவனத்து முனிவர்கள், அழிவில்லாதவராகிய சிவபெருமானை முனிவோடு நோக்கி, 'இங்கே 'கொடிய வேள்வியொன்று செய்து இவரைக் கொல்வோம்' என்று எண்ணி, ஒரு அபிசாரஹோமம் செய்தார்கள் அந்த ஓமகுண்டத்தினின்றும் எவரும் நினைத்தற்கரிய தோற்றத்தையும், இடிபோலும் குரல்பொருந்திய பிளந்த வாயையும், தடுத்தற்கரிய கோபத்தையும், அக்கினி காலுங் கண்களையும், சிவந்த கால்களையும், நகங்களையும், தறுகண்மையையுமுடைய புலி ஒன்று விரைந்தெழுந்தது. முனிவர்கள் அதனை நோக்கி, 'நீ சென்று பரமசிவனைக் கொல்வாய்' என்று வணங்கி விடுத்தார்கள். அது யாவரும் நடுங்கும்படி வந்தது. சிவபெருமான் அதற்கெதிரே போய், அதனைப் பிடித்து அதன் மேலே உரித்து வஸ்திரமாக உடுத்துக்கொண்டார். அதன்பின் அவ்வோம குண்டத்தில் ஒரு முத்தலைச் சூலந்தோன்றி, முனிவர்கள் விடுப்பச் சிவபெருமானுடைய திருமுன் சென்றது. அவர் அதனைப் பற்றித் திருக்கரத்திலேந்தி, 'நீ நம்முடைய படையாவாய்' என்று பணித்தார். பின்பு அக்குண்டத்தில் ஒரு மான்கன்று தோன்றியது, முனிவர்கள் அதனைச் சிவபெருமான்மீது விடுப்ப, அது ஆகாயத்தில்எழுந்து பாய்ந்து, பெருங்குரலினுற் சராசரங்களை அழித்துக்கொண்டு சென்றது. அதனால் உயிர்கள் அழிவுறுவண்ணம் சிவபெருமான் திருவருணோக்கஞ்செய்து, அதனை விரைந்தழைத்து, 'நம்முடைய காதுக்கணித்தாய் நின்று நாடோறுங் கூவுதி' என்றருள்செய்து இடத்திருக்கரத்திலேந்தி நின்றார். பின்னர் அந்த யாகாக்கினியினின்றும் அளவில்லாத சர்ப்பங்கள் எழுந்து முனிவர்களுடைய பணியினுற் கோபத்தோடு வந்தன. அவைகளை, முன்னே கருடனுக்கஞ்சித் தம்மிடத்துச் சரண்புகுந்த பாம்புகளோடு ஆபரணமாகச் சிவபெருமான் தரித்துக்கொண்டார். அதன்பின் அவ்வக்கினியினின்றும் அளவில்லாத பூதவெள்ளங்கள் உண்டாயின. அவைகளை இருடிகள் நோக்கி 'நீங்கள் பரமசிவனுடையவலிமையை மாற்றுங்கள்' என்று சொல்லியனுப்ப, சிவபெருமான் அவற்றை நோக்கி, 'நீர் நம்மையகலாது நாடோறுஞ் சேனைகளாய்ச் சூழுதிர்' என்று கட்டளையிட்டார். அவைகள் அவ்வாறே அவரைச் சேவித்து மருங்கில் நின்றன. அதன்பின், அவ்வேள்வித்தியில் வெண்டலை யொன்று தோன்றி, உலகம் யாவுந் தொலையும்படி சிரித்துக்கொண்டெழுந்தது. முனிவர்கள் அதனையும் சிவபெருமான் மேல் விடுத்தார்கள். அது அணுகுதலும், அவர் அதனால் உலகம் அழியாவண்ணம் அருள்செய்து, திருக்கரத்தாற்பற்றிச் சடைமேற்றரித்து, 'உன்

செய்லைச் செய்குதி' என்றார். சிவபெருமானை நோக்கி நோக்கி மனங்குலைந்த முனிவர்கள், தங்கள் மந்திரங்களை ஒன்றுக ஏவி, 'இவரைக் கொல்லுங்கள்' என்று கூறினர். அவைகள் ஒரு டமருக வடிவாகி, புவனங்கள் செவிடாகும் படி ஒலித்துக்கொண்டு அவரை அணுகின. அந்த உடுக்கினோசையால் உலகத் துயிர்கள் யாவும் சிவபெருமானுடைய திருவருளால் இறவாது இடியொலி கேட்ட பாம்புகள் போல மயங்கின. சிவபெருமான் அவ்வுடுக்கை ஒரு திருக் கரத்திற்பற்றி, 'நம்முடைய காதின் அருகே ஒலித்துக் கொண்டிருக்குதி' என்று ஏந்திநின்றார். முனிவர்கள், 'இவ்வாறு யார் செய்யவல்லார்!' என்று கூறி, சங்காரகருத்தாவாகிய சிவபெருமானுக்கு இறுதியில்லை யென்பதனை அறியாதவர்களாய், தம்மைக் கோபம் பிடர்பிடித்துத் தள்ள, வினைவசத் தாற் பின்னும் அபிசாரஹோமஞ் செய்தார்கள். அவ்வக்கினியினின்றும் ஒரு முயலகன் எழுந்தது. அவர்கள் அதனை நோக்கி, உபசாரங்கூறி யாகஞ்செய் தலை நீங்கி, யாகாக்கினியையும் அழைத்து, அவ்விரண்டையும் நோக்கி, 'நம் முடைய வலிமை கெடும்வண்ணம் செய்த சிவனைக் கொல்லுதிர்' என்று சொல்லி அனுப்பினர். அவைகள் மிக விரைந்து வந்தன. சிவபெருமான் யாகாக்கினியை ஒரு திருக்கரத்திலேந்தி, முயலகனை மெல்லவாகத் திருவடி யால் வீழத்தள்ளி, அத்திருவடியை அருளினால் அதன் முதுகின்மேல் ஊன் றிக்கொண்டு தேவர்கள் துதிக்க நின்றார். முனிவர்கள் அவர் நிற்றலை அக் கினி காலப் பார்த்து, 'இவர் இன்னும் பிழைத்திருந்தார். அந்தோ! நாம் யாகஞ் செய்து அதிலிருந்து எழுப்பிவிட்டவைகளையெல்லாம் அழிந்து விட் டனவோ!' என்று இரங்கி, 'சிவன் அழிக' என்று எண்ணில்லாத சாபங்களைச் சொன்னார்கள். அந்தச்சாபங்கள் யாவும் அவர் திருமுன்பும் சென்றிலவாய், ஊழித்தீயின் மேற்செல்லும் பூவைபோல அழிந்தன. சாபமும் பயன்படா தாக, முனிவர்கள் தாம்கொண்ட கோபமும் நீங்கி, வலிகுறைந்து, ஒரு செயலுமின்றி, வாட்டமும் நாணமுங்கொண்டு நடுங்கி, தொலையாத பாவ மும் பழியும் பூண்டு, பூமிக்குப் பொறையாய் வாளா நின்றார்கள். பெருமை யாவுமிழந்த அம்முனிவர்களுடைய ஏழைமையை என்னென்று சொல் வோம்? அழிவில்லாத சிவபெருமானை அழிக்கும்படி அபிசாரஹோமஞ் செய்து, அதிலிருந்து பலவற்றையும் எழுப்பி விடுத்துச் சாபத்தையுங் கூறி னர். அவற்றால் அக்கடவுளை அழிக்கமுடியுமோ? அவற்றால் அவர்கள் தங்கள் வலிமையுமிழந்தார்கள். அது நிற்க.

''சிவபெருமான் திருவடியினால்ன்றிய முயலகன் மெல்ல மெல்லத் தலையை எடுத்தெடுத் தசைப்ப, அவர் அதனை நோக்கி, அநவரததாண்ட வஞ் செய்தல்போல அதன்மேல் நின்று நடித்தார். அதனைத்தாங்கலாற்றாது உலகமெல்லாம் நடுங்கின; உயிர்கள் அஞ்சி யிரங்கின: தாருகாவனத்து இரு டிகள் நடுங்கி வீழ்ந்தார்கள். அந்நடனத்தைப் பிரம விட்டுணுக்கள் தரிசித் துக் கண்களித்துத் துதித்து மனமகிழ்ந்து, அவருக்குப் பக்கத்தில் நின்றார் கள். இந்திரனும் தேவர்களும் வீழ்ந்தார்கள். ஆனந்த நிருத்தஞ் செய்யுஞ் சிவபெருமான், இவ்வுலகங்கள் யாவும் அஞ்சுதலையும் விழுந்த தேவர்களு டைய அயர்வையும் நோக்கி, திருநடனத்தை ஒழிந்து நின்றார். இந்திரனுந் தேவர்களும் எழுந்து கைதொழுது பக்கத்தில் வந்தார்கள். சிவபெருமான் தம்மை மதியாத முனிவர்கள் யாவர்க்கும் ஞானத்தைக் கொடுத்தருளி னார். அவர்கள் விரைவில் எழுந்து, 'எம்பெருமானே பொல்லாத பாவங்

களையே இயற்றுகின்ற அடியேங்களுடைய பெரிய அபராதங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருள்புரியும்' என்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்கள். பகைவர்களுக்கும் திருவருள்புரியும் பரமகருணை நிதியாகிய சிவபெருமான் அம்முனிவர்களை நோக்கி, 'நம்முடைய வேதாகமநெறியிலொழுகிப் பாவங்களை நீக்கித் தவத்தைச் செய்குதிர்' என்று கூறி, அவர்களை அங்கே நிறுத்தி, அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவரையும் அவரவரிடங்களுக்குச் செல்லும்படி விடைகொடுத்து, தாம் திருக்கைலாசமலையை அடைந்து உமாதேவியாரோடு வீற்றிருந்தருளினர். தக்கனே,எம்பெருமான் புலித்தோல் முதலியவற்றைத் தரித்தலும், தாருகாவனத்தில் நிருத்தஞ் செய்ததும் பிறவும் விரித்துச் சொன்னேம். இனி யானைத்தோலைப் போர்த்த கதையையும் சொல்வோம்; கேட்பாயாக'' என்று ததீசிமுனிவர் கூறுவார்.

''யானை வடிவத்தையுடைய கயாசுரன் என்பவன் முன்னொருநாளில் மேருமலையிற்போய்ப் பிரமாவை நினைத்து அருந்தவஞ் செய்திருந்தான். அவர் அதனை நோக்கி வெளிப்பட்டுவந்து, 'நீ வேண்டிய வரம் யாது? சொல்லுதி' என்றார். கயாசுரன், 'சுவாமீ, அழியாத ஆயுளையும் வலிமையையும் வீரத்தையும் தந்தருளும்' என்றான். அவர்நகைத்து, 'நீ வேண்டியவாறே வரந்தந்தோம். சிவபெருமானுக்கெதிரிற் செல்லாதே. செல்வாயாயின் இவ்வரம் அழியும். இதனைக் கடைப்பிடி' என்று கூறித் தமதுலகத்தை யடைந்தார். கயாசுரன் அவ்வரத்தை நினைத்து, 'சிவபெருமானிடத்திற்செல்லேம், ஒழிந்தோரிடத்திற் சென்று போர்செய்து எவ்வுலகங்களையும் அழித்து யாவருக்குந் துன்பத்தையே செய்திருப்போம்' என்றெண்ணி எழுந்து, வானுலகத்திற் றேவர்களிருக்கின்ற பதங்களோறும் போய்ப் போய், அவர்கள் புறந்தரப் போர்செய்து, அவ்வூர்களெல்லாவற்றையும் அழித்து, பின் சுவர்க்கத்திற்போய், இந்திரனோடு யுத்தஞ்செய்து, அவனைப் புறந்தந்தோடும்படி துரத்தி, ஐராவதயானையை அதன் வால் நுதியைப் பிடித்துச் சுற்றி, இந்திரன் மயங்கும்படி அதனை எறிந்து, சுவர்கவுலகத்தை அழித்து, அங்கு நின்று நீங்கி, திக்குப்பாலகர்களைத் துரத்தி, தன்னினங்களாகிய அவுணர்களையும் அரக்கர்களையும் வதைத்து, பூமியில் வந்து, மக்கட்டொகுதியைக் கொன்று, ஆலாகலவிஷம்போல எங்குந்திரிந்தான். முனிவர்கள் அவனைக்கண்டஞ்சி ஓடி, சிவபெருமான் வீற்றிருக்குங் காசிப்பதியை அடைந்தார்கள். அம்முனிவர்களும் அந்நகரவாசிகளும் பயந்து, மணிகர்ணிகை என்னும் ஆலயவாயிலை அடைந்து, இறப்பவர்கள் செவியின்கண்ணே தாரகப்பிரமமந்திரத்தை உபதேசித்துத் தமது சாரூப்பியத்தை அருளுகின்ற விசுவேசரை வணங்கி நின்று, ''சுவாமீ, கயாசுரனென்பவன் பூவுலகத்தை அழித்து அடியேங்களையுங் கொல்லும்படி விரைந்து வருகின்றான். தேவரீருடைய திருவடிகளே புகலிடம் என்றடைந்தேம். அடியேம் உய்யும்படி அருள்புரியும்'' என்று சொல்லித் தோத்திரஞ் செய்தார்கள். கயாசுரன் அதனைக் கண்டு முனிந்து, மணிகர்ணிகைவாயிலின் கண்ணே வந்து, இடிபோல உரப்பினன். கோயினுட்புகுந்த சனங்கள் யாவும்மனங் குலை குலைந்து விசுவேசரைத்தழுவி மயங்கின. அவன் அதனைக் கண்டும், அவர்களைக் கொல்லும்படி கோபத்தோடு சென்றான். அதனைச் சிவபெருமான் கண்டு, சர்வசங்காரஞ் செய்யும் உக்கிர உருவைத் தாங்கி, தமது திருமுடி அண்டத்தினுச்சியைத்தொட நிமிர்ந்து, ஆயிரகோடி சூரியப்பிரகாசத்தோடு தோன்றினர். தேவர்களும்

முனிவர்களும் அத்திருவுருவைப் பார்க்க முடியாதவர்களாய்க் கண்களைப் பொத்தி வருந்தினர்கள். உக்கிரவடிவங்கொண்ட கடவுள் ஒரு தரஞ்சிரித்து, மெல்லவாக உரப்பினர். அதனால் உலகமெல்லாம் நடுங்கின. அத்தொனியைக்கேட்ட பிரமா முதலிய தேவர்களும் வெருண்டார்கள். எம்பெருமான் இத்தன்மையாகிய உக்கிரவடிவோடு தோன்றிக் கயாசுரனுக் கெதிரே போயினர். அவன் இவர் சிவபெருமான் என்றறிந்தும், பிரமா சொன்ன வார்த்தையை மறந்து, அவரோடு போர் செய்யும்படி எதிர்த்து நின்றான். சிவபெருமான் வடவாமுகாக்கினியும் அஞ்சும்படி அக்கினிகாலப் பார்த்து, ஒரு திருவடியினால் உதைக்க, அவன் கவிழ்ந்து பதைத்து வீழ்ந்தான். பரமசிவன் அவனுடைய சிரசை ஒரு திருவடியினாலும் தொடையை மற்றொரு திருவடியினாலும் மிதித்துக் கொண்டும், இரண்டு திருக்கரங்களின் நகங்களினால் முதுகிற் கிழித்து, நான்கு கால்களும் பக்கங்களிற் பொருந்தும்படி இரத்தம் பெருகத் தோலை யுரித்தார். அதனைக்கண்டு உமாதேவியாருங் கலங்கினர். உலகத்துயிர்கள்யாவும் அக்கடவுளுடைய உக்கிரத்திருமேனியின் பேரொளியைப் பார்த்துத் தியங்கி, பார்த்த கண்கள் ஒளியிழந்து, பதைத்தன. சிவபெருமான் அதனையறிந்து, உயிர்கள் கண்ணொளி மழுங்கியதைத் தீர்க்கத் திருவுளங்கொண்டு, அருக்கிரகார்த்தமாக அவ்வியானைத் தோலைத் தமது திருப்புயத்தின் மேற் கொண்டு போர்த்து, தம்முடைய பேரோளியை மாற்றி, உயிர்களுக்குக் கண்ணொளியைக் கொடுத்து, அவைகளுடைய அச்சத்தையும் நீக்கிக் காத்தருளினர். அப்பொழுது தேவர்கள் துதித்தார்கள். விசுவேசர் அத்துதியைக் கேட்டு மணிகர்ணிகை என்னும் ஆலயத்திற் போயினர். முன் மயங்கி வீழ்ந்த பரிசனர்கள் யாவரும் தெளிவு பெற்று, கயாசுரனுடைய இரத்தத்தையும் எலும்பையுந் தோலையுங் கண்டு, சிவபெருமானே அவனைக் கொன்றார் என்று எண்ணி, ஆடிப்பாடிக் களித்தார்கள். காசிப்பதியில் வாழ்பவர்களும் முனிவர்களும் அக்கடவுளை வணங்கி, அவருக்கு விசேடமாகப் பூசை புரிவித்துத் துதித்து, விடைபெற்றுக்கொண்டு போயினர்கள். தக்கனே, சிவபெருமான் யானைத்தோலைப் போர்த்த கதை இதுவாகும். இனிப் பிரமகபாலத்தையேந்திய கதையைச் சொல்வோம்; கேள்.

"முன்னொருநாளிலே, விட்டுணுவும் பிரமாவும் மேருமலையின் ஒரு கொடுமுடியில் இருக்கும்பொழுது, பல முனிவர்களும் தேவர்களும் வந்து அவர்களை வணங்கி அஞ்சலிசெய்து நின்று, 'மும்மூர்த்திகளிலும் முதல்வரும், அநாதியாயுள்ளவரும், எல்லாவற்றையுஞ் சிருட்டிப்பவரும், பரதத்துவத்துக்கு மேற்பட்டவரும், உயிர்க்குயிராயுள்ளவரும் ஆகிய கடவுள் யாவர்? நீங்களிருவரும் எங்களுக்குச் சொல்லுங்கள்' என்று பிரார்த்தித்தார்கள். பிரமா சிவபெருமானுடைய மாயத்திலகப்பட்டு, 'நானே அந்தப் பிரமப்பொருள். நீங்கள் இதனைத் தெளியுங்கள்' என்றார். விட்டுணுவும் அத்தன்மையினராய், 'உன்னைத் தந்த யானே உன்னிலும் உயர்ந்த பிரமப்பொருள்' என்றார். இவர்கள் இருவரும் இவ்வாறு கோபத்தோடு மாறுபட்டுத் தருக்குஞ்செய்ய, முனிவர்களும் தேவர்களும் 'இவ்வாதம் நம்மாலுண்டாயது' என்று சொல்லி, ஒருவரும் நில்லாமல் நீங்கினர். பிரமவிட்டுணுக்கள் பின்னும் பூசலிட்டார்கள். அப்பொழுது வேதமும் பிரணவமும் வேறு வேறு உருக்கொண்டு வந்து, 'நீவிர் வாதஞ்செய்யா

தொழிமின். உயிர்க்குயிராயும் பரமபிதாவாயும் உள்ள சிவன் ஒருவனே மெய்க்கடவுள்' என்று சொல்லின. அவர்கள் அவ்வாக்குக்களைக் கைகொள்ளாது மறுத்து பின்னும் கொடிய போரைச் செய்தார்கள். யாவர்க்கும் ஆபத்துக் காலத்தில் வந்தருள்புரியும் பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமான் அதனைக் கண்டு, அவர்களுடைய கடிய போரைத் தொலைக்கத் திருவுளங்கொண்டு, அமலமாகிய சோதிவடிவாய் ஆகாயமத்தியிலே தோன்றியருளினர். அகந்தையடைந்த விட்டுணுவும் பிரமாவும் அந்தச் சோதியைச் சிவனென்று அறியாது, ''இந்தச்சுடர் யாதோ?'' என மருண்டார்கள். அதனைப் பரமசிவன் தெரிந்தருளி, நம்மை யாண்டருளும்படி உமாசமேதராய்த் திருக்கைலாசமலையில் வீற்றிருக்கின்ற தமது திருக்கோலத்தோடு அச்சோதியினிடையே தோன்றினர். விட்டுணு, 'நமது பரமபிதாவாகிய சிவபெருமான் எழுந்தருளி வந்தார்' என்று விரைவில் எழுந்து வணங்கினர். ஒரு சிறிதும் மாயை நீங்காத பிரமாவானவர், விட்டுணுவைப்போல அன்புடன் எழுந்து வணங்காமல், தமது உச்சிச் சிரசிலுள்ள வாயினால் சிவபெருமானை இகழ்ந்தார். ஐந்து முகங்களையுடைய பிரமா தம்மையிகழ, அருட்கடலாகிய சிவபெருமான் அவர்மேற் சிறிதுஞ் சினங்கொண்டிலர். அங்ஙனஞ் சினங்கொண்டாரெனின், எல்லா அண்டங்களும் அவற்றிலுள்ள உயிர்களும் பின்னர் அழியாதிருக்குமோ!

''பிரமாவின் அகந்தையைக் கண்ட சிவபெருமான் அவருடைய பாவத்தைத் தொலைக்கவும், மற்றைத் தேவர்கள் முனிவர்கள் முதலாயினருடைய அகந்தையைக் கெடுக்கவும் நினைத்து, பேரருளினாலே தமது திருவுள்ளத்தினின்றும் வயிரவக்கடவுளை உண்டாக்கினர். அவர் நீலநிறம்பொருந்திய திருமேனியும், சிலம்புகளொலிக்குந் திருவடியும், பாம்பு பொருந்திய திருவரையும், அனந்தகோடி சிரமாலைகள் அலையும் திருமார்பும், சூலமும் மழுவும் பாசமும் உடுக்கும் ஏந்திய திருக்கரங்களும், திருநேத்திரங்களும், வக்கிரதந்தங்களும், செவ்வானம் போலும் திருச்சடையும், கோபக்குறிப்போடு கூடியதிருநகையும் உடைய உக்கிரவடிவங்கொண்டு உதித்தார். அந்த வயிரவக்கடவுளை கிருபாசமுத்திரமாகிய சிவபெருமான் நோக்கி, 'நமது சிறுவனுகிய பிரமனுடைய உச்சிச் சிரசு நம்மை இகழ்ந்தது. அச்சிரசைக் கிள்ளிக் கரத்திலேந்தி, மீட்டு அவனுக்குயிரைக் கொடுத்து, தம்மைப் புகழுகின்ற முனிவர்களும் தேவர்களும் இருக்கும் நகரங்கள்தோறும் போய், அவர்களுடைய உடலிலுள்ள இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்கக் கடவாய். ஏற்கும்பொழுது,இறந்தவர்களுக்கு மீட்டும் உயிரைக் கொடுத்து, அகந்தையை மாற்றி, அண்டமுகட்டிற்போய், முன்னமே உனக்காக அமைந்த பைரவபுவன பதத்திலிருந்து, மனிதர்களையும் தேவர்களையும் துன்பம் நீங்கக் காப்பாய்' என்று அநுக்கிரகித்து, நிருமலமாகிய சோதியில் மறைந்தருளினர். அந்தச் சோதியும் அவர்கள் காணவண்ணம் மறைந்தது. விட்டுணு இவைகளைப் பார்த்து, நாம் இங்கே நிற்றல் முறையல்ல என்று சிவபெருமானை வணங்கி, விரைந்து வைகுண்டத்தையடைந்தார். வைரவக்கடவுள் பிரமாவினுடைய உச்சிச்சிரத்தைத் தம்முடைய நகத்தாற் கிள்ளந்து ஏந்த, கால்கொண்டு பாய்ந்த இரத்தவெள்ளம் பூமியைச் சூழ்ந்தது. அவர் இறந்து வீழ்ந்தார். இரத்தவெள்ளம்

உலகத்தை மூடி மேருமலையைச் சூழ்ந்தது. வைரவக்கடவுள் நெற்றிக் கண்ணின் அக்கினியினால் அவ்விரத்தம் முழுதையும் வறப்பித்து, பிரமாவுக்கு உயிரைக் கொடுத்தார். அவர் எழுந்து நல்லுணர்வு வரப்பெற்று, வைரவக்கடவுளுடைய பாதங்களை அன்போடு வணங்கி, 'பாவியேன் சிவபெருமானுக்கு அளவில்லாத குற்றங்கள் செய்தேன்; அதனால் இந்தப் பெரும்பழியைப் பெற்றேன். இனி அடியேன்மீது கோபஞ்செய்யாதொழியும். உலகங்களை நொடிப்பொழுதினுட் சங்கரிக்கும் வலியையுடைய கடவுளே, உம்முடைய பேரருள் நலத்தினாற் பழைய நல்லுணர்வைப் பெற்றேன். அடியேனுடைய பிழைகளெல்லாவற்றையும் தேவரீர் பொறுத்தருளல்வேண்டும். தீமையும் எளிமையுமுடைய இந்த உச்சிச் சிரசும் தூய்மையுடையதாம்படியும், அடியேன் உம்மைத் தரிசிக்கும்பொழுது மயக்கந் தீரும்படியும், சூலப்படையைப்போல இச்சிரசையும் திருக்கரத்தில் ஏந்தியருளும்' என்று இவைபோல்வன பலவற்றைச் சொல்லித் துதித்தார். வயிரவக்கடவுள் நான்கு தலையைப்பெற்ற பிரமாவை நோக்கி, 'அவ்வாறுகுக' என்று அருள்செய்து, மேருமலையை நீங்கிப்போய், காலவேகன், அக்கினிமுகன், சோமகன், ஆலகாலன், அதிபலன் முதலாகிய அநேக பூதர்களை உண்டாக்கி, அப்பூதகணங்கள் சூழ, தருக்குற்ற முனிவர்களிருக்கும் வனங்களோடாறும் தேவர்களிருக்கும் மேலுலகங்களோடாறும் விரைந்து சென்று, அவர்களுடம்பிலுள்ள இரத்தத்தைப் பிக்ஷையாக ஏற்று, பின்பு உயிரைக்கொடுத்து அவர்களை எழுப்பி, அவர்களுடைய மனங்களெல்லாவற்றையும் பரிசுத்தமுடையனவாக்கினர். அதன்பின் வானுலகங்களை நீங்கி, விட்டுணுவினுடைய வைகுண்டத்திற் போயினர். அவருடைய பூதகணங்கள் முன்சென்றன. விட்டுணுவின் வாயிற் காவலாளனாகிய விடுவசேனன் என்னும் சேனபதி அச்சேனைகளை உள்ளே விடாமற் றடுத்தான். காலவேகன் முதலாகிய பூத கணநாதர்கள் அவனோடு போர்செய்துகொண்டு நின்றார்கள். வயிரவக்கடவுள் வந்து, விடுவசேனனைத் தமது சூலத்திற் கோத்து, பூதகணங்களோடு உள்ளே போய், பூமிலக்ஷ்மி மகாலக்ஷ்மி சமேதராராய்ச் சேஷசயனத்தின்மீது விட்டுணுவீற்றிருக்குந்தானத்தைச் சேர்ந்தார். விட்டுணு மனைவியர்களோடு எழுந்து அவருடைய பாதங்களை வணங்கி நின்று, 'தேவரீர் இங்கே எழுந்தருளிவந்த காரணம் யாது?' என்றார். 'நாம் இங்கே வந்தது பிக்ஷைக்கு; உன்சிரசிலுள்ள இரத்தத்தை உதவுதி' என்றார். விட்டுணு நன்றென்று கூறி, தம்முடைய நெற்றியில் ஒரு நரம்பை நகத்தால் வாங்கி, இரத்தத்தைப் பிக்ஷாபாத்திரத்தில் உகுத்தார். இப்படிப்பதினாயிரவருஷகாலம் உகுத்தும், பிரமகபாலத்தில் பாதியும் நிறைந்திலது. விட்டுணு வலிமை நீங்கிச் சோர்ந்தார். அதனைப் பூமிலக்ஷ்மியும் மகாலக்ஷ்மியும் பார்த்து இரங்கி, அவரை எழுப்பித்தரல்வேண்டும் என்று வயிரவரைச் சரணடைந்தார்கள். அவர் அப்பெண்களை 'அஞ்சாதொழிமின்' என்று பணித்து, விட்டுணுவினுடைய சோகத்தை நீக்கி, உய்ந்தெழும்படி அருள்செய்து, அவ்விடத்தை நீங்கினர். விட்டுணு அவருக்குப்பின் சென்றார். அவரை வயிரவர் ''நீ அங்கே இருக்குதி'' என்று கூற, ''தேவரீர் சூலத்தின்மீது கோத்த விடுவசேனனை விடுத்தருள வேண்டும்'' என்று வேண்டினர். வயிரவக்கடவுள் அவனைச் சூலநுனியினின்றும்

விடுவித்து, உயிரைக்கொடுத்து அருள்செய்து, கணங்களோடு அண்டகடாகத்திலுள்ள தமது புவனத்தை யடைந்து, அண்டங்களைப் பரிபாலித்துக் கொண்டு வீற்றிருந்தார். வயிரவக் கடவுள் சங்கார காலத்திலே பரமசிவனுடைய ஆணையினாலே தேவர்களுடைய சிரங்களையும் பிரமா முதலியோருடைய சிரங்களையும் துணித்து, உயிர்கள் எல்லாவற்றையும் சங்கரித்து, புவனங்கள் எல்லாவற்றையும் பொடியாக்குவார். எல்லாம் அழியும் மஹாஸ்மஸானத்திலே வேதமாகிய நாய்வாகனத்திலிவர்ந்து பேரானந்தத்தோடு உலாவுவார். பரமசிவன் பிரமகபாலத்தை ஏந்தி வீடுகடோறும் பிக்ஷையேற்றதும், பிரமா முதலிய தேவர்கள் அகந்தையுற்ற காலங்களில் அவர்களைத் தண்டித்து நல்வழிப்படுத்திய பேரருளேயாம். சிவபெருமானின் வேறின்றி அவரிடத்தினின்றுந் தோன்றிய வயிரவக்கடவுள் இரத்தப்பலி ஏற்றதைச் சொன்னேம். இனி அக்கடவுள் வேற்றுருக்கொண்ட தன்மையைச் சொல்வோம். தக்கனே கேட்குதி.

"முன்னொருநாள், இந்திரன் திருக்கைலாசமலையிலே சிவபெருமானை வழிபட எண்ணி, மனத்தில் அகந்தையுடையனாய், செம்பொற்றிருக்கோயில் வாயிலிற் போயினான். அதனையறிந்த சிவபெருமான் ஒரு பிரமதகணவேடங் கொண்டு அவ்வாயிலில் நின்றார். அவரை இந்திரன் நோக்கி, 'மிகப்புதியனாயிருக்கின்றாய். இன்றைக்குத்தான் உன்னைக் கண்டேன். நீ யார்? நான் சிவபெருமானைத் தரிசிக்கும்படி வந்தேன். அதற்கு இது நல்ல சமயமா? சொல்லுதி' என்றான். சிவபெருமான் அவனுக்கு ஒரு பதிலுஞ்சொல்லாதவராய், அச்சந்தரும் நோக்கத்தோடு வாளா நின்றார். இந்திரன், தனக்கு இனிவரும் ஊறுபாடொன்றையும் நினையாமற் கோபங்கொண்டு, 'இவன் ஒருவரிடத்து மில்லாத அகந்தையுற்றான்' என்று குலிசாயுதத்தை அவர்மேல் எறிந்தான். அது அக்கடவுள் மேற்பட்டு, நுண்ணியதுகளாய் விரைவிலழிந்தது. பூதகணவடிவங்கொண்ட பரமசிவன் அவ்வடிவத்தை நீங்கி, உருத்திரவடிவைத் தாங்கி, கோபாக்கினியும் புகையும் எழவும், புருவங்கள் நெற்றியில் ஏறவும், புன்முறுவல் தோன்றவும், இதழ் துடிக்கவும், கண்கள் சிவக்கவும், சிறிதே உரப்பி, பிரமா முதலிய தேவர்களும் மற்றையுயிர்களும் அஞ்சும்படி வெம்மையாகிய உக்கிரவடிவுகொண்டு, உருத்து நின்றார். இவ்வாறு நிற்கின்ற எம்பெருமானுடைய பெருஞ்சீற்றத்தை இந்திரன் பார்த்து, மனம் நடுநடுங்கப் பதைபதைத்தஞ்சி, அவருடைய பாதங்களில் வீழ்ந்து, 'எம்பெருமானே, நாயினுங்கடையேனாகிய அடியேனுக்கு உம்முடைய மாயமெல்லாந் தெரியுமோ? பிரம விட்டுணுக்களும் இன்னும் அறியார். பாவியேன் செய்தபிழைகளனைத்தையும் பொறுத்தருளும்' என்று கூறிப் பலமுறை துதித்து வேண்டினான். சிவபெருமான் அவ்விந்திரனை 'அஞ்சற்க' என்று கிருபாநோக்கஞ் செய்து, தம்முடைய கோபத்தை மேற்குச் சமுத்திரத்தில் வீசி, அவனுக்கு விடைகொடுத்தனுப்பி, கோயிலினுட்போய், இரத்தின சிங்காசனத்திலே பார்வதிதேவியாரோடு வீற்றிருந்தருளினார்.

"பரமசிவன் மேலைச்சமுத்திரத்தில் வீசிய கோபமானது ஒரு பாலகனுயிற்று. அப்பாலகனைச் சமுத்திரராசன் எடுத்து வாழ்த்தி வளர்த்தான். அக்குழந்தை சிறிது அழுதபொழுது, வானுலகமும் மண்ணுலகமும் எண்டிசைகளும் செவிடுபட்டன. அவ்வொலியைப் பிரமா கேட்டு, ஆகாயத்தில்

வருகின்ற இவ்வொலி யாது? என்று கருதி, சமுத்திரத்தையடைய; வருணன் அவரை ஒர்ராசனத்திலிருக்கச்செய்து, 'இவன் யான் பெற்ற பாலகன், பார்ப் பீராக' என்று கையில் நீட்டினன். பிரமா வாங்கித் தம்முடைய மடியிற் கிடத்தினர். அப்பாலகன் அவருடைய நான்கு தாடிகளையும் தன்கைகளால் வலியோடு இழுத்துத் தூங்கினன். பிரமா அவனிடத்து விருப்பம் வைத் தார். அவருடைய கண்களினின்றும் நீர் சிந்திச் சமுத்திரத்திற் பாய்ந்தது. பிரமா அப்பொழுது அப்பாலகனுடைய கையினின்றும் தம்முடைய தாடி களை மெல்லவாக நீக்கி, பல கைகளால் அவனை எடுத்து, பெருமூச்சுவிட்டு, வருணனுடைய கையிற்கொடுத்து, ஓரிறைப்பொழுது யோசித்து, அவனை நோக்கி, 'யாம் ஒன்று சொல்வோம்கேள். இவன் பரமசிவனுடைய கோபத் தினின்றும் தோன்றினன். ஆதலால் ஒரு கடவுளையும் நினையான்; அவர் களிடத்து ஒருவரத்தையும் வேண்டான்; ஒருவராலும் அழியான். தேவர் களும் இந்திரனும் திக்குப்பாலகர்களும் இவனுக்குப் பயந்து ஓடுவார்களா னால் இவனோடு போர்செய்யவல்லார் யாவர்! இவனை எதிர்த்தற்கு நீவீரும் அஞ்சுவீர்; இவனெதிர் நிற்பார் யாவர்! தேவர்களுடைய சாபங்கள் இவனை வந்தணுகுமோ! இவனுடைய வெம்மையால் அக்கினியும் தீயும். இவனுக்கு நானும் அஞ்சுவேன்; விஷ்ணுவும் அஞ்சுவார்; இந்திரனும் அஞ்சுவான். கூற்றுவனும் அஞ்சுவான்; வானுலகமும் அஞ்சும்; மண்ணுலகமும் அஞ்சும். இவன் தன்பரிசனங்கள் துதிக்கப் பூவுலகிற் கொடுங்கோல் செலுத்தி அங் குள்ளார் யாவரும் ஆசிகூற நெடுங்காலம் அரசு செய்வான். பரமசிவனை யன்றி வேறார் இவனைக் கொல்வார்' என்று கூறினர். கூறுதலும், வருணன் 'நீர் இவனுக்கு நல்லதொரு நாமம் இடும்' என்றான். 'நீ தரித்தமையால் இவனுடைய பெயர் சலந்தரன்' என்று பிரமா பெயரிட்டு, தமதுலகை அடைந்தார். வருணன் அச்சிறுவனைச் சீரோடு பலநாள் வளர்த்தலும், அவன் காளையாகி, பூமியிலே அவுணர்பக்ஷத்திற் சேர்ந்து, அவர்களோடு சென்று, திசைகளைவென்று, இந்திரனும் தேவர்களும் பயந்து மேருமலையில் ஒளிக்கும் படி கொடுமைசெய்து, அவர்களுடைய உலகமுழுதையும் அவுணர்களுக்குக் கொடுத்தான். பின் அசுரத்தச்சனைக் கொண்டு சாலாந்தரம் என்னும் பெயரையுடைய ஒரு நகரத்தைச் செய்வித்து, அரசர்கள்துதிக்க அதிலிருந்து அரசியற்றினன். அதன் பின், காலநேமி என்னும் அவுணனுடைய மகளா கிய விருந்தை யென்பாளைச் சுக்கிராசாரியர் சொற்படி விவாகஞ்செய்து, இன்பமநுபவித்துக்கொண்டு ஐசுவரியத்தோடு பலநாட் பூமியிலிருந்தான். இருக்குநாளில் ஒரு நாள், 'தேவர்கள் யாவரும் மேருமலையில் மறைந்திருந் தார்கள், நாம் அவரோடு போய்ப் போர்செய்வோம்' என்று சொல்லி அங்கே போயினன். அதனை அறிந்த தேவர்கள், 'பதகனுகிய சலந்தராசுரன் இங்கும் வந்தான். என்செய்வோம்' என்று சிங்கத்தைக் கண்ட யானைகள் போலத் தேம்பி, செய்வதின்னதென்று அறியாது, 'நம்மைப் பாதுகாத் தருளும்' என்று விட்டுணுவைத் தியானித்தார்கள். அவர் கருடவாகனத் தின்மீதேறி நொடிப்பொழுதில் மேருமலையில் வந்து, சலந்தராசுரனோடு இருபதினுயிரம் வருடம் பலபடைகளாலும் மாயங்களாலும் போர்செய்தும் அவனை வெல்லமாட்டாதவராய், அவனைப் புகழ்ந்து போயினர். விட்டுணு சலந்தராசுரனோடு போர்செய்யும்பொழுது, இந்திரனுந் தேவர்களும் பயந்து கயிலையங்கிரியை யடைந்தார்கள்.

''அப்பொழுது சலந்தராசுரன், தன் பகைவர்களாகிய தேவர்களை எங்கும் பார்த்துக் காணுதவனுய், 'பரமசிவன் வீற்றிருக்குந் திருக்கை லாச மலைக்குப் போயினர்கள் போலும்' என்று கருதி, கோபமுடைய வனுய், தன்னூரிற் போய், சிலகாலமிருந்து, பின் கைலாசமலைக்குப் போய்த் தேவர்களை வெல்லல் வேண்டும் என்று சேனைகளோடு புறப்பட் டான். புத்தியிற் சிறந்த அவன் மனைவியாகிய விருத்தை 'என் பிராண நாயகனே, பரமசிவனுேடு போர் வேண்டாம் வேண்டாம்: அவருடன் பொருதால் நீ இறந்தாய்' என்ருள். சலந்தரன் அவள் சொல்லைக்கேளா மலும், செய்யத்தகுவது இஃதென்று நினையாமலும், தனக்கு வருங் கேட்டைப் பாராமலும், கோபம் மேற்கொண்டு, சிறிதும் பொறுமை யின்றி, சேனைகளோடு கைலையங்கிரியின் ஒரு புடையிற் போயினன். அதனை இந்திரன் கண்டு, 'தீயனுகிய சலந்தராசுரன் நால்வகைப்படை களும் சூழ இறக்கும்வண்ணம் இங்கும் வந்தான். நாம் அதனைக் காண் போம்' என்று தேவர்களோடு கைலாசமலையிலுள்ள கோயிலை அடைந்து, சிவபெருமானுடைய அநுமதிப்படி நந்திதேவர் உள்ளே விடுப்பச்சென்று, மகாதேவர் உமையம்மையாரோடு, வீற்றிருக்கும் ஸ்தானத்திற் போய், அவரை வணங்கி, 'சலந்தரனென்னும் பொல்லாத அவுணன் எங்களைப் பொருது வெல்ல, அடியேன் அஞ்சிப் பொன்னுலகத்தை நீங்கி மேருவிற் போய் ஒளித்திருந்தேன். அவன் அங்கும் வர, அடியேன் விட்டுணுவை நினைத்தேன். அவன் வந்து அவனுேடு போர்செய்து தோற்று அவனை வியந்து போயினர். அதன்பின் காளகண்டராகிய கடவுனே, தேவரீருடைய இம் மலையில் வந்து ஒளித்திருந்தேன். சலந்தரன் இங்கும் வந்துவிட்டான். எதற்காக வந்தானே அதனை அடியேன் அறியேன். தமியேனுடைய துன்பமும் பதகனுகிய சலந்தராசுரனுடைய வலியும் வாழ்க்கையும் நீங் கும்படி திருவுளஞ் செய்தருளும்' என்று பிரார்த்தித்தான்.

''அதனைத் திருச்செவிமடுத்த கடவுள், 'இந்திரனே, உன் துன்பத்தை யொழிவாய்' என்றருள் செய்து, அவனை அனுப்பிவிட்டு, கருணையினல் ஒரு திருவிளையாடலை நினைத்து, கமண்டலத்தையும் குடையையும் ஏந்தி, தண்டை ஊன்றி, நரைத்த திருமேனியுடையராய், ஒரு விருத்தப் பிரா மண வேடங்கொண்டு, இந்திரனும் தேவர்களும் மறைந்து தம்பின்னே வர, சலந்தராசுரனுக்கெதிரே போய், அவனை நோக்கி, 'நீ யார்? எங்குள் ளாய்? யாரைத்தேடி இங்கே வந்தனை? சொல்லுதி' என்று வினவினர். அவன், அந்தணரே நான் சொல்வதைக் கேளும். நான் பூவுலகத்தி லுள்ளேன். சமுத்திரத்தின் குமாரன். சலந்தரன் என்னும் பெயரினேன். தேவர்களை வென்று பரமசிவனையும் வெல்லும்படி ஈண்டு வந்தேன்' என் ருன். அதனைக்கேட்ட அந்தணராகிய கடவுள் 'அரசனே, உன்னெண் ணம் நன்று! நன்று! இதனுலேதுந் தீதுண்டோ?' என்று புகழ்வதுபோலப் பழித்துக்காட்டி நகைத்து, 'யான் கைலாசபதிக்குப் பக்கத்திலிருப்ப வன். அவரோடு நீ போர்செய்ய முயன்ருல் இறப்பாய். பிழைக்க நினைத் தால் மீண்டு செல்லுதி' என்று கூறினர். அதனைக்கேட்ட சலந்தரன் அக்கினிபோலக் கோபித்து, கண்களிற் பொறியெழவும் வெயர்வை தோன் றவும் உயிர்த்து, 'பிராமணரே நீர் என்னைச் சிறியவன்போலச் சிந்தித் தீர். என்னுடைய வெற்றிகளையெல்லாம் உமக்குச் சொல்லியாவதென்!

ஒரு கணப்பொழுது நீர் இங்கே நின்று என் வலிமையை அறிகுதிர்! அறிகுதிர்!' என்று கூறினன். அந்தணர் 'யாமும் உம்முடைய மிகுந்த வலிமையைக் காணும்படி வந்தோம்' என்று கூறி, தமது திருவடியினாலே பூமியில் ஒரு சக்கரத்தைக் கீறினர். அது ஒரு சக்கராயுதமாயிற்று. சலந்தரனை நோக்கி, 'இதனை உன் வலிமையினாற் சிரசிற்றாக்கிவைத்து நீ தாங்கவல்லையோ?' என்று வினவினர். சலந்தரன் 'தேவர்கள் யாரையும் புறங்கண்டேன்; பெருகுகின்ற கங்காநதியை அடைத்தேன்; சமுத்திரத்தி லுள்ள, வடவாமுகாக்கினியை அவித்தேன்; விட்டுணுவை வென்றேன். எனக்கு இதனைத் தாங்குவது அரிதோ!' என்று கூறி, சக்கரப்படையைக் கையிலெடுத்தான். அது அதிபாரமாயிருந்ததனாற் பெருமூச்சுவிட்டு, மார்பிலும் புயத்திலும் வைத்துத் தாங்கி, ஒருவாறு சிரசின்மேல் தூக்கி வைத்தான். அதனால் அவனுடைய உச்சி முதல் உடம்பு முழுதும் கிழிந் தது. அவனுடைய உடம்பினின்று எழுந்த இரத்தவெள்ளம் பூமியெங் கும் பெருகியது. சக்கரப்படையாகிய தெய்வம் அப்பதகனுடைய உடம்பை இரு பிளவாக்கி, சிவபெருமானிடத்திற் சென்றது. இரத்தக்கடல் பூமியெங் கும் வளைந்தது. சிவபெருமான் அவ்விரத்தத்தை நரகத்தில் விழும்படி பணிக்க, அது அங்கே பாய்ந்தது. சலந்தரனுடைய சேனைகளை அக்கடவுள் திருநேத்திரத்தினின்று பொழிந்த அக்கினியினாற் பொடியாக்கி, தமது சுய வடிவத்தைக் காட்டிநின்றார். இந்திராதி தேவர்கள் அவரை வணங்கி, 'எம்பெருமானே, அடியேங்களுடைய துன்பத்தை நீக்கியருளினீர்' என்று துதித்தார்கள். அவர்களுக்குப் பழைய அரசுரிமையை நடாத்தும்படி அநுக்கிரகித்து, தத்தமிடங்களுக்கு செல்ல அனுப்பி, சிவபெருமான் தமது செம்பொற்றிருக்கோயிலிற் போய் வீற்றிருந்தருளினர்.

"இறந்த சலந்தராசுரனுடைய மனைவியாகிய விருந்தையை விட்டுணு இச்சித்து, ஒரு மகாவிரதிவடிவங்கொண்டு, அவனுடைய மாளிகையின் மருங்கிலுள்ள ஒரு சோலையிலே வஞ்சனையோடு இருந்தார். அவர் அவ்வாறு இருக்கும்பொழுது, கற்பிற் சிறந்த விருந்தை தன்கண வன் இறந்ததை அறியாளாய், அவனைக்காணுமையால் மனமிகநொந்து மெய்வருந்தி, பிழைக்குநெறி யறியாமல் இரங்கிப் பதைப்பைத்துச் சோர்ந்து, தனித்திருக்க இயலாமலும், ஒருவரோடும் பேசாமலும், செய்வ தின்னதென்றறியாமலும், இருதலைக்கொள்ளியினுள் எறும்புபோல அங்குமிங்கும் உலாவி, விட்டுணுவைப் புணரும் ஊழ்தனக்குண்மையினால் தன் மாளிகைக்குப் பக்கத்திலே விஷ்ணு இருக்கின்ற சோலையிற் போயி னாள். அப்பொழுது, வைகுண்டத்திலே விஷ்ணுவினுடைய வாயிலைக் காக்கும் காவலாளர் இருவர் சிங்க உருவம் எடுத்துக் கர்ச்சித்துக் கொண்டு அவள் எதிரே வந்தார்கள். அவள் அச்சிங்கங்களைக்கண்டு இடி யேறுண்ட பாம்புபோல ஏங்கியோடி, சோலையிலே தவவேடம் பூண்டிருந்த விட்டுணுவை அடைதலும், அவர் 'பெண்ணே, அஞ்சாதொழி' என்றார். சிங்கவடிவாய் அவளைத் துரத்திக்கொண்டுவந்த காவலாளர்கள் திரும்பி ஓடினர்கள். விருந்தை அத்தவத்தினியல்பை நோக்கி, 'இவரியற்கை நன்று யிருக்கின்றது' என்று எண்ணி, அவரைப்பார்த்து, 'பெருமையிற் சிறந்த என்றந்தையே, கேளும். என் பிராணநாயகன் அழிவில்லாத சிவபெருமா னைநோக்கி தோர்செய்யும்படி போயினன்; இன்னும் வந்திலன். அக்கடவுளால்

இறந்தானே, அல்லது பிழைத்தானே சொல்லும்' என்றுள். அந்தச்சமயத் தில் விட்டுணுவினுடைய அக்காவலாளர் இருவரும் மாயையினற் குரங்கு களினுருவெடுத்து, இறந்த சலந்தராசுரனுடைய உடலை விரைவிற்கொண்டு வந்து விருந்தையின் முன்னர் இட்டார்கள். அவள் அதனைக் கண்டு, வெரு விப் பதைத்து வீழ்ந்தரற்றி, இறந்தவள்போல உணர்வு நீங்கினன். விட்டு ணுவாகிய தவத்தர் அன்பினேடு கையைநீட்டி, 'பெண்ணே, நீ வருந்தா தொழி வருந்தாதொழி' என்று கூறி, அவளை எழுப்பினர். அவள் தேறி எழுந்து, அவரை வணங்கி நின்று, 'உம்மையொத்த மகாதவத்தர்கள் உல கத்திலில்லை. நீர் என்னுடைய உயிரைப் பாதுகாப்பீராயின், என்னுயகனு டைய பிளவுபட்ட உடலத்தைப் பொருத்தி அவனுயிரையும் அதனுட்புகுத் தித் தந்தருளும்' என்று வேண்டினுள். விட்டுணு உடனே சலந்தரனுடைய உடலைப் பொருத்தி, தான் மாயமாகி மறைந்து, அவனுடைய உடம்பினுட் பிரவேசித்தார். அப்போது குரங்கு வடிவமெடுத்து வந்த காவலாளர்கள் விரைவில் மறைந்தார்கள். விட்டுணு சலந்தரனுடைய உடம்பினுட்புகுந்து சலந்தரனுய் எழுந்ததை விருந்தைகண்டு, தன்கணவன் உயிர்பெற்றெழுந் தான் என்று எண்ணி, துன்பம் நீங்கி வியந்து துள்ளி, 'என்பிராணநாய கனே, நீ வந்தாயோ' என்று கூறி, அளவிறந்த மகிழ்ச்சியோடு அவனைத் தழுவினுள். அவ்வாறு தழுவிய விருந்தையை விட்டுணு இரவும் பகலும் இறையளவும் பிரியாதவராய்ப் புணர்ந்து காமவின்ப நுகர்ந்து, அவளோடு பலநாள் அந்தச் சோலையிலிருந்தார். இருக்குநாளில் ஒருநாள், சிவாஞ்ஞை யினுல் மாயத்தை மறந்து கண்ணுறங்கினர். அப்பொழுது, விருந்தை அவ ரைப்பார்த்து, 'இவன் வஞ்சகன்! வஞ்சகன்! விட்டுணுவேயாகும்!' என்று அஞ்சி, அழன்று நீங்கி, அருந்ததியையொத்த தன் கற்புநிலை அழிந்ததற்காக வருந்தி உயிர்த்து, தன்னுயிரின்கணுள்ள ஞானத்தினுல் விட்டுணு செய்த மாயங்கள் முழுதையும் தெளிந்து, அவரைநோக்கி, 'முன்பு இங்கே சிங்க வடிவங்கொண்டு வந்தவர் இருவரும் உன்னுடைய காவலாளராகும். அவர் கள் உனக்குப் பகைவர்களாகவர நீ பூமியில் ஓரரசனுகி, குரங்குகளோடு அலைந்து திரிகுதி. என்னுடைய நாயகனைப்போல வந்து வஞ்சத்தினுல் என் னைப் பலநாட் புணர்ந்தனை; ஆதலினுல் உன்னுடைய கற்பிற்சிறந்த மனைவி யைப் பகைவர்கள் மாயையினுற் கவர்ந்துகொண்டு போக, நீ அதனுற் பெரும்பழியைச் சுமக்கக்கடவாய்' என்று சாபமிட்டு, அக்கினிப்பிரவேசஞ் செய்தாள்.

''விட்டுணு விருந்தையின் பிரிவைச் சகிக்கலாற்றுதவராய், அவள் வெந்த சாம்பலிற்புரண்டு, ஆசைக்கடலின் மூழ்கிப் புலம்பி வாடினர். அப் பொழுது பிரமாவுந் தேவர்களும் திருக்கைலாசபதியையடைந்து வணங்கி, விட்டுணுவின் நிலைமையை விண்ணப்பஞ்செய்தார்கள். அருகிலிருந்த உமா தேவியார் அதனைக்கேட்டுப் பேரருள் புரிந்து, ஒரு விதையையுண்டாக்கி, அவர்களிடத்துக் கொடுத்து, 'இதை விட்டுணுவுக்கு முன்னே கொண்டு போயிடுங்கள்' என்றார். அதனைப் பிரமா இருகையாலும் வாங்கிச் சிரமேற் கொண்டுபோய், ஈமத்தில் விருந்தை வெந்த சாம்பலின்மீது விதைத்து, அமிர்தத்தை ஊற்ற, அது விட்டுணுவின்முன் ஒரு துளவமாய் வளர்ந்து ஒரு பெண்ணுருவமாயிற்று. விட்டுணு அப்பெண்ணைக்கண்டு, விருந்தையின் மேல் வைத்த ஆசை நீங்கி, அந்தப் பெண்ணின் மீது ஆசையுற்றார். தேவர்

களும் பிரமாவும் அப்பெண்ணை விட்டுணுவுக்கு மணஞ்செய்து கொடுத் தார்கள். விட்டுணு துளவமென்கின்ற அந்தப்பெண்ணை அழைத்துக் கொண்டு தம்முடைய நகருக்குப்போய், அவளோடு பல போகங்களை அநுப விக்து, அவளை முடிமாலையாகவும் சூட்டிக்கொண்டார்.

"அந்த விட்டுணு, சிவபெருமானிடத்திலே சலந்தராசுரனைக் கொன்ற சக்கராயுதத்தை வாங்கும்படி அவருடைய திருவடிகளைப் பலநாள் ஆயிரமாயிரம் தாமரைமலர்களால் அருச்சித்து, ஒருநாள் ஒரு தாமரை மலர் குறைதலும், தன் கண்ணையே தாமரைமலராக இடந்து சாத்தி, பரம சிவன் உவந்து இடபாரூடராய் தோன்றி அந்தச் சக்கரப்படையை உத வப் பெற்று, அதனால் உயர்வையடைந்தார். சக்கராயுதத்தைப் பெற்ற காரணத்தால், உலகம் அவ்விட்டுணுவை நேமியான் என்று சொல்லும். தக்கனே, பரமசிவன் வேற்றுருவடைந்த திருவருட்டிறத்தை உனக்குச் சொன்னேம். இனி அவர் ரிஷபத்தின்மேலேறுந் தன்மையைச் சொல் வோம்.

"இரண்டாயிரஞ் சதுர்யுகங்கள் சென்றால் அது பிரமாவுக்கு ஒரு நாளும், அந்த நாள் முப்பது கொண்டது ஒரு மாசமும், அவை பன்னி ரண்டு கொண்டது ஒரு வருடமும் ஆகும். இப்படி நூறு வருஷங்கழிந் தால் பிரமாவினுடைய ஆயுள் நீங்கும். அது விஷ்ணுவுக்கு ஒருநாளாம். இவற்றை நூல்களெல்லாம் சொல்லும். கற்றுணர்ந்த பேதையே, நீ இவற்றை அறிகுதி. இவ்வாறே விஷ்ணுவினுடைய ஆயுளுங் கழியும். அப்பொழுது உயிர்களும் அண்டங்களும் அழியும். எல்லா வுலகங்களையும் அக்கினி வியாபித்துண்ணும். அப்பொழுது உலகமெல்லாம் சுடலையாய்ப் பரிசுத்தமுடையதாய்த் தோன்றும். அந்த மகாஸ்மஸானத்திலே ஞான மூதல்வராகிய பரமசிவன் உமையம்மையார் காண நடனஞ்செய்துலாவு வார். இந்த அக்கினிப் பிரளயத்தில் தருமதேவதை அஞ்சி 'யாம் இங்கே இறப்போம்; இனிச் செய்வதென்னை? என்று ஆலோசித்து, 'கங் காதரராகிய சிவபெருமானைச் சரண்புகுந்தால் என்றுமழியாதிருப்போம்' என்று தேறி, இடபத்தினுருவை எடுத்து, சிவபெருமானுடைய சந்நிதியில் வந்து அவரைத் துதித்து, 'அடியேன் இப்பொழுது இறக்குந் தன்மையை மாற்றி, எனக்கு வலியையும் தேவரீருக்கு வாகனமாகும் பேற்றை யுந் தந்தருளும்' என்று பிரார்த்தித்தது. அவர் அதற்கு இறவாத தன் மையையும், வாகனமாய்த் தம்மைத் தாங்குந் தன்மையையும், ஒப்பில் லாத வலிமையையும், அன்பையும், மெய்யுணர்வையும் கொடுத்து, அதனை நோக்கி, 'கிருதயுக முதலிய நான்கு யுகங்களிலும் தருமத்தின் றன்மை இதுவென்று யாவரும் அறியும்படி முறையே நான்கும் மூன்றும் இரண்டும் ஒன்றுமாகிய கால்களைப் பூமியில் ஊன்றிச் சஞ்சரிக்குதி. உன் னிடத்தில் யாம் எக்காலமும் நீங்காமல் இருப்பேம். நீயும் நம்மைவந் தடைந்து அன்போடு நம்மை வாகனமாய்த் தாங்குதி. நீ யாரினுந் தலைமையைப் பெற்றுள்ளாய். நம்முடைய தொண்டர்கள் இயற்றுகின்ற பாவமும் புண்ணியமாம். நம்மைப் புறக்கணித்தவர்கள் பண்ணிய புண் ணியமெல்லாம் பாவமாம். இது திண்ணம். இதனை வேதங்களும் சொல் லும். நம்மிடத்து மெய்யன்புடையவர்கள் செய்யும் பாவமும் அவ்வன் பில்லாதவர்கள் செய்யும் புண்ணியமும் முறையே மாறி அறமும் மறமு

மாவது, யாம் உன்னிடத்து உடலில் உயிர்போல வியாபித்திருக்கும் தன்மையாலாம். உன்னிடத்து யாம் என்றும் உள்ளோம். நீயும் இடபவாகனமாய் நம்மிடத்திருக்குதி. இந்த வடிவையன்றி, மானுட வடிவத்தை, எடுத்தும் நம்மைப் பூசிப்பாய். * அதனையும் அறிகுதி' என்று தருமதேவதைக்கு அருளிச்செய்து, அதனை வாகனமாகக் கொண்டார். அந்தநாண் முதலாகப் பரமசிவன் தம்மை மெய்யன்போடு தியானிக்கும் அடியார்களுக்கு வரங்கொடுக்கும்படி அந்த ரிஷபவாகனத்தின் மேற்கொண்டுவந்து தோன்றுவார். அந்த ரிஷபத்துக்கே தன்னைத் தாங்கும் பேராற்றலைப் பரமசிவன் கொடுத்த செயலை அறிந்தல்லவா, அவர் முப்புர தகனஞ் செய்த காலத்து விட்டுணு இடபரூபங்கொண்டு எம்பெருமானைத் தாங்கினர்? ஆதலினால், ரிஷபத்தைச் செலுத்துதல் சிவபெருமானுக்கோர் பழுதோ? அன்று. இது நிற்க. தக்கனை, எம்பெருமான் நஞ்சையுண்டார் என்று சொன்னாய்; அதனுண்மையைக் கேட்குதி.

"முன் ஒரு காலத்தில், அவுணர்களும் தேவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் போர் புரிந்தபொழுது, இருதிறத்திலும் பற்பலர் விரைவிலிறந்தார்கள். அவர்கள் அதனைக்கண்டு, போரை விடுத்து, நெடுநாள் அழியாமலிருந்து போர் செய்யக்கருதி, சத்தியலோகத்தை அடைந்து பிரமாவை வணங்கி, 'சுவாமீ, சிலவாழ் நாளையுடைய யாங்கள் பலநாள் இறவாமலிருந்து பெரிய யுத்தத்தைச் செய்யும்படி பாற்கடலைக்கடைந்து அதிலுள்ள அமிர்தத்தை எடுத்துத் தந்தருளும்' என்று வேண்டினர்கள். அவர் அதனைக்கேட்டு 'இதனை விட்டுணுவுக்குச் சொல்வோம். அவரே பாற்சமுத்திரத்தைக் கடைந்து அமிர்தத்தைத் தருவார். அதனை உண்டால் நமக்கு மரணம் விரைவில் வராது' என்று சொல்லி, அவர்களோடு பாற்சமுத்திரத்தை அடைந்து, அங்கே சேஷசயனத்தின்மீது அறிதுயில் செய்யும் விட்டுணுவைத் துதித்தார். அவர்அதனை அறிந்து கண்விழித்து எழுந்து, நீங்கள் 'இங்கே வந்த காரணம் என்னை?' என்றார். பிரமா, தேவர்களும் அவுணர்களும் வேண்டிக்கொண்ட குறையைச் சொல்லினர். விட்டுணு அநுக்கிரகார்த்தமாய் 'அவ்வாறுக' என்று கூறி, மந்தர மலையை மத்தாகவும் சந்திரனைக் கடைதறியாகவும் வாசுகியை நாணாகவும் கொண்டு, அந்த நாணை ஒருபுறத்திற் றேவர்களும் மற்றொருபுறத்தில் அவுணர்களும் பிடித்திழுக்கும்படி அவர்களுக்குக் கற்பித்து, மத்தின் அடியையும் முடியையும் முறையே தமது முதுகினலும் கரத்தினலும் தாங்கினர். இப்படி விட்டுணு மத்தைத் தாங்க, இந்திரனும் தேவர்களும் அவுணராசனும், அவுணர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது பாற்கடல் வாய்விட்டதிர்த்தது; தேவர்கள் உலைந்தார்கள்; உலகங்கள் குலைந்தன; மேருமலையுஞ் சலித்தது; அட்ட யானைகள் கத

* மானுடவடிவெடுத்துச் சிவபெருமானைப் பூசித்தமையை, "விட்டுணுவைத் தாங்குதலாற் றன்னின்மிக்காரில்லையெனத் தருக்குற்ற கலுழன் ஒருநாள் அவரோடு திருக்கைலாசத்துக்குச் சென்றபொழுது இடபமானது தன்னுயிர்ப்பினலே சிறகுகள் ஒடிந்து அங்குமிங்கும் உலையுப்படி செய்து அதனை மிக வருத்தியது. அதனையறிந்த சிவபெருமான் இடபத்தை நோக்கி நம்முடைய கட்டளையின்றிக் கலுழனை வருத்தினமையால் இப்பாவந்தீருமாறு மானுடவடிவமெடுத்துக் காஞ்சீபுரத்திற் சென்று, நம்மைப் பூசிப்பாய் எனப் பணித்தருளினர்." என்னுங் காஞ்சிப்புராண சரித்திரத்தாலறிக.

றினர்; அட்டநாகங்கள் பதைத்து வெய்துயிர்த்து ஒடுங்கின. இவ்வாறுகப் பாற்கடலைக் கடையும்பொழுது, கயிறுகிய வாசுகி பொறுக்கலாற்றாது அயர்ந்து மிகுந்த மயக்கம் அடைந்து, வெய்துயிர்த்து, மெய் பதை பதைத்து, வெஞ்சினங்கொண்டு, நாத்துடித்து ஆயிரம் வாய்கடோறும் ஆலாகலவிஷத்தைக் கான்றது. அப்பொழுது பாற்கடலும் விஷத்தை உமிழ்ந்தது. அவ்விஷமானது உகமுடிவிலெழும் சூற்கொண்ட மேகசமூகங்கள்போல இருண்டு, அனேக கூற்றுவர்களுடைய கொலைத்தொழிலையும் அநேக வாயுக்களின் வேகத்தையும் பொருந்தி, அநேகவடவாமுகாக்கினிபோல எங்கும் ஓடிப், பரந்து சூழ்ந்தது. அவுணர்களும் தேவர்களும் இந்திரனும் பிரமாவும் முனிவர்களும்முதலாயினோர் அதனைக்கண்டு ஓடுவாராயினர். விட்டுணு இதனைப்பார்த்து, மந்தரமலையைத் தாங்குவதைக் கைவிட்டு, கவற்சிகொண்டு, 'நாம் இப்பொழுது இந்த நஞ்சைக் காப்போம்' என்றெண்ணி, விஷத்தின் எதிரே போயினர். அது வெகுண்டு அவரைத்தாக்கி, அவருடைய முன்னுள்ள வைரரத்தின நிறத்தைமாற்றி, நீலநிறமாக்கியது. அவரும் எதிர்த்து நிற்கலாற்றாது ஓடினர்.

''விட்டுணு முதலாகிய அனைவரும், உலகங்களை அழிக்குமியல்பினையுடைய அந்த நஞ்சின்முன் நிற்கலாற்றுதவர்களாய், உற்பத்தி நாசமில்லாதவரும் காலகாலருமாகிய பரமசிவன் வீற்றிருக்குந் திருக்கைலாசமலையை அடைந்தார்கள். ஆலாகலவிஷஞ் சுடுதலால் இரிந்த அவர்கள் பரமபிதாமாதாவாகிய பரமசிவனும் பார்வதிதேவியாரும் வீற்றிருக்குந் திருக்கைலாசத்துக்கு ஓடிவந்தமை ஓர் அற்புதமோ! மைந்தர்கள் பயந்தால் தந்தைதாயாரிடத்தன்றி வேறெங்கே போவார்கள்? அடைந்த அவர்கள் யாவரும் ஆலயத்தின் முதற்கடைவாயிலில் வீற்றிருக்குந் திருநந்திதேவரைக் கண்டு, 'இனி நம்முடைய துன்பம் நீங்கியது' என்று துதித்து, நிகழ்ந்தவற்றைச் சொன்னர்கள். அதனைக்கேட்ட திருநந்திதேவர் அவுணர்களையும் தேவர்களையும் அவ்வாயிலில் வேறு வேறுக நிறுவி, பிரமாவையும் விட்டுணுவையும் திக்குப்பாலகர்களையும் அழைத்துக்கொண்டு உள்ளேபோய், அவர்களுள்ளே திக்குப்பாலகர்களை ஐந்தாம் ஆவரணத்தில் நிறுத்திவிட்டு, திருக்கைலாசபதியின் அநுமதிப்படி பிரமவிட்டுணுக்களை அவருடைய திவ்விய சந்நிதானத்தில் விடுத்தார். அவர்கள் இருவரும் கிருபாசமுத்திரமாகிய சிவபெருமானைத் தரிசித்துப் பலமுறை வணங்கித் துதித்து நின்றார்கள்.

''தம்மை மெய்யன்பினோடு வழிபடுபவர்களுக்கெல்லாம் உய்யுந்திறத்தைப் புரிபவரும் முற்றிருருங்குணரும் முழுமுதற்கடவுளுமாகிய பரமசிவன் விட்டுணுவை நோக்கி, 'விட்டுணுவே உன்மேனி வேற்றுருவாகிய காரணம் என்னை?' என்று வினவியருளினர். நீலநிறத்தைக் கொண்ட விட்டுணு மனத்தில் மானம் உண்டாக அக்கடவுளை நோக்கிச் சொல்வார்: 'எம்பெருமானே, தேவர்களும் அவுணர்களும் நெடுநாள் இறவாமலிருந்து போர்செய்ய விரும்பி அதனைப் பிரமாவுக்குச் சொல்ல, அவர் அவர்களை அழைத்துக்கொண்டு அடியேனிடத்து வந்து சொல்லினர். அடியேன் தேவரீருடைய திருவருளைப் பெறுதல்வேண்டும் என்னும் எண்ணமில்லாதவனாய் அமிர்தத்தைப் பெற விரும்பி, அவுணர்களோடும் பிரமாமுதலிய தேவர்களோடும் பாற்கடலை அடைந்து அதனைக் கடைந்தேன். அதினின்றும் ஆலாகலவிஷம் அக்கினியும் அஞ்சுமாறு சீவராசிகளெல்லாம் இறக்கும்படி எழுந்துவந்தது.

அதனைக்கண்டு யாவரும் பயந்து ஓடினர்கள். ஓடாது முன்னின்ற அடியேனுடைய உடம்பை அது வேற்றுருவாக்கித் தாக்குதலும், அதற்காற்றுதேனுய் அவர்களோடு நானும் ஓடிவந்தேன். கருணைநிதியாகிய தேவரீரன்றி அடியேங்களுடைய இடர்கள் யாவையும் மாற்றவல்லார் வேறு யாவர்? உம்முடைய திருவருளைப் பெருமற் பாற்கடலைக் கடையுச் சென்றமையினுல் இவ்வாறுகிய துன்பம் வந்தெய்தியது. ஆதலால் உம்முடைய திருவடிகளை அடைந்தோம். விடமானது அக்கினியைப் போல நெருங்கி அழிக்கும்படி வருகின்றது. வேதங்கள் யாவும் அறிந்து நாடவொண்ணுத பரிபூரணரே, தேவரீர் உமாதேவி சமேதராய் இத் தன்மையதாகிய பேரழகு பொருந்திய திருவுருவைக்கொண்டு இங்கே வீற்றிருத்தல் அடியேங்களை ஆளுமாறேயன்றி வேறியாது கருமம் கருதி? அக்கினியைப்போல சீற்றத்தோடெழுந்த விஷத்தை மாற்றி எளியேங்களைத் தேவரீர் காத்தருள் புரியும்' என்று விட்டுணு சொல்லித் துதித்து நின்றார். அப்பொழுது, தேவர்களும் அவுணர்களும் தாம் தாம் முன்நின்ற இடங்களில் நின்றபடி கைலாசபதியைத் துதித்தார்கள். அவர் அதனைக் கேட்டு, 'இவ்வோசை யாது?' என்று வினவியருள, பிரமா, 'எம்பெருமானே, தேவர்களும் திக்குப்பாலகர்களும் அவுணர்களும் பிறரும் நஞ்சினுல் வருத்தமுற்றுக் கோயிலின் வாயில்கடோறும் வந்து குழுமி நின்று தேவரீரைத் தோத்திரஞ் செய்கிறார்கள். அதுவே இந்த ஓசை' என்று விண்ணப்பஞ் செய்தார். மகாதேவர் திருநந்திதேவரைக் குறிப்போடு நோக்கி, 'அவர்களை இங்கே அழைத்துவருதி' என்று அநுமதிசெய்தார். அவர் வெளியிலே வந்து அவர்கள் யாரையும் கோயிலினுட் புக விடுத்தார். அவர்கள் வந்து கடவுளை வணங்கித் துதித்து, 'அடியேங்கள் விஷத்தினுல் மிகவும் நொந்தோம். விரைவில் அதனை அழித்து எமக்கு அருள் செய்யும்' என்று பிரார்த்தித்தார்கள்.

இவற்றையெல்லாம் கேட்ட திருக்கைலாசபதி உமாதேவியாரை நோக்கி, 'இவர்கள் கூறியது உன்மனத்துக்கியைவதாமோ? நீ சொல்லுதி' என்று வினவினர். அவர் 'தேவர்கள் உம்மையே சரணென்று வந்தடைந்தார்கள். ஆதலால் அவர்களுக்கு விரைந்தருள்புரியும்' என்று கூறினர். அதனைக் கேட்ட கடவுள் மகிழ்ச்சியுற்று, தமது திருமருங்கிலே தொண்டு செய்தொழுகுகின்ற சுந்தரரை நோக்கி, 'அந்தக் கொடிய விஷத்தை இங்கே கொண்டுவருதி' என்று கட்டளையிட்டருளினர். சுந்தரர் இனிதென்று அவரை வணங்கிச் சென்று, எங்கும் பரந்த விஷத்தைப் பற்றிக்கொண்டு வந்து கொடுத்தார். கடவுள் அதனை ஒரு திவலைபோல் ஒடுங்கத் திருக்கரத்தில் வாங்கி, தேவர்களை நோக்கி, 'இந்த நஞ்சையுண்போமோ? அல்லது தூரத்திற் செல்ல எறிவோமோ?' என்று வினவியருளினர். அப்பொழுது பிரமா முதலிய தேவர்கள் அவருடைய பாதங்களை வணங்கி நின்று, 'எம்பெருமானே, தேவரீரன்றி இவ்விஷத்தினைத் தாங்கவல்லார் யாவர்! தேவரீர் திருக்கரத்திலேற்றமையால் இது சிறிதுபோலக் காட்டிற்று. இந்தக் கொடிய நஞ்சை இப்பொழுது விடுவீராயின், யாவராயினும் பிழைப்பார்களோ? இப்பொழுது ஒருங்கே முடிந்திடாரோ? எப்பொருளிலும் முதற்பாகமெல்லாம் உமக்கேயன்றே? இது நஞ்சேயாயினும் அடியேங்கள் உய்யும்படி விரைந்து திருவமுது செய்தருளும். இதனையே வேண்டுகின்றோம்' என்று பிரார்த்தித்தார்கள். திருக்கைலாசபதி

அவர்களை நோக்கி, 'இனி நீவிர் அஞ்சுவதொழிமின்' என்றருள்புரிந்து, திருக்கரத்திலேந்திய விடத்தை உட்கொள்ள, அது திருமிடற்றிற் சென்றது. அதனை யாவரும் நோக்கி, 'எம்பெருமானே, இன்றைக்கு எங்களுயிரை நீர் காத்ததற்குச் சான்றாக இது திருக்கண்டத்தில் நிற்கும்படி அருள் செய்யும்' என்று அவரைத் துதிப்பாராயினர். எம்பெருமான், நீல ரத்தினபரணம்போலிருக்கும்படி, அவ்விஷத்தைத் தமது திருக்கண்டத்தில் நிறுத்தி அருள்செய்தார். அவர்கள் யாவரும், உடனே இறந்து பின் பிழைத்தவர்கள்போலச் சொல்லுதற்கரிய மகிழ்ச்சியடைந்தார்கள்.

''அரிபிரமேந்திராதி தேவர்களைத் திருக்கைலாசபதி திருவருளோடு பார்த்து, 'பாற்கடலை இன்னுங் கடையுங்கள்; அமுது எழும், இப்பொழுதே போங்கள்' என்றநுமதி செய்தார். அவர்கள் யாவரும் அக்கடவுளை வணங்கித் துதித்துப்போய்ப் பாற்கடலைக் கடைந்தார்கள். அதினின்றும் அமிர்தமும் மேலாகிய வேறு பல பொருள்களும் தோன்றின. அவற்றையெல்லாம் தேவர்களே பெற்றார்கள். ஆலாகலவிஷத்தைப் பரமசிவன் திருவமுதுசெய்தது தேவர்களுடையஉயிரைப் பாதுகாத்தது. விஷத்தைத் திருவமுதுசெய்த சிவபெருமான் சங்காரஞ்செய்யுங்காலத்தில உயிர்களும் அவற்றிற்காதாரமாகிய உடல்களும் உலகங்களும் ஒடுங்கிய இடமே சுடலையாகும். அந்தச் சுடலையே அக்கடவுள் திருநடனஞ் செய்யுந தானமாம். அதுயாவராலும் அறிதற்கருந் தகுதியையுடையது. அதுவுமன்றி எம்பெருமான் மகாசங்காரஞ் செய்யுங் காலத்தில் எங்கும் வெளியிடமாய்ச் சுடலையாகும். அந்தச் சுடலையில் உமாதேவியாருந் தாமுமாய் நிற்பர். இது தவறே! அப்பெருமான் கங்கையைத் திருமுடிமேற்சூடிய சரித்திரத்தை இனிச் சொல்வாம். தக்கனே, கேட்பாய்.

''முன்னொருஞான்று, உமாதேவியார், திருக்கைலாசமலையிலுள்ள சோலையிலே ஒரு விளையாட்டாக ஒன்றும் பேசாதவராய்ச் சிவபெருமானுக்குப் பின்புறத்தில் வந்து, அவருடைய இரண்டு கண்களையும் தமது திருக்கரங்களாற் பொத்தினர். அதனால் எவ்வுயிர்களும் வருத்தமடையும்படி புவனங்கள் எங்கும் இருள் பரந்தது. சிவபெருமானுடைய திருக்கண்களிலேயே எல்லாச் சோதியுந் தழைத்த தன்மையினால், சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய இவர்களின் சுடர்களும் மற்றைத் தேவர்களின் ஒளிகளும் பிற ஒளிகளும் அழிந்து எல்லாம் இருண்மயமாயின. அம்மையார் சிவபெருமானுடைய திருக்கண்களைப் பொத்திய அக்கணமொன்றில், உயிர்கட்கெல்லாம் எல்லையில்லாத ஊழிகாலங்களாயின. அதனைப் பரமசிவன் நோக்கி, ஆன்மாக்களுக்கு அருள்செய்யத் திருவுளங்கொண்டு, தம்முடைய திருநெற்றியிலே ஒரு திருக்கண்ணை யுண்டாக்கி, அதனால் அருளோடு நோக்கி, எங்கும் வியாபித்த பேரிருளைமாற்றி, சூரியன் முதலாயினோர்க்கும் சிறந்த பேரொளியை ஈந்தார். புவனங்களிலுள்ள பேரிருள் முழுதும் நீங்கினமையாற் சிவராசிகள் உவகைமேற்கொண்டு சிறப்புற்றன. பரமசிவனுடைய செய்கையை உமாதேவியார் நோக்கி அச்சமெய்தி அவருடைய திருக்கண்களை மூடிய இரண்டு திருக்கரங்களையும் துண்ணென்று எடுத்தார். எடுக்கும்பொழுது, தமது பத்துத்திருவிரல்களிலும் அச்சத்தினாலே வியர்வை தோன்ற அதனை உமாதேவியார் பார்த்து, திருக்கரங்களையுதறினர். அவ்வியர்வை பத்துக் கங்கைகளாய் ஆயிரநூறுகோடி முகங்களைப் பொருந்திச் சமுத்திரங்கள்

போல எங்கும் பரந்தன. அவற்றை அரிபிரமேந்திராதி தேவர்களும் பிறருங் கண்டு, திருக்கைலாசபதியையடைந்து, வணங்கித் துதித்து, 'எம்பெரு மானே, இஃதோர் சலப்பிரவாகம் எங்குங் கல்லென்று ஒலித்து யாவரும் அழியும்படி அண்டங்கள் முழுதையும் கவர்ந்தது. முன்னுளில் விஷத்தை யுண்டு அடியேங்களைக் காத்ததுபோல இதனையுந் தாங்கி எங்களைக்காத் தருளும்' என்று வேண்டினர்கள். திருக்கைலாசபதி அந்நதியின் வரலாற்றை அவர்களுக்குச் சொல்லி, அதனை அங்கே அழைத்து, தமது திருச்சடையி லுள்ள ஓர் உரோமத்தின் மீது விடுத்தார். அதனைக்கண்ட பிரமாவும் விஷ் ணுவும் இந்திரனும், 'எம்பெருமானே, இவ்வண்டங்களையெல்லாம் விழுங் கிய கங்கை உமது அருட்சத்தியாகிய உமாதேவியாருடைய திருக்கரத்திற் றோன்றியமையாலும், உமது திருச்சடையிற் சேர்த்தமையினுலும், நிருமல முடையதாகும். அதில் எங்கள் நகரந்தோறும் இருக்கும்படி சிறிது தந்தரு ளும்' என்று வேண்டினர்கள். பரமசிவன் தம்முடைய திருச்சடையிற் புகுந் திருந்த கங்கையிற்சிறிதை அள்ளி, அம்மூவர்களுடைய கைகளிலும் கொடுத் தார். அவர்கள் வாங்கி மெய்யன்போடு வணங்கி, விடைபெற்றுக்கொண்டு தத்தம் நகர்களையடைந்து அங்கே அவற்றை விடுத்தார்கள். அந்த மூன்று நதிகளுள், பிரமலோகத்தை யடைந்து கங்கை பகீரதராசனுடைய தவத்தி னுற் பூமியின் மீண்டுவர, சிவபெருமான் பின்னும் அதனைத் தமது திருமுடி மேற் றாங்கி, பின் இப்பூவுலகிற் செல்லும்படி விடுத்தார். அந்நதி சகரர்கள் யாவரும் மேற்கதிபெற்றுய்யும்படி அவர்களுடைய எலும்பிற்பாய்ந்து சமுத் திரத்திற் பெருகியது. இதனையொழிந்த மற்றை இரண்டுநதிகளும் தாம் புகுந்த இடங்களில் இருந்தன. நமது அருட்சத்தியாராகிய உமையம்மையா யருடை திருக்கரத்திற்றோன்றிய கங்காஜலம் உலகங்களை அழியாவண்ணம் அடக்கிய உண்மையையல்லவா, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான் முன்னுளில் ஒரு பெண்ணைச் சடையிலே தாங்கினர் என்று நீ சொல்வது! தக்கனே இன்னும் அவ்விறைவர் உமாதேவியாரைப் பாகத்தில் வைத்திருப் பார் என்றாய். அவ்வம்மையார் அக்கடவுளுடைய திருவருளே. அவர் எல்லாவற்றையும் படைத்துக்காக்கும் வண்ணம் பின்னமாய், தாமோர் பெண்ணுருக்கொண்டுபொருந்துவார். ஆதலால் அவ்வுமாதேவியார் வந்த வரலாற்றைச் சொல்வேன் கேட்பாய்.

''முன்னே ஒரு பிரமா தோன்றியிருந்தகாலத்தில், பல வுயிர்களையும் படைக்கக்கருதி, முதலிலே சனகர் முதலாகிய நான்கு குமாரர்களையும் உண்டாக்கினர். அவர்கள் ஞானத்தையடைந்து நல்ல தவத்தர்களாயினர் கள். அதன் பின்பு பிரமாவினுடைய சிருட்டித்தொழில் விருத்தியடையா தாக; அவர் இனிச் செய்வதென்னை என்று துன்பமுற்றிரங்கி, சனகர் முத லிய நான்கு குமாரர்களோடும் விட்டுணுவை யடைந்து வணங்கி, தமது குறையைச் சொல்லி நின்றார். விட்டுணு அதனைக்கேட்டு, 'இக்குறை சிவ பெருமானலன்றி நம்மால் முற்றுப்பெறாது' என்றுகூறி அவர்களோடு திருக் கைலாசமலையை அடைந்து, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, 'தேவநாயகரே கேட்டருளும். பிரமன் சிருட்டிசெய்ய நினைத்தான். அது கைகூடிற்றில்லை. இக்குறையை நீக்கியருளும்' என்று விண்ணப்பஞ்செய் தார். திருக்கைலாசபதி விட்டுணுவையும் பிரமாவையும் சனகர் முதலிய நான்குமுனிவர்களையும் நோக்கித் துகளாக அழித்து, ஏகமாயிருந்து. தமது

இடத்திருப்புயத்தை நோக்க், அதினின்றும் உமாதேவியார் தோன்றினர். அவரை இடப்பாகத்தில் இருத்தி, அவரோடுகலந்து வீற்றிருந்து, விட்டுணுவையும் பிரமாவையும் சனகாதி நால்வரையும் உண்டாக்கினர். அவர்கள் அக்கடவுளை வணங்கித் துதிப்ப, அவர் விட்டுணுவை நோக்கி, 'நாம் நமது அருட்சத்தியாகிய உமையோடு சேர்ந்தோம். இனிப் பிரமனுடைய படைத்தற்றொழில் முன்போலக் கைகூடும். போவாய்' என்றருள் செய்தார். விட்டுணு முதலாகிய அவர்கள் அவனைக் கேட்டு, மகிழ்ச்சியுற்று, 'யாம் இனி உய்ந்தோம்' என்று கூறி, பரமபிதாவாகிய சிவபெருமானையும் உமாதேவியாரையும் மீட்டும் வணங்கி, திருக்கைலாசமலையை நீங்கிப் போயினர்கள். பின்பு பிரமா சீவராசிகளைப் படைப்பாராயினர். பரமசிவன் உமாதேவியாரோடு வீற்றிருந்தருளுதலால் ஆண்பெண்ணுகிய இருபால்களும் ஆசையோடு சேர்ந்து இன்பமெய்த, ஆன்மாக்கள் மிகவும் விருத்தியாயின. பிரமாவினுடைய படைப்புத்தொழில் நன்றுக நடந்தது. சிவபெருமான் பிரமாவினுடைய படைப்புத்தொழில் கைகூடும்படி தம்முடைய அருளையே ஒரு பெண்ணுகத் தந்து, நம்மிடத்து வைத்த திருவருளினால் அச்சத்தியோடு வீற்றிருப்பதை நீ அறியாய். மதியில்லாத தக்கனே, ஏனைத் தேவர்கள்போல் நமது கடவுளையும் நினைத்தாய். அங்கப் பிரத்தியங்க சாங்க உபாங்கமாக எங்கும் காணப்படும் வடிவமெல்லாம் சத்தியே; அந்தந்த வடிவச் சத்திமயமாகி நிற்பவர் சிவபெருமானும். இதனை வேதாகமங்கள் சொல்லும். இனி, சத்தியும் சிவமுமாகிய அவரிருவரும் ஒரு புத்திரனைப் பெற்ற வரலாற்றைச் சொல்வோம் கேட்குதி.''

திருச்சிற்றம்பலம்.

::::::::

## கயமுகனுற்பத்திப் படலம்.

''முன்னெரு காலத்திலே, இந்திரன் தேவசேனைகள் சூழச் சென்று, அசுரனுகிய அசுரேந்திரனோடு போர்செய்து வென்று, வித்தியாதரர் முதலாயினோர் வாழ்த்த மீண்டு விண்ணுலகத்திற் போயினன். போதலும், அவனுக்குப் புறங்கொடுத்த அசுரராசன் பொருமையினுற் புழுங்கி, மனம்மிகவாடி, 'பாவியேனுக்கு இனிச் செய்யத்தகுவது என்னை?' என்று உன்னி மிகவருந்தி, 'அஞ்சும்படி என்னைப் பொருத தேவர்களைப் பொருது வெற்றிகொண்டு எனக்கும் அப்புகழைச் சூட்டுதற்கு நம்முடைய குலத்தில் ஒருவரும் இல்லையோ?' என்று கூறி, தங்கள் குருவாகிய சுக்கிராச்சாரியரை அடைந்து வணங்கி, 'இந்திரன் தேவர்களோடு வந்து என்னுடன் போர்செய்தபொழுது யான் சேனைகளோடு அவனுடன் பொருது அவனுக்குத் தோற்றுப் புறந்தந்தேன்; நம்முடைய மரபிலுள்ள வீரர்களாவரும் இறந்தார்கள்; நாம் மிகவும் மாசடைந்தோம்; துன்பத்தையே கரையாகவுடைய பழியென்னும் சமுத்திரத்தில் ஆழ்ந்தோம்; முன்பு நமக்குடைந்த தேவர்கட்கு நாம் இப்பொழுது அழிவுற்றேம்; பேராற்றலையிழந்தோம்; அவுணர்கள் அழியுங்காலம் வந்தெய்தியதோ? எனக்கு அதனைச் சொல்லும். தமது சிறுவர் பெருமையிற் பிழைபடுபவராயின், அவர்களைத் தெளிவித்துப் பற்பல உறுதிகளைக் கொளுத்தி உயர்ந்த நெறியிற் செலுத்துதல் குரவர் கடனும். அதனை நீரே அறிவீர். ஆதலால் நாம் உய்யும் திறத்தைச் சொல்லும்' என்று கூறினன்.

''அதனைக்கேட்ட சுக்கிராச்சாரியர் 'அரசனே நீ மனவருத்தமடையாதே' என்று அவனைத் தேற்றி, மேல்வருவதனைக் கருத்திலுன்னித் தெரிந்து, அவன் மகிழும்படி ஒன்று சொல்வார்: சிவபத்தியிற் சிறந்தவரும் ஐம்புலன்களை வென்றவரும் பிரமதேவருடைய மனத்திலுண்டானவரும் ஆகிய வசிட்டர் என்னும் முனிசிரேட்டர் ஒருவர் உளர். அவருடைய மரபில் வந்தவரும் சகல வேதங்களையும் அறிந்தவரும் அறிஞரிலறிஞரும் ஞானநெறியில் நிற்போரும் ஆகிய மாகதரென்னும் முனிவர் மோக்ஷத்தையடைதல் வேண்டுமென்னும் விருப்பத்தினாலே தவஞ்செய்து கொண்டிருக்கின்றார். அவரிடத்தே ஓரசுரகன்னிகையைப் போய்ச் சேரும் படியனுப்புவாயாயின், அவள் அம்முனிவரோடு புணருங்காலத்தில் யானை முகத்தையுடைய ஒரு பாலகன் உங்களுக்கு அரசனாகப் பிறந்து சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரிவான். பரமசிவன் வந்து அவனுக்கு மேலாகிய செல்வத்தையும் வலிமையையும் கொடுப்பார். வரம்பெற்ற அவ்வசுரன் தேவர்களுடைய செல்வங்களை மாற்றி எவ்வுலகங்களையும் ஆளும் அரசனுவான்' என்று சொல்லினர். அசுரராசன் அதனைக்கேட்டு, ஆசாரியருடைய பாதங்களை வணங்கி, 'இது நன்று நன்று. நீர் பணித்தவாறே செய்வேன்' என்று கூறி, விடைபெற்றுக்கொண்டு விரைவில் மீண்டு தன்னிருக்கையை அடைந்து, தன் குலத்திற் பிறந்தவளும் பேரழகிற் சிறந்தவளுமாகிய விபுதை என்னும் அசுரகன்னிகையை அழைத்து, 'என் அன்னையே, என் சொல்லொன்றைக் கேட்டு என்னுடைய துன்பத்தை நீக்கக் கடவாய்' என்றான். அது கேட்ட விபுதை 'உன் குற்றேவல் செய்யும் அசுரகுலத்திற் பிறந்த யான் உனக்குச் செய்வதென்னை? எனக்கிசைந்ததைச் சொல்லுதி; செய்வேன்' என்றாள். அசுரராசன் அவளை நோக்கி, 'பெண்ணே உன்குலத்தோர்களைத் தேவர்கள் பொருது புறந்தரச்செய்து மீண்டுபோனதை நீயும் அறிவாயல்லவா? அந்தத் தேவர்களை வெல்லுதற்கு நங்குலத்தில் ஒருவருமில்லை. அது உன்னால் முடியவேண்டும். அது முடிதற்கேதுவை கேட்பாய். நீ மேருமலையின் தென்சாரிலே அருந்தவத்தைச் செய்துகொண்டிருக்கின்ற மாகதன் என்னும் முனிவன்பாற்சென்று, நீங்குதலின்றிப் பலநாள் அவன் குறிப்பறிந்தொழுகி. நல்ல சமயம் பார்த்து, அவன்செய்யுந் தவத்தைத் சிதைத்து, அவனைப் புணர்வாய். புணர்ந்தால், உன்னிடத்தில் ஒரு குமாரன் பிறந்து, பூவுலகங்களையும் வானுலகங்களையும் வலிதாகக் கவர்ந்து, வீராதிவீரனுய்ப் பகைவர்களை வென்று, எங்கள் துன்பத்தை நீக்குவான். தாயே நான் சொன்னவாறே செய்குதி' என்று கூறினன்.

''அசுரேந்திரனுடைய சொல்லைக் கேட்ட விபுதை மாகதமுனிவரிடத்திற் போய், அவருடைய தவவலியை நோக்கி, 'ஆ கொடிது! இவனேயன்றி வேறு யார் இத்தவத்தைச் செய்யவல்லார்! நான் இவனை மயக்கிச் சேர்வது எவ்வாறு? சமுத்திரங்களெல்லாவற்றையும் உண்ணும்படி ஓங்கியெழுகின்ற வடவாமுகாக்கினியை மேகந் தணிக்கவல்லதோ! அது அப்படிச் செய்யவல்லதெனின், மன்மதபாணங்களெல்லாம் ஒருங்குசென்று இம்முனிவனை வாட்டி இவனுடைய துறவையும் மாற்றும். மிக மேலாகிய தவத்தில் நிற்கும் இம்முனிவன் யானே அல்ல, மேனகை என்பாள்

வரினும் பார்க்கமாட்டான். நமது அரசன் இதனை அறியான்போலும். அதனற்றான் இவனைப் போய்ப் புணருதி என்று எனக்குக் கற்பித்தான். நான் அதற்கு இசைந்தவாறு நன்று நன்று!' என்று நகைத்துநின்று, 'யான் திரும்பிப் போந்தேனையின், பகைவர்களாகிய தேவர்களுக்குத் தோற்று வருந்துகின்ற நம்மரசன் ஏன் வாளா வந்தாயென்று மீளவும் என்னை அனுப்புவான். ஆதலால் இந்த முனிவனை என்னிடத்து ஆசை வைத்து வந்து எனக்கு நாயகனுகும்படி தவஞ்செய்து இவனுடைய அமையத்தையும் பார்ப்பேன்' என்று எண்ணி, தம்மை நம்பிவந்தடைந்தோர்க் கருள்புரிகின்ற திருக்கைலாசபதியினுடைய திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு, மாகதமுனிவருக்கெதிரே நின்று, நெடுங்காலம் அருந்தவத்தைச் செய்தாள். அநேகநாள் கழிந்தன.

''விபுதைசெய்த தவத்தினுலும் வரன்முறை தவருத ஊழினுலும் அங்கே ஒரு களிற்றியானை பெண்யானையோடு புணர, அதனை மாகத முனிவர் ஆசை மிகும்படி பலகாலும் நோக்கி, மந்திரச்செயலை மறந்து, முன்பு மனத்திற்கொண்ட பொருளை வாளாவிட்டு, காமவலையிற் சிக்கிச் சோர்ந்து, இறந்தவர்போல மயங்கி, உயிரொன்றை மாத்திரம் சுமந்து, 'இத்தன்மையாகிய ஒரு புணர்ச்சியை இன்றைக்கு யான் பெறுவேனையின் பிறவிப்பயனை அடைந்தவனுவேன்' என்று கூறி, முன்செய்த தவக் குறைக்கு இரங்கி, 'இதனல் எனக்குப் பழியே நிலைபெறுமாயினும் இன்னும் காலநீடிக்குமாயின் காமநோய் தின்று என்னுயிரைக் கொல்லும். ஐயோ இனிச் செய்வதென்னை?' என்று மனத்தோடுசாவி, விஷந் தலைக்கொண்டாற்போல வருந்துகின்ற காமாக்கினி சிறிதும் தணிதலின்றித் தம்முயிரையலைக்க, 'இனி நம்மாலாவதென்! உயிரோடிருந்தாற் பின்னும் தவத்தைச் செய்யலாம். உயிர் நீங்கினற் பயன் யாது?' என்று புணர்ச்சியின்மேல் மனம்வைத்து, தவத்தைவிடுத்து, விபுதையினிடத்திற் போதற்கெண்ணினர். அப்பொழுது அவள் மாகதமுனிவர் காமத்தினல் வருத்தமுறுவதையும் பிறவற்றையும் பார்த்து, நமதெண்ணம் முழுதும் முடிந்ததென்று எல்லையில்லாத மகிழ்ச்சியடைந்து, 'இதுவே அதற்குத்தக்க காலமும் இடமும், இதற்கு வேறு தீங்கில்லை. இந்தப் புணர்ச்சியைத் தவமே முற்றுவித்தது' என்று மிக விரைந்தெழுந்து, அம்முனிவரையணுகி, அவருக்கு அன்புண்டாகும்படி அவருடைய பாதங்களை வணங்கி நின்ருள். முனிவர் அவளுடைய உறுப்புக்கள் எல்லாவற்றையும் நோக்கி, பின்னும் ஆசை அதிகப்படப் பித்தர்போல மயங்கி, 'இவள் கன்னிகையும் காந்தருவ மணத்திற்குரியவளும் ஆனலன்றே என்னுயிர் உய்யும்' என்றெண்ணி, 'நீயார் கன்னிகையோ?' என்று வினவினர். அவள் 'அவ்வாறேயாம்' என்ருள். முனிவர் நீ 'நம்மிடத்து வந்த காரணம் என்னை? விரைந்து கூறுதி' என்ருர்: அவள் 'முனிவரே நீர் எனக்குக் கணவனுகும்படி பல நாட் பெருந்தவஞ்செய்தேன். இன்று அது முற்றுப்பெறுதலால் உம்மைத் தழுவும்படி வந்தேன்' என்ருள். முனிவர், சிறிதும் வருத்தமின்றி அமிர்தத்தைப்பெற்ற மனிதர்களைப்போல மகிழ்ச்சியுற்று, 'உன்பொருட்டாக நான் பலநாட்செய்த பெருந்தவமும் என்பொருட்டாக நீ பலநாட்செய்த பெருந்தவமுமன்றே எங்களிருவரையும் இங்கே அன்புறக் கூட்டியது. நாமிருவேமும் யானையினுருவெடுத்துக் கூடி இன்புறுதல் வேண்டும். நீ

பிடியினுருவைக் கொள்ளுதி' என்றூர். அவளும் பெண்யானையாய்த் தோன்றிப் பின்னும் அளவில்லாத ஆசையை மூட்ட, அம்முனிவரும் களிற்றியானையாகித் துதிக்கையை நீட்டித் தழுவி இன்பநுகர்ந்து ஆசை நீங்கினூர். அப்பொழுது, பிரமா முதலிய தேவர்களுடைய நித்தியகரு மானுஷ்டானங்களைக் கெடுக்கும்வண்ணம் கயமுகனென்னும் அவுணன் உதித்தான். அவன் கேடகத்தையும் வாளையும் சுழற்றிப் பூமியைச் சூழ்ந்து, மலைகள் துகளாகும் வண்ணம் கால்களை உந்தி எற்றி, இடியும் அஞ்ச ஆர்த்து, கோபம் மிகுந்து, ஆலாகலவிஷம்போலத் திரிந்தான். விபுதை யாகிய பிடியானையின் அளவில்லாத உரோமங்களினின்றும் அநேக அவுண வீரர்கள் கையிற் படைகளோடு தோன்றினூர்கள். கயமுகாசுரன் அந்தச் சேனைகளோடு கூடி ஆரவாரித்தான். தாயுந்தந்தையும் அவர்களைக் கண்டு பயந்து ஓடி, முன்னையுருவங்களைக் கொண்டார்கள்.

''மாகதமுனிவர் முன்னுணர்வுதோன்ற நின்றிரங்கி ஏங்கி, ஊழ் முறையை நினைந்து வருந்தி, தன்முன் நின்ற விபுதையைக் கோபித்துப் பார்த்து, 'நீ எக்குலத்தில் வந்தாய்? நினைத்தது யாது? சொல்லுதி' என்றூர். அவள் தன்குலத்தையும் வந்த செய்கையையும் சொல்லி நின்றூள். முனிவர் அவ்வரலாற்றை அறிந்து, 'பூமியிலுள்ள சராசரங்களுக்கும், மேலோராகிய தேவர்குழுவுக்கும் யானே துன்பத்தை உறுவித்தேன்' என்று அக்கினியிற்பட்ட தளிர்போல வாடி, துன்பக்கடலுள் ஆழ்ந்து, சிறிதுபொழுது இரங்கி, பின் ஒருவாறு தேறி, 'பெண்ணே, நும்மரசனுகிய அசுரேந்திரனுடைய மெலிவும், உன்னெண்ணமும், மோகூத்தை யடைந்துய்யும்படி யான் பலநாட் செய்த தவமும், பூவுலகமும், விண்ணுலகமும் முடிந்தனவே. இனி நீ விரைந்து போகுதி' என்றூர். அவள் அம்முனிவரை வணங்கிச் சென்று, அசுரேந்திரனை அடைந்து, நிகழ்ந்தனவற்றையெல்லாஞ் சொன்னுள். அவன் எல்லையில்லாத மகிழ்ச்சியுற்றிருந்தான். மாகதமுனிவர் முன்போலத் தவஞ்செய்யப் போயினூர்.

''கயமுகாசுரன் அவுணசேனைகளோடும் எல்லாத் தேசங்களிலும் சென்று, மனிதர் முதலாகிய உயிர்களை வாரியுண்டு, இரத்தத்தைப் பருகித் திரிவானுயினன். கயமுகனும் அவனைச் சூழ்ந்த சேனைகளும் இவ்வாறுக நாடோறும் பல உயிர்களைக் கவர்ந்து உண்ணுதலால் அவைகள் அழிந்தன. முனிவர்களும் தேவர்களும் வருந்தினர். வேதாசாரம் இறந்தது. கயமுகாசுரனுடைய இயற்கைகளை அசுரேந்திரன் அறிந்து, குருவாகிய சுக்கிராசாரியாரை அவனிடத்தனுப்பினன். அவர் போய், கயமுகனை நோக்கி, 'யான் உங்கள் குலத்துக்குக் குருவாயுள்ளேன். வேதங்களின் நுண்பொருள்களை அறிந்துள்ளேன். வெள்ளியென்னும் பெயரினேன். உங்கள் குலத்தரசனும் சிங்கம்போன்ற வலியையுடையனுமாகிய அசுரேந்திரன் அனுப்ப உனக்கேற்ற சன்மார்க்கங்களை உபதேசிக்கும்படி இங்கு வந்தேன்' என்று அன்போடு கூறினர். கயமுகாசுரன் கேட்டு, அவருடைய பாதங்களை வணங்கி, 'நம் குலத்தோர்க்கெல்லாம் குருவாகிய நீர் அருளினுலே அடியேனுக்கு உறுதியைப் போதிக்கின்றீர். இதனினுஞ் சிறந்ததாகப் பெறும் பேறெறன்றுளதோ' என்று கூறினன். அப்பொழுது, அவனைச் சூழ்ந்த அவுணர்கள் யாவரும் மனத்துக்கொண்ட

தீவினைகளை நீக்கி நம்மரசருடைய ஆசாரியர் இவர் என்று வெள்ளியினுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்கள்.

"குருவாகிய வெள்ளி கயமுகாசுரனுடைய முகத்தை நோக்கி, சிவபெருமானுடைய திருவருளால் இவ்வாறு சொல்லுகின்றார்: 'நீ உயர்ந்த தவத்தைச் செய்கின்றிலை; சிவபெருமானை யுணர்கின்றிலை; பகைவருடைய மாயங்களையும் வெற்றியையும் சீரையும் வலிமையையும் சிறிதும் தேர்கின்றிலை; இவ்வுடலம் நில்லாதென்பதையுங் கருதுகின்றிலை; பலநாள்கள் வாளா கழிந்துவிட்டன. மதியில்லாதவனே, நீ என்ன செய்தாய்! காமமுதலாகிய பகைகளை வென்று தவஞ்செய்து சிறந்த வலிமையைப் பெற்று உன் பகைவர்களாகிய தேவர்களைச் செயித்துப் பழைய செல்வங்களை யடைந்தாயில்லை; இம்மையிலே இன்பத்தையும் புகழையும் இழக்கின்றாய். கழிந்த பிறப்பிலும் இன்பமென்பதை அடைந்திலை. வருபிறப்பிலும் அதனை நீங்கினை போலும். ஆயின், பின்னை எப்பிறப்பிலே இன்பம் அநுபவிக்க இருக்கின்றாய்! ஆக்கமும், வலிமையும், சிறப்பும், ஆயுளும், அழகும், ஊக்கமும், மோகமும் ஆகிய இவைகளெல்லாம் தவங்காரணமாக உண்டாவனவன்றே? வீணே கழிந்த இந்நாள்காறும் அத்தவத்தினைச் செய்யாது அப்பேறுகளையெல்லாம் நீ இழப்பதென்னையோ? தருமம், வித்தை, சந்ததி, கீர்த்தி, வலி, வெற்றி, திரவியம், பெருமை, இன்பம், விரதம், சீலம், ஞானம் ஆகிய இவைகளெல்லாம் யமன் நம்மை அழைக்குங்காலத்தில் நினைத்தால் வந்து கூடுமோ? யமனுகிய வலிஞன் காலமென்னும் வலியை, வீசி பூமியென்னுந் தடாகத்திலுள்ள உயிர்களாகிய மீன்களை வாரி, முன்னமே இழுத்துக் கொண்டு நின்றான். அவைகள் வாழ்நாண் முடிவென்னுங்கரையைச் சேரும் பொழுது அவனுடைய கையிலகப்பட்டு மெலிவோடிறக்கும். இவ்வுடம்பு பெறுதற்கரியதென்பதனை அறிந்திலை; அதில் இவ்வுயிர் நிலைத்து நில்லாதென்பதனையும் அறிந்திலை; இவ்வியல்புடைய உயிர் இவ்வுடம்பினுட் பல நாட்டங்கியிருக்கவேண்டும் என்பதனையும் நினைத்திலை; பூமியிலுள்ள உயிர்களை இறக்கும்படி உண்டிருப்பதுதானு நீ பிறந்து பெறும் பயன். உன்னிடத்து மந்திரமுமில்லை, மாயமுமில்லை, ஒரு வரமுமில்லை, உபாயமுமில்லை, பெரியோர் தருகின்ற படைகளொன்றுமில்லை. தேவர்கள் யாவரும் சேனைகளாய்ச் சூழ இந்திரன் உன்மேற் போருக்கு வந்தால் நீ என்ன செய்வாய்? பரிசம், ரசம், சப்தம் ஆகிய சிறுபயன்களை விரும்பி, பகைவர்கள் செய்கின்ற சூழ்ச்சிகளை யறிகிலாய், அவற்றில் அகப்படுகின்ற யானையும் மீனும் அசுணமும் போல, உன்பகைவர்களுடைய சூழ்ச்சியில் இப்பொழுதே நீ அகப்படுகின்றாய். வலிமையுஞ் சீரும் மேன்மையுமின்றி இருந்தாய். ஆதலினுல் இனி எவர்க்கும் மேலோராகிய பரமசிவனைத் தியானித்து மிகப் பெருந் தவத்தைச் செய்குதி. அவர் நீ கேட்ட பல வரங்களையும் தருவார். அதன்பின் தேவர்கள் உன் குற்றேவலைச் செய்வார்கள். நீ உலகங்களுக்கெல்லாம் ஒரு பெரிய அரசனுயிருப்பாய்' என்று சுக்கிராசாரியர் கூறினர்.

"இவற்றைக் கேட்ட கயமுகாசுரன் அவரைக் கைதொழுது, 'முன்னே இவற்றை யாவரேனும் எனக்குச் சொன்னரில்லை. யானும் இவற்றைச் செய்ய அறிந்திலேன். இனி நீர் கூறியபடி தவத்தைச் செய்கின்றேன்.

அதனைச் செய்யுந் தன்மையைச் சொல்லியருளும்' என்றான். குருவர்கிய வெள்ளி அறிவடங்குதற்கேற்ற மந்திரங்களையும் தந்திரங்களையும் அங்க நியாச கரநியாசங்களையும் சங்கற்பத்தையும் புறக்காவல்களையும் விரதவிதி களையும் மற்றைக் கருமங்களையும் அவனுக்கு உபதேசித்து, 'மேருமலையிலே தவஞ்செய்யச் செல்லுதி' என்றார். கயமுகாசுரன் அவுணர்களோடு அவரு டைய பாதங்களை வணங்கி, 'அங்ஙனஞ் செய்கின்றேன்' என்று கூறி, விடை பெற்றுக்கொண்டு, தவஞ்செய்யும்படி சென்றான். அசுரகுரு அவன் இரண்டு காததூரம் செல்லுமளவும் நின்று பார்த்து, 'இனி இவன் தவஞ்செய்யப் போவான்' என்று மகிழ்ந்து, மீண்டுபோய் அவுணர்களுடைய நகரத்தை அடைந்து, தன்னெதிரே வந்த அசுரேந்திரனுக்கு நிகழ்ந்தனவற்றை யெல் லாம் சொல்லினார். அவன் 'இப்போதன்றே நமக் கருள்செய்தீர்' என்று கூறி, அவரைத் துதித்து வணங்கி, அநுமதி பெற்றுக்கொண்டு, முன்போலத் தன்னகரிற் போயிருந்தான். இந்திரனுந் தேவர்களும் இவற்றையறிந்து துன்பமுற்றார்கள்.

''சுக்கிராசாரியருடைய உபதேசத்தினாலே முன்னையியற்கை மாறித் திருத்தமுற்ற கயமுகாசுரன், அவர் கூறியவைகளை மனத்துட்கொண்டு, அவுணர்களோடு தவம் புரியும்படி மேருவினருகாரிற் போய், தவத்திற்கு வேண்டும் உபகரணங்களெல்லாவற்றையும் வருவித்து, ஸ்நானஞ்செய்து சந்தியாவந்தனம் முடித்து, பிராயச்சித்தஞ் செய்து, குருவின் உபதேசப்படி ஐம்புலன்களை அடக்கி, காமமுதலிய குற்றங்களை நீக்கி, ஸ்ரீ பஞ்சாக்ஷரத் தைப் பிரணவத்தோடு செபித்து, அறிவுக் கறிவாயும் உயிருக்குயிராயும் பரம்பொருளாயும் நிருமலராயும் சர்வாந்தரியாமியாயுமிருக்கின்ற பரமசிவ னுடைய திருவடிகளைத் துதித்து, அவருடைய திருவுருவைத் தியானித்து, ஆயிரம் வருஷம் புற்களையும் இலைகளையும் நுகர்ந்தும், ஆயிரம்வருஷம் சிறிது சலத்தைப்பருகியும், ஆயிரம்வருஷம் வாயுவை நுகர்ந்தும் இங்ஙனம் மூவாயிரம்வருஷம் தவஞ்செய்து, பின்பு பிராணவாயுவை யெழுப்பி மூலாக் கினியைச் சுவாலிப்பித்து விந்துத்தானத்திலுள்ள அமிர்தத்தைப்பருகுவானு யினான். இவ்வாறு கயமுகாசுரன் தவஞ்செய்தலைத் தேவர்கள் கண்டு மனம் வருந்தி, 'மிக்க வலியையுடைய இவ்வசுரன் இத்தவத்தைச்செய்து முடிப் பானையின் அண்டங்களையும் புவனங்களையும் அழிப்பானே' என்று நினைத்து, இந்திரனுக்குச் சொன்னார்கள். இந்திரன் அதனைக் கேட்டு, அயர்ந்து, 'நம் முடைய வீரச்சொல்லும் வெற்றியும் ஆண்மையும் மாறினவோ' என்று மனம் மறுகி வாடி இரங்கிப் பொருமி உயிர்த்து அச்சங்கொண்டு, இறந்த வன் போன்று ஒடுங்கி உளங்குலைந்தான். அவன் அடைந்த துன்பச்செயலைச் சொல்லமுடியுமோ! கயமுகாசுரன் அந்நாள்காறும் பரமசிவனைக் காணப் பெறுதவனாய், தன் குருவின் பணியினால் அக்கினியில் நின்று தவஞ்செய்ய நினைத்து, நாற்புறத்திலும் நான்கு அக்கினிசூழ நடுவிலுள்ள ஒரு பெரிய அக் கினியிற் காலைவைத்துப் பஞ்சாக்கினி மத்தியிலே நின்று, பதினாயிரவருஷந் தவஞ்செய்தான். அக்கினிதேவன் அவனுடைய தவத்தை வியந்து நோக்கி அருள்செய்தான். கயமுகன் இவ்வாறுகத் தவஞ்செய்த பொழுது, அவனு டைய உடல் நெருப்பிற் காய்ந்த இரும்புபோல மாசுநீங்கிப் பொன்னினும் மணியினும் பொலிந்து பிரகாசித்து வைரரத்தினத்தின் வலியையும் பெற் றது. அவனுடைய தவத்தைக் கண்ட அவுணர்கள் 'நம்முடைய குலாசாரந்

தவரூவண்ணம் பாதுகாக்கும்படி வந்த இவனுடைய பெருமையும் தவத் தின்றிட்பமும் சொல்லற்பாலவோ? இவன்மீது பூக்களைத் தூவுவோம்' என்று கூறி நறுமலர்களைத் தூவி, உபசாரங்களைச் சொல்லிப் புகழ்ந்து, ஆசீர்வதித்து, தேவர்களுடைய துன்பத்தை நோக்கி அவர்களை ஏசினர்கள். பிரமா கயமுகாசுரனுடைய தவத்தை ஞானத்தாலறிந்து தலையையசைத் தார். தேவர்கள் நடுங்கினர்கள்.

''இவ்வாருகக் கயமுகாசுரன் அருந்தவத்தைச் செய்யும்பொழுது, பரமசிவன் அதனைப் பார்த்து, இடபவாகனருடராய் அவனுக்கு முன்னே வந்து வெளிப்பட்டருளினர். கயமுகாசுரன் அவரைக்கண்டு, தவத்தை விடுத்து, அன்போடு சிரசின்மேற்கைகளைக்கூப்பி நமஸ்கரித்து எழுந்து நின்று தோத்திரஞ்செய்தான். அப்பொழுது சிவபெருமான், 'கயமுகனே, நீ இந் நாள்காறும் செய்த தவத்தினால் வருந்தினாய். இனி வேண்டும் வரங்களைக் கேட்டுப் பெற்றுக்கொள்' என்று சொல்லியருள, அவன் சொல்வானுயினன்: 'எம்பெருமானே, அரிபிரமேந்திராதி தேவர்களும் மற்றை யாவரும் என் னோடு போரில் வந்தெதிர்ப்பாராயின், அவர்கள் யாவரும் எனக்குப் புறந் தரும்படி அருள்செய்தல்வேண்டும். எற்றுவன எறிவன அறுப்பன எய்வன குற்றுவன முதலாகிய படைகள் யாவும் ஒருங்கேவந்தாலும் அவற்றால் யான் இறவாதிருக்கும்வண்ணம் பெருவலியைத் தந்தருளுதல் வேண்டும். தேவர் களாலும் மனுடர்களாலும் அவுணர்களாலும் மற்றையோர்களாலும் விலங்குகளினாலும் யான் இறவாதிருத்தல்வேண்டும். எனக்கு நிகராகிய ஒரு வன் வந்து போர்செய்யினும் அவனுடைய ஆயுதங்களாலும் அழியாவண் ணம் செய்தல்வேண்டும். தேவர்களும் முனிவர்களும் பிறரும் வசிக்கின்ற எல்லாவுலகங்களிலும் என்னுடைய ஆஞ்ஞாசக்கரமும் செங்கோலும் செல் லும்படி அடியேன் அரசியற்றல் வேண்டும். அன்றியும், இன்னும் ஒன்றுளது; அடியேன் பிறருடைய சூழ்ச்சியால் இறந்தாலும் பிறவியுட் புகாதிருத்தல் வேண்டும்' என்று கயமுகாசுரன் பிரார்த்தித்தான். தம்மைநோக்கித் தவஞ் செய்தவற்கு எவ்வரங்களையும் ஈந்தருளும் கருணைநிதியாகிய கடவுள் 'நன்று, அவற்றைப் பெற்றுக்கொள்வாய்' என்று அவனுக்கு அவ்வரங்களைக் கொடுத்து மறைந்தருளினர். கயமுகாசுரன் ஆயுதங்களையும் மற்றை வரங் களையும் பெற்று, தன்கிளைகள் யாவும்சூழ நின்றான். அவனைக்கண்டதேவர் கள் 'உவன் மற்றொரு கயமுகாசுரன்' என்று மயங்கினர்கள். அவன், மழை யின்மையால் வேரோடு வாடிநின்ற காம்ப்பையுடைய பெரிய விருஷம் மழைக்காலத்திற் றழைத்தாற்போலத் தோன்றி, அற்புதமெய்தி உடல் புளகித்து, களிப்பின்மிகுந்து, சிவபெருமானுடைய கிருபைவெள்ளத்துள் மூழ்குவானுயினன். அச்சமயத்தில், அசுரேந்திரனும் குருவாகிய வெள்ளியும் அதனை அறிந்து, கயமுகாசுரனை வந்தடைந்து, 'வெற்றியுண்டாகுக' என்று பல ஆசிகளைக் கூறினர்கள்.

''வரம்பெற்ற கயமுகன் இந்திரனையும் மற்றைத் தேவர்களையும் வென்று, மீண்டு பூமியில்வந்து, அசுரத்தச்சனை நோக்கி, 'இந்தச் சம்புத் தீவின் தென்றிசையிலே யான் வசித்தற்கு ஒரு நகரத்தைச் செய்வாய்' என்று கூறினன். அவன் அங்கே ஒரு நகரத்தை வகுத்து, அதில் ஒரு கோயிலையும் அதில் ஒரு சிங்காசனத்தையும் மனத்தாற் செய்தான். அவற்றைக் குருவா கிய வெள்ளி பார்த்து மகிழ்ந்து, அந்நகர்க்கு மதங்கமாபுரமென்று பெயரிட்

டார். கயமுகன் பத்துக்காத நீளமும் ஐந்துகாத அகலமுமுள்ள அந்நகரத்தின் வீதியை நோக்கி, ஆச்சரியமுற்று, அரக்கர்களும் அவுணர்களும் அசுரேந்திரனும் ஆகிய இவர்களோடு அந்நகருட் பிரவேசித்து, தன்றம்பியர்களாகிய அசுரர்களையும் மற்றையோரையும் அந்நகரிலிருக்கவைத்து, மங்கலங்களோடு தான் கோயிலுட் புகுந்து, சிங்காசனத்தின்மீது வீற்றிருந்தான். அதன்பின் அசுரேந்திரனுடைய மகளாகிய விசித்திரகாந்தி என்பவளை நல்லநாளிலே விவாகஞ்செய்து, அரம்பையர்கள் அசுரப்பெண்கள் நாககன்னியர்கள் வித்தியாதரமகளிர்கள் முதலியபலரை பின் மணஞ் செய்து, தேவர்கள் அசுரர்கள் முதலாயினோர் வந்து வணங்கவும், ஏழுலகங்களிலும் தன் கொடுங்கோலும் ஆஞ்ஞாசக்கரமுஞ் செல்லவும் காமதேனுவும் சங்கநிதி பதுமநிதிகளும் ஐந்தருவும் சிந்தாமணியும் பிரமா முதலிய தேவர்களும் தேவப்பெண்களும் ஏவல்செய்யவும், அரசுசெய்திருந்தான். சுக்கிராசாரியரும் அசுரேந்திரனும் அவனுக்கு மந்திரிகளாயிருந்தார்கள்.

''கயமுகாசுரன் இவ்வாறு அரசியற்றிவருங் காலத்தில் ஒருநாள் தன் முன்வரும் இந்திரன் முதலாகிய தேவர்களை நோக்கி, 'நீவிர் நாடோறும் நம்முன் வரும்பொழுதெல்லாம் உங்கள் கைகளால் சிரங்களில் மும்முறை குட்டி, பின் அக்கைகள் எதிரெதிராகக் காதுகளைப் பற்றக் கால்களாற்றுழ்ந்தெழுந்து, அதன்பின் நமது பணிகளைச் செய்யுங்கள்' என்றான். அதனைக் கேட்ட இந்திரனும் தேவர்களும் மறுத்தற்கஞ்சி, முன்பு நின்று அவன் சொன்னபடியே அப்புன்றொழிலையும் அவன் பணித்த பிற பணிகளையும் நாடோறும் செய்து பழியின் மூழ்கினர்கள். இவ்வாறு வருத்தமுற்ற இந்திரன், பிரம விட்டுணுக்களுக்குத் தன்றுயரைச் சொல்லியிரங்கினன். அவர்கள் 'இந்திரனே நீ வருந்தாதொழி' என்றுதெளிவித்து, இந்திரனுந் தேவர்களுந் தம்மைச் சூழத் திருக்கைலாசமலைக்குச் சென்று, அங்கே திருநந்திதேவர் கோயிலினுள் விடுப்பப் போய், சிவபெருமானைத் தரிசித்து, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். அவர் விட்டுணுவை நோக்கி, 'நீ தேவர்களோடு துன்பமுற்று இங்கேவந்த காரணமென்னை?' என்று வினவியருளினர். விட்டுணு திருக்கைலாசபதியை நோக்கி, 'எம்பெருமானே, கயமுகனென்னும் ஓரசுரன் தவஞ்செய்து பெற்ற வலிமையினாலே தேவர்களையாவரையும் வருத்துகின்றான். அவனுடைய வலியை நீக்குதல் எங்களுக்கரியது. எவர்க்கும் மேலோராகிய கடவுளே உமக்கு அஃதொரு பொருளன்று. ஆதலால் நீர் அவனுடைய உயிரைத் தொலைத்தருளல்வேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் அதனைக் கேட்டு, 'யாம் இனி ஒரு புதல்வனைப்பெற்று, கயமுகாசுரனைக் கொன்று வெற்றிகொண்டு வரும்படி அனுப்புவோம்' என்றருளிச்செய்தார். விட்டுணு முதலிய தேவர்கள் அத்திருவாக்கைச் சிரமேற்கொண்டு, தொழுதகையினராய் ஆடிப்பாடினர்கள். அத்தேவர்களைத் திருக்கைலாசபதி அன்போடு நோக்கியருளி, ''இனி உங்கள் பதிகளுக்குச் செல்லுங்கள்'' என்று விடைகொடுப்ப, அவர்கள் வணங்கி விடைபெற்றுக்கொண்டு போயினர்கள்.

''தேவர்கள் போயபின்பு, சிவபெருமான் உலகமாதாவாகிய உமாதேவியரை நோக்கி, 'நாம்செய்வித்த நந்தனவனத்தைப்பார்ப்போம் வருதி' என்றார். உமாதேவியாரும் 'தக்கதே அருளிச்செய்தீர். நந்தனவனத்துக்கு நான் வருகின்றேன்' என்று கூறினர். வேதப்பொருளாயுள்ள கடவுள் உலக

மாதாவாகிய தேவியாரோடு மிகுந்த பேரழகுடைய அந்நந்தனவனத்துக்குப் போய், அதனியல்புகளை அவரோடு கண்ணுற்று, ஓவியங்களுடைய ஒரு மண்டபத்திற் சென்றார். உமாதேவியார் அதிலுள்ள ஓவியங்களின் அழகுகளெல்லாவற்றையும் ஐம்புலன்களும் ஒரு வழிப்படத் திருக்கண்களாற் பார்த்தார். பக்கத்தில் வருகின்ற சிவபெருமானுடைய ஆணையினாலே அம்மண்டபத்தினடுவே ஒரு பிரணவ எழுத்தே இரண்டுருவுகொண்டு யானைகளின் வடிவாய்த் தோன்றி, உமாதேவியார் காணும்படி புணர்ச்சியில் முயன்றது. அதனை அத்தேவியார் கண்ணுற்று, இஃதென்னையென்று எண்ணி, சிவபெருமானை வணங்கி, ''பிரணவவெழுத்து யானைவடிவாய்ப் புணர்ச்சி செய்வதென்னை?'' என்று விளவினர். சிவபெருமான் அவரை நோக்கி, 'உமையே, கேள். எவற்றிற்கும் மூலமாகிய பெருமைபொருந்திய பிரணவவெழுத்தானது நீ முன்பு இரட்சித்துப் பார்த்தமையினால் இரண்டாகி யானையினுருவுகொண்டு புணருகின்றது. ஆகையால் உன்னுடைய பெருந்தகைமையை நீயும் அறியாய். காட்சிமாத்திரத்தால் இதனைச் செய்தற்குக் காரணமாயுள்ள உன்னுடைய மாட்சிமையை யாமன்றி வேறியாவர் அறியவல்லார். உன்னுடைய திருவருட்செய்கை வேதங்களுக்கும் எட்டாததாகும்' என்று முகமனைகச் சொல்லியருளினர். அந்த யானைகளிரண்டும் நிருமலமாகிய தமது புணர்ச்சியை விட்டு முன்போலப் பிரணவசொரூபமாயின.

''அப்பொழுது ஐந்து கரங்களையும் மூன்றுகண்களையும் தொங்குகின்ற வாயினையும் சந்திரனைத்தரித்த செவ்வானம்போலுஞ் சடையினையும் மும்மதங்களையும் யானை வதனத்தையுமுடைய ஒரு பாலகர் தோன்றியருளினர். அவர் மெய்யன்போடு தியானிக்கின்ற அன்பர்களுடைய அறிவுக்கறிவாயுள்ளவர்; எங்கும் வியாபித்திருப்பவர்; யாவராலும் அறியப்படாதவர்; எவராலும் வணங்கப்படும் இயல்பினர்; சிவபெருமான் இருவர் என்று சொல்லும்படி நின்றருள்செய்பவர்; நான்கு வேதப்பொருளாயுள்ளவர். உலகிலுள்ளோருடைய அஞ்ஞானத்தையும் மனத்துன்பங்களையும் நீக்குதற்காக ஓர் அருளுருக்கொண்டவதரித்தவர். இவ்வியல்புடைய அப்பாலகர் வந்து சிவபெருமான் உமாதேவியார் ஆகிய இருவருடைய திருவடிகளில் மெய்யன்போடு நமஸ்கரித்தார். சிவபெருமானும் உமாதேவியாரும் அவரை எடுத்துத் தழுவி மார்போடணைத்துக் கருணைசெய்தார்கள். சிவபெருமான் அவரை நோக்கி, 'யாவரேயாயினும் யாதொரு கருமத்தைச் செய்யத் தொடங்குதற்கு முன் அது இடையூறின்றி முடிவு பெறவேண்டும் என்று உன்னை வழிபடுவாராயின், அவர் கருத்தின்படி அதனை முற்றுப்பெறச் செய்குதி; உன்னை முன்பு வழிபடாமற் செய்வோருடைய கருமங்களுக்கு இடையூறு செய்குதி. பிரமா விட்டுணு முதலிய தேவர்களுக்கும் மற்றை ஆன்மாக்களுக்கும் நம்முடைய பூதகணங்களுக்கும் பிறருக்கும் அருளோடு நாயகனாயிருக்குதி. கயமுகன் என்னும் அசுரனை வதைத்து விட்டுணுவினுடைய சாபத்தையும் நீக்கிவருதி' என்று அருளிச்செய்து அவருக்குச் சேனைகளாகப் பூதர்களை உண்டாக்கிக்கொடுத்து, உமாதேவியாரோடும் விநாயகக்கடவுளோடும் சோலையை நீங்கித் திருக்கைலாசமலைக்குப்போய், விநாயகக்கடவுளை நோக்கி, 'நீ நம்முடைய கோபுரவாயிலிலே நாயகனாயிருக்குதி' என்று அன்போடு அவரை அங்கேயிருத்தி, தாம் உமாதேவியாரோடு கோயிலினுட்போய் வீற்றிருந்தருளி

னூர். விநாயகக்கடவுள் கோயிலின் வாயிலிற்போய், பூதசேனைகள் யாவும் நெருங்கிச் சூழவும், திருநந்திதேவர் வந்து வந்தனைசெய்யவும், பிரமா முதலியதேவர்கள் வந்து வந்து வணங்கவும், மகிழ்வோடு வீற்றிருந்தார்.

''அதன்பின் ஒருநாள், விட்டுணு சிவபெருமானைத் தரிசிக்கும்படி திருக்கைலாசமலைக்குப் போய்க் கோயிலின் முன்பு அணுகி, திருநந்தி தேவர் சிவபெருமானுடைய அனுமதிப்படி உள்ளே விடுப்பச்சென்று, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார். மகாதேவர் அவரை இருக்கும்படி பணித்து, ஒரு திருவிளையாடலை யுன்னி, உமாதேவியாரை நோக்கி, 'உமையே, நாம் ஒன்று சொல்வோம்; கேள். நீ நம்மோடு சூதாடு. நமக்குத் தோற்றால் நீ அணிந்திருக்கின்ற ஆபரணங்களெல்லாவற்றையும் தருதி; நம்மை வென்றால் நம்மிடத்துள்ள சந்திரன் முதலிய பல அணிகலங்களையும் கைக்கொள்ளுதி' என்றார். உமாதேவியாரும் அதற்கிசைந்தார். விருப்பு வெறுப்பின்றி ஆன்மாக்களுடைய இருவினைகளை முற்றுமுணர்ந்து அவற்றிற்கேற்பத் தனுகரணபுவன போகங்களைக் கொடுத்தருளும் சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, 'நீ இதற்குச் சாகுியாயிருப்பாய்' என்று பணித்தார். அவர் நன்றென்று அதற்குடன் பட்டிருந்தார். சூழ்ந்து நிற்கின்ற ஆலாலசுந்தரர் முதலாயினோர் பரமசிவனுடைய அநுமதிப்படி சூதாடுகருவியையும் ஆடுதற்குரிய பலகையையுங் கொண்டுவந்தார்கள். திருக்கைலாசபதி விட்டுணுவை நோக்கி, 'இக்காய்களை முறையாக வை' என்று கூற அவர் வைத்தார். கடவுள் அம்மையாரை நமக்கெதிரே இருப்பாய் என்று இருத்தி, தாம் முன்பு கவற்றை உருட்டினார். பின்பு தேவியாரும் உருட்டினர். எவற்றினும் மேலோராகிய அவர்களிருவரும் பஞ்சென்றும், பாலியென்றும், ஈரஞ் சென்றும், அஞ்சென்றும், நடம் என்றும், துருத்தி என்றும், வெடியென்றும், இஃது அடியென்றும், இது பொட்டையென்றும், இவைபோன்ற சூதாட்டத்திற்குரிய குழூஉக்குறிகளை எதிரெதிராய் அளவிலவாகச் சொல்லி, கவற்றை யெறிந்தும், கருவிகளை எதிரேறத் தள்ளியும், மகிழ்வோடு விளையாடினர்கள்.

''இவ்வாறு சூதாடும்பொழுது, யாது திருவருள்விளையாட்டாலோ நாம் அதனை அறியோம், பரமசிவன் தம்மோடு விளையாடிய தேவியாருக்குத் தோற்று, அவரை நோக்கி, 'உமையே உன்வலிமை நன்று!' என்று நகைத்து, 'நீ நம்மை வென்றுயல்லை; தோற்றுய்; இனி முன்பு ஒட்டிய படி உன்னுடைய மாலையையும் ஆபரணங்களையும் எமக்குத் தருது' என்றார். தேவியார் அதனைக் கேட்டு, தாம் அக்கடவுளோடு வாதாடுதற்கு அஞ்சி, விட்டுணுவை நோக்கி, 'சாகுியாயிருந்த நீ இதனைச் சொல்லுதி' என்றார். விட்டுணு 'சூது வென்றவர் சிவபெருமானே' என்றார். உமாதேவியார் 'நீ நல்ல உண்மையைச் சொன்னாய். உன் திறம் நன்று நன்று!' என்று அவரைக் கோபித்து, 'நீ இதனைப் பாராதவனுமல்லை; கண்ணனுமாயினை; பக்கத்திலிருந்தாய்; நீ அறியாத தொன்றுமில்லை; எவராலும் அறியப்படாத முதல்வராகிய கடவுள் பொய் சொல்லினும் நீ இந்தப் பொய்யைச் சொல்லலாமோ! உன் உடல் கரிதென்பர், நீ மனமும் கரியாயோ! மாயையிலும் வஞ்சனையிலும் சிறந்த விட்டுணுவே, இறுமாப்பி

னல் இந்தப் பொய்யைச் சொன்னயாதலால் நீ பாம்பாகக் கடவை' என்று சபித்தார். உடனே அவர் பாம்பாயினர்.

''விட்டுணு அதுகண்டு கவற்சியுற்று, சிவபெருமானுடைய பாதங்களே வணங்கி, 'இவ்வுரு அடியேனுக்கு எவ்வாறு நீங்கும்? சொல்லியருளும்' என்றார். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும் பஞ்சபூத தத்துவங்களாய் இவற்றிற்கு மேலாயுள்ள ஏனைய முப்பத்தொரு தத்துவங்களாய் எவற்றிற்கும் மூலகாரணமாய், நான்கு வேதப்பொருளாயுள்ள சிவபெருமான் விட்டுணுவை நோக்கி, 'என்னிடத்துள்ள அன்பினல் நீ பொய்சொல்லி இப்பாம்புருவைப் பெற்றாய்; நாம் உனக்குவந்த இன்னலை நீக்குகின்றேம்; நீ நீங்குவாய். தெக்ஷணதிசையிலே தென்றேசத்திலே ஆலவனமென்று ஓரிடம் இருக்கின்றது. அதில் ஓராலமரமுளது. அதனை நீயும் பார்த்ததுண்டே. இனி நீ அங்கே விரைவிற் போய், அம்மரத்தின் அடியிலுள்ள பொந்தொன்றில் இச்சாபம் நீங்கும்படி பெருந்தவத்தைச் செய்துகொண்டிருக்குதி; அஞ்சாதே. நீ தவஞ்செய்திருக்குங் காலத்தில் நம்முடைய குமாரனுகிய விநாயகன் அங்கே வருவான். அவனை எதிர்கொண்டு தரிசிக்குதி. அப்பொழுது உன்னுடைய இப்பாம்பு வடிவம் நீங்கும்' என்று சொல்லியருளினர். விட்டுணு சிவபெருமானை வணங்கித் துதித்து, விடைபெற்றுக்கொண்டு திருக்கைலாசமலையை நீங்கி விரைந்து சென்று, பெரியோர்கள் வசிக்கின்ற தென்றிசையை யடைந்து, ஆலவனத்திற்போய், எண்ணில்லாத விழுதுகளையுடையதும், சந்திரமண்டலத்தை அளாவுவதும், பூவுலகமெங்கும் நிழல் பரப்புவதும், ஏழுகாதம் அகன்ற அரையையுடையதுமாகிய மிகப் பெரிய ஆலமரத்தின் பொந்திற் புகுந்து, தவஞ் செய்துகொண்டிருந்தார். உமாதேவியாருடைய சாபத்தினல் விட்டுணு பாம்பான சரித்திரத்தைச் சொன்னேம். இனிக் கயமுகாசுரனை மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுள் வென்ற கதையைச் சொல்வாம்.

''முன்னே கயமுகாசுரனுடைய ஏவலினல் நொந்து மனம்வருந்திய இந்திரன் முதலிய தேவர்கள் யாவரும் விநாயகக்கடவுள் திருவவதாரஞ் செய்தமையை யறிந்து மகிழ்ச்சியுற்று, திருக்கைலாசமலையை யணுகி, அவருடைய திருவடிகளை வணங்கித் துதித்தார்கள். அவர் கருணைசெய்து, 'உங்களுடைய குறையாது? சொல்லுங்கள்' என்றார். அதனைக்கேட்ட இந்திரன், 'சுவாமீ, முன்னளிலே, சிவபெருமானிடத்தில் எல்லையில்லாத வரங்களைப் பெற்ற கயமுகாசுரன் என்பவன் எங்களை மிகவுந் துன்பஞ் செய்தான்; அன்றியும் எங்களைப் பெருமையிழந்து நாடோறும் தன்னைவந்து வணங்கும்படி கற்பித்தான்; அதனைச் செய்தோம். வேறும் எங்களுக்குப் புதிதாக ஒரு பணியையுங் கற்பித்தான். அஃதென்னையெனில், நாங்கள் தன்னிடத்துப் போகும்பொழுதெல்லாம் நெற்றியிற்குட்டி காதுகளைப் பிடித்துக் கொண்டு தாழ்ந்தெழும்படி சொன்னன். அத்துயரையும் பட்டுப்பட்டுப்பழியில் [illegible] ஞேம். கோபத்தோடு அவன் சொல்லுகின்ற சொற்களை மறுக்கப் பயந்து, நமக்கு வரும்பழிகளையும் பொறுத்து, நாணமுயின்றி, இன்றுகாறும் அந்தக் குற்றேவலையும் செய்தோம். அவ்வசுரனுடைய உயிரையும் எங்களுடைய குறையையும் நீக்கும்படி தேவரீர் வருவீர் என்று பரமசிவன் எங்களுக்கு அருளிச்செய்தார். ஆதலால் உம்மை வந்தடைந்தோம். எங்களுடைய துன்

பத்தை நீக்கியருளும்' என்று மோதக முதலியவைகளை நிவேதித்து வழி பட்டான். விநாயகக்கடவுள் 'அஞ்சற்க அஞ்சற்க, கயமுகாசுரனைச் சங்க ரித்து உங்களுடைய துன்பத்தை நீக்குவோம்' என்று அருள்புரிந்தார். இந் திரனுந் தேவர்களும் 'நம்முடைய சிறுமையும் துன்பமும் நீங்கின. மறுமை யின்பங்களும் வந்தன. இனி நாம் பெறும் பேறுகள் யாவை!' என்று பேசி மகிழ்ச்சியுற்றார்கள்.

''விநாயகக்கடவுள் கயமுகாசுரனைச் சக்கரிக்கத் திருவுளங்கொண்டு, திவ்விய சிங்காசனத்தினின்றெழுந்து, வாய்தலில் வந்து, சூரியப்பிரகா சத்தையுடைய அசலன் என்பவனுடைய தோளின்மீது திருவடியை வைத்து ஏறிப் போருக்குச்சென்றார். பூதர்கள் வந்து சூழ்ந்து அவருடைய புகழ்களைச் சொல்லித் துதித்தார்கள்; சாமரைகளை வீசினர்கள்; குடைகளை யேந்தினர் கள்; பூக்களைத் தூவினர்கள்; உடுக்கு தண்ணுமை முதலிய பல வாத்தியங் களை இயம்பினர்கள். இந்திரனுந் தேவர்களும் கற்பகப் பூக்களைத் தூவி மிகுந்த மகிழ்ச்சியோடு அக்கடவுளைச் சூழ்ந்து போயினர்கள். விநாயகக்கட வுள் இவ்வாறு பூதசேனைவெள்ளங்களும் தேவர்களும் தம்மைச் சூழ்ந்துவரக் கயமுகனுடைய மதங்கமாபுரிக்கெதிரிற் போயினர். அதனை ஒற்றர்கள் ஓடிப் போய்க் கயமுகனுக்குச் சொல்ல; அவன் கோபமுற்று, இருக்கைவிட் டெழுந்து, ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு தேரிலேறி வாத்தியங்கள் ஒலிக்கவும், கசரததுரகபதாதிகளாகிய ஆயிரம்வெள்ளம் சேனைகள் சூழவும் விரைவிற் புறப்பட்டு, விநாயகக்கடவுளுடைய சேனைகளுக்கெதிரே வந் தான். பூதசேனைகளும் அசுரசேனைகளும் கைகலந்து ஆயுதங்களினுற் பெரும் போர் செய்தன. அசுரர்கள் பூதர்களோடு எதிர்த்து நின்று போர்செய்து, ஆற்றுதவர்களாய்ப் புறங்கொடுத்தோடினவர்களும் இறந்தவர்களும் ஒளித் தவர்களுமாய் அழிந்தார்கள்; கசரததுரகங்கள் அழிந்தன. இவ்வாறு அவுணசேனைகள் யாவும் அழியப் பூதர்கள் வெற்றியடைந்தார்கள். அதனைக் கயமுகாசுரன் கண்டு, அக்கினிபோலக் கோபித்து, வில்லை வளைத்தான். பூதர்கள் அவனை வந்து சூழ்ந்து போர் செய்தார்கள். கயமுகன் பாணமழை களைச் சொரிந்து அவர்களுடைய உடம்புகளைத் துளைத்தான்; அவர்கள் யாவரும் வருந்தி வலிமை யிழந்து ஓடினர்கள். அதனைக்கண்ட இந்திராதி தேவர்கள் வருந்தினர்கள்.

''பூதசேனைகள் புறங்கொடுத்ததை விநாயகக்கடவுள் கண்டு, அசலனை நடத்தி, கயமுகாசுரனை அணுகினர். அவன் அங்குநின்ற தூதுவரை நோக்கி, 'இங்கே என்னோடு போர்செய்யும்படி வருகின்ற இவன் யார்?' என்று வினவ, அவர்கள் 'மூன்று கண்களையும் ஐந்து கரங்களையும் யானைமுகத்தை யுடையராய் ஒரு பூதன்மேல் ஏறிக்கொண்டு வருகின்ற இவர் சிவபெருமா னுடைய மூத்தபிள்ளையாகும்' என்றார்கள். கயமுகன் அதனைக் கேட்டுக் கோபித்து, தேர்ப்பாகனை நோக்கி, 'நம்முடைய தேரை அந்த யானைமுக வனுக்கு முன்பு செலுத்துதி' என்ன, அவன் விநாயகக் கடவுளுக்கு முன்பு தேரைச் செலுத்தினன். கயமுகன் விநாயகக்கடவுளைக் கோபித்துப் பார்த்து, நெருப்புக் காலுப்படி பற்களால் இதழை அதுக்கி, 'மைந்தனே உன் பிதா யான் செய்த மகாதவத்தை நோக்கி எனக்குத்தந்த பெரிய வரத்தை நீ அறிகிலை; என்னெதிரே வந்தாய்; நீ சிறிதும் மதியில்லாதவனே? உன் னுயிரைக்கொண்டு உய்ந்துபோ. அன்றியும் நீ என்னோடு போர்செய்ய

அமைந்தாயாயினும் உனக்கு என்னோடு போர்செய்யும் வலிமையில்லை. என்னோடு போர்செய்து இறந்தவரன்றி என்னை வென்றவர் இவரென்று நீ சொல்லவல்லையோ? தேவர்களாலும் மனிதர்களாலும் அவர்களுடைய ஆயுதங்களினாலும் நான் இறக்கமாட்டேன். இது நான் பெற்றவரங்கள். இன்னும் பலவுள. என்னை வெல்பவர் யாவர்? பாலகனே, நீ இந்திராதி தேவர்களுடைய துன்பத்தைத் தணிப்பவன்போல என்னுடன் போர்செய்ய வந்தாய். யான் உன்னை வென்று அவர்களுடைய உயிரையும் பருகுவேன். என்னோடு பொருது வெற்றி கொண்டு போகவல்லையாயின், வருதி' என்று கூறினன். சிவகுமாரர் அவனை அருளோடு நோக்கி; 'கயமுகனே முன்னாளிலே உனக்குப் பல வரங்களையும் படைகளையுந் தந்த நமது பிதாவே விரைவில் உன்னுயிரைக் கவர்ந்து இந்திரன் முதலிய தேவர்களுடைய துன்பத்தை நீக்கி அவர்களுக்குப் பொன்னுலகைக் கொடுத்து வருவாய் என்று எமக்குங் கட்டளையிட்டருளினர். உன்னுயிரைப் பாதுகாத்துக்கொள்வாயாயின் நாம் ஒருறுதியைச் சொல்வோம்; கேள். பொன்னுலகத்தை இந்த இந்திரன் அரசு செய்யும்படி கொடுத்து, நீ இம் மண்ணுலகத்தில் அரசு செய்திருக்குதி. அது உனக்கு இசையாதாயின் நாம் உன்னுயிரை வதைபுரியும்படி அமைந்து நின்றேம். உன்னுடைய எண்ணம் யாது? சொல்லுதி' என்றார்.

''என்னலும், கயமுகாசுரன் பொங்கி அக்கினி சொரியப் பார்த்து, விரைந்து ஒரு பெரிய வில்லைவளைத்து நாணேற்றிப் பாணங்களைப் பொழிந்தான். விநாயகக்கடவுள் ஓர் எழுப்படையினால் அவற்றைச் சிந்தி, அவனுடைய வில் முரிந்து வீழும்படி அதனால் அடித்தார். அவன் மற்றொரு வில்லைவளைப்ப அதனையும் அழித்தார். கயமுகன் தன் வில் முரிதலும், ஒரு தண்டாயுதத்தை எடுத்துக்கொண்டு சிவகுமாரரோடு எதிர்த்தான். அவர் அத் தண்டு ஒடிந்து வீழும்வண்ணம் தமது எழுவினால் அடித்து, அவனுடைய மார்பிலும் அதனாற் புடைத்தார். அவன் ஒரு செயலுமின்றி மனம் நடுங்கி ஒன்றும் பேசாதவனாய் நாணத்தினாலொடுங்கி, இறந்தவன் போல நின்றான். விநாயகக் கடவுள் அவனுடைய நால்வகைச் சேனைகளையும் கொல்ல நினைத்து ஒரு பாசத்தை வீச அது அவனுடைய சேனைகளெல்லாவற்றையும் கட்டியது. அதன்பின் மழுப்படையைத் தூண்ட, அது அந்தச் சேனைகளைக் கொன்றது. தேவர்கள் மகிழ்ந்து கூத்தாடினர்கள். கயமுகாசுரன் பதைபதைத்து உயிர்த்து நொந்து தன் கையிலுள்ள படைக்கலங்கள் எல்லாவற்றையும் செலுத்தினன், அவைகள் யாவும் விநாயகக் கடவுளை வலஞ் செய்து துதித்து, அவருடைய ஏவலின் வழி நின்றன. கயமுகன் கோபாக்கினி மேன்மேலுஞ் சுட வாளாநின்றான். சிவகுமாரர் அவனை நோக்கி, 'நாம் ஆயுதங்களை இவன்மேற் செலுத்தினால் நமது பிதாக்கொடுத்த வரத்தினால் அவைகள் ஒன்றும் இவனைக் கொல்லமாட்டா. இனிச் செய்வதென்ன!' என்று இறைப்பொழுது சிந்தித்து, தம்முடைய திருக்கோட்டிலொன்றைத் திருக்கரத்தால் முறித்துக் கயமுகன் மீது விடுத்தார். அது அவனுடைய மார்பைப் பிளந்து, உடம்பைப் பூமியில் வீழ்த்தி, விரைந்து சென்று, சுத்தோதக சமுத்திரத்தில் மூழ்கி, அவருடைய திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. கயமுகன் மேகக் கூட்டங்கள் ஒருங்கே பூமியில் வீழ்ந்தாற்போலவும் கடலுடைந்தாற்

போலவும் ஆர்த்துத் தேர்மேல் வீழ்ந்து மயங்கினன். அவனுடைய மீர்பி னின்றும் நதிகள்போலப் பெருகிய இரத்தவெள்ளம் பக்கத்திலுள்ள ஒரு காட்டிற் பரந்தமையால், அவ்விடம் திருச்செங்காடென்னும் பெயர் பெற்று இன்னும் யாவருங் காணும்படி இருக்கின்றது.

''பரமசிவனுடைய வரத்தினால் இறவாத கயமுகாசுரன் வீழ்ந்து இறந்தவன்போன்று பழைய வடிவைவிட்டு, ஒரு பெருச்சாளி வடிவங் கொண்டு, கோபாக்கினி கண்களிற் சிந்த விநாயகக்கடவுளைத் தாக்கும் படி வந்தான். அவர் அவனுடைய போர்வலிமையை இல்லையாக்கி, அசலன் என்னும் பூதனுடைய தோளினின்றும் இழிந்து, 'நீ நம்மைச் சுமக்குதி' என்று அவனுடைய பிடரிற் ருவி வீற்றிருந்து, அந்த ஆகு வாகனத்தைச் செலுத்தியருளினர். அதனைக்கண்ட பிரமா இந்திரன் முதலாய தேவர்கள் 'கயமுகாசுரன் இறந்தான். நம்முடைய இடர் போயிற்று. நம்முடைய பகையும் தீர்ந்தது' என்று ஆடிப்பாடி, உத்தரி யங்களை வீசி, முகிலின் வரவைக்கண்ட மயிற்குழாங்கள் போலக் கூத்தாடி விநாயகக்கடவுளுடைய திருமேனி மறையும் வண்ணம் பூமழைகளைப் பொழிந்து நின்று, 'சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் முதற் கடவுள் தேவரீரே, அடியேங்களுடைய மிக்க மனத்துயரை நீக்கக் கருதி யன்றே இந்த அருட்டிருமேனி கொண்டீர். உம்மிடத்திலுண்டாகிய வேதமே உம்முடைய பெருந்தகைமை இன்னதென்றுணர்ந்ததில்லையா னால், அடியேங்கள் உம்மை உணர்வது எங்ஙனம்! நமக்குப் பரமபிதா வும் மாதாவுமாயினீர். அதனால் மைந்தர்களாகிய யாங்கள் சொல்லும் புகழ்ச்சியை அன்போடு கேட்கின்றீர்போலும்' என்று சொல்லி வணங்கித் துதித்து, மலர்ந்த முகத்தினராய், மூத்தபிள்ளையாரை வந்து சூழ்ந்தார் கள். அக்கடவுள் அவர்கள் யாவருக்கும் கிருபாநோக்கத்தோடு பேரருள் புரிந்தார். பிரமா முதலிய தேவர்கள் 'இனி நாம் உய்ந்தோம்' என்று அவரைச் சூழ்ந்து நின்றார்கள். பிள்ளையார் கயமுகாசுரனுடைய போரி லிறந்த பூதர்களை நோக்கி 'எழுதிர்' என்று அருளிச் செய்ய அவர்கள் யாவரும் எழுந்து ஹர ஹர வென்று துதித்து, அவரை வணங்கிச் சூழ்ந் தார்கள்.

''இவைகள் எல்லாவற்றையும் அசுரேந்திரன் என்னும் அவுணராசன் நன்றாய் அறிந்துகொண்டு, மந்திரியாகிய சுக்கிரனோடு ஆலோசித்து, வருந் திப் புலம்பி, 'யான் இனித் தப்பியோடுவேன்' என்றெண்ணி, இந்திர னுக்கும் பூதர்களுக்கும் அஞ்சி ஒரு பறவையாகி, மதங்கமாபுரியைநீங்கி, மேருமலைச்சாரலில் விருஷங்கள் அடர்ந்த ஒரு முழைஞ்சிற் புகுந்து மறைந் திருந்தான். சுக்கிரனும் பறவை வடிவமெடுத்துத் தன்னுடைய உல கத்தை அடைந்து, தவமறைந்து அல்லவை செய்து வாழ்நாட் கழிப்ப வர்போன்று, யோகாப்பியாசஞ் செய்வான்போல வஞ்சனையோடிருந் தான். பூதர்கள் மதங்கமாபுரியிற்போய், ஆயுதபாணிகளாயுள்ள அவு ணர்கள் யாவரையுங் கொன்று போர்க்களத்துக்கு மீண்டுவந்தார்கள். பிள்ளையார் போர்க்களத்தை நீங்கித் திருச்செங்காட்டிற் போய், சிவலிங் கப் பிரதிட்டை செய்து பேரன்போடு பூசித்துத் துதித்தார். அந்த ஸ்த லத்தை மேலோர் கணபதிச்சரம் என்பர். விநாயகக்கடவுள் அதன்பின்

ஆகுவாகனத்திலிவர்ந்து தேவர்கள்சூழ விட்டுணு பாம்பினுருவாய்த் தவஞ் செய்துகொண்டிருந்த ஆலவனத்துக்கு எழுந்தருளினர்.''

திருச்சிற்றம்பலம்.

## அனந்தன் சாபநீங்குபடலம்.

''விநாயகக்கடவுள் ஆலவனத்திற் சென்றபொழுது, அங்கே ஓராலமரப் பொந்திலே சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் தவஞ் செய்து கொண்டிருந்த விட்டுணு அவர் அங்கே வந்ததை அறிந்து, விரைவாக அப்பொழுதே அவரை எதிர்கொண்டு சென்று தரிசித்துத் துதிப்ப, உமாதேவியார் சொல்லிய சாபம் நீங்குதலும், சக்கரம் முதலிய பஞ்சாயுதங்களையுமேந்தித் தம்முடைய பழைய உருவத்தைப் பெற்று மகிழ்ந்து, சிவபெருமானுடைய திருவருளை உன்னித் துதித்து, 'பராபரமாகிய சிவபெருமானுக்குப் பக்கத்திலுள்ளவராயும் ஓங்காரப்பொருளாயுமுள்ள உமாதேவியார் சொல்லிய சாபத்தைத் தொலைத்த முதல்வரே, நிருமலரே, தேவரீர் அடியேனுடைய பூசனையை ஏற்றருள்புரிதல்வேண்டும். அடியேன் அதனைச் செய்தற்கு அநுமதி தந்தருளும்' என்று பிரார்த்தித்தார். பிள்ளையார் அதனைக்கேட்டு, 'அவ்வாறு செய்குதி' என்று அருளிச் செய்து அங்கே வீற்றிருப்ப, விட்டுணு திருமஞ்சனம் சந்தனம் மாலை தூபதீபம் முதலிய உபகரணங்களைக் கொணர்ந்து, அவரைப் பூசித்து, பாயசன்னமும் பலகார வகைகளும் நிவேதித்துத் தோத்திரஞ் செய்து, 'சுவாமீ, மார்கழிமாசத்துப் பூர்வபக்கசட்டியாகிய இத்திதியிலே அடியேன் உம்மைப் பூசனை செய்தது போல யாவரும் உம்முடைய திருவடிகளையே சரணென்றுன்னிப் பூசனை செய்திடவும், அப்படிப் பூசிப்போருடைய துன்பங்களையெல்லாம் தேவரீர் அன்றைக்கே நீக்கி அழியாத செல்வத்தை அவர்களுக்குக் கொடுத்திடவும் வேண்டும். இவ்வரத்தை அடியேனுக்குத் தந்தருளும்' என்றார். விநாயகக் கடவுள் 'அவ்வாறுகுக' என்று விட்டுணுவுக்கு அருள்புரிந்து, 'உன் பூசையை மகிழ்ந்தோம்' என்று கூறி, அந்த விட்டுணுவும் பிரமா முதலிய தேவர்களும் அன்போடு துதிப்ப ஆகுவாகனத்திலேறி, பூதகணங்கள் சூழத் திருக்கைலாசமலைக்குப் போய், பரமசிவனை வணங்கி அவருடைய திருவருளைப்பெற்று, அக்கோயில் வாயிலிலே தாமிருக்கும் இடத்தையடைந்தார்.

''அற்றைநாளில், அரிபிரமேந்திராதிதேவர்கள் சிவசந்நிதானத்திற் போய் அன்போடு வணங்கி. அருள்பெற்று நீங்கி, விநாயகக்கடவுளை வணங்கித் துதித்துத் திருமுன்னிற்ப, அக்கடவுள் அருள்புரிந்தார். பின்பு அத் தேவர்கள் அவர்மேல் வைத்த அன்பினால் பின்வருமாறு விண்ணப்பஞ்செய்தார்கள். 'எம்பெருமானே, எங்களை வருத்திய கயமுகாசுரனைத் தேவரீர் சக்கரித்தீர். அதனால் அடியேங்கள் உய்ந்தோம். அதற்கு நாங்கள் உமக்குச் செய்யுங் கைம்மாறு ஒன்றுமில்லை. ஆயினும், நேற்றைவரையும் அந்தக்கயமுகாசுரனுக் கெதிரிலே தவறுமல் நாங்கள் செய்த தொண்டை இன்றுமுதலாகத் தேவரீருடைய சந்நிதானத்திற் செய்வோம்' என்றார்கள். பிள்ளையார் 'அவ்வாறு செய்குதிர்' என்றார். தேவர்கள் யாவரும் அன்பினோடு முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளையும் கபித்தமாக்கித் தத்தந் தலைகளில் மும்

முறை குட்டி, இரண்டு கைகளையும் எதிரெதிராக மாற்றி இரண்டு காதுகளையும் பிடித்துக்கொண்டு கணைக்காலுந் தொடையும் ஒன்றையொன்று தொடும்படி மும்முறை தாழ்ந்தெழுந்து, வணங்கித் துதித்து, நின்றார்கள். அதைப் பார்த்த பூதகணங்கள் ஆரவாரித்தார்கள். விநாயகக்கடவுள் மகிழ்சிறந்தார். தேவர்கள் அக்கடவுளை நோக்கி, 'இன்று முதல் உலகத்திலுள்ளோரெவரும் எங்களைப்போல இத்தொண்டைத் தேவரீருடையசந்நிதானத்திற் செய்து வரும்படி அருள்செய்யவேண்டும்' என்று வேண்ட, அவர் 'அவ்வாறே ஆகுக' என்று அருள்புரிந்து, அங்குநின்ற அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவர்க்கும் விடைகொடுத்தனுப்பினர். அவர்கள் தத்தம் பதங்களிற் போய் மகிழ்ச்சியோடிருந்தார்கள். தக்கனே, பிரணவ சொரூபியாகிய விநாயகக்கடவுளுடைய உற்பத்தியை இதுகாறுஞ் சொன்னேம். சிவபெருமானுக்குத் தாமதகுணம் வந்தவாறு என்னை என்று வினவினாய். இனி அதனையுஞ் சொல்வோம் கேட்பாய்.

''ஞானிகளாலும் அறிதற்கரிய சிற்குணராகிய பரமசிவன் பரைக்குப் பரமாயுள்ளார். மூவகைக்குணசம்பந்தமில்லாத நிர்க்குணர். அவருடைய செயலைச் சொல்ல முடியுமோ! மலரகிதராகிய அக்கடவுள் ஆன்மாக்களுடைய பாசங்களை நீக்கவேண்டுமென்னுந் திருவருளினாலே பிரம விட்டுணுக்களுக்கு முறையே படைத்தல் காத்தல்களையும் சாத்துவிக ராசத குணங்களையும் உள்ளனவாக்கி, அழித்தற்றொழில் கோபத்தினால் முடித்தல்வேண்டுதலால் அத்தொழிலின்கண்ணே தாமதகுணத்தைவைத்தார். இதனைப் பலரும் அறிவர். அக்கடவுள் தாமதகுணத்தினராயின், வேதசிவாகமங்களை அருளிச்செய்து, கல்லாலவிருக்ஷ நிழலிலே சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்யவல்லராவாரோ! வெண்மையும் நிர்மலமுமாகிய வடிவைப் பொருந்துவாரோ! வேதங்கள் வித்தையின் மூலம் என்று அவரையே சொல்லுமோ! இதனை ஞானமில்லாதவர்களுக்கு எப்படித் தெளிவிப்பது? தேவநாயகராகிய பரமசிவன் இறுதிக்காலத்திலே சங்காரத்தைச் செய்யுந் தன்மையால் அவரைத் தமோகுணத்தர் என்றாய். அக்குணம் அவருக்குச் செயற்கைக்குணமாம். அவருடைய இயற்கைக் குணத்தை அறிய முடியுமோ? படைத்தல் காத்தல்களைச் செய்யும் பிரமவிட்டுணுக்களுக்குள்ள சாத்துவிக ராசதகுணங்கள் அவர்களுடைய அவ்வச்செயல்களுக்காக மாத்திரம் செயற்கையாயமைந்தனவன்றி, ஆராயின் இயற்கையாகச் சொல்லலாகுமோ? அந்தப் பிரமவிட்டுணுக்களிடத்துச் சாத்துவிகராசத குணங்களன்றி முக்குணத்தின்பாற்பட்ட முனிவர்கள் தேவர்கள்போல மற்றைஇரண்டு குணங்களுஞ் சேரும், விட்டுணுவுக்கு வடிவமுழுதும் நீலநிறமாயதும் சமுத்திரத்தில் உறங்குவதும் அகந்தையும் பிறவும் உளவாமாயின் தாமதராசத குணங்களும் அவரிடத்துளவாம். அந்த விட்டுணு நல்லறிவுண்டாய காலத்திற் சிவபெருமானை வழிபட்டுத் துதித்து அவருடைய திருவருணெறியினிற்றலையும் ஞானத்தையும் பெறுதலினாற் சாத்துவிக குணமும் பெற்றுள்ளார். வடிவம் பொன்மயமாயிருத்தலினாலும், நானே பரம்பொருள் என்னும் மயக்கத்தினாலும், பரமசிவனை உணர்கின்ற தெளிவினாலும், தவத்தினாலும், பூசையினாலும் பிரமாவினிடத்தும் எல்லாக்குணங்களும் உளவாயின. ஆதலினால் விருப்பு வெறுப்புடையோர் யாவரும் முக்குணவயத்தராவர். சிவபெருமானுக்கு அந்த விருப்பு வெறுப்புக்களில்லாமையினால் அவருக்கு ஒரு குணத்

தைச் சொல்லுதல் அறியாமையாம். 'மும்மாயா தத்துவப்பொருளனைத்தையும் முன்னளிலே தந்தவர் சிவபெருமானே' என்று நான்கு வேதங்களுஞ் சொல்லும். அதற்கு அவையே சான்றும். அளவிடப்படாத சிவபெருமானுடைய செயலைத் தவத்தோர்களுக் காயினும் அறியமுடியுமோ! விட்டுணு முதலிய தேவர்களினிடத்தும் மற்றை உயிர்ப்பொருள் உயிரல்பொருள்களினிடத்தும் எங்குமாய் வியாபித்து எல்லாவற்றையும் இயற்றுகின்ற சிவபெருமான் ஒரு குணச்சார்பிற் பொருந்துவாரோ? சங்காரத்தொழிலொன்றைக் குறித்து மேலோர்கள் நிருமலராகிய அக்கடவுளுக்குத் தாமதகுணத்தைக் கூறினரல்லது, வேறெரு செய்கையினுல் அக்குணத்தைச் சொன்னரில்லை'' என்று இவைபோல்வன பலவற்றையும் ததீசிமகாமுனிவர் உபதேசித்தார்.

நீயோனும் புன்றெழிலினனும் ஆகிய தக்கன், மிக்க வலிமையும் பெருஞ்செல்வமும் பெற்று மயங்குதலால் அவற்றை நன்றென்று மனத்துக் கொள்ளாதவனுயும் சகிக்கலாற்றுதவனுயும் ததீசிமுனிவரைநோக்கி, 'முனிவரே, கேளும். நீர் இங்கே பலவற்றையும் சொல்லுவதனுற் பயனென்னை? கைலாசமலையிலிருக்கும் உங்கள் சிவன் அறுகுணங்களையுடைய கடவுளேயாயினும் ஆகுக. யான் அவருக்கு யாகத்தில் அவிப்பாகத்தை உதவேன். நீரும் இனி இவற்றைச் சொல்லாதேயும்; போம். யான் என் செயலை முடிப்பேன்' என்று சிலவற்றைச் சொன்னன். செல்வச்செருக்கையுடைய தக்கன் இவ்வாறு சொல்லுதலும். ததீசிமுனிவருடைய மனத்திற் கோபம் விளைந்தது. அவ்வளவில் வடவாமுகாக்கினி அஞ்சியது. தேவர்களுடைய மனங்கள் தளர்ந்தன. மகாமேருமலையுஞ் சலித்தது. குலகிரிகளும் வருந்தின. எழுகடல்களும் ஒடுங்கின. உலகமெல்லாம் நடுங்கின. அப்பொழுது அம்முனிவர் தம்முடைய பெருஞ்சீற்றத்தை நோக்கி, ''அந்தோ! தக்கனெருவன்பொருட்டாக நம்மால் எம்மலைகளும் எக்கடல்களும் எவ்வுலகங்களும் யாரும் யாவும் தளருமோ!'' என்று நினைத்து, முனிவு தணிந்து, தம்மைச் சூழ்ந்த முனிவர்களோடெழுந்து நின்று, தக்கனுடைய முகத்தை நோக்கி, ''தக்கனே நீ இன்றைக்குப் பரமசிவனை விலக்கிப் புரிகின்ற யாகம் அழிக; இங்கே உன்னெடிருக்கின்ற தேவர்கள் யாவரும் இப்பொழுதே அழிக'' என்று கூறி, அதன்பின்பு அவ்வியாகசாலையிலிருக்கின்ற பிராமணர்களுடைய முகத்தை நோக்கி ''நீவீர் அந்தணர்களிற் பேடிகளாயினீர்; உங்கள் குலத்தலைமையை இழந்துவிட்டீர்; நாம் சொல்வதைக் கேண்மின்; நீவிர் வேதங்கள் யாவும் 'பராபரன் நீயே' என்று புகழ்ந்து போற்றும் சிவபெருமானையும் அவருடைய அடியார்களையும் விபூதிருத்திராக்ஷங்களையும் இகழ்ந்து, பூமியிலே எந்நாளும் மறையவராய்ப் பிறந்திறந்து, கதியடையாமற் பாசபந்தத்திற்பட்டு, வேதத்திற்குப் புறம்பான மார்க்கத்தை அநுட்டிப்பீர்கள்'' என்றார். ததீசி முனிவர் இவ்வாருகப் பல சாபங்களைக் கூறி, இருமருங்கும் முனிவர்கள் சூழத் தாமிருக்கும் ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றார். தக்கனுடைய பெருந்தகைமையும் தவமும் கீர்த்தியும் செல்வமும் வலிமையும் மனச்செருக்கும் ஆகிய இவைகளெல்லாம் அம்முனிவருக்குப் பின்னைப் போயின.

திருச்சிற்றம்பலம்.

# தானப் படலம்.

ததீசிமகாமுனிவர் மீண்டுபோதலும், தக்கனுடைய கொடி அறுந்தது. யாகத்தூணில் காக்கைகளுங் கழுகுகளும் நெருங்கின. வேதவல்லியினுடைய மங்கலநாணுந் தானே கழன்றது. இவ்வாறாகிய பல துந்நிமித்தங்கள் உண்டாயின. இறக்கின்றவன்மாட்டு அவை நிகழாவோ! தீயோனாகிய தக்கன் இவ்வாறாகப் பல துந்நிமித்தங்கள் நிகழ்ந்திடவும், அவற்றைச் சிறிதும் நினையாதவனும் அஞ்சாதவனுமாய், பிரமாவையும் விட்டுணுவையும் முகமன்கள் சொல்லிப் பூசித்து, மற்றைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் வேண்டியவற்றை வேண்டியவாறே கொடுத்து, அதன்பின் தான் பெற்ற பெண்களுக்கும் மருகர்களுக்கும் மங்கலமாகிய வரிசைகளை மிகவும் கொடுத்து, விட்டுணுவும் பிறரும் காவல்செய்ய, தீய யாகத்தைச் செய்யுஞ் சமயத்தைப் பார்த்துத் தொடங்கினான். இனி அந்த யாகசாலையில் நிகழ்ந்தனவற்றை யான் சொல்வேன்.

முன்னமே தக்கனுடைய ஏவலின் வண்ணம் பணிசெய்ய வந்த காமதேனுவானது பொன்னாலாகிய ஒரு சாலையிலே பொன்மலையின் நடுவிலுள்ள வெள்ளிமலைபோல அன்னத்தைத் தந்து, பாற்சோற்றையும் பிற அன்ன வகைகளையும் முதிரைவர்க்கங்களாலாகிய பல உணவுகளையும் வெவ்வேறாகக் குலமலைகள்போல வகுத்தது; நெய்யோடளாவி வாசனைப்பொடி தூவித் தாளித்த பொரிக்கறிகளைத் திக்குயானைகளைப்போல வழங்கியது; பிட்டு தோய்வை நோலை * முதலிய பலகாரவகைகளையும் பிற அரும் பண்டங்களையும் பல கனிவர்க்கங்களையும் குலமலைகளுக்குப் பக்கத்திலே பூவுலகிலுள்ள மலைகள் வந்திருந்தாற்போலத் தொகுத்தது; நெய் பால் தயிர் வெள்ளங்களைக் கங்கையும் யமுனையும்போல வருவித்தது; உண்ணுதற்குரிய பிற உணவுகளையெல்லாங் கொடுக்கின்ற காமதேனு தன்னிடத்துள்ள பால் முதலாயினவற்றைக் கொடுத்ததென்றால் அஃது அதற்கொரு புகழோ, அத்தேனு பச்சைக்கர்ப்பூரம் கஸ்தூரி சந்தனம் பனிநீர் நாவி நெய் வெற்றிலைபாக்கு புட்பம் ஆகிய இவற்றையும் ஏனைய பொருள்களையும் தந்தது. அத்தேனு இப்பணிகளைச் செய்துகொண்டு ஒருபாலிருக்க, சிந்தாமணியும் சங்கநிதியும் பதுமநிதியும் ஐந்தருக்களும் தக்கனுடைய ஏவலினாலே தானசாலையில் வந்து, பலவகை இரத்தினங்களையும் பொன்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் மற்றும் வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் ஒவ்வோர் சாரில் உண்டாக்கி வைத்து. அங்கே ஒவ்வோரிடத்தில் நின்றன. அப்பொழுது, தக்கனுடைய ஏவலின்வண்ணம் ஒழுகுகின்ற முனிவர்கள் யாவரும் ''இவைகளெல்லாவற்றையும் யாம் கொடுப்போம்'' என்று சொல்லினார்கள். இவற்றை முன்னே யுணர்ந்த பிராமணர்கள் மனஅவாவோடு நெருங்கிவந்து அன்னசாலையை யடைந்து, அதனைநோக்கித் தக்கனை வாழ்த்தி, பாலர்களைப் போலப் பாடியாடி, உத்தரீயங்களை வீசி நின்றார்த்தார்கள்.

ஏவலாளர்களாகிய முனிவர்கள் அந்தப் பிராமணர்களை வாருங்கள் என்று அழைத்துக்கொண்டுபோய் இருத்தி, பொற்றட்டைகளை யாவர்க்குமிட்டு, உணவுகளைப் படைத்து, உறவினர்களைப்போல அன்பினுடன் ஊட்டு

---

* நோலை – எள்ளுண்டை.

வித்தார்கள். உண்பவர்களுட் சிலர், பசிதீர நிறையவுண்டும் அவ்வுணவு சுவையுடையதாதலால் நினைத்து நினைத்து ''இந்த உணவுகள் இன்னும் அதிகம் வேண்டும்'! என்று சொன்னர்கள். ''நம்மாட்டு ஒரு குறையுள்ளது. இனி அதனைச் சொல்லியாவதென். நாம் பிரமாவை நோக்கித் தவஞ்செய்து இங்குள்ள உணவுகளெல்லாவற்றையும் உண்ணும்படி ஒரு பசியைப் பெற்றிலேம்'' என்று வருந்தினர் சிலர். ''அதிகமாகிய இவ்வுணவுகளை உண்ணுதற்கு வாய்கள் நூறு நூறு வேண்டும்'' என்றூர் சிலர். இப்படிச் சொன்னவர்களை நோக்கி, ''இன்னும் வாய்கள் அதிகம் வேண்டும்; நீர் சொன்ன கணக்கில் அமையா'' என்று சிறிச் சண்டையிட்டார்கள் சிலர். ''தேவருலகிலுள்ள காமதேனு வந்து அளவில்லாத உணவுகளை உண்டாக்கியது'' என்று சொன்னர்கள் சிலர். அதற்கு ''நிறைய உண்மின் உலவியாதேயும்'' என்று சொன்னர்கள் சிலர். ''அறிவில்லாத தக்கனுடைய யாகம் இன்றைக் கழியும்'' என்றூர் சிலர். ''அப்படி நிகழ்ந்தாலும் இப்பேருணவே நமக்குறுதி; விரைந்துண்மின்'' என்றூர் சிலர். ''இவ்வியாகத்தில் உண்டது போல எங்கும் உண்டிலேம்; இதைப்போல ஒரு காட்சியையுங் கண்டிலேம்; இந்த இன்பத்தைப்போன்ற இன்பத்தை அனுபவித்திலேம்; சிவபெருமானல் நாம் இறவாதொழிந்தால் இது மேலானதுவே'' என்றூர்கள் சிலர். ''எல்லையில்லாத உண்டிகளை நமக்குதவுகின்ற இக்காமதேனுவை நல்லகயிற்றினுற் பிணித்து விரைவில் நம்முடைய ஊருக்குக் கொண்டு போவோம்'' என்று சொன்னர்கள் சிலர். ''தன் மக்கள் யாவரும் சுற்றத்தாரும் தேவர்கள் யாவரும் உய்யும்படி வாழ்தலால் தக்கனுடைய தவத்தினுஞ் சிறந்த தவம் உண்டோ!'' என்றூர்கள் சிலர். ''மகனுகிய தக்கன் இட்ட உணவுகள் எல்லாவற்றையும் உண்ணுதற்குப் பிரமா நமக்கு அநேக வயிறுகளைத் தந்தாரில்லை; அவர் பொறுமையுற்றூர்'' என்று நொந்து நொந்து சொன்னர்கள் சிலர். ''தாளிதத்தோடு கூடிய இந்த உணவுகளெல்லாவற்றையும் ஆசையினுடன் மிகவும் உண்டோம்; நாம் இந்தப் பந்தியிலுள்ளவர்களோடு எழுவதெப்படி'' என்று சொன்னர்கள் சிலர். ''இந்த நல்ல உணவுகளை இங்கே உண்ணுதற்கு நம்முடைய மனைவிமைந்தர்களை அழைத்துக்கொண்டு வந்திலேம்; இனி நினைத்தால் வருமோ!'' என்று சொன்னர்கள் சிலர்.

இப்படிப் பற்பலவாறுகக் கடலொலிபோலத் தம்முட்பேசிக்கொண்டு போசனஞ் செய்யும் பிராமணர்கள் என்னென்ன கேட்டார்களோ, அவைகளெல்லாவற்றையும் அவர்கள் உண்ணும்படி முனிவர்கள் ஊட்டி, எச்சிலகற்றி வேறேரிடத்திலே அவர்களை ஆசனத்திலிருத்தி, பனிநீர் கலந்த கலவைச் சாந்தையும் வாசனைத் திரவியங்களையுங் கொடுத்து, வெற்றிலை பாக்குப் புஷ்பம முதலியனவற்றைத் தாம்பாளங்களில் நீட்டினர்கள். சந்தனம் பூசிப் புஷ்பமாலை சூடித் தாம்பூலதாரணஞ்செய்த வேதியர்கள் அனைவரும் தெய்வம் ஏறிய விருஷங்கள்போலச் சாய்ந்தார்கள். பின்பு அந்தப் பிராமணர்கள் தான சாலையையடைய, தக்கனுடைய ஏவலினுலே பல முனிவர்கள் பொன்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் ஒளிகாலும் இரத்தினங்களையும் கொடுத்தார்கள். கன்னிப் பசுக்களையும் கறவைப் பசுக்களையும் கொடுத்தார்கள். பொற் பாதுகைகளையும் குடைகளையும் குண்டிகைகளையும் கொடுத்தார்கள், இன்னும் அந்தணர்கள் ஏவ்வெவைகளை விரும்பினர்களோ அவர் விரும்பிய எல்லாவற்றை

யும் கைகள் சிவக்கக் கொடுத்தார்கள். இவ்வாறே முனிவர்கள் சிறி தும் தாமதமின்றி அங்குவந்த அந்தணர்கள் யாவருக்கும் அன்னத்தை யூட்டிப் பல பொருள்களைக் கொடுக்க. அவர்கள் தாம் வாங்கிய பொருள்க ளெல்லாவற்றையும் மெல்ல மெல்லவாகக் கொண்டுபோய் ஓரிடத்தில் மலைபோலச் சேர்த்தார்கள். வலிமையிற் சிறந்த வேதியர் சிலர் சிரசிற் சுமந்து தமது ஊருக்குக் கொண்டுபோயினர்கள்.

விட்டுணுவினுடைய கருடனும், பிரமாவினுடைய அன்னமும், இந் திரனுடைய ஐராவதயானையும், அக்கினியினுடைய ஆட்டுக்கடாவும், யமனுடைய எருமைக் கடாவும், சூரியனுடைய குதிரைகளும் ஒரு புடை யில் ஒலித்தன. தேவர்களும் பிறரும் வந்து நெருங்கினமையால் அவர் களுடைய விமான கோடிகள் ஒரு புடையிற் செறிந்தன. அரம்பையர்கள் வீணை வேய்ங்குழல் மிருதங்கம் ஆகிய வாத்தியங்களோடு தேவர்கள் காண ஒரு பக்கத்தில் நடித்தார்கள். ஒருசாரில் அரம்பையர்களும் தேவர் களும் யாகசாலைக்குப் பக்கத்திலுள்ள சோலைகளிலும் வாவிகளிலும் விளை யாடினர்கள். வேதவல்லியின் குமாரிகளும் தேவமகளிர்களும் அயிராணி யும் யாகத்தின் சிறப்புக்களைப் பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டும் அவ் வியாகசாலையிலே ஒருபுடையிலிருந்தார்கள். இவ்வாறுகிய நிகழ்ச்சி கள் எங்கும் நெருங்குதலினாலே தக்கனுடைய யாகத்துக்குச் சமுத்திரங் கள் யாவும் வந்து சூழ்ந்தாற்போலப் பேரொலியுண்டாயின. தேவர்க ளும் பூவுலகிலுள்ளாரும் நெருங்கினமை, தேவகங்கையும் பூவுலகிலுள்ள நதியும் கலந்தாற்போன்றது.

திருச்சிற்றம்பலம்.

# வேள்விப் படலம்

இவ்வாறுகிய யாகசாலையிலே தக்கன் வேள்விசெய்ததையும் அஃது அழிய வந்ததையும் இனிச் சொல்வாம். யாககர்த்தாவாகிய தக்கன் தன்பக் கத்தில் இருக்கின்ற பிரம விட்டுணுக்களோடு யோசித்து, முன்னே தன்னால் வரிக்கப்பட்ட இருத்துவிக்குகளை நோக்கி, "விதிப்படி மூவகை அக்கினிகளை யும் பிரதிட்டை செய்யுங்கள்" என்றான். அவர்கள் நன்றென்று அரணியில் முறைப்படி கடைந்தெடுத்த அக்கினியை வேதிகையிலுள்ள பறப்பையின் மேல் தாபித்து, மந்திரத்தினாற் பரிதிகளைச் சூழவைத்து, மற்றும் செயற் பாலனவற்றையெல்லாஞ் செய்து, அவ்வக்கினியை வளர்த்தார்கள். தக்கன் பக்கத்திலுள்ள இருத்துவிக்குகள் யாவரையும் பார்த்து, "நீவிர் உங்களுங் களுக்கேற்ற கிரியைகளை நினைத்து சோர்வின்றி விரைவிற் செய்யுங்கள்" என்றான். அவர்களுள் பன்னிருவர் அவ்வேள்விக்குரிய அவிசுகளையும் வன்னி முதலாகிய சமித்துக்களையும் தருப்பையையும் இவைபோல்வன் பிறவற்றை யும் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஒருவர் அவ்வேள்வியைச் செய்வித் தார். ஒருவர் பரமசிவனல்லாத மற்றைத்தேவர்கள் அவிகளை ஏற்கும்படி அவரவர்க்குரிய மந்திரத்தைச் சொல்லினர். ஒருவர் அவ்வத்தேவர்களு டைய பெயர்களைச் சொல்லி அழைத்தார். ஒருவர் அவ்வத்தேவர்க்கமைந்த அவிகளைக் கையிலேந்தி அக்கினியில் ஆகுதிசெய்தார். ஒருவர் அச்செயலிற்

குறைபாடு நிகழாவண்ணம் நோக்கியிருந்தார். ஒருவர் அவ்வியாகத்திற்கு முதல்வராகிய கடவுளைப்போல இருந்து அருள்செய்தார். இருத்துவிக்குகளும் பிறரும் இவ்வாறு செய்யும்போது, யாககர்த்தாவாகிய தக்கன் அவர்கள் அவிகளை ஆகுதிசெய்யுந்தோறும். அத்தேவர்களைக் கருதி, ''இதனை யேற்று உண்ணுங்கள்'' என்று சொல்லி, அவிகளை அழுதுபோல ஊட்டிக் கொண்டிருந்தான். அவ்வவிகள் நற்சுவையினாலும் தூய்மையினாலும் அமுதம் போன்றனவெனினும், உயிர்க்குயிராய் வியாபித்திருக்கின்ற சிவபெருமானையின்றி நுகர்ந்தமையால், தேவர்கட்கெல்லாம் உண்ணத்தகாத நஞ்சு போலாயின.

திருச்சிற்றம்பலம்.

## உமைவருபடலம்.

மேலே சொல்லப்பட்ட இவ்வியல்புடைய யாகத்தைத் தக்கன்தான் நாசம் அடையும்படி செய்யாநிற்க, நாரதமகாமுனிவர் பூவுலகத்தில் வந்து அதனைப் பார்த்து, ''தக்கன் பரமசிவனை நீக்கித் தேவர்களோடு யாகஞ் செய்கின்றான். இவ்வாறு செய்தல் இவனுடைய வலிமைதானோ?'' என்று எண்ணி திருக்கைலாசமலையை யடைந்து, திருநந்திதேவர் உள்ளே விடுப்பச் சென்று, பரமசிவனுடைய திருவடிகளை வணங்கித் துதித்து நின்றார். சர்வவியாபியாகிய திருக்கைலாசபதி அவரைப் பார்த்து, ''நாரதனே நீ இங்கேவந்த காரணம் என்னை? இவ்வுலகத்தில் விசேடமென்னை? சொல்லுதி'' என்று வினவ; அவர் ''எம்பெருமானே, கேட்டருளும். தக்ஷப்பிரசாபதி கங்காநதிக்கரையிலே விட்டுணு பிரமா முதலாயினோரோடு புத்தியில்லாதவனுய் ஒரு யாகத்தைப் புரிகின்றான். இஃதோர் புதுமை'' என்று சொல்லினர். உமதேவியார் அதனைக் கேட்டு, சிவபெருமானுடைய திருவருளினால் தக்கனுடைய யாகத்தைப் பார்த்தல் வேண்டும் என்று ஆசையுற்று, இருக்கைவிட்டெழுந்து, அக்கடவுளை வணங்கி அஞ்சலிசெய்துநின்று ''எம்பெருமானே, தந்தையாகிய தக்கன் செய்யும் அந்த யாகத்தைப் பார்த்து விரைவில் மீண்டு வருகின்றேன்; விடைதந்தருளும்'' என்றார். சிவபெருமான் ''உமையே தக்கன் உன்னை மதியான்; வலிமையடைந்து தேவர்களோடு மயங்கியிருக்கின்றான். இப்போது நீ அவனுடைய யாகத்துக்குச் செல்லாதே'' என்றார். அதனைக் கேட்ட கிருபாசமுத்திரமாகிய அம்மையார் ''சுவாமீ, பிரமாவின் குமாரனாகிய தீய தக்கன் அறிவில்லாதவன். அவனுடைய பிழையைப் பொறுத்தருளும்'' என்று அவருடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு ''விரைவிலே யாகத்தைப் போய்ப் பார்த்து மீண்டு வருவேன்; விடையீந்தருளும்'' என்று பிரார்த்தித்தார். ''தக்கனுடைய யாகத்தைப் பார்க்குங் காதலுடையையேல், அதனைப் பார்த்துக்கொண்டு விரைவில் வருகுதி'' என்று கடவுள் அனுமதி புரிந்தார்.

அம்மையார் அவருடைய திருவடித் தாமரைகளை வணங்கி, விரைவில் நீங்கி, ஒரு விமானத்திலேறினார். சுமாலி மாலினி என்னும் பெண்கள் சந்திரவட்டக் குடையைத் தாங்கினார்கள். மங்கலை சுமனை முதலிய

பெண்கள் சாமரங்களை இரட்டினர்கள். வேறு பல பெண்கள் ஆலவட்டத்தையும் பீலியையும் வீசியும் மலர்களைத் தூவியும் சென்றார்கள். வேறு பலர் கோடிகம் அடைப்பை வாள் கண்ணாடி புஷ்பமாலை ஆகிய இவைகளை ஏந்திக்கொண்டு விமானத்திலேறிப் பக்கத்திற் சென்றார்கள். நந்தி தேவரின் தேவியாகிய சுகேசை என்பவர் பாதுகையைக் கொண்டு பின்னே சென்றார். கமலினி அனிந்திதை என்னும் சேடியர்கள் இருவரும் அம்மையாருடைய அளகத்துக்கேற்ற புஷ்பமாலைகளை ஏந்திக்கொண்டு மற்றைச் சேடியர்களோடு சென்றார்கள். சில மகளிர்கள் அம்மையாருடைய பூகழ்களைப் பாடிக்கொண்டும் சில மகளிர்கள் இசைகளைப் பாடிக் கொண்டும் சில மகளிர்கள் நடித்துக்கொண்டும் சென்றார்கள். பாங்கியர்களும் சிலதியர்களுமாகிய பலர் அளவிறந்த விமானங்களிலேறி அவருக்குப் பக்கத்திற் போயினர்கள். பல பெண்கள் நாவிநெய் சந்தனம் முதலிய வாசனைத்திரவியங்களையும் ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் வைத்த பெட்டிகளைச் சுமந்துகொண்டு சென்றார்கள். பல பெண்கள் குயில் கிளி நாகணவாய் மயில் முதலாகிய பக்ஷிகளைக் கொண்டு போயினர்கள். பூதர்கள் பலர் இடபக் கொடியையும் குடைகளையும் ஏந்திக்கொண்டும் பற்பல வாத்தியங்களை இயம்பிக் கொண்டும் சென்றார்கள். சோமநந்தி அம்மையாருடைய பாதங்களைத் தொழுது அருள்பெற்று, பன்னிருகோடி பூதர்கள் சூழ இடபவாகனத்திலேறிக்கொண்டு, முன்னே சென்றார். மேற்கூறிய இவர்கள் யாவரும் இவ்வாறுக நெருங்கிவர, உலகமாதாவாகிய உமாதேவியார் விமானத்தின் மேற்கொண்டு விரைவிற் சென்று, தக்கனுடைய யாகசாலையை அணுகி, விமானத்தினின்றிழிந்து, யாகசாலையினுட் புகுந்து, தக்கனுக்கெதிரே போயினர். சீலமில்லாத தக்கன் அவரை வெகுண்டு நோக்கி, "தந்தைதாயில்லாத சிவனுக்குப் பிரிய நாயகியாகிய நீ, யான் இந்தவேள்வியைச் செய்யும்பொழுது, என்மகளிர்களைப் போல வந்ததென்னை? வளப்பமும் பெருமையுமுடைய இந்த யாகத்துக்கு உன்னை வரும்படி நான் சொல்லிவிட்டதுமில்லை; அப்படியிருக்க நீ வரலாமா? உன்னுடைய கைலாசமலைக்கு நீ மீண்டு போ" என்று கூறினன். உமாதேவியார் அவற்றைக் கேட்டு, "நீ உன்மருகர்கள் யாவர்க்கும் என்னுடைய தங்கைமாருக்கும் இந்த யாகத்திலே தக்க தக்க சீர்களைச் செய்து உறவுகொண்டாடினாய்; எங்களைச் சிறிதும் நினைத்தாயில்லை. அன்றியும் இங்கே வலியவந்த என்னையும் கோபித்து நோக்குகின்றாய். இது நல்லதா? இது குற்றமாகும். இனி உன்னுடைய எண்ணம் யாது? சொல்லுதி" என்றார்.

தக்கன் அவற்றைக்கேட்டு, "உமையே, முக்குணங்களுள்ளே தியதாகிய தாமத குணத்துக்குரிய சங்காரத் தொழிலைச் செய்து பேயோடாடும் பித்தனுகிய சிவனுக்கு மனைவியாகிய நீயும் அவனுடைய நிலைமையையுற்றாய். அவனோடு நீயும் அகந்தையுற்றமையால் உன்னை யிகழ்ந்தேன். உன்னுடைய தங்கையர்களும் என்மருகர்களும் எனக்கு என்னிலும் மிக இனியர். ஆதலால் யான் அவர்கள்பாற் பிரீதியுற்று, மேலர்கிய சீர்களைச் செய்தேன். அவர்களுக்கு இந்த யாகத்தில் அவிப்பாகத்தையும் கொடுத்தேன். விட்டுணு பிரமா முதலிய யாவரும் வந்து என்னைப் புகழ்கின்றார்கள். சிவனும் நீயும்மாத்திரம் என்னைச் சிறிதும் மதிக்கின்றீர்களில்லை. ஆதலால் உங்கள்பால் எனக்குப் பிரீதியில்லை. மாட்டின்மேல் ஏறுகின்ற உன்

னுடைய நாயகனுக்கு இந்த யாகத்தில் அவியையுங் கொடேன். அவனைப் புகழுகின்ற வேதவாக்கியங்களையும் என் வலிமையினல் மாற்றுகின்றேன். அதுவன்றி, இங்கே வலியவந்த உனக்கு தினையளவாயினும் ஒரு சிறப்புஞ் செய்யேன்'' என்று சொன்னன். இவற்றைக் கேட்டலும், காற்றினேடு நெருப்புச் சேர்ந்தாற்போல எம்பிராட்டியார்மாட்டு உயிர்ப்போடு கோபாக்கினி தோன்றி. அண்டங்களையும் அவற்றிலுள்ள உயிர்களையும் அழிக்கும்படி வளர்ந்தன. அதனற் பூவுலகமும் நடுங்கின; சமுத்திரங்களும் நடுங்கின; அக்கினியும் நடுங்கிற்று; முகில்களும் நடுங்கின; திக்குயானைகளும் நடுங்கின; தேவர்கள் யாவரும் நடுங்கினர்; பிரமாவும் விட்டுணுவும் நடுக்கமுற்றார்கள்; ஆயின், அவ்வுமாதேவியாருடைய மிகுந்த கோபத்தை யாவர் சொல்ல வல்லவர்! அப்பொழுது, உமாதேவியாருக்குப் பக்கத்தில் நின்ற விமலை என்னும் பாங்கி அவரை வணங்கி, ''எம்பெருமாட்டீ, உலகமாதாவாகிய உனக்கு இத்தன்மையாகிய கோபம் ஏற்குமா? உயிர்களைப் பெற்று வளர்த்த தாயாகிய நீ சினங்கொண்டு அவற்றை அழிக்க நினைத்தால், அவை உய்யுந்திறமுண்டோ? இத்தக்கன் தருமத்தை நீங்கினன் என்று கோபிக்கின்றாய். இந்தக்கோபம் இறைப்பொழுதினுள் எல்லாவற்றையும் அழித்துவிடும். ஆதலால் இதனைப் பொறுத்தருள்'' என்று துதித்து நின்றாள்.

உமாதேவியார் தம்முடைய சினத்தை அடக்கி, தக்கனைநோக்கிச் சொல்லுகின்றார்: ''நீ இங்கே என்னை நிந்தித்ததை நான் எண்ணேன். எனது நாயகராகிய கடவுளை இகழ்ந்தாய். அதனை யான் சகிக்கலேன். அவ்விகழ்ச்சி என் காதிற் புகுகின்ற நஞ்சுபோலும், நிருமலராகிய நமது கடவுள் சாத்துவிகாதி குணரகிதரே; அவர் அருள்ஞான குணமுடையராய் விளங்குவர். சங்கார காலத்திலே அவரிடத்துத் தாமதகுணம் உளதாக நாம் நினைப்பதன்றி, அவர் ஒரு குணத்தின்பாற் பட்டவரோ? நீ கூறியது நன்று நன்று! சங்காரஞ்செய்யுங்காலத்தில் தாமதகுணத்தினுல் அதனைப் புரிவதன்றி, ஞானநாயகராகிய அக்கடவுளுக்கு அது என்றும் உள்ள குணமோ? ஆன்மாக்கள் ஓயாமற் பிறந்திறந்துழலாவண்ணம் சங்கரித்து அவைகளுடைய வருத்தத்தைச் சிறிதுகாலம் மாற்றுதலாற் சங்கார கிருத்தியமும் தீயதன்று; அருட்செயலே. அதுவும் அழிவில்லாத ஞானநாயகராகிய சிவபெருமானலன்றி, ஏனைய சிருட்டி திதி கிருத்தியங்களைப்போல அகந்தையையுடைய மற்றைத் தேவர்களாற் செய்ய முடியுமோ? முன் எவற்றையும் சங்காரஞ்செய்த கடவுளே பின் அது போலச் சிருட்டியுஞ் செய்வர். அவரிடத்தினின்றே எல்லாந்தோன்றும். இவ்வியல்புதான் பதிலக்ஷணத்துக்குரிய வாய்மை. வேதாகமங்களாகிய முதனூல்களை அருளிச்செய்து சகலவித்தைகளுக்குந் தலைவராய் ஞானத்தைக் கொடுக்கின்ற எம்பெருமானைத் தாமதகுணத்தர் என்று சொல்லவாகுமோ? ஆதலால் அவர் அனைவருக்கும் ஒரே நாதர். வேதங்களெல்லாம் அவருக்கு அஞ்சி வியந்து துதிக்கின்றன. நீ அவருக்கு அவியைக் கொடாமல் இகழுகின்றாய். சிவ என்னும் சிறந்த இரண்டெழுத்தையும் உச்சரிப்பவர்கள் யாவரோ அவர்கள் மோஷத்தை அடைவர்கள். நீ அக்கடவுளை இகழ்ந்தாய். மடவோனே, நீ எங்ஙனம் உய்குதி? 'பிரமவிட்டுணுக்களாலே தேடிக் காண்டற்கரிய சிவபெருமானை முதற் கடவுளாகக்

கொள்ளாமல் இகழ்ந்துள்ளோர்க்கெல்லாம் தண்டம் வந்திடும்' என்று வேதங்கள் அறுதியிடும். தக்கனே, நான் சொல்லும் இதனைக் கேள். வேதநாயகராகிய அக்கடவுளை விலக்கி நீ ஒரு யாகத்தைப் புரிந்தாய், ஆதலால், உனக்கும் அத்தண்டம் வருக'' என்று உமாதேவியார் சாபங் கூறி, தக்கன் சொல்லியவற்றை உன்னித் திருவுளம் புழுங்கி, பரிசனங் களோடு வேள்விச்சாலையை நீங்கி, விமானத்தின்மேற் கொண்டு, திருக் கைலாசமலையையடைந்து, விமானத்தினின்றும் இழிந்து, சிவபெருமா னுடைய திருவடிகளை வணங்கி, ''சிறியனுகிய தக்கன் தேவரீரைப் பெரி தும் இகழ்ந்தான், அவன் அரிதாகச் செய்கின்ற வேள்வியைச் சங்கரித் தல் வேண்டும்'' என்று கூறினர். கருணைநிதியாகிய கடவுள் சப்திக்கின்ற மானைத் திருக்கரத்துடைய நாதராதலின், அவ்வுரையைக் கேளாதொழிய, அம்மையார் அது கண்டு திருவுளம் நொந்து, ''எம்பிராணநாயகரே, தேவரீருக்கு விருப்பும் வெறுப்புமில்லை; ஆயினும் அடியேனுக்காக அத் தீய யாகத்தைச் சங்கரித்தல் வேண்டும்'' என்று கூறித் தோத்திரஞ் செய்தார்.

திருச்சிற்றம்பலம்.

## வீரபத்திரப்படலம்.

தக்கனுடைய யாகத்தைச் சங்கரித்தல் வேண்டுமென்று உமாதே வியார் பிரார்த்தித்தபொழுது, சிவபெருமான் அவருடைய அன்பை வியந்து, அவர் சிந்தித்த அச்செயலை முற்றுவிக்கும்படி சிறிதே திருவுளஞ் செய்தார். உடனே ஆயிரஞ் சிரங்களையும், ஆயிரம் முகங்களையும், அந்த முகங்கள் தோறும் மும்மூன்று கண்களையும், வக்கிர தந்தங்களையும், நாககங்கணங்களையணிந்த இரண்டாயிரம் புயங்களையும், நாககுண்டலங் களையணிந்த செவிகளையும், பிரமவிட்டுணு முதலிய தேவர்களுடைய சிரங்களும் என்புகளும் பன்றிக்கொம்புகளும் ஆமையோடுகளும் இடை யிடையே கலந்து கோத்தமாலையும் பூநூலும் அணிந்த மார்பையும், வாள், பரிசை, சூலம், வேல், குலிசம், சக்கரம் முதலாகிய பல ஆயு தங்களை ஏந்திய கரங்களையும், வீரக்கழலும் சிலம்பும் ஒலிக்கும் பாதங் களையும், சர்ப்பாபரணத்தையும், காளகண்டத்தையும் செவ்வானம்போ லுந் திருமேனியையும் உடையராய், கோபாக்கினி அண்டகோளகைக் கப்பாலுஞ் செல்லவும், சங்காரகர்த்தாவாகிய உருத்திரமூர்த்தியுடைய ஒலி போலும் பேரொலி எண்டிசைகளினும் பரவவும், சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்றும் அவருடைய சொரூபமாய் வீரபத்திரக்கடவுள் தோன்றித் திருமுன்பு நின்றார். உமாதேவியார் அதனைக்கண்டு தமது கோபாக்கினியினின்றும் ஆயிரம் முகங்களையும் இரண்டாயிரம் கரங்களை யுமுடைய பத்திரகாளியை உண்டாக்கினர். அந்தக்காளி வீரபத்திரக் கடவுளுக்குத் துணைவியாய் அவரை அடைந்தாள். எல்லாப்பலடக்கலங் களுக்கும் அதிதெய்வமாகிய அஸ்திரதேவரையும் அவருடைய சத்தியாகிய அஸ்திரசத்தியையும் போல அவர்கள் இருவரையும் சிவபெருமானும் உமாதேவியாரும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

வீரபத்திரக்கடவுள் பத்திரகாளியுந் தானுமாய்ப் பரமசிவனையும் பார்ப்பதிதேவியாரையும் வலஞ்செய்து வணங்கி, அஞ்சலித்து நின்று, அவர்களை நோக்கி, ''அடியேன் பிரம விட்டுணுக்களை இங்கே பற்றிக்கொண்டு வரவேண்டுமோ? யமனைக் கொல்லவேண்டுமோ? அசுரர்களை வதைக்கவேண்டுமோ? தேவர்களை அழிக்கவேண்டுமோ? பூவுலகமுழுவதையும்விழுங்கவேண்டுமோ? உலகங்களை நடுங்கச் செய்யவேண்டுமோ? சிவராசிகளைச் சங்கரிக்கவேண்டுமோ? அண்டங்களைத் தகர்க்கவேண்டுமோ? நீவிர் எதனைப் பணிப்பினும் உங்கள் திருவடிகளைச் சிரமேற்கொண்டு அப்பணிகள் எல்லாவற்றையுஞ் செய்வேன். நீங்கள் என்னை உண்டாக்கியது எதற்காக? அதனைச்சொல்லுங்கள்'' என்றார். சிவபெருமான் அவரைநோக்கி, ''தக்கன் நம்மையின்றி ஒருயாகஞ் செய்கின்றான். நீ அந்த யாகத்திற்போய் நமக்குரிய அவியைக் கேட்குதி. அத்தீயோன் அதனைச் சிரத்தையோடு தந்தானையின், இங்கே மீண்டு வருதி. தாராதொழிவானையின், அவனுடைய தலையைச் சேதித்து, அன்பிலை அவனைச் சார்ந்திருப்போரையும் வதைத்து, அவன் செய்யும் யாகத்தையும் கலக்குதி. அப்பொழுது நாமும் ஆண்டு வருவோம். நீ முன்பு செல்லுதி'' என்று கட்டளையிட்டார்.

வீரபத்திரக்கடவுள் பத்திரையுந் தானுமாக, தமது பிதாவும் மாதாவுமாகிய பரமசிவனையும் பார்வதிதேவியாரையும் வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தக்கனுடைய யாகத்தை அழிக்க நினைத்து, மிகுந்த கோபமுற்று, தம்முடைய சுவாசத்தினின்றும், வேர்வையினின்றும், ரோமகூபங்களினின்றும், சொல்லினின்றும், கைகால் முதலாகிய அங்கங்களினின்றும், வாள் முதலாகிய ஆயுதங்களினின்றும் அளவில்லாத பூதகணங்களை உண்டாக்கினர். அவர்கள் பலவித நிறங்களையும் பலவித உருவங்களையும் பலவித ஆயுதங்களையும் உடையர்கள். பத்திரகாளியும் அவ்வியல்புடைய பல காளிகளை உண்டாக்கினள். இவ்விருதிறத்தினரும் வீரபத்திர உருத்திரர், பத்திரை என்னும் இருவருடையபாதங்களை வணங்கித்துதித்து, அவர்களுடைய மருங்கிற் சூழ்ந்து, ஆடிப்பாடித் துள்ளிக்கொண்டு போயினர்கள். இவர்களுள் பானுகம்பர் முதலிய பூதர்கள் வீரபத்திரக் கடவுளுக்கு முன்பு பல வாத்தியங்களை இயம்பிச் சென்றார்கள். தண்டன், பிங்கி, சிங்கன் முதலாயினோர்கள் குடைகளைப் பிடித்துக்கொண்டும் சாமரங்களை வீசிக்கொண்டும் சென்றார்கள். பெண்கள் பலர் பத்திரைக்குப் பக்கத்திலே குடைகளைப் பிடித்தும், சாமரங்களை இரட்டியும், பூக்களைச் சிந்தியும், ஆசிகளைச் சொல்லியும் போயினர்கள். பூமிமுழுதும் நெருங்கிய சேனைகள் ஆரவாரிக்கும் ஒலி எங்கும் செறிதலால் அண்ட முகடும் உடைந்தது. அங்குள்ளவர்கள் ''எவ்வண்டம் உடைந்ததோ'' என்று நடுக்கத்தோடு தம்முட் பேசுவாராயினர்; பூதாளியெழுந்து எல்லாவண்டங்களிலும் பரந்து இரவுபகல் தெரியாவண்ணம் மறைத்தது. இத்தன்மையாகிய சேனைகள் தம்மைச்சூழ, வீரபத்திர உருத்திரர் பெருங்கோபத்தோடு எழுந்து சென்று தக்கனுடைய யாகசாலையை அணுகி, தமது பக்கத்தில் வருகின்ற படைத்தலைவர்களை நோக்கி, ''தக்கனென்னுந் தீயோன் அழியுந்திறத்திலேற் சிற்றினமே பொருளென்றுன்னி இயற்றுகின்ற இவ்வேள்விச்சாலையின் வாயில்களையும் சுற்றுப்பக்கங்களையும் நன்றுகக் காத்துக்கொள்ளுங்கள்'' என்று பணித்தார். அவர்கள் மதிற்புறங்களினும் ஆகாயத்தினும் வாயில்களினும் செறிந்து காத்து நின்று, தக்கனு

டைய சேனைகளாய் வந்தெதிர்த்தோர்களைக் கொன்று, அவர்களுடைய ஊன்களைப் புசித்து, யமனும் நடுங்கும்படி ஆர்த்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## யாகசங்காரப்படலம்.

வீரபத்திரக்கடவுள் பத்திரகாளியோடு தக்கனுடைய யாகசாலையுட் போயினர். அவ்விருவரையும் பிரமா முதலாகிய அனைவரும் பார்த்து, உளந் துண்ணென்று பதைபதைத்து அச்சங்கொண்டு, சிங்கேற்றின் வரவைக் கண்ட மான் கூட்டங்கள்போலவும், இடியேறுண்ட பாம்புகள் போலவும் மனம் நடுங்கி, வலிமையிழந்து, மகிழ்ச்சி நீங்கி, முகம் வாடி, உயிரில்லார் போல ஒடுங்கி, ''இங்கே சிவபெருமானும் உமாதேவியாருமே வந்தார்கள்'' என்பாரும், ''இவர்கள் அவர்களுடைய கடுஞ்சினத்தினின்றும் தோன்றினவர்கள்'' என்பாரும், ''ஐயையோ! இவர்களுடைய கோபம் இத்தன்மையதென்று சொல்லுதற்கரிது'' என்பாரும், ''நம்முடைய உயிர்க்கெல்லாம் இன்றே நாசம் வந்துவிட்டது'' என்பாரும், ''தக்கனுக்கும் இன்றே அழிவு வந்ததுபோலும்'' என்பாரும், ''விதியை யாவர் விலக்க வல்லார்?'' என்பாரும், ''சிவபெருமானை வெறுத்து இகழ்கின்றவர் அக்கணமே அழிவரென்பதற்கு ஐயமுண்டோ?'' என்பாரும், ''பரமசிவனை இகழுகின்ற தக்கன் ஏன் யாகத்தை செய்கின்றான்?'' என்பாரும், ''நம்மையெல்லாம் பரம்பொருளொன்றெண்ணி இந்த யாகத்தைச் செய்தான்காணும்'' என்பாரும், ''தேவர்கூட்டங்களுக்கெல்லாம் இன்றைக்கே நாசம் வருமோ?'', என்பாரும், ''இத்தீங்கெல்லாம் உமாதேவியார் காரணமாகவன்றே உற்றன?'' என்பாரும், ''பூதர்கள் எங்கும் வந்து வளைந்து கொண்டார்கள்'' என்பாரும், ''இங்கே ஓடிப்போகவும் முடியாது'' என்பாரும், ''ஒளித்தற்கிடமேது?'' என்பாரும், ''நாம் இறந்தோங்காணும்'' என்பாரும், ''இனிச் செய்வதென்னை?'' என்பாரும் ஆகி, நாற்புறத்தினும் அக்கினிசூழ அதனடுவுட்பட்ட யானைகள்போலப் பெருந்துன்பமடைந்தார்கள். கடுங்கோபமுற்ற வீரபத்திரக்கடவுள் தம்மைப் பிரியாத சில பூதப்படைத் தலைவர்கள் சூழப் பத்திரையோடு சென்று, தியனுகிய தக்கன் யாகஞ் செய்வதனைப் பார்த்து, இடியிடித்தாற் போலச் சிரித்துப் பொங்கி, அக்கினிகால விழித்து ஆர்த்து, கொம்பு வாத்தியத்தை ஊதினர். அவ்வொலியினால் மேருகிரி பிளந்தது; பூமி வெடித்தது; அண்டங்கள் துடித்தன; உயிர்கள் துளங்கின. தேவர்களும் முனிவர்களும் இடியேறுண்ட பாம்புகள்போலச் சோர்ந்து, பின் எழுகின்றவரும், பதைக்கின்றவரும், வாய்வெருவுகின்றவரும், ஏங்கி அழுகின்றவரும், ஒடுகின்றவரும், மீளுகின்றவரும், ''வேள்வி யழிந்ததோ?'' என்கின்றவரும் ஆயினர். தேவர்களும் முனிவர்களும் இப்படி வருந்தினராயின், ஏனையோர் பட்டபாட்டை நம்மாற் சொல்லமுடியுமோ! அவர்கள் கோடைக்காலத்திலே இடியேறு கேட்ட அசுணமாவின் றன்மையை அடைந்தார்கள்.

இவ்வாறு நிகழும்பொழுது, வீரபத்திரக்கடவுள் யாகசாலையின் முன்னே செல்லுதலும், சீலமில்லாத தக்ஷப்பிரசாபதி அவரைக்கண்டு ஏங்கி மிகவும் நடுங்கி, தலைமை நீங்கி, உள்ளந்தளர்ந்து, பூதர்கள் யாக

சாலையை வளைந்ததையும் அது அழிவுறுதலையும் தேவர்கள் அயர்தலையும் நோக்கி பெருந்துயரமடைந்து, பின்னர் ஒருவாறு தேறி, பேராற்றலுடையவன்போல வீரபத்திரக்கடவுளை நோக்கி, ''நீ யார்? இங்கே வந்தது ஏன்னை?'' என்று வினவினன். அவர், ''தக்கனே, யான் சிவனுடைய குமாரன். உன்னுடைய யாகத்தில் அவருக்குக் கொடுத்தற்பாலதாகிய அவிப்பாகத்தைத் தருதி. அதற்காக அந்தக்கடவுளுடைய பணியினால் ஈண்டுவந்தேன்'' என்று கூறினர். தக்கன் அதனைக்கேட்டு, ''இனி உங்கள் பிதாவாகிய சிவனுக்கு உலகிலுள்ளோர் யாகத்தில் அவியைக் கொடுக்கமாட்டார்கள்'' என்றான். அப்பொழுது, அங்கேயிருக்கின்ற நான்கு வேதங்களும் பிரணவமும் திடீரென்று எழுந்து, ''உயிர்கட்கெல்லாம் ஒரு தனி முதல்வராகிய ஒப்பில்லாத சிவபெருமான் ஒருவரன்றி யாகத்துக்குத் தலைவனாக வேறொரு தேவனும் உண்டோ? தக்கனே, யாகத்திலே நீ அந்தச் சிவபெருமானுக்குக் கொடுத்தற்பாலதாகிய அவிப்பாகத்தைக் காலதாமதஞ் செய்யாமற் கொடுக்குதி'' என்று அறிவிலியாகிய தக்கன் கேட்கும்படி சொல்லின. அப்பொழுதும் அவன் அவியை அவருக்குக் கொடுத்திலன். அவைகள் அதனைக்கண்டு, சிவபெருமானுடைய புகழை எடுத்துத் துதித்துக்கொண்டு, யாகசாலையை நீங்கித் தத்தம் உறைவிடங்களிற் போயின.

வீரபத்திரக்கடவுள் தக்கனை நோக்கி, ''தக்கனே, வேதங்களும் பிரணவமுஞ் சொல்லிய உண்மைப் பொருளைக் கேட்டாயன்றே? எம் பெருமானுக்குரிய அவியை ஈகுதி'' என்றார். அவன் ''சுடுகாட்டிலே ஒரு பெண்ணோடு நின்று கூத்தாடுகின்ற அந்தப்பித்தனுக்கு அவியை ஈயேன்'' என்றான். வீரபத்திரக்கடவுள் அதனைக்கேட்டு, அவனுக்குப் பக்கத்தில் நெருங்கியிருக்கின்ற பிரமா முதலிய தேவர் குழுவை நோக்கி, ''நீங்களும் இவன் பக்ஷமாயினீர். பரமசிவனுக்கு அவியைக் கொடாமல் இவன் அவரை இகழ்ந்தன்மை உங்களுக்கும் உடன்பாடு போலும்?'' என்றார். என்னலும், தேவர்கள் ஊழின்றிறத்தால் அதனைக் கேளாதவர்கள்போல ஒன்றும்பேசாமல் ஊமர்போலிருந்தார்கள். வீரபத்திரக்கடவுள் மிகவும் சினந்து நெருப்பெழ விழித்து, ''இவர்களுடைய வலிமை நன்று'' என்று நகைத்துப் பல்லைக்கடித்துச் சீறி, ஒரு தண்டாயுதத்தினாலே விட்டுணுவினுடைய மார்பில் அடித்தார். அவர் தக்கன் வெருவும்படி அவன் எதிரே விழுந்தார். வீரபத்திரக்கடவுள் அதன்பின்பு பிரமாவை நோக்கி, இடி விழுந்தாற்போல அவருடைய சிரசில் ஒரு திருக்கரத்தாற் குட்டினர். பிரமா அவருடைய பாதங்களில் வணங்குபவர்போல உச்சிச்சிரஞ்சோர வீழ்ந்தார். அவருடைய மனைவியர்களாகிய சரசுவதி முதலாயினோரை மூக்கையும் ஸ்தனத்தையும் அறுத்தார். இவற்றைப் பார்த்துநின்ற தேவர்கள் யாவரும் ஓடி உலைந்து வீழ்ந்து ஒளிப்பிடந்தேடிக் கதறிச் சிதறினர்கள். இவ்வாறுகிய சமயத்திலே, தப்பியோடிப்போகின்ற பூரணசந்திரனை வீரபத்திரக்கடவுள் பார்த்து, தம்முடைய ஒரு பாதத்தினால் மெல்லவாகத் தள்ளி, அவனுடலைச் சின்னம்படத்தேய்த்து, அவனை விடுத்து, வெருவி ஓடுகின்ற சூரியனை இடியிடித்தாற்போலக் கதுப்பிலடித்துப் பற்களை உதிர்த்தார். அவன் உயிர்நீங்கி வீழ்ந்தான். பின் பகனென்னும் சூரியனுடைய கண்களைப் பிடுங்கினர். இத்தன்மைகளை இயமன் கண்டு, அஞ்சி

யோட, அவனுடைய தலையை வெட்டினர். இந்திரன் பயந்து குயிலுருக் கொண்டு ஆகாயத்திற் போயினன். அவனைக்கண்டு வாளினால் வெட்டி வீழ்த்தினர். பயந்தோடிய அக்கினியைக் கண்டு கரத்தைத் துணித்து வீழ்த்தி, ''முதற்கடவுளாகிய சிவபெருமானைத் தூஷித்த தக்கன் கொடுத்த எல்லையில்லாத உணவுகளை வெறுக்காமல் உண்டாய்'' என்று அவனுடைய ஏழுநாக்குக்களையும் அறுத்தார். அவன் வெட்டுண்ட நாவோடும் கையோடும் தள்ளாடி வீழ்ந்தான். அவன் மனைவியர்கிய சுவாகாதேவியினுடைய நாசியை நகத்தினாற் கிள்ளினர். ஆகாயத்திலெழுந்தோடுகின்ற நிருதியைக் கண்டு, ''நில்'' என்று கூறி, தண்டினால் அடித்து வீழ்த்தினர். உருத்திரகணத்தோர்கள் தம்முடைய பாதங்களில் வீழ்ந்து வணங்க, அவர்களைத் தண்டனை செய்யாது, ''போங்கள்'' என்று சொல்லி ஓடிப்போதற்குரிய வழியைக் காட்டி ஓட்டிவிட்டார். வருணனை எழுப்படையினால் அடித்தார். வாயுவை மழுப்படையினால் வதைத்தார். குபேரனை முத்தலைச்சூலத்தினாற் கொன்றார். ஈசான உருத்திரர் ஏங்கி வெட்கி, ''இவர் நம்மைக் கொல்வாரோ?'' என்று பயந்து துதிக்க, அவரை யணுகி, வைது, ஒரு கேட்டையும் செய்யாது, முன்பு உருத்திரர்கள் சென்ற வழியாற் போக விடுத்தார். அவர் நாணத்தோடு போயினர். சோணிதபுரத்துக் கரசனுகிய அசுரேந்திரன் நடுநடுங்கிப் பயந்தோட, அவன்றலையை ஓரம்பினால் வெட்டி வீழ்த்தினர். வேள்வித்தெய்வமாகிய எச்சன் பிணமானுருக்கொண்டு ஓட, ஓரம்பைத்தொடுத்து அவன்றலையை வீழ்த்தினர்.

தக்கன் இச்செய்கைகளெல்லாவற்றையும் துன்பத்தோடு பார்த்து, விரைந்தெழுந்து, வெருவுஞ்சிந்தையனுய், திட்பங்கெட்டு வலையுளகப்பட்ட பிணைமான்போலப் பதைத்து, தன்மனத்தில் இவ்வாறு எண்ணுவானுயினன்: ''அளவிடுதற்கரிய பெருமையையுடைய இந்தயாகமும் என்முன் இவ்வாறு அழியுமோ! என்பிதாவாகிய பிரமதேவர் உபதேசித்தபடி யான் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து, அழிவில்லாத பல வளங்களை அவரிடத்திற் பெற்று, அவற்றைத் தந்த அக்கடவுளை அன்பினோடு நினையாமலும் தோத்திரஞ் செய்யாமலும் செல்வத்தினால் மயங்கினேன். உமையை மணஞ்செய்து கொடுத்து, அவரை மருமகன் என்று கருதி மிகவும் இகழ்ந்தேன். வேத விதிப்படி அச்சிவபெருமானுக்கு முதலிற் கொடுக்கற்பாலதாகிய அவிப்பாகத்தை கொடுக்கலாகாது என்று என்பிதாவினுடைய யாகத்திற்றடை செய்து, யானும் இக்குற்றத்தையுடைய யாகத்தைச் செய்தேன். தந்தை சொல் என்று சொல்லத்தக்க அந்தத் ததீசி முனிவருடைய ஆப்த வாக்கியங்களையும் நிந்தைசெய்தேன். இந்த வேள்வியினலே தானை வந்த என்மகளை மறுத்துப் பின்னிகழ்வதை அறியாதேனுய்ப் பரமபதியாகிய 'சிவபெருமானை இகழ்ந்தேன் அன்றியும், இந்தவீரபத்திரக்கடவுள் வந்து 'சிவபெருமானுக்குரிய அவிப்பாகத்தைத் தருவாய்' என்று சொன்னபொழுது, இவருடைய எண்ணத்தை நோக்கியும், அது நன்றென்று கூறி அவிப்பாகத்தைக் கொடுத்திலேன். வேதங்கள் வந்துசொல்லியதையும் நினைத்திலேன்; எனக்கு இந்தப் புத்திகளெல்லாம் நாசத்துக்கேதுவாய் வந்தனபோலும்! பிரமா முதலாயுள்ள தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அந்தணர்களுக்கும் ஏனையோர்க்கும் ஓர் இறுதியைத் தேடினேன். வேதங்களின் பொருட்டுணிபை யறிந்தும்,

சிவபெருமானே மிகவும் நிந்தித்து, இப்பொழுது இறப்பதற் கேதுவாயினேன். விதிவழியே மதியுஞ்செல்லும்போலும்!'' என்று இவைபோல்வனவற்றைத் தன்மனத்தோடு சொல்லி வருந்தி, ''இறக்குஞ் சமயத்தில் அறிவின்மையை நினைத்துப் பலவற்றையும் பேசி ஆவதென்னே? இனிச் செய்வதுயாது?'' என்றெண்ணி, பக்கத்திலுள்ள பூதசேனைப் பரப்பையும் வீரபத்திரக்கடவுளுடைய வலிமையையும் சினத்தையும் பத்திரகாளியின் கோபத்தையும் பார்த்து, ''யான் தப்பியோடுவது அரிது'' என்று நினைத்து, அதன்மேல், ''இங்கே அழிந்த தேவர்களைப்போல யான் ஓடுவேனுயினும் பிழைப்பதில்லை. ஆதலால் மிக்க வலியையுடைய இந்த வீரபத்திரருக்கெதிரே வன்மையுடையவன்போல நிற்றலே துணிபாம்'' என்று அவ்வாறே நின்றான்.

வீரபத்திரக்கடவுள் அவனது நிலையைக் கண்டு, சீற்றத்தோடு அவனைக் கிட்டி, ''தக்கனே நீ தேவர்களோடு கூடிச் சிவபெருமானைத் தூஷித்தாய். அதனால் உனக்கு இதுவே தண்டனை'' என்று வாட்படையினால் அவனுடைய தலையைத் துணித்து, அது விழுமுன் கரத்தாற்பற்றி, அக்கினியைப் பார்த்து, ''இதனை உண்ணுதி'' என்று கொடுத்தார். அது நொடிப்பொழுதில் அதனை உண்டது. தக்கன் மனைவியர்களாகிய வேதவல்லி முதலாயினேரும் அவனுடைய புத்திரிகளும் அதனைக்கண்டு, கூந்தல் சோரக் கைகளையுதறிப் புலம்பிக்கொண்டு அங்கே வந்தார்கள். பத்திரகாளி வேதவல்லியினுடைய காதை அறுத்து, மற்றை மனைவியர்களுடைய தலைகளையும் அவன் புத்திரிகள் முதலாகிய மற்றைப் பெண்களுடைய தலைகளையும் வாட்படையினால் வெட்டி அவைகளைப் பந்துகள்போல அடித்து விளையாடினாள். வீரபத்திரக்கடவுளும் பத்திரகாளியும் மற்றைத் தேவர்களையும் முனிவர்களையும் தனித்தனி கிட்டி, பாதங்களினாலும் கரங்களினாலும் ஆர்ப்பினாலும் படைக்கலங்களினாலும் கொன்றார்கள். ஊழிக்காற்றையும் ஊழித்தீயையும் போலவும், உமையையும் உருத்திரமூர்த்தியையும் போலவும், பத்திரகாளியும் வீரபத்திரக்கடவுளும் தனித்தனி திரிந்து இவ்வாறே தக்கனுடைய யாகத்தை அழித்தார்கள். அவர்களுடைய நிலைமையைத் தேவர்கள் சிலர் பார்த்து, ''இவர்கள் எங்குமாக நிற்கின்றார்கள்; எல்லாரையும் அழிக்கின்றார்கள். பத்திரையும் வீரபத்திரரும் எண்ணில்லாதவர்கள் போலும்'' என்றார்கள்.

இவ்வாறு வீரபத்திரரும் பத்திரகாளியும் யாகத்தைச் சங்காரிக்கும் பொழுது, பூதசேனைவீரர்களும் காளிகளும் அதனை நோக்கி, வீரபத்திரக்கடவுளுடைய கருத்தின்படி, யாகசாலையைச் சூழ்ந்த மலைபோன்ற மதிலை யழித்து, உட்புகுந்து, தேவர்கள் தியங்கும்படி கோபத்தோடு ஆர்த்தார்கள். அவ்வொலியைக் கேட்டு அங்கிருந்த முனிவர்களும் தேவர்களும் அயர்ந்து, பார்த்த பார்த்த திசைகடோறும் ஓட, அவர்கள் பூமியை வளைத்த சமுத்திரம்போல வளைந்துகொண்டார்கள். அகப்பட்ட தேவர்களும் முனிவர்களும் தியங்கினர்; வெருண்டனர்; திடுக்குற்றனர்; தளர்ந்தனர்; பின்னிட்டனர்; தொலைந்தனர்; மயங்கினர்; கலங்கினர்; மனங்குழம்பினர்; வாடினர். வேள்விச்சாலையிலுள்ள பிராமணர்கள் தம்மைப் பெற்ற இருமுது குரவரையும் தமையன்மாரையும் தம்பிமாரையும் மக்களையும் மனைவியர்களையும் மற்றைச் சுற்றத்தார்களையும் நினைத்து அழைத்தார்கள்; பதைத்தார்கள்; வெருக்கொண்டார்கள்; பிணங்களுள் ஒளித்

தார்கள். தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் சமுத்திரம்போல்ல, வீரபத்திரருடைய படைஞர்கள் அதனுட்புகுந்த மந்தரமலேபோல அவர்களைக் கலக்கியும், கொதுகுகளை யானைகள் புடைத்தாற்போல அடித்து உதிர்த்துந் திரிந்தார்கள். அவர்கள் சிங்கம்போலக் கர்ச்சித்தார்கள்; கலை மான்களைப் போலத் தேவர்களைப் பிடித்து அடித்தார்கள்; பற்களால் அவர்களுடைய சிரங்களைக் கடித்தார்கள்; கழுத்துக்களை யொடித்தார்கள்; தோள்களை முறித்தார்கள்; உடல்களைக் கறித்தார்கள்; அடிநாக்குகளை அகழ்ந்தார்கள்; கண்களைப் பறித்தார்கள்; மிதித்தார்கள்; சங்குகளை ஊதினர்கள்; இரத்தத்தைக் குடித்தார்கள்; உடல்களைப் பிளந்தெறிந்தார்கள்; எதிரே போய்த் தடுத்து உதைத்தார்கள்; துகைத்துக் கொன்றார்கள்; தலைகள் சிந்தும்படி படைகளை விட்டார்கள்; ஊன்களைத் தமது வாய்களில் இட்டார்கள்; சிரங்களை மிதித்தார்கள்; உடம்புகளைக் காலால் மிதித்துக்கொண்டு தோலை உரித்தார்கள்; யாகாக்கினியிலே உடல்களை எரித்தார்கள்; நெய்க் குடத்திலிட்டுப் பொரித்தார்கள்; கரித்தார்கள்; புகைத்தார்கள்; மார்பை அகழ்ந்து குடலையெடுத்து மாலையாகச் சூடி மகிழ்ந்தார்கள்; களித்தார்கள்; சிவனைப் புகழ்ந்தார்கள்; இறக்கின்ற தேவர்களைக் கண்டு இகழ்ந்தார்கள்; அவர்களைத் தூக்கியெறிந்து ஆயுதத்திலேற்றார்கள்; ஒளித்தோடுகின்ற முனிவர்களைக் கண்டு பின்றொடர்ந்தோடிப் பிடித்துப் பூமியிற் கிடத்தித் துடிக்கும்படி குன்றுகளால் அரைத்தார்கள்; சில ஊன்களைக் கழுகுகளுக்குக் கொடுத்தார்கள்; நெய்யையுண்டார்கள்; தயிரையுண்டார்கள்; பாலையுண்டார்கள்; மற்றை உணவுகளை யுண்டார்கள்; தேவர்களுக்காக வைத்த அவிகளையுண்டார்கள்; வடவாமுகாக்கினியைச் சமுத்திரஜலம் அவித்தாற்போல யாககுண்டங்களிலுள்ள மூவகையக்கினியையும் இது மிகப் பரிசுத்தமுடைய தென்று வியந்து மூத்திரத்தைப் பெய்து அவித்தார்கள்; யாகசாலையின் கதவுகளை அடைத்து நெருப்பைக் கொளுத்தி அங்குள்ளவர்களை எரித்தார்கள்; கலசங்களையும் கும்பங்களையும் உடைத்தார்கள்; தகர்த்தார்கள்; நசுத்திரங்களை உதிர்த்தார்கள்; வேள்வித்துரண்களிற் பிணித்த பசுநிரைகளை அவிழ்த்துக் கங்கையிற் செல்ல விடுத்தார்கள்; ஆகாயத்தி லெறிந்தார்கள்; ஆயுதங்களாற் கொன்றார்கள்; அரம்பையர்களுடைய தலைகளையும் மற்றை அங்கங்களையும் அறுத்தார்கள்; கறித்தார்கள்; உமிழ்ந்தார்கள்; எறிந்தார்கள்; இறந்தோருடைய வாகனங்களையும் விமானங்களையும் தேர்களையும் சுட்டார்கள்; அவர் ஏந்திய படைக்கலங்களையும் அணிந்த முடி குண்டலம் முதலிய அணிகலங்களையும் அக்கினியிலிட்டு நீறுக்கினர்கள்; யாக சாலையிலுள்ள வேதிகைகளைக் கால்களால் இடித்துப் பொடியாக்கினர்கள்; தோரணங்களை ஒடித்தார்கள்; கோபாக்கினியை உமிழ்ந்தார்கள்; நடித்தார்கள்; பாடினர்கள்; தக்கனுடைய மருமக்களைப் பிடித்து வாயாற்சொல்லலாந்தகாத கருமத்தைச் செய்தார்கள்; அவர்களுடைய மார்பைக் கையால் அடித்தார்கள்; அவர்கள் உண்ட அவியை உமிழ்ந்தார்கள். சில தேவரைத் தறித்தார்கள்; சிலரைத் தலைமயிர் முழுதையும் பறித்தார்கள்; சிலரைக் கயிறுகளால் யூபங்களிற் கட்டினர்கள்; சிலரை நெருப்பில் வதக்கிக் கொறித்தார்கள்; சிலரை நாற்றிசைகளிலும் எறிந்தார்கள்; சிலரை நிணச்சேற்றிற் புதைத்தார்கள்; சிலரை இரத்தவெள்ளத்தில் விட்டார்கள்; சிலரைப் பருந்துக்கிரையாக இட்டார்கள். இடைந்தவரையும் விழுந்தவரையும் எழுந்

தவரையும் எதிர்வந்தவரையும் இரிந்தவரையும் இருந்தவரையும் கிளர்ந்த வரையும் ஆகாயத்திற் சென்றவரையும் இறந்து கிடந்தவரையும் அவரவர்க் கேற்றபடி இங்ஙனம் பலவாறு தண்டித்தார்கள். கணநாதரிற் சிலர், யாகத்தின் நிலையைக் கண்டு அழுது தளருகின்ற தெய்வப்பெண்களை வலிந்து பிடித்து இழுத்துத் தாமரைத்தடாகத்தை மதயானை புகுந்து கலக்கினாற் போலப் புணர்ந்தார்கள். குட்டென்பதும் பிளவென்பதும் கொல்லென்பதும் வெட்டென்பதும் குத்தென்பதும் முரியென்பதும் கட்டென்பதும் அடியென் பதும் உதையென்பதுமே அந்த யாகசாலையில் எவரும் பேசுஞ் சொற்களா யின. கையற்றவரும் காலற்றவரும் செவியற்றவரும் உடலற்றவரும் நாவற் றவரும் கண்ணற்றவரும் கழுத்தற்றவரும் அல்லது, தக்கனுடைய யாக சாலையில் அழிவைப் பொருந்தாதவர் ஒருவரும் இல்லை.

வீரபத்திரக்கடவுளுடைய சேனையும் பத்திரகாளியுடைய சேனையும் தயிர்க்கடலிலே பல மத்துக்கள் புகுந்துடைத்தாற்போல எங்கும் உலாவி இவ்வாறு யாவரையும் தண்டித்து யாகத்தை அழிக்க, முன்னே வீர பத்திரக்கடவுள் தண்டினால் அடிப்ப வீழ்ந்த விட்டுணு அயர்வுநீங்கி எழுந்து, கவலையோடு யாகத்தின் அழிவைப்பார்த்து, ''யான் இந்த யாகத்தை அழிவின்றி அன்போடு காத்தது அழகிது'' என்று மனத்தி னுன்னி வெட்கி, மானம் நின்று மனத்தையீர உருத்து, ''சிவபெருமானை இகழும் அதிபாதகர்க்கு இத்தன்மையாகிய தண்டம் வருவது முறை'' என்னும் எண்ணமும் தெளிந்த உணர்வும் இல்லாதவராய், வீரபத்திரக் கடவுளோடு போர்செய்யக்கருதி, கருடவாகனத்தை நினைத்தார். அது யாகத்தில் இறந்ததாலும், தம்முடைய கோபாக்கினியை ஒரு கருட வாகனமாக்கினர். அது வணங்கி அவர்முன் நின்றது. நிற்றலும், அதன் தோளில் விரைவில் ஏறி, பஞ்சாயுதங்களையும் ஏந்தி, யாகசாலையைச் சூழ்ந்த பூதப்படைகள்மேல் முனிந்துசென்று, பாஞ்சசன்னியம் என்னுஞ் சங்கை ஊதிக் கடலுடைந்தாற்போலப் பேரொலி செய்து, தேவர்கள் செய்த யாகத்தின் அக்கினி கொடுத்த வில்லைவளைத்து, எண்ணில்லாத பாணங்களை வீரபத்திரக்கடவுளுடைய சேனைகள்மேலே செலுத்தினர். பூதர்களும் காளிகளும் பேய்களும் ஒருங்கு குழுமி விட்டுணுவைச் சூழ்ந்து போர் செய்தார்கள். தம்முடைய சேனைகளோடு விட்டுணு வந்து போர் செய்தலை வீரபத்திரக்கடவுள் பார்த்து நகைத்தார். வேதங்களாகிய ஆயி ரங்குதிரைகள் பூண்டதும், எண்ணில்லாத ஆயுதங்கள் பொருந்தப்பெற் றதும், கொடி முதலியவற்றினால் அலங்காரஞ் செய்யப்பட்டதும் ஆகிய ஒரு பெரிய தேரைச் சிவபெருமான் வீரபத்திரக்கடவுளுக்காக அனுப்ப, அது அவர்முன் வந்தது. முன்னே வீரபத்திரக்கடவுளாற் பூமியில் வீழ்ந்து அயர்ந்துகிடந்த பிரமா அறிவுபெற்றெழுந்து, யாகத்தின் நிகழ்ச்சியையும் விட்டுணு போர்செய்தலையும் வீரபத்திரக்கடவுளுடைய செற்றத்தையும் ஆகாயத்திலே அவருக்காகத் தேர் வந்ததையும் பிறவற்றையும் பார்த்து, ''யான் உய்தற்கு இதுவே காலம்'' என்று கருதி, தேர்ச்சாரதி வேடங் கொண்டு, முட்கோலை யேந்தி, வீரபத்திரக்கடவுளுடைய தேரில் ஏறி விரைவிற்றூண்டி, அவரை வணங்கி, ''விபூதியை உத்தூளித்த செம்பவளத் திருமேனியையுடைய நிருமலரே, பகைவர்களைச் சங்கரிக்கும் வீரரே, உமக் குப் பெருமைவாய்ந்த ஒரு தேரைக் கொண்டுவந்தேன். இதன்மீது

துணைவியாரோடு இவர்ந்தருளும்'' என்று துதித்து இரந்தார். வீரபத்திரக்கடவுள் பிரமாவின் மேற்கொண்ட கோபத்திலொரு சிறிது நீங்கி, பத்திரையோடு அதன்மீது ஏறினர். பிரமா, ''யாவராலும் வெல்லுதற்கரிய வலிமையையுடைய வீரரே, அடியேன் தேர்செலுத்துந் திறத்தைப் பார்த்தருளும்'' என்று கூறி, விட்டுணுவின் முன்பு தேரைச் செலுத்தினர். அதன்மேல் இருந்த வீரபத்திரக்கடவுள், பூமியாகிய தேரின்மீது ஏறி முப்புர தகனஞ் செய்யச் செல்லும் சிவபெருமானை யொத்தார்.

வீரபத்திரக்கடவுள் ஏறிய தேர் தன்முன் வருதலும், விட்டுணு அவரை நோக்கி, ''நீர் சிவபெருமானைத் தூஷித்த தக்கனை அழிப்பதல்லது, அவன் பாலிலுள்ள ஒரு தவறுஞ்செய்யாத தேவர்களை அழிப்பதென்னை? யாகத்தை அழிப்பதென்னை? சொல்லும்'' என்றார். வீரபத்திரக்கடவுள் ''இது நன்று'' என்று நகைத்து, ''சிவபெருமானை இகழ்ந்த தக்கன் செய்த வேள்வியில் அவிப்பாகத்தை உண்டோர்க்கெல்லாம் வேதஞ் சொல்லிய தண்டத்தையே புரிந்தேம். உன்னையுந் தொலைப்போம். நீ வன்மையுடையையாயின் அதனைக் காத்துக்கொள்'' என்றார். விட்டுணு அதனைக் கேட்டு வெகுண்டு, வில்லை வளைத்து நாணேதை செய்து அஸ்திரங்களினூற் பூதர்களை மறைத்தார். அதனைக்கண்டு வீரபத்திரக்கடவுள் மகாமேருமலையை நிகர்த்த வில்லை வளைத்துச் சிறிது நாணேதை செய்தார். அதனூற் சமுத்திரங்கள் ஒடுங்கின; புவனங்கள் நடுங்கின; மலைகள் வெடித்தன; சங்காரகாலம் இதுவோ என்று எவரும் அயர்ந்தனர். வீரபத்திரக்கடவுள் அளவிறந்த பாணங்களைத் தூண்டி விட்டுணுவை மறைத்து, அவர் விடுஞ் சரங்களெல்லாவற்றையும் பொடிபடுத்தினர். விட்டுணு ஆயிரஞ்சரங்களைத் தொடுத்து வீரபத்திரக்கடவுளுடைய புயத்தில் எய்ய, அவர் அவற்றையெல்லாம் ஆயிரங்கணைகளால் விலக்கி, விட்டுணுவினுடைய நெற்றியில் ஒரு பாணத்தை விடுத்தார். அவர் தளர்ந்தார். வீரபத்திரக்கடவுள் அவர் தளர்வு நீங்குமளவும் அவர்மேற் பாணங்களைச் செலுத்தாமல் தேரின்மீது வில்லை ஊன்றிக்கொண்டு நிற்ப, விட்டுணு தளர்வு நீங்கி வந்தெதிர்ந்தார். வீரபத்திரக்கடவுளும் எதிர்ந்தார். இருவரும் முறைமுறையாகச் சரமாரிகளைப் பொழிந்து பொருதார்கள். அவர்கள் செய்த போரை யார் புகழ்ந்து சொல்லவல்லவர்? இவ்வாறு இருவரும் பொருகின்ற பொழுது, வீரபத்திரக்கடவுள் வடவாமுகாக்கினிப் படையைவிட்டுணுவின் மீது தூண்ட, அஃது அவருடைய மார்பிற்பட்டது. அவர் மனம் பதைபதைத்து, இரங்கி வெய்துயிர்த்து, அறிவிழந்து மெலிந்து, பின் ஒருவாறு தெளிந்தார். அந்த விட்டுணுவை வீரபத்திரக்கடவுள் நோக்கி, ''போரைச் செய்குதி'' என்று கூற, அவர் தம்மிடத்துள்ள தெய்வப்படைக்கலங்களெல்லாவற்றையும் அவர்மேற் செலுத்தினர். வீரபத்திரக்கடவுள் அவ்வப்படைக்கலத்தை அவ்வப் படைக்கலத்தால் மாற்றினர். விட்டுணு பிரமப்படைக்கலத்தைத் தூண்டினர். வீரபத்திரக்கடவுளும் அப்படைக்கலத்தைவிட்டு அதனை மாற்றினர். விட்டுணு அளவில்லாத அம்புகளைப் பொழிய, வீரபத்திரக்கடவுள் ஒரு பாணத்தால் அவற்றையழித்து, விட்டுணுவினுடைய சார்ங்கமென்னும் வில்லையும் துணித்து, பின்னும் இரண்டம்புகளை விடுத்து, அவருடைய கருடவாகனத்தின் இரண்டு சிறைகளையும் வெட்டி வீழ்த்தி

னர். விட்டுணு மாயத்தினல் அளவில்லாத விட்டுணுக்களை உண்டாக்க, அவர்கள் யாவரும் வீரபத்திரக்கடவுளுக்கு முன்னே சூற்கொண்ட மேகங் கள்போல வந்து பரந்தார்கள். அவர்கள் யாவரையும் வீரபத்திரக்கட வுள் நெற்றிக்கண்ணின் அக்கினியினலே பொடிபடுத்தினர். விட்டுணு அவர்மீது சக்கரப்படையைத் தூண்ட அதனை வீரபத்திரக்கடவுள் கையாற்பற்றி விழுங்கினர். விட்டுணு தண்டாயுதத்தை எறிந் தார். அதை வீரபத்திரக்கடவுள் தமது தண்டினற் றடுக்க, அது அழிந்து வீழ்ந்தது. அதனை விட்டுணு கண்டு கோபித்து, வாட்படையை எடுத்து வீசும்படி சமீபத்தில்வர, வீரபத்திரக்கடவுள் விரைந்து கோபத் தோடு உங்காரஞ் செய்தார். விட்டுணு சித்திரப்பாவைபோல ஒரு செய லுமின்றிக் கையும் வாளுமாய் அஞ்சிச் சும்மாநின்று தளர்ந்தார். வீர பத்திரக்கடவுள் யாது நினைந்தோ சிறிது கோபங்கொண்டார். அப்பொ ழுது, "மிகுந்த செற்றத்தை நீங்குதி" என்று சிவபெருமான் அருளிச் செய்த ஓரசரீரிவாக்கு ஆகாயத்திற் ரேன்றியது. அதனை வீரபத்திரக் கடவுள் கேட்டுச் சினந்தவிர்ந்து நிற்ப, சாரதியாகிய பிரமா அதனைப் பார்த்து, அவரை வணங்கித் துதித்து "தருமநெறியை நீங்கிய பதகனு கிய தக்கன் நாசமடையும்படி செய்த யாகத்தில் வந்து, அவிப்பாகத்தை உண்ட அறிவில்லாத அடியேனுடைய பிழைகளையெல்லாம் பொறுத்தருள் புரியும்" என்று அவருடைய திருவடித்தாமரைகளைப் பற்றிக்கொண்டார். அவரை வீரபத்திரக்கடவுள் நோக்கி, "அவ்வாருக" என்றருள் புரிந்தார்.

விட்டுணு அந்நிலையைக் கண்டு, "இதுவே சமயம்" என்று கருதி, வீரபத்திரக்கடவுளைத் துதித்து, இவ்வாறு சொல்லலுற்ருர்: "வீரரே, தமியேனுடைய சார்ங்கமென்னும் வில்லையும் துணித்து, பல படைக்கலங் களையுஞ் சிந்தி, அநேக பகைவர்களுடைய உயிரையுண்ட சக்கரப்படை செல்ல அதனையும் பிடித்து விழுங்கி, அடியேனையும் வென்று, புகழைப்பூண் கத் தரிப்பீரென்ருல் யார்தாம் உம்முடைய புகழை முடிவுறச் சொல்லவல் லார்! அறிவில்லாதேனுகிய யான் சன்மார்க்கந்தவறிய தக்கன் செய்த பூசனையை விரும்பி அவனுடைய யாகத்திற் புகுந்தேன். அதனல் நீர் இத் தண்டனையைச் செய்யப்பேற்றேன். அந்தோ! அறிவிற் சிறந்தோர், சிவனை இகழ்ந்த பாவிகள்மாட்டு இருப்பாரோ? சிவநிந்தனை செய்தோரும் அவரைச் சார்ந்தோரும் ஆகிய எல்லார்க்கும் வேதங்களே விதித்த பெரியதண்டனை யல்லவா நீர்செய்த இவைகளெல்லாம்? ஆதலால், எம்மனேர்மாட்டு நீர் செய்த இத்தண்டனைகளெல்லாம் நீதியாம். எம்மிடத்தன்றி உம்மிடத்து ஒருகுறை உண்டோ? கண்ணினலும் சிரிப்பினலும் உயிர்ப்பினலும் ஆர்ப் பினலும் சொல்லினலும் புவனங்களெல்லாவற்றையும் அடியோடு அழிக்க வல்ல கடவுளே, நீர் இந்த யாகத்திற் பலரையும் படைக்கலத்தினற் சங் ஹரித்தது உமக்கு ஒரு திருவிளையாடலன்ருே? தம்மை அடைந்த அன்பர்க்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளுகின்ற சிவபெருமான் கட்டளையிட்ட முறையை நினைத்து, இந்த யாகத்தை அழிப்பதை ஒரு திருவிளையாடலாகக் கொண்டு, சிறிது பொழுதினுட் சங்கரித்தீர். நமது கடவுளே, நீர் இதனை அழிக்கத் திருவுளஞ்செய்தால் யார்தான் உமக்கு எதிர் நிற்கவல்லார்? இலயசத்தி கோரசத்தி போகசத்தி புருஷசத்தி என்று சிவபெருமானுக்கு

நான்கு சத்திகள் உள்ளன. அவற்றுள் இலயசத்தி துர்க்கையும் கோரசத்தி காளியும் போகசத்தி உமையுமாம். யான் புருஷசத்தியாம். இதனை வேதங்கள் சொல்லும். அத்தன்மையால் யான் சிவபெருமானுடைய சத்தியாயின், அவரின் வேறல்லேன். அவர்மாட்டு மிகவும் அன்புடையேன். இழந்த என்னுடைய வலிமையையுஞ் சக்கரப்படையையும் இன்னும் அக்கடவுளுடைய திருவடிகளைப் பூசனைசெய்து மிகவிரைந்து பெற்றுக்கொள்கின்றேன். சுவாமீ, தேவரீர் கோபத்தோடு நீதியைச்செய்ததற்காக மனத்திற் றுன்பங்கொள்ளேன். உம்மால் இத்தண்டனையைப் பெறுதலால் இதனைப் புனிதமாகக் கொள்வேன். தண்டனையைச் செய்த தேவரீர் அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்து இனி அருள்புரியும்'' என்று கூறி, விட்டுணு வீரபத்திரக்கடவுளுடைய பாதங்களை வணங்கினர். அக்கடவுள் விட்டுணு கூறியவற்றைக் கேட்டு, அவருக்கு அருள்செய்து நின்றார்.

அப்பொழுது, பரமசிவன் இடபவாகனத்தின் மேற்கொண்டு, பூதகணங்கள் சூழவும், திருநந்திதேவர் துதிக்கவும் பார்வதிசமேதராய்த் தோன்றியருளினர். அதனைத் தெரிந்த வீரபத்திரக்கடவுள் அச்சத்தோடு கைகூப்பி வணங்கிப் பக்கத்தில் நிற்ப, விட்டுணுவும் பிரமாவும் சிவபெருமானை வணங்கி, பிரிந்த தாயை எதிர்ப்பட்ட குழந்தைகளைப் போன்றார்கள். தேவர்களும் தக்கனும், யாகசாலையிலே கால் கை தலை மார்பு தோள் மூக்கு முதலாகிய அங்கங்கள் துணிந்து வீழ உயிர்நீங்கிக் கிடந்த தன்மையை உமாதேவியார் கண்டு, முன்னே கொண்ட சீற்றம் நீங்கி, அருள் உண்டாக, சிவபெருமானை நோக்கி, ''முன்னுள்ள பொருட்கெல்லாம் முன்னுள்ளகடவுளே, இந்திரனுக்கும் தேவர்களுக்கும் மற்றையாவருக்கும் என்னால் முடிவு வந்ததென்று உலகம் பேசும். அவர்கள் மனம் மயங்கி உம்முடைய பெருமைகளைச் சிறிதும் அறியாது தவறு செய்ததன்மையால், வீரபத்திரனாகிய உமது குமாரனால் இற்றைத்தினத்தில் பெறற்பாலதாகிய தண்டனையைப் பெற்றனரேயன்றே? முன்னும் 'இவர்களைச் சங்கரிக்குதிர்' என்று அடியேன் விரும்பியதனையும் செய்துமுடித்தீர். இப்பொழுது அவர்கள் உய்ந்து உயிர்பெற்றெழும்வண்ணம் இந்த வரத்தையும் அடியேனுக்குத் தந்தருளும்'' என்று வணங்கிப் பிரார்த்தித்தார். சிவபெருமான் ''உன்னருள் நன்று'' என்று திருப்புன்முறுவல்செய்து, தமது மருங்கில் நின்ற வீரபத்திரக்கடவுளை நோக்கி, ''இந்த யாகத்தில் நம்மை இகழ்ந்து உன்னுடைய கோபத்தால் இறந்தோருடைய உயிர்களை மீண்டுங் கொடுத்து அவர்களுடைய உடல்களை முன்னுள்போலச் செய்குதி'' என்றருளிச்செய்தார். வீரபத்திரக்கடவுள் அதற்கிசைந்து, ''இறந்த அனைவரும் முன்போல எழும்புங்கள்'' என்று சொல்ல, தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் உயிர்வரப்பெற்று, நித்திரை விட்டெழுந்தவர்போல எழுந்து, தாம் தக்கனுடைய யாகத்தில் வந்திறந்ததையும் மீண்டுயிர்பெற்றெழுந்ததையும் கனவுகண்டதுபோல உணர்ந்து, வெருவி, மனம் மருண்டு, சிவபெருமானை இகழ்ந்ததனால் வந்த பழியை நினைத்து வருந்தி, மிக வெட்கமடைந்தார்கள்.

உயிர்பெற்றெழுந்த தேவர்களும் முனிவர்களும், வீரபத்திரக்கடவுள் மருங்கிலே நிற்பச் சிவபெருமான் பார்ப்பதி சமேதராய் ஆகாயத்தில் வெளிப்பட்டு நிற்றலைத் தரிசித்து அஞ்சி நடுங்கினர்கள். அதனை அக்கடவுள் கண்ணுற்று, ''நம்மையன்றி இவர்க்குத் தஞ்சம் யாவர்'' என்று

திருவுளங் கொண்டு, ''தளராதொழிமின்'' என்றருள் புரிந்தார். பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் அக்கடவுளுடைய திருவருளைப் பார்த்து, ''எம்பெருமானுடைய பேரருள் இருந்தவாறு நன்று'' என்று மிகமகிழ்ந்து, அவருக்கணித்தாய்ச் சென்று வணங்கி, இவ்வாறு விண்ணப்பஞ் செய்வார்கள்: ''எம்பெருமானே, மனம் மயங்கித் தக்கனுடைய வேள்வியில் உம்மையன்றி வந்திருந்த பர்வியேங்கள் முன்னும் எழுந்தருளிவந்து கருணைபுரிந்தீர். மைந்தர்க்குத் தந்தையல்லது வேறொருவர் சார்புண்டோ? அன்பில்லாத அடியேங்கண்மாட்டுத் தேவரீர் சினஞ்செய்தால், சிருட்டி முதலாகிய கிருத்தியங்களைக் கைக்கொண்டு முறைசெய்யும் பக்குவம் நமக்குளதோ? 'அஞ்சற்க' என்றுசொல்ல வேறோர் தஞ்சமுளதோ? எங்களுடைய உயிர் தானும் உளதோ? வேதநெறிகடந்த இந்தவேள்வியில் அவிப்பாகத்தையுண்ட பேதைகளாகிய சிறியேங்கள் நெடுங்காலம் தீவினையினூற் றுன்பப்படாமல் இமைப்பொழுதினுள் அதனால் ஆகும் பாவத்தைத் தண்டனை செய்து தொலைத்த முதற்கடவுளே, உமக்கு அடியேங்கள் செய்கின்ற கைம்மாறுயாது? உம்முடைய திருவடிகளுக்குப் பிழைசெய்த அடியேங்களெல்லோமும் இங்கே வீரபத்திரக்கடவுளென்னும் சிங்கத்தின் கையாற் சிதைபட்டவாறெல்லாம் ஈனங்களல்ல; அவை பவித்திரமாய் எங்களுடைய அங்கங்கட்கெல்லாம் அணிந்த அணிகளல்லவோ? எம்பெருமானே, தேவரீர் முன்னாளிற் கங்கையைத் தரித்ததும், அக்கினியை ஏந்தியதும், விஷத்தைத் திருவமுது செய்ததும், உமையம்மையார் காண நடனஞ்செய்ததும் எங்கள் மாட்டு வைத்த திருவருளன்றே? அறிவில்லாத அடியேங்கள் தேவரீருக்குச் செய்த பிழைகளைத் திருவுள்ளங்கொள்ளாது, அடியேம் உய்யும்படி அவற்றைப் பொறுத்தருளும்'' என்று பிரமா விட்டுணு முதலிய தேவர்கள் பிரார்த்தித்தார்கள். சிவபெருமான் ''நீவீர் செய்த பிழைகளைப் பொறுத்தோம்'' என்றருளிச்செய்தார். தேவர்கள் அவருடைய திருவருளைத் துதித்துத் தொழுது, மனங்களிப்பெய்தித் தேறி, ஆடிப்பாடிச் சிறப்புற்றார்கள். அப்பொழுது, சிவபெருமான பிரமா முதலிய தேவர்கண்மீது திருவருட்கண் சாத்தி, ''உங்களுங்கள் அரசுரிமையை உங்களுக்கே தந்தோம். முன்போல உங்கள் கிருத்தியங்களைச் செய்யுங்கள்'' என்று திருவாய்மலர்ந்தருளினர். அரிபிரமேந்திராதி தேவர்கள் யாவரும் அக்கடவுளுடைய அருட்டிறத்தைத் துதித்து மகிழ்ந்தார்கள்.

அவருள் பிரமா, வீரபத்திரக்கடவுளால் யாகத்தில் இறந்தபின்பு எழுந்த குழுவினுள் தம்மகனுகிய தக்கனைக் காணுதவராய், சிவபெருமானுடைய திருவடிகளின்முன் வீழ்ந்துவணங்கி, ''எம்பெருமானே, தேவரீருடைய திருவாக்கை இகழ்ந்து யாகத்தைச் செய்த கீழ்மகனுகிய தக்கனுடைய அகந்தையை நீக்கும்படி அவனைத் தண்டஞ்செய்து நரகத்தில் வீழ்த்தலை மாற்றினீர். அவனும் எங்களைப்போலப் பிழைத்தெழுமாறு அருள்புரியும்'' என்றுவேண்ட, சிவபெருமான் ''அவ்வாறுகுக'' என்று கருணை செய்தார். வீரபத்திரக்கடவுள் அவருடைய திருவருளைக்கண்டு, ''சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்துத் துதித்து அவற்றினியல்பை அறிதலால் தாழ்வடையாத ஊழ் தக்கனுக்கு உளது'' என்றெண்ணி, அவனுக்குரிய புல்லிய தலையை அவனுடலோடு சேர்க்கக் கருதி, ''அக்குறை யுடலைக்கொண்டு வருதி'' என்று பானுகம்பருக்குக் கூறினர். அவர்

அவ்வுடலை வீரபத்திரக் கடவுளுக்கு முன் கொண்டுவந்திடுதலும், வீரபத்திரக் கடவுள் யாகப்பசுக்களுள் இறந்த ஓர் ஆட்டின்றலையைக் கண்டு எடுத்து, வேதங்களாற் றுதிக்கப்படும் பரமபதியாகிய சிவபெருமானை இகழும் பாவிகள் இவ்வாறேயாவர் என்பதனை யாவர்க்கும் புலப்படுத்துவாராய், அத்தலையை அவ்வுடலிற் பொருத்தி, ''எழுக'' என்றார். என்னலும், உயிர்பெற்றெழுந்த தக்கன் எதிரில் நிற்கின்ற வீரபத்திரக் கடவுளைக் கண்டு, நெஞ்சந் துண்ணென்ன அஞ்சி, தன்பெருமையெல்லாம் இழந்து, அவ்வாட்டுத் தலையால் வணங்கி, நாணி, அன்று தான்செய்த செயல்களை நினைந்து இரங்கி, துன்பக்கடலுள் ஆழ்ந்து, உமாதேவியாரோடு இடபவாகனருடராய் நிற்கின்ற சிவபெருமானைத் தரிசித்து, விரைவில் வெருக்கொண்டு, மிக அச்சுற்றான். அப்பொழுது சிவபெருமான் ''தக்கனே, இனி நீ அஞ்சற்க'' என்று அருள்புரிந்தார். அவன் எம்பெருமானுடைய திருவடிகளின் முன் வணங்கி, ''பாவியேன் புரிந்ததிமை மனத்தாலும் அளவிடமுடியாது. ஐயனே, நினைக்குந்தோறும் என்மனத்தைச் சுடுகின்றது. தேவரீர் அதனை நீக்கித் திருவருள் புரிந்த தன்மையால் உய்ந்தேன். அடியேன் பிழை செய்ததுபோல யார் பிழைசெய்யினும் அடியேனைப் போலத் தண்டிக்கப்படுவது துணிபாமன்றே? உம்முடைய பெரிய மாயையினுல் விட்டுணுவே துணையென்றெண்ணி உம்மை இகழ்ந்தேன். சிறியேன் யாதுமறிகிலேன்'' என்று விண்ணப்பஞ்செய்தான். உமாதேவியார் பத்திரகாளியோடு பக்கத்தில் நின்ற வீரபத்திரரை ''வருக'' என்று அழைத்து, அவ்விருவருடைய முதுகையுந்தடவி, அவர்களுக்குப் பல வரங்களையும் கொடுத்தார். அரிபிரமேந்திராதி தேவர்களும் தக்கனும் முனிவர்களும் தம்மைத் துதித்து வணங்கி நிற்ப, சிவபெருமான் அவர்களை நோக்கி, ''தேவிர்காள், வம்மின். யாகத்தில் நீவிர் யாவரும் நம்மை இகழ்ந்து குற்றத்துட்படக் கிடந்ததெல்லாம் முன்னை ஊழ்வலியாம். உமக்கு இப்பிறப்பில் யாம் இத்தண்டத்தைச் செய்தவாறும் முறைமையே. இதற்காக நாணமுற்று இரங்காதொழிமின்'' என்றருளிச் செய்தார். தம்பதைவர்களாயுள்ளோர்க்கு மனமிரங்கி அருள்புரிகின்ற சிவபெருமான் இவ்வாறு அருளிச் செய்தலும், தேவர்கள் அவரையும் வீரபத்திரக்கடவுளையும் வணங்கித் துதித்தார்கள். சிவபெருமான் வீரபத்திரக்கடவுளும் காளியும் பக்கத்தில் வரவும், திருநந்திதேவர் முன்புசெல்லவும், பூத சேனைகள் சூழவும், உமாதேவியாரோடு அவ்விடத்தை நீங்கித் திருக்கைலாசமலையை அடைந்து, கோயிலிலுள்ள செம்பொன் மன்றில் வீற்றிருந்து, வீரபத்திரக்கடவுளுக்கும் காளிக்கும் மேலுலகத்தில் ஒரு புவனத்தைக் கொடுத்தார். வீரபத்திரக்கடவுள் இருமுதுகுரவர்களுடைய பாதங்களை வணங்கி விடைபெற்று, யாகசங்காராகாலத்திலே சிவபெருமான் கொடுத்தருளிய தேரின்மீது பத்திரகாளியோடிவர்ந்து, பானுகம்பர் அதனைச் செலுத்த, சேனைகளோடு தமதுலகிற் போய்க் கோயிலையடைந்து, பூதர்கள் சூழத் துணைவியோடு இனிதாக வீற்றிருந்தார். இது நிற்க.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

# அடிமுடிதேடு படலம்.

சிவபெருமான் திருக்கைலாசமலைக்கு மீண்டுவந்தபின், யாகசாலையில் நின்றதேவர்களுள்ளே பிரமதேவர், பெருமையை இழந்த தமது குமாரனுகிய தக்கனை நோக்கி, இவ்வாறு சொல்கின்றார்: ''மகனே, நீ எதனைப் படித்தாய்? எத்தொழிலைச் செய்தாய்? அதனால் எந்தப் பிரயோசனத்தை அடையக் கருதினாய்! அந்தப் பிரயோசனத்தை யாராற் பெற்றாய்? பெற்று அதன்பின் யாதுசெய்தாய்? அதனால் என்னபாட்டைப் பட்டாய்? பின் இங்கே என்னத்தைப் பெற்றாய்? இனி உன்னெண்ணம் யாது? * தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அந்தணர்களுக்கும் உயிரைக்கொன்று தின்கின்ற ஒரு கூற்றுவனுயினாய், உன் சிரையும் தொலைத்தாய்; தக்கனென்னும் பேரையுந் தொலைத்தாய். பேதையாய் உன்னுடைய அழகையுந் தொலைத்தாய்; உன்னுடைய ஏவலைச் செய்கின்றவர்கள் எல்லாரையும் தொலைத்தாய்; துன்பத்தையடைந்தாய்; உன்னுணர்வல்லது பெரியோர்கள் சொன்னதையும் உணர்ந்தாயில்லை: சிவபெருமானுடைய பெருந்தன்மை முழுதையும் அறிந்த நீ, ஊழினால் அக்கடவுளை இகழ்ந்து, இந்நிலைமையை அடைந்தாய், பெருஞ் செல்வங்களைப் பெற்று. அவற்றை ஈந்தருளிய சிவபெருமானுடைய மேன்மைகளை அயர்த்தாய்; இந்த மயக்கம் உன்னளவில் மாத்திரமன்று, சீவராசிகளுக்கெல்லாம் உள்ளது. ஆதலால் நீயும் மயங்கினாய்; நீ என்ன செய்வாய்? முற்றுணர்வெய்தி எல்லாவற்றையும் படைத்துக் காக்கப்பெற்ற பிரமவிட்டுணுக்களாகிய எங்கள் மாட்டும் முன்னளிலே மயக்கம் வந்துற்றது. சிவபெருமான் அதனைக் கண்டு இற்றைநாள்போல அருளினால் வந்து அம்மயக்கத்தை நீக்கினர். ஆதலால், தக்கனே, நீ நிருமலராகிய அக்கடவுளுடைய திருவடிகளை அன்போடு அருச்சனை செய்குதி. அவர் மயங்குகின்ற இப்பிறவியை நீக்கி ஞானத்தையும் மோக்ஷத்தையும் கொடுப்பார்'' என்று பிரமா சொல்லினர். தக்கன் அதற்கிசைந்து, ''பிதாவே உய்யுந் திறத்தை எனக்கு உபதேசித்தீர். உங்கள்மாட்டு முன்னளில் உண்டாகிய மயக்கத்தையும் சிவபெருமான் வந்து அதனை நீக்கி உங்களுக்கு அருள் செய்ததனையும் தமியேன் அறியும்படி சொல்லும்'' என்றான், பிரமா தக்கனை நோக்கி, ''இக்கதையை முன்னுஞ் சொன்னோம். இன்னமும் சொல்வோம்'' என்று கூறி, முன்னளிலே தாமும் விட்டுணுவும் தாமே பரம்பொருள் என்று போர்செய்த காலத்தில் சிவபெருமான் வெளிப்பட்டு வந்தருள்செய்ததிருக்கோலத்தை நினைத்துத்தொழுது, சொல்வாராயினர்:-

''ஆயிரஞ் சதுர்யுகங்கழிந்தால் எனக்கு ஒரு பகற்காலமாகும். அப் பகற்காலங்கழிந்து இரவு வர, நான் நித்திரை செய்தேன், அப்பொழுது, சூரிய சந்திரர் முதலாகிய கிரகங்களும், நக்ஷத்திரங்களும், இந்திரன் முதலிய தேவர்கூட்டங்களும், இப்பூவுலகமும், இங்குள்ள உயிர்களும் அழிந்தன. மேலுலகங்களிலுள்ள முனிவர்கள் யாவரும் பயந்து நடுங்கி, சனலோகத்தையடைந்தார்கள். நாற்றிசைக்கடல்களும் விரைவில் எழுந்து, உமாதேவி

* வேதங்களையுணர்ந்து, தவஞ்செய்து, மோக்ஷத்தைக் கருதாமற் செல்வத்தைக் கருதி, அதனைச் சிவபெருமானுற் பெற்று, பின் அவரைத் தூஷித்து யாகஞ்செய்து, இறந்து, ஆட்டுத்தலையைப் பெற்றாய். இனியேனும் இதற்கேற்ற பரிகாரத்தைச் செய்கின்றனையா? என்பார் இவ்வாறு வினவினர்.

யார் தவஞ்செய்கின்ற காஞ்சிப்பதி முதலாகிய தலங்களை ஒழிந்த பூவுலகத்தை விழுங்கி, சத்தபாதலங்களையும் மூடி மேலே உலாவி, தேவ்ருலகத்தை அழித்து நிமிர்ந்து, அப்பாலுமாகி, இவ்வாறு உலகை அழித்தன. அப்பொழுது, விட்டுணு பரமசிவனுடைய திருவடியைத் தியானஞ்செய்து கொண்டு, ஓராலிலையின்மீது குழந்தைவடிவாய் நித்திரைசெய்தார். அதனைச் சனலோகத்திலுள்ள முனிவர்கள் கண்டு புகீழ, அவர் விழித்துப் பூவுலகத்தைத் தேடுதலும், அது பாதலத்தில் ஆழ்ந்ததாக, அந்த விட்டுணு ஒரு பன்றியின் உருவுகொண்டு பாதலத்திற்போய்த் தேடி, அப்பூமியைத் தம்முடைய கொம்பினல் எடுத்துக்கொண்டு மீண்டுவந்து, முன்போல நிறுத்திப் போயினர். அப்பொழுது, அவ்வாயிரஞ் சதுர்யுகமுங் கழிய, எனக்கு மற்றொரு பகற்பொழுதாயது. நான் நித்திரைவிட்டெழுந்து, சிருட்டித் தொழில் செய்யும்படி நினைக்க, சமுத்திரங்கள் யாவும் முன்னின்ற நிலையை யடைந்தன. விட்டுணு 'நாம் கொம்பினலே பூமியை எடுத்து நிலைநிறுத்தினேம் என்று நினைத்து, அகந்தையுற்று, பாற்கடலிலே சேஷசயனத்தின்மீது அறிதுயில் செய்தார். அப்பொழுது யான், தேவர்களையும் அசுரர்களையும் மானுடர்களையும் விலங்குகளையும் மற்றைச் சீவராசிகளையும் சிருட்டித்து, வானுலகத்திலும் பூவுலகத்திலும் வைத்து, இந்திரனை விண்ணுலக அரசனுக்கி, மற்றைத் திக்குப்பாலகர்களை அவரவர் தானங்களேறும் இருத்தி, இத்தன்மையாகிய சிருட்டியை மிகப்பெரிது என்றுன்னி, என்னையொழிய வேறொரு கடவுளும் இல்லையென்று எழுந்து, 'நான் உறங்கும்பொழுது உயிர்கள் யாவும் இறக்கும். நான் எழும்பொழுது அவ்வுயிர்களெல்லாம் எழும்பும். ஆதலால் யானே அவற்றிற்கெல்லாம் தஞ்சம். என்னையன்றி அவ்வுயிர்களுக்கு ஒரு பிதாவுமில்லை. எல்லாருக்கும் மேலான பரம்பொருள் யானே' என்று என்னை வியந்து, மேலுலகங்களையும் திக்குக்களையும் மற்றையுலகங்களையும் மேருமலையையும் ஏழுகடல்களையும் சிவராசிகளையும் மற்றைச் சடப்பொருள்களையும் போய்ப் பார்த்து, 'இந்தப் பொருள்களனைத்தும் முன்னுளில் யான் உண்டாக்கினவைகளாயின் எனக்கு ஒருவரும் நிகரில்லை' என்று மனத்தில் மதித்து. விட்டுணு பாற்கடலில் அகந்தையோடு அறிதுயில் செய்தலைக்கண்டு, அவரை விட்டுணு என்று அறிந்தும், செருக்கோடு சென்று இலக்குமி வசிக்கின்ற அவருடைய மார்பிலே தாக்கி, 'நித்திரைவிட்டெழும்பும்' என்று கூறினேன். அவர் எழுந்தார். எழுந்த அவரை 'நீ யார்? சொல்லுதி' என்று யான் வினவுதலும், அவர் 'மைந்தனே, நான் உனது பிதா. நீ என்னை அறியாயோ?' என்றார். நான் நகைத்து, 'எழும்பினலும் நீ நித்திரைவிட்டெழுந்திலைபோலும்? பிதாமார் தமது புத்திரர்களுக்குச் சொல்லுகின்ற வாசகம்போல நீ நமக்குமுன்னே இதனைச் சொன்னது முறையன்று. என்னை 'இவரே என்பிதா' என்று நினைக்குதி. பரப்பிரமம் யாம் என்றறி. உன்னுடைய உந்திக் கமலத்திலிருந்து வந்த உண்மையை உணராமல் நம்மை உன் மைந்தன் என்று நினைத்தாய். விறகானது தன்னிடத்திற் பிறந்த அக்கினிக்குத் தந்தையாகுமோ! நீ சொல்லிய இது பொய்யன்றே? 'யான் உன்பிதா' என்று நீ எனக்கு உன்னை வியந்து சொன்னாய். இனி அந்த வியப்பை விட்டுவிடு. நீ தவவலிமையினல் முன்னுளில் ஒரு தூணிலே உதித்தாய். அதனல் உன்னைக்காட்டிலும் அந்தத் தூணை உயர்ந்த பொருளாமோ? என்மகனுகிய பிருகு முனிவன் சொல்லிய சாபத்தால் அடிக்கடி

பத்துப்பிறப்பை எடுத்தாய். உன்னுடைய அந்த உடம்புகளெல்லாவற்றை யும் நாமே படைத்தோம். அப்படிப் படைத்து நம்முடைய கை சிவந்திருக் கின்றது. அதனைக் காணுதி' என்றேன். யான் விட்டுணுவுக் கெதிரிற் புகுந்து இப்படிச் சொல்லுதலும், அவர் கோபத்தினாலே நன்றென்று தலையசைத் துக் கையோடு கைதட்டிச் சிரித்து, இவ்வாறு சொல்வார்: 'பரமசிவன் உன் னுடைய உச்சிச்சிரசை நகத்தினாற் கிள்ளுதலும், நீ அஞ்சி வீழ்ந்தாய். அதை இன்னும் படைத்துவைத்தாயில்லை; இப்படிப்பட்ட நீ நம்மைப் படைப்பதென்பது நன்றாயிருந்தது! மைந்தனே, உன்னைப் பெற்ற தாயும் யாம், தந்தையும் யாம், உனக்குத் தெய்வமும் யாம், குருவும் யாம். நீ அந்த நம்முடைய மாயையினால் மயக்கமடைகின்றாய். பொன்னில்லாமல் ஆபர ணம் உண்டாகுமோ? அரனின்றி நிலவுலகம் நிகழுமோ? பூமியில்லாமல் வளங்கள் உண்டாகுமோ? அவைபோல, என்னையின்றி எந்தச் சராசரங் களும் உண்டாகுமோ? எவ்வுயிர்களையும் எண்ணுவிப்போனும் யான்; எண்ணுகின்றவனும் யான்; பதிப்பொருளும் யான்; ஐம்புலன்களும் யான்; அணுகுதற்கரியவனும் யான்; நாரணனாகிய கடவுளும் யான்; இந்திரனும் யான்; வேதமும் அவ்வேதப்பொருளும் யான்; ஆதியும் யான்; உருவும் யான்; அருவும் யான்; இருளும் யான்; சோதியும் யான்; ஜகத்பிதாவும் யான்; நிருமலனும் யான்; மாயனும் யான்; எல்லாம் யான்; எல்லாரும் யான்; பூதங்களும் யான்; சிவனுடைய பாதியும் யான்; அந்தப் பரமசிவமும் யான்; பரம்பொருளும் யான்' என்று பற்பலவற்றைச் சொன்னார். யான், அவருக்கெதிராய்ச் சென்று கோபித்து, 'நாமிருவரும் போரைச் செய்வோம். நம்மில் வெற்றிகொண்டவர்களே மேலோர்கள். போருக்கு எழும்புதி' என் றேன். விட்டுணு அதற்குடன்பட்டு எதிர்த்தெழுந்து, யமப்படைக்கல மூத லாகிய பெரிய படைக்கலங்களெல்லாவற்றையும் என்மீது விடுக்க, யான் தருப்பையால் அவ்வப்படைகளை உண்டாக்கி விடுத்து அவற்றை அழித் தேன். விட்டுணு அதனைக்கண்டு தன்படையைவிட, யான் என்படையை விடுத்தேன். அது அவருடைய படைக்கலத்தைத் தடுத்து மீண்டது. தம் முடைய படை மீளுதலும், விட்டுணு எல்லாப் படைகளுக்கும் மேலாகிய சிவப்படைக்கலத்தை எடுத்து வழிபட்டு என்மீதுவிட, அது நஞ்சினுங் கொடிதாக வந்தது. நான் சிவபெருமான் எனக்குத் தந்தருளிய அப் படையை எடுத்து வழிபட்டு விடுப்ப அது நெருப்பின்மேல் நெருப்புச் சென் றாற்போலச் சென்றது. நாம் செலுத்திய அப்படைகளிரண்டும் தம்முள் விளையாடி, அக்கினிக்கற்றைகளை எங்குஞ் சிந்தி உலகங்களை அழித்து, உலா வித்திரிந்தன. அவைகள் சொரிந்த தீச்சுவாலைகள் வானுலகத்திலும் பூவுல கத்திலும் நெருங்குதலால், தேவர்கள் அவ்வெம்மையைச் சகிக்கலாற்றாமல் நடுங்கி ஏங்கினர். அவருள் சிலர் வெதும்பி மாண்டார்; சிலர் வீழ்ந்தார்; சிலர் சிவபெருமானைச் சரணடைவோமென்று கைலையங்கிரிக்கு ஓடினர். மேகங்களெல்லாம் கரிந்தன; விண்ணுலகமும் மண்ணுலகமும் எரிந்தன; சீமுத்திரங்கள் வறந்தன. பல சீவராசிகள் தொலைந்தன. பின்னும் போர் செய்தோம்.

''இவ்வாறு நாமிருவரும் போர்செய்தபொழுது, சிவபெருமா னுடைய திருவருளினால் என்னுடைய முகத்தில் நாரதமுனிவன் தோன்றி, 'நீவிர் இருவரும் 'நாம் முதற்கடவுள் நாம் முதற்கடவுள்' என்று பேசிப்

போர்புரிகின்றீர்போலும். முதற்கடவுள் ஒருவரன்றி இல்லை. உங்களிருவரில் யார் முதல்வர்? இருவரும் முதல்வரல்லீர். யுத்தஞ் செய்யப் புகுந்தபொழுதும் உங்களுங்கள் படைகளையன்றி உலகங்களெல்லாவற்றையும் சங்கரிக்கின்ற சிவப்படைக்கலத்தை விடுத்தீர்கள். அப்படையை உங்களுக்குத்தந்த கடவுளை மறந்தீர்கள்போலும். மறந்தீராயினும், நீர் பெற்ற அப்படைகளின் பெயரையும் மறந்தீர்களோ! அப்பெயரை உங்கள் மனத்தில் நன்முய் நினைத்துத் தெளிந்துகொள்ளுங்கள். இன்னும் நீங்கள் போர் செய்வீராயின் உங்களுக்கு முதல்வராயும் அருவுருவாயும் உள்ள பரமசிவன் ஒரு சோதி வடிவாய் அதன் நடுவே தோன்றுவார். அதனைத் தரிசியுங்கள்' என்று ஞானத்தினுல் எமக்கிவற்றை உபதேசித்துப்போயினன். நாங்கள் அவன் சொல்லியவற்றை மனத்திற் கொள்ளாமலும். செருக்கு நீங்காமலும், உலகங்களும் உயிர்களும் அழியும்படி கோபத்தோடு ஆயிரம் ஆண்டுவரையும் போர்செய்தோம். மகா சங்காரகாலத்திலே ஊழித்தீயின் நடுவில் நின்று திருநிருத்தஞ் செய்யும் பரமசிவன் இவைகளெல்லாவற்றையும் பார்த்தருளி, 'இந்தப் பிரமவிட்டுணுக்கள் தாமே பரம்பொருள் என்னும் புகழை விரும்பினவராய்த் தங்களிற் போர்செய்கின்றனர்; அறிவு அறைபோயினர்; அகந்தையுற்றனர்; மேல்வருவதொன்றையும் அறிகிலர்; மெய்ப்பொருளைச் சிந்திக்கின்றிலர்; சிறுவர்களைப்போல இருவரும் கோபத்தோடு போர்செய்து உலகங்கள் யாவற்றையும் அழிக்கின்றனர்; இவருடைய இச்செயலை நாம் இன்னும் பார்த்திருப்போமாயின், உலகுகெடும்; உயிர்களெல்லாம் அழியும்; நம்முடைய மேலாகிய உண்மைத்தன்மையை உணர்த்தினுல், அப்பொழுதே வெவ்விய இந்தப் போரைத் தணிந்து நிற்பர்; தம்மையே பரம்பொருள் என்று சொல்கின்றதையும் வெவ்விய கோபத்தையும் தாமாகவே விடுத்துச் செம்மையாகிய மனத்தினராய் விளங்குவர்' என்று திருவுளங்கொண்டார்.

''அப்பொழுது, மாசிமாசத்திலே அபரபக்ஷ சதுர்த்தசி திதியின் நடுநிசி வந்தது. அதில் யாங்கள் கண்டு நடுங்கும்படி, எங்களிருவருக்கும் நடுவில் சிவபெருமான் ஓர் அக்கினிமலைபோலத் தோன்றினர். தோன்றிய அச்சோதி நாமிருவரும் செலுத்திய சிவப்படைக்கலங்களிரண்டையும் தன்னுளடக்கிக் கொண்டு, தாங்குதற்கரிய வெம்மையுடையதாயது. நாம் அதனை அணுகாமல் தூரப்போய், சிற்றத்தையும் போரையும் நீங்கி, அதனைப் பார்த்துக் கொண்டு நின்றேம். அப்போது, 'சிறுவர்காள், உங்கள் வலிமையைத் திரிபுராந்தகராகிய சிவபெருமானே காண்பார். நீவிர் இருவரும் இந்தச் சோதியின் அடியையும் முடியையும் காணுங்கள்' என்று நாங்கள் கேட்கும்படி ஆகாயத்திலே ஓரசரீரி வாக்கு விரைவில் எழுந்தது. அதனைக்கேட்டு, உள்ளத்திற் கிளர்ந்தெழுந்த கோபம் முழுதையும் நீங்கினேமாயினும், பின்னும் அகந்தை நீங்காதேமாய், 'நமது கடவுளாகிய சிவபெருமான் நும்வலியைக் காண்பார்' என்று பெருமையோடு ஆகாயத்திற் சொன்னவர் யார் கொல்? என்றெண்ணி, பின்னும், நாரதன் கூறியபடி இந்தச் சோதியும் நாமிருவரும் செய்யும் போருக்கிடையூறுக நிலவுலகத்தைக் கிழித்துக் கொண்டு நிமிர்ந்து விண்ணுலகத்திற் புகுந்து வளருகின்றதாய் நாம் காணும்படி தோன்றியது. 'இது நம்மிலும் மேலாகிய பரம்பொருளோ?' என்றையுற்று, 'இது வாயுவினின்றுந் தோன்றிய அக்கினியன்று. இதன் றன்மை யொன்றையும் அறியோம். நாமிருவரும் இதனுடைய அடியையும்

முடியையும் தேடிக்காண்போம்' என்று சபதங்கூறி, 'அடிமுடிகளிலொன்றை யார் முன்னங் கண்டனரோ அவரே முதற்கடவுளாவர். இதுவே துணிவு' என உறுதி செய்துகொண்டோம். குழந்தைகள் ஆகாயத்திற் சஞ்சரிக்கும் சூரியனைக் கையாற்பற்றும்படி துணியுமாறுபோல, யான் 'சோதியின் முடியைக் காண்பேன்' என்றேன்; விட்டுணு 'அடியைக் காண்பேன்' என்றார்.

''உடனே திருமால், அஞ்சாமை விளங்குகின்ற சிவந்த கண்களையும் இமில் பொருந்திய எருத்தத்தையும் யாவரும் அஞ்சும் ஒலியையும் கூரிய வாயையும் வெள்ளிய தந்தங்களையும் குறியதாளையும் வெண்மையாகிய குளம்பையும் ஆயிரம் யோசனை உயரமும் பருமையுங்கொண்ட மலைபோன்ற கரிய உடலையும் உடைய ஒரு பன்றியின் வடிவைக்கொண்டு, பூமியை யிடந்து, கீழேயுள்ள புவனங்கள் எங்கும் தேடிச்சென்றார். அவர் மிக நெடுங்காலம் முயன்று தேடியும் அதனடியைக் காணராயினர். யானும் அத்தன்மையாகிய உயரமும் பருமையும் உடைய ஓர் அன்னப் பக்ஷி வடிவை எடுத்து, விரைந்து பறந்து மேலுள்ள புவனங்களிற்றேடிச் சென்றேன். அச்சோதி என் கண்ணுக்கு அகப்படாது மேன்மேற் போயிற்று. விட்டுணுவுக்குப் பற்கள் நொந்தன; உடம்பு ஒடுங்கியது; வலிமை முழுதும் அழிந்தது; தண்ணீர்த்தாகம் உண்டாயிற்று; பெருமூச்சும் துயரமும் வந்தன; சபதமும் அநந்தையும் அழிந்தன. பின்னர் பழைய ஞானம் முழுதும் உண்டாயிற்று. தெளிவடைந்த அவர் பன்றியின் உருவத்தைத் தாங்கலாற்றுதவராயும், அதனை ஒழித்துவிட இயலாதவராயும், மீண்டு செல்ல வலியில்லாதவராயும், 'என்றுமுணர்தற்கரிய எம் பெருமானே, உம்முடைய திருவடிகளன்றி அடியேனுக்குப் புகலிடமில்லை. அவைகளை அருச்சித்தற்கும் வலிமையில்லை. அடியேன் ஒன்றும் உணரேன். அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்' என்று உளம் நொந்து, சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்துத் தோத்திரஞ்செய்து, அவருடைய திருவருளால் வலிமை உண்டாகப்பெற்று, பன்றி வடிவோடு மீண்டு. பூமியிலே அந்தச் சோதிக்கணித்தாக வந்து வணங்கி நின்றார். அது நிற்க.

''யான் ஆயிரம் வருஷம் திரிந்து திரிந்து தேடியும், சோதியின் முடியைக் காணுமலும், மீண்டுவர நினையாமலும், 'யான் மீண்டாற் சபதமுந் தவறும்; விட்டுணு சோதியின் அடியைக் கண்டு முதற்கடவுளாவார்; என்னை யாவரும் அவருக் கடியவனென்பார்; என்னுடைய இந்த வலிமை அழியும்; எத்தனை நாட் செல்லினும் செல்லுக; இன்னும் வானிற்பறந்து இச்சோதியின் முடியைக் கண்டபின்பல்லது மீண்டு போகேன்'' என்று நினைத்து, அதனைக் காணும்படி போயினேன். போதலும், உளம் வெதும்பி, உயிரும் உலைந்து, வலிமையும் அழிந்தது; கண்களும் சுழன்றன; சிறைகள் நொந்தன; கால்களும் ஓய்ந்தன; புத்தியும் தடுமாறியது. அப்பொழுது அந்தச் சோதியில் நின்று சித்தர்போலப் பலர் தோன்றி வந்து, 'நீரிலுள்ள மீனை உண்ணும்படி திரிகின்ற இந்த வெள்ளை அன்னப்பக்ஷிதானும் உயர்ந்தெழுகின்ற பரஞ்சோதியின் முடியைக் காணவல்லது! தன்சிறையொடிந்து தளர்ந்து வலிமை நீங்கினலும் தேடவருகின்றதுபோலும்! ஐயோ, இது அன்னப்பக்ஷியின் அறியாமை

யன்றி வேறென்றுளதோ! இது துணிந்ததை நாம் சிந்திக்கின், இன்னும் சிறிதுபொழுது பறந்து போனால், இம்மை இறக்கும். இந்தச் சுடரைப் பரமசிவமென்று மனத்தி லெண்ணுதோ? விட்டுணு என்பவனும் நிலத்தைக் கிழித்துக்கொண்டு போய், இச்சோதியின் அடியைக் காணமாட்டாமல் வலிமை நீங்கித் தன்சிலம் குன்றச் சிவனே சரண் என்று பையவாய்ப் பூமியில் மீண்டுவந்து, சோதிமலையை அணுகிநின்றான். முன்னே இப்பறவைக்கு இம்முயக்கத்தைக் கொடுத்த கடவுளே அதனைத் தீர்த்து அருள்புரிந்தால் இம்மை உய்யும்' என்று கூறினர்கள். சித்தர்கள் சிவானுக்கிரகத்தால் இப்படிச் சொல்லிக்கொண்டு செல்ல, யான் அகந்தை முதலாகிய குற்றங்களை நீங்கிச் சிவபெருமானுடைய புகழ்களை எடுத்துத் தோத்திரஞ் செய்து, அன்பினால் அவரை அருச்சனை செய்ய நினைத்து, மீண்டு, விட்டுணுவை அணுகி, 'நாமிருவரும் நாமே பரம்பொருள் என்று நம்முள் மாறுபட்டுப் போர்செய்து நாரதனுடைய சொல்லையுந் தெளிந்திலேம்; பரமபிதாவாகிய சிவபெருமான் சோதிவடிவாய் எழுந்தருளி வந்ததை அறியாமல், அவருடைய அடிமுடிகளைத் தேடி, உயிர் நீங்குஞ் சமயத்தில் அவருடைய திருவருளால் அவரைப்புகழ்ந்து, மீண்டும் அவர் திருவருளால் வலிமைபெற்று, இடந்தும் பறந்தும் திரிந்தமையை விட்டு, இங்குவந்தோம். இங்கே, நாமிருவரும் சிவனைப் பூசனைசெய்து அவருடைய சொரூபத்தைத் தரிசிப்போம்' என்று கூறினேன். விட்டுணுவும் அதற்கிசைந்தார்.

"நாம் இருவரும் சிவலிங்கத்தை விதிப்படி தாபித்து, திருமஞ்சனம் புஷ்பம் சந்தனம் தூபதீபம் முதலிய பூசைக்கு வேண்டும் உபகரணங்களெல்லாவற்றையும் அமைத்து, அருச்சித்து வணங்குதலும், சிவபெருமான் காளகண்டமும், மான் மழுவும் வரத அபயங்களுமுடைய திருக்கரங்களும், நான்கு திருப்புயங்களும், நாகயஞ்ஞோபவீதமும், பாலசந்திரன் பொருந்திய திருச்சடையும், பார்வதிபாகமுமாய் அந்தச் சோதிக்கணித்தாகயாங்கள் காணும்படி வெளிப்பட்டு, முன்னின்றருள் புரிந்தார். நாம் இருவரும் அங்கே அவருடைய பாதங்களை வணங்கி, அருள்வெள்ளத்துளாழ்ந்து, மெய்யுணர்வோடு நின்று, 'தேவரீருடைய இயல்புகள் உம்மிடத்து வைத்த மெய்யன்பின்றி விளங்கா. வேதங்களும் இத்தன்மையவென்று அவற்றை அறியமாட்டா; யாம் அறிதற்கெளியனவாகுமோ? அடியேங்கள் 'நாமே பரம்பொருள்' என்று மனமயங்கிப் போர் செய்தபொழுது, சோதிசொரூபியாய் எழுந்தருளிவந்து, பழைய அறிவைத்தந்து உம்மையுணர்த்தி, போரையுந் தவிர்த்தீர். யாங்கள் சூத்திரப்பாவையும் தேவரீர் அவற்றை ஆட்டுகின்றவரும் அன்றோ! உம்மை உணரும் உணர்வை நீர் தந்தால், அதன்பின் உணர்வேம். சிறியேங்கள் செய்த எளிய செயல்களையெல்லாம் பொறுத்தருளும். தம்முடைய சிறுவர்கள் என்னசெய்தாலும் அவைகளெல்லாம் தந்தை தாயர்களுக்கு இனியனவன்றோ! வல்லோன் கார்நிரும்பைச் செம்பொனுக்கினற்போல எங்கள்மாட்டும் திருவருள் வைத்து எங்களைத் தலைவர்களாக்கினீர். அப்படிச் செய்தருளிய உம்மையும் மறந்தோம். இவ்வியல்புடைய தமியேங்கள் அநாதியே எங்களுயிரைப் பந்தித்த பாசத்தை நீக்கவல்லோமோ?' என்று சொல்லித் தோத்திரஞ் செய்தோம். சிவபெருமான் எங்களை நோக்கி,

'நீவிர்செய்த குற்றங்களொன்றையும் திருவுளத்துக் கொள்ளோம். மனத்தில் ஒன்றையும் எண்ணுதொழிமின். உங்கள் பூசனையை உவந்தோம். அந்நாளில்உங்களுக்குத் தந்த பதங்களே இன்னும் தந்தோம். வேண்டிய வரங்களைக் கேண்மின்' என்று அருளிச்செய்தார். யாங்கள், 'சிதாகாசத்திலே, தாண்டவஞ்செய்கின்ற கடவுளே, தேரிருடைய திருவடிகளே புகலிடமாகக்கொண்டு வழிபடுகின்ற தலையன்பைத் தந்தருளும்' என்று பிரார்த்திப்ப, அவர் அதனை ஈந்து, விரைவில் அக்கினிச் சோதியிலே மறைந்தருளினர்.

"பரமசிவன் மறைந்தபொழுது, யாங்கள் நமஸ்கரித்தெழ, வளர்ந்தெழுந்த அச்சோதி சுருங்கிச் சுருங்கி வந்து உலகமெல்லாம் துதிக்கும்படி ஒரு மலையாயது. அந்தச் சிவலிங்கரூபமாகிய மலையை யாங்கள் அணுகி, மும்முறை பிரதக்ஷிணஞ்செய்து வணங்கித் துதித்து, எங்கள் பதங்களிற் சென்றேம். அதன்பின் அக்கடவுளே மறந்திலேம்; பெரிதும் வழிபடுகின்றேம். நாமிருவரும் தேடிய அம்மலை அருணசலம் என்னும் பெயருடையதாய் நின்றது. அந்தச்சோதி தோன்றிய இரவே சிவராத்திரியாயது. அத்தினத்திலே பலரும் சிவபெருமானைப் பூசித்து உய்ந்தார்கள். ஆதலால் அந்தப்பரமசிவனுடைய அருளைப் பெற்றால், அவருடைய இயல்பை அறியும் ஞானத்தைப் பெறுவர். அதனைப் பெறுதொழிந்தால், பல நூல்களைப் படித்தென்? வேதங்களை ஆராய்ந்தென்? சிறிதும் அவருடைய இயல்பைஅறியமாட்டார். மூடரும் அவரேயாவர்! இருவினைகளைச் செய்து பிறவிக்கடலில் மூழ்கும் அபக்குவர்களுக்கு அவருடைய திருவருள் கிடையாது;இருவினையொப்பு மல பரிபாகம் வரப்பெற்ற சத்திநிபாதர்க்கே அது கிடைக்கும். அவரே பரிபக்குவராவார். தக்கனே, இருவினை நீங்கினமையால் உனக்கு இப்பொழுது எம் பெருமானுடைய நிலைமைகளை அறியத்தக்க மெய்ஞ்ஞானம் வந்தெய்தியது. அந்தச் சிவபெருமானே நமக்குத் தாயும் தந்தையும் குருவும் கடவுளும் தவமும் செல்வமும் ஆவர். ஆதலால் அவரையே அடைகுதி" என்று பிரமதேவர் தக்கனுக்கு உபதேசித்தார்.

திருச்சிற்றம்பலம்.

::::::::

## தக்கன் சிவபூசைசெய் படலம்.

பிரமா சொல்லியவற்றைக் கேட்ட தக்கன் மெய்யுணர்வு வரப்பெற்று, "நீர் கூறியவண்ணம் சிவபூசை செய்வேன்" என்று சொல்லி, அவருடைய பாதங்களை வணங்கி, காசித்திருநகரை அடைந்து, கங்கைக்கரையிலே மணிகர்ணிகைக்கு ஒரு பக்கத்தில் ஓராலயத்தை அமைத்து, அதில் அருள்வடிவாய்ச் சேதனாசேதனப் பொருள்களைப் படைத்துப் பின் ஒடுக்குவதாய்த் தாணுவாயுள்ள அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கத்தைத் தாபித்து சிவாகமவிதிப்படி ஆயிரம்வருஷகாலம் அருச்சித்துத் தோத்திரஞ்செய்தான். சிவபெருமான் அவனுடைய அன்பைப்பார்த்து வெளிப்பட்டருளினர். அவன் அவரைக்கண்டு வணங்கித் துதித்து, தெளிவுபெற்று, "எம்பெருமானே, அடியேன் அகந்தையுற்றுத் தேவரீரை இகழ்ந்தேன். அதனால் அடியேன் மாட்டு எல்லையில்லாத பாவங்கள் வந்தடைந்தன. அவைகள் எல்லாவற்றையுந் தொலைத்து உம்மிடத்து மிகுந்த அன்பைத் தந்தருளும்" என்று

பிரார்த்தித்தான். சிவபெருமான் அவனுடைய பூசையை மகிழ்ந்து, பாவங்கள் எல்லாவற்றையுந் தொலைத்து அருள்புரிந்து, அவனைத் தம்முடைய பூத கணங்களுக்குத் தலைவனுக்கி, மறைந்தருளினர். தக்கன் புனிதனுயினன்.

தக்கன் கங்கைக்கரையிற் சிவபூசை செய்யும்படி போனபொழுது, அரிபிரமேந்திராதி தேவர்களும் அரம்பையர்களும் யாகசாலையை நீங்கி, வீரபத்திரக் கடவுளுடைய வீரத்தைத் துதித்து, தங்கள் தங்களுக்கேற்ற இடங்களோறும் போய்ச் சிவபெருமானைப் பூசனைசெய்து, அவருடைய திருவருளைப் பெற்று, உடம்பிலுள்ள தீராத சின்னங்களுந் தீர்ந்து சிறப்புற்று தத்தம் பதங்களோறும் போயிருந்தார்கள். தக்கனுடைய யாகத்தில் வந்திருந்து, குற்றமுடைய அன்னத்தையுண்டு, தானமேற்று, பூதர்களாலிறந்து, பின் உயிர்பெற்றெழுந்த பேதைகளாகிய அந்தணர்கள் யாவரும் யாகசாலையை நீங்கிப் போயினர்கள்.

இச்சரித்திரங்கள் எல்லாவற்றையும் குருவாகிய பிரகஸ்பதி சொல்லக்கேட்ட சயந்தகுமாரன் நன்றென்று தலையை அசைத்து மிக மகிழ்ந்து, சிறிதுங்கவலையின்றி, சுப்பிரமணியக்கடவுளாலே குடியேற்றப்பட்ட அவ் விண்ணுலகத்திலிருந்தான்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## கந்தவிரதப் படலம்.

இனி, முசுகுந்தனென்னுஞ் சக்கிரவர்த்தியானவன் சுப்பிரமணியக்கடவுளுக்குரிய விரதங்களை அநுட்டித்து, அந்த வலியினாற் பூவுலகத்தை ஆண்ட சரித்திரத்தைச் சொல்வாம். முசுகுந்தச்சக்கிரவர்த்தி ஒருநாள் வசிட்டமுனிவரிடத்திற் போய், அவருடைய பாதங்களை வணங்கித் துதித்து, "சுப்பிரமணியக் கடவுளுக்குரிய விரதங்களெல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்" என்று கேட்க, அவர் "மைந்தனே, கேட்பாய்" என்று அவற்றைச் சொல்வாராயினர்: "ஏழு வாரங்களுள்ளே சுக்கிரவாரவிரதம் கந்தசுவாமியினுடைய விரதமாகும். அதனை அநுட்டித்தோர்கள் மனத்தில் நினைத்தனவெல்லாம் விரைவில் முற்றுப்பெறும். பகீரதனென்னும் மகாராசன் தான் ஆண்ட பூவுலகமுழுதையும் கோரன் என்னும் ஓரிராக்கதன் கவர்ந்துகொள்ள, மனைவியும் மகனும் தானுமாய்ச் சுக்கிரனிடத்திற் போய்த் தன்குறையைச் சொல்லி நின்றான். அவர் சுப்பிரமணியக்கடவுள் மகிழுமாறு சுக்கிரவாரவிரதத்தை மூன்று வருஷகாலம் அநுட்டிப்பாயாயின் உங்களுக்குத் துன்பஞ்செய்த கோரனும் இறப்பான்; நீயே உலகமுழுவதையும் ஆளுவாய்" என்றார். பகீரதன் நன்றென்று கேட்டு, வெள்ளிவாரத்தில் உபவாசஞ்செய்து, கண்விழித்திருந்து, அதற்கு முதனாள் மறுநாள் ஆகிய இரண்டுநாளும் பகலில் ஒருபொழுதுண்டு, அவ்விரதத்தை மூன்று வருடங்காறும் முறைப்படி அநுட்டித்தான். அநுட்டிக்கும்பொழுது, அறுமுகக்கடவுளுடைய வேற்படை வந்து, பகைவனுகிய கோரனுடைய உயிரைக் கவர்ந்து மீண்டது. அரசன் அவ்வேற்படையைத் துதித்துத் தன்னுடைய ஊரிற்போய்ப் பழைய அரசுரிமையைப் பெற்றான். சுப்பிரமணியக்கடவுளுடைய விரதத்தில் இன்னுமொன்று சொல்வோம்.

''நாரதமுனிவர் நல்ல விரதானுட்டான பலத்தினாலே ஏழுமுனிவர் களுள்ளும் தாம் உயர்ந்த பதத்தையும் சிறப்பையும் பெறவேண்டும் என்று எண்ணி, விநாயகக்கடவுளுடைய பாதங்களை வணங்கித்துதித்து, 'ஏழு முனி வர்களுள்ளும் யானே, மேம்பாடடையும்படி அடியேனுக்கு ஒருவிரதத்தைச் சொல்லியருளும்' என்றார். விநாயகக்கடவுள் அதனைக் கேட்டுப் பேரருள் புரிந்து, அவரை நோக்கி, 'முனிவனே, நீ நமது தம்பியாகிய சுப்பிரமணி யனை வழிபட்டுக் கார்த்திகை நக்ஷத்திர விரதத்தைப் பன்னிரண்டு வருஷ காலம் சிரத்தையோடு அநுட்டிக்கக் கடவாய். நீ நினைத்ததனைப் பெறுவாய். இது திண்ணம்' என்றருளிச்செய்தார். நாரதமுனிவர் 'அதனை அநுட்டிப் பேன்' என்று பூவுலகில் வந்து, பரணிநக்ஷத்திரத்திலே அபரான்னத்தில் ஒரு பொழுதுண்டு, கார்த்திகைநக்ஷத்திரத்தில் விடியற்காலத்திலே உடுத்த வஸ்திரத்தோடு ஸ்நானஞ்செய்து, வெள்ளவஸ்திரந் தரித்து, நித்திய கர் மானுஷ்டானங்களை முடித்து, ஐம்புலன்களை அடக்கி, ஆசாரியரைத் தியா னித்து, சுப்பிரமணியக்கடவுளைப் பூசித்து, அவருடைய புராணத்தை வாசி த்து, சுத்தசலத்தை ஆசமித்து பெண்ணுசை யென்பது சிறிதுமின்றித் தருப்பசயனத்திலே படுத்து, முருகக்கடவுளுடைய திருவடிகளையே தியானஞ் செய்துகொண்டு, அன்றிரவு முழுதும் நித்திரையின்றியிருந்து, அடுத்தநாட் காலையில் உரோகிணிநக்ஷத்திரத்திலே ஸ்நானசந்தியாவந்தனங்களை விரை வில் முடித்துக்கொண்டு, சுப்பிரமணியக்கடவுளைப் பூசித்து, வந்த முனிவர் களோடு பாரணை செய்து, பாரணை செய்தவர்கள் அன்று பகற்பொழுதில் நித்திரைசெய்தால் வேதத்தில் வல்ல நூறு அந்தணர்களை நிஷ்காரணமா கக் கொன்ற பாதகம் வரும் என்று தெளிந்தமையால் அன்று பகல்முழுதும் சிறிதுங் கண்ணுறங்காமல், அன்று சாயங்கால சந்தியாவந்தனாதிகள் யாவுங் குறைவறச் செய்து, இவ்வாறு பன்னிரண்டு வருஷகாலம் கார்த்திகை விர தத்தை அநுட்டித்து, ஏழு முனிவர்களுக்கும் மேலாகிய பதவியைப் பெற் றார். இந்தக் கார்த்திகை விரதத்தை இப்பூலகத்தில் ஓர் அந்தணன் அநுட் டித்து, முதல்மநுவாகி, உலகமுழுதையும் ஆண்டான். வேறுமோர் அந்த ணன் அநுட்டித்து, மனத்தில், நினைந்தனவெல்லாவற்றையும் அடைந்து, திரிசங்குமகாராசனுயினன். இப்பூவுலகில் முன்னாளில் ஓர் அரசனும் வேட னும் இவ்விரதத்தை அநுட்டித்து, முதல்வள்ளல்களாகிய அந்திமான் சந்தி மான் என்னும் பேர்பெற்றுப் பூவுலகத்தைஆண்டார்கள் என்பர். இவர்கள் பின்னாளில் மோக்ஷமடைதல் நிச்சயமாம். இவ்வாறே கார்த்திகை விரதத் தைத் சிரத்தையோடநுட்டித்துத் திரிலோகங்களிலும் வேண்டிய வரங்க ளைப் பெற்றவர் தொகையை யாவர் அளவிட்டுச் சொல்ல வல்லார்?

''இதுவன்றி, சுப்பிரமணியக்கடவுளுக்குரிய ஒப்பில்லாத விரதம் வேறு மொன்றுளது. அதனையுஞ் சொல்வோம்; முசுகுந்தனே, கேட்பாய். தேவர்களும் முனிவர்களும் துலாமாசத்துச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதலாக ஆறுநாளும் காலையில் ஸ்நானஞ்செய்து, சுத்தவஸ்திரம் இரண்டு தரித்து, சந்தியாவந்தனம் முடித்து, கிரௌஞ்சமலையையும் சூரபன்மனையும் சங் கரித்த வேலாயுதகரராகிய முருகக்கடவுளைத் தம்ப விம்ப கும்பம் என்னும் மூன்றினும் இரவிலே விதிப்படி பூசைசெய்து, வெல்லம் சேர்த்து நெய்யினற் சமைத்த மோதகத்தை நிவேதித்து, பிற உபசாரங்களையும் செய்து, வணங் கித் துதித்து, அவருடைய புராணத்தைப் படித்து, சிறிது ஜலத்தை ஆச

மித்து உபவசித்திருந்து, சப்தமிதிதியில் முருகக்கடவுளுக்கு விசேஷபூசை யியற்றி, விதிப்படி பாரணஞ்செய்து, இப்படிச் சிரத்தையோடு அநுட்டித்த சட்டிவிரத பலத்தினால் அவுணர்கள் கவர்ந்த தங்கள் பதங்களைப் பெற்றார் கள்'' என்று வசிட்டமுனிவர் கூறினர்.

இப்படி வசிட்டமுனிவர் சுப்பிரமணியக்கடவுளுடைய விரதங்களை உபதேசிக்கக் கேட்ட முசுகுந்தச் சக்கிரவர்த்தி அவற்றில் மிக ஆசையுற்று, ''ஐயா, இந்த விரதங்களை யானும் அநுட்டிப்பேன்'' என்று கூறி, அன்று முதல் அளவில்லாதகாலம் முருகக்கடவுளைத் தியானித்து அவ்விரதங்களை அநுட்டிக்க, அவர் மயில்வாகனத்தின்மேற்கொண்டு, வீரவாகுதேவரும் இலக்கத்தெண்மரும் பூதகணங்களும் தேவர்களும் புடைசூழ அவனுக்கு அருள்புரியும்படி வந்துதோன்றினர். முசுகுந்தன் அவரைக் கண்டு மகிழ்ந்து, திருவடிகளை வணங்கித் துதித்தான். அவர் அவனை நோக்கி, ''அரசனே, நீ நம்மைக்குறித்து எண்ணில்லாதகாலம் விரதங்களை அநுட்டித்தாய். உனக்குவேண்டும் வரம் யாது? சொல்லுதி'' என்று வினவினர். முசுகுந்தன் ''எம்பெருமானே, பூமி முழுதையும் அடியேன் ஆளும்படி வீரவாகு முதலிய வீரர்கள் யாவரையும் துணைவர்களாகத் தந்தருளும்'' என்றான். சுப்பிர மணியக்கடவுள் அவ்வேண்டுகோளைத் திருச்செவிமடுத்து, ''அவ்வாறே உதவுவோம்'' என்று அருள்புரிந்து, வீரவாகு முதலிய சேனைத்தலைவர்களை நோக்கி, ''தவத்திற் சிறந்த முசுகுந்தச் சக்கிரவர்த்தி நம்மைக்காட்டிலும் நம்மிடத்து மிகுந்த அன்புடையான். அவன் பூவுலகமுழுதையும் பொதுக் கடிந்து அரசுசெய்தற்கு நீவிர் அவனுக்குச் சுற்றமாய் வலியிற் சிறந்த துணை வர்களாயிருக்கக்கடவீர்'' என்று கட்டளையிட்டார். அவ்வீரர்கள் யாவரும் அதனைக்கேட்டு, ''எம்பெருமானே, அழிவில்லாத சூரனுடைய குலத்தை வதைத்த பேராற்றலையுடைய அடியேங்கள் சூரியகுலத்தில் வந்துதித்த ஓர் அற்ப மனுடனுக்குக் கிளைகளாய் அவன் பணிக்கும் இழிதொழில்களைப் புரி லோம்'' என்று மறுத்துச் சொன்னார்கள். அறுமுகக்கடவுள் அதனைக்கேட்டு, ''நீவிர் நம்மூரையை மறுத்தீர்கள். அதனால் மானுடவடிவமெடுத்து, முசு குந்தனுடைய சேனைகளாய்ப் பல காலம் அவனைச் சூழ்ந்திருந்து, பின்பு தவஞ்செய்து நம்மிடத்தில் வாருங்கள்'' என்று கட்டளையிட்டார். அம் மொழியினால் வீரவாகுதேவர் முதலாயினோர் மானுடவடிவமெடுத்து முன்னை வலிமை நீங்கி, உடல்வியர்ப்பப் பதைபதைத் தேங்கித் துன்பம் மிகுந்து, ''தமியேங்களுடைய பிழையைப் பொறுத்தருளும்'' என்று திரு வடிகளில் வீழ்ந்து வணங்கி, அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, விட் டுணு உபேந்திரனாய் இந்திரனுக்குப் பின்சென்றவாறுபோல, முசுகுந்தச் சக்கிரவர்த்திக்குச் சுற்றமாய் ஒழுகினார்கள். முசுகுந்தன் சுப்பிரமணியக்கட வுளுடைய திருவடிகளை வணங்கி நிற்ப, அவர் அவனுக்கு அருள் புரிந்து, பூதப்படைகளோடு மயில்வாகனமும் தாமுமாய் மறைந்தருளினர்.

முசுகுந்தச்சக்கிரவர்த்தி மகிழ்ச்சியோடு கருவூரென்னும் நகரத்தில் அரசு செய்துகொண்டிருந்து, அந்நகரில் அநேகமாடவீதிகளை இயற்றுவித்து, அவைகளில் வீரவாகுமுதலிய வீரர்களை இருத்தி, அவர்களுக்கு வளங்கள் மிகுந்த நாடுகளையும் சதுரங்கசேனைகளையும் கொடி குடை முதலாகிய வரிசை களையும் உதவி, சேனைத்தலைவர்களாக்கினன். அக்காலத்தில் அரம்பையர்கள் பூவுலக அரசர்கள்மாட்டு வந்து தோன்றி வளர்ந்தார்கள். அவர்களை வீர

வாகு முதலிய வீரர்களுக்கு மணஞ்செய்வித்தான். வீரவாகு புட்பகந்தி என்னும் கன்னிகையை மணஞ்செய்து, சித்திரவல்லியென்னும் பெண்ணைப் பெற்று. அவளை முசுகுந்தச்சக்கிரவர்த்திக்கு விவாகஞ் செய்துகொடுத்து, பின்னும் அனகன் சனகன் என்னும் இருபுதல்வர்களைப் பெற்றார். மற்றை வீரர்களும் தாம் விவாகஞ்செய்த பெண்களோடு சேர்ந்து இல்லறத்தை நடாத்தி. பல புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்று, மனுவமிசத்திற் கலந்திருந்தார்கள். அந்நாளில் முசுகுந்தனுடைய மனைவியாகிய சித்திரவல்லி ஒரு கிளிப்பிள்ளையை வளர்க்க, அதனை யமனுடைய மனைவி விரும்புதலும், அவனுடைய தூதுவர்கள் வந்து அக்கிளியைப் பற்றிக்கொண்டு போய் அவளுக்குக் கொடுத்தார்கள். சித்திரவல்லி கிளியைக்காணுமல் அயர்ச்சியடைய, முசுகுந்தன் அதனை உலகமெங்கும் தேடி, யமனுடைய மனைவிகையில் இருப்பதை அறிந்து, வீரவாகு முதலாயினோரை அழைத்து அனுப்பினன். அவர்கள் நால்வகைச்சேனைகளோடும் யமபுரத்தை யடைந்து, அதனைச் சூழ்ந்து, யமன் வந்து எதிர்த்துப் போர்செய்ய அவன் வலியைத் தொலைத்து, கிளிப்பிள்ளையை வாங்கிக்கொண்டு மீண்டு வந்து, சித்திரவல்லி மனமகிழுமாறு கொடுத்து, முசுகுந்தனுக்கு வெற்றியைச் செய்தார்கள். சித்திரவல்லி கருப்பவதியாய், உண்ணுதற்குரிய வயாப்பண்டமாகிய காய் கனிகளை விரும்பிக்கேட்க, முசுகுந்தன் அவற்றைக்கொண்டுவருமாறு மலை நாட்டுக்கு அளவில்லாத ஏவலாளர்களை அனுப்பினன். மலைநாட்டார் அவன் ஆணைக்கு அஞ்சாதவர்களாய் இகழுதலும், வீரவாகுவும் மற்றை வீரர்களும் சென்று, அந்நாட்டிலுள்ள பதினெண் சுரங்களிலுள்ளாரையும் ஒருபகலில் வென்று, சித்திரவல்லி விரும்பிய காய்கனிகளைக் கவர்ந்துகொண்டுவந்து கொடுத்தார்கள். பின்பு அவர்கள் இப்பூவுலகமுழுதிலும் சென்று சென்று, அங்கங்குள்ள அரசர்களெல்லாரிடத்துந் திறை வாங்கி, அவ்விடங்களிலெல்லாம் முசுகுந்தச்சக்கிரவர்த்தியினுடைய ஆணை நடைபெறும்படி செய்தார்கள். சித்திரவல்லி கருப்பம் முதிர்ந்து, அக்கினிவன்மன் என்னுங் குமாரனைப் பெற்றாள். முசுகுந்தன் அதனைக் கண்டு மனமிக மகிழ்ந்து, பேரரசாட்சி புரிந்திருந்தான்.

இப்படி முசுகுந்தச்சக்கிரவர்த்தி அரசு செய்திருக்குங் காலத்தில், வலன் என்னும் அசுரன் பல பெருஞ் சேனைகளோடு சென்று விண்ணுலகத்தைச் சூழ்ந்து அடர்க்க, இந்திரன் சிலநாள் அவனோடு போர்செய்து, அவனை வெல்லமாட்டாதவனாய், ''முசுகுந்தச்சக்கிரவர்த்தியை அழைத்துக் கொண்டு வருதி'' என்று ஒரு தூதுவனை அனுப்பினன். அவன் பூமியில் வந்து இந்திரனுடைய பணியைச் சொல்லுதலும், முசுகுந்தன் அதனைக் கேட்டு, நன்றென்று, வீரவாகு முதலிய வீரர்கூட்டத்தோடு சுவர்க்கவுலகத்திற் போய் இந்திரனை வணங்கி, தேவசேனைபதியாந் தலைமையைத்தாங்கி, அவுணசேனைகளெல்லாவற்றையும் அழித்தான். அவுணசேனைகள் அழிதலும், இந்திரன் சிலநாள் வலாசுரனோடு எதிர்த்து நின்று போர்செய்து, சூலிசாயுதத்தினால் அவனைக் கொன்று, வெற்றியடைந்து, அக்காரணத்தால் வலாரி என்னும் பெயரைப் பெற்றான்;. வலாசுரனை வென்ற இந்திரன் முசுகுந்தச் சக்கிரவர்த்தியை அமராவதியினுள்ள தன் கோயிலினுள் அழைத்துச் கொண்டு போய், அவனை நோக்கி, ''மகாராசனே, என் பகைவர்களைத் தொலைத்து என்னை விண்ணுலக அரசனாக்கினாய். வீரத்தையும் மேலாகிய

புகழையுந் தந்து எனக்கு உற்றதுணைவனுமாயினுய். இதனுல் எனக்கு ஆந் தரங்கமாகிய சுற்றம் நீயல்லையோ!'' என்று பல உபசாரங்களைச் சொல்லி, ஸ்நானஞ்செய்து, வஸ்திரந்தரித்து, விஷ்ணுவினுலே பூசிக்கப்பட்ட தியா கேசப்பெருமானை அருச்சனை செய்தான்.

சிவபெருமான், உமாதேவியாரும் சுப்பிரமணியக்கடவுளும் ஒரு பக் கத்தில் மகிழ்ச்சியோடு பொருந்தத் திருக்கைலாசமலையின்கண் வீற்றிருத் தல் போல அங்கே வீற்றிருத்தலும், அத்திருக்கைலாசபதியினிடத்திற் பயின்ற அன்பினனும், இடைவிடாது ஒரு பொருளைக் குறிக்கொண்டு பாது காத்திருப்பவன் சிறிது அவசமாய்க் கண்ணுறங்கியதுபோல, முசுமுகத்தை வாங்கியும் சிறிது மயங்கினவனும் ஆகிய முசுகுந்தன் அவரைக்கண்டு பரவ சப்பட்டு, தொழுது கூத்தாடி, திருவடிகளை முடிமேற்சூடி, உளமுருகித் துள்ளி, வேதங்களைப்பாடி, கைகளைக் கொட்டி, சொல்லமுடியாத ஆனந்த முற்று, மெய்புளகித்து, உரைதடுமாறி, ''முன்பு திருக்கைலாசமலையின் மீது கிருபாநிதியாகிய சிவபெருமான் வீற்றிருந்த இந்த அருமைத் திருக்கோலத் தைத் தரிசித்துத் தரிசித்து உள்ளத்தே நிறைந்த பெருமகிழ் வெய்தியிருந்த தமியேன் இம்மானுடப் பிறப்பினுல் மயங்கி நெடுநாள் அவரை மறந் தேனே'' என்று கூறி, அவரை நோக்கி இவ்வாறு சொல்லித் துதிப்பானு யினன்:-

ஏகனே போற்றி யார்க்கு மீசனே போற்றி யம்மை
பாகனே போற்றி மேலாம் பரஞ்சுட ருருவே போற்றி
மேகமார் களனே போற்றி விடைமிசை வருவாய் போற்றி
மோகமார் தக்கன் வேள்வி முடித்திடு முதல்வா போற்றி.

அம்புயா சனன்மா லின்னு மளப்பருந் திறத்தாய் போற்றி
நம்பனே போற்றி யெங்க ணுதனே போற்றி கோதில்
செம்பொனே மணியே போற்றி சிவபெரு மானே போற்றி
எம்பிரான் போற்றி முக்க ணிறைவனே போற்றி, போற்றி.

பொங்கரா வணிக ளாகப் புனைதரு புனிதா போற்றி
அங்கரா கத்திற் பூதி யணிந்திடு மாதி போற்றி
வெங்கரா சலத்தின் வன்றோல் வியன்புயம் போர்த்தாய் போற்றி
சங்கரா பரமா போற்றி தாணுவே போற்றி போற்றி.

முன்னெனும் பொருளுக் கெல்லா முன்னவா போற்றி முப்பான்
மன்னுயிர்க் குயிரே போற்றி மறைகளின் முடிவே போற்றி
என்னைமுன் வலிந்தாட் கொண்டே யிருநிலம் விடுத்தாய் போற்றி
நின்னருட் காட்டி யென்னை நினைப்பித்த நித்தா போற்றி.

எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கரு டருவாய் போற்றி
மெய்வரு தெளிவி னுன்னை வெளிப்பட வுணர்ந்து சேர்க்குத்
தெய்வத போக முத்தி நிறப்பொடு தருவாய் போற்றி.

அம்புய மலர்மே லண்ண லச்சுத னுதி வானேர்
தம்பத மெமக்கு நல்குந் தற்பரா வென்றே யாரும்
நம்புறு பொருட்டால் வேத நவின்றிட வடைந்தோர்க் கெல்லா
உம்பர்தம் பதமு மீயு முலகுடை முதல்வா போற்றி.

உறைதரு மமரர் யாரு முழையராய்ச் சூழ நாப்பண்
மறைபயில் பெரியோ ருற்று வழிபட விருந்தாய் போற்றி
அறுவகை யைந்து மாறு மாகிய வரைப்பின் மேலாம்
இறைவனே போற்றி போற்றி யென்பிழை பொறுத்தி யென்றான்.

இவ்வாறு முசுகுந்தச்சக்கிரவர்த்தி துதிப்ப, எம்பெருமான் கருணை செய்து, அவனுடைய முகத்தை நோக்கி, ''விட்டுணு அளவில்லாதகாலம் நம்மை அன்போடு பூசித்து இந்திரனிடத்தில் வைத்தான். அரசனே, நீ நம்மைப் பூமியிற்கொண்டுபோய்ப் பூசனைசெய்வாய்'' என்று இந்திரன் கேளாவண்ணம் சொல்லியருளினர். முசுகுந்தன் மிக்க பெருமகிழ்ச்சியுற்று, ''சுவாமீ, உம்முடைய திருவுள்ளம் இதுவாயின், அடியேன் உய்ந்தேன்'' என்று ஆச்சரியமடைந்தான். இந்திரன் தன் சிவார்ச்சனையை முடித்து, பின் அக்கினிகாரியத்தையும் பிறவற்றையும் செய்து, வேறூர் கோயிலினுட்போய், காமதேனுவை அழைத்து, முசுகுந்தனுக்கு விருந்துசெய்வித்து, விசித்திர வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் மணிகளையும் முத்துக்களையும் தெய்வப்படைக்கலங்களையும் பிறவற்றையும் உதவி, ''இன்னும் உனக்கு வேண்டியதைச் சொல்லுதி'' என்றான். முசுகுந்தன் ''மகாராசனே, நீ பூசைசெய்கின்ற கடவுளை யான் பூவுலகிற் கொண்டுபோய் வைத்துப் பூசித்தற்காக அன்போடு கொடுக்குதி'' என்றான். இந்திரன் அவனுக்கு இவ்வாறு சொல்வான்:

''முசுகுந்தனே, கேட்பாய். விட்டுணு புதல்வர்ப்பேறின்மையினால் முன்னாளிலே சிவபெருமானுடைய திருவடிகளே தஞ்சம் என்று சிந்தை செய்து ஊழிகாலந் தவஞ்செய்தபொழுது, சிவபெருமான் பார்ப்பதியாருந்தாமுமாய்ப் பூதப்படைகள் சூழ வெளிப்பட்டார். விட்டுணு தவத்தை விடுத்து விரைவில் எழுந்து துதித்து வணங்கிநிற்ப, சிவபெருமான் மகிழ்ந்து அருள்செய்து, 'நீ நெடுங்காலம் நம்மைநோக்கித் தவஞ் செய்து நின்றாய். வேண்டிய வரம் யாது? சொல்லுதி' என்று வினவினர். விட்டுணு 'எம்பெருமானே, அடியேனுக்கு அழியாத ஆயுளையும் காத்தற் றொழிலையும் சீதேவியோடிருக்கின்ற பெருஞ்செல்வத்தையும் ஈந்தருளினீர். புதல்வர்ப்பேறில்லாமல் வருந்தினேன். இனி அதனையும் தமியேனுக்கு ஈந்தருளும்' என்று வேண்டினர். சிவபெருமான் நன்றென்று, திருப்புன் முறுவல்செய்து, 'உனக்கு ஒரு புத்திரனை உதவினேம்' என்றருள் புரிந்தார். விட்டுணு உமாதேவியாரைத் தமக்குத் தங்கையென்று எண்ணியோ, சிவபெருமானுக்கு இவளும் நம்மைப்போல ஒரு சத்தியென்றெண்ணியோ, மலைமகளென வெண்ணியோ அறியோம், முன்செய்த வினையினால் அவரைச் சிறிதும் அன்புசெய்து வணங்கித் துதித்திலர். [ஐம்புலன்களையும் ஒருவழிப்படுத்தி, ஆசையைப் பற்றறக் களைந்து, இறக்கவரினும் தம் நிலைமை திரியாத உண்மையையே கடைப்பிடித்து, உலகமாதாவாகிய எம்பெருமாட்டியை நீக்கி எம்பெருமானையே வழிபடும் இயற்கை பிருங்கி முனிவர் ஒருவருக்கன்றி எனையோர்களான் முடியுமோ? முடியா.] அப்பொழுது, எம்பெருமாட்டியார் விட்டுணுவை நோக்கி, 'நீ இங்கே என்னை அவமதித்தாய். ஆதலால் எம்பெருமானிடத்தும் அன்புடையையில்லை. நீ பெறுகின்ற புத்திரனும் எம்பெருமானுடைய முனிவினால் விரைவில் அழிக' என்று சாபத்தைக் கூறி, சிவபெருமானை நோக்கி, 'பரப்பிரமமும்

யானே அல்லதில்லே என்று, அறிவில்லாத மானிடப்பசுக்களே மருட்டித் திரிகின்ற வஞ்சகனுகிய இவனுக்கு முன், ஞானிகளுடைய அறிவினுலன்றி அணுகுதற்கரிய நீர் அணுகி நிற்கலாமா? உயிர்க்குயிராகிய கடவுளே, மீண்டு செல்வோம் வருக' என்று கூறி, எம்பெருமானே அழைத்துக் கொண்டு போயினர்.

''விட்டுணு அதனேக்கண்டு, துன்பமுற்று அஞ்சி அயர்ந்து மனந் தடுமாறி, மெய்நடுங்கித் தளர்ந்து, பலபொருள்களே ஏற்றிய மரக்கலத் தைச் சமுத்திரத்தின் கரைக்கணித்தாய்க் கவிழ்த்த ஒரு வணிகன்போல வருந்தி, 'உமாதேவியார் பொருட்டால் இங்கே இந்த இடையூறு வந் தது' என்று உன்னி, சிவபெருமானேயும் உமாதேவியாரையும் குமாரக் கடவுளேயும் ஒரு திருவுருவாக அமைத்து, வேதாகம விதிப்படி மெய்யன் பினுற் பூசனேசெய்து, பின்னும் வருந்திப் பல்லாயிரகோடி வருஷம் தவம் இயற்றினர். முனிவர்கள் அதனேக்கண்டு, 'இன்னமும் சிவபெருமான் வரு கின்றிலர்; இனித் தவஞ்செய்பவர் இல்லே' என்றார்கள். அப்பொழுது, சத்தியுஞ் சிவமுமாய் உலகங்களேயெல்லாந் தந்த உமாதேவியாரும் சிவ பெருமானும் வெளிப்பட்டுவருதலும், விட்டுணு மனமகிழ்ந்து, ஓடிப் போய், முன்னே அம்மையாருடைய திருவடிகளில் வணங்கி, பின் எம் பெருமானுடைய பாதங்களே வணங்கி, அவ்விருவருடைய புகழ்களேயும் வேதவசனங்களாலே துதித்தார். சிவபெருமான் அவருக்கு நல்லருள் புரிந்து, 'உமையே நீ இவனுக்கு அருள் செய்' என்று கூற, அவர் விட்டுணுவை நோக்கி, 'முன்னே எம்பெருமான் உனக்குத் தந்த வரமும் யான் முனிந்து கூறிய சாபமும் பிழைபடமாட்டா; இனி யார் தாம் அவற்றை மாற்றவல்லார்! உன்மகன் எம்பெருமானுடைய நெற்றிக்கண் ணின் அக்கினியினுல் இறந்து, பின்னர் முன்புபோலத் தோன்றி, உயி ரோடு இருப்பானுக' என்று கூறினர். சிவபெருமானும் 'அவ்வாறுகுக' என்றருளி, உமாதேவியாரோடு மறைந்தார். விட்டுணு ஆச்சரியமுற்று, தமது பதிக்குப் போய் வீற்றிருப்ப, கரியநிறத்தையுடைய மன்மதன் அவருடைய மனத்தினின்று தோன்றி, அழகிற்சிறந்த காலேயாய், பூம் பாணங்களேயும் கருப்புவில்லேயும் கையிலேந்தி, ஆடவர்களும் பெண்களும் காமத்தின்மேல் மனம் வைக்கும்படி போர்புரிந்து உலாவினன். அவன் ஒருநாள் முதற்கடவுளாகிய சிவபெருமான்மீது பூம்பாணங்களேச் செலுத்தி அவருடைய நெற்றிக்கண்ணினுற் பொடிபட்டு, பின் அவர் அருளால் அருவும் உருவும் அடைந்து, முன்னே தனக்குள்ள வளங்களோடு இருந் தான். உமாதேவியாருடைய திருவாக்குத் தவறுமோ! இந்தச் சரித்திரம் இவ்வளவிலிருக்க.

விட்டுணு முன்னே தாம் அன்போடு பூசித்துவந்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் தம்முடைய மார்பில் வைத்துக்கொண்டு பாற்கடலிலே சேஷசயனத்தின்மீது பற்பலகாலம் துயின்றார். அவருடைய நெட்டுயிர்ப் பின் அசைவினுலும், சேஷசயனத்தின் உயிர்ப்பசைவினுலும், திரைகளே யுடைய பாற்கடலின் அசைவினுலும் தியாகராஜசுவாமி அவருடைய மார்பில் ஆடிக்கொண்டிருந்தார். அக்காலத்தில், வாற்கலி என்னும் அசு ரன் என்னேயும் தேவர்களேயும் போரிலே தோற்கச்செய்து வெற்றியடைந் தான். நான் தேவர்களோடு விட்டுணுவை அடைந்து வணங்கி, 'நாங்கள்

வாற்கலி என்னும் அவுணனுக்குத் தோற்றோம். நீர் எம்மைக் காத்தருளும்' என்று வேண்டினேன். அவர் சேஷசயனத்தினின்றும் அறிதுயில் விட்டெழுந்து, 'அஞ்சாதொழிமின்; உங்களுக்குத் துன்பத்தைச் செய்த வாற்கலியைக் கொல்லுவோம்' என்று அபயஹஸ்தம் செய்து, 'என்னுடைய மார்பிலே ஒரே மூர்த்தியாய் வீற்றிருக்கின்ற உமாதேவியாரையும் சுப்பிரமணியக் கடவுளையும் சிவபெருமானையும் பூசைசெய்து உன்னுடைய தீவினைப் பயனை நீங்குவாய்' என்று அன்போடு அம்மூர்த்தியைத் தம் முடைய மார்பினின்றும் எடுத்து என்கரத்தில் ஈந்தார். நான் தவவலிமையினால் அதனைச் சிரசின்மேற் முங்கினேன். அதன்பின் விட்டுணு பாற்கடலை நீங்கி, தேவசேனைகளோடு சம்புத் தீவிற்போய், எம்பெருமானுகிய சிவன் பரமானந்த தாண்டவஞ் செய்தருளுகின்ற தில்லையிலுள்ள கனகசபையைத் தொழுது, பரவசமாய்த் திருமுன்னே வீழ்ந்திறைஞ்சி, அறிவு செயலிழந்தவிடத்து உளதாம் அன்பு மீதூர்ந்து, அது காரணமாகக் கண்கள் இரண்டினின்றும் ஆனந்தபாஷ்பம் பொழிய, சர்வான்மாக்களுக்கும் அந்தரியாமியாகிய சிவபெருமானது அகண்டாகார நித்தவியாபக எல்லையைத் தலைப்பட்டு, அதிலழுந்தி, நான்குமாசம் எழுந்தாரல்லர். விட்டுணு இங்ஙனம் பரமானந்தவசமாய். ஆதிமத்தியாந்தரகிதராகிய சிவபெருமானது பரமானந்தசாகரமாகிய திருவடியின்கீழே அடங்கிநின்று, பின் அச்சிவபெருமானுடைய ஆஞ்ஞையினால் நின்மலதுரியாதீத சிவபோகநிலையை அடைந்த அவரது ஆன்மாவானது மீண்டு சகலாவஸ்தையை அடைய, சரீரவுணர்வுக்குரிய தத்துவங்களெல்லாம் முறைமுறையே அவரிடத்து வந்து கூடின. கண் துயின்றவன் எழுந்தாற்போல விட்டுணு எழுந்து, சிற்சபேசரது திருவடித்தாமரையை வணங்கித் துதித்து, புறத்தில் வந்து, வாற்கலியோடு பெரும்போர் செய்து, அவனுயிரையுண்டு, தேவர்களுக்கும் எனக்கும் விடையீந்து, முன்போலப் பாற்கடலிலே சேஷசயனத்தின் மீது அறிதுயில் செய்தார். யான் தேவர்களோடு சுவர்க்கத்துக்கு மீண்டு வந்து, அன்றுமுதல் இன்றளவும் விட்டுணுவின் மார்பில் வீற்றிருந்த சோமஸ்கந்தமூர்த்தியை விதிப்படி அருச்சனை செய்துகொண்டு வந்தேன். மகாராசனே, நீ இந்த மூர்த்தியைப் பூசை செய்தற்காகத் தரும்படி கேட்டாய். அப்படி உனக்குத் தருதல் என் சம்மதத்தைப் பற்றியதன்று. உனக்கு விட்டுணுவின் சம்மதம் உண்டானுல் அதன் பின் இவரைத் தருவேன்'' என்று இந்திரன் முசுகுந்தனுக்குக் கூறினன்.

முசுகுந்தன் அதனைக்கேட்டு, திருப்பாற்கடலிற் சென்று, விட்டுணுவை வணங்கி நின்று, சோமாஸ்கந்தமூர்த்தியை வேண்டுதலும், ''நாம் இந்திரனிடத்தில் வைத்த நம்முயிர்க்குயிராகிய தியாகராஜமூர்த்தியை நீ பூமியிற் கொண்டுபோய்ப் பூசிப்பாய்'' என்று கூறினர். முசுகுந்தன் நன்றென்று விட்டுணுவினிட்டத்தில் விடைபெற்றுக்கொண்டு, இந்திரனிடத்திற்போய் அதனைச் சொல்லினன். அவன் ஈறண்ணிய பசுவைப் பிரியும் கன்றுபோல மனந்தளர்ந்து இரங்கிப் புலம்பி, ஒரு சூழ்ச்சியைக் கருதி, தெய்வத்தச்சனைக் கொண்டு, தான் வைத்துப் பூசிக்கும் சோமாஸ்கந்தமூர்த்தி போன்ற ஆறு மூர்த்திகளை ஆறுதரம் செய்வித்து, ஒவ்வொன்றுக முசுகுந்தனுடைய கையிற்கொடுப்ப, அவன் அவற்றை வாங்கி, அவைகள் வீதிவிடங்கப் பெருமானைப் போல இருந்தும் தனக்கு ஒன்றுஞ் சொல்லாதிருந்தமை

யால் வஞ்சனை என்று அறிந்து, ''இவர் அவர் அன்று'' என்று ஆறு தரமும் கூறினன். இந்திரன் அதனைக் கேட்டு, விட்டுணுவினுடைய மார் பாகிய பொன்னுரஞ்சலிலே ஆடிய சோமாஸ்கந்தமூர்த்தியைக் கொண்டு வந்து, ''இவர் அவராமோ?'' என்றான். இந்திரன் இவ்வாறு உரைப்ப, சோமஸ்கந்தமூர்த்தியானவர், அவன் அறியாவண்ணம் முசுகுந்தனுடைய முகத்தை நோக்கி, ''நாம் உன்பால் வந்தோம். இனி நம்மைப் பூவுல கிற் கொண்டுபோய் மனமகிழ்ச்சியோடு பூசைசெய்குதி'' என்றருள் செய் தார். முசுகுந்தன் ஒப்பில்லாத பெருமகிழ்ச்சியடைந்து, வணங்கித்துதித்து, ''விட்டுணுவினுடைய பூசையை ஏற்றிருந்தவர் இவராமாம்! அரசனே இவரைத் தருக'' என்று வாங்கினன். இந்திரன் முசுகுந்தனை நோக்கி, ''இவரை, முன் யான் தந்த அறுவரோடும் பூமியிற் கொண்டுபோய், திருவாரூர் முதலாகிய ஸ்தலங்களிற் பூசிப்பாய்'' என்று சொல்லி விடை கொடுத்து அனுப்பினன்.

முசுகுந்தன் நன்றென்று இந்திரனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பூமியில் வந்து, திருவாரூரில் வன்மீகப்பெருமான் வீற்றிருக்கும் கமலாலயத் தில் விட்டுணு பூசித்த சோமாஸ்கந்தமூர்த்தியைத் திவ்விய சிங்காசனத்தின் மீது விதிப்படி தாபித்து, மற்றை ஆறு சோமாஸ்கந்தமூர்த்திகளையும் திரு நாகைக்காரோணம், திருநள்ளாறு, திருக்காறாயல், திருக்கோளரியூர், திரு வான்மியூர், திருமறைக்காடு என்னும் ஆறு தலங்களிலும் ஒருநாளிலே தாபித்து, விதிப்படி சிரத்தையோடு பூசைசெய்வித்து, அதன்பின் திருவா ரூர்த் தியாகராஜப்பெருமானுக்குத் திருவிழாச் செய்யும்படி நினைத்தான். அந்நாளில், இந்திரன் தான் பூசித்த கடவுளை முசுகுந்தனுக்குக் கொடுத்த பாவத்தால் விண்ணுலக பாக்கியத்தை யிழந்து, நீசவேடந்தாங்கி, ''தியாக ராஜப்பெருமானுடைய திருவிழாவைச் சேவித்தற்கு எத்தேசத்தாரும் வருக'' என்று யானையின்மீதேறித் திருவாரூர் வீதியைச் சூழ்ந்து முர சறைந்து சாற்றினன். முசுகுந்தன் முன் கருதியபடி தியாகராஜப்பெருமா னுக்கு மகோற்சவத்தை நடத்தி, மற்றைத் திருப்பதிகளிற் பூசித்த தியா கேசர்களுக்கும் அதுபோலத் திருவிழாவைச் செய்வித்து, வீரவாகு முதலிய வீரர்களோடு பூவுலகத்தை ஆண்டிருந்தான். இந்திரன் பல வருஷங்களா கத் தியாகேசருடைய திருவிழாவைச் சேவித்து, தவஞ்செய்து, புலியர் வடிவை நீங்கிப் பழையவடிவத்தைப் பெற்று, மீண்டு சுவர்க்கத்தை யடைந்து, முன் இழந்த செல்வங்களைப் பெற்று வீற்றிருந்தான்.

இந்திரன் போயபின்பு, முசுகுந்தன் கருவூரில் நெடுங்காலம் அரசு செலுத்தியிருந்து, பின் தன் மகனுகிய அக்கினிவன்மனுக்கு முடிசூட்டிப் பூமியை ஆளவைத்து, தவஞ்செய்து திருக்கைலாசமலையை அடைந்தான். அதன்பின் வீரவாகுவும் இலக்கத்தெண்மர்களும் தங்கள் குமாரர்களுக்குத் தத்தம் வரிசைகளைக் கொடுத்து, அக்கினிவன்மனுக்குச் சுற்றமாக இருத்தி, அருந்தவஞ்செய்து, மானுடத்தன்மை நீங்கி அருளினாலே பழைய வலியைப் பெற்று, கந்தகிரியிற்போய், முருகக்கடவுளுடைய திருவடிகளை அன்போடு வணங்கித் துதித்து இருந்தார்கள். பிரமனறியாத பிரணவத்தின் பொருளை அகத்தியமுனிவருக்கு உபதேசித்த பரமாசாரியராகிய முருகக்கடவுளுக்குரிய விரதங்கள் இத்துணைப் பெருமை உடையனவாதலால், யாவராயினும்

அவற்றை அநுட்டித்தவர் நினைத்த வரங்களெல்லாவற்றையும் விரைவிற் பெறுவர். தேவர்களும் அவரை வந்து வணங்குவர்.

திருச்சிற்றம்பலம்.

::::::::::

## வள்ளியம்மை திருமணப் படலம்.

திருக்கைலாசமலையின் ஒருசாரிலுள்ள கந்தமலையிலே செம்பொற் றிருக்கோயிலின்கண் தெய்வயானையம்மையாரோடு இனிதாக வீற்றிருக் கின்ற சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகியாரைத் திருமணஞ் செய்த கதையை இனிச் சொல்வாம். தொண்டைநாட்டிலுள்ள மேற்பாடி என்னும் ஊரின் பக்கத்திலே, பல வளங்களையுடையதும் மிக உயர்ந்ததுமாகிய வள்ளி யங்கிரி என்று ஒரு மலையுளது. அதில் அறுமுகக்கடவுள் பிற்காலத்திலே தன் பால் வந்து தங்கும்படி சுவர்க்கவுலகம் பெருந்தவத்தைச்செய்து வந்திருந் தாற்போல, ஒரு சிற்றூர் பெருமையுற்றிருந்தது. அச்சிற்றூரில் வேடர் களுக்கு அதிபனும் முன்செய்த தவத்திற் சிறந்தவனுமாகிய நம்பியென் பான் ஒருவன் இருந்தான். அவன் சில புத்திரர்களைப் பெற்று, மகட்பேறில் லாமையால் அதற்காகத் தன் குலதெய்வத்தை வழிபட்டுக்கொண்டிருக்கு நாளில், அவ்வள்ளிமலைச் சாரலின்கண், ஒருவழிப்பட்ட ஐம்புலன்களையுடைய சிவமுனிவர் என்னும் மேலோர் ஒருவர் சிவபெருமானைத் தியானித்துச் சிவ விரதங்களை அநுட்டித்துத் தவஞ்செய்து கொண்டிருந்தார். அங்கே, பரிசுத் தமும் அழகும் பொன்னிறமுமுடைய ஒரு பிணமான் சுப்பிரமணியக்கட வுளுடைய திருவருளினாலே கண்டோர் மயங்கும்படி வந்துலாவியது. அம் மான்பிணையைச் சிவமுனிவர் பார்த்தலும், அழகும் இளமையும் உடைய பிறன்மனையாளைக் கண்ட தூர்த்தனைப்போல மயங்கி, காமத்தாற் சூழன்று, கவலையினால் துன்பம் அடைந்து, கருத்துடைந்து, பித்துக்கொண்டவராய், தெய்வப்புணர்ச்சிபோலப் பார்வைமாத்திரத்தால் அம்மானிடத்து இன்பம் அனுபவித்து, ஆசை நீங்கி, பின்பு மெய்யுணர்வு வரப்பெற்று, முன்போலத் திட்பத்தோடிருந்து தவஞ்செய்தார். அவருடைய பார்வையினால் மானின் வயிற்றிற் கருப்பஞ் சேர்தலும், விட்டுணுவின் மகளாகிய சுந்தரவல்லி, முருகக்கடவுள் முன்னே தனக்குச் சொல்லிய *குறிப்பின்வழிச் செல்வா ளாய், அந்த மானின் வயிற்றினுள்ள கருவிற்புகுந்தாள். அப்பிணைமான் அவ்விடத்தை நீங்கித் தினைப்புனமெங்கும் உலாவி, சுனையில் நீர்பருகி, ஓரிடத்திற்றங்கி, வள்ளிமலையில் ஏறி, அங்குள்ள தினைப்புனங்களையெல்லாங் கடந்து போய், வேட்டுவப்பெண்கள் வள்ளிக்கிழங்குகள் அகழ்ந்தெடுத்த குழிகளையுடைய புன்செய்யிற் புகுந்து, சூலின் பாரத்தினாற் றளர்ந்து தளர்ந்துபோய், வயிறு நொந்து மயங்கி, வாய்விட்டுக்கதறி, நெட்டுயிர்ப் பெறிந்து, கருவை யீன்று, அக்குழியில் இட்டது. சுந்தரவல்லி குழை தொடி வளை முதலாகிய பழைய ஆபரணங்களைத் தரித்து, மரவுரியை உடுத்து, தன் முன்னையுணர்வின்றி, மானின்வயிற்றில் வந்து உதித்தாள். ஈன்ற மான்பிணை அக்குழந்தையை நோக்கி, ''இது நம்மினத்தது அன்று; வேறுசாதி வடிவத் தோடு என்னிடத்து வந்து பிறந்தது'' என்றெண்ணி, மிகமருண்டு, அஞ்சி

* முருகக்கடவுள் கொல்லிய குறிப்பை விடைபெறுபடலத்திற் காண்க.

ஓடியது. ஓடுதலும், அவள் தனித்தவளாய், ''கின்னரர்களுடைய யாழொலியோ சரசுவதியின் இசையோ?'' என்று கேட்போர் சந்தேகம் உறும்படி ஏங்கி அழுதாள்.

அந்தச்சமயத்தில், அறுமுகக்கடவுளுடைய திருவருள் தூண்டுதலால், வேட்டுவராசனுகிய நம்பி தன்மனைவியோடு பரிசனங்கள் சூழத் தினைப்புனத்துக்குச் சென்று, அவ்வழுகையொலியைக் கேட்டு, ''இவ்வொலி ஏது?'' என்றெண்ணி, அவ்வறும்புனத்தில் வந்து, வள்ளிக்குழியிலிருக்கின்ற தூண்டாமணி விளக்குப்போன்ற குழந்தையை நோக்கி, ''இந்தா, இஃது ஓர் இளங்குழந்தை'' என்று எடுத்து, மகட்பேறில்லாத மனக்கவலை நீங்கும்படி தன் தேவிகையிற் கொடுத்து, மகிழ்ச்சி மிகுதியினல் வில்லை நிலத்திலிட்டான்; எழுந்தோங்கிப் பாய்ந்தான்; பேரொலி செய்தான்; ஆனந்தசாகரத்தில் மூழ்கினன்; சிரித்தான்; தோள்களைத் தட்டினன்; ''முற்பிறப்பிலே நாம் செய்த தவந்தான் நன்று போலும்'' என்று கூறினன். அவன் மனைவியாகிய கொடிச்சி, அப்பொழுதே வயாவும் வருத்தமுமுற்றுப் பெற்றெடுப் பாள்போல அக்குழந்தையைப் பேணி, பெருமகிழ்வுற்று, தனங்களில் ஊறும் பாலை ஊட்டினுள். வேட்டுவராசன் பின்பு நிலத்திலிட்ட வில்லை எடுத்து, புனத்தை நீங்கி, குழந்தையோடு மனைவியை அழைத்துக்கொண்டு சிற்றூரிற் போய், சிறுகுடிலிற் புகுந்து, அருமருந்துபோலும் மகளைப்பெற்றமையாற் பெருமகிழ்ச்சி யடைந்து, கடாவைவெட்டித் தன்கிளையோடு இனிதாக உண்டு, குறிஞ்சிப் பறையொலிப்பக் குரவைக் கூத்தாடுவித்து, தெய்வத்துக்குப் பலியைச் செலுத்தி, வெண்மையாகிய அரிசியையும் மலரையும் மஞ்சளையுந் தூவி ஆட்டுக்கடாவை அறுத்து, சுப்பிரமணியக்கடவுளுக்கு விழாக் கொண்டாடி, வேலனைக்கொண்டு வெறியாட்டாடுவித்து, இவை போல்வன பிறவுஞ் செய்வித்தான். கற்பிற்சிறந்த அவன் மனைவி தன்மகட்குக் காப்பிட்டு, மயிலிறகுகளை விரித்த பூந்தொட்டிலில் ஏற்றினுள். மிகமுதிர்ந்த வயோதிகர்கள் அங்குவந்து கூடி, ''இக்குழந்தை வள்ளிக்கிழங்கைக்கழந்த குழியிற் பிறந்தமையால் இவளுக்குரிய நாமம் வள்ளி'' என்று பெயர் இட்டார்கள். வேட்டுவராசனுகிய நம்பி ஜெகன் மாதாவாகிய வள்ளிநாயகியைத் தன் மனைவியுந் தானுமாய் நம்மகள் என்று அன்போடு வளர்த்தான். தம்முடைய பிதாவாகிய விட்டுணு இடைச்சேரியிலே நந்தகோன்மகளுய் வளர்ந்தவாறுபோல, வள்ளிநாயகியார் தாமும் வேட்டுவராசன் மகளாகி அவனுடைய சிறுகுடிலிற் சேர்ந்து வளர்ந்தார். [விட்டுணுமூர்த்தி முன்னுட்பெற்ற அருமருந்து போல்பவரும், சிவகுமாரராகிய சுப்பிரமணியக்கடவுளுக்குத் தேவியாரும் ஆகிய வள்ளிநாயகியாரைத் தமது குறிஞ்சி நிலத்தில் மகளாக வளர்த்தலால், ஆ ஆ! வேட்டுவர்கள் செய்த தவத்தை யார்தாம் அளவிடற் பாலார்] அவர் தொட்டிலைவிட்டுப் பூமியிலே தவழக் கற்று, தளர்நடையுங் காட்டி, வேங்கைமரநீழலையுடைய முற்றத்தில் உலாவி முற்றத்தினுல் மணி கொழித்து, சிற்றில் இழைத்து, சிறுசோறு அட்டு, முன்னுணர்வு சிறிதுமின்றித் தந்தை தாயர் முதலாயினுர் மனமகிழ்தற்கேதுவாகிய வண்டலாட்டை இம்முறையாற் செய்துவருங்காலத்தில், முருகக்கடவுளைத் திருமணஞ் செய்தற்கு இப்பருவம் ஏற்கும் என்று சொல்ல அவருக்குப் பன்னிரண்டுவயசு சென்றன.

தாயுந்தந்தையும் அவருடைய அப்பருவத்தைக்கண்டு, தமது சாதியாசாரப்படி அவரைப் புனத்திலே தினைக்கொல்லையைக் காக்க வைத்தார்கள். முருகக்கடவுளுக்குத் தேவியாகின்ற வள்ளிநாயகியை வேட்டுவர்கள் தினைப்புனங் காக்க வைத்தது, தூக்கணங்குரீஇ காட்டில் எளிதாகக் கிடைத்த தெய்வமணியைக் கொண்டுவந்து தன் கூட்டில் இருளோட்ட வைத்தவாறன்றே? மெழுகைக் காய்ச்சி அதிலே பலமணிகளைப் பதித்த பழுப்பேணியிலே அவ்வம்மையார் பாதங்களை வைத்து மகிழ்ந்தேறி, தினைப்புனத்தில் எத்திசையையும் பார்க்கத்தக்க பரணில் இருந்து, தட்டை, குளிர், தழல் ஆகிய கருவிகளை ஏந்தி, கிளிமுதலிய பக்ஷிகள் தினைப்புனத்தை அணுகாமல் ஓட்டியும், பன்றி, மான், மரை முதலிய மிருகங்களுக்கு மணிக்கற்களைக் கவணில்வைத்து வீசியும், ''பூவைகாள், புறவங்காள், மயில்காள், கிளிகாள், குயில்காள், சேவல்காள், ஆலோலம் ஆலோலம்'' என்று தனித்தனி கூவியும், இவ்வாறுகத் தினைப்புனத்தைக் காவல் செய்திருந்தார்.

வள்ளிநாயகியார் இப்படித் தினைப்புனத்தைக் காத்திருப்ப, முருகக்கடவுள் அவருக் கருள்புரியக் கருதி, கந்தமலையை நீங்கி, தனியே திருத்தணிகை மலையில் வந்திருந்தார். அந்நாளில் நாரதமுனிவர் பூமியிலே வள்ளிமலையில் வந்து, தினைப்புனத்தைக் காத்திருந்த வள்ளிநாயகியாரைக் கண்டு கைதொழுது, ''உலகமாதாவாய் இங்கே வீற்றிருக்கின்ற இவரது பேரழகு முழுவதையும் நான் நினைத்துப் புனைந்துரைத்தாலும் சொல்லிமுடியுமோ? முடியா. இவர் எம்பெருமானுகிய அறுமுகக்கடவுளுக்குத் தேவியாய் இருக்கும்படி முன்னே தவஞ்செய்து வைத்தார்'' என்று அளவில்லாத அற்புதத்தோடு இவ்வாறு தம்முட் கூறி, திருத்தணிகையிலே முருகக்கடவுளை அடைந்து, அவருடைய திருவடிகளைப் பலமுறை வணங்கி, ''எழ்பெருமானே, சிவமுனிவனுக்கு மானின் வயிற்றிற் பிறந்த வள்ளிநாயகியார், வேட்டுவர் மகளாகி, வள்ளிமலையிலே தினைப்புனத்தைக் காத்துக்கொண்டிருக்கின்றார். அவருடைய திருமேனியின் அழகு இலக்குமிக்கும் இல்லை, இது பொய்யன்று. அடியேன் பார்த்துவந்தேன். தேவரீரும்போய்ப் பார்க்குதிர். எமது அன்னையாகிய அவர் முற்பிறப்பில் விட்டுணுவின் மகள்; உம்முடைய திருப்புயங்களைச் சேரும்படி தவஞ்செய்திருந்தார். தேவரீர் வள்ளிமலைக்கு எழுந்தருளி அவருக்கு அருள்புரியும்'' என்று விண்ணப்பஞ் செய்தார். இப்படி நாரதமுனிவர் கூறியபொழுது, அறுமுகக்கடவுள் ''முனிவனே, நீ கூறியது நன்று நன்று'' என்று அவரை அனுப்பிவிட்டு, காமநோய்க் கவலையைத் தமது திருவுள்ளத்தில் வைத்து, வள்ளிநாயகியாருக்கு அருள்செய்யுமாறு, தம்முடைய திருவுருவத்தை மாற்றி, மானுடத் திருமேனி கொண்டு, காலில் வீரக்கழலும் அரையிற் கச்சும் தோளில் மாலையும் கையில் வில்லும் பாணமும் தலையில் நீலநிறக்குடுமியும் உடையராய், வேட்டுவக் கோலம்பூண்டு, வள்ளிநாயகியார்மாட்டு வைத்த மோகம் தம்முடைய மனத்தைத் தள்ளத் திருத்தணிகைமலையை நீங்கி வள்ளியங்கிரியில் வந்தெய்தி, ஒருவன் முன்னே ஓரிடத்திற் சேமித்துவைத்த நிதியைத் தான் நினைத்தபொழுதில் எளிதாகப் பெற்றவாறுபோலத் தினைப்புனத்திலிருக்கின்ற வள்ளிநாயகியாரைக் கண்டார்.

வள்ளிநாயகியைக் கண்ட முருகக்கடவுள் காமாக்கினி சுடச் சோர்ந்து வெம்பி ஆசைமிகுகின்ற உள்ளத்தினராய், அவர் இருக்கும் பரணுக்கு அணிமையிற்சென்று, ''மையுண்ட வாட்படைபோலும் கண்களையுடைய

பெண்ணே, கேள். பூவுலகத்துப் பெண்களெல்லாருக்கும் இறைவியாயிருக்கும் உன்னை வேட்டுவர்கள் தனியே தினைப்புனங்காக்கவைத்துப் போயினரே. அவர்களுக்குப் பிரமதேவர் பகுத்தறிவைச் சிறிதும் படைத்திலர் போலும்'' என்றும், ''மனந்தளருகின்ற எனக்கு உன் பெயரைச் சொல்லுதி; அதனைச் சொல்லாயெனின் உன் ஊரைச் சொல்லுதி; அதுவும் சொல்லமுடியாதாயின், உன்சிற்றூருக்குச் செல்லும் வழியைச் சொல்லுதி'' என்றும், ''நீ என்னோடு ஒன்றும் பேசாதொழியினும், புன்முறுவல் செய்யாதொழியினும், என்னைச் சிறிதும் கண்திறந்து பாராதொழியினும், விரகமிகுந்துழலும் யான் உய்யும்வழி யொன்றையும் காட்டாதொழியினும், மனம் சற்றும் உருகாதொழியினும், நின்பாற் பழியொன்று வந்து சூழும்; ஆதலால் என்னைப் பாராமுகஞ் செய்யாதொழி'' என்று கூறி, உலைமுகத்திற்பட்ட மெழுகுபோல உருகி, ஒரு பெண்ணின்மாட்டு வைத்த ஆசையாகிய வலையில் அகப்படுகின்றவர்போல வருந்தி இரங்கி நின்றார். அவ்வறுமுகக்கடவுளுடைய திருவிளையாடலெல்லாம், சலனமில்லாத சந்திரன் கலங்குகின்ற சலத்திலே சலனமுறுவதாகத் தோன்றுதல் போலுமன்றே!

குமாரக்கடவுள் வள்ளிநாயகியாருக்கு முன்னே நின்று, இயற்கையிற் றம்மாட்டில்லாத ஆசையின் மிகுதியை உள்ளதுபோலக் காட்டி, இவற்றைச் சொல்லிக்கொண்டு நிற்கும்பொழுது, வள்ளிநாயகியாருடைய தந்தையாகிய நம்பி, கொம்பு முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப வேடுவர்களோடு அங்கே வந்தான். அப்பொழுது முருகக்கடவுள், அடி வேதங்களாகவும் நடு சிவாகமங்களாகவும் கிளைகள் யாவும் பல கலைகளாகவும் தாம் ஒரு வேங்கைமரத்தின் உருவாகி நின்றார். வேட்டுவராசன் விரைவில் அங்குவந்து, மகளாகிய வள்ளிநாயகியாரைக் கண்டு, வள்ளிக்கிழங்கையும் தினைமாவையும் தேனையும் காட்டாவின்பாலையும் பிற தின்பண்டங்களையும் அவருக்குக் கொடுத்து, தினைப்புனத்தில் நின்ற வேங்கைமரத்தைக் கண்டான். அவனுக்குப் பக்கத்தில் நின்ற வேடுவர்கள் அவ்வேங்கைமரத்தின் நிலைமையை நோக்கி, ஆச்சரியமுற்று, ''இது முன்னுள்ளதன்று; இப்பொழுது புதிதாய் உண்டாயினமையால், தீங்கு வருதல் நிச்சயம்'' என்று கோபித்து, ''இந்தப் பெரிய வேங்கைமரத்தை இப்பொழுதே முறியுங்கள்'' என்பாரும், ''வேரோடு வீழ நாற்புறத்திலும் குழிபறியுங்கள்'' என்பாரும், ''இதன் அரையை மழுவினாலே தறியுங்கள்'' என்பாரும், ''இனித் தாமதிக்காதீர்கள்'' என்பாரும், ஆயினர். இப்படிச் சொல்லுகின்ற வேடுவர்கள் யாவரையும் அரசனாகிய நம்பி விலக்கி, வள்ளிநாயகியாருடைய முகத்தைப் பார்த்து, ''மகளே இத் தினைப்புனத்தில் வேங்கைமரமொன்று புதிதாக உண்டாகிய காரணம் என்னை? உண்மையைச் சொல்லுதி'' என்று வினவினன். வள்ளிநாயகியார் வெருவி, ''தந்தையே, இது மாயம்போற் றோன்றிற்று; வந்த வராற்றை யான் அறியேன். 'நேற்றில்லாத ஈதோர் மரம் புதிதாய் முளைத்தது' என்று யானும் மனநடுங்கியிருந்தேன். இதுவே நிகழ்ச்சி'' என்றார். இதனைக்கேட்ட வேட்டுவராசன் ''மகளே, அஞ்சாதே. க்ஷேமத்தோடு இங்கே இரு. இவ்வேங்கைமரம் உனக்குத் துணையாய் வந்தெய்தியது'' என்று கூறி, வேடுவர்கள் குழாத்தோடு போயினன்.

அதனைக்கண்ட அறுமுகக்கடவுள் வேங்கைவடிவம் நீங்கி, வள்ளி நாயகியார் காணும்படி பழைய மானுடவடிவங்கொண்டு, எல்லையில்லாத ஆசையுற்று இரங்குபவர்போல அவருக்கருகே நின்று, அருளினால் அவரை நோக்கி, இவ்வாறு சொல்வாராயினர்: ''கோங்கரும்பையொத்த தனங்களையுடைய குறவர்மகளே, இங்கே உன்னை வந்தடைந்தேன். எனக்கு உன்னுடைய கழல்களல்லது புகலிடம் ஒன்றுமில்லை. நின்னை யான் என்றும் நீங்கலன் நீங்கலன். பாவியேன் உன்னைப் பிரிந்து செல்லவல்லனோ? உடம்பானது உயிரையகன்று அறிவுகொண்டெழுந்துபோக வன்மையில்லதென்பதனைச் சொல்லவும் வேண்டுமோ? உன்னுடைய கண்ணுகிய வலையில் அகப்பட்ட எனக்கு அருள்செய்தலின்றிச் சிறைக்கணித்தாய். எனக்கு உய்யுந்திறம் வேறுளதோ? இங்கே உன் கையில் இவ்வுயிரைக் காத்துக் கொள். பெண்ணே, நீ ஆடும் சுனையாயும் அணியுஞ் சந்தனமாயும் சூடும் மலர்களாயும் தோயப்பெற்றிலேன். வாடினேன். இனி யான் செய்யுந் திறம்யாது? நீ தினைப்புனத்தைக் காத்தல் உன் பெருமைக்குப் புல்லிது புல்லிது. நீ என்னோடு வருதி; அரம்பையர்கள் யாவரும் வணங்கி வாழ்த்த மேலாகிய பழைய நிலைமை தவறுத செல்வங்களை நீ அனுபவிக்கும்படி தருவேன்'' என்று இவைபோல்வன பல குறிப்புரைகளைச் சொல்லி நின்றார். வள்ளிநாயகியார் அவருடைய மனக்கருத்தை உற்றுநோக்கி, ''இவர் திறம் நன்று!'' என்று நாணி, ''நான் இழிகுலமாகிய வேட்டுவசாதிப் பெண்; நீர் உலகம் முழுவதிற்கும் அருள்செய்கின்ற முதல்வர். நீர் என்னைத் தழுவநினைத்து நும்பெருமைக்குத் தாழ்வாகிய வசனங்களைப் பேசுதல் பழியன்றித் தகுதியாமோ? யான் தினைக்கொல்லையைக் காத்திருக்கும் ஒரு பேதை; நீர் உலகத்தைக் காக்கும் இறைவர். நீர் உளம் மயங்கி என்னுடைய கலவியை விரும்புதல் முறைமையன்று, புலியானது பசிமிகுந்தாற் புல்லையுந் தின்னுமோ?'' என்று பற்பலவற்றைச் சொல்லி நின்றார். அப்பொழுது வேட்டுவராசன் தொண்டகம் துடி முதலிய வாத்தியங்கள் ஒலிப்ப, வள்ளிநாயகியார் அஞ்சும்படி வேடுவர்கூட்டத்தோடு அங்கே வந்தான். வள்ளிநாயகியார் அவன் வந்ததைக் கண்டு, மனம் நடுங்கி வெருவி, சுப்பிரமணியக்கடவுளாகிய வீரருடைய முகத்தை நோக்கி, ''மிக்க வலியையுடைய வேடுவர்கள் தியர்கள். இனி நீர் பிழைக்க நினைந்தால், இங்கே நில்லாமல் ஓடிப்போய்விடும்'' என்றார். அவர் அவற்றைக் கேட்டு, அத்தேவியார் தம்மீது வைத்த அன்பிற்காக மிக மகிழ்ந்து, விருத்தராகிய ஒரு சிவனடியார்வேடம் பூண்டு வேடர்களுக்கெதிரிற் சென்று, வேட்டுவராசனை அணுகிநின்று, அவனுக்கு அன்போடு விபூதியைக் கொடுத்து, ''அரசனே, உனக்கு வலிமை மிகுத்திடுக. வெற்றி பெரிதாகுக. வளங்கள் விருத்தியாகுக'' என்று ஆசீர்வதித்தார். வேட்டுவராசன் அவருடைய பாதங்களை வணங்கி, ''இந்த உயர்ந்த மலையில் நீர் விருத்தர் வந்தீர். உமக்கு வேண்டியதைச் சொல்லும்'' என்றான். அவ்விருத்தர் ''மகாராசனே, கேட்பாய். என்னுடைய மிதந்த மூப்பு ஒழியவும் மனமயக்கம் நீங்கவும் இங்கே நும்வரைக் குமரி எய்தி ஆட விரும்பி, மெலிந்து விரைவாக வருகின்றேன்'' என்றார். விருத்தர் கூறிய மொழியை அரசன் கேட்டு, ''நமது முதியோரே, நல்லது. நீர் கூறிய தீர்த்தத்தில் நாடோறும் முழுகி, நமது மகள் தனித்திருக்கின்றாள், அவ

ளுக்கும் ஒரு துணையாகி இங்கே இரும்'' என்ன, முதியவர் ''அரசனே, நல்லது'' என்றார். வேட்டுவராசன் வள்ளிநாயகியாரிடத்திற் சென்று, தினைமாவையும் கிழங்கையும் பழங்களையும் பிறவற்றையும் கொடுத்து, அவருக்குத் துணையாக அத்தவத்தரை வைத்து, வேடுவர்களோடு மீண்டு போயினன்.

அரசன் சென்றதை விருத்தச் சிவவேடர் கண்டு, வள்ளிநாயகியாரை நோக்கி, ''பெண்ணே, நான் இனி என்ன செய்வேன்? என்னைப் பசிநோய் வருத்துகின்றது'' என்றுகூறி, அவர் தேனுங் கனியும் மாவும் கையிற் கொடுக்க வாங்கி உட்கொண்டு, ''வெய்யிலும் மிகுந்தது; தண்ணீர்த்தாகமும் பெரிதாயிருக்கின்றது'' என்றார். அதனை வள்ளிநாயகியார் கேட்டு, ''எந்தாய், இங்குள்ள மலைக்கு அப்பால் ஏழு மலைகள் கடந்தபின் உட்புறத்தில் ஒரு சுனை உளது. அங்கே போய்த் தண்ணீர் பருகி வாரும்'' என்றார். விருத்தர் ''பெண்ணே, எனக்குத் தண்ணீர்த்தாகத்தால் நாவறளுகின்றது. நான் புதியவன். மலைவழியைச் சிறிதும் அறியேன். உன் காற்றுணைகள் வருந்துமென்று சிறிதுந் தாமதஞ்செய்யாமல் விரைவில் வந்து சுனைநீரை எனக்குக் காட்டுதி'' என்றார். வள்ளிநாயகியார் அதனைக்கேட்டு, ''சுவாமீ, வாரும்'' என்று அவரை அழைத்துக்கொண்டு, தாம் முன்னேசென்று மலைகளைக் கடந்துபோய்ச் சுனை நீரைக் காட்ட, அவர் வேனிலால் வெதும்பினவர் போலப் பருகி, பின்னர், ''மேகத்தையொத்த அளகபாரத்தையுடைய பெண்ணே, என் உடம்பை வருத்துகின்றதும் சகித்தற்கரியதுமாகிய பசியைத் தணித்தாய்; தண்ணீர்த்தாகத்தையுந் தணித்தாய்; இன்னும் என் தளர்ச்சி தவிர்ந்திலது. பாவியேன் கொண்ட மோகத்தையுந் தணித்தாயாயின் என்குறை முடிந்தது'' என்று இரங்கிக் குறையிரந்து வேண்டி மயங்கிக் கும்பிட்டு நின்றார். அப்பொழுது, வள்ளிநாயகியார் நகைத்து, உயிர்த்து, நடுநடுங்கிச் சீறி, ''பெரியீரே, நீர் மேலாகிய தவத்தோர் வேடத்தைப் பூண்டு இங்கே உமக்குத் தகாதனவற்றையே செய்தீர். எல்லார் விழிக்கும் பாலாய்த் தோன்றிப் பருகினவருடைய உயிரைக் கவரும் ஆலாகல விஷத்தின் தன்மை போன்றது உம்முடைய இயற்கை. தினைப்புனத்தைக் காக்கும் இழிந்த வேட்டுவர் மகளாகிய என்னை, குற்றமில்லாத மகாதவத்திற் சிறந்த நீர், தழுவும்படி நினைத்துப் பேசத்தகாத வார்த்தைகளைப் பேசி வணங்கி நிற்றல் தகுதியன்று. வேட்டுவர் இச்செய்கையை அறிந்தால் தீதாய் முடியும். நீர் சங்குபோல் நரைத்த முடியையுடைய முதியீராயிருந்தும், நல்லுணர்வு சிறிதும் இல்லீர்! எதற்காக மூத்தீர்! இழிகுலத்தேனுகிய என்னை விரும்பிப் பித்துக்கொண்டார் போலப் பிதற்றுகின்றீர்! இதனால் இவ்வேடர் குழுவுக்கெல்லாம் ஒரு கொடும்பழியைச் செய்தீர்! நான் காக்கின்ற தினைப்புனத்திலே பக்ஷிகளும் விலங்குகளும் வந்து கதிர்களைக்கவரும். நாவல்லோரே, நீர் நடந்தருளும். நான் முந்திப் போவேன்''. என்று கூறி வள்ளிநாயகியார் முன்சென்றார்.

அவர் முன் செல்லுதலை எம்பெருமான் பார்த்து, இனி என்செய்வதென்று இரங்கி, ''இவளுக்குமுன் வந்து அருள்செய்யும்'' என்று விநாயகக் கடவுளைப் பிரார்த்தித்தார். அப்பொழுது, விநாயகராகிய யானை அறுமுகக்

கடவுளுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, கடல்போல முழங்கி, முன்பு செல்லுகின்ற வள்ளிநாயகியாருக்கு முன்னே வந்தது. அவர் அவ்வியானையைக் கண்டு அச்சத்தோடு மீண்டு, தவவேடங்கொண்ட சுப்பிரமணியக்கடவுளைக் கிட்டி, ''நமது தலைவரே, என்னை அணுகவொட்டாமல் இந்த யானையைக் காத்தருளும். நீர் சொல்லியபடி செய்வேன்'' என்று கூறி, அவருடைய பின் பக்கத்திற் சேர்ந்து தழுவிக்கொண்டார். அப்பொழுது முருகக்கடவுள் தமது முன்பக்கத்தில் விநாயகக்கடவுளாகிய களிற்றியானையின் கோடு ஒற்றவும், பின்பக்கத்தில் வள்ளிநாயகியாராகிய பிடியானையின் தனமென்னுங்கோடு ஊன்றவும், இவ்விரண்டிற்கும் நடுவே ஒரு வச்சிரதம்பம்போல நின்றார். அவர் விநாயகக் கடவுளை வந்தனைகள் செய்து, ''எம்பெருமானே; நீர்வந்த மையால் மனமயக்கம் ஒழிந்தேன். வள்ளிநாயகியும் என்னைச் சேர்ந்தாள். இனி நீர் மீண்டெழுந்தருளுக'' என்றார். விநாயகக்கடவுள் நன்றென்று மீண்டு போயினர். முருகக்கடவுள் வள்ளிநாயகியாரை ஒரு சோலையிற் கூடி, மிகுந்த கருணைசெய்து, பன்னிரண்டு திருப்புயங்களும் ஆறுதிருவதனங் களும் வேற்படையும் குலிசமும் மற்றை ஆயுதங்களும் மயில்வாகனமுமாக வள்ளிநாயகியார் தரிசிக்கும்படி தமது திருவுருவத்தைக் காட்டி நின்றார். தேவியார் வேலாயுதகரராகிய அக்கடவுளுடைய திருவுருவைத் தரிசித்து, வணங்கித் துதித்து, ஆச்சரியமுற்று, நடுநடுங்கி வியர்த்து, கைகுவித்து நின்று, ''வேற்படையை ஏந்திய எம்பெருமானே, நீர் இவ்வருமைத் திருவுருவத்தை முன்னமே காட்டி அடியேனைத் தழுவாமல், இத்துணையும் வீணே கழித்தீர். கொடியேன் செய்த குற்றங்களையெல்லாம் இப்பொழுதே தவிர்த்து, அடியேனை ஆட்கொண்டருளும்'' என்று தெவிட்டாத அன்பினோடு கூறினர். முருகக்கடவுள், ''பெண்ணே நீ முற்பிறப்பில் விட்டுணுவின் மகள். நம்மை மணஞ்செய்யும்படி தவஞ் செய்தாய். அதனால் இப்பிறப்பில் உன்னை வந்து சேர்ந்தோம்'' என்று அவரைத் தழுவி, அருள் புரிந்து, ''உங்கள் தினைப்புனத்தைக் காத்தற்கு நீ முன்னே செல்லுதி; யாமும் அங்கே வருவோம்'' என்று கூற, வள்ளிநாயகியார் அவருடைய பாதங்களை வணங்கி, விடைபெற்றுக்கொண்டு, தினைப்புனத்தில் போயிருந்தார்.

அப்பொழுது அயற்புனத்திலிருந்த பாங்கி வந்து அவருடைய பாதங்களை வணங்கி, அவர் சூடிய பூமுதலியவற்றின் நாற்றமும், அவயவங் களின் தோற்றமும், பிறைதொழுதல் முதலிய ஒழுக்கங்களும் உணவின் கணுள்ள அற்ப மறுப்பும், வண்டலாட்டயர்தல் முதலிய செயல்களும், பேதைமைக்குத் தகச் செல்லும் மனமும், செவிலியிடத்துப் பயிறலுமாகிய இவ்வேழும் வேறுபட்டிருத்தலை உற்றுநோக்கி, அவர் ஒரு தலைமகனோடு தலைப்பெய்திருத்தல் வேண்டும் என்னுந் தெளிவுடையளாய், அவ்வள்ளி நாயகியாரைப் பார்த்து ''தலைவியே, நீ இத்தினைப்புனமழிய எங்கே போயிருந்தாய்? சொல்லுதி'' என்றாள். வள்ளிநாயகியார் அதனைக்கேட்டு வெள்கி, ''தோழியே, யான் வெய்யிலால் மெலிந்து அப்புறத்திலுள்ள சுனையிலே ஸ்நானஞ்செய்யும்படி போயினேன்'' என்றார். அதற்குத் தோழி, ''கண் சிவக்கவும் வாய் வெளுக்கவும் சரீரம் வேர்க்கவும் தனங்கள் விம்மவும் கை வளை கழலவுஞ் செய்கின்ற சுனை எவ்விடத்துளது? அதனைச் சொல்வாய்'' என்றாள். இப்படி வினவிய இகுளையை வள்ளிநாயகியார் கோபித்துப்பார்த்து ''உன்னையே யான் உற்ற துணையாக மனத்திற் கொண்டு இங்கே இருந்தேன்,

அங்ஙனம் எண்ணியிருக்கும் எனக்கும் வந்து ஒரு குந்றங் கூறினீய். நீ கொடியை'' என்றூர். பாங்கியும் தலைவியும் இப்படிப் பேசிக்கொண்டு தினைப்புனத்திருத்தலை முருகக்கடவுள் நோக்கி, ''இதுவே சமயம்'' என்று எண்ணி, வளைத்த வில்லையும் இலக்குப் பார்க்கின்ற அம்பையும் உடை வாளைச் செறித்த கச்சினையும் உடையராய், வேட்டை விளையாட்டால் வருந் தினவரைப்போல இரண்டு பாதங்களுஞ் சிவப்பத் தனியே வந்து, அவர்களை அணுகி, ''காந்தண்மலர்போலும் கைகளையுடைய பெண்களே, யான் எய்த கணையினுற் பாய்ந்த இரத்தமும் முழங்குகின்ற பிளந்த வாயும் பூண்பட்ட மேனியுமாய் ஓராண்யானை ஈண்டு வந்ததோ? சொல்லுதிர் சொல்லுதிர்'' என்று, வேழம் முதலியவற்றை வினவிநின்றூர். இகுளை ''உமது வலிமையை உம்மையொத்த வீரர்களுக்குச் சொல்வதேயன்றி ஏழையேங்களுக்குச் சொல் வதென்னை?'' என்று கூறி, ''இவ்விருவருடைய ஆசையை இவர்கள் கண் களே சொல்லும். இவர்கள் கோலம், பறவையை எய்கின்ற வேட்டுவர் கோலமே போன்றன. இத்தலைவர் வேட்டையாட வருகின்றதும் இத்தலைவி தினைப்புனத்திலிருந்து காக்கின்றதும் உண்மையாமோ?'' என்று மதித்து, அயற்புனத்திற் போயிருந்தாள். அப்பொழுது வேழம் வினவிவந்த வீரர் ''தோழியே யான் சொல்வதைக்கேள். தமியேனுக்கு உற்ற உறவினர் நீங் களே. யான் நீர் விரும்பிய பொருளெல்லாவற்றையும் தருவேன். உங்கள் பணிகளெல்லாவற்றையுந் தேடிச் செய்வேன். நீவிர் என்மேல் வெறுப்பின் றிச் சிறிது அருள்செய்யும்'' என்றூர். இகுளை அவர் கூறியதைத் தெரிந்து, ''ஐயருடைய எண்ணம் இதுவோ? நம்முடைய பெருங்கிளைக்குப் பூமியில் ஈதொரு பழியை நாட்டவோ ஐயர் வந்தது? பெரியோர் மறவர்களுடைய பேதைப் பெண்ணையும் ஆதரிப்பாரோ?'' என்றூள். அதனைக்கேட்ட தலைவர் ''மகாவிஷ்ணு தந்த அமிர்தமும், வேடுவர்கள் செய்த மகா தவப்பயனும், பெண்களுக்கரசியும், எனக்கு ஆசையைத் தந்து பேரருள்செய்த பேரழகியும் ஆகிய தலைவியைப் பேதை என்பதே பேதைமை'' என்றுங் கூறினர். அதனைக் கேட்ட தோழி, ''தலைவரே, இங்கே வேடர்கள் வருவர்; அவர் மிகக் கொடி யர்; செய்வது தவிர்வது ஒன்றுமறியார்; காண்பாராயின் எம்மைக் கொல் வார்; நீர் இங்கே நின்று ஆவதென்? போம்'' என்று நெறிப்படுத்திக் கூறி னள். தலைவர் ''தோழியே, நின்தலைவியோடு என்னைக் கூட்டாதொழிவையே யெனின், அவளுடைய வடிவத்தைப் படத்தில் எழுதிப் பனைமடல் ஏறி, நும் மூர்த்தெருவில் ஓட்டுவேன். இது நாளைக்கு யான் செய்வது'' என்றூர். அவர் சொல்லியவற்றைத் தோழி கேட்டுப் பயந்து, ''தலைவராகிய உமக்கு மடலே றுதல் நீதியன்று, நீர் இக்குருக்கத்தி மரச்சோலையில் மறைந்திரும். நான் என் தலைவியை அங்கே கொண்டுவருவேன்'' என்று சொல்லிப் போயினள். எம் பெருமானுகிய தலைவர் மனமகிழ்ந்து, மாதவிச் சோலையிற்போய் வீற்றிருந் தார். பாங்கி விரைந்து தினைப்புனத்திற் சென்று, வள்ளிநாயகியாருடைய பாதங்களை வணங்கி, தலைவருடைய ஆசையையும் பிறவற்றையும் சொல் லித் தேற்றி ஒருப்படுத்தி, அவரை அத்தினைப்புனத்தினின்றும் மெல்லவாக அழைத்துக்கொண்டு மாதவிச்சோலையிற்போய், ''அன்பின் மிக்க தலைவியே, யான் இம்மலையைச் சுற்றிப்போய் உன் கூந்தலிற் சூடுதற்குரிய காந்தண் மலர்களைப் பறித்துக் கொண்டுவருவேன். நீ இங்கே நில்'' என்று குறிப் பாகச் சொல்லி நிறுத்திப்போயினள். அறுமுகக்கடவுள் மிக மகிழ்ந்து, முன் போல வள்ளிநாயகியாரிடத்து வந்து, அவர் தம்முடைய பாதங்களில்

வீழ்ந்து வணங்க, அவரைத் திருக்கரங்களால் எடுத்துத் தழுவி, இன்பமுற்று, ''பெண்ணே, கேள். உன்றந்தையும் பிறரும் வந்து உன்னைத் தேடுவர், தினைப்புனத்தைக் காவல்செய்யும்படி தோழியோடு நீ அங்கே போவாய். நாம் நாளைக்கு வருவோம்'' என்று கூறி மறைந்து போயினர். வள்ளிநாயகியார் அக்குருக்கத்திச் சோலையை நீங்கி வருதலும், தோழி அவரை எதிர் கொண்டு, சில காந்தண்மலர்களைக் காட்டி, அவருடைய கூந்தலிற் சூட்டி, அழைத்துக்கொண்டு சென்றாள்.

இவ்வாறு வழிபடுகின்ற தோழியோடு வள்ளிநாயகியார் தம்முடைய தினைப்புனத்தையடைந்து, அதனைக் காத்துக்கொண்டு, நாயகருடைய பிரி வாற்றுமையால் மனம் புலர்ந்து, இருந்தார். இருக்க, தினைக்கதிர்கள் முற்றி விளைந்தன. அதனைக் கண்ட குறவர்கள் யாவரும் வந்து கூடி, வள்ளிநாயகி யைப் பார்த்து, ''தினைகள் விளைந்தன. வேங்கைமரங்களும் அதற்குச் சாக்ஷி பகர்ந்தன. இதுகாறும் நீ இதனைப் பாதுகாத்து வருந்தினாய். இனி உன் சிற் றூருக்குச் செல்வாய்'' என்று உரைத்தார்கள். வள்ளிநாயகியார் வேல்பட்ட புண்ணில் எரிநுழைந்தாற்போல அச்சொற்களைக் கேட்டு மனங்கலங்கி, இகுளையுந் தானுமாய் அப்புனத்தை நீங்கி, சிறுகுடிக்குச் சென்றார். செல்லு கின்றவர் மான்களையும், மயில்களையும், கிளிகளையும், புறுக்களையும், பிறவற் றையும் நோக்கி, ''யாங்கள் இப்புனத்தை விட்டுச்சிற்றூருக்குப்போன செய் கையை நம் தலைவருக்குச் சொல்லுதிர் சொல்லுதிர்'' என்று கூறி, சிறு குடி யிற் புகுந்து, கோயிலையடைந்து, தம்முடைய தன்மை வேறுபட்டு, பாவை யுங் கழங்கும் ஆடாமலும், எந்தப் பெண்களோடும் முன்போலப் பேசாம லும், புலம்பித் தனியேயிருந்தார். அப்பொழுது, செவிலித்தாயும் நற்றாயும் வந்து மகளை உற்று நோக்கி, ''உனக்கு மேனி வேறுபட்டது. குற்றம் வந்த வாறென்னை?'' என்று வன்புறக் கூறி, கோபித்து, அவரை இற்செறித்தார் கள். அவர் சுப்பிரமணியக்கடவுளைப் புணர்ந்து பிரிந்தமையினால் உடம்பு மெலிந்து, உள்ளம் வெம்பி, உயிரிழந்தவர் போலப் பரவசமாய் வீழ்ந்தார். அதனைக்கண்ட பெண்கள் துன்பமுற்றுச் சூழ்ந்து அவரை எடுத்துத் தழுவி, அவருடைய மெய்நடுங்குதலையும் கைகளை கழலுதலையும் கண்பனித்தலையும் குணங்கள் வேறுபட்டதையும் அச்சங்கொள்ளுதலையும் நோக்கி, சுப்பிர மணியக்கடவுள் தொட்டதை அறியாதாராய், ''நம்பெண்ணைத் தெய்வம் தீண்டிற்றுப்போலும்'' என்றார்கள். தந்தையாகிய நம்பியும் கிளைஞரும் மற்றை வேடுவர்களும் பிறரும் வள்ளிநாயகியாருடைய செயலை நோக்கி மனம் வருந்தி, தேவராட்டியையும் வெறியாட்டாளனையும் அழைத்து வந்தி, சுப்பிரமணியக்கடவுளுக்கு வெறியாட்டயர்வித்தார்கள். அப்பொழுது குமரவேள் வெறியாட்டாளன்மேல் ஆவேசித்து, ''வள்ளிநாயகி தினைப் புனத்திற் றனியே யிருக்கும்பொழுது நாம் தீண்டினேம். பிறிதோர் காரண முமன்று. நாம் மனமகிழுதற்கேதுவாகிய சிறப்பு நேர்ந்தால் இக்குறை நீங் கும்'' என்று குறிப்பினாற் சொல்லினர். அச்சொற் செவியிற் புகுதலும், வள்ளிநாயகியார் அவசம் நீங்கி, நன்கெழுந்திருக்க, செவிலித்தாய் அப் பொழுதே முருகக்கடவுளை நினைத்து, ''இவள் சிறப்பை நேர்வோம்'' என்று சொல்லி அதனை நேர்ந்தாள்.

இவ்வாறு வள்ளிநாயகியார் சிறுகுடியில் இருப்ப, வேட்டுவர்கள் விளைந்த தினைகளை அரிந்துகொண்டு சிறுகுடியிற் சென்றார்கள். குமரவேள் இதனைப் பார்த்து, தாள்களையுடைய தினைப்புனத்திற் போய், வள்ளிநாயகியாரைக் காணுதவராய்ப் புலம்பி மேகத்தை விளவினர், மயில்களை விளவினர், தினைப்புனத்தை விளவினர், நாகணவாய்களை விளவினர், கிளிகளை விளவினர், யானைகளை விளவினர், மான்களை விளவினர், சோலைகளை விளவினர், மலைகளை விளவினர், வாடினர், தளர்ந்தார், நெஞ்சம் வருந்தினர், மயங்கினர், வெய்துயிர்த்தார், வள்ளிநாயகியாருடைய சிற்றடிச்சுவட்டை நாடினர், திகைத்தார், நின்று நடுங்கினர், அவரைத் தேடித்திரிந்தார். அப் பெருமானுக்கு இவைகளெல்லாம் திருவிளையாடல் போலாம். குமாரக்கடவுள் வள்ளிநாயகியாரைத் தேடுவார்போல இவ்வாறே பகற்பொழுதைக் கழித்து, வாடி, தினைப்புனத்தைச்சுற்றி, அர்த்தயாமத்தில் வேடர்களுடைய சிற்றூரிற் புகுந்து, வேட்டுவராசனுகிய நம்பியிருக்கும் சிறுகுடியின் புறத்திற்போய் நின்றார். பாங்கி அவரைக்கண்டு வணங்கி, "சுவாமிகாள், நீவிர் இராக்காலத்தில் இச்சிற்றூரில் வருதல் கூடாது. நமது தலைவியும் உம்மைப் பிரிந்தால் உய்யமாட்டாள். நீவிர் இருவரும் இவ்விடத்திற் கூடுதற்கேற்ற தோர் இடமில்லை. ஆதலால் அவளை உடனழைத்துக்கொண்டு செல்லும்" என்று கூறி, அவரை அவ்விடத்து நிறுத்தி, வள்ளிநாயகியாரை அடைந்து, 'பெண்ணே. உன்னுடைய தலைவர் உன்னைக் கொண்டுசெல்லும்படி மனத்திற் றுணிந்து ஈண்டு வந்தார். வருதி" என்றழைக்க, அவர் நன்றென்று ஒருப்பட்டார். பின்பு தோழி, நற்றாயின் நித்திரையையும் சுற்றத்தாருடைய நித்திரையையும் உறங்காத நாயின் நித்திரையையும் அந்நகரத்தாருடைய நித்திரையையும் அறிந்து, பேயும் உறங்குகின்ற அர்த்தயாமத்திலே வாசற் கதவை நீக்கி, வள்ளிநாயகியாரைக் கொண்டுவந்து சுப்பிரமணியக்கடவுளுடைய சந்நிதியில் விடுத்தாள். அவ்வம்மையார் அக்கடவுளை நமஸ்கரித்து, "தலைவரே, புல்லிய இந்த வேட்டுவச்சேரியிலே பாவியேன் பொருட்டாக நறுநாற்றம் பொருந்திய தாமரைமலர்போலும் அருமைத் திருவடிகள் கன்ற அர்த்தயாமத்தில் நீர் நடப்பதா!" என்று இரங்கி, அஞ்சலி செய்துநின்றார். அப்பொழுது அக்கடவுளைத் தோழி நோக்கி, "தித்தொழிலையுடைய வேடுவர்கள் கண்டாற் றீமையாய் விளையும். இவளை இப்பொழுதே சிறப்பினையுடைய நுமதூருக்குக் கொண்டு சென்று காத்தருள்புரியும்" என்று அவருடையதிருக்கரத்தில் வள்ளிநாயகியாரை அடைக்கலமாகக் கொடுத்து, அஞ்சலி செய்து நின்றாள். முருகக்கடவுள் அத்தோழியினிடத்துக், கருணை செய்து, "தோழியே, நீ நம்மாட்டு வைத்த கருணையை நாம் மறக்கமாட்டோம்" என்றருளிச் செய்தார். தோழி வள்ளிநாயகியாரை வணங்கி, இறுகத்தழுவி, "விரைந்து செல்வாய்" என்று முருகக்கடவுளோடு கூட்டியனுப்பி, அவர் இருவரும் விடைகொடுத்தனுப்பத் தான் மீண்டு சிறுகுடிலிற் புகுந்தாள்.

தோழி விடைபெற்றுக்கொண்டு செல்லுதலும், முருகக்கடவுள் வள்ளிநாயகியாரோடு அந்நடுசியிலே காவல்களையெல்லாங் கடந்து சிற்றூரை நீங்கி, ஒரு பசுமரக்காவுட் சேர்ந்து, அவரோடு, அங்கிருந்தார். இருக்க, புலரிக்காலமாதலும், வேட்டுவராசனுடைய மனைவியானவள் நித்திரை நீங்கி விரைவிற் றிடுக்கிட்டெழுந்து, தன்மகளைக் காணுதவளாய் எங்

குந்தேடி, பின்னர்த் தோழியை வந்து வினவினள். அவள் ''அன்னையே, இவ்விரவில் அவளும் நானும் நித்திரை செய்ததுண்டு; அதன்பின் அவள் செய்ததை அறிகிலேன்'' என்றாள். தங்கள் மகளைக் காணுமையைத் தாய் வந்துசொல்ல, வேட்டுவராசன் கேட்டு, தெருமந்து செயிர்த்துப் பொங்கி ''யாவனோ ஒருவன் நம்மனையிற் காவல்களைக் கடந்து நம்மகளைக் கொண்டு போயினன்'' என்று கூறி, வாட்படையை இடையிற் கட்டி, வில்லையும் அம்பையும் ஏந்தி, ''நமது கன்னியைக் கவர்ந்த கள்வன் இருக்குமிடத்தைத் தேடுதற்கு விரைவிற் செல்வேன்'' என்று கோபத்தோடு எழுந்து செல்ல, அச்சிற்றாரிலுள்ள வேட்டுவர்கள் அதனை அறிந்து, ''பழித்தற்கரிய இந்தச் சிற்றாரிலே யாமத்தில் வந்து வள்ளிநாயகியைக் கவர்ந்துகொண்டு மாயையினால் மீண்டுபோன கள்வனைத் தொடருவோம்'' என்று வில்லையும் அம்பையும் ஏந்திப் போர்க்கோலங்கொண்டு, விரைந்துபோய்த் தம்மரசனோடு கூடி, கொம்புவாத்தியத்தை ஊதி, நெறிகடோறும் ஓடியும், சோலையெங்கும் உலாவியும், புலங்களிற் புகுந்து தேடியும், வள்ளிநாயகியின் அடிச்சுவட்டை நோக்கியும், எவ்விடங்களிலும் திரிந்தார்கள். இவ்வாறு வேட்டுவராசன் வேடர்களோடு வள்ளிநாயகியாரைத் தேடிச் செல்ல, பக்கத்தில் ஒரு சோலையிலே முருகக்கடவுளோடு களவாக உடன்புகுந்திருந்த அவ்வம்மையார் அவர்கள் வருதலைத் தெரிந்து அஞ்சி, அக்கடவுளுடைய திருவடிகளில் வீழ்ந்து பொருமி, ''எம்பெருமானே, வேடர்கள் பலர் அம்பு வில் வாள் வேல் முதலிய ஆயுதங்களை ஏந்தி நம்மைத் தேடிக்கொண்டு இச்சோலையின் பக்கத்து வந்தார்கள். என்மனம் நடுங்குகின்றது. யாம் இனிச் செய்வ தென்னை? அதனை அடியேன் அறியேன். நீரே சொல்லியருளும்'' என்றார். ''பெண்ணே வருந்தாதே. முன்பு கிரௌஞ்சமலையையும் சூரனுடைய மார்பையும் பிளந்த வேற்படை நம்மிடத்து இருக்கின்றது. நும்மவர்கள் நம்மோடு போர்செய்யும்படி வந்து சூழ்ந்தாற் கொல்வோம். நீ அதனைப் பார்த்துக்கொண்டு நமக்குப்பின் இரு'' என்று சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகியாருக்குக் கூறினர். அதனை அவர் கேட்டு, எம்பெருமானுக்குப் புறத்தில் வருதலும், வேடுவர்கள் அத்தன்மையை உற்றுநோக்கி, விரைவில் நெருங்கிவந்து, சீறி வெய்துயிர்த்துப் பொங்கி, அந்தச்சோலையை வளைந்து கொண்டார்கள். வேட்டுவராசன் அதனைக்கண்டு, சோலையைக்கிட்டி, ''நமது பெண்ணைக்கவர்ந்த கள்வன் தப்பிப் போகவில்லை. அம்மா! இவன் நமது வலிமையைச் சிறிதும் மதிக்கின்றிலன். இவனுடைய வலியை அக்கினி பரந்துண்ணுகின்ற முதுகாட்டைப்போல விரைவில் அழிப்போம்'' என்றான். இப்படிக் கூறிய நம்பியும் வேட்டுவர்களும் கடல்போல ஆர்த்து, விற்களை வளைத்து முறைமுறையாக அம்புகளை வீசி, சூரியனை மேகங்கள் மறைத்தாற் போல, முருகக்கடவுளை வளைத்துக்கொண்டார்கள். வேட்டுவர்கள் பகைவர்களாய்ச் சூழ்ந்து, கோபித்து விட்ட வெவ்விய கணைகள் யாவும் பேரழகினையுடைய திருபாசமுத்திரமாகிய சுப்பிரமணியப்பெருமான் மீது மலரின்றன்மையினவாய் வந்து படுதலும், வள்ளிநாயகியார் பதைத்து, ''எம்பெருமானே தேவரீர்மீது பாணங்களை விடுகின்ற கீழோர்களாகிய வேட்டுவர்களை உமது வேற்படையை விடுத்துக் கொல்லுதல் வேண்டும். மிருகராசனுகிய சிங்கம் கொலைத்தொழில் செய்ய நினையாதாஞல், எளிய மரையும் மானும் பன்றியும் யானையும் அதனைக்கொல்ல எண்ணி அணுகுமே'' என்றார். இவ்

வாறு வள்ளிநாயகியார் சொல்ல, முருகக்கடவுளுடைய திருவருளால் பக்கத் தில் நின்ற சேவற்கொடி நிமிர்ந்தெழுந்து கூவுதலும், வேட்டுவராசனும் அவன் குமாரர்களும் சுற்றத்தாரும் யாவரும் விரைவில் இறந்து வீழ்ந் தார்கள்.

தமது தந்தையும் தமையன்மாரும் சுற்றத்தாரும் வீழ்ந்திறந்ததை வள்ளிநாயகியார் பார்த்து, பதைபதைத்திரங்கிச் சோர, கந்தசுவாமி அவ ருடைய அன்பைக்காணும்படி திருவுள்ளத்து முகிழ்த்த கருணையோடு அச் சோலையை நீங்கிச் சென்றார். வள்ளிநாயகியாரும் அவரைத்தொடர்ந்து சென்றார். செல்ல, நாரதமுனிவர் எதிரே வந்து, வள்ளிநாயகியாரோடு சுப்பிரமணியக்கடவுளை வணங்கி, ''எம்பெருமானே, தேவரீருடைய செயல் களையெல்லாம் சொல்லியருளும்'' என்று கேட்டார். அவர் தாம் வள்ளி நாயகியாரைக் கண்டதுமுதல் வேட்டுவர்களை வதைத்துவந்ததுவரை நிகழ்ந் தவைகள் யாவற்றையும் சொல்லினர். நாரதமுனிவர் அவற்றைக்கேட்டு, ''சுவாமீ, பெற்றபிதாவையும் பிறசுற்றத்தாரையும் தேவரீர் கோபத்தோடு வதைபுரிந்து, அவர்களுக்கு மீட்டுச் சிறந்த அருளைச் செய்யாமல், அவர்கள் பெண்ணை அழைத்துக்கொண்டு செல்லல் தகுமோ?'' என்று கூற, அருள் வள்ளலாகிய அக்கடவுளும் ''முனிவனே, நீ கூறியது பொருந்தும்'' என்று அருளிச்செய்து, சோலைக்கு மீண்டுசென்று, தம்மாட்டுப் பேரன்பினையுடைய வள்ளிநாயகியாரை நோக்கி, ''நம்மேல்வந்து போர்செய்திறந்த நின்சுற்றத் தாரை யெல்லாம் எழுப்புதி'' என்றார். என்னலும், அவர் நன்றென்று அக் கடவுளை வணங்கி, ''உயிர்நீங்கி யிறந்த நம் சுற்றத்தாரெல்லாரும் எழுங் கள்'' என்றருளிச்செய்தார். அப்பொழுது வேட்டுவராசனுகிய நம்பி, நித் திரை செய்வோன் பதைபதைத்து விழித்து எழுந்தாற்போலச் சுற்றத்தா ரோடு எழுந்தான். அவர்கள் எழுந்தபொழுது, சுப்பிரமணியக்கடவுள் கருணைவெள்ளம் பொழிகின்ற ஆறுதிருவதனங்களும் பன்னிரண்டு திருப் புயங்களும் வேற்படையும் ஒழிந்த படைகளுமாய்த் தம்முடைய திருவுருவத் தைக் காட்டியருளினார். வேடுவர்கள் அவரைத் தரிசித்து, ஆச்சரியமுற்று, ''எமது வேட்டுவச் சேரியைக் காக்கின்ற நீரே எங்கள் பெண்ணைக் களவு செய்து எங்கள் வரம்பையழித்து எங்கள் குலத்துக்கு தீராத பெரும் பழி யொன்றை நிறுத்தினீர். தன் புத்திரர்கள் உண்ணும்படி தாயானவள் நஞ்சை ஊட்டினுல் அதனை விலக்குபவர்கள் யாவர்? அது நிற்க. எம்பெருமானே, நீர் எங்கள் மகள்மேல் வைத்த ஆசையால் நாங்களும் உணராவண்ணம் நம் முன்னிய பெரிய காவல்களைக் கடந்து அவளைக் கவர்ந்துகொண்டுவந்தீர். இனி நமது சிற்றூருக்கு வந்து அக்கினிசாக்ஷியாக அவளை விவாகஞ்செய்து கொண்டு உம்முடைய ஊருக்குச் செல்லும்'' என்றார்கள்.

தமது மாதுலன் முதலாயினோர் இவ்வாறு சொல்லிய மணமொழி குச் சுப்பிரமணியக்கடவுள் இசைந்து, அவர்களுக்குப் பெருங்கருணைசெய்து, வள்ளிநாயகியாரையும் அழைத்துக்கொண்டு நாரதமுனிவரோடு அச்சோ லையை நீங்கி, திருவடித்தாமரைகள் நோவச் சிற்றூரை அடைந்தார். வள்ளி நாயகியாருடைய தந்தையும் சுற்றத்தார்களும் மனமகிழ்ந்து, முருகக்கடவு ளோடு கூடச்சென்று, சிற்றூரிலுள்ளாரை நோக்கி, ''நமது குலதெய்வமா கிய கந்தசுவாமியே நம்பெண்ணைக் கவர்ந்தார். அவர் நமது வேண்டு கோளின்படி அவளை மணஞ்செய்யவும் உடன்பட்டு வந்தார். இது நிகழ்ந்

தது'' என்றார்கள். அதனைக்கேட்ட சிற்றூரிலுள்ளோர்கள் முன்பு தம்மனத்திலுண்டாகிய கோபமும் நாணமும் நீங்கி மகிழ்ச்சியுண்டாக நின்றார்கள். வேட்டுவராசன் சுப்பிரமணியக்கடவுளையும் வள்ளிநாயகியாரையும் தனது மனையில் அழைத்துக்கொண்டு வந்து, புலித்தோலாசனத்தின்மீது வீற்றிருக்கச்செய்தான். அப்பொழுது, அறுமுகக்கடவுள் தமது திருமருங்கிலிருந்த வள்ளிநாயகியாரை அருளோடு நோக்க, அவருக்கு வேட்டுவக்கோலம் நீங்கி, பழைய தெய்வக்கோலம் முழுதும் ஒருங்கே வந்து பொருந்திற்று. வேட்டுவராசனுகிய நம்பியும், சுற்றத்தாரும், நற்றாயும், செவிலித்தாயும், தோழியும், மற்றைப்பெண்களும் வள்ளிநாயகியாருடைய தெய்வக்கோலத்தை நோக்கி, ''இவள் எங்களிடத்தில் வந்தது நாம் செய்த பெருந்தவப்பயனே'' என்றார்கள். அந்தச் சுபமுகூர்த்தத்தில் வேட்டுவராசன் சுப்பிரமணியக்கடவுளுடைய திருக்கரத்தில் வள்ளிநாயகியாருடைய திருக்கரத்தை வைத்து, நம்முடைய தவப்பயனுய் வந்த குமாரியை அன்பினுல் இன்று உமக்கு மணஞ்செய்து தந்தேன்; ஏற்றுக்கொள்ளும்'' என்று தாராதத்தஞ் செய்தான். அப்பொழுது நாரதமுனிவர் அறுமுகக்கடவுளுடைய பணியினுல் அக்கினியையும் மற்றையுபகரணங்களையும் வருவித்து, வேதவிதிப்படி திருமணச்சடங்கை இயற்றினர்.

அந்த வேளையில், தேவாதிதேவராகிய சிவபெருமான் அரிபிரமேந்திராதி தேவர்களும் பிறரும் சூழ உமாதேவிசமேதராய் ஆகாயத்தில் எழுந்தருளி வந்து நின்று, சுப்பிரமணியக்கடவுள் வள்ளிநாயகியாரைத் திருமணஞ்செய்யும் தன்மையை முழுதும் பார்த்து, தண்ணளி புரிந்து நின்றார். விட்டுணு முதலிய தேவர்கள் மகிழ்ந்து, பூமழைகளைச் சொரிந்து, முருகக்கடவுளை அஞ்சலித்துத் துதித்து, ஆர்த்தார்கள். அறுமுகக்கடவுள் அதனை நோக்கி, சிற்றூரிலுள்ளார் சிறிதும் உணராவண்ணம் சிவபெருமானையும் உமாதேவியாரையும் தொழுது, மற்றை அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும் தனிதனி அருள்புரிந்தார். அப்பொழுது பார்வதிபாகராகிய பரமசிவன் பிரமவிஷ்ணு முதலாகிய தேவர்களோடு மறைந்தருளினர். நாரதமுனிவர் தாம் இயற்றிய திருமணச்சடங்கு முற்றுப்பெறுதலும், வள்ளிநாயகியாரையும் முருகக்கடவுளையும் வணங்கித்துதித்தார். மாதுலனுகிய நம்பி அவ்விருவர் திருமணக்கோலத்தையுந் தரிசித்து, ''இக்கண்களால் அடையற்பாலனவாகிய பயன்கள் எல்லாவற்றையும் இன்றே ஒருங்கு பெற்றேன்'' என்றான். அவனுடையமகிழ்ச்சியை யார் இவ்வளவென்றுசொல்லற்பாலார்? வேட்டுவப்பெண்கள் ''நமது மருகரும் வள்ளிநாயகியும் இன்றுபோல என்றும் வாழ்க'' என்று ஆசிகளைச் சொல்லித் தூயமலரையும் அறுகையும் சொரிந்தார்கள். வேட்டுவர்கள் செந்தினைமாவையும் தேனையும் இனியகனிகளையும் காய்களையும் கிழங்குகளையும் பிறவற்றையும் தேக்கிலையாலாகிய கல்லியிற்படைத்து, ''வள்ளிநாயகியாரும் நீரும் இவற்றை அன்போடு உட்கொண்டருளும்'' என்று பிரார்த்திக்க, அவர் இருவரும் அருள்புரிந்து, அச்சிற்றுண்டிகளை நிவேதனங்கொண்டருளினர். அவர்கள் நிவேதனஞ்செய்தமை, விட்டுணு முதலாகிய தேவர்கள் மாட்டும், முனிவர்கள் மாட்டும், மற்றைச் சராசரங்கள் மாட்டும் எவ்விடத்தும் விபாபித்தது.

அதன்பின் அறுமுகக்கடவுள் எழுந்து நின்று, வேட்டுவராசனை நோக்கி, ''யாம்வள்ளிநாயகியோடு திருத்தணிமலையிற் சென்று இனிது வீற்றிருப்போம்'' என்னலும், அவன் நன்றென்று அதற்குடன்பட்டான். நற்றா

யும் செவிலித்தாயும் பாங்கியும் வள்ளிநாயகியாரை நோக்கி, ''உன்னுடைய நாயகருக்குப் பின்னே செல்கின்றனையா? இது நன்று'' என்று அன்போடு அவரைத் தழுவிப் பல ஆசிகளைச் சொன்னார்கள். அவர் முருகக்கடவுளோடு உடன்செல்லுதற்குத் துணிந்தார். அக்கடவுள் வள்ளிநாயகியாரோடு வேட்டுவராசனுடைய வீட்டைநீங்கி, அவனை அழைத்து, ''தேவர்களும் வணங்கும்படி நீ சிற்றூரை அரசியற்றி இங்கே இருக்குதி'' என்று கூறி, அவனை அங்கே நிறுத்தி, வள்ளிநாயகியாரும் தாமுமாய் வள்ளிமலையை நீங்கி, ஆகாயவழிக்கொண்டு சென்று, செருத்தணிமலையை அடைந்து, முன்னே தெய்வத்தச்சனால் அமைக்கப்பட்ட கோயிலிற்புகுந்து, இவ்வுலகத் துயிர்கள் யாவும் உய்யும்படி அவ்வம்மையாரோடு அங்கே வீற்றிருந்தருளினார்.

அறுமுகக்கடவுள் வள்ளிநாயகியாரோடு செருத்தணிமலையில் வீற்றிருக்குங்காலத்தில், அவ்வம்மையார் அவருடைய பாதங்களை வணங்கி, ''சுவாமீ, இந்தச் சிறந்த மலையின் பெருமைகளை அடியேனுக்குச் சொல்லியருளும்'' என்று விண்ணப்பிக்க, அவர் ஆன்மாக்கள் அவைகளை அறிந்து உய்தல் வேண்டுமென்னும் பெருங்கருணையினால் இவ்வாறு சொல்வாராயினர்:— ''வள்ளிநாயகியே,யாம் சூரபன்மனோடுசெய்த போரினும், நும்மவர்களாகிய வேடர்களோடு செய்த போரினும், கோபந்தணிந்து, இங்கே வந்து இருத்தலால், இம்மலை செருத்தணி என்று ஒரு காரணப்பெயரைப் பெற்றது. காமாக்ஷியம்மையார் முலையினாலும் வளையலினாலும் ஏகாம்பரநாதசுவாமியை வடுப்படுத்தி வீற்றிருக்கின்ற காஞ்சிபுரத்திற்குச் சமீபமாய் நிற்றலால், இம்மலையினது தூய்மை சொல்லுந்தகைமையையுடையதன்று. மலர்களுள் தாமரைமலர் சிறந்தது போலவும், நதிகளுள் கங்கை சிறந்ததுபோலவும், தலங்களுள் காஞ்சிபுரம் சிறந்தது போலவும், மலைகளுள் இச் செருத்தணிமலை சிறந்தது. நாம் கொம்புவாத்தியத்தை இயம்பியும், வேய்ங்குழலை ஊதியும், யாழை வாசித்தும், ஏழிசைகளைப் பாடியும், மற்றைய பல வாத்தியங்களை ஒலித்தும், இம்மலையிலே விளையாடுவோம். பிற திருவிளையாடலையுஞ் செய்வோம். சிவபெருமான் மந்தரமலை மேருமலைகளைக் காட்டிலும் திருக்கைலாசமலையையே விரும்பி வீற்றிருத்தல் போல, பூமியில் நமக்குச் சிறந்த பல மலைகளிருப்பினும் இந்தச் செருத்தணிமலையில் நாம் மிகவும் பிரீதியோடு வீற்றிருப்போம். அதற்குச் சான்று ஒன்றுளது சொல்வோம் கேள். இந்திரன் நமக்கு நாடோறும் சாத்தும்படி மூன்று நீலோற்பலங்களை முன்னுளிலே இந்தச் சுனையில் வைத்து உண்டாக்கினன். அவைகள் காலையில் ஒன்றும் உச்சியில் ஒன்றும் மாலையில் ஒன்றும் ஆக மூன்று மலர்களை ஊழி திரும்பினும் ஒழிவின்றி எந்நாளும் மலரும்; அது தவிர வள்ளிநாயகியே, இந்த மலையின் பெருமையை யார் சொல்லவல்லார்? இந்தமலையைத் தொழுதவர்களுடைய பாவமெல்லாம் நீங்கும். மனவன்போடு இந்தமலையிலே வந்து, நமக்குமுன்னேயுள்ள இந்தச் சுனையிலே விதிப்படி முழுகி நம்மைத் தொழுபவர்கள் நமது பதவியை அடைந்து வாழ்வார்கள். ஐந்து நாள் இம்மலையில் வந்து வசித்து நம்முடைய பாதங்களையே தஞ்சமென்று எண்ணி வழிபடுகின்ற தவத்தர்கள் மனத்தில் விரும்பிய போகங்கள் எல்லாவற்றையும் அநுபவித்து, பின் மோக்ஷத்தை அடைவர். தேவர்களாயினும் முனிவர்களாயினும் சிறந்த மற்றெவராயினும் பிறந்தபின்பு இம்மலையை வந்து

வணங்காதவர் தாவர முதலிய கீழுள்ள பிறப்புக்களினும் இழிந்தோரே. பூப்பிரதக்ஷிணஞ்செய்தாலும் அவர்களுடைய பாவசமூகங்கள் நீங்குமோ? பல பாதகங்களைச் செய்தவராயினும், பல பாவங்களை என்றுஞ் செய்பவர் களாயினும் நம்மிடத்து அன்புவைத்து செருத்தணிமலையை அடைந்து வழி படுவாராயின், அவர்களே பிரம விட்டுணுக்களினும் மேலாயினோர்; எல்லா வற்றினுஞ் சிறந்தவர். இந்தக் கல்ஹாரகிரியில் வாழ்வோர் ஒவ்வொரு தருமத்தையே செய்தாலும், அந்த ஒவ்வொன்றும் பற்பல தருமங்களாய் ஓங்கும்; பாவங்கள் பலவற்றைச் செய்தாலும், அவை சிலவாய் ஒன்றுய்த் தேய்ந்துவிடும். இதுவன்றி, இங்கே இன்னும் அனந்த கோடி அற்புதங்கள் உள்ளன'' என்று இல்வாறு செருத்தணிமலையின் பெருமைகளைச் சுப்பிர மணியக்கடவுள் கூற, வள்ளிநாயகியார் கேட்டு, நன்றென்று மகிழ்ச்சியுற்று, ''பூமியிலுள்ள மலைகளுள் சிறந்த இச்செருத்தணிமலையின் பெருமையைத் தமியேன் உம்முடைய திருவருளால் அறிந்துய்ந்தேன்'' என்றார். அறுமுகக் கடவுள் வள்ளிநாயகியாருந் தாமும் அச்செருத்தணிமலையின் ஒருசாரிலே சிவபெருமானுடைய கர்மசீதாக்கிய வடிவமாகிய சிவலிங்கத்தை ஆகம விதிப்படி தாபித்து, மிகுந்த அன்போடு பூசனைசெய்து துதித்து, தாம் வேண்டியாங்கு அவருடைய திருவருளைப் பெற்று, அவ்வம்மையாருடன் சிலநாட் பிரீதியோடு அங்கே வீற்றிருந்தார்.

செருத்தணிமலையில் வீற்றிருந்த முருகக்கடவுள் ஒருநாள், வள்ளி நாயகியாருந் தாமுமாக ஒரு விமானத்திலிவர்ந்து, திருக்கைலாசமலைச் சாரலிலுள்ள கந்தமலையிற்போய், அவரோடு விமானத்தினின்றும் இழிந்து, ஆலயத்திற் சென்று, தெய்வயானையம்மையார் இருக்கின்ற அந்தப்புரத் திற் பிரவேசித்து தம்முடைய வரவைக்கண்டு எதிர்கொண்டுவந்து வணங் கிய அவ்வம்மையாரை அவருடைய தனங்கள் தமது திருமார்பிற் பொருந்து மாறு எடுத்துத் தழுவி, பூமியிலே தாம் பிரிந்து சென்றமையினால் அவ ருக்குளதாகிய தனிமைத்துயரை நீக்கியருளினர். அப்பொழுது, வள்ளி நாயகியார் தெய்வயானையம்மையாருடைய பாதங்களை வணங்கினர். அவர் வள்ளிநாயகியாரை எடுத்துத் தழுவி, ''இங்கே ஒரு தனித்தவளா யிருக்கும் எனக்கு இன்றைக்கு ஒரு துணைவி வந்தடைந்தவாறு நன்று'' என்று அவ்வள்ளிநாயகியார்மீது மிகுந்த அன்பு பாராட்டினர். திருப்பாற் கடலிலுள்ள சேஷசயனத்திலே மகாலக்ஷ்மியும் பூமிலக்ஷ்மியும் தமது இருமருங்கும் பொருந்த, பவளவண்ணராகிய விட்டுணு கருணையோடு வீற்றிருத்தல்போல, சுப்பிரமணியக்கடவுள் தெய்வயானையம்மையாரும் வள்ளிநாயகியம்மையாரும் தமது இருமருங்கும் பொருந்த, திவ்விய சிங்காசனத்தின்மீது கருணையோடு வீற்றிருந்தருளினர்.

அப்பொழுது, தெய்வயானையம்மையார் சுப்பிரமணியக்கடவுளை நோக்கி, ''இவளுடைய வரலாற்றை அடியேனுக்குச் சொல்லியருளும்'' என்னலும், அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு இவ்வாறு சொல்வாராயினர்: ''நீவிர் இருவரும் விட்டுணுவினுடைய புத்திரிகள். நம்மை மணஞ்செய்ய விரும்பிப் பன்னிரு வருடகாலம் தவஞ்செய்தீர்கள். அப்பொழுது நாம் உம்மிடத்துவந்து, மிக மகிழ்ந்து, 'உம்மை நாம் விவாகஞ்செய்கின்றோம்.

ர் இருவரும் தனித்தனி சுவர்க்கத்திலும் பூமியிலும் போய்த் தோன்றுங் என்று சொன்னேம். உங்களிருவருள் மூத்தவளாகிய நீ நாம் சொன்ன றயை நினைத்து, சுவர்க்கத்திலே இந்திரன் மகளாய் வளர்ந்தாய். அப் ாழுது நாம் வந்து அன்போடு உன்னை மணஞ்செய்தோம். உனக்கு இளை ளாகிய இவள் யாம் கூறிய முறையைச் சீர்தூக்கி, அக்கினியில் மூழ்கி, முன்னைத் தூலதேகத்தை விடுத்து, சூக்குமதேகத்தோடு வள்ளிமலையிலே மரங்கள் செறிந்த ஓரிடத்திற் சென்று, தவஞ்செய்துகொண்டிருந்தாள். அந்தமலைச்சாரலில், விட்டுணுவின் அவதாரத்தினராகிய சிவமுனி யென் பவர் நெடுங்காலந் தவஞ்செய்திருந்தார். அங்கே இலக்குமியின் அவதார மாகிய பிணைமானொன்று போய் உலாவிற்று. அந்த மான்பிணையை அம் முனிவர் ஆசையோடு பார்த்தலும், அது கருப்பங்கொள்ள, இவள் அக்கரு விற் பிரவேசித்தாள். அந்தமான் இவளை வயிற்றிற் சுமந்து, அங்குள்ள, வள்ளிக்கிழங்கைத்தெடுத்த ஒரு குழியிற் பெற்று நீங்கிற்று. அங்கே வேட்டு வராசன் மனைவியோடு சென்று இவளைக் கண்டான். கண்ட அவ்விருவரும் இவளை அன்பிலேடு எடுத்துக்கொண்டுபோய், வள்ளி யென்று நாமகரணஞ் செய்து, தம்மகளாகச் சீராட்டி வளர்த்தார்கள். இவள் அங்ஙனம் வேடர் மகளாய் வளருங்காலத்தில், யாம் இவள்பாற்போய், ஆசைவார்த்தைகளைச் சொல்லியும், வாழ்த்தியும், புணர்ந்தும், பிரிந்தும், வருந்தியும், பல மாயங் களைச் செய்து, பின், முன்னுணர்ச்சி முழுதையுங் கொடுத்து, தந்தை தாயர் களும் உறவினரும் தத்தஞ்செய்து கொடுக்கச் சில நாள்களின் முன் இவளை மணஞ்செய்து, இவளோடு அவ்விடத்தை விட்டு நீங்கிச் செருத்தணிமலையிற் சிலநாளிருந்து, பின் இங்கே வந்தோம்'' என்று இவ்வாறு வள்ளிநாயகியம் மையாருடைய வரலாறெல்லாவற்றையும் சுப்பிரமணியக்கடவுள் சொல்லி ய ருளினார். தெய்வயானையம்மையார் அவற்றைக்கேட்டு, நன்றென்று மகிழ்ந்து, ''முன்னளில் விட்டுணுவினிடத்திற் றோன்றிய இலளும் யானும் நெடுங்காலம் ஒருவரை யொருவர் நீங்கியிருந்தோம். அவ்வாறு நீங்கியிருந்த எங்களை முன்போல இங்ஙனம் கூட்டி ஒருங்கிருக்கச்செய்த தேவரீருடைய வல்லபத்துக்கு அடியேங்கள் செய்யும் கைம்மாறு ஒன்றுமில்லை'' என்று சொல்லினர். வள்ளிநாயகியார் தெய்வயானையம்மையார் சொல்லியதைக் கேட்டு, ''முற்பிறப்பில் உமக்கு யான் தங்கையாயிருந்தமையன்றி இப்பிறப் பிலுந் தங்கையாயினேன். ஆதலால் உய்ந்தேன். உம்மை வந்து புகலடைந் தேன். என்னைக் காத்துக்கொள்ளும்'' என்று கூறித் தமக்கையாகிய தெய்வ யானையம்மையாருடைய பாதங்களை வணங்கினர். அவர் வள்ளிநாயகியாரை எடுத்துத் தழுவி, ''இன்றைக்கு யான் உன்னைத் துணைவியாகப் பெற்றேன். எம்பிரானாகிய இவருடைய திருவருளையும் பெற்றேன். இனி என்மனத்திற் குச் சிறந்த பொருள் எனக்கு அரியது யாது?'' என்றார்.

தெய்வயானையம்மையாரும் வள்ளிநாயகியம்மையாரும் இவ்வாறு தம்முள் வேறுபாடு ஒரு சிறிதுமின்றி அன்போடு அளவளாவி, மனமும் உயிரும் செயலும் சிறப்பும் ஒன்றாக, மலரும் மணமும்போல வேற்றுமை யின்றிக் கலந்து வீற்றிருந்தார்கள். இவர் இருவரும் உடலும் உயிரும் போலத் தங்களுள் வேறுபாடின்றி, கங்கையும் யமுனையும் கடலோடு சேர்ந் தாற்போல, சுப்பிரமணியக்கடவுளைச்சேர்ந்து வழிபட்டு ஒழுகுவாராயினர்.

இந்த ஞானசத்தி கிரியாசத்தியாகிய தேவிமார் இருவரும் தமது மருங்கிலும் வீற்றிருப்ப, சுப்பிரமணியக்கடவுள் அவர்களுக்கருள்புரிந்து எல்லாவுயிர்கண்மாட்டும் வைத்த பேரருளினாலே அவரவர் வினைகளுக்கேற்ற பிறவிகளைக்கொடுத்து, அவர்களுள்ளே பரிபக்குவமுடைய அன்பர்களாயாவர்க்கும் மோக்ஷத்தையுதவி, கந்தகிரியில் என்றும் வீற்றிருந்தருளுவார்.

கொடியாகிய சேவலும், வாகனமாகிய மயிலும், மனவேகம் என்னுந் தேரும், நாரதமுனிவருடைய யாகத்திலெழுந்த ஆட்டுக்கடாவும், வேலாயுதமும், மற்றை ஆயுதங்களும் அவ்வறுமுகக்கடவுள் ஏவியபணிகளைச்செய்து அவருடைய கோயிலின் பக்கங்களிலும் சந்நிதானத்திலும் அணுகி வீற்றிருக்கும்.

ஆறிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசி ரடியா ரெல்லாம்.

புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை விலக்கி மேலாம்
நன்னெறி யொழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையு மடிய னுக்கி யிருவினை நீக்கி யாண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங் கயங்கள் போற்றி.

வேறு

வேல்சேர்ந்த செங்கைக் குமரன்வியன் காதைதன்னை
மால்சேர்ந் துரைத்தேன் றமிழ்ப்பாவழு வற்றதேனும்
நூல்சேர்ந்த சான்றீர் குணமேன்மை நுவன்றுகொண்மின்
பால்சேரீர்ந் ததனைப் புனலும்பய னுவதன்றே.

பொய்யற்ற கிரன் முதலாம்புல வோர்புகழ்ந்த
ஐயற் கெனதுசிறு சொல்லுமொப் பாகுமிப்பார்
செய்புற்ற வன்மா லுமைபூசைகொ டேவடேவன்
வையத் தவர்செய் வழிபாடு மகிழுமன்றே.

என்னுயகன் விண்ணவர் நாயகன் யானைநா
மின்னுயக னுன்மறை நாயகன் வேடர்நங்கை
தன்னுயக வேற்றனி நாயகன் றன்புராணம்
நன்னுயக மாமெனக் கொள்கவிஞ் ஞாலமெல்லாம்.

வற்றுவருள் சேர்கும ரேசன்வண் காதைதன்னைச்
சொற்றுரு மாராய்ந் திடுவாருந் துகளுறுமே
கற்றுருங் கற்பான் முயல்வாருங் கசிந்துகேட்க
லுற்றுரும் வீடுநெறிப் பாலினுறு வரன்றே.

பாராகி யேனைப் பொருளாயுயிர்ப் பண்மையாகிப்
பேராவுயிர் கட்குயி ராய்ப்பிற வற்றுமாகி
நேராகித் தோன்றலி லாதாகிநின் றுன்கழற்கே
ஆராத காதலொடு போற்றியடை துமன்றே.

தக்ஷகாண்ட முற்றிற்று.

**கந்தபுராணம் முற்றிற்று.**

திருச்சிற்றம்பலம்.

வேலும்மயிலுந்துணை.

கச்சியப்ப சிவாசாரியார் திருவடி வாழ்க.